Koviloor Digital Library

ஆழ்வார்கள் அருளிச் செயல் என்னும்

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

இரண்டாம் ஆயிரம்

மூலமும் உரையும்



Acc No: 44623
Q22

புலவர் த. திருவேங்கட இராமானுஜதாசன்

Koviloor Digital Library

Koviloor Digital Library

4/1

ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் என்னும்

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம்

மூலமும் - உரையும்

இரண்டாம் ஆயிரம்

உரையாசிரியர் :
கலவை புலவர்
த. திருவேங்கட இராமானுஜதாசன், எம்.ஏ., எம்.எட்.,

KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR
Ac. No. 44623

உமா பதிப்பகம்

உமா பதிப்பகம்
171, (புதிய எண். 18), பவளக் காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
தொலைபேசி : 2521 5363, 2525 0092

Koviloor Digital Library

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	ஆழ்வார்களின் அருளிச் செயல்கள் என்னும் நாலாயிரத்திவ்வியப் பிரபந்தம் இரண்டாம் ஆயிரம்
ஆசிரியர்	:	கலவை புலவர் த. திருவேங்கட இராமானுஜதாசன்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதல் பதிப்பு - டிசம்பர் - 2010 இரண்டாம் பதிப்பு - மே - 2014
வடிவமைப்பு	:	© உமா பதிப்பகம்
தாள்	:	மேப்லித்தோ 16 கி.கி.
நூல் அளவு	:	14 x 22 செ.மீ. டெம்மி
எழுத்து	:	12 புள்ளிகள்
பக்கங்கள்	:	672
பைண்டிங்	:	கலிக்கோ கட்டு
விலை	:	நான்கு நூல்களும் சேர்ந்து ரூ. 1000.00
ஒளி அச்சு	:	விக்னேஷ்வர் கிராபிக்ஸ் சென்னை -600 005.
அச்சிட்டோர்	:	வெங்கடேஸ்வரா ஆப்செட் சென்னை - 600 026.
நூல் வெளியீடு	:	உமா பதிப்பகம் சென்னை - 600 001.

Koviloor Digital Library

4/1

வைணவம் வலுப்பெற உயிர்மூச்சாயிருப்பது
ஆழ்வார்கள் பாடிய தமிழ் பாடல்களே

நாலாயிரம் திவ்வியப் பிரபந்தங்கள்

இரண்டாம் ஆயிரம்

Koviloor Digital Library

பொருளடக்கம்

1. பெரிய திருமொழி .. 13

2. திருக்குறுந் தாண்டகம் .. 620

3. திருநெடுந்தாண்டகம் .. 632

4. பாசுர முதற் குறிப்பு அகராதி .. 655

Koviloor Digital Library 4/1



திருமங்கை ஆழ்வார்

Koviloor Digital Library

ஸ்ரீ திருமங்கை ஆழ்வார்

1. **திருஅவதாரத் திருத்தலம் :**
 திருவாலி நாட்டிலுள்ள திருக்குறையலூர்
2. **திருஅவதார காலம் :**
 கலியுகம் 398 (கி.மு. 2714) நளவருடம், கார்த்திகை மாதம், கார்த்திகை நட்சததிரம், பௌர்ணமி திதி, வியாழக்கிழமை
3. **அம்சம் :**
 ''சார்ங்கம்'' என்னும் வில்லின் அம்சம்
4. **பெற்றோர் இட்ட திருநாமம் :**
 நீல நிறத்தர்
5. **தாயார் திருநாமம் :**
 ''வல்லித் திரு'' என்னும் அம்மையார்
6. **தந்தையார் திருநாமம் :**
 ஆலிநாடுடையார்
7. **துணைவியார் திருநாமம் :**
 குமுதவல்லி
8. **சிறப்புத் திருநாமங்கள் :**
 1. பரகாலன்
 2. திருமங்கை மன்னன்
 3. கலியன்
 4. நாலு கவிப் பெருமாள்
 5. அருள்மாரி
 6. நீலன்
9. **குலம் :**
 சதுர்த்த வருணம்
10. **அருளிச் செயல்கள் :**
 1. பெரிய திருமொழி 1084
 2. திருக்குறுந்தாண்டகம் 20
 3. திருவெழுகூற்றிருக்கை 1

Koviloor Digital Library

4.	சிறிய திருமடல்	1
5.	பெரிய திருமடல்	1
6.	திருநெடுந்தாண்டகம்	30
	மொத்தம்	1137

11. பாசுரங்கள் அருளிச் செய்த வைணவத் திருத்தலங்கள் :

1. திருஅட்டபுயகரம் - 1118-127, 2674
2. திருஅரிமேயவிண்ணகரம் - 1238-1247
3. திருஆதனூர் - 2674
4. திருஇந்தளூர் - 1328-1337, 2674
5. திருஉறையூர் - 1762
6. திருஊரகம் - 2059, 2064, 2673, 2674
7. திருக்கண்டியூர் - 2050
8. திருக்கரம்பனூர் - 1399
9. திருக்காரகம் - 2059
10. திருக்கார்வானம் - 2959
11. திருக்காவளம்பாடி - 1298-1307
12. திருக்காழிச்சீராம விண்ணகரம் - 1238-1247
13. திருக்கூடலூர் - 1358-1367
14. திருச்சாளக்கிராமம் - 988-997
15. திருச்சிங்கவேள்குன்றம் - 1008-1017
16. திருச்சித்திரகூடம் - 1158-1117, 2674
17. திருச்சிறுபுலியூர் - 1628-1637
18. திருச்செம்பொன் செய்கோயில் - 1268-127
19. திருத்தஞ்சை மாமணிக்கோயில் - 953, 1090, 1576
20. திருத்தலைச்சங்க நாண்மதியம் - 1736, 2674
21. திருக்கடல்மல்லை - 1088 - 1107, 195, 1551, 2050, 2060, 2673, 2674
22. திருக்கடிகை - 1731, 1736, 2673
23. திருக்கண்ணங்குடி - 1748-1757
24. திருக்கண்ணபுரம் - 1648-1747, 2067, 2078
25. திருக்கண்ணமங்கை - 1638-1647, 1848, 2008, 2673, 2764
26. திருக்கள்வனூர் - 2059
27. திருக்குடந்தை - 949, 954, 991, 1078, 1202, 1205, 1394, 1526, 1538, 1570, 1606, 1732, 1759, 1853, 1949, 1975, 2010, 2037, 2045, 2068, 2070, 2080, 2672, 2673, 2674

Koviloor Digital Library

28. திருக்குறுங்குடி - 1005, 1399, 1470, 1788-1807, 2065, 2674
29. திருக்கூடல் - 1762
30. திருக்கோட்டியூர் - 2415
31. திருக்கோவலூர் - 1078, 1138-1147, 1569, 1641, 2057, 2058, 2068, 2673, 2674
32. திருநீர்மலை - 1078-1087, 1115, 1521, 1554, 1660, 1765, 1848, 2069, 2673, 2674
33. திருவரங்கம் - 1019, 1215, 1378-1427, 1506, 1571, 1664, 1829, 1978, 2029, 2038, 2043, 2044, 2050, 2062, 2063, 2065, 2069, 2070, 2073-2076, 2673, 2674
34. திருவல்லிக்கேணி - 1068-1077
35. திருவிடவெந்தை : 1021, 1108-1117, 2673, 2674
36. திருவிண்ணகர் : 1448-1477, 1855, 2080, 2673, 2674
37. திருவேங்கடம் : 1018-1057, 1275, 1312, 1371, 1385, 1404, 1518, 1572, 1640, 1660, 1811, 1836, 1849, 1946, 1978, 2001, 2038, 2059, 2060, 2067, 2673, 2674
38. திருநீரகம் : 2059

Koviloor Digital Library

ஸ்ரீ:

ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

பெரிய திருமொழித் தனியன்கள்

கலயாமி கலித்த்வம்ஸம் கவிம் லோக திவாகரம் ।
யஸ்ய கோபி : ப்ரகாஸாபி : ஆவித்யம் நிஹதம்தம : ||[1]

-திருக்கோட்டியூர் நம்பிகள் அருளிச் செய்தது.

நேரிசை வெண்பா

வாழி பரகாலன் வாழி கலிகன்றி,
வாழி குறையலூர் வாழ்வேந்தன் - வாழியரோ,
மாயோனை வாள்வலியால் மந்திரங்கொள், மங்கையர்கோன்
தூயோன் சுடர்மான வேல்.[2]

-எம்பெருமானார் அருளிச் செய்தது

கட்டளைக் கலித்துறை

நெஞ்சுக் கிருள்கடி தீப மடங்கா நெடும்பிறவி
நஞ்சுக்கு நல்ல வமுதம், தமிழ்நன் னூல்துறைகள்
அஞ்சுக் கிலக்கியம் ஆரண சாரம், பரசமயப்
பஞ்சுக் கனலின் பொறி,பர காலன் பனுவல்களே.[3]

-கூரத்தாழ்வான் அருளிச் செய்தது

நேரிசை வெண்பா

எங்கள் கதியே! இராமா னுசமுனியே,
சங்கைகெடுத் தாண்ட தவராசா,-பொங்குபுகழ்
மங்கையர்கோ னீந்த மறையா யிரமனைத்தும்,
தங்குமனம் நீயெனக்குத் தா.[4]

- எம்பார் அருளிச் செய்தது

Koviloor Digital Library

மாலைத் தனியே வழிபறிக்க வேணுமென்று,
கோலிப் பதிவிருந்த கொற்றவனே,-வேலை
அணைத்தருளும் கையா லடியேன் வினையை,
துணித்தருள வேணும் துணிந்து.[5]

- சோமாசியாண்டான் அருளிச்செய்தது.

1. திருக்கோட்டியூர் நம்பி அருளியது. இதன் உரை: எவருடைய ஒளி விடும் மொழிகளால் அஞ்ஞானத்தாலான இருள் நசிக்கின்றதோ, உலகத்து ஞாயிறாகிய கலிகன்றி என்னும் அக்கவிதையைக் கருத்துட் கொள்கிறேன்.
2. எம்பெருமானார் அருளிச் செய்தது.
3. ஆழ்வான் அருளிச்செய்தது.
4. எம்பார் அருளிச் செய்தது.
5. சோமாசியாண்டான் அருளிச் செய்ததென்று சிலரும், மணவாள மாமுனிகள் அருளிச் செய்ததென்று சிலரும் சொல்லுவர். இத்தனியனைச் சில பிராந்தியங்களில் அனுசந்திக்கும் வழக்கமில்லை.

Koviloor Digital Library

ஸ்ரீ:
ஸ்ரீ இராமஜெயம்
ஸ்ரீமதே இராமாநுஜாய நம:

பெரிய திருமொழித் தனியன்கள்

கலிகாலத்தில் உண்டாகும் அஞ்ஞானத்தினால் உண்டாகின்ற ''இருள்'' என்னும் அறியாமையை எவரொருவருடைய ஒளிவிடும் மொழிகள் என்கின்ற உலகச் சூரியனுக்கிணையானவரான கவிப்பெருமானைத் தியானம் செய்கிறேன். இவருடைய சொற்கள் அறிவின்மையான அகஇருளைப் போக்குகின்றன. இப்படிப்பட்ட கவிப்பெருமான் திருமங்கையாழ்வாரை அடியேன் கருத்துள் என்றென்றும் கொள்கிறேன்.

– திருக்கோட்டியூர் நம்பிகள் அருளிச் செய்தது.

பரகாலன் வாழ்க! இவர் பகைவர்களின் பாவத்தை நீக்குபவர். வாழ்க! திருக்குறையலூர் என்னும் திருத்தலத்தில் வாழ்கின்ற அரசரே வாழ்க! எண்ணிப் பார்க்கவியலாத ஆச்சரியத்தை அளிக்கவல்ல பண்புகளும், செயல்களும் உடைய மாயோனான எம் பெருமானைத் தம்மிடமுள்ள வாளின் ஆற்றலை எடுத்துக் காட்டியதன் மூலம், எம்பெருமானிடமிருந்து திருமந்திரப் பொருளைப் பெற்றுக் கொண்ட திருமங்கை மன்னன், உள்ளும் புறமும் ஒழுக்கத் தூய்மையையுடையவர். அப்படிப்பட்ட ஆழ்வாரின் திருக்கரங்களில் உள்ள ஒளி பொருந்திய பெரிய வேற்படை வாழ்க!

– எம்பெருமானார் அருளிச் செய்தது.

பகைவர்களுக்குக் காலனாகத் திகழும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த பாசுரங்கள் கொண்ட நூல்கள் மனதிலுண்டாகின்ற ''அறியாமை'' என்னும் இருளை அகற்றும் விளக்காகவும், அடங்காத ''நீண்டநெடும் பிறவி'' என்னும் கொடிய நஞ்சினை

Koviloor Digital Library

மாற்றும் மேலான திருவமுதாகத் திகழ்கின்றது. தமிழில் அமைந்துள்ள எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐவகை இலக்கணத்திற்கும் இலக்கியமாகத் திகழ்வதுடன், வேதங்களின் சாரமாகவும், பிற சமயத்தவர்கள் என்னும் பஞ்சுக்கு நெருப்புப் பொறியாகவும் ஆழ்வாரின் பாசுரங்கள் அமைந்துள்ளன.


- கூரத்தாழ்வான் அருளிச் செய்தது.

எங்களுக்குக் கதியாக அமைந்தவரே! ''இராமானுசன்'' என்னும் திருநாமம் கொண்ட முனிவரே! மறைநூல்களைக் கற்கும்போது உண்டாகும் ஐயங்களைப் போக்கி, எல்லோரையும் அடிமையாக ஏற்றுக் கொண்ட தவங்களில் மிக்க முனிவர்கட்கெல்லாம் அரசனாய் அமைந்தவனே! நிறைந்த புகழைக் கொண்ட திருமங்கையாழ்வார் அருளிச் செய்த வேத வடிவமாகத் திகழும் ''பெரிய திருமொழி'' என்னும் ஆயிரம் பாசுரங்களும் ஆரம்ப முதலாக இறுதிவரை அடியேன் மனத்தில் எப்பொழுதும் நிலைத்து நிற்கக்கூடிய மனதினை அடியேனுக்குத் தேவரீர் அளித்தருள வேண்டுகிறேன்.

- எம்பார் அருளிச் செய்தது.

திருமாலைத் தனிவழியில் இருந்து கொண்டு கொள்ளையடிக்க வேண்டுமென்று எண்ணித் திட்டமிட்டு அரச மரத்தடியில் பதுங்கிக் கொண்டிருந்த திருமங்கை மன்னனே! இந்தத் திருமங்கை மன்னன் தன் வேற்படையை அணைத்துக் கொண்டருளும் திருக்கரங்களால், அடியேனுடைய தீவினைகளைத் தாங்கள் மனஉறுதியுடன் துணிந்து வெட்டிக் களைந்தருள வேண்டும்.

- சோமாசியாண்டான் அருளிச் செய்தது.



Koviloor Digital Library

ஸ்ரீ:

திருமங்கையாழ்வார் அருளிச் செய்த

பெரிய திருமொழி

முதல் பத்து

1. வாடினேன்

அஷ்டாக்ஷரத்தின் பெருமை

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*வாடினேன் வாடி வருந்தினேன் மனத்தால்
பெருந்துய ரிடும்பையில் பிறந்து,
கூடினேன் கூடி யிளையவர் தம்மோ
டவர்தரும் கலவியே கருதி,
ஓடினே னோடி யுய்வதோர் பொருளால்
உணர்வெனும் பெரும்பதந் தெரிந்து,[1]
நாடினேன் நாடி நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம். 948

பெருந்துன்பத்திற்குக் காரணமாகவும், அதற்குரிய இடமாகவும் அமைந்துள்ள உடலில் அடியேன் பிறந்து, இந்த உயிரானது அதனுள்ளே பொருந்தும்படியாகக் கூடினேன். அதற்குப் பிறகு இளம்பெண்கள் அளிக்கின்ற சுகத்தையே எண்ணிக் கொண்டு அவர்கள் சென்றவாறே பின்தொடர்ந்து ஓடிக் கொண்டிருந்தேன். இவ்வாறு இந்தச் சிற்றின்பங்களிலேயே என் மனதை ஈடுபடுத்தி வருத்தத்தினை அதிகமாகப் பெற்றதனால் மனம் மிகவும் வாடி,

Koviloor Digital Library

வாடிப் பெருவருத்தமுற்றேன். இறுதியில் உய்வு பெறுவதற்குரிய பொருளை நாடி நாடி ஓடினேன். ''உணர்வு'' என்னும் செம்பொருளான பெரும் பதத்தினை அதற்கான அறிவினை எம்பெருமான் திருவருளால் நாடி இது நன்று, இது தீது என்னும் உணர்வினை உணர்ந்தேன். அடியேன், ''ஓம் நமோ நாராயணாய'' என்னும் ''எட்டு எழுத்துத் திருமந்திரம்'' என்னும் எம்பெருமானின் திருநாமத்தினைக் கண்டு கொண்டேன்.

*'ஆவியே! அமுதே!' எனநினைந் துருகி
அவரவர் பணைமுலை துணையா,
பாவியே னுணரா தெத்தனை பகலும்
பழுதுபோ யொழிந்தன நாள்கள்,
தூவிசே ரன்னம் துணையொடும் புணரும்
சூழ்புனல் குடந்தையே தொழுது,என்
நாவினா லுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம். 949

இளம்பெண்களின் பருத்த முலைகளையே துணையாகக் கருதிக் கொண்டு, எம்பெருமானை மறந்து பாவியாகிய அடியேன் இதுபற்றி உணராமல் பற்பல பகல்களையும், பற்பல நாட்களையும் வீணாகக் கழித்துவிட்டேன். இதற்கும் மேலாக அவ்விளம் பெண்களை நோக்கி, ''என் உயிரே! என் அமுதே! என்றெல்லாம் பொய்யுரைகளைப் பலபடப் பேசி, அவர்களால் கிடைக்கக் கூடிய சிற்றின்பத்தினை எண்ணி, எண்ணி வீணனாகவே ஆகிவிட்டேன். இந்நிலைக்காளான அடியேன் ''நாராயணா'' என்னும் திரு நாமத்தைக் கண்டு கொண்டு நாவினால் கூறி அழைக்கும் பேறு பெற்றேன். சிறகுகள் நிறைந்து இருக்கும் அன்னப்பறவையானது தன் பெண் அன்னத்துடன் சேர்ந்து வாழ்கின்ற அளவில் நீர்வளம் மிகுந்திருக்கும் ''திருக்குடந்தை'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு அருளும் ஆராவமுதன் என்னும் எம்பெரு மானைத் தொழுது உய்வுபெறும் வகையில் ''ஓம் நமோ நாராயணாய!'' என்னும் எட்டெழுத்து மந்திரத்தை அடியேன் கண்டு கொண்டேன்.

சேமமே வேண்டித் தீவினை பெருக்கித்
தெரிவைமா ருருவமே மருவி,
ஊமனார் கண்ட கனவிலும் பழுதாய்
ஒழிந்தன கழிந்தவந் நாள்கள்,

Koviloor Digital Library

காமனார் தாதை நம்முடை யடிகள்
தம்மடைந் தார்மனத் திருப்பார்,
நாமம்நா னுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம். 950

நன்மைகளையே அடைய வேண்டும் என்று எண்ணிய அடியேன், அதற்கேற்ற வகையில் நன்மைகள் எதனையும் செய்யாமல், தீய செயல்களை அதிக அளவில் செய்து கொண்டிருப்பதோடன்றி, மேலும் மேலும் இளம்பெண்களின் வடிவழகிலேயே பொருந்தியிருந்து கழித்த காலமெல்லாம் வீணாகக் கழிந்தன. இவ்வாறு கழிந்த காலத்தில் ஊமைகள் கண்ட கனவுகள் வீணாகிப் போவதைக் காட்டிலும் வீணே கழிந்து சென்றன. மன்மதனுக்குத் தந்தையாகவும், நமக்கெல்லாம் தலைவனாகவும் உள்ள திருமாலை அடைக்கலம் அடைந்த அடியவர்கள் நெஞ்சில் என்றென்றும் நீங்காமல் நிலைத்து நிற்பார். இப்படிப்பட்ட எம்பெருமானின் திருநாமமான ''ஓம் நமோ நாராயணாய'' என்னும் எட்டெழுத்துத் திருமந்திரத்தை அடியேன் உய்யும் வண்ணம் இன்று கண்டு கொண்டேன்.

வென்றியே வேண்டி வீழ்பொருட் கிரங்கி
வேற்கணார் கலவியே கருதி,
நின்றவா நில்லா நெஞ்சினை யுடையேன்
என்செய்கேன் நெடுவிசும் பணவும்,
பன்றியா யன்று பாரகங் கீண்ட
பாழியா னாழியா னருளே,
நன்றுநா னுய்ய நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம். 951

வெற்றியினையே வேண்டி விரும்பிய அடியேன், அழிந்து படும் தன்மையையுடைய பொருள்களைப் பெறுவதற்குப் பெரிதும் வருந்தினேன். வேல் போன்ற கண்களையுடைய பெண்களுடன் சென்று சேர்வதையே எண்ணிக் கொண்டு இருக்கின்ற என் மனமானது, வேறொன்றிலும் நிலையாகத் தங்கியிராத மனதினையுடைய அடியேன் என்ன செய்வேன்! ஆயினும் சிற்றின்பத்திலேயே ஈடுபட்டிருக்கின்ற அடியேன் அந்தச் செயல்பாடுகளின்றும் மீண்டு உய்வு பெறும் வகையில் ''நாராயணா'' என்னும் திருநாமத்தை இன்று கண்டு கொண்டேன். உலகப் பிரளய காலத்தில்

Koviloor Digital Library

இம்மண்ணுலகினைப் பெருவெள்ளம் சூழ்ந்து கொண்டு மூடிய அந்நாளில், நீண்ட ஆகாயத்தைத் தொட்டுக் கொண்டிருக்குமாறு போல உயர்ந்தோங்கி வளர்ந்த நிலையில் இந்தப் பெருமான் பன்றி வடிவம் மேற்கொண்டு இப்பூமியை, அண்டச் சுவரினின்றும் பிரித்து எடுத்த பெருத்த மிடுக்குடையவனான எம்பெருமான் திருவாழியானைத் தன் திருக்கரத்தில் ஏந்தியருளிய அந்த பூவராகப் பெருமானின் திருவருளாலேயே அடியேன் இன்று ''ஓம் நமோ நாராயணாய'' என்னும் எட்டு மந்திரத்தை அடையப் பெற்றேன்.

கள்வனே னானேன் படிறுசெய் திருப்பேன்
கண்டவா திரிதந்தே னேலும்,
தெள்ளிய னானேன் செல்கதிக் கமைந்தேன்
சிக்கெனத் திருவருள் பெற்றேன்,
உள்ளெலா முருகிக் குரல்தழுத் தொழிந்தேன்
உடம்பெலாம் கண்ணநீர் சோர,
நள்ளிரு ளளவும் பகலும்நா னழைப்பன்
நாராய ணாவென்னும் நாமம். 952

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் உடைமையான இந்த ஆத்மாவை அபகரித்துக் கொண்டவனாகிவிட்டேன். தீமைகள் பலவற்றைச் செய்து கொண்டு இருந்துவிட்டேன். கண்டபடி யெல்லாம் திரிந்து கொண்டு இருந்துவிட்டேன். இவ்வாறெல்லாம் முறைகேடானவற்றைச் செய்து கொண்டிருப்பினும், ''அவன் உடையவன் நான் உடைமை'' என்னும் நிலையில் அவனருளால் தெளிவை அடைந்தேன். அதனால் அடியேன் இந்த ஆத்மாவைப் பற்றிய அறிவினைத் தெளிவாக அறிந்தேன். அதனால் அடியேன் திருப்பரமபதம் சென்றடைவதற்கான முழுத் தகுதியையும் அடைந்துவிட்டேன். நூலில் உண்டான சிக்கைப் பிரிக்க இயலா ததைப் போன்று அடியேன் எம்பெருமானுடன் பிரித்தற்கியலாத அளவில் அவன் திருவருளைப் பெற்றேன். உள்ளம் எல்லாம் உருகி நீர்ப்பண்டமாகக் கரைய, உடம்பு முழுவதும் கண்ணீர்ப் பெருக்கினால் நனையக் குரல் தழுதழுத்த நிலையில் நின்று நள்ளிருள் வரையும், பகற்பொழுது முழுவதும் ''ஓம் நமோ நாராயணாய'' என்னும் எட்டெழுத்துத் திருமந்திரத்தைக் கூறி, அந்த எம்பெருமானை அழைக்கலானேன்.

Koviloor Digital Library

*எம்பிரா னெந்தை யென்னுடைச் சுற்றம்
எனக்கர சென்னுடை வாணாள்,
அம்பினா லரக்கர் வெருக்கொள நெருக்கி
அவருயிர் செகுத்தவெம் மண்ணல்,
வம்புலாஞ் சோலை மாமதிள் தஞ்சை
மாமணிக் கோயிலே வணங்கி,
நம்பிகாள்! உய்ய நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம். 953

பக்தியில் மிக்க அடியவர்களே! எனக்குத் தந்தையாகவும், என்னைச் சுற்றியிருக்கும் எல்லா வகையான சுற்றத்தினராகவும் என்னை ஆள்பவன் ஆகவும், என்னுடைய வாழ்கின்ற காலமாகவும், அம்புகளைக் கொண்டு அரக்கர்களின் உயிரைப் போக்கிய எம் அண்ணலான ஸ்ரீ இராமபிரான் தஞ்சை மாமணிக்கோவிலில் எழுந்தருளப் பெற்று எந்நாளும் தங்கியிருக்கின்றான். மணம் வீசும் சோலைகள் நிறைந்த, பெரிய திருச்சுற்று மதிளை உடைய திருத்தஞ்சை மாமணித் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ இராமபிரானை வணங்கி, ''ஓம் நமோ நாராயணாய'' என்னும் எட்டெழுத்து மந்திரத்தினை அடியேன் உய்யும் வண்ணம் இன்று நான் கண்டு கொண்டேன்.

இற்பிறப் பறியீ ரிவரவ ரென்னீர்
இன்னதோர் தன்மையென் றுணரீர்,
கற்பகம் புலவர் களைகணென் றுலகில்
கண்டவா தொண்டரைப் பாடும்,
சொற்பொரு ளாளீர்! சொல்லுகேன் வம்மின்
சூழ்புனல் குடந்தையே தொழுமின்,
நற்பொருள் காண்மின் பாடிநீ ருய்ம்மின்
நாராய ணாவென்னும் நாமம். 954

(ஆழ்வார் இப்பாசுரத்தினைப் புலவர்களை நோக்கிக் கூறியருளியது)

பொருள் பொதிந்த சொற்களைக் கையாளும் புலவர்களே! நீங்கள் இவ்வுலகில் இழிதொழிலைச் செய்பவர்களின் இல்லம், குடிப்பிறப்புகளை அறிந்து கொள்ளமாட்டீர்கள். இவர் இவர் இன்னின்ன தன்மையினையுடையவர் என்றும் அறிந்து கொள்ள மாட்டீர்கள். அவரவர் குணநலன்கள் இன்ன தன்மைத்து என்றும்

Koviloor Digital Library

உணரமாட்டீர்கள். இவை எவற்றையும் அறியாமல், ''கற்பகத் தருவே! கற்றோரைக் காப்பாற்றுபவர்களே!'' என்றெல்லாம் இப்பொழுது இவர் செல்வந்தராக இருப்பினும், முன்பு எப்படி இவரின் இயல்பு இருந்தது என்பதைக் கூட உணராமல் மனதில் தோன்றியபடியெல்லாம் புகழ்ந்து புகழ்ந்து பாக்கள் பல படப்புனைந்து புகழ்கிறீர்கள். இனி அவ்வாறு செய்யாதீர்கள். இங்கே வாருங்கள். கூறுகிறேன் கேளுங்கள். காவிரி நீர் சூழ்ந்துள்ள திருக்குடந்தைத் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஆரா்வமுதப் பெருமானை வணங்குவீர்களாக! ''ஓம் நமோ நாராயணாய'' என்னும் எட்டெழுத்துத் திருமந்திரத்தைப் பாடிப்பாடி உய்வு பெறுங்கள். இதுவே நற்பொருள்.

கற்றிலேன் கலைக ளைம்புலன் கருதும்
　　கருத்துளே திருத்தினேன்[1] மனத்தை,
பெற்றிலே னதனால் பேதையேன் நன்மை
　　பெருநிலத் தாருயிர்க் கெல்லாம்,
செற்றமே வேண்டித் திரிதர்வேன் தவிர்ந்தேன்
　　செல்கதிக் குய்யுமா றெண்ணி,
நற்றுணை யாகப் பற்றினே னடியேன்
　　நாராய ணாவென்னும் நாமம். 955

அடியேன் குறிப்பிட்ட ஆசிரியரிடம் சென்று கல்வி கற்கவில்லை. ஐம்புலன்கள்கூறும் கருத்துகட்கேற்பவே என் மனதினைச் செலுத்தி, அதனால் அறிவற்றவனாகி நன்னிலையை அடையப் பெறாதவனானேன். அதனால் அடியேன் எந்தவிதமான நன்மையையும் அடையவில்லை. இவ்வுலகிலுள்ள உயிர்களுக் கெல்லாம் தீமைகளைச் செய்யும் வழிகளை எண்ணி எண்ணித் திரிந்து கொண்டிருந்தேன். இப்போது இவைகளையெல்லாம் அவனருளால் நீங்கப் பெற்றேன். திருநாட்டிற்குச் செல்லும் படியான வழிமுறைகளை எண்ணியபடியே ''ஓம் நமோ நாராயணாய'' என்னும் எட்டெழுத்து மந்திரத்தை அடியேன் நல்லதோர் துணையாகப் பெற்றுக் கொண்டேன்.

*குலந்தருஞ் செல்வந் தந்திடு மடியார்
　　படுதுய ராயின வெல்லாம்,
நிலந்தரஞ் செய்யும் நீள்விசும் பருளும்
　　அருளொடு பெருநில மளிக்கும்,

Koviloor Digital Library

வலந்தரும் மற்றுந் தந்திடும் பெற்ற
தாயினு மாயின செய்யும்,
நலந்தருஞ் சொல்லை நான்கண்டு கொண்டேன்
நாராய ணாவென்னும் நாமம். 956

''நாராயணா'' என்னும் திருநாமத்தை மனதில் எண்ணுபவர் களுக்கு, எம்பெருமானுக்குத் தொண்டுபுரியும் நல்லதோர் குலத்தைத் தந்தருளும். செல்வத்தைத் தந்திடும் அடியார்கள் அனுபவித்துக் கொண்டிருக்கின்ற துன்பங்கள் யாவற்றையும் தரைமட்டமாக்கிவிடும். திருப்பரமபதத்தை யளிக்கும் இறை யருளுடன் அவனுக்கே கைங்கர்யம் செய்யக் கூடிய ஒரு பெரிய நிலையினையும் அருளும். பகவானைப் பற்றி அனுபவிக்கும் ஆற்றலையும் அளித்திடும். மேன்மேலும் பற்பல நன்மைகளையும் நமக்கே அளித்திடும். இன்னும் இவை போன்ற எல்லா நன்மைகளையும் தந்திடும். இவ்வுலகில் நம்மைப் பெற்றெடுத்த தாயே நம்மீது மிகுந்த அன்பையும் அருளையும் செலுத்துபவள். அப்படிப்பட்ட நம்மைப் பெற்ற தாயின் அன்பு, அருள், நன்மைகளைக் காட்டினும் அதிக நன்மைகளை அளித் தருளும். அப்படிப்பட்ட நன்மைகளுடன் ஆத்மஞானத்தையும் தந்தருளும். அவனுக்கே தொண்டு செய்யும் அரும்பெருஞ் செல்வத்தைத் தருகின்ற திருநாமமாகிய ''ஓம் நமோ நாராயணாய'' என்னும் எட்டெழுத்துத் திருமந்திரத்தை அடியேன் கண்டு கொண்டேன்.

*மஞ்சுலாஞ் சோலை வண்டறை மாநீர்
மங்கையார் வாள்கலி கன்றி,
செஞ்சொலா லெடுத்த தெய்வநன் மாலை
இவைகொண்டு சிக்கெனத் தொண்டீர்,
துஞ்சும்போ தழைமின் துயர்வரில் நினைமின்
துயரிலீர் சொல்லிலும் நன்றாம்,
நஞ்சுதான் கண்டீர் நம்முடை வினைக்கு
நாராய ணாவென்னும் நாமம். 957

(வாடினேன் ஆவியே சேமம் வென்றி கள்வனேன் எம்பிரான் இற்பிறப்பு கற்றிலேன் குலம் மஞ்சு-வாலி.)

தொண்டர் பெருமக்களே! மேகங்கள் உலவி வருகின்ற சோலைகளையும், வண்டுகள் ஒலிக்கும் நீர் நிறைந்திருக்கின்ற நீர் நிலைகளையுமுடைய திருமங்கைத் திருநாட்டில் வாழ்பவர்க்

Koviloor Digital Library

கெல்லாம் பாதுகாப்பாகக் கொண்டிலங்கும் வாளை உடையவராய், கலிகாலத்திலுண்டாகும் தீமைகளை நீக்கியவரான திருமங்கை ஆழ்வார் தம் செவ்விய சொற்களால் அருளிச் செய்த தெய்வ மாலையான இப்பத்துப் பாசுரங்களையும் கொண்டு எம்பெருமான் திருநாமங்களைக் கூறுங்கள். இவ்வெம்பெருமான் திருநாமத்தினை இவ்வுடலைவிட்டு உயிர் நீங்குகின்ற காலத்திலும், நமக்குத் துன்பங்கள் உண்டாகின்ற காலங்களிலும் எடுத்தக் கூறுங்கள். நமக்குத் துன்பங்கள் ஏதும் ஏற்படாத காலங்களிலும் நன்மையையே அளிக்கக் கூடிய ''ஓம் நமோ நாராயணாய'' என்னும் எட்டெழுத்துத் திருமந்திரத்தினை ஓதினால் அஃதே நாம் செய்த பாவங்கள் நீங்குவதற்குரிய நஞ்சாக அமையும்.

உ. வாலி மாவலத்து திருப்பிருதி

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*வாலி மாவலத் தொருவன துடல்கெட
வரிசிலை வளைவித்தன்று,
ஏல நாறுதண் தடம்பொழி லிடம்பெற
இருந்தந லியமயத்துள்,
ஆலி மாமுகி லதிர்தர அருவரை
அகடுற முகடேறி,
பீலி மாமயில் நடஞ்செயும் தடஞ்சுனைப்
பிருதிசென் றடைநெஞ்சே! 958

மனமே! ஸ்ரீ இராமபிரான் கானகம் சென்ற காலத்தில் நட்பு பூண்டவனும், சரணடைந்தவனுமான சுக்ரிவனுக்கு உதவி செய்யும் பொருட்டும், அவனை அவனுடைய அண்ணனிடமிருந்து காப்பாற்றும் பொருட்டும், ஒப்பற்ற மிகுந்த பலம் பொருந்திய வாலியின் உடல் அழியும்படி அழகிய வில்லை வளைத்து அவனுயிரைப் போக்கி எழுந்தருளிய திருத்தலமே திரிப்பிரிதி ஆகும். இத்திருத்தலமானது வடக்கே இமயமலைப் பகுதியில் பரந்த, குளிர்ச்சிமிக்க, சுனைகள் சூழ்ந்த பகுதியில் மணம்வீசும் சோலைகள் நிறைந்த இடத்தில் அமைந்துள்ளது. இங்கே பெரும் மேகங்கள் பொழிகின்ற சிறந்த பனிமலையில் சிறிய துளிகளைக் கண்டு

Koviloor Digital Library

கொண்ட தோகையையுடைய பெரிய மயில்கள், தங்கள் அடிவயிறு தழுவும்படியாக அம்மலைச் சிகரங்களின் மீதேறி ஓடியாடுகின்றன. அப்படிப்பட்ட ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலம் சென்றடைதல் வேண்டும்.

கலங்க மாக்கட லரிகுலம் பணிசெய்ய
அருவரை யணைகட்டி,
இலங்கை மாநகர் பொடிசெய்த அடிகள்தாம்
இருந்தந லிமயத்து,
விலங்கல் போல்வன விறலிருஞ் சினத்தன
வேழங்கள் துயர்கூர,
பிலங்கொள் வாளெயிற் றரியவை திரிதரு
பிருதிசென் றடைநெஞ்சே! 959

ஏமனமே! பெரிய கடல் கலக்கமடையுமாறு குரங்கினக் கூட்டங்கள் அடிமைத் தொண்டு புரிய அதன் காரணமாக ஸ்ரீ இராமபிரான் அதன்மேலே மலைகளை இட்டு அணைகட்டி அதன் வழியாக இலங்கை மாநகரை அடைந்து, அந்நகரையே பொடிப் பொடியாகச் செய்துவிட்டார். அப்படிப்பட்ட ஸ்ரீ இராமபிரானின் திருவடிகளால் சென்று சேர்ந்த எம்பெருமான் தங்கியிருக்கின்ற நல்ல இமயமலையில் ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலம் அமைந்துள்ளது. இத்திருத்தலத்தில் மலைபோன்ற மிடுக்கான வலிமை பொருந்திய, பெருஞ்சினம் கொண்ட யானைகளும் அஞ்சும் படியாகக் குகைகளை இருப்பிடமாகக் கொண்டு, வாள் போன்ற கூர்மையான பற்களையுடைய சிங்கங்கள் அக்குகைகளிலிருந்து புறப்பட்டு வெளிவரும். இப்படிப்பட்ட ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலம் சென்றடைதல் வேண்டும்.

துடிகொள் நுண்ணிடைச் சுரிகுழல் துளங்கெயிற்
றிளங்கொடி திறத்து,ஆயர்
இடிகொள் வெங்குர லினவிடை யடர்த்தவன்
இருந்தந லிமயத்து,
கடிகொள் வேங்கையின் நறுமல ரமளியின்
மணியறை மிசைவேழம்,
பிடியி னோடுவண் டிசைசொலத் துயில்கொள்ளும்
பிருதிசென் றடைநெஞ்சே! 960

Koviloor Digital Library

மனமே! 'துடி' என்னும் பெயர்பூண்ட உடுக்கை போன்ற ஒசிந்த நுண்ணிய இடையினையும், சுருண்டுள்ள கருங்கூந்தலையும் கொண்டு விளங்குகின்ற தூயவெண்மையான பல்வரிசைகளையு முடைய இளைய கொடி போன்ற நப்பின்னைப் பிராட்டியை அடையும் பொருட்டு, ஆயர்களுடைய இடிபோன்ற கொடிய முக்கார ஒலியை முழங்கிய ஏழு காளைகளையும் அடக்கி ஒருசேர அழித்த எம்பெருமான் கண்ணபிரான் எழுந்தருளியுள்ள திவ்விய தேசம் எனப்படும் திருப்பிரிதியானது இனிய பனிமலையில் - இமய மலையில் நீலமணிப்பாறைகளின் மேலே மணம் பொருந்திய வேங்கை மரத்தினின்றும் உதிர்ந்து கொட்டுகின்ற 'பூக்கள்' என்னும் மலர்ப்படுக்கையில் ஆண் யானையானது தன் பெண் யானையுடன் படுத்து உறங்கும் அவ்விடத்திலேயே வண்டுகள் ரீங்காரமிட்டுக் கொண்டு இசைபாடும். இப்படிப்பட்ட ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலம் சென்றடைதல் வேண்டும்.

மறங்கொ ளாளரி யுருவென வெருவர
ஒருவன தகல்மார்வம்
திறந்து, வானவர் மணிமுடி பணிதர
இருந்தந லிமயத்துள்,
இறங்கி யேனங்கள் வளைமருப் பிடந்திடக்
கிடந்தரு கெரிவீசும்,
பிறங்கு மாமணி யருவியொ டிழிதரு
பிருதிசென் றடைநெஞ்சே! 961

ஏ மனமே! இன்ன வடிவம் என்று எம்பெருமான் எடுத்த அவதாரத்தின் வடிவத்தைப் பெயரிட்டுக் கூறினாலே அச்சமடை கின்ற அளவுக்கு மிக்க கோபத்துடன் மேற்கொண்ட நரசிம்ம மூர்த்தியாகத் திருவவதாரம் செய்து, இரணியனுடைய மார்பினைப் பிளந்து நின்றவர் எம்பெருமான் ஸ்ரீ மந்நாராயணன் இவ்வரிய செயலையறிந்த தேவர்கள் தங்கள் மணிமுடிகளால் வணங்கப் பெற்ற மேன்மையை உடையவன் எம்பெருமான். இப்படிப்பட்ட எம்பெருமான் இமயமலையில் அமைந்துள்ள ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி உள்ளான். அந்தப் பனி மலையில் பன்றிகள் தலையைத் தாழ்த்திக் கொண்டு தம் கொம்புகளால் அம்மலைகளிலே அமைந்து கொண்டிருக்கின்ற பாறைகளைப் பிளக்கும்பொழுது, ஒளிவீசும் மாணிக்க மணிகள்

Koviloor Digital Library

வெளிப்பட்டு அம்மலையருவியில் விழுந்து உருண்டோடு கின்றன. அவைகள் வெள்ளத்துடன் சென்று சேர்கின்றன. இப்படிப்பட்ட ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலம் சென்றடைதல் வேண்டும்.

கரைசெய் மாக்கடல் கிடந்தவன் கனைகழல்
அமரர்கள் தொழுதேத்த,
அரைசெய் மேகலை யலர்மக ளவளொடும்
அமர்ந்தந லியமத்து,
வரைசெய் மாக்களி றிளவெதிர் வளர்முளை
அளைமிகு தேன்தோய்த்து,
பிரச வாரிதன் னிளம்பிடிக் கருள்செயும்
பிருதிசென் றடைநெஞ்சே! 962

ஏ மனமே! கரையினைத் தானே அமைத்துக் கொண்டிருக்கும் பெரிய கடல் என்னும்படியான திருப்பாற்கடலில் திருப்பள்ளி கொண்டிருக்கும் எம்பெருமான் அணிகள் ஒலித்துக் கொண்டிருக் கின்ற தம் திருவடிகளில் தேவர்கள் வணங்கித் துதிக்கும்படியாகத் திருவரையில் ''மேகலை'' என்னும் ஆபரணத்தைத் திருமகளுடன் சேர்த்திருக்கின்றான். இந்த எம்பெருமான் சென்று சேர்ந்திருக்கின்ற ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலமானது இமயமலையில் உள்ளது. இங்கே மலை போன்ற பெரிய பெரிய ஆண்யானைகள் இளைய மூங்கிலின் வளைந்த முளைகளைப் பிடுங்கித் தேனில் தோய்த்துப் பிறகு தன் சிறிய குட்டிப் பெண் யானைகளின் வாயில் பருக்கை தட்டுப்பட்டு நிற்காமல் படிக்குத் தேன் பாகுடன் ஊட்டி விடும். அப்படிப்பட்ட வளம்மிக்க ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலம் சென்றடைதல் வேண்டும்.

'பணங்க ளாயிர முடையநல் லரவணைப்
பள்ளிகொள் பரமா!'என்,
றிணங்கி வானவர் மணிமுடி பணிதர
இருந்தந லியமத்து,
மணங்கொள் மாதவி நெடுங்கொடி விசும்புற
நிமிர்ந்தவை முகில்பற்றி,
பிணங்கு பூம்பொழில் நுழைந்துவண் டிசைசொலும்
பிருதிசென் றடைநெஞ்சே! 963

ஏ மனமே! ''ஆயிரம் படங்களையுடைய நல்ல பாம்புப் படுக்கையில் திருப்பள்ளி கொண்டு இருக்கும் எம்பெருமான்''

Koviloor Digital Library

என்று வானவர்கள் எல்லோரும் சென்று ''யாவர்க்கும் மேலானவனே!'' என்று மணிகள் பதித்த முடியோடு கூடிய தன் தலைகளாலே வணங்கி நிற்க எம்பெருமான் இமயமலையிலுள்ள ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலத்தில் தங்கியிருக்கிறான். இத்திருத்தலத்தில் மணம்மிக்க குருக்கத்திக் கொடிகள் வானுயர ஓங்கி வளர்ந்து மேகங்களைக் கொழுகொம்பாகப் பற்றிக் கொண்டு சுற்றி வளைக்கும். அங்கு மலர்கள் மலரும் மலர்ச் சோலையில் வண்டுகள் உள்ளே புகுந்து பாடும், நீ இப்படிப்பட்ட ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலம் சென்றடைதல் வேண்டும்.

கார்கொள் வேங்கைகள் கனவரை தழுவிய
கறிவளர் கொடிதுன்னி,
போர்கொள் வேங்கைகள் புனவரை தழுவிய
பூம்பொழி லிமயத்துள்,
ஏர்கொள் பூஞ்சுனைத் தடம்படிந் தினமலர்
எட்டுமிட் டிமையோர்கள்,
பேர்க ளாயிரம் பரவிநின் றடிதொழும்
பிருதிசென் றடைநெஞ்சே! 964

ஏ மனமே! மேகங்கள் நிறைந்திருக்கின்ற அதன் உயரம் அளவுக்கு வளர்ந்திருக்கின்ற வேங்கை மரங்களை, அந்த இமயமலையின் அடிப்பரப்பில் இருந்து முளைத்து வளர்ந்து வருகின்ற மிளகுக் கொடிகள் பற்றிப் படரும் அப்படிப்பட்ட பூஞ்சோலைகள் நிறைந்திருக்கின்ற இமயமலையில் கொல்லை நிலங்களில் போரிடத்தக்க ஆற்றல் வாய்ந்த வேங்கைப்புலிகள் வாழ்ந்து கொண்டிருக்கின்றன. இங்கு பிரமன் முதலிய தேவர்கள் அழகிய மலர்கள் மலர்ந்துள்ள தடாகங்களிலே நீராடி விட்டு, அங்கேயுள்ள எட்டுவகைப் பூக்களையும் திருமாலின் திருவடியில் இட்டு நின் ஆயிரம் திருநாமங்களையும் தம் வாயில் வந்த வண்ணம் ஓதிவணங்குவர் அப்படிப்பட்ட ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலம் சென்றடைதல் வேண்டும்.

இரவு கூர்ந்திருள் பெருகிய வரைமுழை
இரும்பசி யதுகூர,
அரவம் ஆவிக்கு மகன்பொழில் தழுவிய
அருவரை யிமயத்து,

Koviloor Digital Library

பரம னாதியெம் பனிமுகில் வண்ணனென்
றெண்ணிநின் றிமையோர்கள்,
பிரம னோடுசென் றடிதொழும் பெருந்தகைப்
பிருதிசென் றடைநெஞ்சே! 965

ஏ மனமே! இமயமலையில் அடர்ந்த சோலைகளாலும், இரவே போன்று இருள் மண்டிக் கிடப்பதனாலும் அங்குள்ள எல்லா இடத்திலும் எப்போதும் இருட்டு நிறைந்த குகைகளில், மிக்க பசியின் காரணமாக அங்குள்ள மலைப் பாம்புகள் கொட்டாவி விடும். அங்குள்ள தாழ்ந்த அளவிலுள்ள மலைகளில் ஏறுவதற்கரிய உட்சோலைகளோடு கூடிய பனிமலையில் யாவர்க்கும் மேம் பட்டவனாகத் திகழும் எம்பெருமானே! ''உலகத் தோற்றத்திற்கு முதற் காரணமானவனே! குளிர்ந்த மேகம் போன்ற நிறத்தினை யுடைய எம்பெருமானே! பரமபுருடனே!'' என்றெல்லாம் நின் திருநாமங்களையெல்லாம் பிரமன் முதலான தேவர்கள் எல்லோரும் சென்று திருமாலை வணங்குவார்கள். இப்படிப்பட்ட பெருமை மிக்க ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலம் சென்றடைதல் வேண்டும்.

ஓதி ஆயிர நாமங்க ளுணர்ந்தவர்க்
குறுதுய ரடையாமல்,
ஏத மின்றிநின் றருளும்நம் பெருந்தகை
இருந்தந லியமத்து,
தாது மல்கிய பிண்டிவிண் டலர்கின்ற
தழல்புரை யெழில்நோக்கி,
பேதை வண்டுக ளெரியென வெருவரு
பிருதிசென் றடைநெஞ்சே! 966

எம்பெருமானின் ஆயிரம் திருநாமங்களைச் சொல்லிச் சொல்லி எம்பெருமான் ''ஸ்ரீமந்நாராயணனே கதி'' என்று உணர்ந்தவர்களுக்கு - சரணடைந்தவர்கட்குப் பாவங்கள் ஏதும் வந்து சேர்ந்துவிடாது என்றும் நம்மைக் காப்பாற்றியருளும் நம் எம்பெருமான், இமயமலையிலுள்ள ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளான். இம்மலையில் தாதுக்கள் மிகுந்திருக்கும் இந்த மகரந்தத்துடன் நெருப்புப் போன்று அசோக மலர்களைத் ''தீ'' என்றெண்ணி வண்டுகள் அஞ்சுகின்றன. ஏ மனமே! இப்படிப்பட்ட ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலம் சென்றடைதல் வேண்டும்.

Koviloor Digital Library

*கரிய மாமுகில் படலங்கள் கிடந்தவை
முழங்கிட, களிறென்று
பெரிய மாசுணம் வரையெனப் பெயர்தரு
பிருதியெம் பெருமானை,
கோள் வண்டறை பைம்பொழில் மங்கையர்
கலியன தொலிமாலை,
அரிய வின்னிசை பாடுநல் லடியவர்க்
கருவினை யடையாவே. 967

(வாலி கலங்கத் துடி மறம் கரைசெய் பணங்கள் கார் இரவு ஓதி கரிய-முற்ற.)

அடர்த்தியாகக் கிடக்கின்ற கருமை நிறமுடைய மேகக் கூட்டங்கள் தன்னிடத்தில் நீரை நிறையக் கொண்டிருப்பதனால் அதன் பளுவைத் தாங்கமாட்டாமல் முழக்கமிட, அந்த ஒலியைக் கேட்ட பெரிய மலைப் பாம்புகள், யானைகள் ஆகியவை வருவதாக எண்ணிக் கொண்டு மலைபோல அசைந்து வருகின்ற காட்சிகளைக் காணக் கூடிய திருத்தலம் ''திருப்பிரிதி'' என்பதாகும். இங்கே எப்பொழுதும் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானைப் பற்றி, வண்டுகள் இசைபாடும் சோலைகள் நிறைந்த திருமங்கை நாட்டு மன்னர் கலியன் என்னும் திருமங்கையாழ்வார் ஒலிமாலையாக அமைத்துள்ள இப்பாசுரங்களைப் பாடியருளினார். இவ்வரிய இன்னிசைப் பாடல்களைப் பாடவல்ல அடியவர்களைத் தீவினைகள் ஏதும் அணுகாது.

3. முற்ற மூத்து
திருவதாரி

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*முற்ற மூத்துக்கோல் துணையா முன்னடி நோக்கிவளைந்து,
இற்ற கால்போல் தள்ளி மெள்ள விருந்தங் கிளையாமுன்,
பெற்ற தாய்போல் வந்த பேய்ச்சி பெருமுலை யூடு,உயிரை
வற்ற வாங்கி யுண்ட வாயான் வதரி வணங்குதுமே. 968

உடல் முற்றிய அளவில் முதுமைக்காலத்தில் 'மூன்றாவது கால்' எனப்படும் ஊன்றுகோலையே தனக்குற்ற துணையாகக் கொண்டு முன்னே அடிவைத்து மெல்ல மெல்ல நடக்க நேரிடும்போது, தலை

Koviloor Digital Library

தரையைப் பார்த்துச் செல்ல, கால்முறிந்துவிட்டது போன்ற உணர்வு உண்டாகத் தட்டுத் தடுமாறி ஓரிடத்தில் மெள்ள உட்காருவதற்கு முன்பே இளைப்பு உண்டாகும். இத்தகைய கிழட்டுத்தனம் என்னும் இயலாமை உண்டாகும் முன்பே ''திருவதரி'' என்னும் திருத்தலம் சென்று வணங்குவோம் - ஏனெனின் இத்திருத்தலத்தில்தான் பெற்ற தாயைப் போன்று வந்த பேய்ச்சியின் பெருமுலைப் பாலையுண்டு அதன்மூலம் அவள் உயிரை முழுமையாகக் குடித்த திருவாயினை யுடைய எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளியுள்ள திருத்தலம் ''திருவதரி'' என்னும் திருத்தலமாகும்.

முதுகு பற்றிக் கைத்த லத்தால் முன்னொரு கோலூன்றி,
விதிர்வி திர்த்துக் கண்சு ழன்று மேற்கிளை கொண்டிருமி,
'இதுவென் னப்பர் மூத்த வா'றென் றிளையவ ரேசாமுன்,
மதுவுண் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே. 969

ஒரு கையால் தான் நடந்து செல்வதற்குத் துணையாக இருக்கின்ற கொம்பை ஊன்றிக் கொண்டு, மற்றொரு கையாலே முதுகைப் பிடித்துக் கொண்டு, இந்த உடல் நடுக்கம் அடையும் படியாக நடந்து செல்கின்றபொழுது கண்கள் சுழல்வதுபோல் இருக்க, மேல்மூச்சு உண்டாகி அதன் பயனாக இருமல் உண்டாகும். இப்படிப்பட்ட முதுமையும் இயலாமையும் உண்டாகியிருக்கின்ற நிலையில் பார்க்கின்ற இளம்பெண்கள், ''இந்த வயதான வலிவு அற்ற இக்கிழவனைப் பார்'' என்று ஏளனம் செய்து ஏசுவார்கள். இப்படிப்பட்ட இயலா நிலையையும், கிழட்டுத்தனத்தையும் அடைவதற்கு முன்னாலேயே, வண்டுகள் பூவிலமர்ந்து அதிலுள்ள மதுவையுண்டு இசைபாடிப் பறந்து திரிந்து கொண்டு இருக்கும் ''திருவதரி'' என்னும் ''திருத்தலம்'' அடைந்து அங்கு எழுந்தருளி யிருக்கும் எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரானை வணங்கிடுவோம்.

உறிகள் போல்மெய்ந் நரம்பெ ழுந்தூன் தளர்ந்துள் ளமெள்கி,
நெறியை நோக்கிக் கண்சு ழன்று நின்று நடுங்காமுன்,
அறிதி யாகில் நெஞ்சம் அன்பா யாயிர நாமஞ்சொல்லி,
வெறிகொள் வண்டு பண்கள் பாடும் வதரி வணங்குதுமே. 970

உடல் முதுமையுற்ற காலத்தில் உடலிலுள்ள சதைப்பற்றுகள் வற்றி உலர்ந்து இருப்பதன் காரணமாக இவ்வுடலிலுள்ள நரம்புகள் அனைத்தும் உறிக்கயிறுகள் போல மேலே கிளம்ப, அதனைக் கண்ட

Koviloor Digital Library

மனமானது வருத்தமுற்று, நடந்து செல்லும் வழியில், இனியும் நடக்கவியலாது என்ற நிலை ஏற்பட்டு உண்டான களைப்பின் காரணமாகக் கண்கள் சுழன்று, சோர்ந்து நின்று, மனத்தளர்ச்சியுற்று, மேலும் நடக்க இயலாமல் நடுங்கும் காலம் ஒன்று வரும். அப்படிப்பட்ட காலமானது வருவதற்கு முன்பே ஏ மனமே! உனக்கென்று அறிவு இருக்குமானால் எம்பெருமானின் ஆயிரம் திருநாமங்களையும் மனதார எடுத்துச் சொல்லி, வண்டுகள் இசையை இசைத்துப் பாடிக் கொண்டிருக்கின்ற ''திருவதரி'' என்னும் திருத்தலம் சென்று அங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை வணங்குவோம்.

பீளை சோரக் கண்ணி டுங்கிப் பித்தெழ மூத்திருமி,
தாள்கள் நோவத் தம்மில் முட்டித் தள்ளி நடவாமுன்,
காளை யாகிக் கன்று மேய்த்துக் குன்றெடுத் தன்றுநின்றான்,
வாளை பாயும் தண்ட டஞ்சூழ் வதரி வணங்குதுமே. 971

முதுமையுற்றுக் கிழட்டுத்தனமடைந்து இருக்கின்ற காலத்தில் கண்கள் இடுங்கிப் பீளை வெளியேறும். பித்தம் அதிகரித்து அதன் காரணமாக இருமல் உண்டாகும். கால்கள் இரண்டும் தட்டுத் தடுமாறி ஒன்றோடொன்று தாக்கித் தடுமாறும் நிலை உண்டாகித் தட்டுத் தடுமாறி நடக்க நேரும். இப்படிப்பட்ட முதுமை நிலையை யடையுமுன்பே, காளை போன்ற இளைஞனாகிக் கன்றுகளை மேய்த்துப் பின்பு, இந்திரன் ஆணையால் கல்மழை பொழிந்த அந்தக் காலத்தில் ''கோவர்த்தனம்'' என்னும் மலையைக் குடையாகக் கையில் எடுத்துப் பசுக்களைப் பாதுகாத்த பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் கோயில் கொண்டுள்ள திருத்தலம் என்பது ''திருவதரி'' என்னும் திருத்தலமேயாம். இத்திருத்தலமானது வாளை மீன்கள் துள்ளித் திரியுமளவுக்கு நீர்வளம் மிக்க சுனைகள் நிறைந்ததாக அமைந்துள்ளது. இப்படிப்பட்ட ''திருவதரி'' என்னும் திருத்தலம் சென்று அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கண்ணபிரானைக் கண்டு வணங்குவோம்.

பண்டு காம ரான வாறும் பாவையர் வாயமுதம்,
உண்ட வாறும் வாழ்ந்த வாறும் ஒக்க வுரைத்திருமி,
தண்டு காலா வூன்றி யூன்றித் தள்ளி நடவாமுன்,
வண்டு பாடும் தண்டு ழாயான் வதரி வணங்குதுமே. 972

Koviloor Digital Library

இளமைக் காலத்தில் இளம்பெண்கள் தன்னைக் காமுற்ற படியையும், அவ்விளம் பெண்களின் வாயினின்றூறிய வாயமுதம் 'பாலோடு தேன்கலந்த சுவைமிக்கது' என்று கருதி அதனைப் பருகிச் சிற்றின்பம் அனுபவிப்பதில் ஆழ்ந்திருந்தவாறும், அந்த நிலையில் மகிழ்ச்சி மேலிட வாழ்ந்தவாறும் ஒரு சேர விரிவாகக் கூறியபடி, அப்பொழுது உண்டான களைப்பு, சோர்வு ஆகியவை காரணமாக இடையிடையே நடுக்கமுற்று, இருமிக் கொண்டிருக்கும் நிலையிலேயே ஊன்று கோலையே ஒரு காலாகக் கொண்டு, ஊன்றி நடக்கும் முதுமையுற்ற கிழட்டுத்தனம் ஏற்படும். இப்படிப்பட்ட இயலாத முதுமை ஏற்படுமுன்பே, வண்டுகள் இசைபாடும் மணம்மிக்க மலர்கள் நிறைந்த திருத்துழாய் மாலை யணிந்த எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ''திருவதரி'' என்னும் திருத்தலம் சென்று வணங்குவோம்.

எய்த்த சொல்லோ டீளை யேங்கி யிருமி யிளைத்துடலம்,
பித்தர் போலச் சித்தம் வேறாய்ப் பேசி அயராமுன்,
அத்த னெந்தை யாதி மூர்த்தி யாழ்கட லைக்கடைந்த,
மைத்த சோதி யெம்பெ ருமான் வதரி வணங்குதுமே. 973

தளர்ந்து நலிந்த நிலையிலுண்டாகும் தடுமாற்றப் பேச்சாலும், உடலளவிலுண்டான கோழை மிகுதியினால் இவ்வுடல் இளைத்து இருமிக் கொண்டு, அதனால் மெலிந்தவாறு, பைத்தியம் பிடித்த வர்களைப் போன்று சித்தம் வேறுபட்டு நினைப்பதொன்றாகவும், பின்பு பேசுவது ஒன்றாகவும் பேசிப் பேசிச் சோர்ந்து போவதற்கு முன்பே அடியேனுக்குத் தந்தையாகவும், தலைவனாகவும், உலகத் தோற்றத்திற்குக் காரணனாகிய ''ஆதிமூர்த்தி'' எனவும், ஆழமிக்க கடலைக் கடைந்து கருத்த சோதிவடிவமான எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ''திருவதரி'' என்னும் திருத்தலம் சென்று அவ்வெம்பெருமானை வணங்குவோம்.

'பப்ப அப்பர் மூத்த வாறு பாழ்ப்பது சீத்திர்ளை
ஒப்ப, ஐக்கள் போத வுந்த வுந்தமர் காண்மின்' என்று,
செப்பு நேர்மென் கொங்கை நல்லார் தாம்சிரி யாதமுன்னம்,
வைப்பும் நங்கள் வாழ்வு மானான் வதரி வணங்குதுமே. 974

Koviloor Digital Library

முதுமையுற்றுக் கிழத்தனம் அடையும்போது, ஒன்று திரண்ட சீழ்போலக் கோழை மிகவும் வெளித்தள்ள, அதனைக் காண்கின்ற செப்பு போன்ற முலைகளையுடைய பெண்கள், ''உங்களுடன் உறவு கொண்டிருந்த இக்கிழவரின் இன்றைய மூப்படைந்த நிலையைப் பாருங்கள்'' என்று ஒருவருக்கொருவர் ஏளனமாகப் பேசிச் சிரிப்பர். இப்படிப்பட்ட பலராலும் இகழக்கூடிய முதுமை நிலையை அடையும் முன்பே, நமக்கெல்லாம் வைத்த மாநிதி யாகவும், நம்மையெல்லாம் வாழவைப்பவனுமாகிய எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளியுள்ள ''திருவதரி'' என்னும் திருத்தலம் சென்று அப்பெருமானை வணங்குவோம்.

'ஈசி போமி னீங்கி ரேன்மி னிருமி யிளைத்தீர்,உள்ளம்
கூசி யிட்டீர்' என்று பேசும் குவளையங் கண்ணியர்பால்,
நாச மான பாசம் விட்டு நன்னெறி நோக்கலுறில்,
வாசம் மல்கு தண்டு ழாயான் வதரி வணங்குதுமே. 975

வயது முதிர்ந்து கிழவர்களாகி விட்டவர்களைக் காணும் பெண்கள், ''சிச்சீ! இங்கிருந்து வெளியே போங்கள். இங்கே இருக்க வேண்டாம். உங்களுக்குண்டான இருமலினாலேயே உடல் இளைத்து மெலிந்து இருக்கிறீர்கள். நாங்கள் எல்லோரும் இவ்வாறு பேசுவது கேட்டுக் கூச்சம் அடைந்தீர். குவளை மலர் போன்ற கண்களையுடைய பெண்களிடத்தில் உண்டான உறவு நாசத்தை நல்குவதாகும். ஆகவே, அப்படிப்பட்ட உறவைத் தவிர்த்துவிட்டு நன்மையை அடைய விரும்புவோமானால் மணம்மிக்க திருத் துழாய் மாலையையணிந்த எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் எழுந்தருளி இருக்கும் ''திருவதரி'' என்னும் திருத்தலம் சென்று அப்பெருமானை வணங்குவோமாக!

புலன்கள் நைய மெய்யில் மூத்துப் போந்திருந் துள்ளமெள்கி,
கலங்க ஐக்கள் போத வுந்திக் கண்ட பிதற்றாமுன்,
அலங்க லாய தண்டு ழாய்கொண் டாயிர நாமஞ்சொல்லி,
வலங்கொள் தொண்டர் பாடி யாடும் வதரி வணங்குதுமே. 976

உடம்பிலுள்ள ஐம்புலன்களும் நைந்து நொந்து போயிருக் கின்ற முதுமைக் காலத்தில், தனியானதொரு இடத்தில் இருந்து கொண்டு, உள்ளம் கலங்கிக் கோழையை உமிழ்ந்தவாறு, கண்டதையெல்லாம் வாயில் வந்தபடி பிதற்றிக் கொண்டிருக்க

Koviloor Digital Library

நேரும். இப்படிப் பிதற்றும் நிலையானது நமக்கு உண்டாவதற்கு முன்னதாகவே ''திருவதரி'' என்னும் திருத்தலம் சென்று அங்கு எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானை வணங்குவோம். அங்கே எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ கண்ண்பிரான் ஸ்ரீ வைணவ அடியார்கள் திருத்துழாய் மாலையைக் கையிலே கொண்ட வண்ணமாக அவ்வெம்பெருமானின் ஆயிரம் திருநாமங்களைக் கூறிக் கொண்டே இசையுடன் பாடியும் ஆடியும் ''திருவதரி'' என்னும் திருத்தலத்தை வலம் வருவார்கள்.

*வண்டு தண்டே னுண்டு வாழும் வதரி நெடுமாலை,
கண்டல் வேலி மங்கை வேந்தன் கலிய னொலிமாலை,
கொண்டு தொண்டர் பாடி யாடக் கூடிடில், நீள்விசும்பில்
அண்ட மல்லால் மற்ற வர்க்கோர் ஆட்சி யறியோமே. 977

(முற்ற முதுகு உறி பீளை பண்டு எய்த்த பப்ப ஈசி புலன் வண்டு - ஏனம்.)

வண்டுகள் அங்குள்ள மலர்களில் நிறைந்திருக்கும் குளிர்ந்த தேனினை உண்டு வாழ்கின்ற ''திருவதரி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நெடிய திருமாலை, தாழைகளை வேலியாகக் கொண்டிருக்கின்ற திருமங்கை நாட்டு மன்னனாகத் திகழ்ந்த ''கலியன்'' என்னும் திருமங்கையாழ்வார் இப்பத்துப் பாசுரங்களை அருளிச்செய்து எம்பெருமானைத் துதித்தார். இசையுடன் கூடிய இப்பத்துப் பாசுரங்களையும் திருத் தொண்டர்கள் பாடியாடுவதற்குக் கூடிடுமேயானால், அப்படிப் பட்ட அடியார்கள் விண்ணுலகிலுள்ள திருப்பரமபத்தினை அடைவதல்லாமல், மற்றவர்களுக்கு அப்படிப்பட்ட ''திருப் பரமபதம்'' என்னும் சிறந்தபேறு என்பதில்லை.



Koviloor Digital Library

4. ஏனமுனாகி
திருவதரியாச்சிரமம்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*ஏனமு னாகி யிருநில மிடந்தன்
றிணையடி யிமையவர் வணங்க,
தானவ னாகம் தரணியிற் புரளத்
தடஞ்சிலை குனித்தவெந் தலைவன்,
தேனமர் சோலைக் கற்பகம் பயந்த
தெய்வநன் னறுமலர் கொணர்ந்து,
வானவர் வணங்கும் கங்கையின் கரைமேல்
வதரியாச் சிரமத்துள் ளானே. 978

எம்பெருமான் திருமால் உலகப்பிரளய காலத்தின்போது, பன்றி வடிவமாக அவதாரம் மேற்கொண்டு இப்பெரிய பூமியைக் குத்தி எடுத்துக் காப்பாற்றினான். அவ்வமயம் பிரமன் முதலிய தேவர்கள் அனைவரும் தன் இணைத்திருவடிகளிலும் வணங்கினர். அப்படிப் பட்ட திருமாலே ஸ்ரீ இராமபிரானாக அவதாரம் மேற்கொண்ட பொழுது இலங்கை மன்னன் இராவணனின் உடல் பூமியில் விழுமாறு தன்னுடைய பெரிய வில்லை வளைத்ததன் மூலம் வதைத்து அழித்தான். இந்தத் தலைவனாகிய எம்பெருமான், தேன் நிறைந்துள்ள மலர்களைக் கொண்ட சோலைகளும், அச்சோலை களின் இடையேயுள்ள கற்பக மரத்தினின்றும் பூத்திருக்கின்ற தெய்வத்தன்மையுடன் கூடிய நன்மணம்மிக்க தூய மலர்களைக் கொண்டு தேவர்கள் வந்து தூவி வணங்குகின்ற கங்கைக் கரையில் ''திருவதரியாச்சிரமம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான்.

கானிடை யுருவைச் சுடுசரந் துரந்து
கண்டுமுன் கொடுந்தொழி லுரவோன்,
ஊனுடை யகலத் தடுகணை குளிப்ப
வுயிர்கவர்ந் துகந்தவெம் மொருவன்,
தேனுடைக் கமலத் தயனொடு தேவர்
சென்றுசென் றிறைஞ்சிட, பெருகு
வானிடை முதுநீர்க் கங்கையின் கரைமேல்
வதரியாச் சிரமத்துள் ளானே. 979

Koviloor Digital Library

ஸ்ரீ இராமபிரான் காட்டிற்குச் சென்றிருந்தபோது, சீதையின் வேண்டுகோளுக்கேற்ப, மாயமானாக வந்திருந்த 'மாரீசன்' என்பவன் பின்னே சென்று அதனைப் பிடிக்க இயலாமற்போன போது தன் அம்புகளைச் செலுத்தி அதனைக் கொன்றான். அதற்குப் பின்பு கொடிய செயல்களைக் கொண்ட 'வாலி' என்னும் குரக்கினத்து மன்னனை, அவனுடைய பரந்துபட்ட மார்புச் சதையின்மீது தன் அம்பினை ஏவி அழுந்திட அவன் உயிரைப் போக்கினான். அப்படிப்பட்ட எம்தலைவனாகிய ஸ்ரீ இராமபிரானை தேன் நிறைந்துள்ள தாமரை மலரில் தோன்றிய பிரமன் முதலிய தேவர்கள் யாவரும் ஒருவரையொருவர் முந்திக் கொண்டு வணங்குகின்றனர். இவ்வாறு வணங்கிடத் தேவையான நீர் நிறைந்தோடி வருகின்ற கங்கை நதியின் கரையின் ஒரு பகுதியில் ''திருவதரியாச்சிரமம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான்.

இலங்கையும் கடலு மடலருந் துப்பின்
　　இருநிதிக் கிறைவனும், அரக்கர்
குலங்களும் கெடமுன் கொடுந்தொழில் புரிந்த
　　கொற்றவன் கொழுஞ்சுடர் சுழன்ற,
விலங்கலி லூரிஞ்சி மேல்நின்ற விசும்பில்
　　வெண்துகில் கொடியென விரிந்து,
வலந்தரு மணிநீர்க் கங்கையின் கரைமேல்
　　வதரியாச் சிரமத்துள் ளானே. 980

ஸ்ரீ இராமபிரான் இலங்கை மாநகரையும் அங்கேயுள்ள அழகாக உள்ள கடலையும் யாவராலும் வெல்ல முடியாத, பெரும் பலம் கொண்டவனாகவும் உள்ள, சங்கநிதி, பதுமநிதி என்னும் இருநிதிச் செல்வங்களுக்கும் தலைவனாக இருக்கின்ற இராவணனும், அவனைச் சேர்ந்துள்ள அரக்கர்கள் கூட்டமும் அழியும்படிச் செய்தான். அப்படிப்பட்ட அரசனான ஸ்ரீ இராமபிரான் ''திருவதரியாச்சிரமம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான். ''திருவதரியாச்சிரமம்'' என்னும் திருத்தலமானது, சூரியன் சுற்றிவரும் மேருமலையைத் தாக்கி, உயரேயுள்ள ஆகாயத்தில் வெண்ணிறக் கொடிபோலப் பரந்து, தெளிவாக ஓடி வருகின்ற நீர் நிறைந்த கங்கை நதிக்கரையில் அமைந்துள்ளது.

Koviloor Digital Library

துணிவினி யுனக்குச் சொல்லுவன் மனமே!
தொழுதெழு தொண்டர்கள் தமக்கு,
பிணியொழித் தமரர் பெருவிசும் பருளும்
பேரரு ளாளனெம் பெருமான்,
அணிமலர்க் குழலா ரரம்பையர் துகிலும்
ஆரமும் வாரிவந்து, அணிநீர்
மணிகொழித் திழிந்த கங்கையின் கரைமேல்
வதரியாச் சிரமத்துள் ளானே. 981

என் மனமே! இனி உனக்குத் துணிவு கூடிய சொற்களைக் கூறுவேன். அடியார்களின் பிறவிப் பிணி ஒழிந்துவிடுமாறு நீக்கிவிட்டுத் திருப்பரமபதம் தந்தருளும் பேரருளாளப் பெருமான் ஸ்ரீ இராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலமானது ''திருவதரியாச்சிரமம்'' என்னும் திருத்தலமாகும். இத்திருத்தலமானது, மலர்களை அணிந்துள்ள கூந்தலையுடைய தேவமாதர்களின் மாலைகளையும், அவர்கள் உடுத்தியிருக்கின்ற உடைகளையும், மணிகளையும் திரட்டிக் கொண்டு ஓடி வருகின்ற கங்கை நதிக்கரையின் ஒரு பகுதியில் அமைந்துள்ளது. அப்படிப் பட்ட ''திருவதரியாச்சிரமம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீ இராமபிரானை வணங்குவோம்.

பேயிடைக் கிருந்து வந்தமற் றவள்தன்
பெருமுலை சுவைத்திட, பெற்ற
தாயிடைக் கிருத்த லஞ்சுவ னென்று
தளர்ந்திட வளர்ந்தவெந் தலைவன்,
சேய்முகட் டுச்சி யண்டமும் சுமந்த
செம்பொன்செய் விலங்கலில் இலங்கு,
வாய்முகட் டிழிந்த கங்கையின் கரைமேல்
வதரியாச் சிரமத்துள் ளானே. 982

தாயைப் போன்ற நிலையில் வந்த பூதனை என்னும் பேயின் மடியிலிருந்து கொண்டு ஸ்ரீ கண்ணபிரான், அவள் முலையைச் சுவைத்து நஞ்சு கலந்த பாலைப் பருகுவதைக் கண்ட அசோதை, இப்பாதகியின் மடியில் என் குழந்தை இருப்பது எனக்கு அச்சமாக உள்ளது என்று எண்ணி இரக்கம் கொண்டாள். மனத்தளர்ச்சி யுற்றாள். இன்னவாறெல்லாம் அச்சப்பாட்டுடன் வளர்ந்து வந்த என் தலைவன் எம்பெருமான் கண்ணபிரான் உயர்ந்த உச்சியிலே

Koviloor Digital Library

அண்டத்தைத் தாங்குகின்ற செம்பொன்னால் ஒளிவிடுகின்ற மேருமலையின் உச்சியிலிருந்து கீழே ஓடிவந்து விழுகின்ற கங்கைக் கரையின் ஒரு பகுதியில் அமைந்துள்ள ''திருவதரியாச்சிரமம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளான்.

தேரணங் கல்குல் செழுங்கயல் கண்ணி
திறத்தொரு மறத்தொழில் புரிந்து,
பாரணங் கிமிலே றேழும்முன் னடர்த்த
பனிமுகில் வண்ணனெம் பெருமான்,
காரணந் தன்னால் கடும்புனல் கயத்த
கருவரை பிளவெழக் குத்தி,
வாரணங் கொணர்ந்த கங்கையின் கரைமேல்
வதரியாச் சிரமத்துள் ளானே. 983

தேர்த்தட்டையொத்த அல்குலையும், வளமாக வளர்ந்த கயல்மீன் போன்ற கண்களையும் கொண்டுள்ள நப்பின்னைப் பிராட்டியாரை அடையும் பொருட்டு ஸ்ரீ கண்ணபிரான் உலகோர் அஞ்சும்படியாகக் கழுத்துத் திமில்களை உடைய காளைகள் ஏழினையும் அடக்கி ஒரு வீரமான செயலைச் செய்தான். இப்படிப் பட்ட எம்பெருமான் மேகநிறத்தைக் கொண்டவன். பகீரதன் தவம் செய்த காரணத்தாலுண்டான கடும்புனலையொத்த கரிய மலையினைப் பிளவுபடுமாறு குத்தியானைகளைத் தள்ளிக் கொண்டு ஓடி வருகின்ற கங்கையின் கரைப் பகுதியின் ஒரு பகுதியில் ''திருவதரியாச்சிரமம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கண்ணபிரானை வணங்குவோம்.

வெந்திறல் களிறும் வேலைவா யமுதும்
விண்ணொடு விண்ணவர்க் கரசும்,
இந்திரற் கருளி யெமக்குமீந் தருளும்
எந்தையெம் மடிகளெம் பெருமான்,
அந்தரத் தமர ரடியிணை வணங்க
ஆயிர முகத்தினா லருளி,
மந்தரத் திழிந்த கங்கையின் கரைமேல்
வதரியாச் சிரமத்துள் ளானே. 984

என் தந்தையாகவும், தலைவனாகவும் அடியேனுக்கருள் புரிந்து கொண்டிருக்கும் எம்பெருமான் தேவேந்திரனுக்கு வலிமையை உடைய ''ஐராவதம்'' என்னும் யானையையும், திருப்பாற்கடல்

Koviloor Digital Library

திருவமுதத்தினையும், தேவலோகத்தினையும், தேவலோகத்து அரச பதவியினையும் அளித்தருளினான். ஆனால், இந்த எம்பெருமான் அடியோங்களுக்கோ என்றால் தன்னையே தந்துவிட்டான். விண்ணில் உள்ள தேவர்கள் எம்பெருமான் திருவடிகளை வணங்கிடவும், அத்திருமாலின் திருவாணையினால் மந்திரமலையினின்று இறங்கி ஆயிரம் முகங்களாகப் பெருகி ஓடும் கங்கை நதிக்கரையிலுள்ள ''திருவதரியாச்சிரமம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீ கண்ணபிரானைக் கண்டு வணங்குவோம்.

மான்முனிந் தொருகால் வரிசிலை வளைத்த
 மன்னவன் பொன்னிறத் துரவோன்,
ஊன்முனிந் தவன துடலிரு பிளவா
 வுகிர்நுதி மடுத்து,அய னரனைத்
தான்முனிந் திட்ட வெந்திறல் சாபந்
 தவிர்த்தவன், தவம்புரிந் துயர்ந்த
மாமுனி கொணர்ந்த கங்கையின் கரைமேல்
 வதரியாச் சிரமத்துள் ளானே. 985

முன்பு ஒரு சமயத்தில் ஸ்ரீ இராமபிரான் கானகம் சென்றிருந்த போது, பஞ்சவடியிலிருந்து கொண்டிருக்க, மாயமான் வடிவில் வந்த மாரீசன்மீது வில்லை வளைத்து அம்பு எய்தி, பொன்நிறம் கொண்ட இரணியனின் உடலைப் பிளக்கக் கூர்மையான நகங்களை அழுத்தி, பிரமன் சினத்துக்கு ஆளான சிவபெருமான் சாபத்தை நீக்கியருளினான். இப்படிப்பட்ட எம்பெருமான் தவம் பலபுரிந்து, அதனால் பிரம இருடியாக உயர்ந்த நிலையை அடைந்த விசுவாமித்திர முனிவர் இராம இலக்குவர்களை அழைத்துச் சென்ற கங்கைக் கரையின் ஒரு பகுதியில் அமைந்துள்ள ''திருவதரியாச்சிரமம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான்.

கொண்டல்மா ருதங்கள் குலவரை தொகுநீர்க்
 குரைகட லுலகுட னனைத்தும்,
உண்டமா வயிற்றோ னொண்சுட ரேய்ந்த
 உம்பரு மூழியு மானான்,
அண்டமூ டறுத்தன் றந்தரத் திழிந்தங்
 கவனியா ளலமர, பெருகும்
மண்டுமா மணிநீர்க் கங்கையின் கரைமேல்
 வதரியாச் சிரமத்துள் ளானே. 986

Koviloor Digital Library

மேகக்கூட்டங்கள், காற்றுக் கூட்டங்கள், குலமலைகள், ஒலிக்கும் கடல்கள், பூமி ஆகிய அனைத்தும் உண்டு அடக்கிக் காத்த பெருவயிற்றினையுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் சந்திரன், சூரியன் ஆகிய இவ்விருவரும் உலா வருகின்ற விண்ணுலகங்கள் யாவற்றையும் தன்னதாகக் கொண்டு யாவற்றையும் ஆண்டு கொண்டிருக்கிறான். அப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன், ஆகாயத்தினின்றும் புறப்பட்டு, அண்டவெளியில் இறங்கி, பூமித்தாயினிடம் சென்று, பெருவெள்ளமாய் ஓடி வருகின்ற கங்கையாற்றங்கரையின் ஒரு பகுதியிலமைந்துள்ள ''திருவதரியாச்சிரமம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான்.

*வருந்திரை மணிநீர்க் கங்கையின் கரைமேல்
வதரியாச் சிரமத்துள் ளானை,
கருங்கடல் முந்நீர் வண்ணனை யெண்ணிக்
கலியன்வா யொலிசெய்த பனுவல்,
வரஞ்செய்த வைந்து மைந்தும்வல் லார்கள்
வானவ ருலகுடன் மருவி,
இருங்கட லுலக மாண்டுவெண் குடைக்கீழ்
இமையவ ராகுவர் தாமே. 987

(ஏனம் கான் இலங்கை துணிவு பேய் தேர் வெந்திறல் மான் கொண்டல் வருந்திரை - கலை.)

மிகுந்த வேகத்துடன் ஓடி வருகின்ற, அலைகள் நிரம்பி யிருக்கின்ற, தெளிந்த நீர் நிறைந்த கங்கையாற்றின் கரையில் ஒரு பகுதியில் அமைந்துள்ள ''திருவதரியாச்சிரமம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் கடல்வண்ணப் பெருமானாம் ஸ்ரீமந்நாராயணனைக் கலியனாகிய திருமங்கையாழ்வார் அவ்வெம்பெருமானின் திருவருளின்படி அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங்கள் அனைத்தினையும் பொருளுடன் கற்று வல்லவர்கள் கடல் சூழ்ந்த இவ்வுலகில் செங்கோலாட்சி புரிந்து ஆண்டபின், தேவர்கள் உலகையடைந்து, இறுதியில் அங்கும் ஆட்சிபுரிந்து கடைசியாக வெண்கொற்றக் குடையின்கீழே நித்திய சூரிகள் எனப்படும் தேவர்களுடன் ஒன்றாகச் சேர்ந்திருப்பர்.

Koviloor Digital Library

5. கலையும் கரியும்
திருச்சாளக்கிராமம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*கலையும் கரியும் பரிமாவும்
திரியும் கானம் கடந்துபோய்,
சிலையும் கணையும் துணையாகச்
சென்றான் வென்றிச் செருக்களத்து,
மலைகொண் டலைநீ ரணைகட்டி
மதிள்நீ ரிலங்கை வாளரக்கர்
தலைவன், தலைபத் தறுத்துகந்தான்
சாளக் கிராம மடைநெஞ்சே! 988

ஏ மனமே! மான்கள், யானைகள், குதிரைகள் ஆகிய விலங்கினங்கள் நடமாடித் திரிகின்ற காட்டில் நடந்து சென்று கடந்து வில், அம்பு இவைகளைத் துணையாகக் கொண்டு சென்ற ஸ்ரீ இராமபிரான் வெற்றியை அடையும் பொருட்டுப் போர்க்களம் சென்றடைந்தான். அலைகள் வீசுகின்ற கடலின்மீது மலைகளைக் கொண்டு அணையைக்கட்டி, கடல் போன்று ஆழமான அகழிகளையும், மதிலும் சூழ்ந்திருக்கின்ற இலங்கை மாநகருக்கு அரசனான இராவணனின் பத்துத் தலைகளையும் அறுத்தெறிந்து மகிழ்ச்சியுற்றான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் எழுந்தருளியுள்ள ''சாளக்கிராமம்'' என்னும் திருத்தலம் சென்று அடைவோம்.

கடம்சூழ் கரியும் பரிமாவும்
ஒலிமாத் தேரும் காலாளும்,
உடன்சூழ்ந் தெழுந்த கடியிலங்கை
பொடியா வடிவாய்ச் சரந்துரந்தான்,
இடஞ்சூழ்ந் தெங்கு மிருவிசும்பில்
இமையோர் வணங்க மணங்கமழும்,
தடஞ்சூழ்ந் தெங்கு மழகாய
சாளக் கிராம மடைநெஞ்சே! 989

மதம் கொண்டுள்ள யானைகளும், குதிரைகளும், ஒலி மிகுந்த தேர்களும், காலாட்படை வீரர்களும் ஒன்று சேர்ந்த நிலையில் கிளர்ந்து எழுகின்ற பாதுகாப்புகள் நிறைந்த இலங்கை மாநகரினைத்

Koviloor Digital Library

தன் கூர்மையான அம்புகளைக் கொண்டு செலுத்தியதன் காரணமாகப் பொடியாகச் செய்த ஸ்ரீ இராமபிரான் ''திருச்சாளக்கிராமம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளான். இப்படிப்பட்ட ஸ்ரீ இராமபிரானைத் தேவர்கள் எல்லோரும் ''திருச்சாளக்கிராமம்'' என்னும் திருத்தலம் சென்று வணங்கி வழிபடுவர். இத்தேவர்கள் மண்ணுலகு, எங்கும் நின்று வழிபட்டு வருகின்றனர். நீர்ப்பூக்களின் மணம் வீசும் பொய்கைகள் சூழ்ந்திருக்கின்றதும், எங்கும் அழகு மிக்குள்ளதுமான ''திருச்சாளக்கிராமம்'' என்னும் திருத்தலம் சென்று அடைய வேண்டும் மனமே!

உலவு திரையும் குலவரையும்
ஊழி முதலா எண்திக்கும்,
நிலவும் சுடரு மிருளுமாய்
நின்றான் வென்றி விறலாழி
வலவன், வானோர் தம்பெருமான்
மருவா வரக்கர்க் கெஞ்ஞான்றும்
சலவன், சலஞ்சூழ்ந் தழகாய
சாளக் கிராம மடைநெஞ்சே! 990

என் மனமே! அலைவீசுகின்ற கடல்களும், மலைகளும் ஊழிக்காலம் முதல் விளங்குகின்ற எட்டுத்திக்குகளும், திங்கள், சூரியன், ஆகியவைகளும், இவற்றிற்கு எதிரான இருளும் ஆகிய இவைகளைத் தனக்குப் படியாகக் கொண்டு நிற்கும் எம்பெருமான் வெற்றியையே எப்பொழுதும் விளைவிக்கின்ற பலமுடைய திருச்சக்கரத்தாழ்வானைத் தம் வலது திருக்கரத்திலும் ஏந்தியவனாகி உள்ளான். பிரமன் முதலிய தேவர்கட்கெல்லாம் தலைவனாகி நிற்கும் எம்பெருமான் திருமால் எந்தெந்தக் காலத்திலும் தன்னை எதிர்த்து வாழும் அரக்கர்களுக்குப் பகைவனாக நின்று தங்கியிருக்கின்ற, இடமானது எப்பொழுதும் நீர் சூழ்ந்த வளம் மிகுந்து மிக அழகாகத் திகழும் ''திருச்சாளக்கிராமம்'' என்னும் திருத்தலம் சென்று அடைய வேண்டும்.

ஊரான் குடந்தை யுத்தமன்
ஒருகா லிருகால் சிலைவளைய,
தேரா வரக்கர் தேர்வெள்ளம்
செற்றான் வற்றா வருபுனல்சூழ்

Koviloor Digital Library

பேரான், பேரா யிரமுடையான்
பிறங்கு சிறைவண் டறைகின்ற
தாரான், தாரா வயல்சூழ்ந்த
சாளக் கிராம மடைநெஞ்சே! 991

ஏ மனமே! காஞ்சீபுரத்தில் உலகளந்தப் பெருமாள் சன்னதியில் திருவூரகத்தில் எழுந்தருளியிருப்பவன்; திருக்குடந்தையில் கோயில் கொண்டு எழுந்தருளி உத்தமனாக இருப்பவன்; ஆராய்ந்து பார்க்காத அரக்கர்களின் தேர்களை அழித்தவன் என்றதோர் பெருமையினை இருமுனையும் வளையுமாறு செய்து ஸ்ரீ இராமபிரான் பெற்றார். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் தொடர்ந்து ஓடி வருகின்ற பெருவெள்ளத்தினால் சூழ்ந்திருக்கின்ற ''திருப்பேர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ளான். திருநாமங்கள் ஆயிரத்தினைக் கொண்டவன். திருத்துழாய் மலர்களில் வண்டுகள் ஒலிக்க அத்திருத்துழாய் மாலையை அணிந்து கொண்டிருக்கின்ற திருமால் 'தாரா' என்னும் நீர்ப்பறவைகள் நிறைய வாழும் வயல்கள் சூழ்ந்த ''திருச்சாளக்கிராமம்'' என்னும் திருத்தலத்திற்குச் சென்றடைவோமாக.

அடுத்தார்த் தெழுந்தாள் பிலவாய்விட்
டலற அவள்மூக் கயில்வாளால்
விடுத்தான் விளங்கு சுடராழி
விண்ணோர் பெருமான் நண்ணார்முன்,
கடுத்தார்த் தெழுந்த பெருமழையைக்
கல்லொன் றேந்தி யினநிரைகாத்
தடுத்தான், தடஞ்சூழ்ந் தழகாய
சாளக் கிராம மடைநெஞ்சே! 992

ஏ மனமே! மிகுந்த ஆரவாரத்துடன் ஓடி வந்த ''சூர்ப்பனகை'' என்னும் அரக்கியானவள், குகை போன்றுள்ள தன் வாயைவிட்டு அலறும்படி ஸ்ரீ இராமபிரான் அவள் மூக்கினைத் தன் இளவல் இலக்குமணனைக் கொண்டு வாளால் அறுத்தான். இந்த எம் பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் ஒளியையுடைய திருச்சக்கரத்தாழ் வானைத் தன் திருக்கரத்தில் ஏந்தியவனும், தேவர்கட்குத் தலைவனாகத் திகழ்ந்தவனுமாக விளங்கிக் கொண்டிருப்பதுடன் பகைவனாக விளங்கும் இந்திராதிகள் முன்பு கோவர்த்தன மலையைக் குடையாகத் தன் திருக்கரத்தில் தூக்கிப் பிடித்துக்

Koviloor Digital Library

கொண்டு பசுக்கூட்டங்களைப் பாதுகாத்தவனாவான். இப்படிப் பட்ட எம்பெருமான் எழுந்தருளியுள்ள குளங்கள் நிறைந்துள்ள ''திருச்சாளக்கிராமம்'' என்னும் திருத்தலத்தைச் சென்றடைய வேண்டும்.

தாயாய் வந்த பேயுயிரும்
தயிரும் இழுது முடனுண்ட
வாயான், தூய வரியுருவிற்
குறளாய்ச் சென்ற மாவலியை
ஏயா னிரப்ப, 'மூவடிமண்
இன்றே தா'என் றுலகேழும்
தாயான், காயா மலர்வண்ணன்
சாளக் கிராம மடைநெஞ்சே! 993

ஏ மனமே! தாய் போன்று வந்த பூதனை என்னும் பேயின் உயிரையுண்டான். தயிரையும், வெண்ணெயையும் ஒரு சேர உண்ட திருவாயினையுடைய ஸ்ரீ கண்ணபிரான் இரக்கத் தகாதவனாகிய, மிகப் பெரியவனாகிய எம்பெருமான் திருமால் தூய அழகிய வடிவுடைய குள்ள வடிவமாகிய ''வாமன'' அவதாரம் மேற்கொண்டு மகாபலிச்சக்கரவர்த்தியிடம் சென்று, என் காலடிகளால் ''மூன்றடி மண்ணை இன்றே தருக!'' என்று யாசித்து, அதன் பொருட்டு, ஏழு உலகங்களையும் தாவித் தாவி, அளந்தான். காயா மலரை ஒத்த நிறத்தை உடையவனான இந்த எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலமாகிய ''திருச்சாளக்கிராமம்'' சென்றடைதல் வேண்டும்.

ஏனோ ரஞ்ச வெஞ்சமத்துள்
அரியாய்ப் பரிய இரணியனை,
ஊனா ரகலம் பிளவெடுத்த
ஒருவன் தானே யிருசுடராய்,
வானாய்த் தீயாய் மாருதமாய்
மலையா யலைநீ ருலகனைத்தும்
தானாய், தானு மானான்றன்
சாளக்கிராம மடைநெஞ்சே! 994

ஏ மனமே! பகைமை கொண்ட அசுரர்கள் அஞ்சும்படியாக நரசிம்ம அவதாரம் மேற்கொண்டு, மிகப் பெரிய உடலையுடைய

Koviloor Digital Library

இரணியனுடைய மார்பைக் கிழித்துக் கொன்றான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஒப்புயர்வற்ற திருமாலே, சூரியன், சந்திரன், வானம், தீ, காற்று, மலைகள், கடல்கள் ஆகிய யாவுமாய் நிறைந்து, தானே தனிச் சிறப்புடைய தலைவனாகத் திகழ்ந்து கொண்டிருக்கிறான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருத்தலம் எனப்படுகின்ற ''திருச்சாளக்கிராமம்'' சென்றடைதல் வேண்டும்.

வெந்தா ரென்பும் சுடுநீறும்
மெய்யிற் பூசிக் கையகத்து,ஓர்
சந்தார் தலைகொண் டுலகேழுந்
திரியும் பெரியோன் றான்சென்று,'என்
எந்தாய்! சாபம் தீர்,'என்ன
இலங்க முதுநீர் திருமார்பில்
தந்தான், சந்தார் பொழில்சூழ்ந்த
சாளக் கிராம மடைநெஞ்சே! 995

ஏ மனமே! எரிக்கப்பட்டவர்களின் உடலிலிருந்த எலும்பினையும், அவ்வுடலைச் சுட்டு எரித்ததனால் உண்டான நீற்றுப் பொடி என்னும் சாம்பலினையும் உடம்பிலே பூசிக் கொண்டு, கையிலே துளைகளைக் கொண்ட ஒரு தலையை ஏந்திக் கொண்டு, ஏழுலகினையும் திரிந்து கொண்டிருந்த சிவபெருமான், எம்பெருமான் திருமாலினிடம் சென்று, ''என் தந்தையே! எனக்குண்டான சாபத்தைப் போக்கியருளல் வேண்டும்'' என்று வேண்டிக் கொள்ள, அத்திருமாலாகிய எம்பெருமான் தன் திருமார்பிலிருந்து பொங்கி வழிந்து கொண்டிருக்கின்ற திருவமுத நீரினால் அச்சிவபெருமானுக்குண்டான சாபத்தைப் போக்கியருளினான். இப்படிப்பட்ட எம்பெருமான் திருமால் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருத்தலம் என்பது, சந்தன மணம்மிக்க சந்தன மரங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருச்சாளக்கிராமம்'' சென்றடைதல் வேண்டும்.

தொண்டா மினமு மிமையோரும்
துணைநூல் மார்வி லந்தணரும்,
'அண்டா எமக்கே யருளாய்,'என்
றணையும் கோயி லருகெல்லாம்,

Koviloor Digital Library

வண்டார் பொழிலின் பழனத்து
வயலி னயலே கயல்பாய,
தண்டா மரைகள் முகமலர்த்தும்
சாளக் கிராம மடைநெஞ்சே! 996

ஏ மனமே! தொண்டே செய்து ஒழுகி வரும் வைணவ அடியவர்களின் குழுக்களும், அமரர்களும், பூணூல் அணிந்த அந்தணர்களும் திருச்சாளக்கிராமம் என்னும் திருத்தலம் சென்று, உலகங்கட்கெல்லாம் தலைவனாகிய எம்பெருமானே! ''எமக்கு அருள்புரிதல் வேண்டும்'' என்று வேண்டி வணங்குவார்கள். வண்டுகள் ஒலிக்கின்ற சோலைகளின் புறத்தேயுள்ள வயல்களில் நிறைந்துள்ள கயல்மீன்கள் பாய்ந்து ஓடிட, குளிர்ச்சி மிக்க தாமரை மலர்கள் தம் முகப்பொலிவினைக் காட்டி மலர்கின்ற சிறப்பு மிக்க திருத்தலமாகிய ''திருச்சாளக்கிராமம்'' சென்றடைதல் வேண்டும்.

*தாரா வாரும் வயல்சூழ்ந்த
சாளக் கிராமத் தடிகளை,
காரார் புறவில் மங்கைவேந்தன்
கலிய னொலிசெய் தமிழ்மாலை,
ஆரா ருலகத் தறிவுடையார்
அமரர் நன்னாட்டரசாள,
பேரா யிரமும் ஓதுமின்கள்;
அன்றி யிவையே பிதற்றுமினே. 997

(கலை கடம் உலவு ஊர் அடுத்து தாய் ஏனோர் வெந்தார் தொண்டு தாரா - வாணிலா.)

இவ்வுலகிலுள்ள அறிவுடைய பெருமக்களே! நித்திய சூரிகள் என்னும் தேவர்களின் திருப்பரமபதத்தை அடைந்து ஆள்வதற்காக, அவ்வெம்பெருமானின் ஆயிரம் திருநாமங்களையும் தினந்தோறும் ஓதுங்கள். அப்படி ஒருவேளை ஓத இயலாவிடின் ''தாரா'' என்னும் பறவைகள் நிறைந்த வயல்களால் சூழ்ந்திருக்கக் கூடிய ''திருச் சாளக்கிராமம்'' என்னும் திருத்தலம் வந்து திருக்கோயில் கொண்டருளும் எம்தலைவனான ஸ்ரீ கண்ணபிரானைக் குறிப்பிட்டு, மேகங்கள் நிறையப் படிந்துள்ள சூழல்களையுடைய திருமங்கை நாட்டு மன்னனான திருமங்கையாழ்வார் அருளிச் செய்துள்ள இப்பாசுரங்கள் பத்தினையும் நன்கு பயிலுங்கள். பயின்றதன் பயனாக இப்பாசுரங்களையே மீண்டும் மீண்டும் பயின்று பயின்று தாறுமாறாகப் பிதற்றிக் கொண்டிருத்தல் வேண்டும்.

Koviloor Digital Library

6. வாணிலா முறுவல்
நைமிசாரணியம்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*வாணிலா முறுவல் சிறுநுதல் பெருந்தோள்
மாதரார் வனமுலைப் பயனே
பேணினேன், அதனைப் பிழையெனக் கருதிப்
பேதையேன் பிறவி நா யறுப்பான்,
ஏணிலே னிருந்தே னெண்ணினே னெண்ணி
இளையவர் கலவியின் திறத்தை
நாணினேன், வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்! 998

''திருநைமிசாரண்யம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள என் தந்தையே! ஒளியுடன் கூடிய புன்னகையையும், சிறிய நெற்றியினையும், பருத்த தோளினையும் கொண்ட பெண்களின் அழகிய முலைகளையே யான் பெற்ற பெரும் பயனாகக் கருதிக் கொண்டு அதனையே பேணிப் பாதுகாத்துக் கொண்டிருந்தேன். இப்படிப்பட்ட செயலில் ஈடுபட்டது தவறு என்று எண்ணி இப்பிறவிப் பிணி என்னும் நோயினை இல்லாமற் செய்து கொள்ளும் எண்ணமின்றி இருந்து விட்டேன். என் பழைய வாழ்வைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தேன். இவ்வாறு சிந்தித்த வகையில், இளையவர்களாக உள்ள பெண்களிடம் அனுபவித்த உடல் உறவுகளைக் குறித்து அடியேன் வெட்கமுற்றேன். இப்படிப்பட்ட வெட்கப்பட்ட நிலையில் அடியேன் வந்து உன் திருவடிகளில் விழுந்து வணங்கி சரணடைந்தேன்.

சிலம்படி யுருவிற் கருநெடுங் கண்ணார்
திறத்தனா யறத்தையே மறந்து,
புலம்படிந் துண்ணும் போகமே பெருக்கிப்
போக்கினேன் பொழுதினை வாளா,
அலம்புரி தடக்கை ஆயனே! மாயா!
வானவர்க் கரசனே, வானோர்
நலம்புரிந் திறைஞ்சும் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்! 999

Koviloor Digital Library

''திருநைமிசாரணியம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் என் தந்தையே! அடியேன், சிலம்புகளை அணிந்து கொண்டு திகழும் அழகிய பாதங்களை யுடைய உருவிலுள்ள பெண்ணின் கறுத்து நீண்ட கண்களை உடையவர்களின்மீது பற்றுக் கொண்டவனாக இருந்துவிட்ட காரணத்தினால் அறம் பற்றி எதையும் நினைக்காமல், ஐம்புலன் களின் வாயிலாகக் கிடைக்கும் இன்ப சுகங்களையே அனுபவித்துக் கொண்டிருந்துவிட்டேன். அதனால், என் ஆயுட்காலத்தை வீணே கழித்துவிட்டேன். கலப்பையை ஏந்திய திருக்கரங்களை உடைய ஆயர்குலத்தில் தோன்றிய ஆயனே! ஆச்சரியமான செயல்களைச் செய்து கொண்டு இருக்கும் மாயனே! தேவர்கட்கெல்லாம் தலைவனே! அந்தத் தேவர்களெல்லோரும் இங்கு வந்து பக்திப் பெருக்குடன் வணங்கி வழிபடுகின்ற உன் திருவடிகளையே அடியேன் சரணடைந்தேன்.

சூதினைப் பெருக்கிக் களவினைத் துணிந்து
 சுரிகுழல் மடந்தையர் திறத்து,
காதலே மிகுத்துக் கண்டவா திரிந்த
 தொண்டனேன் நமன்றமர் செய்யும்,
வேதனைக் கொடுங்கி நடுங்கினேன் வேலை
 வெண்டிரை யலமரக் கடைந்த
நாதனே, வந்துன் திருவடி யடைந்தேன்
 நைமிசா ரணியித்து ளெந்தாய்! 1000

வெண்மையான அலைகள் வந்து வந்து செல்லும் திருப் பாற்கடலே கலங்கிப் போகுமாறு அக்கடலைக் கடைந்த என் தலைவனே! ''திருநைமிசாரண்யம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் என் தந்தையே! அடியேன் சூதாட்டத்தைப் பெரிதும் விரும்பி, ஈடுபட்டு அதன் பயனாய் திருட்டுத் தொழிலைச் செய்வதில் பெரிதும் துணிவுடன் மேற்கொண்டேன். சுருண்ட கூந்தலைக் கொண்ட இளம் பெண்களிடம் கொண்ட ஆசையை அதிகரித்துக் கொண்டு, மனம் போனபடி எல்லாம் திரிந்து அலைந்து அப்பெண்களுக்கே தொண்டுகள் புரியும் தொண்டனாகி இருந்தேன். அடியேன் இயமதூதர்கள் செய்ய இருக்கின்ற வேதனைகள் பலவற்றையும் எண்ணியெண்ணி உடல் உறுப்புகளெல்லாம் அவற்றின்

Koviloor Digital Library

நிலையினின்றும் குறைந்து தளர்ந்து போனேன். ஆகையினால் அடியேன் இப்பொழுது தேவரீர் திருவடிகளையே நாடிவந்து சரணடைந்தேன்.

வம்புலாங் கூந்தல் மனைவியைத் துறந்து
பிறர்பொருள் தாரமென் றிவற்றை,
நம்பினா ரிறந்தால் நமன்றமர் பற்றி
எற்றிவைத்து, 'எரியெழு கின்ற,
செம்பினா லியன்ற பாவையைப் பாவீ!
தழுவெ'ன மொழிவதற் கஞ்சி,
நம்பனே! வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்! 1001

''திருநைமிசாரணியம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் என் தந்தையே! மணம் வீசுகின்ற கூந்தலையுடைய என் மனைவியை விட்டுப் பிரிந்து, அவளைத் துறந்துவிட்டு, பிறருடைய பொருள், பிறருடைய மனைவிகள் ஆகியவற்றைப் பெரிதும் விரும்பியவர்கள் இறந்துவிட்டால் அப்படிப்பட்டவர்களை இயமனும், இயம தூதர்களும் பிடித்துப் புடைத்துத் துன்புறுத்துவர். மேலும் அவர்கள் செம்பினால் செய்த பெண்சிலையைச் சூடேற்றி நெருப்புப் பொறியினை வீசச் செய்து, ''பாவீ! இச்சிலையை இப்பொழுது தழுவிக் கொள்'' என்றெல்லாம் கூறிக் கூறித் தண்டிப்பார்கள். அடியேன் இப்படிப்பட்ட கடுஞ் சொற்களுக்கெல்லாம் அஞ்சியவனாகி உன் திருவடிகளையடைந்து சரணடைந்தேன்.

இடும்பையா லடர்ப்புண்டு, 'இடுமினோ துற்றெ'ன்
றிரந்தவர்க் கில்லையே யென்று,
நெடுஞ்சொலால் மறுத்த நீசனே னந்தோ!
நினைக்கிலேன் வினைப்பயன் றன்னை,
கடுஞ்சொலார் கடியார் காலனார் தமரால்
படுவதோர் கொடுமிறைக் கஞ்சி,
நடுங்கிநான் வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்! 1002

''திருநைமிசாரணியம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் என் தந்தையே! கொடிய வறுமையில் அகப்பட்டுத் துன்புற்று, வாட்டம் கொண்டு, ''ஒரு

Koviloor Digital Library

கவளம் சோற்றினை எனக்கு அளியுங்கள்'' என்று கதறிக் கேட்டவர்களுக்கு ''இல்லை'' என்று கூறியது மட்டுமன்றிக் கடுஞ்சொற்கள் பலவற்றைக் கூறி மறுத்து அனுப்பினேன். இப்படிப்பட்ட நீசத்தன்மை கொண்டுள்ள அடியேன், அந்தத் தீவினைகளுக்கு உரிய பலனைச் சிந்திக்கவில்லை. ஆனால், இப்பொழுதோ, அந்தத் தீவினைகளின் பயனை எண்ணுகின்றபோது, கடுஞ்சொல்லும், கொடிய செயலும் உடைய இயமதூதர்களால் உண்டாகும் துன்பங்களை எண்ணியெண்ணி அஞ்சுகிறேன். இவ்வாறு அஞ்சி நடுங்கிக் கொண்டிருக்கும் அடியேன் உன் திருவடிகளையே அடைந்து சரணடைந்தேன்.

கோடிய மனத்தால் சினத்தொழில் புரிந்து
திரிந்துநா யினத்தொடும் திளைத்திட்டு,
ஓடியு முழன்று முயிர்களே கொன்றேன்
உணர்விலே னாதலால், நமனார்
பாடியைப் பெரிதும் பரிசழித் திட்டேன்
பரமனே! பாற்கடற் கிடந்தாய்,
நாடிநான் வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்! 1003

''திருநைமிசாரணியம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளப் பண்ணும் என் தந்தையே! பாற்கடலில் பள்ளி கொண்டருளிய பரமனே! அடியேன் மனம் மாறுபட்டு, கோபத்தின் காரணமாகத் தீச்செயல்கள் பலவும் புரிந்து, திரிந்து நாய்களுடனும் அதன் இனமான பிற விலங்குகளோடும் கூடித் திரிந்து வேட்டையாடி, அதனால் மகிழ்ச்சியுற்றேன். அதன் காரணமாகப் பல பிராணிகளின் உயிர்களைப் போக்கினேன். அதனால் அடியேன் உணர்விழந்த நிலையில் நின்று அறிவற்றவனானேன். இந்நிலைக்காளான அடியேன் இச்செயல்களைப் பற்றி இப்பொழுது ஆராய்ந்து பார்த்தேன். இவ்வாறு ஆராய்ந்த அடியேன், யான் செய்த தவறுகளை எண்ணி அத்தவறுகளுக்காக வருத்தமுற்று உன் திருவடிகளை அடைந்து சரணடைந்தேன். அதனால், அடியேன் இயமபுரம் புகுவதற்குரிய நிலையை அடையாமலிருக்குமாறு அழித்துவிட்டேன்.

Koviloor Digital Library

நெஞ்சினால் நினைந்தும் வாயினால் மொழிந்தும்
நீதியல் லாதன செய்தும்,
துஞ்சினார் செல்லும் தொன்னெறி கேட்டே
துளங்கினேன் விளங்கனி முனிந்தாய்,
வஞ்சனே னடியேன் நெஞ்சினிற் பிரியா
வானவா! தானவர்க் கென்றும்
நஞ்சனே, வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்! 1004

''திருநைமிசாரணியம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் என் தந்தையே! அடியேன் முன்பெல்லாம், நீதியில்லாத செயல்களை மனத்தினில் நினைத்துக் கொண்டும், அவை பற்றி வாயினால் பேசியும் பற்பல தவறுகளைச் செய்தேன். அதன் பின்பு இறந்தவர்கள் செல்லும் நரகத்தைப்பற்றி பெரியவர்கள் கூறிய பழைமையான வழிமுறைகள் பலவற்றையும் கேட்டு அடியேன் நடுங்கினேன். விளாம் பழவடிவில் வந்து ஒளிந்து கொண்டிருந்த அசுரனை அழித்துக் கொன்ற ஸ்ரீ கண்ணபிரானே! அடியேனின் வஞ்சனை மிக்க நெஞ்சிலும் அருளுடன் தங்கிய எம்பெருமானே! அசுரர்களுக்கு எப்பொழுதும் நஞ்சுபோல் அழிவை உண்டாக்கிய எம்பெருமானே! அடியேன் உன் திருவடிகளை அடைந்து சரணமடைந்தேன்.

ஏவினார் கலியார் நலிகவென் றென்மேல்
எங்ஙனே வாழுமாறு, ஐவர்
கோவினார் செய்யும் கொடுமையை மடித்தேன்
குறுங்குடி நெடுங்கடல் வண்ணா,
பாவினா ரின்சொல் பன்மலர் கொண்டுன்
பாதமே பரவிநான் பணிந்து,என்
நாவினால் வந்துன் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்! 1005

''திருநைமிசாரணியம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் என் தந்தையே! ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் நீண்ட நெடுங்கடல் நிறம் கொண்ட எம்பெருமானே! அடியேனைக் கலிகாலம் வந்து வருத்துமாறு கூறி ஐம்பொறி களையும் ஏவிவிட்டார். ஆயினும் இந்த ஐம்பொறிகளும் இனி,

Koviloor Digital Library

வாழும் முறை யாதோ? இப்படிப்பட்ட ஐம்பொறிகள் என்னும் ஆளவந்த அவைகளினால் உண்டாகும் கொடுமையை, அஃது வந்த வழியே செல்லுமாறு அப்புறப்படுத்திவிட்டேன். இனி, அடியேனின் நாவினால் இன்சொற்கள் நிறைந்த பாடல்கள் என்னும் பல்வகைப்பட்ட மலர்களைக் கொண்டு வந்து உன் திருவடிகளில் இட்டு வணங்கி, அத்திருவடிகளையே சரணமாகப் பற்றிக் கொண்டுவிட்டேன்.

ஊனிடைச் சுவர்வைத் தென்புதூண் நாட்டி
உரோமம்மேய்ந்து ஒன்பது வாசல்,
தானுடைக் குரம்பை பிரியும்போ துன்றன்
சரணமே சரணமென் றிருந்தேன்,
தேனுடைக் கமலத் திருவினுக் கரசே!
திரைகொள்மா நெடுங்கடல் கிடந்தாய்,
நானுடைத் தவத்தால் திருவடி யடைந்தேன்
நைமிசா ரணியத்து ளெந்தாய்! 1006

''திருநைமிசாரணியம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் என் தந்தையே! சதையினையே சுவராக வைத்து, எலும்புகளைத் தூணாக நிறுத்தி வைத்து, அதற்கும் மேலே மயிரை வைத்து மூடி, ஒன்பது வாயில்களை உடையதாக இருக்கின்ற குடிசையாகத் திகழ்கின்ற இந்த உடம்பைவிட்டு உயிர் பிரிந்து போகின்ற காலத்தில் உன் திருவடிகளைச் சரணமடைவதே சரணம் என்று எண்ணியிருந்தேன். தேன் நிறைந்திருக்கும் தாமரை மலரில் தோன்றிய பெரிய பிராட்டியார்க்குத் தலைவனே! அலைகள் வீசுகின்ற பெரிய பரந்துபட்ட நெடிய திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்தருளிய எம்பெருமானே! அடியேன் நின்னருளினால் பெற்ற பெருந்தவத்தின்பயனால்உன்திருவடிகளையடைந்து சரணடைந்தேன்.

*'ஏதம்வந் தணுகா வண்ணம்நா மெண்ணி
எழுமினோ தொழுதும்,'என்று, இமையோர்
நாதன்வந் திறைஞ்சும் நைமிசா ரணியத்
தெந்தையைச் சிந்தையுள் வைத்து,
காதலே மிகுத்த கலியன்வா யொலிசெய்
மாலைதான் கற்றுவல் லார்கள்,
ஓதநீர் வைய மாண்டுவெண் குடைக்கீழ்
உம்பரு மாகுவர் தாமே. 1007

Koviloor Digital Library

(வாணிலா சிலம்பு சூது வம்பு இடும்பைகோடிய நெஞ்சினால் ஏவினார் ஊன் ஏதம் - அங்கண்.)

நம்மைத் துன்பங்கள் வந்து சேராதவாறு நாம் எண்ணித் தொழுவதற்கு ''திருநைமிசாரணியம்'' என்னும் திருத்தலத்துக்குப் புறப்படுவோம்! வாருங்கள் என்று சொல்லித் தேவர்களும், அவர்களின் தலைவனான தேவேந்திரன் வந்து வணங்கி வழி படுகின்ற ''திருநைமிசாரணியம்'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள எம்பெருமானைப் பற்றி உள்ளத்தேயுள்ள பக்தியுடன் பாடிய கலியன் என்னும் திருமங்கை யாழ்வார் அருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் கற்று வல்லவர்கள், கடல் சூழ்ந்த இவ்வுலகினை வெண்கொற்றக் குடையின் கீழிருந்து ஆட்சிபுரிந்து, திருப்பரமபதம் அடைவர்.

7. அங்கண் ஞாலம்
சிங்கவேள் குன்றம்

கலி நிலைத்துறை

அங்கண் ஞால மஞ்ச அங்கோ ராளரியாய்,அவுணன்
பொங்க ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதனிடம்,
பைங்க ணானைக் கொம்புகொண்டு பத்திமையால், அடிக்கீழ்ச்
செங்க ணாளி யிட்டிறைஞ்சும் சிங்கவேள் குன்றமே. 1008

பிரகலாதனின் தந்தையான இரணியன் நீ சொல்லும் அந்த அரி இந்தத் தூணிலும் இருப்பானோ? என்று வினவ, ''இத்தூணிலும் உளன்'' என்று பிரகலாதன் கூறியதற்கேற்ப ஸ்ரீமந்நாராயணன் அவன் காட்டிய அத்தூணினின்றும் அழகிய இவ்வுலகமே அஞ்சி நடுங்குமாறு ஒப்பற்ற ''நரசிம்மம்'' என்ற அவதாரம் மேற்கொண்டு புறப்பட்டு வந்து 'இரணியன்' என்னும் அசுரனின் ஆணவத்தை அடக்கும் வகையில் அவனுடைய பருத்த உடலைத் தன் கூரிய நகங் களினாலேயே பிளந்து அழித்த புனிதனாகிய எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருத்தலம் எதுவென்றால், சிவந்த கண்களையுடைய சிங்கங்கள் பசுமைநிறக் கண்களையுடைய யானைகளின் தந்தங்களைக் கொண்டு பக்தியுடன் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளின் கீழ் வைத்து வணங்குகின்ற சிங்கவேள் குன்றமாகும்.

Koviloor Digital Library

அலைத்த பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரி யாய்,அவுணன்
கொலைக்கை யாளன் நெஞ்சிடந்த கூருகி ராளனிடம்,
மலைத்த செல்சாத் தெறிந்தபூசல் வன்துடி வாய்கடுப்ப,
சிலைக்கை வேடர் தெழிப்பறாத சிங்கவேள் குன்றமே. 1009

மிகுந்த கோபத்தின் காரணமாக நாக்கு அலைந்து கொண்டிருக்கின்ற பெரிய வாயினையும், ஒளி வீசுகின்ற பற்களுடன் வலிமை வெளிப்படுமாறு சிங்கவுருவினை மேற்கொண்டு, ''நரசிம்ம வதாரம்'' என்ற திருஅவதாரத்துடன் வந்து, கொல்வதையே வலிமையாகக் கொண்ட அசுரனாகிய இரணியனின் மார்பினைத் தம் கூர்மையான நகங்களால் கிழித் தெறிந்த எம்பெருமான் நரசிம்ம மூர்த்தி திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருத்தலம் எதுவென்றால், வேடர்கள் தம் கையிலுள்ள வில்கொண்டு வழிமறிக்கின்ற வழிப்போக்கர்களின் கூட்டம் நடத்திய போரின் போது உண்டான கூச்சல்களும், அவ்வேடர்களின் வில், உடுக்கை போன்றவைகளின் கூச்சல்களும் ஒருங்கு சேர்ந்தவாறு ஆரவாரமாகக் கொண்டு திகழும் ''திருச்சிங்கவேள் குன்றமாகும்''.

ஏய்ந்த பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரி யாய்,அவுணன்
வாய்ந்த ஆகம் வள்ளுகிரால் வகிர்ந்தவம் மானதிடம்,
ஓய்ந்த மாவு முடைந்தகுன்று மன்றியும் நின்றழலால்,
தேய்ந்த வேயு மல்லதில்லாச் சிங்கவேள் குன்றமே. 1010

அகன்ற பெரியவாயினையும், வாள் போன்ற கூரிய பற்களையும், வலிமையையும் உடைய நரசிம்ம மூர்த்தியாகத் தோன்றி, இரணியன் என்னும் அசுரனின் உடலைத் தம் கூரிய நகங்களினால் கிழித்தெறிந்த எம்பெருமான் நரசிம்ம அவதாரம் மேற்கொண்ட நரசிங்கப் பெருமாள் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருத்தலம் எதுவென்றால், நீர்கூட இல்லாத காட்டில் ஓடித் திரிந்து ஓய்ந்து போன விலங்குகளும், உடைந்து சிதறிக் கிடக்கின்ற சிறுசிறு குன்றுகளும், ஒன்றோடு ஒன்று உராய்வதனால் தானாகவே உண்டான நெருப்புப் பற்றி எரிந்ததன் காரணமாகக் கொள்ளிக் கட்டையாகக் கிடக்கும் மூங்கில்கள் தவிர வேறொன்றுமில்லாத இடமாகிய ''திருச்சிங்கவேள்குன்றம்'' என்பதாகும்.

Koviloor Digital Library

எவ்வும் வெவ்வேல் பொன்பெயரோ னேதல னின்னுயிரை
வவ்வி, ஆகம் வள்ளுகிரால் வகிர்ந்தவம் மானதிடம்,
கவ்வு நாயும் கழுகுமுச்சிப் போதொடு கால்சுழன்று,
தெய்வ மல்லால் செல்லவொண்ணாச் சிங்கவேள் குன்றமே. 1011

துன்புறுத்துகின்ற கொடிய வேலாயுதத்தை ஏந்திக் கொண் டிருக்கும் 'பொன் பெயரோன்' எனப்பட்ட பகைவன் இரணியன் என்னும் அசுரனின் இன்னுயிரைக் கவரும் வகையில் தன் கூர்மையான நகங்களினால் அவனுடலைக் கிழித்தெறிந்த எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் திருத்தலம் எதுவென்றால், அனைவரையும் கவ்விக் கடிக்கும் வேட்டைநாய்களும், கழுகுகளும், சூரியவெப்பத்துடன் கூடிய சூறைக்காற்று சுழன்று சுழன்று வீசிக் கொண்டிருக்கும் எம்பெருமானைத் தவிர வேறு ஒருவரும் செல்ல முடியாத நிலையிலுள்ள ''திருச்சிங்கவேள்குன்றம்'' என்பதாகும்.

மென்ற பேழ்வாய் வாளெயிற்றோர் கோளரி யாய்,அவுணன்
பொன்ற ஆகம் வள்ளுகிரால் போழ்ந்த புனிதனிடம்,
நின்ற செந்தீ மொண்டுசூறை நீள்விசும் பூடிரிய[1],
சென்று காண்டற் கரியகோயில் சிங்கவேள் குன்றமே. 1012

மிகுந்த சினம் காரணமாக மென்று கொண்டிருக்கின்ற வாயினையும், வாள்போன்று கூரிய பற்களையும் மிடுக்குடன் கூடிய நரசிம்மமாக வடிவு பெற்றுத் தோன்றி ''இரணியன்'' என்னும் அசுரன் அழியுமாறு அவனது உடலைத் தம் கூர்மையான நகங்களினால் பிளந்து அவனுயிரைப் போக்கிய புனிதனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், சூறைக்காற்று அனல் கக்கியவாறு ஆகாயத்தின் கண் சிதறி ஓடுவதனால் யாரும் அருகில் சென்று வணங்குவதன் பொருட்டுச் செல்வதற்கு அருமையாய் இருக்கும் திருக்கோவில் ''திருச்சிங்க வேள்குன்றம்'' என்பதாகும்.

எரிந்த பைங்க ணிலங்குபேழ்வா யெயிற்றொடி தெவ்வுருவென்று,
இரிந்து வானோர் கலங்கியோட இருந்தவம் மானதிடம்,
நெரிந்த வேயின் முழையுள்நின்று நீணெறி வாயுழுவை,
திரிந்த வானைச் சுவடுபார்க்கும் சிங்கவேள் குன்றமே. 1013

Koviloor Digital Library

மிகுந்த சினம் காரணமாகச் சிவந்த கண்களுடனும், அகன்ற பெரிய வாயினோடும், பற்களுடனும் கூடிய ''இது என்ன பயங்கரமான வடிவம்'' என்று தேவர்களும் அஞ்சி நடுங்கி ஓடும்படியான நரசிம்ம மூர்த்தியாகத் திருஅவதாரம் மேற்கொண்ட ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், ஒன்றுடனொன்று சேர்ந்து நிறைந் திருக்கும் மூங்கில் புதர்களின் இடையே யானைகள் சென்ற அதன் அடிச்சுவடுகள் இருக்குமிடத்தைப் புலிகள் மறைந்து கொண்டு ஆராய்ந்து பார்த்துக் கொண்டிருக்கின்ற ''திருச்சிங்க வேள்குன்றம்'' என்பதாகும்.

முனைத்த சீற்றம் விண்சுடப்போய் மூவுல கும்பிறவும்,
அனைத்து மஞ்ச வாளரியா யிருந்தவம் மானதிடம்,
கனைத்த தீயும் கல்லுமல்லா வில்லுடை வேடருமாய்,
தினைத்த னையுஞ் செல்லவொண்ணாச் சிங்கவேள்குன்றமே. 1014

மிகுந்த கோபம் தோன்றிப் பெருகி மேன்மேலும் ஓங்கி வளர்ந்து விண்ணையும் சுட்டு, அஃது மேலும் சென்று பரவியதன் காரணமாக மூன்றுலகங்களும், பிறவும் மற்று யாவும் அஞ்சும் படியாக நரசிம்மமூர்த்தியாகத் திருஅவதாரம் மேற்கொண்டருளிய ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருத்தலம் எதுவென்றால், வெடித்து ஒலித்துச்சிதறி நெருப்பு எரிய, அந்நெருப்பினால் வேகின்ற கற்களும், இவற்றைக் காட்டிலும் கொடிய வில்லை ஏந்திய வேடர்களும் நிறைந்திருக்கின்ற காரணத்தினால் தினையளவு கூட யாராலும் சென்றடைய முடியாத நிலையிலிருக்கும் ''திருச்சிங்கவேள் குன்றம்'' என்பதாகும்.

நாத்த ழும்ப நான்முகனு மீசனு மாய்முறையால்
ஏத்த, அங்கோ ராளரியா யிருந்தவம் மானதிடம்,
காய்த்த வாகை நெற்றொலிப்பக் கல்லதர் வேய்ங்கழைபோய்,
தேய்த்த தீயால் விண்சிவக்கும் சிங்கவேள் குன்றமே. 1015

நான்கு முகங்கள் கொண்ட பிரம்மாவும், சிவபெருமானும் நாக்கு தழும்பேறும்படியாக தத்தமக்குரிய வழிமுறைகளின்படி வணங்கிட, அதன் காரணமாக, அங்கு நரசிம்ம அவதாரம் மேற்கொண்டு எழுந்தருளிய திருத்தலம். ''திருச்சிங்கவேள் குன்றம்'' என்பதாகும். காய்கள் நிறையக் காய்த்துக் கிடக்கும் வாகை

Koviloor Digital Library

மரங்களில் முற்றிய நெற்றுக்காய்கள் காய்ந்து ஒலிக்கும். அங்குள்ள கற்பாறைகளின் இடையே உயர்ந்து வளர்ந்திருக்கின்ற மூங்கில்கள் வானளவுக்கு ஓங்கி, அசைந்து உராய்வதனால் உண்டான நெருப்பின் ஒளியானது ஆகாயம் முழுவதும் பரவி அந்த ஆகாயம் சிவந்து போய்க் காணப்படும். அப்படிப்பட்ட திருத்தலமே ''திருச் சிங்கவேள் குன்றம்'' என்பதாகும்.

நல்லை நெஞ்சே! நாம்தொழுதும் நம்முடை நம்பெருமான்,
அல்லி மாதர் புல்கநின்ற ஆயிரந் தோளனிடம்,
நெல்லி மல்கிக் கல்லுடைப்பப் புல்லிலை யார்த்து,அதர்வாய்
சில்லு சில்லென் றொல்லறாத சிங்கவேள் குன்றமே. 1016

நன்னெஞ்சமே! நீ நல்லை! நமக்குத் தலைவனான நம் பெருமான் நரசிம்மர், பெரிய பிராட்டியார் தழுவிக் கொண்டிருக் குமாறு அரிய காட்சியினைத் தரும் ''திருச்சிங்கவேள் குன்றம்'' என்னும் திருத்தலம் சென்று ஆயிரம் திருத்தோள்களையுடைய எம்பெருமான் நரசிம்ம மூர்த்தியைத் தொழுது வணங்குவோம். அந்தத் திருத்தலத்தில் நெல்லி மரங்கள் நிறைந்து வளர்ந்திருக்கக் கற்கள் உடைபடும் படியாகவும், அதனால் உண்டாகின்ற ஓசையும், அங்குள்ள பனை ஓலைகளினால் உண்டாகும் ஒலியும், அங்குள்ள வழியில் ''சில்'' என்று கேட்கும் ஒலியும் கொண்ட திருத்தலமே ''திருச்சிங்கவேள் குன்றம்'' என்பதாகும்.

*செங்க ணாளியிட்டிறைஞ்சும் சிங்கவேள் குன்றுடைய,
எங்க ளீச னெம்பிரானை இருந்தமிழ் நூற்புலவன்,
மங்கை யாளன் மன்னுதொல்சீர் வண்டறை தார்க்கலியன்,
செங்கை யாளன் செஞ்சொல்மாலை வல்லவர் தீதிலரே. 1017

(அங்கண் அலைத்த ஏய்ந்த எவ்வும் மென்ற எரிந்த முனைத்த நா நல்லை செங்கண் - கொங்கு.)

''திருச்சிங்கவேள் குன்றம்'' என்னும் திருத்தலத்தில், வீரத்தின் மிகுதி காரணமாகச் சிவந்த கண்களைக் கொண்டுள்ள சிங்கங்கள் வந்து நரசிம்மப் பெருமாளின் திருவடிகளில் தம்முடைய காணிக் கைகளைச் செலுத்தி வணங்குகின்றன. இத் ''திருச்சிங்கவேள் குன்றம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள இந்த எம்பெருமான் நரசிம்ம மூர்த்தியைப் பற்றி தமிழில் பெரும்புலமை பெற்ற புலவரான ''திருமங்கை மன்னர்''

Koviloor Digital Library

என்னும் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களைக் கொண்டு துதித்துக் கொண்டிருந்தார். வண்டுகள் நிறைந்திருக்கும் மலர் மாலையினை அணிந்து கொண்டிருக்கும், பெருங்கொடையாளராகத் திகழ்ந்த ''கலியன்'' என்னும் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த இந்தச் சொல் மாலையான பத்துப் பாசுரங்களைக் கற்று வல்லவர்கள் தீமை ஏதும் இல்லாதவர்களாக இருந்து வாழ்வார்கள்.

8. கொங்கலர்ந்த திருவேங்கடம்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

கொங்க லர்ந்த மலர்க்கு ருந்த
மொசித்த கோவல னெம்பிரான்,
சங்கு தங்கு தடங்க டல்துயில்
கொண்ட தாமரைக் கண்ணினன்,
பொங்கு புள்ளினை வாய்பி ளந்தபு
ராணர் தம்மிடம், பொங்குநீர்
செங்க யல்திளைக் கும்சு னைத்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 1018

எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் மணம் வீசுகின்ற மலர்கள் நிறைந்திருக்கின்ற குருந்த மரம் என்னும் மரத்தினைப் போன்று நின்ற அசுரனைக் கொன்று அழித்தான். சங்குகள் நிறையத் தங்கியிருக்கின்ற பெரிய அகன்ற திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமான் தாமரைக் கண்ணனாகிய ஸ்ரீ கண்ணபிரான் தன்னை எதிர்த்து வந்த பறவை வடிவிலுள்ள பகாசுரனின் வாயைப் பிளந்து அழித்துக் கொன்ற நம் பெருமான் திருக்கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் திருத்தலமாகத் திகழ்வது, நீர் நிறைந்து வளம்மிக்க கயல்மீன்கள் களிப்புடன் விளையாடிக் கொண்டிருக்கும் நீர்ச்சுனைகள் நிறைந்துள்ள ''திருவேங்கடமலை'' என்பதாகும். இத்திருவேங்கடமலையினை அடைந்து அவனை வணங்கிடுவாய் மனமே.

Koviloor Digital Library

*பள்ளி யாவது பாற்க டலரங்
கம்இ ரங்கவன் பேய்முலை,
பிள்ளை யாயுயி ருண்ட வெந்தைபி
ரான வன்பெரு குமிடம்,
வெள்ளி யான்கரி யான்ம ணிநிற
வண்ண னென்றெண்ணி, நாடொறும்
தெள்ளி யார்வணங் கும்ம லைத்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 1019

ஏ மனமே! கொடிய நஞ்சினையுடைய 'பூதனை' என்னும் பேய்ச்சியின் முலைப்பாலை அவள் கதறக் கதறக் குழந்தையாக நின்று அருந்தி, அவள் உயிரைப் போக்கிய எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரான் திருக்கண் வளர்ந்தருளும் திருத்தலங்கள் திருப்பாற்கடலும், திருவரங்கமுமாகும். இந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் பெருகி வளர்கின்ற இடம் என்கின்ற திருவேங்கட மலையில் உள்ள அடியவர்கள், முதல் ஊழிக்காலமான கிரேதாயுகத்தில் வெண்மை நிறமுடையவராகவும் நான்காவது யுகமான இக்கலியுகத்தில் கறுத்த நிறமுடையவராகவும், மூன்றாவது யுகமான துவாபரயுகத்தில் ''நீலமணி'' போன்ற நிறத்தினை யுடையவராகவும் என்றமைந்த பல்வேறுவிதமான வடிவுகளைத் தினமும் ஏத்தி வணங்குவர். எனவே, நீ அந்தத் திருமலையைச் சென்று அடைதல் வேண்டும்.

நின்ற மாமரு திற்று வீழந
டந்த நின்மலன் நேமியான்,
என்றும் வானவர் கைதொ ழுமிணைத்
தாம ரையடி யெம்பிரான்,
கன்றி மாரி பொழிந்தி டக்கடி
தாநி ரைக்கிடர் நீக்குவான்,
சென்று குன்ற மெடுத்த வன்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 1020

ஏ மனமே! பெரிய மருதமரமாக நின்ற அசுரன் அம்மரம் முறிந்து விழுமாறு செய்து அதன் நடுவே சென்ற குற்றமற்றவன் திருவாழியினையுடையவன் எம்பெருமான் கண்ணபிரான் ஆவான். தேவர்கள் வந்து வணங்கும் தாமரைத் திருவடிகளையுடையவன் எங்கள்தலைவனாவான். கோபத்தின் காரணமாக இந்திரன் கொண்டு வந்த பெருமழையைப் பெய்த அளவிலேயே பசுக்கூட்டங்களைப்

Koviloor Digital Library

பாதுகாக்கும் பொருட்டுக் கோவர்த்தன மலையைக் குடையாகக் கையில் ஏந்தியவனே! இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் மற்றொரு மலையான திருவேங்கடமலையில் திருக்கோயில் கொண்டு திருவாழியானைத் தம் திருக்கரங்களில் ஏறறு நின்று பாதுகாக்கிறான். இப்படிப்பட்ட திருமலையைச் சென்றடைதல் வேண்டும்.

பார்த்தற் காயன்று பார தங்கைசெய்
 திட்டு வென்ற பரஞ்சுடர்,
கோத்தங் காயர்தம் பாடி யில்குர
 வைபி ணைந்தஎம் கோவலன்,
ஏத்து வார்தம் மனத்துள் ளான்இட-
 வெந்தை மேவிய வெம்பிரான்,
தீர்த்த நீர்த்தடஞ் சோலை சூழ்திரு
 வேங்க டமடை நெஞ்சமே! 1021

ஏ மனமே! முன்பு பாரதப் போரில் ஒளிமிக்க எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் பாரதப் போரில் அருச்சுனனுக்காகக் கையும் அணியும் வகுத்து ஈடுபட்டு வெற்றி பெற்றான். அப்படிப்பட்ட வெற்றி பெற்ற பேரொளியை உடையவனும், திருவாய்ப்பாடியில் ''குரவைக் கூத்து'' என்னும் கூத்தினையாடிய ''கோபாலன்'' என்னும் ஸ்ரீ கண்ணபிரான் தம்மை ஏத்தித் துதிப்பவர் தம் மனத்தில் எப் பொழுதும் தங்கி இருப்பான். இப்படிப்பட்ட எம்பெருமான் ''திரு விடவெந்தை'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம் பிரான் தூய்மையான நீரினாலும், சோலைகளினாலும் சூழ்ந்திருக் கின்ற திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் 'திரு வேங்கடம்' என்னும் திருமலையைச் சென்றடைதல் வேண்டும்.

வண்கை யானவு ணர்க்கு நாயகன்
 வேள்வி யில்சென்று மாணியாய்,
மண்கை யாலிரந் தான்ம ராமர
 மேழு மெய்த வலத்தினான்,
எண்கை யானிம யத்துள் ளானிருஞ்
 சோலை மேவிய எம்பிரான்,
திண்கைம் மாதுயர் தீர்த்த வன்திரு
 வேங்க டமடை நெஞ்சமே! 1022

Koviloor Digital Library

ஏ மனமே! எல்லாம் வல்ல எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், கொடை வள்ளலாகவும் அசுரர்களுக்குத் தலைவனாகவும் திகழ்ந்த மாபலிச்சக்கரவர்த்தியின் வேள்விச்சாலைக்குச் சென்று, அவனிடம் பிரம்மச்சரிய கோலத்தில் நின்று ''மூன்றடி மண் தா'' என்று இப் பூமியை யாசித்தான். மராமரங்கள் ஏழினையும் வீழ்த்திய வலிமை மிக்க ஆற்றல் பெற்றவன். எட்டு திருக்கரங்களையுடையவன். இமயமலையில் ஒரு பகுதியில் உள்ள ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலத்திலும், ''திருமாலிருஞ்சோலை மலை'' என்னும் திருத்தலத்திலும் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான். முன்பு ஓர் யானைக்குண்டான பெருந்துயரைப் போக்கியருளியவன். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ''திருவேங்கடமலை''யைச் சென்றடைதல் வேண்டும்.

எண்டி சைகளு மேழு லகமும்
　　வாங்கிப் பொன்வயிற் றில்பெய்து,
பண்டொ ராலிலைப் பள்ளி கொண்டவன்
　　பான்ம திக்கிடர் தீர்த்தவன்,
ஒண்டி றலவு ணன்னு ரத்துகிர்
　　வைத்த வனொள்ளெ யிற்றொடு,
திண்டி றலரி யாய வன்திரு
　　வேங்க டமடை நெஞ்சமே! 1023

ஏ மனமே! எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் முன்பு உண்டான உலகப் பிரளய காலத்தில் எட்டுத் திசைகளையும், ஏழு உலகங்களையும் உண்டு தன் பொன் போன்ற திருவயிற்றில் அடக்கி வைத்துக் கொண்டு, அதே காலத்தில் ஆலிலையின்மீது ஓர் பாலகனாய்ப் பள்ளி கொண்டான். பால் போலும் வெண்ணிறம் கொண்ட சந்திரனுக்குண்டான துன்பத்தைப் போக்கியருளியவன். பலம் பொருந்திய 'இரணியன்' என்னும் அசுரனின் பரந்த மார்பினைப் பிளந்து அவனுயிரைப் போக்கிய கூர்மையான நகங்களையும், ஒளிமிக்க பற்களையும் உடைய ''நரசிம்ம மூர்த்தி''யாகத் திருஅவதாரம் மேற்கொண்டருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ''திருவேங்கடம்'' என்னும் திருமலைக்குச் சென்றடைதல் வேண்டும்.

Koviloor Digital Library

பாரு நீரெரி காற்றி னோடா
காச மிவை யாயினான்,
பேரு மாயிரம் பேச நின்றபி-
றப்பி லிபெரு குமிடம்,
காரும் வார்பனி நீள்வி சும்பிடைச்
சோரு மாமுகில்[1] தோய்தர,
சேரும் வார்பொழில்[2] சூழெ ழில்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 1024

ஏ மனமே! எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் நிலம், நீர், காற்று, நெருப்பு, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களிலும் நிறைந்து நிற்பவன். ஆயிரம் திருநாமங்களைக் கொண்டு போற்றித் துதித்து வணங்குமாறு யாவரும் பேசும் வகையில் நின்ற எம்பெருமான் பிறப்பு என்ற ஒன்று இல்லாதவன். இப்படிப்பட்ட தன்மைகளைக் கொண்ட எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருத்தலமாகிய திருவேங்கட மலையில், ஆகாயத்திலிருந்து மேகக்கூட்டங்களும், பனித்துளிகளும் கொட்டுகின்றன. இவ்வாறு மேகங்கள் தவழ்ந்து கொண்டிருக்கச் சோலைகள் சூழ்ந்திருக்கும் ''திருவேங்கட மலை'' திருமலையைச் சென்றடைதல் வேண்டும்.

அம்ப ரமனல் கால்நி லம்சல
மாகி நின்ற அமரர்கோன்,
வம்பு லாமலர் மேல்ம லிமட
மங்கை தன்கொழு நனவன்,
கொம்பி னன்னவி டைம டக்குற
மாதர் நீளித ணந்தொறும்,
செம்பு னமவை காவல் கொள்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 1025

ஏ மனமே! எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தேவர்களுக் கெல்லாம் தலைவனாகி நின்று, ஆகாயம், தீ, காற்று, பூமி, நீர் ஆகிய இவ்வைந்தினுள்ளேயும் தானாகவே நிறைந்து நிற்கிறான். மணம் மிக்க தாமரை மலரின்மீது பொருந்தி இருக்கும் திருமகளுக்குத் தலைவன். வஞ்சிக்கொடி போன்றுள்ள இளம் பெண்கள் பரண் களின்மீது ஏறிக் காவல் புரிந்து கொண்டிருப்பார்கள். இப்படிப்பட்ட ''திருவேங்கடம்'' என்னும் திருமலையைச் சென்றடைதல் வேண்டும்.

Koviloor Digital Library

பேசு மின்திரு நாம மெட்டெழுத்
தும்சொல் லிநின்று பின்னரும்,
பேசு வார்தமை யுய்ய வாங்கிப்பி-
றப்ப றுக்கும் பிரானிடம்,
வாச மாமலர் நாறு வார்பொழில்
சூழ்த ருமுல குக்கெல்லாம்,
தேச மாய்த்திக ழும்ம லைத்திரு
வேங்க டமடை நெஞ்சமே! 1026

ஏ மனமே! எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் யாவராலும் பேசப்படுகின்ற இனிய திருநாமம் என்னும் எட்டெழுத்து மூல மந்திரமாகிய ''ஓம் நமோ நாராயணாய!'' என்று பன்முறை சொல்லிச் சொல்லிப் பயின்று கொண்டிருக்கும் அடியவர்கள் உய்வு பெறும் பொருட்டு, எம்பெருமான் அவ்வடியவர்களை ஏற்றுக் கொண்டு அவர்களின் ''பிறப்பு'' என்னும் பிணியினை அறவே அறுத்து விடுவான். இப்படிப்பட்ட எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்கின்ற திருத்தலம் மணம்மிக்க மலர்களைக் கொண்டுள்ள சோலைகள் சூழ்ந்திருக்கும், உலகம் அனைத்துக்கும் ஒளி தருகின்ற ஒப்பற்ற திலகமாகத் திகழும் ''திருவேங்கடமலை'' என்னும் திருமலையைச் சென்றடைதல் வேண்டும்.

*செங்க யல்திளைக் குஞ்சு னைத்திரு
வேங்க டத்துறை செல்வனை,
மங்கை யர்தலை வன்க லிகன்றி
வண்ட மிழ்ச்செஞ்சொல் மாலைகள்,
சங்கை யின்றித் தரித்து ரைக்கவல்
லார்கள் தஞ்சம தாகவே,
வங்க மாகடல் வையங் காவலர்
ஆகி வானுல காள்வரே. 1027

(கொங்கு பள்ளி நின்ற பார்த்தன் வண்கை எண்டிசை பார் அம்பரம் பேசுமின் செங்கயல்-தாய்.)

வளம் செறிந்த கயல்மீன்கள் நிறைந்திருக்கின்ற சுனைகளைக் கொண்ட திருவேங்கட மாமலையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்கின்ற எம்பெருமானைப் பற்றித் திருமங்கை மன்னன் என்னும் கலியன் என்றும் புகழ்பெற்ற திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த வண்டமிழ்ப் பாசுரங்களைச் சந்தேகம் இல்லாமல்

Koviloor Digital Library

கற்றுரைக்கும் ஆற்றல் பெற்று வல்லவர்களாகத் திகழ்பவர்கள் இவ்வெம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனிடம் சரண்புகுந்து, கப்பல்கள் நிறைந்த பெரிய கடல் சூழ்ந்திருக்கின்ற இவ்வுலகினை ஆண்டுப் பின்னர் திருப்பரமபதத்தினையும் ஆள்வர்.

9. தாயே தந்தை

திருவேங்கடம்

கலி விருத்தம்

*தாயே தந்தையென்றும் தாரமேகிளை மக்களென்றும்,
நோயே பட்டொழிந்தேன் நுனைக்காண்பதோ ராசையினால்,
வேயேய் பூம்பொழில்சூழ் விரையார்திரு வேங்கடவா,
நாயேன் வந்தடைந்தேன் நல்கியாளென்னைக் கொண்டருளே. 1028

நெருக்கமாகக் கூடி நிறைந்துள்ள மூங்கில்கள், பூக்கள் நிறைந்த சோலைகள் ஆகியவை சூழ்ந்திருக்கின்ற மணம்மிக்க ''திருவேங்கட மலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடமே! அடியேன் இன்று வரை தாய், தந்தை, மனைவி, சுற்றத்தினர், பிள்ளைகள் என்று இவர்களை உறவினர்கள் என்று கருதிக் கொண்டு அவர்களையே மதித்து எவ்விதப் பயனுமின்றி கெட்டழிந்தேன். நாயை ஒத்த கீழ்ப்பிறவியானவனாகிய அடியேன் உண்மையான உறவினராகிய உன்னைக் கண்டு வணங்க வேண்டும் என்பதோர் ஆசை காரணமாகச் சரணடைந்தேன். அடியேன் மீது திருவருள் கொண்டு குளிர நோக்கி அடிமையாக்கிக் கொண்டருள வேண்டுகிறேன்.

மானேய் கண்மடவார் மயக்கிற்பட்டு, மாநிலத்து
நானே நானாவித நரகம்புகும் பாவஞ்செய்தேன்,
தேனேய் பூம்பொழில்சூழ் திருவேங்கட மாமலை,என்
ஆனாய்! வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 1029

தேன் நிறைந்த மலர்களைக் கொண்ட சோலைகள் சூழ்ந்திருக் கின்ற ''திருவேங்கட மாமலை''யில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் எம்பெருமானாகிய ஆனைபோலும் பலம் மிக்கவனே! அடியேன் இதுவரை மான் பார்வை போன்ற பார்வை யையுடைய கண்களைக் கொண்ட பெண்களின்மீது கொண்ட மயக்கம் காரணமாகக் கட்டுப்பட்டவனாகி, அதனால் இப்பரந்த

Koviloor Digital Library

உலகில் பலவகையான நரகத்துக்குச் செல்வதற்கான தீய செயல்கள் பலவற்றைச் செய்துவிட்டேன். அடியேன் இத்தீய செயல்களைச் செய்து கொண்டிருப்பது தவறு என்று எண்ணி வருத்தமுற்று, உன்னிடம் வந்து உன் திருவடிகளைச் சரணடைந்தேன். அடியேனைத் திருவருள் கொண்டு அடிமை கொண்டு அருளல் வேண்டும்.

கொன்றேன் பல்லுயிரைக் குறிக்கோளொன் றிலாமையினால்,
என்றே னுமிரந்தார்க் கினிதாகவு ரைத்தறியேன்,
குன்றேய் மேகமதிர் குளிர்மாமலை வேங்கடவா,
அன்றே வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 1030

மலைகளின் உச்சியில் மேகக்கூட்டங்கள் கூடி முழக்கமிடும் குளர்ச்சியும் பெருமையுமுடைய ''திருவேங்கட மாமலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் திருவேங்கடத்தானே! அடியேன் குறிக்கோள் ஏதுமின்றிப் பலருடைய உயிரைப் போக்கினேன். எப்பொழுதேனும், அடியேனிடம் யாராவது வந்து 'இல்லை' என்று கூறி இரப்பவர்களிடம் இனிய சொற்களாகக் கூட ஏதும் கூறவில்லை. இப்பொழுது அடியேன் உன்னிடம் வந்து சரணடைந்தேன். இவ்வாறு சரணடைந்த அடியேனை ஆட்கொண்டு அருள வேண்டுகிறேன்.

குலந்தா னெத்தனையும் பிறந்தேயிறந் தெய்த்தொழிந்தேன்,
நலந்தா னொன்றுமிலேன் நல்லதோரறஞ் செய்துமிலேன்,
நிலந்தோய் நீள்முகில்சேர் நெறியார்திரு வேங்கடவா,
அலந்தேன் வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 1031

நிறைந்த பெருமேகங்கள் ஒன்று கூடிப் பரவும் வகையில் நிலத்தின்மீது நிறையுமாறு சூழ்ந்திருக்கும் அளவில் நல்ல பாதைகளைக் கொண்ட ''திருவேங்கட மாமலை''யில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடத்தானே! அடியேன் பற்பல குலங்களிலும் பன்முறை பிறந்து பன்முறை இறந்து இளைத்துக் கெட்டொழிந்தேன். இப்படிப்பட்ட செயல்களினால் எவ்வித நன்மையினையும் பெற்றேனில்லை. நன்மையைத் தரக்கூடிய அறச்செயல்கள் ஏதும் செய்யவில்லை. இப்பொழுது அடியேன் பெருந்துன்பமுற்றேன். இப்படிப்பட்ட

Koviloor Digital Library

அடியேன் உன் திருவடிகளை அடைந்து சரணடைந்தேன். இவ் வடியேனை ஆட்கொண்டு அருள வேண்டுகிறேன்.

எப்பா வம்பலவு மிவையேசெய் திளைத்தொழிந்தேன்,
துப்பா நின்னடியே தொடர்ந்தேத்தவுங் கிற்கின்றிலேன்,
செப்பார் திண்வரைசூழ் திருவேங்கட மாமலை,என்
அப்பா! வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 1032

சொல்வதற்கரிய உறுதிமிக்க மலைகள் சூழ்ந்திருக்கின்ற திருவேங்கட மாமலையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருவேங்கடத்தானே! என் அப்பா! அடியேன் பல வகையான பாவங்களை எல்லாம் செய்ததனால் இளைத்து அழிந்து ஒழிந்தேன். அடியேன் உன் திருவடிகளை அடைந்து பக்தியுடன் போற்றித் துதிப்பதற்கும் சக்தி அற்றவனாக ஆகிவிட்டேன். இப்படிப்பட்ட தன்மைகளைக் கொண்ட அடியேன் உன்னிடம் வந்து சரண் அடைந்தேன். அடியேனை ஆட்கொண்டு அருள வேண்டுகிறேன்.

மண்ணாய் நீரெரிகால் மஞ்சுலாவுமா காசமுமாம்
புண்ணா ராக்கைதன்னுள் புலம்பித்தளர்ந் தெய்த்தொழிந்தேன்,
விண்ணார் நீள்சிகர விரையார்திரு வேங்கடவா,
அண்ணா! வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 1033

விண்ணையளாவி நிற்கும் உயர்ந்து ஓங்கிய மலைகளைக் கொண்ட ஏழுமலை மலைகளுக்கு அப்பாலுள்ள ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருவேங்கடத்தானே! அண்ணா! நிலம், நீர், காற்று, நெருப்பு, மேகங்கள் சூழ்ந்து உலவிவரும் வானம் ஆகிய ஐம்பெரும் பூதங்களாலான, புண்கள் நிறைந்துள்ள இவ்வுடம் பினுள்ளே அகப்பட்டுத் தவித்துத் தளர்ந்து போய் அடியேன் இளைத்து அழிந்து ஒழிந்தேன். இப்படிப்பட்ட நிலையினின்றும் மீண்டு வந்து உன் திருவடிகளைச் சரணடைந்தேன். ஆகையினால் இவ்வடியேனை ஆட்கொண்டு அருள்புரிதல் வேண்டும்.

தெரியேன் பாலகனாய்ப் பலதீமைகள் செய்துமிட்டேன்,
பெரியே னாயினபின் பிறர்க்கேயுழைத் தேழையானேன்,
கரிசேர் பூம்பொழில்சூழ் கனமாமலை வேங்கடவா,
அரியே! வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 1034

Koviloor Digital Library

யானைகள் நிறைந்திருக்கின்ற மலர்கள் மிக்க சோலைகள் சூழ்ந்திருக்கும் பெரிய மலையாகிய ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடத்தானே! சிங்கமே! அடியேன் ஒன்றும் தெரிந்துகொள்ளாத சிறுபிள்ளையாக இருந்து செய்யக் கூடாத பற்பல தீமைகளைச் செய்துவிட்டேன். பின்பு பெரியவனாக வளர்ந்த பின்பு பிறருக்காகவே உழைத்து உழைத்துப் பாடுபட்டு என் நிலை கெட்டுத் தடுமாற்றமுற்றேன். அடியேன் இப்போது வந்து உன்னைச் சரண் அடைந்தேன். ஆகையால் அடியேனை ஆட்கொண்டு அருளுமாறு வேண்டுகிறேன்.

நோற்றேன் பல்பிறவி நுனைக்காண்பதோ ராசையினால்,
ஏற்றேன் இப்பிறப்பே இடருற்றன னெம்பெருமான்,
கோற்றேன் பாய்ந்தொழுகும் குளிர்சோலைசூழ் வேங்கடவா,
ஆற்றேன் வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 1035

கொம்புத்தேன் பெருகி வழிந்து ஓடி வருகின்ற குளிர்ச்சிமிக்க சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடத்தானே! அடியேன் பற்பல பிறவிகளை மேற்கொண்டு அவைகளில் சிக்கிப் பற்பல வினைகளைச் செய்தேன். இப்பிறப்பில் உன்னைக் கண்டு உன்னருள் பெற வேண்டுமென்று ஆசைப்பட்டு உனக்கு உரியவனானேன். பற்பல துன்பங்களை அடைந்தேன். எம்பெருமானே! இத்துன்பங்களையெல்லாம் அனுபவித்துத் தாங்கிக் கொள்ள இயலாதவனாகி உன் திருவடிகளை வந்தடைந்து சரணடைந்தேன். ஆகையினால் அடியேனை ஆட்கொண்டருளுமாறு வேண்டுகிறேன்.

பற்றே லொன்றுமிலேன் பாவமேசெய்து பாவியானேன்,
மற்றே லொன்றறியேன் மாயனே!எங்கள் மாதவனே,
கற்றேன் பாய்ந்தொழுகும் கமலச்சுனை வேங்கடவா,
அற்றேன் வந்தடைந்தேன் அடியேனையாட் கொண்டருளே. 1036

ஆச்சரியமான திருக்குணங்களை உடைய மாயனே! திருமகள் தலைவனே! மலைக் குகைகளிலிருந்து தேன் பெருகிப் பாய்ந்தோடி வருகின்ற தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்ற சுனைகள் நிறைந் திருக்கும் ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில்

Koviloor Digital Library

திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருவேங்கடத்தானே! அடியேன் உன்னைப் பற்றிக் கொள்ள வேண்டுமென்கின்ற பற்று ஏதும் இல்லாதவன். பாவங்கள் பல புரிந்து, மற்ற நல்வினைச் செயல்களைச் செய்வதில் பற்றுதல் இல்லாதவனாகி, துணையேது மில்லாமல் எதையும் அறியாதவனாகி நிற்கிறேன். ஆகையினால் இப்போது உன் திருவடிகளை வந்தடைந்து சரணடைந்தேன். ஆதலால் இவ்வடியேனை ஆட்கொண்டு அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

கண்ணா யேழுலகுக் குயிராயவெங் கார்வண்ணனை,
விண்ணோர் தாம்பரவும் பொழில்வேங்கட வேதியனை,
திண்ணார் மாடங்கள்சூழ் திருமங்கையர் கோன்கலியன்,
பண்ணார் பாடல்பத்தும் பயில்வார்க்கில்லை பாவங்களே. 1037

(தாய் மான் கொன்றேன் குலம் எப்பாவம் மண் தெரி நோற்றேன் பற்றேல் கண்ணாய் - கண்ணார்.)

ஏழுலகங்களுக்கும் கண் போன்றும், உயிரே போன்றும் உள்ள எங்கள் மேகம் போன்ற நிறம் கொண்ட எம்பெருமானை தேவர்கள் எல்லோரும் வந்து வணங்கும்படியாக நிற்கின்ற திருவேங்கட மாமலையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடத்தானைப் பற்றித் திருமங்கை நாட்டு மன்னன் ‘கலியன்’ என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இசையுடன் கூடிய இப்பத்துப் பாசுரங்களையும் நன்கு பயின்று வருபவர் களுக்குப் பாவமேதுமில்லை.

10. கண்ணார் கடல்சூழ் திருவேங்கடம்

கலி விருத்தம்

*கண்ணார் கடல்சூ ழிலங்கைக் கிறைவன்றன்
திண்ணாகம் பிளக்கச் சரஞ்செல வுய்த்தாய்,
விண்ணோர் தொழும்வேங் கடமா மலைமேய
அண்ணா, அடியே னிடரைக் களையாயே. 1038

அகன்ற கடலால் சூழ்ந்திருக்கின்ற இலங்கை மாநகர் மன்ன னாகிய இராவணனின் வலிமைமிக்க உடல் பிளந்து போகும்படியாக

Koviloor Digital Library

அவன் அம்புகளை ஏவிய ஸ்ரீ இராமபிரானே! விண்ணுலகிலுள்ள தேவர்களெல்லாரும் வந்து இருந்து தொழக் கூடிய ''திருவேங்கடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அண்ணா! அடியேனுக்குண்டாகியிருக்கும் இன்னல்களைக் களைந்தருள் புரிய வேண்டுகிறேன்.

இலங்கைப் பதிக்கன் றிறையாய, அரக்கர்
குலங்கெட் டவர்மாளக் கொடிப்புள் திரித்தாய்,
விலங்கல் குடுமித் திருவேங் கடம்மேய,
அலங்கல் துளப முடியாய்! அருளாயே. 1039

இலங்கை மாநகரில் மன்னர்களான இராவணன், மாலியவான் போன்ற அரக்கர்களை அவர்களின் குலம் முழுவதும் மாண்டு போகும்படியாகப் பெரிய திருவடியின்மீது ஏறிவந்த எம்பெருமான் ஸ்ரீ இராமபிரானே! உயர்ந்தோங்கியுள்ள மலைகளின்மீது அமைந் துள்ள ''திருவேங்கடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! மணம்மிக்க துளப மாலையைச் சூடிய எம்திருவேங்கடத்தானே! அடியேனிடத்து அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

நீரார் கடலும் நிலனும் முழுதுண்டு,
ஏரா லமிளந் தளிர்மேல் துயிலெந்தாய்,
சீரார் திருவேங் கடமா மலைமேய,
ஆரா அமுதே! அடியேற் கருளாயே. 1040

முன்பு உலகப் பிரளயம் உண்டானபொழுது, நீர் நிறைந்த பெருங்கடலினையும் பரந்து கிடக்கின்ற இப்பெரிய பூமி முழுவதனையும் உண்டு, இளமையான ஆலிலைமேல் திருக்கண் வளர்ந்தருளும் என் தந்தையே! செல்வம் நிறைந்த சிறப்பான ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் ஆராவமுதம் போன்ற திருவேங்கடத்தானே! அடியேனுக்கு அருள்புரிய வேண்டுகிறேன்.

உண்டா யுறிமேல் நறுநெய் யமுதாக,
கொண்டாய் குறளாய் நிலமீ ரடியாலே,
விண்டோய் சிகரத் திருவேங் கடம்மேய,
அண்டா! அடியே னுக்கருள் புரியாயே. 1041

Koviloor Digital Library

உறிகளில் வைத்திருக்கின்ற மணம் நிறைந்த நெய்யைத் திருவமுதாகக் கொண்டு உண்ட ஸ்ரீ கண்ணபிரானே! குள்ள வடிவமாகிய 'வாமன' அவதாரம் மேற்கொண்டு, மகாபலிச் சக்கரவர்த்தியினிடம் யாசித்துப் பெற்ற அளவில் இப்பூமியை இரண்டு அடிகளால் அளந்து உயர்ந்த எம்பெருமானே! ஆகாயத்தினை அளாவுமாறு உயர்ந்தோங்கிய மலைகளின்மீதுள்ள ''திருவேங்கடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அண்டங்கள் யாவினுக்கும் தலைவனாகத் திகழும் திருவேங்கடத்தானே! அடியேனுக்கருள் புரிந்திட வேண்டுகிறேன்.

தூணா யதனூ டரியாய் வந்துதோன்றி,
பேணா அவுண னுடலம் பிளந்திட்டாய்,
சேணார் திருவேங் கடமா மலைமேய,
கோணா கணையாய், குறிக்கொள் ளெனைநீயே. 1042

பிரகலாதாழ்வானிடம் அவன் தந்தை இரணியன், ''நீ கூறுகின்ற அந்த அரி இந்தத் தூணில் இருப்பாரோ?'' என்று வினவியதற்கேற்றவாறு அத்தூணினின்றும் நரசிம்ம மூர்த்தியாக அவதாரம் மேற்கொண்டு எழுந்தருளி தன்னை மதிக்காத அசுரனாகிய அவ்விரணியனின் உடலைப் பிளந்து போட்டு, அவன் உயிரைப் போக்கிய நரசிம்ம மூர்த்தியே! மிகவும் உயர்ந்தோங்கி உள்ள ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருவேங்கடத்தானே! திருவனந்தாழ்வான் மீது திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமானே! அடியேனை உன் திருவுள்ளத்தில் பற்றிக் கொண்டருள வேண்டுகிறேன்.

மன்னா இம்மனி சப்பிற வியைநீக்கி,
தன்னாக்கித் தன்னின் னருள்செய் யும்தலைவன்,
மின்னார் முகில்சேர் திருவேங் கடம்மேய,
என்னானை யென்னப்ப னென்நெஞ்சி லுளானே. 1043

நிலையற்ற இழிவானதாகக் கருதப்படுகின்ற இம்மனிதப் பிறவியைப் போக்கியருளி இவ்வடியேனைத் தனக்கு உரியவனாக்கிக் கொண்டு இன்னருள் செய்தருள்கின்ற எம்தலைவன் மேகங்கட்கிடையே மின்னல்கள் மின்னிட ''திருவேங்கடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் என்

Koviloor Digital Library

ஆனையாகி நின்று, என் தந்தையாகி என் நெஞ்சினுள்ளே நிறைந்துள்ளான்.

மானேய் மடநோக் கிதிறத் தெதிர்வந்த,
ஆனேய் விடைசெற்ற அணிவரைத் தோளா,
தேனே! திருவேங் கடமா மலைமேய,
கோனே! என்மனம் குடிகொண் டிருந்தாயே. 1044

மான் கண்காணும் பார்வை போன்ற பார்வையைப் பெற்றுள்ள மடப்பம் மிக்க நப்பின்னைப் பிராட்டியை அடையும் பொருட்டு ஏழு எருதுகளைக் கொன்ற அழகுமிக்க மலையை ஒத்த பெருந் தோளினைப் பெற்ற எம்பெருமானே! தேன் போன்று இனிமை யானவனே! ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்தலைவனே! என் மனத்தினைத் தன் இருப்பிடமாகக் கொண்டு நிலைபெற்று இருக்கின்றாய்.

சேய னணிய னென்சிந் தையுள்நின்ற
மாயன், மணிவா ளொளிவெண் தரளங்கள்,
வேய்விண் டுதிர்வேங் கடமா மலைமேய,
ஆய னடியல் லதுமற் றறியேனே. 1045

எம்பெருமான் ஸ்ரீ மந்நாராயணனிடத்துப் பற்றுக் கொள்ளாத வர்கட்கு நெடுந்தொலைவில் நிற்கின்ற அயலானாகவும், அவனைப் பற்றி நிற்கும் அடியவர்கட்கு அண்மையில் இருப் பவனாகவும் திகழ்கின்ற எம்பெருமான் என் சிந்தையுள் நிற்கும் ஆச்சரியமான திருக்குணங்களை உடையவராகத் திகழ்கின்றார். நன்கு முற்றிய மூங்கில் மரங்களில் முற்றி வெடித்து அதனால் ஒளியுள்ள வெண்மையான முத்துக்களையும், ஒளி பொருந்திய மணிகளையும் சொரிகின்ற ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆய்க்குலத்துதித்த எம்பிரான் ஸ்ரீ கண்ணபிரானின் திருவடிகளை அன்றி வேறெதனையும் அடியேன் அறியேன்.

வந்தா யென்மனம் புகுந்தாய் மன்னிநின்றாய்,
நந்தா தகொழுஞ் சுடரே! எங்கள்நம்பீ,
சிந்தா மணியே! திருவேங் கடம்மேய
எந்தாய், இனியா னுன்னையென் றும்விடேனே. 1046

Koviloor Digital Library

அணையாத, நிறைந்த, ஒளியாகத் திகழும் சுடரே! எங்கள் குறைகளை நீக்கி அருளும் நம்பியே! எண்ணிய யாவும் அளித் தருளும் மணியே! ''திருவேங்கடம்'' என்னும் திருப்பதியில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளும் என் தந்தையே! அடியேனிடத்தில் நீயே வந்து, அடியேனின் மனத்தினுள் புகுந்து இருந்து கொண்டு நிலைத்து நிற்கின்றாய். ஆதலால், அடியேன் இனி என்றும் உன்னைவிட்டு அகலமாட்டேன்.

*வில்லார் மலிவேங் கடமா மலைமேய,
மல்லார் திரடோள் மணிவண்ண னம்மானை,
கல்லார் திரடோள் கலியன் சொன்னமாலை,
வல்லா ரவர்வா னவரா குவர்தாமே. 1047

(கண் இலங்கை நீர் உண்டாய் தூணாய் மன்னா மானேய் சேயன் வந்தாய் வில்-வானவர்.)

'வில்' ஏந்திக் கொண்டிருக்கின்ற வேடர்கள் நிறைந்திருக்கின்ற ''திருவேங்கடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருவேங்கடவனை, திரண்ட திருத்தோள்களையுடையவனாகியும், நீலநிறம் கொண்ட மணிகளையுடைய திருவேங்கடவனைப் பற்றிக் கல்லை ஒத்த தோள்களையுடைய கலியன் என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங்களைக் கற்று வல்லவர்களான அடியவர்கள் விண்ணுலகில் வாழும் தேவர்களாகத் திகழ்வார்கள்.



Koviloor Digital Library

இரண்டாம் பத்து

1. வானவர்

திருவேங்கடம்

ஆசிரியத்துறை

*வானவர் தங்கள் சிந்தை போலஎன்
நெஞ்சமே! இனி துவந்து,
மானவர் தங்கள் சிந்தை யமர்ந்துறை கின்ற வெந்தை,
கானவரிடு காரகிற்புகை யோங்கு வேங்கடம்
மேவி, மாண்குறள்
ஆன அந்தணற் கின்றடி மைத்தொழில் பூண்டாயே. 1048

என் மனமே! மிகுந்த தவத்தினைச் செய்த சிறந்த அடியவர்களின் உள்ளத்தின் உள்ளே நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற எம்பெருமானாகத் திகழும் என் தந்தையானவர் காட்டிலே வாழ்ந்து வருகின்ற வேடர்கள் முற்றிய அகிற்கட்டைகளைத் தீயில் இடுவதனாலுண்டான சூழ்ந்து உயர்ந்திருக்கின்ற ''திருவேங்கடம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடவன், அந்தணச் சிறுவனாகக் குள்ள வடிவாகிய 'வாமன' அவதாரம் மேற்கொண்டு தேவர்கள் தங்கள் இதயத்தில் இனிதாக அமர்ந்திருப்பதுபோல அடியேனிடத்திலும் பெருவிருப்புடன் தங்கியிருந்தருள்புரிகின்ற எம்பெருமானுக்கு அடிமைத் தொழில் புரியுமாறு அருளிச் செய்திருக்கின்றாய்.

உறவு சுற்றமென் றொன்றிலா வொருவன்
உகந்தவர் தம்மை, மண்மிசைப்
பிறவி யேகெடுப் பானது கண்டென் நெஞ்ச மென்பாய்,
குறவர் மாதர்க ளோடு வண்டு
குறிஞ்சி மருளிசை பாடும் வேங்கடத்து,
அறவ நாயகற் கின்றடி மைத்தொழில் பூண்டாயே. 1049

உறவினர்கள் என்றும், சுற்றத்தினர்கள் என்றும் ஒன்றுமில்லாத ஒருவனாக இருக்கின்ற எம்பெருமான் தனக்கு விருப்பமாக உள்ள அடியவர்கட்கு இப்பூமியில் மீண்டும் மீண்டும் பிறத்தல் என்னும் பிறவிப் பிணியைப் போக்கி விடுவான். என் மனமே! இப்படிப் பட்ட எம்பெருமானின் அருளை நீயும் அறிந்து கொண்டிருக்கிறாய்.

Koviloor Digital Library

குறத்தியர்களுடன் வண்டுகள் ''குறிஞ்சி'' என்னும் பண்ணினை இசையுடன் பாடிக் கொண்டிருக்கும் ''திருவேங்கடமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் அறமே வடிவமாகக் கொண்டிருக்கின்ற எம்பெருமான் திருவேங்கடமுடையானுக்கு இன்று அடிமைத் தொழில் புரியுமாறு அருளிச் செய்திருக்கின்றாய்.

இண்டை யாயின கொண்டு தொண்டர்கள்
ஏத்த வாருற வோடும், வானிடைக்
கொண்டு போயிடவு மதுகண்டென் நெஞ்ச மென்பாய்,
வண்டு வாழ்வட வேங்கடமலை
கோயில் கொண்டத னோடும், மீமிசை
அண்ட மாண்டிருப் பாற்கடி மைத்தொழில் பூண்டாயே. 1050

என் மனமே! மலர் மாலைகளை ஏந்தித் துதித்து வணங்கிக் கொண்டிருக்கின்ற அடியார்களையும், அவர்களோடு தொடர்பு கொண்டிருக்கின்ற உறவினர்களையும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன், இவ்வுலக வாழ்வினின்றும் விடுவித்துத் திருப் பரமபதம் அடையுமாறு திருவருள் புரிவான். இப்படிப்பட்ட அருள் குணங்களை உடைய நீர்மைக் குணத்தினை அறிந்து கொண்டாய் அன்றோ! இந்த எம்பெருமான் திருப்பரமபதத்தை ஆட்சி புரிந்து கொண்டே, வண்டுகள் நிறைய வாழ்ந்து கொண்டிருக்கின்ற ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருவேங்கட முடையானுக்கு நீ அடிமைத் தொழில்புரியுமாறு திருவருள் கிடைக்கப் பெற்றிருக்கின்றாய்.

பாவி யாதுசெய் தாயென் னெஞ்சமே!
பண்டு தொண்டுசெய் தாரை, மண்மிசை
மேவி யாட்கொண்டு போய்வி சும்பேற வைக்கு மெந்தை,
கோவி நாயகன் கொண்ட லுந்துயர்
வேங்கட மலையாண்டு, வானவர்
ஆவி யாயிருப் பாற்கடி மைத்தொழில் பூண்டாயே. 1051

என் மனமே! நீ சிறிதும் குழப்பம் அடையாமல் நல்லதோர் கைங்கர்யத்தினை உறுதியுடன் செய்தாய். பண்டைக் காலத்தில் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற அடியார்களின் உய்வுக்காக இப்பூமியில் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அவதாரம்

Koviloor Digital Library

மேற்கொண்டு அவ்வடியார்களை ஆட்கொண்டு திருப்பரமபதம் அடையச் செய்கின்றான். அவ்வெம்பெருமானே அடியேனுக்குத் தந்தையாவான். கோபியர்களின் நாயகனான ஸ்ரீ கண்ணபிரான் மேகக்கூட்டங்கள் முந்திக் கொண்டு தள்ளும்படியான உயர்ந் திருக்கின்ற ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளான். இத்திருவேங்கட மலையில் இருந்து ஆண்டு கொண்டு நித்திய சூரிகள் என்னும் தேவர்களுக்கு உயிராகக் கொண்டு விளங்கும்படியாகத் திகழ்கின்ற இவ்வெம்பெருமானுக்கு நீ அடிமைத் தொழில் செய்யுமாறு மேற்கொண்டு இருக்கின்றாய்.

பொங்கு போதியும் பிண்டி யுமுடைப்
புத்தர் நோன்பியர் பள்ளி யுள்ளுறை,
தங்கள் தேவரும் தாங்களு மேயாக என்நெஞ்ச மென்பாய்,
எங்கும் வானவர் தான வர்நிறைந்
தேத்தும் வேங்கடம் மேவி நின்றருள்,
அங்க ணாயகற் கின்றடி மைத்தொழில் பூண்டாயே. 1052

என் மனமே! மிக மகிழ்வுடன் திகழும் பருத்திருக்கின்ற அரச மரத்தினையும், அசோக மரத்தினையும் தமக்கு உரியனவாகக் கொண்டிருக்கின்ற புத்த மதத்தினரும், சமணமதத்தினரும் தங்கள் தங்கள் பள்ளிகள் என்னும் கோயில்களில் தங்கி இருக்கின்ற கடவுளர்களுடன் தாங்களுமாக ஒன்றி இருப்பதைக் கண்டும் அவ்வாறான செயல்பாடுகளில் ஈடுபடாமல் விலக்கிக் கொண்டுள்ள அருளாளனான எம்பெருமான் விண்ணுலகு எங்கும் உள்ள தேவர்களும், அசுரர்களும் நிறையக் கூடி இருந்து ஏத்தி வணங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில் ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடமுடையானுக்கு இன்று நீ அடிமைத் தொழில் செய்யுமாறு மேற்கொண்டிருக்கின்றாய்.

துவரி யாடையர் மட்டை யர்சமண்
தொண்டர் கள்மண்டி யுண்டு பின்னரும்,
தமரும் தாங்களு மேத டிக்களன் நெஞ்சமென்பாய்,
கவரி மாக்கணம் சேரும் வேங்கடம்
கோயில் கொண்டகண் ணார்வி சும்பிடை,
அமர நாயகற் கின்றடி மைத்தொழில் பூண்டாயே. 1053

Koviloor Digital Library

என் மனமே! காவியுடையை உடுத்தியும், மொட்டை அடித்துக் கொண்டும் இருக்கின்ற சமணர்கள் தங்களுக்குள்ளே வெறும் நியாயவாதங்களைக் கொண்டு சொற்போர் புரிந்தவாறு போட்டியிட்டுத் தம் சமயமே மேலானதென்று நிலை நிறுத்தித் தயிர் சோற்றினையுண்டு, நீயும் அவர்களைப்போல் உடம்பு பருத்திருக்க நினைக்காமல் இருக்கின்றாய். கவரிமான்களின் கூட்டங்கள் நிறைந் திருக்கின்ற ''திருவேங்கடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் விண்ணுலகில் உள்ள தேவர்களுக்குத் தலைவனாக இருந்து கொண்டு அருள்புரிகின்றான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்கு நீ இன்று அடிமைத் தொழில் புரியுமாறு மேற்கொண்டிருக்கின்றாய்.

தருக்கி னால்சமண் செய்து சோறுதண்
 தயிரி னால்திர ளை,மி டற்றிடை
நெருக்குவார் அலக்கணது கண்டென் நெஞ்சமென்பாய்,
மருட்கள் வண்டுகள் பாடும் வேங்கடம்
 கோயில் கொண்டத னோடும், வானிடை
அருக்கன் மேவிநிற் பாற்கடி மைத்தொழில் பூண்டாயே. 1054

என் மனமே! இந்தச் சமணர்கள் வீண்தர்க்கம் புரிந்துத் தம் சமயமே சிறந்தது என்று நிலை நிறுத்தித் தயிரினால் கலந்து அளித்த தயிர் சோற்றைத் தம் தொண்டைக்குள்ளே செலுத்தித் திணித்து உண்கின்றபொழுது விழிபிதுங்குமாறு உண்டாகின்ற துன்பத்தைக் காணும்போது நமக்குப் பரிதாபமாக உள்ளது. நீ இவ்வாறு துன்பப்படும் நிலையிலுள்ள இச்சமணர்கள் நடந்து கொள்ளும் வழியில் சென்றுவிடாமல் இருக்குமாறு தடுத்துவிட்ட எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணன் மருள் இந்தளம் முதலிய இசை களைப் பாடுகின்ற வண்டுகள் நிறைந்திருக்கின்ற ''திருவேங்கடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளான். இவைகட்கும் மேலாக விண்ணுலகில் உலவிக் கொண் டிருக்கும் சூரியனின் உயிர்க்கு உயிராய்ப் பொருந்தியிருக்கின்ற எம் பெருமானுக்கு 'அடிமைத் தொழில்' புரியுமாறு மேற்கொண்டி ருக்கின்றாய்.

Koviloor Digital Library

சேய னணியன் சிறியன் பெரிய னென்பது
சிலர்பேசக் கேட்டிருந்
தே,என் னெஞ்சமென் பாய்!எனக் கொன்று சொல்லாதே,
வேய்கள் நின்றுவெண் முத்த மேசொரி
வேங்க டமலை கோயில் மேவிய,
ஆயர் நாயகற் கின்றடி மைத்தொழில் பூண்டாயே. 1055

என் மனமே! சிலர் வைகுந்தத்தில் திருக்கண் வளர்ந்தருளும் திருப்பரமபதநாதனை மிகு தொலைதூரத்திலிருக்கின்றான் என்று கூறுவர். வேறு சிலர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை அருகிலேயே இருப்பவன்தானே என்று கூறிப் புறக்கணிக்கின்றனர். அவனுடைய அவதார எளிமையைக் கண்டும், அதன் சிறப்பை அறிந்து கொண்டுமிருக்கின்ற சிலர் அவன் மேற்கொண்ட ''வாமனன்'' என்னும் அவதாரம் மேற்கொண்டதைக் கொண்டு இவன் ''மிகச் சிறியவன்'' என்றும், ''திரிவிக்கிரமன்'' என்னும் அவதாரம் மேற்கொண்டுள்ளதை அறிந்து கொண்டுள்ள சிலர் இவன் மிகப் பெரியவன்'' என்று எண்ணி 'எட்டாதவன்' என்று பின்வாங்குவர். இவ்வாறு பலர் பலவாறாகப் பேசிக் கொண்டிருப் பதைக் கேட்டுக் கொண்டிருந்த நீ எனக்கு ஏதும் கூறாமலிருந்து விட்டாய். நன்கு முற்றிய மூங்கில்கள் தம்மிடத்தேயுண்டான முத்துகளை உதிர்த்துச் சொரிகின்ற ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும், ஆய்க்குலத் தலைவனுக்கு நீ அடிமைத் தொழில் புரியுமாறு மேற்கொண்டு இருக்கின்றாய்.

கூடி யாடி யுரைத்ததே யுரைத்தாய்என்
னெஞ்சமென் பாய்! துணிந்துகேள்,
பாடி யாடிப் பலரும் பணிந்தேத்திக் காண்கிலார்,[1]
ஆடு தாமரை யோனு மீசனும்
அமரர் கோனும்நின் றேத்தும், வேங்கடத்து
ஆடு கூத்தனுக் கின்றடி மைத்தொழில் பூண்டாயே. 1056

என் மனமே! நீ இவ்வுலகத்தவரோடு கூடியிருந்து, அவர்கள் பேசிக் கொண்டிருந்தவற்றையே இதுவரை பேசிக் கொண் டிருந்தாய். அவர்களுடன் அவர்கட்கேற்றவாறு ஆடிக் கொண் டிருந்தாய். இப்போது நான் கூறுவதைக் கவனமாகத் துணிவுடன் கேட்பாயாக. இவ்வுலகத்தவர் பலரும் ஆடியும், பாடியும், பணிந்து

Koviloor Digital Library

வணங்கியபோதிலும் இவ்வெம்பெருமானை உள்ளபடி கண்டு அறிந்து உணரவில்லை. அசைந்து ஆடிக் கொண்டிருக்கின்ற தாமரை மலரில் அமர்ந்துள்ள பிரம்மாவும், சிவபெருமானும் அமரர்கள் தலைவனாகிய இந்திரனும் ஆகிய இவர்கள் அனைவரும் எம்பெருமானிடம் வந்து நின்று ஒன்றுபட்டுத் துதித்துக் கொண்டிருக்கின்ற ''திருவேங்கடம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி குரவைக் கூத்தாடியவனே ஸ்ரீ கண்ணபிரான் ஆவான். இப்படிப்பட்ட எம்பெருமானுக்கு நீ இன்று ''அடிமைத் தொழில்'' புரியுமாறு மேற்கொண்டு இருக்கின்றாய்.

*மின்னு மாமுகில் மேவு தண்திரு
வேங்க டமலை கோயில் மேவிய,
அன்னமாய் திகழ்ந்த அமரர் பெருமானை,
கன்னி மாமதில் மங்கை யர்கலி
கன்றி யின்தமி ழாலு ரைத்த,இம்
மன்னு பாடல்வல் லார்க்கிட மாகும் வானுலகே. 1057

(வான் உறவு இண்டை பாவியாது பொங்கு துவரி தருக்கினால் சேயன் கூடி மின்னு -காசையாடை.)

மின்னலுடன் கூடிய பெரிய மேகங்கள் சூழ்ந்திருக்கின்ற குளிர்ச்சிமிக்க ''திருவேங்கட மாமலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன், அன்னமாய் அவதாரம் மேற்கொண்டு, தேவர்களுக் கெல்லாம் தலைவனாய்த் திகழ்கின்றான். இப்படிப்பட்ட எம்பெருமானைப்பற்றிக் கற்களாலான பெரிய மதிள்கள் சூழ்ந்துள்ள திருமங்கை' என்னும் நாட்டிற்குத் தலைவனும், கலிகாலத்தில் உண்டாகும் பாவங்களைப் போக்கியவருமாகிய ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்து துதித் தருளிய இத்திருமொழியாகிய தமிழ்ப் பாசுரங்கள் பத்தினையும் பயின்று பாடவல்லவர்களுக்கு உரிய இருப்பிடம் ''திருப் பரம்பதம்'' ஆகும்.

Koviloor Digital Library

2. காசையாடை

திருஎவ்வுளூர்

கலி நிலைத்துறை

காசை யாடை மூடியோடிக் காதல்செய் தானவனூர்,
நாச மாக நம்பவல்ல நம்பி நம்பெருமான்,
வேயி னன்ன தோள்மடவார் வெண்ணெயுண் டானிவனென்று
ஏச நின்ற வெம்பெருமா னெவ்வுள் கிடந்தானே. 1058

காவியுடையை உடுத்திக் கொண்டு அவ்வுடைக்குள்ளே தன்னை மறைத்துக் கொண்டு சீதாபிராட்டியினிடம் காமம் கொண்ட ''இராவணன்'' என்னும் அரக்கனின் ஊராகிய இலங்கை மாநகரினை நாசமாகும்படியாக அழித்த ''ஸ்ரீ இராமபிரான்'' என்னும் நம் நம்பிக்கைக்குரிய நம் பெருமானாவார். இவ் வெம்பெருமானே மூங்கிலை ஒத்த தோள்களை உடைய இடைக் குலப் பெண்கள் தயாரித்து வைத்திருந்த வெண்ணெயைத் திருடி உண்டவன் என்று பலராலும் ஏச்சுப் பேச்சுக்காளான ஸ்ரீ கண்ண பிரான் ''திருஎவ்வுளூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்றான்.

தைய லாள்மேல் காதல்செய்த தானவன் வாளரக்கன்,
பொய்யிலாத பொன்முடிக ளொன்பதோ டொன்றும்,அன்று
செய்த வெம்போர் தன்னிலங்கோர் செஞ்சரத் தாலுருள,
எய்த வெந்தை யெம்பெருமா னெவ்வுள் கிடந்தானே. 1059

தாயாகிய சீதாபிராட்டி என்னும் நங்கை நல்லாள்மீது காமம் கொண்ட கயவனாகிய இராவணன் வாளேந்திய அரக்கனாவான். அப்படிப்பட்ட இராவணனின் உண்மையான பொன்முடிகளாகத் திகழ்ந்திருந்த பத்துத் தலைகளையும் 'இராம' அவதாரம் மேற் கொண்ட காலத்தில் இலங்கையில் நடைபெற்ற போரின்போது தன் சிவந்த அம்புகளினால் உருளச் செய்யுமாறு ஏவிவிட்ட என் தந்தையாகத் திகழும் எம்பெருமான் ''திருஎவ்வுளூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக் கின்றான்.

Koviloor Digital Library

முன்னோர் தூது வானரத்தின் வாயில் மொழிந்து,அரக்கன்
மன்னூர் தன்னை வாளியினால் மாள முனிந்து,அவனே
பின்னோர் தூத னாதிமன்னர்க் காகிப் பெருநிலத்தார்,
இன்னார் தூத னெனநின்றா னெவ்வுள் கிடந்தானே. 1060

எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் வானரவீரனான அனுமனை முன்பு 'இராம' அவதாரம் மேற்கொண்டிருந்த காலை, தூதுவனாக அனுப்பி வைத்து, அவன் வாயினால் தூதுரைக்கச் செய்து, அரக்கனான இராவணனின் நகரமாகிய இலங்கை மாநகரைத் தன் அம்புகளினாலேயே அழியுமாறு செய்யும் வகையில் சினம் கொண்டு அழித்தான். அப்படிப்பட்ட எம்பெருமானே ஸ்ரீ கண்ணபிரானாகத் திருவவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் பாண்டவ மன்னர்களுக்காகத் தூது சென்று இருந்ததனால் இப் புவியிலுள்ள பலரும் ''பாண்டவதூதப் பெருமாள்'' என்று புகழ்ந் துரைக்குமாறு நின்றான். இவ்வெம்பெருமானே ''திருஎவ்வுளூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கின்றான்.

பந்த ணைந்த மெல்விரலாள் பாவைதன் காரணத்தால்,
வெந்தி றலே றேழும்வென்ற வேந்தன் விரிபுகழ்சேர்,
நந்தன் மைந்த னாகவாகும் நம்பி நம்பெருமான்,
எந்தை தந்தை தம்பெருமா னெவ்வுள் கிடந்தானே. 1061

பூப்போன்ற மென்மையான பந்தினைத் தன் திருக்கரங் களில் ஏந்திய மென்மையான விரல்களைக் கொண்ட நப்பின்னைப் பிராட்டியை அடையும்பொருட்டு, திறமைமிக்க கொடிய ஏழு எருதுகளையும் அழித்து வெற்றிபெற்ற, நந்தகோபரின் திருக் குமாரனாகத் திகழ்ந்த ஸ்ரீ கண்ணபிரான், மன்னனாகப் பெரும் புகழ்பெற்ற நம்பியான நம் தலைவன் ஆவான். இப்படிப்பட்ட நம்பெருமான் அடியேன், அடியேனின் தந்தை, பாட்டன், முப் பாட்டன்காலமுதற்கொண்டு அடியேனின்குலத்துக்கேதலைவனான். இந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே ''திருஎவ்வுளூர்'' என்னும் திருத்தலதில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்றான்.

பால னாகி ஞாலமேழு முண்டுபண் டாலிலைமேல்,
சால நாளும் பள்ளிகொள்ளும் தாமரைக் கண்ணன்எண்ணில்,
நீல மார்வண் டுண்டுவாழும் நெய்தலந் தண்கழனி,
ஏல நாறும் பைம்புறவி லெவ்வுள் கிடந்தானே. 1062

Koviloor Digital Library

முன்பு உலகப்பிரளயம் உண்டான காலத்தில் சிறுகுழந்தையாக இருந்து ஏழு உலகங்களையும் உண்டு தன் வயிற்றினுள்ளே அடக்கிக் கொண்டு ஓர் ஆலந்தளிரின்மீது நீண்ட நெடுங்காலமாகத் திருக்கண் வளர்ந்து அருளும் எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் நீல நிறம் கொண்ட வண்டுகள் தேனை உண்டு வாழ்கின்ற நெய்தல் பூக்கள் நிறைந்துள்ள குளிர்ச்சிமிக்க வயல்களையும், மணம் வீசுகின்ற மலர்கள் மலிந்துள்ள சோலைகள் பெருகிக் கிடக்கும் ''திரு எவ்வுளூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்றான்.

சோத்த நம்பி யென்றுதொண்டர் மிண்டித் தொடர்ந்தழைக்கும்,
ஆத்த னம்பி செங்கணம்பி யாகிலும் தேவர்க்கெல்லாம்,
மூத்த நம்பி முக்கணம்பி யென்று முனிவர்தொழு-
தேத்தும், நம்பி யெம்பெருமா னெவ்வுள் கிடந்தானே. 1063

வைணவத் தொண்டர் பெருமக்கள் நெருக்கமாகத் திரண்டு வந்து உன்னை அணுகி வந்திருந்து, ''குணங்களால் மிக்கவனே! உனக்கு வணக்கம்'' என்று சொல்லிச் சொல்லி இடைவிடாமல் அழைத்துத் துதித்துக் கொண்டிருக்குமாறு இருக்கின்ற எம் பெருமான் நம் தலைவனாகக் குறைவற்று இருக்கின்றான். இவன் சிவந்த கண்ணழகு உடையவனாக இருப்பினும் இவனே தேவர்களுக்கெல்லாம் மூத்த முழு முதல்வனாகத் திகழ்கின்றான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை மூன்று கண்களையுடைய சிவபெருமானும் முனிவர் பெருமக்களும் வந்து வணங்கிக் கொண்டு இருக்கின்ற பெருமைமிக்க எம்பெருமான் ''திருஎவ்வுளூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் எழுந்தருளியிருக்கின்றான்.

திங்க ளப்பு வானெரிகா லாகி, திசைமுகனார்
தங்க ளப்பன் சாமியப்பன் பாகத் திருந்த,வண்டுண்
தொங்க லப்பு நீண்முடியான் சூழ்கழல் சூடநின்ற,
எங்க ளப்ப னெம்பெருமான் எவ்வுள் கிடந்தானே. 1064

நிலவு, நீர், வானம், தீ, காற்று ஆகிய ஐம்பெரும் பூதங்களின் ஆத்மாவாகி, நான்கு முகங்களைக்கொண்டியங்கும்பிரமதேவனுக்குத் தந்தையாகி, சாமவேதத்தினால் எடுத்துரைக்கப்படும் பொருளாகவும் ஆகி நிற்கின்ற எம்பெருமான் தன் திருமேனியின் ஒரு

Koviloor Digital Library

பக்கத்தில் சிவபெருமானையும் கொண்டு விளங்குகிறான். வண்டுகள் தேனையுண்ணுகின்ற கொன்றைப்பூ மாலையுடன், கங்கையைத் தன் திருமுடியில் கொண்டிருக்கின்ற சிவபெருமான் தன் தலையிலே சூடுகின்ற திருவடிகளைக் கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் ''திருஎவ்வுளூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கின்றான்.

முனிவன் மூர்த்தி மூவராகி
　　வேதம் விரித்துரைத்த
புனிதன், பூவை வண்ணனண்ணல்
　　புண்ணியன் விண்ணவர்கோன்,
தனியன் சேயன் தானொருவன்
　　ஆகிலும் தன்னடியார்க்கு
இனியன், எந்தை யெம்பெருமான்
　　எவ்வுள் கிடந்தானே. 1065

படைத்தல் தொழிலை மேற்கொண்டு இருத்தல், காத்தல் தொழிலை மேற்கொண்டு இருத்தல், அழித்தல் தொழிலை மேற்கொண்டு இருத்தல் ஆகிய முத்தொழில்களுக்கும் முறையே பிரமன், விஷ்ணு, சிவபெருமான் ஆகிய மும்மூர்த்தியாகத் தாமே ஒரு மூர்த்தியாக நின்று, வேதங்களின் சிறந்த நுணுக்கமான பொருட்களை விரிவாக விரித்துரைத்த தூய்மை உடையவன். இந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் காயாம்பூ நிறத்தினை உடையவன். அனைவர்க்கும் தலைவன் புண்ணிய வடிவினை மேற்கொண்டவன். தேவர்களுக்கெல்லாம் தலைவன் தனியனாகி நிற்கும் எம்பெருமான் தவயோகிகளால் அறிந்துகொள்ள முடியாதவன். ஆயினும் அடியவர்களுக்கு இனியவன் என் தந்தையாகத் திகழ்கின்ற எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் ''திருஎவ்வுளூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருள்கின்றான்.

பந்தி ருக்கும் மெல்விரலாள் பாவை பனிமலராள்,
வந்தி ருக்கும் மார்வன்நீல மேனி மணிவண்ணன்,
அந்த ரத்தில் வாழும் வானோர் நாயகனாயமைந்த,
இந்தி ரற்கும் தம்பெருமா னெவ்வுள் கிடந்தானே. 1066

பந்தினைத் தன் திருக்கரங்களில் ஏந்திக் கொண்டிருக்கும் மென்மையான விரல்களை உடையவளும், குளிர்ந்த தாமரை

Koviloor Digital Library

மலரில் வீற்றிருப்பவளுமாகிய திருமகள் வந்து தங்கி வாழ்ந்து கொண்டு இருக்கும் திருவாழ் மார்பினை உடையவனும் நீலநிற மணி போன்ற நிறம் கொண்ட திருமேனியையுடையவன். விண்ணுலகில் வாழ்ந்து வருகின்ற தேவர்களுக்கெல்லாம் தலைவனாக அமைந்திருக்கின்றான். அவனே இந்திரனுக்குத் தலைவனாக இருந்து கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் ''திருஎவ்வுளூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கின்றான்.

*இண்டை கொண்டு தொண்டரேத்த எவ்வுள் கிடந்தானை,
வண்டு பாடும் பைம்புறவில் மங்கையர் கோன்கலியன்,
கொண்ட சீரால் தண்டமிழ்செய் மாலையீ ரைந்தும்வல்லார்,
அண்ட மாள்வ தாணையன்றே லாள்வ ரமருலகே. 1067

(காசை தையல் முன் பந்ணைந்த பாலன் சோத்தம் திங்கள் முனிவன் பந்திருக்கும் இண்டை -வில்.)

அடியவர்கள் பூமாலைகளை ஏந்திக் கொண்டு சென்று வணங்குமாறு நிற்கின்ற ஸ்ரீ இராமபிரான் ''திருஎவ்வுளூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருள் கின்றான். இந்த ஸ்ரீ வீரராகவப் பெருமானைக் குறித்து, வண்டுகள் பாடுகின்ற சோலைகள் சூழ்ந்து கொண்டிருக்கின்ற ''திருமங்கை'' என்னும் நகரின் மன்னனாகத் திகழும் ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் குளிர்ந்த அழகிய பைந்தமிழில் செய்த சொல் மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் கற்றறிந்த வல்லமை யுடைய பெருமக்கள் இவ்வுலகத்தினை ஆட்சிபுரிவது' உறுதி. இவ்வுலக அரசாட்சி வேண்டாமென்று கருதி ஏற்றுக் கொள்ளாத அடியவர்கள் விண்ணுலகிலுள்ள திருப்பரமபதத்தினை ஆட்சி புரிவர்.



Koviloor Digital Library

3. விற்பெருவிழவும் திருவல்லிக்கேணி

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*விற்பெரு விழவும் கஞ்சனும் மல்லும்
வேழமும் பாகனும் வீழ,
செற்றவன் றன்னை, புரமெரி செய்த
சிவனுறு துயர்களை தேவை,
பற்றலர் வீயக் கோல்கையில் கொண்டு
பார்த்தன்றன் தேர்முன் நின்றானை,
சிற்றவை பணியால் முடிதுறந் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. 1068

பெரிய வில் விழாவும், கம்சன், சாணூரன், முஷ்டிகன் ஆகிய மல்லர்களும், குவலயாபீடம் என்னும் யானையும், அந்த யானையின் பாகனும் அழிந்துபடும்படி. செய்த எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரானாகிய திருமால் திரிபுரம் எரித்த சிவபெருமானுக் குண்டான துயர்களைப் போக்கியருள்பவன். பற்று அற்றவர்களாகத் திகழும் பகைவர்கள் அழியுமாறு ''சாட்டை'' என்னும் கோலைக் கையிலே பிடித்துக் கொண்டு அருச்சுனன் தேர்முன்னே நின்று அவனுக்காகத் தேரோட்டியாய் நின்று தேரைச் செலுத்திய எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான், முன்பு ''இராம'' அவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் தன்னை வளர்த்தெடுத்த தாயாகிய சிற்றன்னை கைகேயியின் கட்டளையின்படி அரசாளும் முடியினைத் துறந்த ஸ்ரீ இராமபிரானைத் ''திருவல்லிக்கேணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் நிலையை அடியேன் கண்டேனே!

*வேதத்தை வேதத் தின்சுவைப் பயனை
விழுமிய முனிவர்கள் விழுங்கும்,
கோதிலின் கனியை நந்தனார் களிற்றைக்
குவலயத் தோர்தொழு தேத்தும்,
ஆதியை யமுதை யென்னை யாளுடை
அப்பனை ஒப்பவ ரில்லா
மாதர்கள் வாழும், மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. 1069

Koviloor Digital Library

வேதத்தின் வடிவமாகவும், அவ்வேதத்தின் மூலம் பெறக்கூடிய இனிய சுவைப் பயனையும் உடையவனாக இருந்து கொண்டிருக்கும் எம்பெருமான் சனகர் முதலிய மேன்மையான முனிவர்கள் அனுபவிக்கத்தக்க குறைபாடுகள் ஏதும் இல்லாத நன்கு பழுத்த இனிய பழத்தின் சுவைபோலப் பயன்களைத் தருகின்ற ஸ்ரீகண்ணபிரானை, நந்தகோபரின் திருமகனும் ஆகிய ஒப்பற்ற ஆண் யானைக்குச் சமமான அக்கண்ணபிரானை இப்புவியிலுள்ளோர் அனைவரும் தொழுது வணங்கும் ஆதிமூர்த்தியாகிய எம்பெருமானை, அடியேனை ஆட்கொண்டருளும் என் அப்பனை, அமுதம் போன்று இனியவைகளை அளிக்கக்கூடிய எம் பெருமானை ஒப்புமை அற்ற பெண்கள் நிறைந்து வாழும் மயிலாப்பூருக் கடுத்ததாகத் திகழும் மாடமாளிகைகள் நிறைந் திருக்கின்ற ''திருவல்லிக்கேணி'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் படியாக அடியேன் கண்டேனே!

வஞ்சனை செய்யத் தாயுரு வாகி
வந்தபே யலறிமண் சேர,
நஞ்சமர் முலையூ டுயிர்செக வுண்ட
நாதனைத் தானவர் கூற்றை,
விஞ்சையர் வானவர் சாரணர் சித்தர்
வியந்துதுதி செய்யப்பெண் ணுருவாய்,
அஞ்சுவை யமுத மன்றளித் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. 1070

வஞ்சக எண்ணத்துடன் ''ஸ்ரீ கண்ணபிரான்'' என்னும் இளம் பிள்ளையைக் கொல்லும் நோக்கத்துடன் ''தாய்'' என்ற உயர்ந்ததோர் வடிவு கொண்டு வந்த ''பூதனை'' என்னும் பேய் அலறிக் கதறி பூமியில் விழும்படியாக நம் ஸ்ரீகண்ணபிரான் அப்பூதனையின் நஞ்சு நிறைந்திருக்கின்ற பருத்த முலையினைச் சுவைத்து, அதன்மூலம் அவளுயிர் போகுமாறு உண்ட தலைவனை, அசுரர்களுக்கெல்லாம் இயமனாய் இருப்பவனைப் பெண்ணுருவாகி நின்று வித்தியாதரர், சாரணர், தேவர், சித்தர் ஆகிய அனைவரும் போற்றித் துதி செய்யத் தேவர்களுக்கெல்லாம் இன்னமுதை அளித்து அருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைத் ''திருவல்லிக்கேணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஓர் ஒப்பற்ற நிலையை அடியேன் கண்டேனே!

Koviloor Digital Library

இந்திர னுக்கென் றாயர்க ளெடுத்த
எழில்விழ வில்பழ நடைசெய்,
மந்திர விதியில் பூசனை பெறாது
மழைபொழிந் திடத்தளர்ந்து, ஆயர்
எந்தமோ டினவா நிரைதள ராமல்
எம்பெரு மானரு ளென்ன,
அந்தமில் வரையால் மழைதடுத் தானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. 1071

இந்திரனுக்காக இடையர்கள் அனைவரும் ஒருங்கு கூடி நடத்தியதோர் அழகிய வேள்வி நடத்தும் விழாவின்போது, தொன்றுதொட்டுச் செய்து வரும் மந்திர முறைமைப்படி நடைபெறும் வழிபாட்டினைப் பெற்றுக் கொள்ள இயலாத நிலையில், கோபம் கொண்டு அதன் பயனாகப் பெருமழையைப் பெய்வித்ததனால் உண்டாகும் குறைகளைப் போக்கும் பொருட்டு ஆயர்கள் எல்லோரும் ஒருங்கு கூடி, ''எம்பெருமானே! எங்களுடைய பசுக்கூட்டங்களைப் பாதுகாக்க வேண்டும்'' என்று மனம் மிக வருந்தி வேண்டினர். அவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொண்ட ஸ்ரீகண்ணபிரான் அளவற்ற பெரிய மலை எனப்படும் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து, அப்பெருமழையினின்றும் பசுக்கூட்டங்களைக் காத்தருளினான். இவ்வாறு பேரருள் புரிந்த ஸ்ரீ கண்ணபிரான் ''திருவல்லிக்கேணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஒப்பற்ற நிலையை அடியேன் கண்டேனே!

இன்துணைப் பதுமத் தலர்மகள் தனக்கும்
இன்பன்நற் புவிதனக் கிறைவன்,
தன்துணை யாயர் பாவைநப் பின்னை
தனக்கிறை மற்றையோர்க் கெல்லாம்
வன்துணை, பஞ்ச பாண்டவர்க் காகி
வாயுரை தூதுசென் றியங்கும்
என்துணை, எந்தை தந்தைதம் மானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. 1072

மலர்ந்த தாமரை மலரில் தோன்றிய இனிய நல்ல துணையாகத் திகழும் திருமகளுக்குத் திருமால் நல்ல நாயகனாவான். பொறுமை மிக்க பூமாதேவிக்கும் நாயகன் அவனே. ஆயர்குலத்துத் தோன்றிய

Koviloor Digital Library

நப்பின்னைப் பிராட்டியாருக்கும் பெருந்துணையாக நிற்கும் நாயகன் அவனே. இம்மூவரைத் தவிர மற்றையவர்களுக்குப் போற்றி வணங்கக்கூடிய இறைவனாவான். அவனே அனைவர்க்கும் வலிய துணைவனாவான். பஞ்சபாண்டவர்களுக்காக அனைத்து வகை உறவினர்களாகி நின்று, அப்பாண்டவர்களின் வேண்டு கோளுக்கிணங்கத் துரியோதனனிடம் சென்று தூது உரைத்தான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் என் தந்தை, என் பாட்டனார் என்று முன்னோர்கள் முதற்கொண்டு என் குலத் திலுள்ளார் அனைவருக்கும் குலதெய்வமாகத் திகழ்கிறான். இந்நிலை நின்ற எம்பெருமான் ''திருவல்லிக்கேணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நிலையை அடியேன் கண்டேனே!

அந்தகன் சிறுவ னரசர்த மரசற்
கிளையவ னணியிழை யைச்சென்று,
'எந்தமக் குரிமை செய்'எனத் தரியாது
'எம்பெரு மானருள்!' என்ன,
சந்தமல்[1] குழலாள் அலக்கண்நூற் றுவர்தம்
பெண்டிரு மெய்திநூ லிழப்ப,
இந்திரன் சிறுவன் தேர்முன்நின் றானைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. 1073

குருடனாகத் திகழ்ந்த திருதராட்டிரனின் மகனாகிய சிறுவன் அரசர்களுக்கெல்லாம் அரசனாக விளங்கும் துரியோதனனுக்கு இளையவனாகத் தோன்றிய துச்சாதனன் அணிகலன்கள் பலவும் அணிந்து கொண்டு இருக்கும் திரௌபதையினிடம் சென்று, ''நீ எங்களுக்கு அடிமையாக இருக்க வேண்டும்'' என்று கூறியதைக் கேட்டுப் பொறுத்துக் கொள்ள இயலாத அந்தத் திரௌபதை ஸ்ரீகண்ணபிரானைத் தம் மனதில் எண்ணித் துதித்து அவனருளை வேண்டினாள். அவனருளின்படி அத்திரௌபதை அடைந்த மனவருத்தத்தைப் போக்கும்படியாகத் துரியோதனன் முதல் அவன் தம்பியர்கள் நூறுபேரின் மனைவியர்கள் அடைந்துள்ள மங்கல நூல் இழக்குமாறு ஸ்ரீகண்ணபிரான் அர்ச்சுனனின் (இந்திரனின் மகன்) தேர்முன்னே நின்று பாரதப் போரை நடத்திப் பாண்டவர்களையும், திரௌபதையையும் காப்பாற்றினான். இப்படிப்பட்ட கருணை மிகக் கொண்டு ஆபத்துக் காலத்தில் உதவுபவனாகத் திகழும்

Koviloor Digital Library

ஸ்ரீகண்ணபிரான் ''திருவல்லிக்கேணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இனிய நிலையை அடியேன் கண்டேனே!

*பரதனும் தம்பி சத்துருக் கனனும்
 இலக்கும னோடுமை திலியும்
இரவுநன் பகலும் துதிசெய்ய நின்ற
 இராவணாந் தகனையெம் மானை,
குரவமே கமழும் குளிர்பொழி லூடு
 குயிலொடு மயில்கள்நின் றால,
இரவியின் கதிர்கள் நுழைதல்செய் தறியாத்
 திருவல்லிக் கேணிக்கண் டேனே. 1074

1. 'சந்தமர்குழலாள்' என்பதும் பாடம்.

பரதனும், அவன் தம்பி சத்துருக்கனனும், இலக்குவனும், சீதாப்பிராட்டி ஆகிய அனைவரும் இரவும் பகலும் துதிக்கும்படி எழுந்தருளிய, இராவணனை அழித்த ஸ்ரீ இராமபிரானை, குரவமலர்களின் மணம் வீசக்கூடிய, குயில்களுடன் மயில்களும் சேர்த்து இசையுடன் கூடிய நடனமும் மேற்கொள்கின்ற, சூரியனின் ஒளிக் கிரணங்கள் ஒருகாலும் உள்ளே நுழைந்து அறியாத ''திருவல்லிக்கேணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந் தருளியிருக்கும் இவ்வினிய நிலையை அடியேன் கண்டேனே!

*பள்ளியி லோதி வந்ததன் சிறுவன்
 வாயிலோ ராயிர நாமம்,
ஒள்ளிய வாகிப் போதவாங் கதனுக்
 கொன்றுமோர் பொறுப்பில னாகி,
பிள்ளையைச் சீறி வெகுண்டுதூண் புடைப்பப்
 பிறையெயிற் றனல்விழிப் பேழ்வாய்,
தெள்ளிய சிங்க மாகிய தேவைத்
 திருவல்லிக் கேணிக்கண் டேனே. 1075

பள்ளிக்குச்சென்று ஆசிரியரிடம் பாடம் படித்து வந்த தன் மகன் சிறுவன் 'பிரகலாதன்' தன் வாயினால் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் ஆயிரம் திருநாமங்களையும் கூறுவதைக் கேட்ட அவன் தந்தை இரணியன் அவற்றைப் பொறுத்துக் கொள்ள

Koviloor Digital Library

இயலாதவனாகித் தன் மகனாகிய பிரகலாதன் மீது மிகுந்த கோபத்துடன் சீறிப் பாய்ந்து அங்கிருந்த தூணை ஓங்கி அதட்டித் தட்டி, ''இந்தத் தூணில் நீ கூறும் அரி இருக்கிறானா? என்று வினவ, அவனோ இங்கும் உளன்; எங்கும் உளன் என்று நவின்ற அதே நேரத்தில் அத்தூணினின்றும் பிறைச்சந்திரனைப் போன்ற பற்களுடனும், நெருப்புப் பொறி சிந்தும் கண்களுடனும் பெரிய வாயுடனும் ''நரசிம்மமூர்த்தி''யாகத் தோன்றினான், இப்படிப் பட்ட தெளிந்த அழகிய சிங்கப் பெருமானைத் ''திருவல்லிக் கேணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இனிய நிலையை அடியேன் கண்டேனே!

*மீனவர் பொய்கை நாண்மலர் கொய்வான்
வேட்கையி னோடுசென் றிழிந்த,
கானமர் வேழம் கையெடுத் தலறக்
கராவதன் காலினைக் கதுவ,
ஆனையின் துயரம் தீரப்புள் ளூர்ந்து
சென்றுநின் றாழிதொட் டானை,
தேனமர் சோலை மாடமா மயிலைத்
திருவல்லிக் கேணிக்கண் டேனே. 1076

மீன்கள் நிறைந்துள்ள குளத்தில் அப்போது மலர்ந்த மலர்களைப் பறிக்கும் பொருட்டுப் பேராவலுடன் காட்டில் வாழ்ந்து வருகின்ற யானையானது சென்றபோது அக்குளத்தில் உள்ள முதலை அதன் காலைக் கவ்வியது. உடனே அந்த யானை தன் இரு கைகளையும் தூக்கியபடி, பிளிறிக் கொண்டு, ''ஆதிமூலமே! அபயம்'' என்று கூறி எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைச் சரணடைந்தது. சரணடைந்த அப்பொழுதே ஸ்ரீமந்நாராயணன் பெரிய திருவடியின்மீது ஏறி வந்து, தன் சக்கராயுதத்தை அம் முதலையின்மீது விடுத்து, அதனை அழித்து அந்த யானைக்கு உண்டான துன்பத்தைப் போக்கியருளினான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தேன் நிறைந்திருக்கின்ற சோலைகளும், மாடமாளிகைகள் நிறைந்திருக்கின்ற மயிலாப் பூருக்கருகிலுள்ள ''திருவல்லிக்கேணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் இனிய நிலையை அடியேன் கண்டேனே!

Koviloor Digital Library

*மன்னுதண் பொழிலும் வாவியும் மதிளும்
மாடமா ளிகையும்மண் டபமும்,
தென்னன்தொண் டையர்கோன் செய்தநன் மயிலைத்
திருவல்லிக் கேணிநின் றானை,
கன்னிநன் மாட மங்கையர் தலைவன்
காமரு சீர்க்கலி கன்றி,
சொன்னசொன் மாலை பத்துடன் வல்லார்
சுகமினி தாள்வர்வா னுலகே. 1077

(வில் வேத வஞ்சனை இந்திரன் இன்துணை அந்தகன் பரதன் பள்ளி மீனமர் மன்னு-அன்றாயர்.)

நிலைபெற்ற குளிர்ந்த சோலைகளும் திருக்குளங்களும், மதிள்களும், மாடமாளிகைகள் பலவும், மண்டபங்களும், தென்னாட்டவனான தொண்டைமான் என்னும் அரசன் அமைத்தளித்த ''மயிலாப்பூர்'' என்னும் திருத்தலத்திற்கு அடுத்ததாக அமைந்திருக்கின்ற ''திருவல்லிக்கேணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் இவ்வினிய நிலையைப் பற்றித் திருமங்கை நகருக்கு மன்னரான 'கலியன்' என்னும திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்துள்ள சொல் மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் கற்க வல்லவர்கள் ''திருப்பரமபதம்'' சென்று அவ்விண்ணுலகை இனிதே ஆளப் பெறுவர்.

4. அன்றாயர்
திருநீர் மலை

அறுசீர் ஆசிரிய விருத்தம்

அன்றாயர்கு லக்கொடி யோடணிமா
மலர்மங்கையொ டன்பள வி,அவுணர்க்
கென்றானு மிரக்கமி லாதவனுக்
குறையுமிட மாவது, இரும்பொழில்சூழ்
நன்றாயபு னல்நறை யூர்திருவா
லிகுடந்தை தடந்திகழ் கோவல்நகர்,
நின்றானிருந் தான்கிடந் தான்நடந்தாற்
கிடம்மாமலை யாவது நீர்மலையே. 1078

Koviloor Digital Library

ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் ஆயர்குலத்துதித்த கொடி போன்ற நப்பின்னைப் பிராட்டி யாருடனும், தாமரைச் செல்வியாகிய உருக்மணிப் பிராட்டி யுடனும் அன்புடன் கூடியிருந்து அளவலாவி இருப்பவன். ஆயினும் அசுரர்களிடத்தே என்றும் இரக்கம் காட்டாதவன் இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் சோலைகள் சூழ்ந்த நல்ல நீர்வளம்மிக்க ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் 'நின்ற' திருக்கோலத்திலும், ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் 'இருந்த' திருக்கோலத்திலும், ''திருக்குடந்தை'' என்னும் திருத்தலத்தில் 'கிடந்த' திருக்கோலத்திலும் ''திருக்கோவலூர்'' என்னும் திருத் தலத்தில் ''நடந்த'' திருக்கோலத்திலும் எழுந்தருளியிருக்கின்றான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் ''திருநீர்மலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு என்றும் நிலைத்திருக்குமாறு எழுந்தருளி இருக்கின்றார்.

காண்டாவன மென்பதோர் காடமார்க்
　　கரையனது கண்டவன் நிற்க,முனே
மூண்டாரழ லுண்ணமு னிந்ததுவும்
　　அதுவன்றியும் முன்னுல கம்பொறைதீர்த்
தாண்டான்,அவு ணனவன் மார்வகலம்
　　உகிரால்வகி ராகமு னிந்து,அரியாய்
நீண்டான்குற ளாகிநி மிர்ந்தவனுக்
　　கிடம்மாமலை யாவது நீர்மலையே. 1079

ஸ்ரீகண்ணபிரான் தேவேந்திரனுடைய 'காண்டவ வனம்' என்னும் காட்டினை அத்தேவேந்திரனே காணுமாறு தீப்பற்றி எரியச் செய்து அழித்தான். பாரதப் போரை முன்னின்று நடத்தியதன்மூலம் பூமி பாரத்தைப் போக்கியருளினான். ''நரசிம்மர்'' அவதாரம் மேற்கொண்டு அசுரர் தலைவனாகிய இரணியனின் அகன்ற மார்பினைத் தன் கூரிய நகங்களினால் பிளந்து அவன் உயிரைப் போக்கினான். 'வாமனன்' என்னும் அவதாரம் மேற்கொண்டு குறுகிய வடிவில் மகாபலிச் சக்கரவர்த்தியிடம் சென்று மூன்றடி மண்ணை இரந்து, பின்பு ''திரிவிக்ரமனாக'' அவதாரம் பூண்டு உயர்ந்து, நிமிர்ந்து, ஓங்கி உலகளந்த உத்தமன். இத்தன்மையனான எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணன் நிலைபெற்று நிற்குமிடம் ''திருநீர் மலை'' என்னும் திருத்தலமாகும்.

Koviloor Digital Library

அலமன்னு மடல்சுரி சங்கமெடுத்[1]
தடலாழியி னாலணி யாருருவின்,
புலமன்னு வடம்புனை கொங்கையினாள்
பொறைதீரமு னாளடு வாளமரில்,
பலமன்னர் படச்சுட ராழியினைப்
பகலோன்மறை யப்பணி கொண்டு,அணிசேர்
நிலமன்னனு மாயுல காண்டவனுக்
கிடம்மாமலை யாவது நீர்மலையே. 1080

தன் அழகிய திருமேனியில் திருவாழி, திருச்சங்கு, கலப்பை ஆகிய போர்ப்படைகளைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற ஸ்ரீகண்ணபிரான் பாரதப்போரினை முன்னின்று நடத்தியதன்மூலம் மன்னர்கள் பலரையும் மடியச் செய்தான். அதனால் திருவாபரணம் நிறைய அணிந்து கொண்டிருக்கும் பருத்த முலைகளைப் பெற்ற பூமிப்பிராட்டியின் பாரத்தைப் போக்கி அருளினான். ஒளிமிக்க தன் சக்கரத்தினைக் கொண்டு சூரியன் மறையுமாறு செய்தான். அரசனாகி, ஆட்சிபுரிந்த ஸ்ரீகண்ணபிரான் உலகைப் பாதுகாத்துத் தங்கியுள்ள திருத்தலம் உயர்ந்தோங்கியுள்ள பெரிய மலையாகிய ''திருநீர்மலை'' என்னும் திருத்தலமாகும்.

தாங்காததோ ராளரி யாயவுணன்-
றனைவீட முனிந்தவ னாலமரும்,
பூங்கோதையர் பொங்கெரி மூழ்கவிளைத்
ததுவன்றியும் வென்றிகொள் வாளமரில்,
பாங்காக முன்ஐவரொ டன்பளவிப்
பதிற்றைந்திரட் டிப்படை வேந்தர்பட,
நீங்காச்செரு வில்நிறை காத்தவனுக்
கிடம்மாமலை யாவது நீர்மலையே. 1081

பகைவர்களால் தாங்கிக் கொள்ள முடியாதவாறு, நரசிம்ம அவதாரம் மேற்கொண்டு சீறிஎழுந்து, இரணியனைக் கொன்று, அவ்வசுரனின் மனைவியர், பொங்கி எழும் பெருநெருப்பில் வீழ்ந்து அழியும்படிச் செய்தான். பாண்டவர்கள் ஐவருடனும் அன்பு கொண்டு அளவளாவியிருந்து அதன் காரணமாகப் பாரதப் போர் நடைபெற்றபோது துரியோதனாதியர்கள் நூறுபேரும் அழியும் படிச் செய்ததனால் திரௌபதியின் பெண்மைத் தன்மைக்குக் குறைவு உண்டாகாதபடி பாதுகாத்தருளினான். இத்தன்மையனான ஸ்ரீ

Koviloor Digital Library

கண்ணபிரான் ''திருநீர்மலை'' என்னும் பெரிய மலையினை உடைய திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கின்றான்.

மாலுங்கட லாரம லைக்குவடிட்
டணைகட்டி வரம்புரு வ,மதிசேர்
கோலமதி ளாயவி லங்கைகெடப்
படைதொட்டொரு காலம ரிலதிர,
காலமிது வென்றயன் வாளியினால்
கதிர்நீண்முடி பத்து மறுத்தமரும்,
நீலமுகில் வண்ணனெ மக்கிறைவற்
கிடம்மாமலை யாவது நீர்மலையே. 1082

ஸ்ரீஇராமபிரான் அலைகள் நிறைந்து ஒலிக்கும் கடலின்மீது மலைச்சிகரங்களைக் கடலின் கரைதட்டும்படி போடச்செய்து சேது அணைகட்டி முடித்தார். சந்திரனைத் தொடுமளவுக்கு உயர்ந் தோங்கிய மதில்கள் சூழ்ந்த இலங்கை மாநகரத்தினைப் பற்பல ஆயுதங்களால் போரிட்டு அழித்தார். பல்வகை வரங்களைப் பெற்றுள்ள ''இராவணனை அழிக்கும் காலம் இதுவே'' என்று முடிவு செய்து, அதன்படி ஸ்ரீ இராமபிரான் ''பிரம்மாஸ்திரம்'' என்னும் பலம் வாய்ந்த அஸ்திரத்தை இராவணன்மீது ஏவி அவனுடைய பத்துத் தலைகளும் கீழே விழுமாறு அறுத்தான். நிலமேக வண்ணப் பெருமான் 'பெரிய மாமலை' எனப்படும் ''திருநீர்மலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு என்றும் நிலைத்திருக்குமாறு எழுந்தருளி இருக்கின்றார்.

பாராருல கும்பனி மால்வரையும்
கடலும்சுட ருமிவை யுண்டும்,'எனக்
காராதெ'ன நின்றவ னெம்பெருமான்
அலைநீருல குக்கர சாகிய,அப்-
பேரானைமு னிந்தமு னிக்கரையன்
பிறரில்லை நுனக்கெனு மெல்லையினான்,
நீரார்பே ரான்நெடு மாலவனுக்
கிடம்மாமலை யாவது நீர்மலையே. 1083

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் உலகப் பிரளய காலத்தில் மண்நிறைந்த இந்தப் பூமியும், பனிநிறைந்த மலைகளும், கடல் களும் சந்திர சூரியர் ஆகிய அனைத்தையும் உண்டு இவ்வுலகைக்

Koviloor Digital Library

காப்பாற்றினான். அலைகள் மிக்க கடல்கள் சூழ்ந்த இந்த உலகுக்கு அரசர்களே இல்லையெனும்படியாக உலகிலுள்ள அரசர்கள்மீதும் பெருஞ்சினம் கொண்டு சாடிய பரசுராமரும், ஸ்ரீஇராமபிரானிடத்து வந்து, அடக்கமாக இருந்து கொண்டு, ''உனக்கும் அப்பாற்பட்ட பெரியவர் எவர் ஒருவரும் கிடையாது. ஆகையால் நீயே எல்லை யில்லாதவன்'' என்று கூறியுள்ளார். இன்ன தன்மையனான எம்பெருமான் அன்புடன் கூடிய பரிமாறும் எளிமைக்குணம் கொண்ட ''நீர்வண்ணப் பெருமான்'' என்னும் நெடிய திருமால் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் என்பது பெரிய மலையாகத் திகழும் ''திருநீர்மலை'' என்னும் திருத்தலமே யாகும்.

புகராருரு வாகிமு னிந்தவனைப்
புகழ்வீட முனிந்துயி ருண்டு,அசுரன்
நகராயின பாழ்பட நாமமெறிந்-
ததுவன்றியும் வென்றிகொள் வாளவுணன்,
பகராதவ னாயிர நாமமடிப்
பணியாதவ னைப்பணி யாலமரில்,
நிகராயவன் நெஞ்சிடந் தானவனுக்
கிடம்மாமலை யாவது நீர்மலையே. 1084

ஒளிமிக்க வடிவுடன் கூடிய இரணியாக்கதன் என்னும் அசுரனை எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் மிகவும் சினந்து கொண்டு அவன் புகழ்கெட்டழியுமாறு அவன் உயிரை முடித்துக் கொண்டான். அவ்வசுரனின் நாடு நகரங்கள் முதலிய யாவும் பாழ்படச் செய்தான். வாளாயுதமே தன் வெற்றிக்கு அடிப்படை என்று கருதிக் கொண்டு எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் ஆயிரம் திருநாமங்களில் ஒன்றினையும் உச்சரித்துக் கூறிப் போற்றித் துதிக்காமலும், அவனுடைய திருவடிகளைப் பற்றியவாறு வணங்காமலும் ஆணவ நிலையில் இருந்த இரணியனை அவன் மகன் பிரகலாதனின் வேண்டுகோளை ஏற்று, மிகுந்த சினம் கொண்டு எதிர்த்துப் போரிட்டு அவன் நெஞ்சைப் பிளந்தான். இன்ன தன்மையனான எம்பெருமான் ஸ்ரீநரசிம்ம மூர்த்தியானவர் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருத்தலம் என்பது ''திருநீர்மலை'' என்னும் பெரிய மலையாகும்.

Koviloor Digital Library

பிச்சச்சிறு பீலிபி டித்துலகில்
பிணந்தின்மட வாரவர் போல்,அங்ஙனே
அச்சமிலர் நாணில ராதன்மையால்
அவர்செய்கை வெறுத்தணி மாமலர்தூய்,
'நச்சிநம னாரடை யாமைநமக்
கருள்செய்'என வுள்குழைந் தார்வமொடு,
நிச்சம்நினை வார்க்கருள் செய்யுமவற்
கிடம்மாமலை யாவது நீர்மலையே. 1085

சின்னஞ்சிறு மயில் இறகினைக் கையில் பிடித்துக் கொண்டுள்ள நிலையில், பிணங்களைத் தின்னும் பேய்ப் பெண்களைப் போல, அச்சம், நாணம், பயம் என்ற எதுவும் சிறிதுமில்லாமல் ஆடைஇன்றித் திரிகின்ற இழிநிலையையுடைய சமணர்களின் செயல்களை வெறுத்து ஒதுக்கிவிட்டுச் சிறந்த மலர்களைத் தூவி, ''இயமன் எம்மிடத்து வாராது அருள்புரிக!'' என்று உள்ளத்தளவில் ஆர்வம் மிக்கவராகித் தினமும் அவனை வழிபடுங்கள். இப்படி எம்பெருமான் ஸ்ரீமந்நாரயணனை எண்ணி எண்ணி வழிபடுகின்றவர்களுக்கு அருள்புரிந்து கொண்டிருக்கின்றான். அத்தகைய எம்பெருமானின் திருத்தலம் திருநீர்மலையாகும்.

பேசுமள வன்றிது வம்மின்நமர்!
பிறர்கேட்பதன் முன்பணி வார்வினைகள்,
நாசமது செய்திடும் ஆதன்மையால்
அதுவேநம துய்விடம் நாண்மலர்மேல்,[1]
வாசமணி வண்டறை பைம்புறவில்
மனமைந்தொடு நைந்துழல் வார்,மதியில்
நீசரவர் சென்றடை யாதவனுக்
கிடம்மாமலை யாவது நீர்மலையே. 1086

நம்மவர்களே! எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பற்றிச் சொற்களால் எடுத்துக் கூற இயலாதவர். கடவுள் நம்பிக்கையில்லாதவர்கள் வந்து இவரைப் பற்றிக் கேட்டறிவதற்கு முன்னாலேயே வந்து கேட்டறிந்து கொள்ளுங்கள். அவனை வந்து வணங்கினால் நம் தீவினைகள் நீங்கிவிடும். அவனே நம்மை வாழ வைப்பவன். ஆகவே, நாம் பிழைப்பதற்குரிய இடம் அவன் திருவடிகளை வந்து வணங்குவதேயாகும். நெஞ்சமானது, ஒலி, ஊறு, வடிவம், சுவை, நாற்றம் என்னும் இவைகளில் உழன்று

Koviloor Digital Library

உழன்று அதனால் அறிவை இழந்தவர்களுக்கு அவன் கிடைப்பதற்கு அரியன் ஆவான். இன்ன தன்மையனான எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்குமிடமாவது, மணம்மிக்க மலர்களை நுகர்ந்து தேனையுண்ணும் வண்டுகள் ரீங்காரம் பண்ணுகின்ற ''திருநீர்மலை'' என்னும் பெரிய திருமலையாகும்.

*நெடுமாலவன் மேவிய நீர்மலைமேல்
நிலவும்புகழ் மங்கையர் கோன்,அமரில்
கடமாகளி யானைவல் லான்கலியன்
ஒலிசெய்தமிழ் மாலைவல் லார்க்கு,உடனே
விடுமால்வினை வேண்டிடில் மேலுலகும்
எளிதாயிடு மன்றியி லங்கொலிசேர்,
கொடுமாகடல் வையக மாண்டுமதிக்
குடைமன்னவ ராயடி கூடுவரே. 1087

(அன்று காண்டா அலம் தாங்காத மால் பார் புகர் பிச்சம் பேசு நெடுமால்-பாராயது.)

'நெடியமால்' என்னும் திருமால் என்றும் நிலைத்த புகழுடன் திகழ்ந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருநீர்மலைத் திருமாலைப் பற்றித் 'திருமங்கை' என்னும் நகருக்கு மன்னன், 'கலியன்' என்னும் திருமங்கை ஆழ்வார் இத்தமிழ்ப் பாசுரங்களை அருளிச் செய்தார். போர்க்களத்தில் மதம் கொண்ட யானைகளையும் செலுத்த ஆற்றல்மிக்க நம் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் பயில்பவர்களின் தீவினைகள் அற்றுப் போகும். அவ்வெம்பெருமானிடம் வேண்டிக் கொண்டால் திருப் பரமபதம் எளிதில் கிட்டும். மேலும் கடல்களால் சூழ்ந்திருக்கின்ற இவ்வுலகில் மன்னர்களாய் இருந்து அரசாளப் பெற்றுப் பின்னர் இவ்வெம்பெருமானின் திருவடி அடைவர்.

5. பாராயது

திருக்கடல் மல்லை

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*பாராய துண்டுமிழ்ந்த பவளத்தூணைப்
படுகடலி லமுதத்தைப் பரிவாய்கீண்ட
சீரானை, எம்மானைத் தொண்டர்தங்கள்
சிந்தையுள்ளே முளைத்தெழுந்த தீங்கரும்பினை,

Koviloor Digital Library

போரானைக் கொம்பொசித்த போரேற்றினைப்
புணர்மருத மிறநடந்த பொற்குன்றினை,
காரானை யிடர்கடிந்த கற்பகத்தைக்
கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே. 1088

1. 'நாண்மலர்தூய்' என்பதும் பாடம்.

உலகப் பிரளய காலத்தில் இப்பூமியை உண்டு தன் வயிற்றில் அடக்கி வைத்திருந்து, காத்து, பின்பு வெளிப்படுத்திய எம் பெருமான் திருமால் பவளத்தூண் போன்று பற்றிக் கொள்வதற்கு இனியவனாகவும், எளியனாகவும் உள்ளவன். திருப்பாற்கடலில் பெற்ற தேவாமிர்தத்தைப் போன்றவன். தன்னைக் கொல்வதற்காக வந்த குதிரை வடிவில் வந்த 'கேசி' என்னும் அசுரனின் வாயைக் கிழித்த நம் தலைவன் ஸ்ரீகண்ணபிரான் அடியவர்கள் உள்ளத்தின் உள்ளே தோன்றி வளர்ந்து எழுந்தருளிய எம்பெருமான் இனிய கரும்பு ஆவான். ''குவலயாபீடம்'' என்னும் மதயானையின் கொம்பை ஒடித்த போர்க்களத்துச் சிங்கமாவான். மருதமரங்கள் முறிந்து விழுமாறு அம்மரங்களினிடையே நடந்து சென்ற ஸ்ரீகண்ண பிரான் பொன்மலையை ஒத்தவன். ஓர் யானைக்கு நீரில் முதலை யினாலுண்டான ஓர் பெருந்துன்பத்தினைப் போக்கியருளிய எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அடியேன் ''திருக்கடல்மல்லை'' என்னும் தலசயனத் திருத்தலத்தில் திருக்கண் வளர்ந்திருப்பதைக் கண்டேன்.

*பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப்
பொய்ந்நூலை மெய்ந்நூலென் றென்றுமோதி
மாண்டு,அவத்தம் போகாதே வம்மினெந்தை
என்னவணங்கப் படுவானை, கணங்களேத்தும்
நீண்டவத்தக் கருமுகிலை[1] எம்மான்றன்னை
நின்றவூர் நிலத்திலத்தைத் தொத்தார்சோலை,
காண்டவத்தைக் கனலெரிவாய்ப் பெய்வித்தானைக்
கண்டதுநான் கடல்மல்லைத் தலசயனத்தே. 1089

வீணான செயல்களில் ஈடுபட்டுப் பிறரிடத்தே அடிமை வாழ்வு வாழ்ந்து கொண்டு உண்மைக்கு மாறான பிற சமய நூல்களை உண்மையான நூல்கள் என்று கருதி என்றென்றும் கற்று, வீணே அழிந்து போகாமல் இங்கே வாருங்கள். வந்து உய்வு பெறுங்கள். எனக்குத் தந்தையாகவும், எம்மைப் போல்பவர் வந்து வணங்கும்

Koviloor Digital Library

படி எளிமையானவனை, அறிவுடைய பெருமக்கள் துதித்து வணங்குகின்ற மேகவண்ணப் பெருமானை எங்கட்குத் தலைவனாகத் திகழ்பவனைப் பூஞ்சோலைகள் நிறைந்திருக்கின்ற காண்டவவனத்தைத் தீயிலிட்டு அழித்த எம்பெருமானை 'திருநின்றவூர்' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீபக்தவத்சலப் பெருமானை அடியேன் ''திருக்கடல்மல்லை'' என்னும் தலசயனத் திருத்தலத்தில் திருக்கண் வளர்ந்து அருள்கின்ற தலசயனப் பெருமானைக் கண்டேன்.

உடம்புருவில் மூன்றொன்றாய் மூர்த்திவேறாய்
உலகுய்ய நின்றானை, அன்றுபேய்ச்சி
விடம்பருகு வித்தகனைக் கன்றுமேய்த்து
விளையாட வல்லானை வரைமீகானில்,
தடம்பருகு கருமுகிலைத் தஞ்சைக்கோயில்
தவநெறிக்கோர் பெருநெறியை வையங்காக்கும்,
கடும்பரிமேல் கற்கியைநான் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 1090

திருமேனிகளில் மூவராய் நின்று ஒன்றுபட்ட திருமூர்த்தியாகி, இந்த உலகினைப் பாதுகாப்பதில் மகாவிஷ்ணுவாய் வேறுபட்டு நின்று, எம்பெருமான் சிவனுக்கும், பிரம்மனுக்கும் உள்நின்று நியமிக்கிறான். ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டு இருந்த காலத்தில் பூதனை என்னும் பேய்ச்சியின் முலைகளினின்றும் நிறைந்து இருந்தவிடம் கலந்த பாலை உண்டு அவளை அழித்தவனை, பசுக் கன்றுகளை மேய்த்தவாறு திருவிளையாடல்கள் பல புரிந்தவனை, மலையின்மீது உள்ள காடுகளில் அமைந்துள்ள குளங்களில் தானும் நீரைப் பருகுவது போன்று நடித்து, அப்பசுங்கன்றுகளை நீர்பருகச் செய்தவன். இம்மேகவண்ணப் பெருமாள் ''திருத்தஞ்சை மாமணிக் கோயில்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான். அடியார்கள் சென்றடைவதற்காகத் தன்னைத் தானே வழியாகக் கொண்டிருக்கின்றான். இக்கலியுகத்தில் ''கல்கி'' அவதாரம் மேற்கொண்டு குதிரைமேல் எழுந்தருள இருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் சோலைகள் நிறைந்திருக்கின்ற ''திருக்கடல் மல்லை'' என்னும் தலசயனத்திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்திருப்பதை அடியேன் கண்டேன்.

Koviloor Digital Library

பேய்த்தாயை முலையுண்ட பிள்ளைதன்னைப்
பிணைமருப்பில் கருங்களிற்றைப் பிணைமான்நோக்கின்,
ஆய்த்தாயர் தயிர்வெண்ணெ யமர்ந்தகோவை
அந்தணர்தம் அமுதத்தைக் குரவைமுன்னே
கோத்தானை, குடமாடு கூத்தன் றன்னைக்
கோகுலங்கள் தளராமல் குன்றமேந்திக்
காத்தானை, எம்மானைக் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 1091

தாய் வடிவில் வந்த பூதனை என்னும் பேய்ச்சியின் நச்சுக் கலந்த முலைப் பாலை உண்ட ஸ்ரீகண்ணபிரான் என்னும் சிறுபிள்ளை, பிணைந்த கொம்புகளைக் கொண்ட யானையைப் போன்றவன். மான் விழிகளைக் கொண்ட ஆய்ச்சியர்கள் தயாரித்து வைத்துள்ள தயிரையும், வெண்ணெயையும் உண்ட இறைவன் அந்தணர்கட்குத் தேவாமிர்தம் போன்றவன். குரவைக்கூத்து, குடக்கூத்து போன்ற நடனங்களை ஆடியவன். பசுக்களை ஆபத்தினின்றும் காப்பாற்று வதற்காகக் 'கோவர்த்தனம்' என்னும் மலையைக் குடையாகப் பிடித்துப் பாதுகாத்தருளியவன். இன்னதன்மையனான ஸ்ரீகண்ண பிரானைத் ''திருக்கடல்மல்லை'' என்னும் தலசயனத் திருத்தலத்தில் திருக்கண் வளர்ந்தருள் புரிந்து கொண்டிருப்பதை அடியேன் கண்டு கொண்டேன்.

பாய்ந்தானைத் திரிசகடம் பாறிவீழப்
பாலகனா யாலிலையில் பள்ளியின்பம்
ஏய்ந்தானை, இலங்கொளிசேர் மணிக்குன்றன்ன
ஈரிரண்டு மால்வுரைத்தோ ளெம்மான்றன்னை,
தோய்ந்தானை நிலமகள்தோள் தூதிற்சென்றப்
பொய்யறைவாய் புகப்பெய்த மல்லர்மங்கக்
காய்ந்தானை, எம்மானைக் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 1092

1. 'நீண்டவத்தைக் கருமுகிலை' என்பதும் பாடம்.

சக்கர வடிவில் ஸ்ரீகண்ணபிரானைக் கொல்லும் எண்ணத்தில் வந்திருந்த சகடாசுரன் என்னும் அசுரனைச் சின்னாபின்னமாகச் சிதறிப் போகும்படியாகத் தன் திருவடிகளாலே வேகமாக உதைத்து அவனுயிரைப் போக்கியவனும், முன்பு உலகப் பிரளயம் உண்டான காலத்தில் ஆலிலையின்மேல் சிறுபிள்ளையாய்த் திருக்கண்

Koviloor Digital Library

வளர்ந்தருளியவனும், ஒளிமயமான மணி போன்ற குன்றையொத்த உறுதியான நான்கு திருத்தோள்களைக் கொண்டிலங்குகின்ற எம்பெருமானை ஸ்ரீபூமித் தாயாரின் தோள்களை அணைத்துக் கொண்டவன். பாண்டவர்களுக்காகத் தூது சென்றபோது துரியோதனன் அமைத்து இருந்த பொய்யான இருக்கையின் கீழே இருந்த நிலவறையிலிருந்த மல்லர்களை அழித்த ஆற்றல்மிக்கவன் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான். இன்ன தன்மையினனான எம்பெருமானைச் சோலைகள் சூழ்ந்துள்ள ''திருக்கடல்மல்லை'' என்னும் தலசயனம் திருத்தலத் தினுள்ளே திருக்கண் வளர்ந்தருளும் நிலையில் அடியேன் கண்டு கொண்டேன்.

கிடந்தானைத் தடங்கடலுள் பணங்கள்மேவிக்
 கிளர்பொறிய மறிதிரிய வதனின்பின்னே
படர்ந்தானைப், படுமதத்த களிற்றின்கொம்பு
 பறித்தானைப் பாரிடத்தை எயிறுகீற
இடந்தானை, வளைமருப்பி னேனமாகி
 இருநிலனும் பெருவிசும்பு மெய்தாவண்ணம்
கடந்தானை, எம்மானைக் கண்டுகொண்டேன்
 கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 1093

அகன்ற பெரிய திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது பள்ளி கொண்ட எம்பெருமான் திருமால், ஸ்ரீஇராமாவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் மாரீசன் என்னும் அழகுமிக்க பொய்ம்மான் தன் எதிரே உலவிச் செல்ல அதன் பின்னே சென்றான். 'குவலயாபீடம்' என்னும் மதயானையின் கொம்பினை முறித்து அழித்தான். இப்படிப்பட்ட ஸ்ரீ கண்ணபிரான் 'வராக' அவதாரம் மேற்கொண்டு இப்பூமியைத் தன் பற்களினாலே கிழித்து எடுத்தான். இந்த மண்ணுலகும், விண்ணுலகமும் போதாது என்கின்ற அளவினுக்கு மிகவும் உயர்ந்த நிலையில் 'திரிவிக்ரம' அவதாரம் பூண்டு இவ்வுலகினை அளந்தான். இன்னின்ன தன்மைகளைக் கொண்டு எமக்குத் தலைவனாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைத் ''திருக்கடல்மல்லை'' என்னும் திருத்தலசயனத் திருத்தலத்தில் திருக்கண் வளர்ந்து அருள்புரிவதை அடியேன் கண்டு கொண்டேன்.

Koviloor Digital Library

பேணாத வலியரக்கர் மெலியவன்று
பெருவரைத்தோ ளிறநெரித்தன் றவுணர்கோனை,
பூணாகம் பிளவெடுத்த போர்வல்லோனைப்
பொருகடலுள் துயிலமர்ந்த புள்ளூர்தியை,
ஊணாகப் பேய்முலைநஞ் சுண்டான்றன்னை
உள்ளுவா ருள்ளத்தே யுறைகின்றானை,
காணாது திரிதருவேன் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 1094

இராமாவதார காலத்தில் தன்னை இறைவனாகக் கருதிப் போற்றாது நின்ற வலிமைமிக்க அரக்கர்களெல்லோரும் மெலிந்து போகுமாறு அவ்வரக்கர்களுக்கெல்லாம் மன்னனாக இருந்த இலங்கை மாநகர் மன்னன் இராவணனின் உறுதியான தோள்கள் கீழே சாய்ந்து போகுமாறு அழித்தான். அதற்கும் முன்பு பிரகலாதாழ்வான் பக்தியின் காரணமாக ''நரசிம்ம மூர்த்தி''யாக அவதாரம் மேற்கொண்டு ''இரணியன்'' என்னும் அசுரர் தலைவனின் பருத்த அகன்ற மார்பினைப் பிளந்து அவனுயிரைப் போக்கினான். திருப்பாற்கடலுள் திருக்கண் வளர்ந்தருளி ''கருடாழ்வார்''மீது ஏறிவருகின்றான் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பேய் உருவில் வந்த பூதனை என்பவளின் முலையில் தடவியிருந்தவிடத்தினையும் சேர்த்து அம்முலைப்பாலை உண்டு, அதன் மூலம் அவள் உயிரைப் போக்கியவன் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான். இதுவரை நாமறிந்த எம்பெருமானை திருமாலின் திருவிளையாடல்கள் பற்றி உள்ளத்தில் எண்ணிக் கொண்டிருக்கும் உள்ளத்தினில் தங்கியிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைச் சோலைகள் சூழ்ந்துள்ள ''திருக்கடல்மல்லை'' என்னும் ''தலசயனத்திருத்தலத்தில் திருக்கண் வளர்ந்தருளும் நிலையை இன்று வரை காண இயலாது திரிந்து கொண்டிருந்த அடியேன் இன்று கண்டு கொண்டேன்.

பெண்ணாகி யின்னமுதம் வஞ்சித்தானைப்
பிறையெயிற்றன் றடலரியாய்ப் பெருகினானை,
தண்ணார்ந்த வார்புனல்சூழ் மெய்யமென்னும்
தடவரைமேல் கிடந்தானைப் பணங்கள்மேவி,
எண்ணானை யெண்ணிறந்த புகழினானை
இலங்கொளிசே ரரவிந்தம் போன்றுநீண்ட
கண்ணானை, கண்ணாரக் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 1095

Koviloor Digital Library

மோகினி அவதாரம் மேற்கொண்டு தேவாமிர்தத்தை அசுரர்கள் பெற்று உண்ணாதவாறு அவர்களை வஞ்சித்த எம்பெருமான் திருமாலை, இரணியனால் துன்புற்ற பிரகலாதாழ்வானைப் பாதுகாக்கும் பொருட்டுப் பிறைநிலவு போன்ற கூரிய வெண்மை நிறமுடைய பற்களைக் கொண்டு ''நரசிம்மமூர்த்தி''யாகத் திரு அவதாரம் மேற்கொண்டவனை, குளிர்ந்த நீரினால் சூழ்ந்திருக்கின்ற ''திருமெய்யம்'' என்னும் மலையின்மீது ஆதிசேடங்களின் படங்களின் கீழே திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமானை, அனைவராலும் தம் மனத்தினில் எண்ணிக் கொண்டிருப்பவனை, அளவற்ற பெரும்புகழ் கொண்டவனை, ஒளிமிக்க தாமரை மலர் போன்ற நீண்ட திருக்கண்களையுடையவனுமான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைச் சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருக்கடல் மல்லை'' என்னும் தலசயனத் திருத்தலத்தில் திருக்கண் வளர்ந்தருளும் திருக்கோலத்தை அடியேன் கண்டு கொண்டேனே!

தொண்டாயார் தாம்பரவு மடியினானைப்
படிகடந்த தாளாளற் காளாயுய்தல்
விண்டானை, தென்னிலங்கை யரக்கர்வேந்தை
விலங்குண்ண வலங்கைவாய்ச் சரங்களாண்டு,
பண்டாய வேதங்கள் நான்கும்ஐந்து
வேள்விகளும் கேள்வியோ டங்கமாறும்
கண்டானை, தொண்டனேன் கண்டுகொண்டேன்
கடிபொழில்சூழ் கடல்மல்லைத் தலசயனத்தே. 1096

''திருத்தொண்டர்கள்'' என்னும் அடியவர்கள் தினந்தோறும் வழிபடுகின்ற திருவடிகளை உடையவன். இந்தப் பூமியை அளந்த திருவடிகளை உடைய எம்பெருமானுக்கு அடிமை செய்வ தினின்றும் வேறு பட்டவனாகிய, இலங்கை மாநகர்க்கரசனான இராவணனைத் தன் அம்பினால் துளைத்து அவனது உடலை விலங்குகள் தின்னும்படி இரையாக ஆக்கியவன் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் பழைமையான நான்கு வேதங்கள், ஐந்து வேள்விகள், குருவழியாகக் கற்று ணரும் ஆறு அங்கங்கள் ஆகியவற்றை எடுத்துச் சொல்லியருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் ''திருக்கடல்மல்லை'' என்னும் தலசயனத் திருத்தலத்தில் திருக்கண் வளர்ந்தருளும் நிலையில் அடியேன் கண்டு கொண்டேன்.

Koviloor Digital Library

*படநாகத் தணைக்கிடந்தன் றவுணர்கோனைப்
படவெகுண்டு மருதிடைபோய்ப் பழனவேலி,
தடமார்ந்த கடல்மல்லைத் தலசயனத்துத்
தாமரைக்கண் துயிலமர்ந்த தலைவன்தன்னை,
கடமாரும் கருங்களிறு வல்லான்வெல்போர்க்
கலிகன்றி யொலிசெய்த இன்பப்பாடல்,
திடமாக விவையைந்து மைந்தும்வல்லார்
தீவினையை முதலரிய வல்லார்தாமே. 1097

(பார் பூண்டு உடம்பு பேய் பாய் கிடந்தாள் பேணாத பெண் தொண்டு படம்-நண்ணாத.)

படங்கள் கொண்ட திருவனந்தாழ்வான்மீது பள்ளி கொண்டிருக்கின்ற எம்பெருமான் அசுரர்களின் தலைவனாகிய இரணியாசுரனை வதைத்து, அழித்தவன். இரு மருத மரங்களின் இடையே தவழ்ந்து சென்றவன். இன்னின்ன தன்மைகளைக் கொண்டுள்ள ஸ்ரீகண்ணபிரான், செந்தாமரைக் கண்ணன் நீர்வளம் நிறைந்துள்ள ''திருக்கடல்மல்லை'' என்னும் தலசயனத் திருத்தலத்தில் திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றிப் பெரிய கரிய ஆண் யானையைப் போர்க்களத்திலே வெல்ல வல்லவராகிய, 'கலிகன்றி' என்னும் பெயரையுடையவனுமான திருமங்கை நகருக்கு மன்னனாகத் திகழ்ந்த திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலிமிக்க பாசுரங்கள் பத்தினையும் ஓதவல்லவர்கள், தங்கள் பாவங்களை அடியுடன் போக்கவல்லவராவர்.

6. நண்ணாத
திருக்கடல் மல்லை

கொச்சகக் கலிப்பா

*நண்ணாத வாளவுண ரிடைப்புக்கு, வானவரைப்
பெண்ணாகி யமுதூட்டும் பெருமானார், மருவினிய
தண்ணார்ந்த கடல்மல்லைத் தலசயனத் துறைவாரை,
எண்ணாதே யிருப்பாரை யிறைப்பொழுது மெண்ணோமே. 1098

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தன்னை அணுகாதிருக்கின்ற வாளேந்திய அசுரர்களுக்கிடையில், ஒரு பெண்ணாக வந்து, பயன் ஒன்றையே கருதும் விண்ணுலகத் தேவர்கட்கு தேவாமிர்தத்தை

Koviloor Digital Library

ஊட்டியருளினான். இப்படிப்பட்ட எம்பெருமானார் ''திருக்கடல் மல்லை'' என்னும் தலசயனத் திருத்தலத்தில் திருக்கண் வளர்ந்தருள்கின்றார். எம்பெருமான் தரையில் கிடப்பது கண்டு இரக்கம் கொள்ளாமலும், அவனின் நீர்மைத் தன்மையை எண்ணிப் பார்க்காமலும் வாழ்ந்து கொண்டிருப்பவர்களை, அடியோங்கள் நொடிப்பொழுது நேரம்கூட நினைத்துப் பார்க்கமாட்டோம்.

பார்வண்ண மடமங்கை பனிநன்மா மலர்க்கிழத்தி,
நீர்வண்ணன் மார்வத்தி லிருக்கையைமுன் நினைந்தவனூர்,
கார்வண்ண முதுமுந்நீர்க் கடல்மல்லைத் தலசயனம்,
ஆரெண்ணும் நெஞ்சுடையா ரவரெம்மை யாள்வாரே. 1099

ஆத்மகுணங்கள் நிறையப் பெற்றுள்ள பூமிப்பிராட்டியார் கடல்நிறம் கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திரு மார்பில் இடது பக்கத்திலும், தாமரைச் செல்வியான பெரிய பிராட்டியார் வலது பக்கத்திலும் இருந்து கொண்டு சிறந்து விளங்கிக் கொண்டிருக்க எம்பெருமான் ''திருக்கடல்மல்லை'' என்னும் தலசயனத் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருள்கின்றான். இன்ன தன்மையினனான எம்பெருமானை வழிபடும் ஆர்வமிக்க உள்ளத்தினைக் கொண்ட அடியவர்களே எம்மை அடிமை கொண்டு ஆள்பவர்களாவர்.

ஏனத்தி னுருவாகி நிலமங்கை யெழில்கொண்டான்,
வானத்தி லவர்முறையால் மகிழ்ந்தேத்தி வலங்கொள்ள,
கானத்தின் கடல்மல்லைத் தலசயனத் துறைகின்ற,
ஞானத்தி னொளியுருவை நினைவாரென் நாயகரே. 1100

உலகப் பிரளய காலத்தில் ''ஸ்ரீவராக'' அவதாரம் மேற்கொண்டு இப்பூமியை எடுத்துக் காத்து இந்நிலமங்கையின் அழகை எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அனுபவித்தார். விண்ணுலகிலுள்ள தேவர்கள் எல்லோரும் மகிழ்ச்சியுடன் வந்திருந்து முறையாகத் துதித்து வணங்குகின்றனர். இப்படிப்பட்ட எம்பெருமான் காட்டி னருகேயுள்ள ''திருக்கடல்மல்லை'' என்னும் தலசயனத் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருளியிருக்கின்ற 'ஞானஒளி' வடிவத்தினைத் தம் மனதில் எண்ணுபவர்களே எம் தலைவர் ஆவார்.

Koviloor Digital Library

விண்டாரை வென்றாவி விலங்குண்ண, மெல்லியலார்
கொண்டாடும் மல்லகலம் அழலேற வெஞ்சமத்துக்
கண்டாரை, கடல்மல்லைத் தலசயனத் துறைவாரை,
கொண்டாடும் நெஞ்சுடையா ரவரெங்கள் குலதெய்வமே. 1101

பகைவர்களைப் போரில் வெற்றி கொண்ட நிலையில் அவர்களின் உயிரைப் போக்கிய பின்பு அவர்களின் உடல்களை விலங்குகள் தின்னுமாறு செய்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், பெண்கள் விரும்பி அரவணைக்கின்ற இராவணனின் மார்பினைத் தம் அம்பினால் தீ புகுமாறு செய்து போரில் அவனை அழித்தான். இன்ன தன்மையினனான ஸ்ரீஇராமபிரான் ''திருக்கடல்மல்லை'' என்னும் தலசயனத் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக் கண் வளர்ந்தருள்கின்றான். இந்த எம்பெருமானை மனப்பூர்வமாக உள்ளத்தில் இருத்திக் கொண்டாடுபவர்கள் எவரெவரோ அவரவர்களே எங்கள் குலத்தெய்வங்கள் ஆவர்.

பிச்சச் சிறுபீலிச் சமண்குண்டர் முதலாயோர்,
விச்சைக் கிறையென்னு மவ்விறையைப் பணியாதே,
கச்சிக் கிடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்,
நச்சித் தொழுவாரை நச்சென்றன் நன்னெஞ்சே! 1102

மயிலிறகினையும் தோகையினையும் தம் கரங்களிலே பிடித்துக் கொண்டு செல்கின்ற சமணர்களும் மற்று அவர்களைப் போன்ற வர்களும் வேதக்கடவுளாகிய ஸ்ரீமந்நாராயணனே யாம் விரும்பும் இறைவன் என்று எண்ணி அவ்விறைவனைப் பணிந்து வணங் காமல், அவர்கள் புரியும் வித்தைகளுக்குத் தலைவன் ஒருவன் உளன் என்பர். ''திருவெஃகா'' என்னும் திருத்தலமாகிய காஞ்சீபுரத்தில் திருக்கண் வளர்ந்தருள்பவனின் திருத்தலமாவது ''திருக்கடல் மல்லை'' என்னும் தலசயனத் திருத்தலமே என்று எண்ணி வணங்குகின்ற அடியவர்களை, என் மனமே! விரும்பிய ஆர்வமுடன் வணங்கித் தொழுதேத்தல் வேண்டும்.

புலன்கொள்நிதிக் குவையோடு புழைக்கைமா களிற்றினமும்
நலங்கொள்நவ மணிக்குவையும் சுமந்தெங்கும் நான்றொசிந்து,
கலங்களியங் கும்மல்லைக் கடல்மல்லைத் தலசயனம்,
வலங்கொள்மனத் தாரவரை வலங்கொள்ளென் மடநெஞ்சே! 1103

Koviloor Digital Library

என்மனமே! ஐம்புலன்களையும் கவர்கின்ற பொற்குவியல் களையும், அவைகளோடுகூட துளையினை உடைய துதிக்கை யினைப் பெற்றிருக்கின்ற பெரிய யானைக் கூட்டத்தினையும் நன்மை நல்கிடும் நவமணிக் குவியல்களையும் ஏற்றிக் கொண்டு சுமந்தவாறு எங்கும் சுற்றிக் கொண்டிருக்கும் கப்பல்கள் திருக் கடல்மல்லையில் காணப்படும். இப்படிப்பட்ட கடலின் கரை யிலுள்ள ''திருக்கடல்மல்லை'' என்னும் ''தலசயனத் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமான் தலசயனப் பெருமானைச் சுற்றி வந்து வணங்க வேண்டும் என்று எண்ணும் எண்ணமுடையவர்களை வலமாகச் சுற்றிவர வேண்டும்.

பஞ்சிச் சிறுகூழை யுருவாகி, மருவாத
வஞ்சப்பெண் நஞ்சுண்ட அண்ணல்முன் நண்ணாத,
கஞ்சைக் கடந்தவனூர் கடல்மல்லைத் தலசயனம்,
நெஞ்சில் தொழுவாரைத் தொழுவாயென் தூய்நெஞ்சே! 1104

என் தூய்மையான மனமே! ஸ்ரீகண்ணபிரான் பஞ்சுபோலும் மென்மையை உடைய முடியைக் கொண்ட பூதனைப் பேயின் விடம்கலந்த முலைப்பாலையுண்டான். தன்னை விரும்பி அணுகாத கம்சனின் தீயஎண்ணத்தை அழித்து, அவனை வதைத்துக் கொன்றான். ''திருக்கடல்மல்லை'' என்னும் ''தலசயனத் திருத் தலத்தில்'' திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரானைத் தொழுது கொண்டு இருக்கும் அடியவர்களை நீ தொழுது உய்வாயாக!

செழுநீர் மலர்க்கமலம் திரையுந்த வன்பகட்டால்,
உழுநீர் வயலுழவ ருழப்பின்முன் பிழைத்தெழுந்த,
கழுநீர் கடிகமழும் கடல்மல்லைத் தலசயனம்,
தொழுநீர் மனத்தவரைத் தொழுவாயென் தூய்நெஞ்சே! 1105

என் தூய்மையான மனமே! உழவர் பெருமக்கள் திருக்கடல் மல்லையில் உள்ள வயல்களில் எருதுகளைப் பூட்டி, அங்கு உள்ள நீரின் அலைகளையும், தாமரையில் உள்ள மலர்களையும் முன் பின்னாகத் தள்ளுமாறு உழுகிறார்கள். அப்பொழுது அவ்வுழவு கட்கிடையிடையே தப்பி எழுந்த செங்கழுநீர்ப் பூக்களும், தாமரைமலர்களும் மணம் வீசுகின்ற ''திருக்கடல்மல்லை''

Koviloor Digital Library

என்னும் ''தலசயனத் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருளும் எப்பெருமானை, தலசயனப் பெருமானைக் கண்டு வணங்குகின்ற அடியவர்களைக் கண்டு நீ வணங்குதல் வேண்டும்.

பிணங்களிடு காடதனுள் நடமாடு பிஞ்ஞகனோடு,
இணங்குதிருச் சக்கரத்தெம் பெருமானார்க் கிடம்,விசும்பில்
கணங்களியங் கும்மல்லைக் கடல்மல்லைத் தலசயனம்,
வணங்குமனத் தாரவரை வணங்கென்றன் மடநெஞ்சே! 1106

பிணங்களைச் சுட்டெரிக்கின்ற சுடுகாட்டினுள் நடனம்புரியும் சிவபெருமானுக்கும், திருவாழியானைக் கொண்டிருக்கும் எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தன் உடலின் ஒரு பகுதியை இடமாக அளித்தருளினார். விண்ணுலகிலுள்ள தேவர்களின் கூட்டங்கள் உலவிவந்து வழிபடுகின்ற ''திருக்கடல்மல்லை'' என்னும் தலசயனத் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருளும் தலசயனப் பெருமாளை வணங்குகின்ற அடியவர்களைக் கண்டு வணங்குவாயாக!

*கடிகமழு நெடுமறுகில் கடல்மல்லைத் தலசயனத்து,
அடிகளடி யேநினையு மடியவர்கள் தம்மடியான்,
வடிகொள்நெடு வேல்வலவன் கலிகன்றி யொலிவல்லார்,
முடிகொள்நெடு மன்னவர்தம் முதல்வர்முத லாவாரே. 1107

(நண்ணாத பார் ஏனம் விண்டார் பிச்ச புலன் பஞ்சி செழுநீர் பிணம் கடி-திவளும்.)

மணம் வீசுகின்ற அகன்று நீண்ட தெருக்களையுடைய ''திருக் கடல்மல்லை'' என்னும் தலசயனத் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருளும் தலசயனப் பெருமானை வழிபடும் அடியவர்களின் திருவடிகளையே திருமங்கையாழ்வார் தம் உள்ளத்தில் எப்பொழுதும் எண்ணிக் கொண்டிருப்பார். கூர்மையான வேலைக் கொண்டு போரிடுவதில் வல்லவரான ''கலிகன்றி'' என்று புகழ்ந்து உரைக்கும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இத்திருமொழிப் பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்ல அடியவர்கள் முடிசூடுதலைப் பெற்று ஆட்சிபுரியும் அரசர்கட்கெல்லாம் அரசர்களாகத் திகழ்வார்கள்.

Koviloor Digital Library

7. திவளும் திருவிடவெந்தை

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*திவளும்வெண் மதிபோல் திருமுகத் தரிவை
செழுங்கட லமுதினிற் பிறந்த
அவளும்,நின் னாகத் திருப்பது மறிந்தும்
ஆகிலு மாசைவி டாளால்,
குவளையங் கண்ணி கொல்லியம் பாவை
சொல்லுநின் தாள்நயந் திருந்த
இவளை,உன் மனத்தா லென்னினைந் திருந்தாய்
இடவெந்தை யெந்தை பிரானே. 1108

''திருவிடவெந்தை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! திருப்பாற்கடலில் தோன்றிய தேவாமிர்தத்தினும் மேன்மையானதொரு அமுது போன்றவளும், ஒளிவீசுகின்ற சந்திரனை ஒத்த முகத்தினை யுடையவளுமாகிய திருமகள் உனது திருமார்பினில் வாழ்ந்து கொண் டிருப்பதை அறிந்திருந்தும்கூட, என் மகள் உன்மீது வைத்திருக்கின்ற ஆசையைவிட மாட்டாதவளாகித் துன்பமுறுகிறாள். குவளை மலர் போன்ற அழகிய கண்களைக் கொண்டவளாகிய இப்பெண்மகள் கொல்லிமலையில் எழுதி வைத்துள்ள பாவையைப் போன்ற அழகினையுடையவள். இப்படிப்பட்ட என் மகள் நின் திருவடிகளையே எண்ணிக் கொண்டிருக்கின்ற இவளைப் பற்றிய உன் திருவுள்ளம் தான் என்ன என்று கூறியருள வேண்டும்.

துளம்படு முறுவல் தோழியர்க் கருளாள்
துணைமுலை சாந்துகொண் டணியாள்,
குளம்படு குவளைக் கண்ணிணை யெழுதாள்
கோலநன் மலர்குழற் கணியாள்,
வளம்படு முந்நீர் வையமுன் னளந்த
மாலென்னும் மாலின மொழியாள்,
இளம்படி யிவளுக் கென்னினைந் திருந்தாய்
இடவெந்தை யெந்தை பிரானே! 1109

''திருவிடவெந்தை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்

Koviloor Digital Library

நாராயணனே! மாதுளம் பழத்தின் விதையினையும் தோற்கடிக்கும் பற்களையுடைய என் மகள் தன் தோழியர்களிடம் கூடப் புன்முறுவலும் செய்யாது அமைதி காத்து நிற்கிறாள். இவளுடைய இணையான முலைகளில் சந்தனமும் பூசாது நிற்கிறாள். குளங்களிலே பூத்துக் கிடக்கின்ற குவளைமலர் போன்ற கண்களில் மை தீட்டாமல் இருக்கிறாள். தன் கூந்தலில் மலர்களைக்கூட அணியவில்லை. வளம்மிக்க கடல்நீரினால் சூழ்ந்திருக்கின்ற இந்தப் பூமியை முன்பு அளந்திட்ட 'மால்' என்னும் எம்பெருமான் என்று அவன்மீது கொண்டிருக்கின்ற காதல் காரணமாக மயங்கிக் கொண்டு இருக்கிறாள். மென்மைத் தன்மையினையுடைய இவ்விளம் பெண்பற்றி நீ என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாய் என்பது பற்றிக் கூறுக.

சாந்தமும் பூணும் சந்தனக் குழம்பும்
தடமுலைக் கனியிலும் தழலாம்,
போந்தவெண் திங்கள் கதிர்சுட மெலியும்
பொருகடல் புலம்பிலும் புலம்பும்,
மாந்தளிர் மேனி வண்ணமும் பொன்னாம்
வளைகளும் இறைநில்லா, என்றன்
ஏந்திழை யிவளுக் கென்னினைந் திருந்தாய்
இடவெந்தை யெந்தை பிரானே. 1110

''திருவிடவெந்தை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! என் மகள் ஆறிக் குளிர்ந்த சந்தனக் கலவையையும், குழம்பினையும் தன்னுடைய பருத்த முலைகளில் பூசிக் கொள்ளவில்லை. இத்துடன் முத்துமாலைகளைத் தன் மார்பில் அணிந்து கொண்டிருந்தாலும் இவையாவும் தீயிலிட்டது போன்று சுடுகின்றன. உலாவந்து கொண்டிருக்கின்ற சந்திரனின் ஒளிமிக்க கதிர்களும் சுடுவதனாலே இவள் மெலிந்துவிட்டாள். கடலின் அலை ஓசையைக் கேட்ட அளவிலேயே இவள் புலம்புகிறாள். இவளுடைய மாந்தளிர் போன்ற மேனியும் பொன்நிறமாக மாறிப் பசலை நோயுற்றவளாகி மெலிந்துவிட்டாள். இவ்வாறு மெலிந்துவிட்டதன் காரணமாக இவள் கைகளில் அணிந்திருந்த வளையல்கள் தானாகவே கழன்று விடுகின்றன. இப்படிப்பட்ட ஏந்திழையளான என் மகள் பற்றி என்ன செய்வதென்று எண்ணிக் கொண்டிருக்கிறாய் என்பது பற்றிக் கூறியருள வேண்டும்.

Koviloor Digital Library

'ஊழியில் பெரிதால் நாழிகை!' என்னும்
 'ஒண்சுடர் துயின்றதால்!' என்னும்,
'ஆழியும் புலம்பும்! அன்றிலு முறங்கா
 தென்றலும் தீயினிற் கொடிதாம்,
தோழியோ!' என்னும் 'துணைமுலை யரக்கும்'
 சொல்லுமி னென்செய்கேன்?' என்னும்,
ஏழையென் பொன்னுக் கென்னினைந் திருந்தாய்
 இடவெந்தை யெந்தை பிரானே! 1111

''திருவிடவெந்தை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருமாலே! ஒரு நாழிகை நேரம் என்பது ஒரு ஊழிக் காலத்தினும் பெரிது ஆகின்றது என் மகளுக்கு மேலும் அவள் சூரியனின் ஒளியும் மங்கிவிட்டது என்கிறாள். கடல்களும் புலம்புகின்றன. அன்றில் பறவைகளும் உறங்கவில்லை போலும். தென்றற் காற்றோ தீயினும் சுடுகிறது. தோழி! இந்நிலையில் நான் என்ன செய்வேன்? என்று என் மகள் புலம்பிக் கொண்டிருக்கிறாள். என் மகள் இப்படித் துன்புற்றுக் கொண்டிருக்கின்ற வேளையில் தன் இரண்டு பருத்த முலைகளையும் தேய்த்துக் கொள்கிறாளே! இந்நிலையை அடைந்ததற்கு நான் என்ன செய்வேன்? கூறுங்கள் என்கிறாள். இவளின் சபலத்தை என்னவென்று கூறுவேன். இப்படிப்பட்ட என் மகளைப் பற்றி என்ன எண்ணிக் கொண்டிருக்கிறாய் என்பதைக் கூறி அருள்புரிதல் வேண்டும்.

ஓதிலும் உன்பே ரன்றிமற் றோதாள்
 உருகும்நின் திருவுரு நினைந்து,
காதன்மை பெரிது கையற வுடையள்
 கயல்நெடுங் கண்துயில் மறந்தாள்,
பேதையேன் பேதை பிள்ளைமை பெரிது
 தெள்ளியள் வள்ளிநுண் மருங்குல்,
ஏதலர் முன்னா என்னினைந் திருந்தாய்
 இடவெந்தை யெந்தை பிரானே. 1112

''திருவிடவெந்தை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பிரானே! என் மகள் உன் திருநாமங்களையன்றி வேறு எதுவும் சொல்வதில்லை. உன் திருவுரு கண்டு எண்ணி எண்ணி உருகிக் கொண்டிருக்கிறாள். எம்பெருமான்

Koviloor Digital Library

மீது அவள் கொண்ட காதலோ எல்லாவற்றினும் மிகப் பெரியது. கயல்மீன் போன்ற மிகப் பெரிய நீண்ட கண்களை இவள் யாவற்றையும் இழந்துவிட்டதாகக் கருதி வருந்துவதால் தன் தூக்கத்தையே மறந்தாள். இப்பேதைப்பருவப் பிள்ளைத் தன்மையோ மிகப் பெரியது என்றாலும் உன்னைப் பற்றித் தெளிவாக அறிந்து கொண்டு தெளிவுடன் திகழ்கிறாள் என்றாலும் இவளோ வள்ளிக் கொடி போன்ற நுண்ணிய இடையினை யுடையவள். இப்படிப்பட்ட என் மகளை விரும்பாதவர்கள் முன்னிலையில் நீ என்ன செய்ய வேண்டுமென்று எண்ணுகிறாய் என்பதைக் கூறி அருள வேண்டுகிறேன்.

தன்குடிக் கேதும் தக்கவா நினையாள்
 தடங்கடல் நுடங்கெயி லிலங்கை,
வன்குடி மடங்க வாளமர் தொலைத்த
 வார்த்தைகேட் டின்புறும் மயங்கும்,
மின்கொடி மருங்குல் சுருங்கமேல் நெருங்கி
 மென்முலை பொன்பயந் திருந்த,
என்கொடி யிவளுக் கென்னினைந் திருந்தாய்
 இடவெந்தை யெந்தை பிரானே! 1113

''திருவிடவெந்தை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் என் தந்தையாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! என் மகள் தன் குலத்துக்கேற்றபடியாக உள்ள நிலையில் எதையும் நினைத்துச் செயல்படவில்லை. கடலும் மதிள்களும் சூழ்ந்திருக்கின்ற இலங்கை நகரையும், இலங்கை மன்னனையும், இலங்கையிலுள்ள அரக்கர் குலத்தையும் அழித்த ஸ்ரீ இராமபிரானின் வீரதீரச் செயல்களைக் கேட்டறிந்து கொண்டு, அச்செயல்கள் காரணமாக மகிழ்ச்சியுற்று, மயங்கிக் கிடக்கிறாள். மின்னலையும், வஞ்சிக் கொடியையும் ஒத்த இடையினைக் கொண்டுள்ள என் மகளின் பருத்த மென்மையான முலைகளின்மீது, அந்த ஸ்ரீஇராமபிரான் மீது கொண்ட காதல் காரணமாக உண்டான 'பிரிதல்' என்னும் நோய் வருத்துகின்ற அளவில் பொன்நிறமான பசலை நோய் படர்ந்துவிட்டது. இப்படிப்பட்ட நிலையிலிருக்கும் என் மகளைப் பற்றி என்னவெல்லாம் எண்ணிக் கொண்டிருக்கிறாய் என்பதைக் கூறி அருள்புரிய வேண்டுகிறேன்.

Koviloor Digital Library

உளங்கனிந் திருக்கும் உன்னையே பிதற்றும்
உனக்கன்றி யெனக்கன்பொன் றிலளால்,
'வளங்கனி பொழில்சூழ் மாலிருஞ் சோலை
மாயனே!' என்றுவாய் வெருவும்,
களங்கனி முறுவல் காரிகை பெரிது
கவலையோ டவலம்சேர்ந் திருந்த,
இளங்கனி யிவளுக் கென்னினைந் திருந்தாய்
இடவெந்தை யெந்தை பிரானே! 1114

''திருவிடவெந்தை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் என் தந்தையான எம்பிரானே! என் மகள் எப்பொழுதும் உன்னையே எண்ணி எண்ணித் தன் மனதிற் குள்ளேயே மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கிறாள். எப்போதும் உன்னைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கின்ற நிலையில் ஏதேதோ கூறிப் பிதற்றுகிறாள். உன்மீது உள்ள அன்பின் பெருக்கையன்றி என்மீது சிறிதும் அன்பில்லாதவளாகவே இருக்கிறாள். வளமான கனிகள் நிறைந்து விளங்கும் சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருமாலிருஞ்சோலைமலை'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பிரானே! என்றும், மாயச்செயல்கள் பல புரியும் மாயனே! என்றும் அவ்வப்போது கூறிப் பிதற்றுகிறாள். களாக்கனி போன்று புன்சிரிப்பினையும், அழகினையும் கொண்டுள்ள என் மகள் மனக்கவலையினையும், அவலத்தினையும் ஒருங்கே கொண்டு இப்பெண்பிள்ளைக்காகத் தங்கள் திருவுள்ளம்தான் இப்படி எண்ணுகின்றது என்பதைக் கூறி அருளுமாறு இப்போது வேண்டிக் கொள்கிறேன்.

'அலங்கெழு தடக்கை யாயன்வா யாம்பற்
கழியுமா லென்னுள்ளம்!' என்னும்,
புலங்கெழு பொருநீர்ப் புட்குழி பாடும்
'போதுமோ நீர்மலைக் ெ'கன்னும்,
குலங்கெழு கொல்லி கோமள வல்லிக்
கொடியிடை நெடுமழைக் கண்ணி,
இலங்கெழில் தோளிக் கென்னினைந் திருந்தாய்
இடவெந்தை யெந்தை பிரானே! 1115

''திருவிடவெந்தை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் என் தந்தையான எம்பெருமான் ஸ்ரீ

Koviloor Digital Library

இராமபிரானே! என் மகள் கலப்பையைக் கையில் ஏந்திய ஸ்ரீகண்ண பிரானின் குழலோசை கேட்டதனால் தன் நெஞ்சு நெகிழ்ந்து அழிந்து கொண்டிருக்கிறது என்று கூறிக் கொண்டிருக்கிறாள். புலன்களைக் கவர்கின்ற வகையில் நீர்வளம் மிக்க ''திருப்புட்குழி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீவிஜயராகவப் பெருமானைப் பாடிக் கொண்டு இருக்கிறாள். ''திருநீர்மலை'' என்னும் திருத்தலம் சென்று அங்கு எழுந்தருளி யிருக்கும் எம்பிரானிடம் செல்வோமா என்கிறாள். 'கொல்லி மலைப் பாவை' போன்றவளும் கொடிபோன்று சிறுத்த இடை யினையுடையவளும், கண்ணீர்த் தாரைகள் வழிந்து கொண்டிருப் பவளும், அழகிய தோள்களைக் கொண்டிருப்பவளுமாகிய இப்பெண்ணைப் பற்றித் தங்கள் திருவுள்ளம் கொண்டிருக்கும் கருத்துகள் பற்றிக் கூறி அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

பொன்குலாம் பயலை பூத்தன மென்தோள்
பொருகயல் கண்துயில் மறந்தாள்,
அன்பினா லுன்மே லாதரம் பெரிதுஎன்
அணங்கினுக் குற்றநோ யறியேன்,
மின்குலா மருங்குல் சுருங்கமேல் நெருங்கி
வீங்கிய வனமுலை யாளுக்கு,
என்கொலாம் குறிப்பி லென்னினைந் திருந்தாய்
இடவெந்தை யெந்தை பிரானே. 1116

''திருவிடவெந்தை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் என் தந்தையான எம்பிரான் ஸ்ரீகண்ணபிரானே! என் மகளின் மென்மையான தோள்களில் பொன்நிறப் பசலைநோய் படர்ந்திருக்கிறது. அவளின் கயல்மீன் போன்ற கண்கள் உறங்குவது இல்லை. உன்மீது கொண்ட காதலோ மிகப் பெரியது. என் மகளுக்கு உண்டாகியிருக்கின்ற நோய் என்ன என்பது பற்றி அறிந்து கொள்ள என்னால் இயலவில்லை. மின்னலையொத்த மெல்லிய இடையினையும், பருத்து, நெருங்கி வளரும் இளமுலைகளையும் பெற்றுள்ள என் மகளுக்கு இப்பொழுது என்னவாகும் என்பது பற்றித் தங்கள் திருவுளத்தில் கொண்டுள்ளன எவை என்பது பற்றிக் கூறியருள வேண்டு கிறேன்.

Koviloor Digital Library

*‘‘அன்னமும் மீனும் ஆமையும் அரியும்
ஆயஎம் மாயனே! அருளாய்,’
என்னுமின் தொண்டர்க் கின்னருள் புரியும்
இடவெந்தை யெந்தை பிரானை,
மன்னு மாடமங்கையர் தலைவன்
மானவேல் கலியன்வா யொலிகள்,
பன்னிய பனுவல் பாடுவார் நாளும்
பழவினை பற்றறுப் பாரே. 1117

(திவள் துளம் சாந்தம் ஊழி ஓதிலும் தன் உளம் அலம் பொன் அன்னம்-திரிபுரம்.)

அன்னப் பறவையாகவும், மீனாகவும், ஆமையாகவும், சிங்கமாகவும் ஆகிய திருவுருவங்களில் அவதாரங்கள் பலவற்றை மேற்கொண்டருளிய எம்மாயப் பெருமானே! எமக்கு அருள்புரிதல் வேண்டும் என்று வேண்டி இறைஞ்சுக் கொண்டிருக்கும் அடியவர்களுக்கு மேலான அருளைச் செய்து வரும் ‘‘திருவிடவெந்தை’’ என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவிடவெந்தைபிரான் பற்றி, நிலைபெற்ற மாடமாளிகைகள் ஓங்கி இருக்கின்ற ‘திருமங்கை’ என்னும் திருநகர்க்குத் தலைவராகத் திகழும் வேலாயுதத்தினை ஏந்திய கலியன் என்னும் திருமங்கையாழ்வார் திருவாயினால் அருளிச் செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் பாடுபவர்கள் தங்கள் தங்கள் பழைமையான தீவினைகள் யாவும் நீங்கப்பெற்று, இனிது வாழ்வார்கள்.

8. திரிபுரம்

திருவட்டபுயகரம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*திரிபுர மூன்றெரித் தானும்மற்றை
மலர்மிசை மேலய னும்வியப்ப,
முரிதிரை மாகடல் போல்முழங்கி
மூவுல கும்முறை யால்வணங்க,
எரியன கேசர வாளெயிற்றோ
டிரணிய னாக மிரண்டுகூறா,
அரியுரு வாமிவ ரார்கொலென்ன
அட்ட புயகரத் தேனென்றாரே. 1118

Koviloor Digital Library

ஆகாயத்தில் தொங்கிக் கொண்டிருந்த மூன்றுபுரங்களை எரித்த சிவபெருமானும் மற்றும் தாமரைமலரில் தோன்றிய பிரம்மாவும் ஆச்சரியப்படும்படியாகத் திருமால் வளைந்து வளைந்து அலை வீசுகின்ற பரந்து கிடக்கும் பெரிய கடலின் ஒலிபோன்று பெருஞ் சத்தத்தை உண்டாக்கிக் கொண்டு முழங்குவதுபோன்று, மூவுலகத் தினரும் முறையாக வணங்கிக் கொண்டிருக்க இரணியனின் உடல் இரண்டு கூறாகப் பிளக்குமாறு பிளந்த நெருப்புப் போன்ற உளைமயிரினையும் ஒளி பொருந்திய வாள்போன்ற கூர்மையான பற்களையுமுடைய ''இவர் யார்?'' என்று அடியேன் கேட்க, ''சிங்க முகம் கொண்டு வந்திருக்கின்ற இவர்தாம் யார்?'' என்று அடியேன் கேட்கக் கேட்க, உடனே அடியேனின் தலைவர், ''நானே திருக்கச்சி என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் திருஅட்டபுயகரத்தான்'' என்று கூறித் திருவருள் புரிந்தார்.

வெந்திறல் வீரரில் வீரரொப்பார்
 வேத முரைத்திமை யோர்வணங்கும்,
செந்தமிழ் பாடுவார் தாம்வணங்கும்
 தேவ ரிவர்கொல் தெரிக்கமாட்டேன்,
வந்து குறளுரு வாய்நிமிர்ந்து
 மாவலி வேள்வியில் மண்ணளந்த,
அந்தணர் போன்றிவ ரார்கொலென்ன
 அட்ட புயகரத் தேனென்றாரே. 1119

''வேதங்களையெல்லாம் எடுத்துரைத்து பிரமன் முதலிய தேவர்களெல்லாரும் வணங்கிடக் கூடிய பெருமைகள் பலவும் கொண்ட இவர் யார்? வெம்மைமிக்க பெருந்திறமைகளைக் கொண்ட வீரர்களும் வியக்கும்படியான பெருவீரமுடைய இராம பிரானோ? செந்தமிழில் திருப்பாசுரங்களைப் பாடிய முதலாழ் வார்கள் மூவராலும் வணங்கக்கூடிய திருமலைத் தெய்வமாம் திருவேங்கடமுடையானோ? இவர் இன்னாரென்று அடியேன் அறியேனே! மகாபலிச்சக்கரவர்த்தியிடம் ''வாமன'' அவதாரம் மேற்கொண்டு அவன் செய்து வரும் வேள்வியின்போது சென்று மூன்றடி மண் வேண்டுமென்று இரந்து பெற்று ''திரிவிக்ரம'' அவதாரம் மேற்கொண்டு உயர்ந்து ஓங்கி இந்த உலகத்தை அளந்தவனோ?'' என்று அடியேன் கேட்டதற்கு அடியேனின் தலைவர், நானே திருக்கச்சியில் திருக்கோயில் கொண்டு

Koviloor Digital Library

எழுந்தருளியிருக்கும் திருஅட்டபுயகரத்தில் உள்ளவன்'' என்று அடியேனுக்கு அருளிச் செய்தார்.

செம்பொ னிலங்கு வலங்கைவாளி
　　திண்சிலை தண்டொடு சங்கமொள்வாள்,
உம்ப ரிருசுட ராழியோடு
　　கேடக மொண்மலர் பற்றியெற்றே,
வெம்பு சினத்தடல் வேழம்வீழ
　　வெண்மருப் பொன்று பறித்து,இருண்ட
அம்புதம் போன்றிவ ரார்கொலென்ன
　　அட்ட புயகரத் தேனென்றாரே. 1120

சிவந்த பொன்னினால் செய்துள்ள அம்புகளைத் தம் வலது திருக்கரத்திலும், வில்லினைத் தம் திண்ணிய திருத்தோளிலும் தாங்கிக் கொண்டிருக்கிறார். இவைகளுடன் கதை, பாஞ்சசன்னியம் என்னும் சங்கு, உடைவாள் ஆகிய இவைகளுடன், இவைகட்கும் மேலாக ஒளிவிடும் திருச்சக்கரத்தாழ்வான், கேடயம், அழகியபூ ஆகியவற்றை அணிந்திருப்பதனால் உண்டான அழகுதான் என்னே! என்னே! இவன் கோபம் மிக்க குவலயாபீட யானையின் கொம்பை முறித்து அதனை அழித்த கண்ணபிரானோ? இருண்ட மேகம் போன்று கருநீல நிறத்தவராகத் திகழ்கின்ற இவர் யார் என்று அடியேன் கேட்கத் ''திருக்கச்சி'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ''திருஅட்டபுயகரத்தில் உள்ளவன்'' என்று கூறி அருளினார்.

மஞ்சுயர் மாமணிக் குன்றமேந்தி
　　மாமழை காத்தொரு மாயஆனை
அஞ்ச, அதன்மருப் பொன்றுவாங்கும்
　　ஆயர்கொல் மாய மறியமாட்டேன்,
வெஞ்சுட ராழியும் சங்குமேந்தி
　　வேதமு னோதுவர் நீதிவானத்து,
அஞ்சுடர் போன்றிவ ரார்கொலென்ன
　　அட்ட புயகரத் தேனென்றாரே. 1121

மேகங்கள் சூழ்ந்திருக்கின்ற அளவுக்கு உயர்ந்திருக்கின்ற ''கோவர்த்தனம்'' என்னும் மலையைத் தம் திருக்கரத்தினில் ஏந்திக் குடையாகப் பிடித்து, அதன் மூலமாக அங்கு பெய்த பெருமழை யினின்றும் பசுக்கூட்டங்களைப் பாதுகாத்து அருளியவர் இவரோ?

Koviloor Digital Library

குவலயாபீடம் என்னும் யானையானது நடுக்கமுறும்படியாகச் செய்து அதன் கொம்பை முறித்துப் பறித்தவர் இவரோ! மாயங்கள் பல புரிந்த ஸ்ரீ கண்ணபிரான் இவர்தானோ? என்று அடியேன் அறியேன். வெம்மை மிக்க ஒளிவீசுகின்ற திருச்சக்கரத்தையும் திருச்சங்கினையும் தம் திருக்கரங்களில் ஏந்திக் கொண்டிருக்கின்ற நிலையில் விண்ணுலகத்தில் வாழும் தேவர்கள் வேதங்களை ஓதிக் கொண்டிருக்கின்ற திருப்பரமபதத்தில் முறை தவறாமல் விளங்குகின்ற திருப்பரஞ் சோதியோ? இவர்'' என்று அடியேன் கேட்கத் ''திருக்கச்சி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருஅட்டபுயகரத்தில் உள்ளவன் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

கலைகளும் வேதமும் நீதிநூலும்
கற்பமும் சொற்பொருள் தானும்,மற்றை
நிலைகளும் வானவர்க் கும்பிறர்க்கும்
நீர்மையி னாலருள் செய்து,நீண்ட
மலைகளும் மாமணி யும்மலர்மேல்
மங்கையும் சங்கமும் தங்குகின்ற,
அலைகடல் போன்றிவ ரார்கொலென்ன
அட்ட புயகரத் தேனென்றாரே. 1122

வேதங்களில் இடம்பெற்றுள்ள பல்வகைக் கதைகள், நீதி நூல்கள் என்று கருதுகின்ற வேதம், வேதாந்த சூத்திரம், இதிகாசம், கல்பசூத்திரம், வியாகரணம், மீமாம்சை ஆகியவைகளாகவும் அவற்றின் பயன்களாகவும், தன் நீர்மைக் குணத்தினால் தேவர்களுக்கும், மனிதர்களுக்கும் அருள்புரிந்தாரே! மலை போன்ற தோள்களையும் கௌத்துப மணியையும், பாஞ்ச சன்னியமும், திருமகளும் ஆகிய இவைகளைக் கொண்டிலங்கும் அலைவீசும் கடல் போன்றுள்ள இவர் யாரோ? என்று அடியேன் கேட்கத் ''திருக்கச்சி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருஅட்டபுயகரத்தில் உள்ளவன்'' என்று கூறி அடியேனுக்கு அருள்புரிந்தார்.

எங்ஙனும் நாமிவர் வண்ணமெண்ணில்
ஏது மறிகிலம், ஏந்திழையார்
சங்கும் மனமும் நிறைவுமெல்லாம்
தம்மன வாகப் புகுந்து,தாமும்

Koviloor Digital Library

பொங்கு கருங்கடல் பூவைகாயாப்
போதவிழ் நீலம் புனைந்தமேகம்,
அங்ஙனம் போன்றிவ ரார்கொலென்ன
அட்ட புயகரத் தேனென்றாரே. 1123

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் இன்ன வண்ணமுடையவன் என்று எவ்வழியிலேனும் நம்மால் அறிந்து உணரலாம் என்று எண்ணிப் பார்க்க முனைகின்றபோது அடியேனால் ஏதும் அறிய இயலாமற் போகிறது. அணிகலன்களை அணிந்துள்ள பெண்கள் வளை, மனம், நிறை ஆகிய இவைகளைக் கவர்ந்து, தம்முடைய தாக்கிக் கொண்டார். பொங்குகின்ற கருங்கடல், பூவை, காயாம்பூ, செவ்வியாய் மலர்கின்ற கருநெய்தல் மலர், மேகம் ஆகிய இவை களை ஒத்த வண்ணத்தினையுடைய இவர் யார்? என்று அடியேன் கேட்க ''திருக்கச்சி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருஅட்டபுயகரத்தில் உள்ளவன்'' என்று கூறி அருளினார்.

முழுசிவண் டாடிய தண்டுழாயின்
மொய்ம்மலர்க் கண்ணியும், மேனியஞ்சாந்-
திழிசிய கோல மிருந்தவாறும்
எங்ஙனஞ் சொல்லுகேன்! ஓவிநல்லார்,
எழுதிய தாமரை யன்னகண்ணும்
ஏந்தெழி லாகமும் தோளும்வாயும்,
அழகிய தாமிவ ரார்கொலென்ன
அட்ட புயகரத் தேனென்றாரே. 1124

தேனையுண்ட வண்டுகள் ஆடிக் கூத்தாடுகின்ற குளிர்ச்சி பொருந்திய திருத்துழாய் மாலையினையும், சந்தனப் பூச்சினையும் கொண்ட திருமேனியின் அழகுதான் என்னே! இவ்வழகினை அடியேன் எவ்வாறு எடுத்துரைப்பேன்? ஓவியம் வரைவதில் சிறந்தவர்கள் வரைந்த தாமரை போன்ற கண்களும், பரந்து, அகன்ற திருமார்பும், திருத்தோள்களும், திருப்பவளவாயும் ஆகிய இவைகளையுடைய அழகில் மிக்கவரான இவர் யார்? என்று அடியேன் கேட்கத் ''திருக்கச்சி என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருச்கும் திருஅட்டபுயகரத்தில் உள்ளவன் நானே என்று கூறித் திருவருள் புரிந்தார்.

Koviloor Digital Library

மேவியெப் பாலும்விண் ணோர்வணங்க
வேத முரைப்பர்முந் நீர்மடந்தை
தேவி,அப் பாலதிர் சங்கமிப்பால்
சக்கரம் மற்றிவர் வண்ணமெண்ணில்,
காவியொப் பார்கட லேயுமொப்பார்
கண்ணும் வடிவும் நெடியராய்,என்
ஆவியொப் பாரிவ ரார்கொலென்ன
அட்ட புயகரத் தேனென்றாரே. 1125

விண்ணுலகிலுள்ள தேவர்கள் எல்லாத் திசைகளிலுமிருந்து வணங்கிட, எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் வேதங்களை எடுத்துரைப்பார். திருப்பாற்கடலில் தோன்றிய திருமகள் எம்பெருமானின் பட்டத்தரசியாவாள். வலது திருக்கரத்தில் திருவனந்தாழ்வானும், இடது திருக்கரத்தில் சங்கும் கொண்டுள்ள இவரின் வண்ணம்தான் எவ்வண்ணம் என்றறியப்புகில், இவர் கருநெய்தல் பூவண்ணத்தனென்றும், கடல்வண்ணத்தினை ஒத்தவரென்றும் உடைய இவரின் கண்ணழகும், திருமேனியழகும் என் உயிரை ஒத்ததாகத் திகழ்கின்ற இவர் யார்? என்று அடியேன் கேட்கத் ''திருக்கச்சி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருஅட்டகரபுயத்தில் இருக்கிறேன் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

தஞ்ச மிவர்க்கென் வளையும்நில்லா
நெஞ்சமும் தம்மதே சிந்தித்தேற்கு,
வஞ்சி மருங்குல் நெருங்கநோக்கி
வாய்திறந் தொன்று பணித்ததுண்டு,
நஞ்ச முடைத்திவர் நோக்கும்நோக்கம்
நானிவர் தம்மை யறியமாட்டேன்,
அஞ்சுவன் மற்றிவ ரார்கொலென்ன
அட்ட பயகரத் தேனென்றாரே. 1126

என் கையிலுள்ள வளையல்கள் எல்லாம் அவருக்கு என்று ஆகி என் கையினின்றும் கழல்கின்றன. அடியேன் சிந்தித்துப் பார்க்கின்றபொழுது அடியேனின் மனமும் அவருடையதாகிவிட்டது. வஞ்சிக்கொடி போன்று என் இடை துவண்டு போகுமாறு, அவர் தனிமையாக வந்து, தன் திருப்பவளவாயினைத் திறந்து கூறிய அந்தரங்கக் கருத்து ஒன்று உண்டு. அவர் என்மீது பார்க்கின்ற

Koviloor Digital Library

பார்வையோ நஞ்சு போன்று ஒரு வீச்சு உடையதாக உள்ளதே! அடியேன் இவரைப்பற்றி அறியாமலிருக்கின்றேன். எனவே, அடியேன் ''நீர் யார்'' என்று கேட்கத் ''திருக்கச்சி'' என்னும் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருஅட்ட புயகரத்தில் இருக்கிறேன் என்று திருவாய் மலர்ந்தருளினார்.

*மன்னவன் தொண்டையர் கோன்வணங்கும்
நீள்முடி மாலை வயிரமேகன்,
தன்வலி தன்புகழ் சூழ்ந்தகச்சி
அட்ட புயகரத் தாதிதன்னை,
கன்னிநன் மாமதிள் மங்கைவேந்தன்
காமரு சீர்க்கலி கன்றி,குன்றா
இன்னிசை யால்சொன்ன செஞ்சொல்மாலை
யேத்தவல் லார்க்கிடம் வைகுந்தமே. 1127

(திரி வெந்திறல் செம்பொன் மஞ்சு கலை எங்ஙனும் முழுசி மேவி தஞ்சம் மன்னவன் - சொல்லுவன்.)

அரசனும், தொண்டை நாட்டின் தலைவனுமாக இருக்கின்ற வயிரமேகன் என்பவன் வணங்குகின்ற, நீண்ட திருமுடியுடன்கூடி விளங்கும் எம்பெருமான் அம்மன்னனின் மிடுக்காலும், புகழாலும் நிறைந்துள்ள காஞ்சிபுரத்தில் உள்ள திருஅட்டபுயகரத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் மூலமுதல்வனாகவும் உள்ள எம்பெருமானைப் பற்றிப் பெரிய மதிள்களைக் கொண்டுள்ள திருமங்கைநகர்க்கு அரசனான கலிகன்றி என்னும் திருமங்கை ஆழ்வார் குறைவற்ற இன்னிசையுடன் கூடியவாறு அருளிச் செய்த இப்பாசுரங்கள் என்னும் செஞ்சொல் மாலையினைக் கொண்டு எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை வணங்கி ஏத்த வல்லவர்க்கு உரிய இடம் திருவைகுந்தம் ஆகும்.

9. சொல்லு
பரமேச்சர விண்ணகரம்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*சொல்லுவன் சொற்பொருள் தானவை யாய்ச்சுவை
யூறொலி நாற்றமும் தோற்றமுமாய்,
நல்லரன் நான்முகன் நாரண னுக்கிடந்
தான்தடஞ் சூழ்ந்தழ காயகச்சி,

Koviloor Digital Library

பல்லவன் வில்லவ னென்றுல கில்பல
ராய்ப்பல வேந்தர் வணங்குகழல்
பல்லவன் மல்லையர் கோன்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரமதுவே. 1128

சொற்கள், சொற்களாலுண்டான வேதங்கள், வேதங்களின் பொருள்கள் ஆகிய இவைகட்குத் தலைவனாகத் திகழும் ஸ்ரீமந்நாராயணன் சுவை, ஊறு, ஒலி, நாற்றம், தோற்றம் ஆகிய இவ்வைந்திலும் நிறைந்து நிற்கிறான். இவ்வெம்பெருமானே சிவபெருமானாகவும், நான்முகனாகவும் தானான தன்மையனாகி இவ்வுலகினை நடத்துபவனாகி நிற்கும் நிலையினன் ஆகித் தம் இருப்பிடமாகக் கொண்டுள்ள திருத்தலம் யாதெனின் குளங்கள் சூழ்ந்த திருக்கச்சி மாநகரில் ''திருப்பரமேசுர விண்ணகரம்'' என்னும் திருத்தலமாகும். இத்திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந்நாராயணனைப் பல்லவர்களும், வில்லவர்களும், பலரால் பாராட்டிப் புகழும் பற்பல மன்னர்களும் வணங்குகின்ற வீரக்கழல்களையுடைய திருக்கடல்மல்லை மாநகர்க்கரசனாகிய பல்லவ மன்னன் வணங்கி வழிபட்டான்.

கார்மன்னு நீள்விசும் பும்கட லும்சுட
ரும்நில னும்மலை யும்,தன்னுந்தித்
தார்மன்னு தாமரைக் கண்ணனி டம்தட
மாமதிள் சூழ்ந்தழ காயகச்சி,
தேர்மன்னு தென்னவ னைமுனை யில்செரு
வில்திறல் வாட்டிய திண்சிலையோன்,
பார்மன்னு பல்லவர் கோன்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரமதுவே. 1129

மேகங்கள் தங்கி நிலைத்திருக்கும் பரந்து கிடக்கின்ற பெரிய வானம், கடல்கள், சூரியன், சந்திரன், பூமி, மலைகள் ஆகிய இவைகளைத் தன் கொப்பூழ் என்கின்ற தாமரையில் உண்டாக்கிய தாமரைக் கண்ணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்னின் ''திருப்பரமேசுவர விண்ணகரம்'' என்னும் திருப்பதியாகும். இத்திருப்பதி என்பது பெரிய திருமதிள்கள், குளங்கள் ஆகியவை நிறைந்திருக்கின்ற ''திருக்கச்சி'' என்னும் திருத்தலமாகும். இப்படிப்பட்ட காஞ்சிமாநகரில் பாண்டிய மன்னனைப் போரில் ஈடுபட்டபோது தோற்கடித்த 'திண்'

Koviloor Digital Library

என்ற உறுதியான வில்லேந்திய, இவ்வுலகத்தில் நிலைபெற்ற பல்லவ மன்னன் பணிந்திருக்கும் ''திருப்பரமேசுவரம்'' என்னும் திருத்தலம் அமைந்துள்ளது.

உரந்தரு மெல்லணைப் பள்ளிகொண் டானொரு
கால்முன்னம் மாவுரு வாய்க்கடலுள்,
வரந்தரும் மாமணி வண்ணனி டம்மணி
மாடங்கள் சூழ்ந்தழ காயகச்சி,
நிரந்தவர் மண்ணையில் புண்ணுகர் வேல்நெடு
வாயி லுகச்செரு வில்முனநாள்,
பரந்தவன் பல்லவர் கோன்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரமதுவே. 1130

முன்பு உறுதிமிக்க மென்மையான படுக்கையாகத் திகழ்கின்ற திருவனந்தாழ்வான்மீது திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் எல்லோரின் விருப்பங்களை நிறைவு செய்து கொண்டு இருக்கிறான். பெரியமணி என்னும் சிந்தாமணியின் நிறத்தினையுடைய எம்பெருமான் மணிகள் பதிக்கப் பெற்ற மாடமாளிகைகள் சூழ்ந்துள்ள அழகுமிக்க 'திருக்கச்சி' என்னும் திருத்தலத்தின் கண் உள்ள ''திருப் பரமேசுவரவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருள்கின்றான். 'மண்ணை' என்னும் படைவீட்டில் நடைபெற்ற போரில் பகைவர்களின் அகன்ற மார்புகளைப் புண்ணாக்கிக் கொன்று, வெற்றி பெற்றுள்ள பல்லவ மன்னன் பணிந்து வணங்கும் திருத்தலமே ''திருப்பரமேசுவர விண்ணகரம்'' என்னும் திருத்தலமாகும்.

அண்டமு மெண்டிசை யும்நில னுமலை
நீரொடு வானெரி கால்முதலா
உண்டவன், எந்தைபி ரானதி டமொளி
மாடங்கள் சூழ்ந்தழ காயகச்சி,
விண்டவ ரிண்டைக்கு ழாமுட னேவிரைந்
தாரிரி யச்செரு வில்முனிந்து,
பண்டொரு கால்வளைத் தான்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரமதுவே. 1131

அண்டங்கள் யாவற்றினையும் எண்திசைகளையும், இப் பூவுலகினையும் மலைகளையும், அலைவீசுகின்ற கடல்களையும்,

Koviloor Digital Library

ஆகாயம், நெருப்பு, காற்று ஆகியவைகளுடன் மற்றும் மற்றுமுள்ள பல பொருள்களையும் உண்டவனாகிய எங்கள் குலத்துத் தலைவன் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்குமிடம் எதுவென்றால் 'திருக்கச்சி' மாநகரின் கண் உள்ள ''திருப்பரமேசுவர விண்ணகர''மாகும் அழகுமிக்க ஒளி வீசுகின்ற காஞ்சிமாநகரில் போர்க்களத்தில் பகைவர்கள் சிதறி ஓடும்படியாக முன்னொரு காலத்தில் வில்லை வளைத்து வெற்றி பெற்ற பாண்டிய மன்னர்கள் பணிந்து வணங்கும் திருத்தலமே ''திருப்பரமேசுவர விண்ணகரம்'' என்னும் திருத்தலமாகும்.

தூம்புடைத் திண்கைவன் தாள்களிற் றின்துயர்
தீர்த்தர வம்வெரு வ,முனநாள்
பூம்புனல் பொய்கைபுக் கானவ னுக்கிடந்
தான்தடஞ் சூழ்ந்தழ காயகச்சி,
தேம்பொழில் குன்றெயில் தென்னவ னைத்திசைப்
பச்செரு மேல்வியந் தன்றுசென்ற,
பாம்புடைப் பல்லவர் கோன்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரமதுவே. 1132

துளையினைக் கொண்ட துதிக்கையையும், உறுதியான கால்களையும் உடைய 'கஜேந்திரன்' என்னும் யானைக்குண்டான துன்பத்தினைப் போக்கியருளி, பாம்பும் அஞ்சும்படியாகக் 'காளியன்' என்னும் பாம்பின்மீது முன்பொருகால் நீர் நிறைந்துள்ள அப்பெரிய மடுவினுள் நுழைந்து நடனமாடிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் என்பது, தேன் நிறைந்த மலர்களைக் கொண்டிருக்கின்ற சோலைகளையும் மலையையொத்த மதிற்சுவர்களையும் கொண் டிலங்குகின்ற பாண்டிய மன்னன் கலங்கும்படியாகப் போர்க்களத்தில் போரிட்டு வெற்றிபெற்ற பாம்புக் கொடியையுடை யவனான பல்லவ மன்னன் வணங்கும் திருக்கோயிலாகத் திகழ்கின்ற பொய்கைகள் சூழ்ந்த அழகான ''திருக்கச்சி'' மாநகரின்கண் அமைந்துள்ள ''திருப்பரமேசுவர விண்ணகரம்'' என்னும் திருத்தலமாகும்.

திண்படைக் கோளரி யினுரு வாய்த்திற
லோனக லம்செரு வில்முனநாள்,
புண்படப் போழ்ந்தபி ரானதி டம்பொரு
மாடங்கள் சூழ்ந்தழ காயகச்சி,

Koviloor Digital Library

வெண்குடை நீழல்செங் கோல்நடப் பவிடை
வெல்கொடி வேல்படை முன்னுயர்த்த,
பண்புடைப் பல்லவர் கோன்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரமதுவே. 1133

முன்னொரு காலத்தில் ''நரசிம்மம்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு இரணியனின் அகன்மார்வினைத் தன் கூரிய நகங்களைக் கொண்டு பிளந்து அழித்த திறமைமிக்க எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்கின்ற திருத்தலம் எதுவென்றால் மாடமாளிகைகளினால் சூழப்பெற்ற அழகிய காஞ்சி மாநகரில் வெண்கொற்றக் குடை நிழலில் இருந்து கொண்டு செங்கோல் ஆட்சிபுரிந்து வீரர்கள் முன்னே வேலேந்திச் செல்ல, பண்புமிக்க, பாம்புக் கொடியினையுடைய பல்லவமன்னன் பணிந்து வணங்கும் திருத்தலமே ''திருப்பரமேசுவர விண்ணகரம்'' என்னும் திருத்தலமாகும்.

இலகிய நீண்முடி மாவலி தன்பெரு
வேள்வியில் மாணுரு வாய்முனநாள்,
சலமொடு மாநிலங் கொண்டவ னுக்கிடந்
தான்தடஞ் சூழ்ந்தழ காயகச்சி,
உலகுடை மன்னவன் தென்னவ னைக்கன்னி
மாமதிள் சூழ்கரு வூர்வெருவ,
பலபடை சாயவென் றான்பணிந் தபர
மேச்சுர விண்ணக ரமதுவே. 1134

முன்னொரு காலத்தில் நீண்ட பெருமுடி சிறந்து விளங்குகின்ற மாபலிச் சக்கரவர்த்தியிடம் குள்ளவடிவு மேற்கொண்டு சென்று, அவன் செய்கின்ற யாகத்தின்போது வஞ்சனையாக இப்பூமியை இரந்து பெற்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் இருப்பிடமாவது, பொய்கைகள் பல சூழ்ந்து, அழகான திருக்கச்சி மாநகரின் கண் தென்னாட்டை முழுவதுமாக ஆண்ட பாண்டிய மன்னவனைப் பெரிய மதிள்கள் சூழ்ந்திருக்கின்ற 'கரூர்' என்னும் நகரில் போரிட்டு, அப்போரில் பலவிதமான படைகளும் அழியுமாறு செய்து வெற்றிபெற்ற பல்லவ மன்னன் பணிந்து வணங்கும் திருத்தலமாகிய ''திருப்பரமேசுவர விண்ணகரம்'' என்னும் திருத்தலமாகும்.

Koviloor Digital Library

குடைத்திறல் மன்னவ னாயொரு கால்குரங்
 கைப்படை யா,மலை யால்கடலை
அடைத்தவ னெந்தைபி ரானதி டம்மணி
 மாடங்கள் சூழ்ந்தழ காயகச்சி,
விடைத்திறல் வில்லவன் நென்மெலி யில்வெரு
 வச்செரு வேல்வலங் கைப்பிடித்த,
படைத்திறல் பல்லவர் கோன்பணிந் தபர
 மேச்சுர விண்ணக ரமதுவே. 1135

வெண்கொற்றக் குடையின்கீழ் அமர்ந்து நல்லாட்சி நல்கிய மன்னனாகிய ஸ்ரீஇராமபிரான் முன்னொரு காலத்தில் குரங்கு களைப் படையாகக் கொண்டு, மலைகளைக் கொண்டு வந்து கடலில் சேது அணையைக் கட்டிய என் தந்தை ஆகிய ஸ்ரீ இராம பிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற திருத்தலம் எது என்றால் மணிகள் பதித்த மாடமாளிகைகள் சுற்றிலும் நிறைந்திருக்கின்ற அழகுமிக்க திருக்கச்சி மாநகரின்கண், காளையின் மிடுக்குடன் கூடி, ''நென்மேலி'' என்னும் நகரில் உள்ள படை வீட்டில் பகைவர்கள் அஞ்சி ஓடும்படி போர்செய்து வென்ற, வேலாயுதத்தினைத் தன் வலக்கையில் பிடித்த பல்லவ மன்னன் பணிந்து வணங்கிய ''திருப்பரமேசுவர விண்ணகரம்'' என்னும் திருத்தலமாகும்.

பிறையுடை வாணுதல் பின்னை திறத்து
 முன்னொரு கால்செரு வில்லுருமின்,
மறையுடை மால்விடை யேழடல்த் தூற்கிடந்
 தான்தடஞ் சூழ்ந்தழ காயகச்சி,
கறையுடை வாள்மற மன்னர்கெ டக்கடல்
 போல முழங்கும் குரல்தருவாய்,
பறையுடைப் பல்லவர் கோன்பணிந் தயர
 மேச்சுர விண்ணக ரமதுவே. 1136

பிறைச் சந்திரனையொத்த நெற்றியைக் கொண்டுள்ள நப்பின்னைப் பிராட்டியின் பொருட்டாக, நான்கு வேதங்களுக்கும் தலைவனாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் ஏழு எருதுகளுடன் போரிட்டு, வெற்றி கொண்டு, அவைகளை அழித்தான். அத்தகைய எம்பெருமான் திருமால் பொய்கைகள் சூழ்ந்த அழகுமிக்க காஞ்சிபுரம் என்னும் திருத்தலத்தில் குறைகளைக் கொண்டுள்ள வாளேந்திய வீரமுடைய மன்னர்கள்

Koviloor Digital Library

கெட்டழியுமாறும், கடலொலி போன்று முழக்கமிடுகின்ற குரலைக் கொண்டுள்ள, பலர்க்கும் வேண்டியதை வழங்கிக் கொண்டிருக்கும் பல்லவ மன்னன் பணிந்து வணங்குகின்ற திருத்தலம் பரமேச்சுர விண்ணகரமாகும்.

*பார்மன்னு தொல்புகழ்ப் பல்லவர் கோன்பணிந்
 தபர மேச்சுர விண்ணகர்மேல்,
கார்மன்னு நீள்வயல் மங்கையர் தந்தலை
 வன்கலி கன்றிகுன் றாதுரைத்த,
சீர்மன்னு செந்தமிழ் மாலைவல் லார்திரு
 மாமகள் தன்னரு ளால்,உலகில்
தேர்மன்னா ராயொலி மாகடல் சூழ்செழு
 நீருல காண்டு திகழ்வர்களே. 1137

(சொல்லு கார் உரம் அண்டம் தூம்பு திண் இலகிய குடை பிறைபார்-மஞ்சாடு.)

உலகில் நிலைத்த பழம்பெரும் புகழைப் பெற்று விளங்கும் பல்லவ மன்னன் பணிந்து வணங்கிய ''திருப்பரமேசுவர விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தினைப் பற்றி, நெல்வயல்கள் நிறைந்திருக்கின்ற 'திருமங்கை' என்னும் நகருக்குத் தலைவனாகிய கலிகன்றி என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த, சிறப்புமிக்க நிலையான செந்தமிழ்ப் பாசுரமாலையாகிய இந்தப் பத்துப் பாசுரங்களையும் கற்றுவல்லவர்கள் திருமாமகளின் இன்னருளால் கடல் சூழ்ந்திருக்கின்ற இவ்வுலகினை, தேரில் பவனிவரும் மன்னர்களாய் இருந்து ஆட்சி செலுத்திப் பெரும்புகழுடன் திகழ்வார்கள்.

10. மஞ்சாடு
திருக்கோவலூர்
எண்சீர் ஆசிரிய விருத்தம்

*மஞ்சாடு வரையேழும் கடல்க ளேழும்
 வானகமும் மண்ணகமும் மற்று மெல்லாம்,
எஞ்சாமல் வயிற்றடக்கி யாலின் மேலோர்
 இளந்தளிரில் கண்வளர்ந்த ஈசன் றன்னை,

Koviloor Digital Library

துஞ்சாநீர் வளஞ்சுரக்கும் பெண்ணைத் தென்பால்
தூயநான் மறையாளர் சோமுச் செய்ய,
செஞ்சாலி விளைவயலுள் திகழ்ந்து தோன்றும்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே. 1138

மேகங்கள் சூழ்ந்து தவழ்ந்து கொண்டிருக்கின்ற ஏழுமலைகள், ஏழுகடல்கள், விண்ணுலகங்கள் ஏழு, மண்உலகங்கள் ஏழு மற்றுமுள்ள யாவும் சிறிதும் விட்டுவிடாமல் தன் வயிற்றில் அடக்கி வைத்து ஆலமரத்தின் இளந்தளிர்மீது திருக்கண் வளர்ந்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் குறைவிலா வளம்மிக்க நீர் நிறைந்து ஓடிக் கொண்டிருக்கும் தென்பெண்ணை ஆற்றங்கரையில், தூய்மையான நான்கு மறைகளையும் ஓதுபவர்கள் ''சோமயாகம்'' என்னும் யாகத்தினைச் செய்யச் செந்நெல் விளைகின்ற வயல்கள் நிறைந்து விளங்கும் ''திருக்கோவலூர்'' என்னும் திருத்தலத்தில் ஓங்கி உலகளந்த உத்தமனாகி வளர்ந்தருளும் காட்சியினை அடியேன் கண்டு கொண்டேன்.

கொந்தலர்ந்த நறுந்துழாய் சாந்தம் தூபம்
தீபங்கொண் டமரர்தொழப் பணங்கொள் பாம்பில்,
சந்தணிமென் முலைமலராள் தரணி மங்கை
தாமிருவ ரடிவருடும் தன்மை யானை,
வந்தனைசெய்து இசையேழா றங்கம் ஐந்து
வளர்வேள்வி நான்மறைகள் மூன்று தீயும்,
சிந்தனைசெய் திருபொழுது மொன்றும் செல்வத்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே. 1139

கொத்துக் கொத்தாக மலர்ந்துள்ள மணம்மிக்க திருத்துழாய் மலர்களையும் சந்தனத்தினையும், நறும் புகையினையும், திருவிளக்கினையும் கையில் ஏந்திக் கொண்டு தேவர்கள் வந்து வணங்கிடத் திருமகளும், பூமிப்பிராட்டியும் திருவடிகளை வருடிக் கொண்டிருக்கத் திருப்பாற்கடலில் ஆயிரம் படங்களைக் கொண்டுள்ள திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளும் எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணனை ஏழுவகையான இசைகளையும், ஆறு அங்கங்களையும், ஐந்துவிதமாக ஓங்கி வளர்கின்ற வேள்வி களையும், நான்குவிதமான வேதங்களையும் கொண்டு, மூன்று விதமான நெருப்புகளையும் கொண்டு வணங்கி, இரவு, பகல் என்னும் இரண்டு வேளையும் மனதினால் ஒன்றுபட்டு வாழ்ந்து

Koviloor Digital Library

வருகின்ற செல்வவளமிக்க ''திருக்கோவலூர்'' என்னும் திருத் தலத்தில் அடியேன் கண்டு கொண்டேன்.

கொழுந்தலரு மலர்ச்சோலைக் குழாங்கொள் பொய்கைக்
கோள்முதலை வாளெயிற்றுக் கொண்டற் கெள்கி,
அழுந்தியமா களிற்றினுக்கன் றாழியேந்தி
அந்தரமே வரத்தோன்றி யருள்செய் தானை,
எழுந்தமலர்க் கருநீல மிருந்தில் காட்ட
இரும்புன்னை முத்தரும்பிச் செம்பொன் காட்ட,
செழுந்தடநீர்க் கமலம்தீ விகைபோல் காட்டும்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே. 1140

இளந்தளிர்களும், மலர்களும் நிறைந்திருக்கின்ற சோலைகள் நிறைந்திருக்கின்ற, பூக்கள் நிறையப் பூத்திருக்கின்ற பெரியகுளம் ஒன்றனுள், முதலையின் வாள்போன்ற பற்களில் அகப்பட்டுத் தவித்துக் கொண்டிருந்த யானைக்காக, அன்று திருவாழியாழ் வானைக் கையில் ஏந்தியவாறு வான்வழி வந்து அருள்புரிந்து அந்த யானையைக் காப்பாற்றிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை நீரிலிருந்து வெளிப்பட்ட கருநெய்தல் மலரானது கருநிறம் போன்று இருக் கவும், அங்குள்ள புன்னை மரங்கள் தம் மொட்டுகளானது முத்து களைப் போன்று இருக்கவும், அஃது மலர்ந்த பின்பு பசும் பொன் போன்று இருக்கவும், வளமிக்க குளங்களில் நிறைந்துள்ள நீரினில் உள்ள தாமரைகள் விளக்கு போன்று தோற்றம் அளிக்கின்ற ''திருக்கோவலூர்'' என்னும் திருத்தலத்தில் ஓங்கி உலகளந்த உத்தமனாக வளர்ந்தருளும் திருக்காட்சியினை அடியேன் கண்டு கொண்டேன்.

தாங்கரும்போர் மாலிபடப் பறவை யூர்ந்து
தராதலத்தோர் குறைமுடித்த தன்மை யானை,
ஆங்கரும்பிக் கண்ணீர்சோர்ந் தன்பு கூரும்
அடியவர்கட் காரமுத மானான் றன்னை,
கோங்கரும்பு சுரபுன்னை குரவார் சோலைக்
குழாவரிவண் டிசைபாடும் பாடல் கேட்டு,
தீங்கரும்பு கண்வளரும் கழனி சூழ்ந்த
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே. 1141

'மாலி' என்னும் அரக்கனையும், அவனைச் சார்ந்த அரக்கர் களையும், தாங்கிக் கொள்வதற்கு இயலாத அளவுக்குப் பெரும்

Koviloor Digital Library

போரிட்டு அழிப்பதற்காகவே கருடன் மீதேறிவந்து அழித்து, இவ்வுலகத்தில் வாழ்கின்ற மக்களின் குறைகளைப் போக்கி அருளிய பேரருளாளப் பெருமானை, பக்திப் பெருக்கினால் கண்ணீர்ப் பேரமுதமாக நின்றருளுகின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை, கோங்கு மலர்களும், சுரபுன்னை மலர்களும், குரவ மரங்களும் சூழ்ந்திருக்கின்ற சோலைகளிலே உள்ள அழகிய வண்டுகள் இசைத்துப் பாடுகின்ற இன்னிசைப் பாடல்களைக் கேட்டு இனிமையை அளிக்கின்ற கரும்புகளின் கணுக்கள் முற்றிய நிலையில் வளர்கின்ற வயல்கள் சூழ்ந்துள்ள ''திருக்கோவலூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு ஓங்கி உலகளந்த உத்தமனாக வளர்ந்தருளும் திருக்காட்சியினை அடியேன் கண்டு கொண்டேன்.

கறைவளர்வேல் கரன்முதலாக் கவந்தன் வாலி
கணையொன்றி னால்மடிய விலங்கை தன்னுள்,
பிறையெயிற்று வாளரக்கர் சேனை யெல்லாம்
பெருந்தகையோ டுடன்துணித்த பெம்மான் றன்னை,
மறைவளரப் புகழ்வளர மாடந் தோறும்
மண்டபமொண் டொளியனைத்தும் வார மோத,
சிறையணைந்த பொழிலணைந்த தென்றல் வீசும்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே. 1142

இலங்கை மாநகரின்கண் குருதிக் கரைபடிந்த வேலைக்கையி லேந்திய, கரன், கவந்தன், வாலி போன்ற தீயவர்களும், ஆங்குள்ள பிற அரக்கர்களையும், ஒரே ஒரு கணையினை விட்டிட்டதனால் மடியுமாறு செய்து, அங்குள்ள பிறைச்சந்திரனைப் போன்ற வாள் போலும் கூர்மையான பற்களைப் பெற்றிருக்கின்ற அரக்கர்களின் சேனைகளையும், அவ்வரக்கர் குலத்துக்குப் பெருந்தலைவனாகத் திகழ்ந்த இராவணனின் பத்துத் தலைகளையும் அறுத்துக் கீழே தள்ளிய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானை, ஒவ்வொரு வீட்டிலும் வேதங்களை ஓதும் ஒலி மிகுந்திருக்கவும், புகழ்மிகுந்து ஓங்கி வளரவும், மண்டபங்கள், நாற்சந்திகள் போன்ற இடங்கள் எங்கும் வாரம் ஓதுதல் என்னும் பயிற்சியைச் செய்து கொண்டிருக்கக் கூடிய நிலையில், நீர் நிறைந்த அகழியினைக் கொண்டுள்ள பூஞ் சோலைகள் சூழ்ந்திருக்கின்ற வேளையில் தென்றல் காற்று தவழ்ந்து கொண்டிருக்கின்ற ''திருக்கோவலூர்'' என்னும் திருத்தலத்தில்

Koviloor Digital Library

திருக்கோயில் கொண்டு ஓங்கி உலகளந்த உத்தமனாக வளர்ந்தருளும் திருக்காட்சியினை அடியேன் கண்டு கொண்டேன்.

உறியார்ந்த நறுவெண்ணெ யொளியால் சென்றங்
　　குண்டானைக் கண்டாய்ச்சி யுரலோ டார்க்க,
தறியார்ந்த கருங்களிறே போல நின்று
　　தடங்கண்கள் பனிமல்கும் தன்மை யானை,
வெறியார்ந்த மலர்மகள்நா மங்கை யோடு,
　　வியன்கலையெண் தோளினாள் விலங்கு, செல்வச்
செறியார்ந்த மணிமாடம் திகழ்ந்து தோன்றும்
　　திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே. 1143

உறிகளில் நிறைத்து வைத்திருந்த மணம்மிக்க வெண்ணெயைச் சிரிக்கும்போது உண்டான ஒளியினாலே இருக்குமிடம் அறிந்து கொண்டு, அங்கு சென்று கண்டு அதனை உண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைக் கண்ட ஆய்க்குலப் பெண்கள் அசோதையிடம் இவன் செய்கையினைக் கூற, அசோதை உரலோடு கட்டி வைக்கக் கட்டுத்தறியில் கட்டுண்ட ஆண் யானை போன்று நின்று, இரு கண்களிலும் கண்ணீர் பெருகுமாறு அழுது கொண்டிருந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை, மணம்வீசுகின்ற தாமரை மலரில் தோன்றிய திருமகள், கலைமகள், மானை வாகனமாகக் கொண்டு எட்டுத் தோள்களையுடைய துர்க்கை, ஆகிய இவர்களெல்லாரும் திருக்கோயில் கொண்டு விளங்கிடவும், செல்வம் மிகுந்துள்ள மணிகள் பதித்த மாடங்கள் நிறைந்து விளங்குகின்ற ''திருக்கோவலூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு ஓங்கி உலகளந்த உத்தமனாக வளர்ந்தருளும் திருக்காட்சியினை அடியேன் கண்டு கொண்டேன்.

இருங்கைம்மா கரிமுனிந்து பரியைக் கீறி
　　இனவிடைக ளேழடர்த்து மருதம் சாய்த்து,
வரும்சகட மிறவுதைத்து மல்லை யட்டு
　　வஞ்சஞ்செய் கஞ்சனுக்கு நஞ்சா னானை,
கருங்கமுகு பசும்பாளை வெண்முத் தீன்று
　　காயெல்லாம் மரகதமாய்ப் பவளங் காட்ட,
செருந்திமிக மொட்டலர்த்தும் தேன்கொள் சோலைத்
　　திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே. 1144

Koviloor Digital Library

நீண்ட துதிக்கையைக் கொண்டிருக்கின்ற 'குவலயாபீடம்' என்னும் யானையைக் கொன்று அழித்த ஸ்ரீகண்ணபிரான், குதிரை வடிவில் வந்த 'கேசி'யின் வாயைப் பிளந்து, ஏழு காளைகளைக் கொன்றான், இருமருத மரங்களையும் தன்னைக் கட்டியிருந்த உரலைக் கொண்டு சாய்த்தான். வண்டிச் சக்கர வடிவில் தன்னைக் கொல்லவந்த சகடாசுரனைத் தன் கால்களால் உதைத்து அழித்தான். மல்லர்களைப் போரில் அழித்து, வஞ்சனைமிக்க கம்சனுக்கு நஞ்சான இயமன் போன்று இருந்து அழித்தான். இப்படிப்பட்ட தன்மையனான ஸ்ரீ கண்ணபிரானைக் கரியபாக்கு மரத்தின் பசுமையான பாளையானது முற்றி வெளுத்து முத்துகளைத் தந்து, அதன் காய்கள் மரகதம் போன்று விளங்கிக் கொண்டிருக்க, அதன் பழங்களெல்லாம் பவளங்கள்போல் காட்சியளித்துக் கொண் டிருக்க, அங்குள்ள சுரபுன்னை மரங்கள் தம் மொட்டுகளை மலரச் செய்கின்ற வகையில் வளம் மிகுந்த தேன் நிறைந்திருக்கின்ற சோலைகளைக் கொண்டு திகழும் திருக்கோவலூர் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு, ஓங்கி உலகளந்த உத்தமனாக வளர்ந்தருளும் திருக்காட்சியினை அடியேன் கண்டு கொண்டேன்.

பாரேறு பெரும்பாரந் தீரப் பண்டு
பாரதத்துத் தூதியங்கி, பார்த்தன் செல்வத்
தேரேறு சாரதியா யெதிர்ந்தார் சேனை
செருக்களத்துத் திறலழியச் செற்றான் றன்னை,
போரேறொன் றுடையானு மளகைக் கோனும்
புரந்தனும் நான்முகனும் பொருந்து மூர்போல்,
சீரேறு மறையாளர் நிறைந்த செல்வத்
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே. 1145

இப்பூமியில் அதிகரித்துக் கொண்டு இருக்கின்ற பெரும் பாரத்தைப் போக்குவதற்காக பாரதப் போர்க்காலத்தில் தூது சென்றும், அருச்சுனனுக்குத் தேரோட்டியாக இருந்தும் அப்போர்க் களத்தில் எதிர்த்து வந்த பகைவரின் படைகளை அதன் திறமைகள் யாவும் அழியுமாறு செய்துள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைக் காளை வாகனத்தினையுடைய சிவபெருமானும், குபேரனும், இந்திரனும், பிரம்மதேவனும் சேர்ந்து வசிக்கும் தேவருலகம்போல நற்குணம் மிக்க வேதங்களை ஓதுகின்ற அந்தணர்கள் நிறைந் திருக்கின்ற, பெருஞ்செல்வங்கள் சேர்ந்திருக்கின்ற ''திருக்

Koviloor Digital Library

கோவலூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு ஓங்கி உலகளந்த உத்தமனாக வளர்ந்தருளும் திருக்காட்சியினை அடியேன் கண்டு கொண்டேன்.

தூவடிவின் பார்மகள்பூ மங்கை யோடு
சுடராழி சங்கிருபால் பொலிந்து தோன்ற,
காவடிவின் கற்பகமே போல நின்று
கலந்தவர்கட் கருள்புரியுங் கருத்தி னானை,
சேவடிகை திருவாய்கண் சிவந்த வாடை
செம்பொன்செய் திருவுருவ மானான் றன்னை,
தீவடிவின் சிவனயனே போல்வார் மன்னு
திருக்கோவ லூரதனுள் கண்டேன் நானே. 1146

தூய்மையான வடிவுடன் திகழும் பூமிப்பிராட்டியாரோடும், திருமகள் பிராட்டியாரோடும், சுடர்விட்டு ஒளிர்கின்ற திருவாழி யாழ்வானும், திருச்சங்கமும் தன் இருகரங்களிலும் பொலிவுடன் திகழ்கின்ற கற்பகச் சோலையாக விளங்குமாறு போலே நின்று, தன்னிடம் கொண்ட பக்திப் பெருக்கினால் மனதினால் ஒன்றி நின்றிருக்கும் அடியவர்களுக்குத் தக்கவாறு அருள்புரியும் கருத்தினைக் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைச் சிவந்த திருவடிகள், திருக்கரங்கள், திருவாய், திருக்கண்கள் சிவந்த நிறத்தினையுடைய பட்டாடைகள் ஆகிய யாவும் கொண்டு சிறந்த அழகே வடிவாய் விளங்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை, நெருப்புப் பிழம்பு போன்ற வடிவினையுடைய சிவபெருமான், பிரமன் ஆகியவர்களை ஒத்தவர்கள் நிலைத்து நிற்கும் ''திருக்கோவலூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு ஓங்கி உலகளந்த உத்தமனாக வளர்ந்தருளும் திருக்காட்சியினை அடியேன் கண்டு கொண்டேன்.

*'வாரணங்கொ ளிடர்கடிந்த மாலை நீல
மரகதத்தை மழைமுகிலே போல்வான் றன்னை,
சீரணங்கு மறையாளர் நிறைந்த செல்வத்
திருக்கோவ லூரதனுள் கண்டேன்,' என்று
வாரணங்கு முலைமடவார் மங்கை வேந்தன்
வாட்கலிய னொலியைந்து மைந்தும் வல்லார்,
காரணங்க ளாலுலகங் கலந்தங் கேத்தக்
கரந்தெங்கும் பரந்தானைக் காண்பர் தாமே. 1147

Koviloor Digital Library

(மஞ்சு கொந்து கொழுந்து தாங்கு கறை உறி இருங்கை பார் தூவடிவு வாரணம் - இருந்தண்.)

''கஜேந்திராழ்வான்'' என்னும் யானைக்குண்டான துன்பத்தைப் போக்கி அருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் நீலநிற நெய்தல் பூப்போன்றுள்ள மரகதத்தைப் போன்ற நீல நிறமும், மழையைத் தருகின்ற நேரத்தின்கண் காணப்படும் மேகத்தின் நிறத்தினையும் போன்றிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை சீர்மிகுந்த ஆத்மகுணங்கள் நிறையப் பெற்றுள்ள அந்தணர்கள் வாழ்கின்ற ''திருக்கோவலூர்'' என்னும் திருத்தலத்தில் தான் கண்டு கொண்டதாகப் பருத்த முலை களையுடைய பெண்மக்கள் நிறைந்திருக்கின்ற ''திருமங்கை'' என்னும் திருநகர்க்கு மன்னனாகிய ''கலியன்'' என்னும் பெயர் கொண்ட திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங் களையும் ஓதும் வல்லமை பெற்றவர்கள், இவ்வுலகத்தவர்கள் இம்மைப் பயனை அடையும் பொருட்டு ஒன்று சேர்ந்து ஒருவர்க் கொருவர் கலந்து பேசித் துதிக்க, ஒருவரும் காணமாட்டாதவராகி மறைவாக இருந்து, அதே நேரத்தில் எங்கும் நிறைந்து இருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு அவனருள் பெற்று இன்புறுவர்.



Koviloor Digital Library

மூன்றாம் பத்து

1. இருந்தண்

திருவயிந்திபுரம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*இருந்தண் மாநில மேனம தாய்வளை
மருப்பினி லகத்தொடுக்கி,
கருந்தண் மாகடல் கண்டுயின் றவனிடம்
கமலநன் மலர்த்தேறல்
அருந்தி, இன்னிசை முரன்றெழும் அளிகுலம்
பொதுளியம் பொழிலூடே,
செருந்தி நாண்மலர் சென்றணைந் துழிதரு
திருவயிந் திரபுரமே. 1148

உலகப் பிரளயம் உண்டான காலத்தில் 'வராக' அவதாரம் மேற்கொண்டு இப்பூமியைத் தன் வளைந்த கொம்பினால் தூக்கிப் பாதுகாத்தருளி, கருத்த குளிர்ச்சி பொருந்திய பெரியதாக இருக்கின்ற திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்து அருள்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், தாமரை மலரிலுள்ள தேனை அருந்திய, வண்டுகள் இன்னிசை பாடிக் கொண்டு கூத்தாடுகின்ற சோலை களினிடையே இவ்வண்டுகள் மேன்மேலும் மதுவினை அருந்த வேண்டுமென்று எண்ணிக் கொண்டு, செருந்தி மரங்களில் மலர்ந்திருக்கின்ற மலர்களைச் சென்றணைந்து இருக்கும் வளம்மிக்க ''திருவயிந்திரபுரம்'' என்னும் திருத்தலமாகும்.

மின்னு மாழியங் கையவன் செய்யவள்
உறைதரு திருமார்பன்,
பன்னு நான்மறைப் பலபொரு ளாகிய
பரனிடம் வரைச்சாரல்,
பின்னு மாதவிப் பந்தலில் பெடைவரப்
பிணியவிழ் கமலத்து,
தென்ன வென்றுவண் டின்னிசை முரல்தரு
திருவயிந் திரிபுரமே. 1149

Koviloor Digital Library

மின்னலைப் போன்று ஒளி வீசுகின்ற திருச்சக்கரத்தை ஏந்திய திருக்கரங்களை உடையவனும், திருமகள் தங்கி வாழும் திருமார் பினையுடையவனும், நான்கு வேதங்களிலுமுள்ள அனைத்துப் பொருள்களிலும் தானேயாய் இருப்பவனுமான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது என்றால், மலைச்சாரலில் நெருங்கிய குருக்கத்திப் பந்தலில் ஆண் வண்டுகளானது தனது பெண் வண்டுகளின் வரவை நோக்கித் தாமரை மலரில் இருந்து கொண்டு 'தென்னதெனா' என்று இனிய இசையினை இசைத்துக் கொண்டிருக்கின்ற வளம் மிகுந்த ''திருவயிந்திரபுரம்'' என்னும் திருத்தலமாகும்.

வைய மேழுமுண் டாலிலை வைகிய
மாயவன், அடியவர்க்கு
மெய்ய னாகிய தெய்வநா யகனிடம்
மெய்தகு வரைச்சாரல்,
மொய்கொள் மாதவி சண்பகம் முயங்கிய
முல்லையங் கொடியாட,
செய்ய தாமரைச் செழும்பணை திகழ்தரு
திருவயிந் திரபுரமே. 1150

உலகப் பிரளய காலத்தில் ஏழு உலகங்களையும் உண்டு தன் திருவயிற்றில் அடக்கிப் பாதுகாத்துக் கொண்டு ஆலிலையில் திருக்கண் வளர்ந்தருளிய ஆச்சரியமான தன்மைகளையுடை யவனும், அடியவர்கட்கு உண்மையாகவே சேவை சாதித்து அருள்புரிந்து கொண்டிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது என்றால், இவ் வெம்பெருமானின் திருமேனி நிறத்தினை ஒத்த மலைச்சாரலில் அடர்த்தியாக நிறைந்திருக்கின்ற குருக்கத்திச் செடிகளோடும், சண்பக மரங்களோடும் தழுவிப் பின்னிப் பிணைந்து கொண்டிருக்கின்ற முல்லைக் கொடிகள் அசைந்தாடிக் கொண்டிருக்க நீர்நிலைகள் நிறைந்த வயல்களில் செந்தாமரை மலர்கள் பூத்து ஒளி வீசுகின்ற வளம்மிக்க ''திருவயிந்திரபுரம்'' என்னும் திருத்தலமாகும்.

மாறு கொண்டுடன் றெதிர்ந்தவல் லவுணன்றன்
மார்பக மிருபிளவா,
கூறு கொண்டவன் குலமகற் கின்னருள்
கொடுத்தவ னிடம்,மிடைந்து

Koviloor Digital Library

சாறு கொண்டமென் கரும்பிளங் கழைதகை
விசும்புற மணிநீழல்,
சேறு கொண்டதண் பழனம தெழில்திகழ்
திருவயிந் திரபுரமே. 1151

பகைமை கொண்டு எதிர்த்துப் போரிட்ட 'இரணியன்' என்னும் அசுரனின் மார்பினை இரண்டு கூறுகளாகப் பிளந்து அவனை அழித்து, அவனுடைய சிறந்த மகனாகிய ''பிரகலாதன்'' என்னும் தன்னுடைய அடியவனுக்கு அருள்புரிந்த எம்பெருமான் ஸ்ரீ நரசிங்கப் பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது என்றால், ஒன்றுடன் ஒன்று நெருங்கி வளர்ந்து சாறு நிறைந்த கரும்பின் கழிகள் மேன்மேலும் வளர்வதற்குத் தடங்கலாக இருக்கும் விண்ணை ஒட்டிய அளவில் உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிழலையும் தந்து, அக்கரும்பினின்றும் வழிந்தோடும் சாற்றினால் அங்குள்ள வயல்கள் எல்லாம் சேறாகிக் கிடக்கின்ற வளமான நீர் நிலைகளைக் கொண்டுள்ள ''திருவயிந்திரபுரம்'' என்னும் திருத்தலமாகும்.

ஆங்கு மாவலி வேள்வியி லிரந்துசென்
றகலிட மளந்துஆயர்,
பூங்கொ டிக்கின விடைபொரு தவனிடம்
பொன்மலர் திகழ்,வேங்கை
கோங்கு செண்பகக் கொம்பினில் குதிகொடு
குரக்கினம் இரைத்தோடி,
தேன்க லந்ததண் பலங்கனி நுகர்தரு
திருவயிந் திரிபுரமே. 1152

மகாபலிச் சக்கரவர்த்தியின் வேள்விச் சாலைக்குச் சென்று, 'வாமன' அவதாரம் மேற்கொண்டு 'மூன்றடி மண்' அளந்து தரவேண்டுமென்று இரந்து பெற்றுப் பின்பு அங்கேயே ஓங்கி உயர்ந்து வளர்ந்து உலகம் முழுவதையும் ஓர் அடியாக அளந்து கொண்டு, ஆயர்குலத் தோன்றலாகிய நப்பின்னைப் பிராட்டியை அடையும் பொருட்டு ஏழு எருதுகளையும் போரிட்டு அழித்து வெற்றிபெற்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருத்தலம் எதுவென்றால் பொன்னிற மலர்கள் நிறைய மலர்ந்துள்ள வேங்கைமரம், கோங்கு மரம், செண்பகமரம் ஆகிய மரங்களின் கொம்புகளில் குரங்குக்

Koviloor Digital Library

கூட்டங்கள் இங்குமங்கும் ஓடிக் கொண்டிருக்கின்ற அளவில் தேன்சுவை நிறைந்த பலாப்பழங்களைத் தின்று அனுபவித்துக் கொண்டிருக்கின்ற வளம் மிகுந்த ''திருவயிந்திரபுரம்'' என்னும் திருத்தலமாகும்.

கூனு லாவிய மடந்தைதன் கொடுஞ்சொலின்
திறத்திளங் கொடியோடும்,
கானு லாவிய கருமுகில் திருநிறத்
தவனிடம் கவினாரும்,
வானு லாவிய மதிதவழ் மால்வரை
மாமதிள் புடைசூழ,
தேனு லாவிய செழும்பொழில் தழுவிய
திருவயிந் திரபுரமே. 1153

கூன் விழுந்துள்ள 'கூனி' என்னும் 'மந்தரை' என்கிற ஒரு பெண்ணின் கொடிய சொற்களினாலாய கலகத்தின் காரணமாக இளங்கொடி போன்ற சீதாப்பிராட்டியோடு கானகம் சென்று நடமாடிய கருமுகில் வண்ணனாகிய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால் அழகுமிக்க ஆகாயத்தினில் உலவி வருகின்ற சந்திரன் தவழ்ந்து கொண்டிருக்கின்ற அளவு நெடிது உயர்ந்துள்ள மலைகளும், பெரிய மதிள்களும் அருகருகே சூழ்ந்திருக்கின்ற நிலையில் தேனையுண்ணும் வண்டுகள் உலவுகின்ற வளம்மிக்க சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருவயிந்திரபுரம்'' என்னும் திருத்தலமாகும்.

மின்னின் நுண்ணிடை மடக்கொடி காரணம்
விலங்கலின் மிசையிலங்கை
மன்னன், நீண்முடி பொடிசெய்த மைந்தன
திடம்மணி வரைநீழல்,
அன்ன மாமல ரரவிந்தத் தமளியில்
பெடையொடு மினிதமர,
செந்நெ லார்கவ ரிக்குலை வீசுதண்
திருவயிந் திரபுரமே. 1154

மின்னலைப் போன்ற நுண்ணிய இடையையுடையவளாகவும், மடமைக் குணமுடையவளாகவுமுள்ள சீதா பிராட்டியின் பொருட்டு மலைகளினிடையே அமைந்துள்ள இலங்கை மாநகர்க்கரசனான இராவணனின் முடிகள் பத்தினையும்

Koviloor Digital Library

பொடியாகச் செய்து அழித்த மிடுக்கான பெருமையையுடைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால் மணிமலை நிழலில் அன்னப் பறவைகள் தன் பெண் அன்னப்பறவைகளுடன் 'தாமரைமலர்' என்னும் அழகிய மென்மையான படுக்கையில் இனிதே தங்கியிருக்க அவைக்ட்குச் சாமரம் வீசுவதுபோல செந்நெற் கதிர்கள் அசைந்தாடுமளவுக்கு வளம் நிறைந்த ''திருவயிந்திரபுரம்'' என்னும் திருத்தலமாகும்.

விரைக மழ்ந்தமென் கருங்குழல் காரணம்
　　வில்லிறுத்து அடல்மழைக்கு,
நிரைக லங்கிட வரைகுடை யெடுத்தவன்
　　நிலவிய இடம்தடமார்,
வரைவ ளந்திகழ் மதகரி மருப்பொடு
　　மலைவள ரகிலுந்தி,
திரைகொ ணர்ந்தணை செழுநதி வயல்புகு
　　திருவயிந் திரபுரமே. 1155

மணம் கமழ்கின்ற மென்மையான கரிய கூந்தலையுடைய சீதாபிராட்டிக்காக சிவதனுசை முறித்த எம்பெருமான் ஸ்ரீஇராம பிரானும், பெருமழை பெய்த காலத்துக் கலக்கமுற்ற பசுக் கூட்டங்களைப் பாதுகாத்தற் பொருட்டுக் கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்துக் காத்து அருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரான் என்னும் இரு திருஅவதாரங்களை மேற்கொண்ட ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருத்தலம் எதுவென்றால், மலைவளம் மிகுந்துள்ள இடத்தில் வளரும் அகில் மரங்களையும், அங்குள்ள யானைகளின் தந்தங் களையும் நீரலைகளினாலே தள்ளிக் கொண்டு ஓடி வருகின்ற ஆறுகளின் வளங்களும், மலைகளின் வளங்களும் நிறைந்துள்ள வயல்களைக் கொண்ட வளம்மிக்க ''திருவயிந்திரபுரம்'' என்னும் திருத்தலமாகும்.

வேல்கொள் கைத்தலத் தரசர்வெம் போரினில்
　　விசயனுக் காய்,மணித்தேர்க்
கோல்கொள் கைத்தலத் தெந்தைபெம் மானிடம்
　　குலவுதண் வரைச்சாரல்,

Koviloor Digital Library

கால்கொள் கண்கொடிக் கையெழக் கமுகிளம்
பாளைகள் கமழ்சாரல்,
சேல்கள் பாய்தரு செழுநதி வயல்புகு
திருவயிந் திரபுரமே. 1156

வேலைக் கையில் ஏந்திய துரியோதனாதியர்கள் என்னும் அரசர்கள் இயற்றிய கொடுமையான பாரதப் போரின்போது, அருச்சுனனுக்கு உதவி செய்யும் பொருட்டு மணிகள் பூட்டிய தேரின் முன்னே கையில் கோலை ஏந்தி அத்தேரைச் செலுத்திய எம் பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் திருத்தலம் எதுவென்றால், மலைச்சாரல்களில் வெற்றிலைக் கால்கள் கணுக்கள்தோறும் கிளைத்து வளர்கின்ற வெற்றிலைக் கொடிகள் பெரிதும் வளர்ந்து திகழப் பாக்கு மரங்களில் பசுமைமிக்க பாளைகள் மணம் வீசுகின்ற சாரலில், சேல்கெண்டை மீன்கள் துள்ளித் திரிகின்ற ஆறானது வயல்களிடையே புகுந்து செல்கின்ற வளமிக்க ''திருவயிந்திரபுரம்'' என்னும் திருத் தலமாகும்.

*மூவ ராகிய வொருவனை மூவுல
குண்டுமிழ்ந் தளந்தானை,
தேவர் தானவர் சென்றுசென் றிறைஞ்சத்தண்
திருவயிந் திரபுரத்து,
மேவு சோதியை வேல்வல வன்கலி
கன்றி விரித்துரைத்த,
பாவு தண்டமிழ் பத்திவை பாடிடப்
பாவங்கள் பயிலாவே. 1157

(இருந்தண் மின்னும் வையம் மாறு ஆங்கு கூன் மின்னின் விரை வேல் மூவர்-ஊன் வாட.)

மகாவிஷ்ணு, பிரம்மா, சிவபெருமான் ஆகிய மூவரும் ஒருவராகி நின்ற ஸ்ரீமந்நாராயணனை, உலகப் பிரளய காலத்தில் இம்மூவுலகினையும் உண்டு தன் வயிற்றில் அடக்கிப் பாதுகாத்துப் பின்பு உமிழ்ந்து, திருவிக்கிரமனாக ஓங்கி வளர்ந்து இப்புவியினை ஓரடியால் அளந்திட்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் தேவர்களும், அசுரர்களும் சென்று சென்று பலபடியாகத் துதித்து வணங்கும் பெருமை பூண்ட எம்பெருமானைத் ''திருவயிந்திர புரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி

Koviloor Digital Library

யிருக்கும் சோதியைப் பற்றி வேல் ஏந்திய வல்லமையையுடைய 'கலிகன்றி' என்னும் திருமங்கை ஆழ்வார் விரிவாக அருளிச் செய்துள்ள எங்கும் பரந்து விளங்கும் குளிர்தமிழிலான இப் பாசுரங்கள் பத்தினையும் பயின்று பாடுபவர்களின் பாவங்கள் தொடர்ந்து வராமல் தொலைந்து போய்விடும்.

2. ஊன் வாட
திருச்சித்திரகூடம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

ஊன்வாட வுண்ணா துயிர்காவ லிட்டே[1]
உடலிற் பிரியாப் புலனைந்தும் நொந்து,
தாம்வாட வாடத் தவம்செய்ய வேண்டா
தமதா இமையோ ருலகாள கிற்பீர்,
கானாட மஞ்ஞைக் கணமாட மாடே
கயலாடு கானீர்ப் பழனம் புடைபோய்,
தேனாடமாடக் கொடியாடு தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே. 1158

1. 'உயிர்காவலிட்' என்பதும் பாடம்.

திருப்பரமபதத்தினைத் தமதாகக் கொண்டு அனுபவிக்க விரும்பும் பக்தர்களே! அத்திருப்பரமபதத்தினை அடைவதற்காகத் தன் உடலிலிருக்கும் சதைகள் வற்றி உலர்ந்து போகும்படி உண்ணா நோன்பிருந்து ஐம்புலன்களும் உடலைவிட்டுப் பிரியாத அளவில் இன்னலுறும்படியாகத் தம் உயிரைச் சிறையில் இட்டு, மிக நொந்து, நீங்கள் மிகவும் வருந்தித் தவத்தினை மேன்மேலும் செய்து கொண்டிருக்க வேண்டாம். இதற்காக இனி நாம் செய்யக் கூடியது யாது என்னின் சோலைகளில் மயில்கள் நடனமாட, அதனால் அச்சோலைகள் அசைந்து கொண்டிருக்க, அதனருகே நீரோடுகின்ற வாய்க்கால்களின் அருகேயுள்ள வயல்களில் மீன்கள் துள்ளித் திரிய தேனையுண்ட வண்டுகள் மேலே சென்று பறக்கவும், மாட மாளிகை களின்மீதுள்ள கொடிகள் அசைந்தாடிக் கொண்டிருக்கின்ற தில்லைநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியினைச் சென்று சேர்ந்து அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ இராமபிரானைச் சேவிப்பதே ஆகும்.

Koviloor Digital Library

காயோடு நீடு கனியுண்டு வீசு
கடுங்கால் நுகர்ந்து நெடுங்காலம், ஐந்து
தீயோடு நின்று தவஞ்செய்ய வேண்டா
திருமார்ப னைச்சிந்தை யுள்வைத்து மென்பீர்,
வாயோது வேதம் மல்கின்ற தொல்சீர்
மறையாளர் நாளும் முறையால் வளர்த்த,
தீயோங்க வோங்கப் புகழோங்கு தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே. 1159

''திருவாழ்மார்பன்'' என்னும் திருநாமம் கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் தன் மனதில் வைத்து எப்போதும் எண்ணிக் கொண்டு இருக்க வேண்டுமென்று கருதுகின்ற அடியவர்களே! அவனையே எண்ணிக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்காக நீங்கள் இளங்காய்களையும், முதிர்ந்து உலர்ந்த கனிகளையும் உண்டும், வெப்பம்மிக்க காற்றினை உட்கொண்டும், நீண்டகாலமாக ஐவகை வேள்வித் தீயினை ஓம்பி கடுந்தவங்களைச் செய்ய வேண்டாம். இனி நீங்கள் செய்யக் கூடியது யாதென்றால் வேதங்களைத் தம் வாயினால் ஓதிக் கொண்டு இருக்கும் இயல்பாகவே நற்குணங்கள் அமையப் பெற்ற அந்தணர்கள் வளர்த்துக் கொண்டிருக்கின்ற வேள்வித் தீயானது மேன்மேலும் ஓங்கிக் கொண்டிருக்கப் புகழ் ஓங்கி வளர்ந்து வரும் தில்லைத் திருச்சித்திரகூடம் சென்று சேர்ந்து அங்கு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ இராமபிரானைச் சேவிப்பதே ஆகும்.

வெம்பும் சினத்துப் புனக்கேழ லொன்றாய்
விரிநீர முதுவெள்ள முள்புக் கழுந்த,
வம்புண் பொழில்சூ முலகன் றெடுத்தான்
அடிப்போ தணைவான் விருப்போ டிருப்பீர்,
பைம்பொன்னு முத்தும் மணியும் கொணர்ந்து
படைமன்ன வன்பல் லவர்கோன் பணிந்த,
செம்பொன் மணிமாடங் கள்சூழ்ந்த தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே. 1160

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளைச் சென்று சேர்ந்திருக்க வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் அடியவர்களே! அவனுடைய திருவடிகளை அடைய வேண்டும் என்பதற்காக நீங்கள் இப்பரந்த உலகம் பிரளய காலத்தில் கடலிலே அழுந்திய அளவில்மிக்க சினமுடைய 'வராக' அவதாரம்

Koviloor Digital Library

மேற்கொண்டு அவ்வெள்ளத்தினுள் புகுந்து இவ்வுலகினை மீட்டுக் கொண்டுவந்து நிலைக்கச் செய்த எம்பெருமான் ஸ்ரீமந்நாரயணனின் திருவடிகளை அடைவதற்கு இனி செய்யக் கூடியது யாதெனின் பசும்பொன், முத்துகள், மணிகள் ஆகியவைகளுடன் தன் பரிவாரங் களும் சூழ்ந்திருக்கின்ற நிலையில் வந்த பல்லவ மன்னன் பணிந்து போற்றிய, செம்பொன்னாலான மணிமாடங்கள் சூழ்ந்திருக்கின்ற வளமிக்க தில்லைத் திருநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியினைச் சென்று சேர்ந்து அங்குத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ இராமபிரானைச் சேவிப்பதாகும்.

அருமா நிலமன் றளப்பான் குறளாய்
அவுணன் பெருவேள் வியில்சென் றிரந்த,
பெருமான் திருநா மம்பிதற்றி நுந்தம்
பிறவித் துயர்நீங்கு துமென்ன கிற்பீர்,
கருமா கடலுள் கிடந்தா னுவந்து
கவைநா வரவி னணைப்பள்ளி யின்மேல்,
திருமால் திருமங் கையொடாடு தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே. 1161

முன்பொரு காலத்தில் குள்ளவடிவு உடைய 'வாமன' அவதாரம் மேற்கொண்டு இப்பரந்த பெரிய பூமியை அளப்பதற்காக மாவலிச் சக்கரவர்த்தி இயற்றிக் கொண்டு இருக்கும் வேள்விச் சாலையின் முன்பு சென்று மூவடி மண்ணை யாசித்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருநாமங்களை வாயாரச் சொல்லி உம்முடைய பிறவித் துன்பத்தினைப் போக்கிக் கொள்ள வேண்டும் என்று எண்ணிக் கொண்டிருக்கும் அடியவர்களே! கரிய பெரிய கடலினுள்ளே ''திருவனந்தாழ்வான்'' எனப்படும் படுக்கையின்மீது மகிழ்வுடன் திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமான் திருமால் தன் பிராட்டியோடு எப்பொழுதும் தங்கியிருக்கின்ற தில்லைத் திருநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியினைச் சென்று சேர்ந்து, அங்குத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீ இராமபிரானைச் சேவிக்க வேண்டும் என்பதேயாம்.

கோமங்க வங்கக் கடல்வைய முய்யக்
குலமன்ன ரங்கம் மழுவில் துணிய,
தாமங் கமருள் படைதொட்ட வென்றித்
தவமா முனியைத் தமக்காக்க கிற்பீர்,

Koviloor Digital Library

பூமங்கை தங்கிப் புலமங்கை மன்னிப்
புகழ்மங்கை யெங்கும் திகழ, புகழ்சேர்
சேமங்கொள் பைம்பூழ் பொழில்சூழ்ந்த தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே. 1162

தவத்திற் சிறந்த மாமுனிவனாகத் திகழ்ந்திடும் பரசுராமர், கடல்கள் சூழ்ந்த உலகம் உய்யும் பொருட்டுக் குலமன்னர்களின் உடல்கள் அழிந்துபடும்படியாக மழு என்னும் ஆயுதத்தினால் அரச பரம்பரையெல்லாம் தேய்ந்து அழியுமாறு செய்தான். இவ்வாறு ஆவேச அவதாரம் மேற்கொண்ட ஸ்ரீமந்நாராயணனை அடைய விரும்புகின்ற அடியவர்களே! இதற்காக நீங்கள் செய்யக் கூடியது எதுவென்றால், பெரிய பிராட்டியாரும், பூமிப் பிராட்டியாரும் நிலைத்திருக்கும்படிப் புகழ்மங்கை நாடு முழுவதும் பரவியிருக்கப் புகழ் சேர்ந்த அரண்களும், பசுஞ்சோலைகளும் சூழ்ந்திருக்கின்ற தில்லைத் திருநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதி சென்று சேர்ந்து, அங்குத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீஇராமபிரானைச் சேவிக்க வேண்டும் என்பதாகும்.

நெய்வா யழலம் புதுரந்து முந்நீர்
துணியப் பணிகொண் டணியார்ந்து, இலங்கு
மையார் மணிவண் ணனையெண்ணி நுந்தம்
மனத்தே யிருத்தும் படிவாழ வல்லீர்,
அவ்வா யிளமங் கையர்பேச வுந்தான்
அருமா மறையந் தணர்சிந் தைபுக,
செவ்வாய்க் கிளிநான் மறைபாடு தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே. 1163

நெய்பூசிய கூர்மையான அம்புகளைக் கொண்டு செலுத்திக் கடல்நீரினை வற்றச்செய்து சேதுஅணைகட்டி முடித்த, மைபோன்று கருமை நிறம் கொண்ட மணிவண்ணனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை நினைத்துத் தம் மனத்தே நிலைநிறுத்தி யிருக்கும்படியாக வாழும் வல்லமை பெற்றிருக்கின்ற அடியவர் களே! அங்கு இளம்பெண்கள் காதால் கேட்டுக் கேட்டு மனப் பாடமாகச் செய்த அரிய வேதங்களைச் சொல்லிக் கொண்டிருக்க, அதனைக் கேட்டுக் கொண்டிருந்த அந்தணர்களின் மனதில் சென்று சேர, சிவந்த வாயினைக் கொண்டுள்ள கிளிகளும் அவ்வேதக் கருத்துகளைக் கேட்டு, அந்நான்கு வகையான வேதங்களையும்

Koviloor Digital Library

பாடிக் கொண்டிருக்கின்ற தில்லைநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கின்ற ஸ்ரீஇராமபிரானை நாம் சென்று சேவிக்க வேண்டும் என்பதாகும்.

மௌவல் குழலாய்ச்சி மென்தோள் நயந்து
மகரம் சுழலச் சுழல்நீர் பயந்த,
தெய்வத் திருமா மலர்மங்கை தங்கு
திருமார் பனைச்சிந்தை யுள்வைத்து மென்பீர்
கௌவைக் களிற்றின் மருப்பும் பொருப்பில்
கமழ்சந்து முந்தி நிவாவ லங்கொள்,
தெய்வப் புனல்சூழ்ந் தழகாய தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே. 1164

முல்லை மலரினைத் தம் கூந்தலிலே சூடிக் கொண்டிருக்கின்ற நப்பின்னைப் பிராட்டியின் மென்மையான தோள்களை விரும்பி, மீன்கள் சுற்றிச் சுற்றி வரும் கடலில் தோன்றிய தெய்வத்தன்மை கொண்ட தாமரை மலரில் தங்கியிருக்கின்ற திருமகள் என்றென்றும் தங்கியிருக்கின்ற திருமார்பனைத் தம் மனத்தினுள்ளே நிறுத்தி வைத்திருக்கிறோம் என்று கூறுகின்ற அடியவர்களே! பிளிறிக் கொண்டிருக்கின்ற ஆண்யானையின் தந்தங்களும், மலைகளி லிருந்து மணம் வீசுகின்ற சந்தனத்தினையும் இழுத்துக் கொண்டு வேகமாக ஓடி வருகின்ற ''வெள்ளாறு'' என்னும் நதி சூழ்ந்திருக் கின்ற அழகு மிகுந்த தில்லைநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஇராமபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும் என்பதாகும்.

மாவாயி னங்கம் மதியாது கீறி
மழைமா முதுகுன் றெடுத்து,ஆயர் தங்கள்
கோவாய் நிரைமேய்த் துலகுண்ட மாயன்
குரைமா கழல்கூ டும்குறிப் புடையீர்,
மூவா யிரநான் மறையாளர் நாளும்
முறையால் வணங்க அணங்காய சோதி,
தேவாதி தேவன் திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே. 1165

குதிரை வடிவில் வந்த 'கேசி' என்னும் அசுரனின் வாயினையும், உடலையும் பிளந்து அவனது உயிரைப் போக்கிய எம்பெருமான்

Koviloor Digital Library

ஸ்ரீகண்ணபிரான், இந்திரனால் பெய்த பெருமழையினின்றும் பசுக்கூட்டங்களைப் பாதுகாக்கும் பொருட்டுக் 'கோவர்த்தனம்' என்னும் பெரிய மலையைக் குடை"யாகப் பிடித்துப் பசுக் கூட்டங்களை மேய்த்து, இவ்வுலகத்தினையே முழுவதுமாக உண்ட ஆச்சரியமான செயல்களையுடைய எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரானின் சிறந்த திருவடிகளை அடைய விரும்பும் குறிப்புகளைக் கொண்டிருக்கின்ற அடியவர்களே! நீங்கள் அவனுடைய திருவடிகளை அடைவதற்குத் தில்லைத் திருப்பதியில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நான்கு வகை வேதங்களிலும் வல்ல மூவாயிரம் அந்தணர்கள் நாள்தோறும் வந்து வணங்கும் மேன்மையான சோதியைத் தேவாதி தேவன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் தில்லைநகர்த் 'திருச்சித்திரகூடம்' என்னும் திருப்பதி சென்று அங்குள்ள ஸ்ரீ இராமபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

செருநீல வேற்கண் மடவார் திறத்துச்
சினத்தோடு நின்று மனத்தால் வளர்க்கும்,
அருநீல பாவ மகலப் புகழ்சேர்
அமரர்க்கு மெய்தாத அண்டத்தி ருப்பீர்,
பெருநீர் நிவாவுந்தி முத்தங்கொ ணர்ந்தெங்கும்
வித்தும் வயலுள் கயல்பாய்ந் துகள,
திருநீல நின்று திகழ்கின்ற தில்லைத்
திருச்சித்ர கூடம் சென்றுசேர் மின்களே. 1166

போர்க்களத்தில் பயன்படுத்துகின்ற வேல் போன்று நீலநிறக் கண்ணழகினையுடைய பெண்களினிடத்து இன்பம் அடையாத தனால் உண்டான கோபத்தோடு நின்றுள்ள மனதில் வளர்ந்து வரும் பாவச்செயல்கள் இல்லாமற் போகும்படிச் செய்ய வேண்டும் என்றால், புகழ்மிகுந்த பிரமன் முதலிய தேவர்கள் யாவர்க்கும் கிடைத்தற்கரிய திருப்பரமபதத்தினை அடைய வேண்டும் என்று ஆசைப்பட்டுக் கொண்டிருக்கின்ற அடியவர்களே! அத்திருபரம பதத்தினைச் சென்றடைவதற்கு 'நிவா' என்னும் வெள்ளாறு முத்துகளைத் தள்ளிக் கொண்டு ஓடிவந்து, விதை விதைத்தது போலப் பரப்பி, வயல்களில் புகுவதால் மீன்வளமும் நெய்தல் பூக்களின் நீல நிறமும் நிறைந்து காணப்படுகின்ற தில்லைத் திருநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்

Koviloor Digital Library

கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீஇராமபிரானைக் கண்டு சேவிப்போம்.

*சீரார் பொழில்சூழ்ந் தழகாய தில்லைத்
திருச்சித்ர கூடத் துறைசெங்கண் மாலுக்கு,
ஆராத வுள்ளத் தவர்கேட் டுவப்ப
அலைநீ ருலகுக் கருளே புரியும்,
காரார் புயற்கைக் கலிகன்றி குன்றா
ஒலிமாலை யோரொன்ப தோடொன்றும் வல்லார்,
பாரா ருலக மளந்தா னடிக்கீழ்ப்
பலகாலம் நிற்கும் படிவாழ்வர் தாமே. 1167

(ஊன் காய் வெம்பும் அருமா கோமங்க நெய்வாய மௌவல் மாவாய் செரு சீரார்-வாட.)

சிறப்புமிக்க சோலைகள் சூழ்ந்து அழகுடன் திகழ்கின்ற திருத்தில்லைநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் செந்தாமரைக் கண்ணனுக்கு ஆராத அன்பினைத் தன் மனத்தில் சேர்த்து வைத்திருக்கின்ற அடியவர்களுக்குக் கேட்டு மகிழ்ச்சி அடையும்படியாக அலைவீசுகின்ற நீர் நிறைந்த கடலால் சூழ்ந்திருக்கின்ற இந்த உலகத்தில் வாழ்கின்றவர்களுக்கு அருளைப் புரிந்து வருகின்ற எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைப் பற்றி மேகம் போன்றுதாம் இறைவனிடத்து அனுபவித்த பக்திப் பெருக்கான அனுபவத்தினை அனைவரும் பெறுமாறு, வழங்கிய வள்ளன்மை மிக்க 'கலிகன்றி' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் ஓதவல்லவர்கள் இப்பூமியை ஓங்கி உலகளந்த உத்தமனின் திருவடிகளின் கீழ்ப்பல காலம் இருந்து அவனுக்கு அடிமை பூண்டு வாழ்வார்கள்.

3. வாட மருதிடை
திருச்சித்திரகூடம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*வாட மருதிடை போகி மல்லரைக் கொன்றொக்க லித்திட்டு,
ஆடல்வல் மாவுடைத் தாயர் ஆநிரைக் கன்றிடர் தீர்ப்பான்,
கூடிய மாமழை காத்த கூத்த னெனவரு கின்றான்,
சேடுயர் பூம்பொழில் தில்லைச் சித்திர கூடத்துள் ளானே. 1168

Koviloor Digital Library

இணையாக இருக்கின்ற இரண்டு மருதமரங்களினிடையே சென்று அவை இரண்டும் வாடி விழச் செய்து, மல்லர்களைக் கொன்று மகிழ்ச்சியுற்று, நடைபழகி ஆடிக் கொண்டு வந்த குதிரையைக் கொன்று, முன்பொரு சமயம் ஆயர்களின் பசுக் கூட்டங்களுக்குண்டான துன்பமாகிய பெருமழையினின்றும் பாதுகாத்தருளும் பொருட்டுக் 'கோவர்த்தனம்' என்னும் மலையைக் குடையாகப் பிடித்தான். இப்படிப்பட்ட தன்மைகளைக் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் வருகின்றான். ''மனம் கவர்ந்த மாயன்'' எனப் பலரும் புகழ்ந்து பேசுகின்ற பெரும் புகழோன் பூஞ்சோலைகள் நிறைந்துள்ள தில்லைநகர்த் ''திருச்சித்ர கூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கிறான்.

பேய்மகள் கொங்கைநஞ் சுண்ட பிள்ளை பரிசிது வென்றால்,
மாநில மாமகள் மாதர் கேள்வ னிவனென்றும், வண்டுண்
பூமகள் நாயக னென்றும் புலங்கெழு கோவியர் பாடி,
தேமலர் தூவ வருவான் சித்திர கூடத்துள் ளானே. 1169

''ஸ்ரீகண்ணபிரான்'' என்னும் நம் பிள்ளை, 'பூதனை' என்னும் பேயின் முலையினின்றும் நச்சு கலந்த பாலைத்தான் உண்டு, அப்பேயினை அழித்ததன் ஆச்சரியம்தான் என்னே!'' என்று புலன்களை ஈர்க்கும் அழகுமிக்க இடைக்குலப் பெண்கள், ''இக்கண்ணபிரான் இப்பூமிப்பிராட்டியின் கணவன், என்றும் வண்டுகள் தேனையுண்ணும் தாமரை மலரில் தங்கியிருக்கும் திருமகள் கேள்வன் என்றும் பாடித் துதித்துத் தேன் நிறைந்த தூய மலர்களைத் தூவிட வருகின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் தில்லைநகர்த் ''திருச்சித்ரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளான்.

பண்டிவன் வெண்ணெயுண் டானென் றாய்ச்சியர் கூடி யிழிப்ப
எண்டிசை யோரும்வ ணங்க இணைமரு தூடு நடந்திட்டு,
அண்டரும் வானத் தவரு மாயிர நாமங்க ளோடு,
திண்டிறல் பாட வருவான் சித்திர கூடத்துள் ளானே. 1170

சிறுபிள்ளையர்க இருக்கின்ற ஸ்ரீகண்ணபிரான், முன்பு ''வெண்ணெய் உண்டான்'' என்று இடைக்குலப் பெண்கள் கூடி இவனைப் பழித்துப் பேசிட, எட்டுத் திசைகளிலும் உள்ள

Koviloor Digital Library

அனைவரும் வணங்கிக் கொண்டிருக்க இணையாக இருந்த இரண்டு மருத மரங்களினிடையே நடந்து, பிரமாவும், விண்ணுலகத்திலுள்ள தேவர்களும் ஆயிரம் திருநாமங்களைக் கொண்டு இவனுடைய ஆண் தன்மையைப் பற்றிப் பாடும்படியாக வருகின்ற எம் பெருமான் ஸ்ரீகண்ணபிரான் தில்லைநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கிறான்.

வளைக்கை நெடுங்கண் மடவா ராய்ச்சிய ரஞ்சி யழைப்ப,
தளைத்தவிழ் தாமரைப் பொய்கைத் தண்டடம் புக்கண்டர் காண,
முளைத்த எயிற்றழல் நாகத் துச்சியில் நின்றது வாட,
திளைத்தமர் செய்து வருவான் சித்திர கூடத்துள் ளானே. 1171

வளையல்களை அணிந்த கைகளும், நீண்ட நெடுங்கண்களும் கொண்டுள்ள இடைக்குலப் பெண்கள் அச்சம் கொண்டு நடுங்கி, ''அங்கே செல்ல வேண்டாம் கண்ணா! இங்கே வந்துவிடு'' என்று அழைத்தும், அதனைக் கேளாமல் இந்தக் கண்ணபிரான், தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்ற பெரிய குளத்தின் கரையில் சென்று அங்குள்ள இடையர்கள் காணும்படியாக நச்சு கலந்த பற்களை உடைய 'காளியன்' என்னும் கொடிய நாகத்தின்மீது ஏறி நின்று தேவர்களும் காணும்படியாக, அது வாடிப் போகும் அளவுக்குக் கண்ணன் களிப்புடன் கூத்தாடிக் கூத்தாடிப் போரிட்டு வருகின்றவன் தில்லைநகர்த் ''திருச்சித்ரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான்.

பருவக் கருமுகி லொத்து முத்துடை மாகட லொத்து,
அருவித் திரள்திகழ் கின்ற வாயிரம் பொன்மலை யொத்து,
உருவக் கருங்குழ லாய்ச்சி திறத்தின மால்விடை செற்று,
தெருவில் திளைத்து வருவான் சித்திர கூடத்துள் ளானே. 1172

மழைபொழியும் பருவகாலத்தில் உண்டாகின்ற கருநிறமேகம், முத்துகள் நிறைந்த பெருங்கடல், ஆயிரக்கணக்கான அருவிகள் ஓடி வருகின்ற மலைகள் ஆகியவைகளை ஒத்திருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் கருங்கூந்தலைக் கொண்டிருக்கின்ற நப்பின்னைப் பிராட்டியை அடையும் பொருட்டுப் பெரிய பெரிய ஏழுகாளை களைப் போரில் வென்று வீழ்த்தினான். இப்படிப்பட்ட எம் பெருமான் ஸ்ரீகண்ணபிரான் தெருவில் மகிழ்ச்சி பொங்க

Koviloor Digital Library

வருகின்றவனே தில்லைநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளான்.

*எய்யச் சிதைந்த திலங்கை மலங்க வருமழை காப்பான்,
உய்யப் பருவரை தாங்கி யாநிரை காத்தானென் றேத்தி,
வையத் தெவரும் வணங்க அணங்கெழு மாமலை போலே,
தெய்வப்புள் ளேறி வருவான் சித்திர கூடத்துள் ளானே. 1173

ஸ்ரீஇராமபிரான் தொடுத்த அம்புகளினாலே இலங்கை மாநகரம் அழிந்தது. இந்திரனால் பெய்த பெரிய மழையைக் கண்டு கலங்கிய பசுக்கூட்டங்களைப் பாதுகாக்கும் பொருட்டுக் 'கோவர்த்தனம்' என்னும் பெரியமலையைக் குடையாகத் தூக்கித் தம் கையில் தாங்கியதனால் பாதுகாத்தான் என்று கருதி இவ்வுலகத்தவர் அனைவரும் துதித்து வணங்கிக் கொண்டிருக்க தெய்வமே மலை போன்று வருவதாகக் கருதுமாறு தெய்வத்தன்மையுடைய பெரிய திருவடி என்னும் கருடாழ்வார்மீது ஏறி வருகின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தில்லைநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளான்.

ஆவ ரிவைசெய் தறியார்? அஞ்சன மாமலை போலே,
மேவு சினத்தடல் வேழம் வீழ முனிந்து,அழ காய
காவி மலர்நெடுங் கண்ணார் கைதொழ வீதி வருவான்,
தேவர் வணங்குதண் தில்லைச் சித்திர கூடத்துள் ளானே. 1174

அஞ்சனம் போன்று கருமைநிறம் கொண்ட பெரிய மலை போன்று கோபம் கொண்டு வந்த ''குவலயாபீடம்'' என்னும் மத யானையின் சினம் கண்டு அதனை அழித்து வீழ்த்திய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் அரும்பெரும் செய்கைகளை அளவிட்டு அறியும் ஆற்றல் பெற்றவர்கள் யாவருமில்லை. இவனுடைய செயல்கள்தான் என்னே! என்று ஆச்சரியமடை கின்றனர். இப்படிப்பட்ட அரும்பெருஞ் செயல்களைச் செய்யக் கூடிய எம்பெருமான் அழகிய சிவந்த நிறமுடைய குவளை மலர் போன்ற நீண்ட கண்களையுடைய பெண்கள் கைகூப்பி வணங்கிக் கொண்டிருக்க வீதியில் வந்து கொண்டிருக்கின்ற ஸ்ரீகண்ணபிரான் தேவர்கள் வந்து வணங்குகின்ற குளிர்ச்சிமிக்க தில்லைநகர்த் 'திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளான்.

Koviloor Digital Library

பொங்கி யமரி லொருகால் பொன்பெய ரோனை வெருவ,
அங்கவ னாக மளைந்திட் டாயிரந் தோளெழுந் தாட,
பைங்க ணிரண்டெரி கான்ற நீண்ட எயிற்றொடு பேழ்வாய்,
சிங்க வுருவில் வருவான் சித்திர கூடத்துள் ளானே. 1175

முன்பொருசமயம் போர்க்களத்தில் போரிடுகின்ற பொழுது, இரணியன் அஞ்சி நடுங்கும்படியாக அவனுடைய அகன்ற மார்பினைப் பிளந்து ஆயிரம் தோள்களுடன் புடைத்து எழுந்து ஆடும்படியாக, நெருப்பை உமிழ்கின்ற திருக்கண்களுடனும் நீண்ட கோரைப் பற்களையுடைய பெரிய வாயுடனும் சிங்க உருவில் ''நரசிம்ம'' அவதாரம் மேற்கொண்டு வந்த எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் தில்லைநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளான்.

கருமுகில் போல்வதோர் மேனி கையன வாழியும் சங்கும்,
பெருவிறல் வானவர் சூழ ஏழுல கும்தொழு தேத்த,
ஒருமக ளாயர் மடந்தை யொருத்தி நிலமகள், மற்றைத்
திருமக ளோடும் வருவான் சித்திர கூடத்துள் ளானே. 1176

கருநிறம் கொண்ட மேகம் போன்ற திருமேனியினையும், திருவாழி, திருச்சங்கு ஆகியவற்றைக் கொண்ட திருக்கரங்களையும் கொண்டு, பெருமிதம் கொண்ட திறமைமிக்க தேவர்கள் சூழ்ந்து கொண்டிருக்க, ஏழுலகத்திலுமுள்ள அனைவரும் தொழுது வணங்கிப் போற்ற ஆய்க்குலப் பெண்ணாகிய ஸ்ரீ நப்பின்னைப் பிராட்டி, ஸ்ரீபூமிப்பிராட்டி, திருமகள் ஆகிய இம்மூன்று பிராட்டிமார்களுடன் வந்து கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் தில்லைநகர்த் ''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளான்.

*தேனமர் பூம்பொழில் தில்லைச் சித்திர கூட மமர்ந்த,
வானவர் தங்கள் பிரானை மங்கையர் கோன்மரு வார்தம்,
ஊனமர் வேல்கலி கன்றி யொண்டமி ழொன்பதோ டொன்றும்,
தானிவை கற்றுவல் லார்மேல் சாரகில் லாவினை[1] தாமே. 1177

(வாட பேய் பண்டு வளை பருவம் எய்ய ஆவர் பொங்கி கருமுகில் தேனமர் - ஒரு குறள்.)

தேன் நிறைந்திருப்பது கண்டு வண்டுகள் வந்தமர்கின்ற மலர்கள் நிறைந்த சோலைகளைக் கொண்டுள்ள தில்லைநகர்த்

Koviloor Digital Library

''திருச்சித்திரகூடம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை, தேவர்களுக்கெல்லாம் தலைவனாகத் திகழ்கின்ற எம்பெருமானைப் பற்றித் 'திருமங்கை' என்னும் நகருக்கு மன்ன னாகிய, உடலினுள்ளே சென்று பாயும் வேலாயுதத்தைக் கையில் ஏந்திய கலிகன்றி என்னும் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த திருப்பாசுரங்கள் பத்தினையும் கற்று வல்லவர்களிடம் தீவினைகள் என்றும் வந்து சேராது.

4. ஒரு குறளாய்
காழிச்சீராம விண்ணகரம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*ஒ[1]ருகுறளா யி[2]ருநிலம்மூ[3] வடிமண் வேண்டி
உலகனைத்து மீரடியா லொடுக்கி, ஒன்றும்
தருகவெனா மாவலியைச் சிறையில் வைத்த
தாடாளன் தாளணைவீர், தக்க கீர்த்தி
அருமறையின் திரள்நா[4]ன்கும் வேள்வி யைந்[5]தும்
அங்கங்கள் அவையா[6]று மிசைக ளேழும்,[7]
தெருவில்மலி விழாவளமும் சிறக்கும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. 1178

1. 'சாரா தீவினை' என்பதும் பாடம்.

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் முன்பொரு சமயம் மகாபலிச்சக்கரவர்த்தி நடத்திக் கொண்டிருந்த வேள்வியின் முன்னே ஒப்பற்ற குள்ளமான ''வாமன'' அவதாரம் மேற்கொண்டு தன் திரு வடிகளில் அளந்து இங்குள்ள பூமியில் மூன்றடி மண் கேட்டுப் பெற்று இந்த உலகம் முழுவதையும் இரண்டடிகளாக அளந்து விட்டு, மற்றோர் அடியான மூன்றாவது அடியை அளப்பதற்குரிய இடத்தருக! என்று கேட்க, அவன் செய்வதொன்றும் அறியாத வனாகித் தன் தலையைக் காட்டிட, எம்பெருமான் அவன் தலைமீது தன்னுடைய திருவடிகளை வைத்து பூமிக்குள்ளே அழுத்திச் சிறையில் வைத்த அந்த மேன்மையான திருவடிகளைச் சென்றடை யுங்கள். அருமறையின் பிரிவுகள் நான்கும், ஐவகை வேள்விகளும், ஆறுவகையான அங்கங்களும், ஏழுவகை இசைகளும் மிகுந்திருக்க,

Koviloor Digital Library

விழாக்கோலம் நிறைந்துள்ள வீதிகளையுடைய திருக்காழிச் சீராம விண்ணகரத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஇராமபிரானிடம் சென்று, அவன் திருவடிகளை அடைந்து உய்வு பெறுங்கள்.

நான்முகனாள் மிகைத்தருக்கை யிருக்கு வாய்மை
நலமிகுசீ ருரோமசனால் நவிற்றி, நக்கன்
ஊன்முகமார் தலையோட்டூ ணொழித்த வெந்தை
ஒளிமலர்ச்சே வடியணைவீர், உழுசே யோடச்
சூன்முகமார் வளையளைவா யுகுத்த முத்தைத்
தொல்குருகு சினையென்னச் சூழ்ந்தி யங்க,[1]
தேன்முகமார் கமலவயல் சேல்பாய் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. 1179

நான்கு முகங்களையுடைய பிரமனுக்கு ஆயுட்காலம் மிகுதியாக இருப்பதனால் உண்டான ஆணவத்தை வேதங்களில் வல்லவரான நன்மைகளை அதிக அளவில் பெற்றிருக்கின்ற 'உரோமசர்' என்னும் முனிவரால் போக்குவித்தவனும், ஊனுடைய பிரமகபாலம் என்னும் மண்டை ஓட்டினைக் கொண்டு சிவ பெருமான் பிச்சை எடுத்து, அதனால் உணவு உண்பதை ஒழித்த எம் தந்தையாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் அழகிய திருவடித் தாமரைகளை அணுக வேண்டுமென்று எண்ணியிருக்கின்ற அடியவர்களே! எருதுகளைக் கொண்டு வயல்களில் உழுகின்றபோது, சூல்கொண்ட சங்குகள் தன் அரியமுத்துகளை ஈன்றெடுக்க, அங்குள்ள குருகுகள்தான் ஈன்ற முட்டை என்று கருதி அதனைச் சுற்றிச் சுற்றி வந்து கொண்டிருக்க, எங்கும் தேன்சொரியும் தாமரை மலர்களை உடையதாகவும் 'சேல்கெண்டை' என்னும் மீன்கள் துள்ளித் திரியும்படியாகவும் உள்ள வளமிக்க வயல்களைக் கொண்ட ''திருக்காழிச்சீராம விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஇராமபிரானிடம் சென்று, அவன் திருவடிகளை அடைந்து உய்வு பெறுங்கள்.

வையணைந்த நுதிக்கோட்டு வராக மொன்றாய்
மண்ணெல்லா மிடந்தெடுத்து மதங்கள் செய்து,
நெய்யணைந்த திகிரியினால் வாணன் திண்டோள்
நேர்ந்தவன்தா ளணைகிற்பீர், நெய்த லோடு

Koviloor Digital Library

மையணைந்த குவளைகள்தங் கண்க ளென்றும்
மலர்க்குமுதம் வாயென்றும் கடைசி மார்கள்,
செய்யணைந்து களைகளையா தேறும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. 1180

கூர்மையான முனையையுடைய கொம்புகளுடன் 'வராக' அவதாரம் கொண்டு இப்பூமி முழுவதையும் தன் கொம்பின் நுனியினால் உலகப்பிரளய காலத்தில் மேலே கொண்டு வந்து பெருமிதச் செயல்களைச் செய்து, வாணாசூரன் என்னும் அசுரனின் வலிமைமிக்க தோள்களைத் தன் கூர்மையான நெய்பூசப்பெற்ற சக்கராயுதத்தினைக் கொண்டு அறுத்தெடுத்த எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் திருவடிகளை அடைய விரும்பும் அடியவர்களே! வயல்களில் உள்ள நெய்தல் மலர்கள், மையையொத்த குவளை மலர்கள் ஆகியவை போன்று தம் கண்கள் இருப்பதாகவும், குமுத மலர்கள் போன்று தம் வாய் இருப்பதாகவும் எண்ணிக் கொண்டிருக்கின்ற உழத்தியர்கள் பயிர்களினிடையேயுள்ள களைகளைக் களையாமல் கரையேறுகின்ற அளவில் நீர்வளமிக்க ''திருக்காழிச் சீராம விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானிடம் சென்று, அவன் திருவடிகளை அடைந்து உய்வு பெறுங்கள்.

பஞ்சியல்மெல்[2] லடிப்பின்னை திறத்து முன்னாள்
பாய்விடைக ளேழடர்த்தும் பொன்னம் பைம்பூண்
நெஞ்சிடந்து குருதியுக வுகிர்வே லாண்ட
நின்மலன்தா ளணைகிற்பீர், நீல மாலைத்
தஞ்சுடைய விருள்தழைப்பத் தரள மாங்கே
தண்மதியின் நிலாக்காட்டப் பவளந் தன்னால்,
செஞ்சுடர3 வெயில்விரிக்கு மழகார் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. 1181

முன்னொரு காலத்தில் செம்பஞ்சு போன்ற மென்மையான திருவடிகளைப் பெற்றிருக்கின்ற நப்பின்னைப் பிராட்டிக்காக வலிமைமிக்க ஏழு எருதுகளுடன் போரிட்டு அடக்கியவனும், பொன்னணிகளை அணிந்து கொண்டிருக்கின்ற இரணியன் என்னும் அசுரனை அவனுடைய அகன்ற மார்பினைத் தம் கூர்மையான நகங்களால் இருகூறாகப் பிளந்து அவன் நெஞ்சிலிருந்து இரத்தப் பெருக்கு எழச்செய்து, அவன் உயிரைப் போக்கியவனுமாகிய

Koviloor Digital Library

ஸ்ரீமந்நாராயணனின் திருவடித் தாமரைகளை அடைய விரும்பும் அடியவர்களே! மாடங்களில் பதித்த நீலநிற இரத்தின மாலைகள் தரும் ஒளியானது அங்கு மாலை நேரத்து இருட்டின் ஒளி போன்றும், மாடங்களின் இடையிடையே அழுத்திய முத்துகளின் ஒளியானது நிலவொளிபோலத் திகழ்ந்து விளங்கவும், அம்மாடங்களின் இடையிடைய பதித்துள்ள பவளங்களின் ஒளியானது சூரியன் புறப்படுகின்ற நேரத்தில் உண்டாகும் சிவந்த ஒளி போன்றும் சிறந்த மாடமாளிகைகளைக் கொண்டுள்ள ''திருக்காழிச்சீராம விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஇராமபிரானிடம் சென்று அடைந்து உய்வு பெறுங்கள்.

தெவ்வாய மறமன்னர் குருதி கொண்டு
திருக்குலத்தி லிறந்தோர்க்குத் திருத்தி செய்து,
வெவ்வாய மாகீண்டு வேழ மட்ட
விண்ணவர்கோன் தாளணைவீர், விகிர்த மாதர்
அவ்வாய வாள்நெடுங்கண் குவளை காட்ட
அரவிந்தம் முகங்காட்ட அருகே யாம்பல்,
செவ்வாயின் திரள்காட்டும் வயல்சூழ் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. 1182

1. 'சூழ்ந்தியங்க, எங்கும்' என்பதும் பாடம். 2. 'பஞ்சியமெல்' என்பதும் பாடம். 3. 'செஞ்சுடர்' என்பதும் பாடம்.

பகை மன்னர்களை அழித்ததனால் உண்டான இரத்தத்தைக் கொண்டு தன் குலத்து முன்னோர்களுக்கு நீர்க்கடன் செய்த ஸ்ரீபரசுராம அவதாரம் மேற்கொண்ட எம்பெருமானும், குதிரை வடிவில் வந்த 'கேசி' என்னும் அசுரனின் வாயைக் கிழித்துக் கம்சனின் 'குவலயாபீடம்' என்னும் யானையைக் கொன்ற ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்ட எம்பெருமானுமான தேவர்களின் தலைவன் ஸ்ரீமந்நாராயணனின் திருவடித்தாமரைகளை அடைய விரும்பும் அடியவர்களே! தெய்வமாதர்கள் எனத் திகழும் பெண்களின் வாள்போன்ற நெடிய கண்களை வயல்களில் மலர்ந்துள்ள குமுதமலர்கள் காட்டிடத் தாம்ரை மலர்கள் அவர்களின் முகங்களைக் காட்டிட, அதன் அருகேயுள்ள செவ்வாம்பல் மலர்கள் அவர்களின் சிவந்த வாயினைக் காட்டவும்படி அமைந்துள்ள வளம்மிக்க நகரான ''திருக்காழிச்சீராம விண்ணகரம்'' என்னும்

Koviloor Digital Library

திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஇராமபிரானைச் சரணடைந்து அவன் திருவடிகளைப் பற்றி உய்வு பெறுங்கள்.

பைங்கண்விறல் செம்முகத்து வாலி மாளப்
படர்வனத்துக் கவந்தனொடும் படையார் திண்கை,
வெங்கண்விறல் விராதனுக விற்கு னித்த
விண்ணவர்கோன் தாளணைவீர், வெற்புப் போலும்
துங்கமுக மாளிகைமே லாயங் கூறும்
துடியிடையார் முகக்கமலச் சோதி தன்னால்,
திங்கள்முகம் பனிபடைக்கு மழகார் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. 1183

பசுமையான கண்களும் சிவந்த முகமும் கொண்ட 'வாலி' என்னும் குரக்கினத்து அரசனை மாளச் செய்தும், காட்டில் ''கவந்தன்'' என்னும் அரக்கனை அவனது படைகளுடன் அழிக்கச் செய்தும், பலவிதமான ஆயுதங்களைக் கையிலேந்தியும், கொடிய கண்களையுமுடைய விராதன் என்பவனையும் அழிக்கச் செய்த வனுமான வில்லைத் தன் திருக்கரங்களில் ஏந்திய ஸ்ரீஇராமபிரான் தேவர்களுக்கெல்லாம் தலைவனின் திருவடித் தாமரைகளை அடைய விரும்பும் அடியவர்களே! மலை போலும் உயர்ந்த முகத்தையுடைய மாளிகைகளின் மேலே இருந்து கொண்டு கூடிக் கூடி நட்பாகப் பேசிக் கொண்டிருக்கும் 'துடி' என்னும் பறை போன்று நுண்ணிய இடையையுடைய மாதர்களின் முகத்தாமரை ஒளிக்குத் தோற்றுப்போன சந்திரனின் முகம் வருத்தமுற்றதனால் பனித்துளிகள் போன்ற கண்ணீரைச் சொரிகின்ற வளமிக்க ''திருக் காழிச்சீராம விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஇராமபிரானிடம் சென்று அவன் திருவடிகளை அடைந்து உய்வு பெறுங்கள்.

பொருவில்வலம் புரியரக்கன் முடிகள் பத்தும்
புற்றுமறிந் தனபோலப் புவிமேல் சிந்த,
செருவில்வலம் புரிசிலைக்கை மலைத்தோள் வேந்தன்
திருவடிசேர்ந் துய்கிற்பீர், திரைநீர்த் தெள்கி[1]
மருவிவலம் புரிகைதைக் கழியூ டாடி
வயல்நண்ணி மழைதருநீர் தவழ்கால் மன்னி,
தெருவில்வலம் புரிதரள மீனும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. 1184

Koviloor Digital Library

போரிடுவதில் வலிமை பெற்ற 'இராவணன்' என்னும் அரக்கனின் பத்துத் தலைகளும் புற்று சரிந்ததைப் போன்று இப்பூமியின்மீது சிதறிவிழச் செய்த, போரில் வெற்றியையே தரும் வலிய வில்லைத் தம் திருக்கரங்களிலே ஏந்தி இருக்கின்ற, மலை போன்ற திருத்தோள்களை உடைய சக்கரவர்த்தித் திருமகனாகிய ஸ்ரீஇராமபிரானின் திருவடித் தாமரைகளை அடைய விரும்பும் அடியவர்களே! கடல் அலைகளால் வேகமாக வெளியே தள்ளப் பட்ட வலம்புரிச் சங்குகள் தாழைக் கழிகளினுள்ளே புகுந்து, வயல்களில் நுழைந்து, மழைநீர் ஓடி வருகின்ற கால்வாய்களின் வழியாகத் தெருக்களில் அவ்வலம்புரிச் சங்குகளையும் முத்து களையும் ஒருங்கே கொண்டு வந்து சேர்க்கும் வளம் மிகுந்த ''திருக்காழிச்சீராம விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீஇராமபிரானிடம் சென்று அவன் திருவடித்தாமரைகளை அடைந்து உய்வு பெறுங்கள்.

பட்டரவே ரகலல்குல் பவளச் செவ்வாய்
பணைநெடுந்தோள் பிணைநெடுங்கண் பாலா மின்சொல்,
மட்டவிழுங் குழலிக்கா வானோர் காவில்
மரங்கொணர்ந்தா ணடியணைவீர், அணில்கள் தாவ
நெட்டிலைய கருங்கமுகின் செங்காய் வீழ
நீள்பலவின் தாழ்சினையில் நெருங்கு, பீனத்
தெட்டபழம் சிதைந்துமதுச் சொரியும் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. 1185

பாம்புப் படம் போன்ற அகன்ற அல்குலையுடைய, பவளம் போன்ற சிவந்த வாயுடன் கூடிய, மூங்கில் போன்ற தோள்களும், மான் போன்ற நீண்ட கண்களும், பாலினும் இனிய சொற்களும், தேனைச் சொரிகின்ற மலர்களைச் சூடிக் கொண்டிருக்கும் கூந்தலையும் கொண்டிருக்கின்ற சத்தியபாமைக்காகத் தேவருல கிலிருந்து வளரும் சோலைகளினிடையேயுள்ள பாரிஜாத மலரைக் கொண்டுள்ள மரத்தைக் கொண்டு வந்த ஸ்ரீகண்ணபிரானின் திருவடிகளை அடைய விரும்பும் அடியவர்களே! பாக்கு மரங்களில் அணில்கள் தாவிக் குதித்தோடுவதால் அதன் காய்கள் கீழே உதிர்ந்து அங்குள்ள பெரிய பலாமரத்தின்மீது விழ, அம்மரக்கிளைகளில் பழுத்துள்ள பலாப் பழங்கள் சிதைந்து தேன் கூட்டின்மீது விழ அஃது தேனைச் சொரிய வளம்மிக்க ''திருக்காழிச்சீராம

Koviloor Digital Library

விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஇராமபிரானிடம் சென்று அவன் திருவடிகளை அடைந்து உய்வு பெறுங்கள்.

பிறைதங்கு சடையானை வலத்தே வைத்துப்
பிரமனைத்தன் னுந்தியிலே தோற்று வித்து,
கறைதங்கு வேல்தடங்கண் திருவை மார்பில்
கலந்தவன்தா ளணைகிற்பீர், கழுநீர் கூடித்
துறைதங்கு கமலத்துத் துயின்று கைதைத்
தோடாரும் பொதிசோற்றுச் சுண்ணம் நண்ணி,
சிறைவண்டு களிபாடும் வயல்சூழ் காழிச்
சீராம விண்ணகரே சேர்மி னீரே. 1186

1. *'திரைநீத்தெள்கி' என்பதும் பாடம்.*

பிறைச் சந்திரனைக் கொண்டுள்ள சடைமுடியையுடைய சிவபெருமானைத் தன் வலப்பக்கத்தில் வைத்துக் கொண்டு, பிரமதேவனைத் தன் கொப்பூழிலிருந்து உண்டாக்கிக் கறையையுடைய வேல் போன்ற கூர்மையான நீண்ட அழகிய கண்களையுடைய திருமகளைத் தன் மார்பிலே வைத்துக்கொண்டு இருக்கின்ற ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளை அடைய விரும்பும் அடியவர்களே! வண்டுகள் செங்கழுநீர்ப் பூக்களில் தன் பெடையோடு சேர்ந்திருந்ததனாலுண்டான துன்பங்கள் நீங்கும்படியாக அங்குள்ள நீர் நிலைகளில் பூத்திருக்கும் தாமரை மலர்களினுள்ளே புகுந்து அம்மலர்களிலுள்ள தேனையுண்டு அங்கேயே உறங்கி விழித்த பின்பு தாழை மடல்களிலுள்ள மகரந்தத் தூளில் புரண்டு, மகிழ்ச்சியுற்று இசைபாடுகின்ற அளவுக்கு வளம்மிக்க ''திருக்காழிச்சீராம விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீஇராமபிரானிடம் சென்று, அவன் திருவடிகளை அடைந்து உய்வு பெறுங்கள்.

*செங்கமலத் தயனனைய மறையோர் காழிச்
சீராம விண்ணகரென் செங்கண் மாலை
அங்கமலத் தடவயல்சூ ழாலி நாடன்
அருள்மாரி அரட்டமுக்கி அடையார் சீயம்
கொங்குமலர்க் குழலியர்வேள் மங்கை வேந்தன்
கொற்றவேல் பரகாலன் கலியன் சொன்ன
சங்கமுகத் தமிழ்மாலை பத்தும் வல்லார்
தடங்கடல்சூ ழுலகுக்குத் தலைவர் தாமே. 1187

Koviloor Digital Library

(ஒரு குறள் நான்முகன் வை பஞ்சியல் தெவ்வாய பைங்கண் பொருவில் பட்டு பிறை செங்கமலத்து - வந்து.)

செந்தாமரை மலரில் தோன்றிய பிரமதேவனையொத்த மறையோதும் அந்தணர்கள் நிறைந்து வாழ்ந்து வருகின்ற ''திருக்காழிச்சீராம விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைப் பற்றித் தாமரைமலர்கள் நிறைந்திருக்கும் வயல்களால் சூழ்ந்திருக்கின்ற 'திருவாலி' என்னும் திருநகர்க்குத் தலைவனாகத் திகழ்கின்ற, அருள்பொழிகின்ற மேகமாகி நின்று, தீமை செய்யும் பகைவர்களை மீண்டும் தலை எடுக்க ஒட்டாமல் அடக்கியாள்பவரும், பகைவர் கட்குச் சிங்கம் போன்றவரும், கொங்கு மலர்சூடிய கூந்தலை யுடைய மாதர்களுக்கு மன்மதனாகத் தோன்றும் 'திருமங்கை' நகர்க்கு மன்னனான 'பரகாலன்', 'கலியன்' என்னும் பல திருநாமங் களைக் கொண்டிருக்கும் திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த சங்கத் தமிழ் மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் கற்று வல்லவர்களாக இருப்பவர்கள் கடல் சூழ்ந்திருக்கின்ற இவ்வுலகில் இருப்பவர்களுக்கெல்லாம் தலைவராகத் திகழ்வர்.

5. வந்து
திருவாலி

ஆசிரியத் துறை

*வந்துன தடியேன் மனம்புகுந்தாய்
புகுந்ததற்பின் வணங்கும்,என்
சிந்தனைக் கினியாய்! திருவே!என் னாருயிரே,
அந்தளி ரணியா ரசோகி ளிளந்தளிர்கள்
கலந்து, அவை யெங்கும்
செந்தழல் புரையும் திருவாலி யம்மானே! 1188

அசோக மரத்தில் அழகு மிகுந்த இளந்தளிர்கள் எங்கும் நிறைந்திருக்கின்ற காரணத்தினால் எங்கு நோக்கினும் சிவந்த நெருப்புபோல் விளங்கிடும் ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! என் செல்வமே! என்னுடைய அருமையான உயிர் போன்றவனே! அடியேன் வந்து உன்னை அடைவதற்காக எண்ணிக்

Koviloor Digital Library

கொண்டிருக்கின்ற அதே நேரத்தில் நீயே வந்து உன் அடிமை பூண்ட என் மனத்தில் புகுந்து தங்கினாய்! அவ்வாறு என் மனதில் புகுந்த பின்பு உன்னை வணங்குகின்ற அடியேனின் இதயம், எப்பொழுதும் உன்னைவிட முடியாத அளவுக்கு ஏற்பட்டு அவ்வன்பு இனிமை யாயிற்று.

நீலத் தடவரை மாமணி நிகழக்
கிடந்ததுபோல், அரவணை
வேலைத் தலைக்கிடந்தா யடியேன் மனத்திருந்தாய்,
சோலைத் தலைக்கண மாமயில் நடமாட
மழைமுகில் போன்றெழுந்து, எங்கும்
ஆலைப் புகைகமழும் அணியாலி யம்மானே! 1189

கரும்புச்சாற்றினைப் பிழிந்தெடுத்துக் காய்ச்சுகின்றபோது உண்டாகும் கரும்பாலையின் புகைமணம் கமழ்கின்ற நிலை எப்படிப்பட்டது என்றால் சோலைகளில் கூடியிருக்கின்ற மயில்கள் அப்புகை மண்டலத்தினை மழையைப் பொழிகின்ற மேகம் போன்றுள்ளது என்று ஆடுகின்ற அழகுமிக்க 'திருவாலி' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! மணிகள் பலவற்றைப் பதித்த நீலமலை சாய்ந்து கிடந்ததுபோல, நின்திருமார்பில் கௌத்துப மாலை விளங்கிக் கொண்டிருக்கத் தேவரீர் திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந் தருள்கின்றீர்! அப்படிப்பட்ட அரவணைப் பள்ளியைவிட்டு இப்பொழுது அடியேனின் மனத்தில் வந்து புகுந்ததன் நீர்மைத் தன்மைதான் என்னே!

நென்னல்போய் வருமின்றென் றெண்ணி
யிராமையென் மனத்தே புகுந்தது,
இம்மைக்[1]கென் றிருந்தே னெறிநீர் வளஞ்செறுவில்,
செந்நெற் கூழை வரம்பொரீஇ யரிவார்
முகத்தெழு வாளைபோய், கரும்பு
அந்நற் காடணையும்[2] அணியாலி யம்மானே! 1190

1. *'இன்மைக்கு' என்பதும் பாடம்.*
2. *'அன்னற்காடணையும்' என்பதும் பாடம்.*

நீர்வளம் மிக்க வயல்களில் வளர்ந்து வருகின்ற செந்நெற் பயிர்களின் நுனிகளை வரப்புகளில் சேர்த்து அறுத்து எடுக்கின்ற

Koviloor Digital Library

வரின் முகத்தில் வேகமாக வந்து பாயும் வாளைமீன்கள் குதித்தோடிச் செடிகள் நிறைந்திருக்கின்ற கரும்புகள் நிறையவே விளைந்திருக்கின்ற கருப்பங்காட்டினைச் சார்ந்திருக்கும் 'திருவாலி' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் என் அம்மானே! அடியேன் ''நேற்று சென்றது; இன்று வந்தது; நாளை வரும்'' என்றெல்லாம் மனம் கலங்கிக் கொண்டிருக் காமல், எதிர்பாராமல் அடியேனின் மனத்தினுள்ளே நீ புகுந்துள்ள அற்புதச் செயல் என் மனதிற்கு மிகவும் இனிமையானது அன்றோ!

மின்னில் மன்னு நுடங்கிடை மடவார்தம்
சிந்தை மறந்து வந்து,நின்
மன்னு சேவடிக்கே மறவாமை வைத்தாயால்,
புன்னை மன்னு செருந்தி வண்பொழில்
வாயகன் பணைகள் கலந்தெங்கும்,
அன்னம் மன்னும் வயலணி ஆலி யம்மானே! 1191

புன்னை மரங்களும், செருந்தி மரங்களும் நிறைந்த சோலைகளினிடையேயுள்ள விசாலமான பொய்கைகளில் அன்னப் பறவைகள் கூடிக் கலந்து மகிழ்ச்சியாக இருக்கும் சிறப்பும் நீர்வளம் மிக்க வயல்கள் நிறைந்திருக்கின்ற ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம் பெருமானே! மின்னல் போன்று நுண்ணிய இடையையுடைய இடைக்குலப் பெண்களிடத்தே உண்டான ஆசையை மறந்துவிட்டு, இங்கு வந்து உன்னுடைய நிலைபெற்ற ஒரே வடிவான திருவடிகளை அடியேன் மறவாதிருக்குமாறு அடியேனுக்கருள் புரிந்தது தான் என்னே!

நீடு பன்மலர் மாலையிட்டு நின்னிணையடி
தொழுதேத்தும், என்மனம்
வாட நீநினையேல் மரமெய்த மாமுனிவா,
பாட லின்னொலி சங்கி னோசை பரந்து
பல்பணை யால்மலிந்து, எங்கும்
ஆட லோசையறா அணியாலி யம்மானே! 1192

பக்திமிக்க பாடல்களைப் பாடுகின்ற இனிய இசையும், சங்கு ஒலிக்கின்ற ஒலியும் எங்கும் பரவிக் கேட்டுக் கொண்டிருக்கப் பல்வகை வாத்திய ஒலிகளும், நடனமாடுபவர்களின் இனிய ஓசையும் எங்கும் பரந்து ஒலிக்க இவைகளில் எக்காலத்தும் மாற்றம்

Koviloor Digital Library

ஏதும் இல்லாத அழகுமிக்க ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! மராமரங்கள் ஏழின்மீதும் அம்புவிட்டுத் துளைத்தெடுத்து ஒன்று படுத்திய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! உன் இணைத் திருவடிகள் இரண்டிலும் நீண்டகாலமாகப் பலவகையான மலர்களை மாலை களாகத் தொடுத்துச்சமர்ப்பித்து வணங்கித்துதித்துக் கொண்டிருக்கின்ற அடியேனின் மனம், உன் பிரிவினால் வாடுகின்ற நிலையை நீ அடியேனுக்கு உண்டாகாதவாறு பாதுகாத்தருள வேண்டும்.

கந்த மாமல ரெட்டுமிட்டு நின்காமர்
　　சேவடி கைதொழுதெழும்,
புந்தியேன் மனத்தே புகுந்தாயைப் போக லொட்டேன்,
சந்தி வேள்வி சடங்கு நான்மறை
　　ஓதி யோதுவித் தாதி யாய்வரும்,
அந்த ணாள ரறாவணியாலி யம்மானே! 1193

சந்தியாவந்தனம், வேள்விகள், அதற்குண்டான சடங்கு முறைகள், வேதங்கள் ஆகிய நான்கு மறைகளைத் தாம் ஓதியும், அவைகளைப் பிறருக்கு ஓதுவித்தும், மாற்றம் என்ற எதுவு மில்லாமல் ஆதிகாலம் தொட்டு இருந்துவரும் பழைய பழக்க வழக்கங்களான மரபினை என்றென்றும் நிலைநாட்டிக் கொண் டிருக்கும் அந்தணர்கள் நிலைத்து வாழ்கின்ற ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! மணம்மிக்க எண்வகைப் பூக்களையும் உன் திருவடிகளிலே சமர்ப்பித்துக் கைகூப்பி வணங்கித் துதிக்க விரும்பும் அடியேனின் மனத்தினுள்ளே, நீயாகவே விரும்பி வந்து புகுந்த பின்பும், இனி எப்போதும் அடியேன், என்னைவிட்டுப் போவதற்கு ஒருபோதும் சம்மதிக்கமாட்டேன்.

உலவுதிரைக் கடற்பள்ளி கொண்டு வந்துன்
　　அடியேன் மனம்புகுந்த,அப்
புலவ! புண்ணிய னே!புகுந் தாயைப் போகலொட்டேன்,
நிலவு மலர்ப்புன்னை நாழல் நீழல்
　　தண்டாமரை மலரின் மிசை,மலி
அலவன் கண்படுக்கும் அணியாலி யம்மானே! 1194

மலர்கள் நிறைந்திருக்கின்ற புன்னை, நாழல் ஆகிய மரங்களின் நிழலில், குளிர்ந்த தாமரை மலரில் பெரிய ஆண் நண்டுகள் உறங்கிக்

Koviloor Digital Library

கொண்டிருக்கின்ற சிறப்பும் நீர்வளமும் மிகுந்துள்ள ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் எம்பெருமானே! அலைவீசுகின்ற திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்தருள்கின்ற நீ அங்கிருந்தும் ஓடிவந்து உன் அடியவனான இவ்வடியேனின் மனத்தினுள் புகுந்து நிற்கும் அனைத்தும் அறிந்துள்ள புலவர் பெரும! என்னுடைய புண்ணிய வடிவானவனே! அடியேனிடத்தில் வந்து புகுந்த உன்னை வேறெங்கும் செல்லவிடமாட்டேன்.

சங்கு தங்கு தடங்கடல் கடன்மல்லை
யுள்கிடந்தாய், அருள் புரிந்து
இங்கென்னுள் புகுந்தா யினிப்போயி னாலறையோ,
கொங்கு செண்பக மல்லிகை மலர்புல்கி
இன்னிள வண்டு போய்,இளந்
தெங்கின் தாதளையும் திருவாலி யம்மானே! 1195

இனிய ஓசையை ஒலிக்கும் இளம்வண்டுகள் மணம் வீசுகின்ற செண்பகம், மல்லிகை போன்ற மலர்களைத்தழுவி, அம்மலர்களிலுள்ள மதுவை அருந்தியதனால் உண்டான தம் வெம்மையைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு, இளமையான தென்னை மரத்தில் சென்று அங்குள்ள பூக்களிலுள்ள மகரந்தப் பொடியினை அளையும் வளம்மிக்க ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந் தருளும் எம்பெருமானே! சங்குகள் நிறைந்துள்ள திருப்பாற்கடலிலும், திருக்கடல் மல்லையிலும் பள்ளி கொண்ட பெருமானே! நீ அடியேனின் நெஞ்சினுள் புகுந்தாய்! நீயே என் நெஞ்சினின்றும் ஒருவேளை பிரிந்தாலும் அப்பிரிவினைத் தாங்கிக் கொள்ள இயலாமல் நீ மீண்டும் அடியேனின் நெஞ்சினுள்ளே வந்து புகுந்து கொள்வாய்! ஆகையினால் எவ்வகையிலும் அடியேனுக்கே வெற்றி கிடைத்தது. எனவே ''அறையோ! அறை!'' என்றுரைக்கின்றேன்.

ஓதி யாயிர நாமமும் பணிந்தேத்தி
நின்னடைந் தேற்கு,ஒரு பொருள்
வேதியா! அரையா! உரையாய் ஒருமாற்ற மெந்தாய்,
நீதி யாகிய வேதமா முனியாளர்
தோற்ற முரைத்து, மற்றவர்க்
காதியாய் இருந்தாய்! அணியாலி யம்மானே! 1196

Koviloor Digital Library

நீதி நெறிமுறைகளை எடுத்து உரைக்கின்ற வேதம், அதன் மந்திரங்கள் ஆகியவைகளை எடுத்தோதும் பிரமன் முதலிய முனிவர்களின் தோற்றத்தினை எடுத்துக்கூறி, அனைவருக்கும் ஆதிமூர்த்தியாகி நின்ற ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமானே! உன்னுடைய ஆயிரம் திருநாமங்களையும் எடுத்தோதி, பணிந்துப் போற்றி வணங்கி நின்னை அடைந்துள்ள அடியேனுக்கு நீயே நெறியாக நிற்கும் ஒரு உயர்ந்த ஒரு பொருளைக் கூறி அருள்புரிதல் வேண்டும். வேதங்களால் அனைவரும் விவரிக்கப்படும் எம்இறைவனே! என் குறும்புச் செயல்களை அறுத்தெடுத்த எம்பெருமானே! அடியேனுக்குகந்த மாற்றுக் கருத்தைக் கூறி அருள்புரிதல் வேண்டும்.

*புல்லி வண்டறையும் பொழில் புடைசூழ்
தென்னாலி யிருந்த மாயனை,
கல்லின் மன்னு திண்டோள் கலிய னொலிசெய்த,
நல்ல இன்னிசை மாலை நாலுமோ
ரைந்துமொன் றும்நவின்று, தாமுடன்
வல்ல ராயுரைப் பார்க்கிட மாகும் வானுலகே. 1197

(வந்து நீல நென்னல், மின்னில் நீடு கந்தம் உலவு சங்கு ஓதி புல்லி-தூவிரிய.)

வண்டுகள் ஒன்றினையொன்றும் தழுவிக் கொள்ளும், இசை பாடுகின்ற பூஞ்சோலைகள் நிறைந்துள்ள அழகிய வளம்மிக்க ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் ஆச்சரியமான செயல்கள் பலவற்றைச் செய்தருளும் எம்பெருமான் மாயன் ஸ்ரீகண்ணபிரானைப் பற்றி மலை போன்ற தோள்களை யுடைய 'கலிகன்றி' என்னும் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் பயின்று, பொருளுணர்ந்து வல்லவராகி நின்று பிறர்க்கு எடுத்துரைப்பவர்களுக்கு விண்ணுலகிலுள்ள ''திருப்பரமபதமே'' உரிய தகுதியான இடமாகும்.



Koviloor Digital Library

6. தூவிரிய
திருவாலி

கொச்சகக் கலிப்பா

*தூவிரிய மலருழக்கித் துணையோடும் பிரியாதே,
பூவிரிய மதுநுகரும் பொறிவரிய சிறுவண்டே,
தீவிரிய மறைவளர்க்கும் புகழாளர் திருவாலி,
ஏவரிவெஞ் சிலையானுக் கென்னிலைமை யுரையாயே. 1198

மலர்களில் தன் சிறகுகள் விரியும்படி அம்மலரை மிதித்து தேனைப் பருகியவாறே, தன் துணையான பெடையினின்றும் பிரியாமல் அங்குள்ள மலர்கள் மலர, அவற்றிலுள்ள தேனை அனுபவித்துக் கொண்டிருக்கின்ற புள்ளிகளும் வரிகளும் உடைய சிறிய வண்டே! வேள்வித் தீ கொழுந்துவிட்டு மேல்நோக்கிச் செல்லும் அளவுக்கு எரிகின்ற வகையில் வேதங்கள் கூறும் முறைப்படிக்குச் சற்றும் குறைவின்றி வேள்வியினை வளர்த்துக் கொண்டிருக்கும் பெரும்புகழுடன் வாழ்ந்து வருகின்ற அந்தணர்கள் இருந்து வாழும் ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தொடுக்கப் பெறுபவர்களுக்கு அழகாகவும், பகைவர்களுக்குக் கொடியதாகவும் உள்ள அம்புடன் கூடிய வில்லேந்திய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானிடம் எனக் குண்டாகிய துன்பத்தை எடுத்துக் கூறுவாயாக!

பிணியவிழு நறுநீல மலர்கிழியப் பெடையோடும்,
அணிமலர்மேல் மதுநுகரும் அறுகால சிறுவண்டே,
மணிகெழுநீர் மருங்கலரும் வயலாலி மணவாளன்,
பணியறியேன் நீசென்றேன் பயலைநோ யுரையாயே. 1199

'போது' என்ற நிலையினின்றும் 'மலர்' என்னும் நிலைக்கு மாறி வருகின்ற நறுமணம்மிக்க நீலோற்ப மலர்களின் இதழ்கள் விரிவு அடையத்தன் பெடையுடன் சேர்ந்து கொண்டு அழகிய மலர் களின்மீது அமர்ந்து கொண்டு தேனை அருந்துகின்ற ஆறுகால் களையுடைய சிறிய வண்டே! அழகிய செங்கழுநீர்ப்பூக்கள் நான்கு பக்கங்களிலும் மலர்ந்திருக்கின்ற வளம்மிக்க வயல்களையுடைய ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந் தருளியிருக்கின்ற அழகிய மணவாளப் பெருமாளின் செயல்பாடு

Koviloor Digital Library

களை நான் அறியேன். எனவே, நீ அவரிடம் சென்று எனக்கு உண்டாகியிருக்கின்ற இப்பசலை நோய் பற்றி எடுத்துக் கூறுவாயாக.

நீர்வானம் மண்ணெரிகா லாய்நின்ற நெடுமால்,தன்
தாராய நறுந்துளவம் பெருந்தகையெற் கருளானே,
சீராரும் வளர்பொழில்சூழ் திருவாலி வயல்வாழும்,
கூர்வாய சிறுகுருகே! குறிப்பறிந்து கூறாயே. 1200

நீர், ஆகாயம், மண், தீ, காற்று ஆகிய ஐம்பெரும் பூதங்களாகத் திகழ்கின்ற எம்பெருமான் நெடிய திருமால் தன்னுடைய மணம் மிக்க திருத்துழாய் மாலையைப் பெருந்தகுதி கொண்ட எனக்கு அளித்து அருளுகின்றான் இல்லை. சோலைகளால் சூழப் பட்டிருக்கும் ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எம்பெருமானின் திருவுளத்தை அறிந்து கொள்ளக் கூடிய, வளம்மிக்க வயல்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் கூர்மையான அலகுகளையுடைய சிறிய குருகே! நீ என் பொருட்டு எம்பெரு மானிடம் சென்று என்னைப் பற்றிய அவரின் திருவுள்ளக் கருத்தை அறிந்து வந்து, எனக்குக் கூற வேண்டும்.

தானாக நினையானேல் தன்னினைந்து நைவேற்கு,ஓர்
மீனாய கொடிநெடுவேள் வலிசெய்ய மெலிவேனோ?,
தேன்வாய வரிவண்டே! திருவாலி நகராளும்,
ஆனாயற் கென்னுறுநோ யறியச்சென் றுரையாயே. 1201

தேன்போலும் இனிய சொற்களையும் இனிய இசையையும் கொண்டு வரிகளையுடைய வண்டே! எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரான் தானாகவே என்னைப் பற்றி நினைக்காமல் இருந்தாலும், அவனையே நினைத்துக் கொண்டு இருக்கின்ற எனக்கு, மீன்கொடியையுடைய மன்மதன் துன்பப்படுத்தியதனால் இப்படிப்பட்ட நிலையிலும் நான் இளைத்து இருத்தல் ஆகுமோ? ஆகவே, நீ ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் ஸ்ரீகண்ணபிரானிடம் சென்று எனக் குண்டாகியிருக்கின்ற ''பிரிவாற்றாமை'' என்னும் மனநோயினைப் பற்றித் தெளிவாகத் தெரிவித்து எனக்கு உதவி செய்தல் வேண்டும்.

வாளாய கண்பனிப்ப மென்முலைகள் பொன்னரும்ப,
நாணாளும் நின்னினைந்து நைவேற்கு,ஓ மண்ணளந்த
தாளாளா! தண்குடந்தை நகராளா! வரையெடுத்த
தோளாளா, என்றனக்கோர் துணையாள னாகாயே! 1202

Koviloor Digital Library

ஓ! இந்தப் பரந்த உலகத்தினை அளந்த திருவடிகளை உடைய எம்பெருமானே! ''திருக்குடந்தை'' என்னும் திருநகரில் திருக் கோயில் கொண்டு அந்நகரை ஆள்கின்ற எம்பெருமானே! பசுக்களைப் பாதுகாக்கும் பொருட்டுக் ''கோவர்த்தனம்'' என்னும் மலையைத் தூக்கிக் குடையாகப் பிடித்தருளிய திருத்தோள்களை யுடைய ஸ்ரீகண்ணபிரானே! வாள் போன்ற என் கண்களிலிருந்து கண்ணீர் பெருகி வருகிறது. என் மென்முலைகள் 'பசலை' என்னும் நோயுற்றதனால் அவை பொன்னிறம்போல் மாறியிருக்கின்றன. ஒவ்வொரு நாளும் உன்னைப் பற்றியே நினைந்து நினைந்து வருந்துகின்ற எனக்கு நீ ஓர் ஒப்பற்ற துணையாக இருக்க வேண்டும்.

தாராய தண்டுளவ வண்டுழுத வரைமார்பன்,
போரானைக் கொம்பொசித்த புட்பாக னென்னம்மான்,
தேராரும் நெடுவீதித் திருவாலி நகராளும்,
காராயன் என்னுடைய கனவளையும் கவர்வானோ! 1203

வண்டுகள் உழுததனால், தேனும் மலர்களில் நிறைந்துள்ள நறுமணப் பொடியும் கலந்து சேறாகியிருக்கின்ற திருத்துழாய் மாலையை அணிந்து கொண்டிருக்கின்ற மலையையொத்த திரு மார்பினையுடைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், போரிடுவதற்கு வந்த ''குவலயாபீடம்'' என்னும் யானையின் தந்தங்களை முறித்து அதனை அழித்தவனும், கருடாழ்வானை வாகனமாகக் கொண்டுள்ள எம்தலைவன் தேரோடும் வீதிகளையுடைய ''திருவாலி'' என்னும் திருநகரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் கார்மேகவண்ணனாகிய கமலக்கண்ணன், நான் என் கையில் அணிந்து கொண்டிருக்கின்ற பொன் வளையல் களையும் கவர்ந்து கொள்வானோ என்று தோன்றுகிறது.

கொண்டரவத் திரையுலவு குரைகடல்மேல் குலவரைபோல்,
பண்டரவி னணைக்கிடந்து பாரளந்த பண்பாளா,
வண்டமரும் வளர்பொழில்சூழ் வயலாலி மைந்தா,என்
கண்டுயில்நீ கொண்டாய்க்கென் கனவளையும் கடவேனோ! 1204

முன்னொரு காலத்தில் அலைகள் மோதுகின்ற, சத்தத்தினை யுண்டாக்குகின்ற திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது பெரியமலை கிடந்தது போன்று பள்ளி கொண்ட பெருமானே! உலகளந்த நீர்மைக் குணம் உடையவனே! வண்டுகள் வந்து அமரும்

Koviloor Digital Library

வளர்ந்த சோலைகளால் சூழ்ந்திருக்கின்ற ''திருவாலி'' என்னும் திருநகரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! நீ என் தூக்கத்தினைக் கவர்ந்து கொண்டது மட்டுமன்றி, என் கைகளிலுள்ள பொன் வளையல் களையும் இழப்பேன் ஆவேனோ!

குயிலாலும் வளர்பொழில்சூழ் தண்குடந்தைக் குடமாடீ,
துயிலாத கண்ணிணையேன் நின்னினைந்து துயர்வேனோ,
முயலாலு மிளமதிக்கே வளையிழந்தேற்கு, இதுநடுவே
வயலாலி மணவாளா! கொள்வாயோ மணிநிறமே! 1205

குயில்கள் கூடிப் பாடுகின்ற வளர்ந்து கொண்டிருக்கும் சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருக்குடந்தை'' என்னும் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமானே! குடக்கூத்தாடிய ஸ்ரீகண்ணபிரானே! நான் உன்னையே எண்ணிக் கொண்டிருப்பதனால் தூக்கம் என்பதே இல்லாமல் இருக்கின்ற இரு கண்களைக் கொண்டு, உன்னையே எண்ணி எண்ணி துயரமடைகின்றேன். வயல்கள் சூழ்ந்துள்ள ''திருவாலி'' என்னும் திருநகரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் அழகிய மணவாளப் பெருமானே! முயல்கள் விளையாடுகின்ற இளம் சந்திரனுக்கே என் கைவளையல்களை இழந்தேன். இவ்வாறு நலிந்து மெலிந்திருக்கின்ற என்னை இப் பாதகர்களின் நடுவே நீயும் வந்து அழகிய பொன்மேனி நிறத்தினைக் கவர்ந்து கொண்டு துன்புறுத்துவது என்பது தகுதியான ஒன்றோ!

நிலையாளா! நின்வணங்க வேண்டாயே யாகிலும்,என்
முலையாள வொருநாளுன் னகலத்தால் ஆளாயே,
சிலையாளா! மரமெய்த திறலாளா! திருமெய்ய
மலையாளா, நீயாள வளையாள மாட்டோமே. 1206

வில்லைக் கையிலேந்திய ஸ்ரீஇராமபிரானே! மராமரங்கள் ஏழினையும் துளைத்த எம்பெருமானே! ''திருமெய்யம்'' என்னும் திருநகரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருந்து ஆண்டு கொண்டு இருக்கும் எம்பெருமானே! நிலைபெற்று இருக்கின்ற உன்னை அடியேன் வணங்கும்படியாக, எப்பயனும் கருதாமல் உன்னைப் பற்றிக் கொள்வதற்கு நீ விரும்பவில்லை என்றாலும் கூட, என்றேனும் ஒரு நாளாவது உன் அகன்ற திருமார்பினால் என்

Koviloor Digital Library

முலைகளைத் தழுவும்படி என்னை நீ ஆள வேண்டும். இவ்வாறு நீ ஆண்டு கொண்டால் நான் என் கைவளையல்களைப் பற்றிச் சிறிதும் கவலை அடையமாட்டேன்.

*மையிலங்கு கருங்குவளை மருங்கலரும் வயலாலி,
நெய்யிலங்கு சுடராழிப் படையானை நெடுமாலை,
கையிலங்கு வேல்கலியன் கண்டுரைத்த தமிழ்மாலை,
ஐயிரண்டு மிவைவல்லார்க் கருவினைக ளடையாவே. 1207

(தூவிரிய பிணி நீர் தான் வாள் தாராய கொண்டு குயில் நிலை மை யிலங்கு-கள்வன்.)

மை போன்று கருநிறம் கொண்ட கருங்குவளை மலர்கள் மலர்ந்திருக்கின்ற வயல்களையுடைய வளம்மிக்க ''திருவாலி'' என்னும் திருநகரில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும், நெய்பூசப் பெற்ற ஒளிவீசுகின்ற திருச்சக்கரத்தினைக் கையிலேந்திய எம்பெருமான் திருமாலைப் பற்றிக் கையில் வேலையேந்திய ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இத்தமிழ் மாலையாகிய பாசுரங்கள் பத்தினையும் ஓத வல்லவர்களிடத்தே தீவினைகள் எதுவும் வந்து சேராது.

7. கள்வன்கொல்

திருவாலி

கொச்சகக் கலிப்பா

*கள்வன்கொல் யானறியேன் கரியானொரு காளைவந்து,
வள்ளிமருங் குலென்றன் மடமானினைப் போதவென்று,
வெள்ளிவளைக் கைபற்றப் பெற்றதாயரை விட்டகன்று,
அள்ளலம் பூங்கழனி யணியாலி புகுவர்கொலோ! 1208

கரியநிறம் கொண்ட காளை போன்ற இளைஞன் ஒருவன் இங்கே வந்து, நுண்ணிய இடையினையுடைய இளமான் போன்றிருக்கின்ற என் பெண்ணின் வெள்ளி வளைகளையணிந்து இருக்கின்ற கைகளைப் பிடித்துக் கொண்டு அவளை ''வா! வா!'' என்று அழைத்துக் கொண்டு சென்றவன் திருடனோ? என்று அறிய இயலவில்லை. அவள் கையைப் பற்றி அவன் அழைத்தவுடனேயே என் மகளும் பெற்ற தாயாகிய என்னையும் விட்டுவிட்டுச்.சென்று

Koviloor Digital Library

விட்டாள். மலர்கள் மலர்ந்திருக்கின்ற வயல்களைக் கொண்ட வளம்மிக்க ''திருவாலி'' என்னும் திருத்தலத்தினை அவ் விருவரும் சென்றடைந்திருப்பார்களோ! என்று எண்ணுகின்றேன்.

பண்டிவ னாயன்நங்காய்! படிறன்புகுந்து, என்மகள்தன்
தொண்டையஞ் செங்கனிவாய் நுகர்ந்தானை யுகந்து,அவன்பின்
கெண்டையொண் கண்மிளிரக் கிளிபோல்மிழற் றிநடந்து,
வண்டமர் கானல்மல்கும் வயலாலி புகுவர்கொலோ! 1209

அயல்வீட்டுப் பெண்களே! இங்கே இருக்கின்ற இந்த இளைஞன் முன்பு ஆயர்பாடியில் பிறந்தவன். பின்பு அவ்வாயர் பாடியில் பால், தயிர், வெண்ணெய், நெய் போன்ற பொருள்களைத் திருடியவன். இப்பொழுது இவன் என் வீட்டிற்குள்ளே புகுந்து, என் மகளின் சிவந்த கோவைப்பழம் போன்ற உதட்டினைச் சுவைத்துப் பருகி அனுபவித்தானே! அப்படிச் செய்த இவனைக் கெண்டைமீன் போன்று ஒளிர்கின்ற கண்களையுடைய என் மகளும், கிளியைப்போல் கூறியதையே மீண்டும் மீண்டும் கூறியபடியே கொஞ்சிக் கொண்டு அவன் பின்னாலேயே சென்றுவிட்டாளே! அந்த இளைஞனும், என் மகளும் வண்டுகள் நிறைந்திருக்கும் மலர்களைக் கொண்டிருக்கும் சோலைகள் சூழ்ந்த வயல்கள் நிறைந்த வளம்மிக்க ''திருவாலி'' என்னும் திருத்தலத்திற்குச் சென்று சேர்ந்திருப்பார்கள் என்றெண்ணுகின்றேன்.

அஞ்சுவன் வெஞ்சொல்நங்காய்! அரக்கர்குலப் பாவைதன்னை,
வெஞ்சின மூக்கரிந்த விறலோன்திறங் கேட்கில்,மெய்யே
பஞ்சியல்[1] மெல்லடியெம் பணைத்தோளி பரக்கழிந்து,
வஞ்சியந் தண்பணைசூழ் வயலாலி புகுவர்கொலோ! 1210

விருப்பமான சொற்களைக் கொண்டு பேசும் நங்கையே! பெருமிதம் கொண்ட ஸ்ரீஇராமபிரான் அரக்கர்குலப் பெண்ணாகிய 'சூர்ப்பணகை' என்னும் அரக்கியின் மூக்கைப் பெருங்கோபத்துடன் அறுத்தெறிந்த திறனை அறிந்து அஞ்சுகிறேன். பஞ்சு போன்ற மென்மையான அடிகளை உடையவளும், மூங்கில் போன்ற தோள்களையுடைவளுமாகிய என் மகளும் பெரும் பழிக்கு ஆளாகி அந்த எம்பெருமானுடன் சேர்ந்து கொண்டு, கொடிகளும், மூங்கில் களும் நிறைந்துள்ள வயல்களையுடைய வளம்மிக்க ''திருவாலி'' என்னும் திருத்தலத்தினைச் சென்று சேர்ந்திருப்பார்களென்று எண்ணுகிறேன்.

Koviloor Digital Library

ஏதுஅவன் தொல்பிறப்பு? இளையவன்வளை யூதி,மன்னர்
தூதுவ னாயவனூர் சொலுவீர்கள்! சொலீரறியேன்,
மாதவன் தன்துணையா நடந்தாள்தடஞ் சூழ்புறவில்,
போதுவண் டாடுசெம்மல் புனலாலி புகுவர்கொலோ! 1211

என் மகளைக் கொண்டு சென்றவனைப் பற்றி ஏதுமறியேன். அவனுடைய பழைய பிறப்பு இன்னது என்று நான் அறியேன். அவனோ இளையவன். சங்கு ஊதுபவன். பாண்டவர்களுக்குத் தூது சென்றவன். அவனைப் பற்றி சொல்லத் தெரிந்தவர்கள் இருப்பீர் களாயின் சொல்லுங்கள். அவனுடைய ஊர் பற்றிக் கூறுங்கள். என் மகளோ 'மாதவன்' என்று கூறுகின்ற திருமாலுடன் சென்றுவிட்டாள். அவர்களிருவரும் பொய்கைகள் சூழ்ந்து இருக்கின்ற சோலைகளில் பூத்திருக்கின்ற பூக்களில் தங்கித் தேனை யுண்ட வண்டுகள் கூத்தாடுகின்றன. இப்படிப்பட்ட பெருமையும், நீர்வளமும் நிறைந்துள்ள ''திருவாலி'' என்னும் திருத்தலத்திற்கு அவ்விருவரும் சென்றிருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

தாயெனை யென்றிரங்காள் தடந்தோளி தனக்கமைந்த
மாயனை மாதவனை மதித்தென்னை யகன்றஇவள்[2],
வேயன தோள்விசிறிப் பெடையன்ன மெனநடந்து,
போயின பூங்கொடியாள் புனலாலி புகுவர்கொலோ! 1212

அகன்ற தோள்களையுடைய என் மகள், ''என்னைப் பெற்ற தாய்'' என்று கூட என்னைக் கருதி இரக்கம் காட்டவில்லை. ''மாயவன், மாதவன்'' என்றெல்லாம் கூறி அழைக்கின்ற எம் பெருமான் திருமாலே தனக்கேற்றவன் என்று எண்ணிக் கொண்டு என்னைவிட்டு அகன்று அவனுடன் சென்றுவிட்டாள். என் மகளாகிய இவள் மூங்கில் போன்ற தோள்களைக் கொண்டு அன்னப்பறவை போன்று நடந்து சென்றாள். இவ்வாறு சென்ற என் மகளும் அவனும் நீர்வளம்மிக்க ''திருவாலி'' என்னும் திருத்தலம் சென்று சேர்ந்திருப்பார்கள் என்று எண்ணுகின்றேன்.

*என்துணை யென்றெடுத்தேற் கிறையேனு மிரங்கிற்றிலள்,
தன்துணை யாயவென்றன் தனிமைக்கு மிரங்கிற்றிலள்,
வன்துறை வானவர்க்காய் வரஞ்செற்றரங் கத்துறையும்,
இன்துணை வன்னொடும்போ யெழியாலி புகுவர்கொலோ! 1213

Koviloor Digital Library

என் மகளைப் பெற்ற எனக்கு உற்ற துணையாக என் மகள் இருப்பாள் என்று எண்ணினால் அவள் அவ்வாறு எனக்குற்ற துணையாக இல்லை. நான் அவளை வளர்த்து வந்ததை எண்ணிக் கூடப் பார்க்காமல் சிறிதளவு இரக்கமும் கொள்ளவில்லை. நான் துணையேதுமின்றித் தனியாக இருப்பதைச் சிறிதும் எண்ணிப் பாராமல் என்னுடைய தனிமையைக் கருதிச் சிறிதும் இரக்கம் காட்டவில்லை. தேவர்களுக்குச் சிறந்த துணையாக இருக்கும் பொருட்டு இலங்கை மாநகர்க்குச் சென்று அங்கிருந்த அரக்கர்கள் பெற்றிருந்த பெருவரங்களின் பலங்களை அடக்கி, அவர்களை அழித்துத் திருவரங்கத்தில் திருக்கண் வளர்ந்தருள்கின்ற திருமாலோடு சென்றுவிட்டாள். என்னைப் பிரிந்து சென்ற என் மகளும் அவனும் ''திருவாலி'' என்னும் திருத்தலம் சென்று சேர்ந்திருப்பார்களென்று எண்ணுகிறேன்.

அன்னையு மத்தனுமென் றடியோமுக் கிரங்கிற்றிலள்,
பின்னைதன் காதலன்றன் பெருந்தோள்நலம் பேணினளால்,
மின்னையும் வஞ்சியையும் வென்றிலங்கு மிடையாள்நடந்து,
புன்னையும் அன்னமும்சூழ் புனலாலி புகுவர்கொலோ! 1214

1. 'பஞ்சிய' என்பதும் பாடம்.
2. 'அகன்றவன்பின்' என்பதும் பாடம்.

தன்னைப் பெற்ற தாய் என்றும் தந்தை என்றும்கூட எங்களைப் பற்றி எண்ணிப் பார்க்கவில்லை. சிறிதும் இரக்கம் கொள்ளவில்லை. நப்பின்னைப் பிராட்டியின் காதலனாகிய எம்பெருமான் திருமாலின் பெருமைமிக்க திருத்தோள்களோடு தழுவிக் கொண்டு அதனாலுண்டாகும் நலனைப் பேணிப் பாதுகாத்துக் கொண்டாள். மின்னலையும் வஞ்சிக் கொடியையும் போன்ற நுண்ணிய இடையினையுமுடைய என் மகள் அவனுடன் நடந்து சென்றாள். என் மகளும் அவனும் புன்னை மரங்கள் நிறைந்த சோலைகளும் அன்னமும் நிறைந்திருக்கின்ற நீர்வளம் மிக்க ''திருவாலி'' என்னும் திருத்தலம் சென்று சேர்ந்திருப்பார்களென்று எண்ணுகின்றேன்.

முற்றிலும் பைங்கிளியும் பந்துமூசலும் பேசுகின்ற,
சிற்றில்மென் பூவையும்விட் டகன்றசெழுங் கோதைதன்னை,
பெற்றிலேன் முற்றிழையைப் பிறப்பிலிபின் னேநடந்து,
மற்றெல்லாம் கைதொழப்போய் வயலாலி புகுவர்கொலோ! 1215

Koviloor Digital Library

என் மகள் சிறுமுறம், பைங்கிளி, பந்து, ஊஞ்சல், கூட்டிலிருந்து பேசுகின்ற நாகணவாய்ப் பறவை ஆகியவற்றை எல்லாம் இங்கேயே விட்டுவிட்டுச் சென்றுவிட்டாள். அழகிய பூப்போன்ற மென்மையானவளும், நிறைந்த ஆபரணங்களுமான என் மகளை நான் என் கண்ணாலும் காண முடியவில்லை. எல்லோராலும் தொழுது வணங்கக்கூடிய 'பிறப்பு' என்று ஒன்றில்லாத எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானுடன் நடந்து சென்றுவிட்டாள். இவ்வாறு சென்ற அவ்விருவரும் ''திருவாலி'' என்னும் திருத்தலம் சென்று சேர்ந்திருப்பார்கள் என்றெண்ணுகிறேன்.

காவியங் கண்ணியெண்ணில் கடிமாமலர்ப் பாவையொப்பாள்,
பாவியேன் பெற்றமையால் பணைத்தோளி பரக்கழிந்து,
தூவிசே ரன்னமன்ன நடையாள்நெடு மாலொடும்போய்,
வாவியந் தண்பணைசூழ் வயலாலி புகுவர்கொலோ! 1216

என் மகள் சிவந்த காவிநிறத்தை உடைய குவளை மலர் போன்ற கண்களையுடையவள். தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளுக்குச் சமம் என்று சொல்லத் தகுந்தவள். அவளின் நடையோ தூய்மையான இறகுகளைக் கொண்ட அன்னப்பறவையின் நடையை ஒத்தவள். மூங்கில் போன்ற தோள்களைப் பெற்றவள். இப்படிப்பட்ட என் மகள் வயிற்றில் பிறந்த குற்றம் பெரும் பழிக்கு ஆளாகிவிட்டேன். இவள் நெடிய திருமாலுடன் சென்றுவிட்டாள். பொய்கைகள் சூழ்ந்திருக்கின்ற குளிர்ந்த பூஞ்சோலைக் கொண்டு திகழும் ''திருவாலி'' என்னும் திருத்தலத்திற்கு அவர்கள் இருவரும் சென்று சேர்ந்திருப்பார்கள் என்று எண்ணுகிறேன்.

*தாய்மனம் நின்றிரங்கத் தனியேநெடு மால்துணையா,
போயின பூங்கொடியாள் புனலாலி புகுவரென்று,
காய்சின வேல்கலிய னொலிசெய்தமிழ் மாலைபத்தும்,
மேவிய நெஞ்சுடையார் தஞ்சமாவது விண்ணுலகே. 1217

(கள்வன் பண்டு அஞ்சுவன் ஏதவன் தாய் என்துணை அன்னை முற்றில் காவி தாய்மனம் - நந்தா.)

தாயின் மனம் நின்று இரங்கிக் கொண்டிருக்க, அவளிடம் ஏதும் கூறாமலேயே தன்னந்தனியாக நெடுமாலாம் திருமாலுடன் சென்று விட்டாள். பூங்கொடி போன்ற என் மகள் அவன் பின்னே சென்று விட்டாள். இவர்கள் இருவரும் ''திருவாலி'' என்னும் திருத்தலம்

Koviloor Digital Library

சென்று சேர்ந்திருக்க வேண்டுமென்று எண்ணுமாறுபோலப் பகைவர்மீது சீறிப் பாய்கின்ற வேலைக்கையிலேந்திய ''கலியன்'' என்னும் திருமங்கையாழ்வார் அருளிச் செய்த இத்தமிழ்மாலை என்னும் பாசுரங்கள் பத்தினையும் கற்று நெஞ்சில் நிலைநிறுத்தி வைப்பவர்கள் திருப்பரமபதத்தினையே தஞ்சமாக அடைவர்.

8. நந்தா விளக்கு
திருநாங்கூர்
திருமணி மாடக் கோயில்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*'நந்தா விளக்கே! அளத்தற் கரியாய்!
நரநா ரணனே! கருமா முகில்போல்
எந்தாய், எமக்கே யருளாய்,' எனநின்று
இமையோர் பரவு மிடம்,எத் திசையும்
கந்த ரமந்தே னிசைபா டமாடே
களிவண் டுமிழற் றநிழல் துதைந்து,
மந்தா ரநின்று மணமல் குநாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 1218

நித்திய ஞானவிளக்கே! நின்பெருமை பற்றி அளந்து பேசுவதற்கு இயலாத அளவில் பரந்த பெருமையையுடையவனே! நரநாராயணனே! கறுத்த பெரிய பெரிய மேகங்களை ஒத்திருக்கின்ற கருமையான நிறத்தினைக் கொண்டிருக்கின்ற என் தந்தையே! ''எங்களுக்கு அருள்புரிதல் வேண்டும்'' என்று பிரமன் முதலிய தேவர்கள் யாவரும் நின்புகழைப் பரவுகின்ற திருத்தலம் எது வென்றால் ''திருநாங்கூர் திருமணிமாடக்கோயில்'' என்னும் திருத்தலமாகும். இத்திருத்தலத்தில் எல்லாத் திசைகளிலும் அழகிய தேன்சாதி என்னும் வண்டுகள் ''காந்தாரி'' என்னும் இராகம் கொண்ட இசையைப் பாடும். அதனூடே மகிழ்ச்சியுடன் திளைக்கின்ற வண்டுகள் இசையுடன் பாடிக் கொண்டிருக்கும் நிழல்கள் நிறைந்திருக்கின்ற மந்தார மரங்களில் இருந்து மணம் நிறைந்து வீசிக் கொண்டிருக்கும். இப்படிப்பட்ட சிறப்புகளைக் கொண்டிலங்கும் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திரு மணிமாடக் கோயில்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி

Koviloor Digital Library

யிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை வணங்க வேண்டும் என் மனமே என்று மனதிற்கு அருளுகிறார்.

முதலைத் தனிமா முரண்தீர வன்று
முதுநீர்த் தடத்துச் செங்கண்வேழ முய்ய,
விதலைத் தலைச்சென் றதற்கே யுதவி
வினைதீர்த்த வம்மா னிடம்,விண் அணவும்
பதலைக் கபோதத் தொளிமாட நெற்றிப்
பவளக் கொழுங்கால் பைங்கால் புறவம்,
மதலைத் தலைமென் பெடைகூடு நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 1219

ஏ மனமே! அன்றொருநாள் பொய்கை நீரில் முதலையிடம் அகப்பட்டுத் துன்புற்ற நிலையில் தவித்துக் கொண்டிருந்த யானையானது, ''ஆதிமூலமே!'' என்று அழைத்தவுடனேயே, விரைந்து சென்று சக்கராயுதத்தை ஏவி அம்முதலையின் வலிமையை அழித்து யானையைக் காப்பாற்றிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டுள்ள திருத்தலம் எது என்றால் திருநாங்கூர்த் திருத்தலத்திலுள்ள ''திருமாமணிமாடக் கோயில்'' என்பதாகும். இத்திருத்தலத்தில் ஒளி வீசுகின்ற மணி களைப் பதித்த மாடமாளிகைகளில் வானளாவும் கலசங்களும், கொடுங்கைகளும் நிறைந்துள்ளன. அங்குள்ள தூண்களில் பவள நிறக் கால்களையுடைய புறாக்கள் தன் பெண் புறாவுடன் சேர்ந்து அமர்ந்திருக்கும். இப்படிப்பட்ட திருநாங்கூர் திருமாமணி மாடக் கோயிலுக்குச் சென்று ஸ்ரீமந்நாராயணனைச் சேவிக்க வேண்டும்.

கொலைப்புண் தலைக்குன்ற மொன்றுய்ய வன்று
கொடுமா முதலைக் கிடர்செய்து, கொங்கார்
இலைப்புண்ட ரீகத் தவளின்ப மன்போ
டணைந்திட்ட வம்மா னிடம்,ஆ ளரியால்
அலைப்புண்ட யானை மருப்பு மகிலும்
அணிமுத்தும் வெண்சா மரையோடு, பொன்னி
மலைப்பண்ட மண்டத் திரையுந்து நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 1220

என் மனமே! அன்றொரு நாள் முதலையிடம் அகப்பட்டுப் புண்பட்டுத் துன்புற்ற ''கஜேந்திரன்'' என்னும் யானையைக் காப்பாற்றும் பொருட்டு, அம்முதலையைக் கொன்ற எம்பெருமான்

Koviloor Digital Library

ஸ்ரீமந்நாராயணன் தேன் நிறைந்திருக்கும் தாமரை மலரில் உள்ள திருமகள் மகிழ்வுறும்படியாக அன்புடன் இணைந்திருக்கும் திருத்தலம் எதுவென்றால் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருமாமணி மாடக்கோயில்'' என்பதாகும். நீ அங்குச் சென்று எம்பெருமானைச் சேவிக்க வேண்டும். இத்திருத்தலத்தில் காவிரி ஆற்றில் காடுகளில் சிங்கங்களால் கொல்லப்பட்ட யானைகளின் தந்தங்களும், சந்தனம், முத்து, சாமரை போன்ற மலைப்பண்டங்கள் பலவும் நீரின் அலைகளுடன் வந்து சேரும்.

சிறையார் உவணப்புள் ளொன்றேறி யன்று
திசைநான்கும் நான்கு மிரிய, செருவில்
கறையார் நெடுவே லரக்கர் மடியக்
கடல்சூ ழிலங்கை கடந்தா னிடந்தான்,
முறையால் வளர்க்கின்ற முத்தீயர் நால்வேதர்
ஐவேள்வி யாறங்க ரேழி னிசையோர்,
மறையோர் வணங்கப் புகழெய்து நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 1221

என் மனமே! சிறகுகளையுடைய 'கருடன்' என்னும் பறவையின்மீது ஏறி முன்பொருசமயம் கறை படிந்த வேல் ஏந்திய அரக்கர்களை எட்டுத் திசைகளிலும் அலறி ஓடும்படிச் செய்து கடல் சூழ்ந்த இலங்கை மாநகரை வென்று, அந்த இலங்கை மாநகரின்றும் மீண்டு வந்துள்ள எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால் திருநாங்கூர் திருமாமணி மாடக்கோயிலாகும். நீ அங்குச் சென்று ஸ்ரீஇராமபிரானை வணங்கு. இந்தத் திருத்தலத்தில் வேதங்களை யுணர்ந்த அந்தணர்கள் மூவகையான தீயினை வளர்த்து, நான்கு வேதங்களையும் ஓதி, ஐந்து வகையான வேள்விகளைச் செய்து, வேதாங்கங்கள் ஆறினையும் பயின்று, ஏழு சுரங்களையுடைய இன்னிசையை இசைத்து அங்குள்ள ஸ்ரீஇராமபிரானை வணங்கிக் கொண்டிருப்பதனால் இத்திருத்தலம் மிகுந்த புகழைப் பெற்றது.

இழையாடு கொங்கைத் தலைநஞ்சு முண்டிட்டு
இளங்கன்று கொண்டு விளங்கா யெறிந்து,
தழைவாட வன்தாள் குருந்த மொசித்துத்
தடந்தாம ரைப்பொய்கை புக்கானி டந்தான்,

Koviloor Digital Library

குழையாட வல்லிக் குலமாட மாடே
குயில்கூவ நீடு கொடிமாட மல்கு,
மழையாடு சோலை மயிலாலு நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 1222

என் மனமே! அணிகலன்கள் பல அசைந்தாடும் முலைகளில் நஞ்சு கலந்த பாலை அளிக்க வந்த பூதனை என்பவள் தந்ததை உண்டு அவளுயிரைப் போக்கிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் 'வத்சாசுரன்' என்னும் அசுரனை எறிகின்ற தடியாகக் கொண்டு விளாமரமாக நின்ற 'கபித்தாசுரன்' என்னும் அசுரன்மீது எறிந்து இருவரையும் அழித்துக் கொன்றான். குருந்த மரத்தினை அதன் தழைகள் வாடிவிடும்படியாக முறித்து அழித்தான். அவனே தாமரைக் குளத்தில் இறங்கி அங்கு நீராடிக் கொண்டிருந்த கோபியர் களுடன் சேர்ந்து நீராடியவன் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், மரங்களில் தளிர்கள் அசைந்தாடுவதால் அதனருகேயுள்ள பூங்கொடிகள் ஆடிக் கொண்டிருக்க, குயில்கள் கூவிக் கொண்டிருக்க, அங்குள்ள பூஞ்சோலைகளில் மேகங்கள் சூழ்ந்து இருப்பதைக் கண்ட மயில்கள் நடனமாடிக் கொண்டு இருக்க நீண்ட கொடிகள் நிறைந்திருக்கின்ற அழகிய மாட மாளிகைகள் நிறைந்திருக்கின்ற திருநாங்கூர்த் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளப் பெற்றுள்ள ''திருமாமணி மாடக்கோயில்'' என்னும் திருக்கோயிலில் உள்ளான். நீ இவ்வளவு மேன்மையான திருமாமணி மாடக்கோயில் சென்று அங்குள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

பண்ணேர் மொழியாய்ச் சியரஞ்ச வஞ்சப்
பகுவாய்க் கழுதுக் கிரங்காது, அவள்தன்
உண்ணா முலைமற் றவளாவி யோடும்
உடனே சுவைத்தா னிடம்,ஓங்கு பைந்தாள்
கண்ணார் கரும்பின் கழைதின்று வைகிக்
கழுநீரில் மூழ்கிச் செழுநீர்த் தடத்து,
மண்ணேந் திளமேதி கள்வைகு நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 1223

என் மனமே! இசைமிக்க பாட்டினும் இனிய மொழிகளைக் கொண்டு பேசும் இடைக்குலப் பெண்கள் அஞ்சுமாறு பெரிய

Koviloor Digital Library

அகன்ற வாயினையுடைய வஞ்சனைமிக்க 'பூதனை' என்னும் பேய்க்கு இரக்கம் காட்டாமல் அவள் முலைப்பாலை அவளுடைய உயிரோடு சேர்த்து உறிஞ்சி உண்டு கொன்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது எனறால், எருமைக் கன்றுகள் பசுமையுடன் ஓங்கி வளர்ந்து கொண்டிருக்கின்ற கணுக்களை உடைய கரும்பின் குருத்துகளைத் தின்று, அதிகமாகத் தின்றதன் காரணமாக அங்கிருந்து நகரமாட்டாமையால் அங்கேயே இருந்து, பின்பு செங்கழுநீர்ப் பூக்கள் பூத்திருக்கின்ற பொய்கையினுள் புகுந்து புரண்டு அங்குள்ள சேற்றிலே கொம்புகளைக் குத்தி, அச்சேற்றுமண் உருண்டையைத் தாங்கிக் கொண்டு அக்கரை ஏற முடியாமல் அங்கேயே கிடக்கின்ற அழகிய வளம்மிக்க 'திருநாங்கூர்' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ''திருமாமணி மாடக்கோயில்'' என்பதாகும். அங்குச் சென்று எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

தளைக்கட் டவிழ்தா மரைவைகு பொய்கைத்
 தடம்புக்கு அடங்கா விடங்கா லரவம்,
இளைக்கத் திளைத்திட் டதனுச்சி தன்மேல்
 அடிவைத்த அம்மா னிடம்,மா மதியம்
திளைக்கும் கொடிமா ளிகைசூழ் தெருவில்
 செழுமுத்து வெண்ணெற் கெனச்சென்று, முன்றில்
வளைக்கை நுளைப்பாவை யர்மாறு நாங்கூர்
 மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 1224

என் மனமே! தாமரை அரும்புகளும் அங்கு மலர்ந்த தாமரை மலர்களும் நிறைந்து இருக்கின்ற பொய்கையில் புகுந்து, அப்பொய்கை நீரை நஞ்சு கலக்கும்படியாகக் கொடிய, அடக்க இயலாத நஞ்சினைக் கொண்டுள்ள 'காளியன்' என்னும் பாம்பு தன் நஞ்சினைக் கக்கிக் கொண்டு இருக்க, அப்பாம்பு இளைத்துப் போகும்படி அதன் தலைமீது தன் திருவடிகளைப் பதித்து அழகிய நடனமாடி அப்பாம்பினை அடக்கி அழித்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், சந்திரனைத் தொடுகின்ற அளவுக்குக் கொடிகளைக் கொண்ட மாடமாளிகைகள் நிறைந்துள்ள வீதியில், முற்றத்தில் வளையல்களையணிந்திருக்கின்ற மீனவகுலப்

Koviloor Digital Library

பெண்கள் சிறந்த முத்துக்களை நெல்லுக்குப் பண்டமாற்றாகத் தருகிறோம் என்று கூவி விற்பனை செய்கின்ற அளவுக்கு வளமிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருமாமணி மாடக் கோயில்'' என்னும் திருக்கோயிலாகும். நீ அங்குச் சென்று எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

துளையார் கருமென் குழலாய்ச்சி யர்தம்
　　துகில்வாரி யும்சிற்றில் சிதைத்தும், முற்றா
இளையார் விளையாட் டொடுகாதல் வெள்ளம்
　　விளைவித்த வம்மா னிடம்,வேல் நெடுங்கண்
முளைவா ளெயிற்று மடவார் பயிற்று
　　மொழிகேட் டிருந்து முதிராத வின்சொல்,
வளைவாய கிள்ளை மறைபாடு நாங்கூர்
　　மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 1225

என் மனமே! கருத்துச் சுருண்டு இருப்பதனால் துளைகள் நிறைந்த கூந்தலையுடைய ஆய்க்குலப் பெண்களின் ஆடைகளைக் கவர்ந்தும், இளம்பெண்கள் கட்டி விளையாடும் சிற்றிலைச் சிதைத்து, அவர்களுடன் விளையாடிக் கொண்டே அவர்களுடைய மனதில் காதல் உணர்வைப் பெருவெள்ளம் என்றும் சொல்லு மளவுக்கு அதிகரிக்கச் செய்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது வென்றால், வேல் போன்ற நெடிய கண்களையுடையவர்களாகவும், ஒளிவீசுகின்ற அழகிய பற்களைக் கொண்டவர்களாகவும் இருக்கின்ற வைதிகப் பெண்கள் பயின்று கொண்டிருக்கின்ற வேதச் சொற்களைக் கேட்டுக் கொண்டிருக்கின்ற, வளைந்த வாயினை உடைய கிளிகளும் கேட்டுக் கேட்டுத் தம் மழலைச் சொற்களால் அவ்வேதங்களைத் திரும்பத் திரும்பக் கூறிக் கொண்டிருக்கும் வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ''திருமாமணி மாடக்கோயில்'' என்னும் திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் சென்று நீ அங்குள்ள ஸ்ரீகண்ணபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

'விடையோட வென்றாய்ச்சி மென்தோள் நயந்த
　　விகிர்தா! விளங்கு சுடராழி யென்னும்,
படையோடு சங்கொன் றுடையாய்!' எனநின்று
　　இமையோர் பரவு மிடம்,பைந்த டத்துப்

Koviloor Digital Library

பெடையோடு செங்கால வன்னம் துகைப்பத்
தொகைப்புண்ட ரீகத்தி டைச்செங் கழுநீர்,
மடையோட நின்று மதுவிம்மு நாங்கூர்
மணிமாடக் கோயில் வணங்கென் மனனே! 1226

என் மனமே! ஆய்க்குலத்தில் பிறந்த நப்பின்னைப் பிராட்டியை அடையும் பொருட்டு ஏழு காளைமாடுகளை அடக்கி அவளின் மென்மையான திருத்தோள்களை விரும்பி அணைத்த கடவுளாகிய ஸ்ரீகண்ணபிரானே! ஒளிவீசித் திகழ்கின்ற ''திருச்சக்கரம்'' என்னும் ஆயுதத்துடன் ஒப்பற்ற ''திருச்சங்கம்'' என்னும் ஆயுதத்தினையும் உன் திருக்கரங்களில் ஏந்திக் கொண்டிருக்கும் எம்பெருமானே என்று தேவர்கள் நின்று ஏத்துகின்ற திருத்தலம் எதுவென்றால், அழகிய குளத்தில் ஆண் அன்னமும் பெண் அன்னமும் ஒன்றிணைந்து தாமரை மலர்களின்மீது ஏறி மிதித்ததனால் அம்மலர்களினின்று பெருக்கெடுத்த தேனானது, அத்தாமரை மலர்களினிடையில் பூத்திருக்கும் செங்கழுநீர்ப் பூக்களின் தளங்களிலே, மடைவெள்ளம் போன்று ஓடிப் பாய்ந்து தங்குகின்ற வகையில் வளப்பம்மிக்க 'திருநாங்கூர்' என்னும் திருத்தலத்தில் ''திருமாமணி மாடக் கோயில்'' என்பதாகும். நீ அங்குச் சென்று அங்கு எழுந்தருளி யிருக்கும் ஸ்ரீகண்ணபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

*வண்டார் பொழில்சூழ்ந் தழகாய நாங்கூர்
மணிமாடக் கோயில் நெடுமாலுக்கு, என்றும்
தொண்டாய தொல்சீர் வயல்மங் கையர்கோன்
கலிய னொலிசெய் தமிழ்மாலை வல்லார்,
கண்டார் வணங்கக் களியானை மீதே
கடல்சூ ழுலகுக் கொருகா வலராய்,
விண்தோய் நெடுவெண் குடைநீழ லின்கீழ்
விரிநீ ருலகாண் டுவிரும் புவரே. 1227

(நந்தா முதலை கொலை சிறை இழை பண் தளை துளை விடை வண்டார் - சலம்.)

வண்டுகள் ஒலிக்கின்ற சோலைகள் சூழ்ந்திருக்கின்ற அழகுடன் விளங்குகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருள்கின்ற திருமாமணி மாடக்கோயிலி னுள்ளிருக்கும் ஸ்ரீமந்நாராயணன் என்னும் நெடுமாலுக்கு,

Koviloor Digital Library

எக்காலத்திலும் தொண்டுபுரிந்து கொண்டு இருக்கின்ற பழம் பெருஞ்சிறப்புகளைப் பெற்ற வளமான வயல்கள் நிறைந்திருக் கின்ற ''திருமங்கை'' என்னும் திருநகர்க்கு மன்னனாகிய 'கலியன்' என்னும் சிறப்புடைய திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த தமிழ் மாலை எனத் திகழும் இப்பத்துப் பாசுரங்களையும் கற்று வல்ல வர்கள் கண்டார் வணங்கும்படியாக யானை மீதேறி வலம் வருகின்ற மன்னராகிக் கடல் சூழ்ந்த இப்பேருலகை வெண்கொற்றக் குடைக்கீழ் இருந்து இவ்வுலகினை ஆளும்பேற்றினைப் பெறுவார்கள்.

9. சலங்கொண்ட திருவைகுந்த விண்ணகரம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*சலங்கொண்ட இரணியன தகல்மார்வம் கீண்டு
தடங்கடலைக் கடைந்தமுதங் கொண்டுகந்த காளை,
நலங்கொண்ட கருமுகில்போல் திருமேனி யம்மான்
நாடோறும் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்,
சலங்கொண்டு மலர்சொரியும் மல்லிகையொண் செருந்தி
சண்பகங்கள் மணநாறும் வண்பொழிலி னூடே,
வலங்கொண்டு கயலோடி விளையாடு நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1228

என் மனமே! கோபம் கொண்டு ஆணவம் மிக்கிருந்த இரணியன் என்னும் அசுரனின் அகன்ற மார்பினை இருகூறாகப் பிளந்த எம்பெருமான் நரசிம்மப் பெருமான் திருப்பாற்கடலைக் கடைந்து திருவமுதினைத் தேவர்களுக்கு அளித்து மகிழ்ச்சியுற்றான். நன்மையை நல்குகின்ற மழையைத் தருகின்ற கருநிறமுடைய மேகத்தின் நிறத்தினை ஒத்த திருமேனியையுடைய காளையைப் போன்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் நாள்தோறும் மகிழ்ச் சியுடன் இனிமையாகத் தங்குகின்ற திருத்தலம் எதுவென்றால், நீரினை உண்டு மலர்களைச் சொரிகின்றன. இங்குள்ள சோலைகளில் மல்லிகை, செருந்தி, செண்பகம் போன்ற மணம் வீசுகின்ற பூக்கள் பூத்துத் தானாகவே சொரியும். கயல்மீன்கள் துள்ளி விளையாடும். இப்படிப்பட்ட வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருவைகுந்த விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்

Koviloor Digital Library

தருளியிருக்கிறான். நீ இத்திருக்கோயிலுக்குச் சென்று எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவிக்க வேண்டும்.

திண்ணியதோ ரரியுருவாய்த் திசையனைத்தும் நடுங்கத்
தேவரொடு தானவர்கள் திசைப்ப,இர ணியனை
நண்ணியவன் மார்வகலத் துகிர்மடுத்த நாதன்
நாடோறும் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்,
எண்ணில்மிகு பெருஞ்செல்வத் தெழில்விளங்கு மறையும்
ஏழிசையும் கேள்விகளு மியன்றபெருங் குணத்தோர்,
மண்ணில்மிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1229

என் மனமே! எல்லாத் திசைகளிலும் இருக்கின்ற யாவரும் நடுங்குமாறும், தேவர்களும் அசுரர்களும் திகைத்து நிற்கும் படியாகவும் வலிமைமிக்கதோர் சிங்க உருவுகொண்ட நரசிம்ம அவதாரம் மேற்கொண்டு வந்து இரணியன் என்னும் அரக்கனை அணுகி, அவன் மார்பின்மீது தன் கூரிய நகங்களைப் பதித்து இருகூறாகப் பிளந்து கிழித்துப் போட்ட எம்தலைவன் ஸ்ரீநரசிம்மப் பெருமான் நாள்தோறும் மகிழ்ச்சியுடன் இனிதே தங்கியிருக்கின்ற திருத்தலம் எதுவென்றால், எண்ணற்ற பெருஞ்செல்வத்தினைப் பெற்றவர்கள், அச்செல்வ வளம் காரணமாக வேதங்கள், ஏழிசை, வேதாங்கங்களில் கேள்வியறிவு நிறைந்த பெருமக்கள், இப்பூவுலகில் வாழ்கின்ற தேவர்கள் ஆகியோர் நிறைந்திருக்க, இங்கு ஆத்மகுணம் மிக்க வேதியர்கள் நிறைந்து வாழ்கின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருவைகுந்த விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி இருக்கிறார். நீ அங்குச் சென்று அங்குள்ள எம்பெருமான் ஸ்ரீநரசிங்கப் பெருமானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

அண்டமுமிவ் வலைகடலு மவனிகளு மெல்லாம்
அமுதுசெய்த திருவயிற்றன் அரன்கொண்டு திரியும்,
முண்டமது நிறைத்தவன்கண் சாபமது நீக்கும்
முதல்வனவன் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்,
எண்டிசையும் பெருஞ்செந்நெ லிளந்தெங்கு கதலி
இலைக்கொடியொண் குலைக்கமுகொ டிகலிவளம் சொரிய
வண்டுபல விசைபாட மயிலாலு நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1230

Koviloor Digital Library

என் மனமே! அண்டங்கள், அலைவீசுகின்ற கடல்கள், ஏழு உலகங்கள் என்று சொல்லப்படுகின்ற யாவற்றையும் திருவமுது செய்து காத்த திருவயிற்றினையுடையவன், சிவபெருமான் தன் கையில் மண்டை ஓட்டினை ஏந்தித் திரிகின்ற சாபத்தினைப் போக்கி அருளினவன். அனைவரையும் ஆளுகின்ற ஆதிமுதல்வனாகத் திகழ்கின்ற எம்பெருமான் நாள்தோறும் மகிழ்ச்சியுடன் இனிதே தங்கியிருக்கின்ற திருத்தலம் எதுவென்றால், எட்டுத் திக்குகளிலும் நெற்பயிர், இளமையான தென்னை மரங்கள், வாழை, பாக்கு மரங்கள் ஆகியவைகளுடன் வெற்றிலைக் கொடிகளும் ஒன்றி ணைந்து போட்டியிட்டவாறு வளர்கின்ற நிலையில் அங்குள்ள வண்டுகள் இசைபாடவும், மயில்கள் நடனமாடவும் வளமிக்கதாகத் திகழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருவைகுந்த விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலாகும். நீ அத் திருக்கோயில் சென்று அங்குள்ள எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனைக் கண்டு சேவிக்க வேண்டும்.

கலையிலங்கு மகலல்குல் அரக்கர்குலக் கொடியைக்
காதொடுமூக் குடனரியக் கதறியவ ளோடி,
தலையிலங்கை வைத்துமலை யிலங்கைபுகச் செய்த
தடந்தோளன் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்,
சிலையிலங்கு மணிமாடத் துச்சிமிசைச் சூலம்
செழுங்கொண்ட லகடிரியச் சொரிந்தசெழு முத்தம்,
மலையிலங்கு மாளிகைமேல் மலிவெய்து நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1231

என் மனமே! மேகலை அணிந்திருக்கும் அகன்ற அல்குலை யுடைய அரக்கர்குலத்துப் பெண் ஆகிய சூர்ப்பணகையின் காதினையும், மூக்கையும் அரிந்தெடுத்த ஸ்ரீஇராமபிரான், அவள் கதறி, அலறியபடியே, தன் தலைமேலே கையை வைத்துக் கொண்டு, மலையின் மேலுள்ள இலங்கை மாநகரில் புகுந்து அண்ணன் இராவணனிடம் சென்று அழும்படிச் செய்த இராம பிரான், வலிய திருத்தோள்களைக் கொண்டுள்ள ஸ்ரீஇராமபிரான் மகிழ்ச்சியுடன் இனிதே திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கின்ற திருத்தலம் எதுவென்ற.ால், மாடமாளிகைகளில் பதித்துள்ள சூலங்கள் மேகத்தைக் கிழித்துக் கொண்டிருக்க, அதனால் கீழே விழுந்த முத்துக்கள் மலைபோல அங்குள்ள மலை

Koviloor Digital Library

போன்ற மாளிகைகளின்மீது விழுந்து குவிந்திருக்கின்ற அளவுக்கு வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருவைகுந்த விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கிறார். நீ அங்குச் சென்று ஸ்ரீஇராமபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

மின்னனையநுண்மருங்குல் மெல்லியற்கா யிலங்கை
வேந்தன்முடி யொருபதும்தோ ளிருபதும்போ யுதிர
தன்நிகரில் சிலைவளைத்தன் றிலங்கைபொடி செய்த
தடந்தோளன் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்,
செந்நெலொடு செங்கமலம் சேல்கயல்கள் வாளை
செங்கழுநீ ரொடுமிடைந்து கழனிதிகழ்ந் தெங்கும்,
மன்னுபுகழ் வேதியர்கள் மலிவெய்து நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1232

என் மனமே! முன்னொரு காலத்தில் மின்னலையொத்த நுண்ணிய இடையையுடைய மென்மையான சீதையின் பொருட்டு இலங்கை மன்னனின் பத்துத் தலைகளும், இருபது தோள்களும் அற்றுக் கீழே விழும்படித் தன்னுடைய ஒப்பற்ற கோதண்டம் என்னும் வில்லை வளைத்து அம்பினை எய்தியதன் காரணமாக இலங்கை மாநகரினைப் பொடி செய்த வலிமைமிக்க திருத் தோள்களையுடைய பெரிய வீரன் ஸ்ரீ இராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், செந்நெற் பயிர்களுடன் செந்தாமரைமலர், செங்கழுநீர்ப் பூக்கள் ஆகியவைகளினிடையே வாளைமீன்கள், கயல்மீன்கள் அவ் வயல்களில் துள்ளித் திரிந்து கொண்டிருக்க, நிலைத்த பெரும் புகழைப் பெற்றிருக்கின்ற வேதியர்கள் நிறைந்து வாழ்ந்து கொண் டிருக்கின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருவைகுந்த விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந் தருளியிருக்கிறான். நீ அங்குச் சென்று ஸ்ரீ இராமபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

பெண்மைமிகு வடிவுகொடு வந்தவளைப் பெரிய
பேயினது உருவுகொடு மாளவுயி ருண்டு
திண்மைமிகு மருதொடுநற் சகடமிறுத் தருளும்
தேவனவன் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்,

Koviloor Digital Library

உண்மைமிகு மறையொடுநற் கலைகள்நிறை பொறைகள்
உதவுகொடை யென்றிவற்றி னொழிவில்லா, பெரிய
வண்மைமிகு மறையவர்கள் மலிவெய்து நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1233

என் மனமே! அழகு மிகுந்த பெண் வடிவில் வந்த ''பூதனை'' என்னும் பேயின் நஞ்சு கலந்த பாலையுண்டு அவள் உண்மை யாகவே பேய்வடிவுடன் இறக்குமாறு, அவள் உயிரை உண்டு, வலிமையான மருதமரங்கள் இரண்டினையும் முறித்ததுடன் நல்ல வண்டிச் சக்கர வடிவில் வந்த சகடாசுரன் என்னும் அசுரனை அழித்து, நமக்கெல்லாம் அருள்புரிந்து கொண்டிருக்கின்ற தெய்வ மாகிய ஸ்ரீஇராமபிரான் மகிழ்ச்சியுடன் இனிதே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், உண்மைகள் மிகுந்திருக்கின்ற வேதங்களையும், நல்லனவாகிய கலைகள் நிரம்பிய ஆறங்கங்களையும் அறிந்து, இவைகளை எடுத்தோதும் ஆற்றல் பெற்ற அந்தணர்கள், பொறுமை, கொடைத்தன்மை போன்ற நற்குணங்கள் நிரம்பப் பெற்றவர்களாக வாழ்ந்து வருகின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத் தலத்தில் ''திருவைகுந்த விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி உள்ளான். நீ அங்குச் சென்று ஸ்ரீஇராமபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

விளங்கனியை யிளங்கன்று கொண்டுதிர வெறிந்து
வேல்நெடுங்க ணாய்ச்சியர்கள் வைத்ததயிர் வெண்ணெய்
உளங்குளிர அமுதுசெய்திவ் வுலகுண்ட காளை
உகந்தினிது நாடோறும் மருவியுறை கோயில்,
இளம்படிநற் கமுகுகுலைத் தெங்குகொடிச் செந்நெல்
ஈன்கரும்பு கண்வளரக் கால்தடவும் புனலால்,
வளங்கொண்ட பெருஞ்செல்வம் வளருமணி நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1234

என் மனமே! முன்னொரு காலத்தில் விளங்கனி வடிவில் வந்த வத்சாசுரன் என்னும் அசுரனைக் கன்று வடிவில் வந்த கபித்தாசுரன் என்னும் அசுரனை எறிகின்ற கோலாகக் கொண்டு எறிந்து அவ்விரு அசுரர்களையும் அழித்து, வேல் போன்ற கண்களையுடைய ஆய்ச்சி யர்கள் வைத்திருந்த தயிர், வெண்ணெய் போன்ற பொருள்களை உள்ளம் குளிருமாறு திருவமுது செய்து உலகம் முழுவதையும்

Koviloor Digital Library

உண்டு காத்தருளிய இளங்காளையுமாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருத்தலம் எதுவென்றால், இளமையான நல்ல பாக்குமரக்குலைகள், தென்னை மரங்கள், வெற்றிலைக் கொடிகள், நெற்பயிர்கள், கணுக்களை ஈன்ற கரும்புகள் ஆகிய இவைகளின் கால்களைத் தடவுமாறு பாய்ந்தோடுகின்ற நீர்வளமும் நிலவளமும் நிறைந்த வளம்மிக்க ''திரு நாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருவைகுந்த விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கிறான். நீ அங்குச் சென்று ஸ்ரீகண்ணபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

ஆறாத சினத்தின்மிகு நரகனுர மழித்த
அடலாழித் தடக்கையன் அலர்மகட்கும் அரற்கும்,
கூறாகக் கொடுத்தருளும் திருவுடம்பன் இமையோன்
குலமுதல்வன் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்,
மாறாத மலர்க்கமலம் செங்கழுநீர் ததும்பி
மதுவெள்ள மொழுகவய லுழவர்மடை யடைப்ப,
மாறாத பெருஞ்செல்வம் வளருமணி நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1235

என் மனமே! அடங்காத மிகுந்த சினம் கொண்டுள்ள நரகாசுரனை ஸ்ரீகண்ணபிரான் தன் கையில் ஏந்திய சக்கராயுதத்தைக் கொண்டு அவன் வலிமையை அழித்துக் கொன்றான். தன் தேவி திருமகளுக்கும், சிவபெருமானுக்கும் தன் திருமேனியில் இடம் கொடுத்த தேவர்களின் தலைவன் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் மகிழ்ச்சியுற்று இனிதே தங்கியிருக்கின்ற திருத்தலம் எதுவென்றால், என்றும் மாறுபாடில்லாத வகையில் மலர்ந்திருக்கின்ற தாமரை மலர்கள், செங்கழுநீர்ப் பூக்களிலிருந்து வழிகின்ற தேன்வெள்ளம் பெருகி ஒழுகிக் கொண்டு செல்வதைக் கண்ட வயலில் உழுகின்ற உழவர்கள் அவ்வெள்ளத்தைத் தடுத்து மடை கட்டி அடைத்தனர். இந்த வகையில் பெருஞ்செல்வமும் நீர்வளமும், நிலவளமும் மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திரு வைகுந்த விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி யிருக்கின்றான். நீ அத்திருக்கோயில் சென்று, எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

Koviloor Digital Library

வங்கமலி தடங்கடலுள் வானவர்க ளோடு
மாமுனிவர் பலர்கூடி மாமலர்கள் தூவி,
'எங்கள்தனி நாயகனே!' எமக்கருளாய் என்னும்
ஈசனவன் மகிழ்ந்தினிது மருவியுறை கோயில்,
செங்கயலும் வாளைகளும் செந்நெலிடைக் குதிப்பச்
சேலுகளும் செழும்பணைசூழ் வீதிதொறும் மிடைந்து,
மங்குல்மதி யகடுரிஞ்சு மணிமாட நாங்கூர்
வைகுந்த விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1236

என் மனமே! தேவர்கள், முனிவர்கள் ஆகியோர் ஒன்று கூடி கப்பல்கள் நிறைந்திருக்கும் திருப்பாற்கடலில் பள்ளி கொண்டருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை சிறந்த மலர்களைத் தூவி, எங்களுக்கெல்லாம் தனித் தலைவனாகத் திகழ்பவனே! எங்களுக்கு அருள்புரிதல் வேண்டும்! என்று வேண்டுகின்ற எம்பெருமான் மகிழ்ச்சியுடன் இனிதே திருக்கோயில் கொண்டு தங்கியிருக்கும் திருத்தலம் எதுவென்றால் கயல்மீன்கள், வாளை மீன்கள் ஆகியவை நெற்பயிர்களினிடையே துள்ளிக் கொண்டிருக்குமாறு அங்கு மருதவளம் மிகுந்திருக்கும். தெருக்களிலும் இடையிடையே அமைந்திருக்கும் மாடமாளிகைகள் விண்ணில் உள்ள சந்திரனைத் தொடுமளவு உயர்ந்து இருக்கின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருவைகுந்த விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கிறான். நீ அங்குச் சென்று எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவிக்க வேண்டும்.

*சங்குமலி தண்டுமுதல் சக்கரமு னேந்தும்
தாமரைக்கண் நெடியபிரான் றானமரும் கோயில்,
வங்கமலி கடலுலகில் மலிவெய்து நாங்கூர்
வைகுந்த விண்ணகர்மேல் வண்டறையும் பொழில்சூழ்,
மங்கையர்தம் தலைவன்மரு வலர்தமுடல் துணிய
வாள்வீசும் பரகாலன் கலிகன்றி சொன்ன,
சங்கமலி தமிழ்மாலை பத்திவைவல் லார்கள்
தரணியொடு விசும்பாளும் தன்மைபெறு வாரே. 1237

(சலம் திண்ணியது அண்டமும் கலை மின் வெண்மை விளங்கனி ஆறாத வங்கம் சங்கு - திருமடந்தை.)

Koviloor Digital Library

சங்கு, சக்கரம், கதை போன்ற ஆயுதங்களைக் கொண்டுள்ள செந்தாமரைக் கண்ணன் என்னும் நெடிய ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருத்தலம் இது என்பதும் திருக்கோயில் இது என்பதும் கப்பல்கள் நிறைந்திருக்கின்ற கடல்கள் நிறைந்திருக்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருவைகுந்த விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் உறைதல் பற்றி வண்டுகள் ஒலிக்கும் வயல்களும், பொழில்களும் சூழ்ந்திருக்கின்ற திருமங்கை நகருக்குத் தலைவனாகிய, வாள் வலிமையுடைய பரகாலன், கலிகன்றி என்று சிறப்பிக்கின்ற திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்லவர்கள் உலகத்தினையும், திருப்பரமபதத்தினையும் ஆட்சிபுரிகின்ற சிறப்பினைப் பெறுவார்கள்.

10. திருமடந்தை
திரு அரி மேய விண்ணகரம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*திருமடந்தை மண்மடந்தை யிருபாலும் திகழத்
தீவினைகள் போயகல அடியவர்கட் கென்றும்
அருள்நடந்து,இவ் வேழுலகத் தவர்பணிய வானோர்
அமர்ந்தேத்த இருந்தவிடம், பெரும்புகழ்வே தியர்வாழ்
தருமிடங்கள் மலர்கள்மிகு கைதைகள்செங் கழுநீர்
தாமரைகள் தடங்கடொறு மிடங்கடொறும் திகழ,
அருவிடங்கள் பொழில்தழுவி யெழில்திகழு நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1238

என் மடநெஞ்சே! ஸ்ரீதேவி ஒருபுறமும், ஸ்ரீபூதேவி ஒருபுறமும் ஆகிய இருவரும் இருபுறமும் ஒருங்கே இருந்து திகழ்ந்திருக்க, அடியவர்களின் தீவினைச் செயல்கள் அகன்று போகும்படி அருளிச் செய்து, ஏழுலகத்திலும் வாழ்கின்ற அனைத்து மக்களும், நாடி பணிந்து வணங்கவும், விண்ணுலகத்துத் தேவர்களும் அமர்ந்து இருந்து போற்றிப் பரவுகின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது என்றால், பெரும்புகழ் பெற்றிருக்கின்ற வேதங்களில் வல்ல அந்தணர்கள் வாழ்கின்ற மேன்மை பொருந்திய இடங்கள், மலர்கள் நிறைந்திருக்கின்ற தாழை, செங்கழுநீர், தாமரை ஆகிய மலர்கள்

Koviloor Digital Library

மலர்ந்திருக்கின்ற பொய்கைகள், சோலைகள் ஆகியவை அங்கங்கே நிறைந்திருக்கின்ற அழகுமிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத் தலத்தில் அமைந்திருக்கின்ற ''திருஅரிமேய விண்ணகரம்'' என்னும் திருக்கோயில் சென்று அங்குள்ள எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனைக் கண்டு சேவிக்க வேண்டும்.

வென்றிமிகு நரகனுர மதுவழிய விசிறும்
விறலாழித் தடக்கையன் விண்ணவர்கட்கு, அன்று
குன்றுகொடு குரைகடலைக் கடைந்தமுத மளிக்கும்
குருமணியென் னாரமுதம் குலவியுறை கோயில்,
என்றுமிகு பெரூஞ்செல்வத் தெழில்விளங்கு மறையோர்
ஏழிசையும் கேள்விகளு மியன்றபெருங் குணத்தோர்,
அன்றுலகம் படைத்தவனே யனையவர்கள் நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1239

என் மடநெஞ்சமே! வெற்றிகள் நிறைந்திருக்கின்ற நரகாசுரன் என்னும் அசுரனின் பலத்தைத் தன் திருக்கரத்தில் ஏந்தியிருக்கின்ற திருச்சக்கரத்தினைக் கொண்டு அழித்து, வதைத்து, முன்பொருகால் விண்ணுலகில் உள்ள தேவர்கட்குத் திருவமுதை அளிப்பதற்காகத் திருப்பாற்கடலில் ''மந்தரமலை'' என்னும் மலையை நட்டுக் கடைந்து தேவாமிர்தத்தினைப் பெற்ற, சிறந்த இரத்தினம் போன்ற வனும், அமுதம் போன்றவனுமாகிய எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத் தலம் எதுவென்றால், எக்காலத்திலும் வளர்ந்து வருகின்ற பெருஞ் செல்வம் பெருகிக் கொண்டு வரும், அழகுமிக்க மறையில் வல்ல அந்தணர்கள், ஏழுவகை இசைகளில் தேர்ச்சி பெற்று, வேதங்களில் கேள்வி ஞானம் பெற்றுப் பெருங்குணங்களுடன் விளங்கிக் கொண்டிருக்க, முன்பு உலகத்தைப் படைத்த பிரமதேவனும், அப்பிரமதேவனைப் போன்ற அந்தணர்களும் கூடி வாழ்ந்து வருகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலம் சென்று அங்குள்ள ''திருஅரிமேய விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலிலுள்ள எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவிக்க வேண்டும்.

உம்பருமிவ் வேழுலகு மேழ்கடலு மெல்லாம்
உண்டபிரான் அண்டர்கள்முன் கண்டுமகிழ் வெய்த,
கும்பமிகு மதயானை மருப்பொசித்துக் கஞ்சன்
குஞ்சிபிடித் தடித்தபிரான் கோயில்,மலுங் கெங்கும்

Koviloor Digital Library

பைம்பொனொடு வெண்முத்தம் பலபுன்னை காட்டப்
பலங்கனிகள் தேன்காட்டப் படவரவே ரல்குல்,
அம்பனைய கண்மடவார் மகிழ்வெய்து நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1240

என் மடநெஞ்சமே! தேவர்கள், ஏழு உலகங்கள், ஏழு கடல்கள் ஆகிய அனைத்தினையும், உலகப் பிரளயம் உண்டான அக் காலத்தில் உண்டு தன் வயிற்றில் வைத்துக் காப்பாற்றிய எம் பெருமான் ஆயர்கள் மகிழ்ச்சியடையும்படியாகக் குடம் போன்ற மத்தகத்தினைப் பெற்ற ''குவலயாபீடம்'' என்னும் யானையின் தந்தங்களை ஒடித்து, அதனை மடியச் செய்துவிட்டுக் 'கம்சன்' என்பவனின் தலைமுடியைப் பிடித்து இழுத்து அழித்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருத்தலம் எதுவென்றால், பசும்பொன், வெண்முத்தம் ஆகியவைகளைப் போன்ற மலர்கள் பூத்துக் குலுங்குகின்ற பலவகையான புன்னை மரங்கள், பலாப்பழங்கள் தேனினைச் சொரிய, பாம்புகளின் படத்தைப் போன்ற அல்குலையுடைய பெண்கள், கூரிய கண்களையும் கொண்டுள்ள பெண்கள் மகிழ்ச் சியுடன் வாழ்ந்து வருகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருஅரிமேய விண்ணகரம்'' என்னும் திருக் கோயிலில் எழுந்தருளியுள்ளான். அங்குச் சென்று அங்குறையும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

ஓடாத வாளரியி னுருவமது கொண்டுஅன்
றுலப்பில்மிகு பெருவரத்த இரணியனைப் பற்றி,
வாடாத வள்ளுகிரால் பிளந்தவன்றன் மகனுக்
கருள்செய்தான் வாழுமிடம் மல்லிகைசெங் கழுநீர்,
சேடேறு மலர்ச்செருந்தி செழுங்கமுகம் பாளை
செண்பகங்கள் மணநாளும் வண்பொழிலி னூடே,
ஆடேறு வயலாலைப் புகைகமழு நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1241

என் மனமே! முன்பு ஒரு சமயம் புறமுதுகு காட்டாமல் ஓடாமல் ஒளியாமல் வலிமைமிக்க 'நரசிம்ம'' அவதாரம் மேற் கொண்டு அளப்பதற்கரிய பெருவரங்கள் பலவற்றைக் கொண் டுள்ள இரணியன் என்னும் அரக்கனைப் பிடித்துத் தன்னுடைய வாட்டமில்லாத கூர்மையான நகங்களால் அவனுடைய அகன்ற

Koviloor Digital Library

மார்பினை இருகூறாகப் பிளந்து, அவனுடைய மகன் பிரகலாதனுக்கு அருள்புரிந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது என்றால் அழகுமிக்க மல்லிகை, செங்கழுநீர், சுரபுன்னை ஆகிய மலர்களும், வளம்மிக்க பாக்கு மரங்களின் பாளைகளும் செண்பக மலர்களும் பூத்துப் புதுமணம் வீசுகின்ற சோலைகளின் இடையிடையே, வயல்களிலிருந்து கரும்பாலைகள் இயங்கிக் கொண்டிருக்கக் கருப்பஞ்சாற்றின் வெல்லமாகத் தயாரித்துக் கொண்டிருக்கும்போது உண்டாகின்ற அக்கருப்பஞ்சாற்றின் புகையும் மணக்கின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருஅரிமேய விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ளார். நீ அங்குச் சென்று அங்குறையும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவிக்க வேண்டும்.

கண்டவர்தம் மனம்மகிழ மாவலிதன் வேள்விக்
 களவில்மிகு சிறுகுறளாய் மூவடியென் றிரந்திட்டு,
அண்டமுமிவ் வலைகடலு மவனிகளு மெல்லாம்
 அளந்தபிரா னமருமிடம் வளங்கொள்பொழி லயலே,
அண்டமுறு முழவொலியும் வண்டினங்க ளொலியும்
 அருமறையி னொலியும்மட வார்சிலம்பி னொலியும்,
அண்டமுறு மலைகடலி னொலிதிகழு நாங்கூர்
 அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1242

என் மனமே! கண்டார் யாவரும் மனம் மகிழுமாறு, மகாபலிச் சக்கரவர்த்தி இயற்றிக் கொண்டிருக்கும் யாகசாலையின் அருகே மிகவும் குள்ள வடிவமாகிய ''வாமன அவதாரம்'' மேற்கொண்டு சென்று அவனிடம் தன் திருவடியினால் மூன்று அடிமண் வேண்டும் என்று கேட்டுப் பெற்று அண்டங்கள், அலை வீசுகின்ற கடல்கள், அனைத்து உலகங்கள் ஆகிய எல்லாவற்றையும் அளந்து கொண்ட ''ஓங்கி உலகளந்த உத்தமன்'' என்னும் புகழ் ஓங்கி நிற்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருத்தலம் எதுவென்றால், வளம்மிக்க பூஞ்சோலைகளின் அருகில் வானளவும் அனைவரும் கேட்குமாறு ஒலிக்கின்ற ''முழவு'' என்னும் வாத்திய ஒலியும், வண்டுக் கூட்டங்களின் ரீங்கார ஒலியும், வேதங்களைக் கற்றுவல்ல அந்தணர்கள் ஓதிக் கொண்டிருக்கும் வேதஒலியும், நடனமாடுகின்ற பெண்களிலிருந்து உண்டாகின்ற

Koviloor Digital Library

சிலம்புகளின் ஒலியும் வானளவுக்கும் கேட்குமாறு உண்டாகும் அலைவீசுகின்ற கடலின் ஒலியும் ஆகிய பல்வகைப்பட்ட ஒலிகளுடன் திகழும் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருஅரிமேய விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருள் புரிகின்றார். நீ அங்குச் சென்று ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவிக்க வேண்டும்.

வாணெடுங்கண் மலர்க்கூந்தல் மைதிலிக்கா இலங்கை
மன்னன்முடி யொருபதும்தோ ளிருபதும்போ யுதிர,
தாணெடுந்திண் சிலைவளைத்த தயரதன்சேய் என்றன்
தனிச்சரண்வா னவர்க்கரசு கருதுமிடம், தடமார்
சேணிடங்கொள் மலர்க்கமலம் சேல்கயல்கள் வாளை
செந்நெலொடு மடுத்தரிய வுதிர்ந்தசெழு முத்தம்,
வாணெடுங்கண் கடைசியர்கள் வாருமணி நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1243

என் மனமே! வாள் போன்ற நீண்ட அழகிய கண்களையும் மலர்களை நிறையச் சூடியிருக்கின்ற கூந்தலையும் கொண்டுள்ள சீதாபிராட்டிக்காக வேண்டி, அயோத்தி நகரத்துச் சக்கரவர்த்தியின் திருக்குமாரரான ஸ்ரீஇராமபிரான் தன் வில்லை வளைத்து இலங்கை மாநகரின் மன்னனாகிய ''இராவணன்'' என்னும் அரக்கனின் பத்துத் தலைகளும், இருபது தோள்களும் கீழே உதிர்ந்து விழுமாறு செய்த எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கின்ற திருத்தலம் எதுவென்றால், அஃது வானவர்களின் அரசனான தேவேந்திரன் வந்து வணங்குமிடமாக அமைந்து, அங்குள்ள திருக்குளங்களில் பூத்திருக்கின்ற வானளாவிய தாமரை மலர்களும், சேல், கயல், வாளை ஆகிய மீன்வகைகளும் நிறைந்திருக்க, அங்குச் செந்நெற்பயிர்களை அறுவடை செய்யும்போது முத்துக்கள் சிதறிட, அம்முத்துக்களை வாள் போன்ற நீண்ட கண்களையுடைய வலைச்சியர்கள் வாரிச் சேர்க்கின்ற அளவுக்கு வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருஅரிமேய விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருள் புரிகின்றான். நீ அங்குச் சென்று ஸ்ரீஇராமபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

தீமனத்தான் கஞ்சனது வஞ்சனையில் திரியும்
தேனுகனும் பூதனைத னாருயிரும் செகுத்தான்,
காமனைத்தான் பயந்தகரு மேனியுடை யம்மான்
கருதுமிடம் பொருதுபுனல் துறைதுறைமுத் துந்தி,

Koviloor Digital Library

நாமனத்தால் மந்திரங்கள் நால்வேதம் ஐந்து
வேள்வியோ டாறங்கம் நவின்றுகலை பயின்று,அங்
காமனத்து மறையவர்கள் பயிலுமணி நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1244

என் மனமே! தீயனவே எண்ணும் உள்ளத்தினைக் கொண்ட ''கம்சன்'' என்பவனின் வஞ்சகச் செயல்கள் காரணமாக தேனு காசுரன் என்னும் அசுரனையும், பேய்வடிவில் வந்த பூதனையையும் ஆகிய இவர்களின் உயிரைப் போக்கி, மன்மதனைத் தன் மகனாகப் பெற்ற, கருத்த திருமேனியையுடைய எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருத்தலம் எது என்றால், நீர் நிறைந்துள்ள துறைகள்தோறும் முத்துகளைத் தள்ளிக் கொண்டிருக்க, அங்குள்ள அந்தணர்கள் தூய்மையான மனத்துடன் மந்திரங்கள், நான்கு வேதங்கள், ஐந்து வேள்விகள், ஆறு அங்கங்கள் ஆகியவைகளையும் நன்கு எடுத்தோதி, மேலும் பற்பல கலைகளையும் கற்றவர்களாகி, நிலைத்த மனத்தினையும் கொண்டவர்களாகத் திகழும் பெருமைமிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருஅரிமேய விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருள் புரிகின்றான். நீ அங்குச் சென்று ஸ்ரீகண்ணபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

கன்றதனால் விளவெறிந்து கனியுதிர்த்த காளை
காமருசீர் முகில்வண்ணன் காலிகள்முன் காப்பான்,
குன்றதனால் மழைதடுத்துக் குடமாடு கூத்தன்
குலவுமிடம் கொடிமதிள்கள் மாளிகைகோ புரங்கள்,
துன்றுமணி மண்டபங்கள் சாலைகள்தூ மறையோர்
தொக்கீண்டித் தொழுதியொடு மிகப்பயிலும் சோலை,
அன்றலர்வாய் மதுவுண்டங் களிமுரலு நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1245

என் மனமே! கன்று வடிவில் வந்த வத்சாசுரன் என்னும் அசுரனைக் கொண்டு விளாமர வடிவில் நின்ற கபித்தாசுரன் என்னும் அசுரனின்மீது வீசியெறிந்து விளாம்பழங்களை உதிரச் செய்ததன் மூலமாக அவ்விரு அசுரர்களையும் அழித்து, கண்டோர் விரும்புமாறுள்ள திருமேனியைக் கொண்டு பசுக்கூட்டங்களைப் பாதுகாக்கும் பொருட்டு கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்துப் பெய்த பெருமழையைத் தடுத்து நிறுத்தி, குடக்கூத்தாடிய

Koviloor Digital Library

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருத்தலம் எதுவென்றால், கொடிகளை உடைய மதிள்கள், திருமாளிகைகள், திருமாமணி மண்டபங்கள், கோபுரங்கள், வேள்விச்சாலைகள் ஆகியவைகளுடன் வேதங்களை அறிந்த அந்தணர்கள் வேதங்களையோதும் போதுண்டாகும் ஆரவாரங்களுடன், அங்குள்ள பூஞ்சோலைகளில் அப்பொழுது பூத்த பூக்களிலுள்ள தேனை உண்ட வண்டுகள் இசைபயில்கின்ற அளவில் வளப்பம் மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திரு அரிமேய விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருள் புரிகின்றான். நீ அங்குச் சென்று அங்குறையும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைக் கண்டு சேவிக்க வேண்டும்.

வஞ்சனையால் வந்தவள்த னுயிருண்டு வாய்த்த
தயிருண்டு வெண்ணெயமு துண்டு,வலி மிக்க
கஞ்சனுயி ரதுவுண்டிவ் வுலகுண்ட காளை
கருதுமிடம் காவிரிசந் தகில்கனக முந்தி,
மஞ்சுலவு பொழிலூடும் வயலூடும் வந்து
வளங்கொடுப்ப மாமறையோர் மாமலர்கள் தூவி,
அஞ்சலித்தங் கரிசரணென் றிறைஞ்சுமணி நாங்கூர்
அரிமேய விண்ணகரம் வணங்குமட நெஞ்சே! 1246

என் மனமே! வஞ்சக எண்ணமுடன் வந்த ''பூதனை'' என்னும் பேயின் உயிரை உண்டு, தயிர், ண்ணெய் போன்ற பொருட்களையும் உண்டு, வலிமைமிக்க கம்சனின் உயிரையும் உண்டு, இந்த உலகத்தினையும் உலகப்பிரளய காலத்தில் உண்டு காளையெனத் திகழும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருத்தலம் எதுவென்றால், காவிரி நதி சந்தனம், அகில் போன்ற மரங்களையும், பொன்னையும் தள்ளியவாறு முந்திக் கொண்டு வர, மேகங்கள் சூழ்ந்திருக்கின்ற சோலைகளை உடைய வயல்களில் வந்து பாய்ந்து வளம் பெருக்க, வேதங்களை ஓதவல்ல' அந்தணர்கள் மலர்களைத் தூவி, கைகூப்பித் தொழுது வணங்கி, ''அரிசரணம்'' என்று ஏத்தி இறைஞ்சுகின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் ''திருஅரிமேய விண்ணகரம்'' என்னும் திருக்கோயிலில் உள்ள ஸ்ரீகண்ணபிரானை நீ சென்று கண்டு சேவிக்க வேண்டும்.

Koviloor Digital Library

*சென்றுசின விடையேழும் படவடர்த்துப் பின்னை
செவ்வித்தோள் புணர்ந்துணர்ந்த திருமால்தன் கோயில்,
அன்றயனு மரன்சேயு மனையவர்கள் நாங்கூர்
அரிமேய விண்ணகர மமர்ந்தசெழுங் குன்றை,
கன்றிநெடு வேல்வலவன் மங்கையர்தம் கோமான்
கலிகன்றி யொலிமாலை யைந்தினொடு மூன்றும்,
ஒன்றினொடு மொன்றுமிவை கற்றுவல்லார் உலகத்
துத்தமர்கட் குத்தமரா யும்பருமா வர்களே. 1247

(திரு வென்றி உம்பர் ஓடாத கண்ட வாள் தீமனத்தான் கன்று வஞ்சனை சென்று-போது.)

ஏழுகாளைகளையும் போரிட்டு வென்று, நப்பின்னைப் பிராட்டியின் திருத்தோள்களைத் தழுவிய எம்பெருமான் திருமால் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருத்தலமாவது, பிரமனும், சிவபெருமானின் திருக்குமாரனாகிய முருகனும், மற்றும் இவர் களைப் போன்றவர்கள் கூடி வாழுகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருஅரிமேய விண்ணகரம்'' என்னும் திருக் கோயிலில் எழுந்தருள் புரியும் மலையையொத்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைப் பற்றி வேல் ஏந்திய திருமங்கை நகர்க்கரசனான ''கலிகன்றி'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் கற்று வல்லவர்களாகத் திகழ்பவர்கள் இவ்வுலகில் உத்தமர்களினும் மேம்பட்ட உத்தமர்களாக வாழ்ந்து, இறுதியில் தேவர்கள் வாழும் விண்ணுலகையும் அடைந்து அவர்களுடன் கூடி வாழ்வார்கள்.



Koviloor Digital Library

நாலாம் பத்து

1. போதலர்ந்தே

திருத்தேவனார் தொகை

கொச்சகக் கலிப்பா

*போதலர்ந்த பொழில்சோலைப் புறமெங்கும் பொருதிரைகள்,
தாதுதிர வந்தலைக்கும் தடமண்ணித் தென்கரைமேல்,
மாதவன்றா னுறையுமிடம் வயல்நாங்கை, வரிவண்டு
தேதெனவென் றிசைபாடும் திருத்தேவ னார்தொகையே. 1248

'போது' என்ற நிலையிலிருந்து மலர்ந்துள்ள மலர்கள் நிறைந்திருக்கின்ற சோலைகள் எங்கும் அம்மலர்களினின்றும் பூந்தாதுக்கள் உதிர, அவைகளை அடித்துச் செல்லுகின்ற நீர் அலைகள் மிக்கிருக்கும் ''மண்ணி'' ஆற்றின் தென்கரையின்மீது மாதவப் பெருமாள் எழுந்தருளியுள்ள திருத்தலம் எதுவென்றால், பூக்கள் மலரும் பூந்தோட்டங்களும், வயல்களும் சூழ்ந்துள்ள, வண்டுகள் 'தென்னதென' இசைபாடுகின்ற வகையில் வளம்மிக்க ''திருத்தேவனார்தொகை'' என்னும் திருப்பதியாகும்.

யாவருமா யாவையுமா யெழில்வேதப் பொருள்களுமாய்
மூவருமாய் முதலாய மூர்த்தியமர்ந் துறையுமிடம்,
மாவரும்திண் படைமன்னை வென்றிகொள்வார் மன்னுநாங்கை,
தேவரும்சென் றிறைஞ்சுபொழில் திருத்தேவ னார்தொகையே. 1249

அறிவுடைய 'சித்து' எனப்படும் அனைத்து ஆத்மாக்களையும், அறிவற்ற அனைத்து 'அசித்து' எனப்படும் பொருட்கள் அனைத்தினையும் தன் பகுதிகளாகக் கொண்டு, அழகுமிக்க வேதங்களின் பொருள்களாகவும், அரி, அரன், பிரமன் எனப்படுகின்ற மூவரும் ஆகி நின்று, இம்மூவர்க்குள்ளே முதன்மையாக அமர்ந்திருப் பதுடன், சிவனுக்கும், பிரமனுக்கும் உள்ளே உறைந்திருக்கும் ஆதிமூர்த்தி எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு, எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், குதிரைமீது ஏறிவந்து போரிடுகின்ற அரசர்களைத் தோற்கடித்து வெற்றி பெறுகின்ற வேதியர்கள் என்றும் நிலைத்து வாழ்கின்ற, தேவர்களும் வந்து வணங்குகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் ''திருத்தேவனார் தொகை'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருள் புரிகின்றான்.

Koviloor Digital Library

வானாடும் மண்ணாடும் மற்றுள்ள பல்லுயிரும்,
தானாய வெம்பெருமான் தலைவனமர்ந் துறையுமிடம்,
ஆனாத பெருஞ்செல்வத் தருமறையோர் நாங்கைதன்னுள்,
தேனாரு மலர்ப்பொழில்சூழ் திருத்தேவ னார்தொகையே. 1250

விண்ணுலகிலுள்ள திருப்பரமபதத்தினை நாடி வாழ்பவர்களும், இப்பூவுலகில் வாழ்பவர்களும் மற்றும் உள்ள அனைத்து வகை உயிர்களும் தானேயாகி நிறைந்திருக்கும் எம்பெருமான் எம்தலைவன் ஸ்ரீமந்நாராயணன் தங்கித் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், அழிதலில்லாத பெருஞ்செல்வத்தினைக் கொண்டுள்ள, அரும்பெரும் வேதங்களை ஓதுகின்ற அந்தணர்கள் வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் தேன் நிறைந்த மலர்கள் மலர்ந்திருக்கின்ற சோலைகள் சூழ்ந்திருக்கும் ''திருத்தேவனார் தொகை'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருள் புரிகின்றான்.

இந்திரனு மிமையவரும் முனிவர்களும் எழிலமைந்த,
சந்தமலர்ச் சதுமுகனும் கதிரவனும் சந்திரனும்,
'எந்தையெமக் கருள்,'[1]எனநின் றருளுமிடம் எழில்நாங்கை
சுந்தரநல் பொழில்புடைசூழ் திருத்தேவ னார்தொகையே. 1251

தேவேந்திரனும், மற்றும் அவ்விண்ணுலகிலுள்ள தேவர்களும், ''சனகர்'' போன்ற முனிவர்கள் பலரும் அழகுமிக்க வேதங்களைக் கொண்டுள்ள அழகிய தாமரை மலரில் தோன்றிய நான்கு முகங்களையுடைய பிரம்மாவும், சூரியன், சந்திரன் ஆகியவர்களும் ஒருங்கே திரண்டு வந்து, ''என் தந்தையே! எங்களுக்குத் தாங்கள் அருள்புரிதல் வேண்டும்'' என்று வேண்டியவாறே எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரியும் திருத்தலம் எதுவென்றால், அழகுமிக்க சோலைகள் சூழ்ந்திருக்கின்ற எழில்மிகு ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருத் தேவனார் தொகை'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருள் புரிகின்றான்.

அண்டமுமிவ் வலைகடலு மவனிகளும் குலவரையும்,
உண்டபிரா னுறையுமிடம் ஒளிமணிசந் தகில்கனகம்,
தெண்டிரைகள் வரத்திரட்டும் திகழ்மண்ணித் தென்கரைமேல்,
திண்திறலார் பயில்நாங்கைத் திருத்தேவ னார்தொகையே. 1252

Koviloor Digital Library

ஆகாயமும், அலைவீசுகின்ற கடல்களும் அனைத்து உலகங்கள், மலைகள் ஆகியவற்றை உண்டு தன் வயிற்றில் அடக்கிக் கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருத்தலம் எதுவென்றால், ஒளிவீசுகின்ற இரத்தினங்கள், சந்தனம், அகில், பொன் ஆகியவைகளைத் தெளிந்த நீரையுடைய அலைகள் வீசுவதன் வழியாகத் திரண்டு வரும்படிச் செய்கின்ற மண்ணியாற்றின் தென்கரையின்மீது மிகுந்த வல்லமை பெற்றவர்கள் வாழ்ந்து வருகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத் தலத்தில் அமைந்துள்ள ''திருத்தேவனார் தொகை'' என்னும் திருக்கோயிலாகும்.

ஞாலமெல்லா மமுதுசெய்து நான்மறையும் தொடராத,
பாலகனா யாலிலையில் பள்ளிகொள்ளும் பரமனிடம்,
சாலிவளம் பெருகிவரும் தடமண்ணித் தென்கரைமேல்,
சேலுகளும் வயல்நாங்கைத் திருத்தேவ னார்தொகையே. 1253

நான்கு வேதங்களினாலும் அறிந்துணர இயலாத அளவுக்குப் பெருமைமிக்க எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் உலகப்பிரளயம் உண்டான அக்காலத்தில் இந்த உலகம் முழுவதையும் திருவமுதாக உண்டு, இப்புவியைக் காப்பாற்றிச் சிறுபிள்ளையாய் ஆலந்தளிரின் மீது பள்ளி கொண்டுள்ள திருத்தலம் எது என்றால், செந்நெல் செழித்து வளரும் வயல்களில் மீன்கள் துள்ளி விளையாடும் அளவுக்கு வளம்மிக்க 'மண்ணி' ஆற்றின் தென்கரைமீதுள்ள ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருத் தேவனார் தொகை'' என்னும் திருக்கோயில் என்பதாகும்.

ஓடாத வாளரியி னுருவாகி யிரணியனை,
வாடாத வள்ளுகிரால் பிளந்தளைந்த மாலதிடம்,
ஏடேறு பெருஞ்செல்வத் தெழில்மறையோர் நாங்கைதன்னுள்,
சேடேறு பொழில்தழுவு திருத்தேவ னார்தொகையே. 1254

புறமுதுகு காட்டி ஓடாத, அளவுக்கு வாள் வலிமையுடன் கூடிய ''நரசிம்மமூர்த்தி''யானவர் ''இரணியன்'' என்னும் அரக்கனைத் தம்முடைய வாட்டமில்லாத கூரிய நகங்களால் அவனுடைய அகன்ற மார்பினை இருகூறாகப் பிளந்து அழித்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருத்தலம் எதுவென்றால், ஏடுகளிலே எழுதி வைக்கத்தக்க அளவுக்குப்

Koviloor Digital Library

பெருஞ்செல்வத்தைக் கொண்டுள்ள அழகிய வேதங்களை ஓதுகின்ற அந்தணர்கள் வாழ்கின்ற அழகுமிக்க பூஞ்சோலைகள் சூழ்ந்து இருக்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருத்தேவனார் தொகை'' என்னும் திருக்கோயில் என்பதாகும்.

வாராரு மிளங்கொங்கை மைதிலியை மணம்புணர்வான்,
காரார்திண் சிலையிறுத்த தனிக்காளை கருதுமிடம்,
ஏராரும் பெருஞ்செல்வத் தெழில்மறையோர் நாங்கைதன்னுள்,
சீராரும் மலர்ப்பொழில்சூழ் திருத்தேவ னார்தொகையே. 1255

'கச்சு' அணிந்த இளங்கொங்கையையுடைய சீதாபிராட்டியைத் திருமணம் செய்து கொள்வதன் பொருட்டு, கருத்த திண்மையான வில்லை வளைத்த சிறந்த காளை போன்று விளங்குகின்ற எம் பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய திருத்தலம் எதுவென்றால், அழகுமிக்க பெருஞ்செல்வத்துடனும், அழகிய வேதங்களை ஓதுகின்ற அந்தணர்கள் வசிக்கின்ற, சிறப்புமிக்க மலர்கள் மலர்ந்து நிறைந்திருக்கின்ற சோலைகள் சூழ்ந்துள்ள ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்துள்ள ''திருத் தேவனார் தொகை'' என்னும் திருக்கோயிலாகும்.

கும்பமிகு மதயானை பாகனொடும் குலைந்துவிழ,[1]
கொம்பதனைப் பறித்தெறிந்த கூத்தனமர்ந் துறையுமிடம்,
வம்பவிழும் செண்பகத்தின் மணங்கமழும் நாங்கைதன்னுள்,
செம்பொன்மதிள் பொழில்புடைசூழ் திருத்தேவ னார்தொகையே. 1256

'குடம்' போன்ற பெருத்த மத்தகத்தை உடைய ''குவலயா பீடம்'' என்னும் மதம்பிடித்த யானையை அதன் பாகனோடும் சேர்த்து அழியும்படியாகச் செய்து அதன் தந்தத்தினைப் பிடுங்கி யெறிந்ததை விளையாட்டாகச் செய்துள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், அப்பொழுதலர்ந்த செண்பக மலரின் மணங் கமழ்கின்ற, செம்பொன்னால் செய்துள்ள மதிள்களும், சோலை களும் சூழ்ந்திருக்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருத்தேவனார் தொகை'' என்னும் திருக்கோயில் என்பதாகும்.

Koviloor Digital Library

*காரார்ந்த திருமேனிக் கண்ணனமர்ந் துறையுமிடம்,
சீரார்ந்த பொழில்நாங்கைத் திருத்தேவ னார்தொகைமேல்,
கூரார்ந்த வேற்கலியன் கூறுதமிழ் பத்தும்வல்லார்
ஏரார்ந்த வைகுந்தத் திமையவரோ டிருப்பாரே. 1257

(போது யாவர் வானாடு இந்திரன் அண்டம் ஞாலம் ஓடாத வாரார் கும்பம் காரார் - கம்பமா.)

கார்மேக வண்ணனாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டுள்ள திருத்தலம் என்பது, சிறப்புமிக்க சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருத்தேவனார் தொகை'' என்னும் திருக்கோயில் பற்றிக் கூர்மையான வேலாயுதத்தைக் கையிலேந்திய ''கலியன்'' என்னும் ''திருமங்கை ஆழ்வார்'' அருளிச்செய்த இத்தமிழ்ப் பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்ல பெருமக்கள் நன்மை மிக்குள்ள ''வைகுந்தம்'' என்னும் திருப்பரமபதத்தில் தேவர்களுடன் சேர்ந்து வாழ்வார்கள்.

2. கம்பமா
திருவண்புருடோத்தமம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

★கம்ப மாகட லடைத்திலங் கைக்குமன்
கதிர்முடி யவைபத்தும்
அம்பி னாலறுத்து, அரசவன் தம்பிக்கு
அளித்தவ னுறைகோயில்
செம்ப லாநிரை செண்பகம் மாதவி
சூதகம் வாழைகள்சூழ்,
வம்பு லாம்கமு கோங்கிய நாங்கூர்
வண்புரு டோத்தமமே. 1258

அலைகள் வீசுகின்ற பெரிய கடலில் அணையைக்கட்டி, இலங்கை மாநகரை அடைந்து, அந்நகர மன்னனாகிய ''இராவணனின்'' பத்துத் தலைகளையும் அம்பினால் அறுத்து, அழித்து விட்டு அவன் தம்பி வீடணனுக்கு இலங்கை நகரினை அளித்தவனாகிய ஸ்ரீஇராமபிரான் தங்கியுள்ள திருத்தலம் எதுவென்றால், பலாமரங்களின் வரிசைகளும், செண்பகம், மா, வாழை ஆகிய

Koviloor Digital Library

மரங்களின் வரிசைகளும், குருக்கத்திச் செடிகளின் வரிசைகளும் சூழ்ந்து கொண்டு மணம் பரப்புகின்ற, வாசனை வீசுகின்ற பாக்கு மரங்கள் ஓங்கியுயர்ந்து வளர்ந்துள்ள அளவுக்கு வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருப்பதியின் கண் அமைந்துள்ள ''திருவண்புருடோத்தமம்'' என்னும் திருக்கோயில் என்பதாகும்.

பல்ல வம்திகழ் பூங்கடம் பேறியக்
 காளியன் பணவரங்கில்,
ஒல்லை வந்துறப் பாய்ந்தரு நடஞ்செய்த
 உம்பர்கோ னுறைகோயில்,
நல்ல வெந்தழல் மூன்றுநால் வேதமை
 வேள்வியோ டாறங்கம்,
வல்ல வந்தணர் மல்கிய நாங்கூர்
 வண்புரு டோத்தமமே. 1259

தழைத்திருக்கும் தளிர்களுடன் கூடிய பூக்கள் நிறைந்த கடம்ப மரத்தின்மீது ஏறி, ''காளியன்'' என்னும் பாம்பின் உச்சியின் மீதுள்ள அதன் படங்கள்மீது ஏறிப் பாய்ந்து, அருமையான நடனமாடிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் ஆகிய தேவர்களுக்கெல்லாம் தலைவன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருத்தலம் எதுவென்றால், அந்தணர்கள் அனைவரும் கூடி, மூவகைத் தீயை வளர்த்து நால்வகை வேதங்களையும் பயின்று, ஐந்து வகையான வேள்விகளை வளர்த்து, வேதங்களின் ஆறங்கங்களையும் மற்றவர்களுக்கு எடுத்துக் கற்பித்து வருகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருவண்புருடோத்தமம்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

அண்ட ரானவர் வானவர் கோனுக்கென்
 றமைத்தசோ. றதுவெல்லாம்
உண்டு, கோநிரை மேய்த்தவை காத்தவன்
 உகந்தினி துறைகோயில்,
கொண்ட லார்முழ வில்குளிர் வார்பொழில்
 குலமயில் நடமாட,
வண்டு தானிசை பாடிடு நாங்கூர்
 வண்புரு டோத்தமமே. 1260

ஆய்க்குல மக்கள் விண்ணுலகத்து அரசனான தேவேந் திரனுக்குப் படைக்க வேண்டும் என்று சமைத்த சோறு முழு

Koviloor Digital Library

வதையும் திருவமுது செய்து, பசுக்கூட்டங்களை மேய்த்து, அப்பசுக்களைப் பாதுகாத்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் மகிழ்ச்சியுடன் இனிமையுடன் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் கின்ற திருத்தலம் எதுவென்றால், குளிர்ந்த சோலைகளில் மேகக் கூட்டங்களினிடையே முழங்கிக் கொண்டிருக்கும் இடியோ சையைக் கேட்ட மயில்கள் கூட்டம் கூட்டமாகக் கூடி நடனமாடிக் கொண்டிருக்க, அந்த நடனத்துக்கேற்றாற் போன்று தக்க வகையில் அச்சோலையிலுள்ள வண்டுகள் இசைபாடிட ஆடலுடன் பாடலும் ஒருங்கே இணைந்து நடனமாடுகின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருவண்புருடோத்தமம்'' என்னும் திருக்கோயிலாகும்.

பருங்கை யானையின் கொம்பினைப் பறித்ததன்
பாகனைச் சாடிப்புக்கு,
ஒருங்க மல்லரைக் கொன்றுபின் கஞ்சனை
உதைத்தவ னுறைகோயில்,
கரும்பி னூடுயர் சாலிகள் விளைதரு
கழனியில் மலிவாவி,
மருங்கெ லாம்பொழி லோங்கிய நாங்கூர்
வண்புரு டோத்தமமே. 1261

பருத்த துதிக்கைகனையுடைய குவலயாபீடம் என்னும் யானையின் தந்தங்களைப் பிடுங்கி அதனைக் கொன்று அதன் பாகனையும் அழித்து, உள்ளே சென்று அங்குள்ள வீரம்மிக்க மல்லர்களையும் கொன்று, அதன் பின்பு கம்சனையும் உதைத்துக் கொன்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்கின்ற திருத்தலம் எதுவென்றால், கரும்புகளின் இடையே ஓங்கி வளர்கின்ற செந்நெற் பயிர்கள் விளைகின்ற வயல்கள் சூழ்ந்திருக்க, ஆங்காங்கேயுள்ள குளங்களின் அருகே அமைந்துள்ள சோலைகள் ஓங்கி வளர்ந்துள்ள வளம் மிகுந்துள்ள ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருவண் புருடோத்தமம்'' என்னும் திருக்கோயிலாகும்.

சாடு போய்விழத் தாள்நிமிர்த் தீசன்தன்
படையொடுங் கிளையோடும்
ஓட, வாணனை யாயிரந் தோள்களும்
துணித்தவ னுறைகோயில்,

Koviloor Digital Library

ஆடு வான்கொடி யகல்விசும் பணவிப்போய்ப்
பகலவ னொளிமறைக்கும்,
மாட மாளிகை சூழ்தரு நாங்கூர்
வண்புரு டோத்தமமே. 1262

வண்டிச் சக்கர வடிவில் வந்த ''சகடாசுரன்'' என்னும் அசுரனைத் தன் திருவடிகளை உயரத்தூக்கி உதைத்ததன் பயனாக அழித்து, ''வாணாசுரன்'' என்னும் அசுரனுடன் நடைபெற்ற போரில் சிவபெருமான் தன் படைகளோடும், தன் சுற்றத்தினருடன் தோற்று ஓடிக் கொண்டிருந்த அவ்வசுரனின் ஆயிரம் தோள்களையும் அறுத்து அழித்தவனுமாகத் திகழ்கின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், மாடமாளிகைகளில் அசைந்து ஆடுகின்ற கொடிகள், அகன்றுள்ள ஆகாயத்தில் உயரக் கிளம்பி உலா வருகின்ற சூரியனின் ஒளிக் கிரணங்களை மறைத்து நிழலை உண்டாக்குகின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருவண் புருடோத்தமம்'' என்னும் திருக்கோயில் என்பதாகும்.

அங்கை யாலடி மூன்றுநீ ரேற்றயன்
அலர்கொடு தொழுதேத்த,
கங்கை போதரக் கால்நிமிர்த் தருளிய
கண்ணன்வந் துறைகோயில்,
கொங்கை கோங்கவை காட்டவாய் குமுதங்கள்
காட்டமா பதுமங்கள்,
மங்கை மார்முகம் காட்டிடு நாங்கூர்
வண்புரு டோத்தமமே. 1263

மகாபலிச் சக்கரவர்த்தியிடம் 'வாமன' அவதாரம் மேற் கொண்டு சென்று, தன் திருவடிகளால் மூன்றடி மண் வேண்டும் என்று கேட்டுப் பெற்றுப் பின்பு அதனை அளந்து கொள்ளும் அளவில் ''திரிவிக்ரமனாக'' ஓங்கி வளர்ந்த பொழுது பிரம்மா வானவன் மலர்களைச் சமர்ப்பித்து வணங்கித் துதிக்கவும், கங்கை நதியானது நீர் பெருக்கெடுத்து ஓடுமாறு தன் திருவடிகளை உயரே நீட்டிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் திருத்தலம் எதுவென்றால், அங்குள்ள மாதர்களின் முலைகளைப் போன்று கோங்கு மரத்தின் பூக்கள் மலர்ந்திருக்க, அப்பெண்களின் வாயினைப் போன்று அங்குள்ள குமுத மலர்கள்

Koviloor Digital Library

ஒளி வீசிக்கொண்டு இருக்க, செந்தாமரை மலர்களோ அப்பெண் களின் முகத்தினைப் போன்று ஒளியுடன் விளங்குகின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருவண் புருடோத்தமம்'' என்னும் திருக்கோயில் என்பதாகும்.

உளைய வொண்டிறல் பொன்பெய ரோன்தன
துரம்பிளந் துதிரத்தை
அளையும், வெஞ்சினத் தரிபரி கீறிய
அப்பன்வந் துறைகோயில்,
இளைய மங்கைய ரிணையடிச் சிலம்பினொ
டெழில்கொள்பந் தடிப்போர்,கை
வளையில் நின்றொலி மல்கிய நாங்கூர்
வண்புரு டோத்தமமே. 1264

பலம் மிகப் பெற்றிருக்கின்ற ''இரணியன்'' என்னும் அசுரனை அவன் வருத்தமுறும்படியாக அவனுடைய மார்பினை இருகூறாகப் பிளந்து அதனால் வெளியேறிய இரத்தத்தினைத் தன் திருக்கரங் களால் அளைந்து, கடுங்கோபத்துடன் தன்னை அழிக்கக் குதிரை வடிவில் வந்த 'கேசி' என்னும் அசுரனின் வாயைப் பிளந்து அழித்துக் கொன்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் ஆகிய, இந்த என் தந்தை வந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளப் பெற்று வீற்றிருக்கின்ற திருத்தலம் எது என்றால், இளம்பெண்கள் நடனமாடும்போது உண்டாகும், இரு கால்களிலும் அணிந்து கொண்டிருக்கின்ற சிலம்புகளின் ஒலியும், அழகுமிக்க பெண்கள் தம் சிறுகைகளால் பந்தடிக்கும் பொழுது அவர்களின் கைகளிலுள்ள வளையல்கள் ஒருங்கு சேர்ந்து ஒலிக்கும் ஒலியானது நிறைந்திருக்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திரு வண்புருடோத்தமம்'' என்னும் திருக்கோயிலாகும்.

வாளை யார்தடங் கண்ணுமை பங்கன்வன்
சாபமற் றதுநீங்க
மூளை யார்சிரத் தையமுன் அளித்தவெம்
முகில்வண்ண னுறைகோயில்
பாளை வான்கமு கூடுயர் தெங்கின்வண்
பழம்விழ வெருவிப்போய்
வாளை பாய்தடம் சூழ்தரு நாங்கூர்
வண்புரு டோத்தமமே. 1265

Koviloor Digital Library

வாளை மீனை ஒத்த அகன்ற கண்களையுடைய உமாதேவியைத் தன் இடப்பாகத்திலே உடையவனான சிவபெருமானை தனக் குண்டான பெருஞ்சாபம் நீங்கிப் போகும்படி, முன்பு ஒரு சமயம் மண்டைஓட்டில் பிச்சை அளித்த எம்பெருமான் மேகவண்ணன் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு வீற்றிருக்கும் திருத்தலம் எதுவென்றால், பாளைகள் நிறைந்திருக்கும் பாக்கு மரங்களின் இடையிடையே ஓங்கி வளர்ந்திருக்கும் தென்னை மரத்தினின்றும் நன்கு முற்றிய தேங்காய்கள் அங்குள்ள குளத்திலே வீழ, அதனால் அக்குளத்திலுள்ள வாளை மீன்கள் அஞ்சி அவ்விடத்தை விட்டுச் சற்று அகன்று வேறோர் இடத்தில் குதித்து ஓடுகின்ற குளங்கள் நிறைந்திருக்கும் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந் துள்ள ''திருவண்புருடோத்தமம்'' என்னும் திருக்கோயில் என்பதாகும்.

இந்து வார்சடை யீசனைப் பயந்தநான்
முகனைத்தன் னெழிலாரும்,
உந்தி மாமலர் மீமிசைப் படைத்தவன்
உகந்தினி துறைகோயில்,
குந்தி வாழையின் கொழுங்கனி நுகர்ந்துதன்
குருளையைத் தழுவிப்போய்,
மந்தி மாம்பணை மேல்வைகு நாங்கூர்
வண்புரு டோத்தமமே. 1266

சந்திரனையும், சடைமுடியினையும் தன் தலையில் கொண்டி ருக்கின்ற சிவபெருமானைப் படைத்த பிரம்மாவைத் தன்னுடைய திருநாபிக் கமலத்தில் படைத்தளித்த எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் மகிழ்ச்சியுடன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் எதுவென்றால், பெண் குரங்குகள் வாழைப் பழங்களைத் தின்று, தன் குட்டியை அணைத்துக் கொண்டவாறே மாமரக் கிளைகளின்மீது தங்குகின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருவண்புருடோத்தமம்'' என்னும் திருக்கோயில் என்பதாகும்.

*மண்ணு ளார்புகழ் வேதியர் நாங்கூர்
வண்புரு டோத்தமத்துள்,
அண்ணல் சேவடிக் கீழடைந் துய்ந்தவன்
ஆலிமன் அருள்மாரி,

Koviloor Digital Library

பண்ணு ளார்தரப் பாடிய பாடலிப்
பத்தும்வல் லார்,உலகில்
எண்ணி லாதபே ரின்பமுற் றிமையவ
ரோடும் கூடுவரே. 1267

கம்பம் பல்லவம் அண்டர் பருங்கை சாடு அங்கையால் உளைய வாளை இந்து மண் - பேரணிந்து.

இம்மண்ணுலகில் பெரும் புகழ்பெற்ற அந்தணர்கள் வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருவண்புருடோத்தமம்'' என்னும் திருக்கோயிலில் வீற்றிருக்கும் அண்ணல் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் திருவடிகளின் கீழ்வந்து சேர்ந்து உய்வுபெற்ற, மழையைப் போன்று அருள்புரியும் திருவாலி நாட்டு மன்னரான திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் பயின்று வல்லவர்களாகத் திகழ்பவர்கள், இப்பூவுலகில் எண்ணற்ற பேரின்பத்தினை அடைந்து, பின்பு விண்ணுலகில் வாழ்கின்ற தேவர்களுடன் சென்று, இன்புற்று மகிழ்வர்.

3. பேரணிந்து

திருநாங்கூர்ச் செம்பொன் செய் கோயில்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*பேரணிந் துலகத் தவர்தொழு தேத்தும்
பேரரு ளாளனெம் பிரானை,
வாரணி முலையாள் மலர்மக ளோடு
மண்மக ளுமுடன் நிற்ப,
சீரணி மாட நாங்கைநன் னடுவுள்
செம்பொன்செய் கோயிலி னுள்ளே,
காரணி மேகம் நின்றதொப் பானைக்
கண்டுகொண் டுய்ந்தொழிந் தேனே. 1268

இவ்வுலகில் வாழ்பவர்கள் யாவரும் எம்பெருமானின் திருநாமங்களை எடுத்துச் சொல்லிச் சேவித்துத் தொழுது வணங்கி வருகின்ற எம்பெருமான் பேரருளாளப் பெருமானை, கச்சு அணிந்த முலைகளையுடைய பெரிய பிராட்டியான திருமகளும், பூமிப் பிராட்டியும் சேர்ந்திருக்கின்ற நிலையில், மாடமாளிகைகள்

Koviloor Digital Library

நிறைந்த ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் நடுவே அமைந் துள்ள ''திருச்செம்பொன் செய்திருக்கோயிலினுள்ளே'' கார் மேகத்தினை ஒத்திருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு கொண்டு அடியேன் சேவித்து உய்வடைந்தேன்.

பிறப்பொடு மூப்பொன் றில்லவன் றன்னைப்
பேதியா வின்பவெள் ளத்தை,
இறப்பெதிர் காலக் கழிவுமா னானை
ஏழிசை யின்சுவை தன்னை,
சிறப்புடை மறையோர் நாங்கைநன் னடுவுள்
செம்பொன்செய் கோயிலி னுள்ளே,
மறைப்பெரும் பொருளை வானவர் கோனைக்
கண்டுநான் வாழ்ந்தொழிந் தேனே. 1269

பிறப்பு, முதுமை என்று ஒன்றும் இல்லாதவனாக, எக்காலத் தும் ஒரே நிலையில் நின்று, ஆனந்தப் பெருவெள்ளமாகி நிற்கின்ற எம்பெருமான் இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் என்னும் மூன்று காலங்களிலும் என்றென்றைக்கும் நிலையாக நின்று, ஏழிசையின் சுவையினையுடையவனாகி நின்று சிறப்புடைய வேதங்களின் பொருளாக இருந்து, தேவர்களின் தலைவனாக விளங்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை மறைகளை நன் குணர்ந்த அந்தணர்கள் வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத் தலத்தின் நடுவேயுள்ள ''திருச்செம்பொன் செய்திருக்கோயிலில்'' அடியேன் கண்டு வணங்கி உய்வு பெற்றேன்.

திடவிசும் பெரிநீர் திங்களும் சுடரும்
செழுநிலத் துயிர்களும் மற்றும்,
படர்பொருள் களுமாய் நின்றவன் றன்னை,
பங்கயத் தயனவ னனைய,
திடமொழி மறையோர் நாங்கைநன் னடுவுள்
செம்பொன்செய் கோயிலி னுள்ளே,
கடல்நிற வண்ணன் றன்னைநா னடியேன்
கண்டுகொண் டுய்ந்தொழிந் தேனே. 1270

உறுதிமிக்க ஆகாயம், எங்கும் பரந்து கிடக்கின்ற நீர், தீ, சந்திரன், சூரியன், வளமிக்க செழுமையான இவ்வுலகத்தில் வாழ்கின்ற அனைத்துயிர்கள் ஆகிய அனைத்திலும் பரவியிருந்துள்ள எம் பெருமானை, தாமரை மலரில் தோன்றிய பிரமனைப் போன்றுள்ள

Koviloor Digital Library

தேவர்கள் கூடி வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் நடுவே அமைந்துள்ள ''திருச்செம்பொன் செய்கோயிலினுள்ளே எழுந்தருள்புரியும் கடல்நிற வண்ணனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அடியேன் கண்டு கொண்டு அவனைச்சேவித்து உய்வு பெற்றேன்.

வசையறு குறளாய் மாவலி வேள்வி[1]
மண்ணள விட்டவன் றன்னை,
அசைவறு மமர ரடியிணை வணங்க
அலைகடல் துயின்றவம் மானை,
திசைமுக னனையோர் நாங்கைநன் னடுவுள்
செம்பான்செய் கோயிலி னுள்ளே,
உயர்மணி மகுடம் சூடிநின் றானைக்
கண்டுகொண் டுய்ந்தொழிந் தேனே. 1271

குறைபாடில்லாத ''வாமன'' அவதாரம்'' மேற்கொண்டு, மகாபலிச்சக்கரவர்த்தி நடத்திக் கொண்டிருந்த வேள்வியின் முன்னே சென்று, இப்புவியைப் பெற்றுத் தன் திருவடியால் அளந்துவிட்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை, தேவர்கள் யாவரும் கூடி வந்து நின் திருவடிகளை வணங்கும்படி அலைகள் வீசுகின்ற திருப்பாற் கடலில் திருக்கண் வளர்ந்தருள்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை, பிரமதேவனை ஒத்த தேவர்கள் வசிக்கின்ற ''திரு நாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் நடுவிலே அமைந்துள்ள ''திருச்செம்பொன் செய்கோயில்'' என்னும் திருக்கோயிலினுள்ளே உயர்வகையான இரத்தினங்கள் பதித்த கிரீடத்தினைச் சூடிக் கொண்டிருக்கும் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு கொண்டு சேவித்து உய்வு பெற்றேன்.

'தீமனத் தரக்கர் திறலழித் தவனே!'
என்றுசென் றடைந்தவர் தமக்கு,
தாய்மனத் திரங்கி யருளினைக் கொடுக்கும்
தயரதன் மதலையைச் சயமே,
தேமலர்ப் பொழில்சூழ் நாங்கைநன் னடுவுள்
செம்பொன்செய் கோயிலி னுள்ளே,
காமனைப் பயந்தான் றன்னைநா னடியேன்
கண்டுகொண் டுய்ந்தொழிந் தேனே. 1272

Koviloor Digital Library

'தீய எண்ணங்களை மனத்தினில் கொண்டுள்ள அரக்கர்களின் வலிமையை அழித்தவனே!'' என்று கூறி அடைக்கலம் அடைந்தவர்களிடத்தே, தாயுள்ளம் போன்று இரக்கத்துடன் தசரதச் சக்கரவர்த்தியின் மகன் ஸ்ரீஇராமபிரான் அன்புடன் அருளினை அளிக்கின்றான். தேன் நிறைந்திருக்கும் மலர்களைக் கொண்டுள்ள சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் நடுவில் அமைந்துள்ள ''திருச்செம்பொன் செய்கோயில்'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளியிருக்கும், ''காமனை''ப் பெற்றெடுத்தவனான ஸ்ரீமந்நாராயணனை அடியேன் கண்டு கொண்டு சேவித்து உய்வு பெற்றேன்.

மல்லைமா முந்நீ ரதர்பட மலையால்
அணைசெய்து மகிழ்ந்தவன் றன்னை,
கல்லின்மீ தியன்ற கடிமதி ளிலங்கை
கலங்கவோர் வாளிதொட் டானை,
செல்வநான் மறையோர் நாங்கைநன் னடுவுள்
செம்பொன்செய் கோயிலி னுள்ளே
அல்லிமா மலராள் தன்னொடு மடியேன்
கண்டுகொண் டல்லல்தீர்ந் தேனே. 1273

ஸ்ரீஇராமபிரான் வளம் மிகுந்த முக்கடல் நீரினின்றும் வழியுண்டாகுமாறு மலைகளைக் கொண்டு அணையைக்கட்டி மகிழ்ச்சியடைந்துள்ளார். பின்பு திரிகூட மலையை மதிளாகக் கொண்டுள்ள இலங்கை மாநகரம் சென்று, அந்நகரமே சிதறி ஓடும்படியாக ஓர் அம்பினைத் தொடுத்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானை நான்கு வேதங்களையும் தம்முடைய செல்வமாகக் கருதிக் கொண்டிருக்கின்ற அந்தணர்கள் கூடி வாழ்ந்து கொண்டிருக்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் நடுவே அமைந்துள்ள ''திருச்செம்பொன் செய்கோயில்'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளியிருக்கும் ''தாமரை மலராள்'' என்னும் திருமகளுடன் சேர்ந்திருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அடியேன் கண்டு கொண்டு, அடியேனுக்குண்டான துன்பங்கள் யாவும் நீங்கப் பெற்றேன்.

வெஞ்சினக் களிறும் வில்லொடு மல்லும்
வெகுண்டிறுத் தடர்த்தவன் றன்னை,
கஞ்சனைக் காய்ந்த காளையம் மானைக்
கருமுகில் திருநிறத் தவனை,

Koviloor Digital Library

செஞ்சொல்நான் மறையோர் நாங்கைநன் னடுவுள்
செம்பொன்செய் கோயிலி னுள்ளே,
அஞ்சனக் குன்றம் நின்றதொப் பானைக்
கண்டுகொண் டல்லல்தீர்ந் தேனே. 1274

கடுங்கோபத்துடன் சீறிப்பாய்ந்து வந்த ''குவலயாபீடம்'' என்னும் யானையின் தந்தத்தை முறித்து அழித்து, கம்சன் தன் விழாவில் வைத்திருந்த வில்லை முறித்து, மல்லர்களுடன் போரிட்டுக் கம்சனைக் கொன்ற காளையை ஒத்த வீரம்மிக்க ஸ்ரீகண்ணபிரானைக் கார்மேகத்தை ஒத்த நிறத்தினைக் கொண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைத் ''திருநாங்கூர்'' என்னும் திருத் தலத்தின் நடுவே அமைந்துள்ள ''திருச்செம்பொன் செய்கோயில்'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளியிருக்கும் கருமையான மலையைப் போன்று நிற்கின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை அடியேன் கண்டு கொண்டு சேவித்து எனக்குண்டாகி இருக்கும் துன்பங்கள் யாவற்றையும் போக்கிக் கொண்டேன்.

அன்றிய வாண னாயிரம் தோளும்
துணியவன் றாழிதொட் டானை,
மின்திகழ் குடுமி வேங்கட மலைமேல்
மேவிய வேதநல் விளக்கை,
தென்திசைத் திலதம் அனையவர் நாங்கைச்
செம்பொன்செய் கோயிலி னுள்ளே,
மன்றது பொலிய மகிழ்ந்துநின் றானை
வணங்கிநான் வாழ்ந்தொழிந் தேனே. 1275

மிக்க கோபத்துடன் வந்து போரிட்ட ''வாணாசுரன்'' என்னும் அசுரனின் ஆயிரம் தோள்களையும் அறுத்து அழிக்கும் பொருட்டுத் தன் திருக்கரத்தினில் ''திருச்சக்கரம்'' என்னும் ஆயுதத்தைத் தொடுத்த எம்பெருமான் திருமால், மின்னலைப் போன்று ஒளி வீசுகின்ற உயர்ந்து ஓங்கியுள்ள திருவேங்கடமலையின்மீது எழுந்தருளி யிருக்கின்ற ''வேதம்'' என்கின்ற ஒளி வீசுகின்ற திருவிளக்கினை, தென்திசைக்குத் திலகம் போன்று திகழ்கின்ற அந்தணர்கள் வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் நடுவே அமைந்துள்ள ''திருச்செம்பொன் செய்கோயில்'' என்னும் திருக்கோயிலினுள்ளே நிறைந்திருந்து உள்ளம் மகிழ்ந்து நிற்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு கொண்டு சேவித்து அடியேன் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டு இருக்கின்றேன்.

Koviloor Digital Library

'களங்கனி வண்ணா! கண்ணனே! என்றன்
கார்முகி லே!'என நினைந்திட்டு,
உளங்கனிந் திருக்கு மடியவர் தங்கள்
உள்ளத்து ளூறிய தேனை,
தெளிந்தநான் மறையோர் நாங்கைநன் னடுவுள்
செம்பொன்செய் கோயிலி னுள்ளே,
வளங்கொள்பே ரின்பம் மன்னிநின் றானை
வணங்கிநான் வாழ்ந்தொழிந் தேனே. 1276

களாப்பழ நிறத்தினையுடையவனே! ஸ்ரீகண்ணபிரானே! என் கார்மேக வண்ணனே! என்றெல்லாம் தம் மனதினுள்ளே எண்ணிக் கொண்டு, உள்ளத்தினுள்ளே மிகவும் மகிழ்ந்து கொண்டு இருக்கும் அடியவர்களின் உள்ளத்துள்ளே தேன் போன்று இனிமையுடன் நிலைத்து நின்றுவிட்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை, நான்குவிதமான வேதங்களையும் நன்கு கற்றுத் தெளிந்த அந்தணர்கள் வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் நடுவில் நன்றாகவே அமைந்துள்ள ''திருச்செம்பொன் செய் கோயில்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வளமான பெரு மகிழ்ச்சி யுடன் திகழ்கின்ற, என்றும் நிலைத்து நிற்கும் எம் பெருமான் ஸ்ரீகண்ணபிரானை அடியேன் வணங்கி வாழ்ந்து கொண்டிருக் கிறேன்.

*தேனமர் சோலை நாங்கைநன் னடுவுள்
செம்பொன்செய் கோயிலி னுள்ளே,
வானவர் கோனைக் கண்டமை சொல்லும்
மங்கையார் வாட்கலி கன்றி,
ஊனமில் பாட லொன்பதோ டொன்றும்
ஒழிவின்றிக் கற்றுவல் லார்கள்,
மானவெண் குடைக்கீழ் வையக மாண்டு
வானவ ராகுவர் மகிழ்ந்தே. 1277

(பேரணி பிறப்பு திட வசை தீமனத்து மல்லை வெஞ்சினம் அன்றிய களங்கனி தேனமர்-மாற்றரசர்.)

தேன் நிறைந்துள்ள மலர்களைக் கொண்டிருக்கும் சோலைகள் நிறைந்துள்ள ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் நடுவில் அமைந்துள்ள ''திருச்செம்பொன் செய்கோயில்'' என்னும் திருக் கோயிலினுள்ளே விண்ணுலகில் வாழ்கின்ற தேவர்கட்கெல்லாம்

Koviloor Digital Library

தலைவனாகத் திகழ்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டது பற்றி ''திருமங்கை'' நாட்டு மன்னனாகத் திகழும் வாள் படையினையுடையவராகியுள்ள ''கலிகன்றி'' என்று சிறப்பிக்கப் பெறுகின்ற திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்துள்ள குறைவற்ற நிலையில் அமைந்துள்ள இப்பாசுரங்கள் பத்தினையும் ஒன்றும் விடாமல் நன்கு கற்றுணர்ந்து, ஆற்றல்மிக்கவர்கள் வெண்கொற்றக் குடையின் கீழ் அமர்ந்து கொண்டு இவ்வுலகினை ஆட்சி புரிந்துவிட்டுப் பின்பு மகிழ்ச்சியுடன் விண்ணுலகத்தினராவார்கள்.

4. மாற்றரசர்
திருநாங்கூர்த் திருத்தெற்றியம்பலம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*மாற்றரசர் மணிமுடியும் திறலும் தேசும்
மற்றவர்தம் காதலிமார் குழையும், தந்தை
காற்றளையு முடன்கழல வந்து தோன்றிக்
கதநாகம் காத்தளித்த கண்ணர் கண்டீர்,
நூற்றிதழ்கொ ளரவிந்தம் நுழைந்த பள்ளத்
திளங்கமுகின் முதுபாளை பகுவாய் நண்டின்,
சேற்றளையில் வெண்முத்தம் சிந்து நாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண் மாலே. 1278

எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரானிடம் மாற்றுக் கருத்துகளைக் கொண்டதனால் பகைமை பூண்ட துரியோதனன் முதல் உள்ள அனைத்து அரசர்களின் மணிமுடிகள், பலம், புகழ் இவையாவும் அழிந்தொழிய, அவ்வரசர்களின் மனைவியர்களின் காதணிகள் ஒழிந்து போகுமாறும், தன் தந்தையார் வசுதேவரின் கால்களில் கட்டப்பட்டுள்ள கால்விலங்குகள் நீங்குமாறும் வந்து, கஜேந்திர ஆழ்வானைப் பாதுகாத்தருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைக் கண்டீர்கள். அப்படிப்பட்ட எம்பெருமான் பல்வகை இதழ்களைக் கொண்டுள்ள தாமரை மலரினையுடைய பள்ளங்களில் புகுந்த நண்டுகளானது சேற்று வளையில் புகுந்திருக்க, இளம்பாக்கு மரங் களின் முற்றிய பாளை வெடித்து வெண்முத்துகளைச் சிந்துகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருத் தெற்றியம்பலம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள சிவந்த திருக்கண்களையுடைய திருமாலே ஆவான்.

Koviloor Digital Library

பொற்றொடித்தோள் மடமகள்தன் வடிவு கொண்ட
பொல்லாத வன்பேய்ச்சி கொங்கை வாங்கி,
பெற்றெடுத்த தாய்போல மடுப்ப ஆரும்
பேணாநஞ் சுண்டுகந்த பிள்ளை கண்டீர்,
நெற்றொடுத்த மலர்நீலம் நிறைந்த சூழல்
இருஞ்சிறைய வண்டொலியும் நெடுங்க ணார்தம்,
சிற்றடிமேல் சிலம்பொலியும் மிழற்று நாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண்மாலே. 1279

முன் கையில் பொன்னாலான வளையல்களை அணிந்த தோள்களையுடைய யசோதையின் வடிவில் தன்னைப் பெற்ற தாயைப்போலப் பால் கொடுப்பதுபோலப் பொல்லாதவளாகிய வஞ்சக எண்ணங்களைக் கொண்டும், நஞ்சு கலந்த முலைப்பாலுடன் வந்த ''பூதனை'' என்னும் அரக்கியின் முலைப்பாலைப் பருகி, யாரும் விரும்பாத அளவுக்கு உண்டு மகிழ்ச்சி அடைந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைக் கண்டீர்கள். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் நெற்கதிர்களின் மேலே பூத்திருக்கின்ற குவளை மலர்களின் சூழலில், அம்மலர்களின் மீதிருக்கும் வண்டுகளின் 'ரீங்கார' ஒலியும், நீண்ட கண்களினையுடைய பெண்கள் மெதுவாக நடந்து வருகின்ற சிற்றடிகளின் மேலே ஒலிக்கின்ற அவர்களின் பாதங்களில் அணிந்து கொண்டிருக்கின்ற சிலம்பொலிகளும் சேர்ந்து, மழலைகளின் ஒலிகளைப்போல் கேட்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் கண் அமைந்துள்ள ''திருத்தெற்றியம்பலம்'' என்னும் திருக்கோயிலின் உள்ளே உள்ளவன் சிவந்த திருக்கண்களை உடைய என் திருமாலே ஆவான்.

படலடைத்த சிறுகுரம்பை நுழைந்து புக்குப்
பசுவெண்ணெய் பதமாரப் பண்ணை முற்றும்,
அடலடர்த்த வேற்கண்ணார் தோக்கை பற்றி
அலந்தலைமை செய்துழலு மையன் கண்டீர்,
மடலெடுத்த நெடுந்தெங்கின் பழங்கள் வீழ
மாங்கனிகள் திரட்டுருட்டா வருநீர்ப் பொன்னி,
திடலெடுத்து மலர்சுமந்தங் கிழியு நாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண் மாலே. 1280

ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்தபோது, கடைந்தெடுத்த பதமான வெண்ணெயை உண்பதன் பொருட்டுத் தட்டிகள் அடைத்த சிறுகுடிசைகளில் புகுந்து, அங்குள்ள வேற்கண்களை

Koviloor Digital Library

யுடைய பெண்களின் முன்தானையினைப் பற்றி இழுத்துத் துன்புறுத்தி இடைச்சேரி எங்கும் திரிந்து கொண்டிருக்கும் எம்பெருமானைக் கண்டீர்கள். அங்கு உயர்ந்து வளர்ந்திருக்கின்ற தென்னை மரப்பாளைகளிலிருந்து பழுத்த தெங்குப் பழங்கள் மாமரங்களின்மீது விழுந்து, மாம்பழங்களைத் திரட்டி உருட்டிக் கொண்டு வந்து காவிரி நதியில் சேர்த்துவிடும். இப்பழங்களுடன் ஓடுகின்ற பொன்னி நதி மணல்மேடுகளைக் கரைத்துக் கொண்டு, மலர்களையும் இழுத்துக் கொண்டு ஓடி வருகின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் கண் அமைந்துள்ள ''திருத்தெற்றியம்பலம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந் தருளியுள்ள சிவந்த திருக்கண்களையுடைய என் திருமாலே ஆவான்.

வாராரும் முலைமடவாள் பின்னைக் காகி
வளைமருப்பில் கடுஞ்சினத்து வன்தா ளார்ந்த,
காரார்திண் விடையடர்த்து வதுவை யாண்ட
கருமுகில்போல் திருநிறத்தென் கண்ணர் கண்டீர்,
ஏராரும் மலர்ப்பொழில்கள் தழுவி யெங்கும்
எழில்மதியைக் கால்தொடர விளங்கு சோதி,
சீராரு மணிமாடம் திகழு நாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண் மாலே. 1281

'கச்சு' அணிந்த முலைகளையுடைய மடப்ப குணமுடைய நப்பின்னைப் பிராட்டியைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு வளைந்த கொம்புகளைக் கொண்டுள்ள, மிகுந்த கோபமுடன் வந்த காளை மாடுகளை நெரித்துக் கொன்ற ஸ்ரீகண்ண பிரான் கருத்த மேகம் போன்ற நிறத்தினைக் கொண்டிருப்பதனைக் கண்டீர்கள். சிறப்பு பொருந்திய மலர்கள் நிறைந்திருக்கும் சோலைகள் எங்கும் சூழ்ந்திருப்பதனால், அங்கு வீசும் காற்று, அழகுமிக்க சந்திரனை மேலே செல்லவொட்டாமல் தடுத்துக் கொண்டிருக்க ஒளி வீசுகின்ற மணிகள் பதிக்கப் பெற்ற மாட மாளிகைகள் திகழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின்கண் அமைந்துள்ள ''திருத்தெற்றியம்பலம்'' என்னும் திருக்கோயி லினுள்ளே எழுந்தருளியுள்ள எம்பெருமான் சிவந்த திருக்கண்களை யுடைய என் திருமாலே ஆவான்.

Koviloor Digital Library

கலையிலங்கு மகலல்குல் கமலப் பாவை
கதிர்முத்த வெண்ணகையாள் கருங்க ணாய்ச்சி,
முலையிலங்கு மொளிமணிப்பூண் வடமும் தேய்ப்ப
மூவாத வரைநெடுந்தோள் மூர்த்தி கண்டீர்,
மலையிலங்கு நிரைச்சந்தி மாட வீதி
ஆடவரை மடமொழியார் முகத்து,இ ரண்டு
சிலைவிலங்கி மனஞ்சிறைகொண் டிருக்கு நாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண் மாலே. 1282

மேகலையை அணிந்து கொண்டு திகழ்கின்ற அகன்ற அல்குலையுடைய தாமரை மலரில் தோன்றி வீற்றிருக்கும் முத்துப் போன்ற வெண்மையான பற்களையும் புன்னகையும் கொண்டுள்ள பெரிய பிராட்டியும், கருத்த கண்களையுடைய நப்பின்னைப் பிராட்டியும் ஆகிய இருவரின் முலைகளிலே ஒளிவீசுகின்ற முத்துமணி மாலையும், கண்டிகையும் ஒன்றோடொன்று உராய்வ தனால், இளமை மாறாமல் முதுமை என்ற ஒன்று என்றும் இல்லாம லிருக்கின்ற, மலையை ஒத்த பெரிய திருத்தோள்களையுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி திருக்கோயில் கொண்டிருப் பதைக் கண்டீர்கள். இத்திருக்கோயில் அமைந்துள்ள ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில், மலையையொத்த மாடமாளிகைகள் வரிசை வரிசையாக ஓங்கி நிற்க, ஒன்றோடொன்று சேர்ந்திருக்கும் வீதிகளில், இனிய மொழி பேசும் பெண்களின் முகத்திலுள்ள இரண்டு விற்கள் போன்ற புருவங்களானவை வளைந்து அங்குள்ள ஆடவர்களின் மனத்தினைக் கவர்ந்து ஈர்க்கின்றன. இப்படிப்பட்ட சிறப்புகளை உடைய ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருத்தெற்றியம்பலம்'' என்னும் திருக்கோயி லினுள்ளே எழுந்தருளியிருப்பவன் சிவந்த திருக்கண்களுடன் திகழும் என் திருமாலே ஆவான்.

தான்போலு மென்றெழுந்தான் தரணியாளன்,
அதுகண்டு தரித்திருப்பா னரக்கர் தங்கள்,
கோன்போலு மென்றெழுந்தான் குன்ற மன்ன
இருபதுதோ ளுடன்துணித்த வொருவன் கண்டீர்,
மான்போலு மென்னோக்கின் செய்ய வாயார்
மரகதம்போல் மடக்கிளியைக் கைமேல் கொண்டு,
தேன்போலு மென்மழலை பயிற்று நாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண் மாலே. 1283

Koviloor Digital Library

இலங்கை மாநகரின் அரக்கர் குலத்து மன்னனான ''இராவணன்'' தன் முன்னே தோன்றுகின்ற ஸ்ரீஇராமபிரானைக் கண்டு, இவனும் என்னைப் பேன்று சாதாரணமாக ஒரு மன்னன் தானே என்று அலட்சியமாகக் கருதிக் கொண்டிருக்க குன்றினை யொத்த இராவணனின் இருபது தோள்களையும் அறுத்து அழித்துள்ள ஸ்ரீஇராமபிரானைக் கண்டீர்கள். இத்திருக்கோயில் கொண்டுள்ள ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் மான் போன்ற பார்வையும், சிவந்த உதடுகளும் உடைய பெண்கள், மரகதம் போன்ற பச்சை நிறமான கிளிகளைத் தத்தம் கைகளில் வைத்துக் கொண்டு தேன் போன்று இனிய மென்மையான மழலை மொழியினைப் பேசுகின்றனர். இப்படிப்பட்ட ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருத்தெற்றியம்பலம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருக்கும் எம்பெருமான் சிவந்த திருக்கண்க்ளை உடைய என் திருமாலே ஆவான்.

பொங்கிலங்கு புரிநூலும் தோலும் தாழப்
பொல்லாத குறளுருவாய்ப் பொருந்தா வாணன்,
மங்கலம்சேர் மறைவேள்வி யதனுள் புக்கு
மண்ணகலம் குறையிரந்த மைந்தன் கண்டீர்,
கொங்கலர்ந்த மலர்க்குழலார் கொங்கை தோய்ந்த
குங்குமத்தின் குழம்பளைந்த கோலந் தன்னால்,
செங்கலங்கல் வெண்மணல்மேல் தவழு நாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண் மாலே. 1284

மகிழ்வினையளிக்கக் கூடிய பூணூலும், மான்தோலும் அணிந்து கொண்டதால் தொங்கப் பெற்றுள்ள அழகிய நிலையில் குறுகிய வடிவாகிய வாமன அவதாரம் மேற்கொண்டு, மகாபலிச் சக்கர வர்த்தியின் மங்கலம் நிறைந்த வேதஒலிகள் ஒலித்துக் கொண் டிருக்கின்ற வேள்விச் சாலையின் முன்னே எழுந்தருளி இப்புவியை யாசித்துப் பெற்ற மைந்தனாகிய எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனைக் கண்டீர்கள். இத்திருக்கோயில் அமைந்துள்ள ''திருநாங்கூர்''த் திருத்தலத்தில் மணம் மிகுந்த பூந்தாதுக்கள் நிறைந்துள்ள மலர்களைச் சூடியிருக்கும் கூந்தலை உடைய பெண்கள் நீராடுகின்றபோது அவர்களின் முலைகளின்மீது பூசி யிருந்த குங்குமம் கலைந்தனாலுண்டான சிவப்பு நிறத்துடன் கலங் கியிருந்த குங்குமக் குழம்பு ஆற்றுநீரில் கரைந்து, அவ்வாற்றிலுள்ள வெண்மணற் குன்றின்மீது படிந்திருக்கின்றன. இத்தகைய

Koviloor Digital Library

வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருத்தெற்றியம்பலம்'' என்னும் திருக்கோயிலில் எழுந் தருளியுள்ள எம்பெருமான் சிவந்த திருக்கண்களையுடைய என் திருமாலே ஆவான்.

சிலம்பினிடைச் சிறுபரல்போல் பெரிய மேரு
 திருக்குளம்பில் கணகணப்பத் திருவா காரம்
குலுங்க,நில மடந்தைதனை யிடந்து புல்கிக்
 கோட்டிடைவைத் தருளியவெங் கோமான் கண்டீர்,
இலங்கியநான் மறையனைத்து மங்க மாறும்
 ஏழிசையும் கேள்விகளு மெண்டிக் கெங்கும்,
சிலம்பியநற் பெருஞ்செல்வம் திகழு நாங்கூர்த்
 திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண் மாலே. 1285

''வராக'' அவதாரம் மேற்கொண்டபோது பூமிப் பிராட்டியைத் தம் கொம்புகளால் குத்தி எடுத்துப் பாதுகாத்தபோது காற்சிலம்பின் சிறுபரல்களிலிருந்து உண்டாகும் ஓசையைப்போலக் கால் குளம்பிலே மேருமலையானது கணகணவென்று ஒலிக்கவும், திருமகள் தங்கியிருக்கின்ற திருமார்பு குலுங்கக் கூடிய வகையில் அருளிச் செய்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டீர்கள். இத்திருக்கோயில் அமைந்துள்ள ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் சிறந்து விளங்குகின்ற நான்கு வேதங்கள், ஆறு அங்கங்கள், ஏழுவகை இசைகள், இதிகாச புராணங்கள் ஆகிய யாவும் எட்டுத் திசைகளிலும் பரவிக் கேட்கின்ற அளவுக்குப் பெருஞ் செல்வவளம் பெற்றுத் திகழ்கின்றது. இப்படிப்பட்ட செல்வவளம் மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருத் தெற்றியம்பலம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் சிவந்த திருக்கண்களைக் கொண்டு திகழும் என் திருமாலே ஆவான்.

ஏழுலகும் தாழ்வரையு மெங்கு மூடி
 எண்டிசையு மண்டலமும் மண்டி, அண்டம்
மோழையெழுந் தாழிமிகும் ஊழி வெள்ளம்
 முன்னகட்டி லொடுக்கியவெம் மூர்த்தி கண்டீர்,
ஊழிதொறு மூழிதொறு முயர்ந்த செல்வத்
 தோங்கியநான் மறையனைத்தும் தாங்கு நாவர்,
சேழுயர்ந்த மணிமாடம் திகழு நாங்கூர்த்
 திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண் மாலே. 1286

Koviloor Digital Library

ஏழுலகங்கள், மலைகள், எட்டுத்திக்குகள், அண்டங்கள் ஆகிய எங்கும் மோழை கிளம்பிக் கடல் பொங்கிய அளவில் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் உலகத்தினைப் பாதுகாத்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயண மூர்த்தியைக் கண்டீர்கள். இத்திருக் கோயில் அமைந்துள்ள ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் காலந்தோறும் வளர்ந்து கொண்டிருக்கின்ற பெருஞ்செல்வம் நிறைந்திருக்க, வேதங்கள் அனைத்தினையும் கற்றுவல்ல அந்தணர்கள் வாழ்ந்து கொண்டிருக்க, உயர்ந்த மாடமாளிகைகள் நிறைந்திருக்கின்றன. இப்படிப்பட்ட வளமும், செல்வமும் நிறைந்த ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருத்தெற்றியம்பலம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந் தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் சிவந்த திருக்கண்களையுடைய என் திருமாலே ஆவான்.

*சீரணிந்த மணிமாடம் திகழு நாங்கூர்த்
திருத்தெற்றி யம்பலத்தென் செங்கண் மாலை,
கூரணிந்த வேல்வலவன் ஆலி நாடன்
கொடிமாட மங்கையர்கோன் குறைய லாளி,
பாரணிந்த தொல்புகழான் கலியன் சொன்ன
பாமாலை யிவையைந்து மைந்தும் வல்லார்,
சீரணிந்த வுலகத்து மன்ன ராகிச்
சேண்விசும்பில் வானவராய்த் திகழ்வர் தாமே. 1287

(மாற்றரசர் பொற்றொடி படல் வாரார் கலை தான் பொங்கு சிலம்பின் ஏழுலகும் சீரணிந்த - தூம்புடை.)

சிறப்பு மணிமாடங்கள் திகழ்ந்து விளங்கும் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருத்தெற்றியம்பலம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி வீற்றிருக்கும் சிவந்த திருக்கண்களை உடைய என் திருமாலைப் பற்றிக் கூர்மையான வேல்ஏந்திய ''திருவாலி'' என்னும் நாட்டுக்குத் தலைவரும், ''திருமங்கை'' நகரிலுள்ளவர் கட்கரசரும், ''திருக்குறையலூர்'' என்னும் நகரை ஆள்பவருமான ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த பாசுரங்கள் பத்தினையும் நன்கு கற்று வல்லவர்கள், இப்புவியாளும் மன்னர்களாக இருப்பதுடன், ஆகாயத்திலுள்ள தேவர்களாகவும் இருக்கப் பெறுவர்.

Koviloor Digital Library

5. தூம்புடை திருமணிக் கூடம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*தூம்புடைப் பனைக்கை வேழம்
துயர்கெடுத் தருளி, மன்னு
காம்புடைக் குன்ற மேந்திக்
கடுமழை காத்த எந்தை,
பூம்புனல் பொன்னி முற்றும்
புகுந்துபொன் வரண்ட, எங்கும்
தேம்பொழில் கமழும் நாங்கூர்த்
திருமணிக் கூடத் தானே. 1288

துளைகளைக் கொண்டு, பனையளவு பருத்திருக்கின்ற பெரிய துதிக்கையையுடைய கஜேந்திர ஆழ்வானுக்குண்டான துன்பத்தைப் போக்கியருளியவனும், நிலைபெற்று விளங்கும் மூங்கில்கள் நிறைந்துள்ள ''கோவர்த்தனம்'' என்னும் மலையைக் குடையாகப் பிடித்துப் பெய்த பெருமழையினின்றும் ஆக்களையும் ஆயர் களையும் பாதுகாத்தருளிய எந்தை எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் பூக்களையொத்த மென்மையான நீரினை உடைய 'பொன்னி' என்னும் பெயர் பூண்ட காவிரி நதியானது புகுந்து பொன்னை வாரிக் கொண்டு வளம் சேர்க்கின்ற அளவில், தேன் நிறைந்த மலர்களை உடைய சோலைகள், சூழ்ந்துள்ள நிலையில், அதன் மணம் எங்கும் வீசுமாறு விளங்கும் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருமணிக்கூடம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கிறான்.

கவ்வைவா ளெயிற்று வன்பேய்க்
கதிர்முலை சுவைத்து,இ லங்கை
வெவ்விய[1] இடும்பை கூரக்
கடுங்கணை துரந்த எந்தை,
கொவ்வைவாய் மகளிர் கொங்கைக்
குங்குமம் கழுவிப் போந்த,
தெய்வநீர் கமழு நாங்கூர்த்
திருமணிக் கூடத் தானே. 1289

ஆரவாரம் செய்து கொண்டு வாள் போன்ற கூர்மையான பற்களை உடையவளாகி 'பேய்' வடிவில் வந்த ''பூதனை'' என்னும்

Koviloor Digital Library

அரக்கியின் நஞ்சு கலந்த முலைப்பாலைச் சுவைத்து உறிஞ்சி உண்டும், இலங்கையிலுள்ள அரக்கர்களால் உண்டான தீமையைப் போக்கும் பொருட்டு ''இராவணன்'' என்னும் அரக்கன்மீது அம்பினைத் தொடுத்து, அவனை அழித்த எந்தை, எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் கோவைப் பழம் போன்று சிவந்த வாயினை உடைய பெண்களின் முலைகளின்மீது பூசியிருந்த குங்குமக் குழம்பினைக் கழுவிக் கொண்டு சென்றதனால் காவிரி நன்னீர் மணம் வீசுகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருமணிக் கூடம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருள் புரிகின்றான்.

மாத்தொழில் மடங்கச் செற்று
 மருதிற நடந்து வந்தாள்
சேத்தொழில் சிதைத்துப் பின்னை
 செவ்வித்தோள் புணர்ந்த எந்தை,
நாத்தொழில் மறைவல் லார்கள்
 நயந்தறம் பயந்த, வண்கைத்
தீத்தொழில் பயிலும் நாங்கூர்த்
 திருமணிக் கூடத் தானே. 1290

குதிரை வடிவில் வந்த ''கேசி'' என்னும் அசுரனின் வாயைப் பிளந்து அவனைக் கொன்று, இரண்டு மருதமரங்களாக நின்ற அசுரர்களை அழிக்கும் பொருட்டு, அவ்விரு மரங்களின் இடையே நடந்து சென்றதன் பலனாக அவ்விரு மருதமரங்களையும் முறித்து அழித்துள்ள, தவழ்நடையையுடைய திருவடிகள், வலிய கால்களையுடைய ஏழு எருதுகளினையும் அழித்து, அழகிய திருத்தோள்களுடன் கூடிய நப்பின்னைப் பிராட்டியாருடன் சேர்ந்திருக்கின்ற எந்தையாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் நாவின் தொழிலாகிய வேதங்களைக் கற்றுவல்ல அந்தணர்கள், அறங்கள் பல செய்து கொண்டிருக்கும் வலிய கைகளினால் ''தீ'' மூட்டி யாகத்தினை வளர்க்கின்ற வளம் மிகுந்துள்ள ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருமணிக்கூடம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருந்து அருள்புரிகின்றான்.

தாங்கருஞ் சினத்து வன்தாள்
 தடக்கைமா மருப்பு வாங்கி,
பூங்குருந் தொசித்துப் புள்வாய்
 பிளந்தெரு தடர்த்த எந்தை,

Koviloor Digital Library

மாங்கனி நுகர்ந்த மந்தி
வந்துவண் டிரிய, வாழைத்
தீங்கனி நுகரும் நாங்கூர்த்
திருமணிக் கூடத் தானே. 1291

அடக்கிக் கொள்ள இயலாத அளவற்ற பெருங்கோபத்துடன், வலிய கால்களையும், பெரிய துதிக்கையையும் பெற்ற ''குவலயா பீடம்'' என்னும் யானையின் தந்தத்தினை முறித்தெறிந்து, குருந்த மரத்தினை ஒடித்து, 'கொக்கு' வடிவில் வந்த பகாசுரனின் வாயைப் பிளந்து, ஏழு எருதுகளை அடக்கிய எந்தை எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் மாங்கனியைச் சுவைத்துத் தின்ற பெண்குரங்கு, வாழை மரத்தின்மீது ஏறி, அங்குள்ள வண்டுகள் சிதறி ஓடும்படிச் செய்துவிட்டு வாழைப்பழங்களைத் தின்கின்ற வளம்மிக்க ''திரு நாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருமணிக் கூடம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருந்து அருள் புரிகின்றான்.

கருமக ளிலங்கை யாட்டி
பிலங்கொள்வாய் திறந்து, தன்மேல்
வருமவள் செவியும் மூக்கும்
வாளினால் தடிந்த எந்தை,
பெருமகள் பேதை மங்கை
தன்னொடும் பிரிவி லாத,
திருமகள் மருவு நாங்கூர்த்
திருமணிக் கூடத் தானே. 1292

இலங்கை மாநகரின் ''அரசி'' எனத் திகழும், குகை போன்ற பெரிய வாயினைக் கொண்டுள்ள ''சூர்ப்பணகை'' என்னும் அரக்கி யானவள் தன் மீது காமுற்றுவர, அவளுடைய காதுகளும், மூக்கும் ஆகிய் இவைகள்ளத் தம் வாளினால் அறுத்தொழித்த எந்தை எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் பெருமை தங்கிய பெண்ணாகவும், அடியவர்களின் குற்றங்களை அறியாதவளாயுமிருக்கின்ற பூமிப்பிராட்டியும், ''திருமகள்'' என்னும் பெரிய பிராட்டியும் என்றும் பிரியாதவர்களாகி விளங்கும் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருமணிக்கூடம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருந்து அருள்புரிகின்றான்.

Koviloor Digital Library

கெண்டையும் குறளும் புள்ளும்
கேழலு மரியும் மாவும்,
அண்டமும் சுடரும் அல்லா
ஆற்றலு மாய எந்தை,
ஒண்டிறல் தென்ன னோட
வடவர சோட்டங் கண்ட,
திண்டிற லாளர் நாங்கூர்த்
திருமணிக் கூடத் தானே. 1293

மீன், வாமனன், அன்னம், வராகம், நரசிம்மம், அயக்ரீவர் ஆகிய பல்வேறு அவதாரங்களை மேற்கொண்டிருக்கின்ற எம்பெருமான் அண்டங்கள், சூரிய, சந்திரர்கள் மற்றும் மற்றுமுள்ள யாவற்றினும் எங்கும் நிறைந்திருக்கின்ற எந்தை எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் வலிமைமிக்க பாண்டிய மன்னர்களும், வடநாட்டு அரசர்களும் தோற்று ஓடுமாறு செய்த வலிமை மிக்கவர்கள் வாழ்ந்து வருகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருமணிக் கூடம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருந்து அருள்புரிந்து கொண்டிருக்கிறான்.

குன்றமும் வானும் மண்ணும்
குளிர்புனல் திங்க ளோடு,
நின்றவெஞ் சுடரும் அல்லா
நிலைகளு மாய எந்தை,
மன்றமும் வயலும் காவும்
மாடமும் மணங்கொண்டு, எங்கும்
தென்றல்வந் துலவும் நாங்கூர்த்
திருமணிக் கூடத் தானே. 1294

மலைகள், ஆகாயம், பூமி, குளிர்ந்த தண்ணீர், சந்திரன், சூரியன் மற்றுமுள்ள நட்சத்திரங்கள் ஆகிய அனைத்திலும் தானேயாகி நிறைந்து நிற்கின்ற எந்தை எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், அறிஞர்கள் கூடுகின்ற மன்றங்களையுடைய பெரிய தெருக்களும், வயல்களும், பூங்காக்களும், மாடமாளிகைகளும் மணம் கொண்டு வீசுகின்ற நிலையில் தென்றற்காற்றும் ஒருசேர உலவி வருகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருமணிக் கூடம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருந்து அருள்புரிந்து கொண்டிருக்கிறான்.

Koviloor Digital Library

சங்கையும் துணிவும் பொய்யும்
மெய்யும்இத் தரணி யோம்பும்,
பொங்கிய முகிலும் அல்லாப்
பொருள்களு மாய எந்தை,
பங்கய முகுத்த தேறல்
பருகிய வாளை பாய,
செங்கய லுகளு நாங்கூர்த்
திருமணிக் கூடத் தானே. 1295

ஐயப்பாடுகளும், துணிச்சல்களும், பொய், மெய் ஆகியனவும், இவ்வுலகைப் பாதுகாக்கும் மேகங்களாகவும், மற்றும் மற்றுமுள்ள அனைத்துப் பொருள்களிலும் நிறைந்திருக்கின்ற எந்தை எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தாமரை மலரினின்றும் வழிந்தோடிய தேனைப் பருகிய பெரிய வாளைமீன்கள் துள்ளித் திரிந்து கொண்டிருக்கச் சிறிய சிவந்த கயல்மீன்கள் அப்பெரிய மீன்களைக் கண்டு அஞ்சியோடுகின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருமணிக்கூடம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருந்து அருள்புரிகின்றான்.

பாவமும் அறமும் வீடும்
இன்பமுந் துன்பந் தானும்
கோவமும் அருளும் அல்லாக்
குணங்களு மாய எந்தை,
'மூவரி லெங்கள் மூர்த்தி
இவன்,'என முனிவ ரோடு,
தேவர்வந் திறைஞ்சும் நாங்கூர்த்
திருமணிக் கூடத் தானே. 1296

பாவம், புண்ணியம், அறம், வீடுபேறு, இன்பம், துன்பம், கோபம், அருள் ஆகியவைகளுடன் மற்றும் மற்றுமுள்ள அனைத்துக் குணங்களுமாகி இருக்கின்ற எந்தை எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், அரி, அரன், அயன் என்கின்ற மூவரில் அடியோங்கள் வழிபடுமாறு திகழ்கின்ற மூர்த்தி இந்த மகா விஷ்ணுவே என்று தெளிவுபெற்று முனிவர்களும், தேவர்களும் வந்து வணங்குகின்ற தெய்வமணம் கமழும் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருமணிக்கூடம்'' என்னும் திருக் கோயிலினுள்ளே வீற்றிருந்து அருள்புரிந்து கொண்டிருக்கிறான்.

Koviloor Digital Library

*திங்கள்தோய் மாட நாங்கூர்த்
திருமணிக் கூடத் தானை,
மங்கையர் தலைவன் வண்டார்
கலியன்வா யொலிகள் வல்லார்,
பொங்குநீ ருலக மாண்டு
பொன்னுல காண்டு, பின்னும்
வெங்கதிர்ப் பரிதி வட்டத்
தூடுபோய் விளங்கு வாரே. 1297

தூம்பு கவ்வை மாத்தொழில் தாங்கரு கருமகள் கெண்டை குன்றம் சங்கை பாவம் திங்கள்-தாவளந்து.

சந்திரனைத் தொடும்படியாக ஓங்கி உயர்ந்து வளர்ந்திருக்கின்ற மாடமாளிகைகள் நிறைந்துள்ள ''திருநாங்கூர்'' என்னும் திருத் தலத்தில் அமைந்துள்ள ''திருமணிக்கூடம்'' என்னும் திருக்கோயி லினுள்ளே எழுந்தருளியுள்ள எந்தை எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனைப் பற்றி, திருமங்கை நகர்க்குத் தலைவர், வண்டுகள் மொய்க்கின்ற அழகிய மலர்மாலையினை அணிந்திருக்கும் ''கலியன்'' திருமங்கையாழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் கற்று வல்லவர்கள் கடல் சூழ்ந்த இவ்வுலகினை ஆண்டு, பின்பு ''சுவர்க்கலோகம்'' என்னும் விண்ணுலகையும் ஆண்டு அனுபவித்து, அதற்குப் பின்பு சூரியமண்டலத்தினூடே சென்று திருப்பரமபதம் சென்றடைந்து இனிது வாழ்வார்கள்.

6. தாவளந்து
திருக்காவளம்பாடி

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*தாவளந் துலக முற்றும்
தடமலர்ப் பொய்கை புக்கு,
நாவளம் நவின்றங் கேத்த
நாகத்தின் நடுக்கம் தீர்த்தாய்,
மாவளம் பெருகி மன்னும்
மறையவர் வாழும் நாங்கைக்,
காவளம் பாடி மேய
கண்ணனே! களைகண் நீயே. 1298

Koviloor Digital Library

தாமரை மலர்களைத் தேடி உலகம் முழுவதும் அலைந்து திரிந்து, பெரிய தாமரை மலர்கள் இருக்கின்ற குளத்தினுள்ளே இறங்கியபோது, அங்குள்ள முதலையினால் உண்டான துன்பத்தினைப் போக்கியருள வேண்டுமென்று கஜேந்திர ஆழ்வான் ''ஆதிமூலமே!'' என்று தம் நாவினாலே உன்னுடைய திருநாமங்களை நவின்று அழைத்த அப்போதே விரைந்து சென்று அதனைக் காப்பாற்றியருளிய எம்பெருமானே! செல்வவளம் நிறைந்து நிலைத்து நிற்கும் மறைகளை ஓதியுணர்ந்த அந்தணர்கள் வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருக்காவளம்பாடி'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருந்து அருள் புரியும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! அந்த யானைக்குண்டான துன்பத்தைப் போக்கியருளியதுபோல அடியேனுக்குண்டான துன்பங்களையும் நீயே போக்கியருள வேண்டும்.

மண்ணிடந் தேன மாகி
 மாவலி வலிதொ லைப்பான்,
விண்ணவர் வேண்டச் சென்று
 வேள்வியில் குறையி ரந்தாய்,
துண்ணென மாற்றார் தம்மைத்
 தொலைத்தவர் நாங்கை மேய,
கண்ணனே! காவ ளந்தண்
 பாடியாய்! களைக ணீயே. 1299

ஆதிவராக மூர்த்தியாகி நின்று உலகப் பிரளயம் உண்டான காலத்திலே பூமியைக் குத்தி எடுத்துப் பாதுகாத்தருளி, தேவர்களின் பொருட்டு மகாபலிச் சக்கரவர்த்தியினிடம் சென்று அவனுடைய வலிமையைப் போக்குமாறு, ''வாமன'' அவதாரம் மேற்கொண்டு, அவன் செய்த வேள்வியின் முன்னே நின்று இப்பூமியை யாசித்துப் பெற்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! மாற்றுக் கருத்து கொண்ட பகைவர்களை விரைந்தழிக்கும் ஆற்றல் பெற்ற வீரர்கள் வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருக்காவளம்பாடி'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந் தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! நீயே அடியேனுக்கு உண்டான துன்பத்தைப் போக்கியருள வேண்டும்.

Koviloor Digital Library

உருத்தெழு வாலி மார்வில்
ஒருகணை யுருவ வோட்டி,
கருத்துடைத் தம்பிக் கின்பக்
கதிர்முடி யரச ளித்தாய்,
பருத்தெழு பலவும் மாவும்
பழம்விழுந் தொழுகும் நாங்கைக்,
கருத்தனே! காவ ளந்தண்
பாடியாய்! களைக ணீயே. 1300

சினத்துடன் வேகமாக வந்த வாலியின் மார்பின்மீது ஒரு கணையினை விரைந்து செலுத்தி அவனுயிர் பிரிகின்ற நேரத்தில், அவனுடைய தம்பியாகிய சுக்ரீவனுக்கு அவ்வரசுப் பட்டம் ஈந்து, ஒளி வீசுகின்ற மணிமகுடத்தைச் சூட்டி அருளிய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானே! பருத்து வளர்ந்த பலாப்பழமும், மாம்பழமும் ஒருங்குசேரக் கீழே விழுகின்ற அளவில் வளம் மிகுந்த ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின்கண் அமைந்துள்ள ''திருக்காவளம்பாடி'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருள் புரிகின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! நீயே அடியேனுக்கு உண்டானதுன்பங்களைப் போக்கியருளல் வேண்டும்.

முனைமுகத் தரக்கன் மாள
முடிகள்பத் தறுத்து வீழ்த்து,ஆங்
கனையவற் கிளைய வற்கே
அரசளித் தருளி னானே,
சுனைகளில் கயல்கள் பாயச்
சுரும்புதேன் நுகரும் நாங்கைக்,
கனைகழல் காவ ளந்தண்
பாடியாய்! களைக ணீயே. 1301

போர்முனையில் இலங்கை மன்னனான இராவணனின் பத்துத் தலைகளையும் அறுத்து கீழே விழச் செய்து, அங்கு அவனுடைய தம்பியாகிய வீடணனுக்கு இலங்கை அரசை அளித்து அருளிய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானே! நீர் நிரம்பிய சுனைகளில் உள்ள கயல்மீன்கள் துள்ளிப் பாய்ந்து கொண்டிருக்க, வண்டுகள் மலர்களிலுள்ள தேனைப் பருகுகின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் கண் அமைந்துள்ள ''திருக்காவளம்பாடி'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்து அருள்புரியும் ஒலிக்கின்ற வீரக்கழலினை அணிந்து கொண்டிருக்கின்ற எம்பெருமான்

Koviloor Digital Library

ஸ்ரீகண்ணபிரானே! நீயே அடியேனுக்கு உண்டான துன்பங்களைப் போக்கி அருளல் வேண்டும்.

படவர வுச்சி தன்மேல்
பாய்ந்துபல் நடங்கள் செய்து,
மடவரல் மங்கை தன்னை
மார்வகத் திருத்தி னானே,
தடவரை தங்கு மாடத்
தகுபுகழ் நாங்கை மேய,
கடவுளே! காவ ளந்தண்
பாடியாய்! களைக ணீயே. 1302

''காளியன்னன்'' என்னும் பாம்பின் படத்தின்மீது ஏறி நடனம் செய்து, மடமைக் குணம் கொண்ட பெரிய பிராட்டியினைத் தம் திருமார்பில் என்றும் நிலைத்து வாழச் செய்து கொண்டிருக்கும் ஸ்ரீமந்நாராயணனே! மலையையொத்த பெரிய பெரிய மாளிகைகள் நிறைந்திருக்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந் துள்ள ''திருக்காவளம்பாடி'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! நீயே அடியேனுக்குண்டான துன்பங்களைப் போக்கியருளல் வேண்டும்.

மல்லரை யட்டு மாளக்
கஞ்சனை மலைந்து கொன்று,
பல்லர சவிந்து வீழப்
பாரதப் போர்மு டித்தாய்,
நல்லரண் காவின் நீழல்
நறைகமழ் நாங்கை மேய,
கல்லரண் காவ ளந்தண்
பாடியாய்! களைக ணீயே. 1303

மல்லர்களை அழித்துக் கம்சனைக் கொன்று, பல்லாயிரக் கணக்கான அரசர்கள் அழிந்து போகும்படியாகப் பாரதப் போரினை நடத்தி முடித்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! பாதுகாப்புடன் அமைந்திருக்கின்ற சோலைகளின் நிழலிலே மணம் வீசுகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள குளிர்ச்சிமிக்க ''திருக்காவளம்பாடி'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளி இருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! நீயே அடியேனுக் குண்டான துன்பங்களைப் போக்கியருளல் வேண்டும்.

Koviloor Digital Library

மூத்தவற் கரசு வேண்டி
முன்பு தூதெழுந் தருளி,
மாத்தமர் பாகன் வீழ
மதகரி மருப்பொ சித்தாய்,
பூத்தமர் சோலை யோங்கிப்
புனல்பரந் தொழுகும், நாங்கைக்
காத்தனே! காவ ளந்தண்
பாடியாய்! களைக ணீயே. 1304

முன்பு பாண்டவர்களின் மூத்தவனான தருமனுக்காக வேண்டி அரசினை அளிக்க வேண்டுமென்று துரியோதனனிடம் தூதாகச் சென்றருளி, மதம் மிகுந்த ''குவலயாபீடம்'' என்னும் யானையை அதன் பாகனும் அழிந்து விழும்படியாக அதன் தந்தங்களை முறித்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! பூக்கள் பூத்திருக்கும் சோலை களைச் சூழ்ந்து செல்லும் நீர் நிறைந்து வளம் பெருகும் ''திரு நாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள குளிர்ச்சிமிக்க ''திருக்காவளம்பாடி'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந் தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! நீயே அடி யேனுக்கு உண்டானதுன்பங்களைப் போக்கியருளல் வேண்டும்.

ஏவிளங் கன்னிக் காகி
இமையவர் கோனைச் செற்று,
காவளம் கடிதி றுத்துக்
கற்பகம் கொண்டு போந்தாய்.
பூவளம் பொழில்கள் சூழ்ந்த
புரந்தரன் செய்த நாங்கைக்,
காவளம் பாடி மேய
கண்ணனே! களைக ணீயே. 1305

இளம் பெண்ணாகிய சத்தியபாமைப் பிராட்டிக்காக வேண்டி, தேவர்களின் தலைவனாகிய தேவேந்திரனைத் தோற்கடித்து தேவருலகத்தின் பூந்தோட்டத்தினை மிக விரைவில் அழித்து, அங்குள்ள கற்பக மரத்தினைக் கொண்டுவந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! மலர்களின் வளம்மிக்க சோலைகள் சூழ்ந் திருக்கின்ற தேவேந்திரனால் அமைக்கப்பட்டுள்ள ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருக்காவளம்பாடி'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளியிருக்கின்ற எம்

Koviloor Digital Library

பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! நீயே அடியேனுக்கு உண்டான துன்பங்களைப் போக்கியருளல் வேண்டும்.

சந்தமாய்ச் சமய மாகிச்
சமயவைம் பூத மாகி,
அந்தமா யாதி யாகி
அருமறை யவையு மானாய்,
மந்தமார் பொழில்க டோறும்
மடமயி லாலும் நாங்கை,
கந்தமார் காவ ளந்தண்
பாடியாய்! களைக ணீயே. 1306

சந்தங்களாகி நின்று, அவைகளின் யாப்பாகவும், பற்பல நிலைகளையுடைய காலங்களாகி, அடியாக நிற்கின்ற ஐம்பெரும் பூதங்களுமாகி நின்று, ஆதியும் அந்தமுமாகி நின்று, அருமையான வேதங்களாகி நிற்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! தென்றல் வீசுகின்ற பூஞ்சோலைகள்தோறும் பெண்மயில்கள் நடனமாடிக் கொண்டிருக்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத் தலத்தில் அமைந்துள்ள வாசனை மிகுந்த ''திருக்காவளம்பாடி'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! நீயே அடியேனுக்குண்டான துன்பங்களைப் போக்கியருள் புரிதல் வேண்டும்.

★மாவளம் பெருகி மன்னும்
மறையவர் வாழும், நாங்கைக்
காவளம் பாடி மேய
கண்ணனைக் கலியன் சொன்ன,
பாவளம் பத்தும் வல்லார்
பார்மிசை யரச ராகி,
கோவிள மன்னர் தாழக்
குடைநிழல் பொலிவர் தாமே. 1307

(தாவளந்து மண் உருத்து முனை படம் மல்லர் மூத்து ஏவிளம் சந்தம் மாவளம் - கண்ணார்.)

மிக்குள்ள செல்வ வளத்துடன் கூடிய, நிலைபெற்ற வேதங்களை ஓதும் அந்தணர்கள் வாழ்ந்து வருகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருக்காவளம்பாடி'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருக்கும் எம்பெருமான்

Koviloor Digital Library

ஸ்ரீகண்ணபிரானைப் பற்றிக் ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்துள்ள பாக்களின் வளம்மிக்க இப்பத்துப் பாசுரங்களையும் கற்று வல்லவர்கள் இப்பூமியில் அரசர்களாக ஆட்சிபுரிந்து, மற்றுமுள்ள அரசர்களும் இளவரசர்களும் வணங்கிக் கொண்டு இருக்கக் குடை நிழலில் இருந்து சிறந்து விளங்குவர்.

7. கண்ணார் கடல்
திருவெள்ளக்குளம்

கலி விருத்தம்

*கண்ணார் கடல்போல் திருமேனி கரியாய்,
நண்ணார்முனை வென்றிகொள் வார்மன்னு நாங்கூர்,
திண்ணார் மதிள்சூழ் திருவெள்ளக் குளத்துள்
அண்ணா அடியே னிடரைக் களையாயே. 1308

பரந்து கிடக்கின்ற கடலின் நிறம் போன்று கரிய திருமேனி கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! போர்க்களத்திலே பகைவர்களுடன் போரிட்டு வெற்றி பெறக்கூடிய வலிமைமிக்க வீரர்கள் நிலைத்து வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் பலம்மிக்க உறுதியான மதிள்கள் சூழ்ந்திருக்கின்ற ''திருவெள்ளக்குளம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளி இருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! அடியேனுக்குண்டான துன்பங்களைத் தீர்த்து அருள்புரிய வேண்டுகிறேன்.

கொந்தார் துளவ மலர்கொண் டணிவானே,
நந்தா தபெரும் புகழ்வே தியர்நாங்கூர்,
செந்தா மரைநீர்த் திருவெள்ளக் குளத்துள்
எந்தாய், அடியே னிடரைக் களையாயே. 1309

பூங்கொத்துகள் நிறைந்துள்ள திருத்துளப மாலையைத் தம் திருமார்பில் அணிந்து கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! குறைபாடுகள் ஏதுமில்லாத பெரும்புகழைக் கொண்டுள்ள வேதங்களில் வல்ல அந்தணர்கள் வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் செந்தாமரை மலர்கள் நிறைந்திருக்கின்ற குளங்கள் சூழ்ந்த ''திருவெள்ளக்குளம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருக்கும் எந்தை எம் பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! அடியேனுக்குண்டான துன்பங் களைப் போக்கியருள்வாயாக!

Koviloor Digital Library

குன்றால் குளிர்மா ரிதடுத் துகந்தானே,
நன்றா யபெரும் புகழ்வே தியர்நாங்கூர்
சென்றார் வணங்கும் திருவெள்ளக் குளத்துள்
நின்றாய், நெடியாய்! அடியே னிடர்நீக்கே. 1310

''கோவர்த்தனம்'' என்னும் மலையைத் தன் கையிலே தூக்கி, இந்திரனால் பெய்த பெருமழையைத் தடுத்துத் திருவாய்ப் பாடியிலே உள்ள பசுக்களையும், ஆயர்குல மக்களையும் பாதுகாத்து மகிழ்ச்சியடைந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! உலக மக்கட் கெல்லாம் நன்மையையே அளிக்கக்கூடிய வேதங்களைக் கற்று வல்ல, பெரும் புகழ்பெற்ற அந்தணர்கள் வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில், அங்குச் செல்பவர்கள் வணங்குகின்ற ''திரு வெள்ளக்குளம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! நெடிய திருமாலே! அடியேனுக் குண்டான துன்பங்களைப் போக்கி அருள்புரிதல் வேண்டும்.

கானார் கரிகொம் பதொசித்த களிறே,
நானா வகைநல் லவர்மன் னியநாங்கூர்,
தேனார் பொழில்சூழ் திருவெள்ளக் குளத்துள்
ஆனாய், அடியேனுக் கருள்புரி யாயே. 1311

காட்டில் திரிந்து கொண்டிருந்த ''குவலயாபீடம்'' என்னும் யானையின் தந்தங்களை முறித்த ஆண்யானைக்கு ஒப்பான எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! பலவகைகளிலும் நல்லவர் களாகவே விளங்குபவர்கள் நிலைத்து வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் தேன் நிறைந்துள்ள மலர்களைக் கொண்டு திகழும் சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருவெள்ளக்குளம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! அடியேனுக்குண்டான துன்பங்களைப் போக்கி நன்மை பெற்றுய்யுமாறு அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

*வேடார் திருவேங் கடம்மேய விளக்கே,
நாடார் புகழ்வே தியர்மன் னியநாங்கூர்,
சேடார் பொழில்சூழ் திருவெள்ளக் குளத்தாய்,
பாடா வருவேன் வினையா யினபாற்றே. 1312

வேடர்கள் வசித்து வரும் திருவேங்கட மலையின்மீது அருள் காட்சி அளித்துக் கொண்டு விளங்கும் எம்பெருமான்

Koviloor Digital Library

ஸ்ரீதிருவேங்கடம் என்னும் ஒளி விளக்கே! நாடெல்லாம் பெரும் புகழைப்பெற்ற வேதங்களைக் கற்றுவல்ல அந்தணர்கள் நிலை பெற்று வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் இளந் தளிர்கள் மிகுந்து இருக்கும் சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திரு வெள்ளக்குளம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! உன்னுடைய திருநாமங்களைக் கொண்ட பாசுரங்களைப் பாடிக் கொண்டு வருகின்ற அடியேனுக்கு உண்டான பாவங்கள் என்று அமைந்துள்ள அனைத்தையும் சிதறடித்து அருள்புரிதல் வேண்டும்.

கல்லால் கடலை யணைகட்டி யுகந்தாய்,
நல்லார் பலர்வே தியர்மன் னியநாங்கூர்ச்
செல்வா, திருவெள்ளக் குளத்துறை வானே,
எல்லா இடரும் கெடுமா றருளாயே. 1313

மலைகளைக் கொண்டு கடலின்மீது அணையைக் கட்டி மகிழ்ச்சியடைந்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானே! நல்லவர் களாகத் திகழும் வேதங்களைக் கற்று வல்ல அந்தணர்கள் பலர் நிலையாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற திருநாங்கூர் என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருவெள்ளக்குளம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பிரான் ஸ்ரீஇராம பிரானே! திருமகள் கேள்வனே! அடியேனுக்குண்டான எல்லா இடர்களையும் அழியும்படியாகச் செய்து அருள்புரியுமாறு அடியேன் வேண்டுகிறேன்.

கோலால் நிரைமேய்த்த எங்கோ வலர்கோவே,
நாலா கியவே தியர்மன் னியநாங்கூர்,
சேலார் வயல்சூழ் திருவெள்ளக் குளத்துள்
மாலே, என்வல் வினைதீர்த் தருளாயே. 1314

கோலைக் கையில் ஏந்திக் கொண்டு பசுக்கூட்டங்களை மேய்த்துப் பாதுகாத்த ஆயர்குலத் தலைவனாகத் திகழ்ந்த எம் பெருமான் ஸ்ரீகோபாலகிருஷ்ணனே! நான்கு வகையான வேதங் களையும் கற்றுவல்ல அந்தணர்கள் நிலைபெற்று வாழ்ந்து கொண்டிருக்கும் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந் துள்ள 'சேல்' என்றுள்ள மீன் வகைகள் நிறைந்திருக்கின்ற வயல்கள் சூழ்ந்திருக்கின்ற ''திருவெள்ளக்குளம்'' என்னும் திருக்கோயி லினுள்ளே எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் திருமாலே!

Koviloor Digital Library

அடியேனுக்குண்டாகி இருக்கும் வலிய வினைகள் யாவும் இல்லாமற் போகுமாறு செய்து தவ அருள்புரியுமாறு வேண்டு கிறேன்.

வாரா கமதாகி யிம்மண்ணை யிடந்தாய்,
நாரா யணனே! நல்லவே தியர்நாங்கூர்,
சீரார் பொழில்சூழ் திருவெள்ளக் குளத்துள்
ஆரா வமுதே, அடியேற் கருளாயே. 1315

முன்பு ஒரு சமயம் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் ''வராக'' அவதாரம் மேற்கொண்டு இப்பூமியை எடுத்துப் பாதுகாத்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! நல்லவர்களாகத் திகழ்கின்ற அந்தணர்கள் வாழ்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள சீர்மிகுந்த சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திரு வெள்ளக்குளம்'' என்னும் திருக்கோயிலின் உள்ளே எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! ஆராவமுதே! அடியேனுக்கு அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

பூவார் திருமா மகள்புல் லியமார்பா,
நாவார் புகழவே தியர்மன் னியநாங்கூர்த்
தேவா! திருவெள்ளக் குளத்துறை வானே,
'ஆவா! அடியா னிவன்,'என் றருளாயே. 1316

தாமரை மலரில் வாழ்ந்து கொண்டிருக்கும் திருமாமகள் தழுவிக் கொண்டிருக்கும் திருமார்பினையுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! உலக மக்கள் தத்தம் நாவினால் புகழ்ந்து பேசும்படியாகத் திகழும் வேதங்களைக் கற்றுவல்ல அந்தணர்கள் நிலைபெற்று வாழ்ந்து வருகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத் தலத்தில் அமைந்துள்ள ''திருவெள்ளக்குளம்'' என்னும் திருக் கோயிலினுள் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே! சீலகுணமுடையாய்! ''இவன் என் அடியவன், இந்த உலகில் இவ்வடியவன் நலிகின்றானே'' என்று எண்ணி அடியேன்மீது இரக்கம் கொண்டு அருள்புரிதல் வேண்டும்.

*நல்லன் புடைவே தியர்மன் னியநாங்கூர்ச்
செல்வன் திருவெள் ளக்குளத் துறைவானை,
கல்லின் மலிதோள் கலியன் சொன்னமாலை,
வல்ல ரெனவல் லவர்வா னவர்தாமே.

Koviloor Digital Library

அன்புடன் கூடிய நல்ல அடியவர்கள் என்று திகழும் பக்தர்களாகிய வேதங்களைக் கற்றுவல்ல அந்தணர்கள் என்றும் நிலைபெற்று வாழ்ந்து வருகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருவெள்ளக்குளம்'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் திருமகள் கேள்வனைப் பற்றி மலையினும் உறுதியான வலிமை உடைய தோள்களைப் பெற்ற ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த சொல் மாலையாகிய இப்பாசுரங்கள் பத்தினையும் இவர்கள் நன்கு கற்று வல்லவர்கள் என்று பலரும் பகரும்படியாக ஓதுவதில் வல்லவர்கள் யாவரும் விண்ணுலகிலுள்ள தேவர்களுடன் ஒன்று சேர்ந்திருப்பார்கள்.

8. கவளயானை

திருப்பார்த்தன் பள்ளி

கலி விருத்தம்

*கவளயானைக் கொம்பொசித்த
கண்ணனென்றும், காமருசீர்க்
குவளைமேக மன்னமேனி
கொண்டகோனென் னானையென்றும்,
தவளமாட நீடுநாங்கைத்
தாமரையாள் கேள்வனென்றும்,
பவளவாயா ளென்மடந்தை
பார்த்தன்பள்ளி பாடுவாளே. 1318

பவளம் போன்று சிவந்த உதடுகளை உடைய என் மகள், ''கவளம் கவளமாக உணவை ஊட்ட, அதனால் மதம் கொண்ட குவலயாபீடம் என்னும் யானையினுடைய தந்தத்தினை முறித்த வீரம்மிக்கவன் ''என் கண்ணபிரான்'' என்றும், குவளை மலரினையும், மேகத்தினையும் ஒத்த நிறத்தினைக் கொண்ட திருமேனியைப் பெற்று அனைவரும் ஆசைப்படு மாறுள்ள அரசனே! என்றும் வெண்மையான மாட மாளிகைகள் நிறைந்துள்ள ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருப் பார்த்தன் பள்ளி'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளி யுள்ள எம்பெருமான் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள்

Koviloor Digital Library

கேள்வன்'' என்றும் திருப்பார்த்தன் பள்ளிப் பெருமாளைப் பற்றிப் பாடிக் கொண்டிருக்கிறாள் என்று தாய் கூறுகிறாள்.

கஞ்சன்விட்ட வெஞ்சினத்த
 களிறடர்த்த காளையென்றும்,
வஞ்சமேவி வந்தபேயின்
 உயிரையுண்ட மாயனென்றும்,
செஞ்சொலாளர் நீடுநாங்கைத்
 தேவதேவ னென்றென்றோதி,
பஞ்சியன்ன மெல்லடியாள்
 பார்த்தன்பள்ளி பாடுவாளே. 1319

பஞ்சு போன்ற மென்மையான பாதங்களைக் கொண்டுள்ள என் மகள், ''கம்சனால் ஏவிவிடப்பட்ட கோபம்மிக்க ஆண் யானை யினைக் கொன்ற வீரம்மிக்க (ஆண்) காளையென்றும், வஞ்சனை யாகப் பேய்வடிவில் வந்த பூதனை என்னும் அரக்கியின் விஷம் கலந்த முலைப்பாலை உண்டு, அவள் உயிரைப் போக்கிய ஆச்சரியமான சக்தியையுடையவன் (மாயன்) என்றும் செம்மை யான சொற்களாலான வேதங்களைக் கற்றுவல்ல அந்தணர்கள் நீண்ட நெடுங்காலமாக வாழ்ந்து கொண்டிருக்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருப்பார்த்தன்பள்ளி'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளி வீற்றிருக்கும் தேவர்களுக்கெல்லாம் தலைவன்'' என்றும் திருப்பார்த்தன் பள்ளிப் பெருமாளைப் பற்றிப் பாடிக் கொர்ணடிருக்கிறாள் என்று தாய் கூறுகிறாள்.

அண்டர்கோனென் னானையென்றும்
 ஆயர்மாதர் கொங்கைபுல்கு
செண்டனென்றும், நான்மறைகள்
 தேடியோடும் செல்வனென்றும்,
வண்டுலவு பொழில்கொள் நாங்கை
 மன்னுமாய னென்றென்றோதி,
பண்டுபோலன் றென்மடந்தை
 பார்த்தன்பள்ளி பாடுவாளே. 1320

என் மகள் முன்புபோல இல்லை என்றும் இப்போது அவள் செய்வது யாது என்றும் கூறுகின்ற தாய், அண்டங்களில் உள்ள அனை வர்க்கும் தலைவன் என்றும், எனக்கு யானை போன்றவனென்றும்,

Koviloor Digital Library

ஆய்க்குலப் பெண்களின் முலைகளை அணைத்துக் கொள்ளும் இயல்புடையவனென்றும், நான்கு வகையான வேதங்களும் தேடிக் கொண்டு பின்னே செல்லும் திருமகள் கேள்வனென்றும், வண்டுகள் ரீங்காரமிட்டுக் கொண்டு உலா வருகின்ற சோலைகள் சூழ்ந்திருக்கும் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருப் பார்த்தன் பள்ளி'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளி வீற்றிருக்கும் என்றும் நிலைபெற்று இருக்கும் ஆச்சரியமானவன் என்று பன்முறை மீண்டும் மீண்டும் ஓதிக் கொண்டே திருப்பார்த்தன் பள்ளிப் பெருமாளைப் பற்றிப் பாடிக் கொண்டிருக்கிறாள்'' என்று தாய் கூறுகிறாள்.

கொல்லையானாள் பரிசழிந்தாள்
கோல்வளையார் தம்முகப்பே,
மல்லைமுந்நீர் தட்டிலங்கை
கட்டழித்த மாயனென்றும்,
செல்வம்மல்கு மறையோர்நாங்கை
தேவதேவ னென்றென்றோதி,
பல்வளையா ளென்மடந்தை
பார்த்தன்பள்ளி பாடுவாளே. 1321

பலவகைப்பட்ட வளையல்களை அணிந்து கொண்டிருக்கின்ற என் மகள், வளையல்களை அணிந்த பிற மாதர்களின் முன்னே வரம்பு மீறி தனியாகச் சென்றாள். பெண்மைக்குரிய நாணத் தினையும், பெண்மையையும் இழந்தாள். நீர் நிறைந்த கடலின்மீது அணையைக் கட்டி இலங்கையை அழித்த மாயப்பிரானே! என்றும் செல்வம் நிறைந்திருக்கின்ற வேதங்களைக் கற்றுவல்ல அந்தணர்கள் வாழ்ந்து வருகின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந் துள்ள ''திருப்பார்த்தன் பள்ளி'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருக்கும் தேவர்களுக்கெல்லாம் தலைவன் என்று எடுத் தோதியும் திருப்பார்த்தன் பள்ளிப் பெருமாளைப் பற்றிப் பாடிக் கொண்டிருப்பதாகத் தாய் கூறுகிறாள்.

அரக்கராவி மாளஅன்று
ஆழ்கடல்சூ ழிலங்கைசெற்ற,
குரக்கரச னென்றும்கோல
வில்லியென்றும், மாமதியை

Koviloor Digital Library

நெருக்குமாட நீடுநாங்கை
　　நின்மலன்தா னென்றென்றோதி,
பரக்கழிந்தா ளென்மடந்தை
　　பார்த்தன்பள்ளி பாடுவாளே. 1322

பெண்மையை இழந்த என் மகள், அரக்கர்கள் உயிர் பிரிய மாண்டு போகுமாறு முன்பொரு சமயம் ஆழமான கடலால் சூழ்ந்திருக்கின்ற இலங்கையை அழித்த குரக்கினத்து அரச னென்றும், அழகிய வில்லைத் தம் திருக்கரங்களிலே ஏந்தியவன் என்றும், சந்திரனைத் தொடுகின்ற அளவுக்கு விண்ணை முட்டுகின்ற மாடமாளிகைகள் நிறைந்துள்ள திருநாங்கூர் என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருப்பார்த்தன் பள்ளி'' என்னும் திருக் கோயிலினுள்ளே வீற்றிருக்கும் எம்பெருமான் மிக்க தூய்மையினை யுடையவன் என்று பன்முறையும் ஓதிக் கொண்டும் திருப்பார்த்தன் பள்ளிப் பெருமாளைப் பற்றிப் பாடிக் கொண்டிருக்கிறாள்'' என்றும் தாய் கூறுகிறாள்.

ஞாலமுற்று முண்டுமிழ்ந்த
　　நாதனென்றும், நானிலம்சூழ்
வேலையன்ன கோலமேனி
　　வண்ணனென்றும், மேலெழுந்து
சேலுகளும் வயல்கொள் நாங்கைத்
　　தேவதேவ னென்றென்றோதி,
பாலின்நல்ல மென்மொழியாள்
　　பார்த்தன்பள்ளி பாடுவாளே. 1323

பாலினும் இனிய நல்ல மென்மையான மொழிகளைக் கொண்டு பேசும் என் மகள், உலகங்கள் முழுவதையும் உண்டு தன் திருவயிற்றினுள்ளே அடக்கி வைத்திருந்து, பின்பு வெளிப்படுத்திய என் நாயகன்! என்றும், இப்பூமியைச் சூழ்ந்திருக்கின்ற கடலை ஒத்த நீல நிறத்தினைக் கொண்ட அழகிய திருமேனியையுடைய வனென்றும், சேல்மீன்கள் துள்ளி விளையாடுமளவுக்கு நீர்வளம் நிரம்பப் பெற்ற வயல்கள் நிறைந்திருக்கின்ற வளம்மிக்க ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருப் பார்த்தன் பள்ளி'' என்னும் திருக்கோயிலினுள்ளே எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ''தேவாதி தேவன்'' என்று பன்முறை ஓதியும் ''திருப்பார்த்தன் பள்ளி''ப் பெருமாளைப் பற்றி எப்பொழுதும் பாடிக் கொண்டிருப்பதாகத் தாய் கூறுகிறாள்.

Koviloor Digital Library

நாடியென்ற னுள்ளங்கொண்ட
நாதனென்றும், நான்மறைகள்
தேடியென்றும் காணமாட்டாச்
செல்வனென்றும், சிறைகொள்வண்டு
சேடுலவு பொழில்கொள் நாங்கைத்
தேவதேவ னென்றென்றோதி,
பாடகம்சேர் மெல்லடியாள்
பார்த்தன்பள்ளி பாடுவாளே. 1324

மென்மையான பாதங்களில் ''பாடகம்'' என்னும் பாத அணியினை அணிந்து கொண்டிருக்கின்ற என் மகள், நாடி வந்து என் உள்ளத்தின் உள்ளே தங்கியிருப்பதற்கு எண்ணிக் கொண்டிருக்கின்ற என் நாயகன் என்றும், நான்கு மறைகளால் தேடியும் என்றும் எங்கும் காண்பதற்கரிய மிக உயர்ந்த திருவினைப் பெற்ற திருவாளனே! என்றும், வண்டுகள் ரீங்காரமிட்டுக் கொண்டு உலா வருகின்ற மலர்கள் நிறைந்த சோலைலகள் சூழ்ந்திருக்கும் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் கண் அமைந்துள்ள ''திருப்பார்த்தன் பள்ளி'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருக்கும் எம்பெருமான் ''தேவாதி தேவன்'' என்று பன்முறை ஓதியும் ''திருப்பார்த்தன் பள்ளி''ப் பெருமாளைப் பற்றி எப்பொழுதும் பாடிக் கொண்டிருக் கின்றாளே'' என்று தாய் கூறுகிறாள்.

உலகமேத்து மொருவனென்றும்
ஒண்சுடரோ டும்பரெய்தா,
நிலவுமாழிப் படையனென்றும்
நேசனென்றும், தென்திசைக்குத்
திலதமன்ன மறையோர் நாங்கைத்
தேவதேவ னென்றென்றோதி,
பலருமேச வென்மடந்தை
பார்த்தன்பள்ளி பாடுவாளே. 1325

பலரும் இழிவாகப் பேசும்படியாக இருக்கின்ற என் மகள், ''உலகத்தவர் பலரும் போற்றிப் பாராட்டுகின்ற ஒப்பற்ற ஒருவனே என்றும், ஒளி வீசுகின்ற சூரியனும், சந்திரனும் ஆகிய இவர்களுடன் தேவர்களும் சென்று அணுக முடியாத திருவாழியானைப் படையாகக் கொண்டவனென்றும், அடியேனிடத்தும் பிற அடியவர் களிடத்தும் அன்புடன் இருப்பவனே! என்றும், தென்திசைக்குத்

Koviloor Digital Library

''திலகம்'' என்று போற்றிப் பாராட்டுகின்ற அளவுக்கு மறைகளைக் கற்றுவல்ல அந்தணர்கள் வாழ்ந்து கொண்டு இருக்கும் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருப் பார்த்தன் பள்ளி'' என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருக்கும் எம் பெருமான் ''தேவாதி தேவன்'' என்று பன்முறையும் ஓதியபடி திருப்பார்த்தன் பள்ளிப் பெருமாளைப் பற்றிப் பாடிக் கொண்டிருக் கிறாளே!'' என்று தாய் கூறுகிறாள்.

கண்ணனென்றும் வானவர்கள்
காதலித்து மலர்கள் தூவும்,
எண்ணனென்று மின்பனென்றும்
மேழுலகுக் காதியென்றும்,
திண்ணமாட நீடுநாங்கைத்
தேவதேவ னென்றென்றோதி,
பண்ணினன்ன மென்மொழியாள்
பார்த்தன்பள்ளி பாடுவாளே. 1326

இசையைக் காட்டிலும் இனிய மென்மொழிகளைப் பேசுகின்ற என் மகள் ''கண்ணனே! என்றும், விண்ணுலகத்தில் வாழ்கின்ற தேவர்கள் பக்தியுடன் வந்திருந்து மலர்களைத் தூவி வணங்குகின்ற அளவுக்குப் பெருமைமிக்க பெருமையோனே! என்றும், அடியவர்கள் எண்ணும் எண்ணங்களில் அமைந் துள்ளவனே என்றும், இன்பத்தை அளிப்பவனே! என்றும், ஏழுலகுக்கும் ஆதிகாரணனாக விளங்குகின்ற ஆதிமூர்த்தியே! என்றும் உறுதியான மாடமாளிகைகள் நெடிது உயர்ந்திருக்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் கண் அமைந்துள்ள திருப்பார்த்தன் பள்ளி என்னும் திருக்கோயிலினுள்ளே வீற்றிருக்கும் எம் பெருமான் ''தேவாதி தேவன்'' என்று பன்முறை ஓதியபடி, ''திருப் பார்த்தன் பள்ளிப் பெருமாளைப் பற்றியே பாடிக் கொண்டு இருக்கின்றாளே!'' என்று தாய் கூறுகிறாள்.

பாருள்நல்ல மறையோர்நாங்கைப்
பார்த்தன்பள்ளி செங்கண்மாலை,
வார்கொள்நல்ல முலைமடவாள்
பாடலைத்தாய் மொழிந்தமாற்றம்,
கூர்கொள்நல்ல வேல்கலியன்
கூறுதமிழ் பத்தும்வல்லார்,
ஏர்கொள்நல்ல வைகுந்தத்துள்
இன்பம்நாளு மெய்துவாரே. 1327

Koviloor Digital Library

(கவளம் கஞ்சன் அண்டர் கொல்லை அரக்கர் ஞாலம் நாடி உலகம் கண்ணன் பாருள்-நும்மை.)

இப்புவியிலேயே நல்லவர்களாக, மறைகளைக் கற்றுவல்ல அந்தணர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்தின் கண் அமைந்துள்ள ''திருப்பார்த்தன் பள்ளி'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி வீற்றிருக்கும் செந்தாமரைக் கண்ணனான பெருமானைப் பற்றிக் 'கச்சு' அணிந்த நல்ல அழகிய முலைகளை உடைய பரகால நாயகியாகிய பெண் ஒருத்தி பாடு வதாகப் பாடிய பாசுரங்களைத் தாயானவள் கூறுவதாக அமைந்த, கூர்மையான நல்ல 'வேல்' என்னும் ஆயுதத்தினை ஏந்திய ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இத்தமிழ்ப் பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்ல சான்றோர்கள் அழகுமிக்க நல்லதாகத் திகழ்கின்ற ''திருவைகுந்தம்'' சென்று தினந்தோறும் பேரின்பத்தினை அடையப் பெறுவார்கள்.

9. நும்மைத் தொழுதோம்

திருவிந்தளூர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*நும்மைத் தொழுதோம் நுந்தம் பணிசெய் திருக்கும் நும்மடியோம்,
இம்மைக் கின்பம் பெற்றோ மெந்தாய்! இந்தளூரீரே,
எம்மைக் கடிதாக் கரும மருளி ஆவா வென்றிரங்கி,
நம்மை யொருகால் காட்டி நடந்தால் நாங்க ளுய்யோமே? 1328

''திருஇந்தளூர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக் கின்ற எம்பெருமானே! என் தந்தையே! உம்முடைய அடியோங்கள் என்றும் உம்மைத் தொழுது பணிந்து இருக்க, உமக்குச் செய்ய வேண்டிய பணிகளையே செய்து கொண்டிருக்கும் நும்மடி யோங்கள் இம்மைப் பிறவிக்கு உம்மைப் பற்றிய உணர்வுகளைப் பெறுதல் என்னும் இன்பத்தினைப் பெற்றோம். நீர் எம்மிடத்து வந்து, ''ஐயோ'' என்று இரக்கம் கொண்டு விரைந்து வந்து, நாங்கள் உமக்குக் கைங்கரியம் செய்வதற்கு அருள்புரிந்து, வேறு பயன் கருதாத அடியோங்களுக்குத் தேவரீர் ஒரு முறையேனும் சேவை காட்டியருளினால், எமது கண் முன்னே வந்து உலவினால், அதாவது

Koviloor Digital Library

உம்முடைய அருட்காட்சி கிடைக்குமானால் நாங்கள் உய்வு பெறுவோம்.

சிந்தை தன்னுள் நீங்கா திருந்த திருவே! மருவினிய
மைந்தா, அந்த ணாலி மாலே! சோலை மழகளிறே,
நந்தா விளக்கின் சுடரே! நறையூர் நின்ற நம்பீ,என்
எந்தாய்! இந்த ளூராய்! அடியேற் கிறையு மிரங்காயே. 1329

''திருஇந்தளூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள எம்பெருமானே! என் தந்தையே! அடியேனின் மனதினுள்ளே என்றென்றும் நீங்காதிருக்கின்ற செல்வமே! என்றென்றும் அனுபவிக்க அனுபவிக்க இன்பமாய் இருக்கின்ற இளைஞராகத் திகழும் மைந்தனே! அழகிய குளிர்ந்த ''திருவாலி'' என்னும் திரு நகரில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமானே! சோலைகளில் உலவி வரும் யானைக் குட்டியைப் போன்ற எம்பெருமானே! அணையா விளக்கின் ஒளிச்சுடரே! ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தின் கண் எழுந்தருளியிருக்கும் நம்பியே! அடியேனை அடிமை கொண்டு இரக்கம் கொள்ள வேண்டும்.

பேசு கின்ற திதுவே வைய மீரடி யாலளந்த,
மூசி வண்டு முரலும் கண்ணி முடியீர், உமைக்காணும்
ஆசை யென்னும் கடலில் வீழ்ந்திங் கயர்ந்தோம், அயலாரும்
ஏசு கின்ற திதுவே காணும் இந்த ளூரீரே! 1330

''திருஇந்தளூர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமானே! இவ்வுலகினை இரண்டு அடிகளால் அளந்த பிரானே! வண்டுகள் இசைபாடி வரும் மலர் மாலையைச்சூடிக் கொண்டிருக்கும் திருமுடியினைப் பெற்ற எம்பெருமானே! உம்மைக் கண்டு சேவிக்க வேண்டும் என்னும் ஆசையாகிய பெருங்கடலில் விழுந்து அடியோங்கள் அயர்ந்துவிட்டோம். இந்நிலையிலும் நின்திருமுகம் காட்டாததால் அயலவர்கள் பழிச்சொற்கள் பலவும் கூறுகின்றனர். அடியேன் பேசுகின்ற பேச்சுகளும் அவ்வாறே அமைந்துள்ளது. இவைகளையெல்லாம் நீரே காண வேண்டும்.

ஆசை வழுவாதேத்து மெமக்கிங் கிழுக்காய்த்து, அடியோர்க்குத்
தேச மறிய வுமக்கே யாளாய்த் திரிகின் றோமுக்கு,
காசி னொளியில் திகழும் வண்ணம் காட்டீர், எமபெருமான்
வாசி வல்லீர் இந்த ளூரீர்! வாழ்ந்தே போம்நீரே! 1331

Koviloor Digital Library

''திருஇந்தளூர்'' என்னும் திருத்தலத்தின்கண் எழுந்தருளியுள்ள எம்பெருமானே! குறைபாடுகள் ஏதும் இல்லாத ஆசையுடன் உம்மை வணங்கித் துதித்து ஏத்துகின்ற அடியோங்களுக்குக் குறையாக அமைந்துவிட்டது. உலகம் முழுவதும் அறியும்படியாக உமக்கே தொண்டு செய்து கொண்டிருக்கின்ற அடியோங்களுக்குப் பொற்காசினின்றும் உண்டாகின்ற ஒளியைக் காட்டிலும் மிகச் சிறப்புடன் திகழ்கின்ற உன் திருவடிவின் அழகைக் காட்டுவதற்கு மறுக்கின்றீர்! எங்கள் எம்பெருமானாகிய நீர் இது தக்கது, இது தகாதது என்பதனை அறியும் ஆற்றல் பெற்றிருக்கின்றீர்! ஆயினும் உம் திருமேனியை எமக்குக் காட்டாமலிருக்கின்றீர் என்பதால் நீரே உம் உடம்பைக் கட்டிக் கொண்டு வாழ்ந்து கொள்ளுங்கள்.

தீயெம் பெருமான் நீரெம் பெருமான் திசையு மிருநிலனு-
மாய்,எம் பெருமா னாகி நின்றா லடியோம் காணோமால்,
தாயெம் பெருமான் தந்தை தந்தை யாவீர், அடியேமுக்-
கேயெம் பெருமா னல்லீ ரோநீர் இந்த ளூரீரே! 1332

''திருஇந்தளூர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! நெருப்பு, நீர், எண்திசை, நிலம் ஆகிய யாவற்றினும் நீரே நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கிறீர்! என்றாலும், அடியோங்கள் தங்கள் திருமேனியைக் காணமாட்டாதவர்களாக இருக்கின்றோம். அடியோங்களுக்குத் தாயாகவும், எம்பெருமானாகவும், தந்தைக்குத் தந்தையாகவும் இருக்கின்ற எம் பெருமானே! நீர் அடியோங்களுக்கு எம்பெருமானாக இருந்து கொண்டிருக்கமாட்டீர்களோ?

சொல்லா தொழிய கில்லேன் அறிந்த சொல்லில், நும்மடியார்,
எல்லா ரோடு மொக்க வெண்ணி யிருத்தீ ரடியேனை,
நல்லா ரறிவீர் தீயா ரறிவீர் நமக்கிவ் வுலகத்தில்,
எல்லா மறிவீ ரீதே யறியீர் இந்த ளூரீரே! 1333

''திருஇந்தளூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள திருக்கோயிலில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமானே! அடியேனின் மனதில் தோன்றிய கருத்துகளைச் சொல்லாமல் இருக்க முடியவில்லை. அடியேன் அறிந்தவற்றில் ஒன்றை உறுதியாக உரைக்கின்றேன். அடியேன் உம்மைப் பிரிந்திருக்கமாட்டாமல் இருக்க, உம்முடைய மற்ற அடியவர்களைப் போன்று அடியே

Koviloor Digital Library

னையும் எண்ணுகின்றீரே! தங்களின் பிரிவைப் பொறுத்துக் கொள்ள இயலாத நல்லவர்களைப் பற்றியும், அப்பிரிவைப் பொருட் படுத்தாமல், ஏளனமாக எண்ணுகின்ற தீயவர்களைப் பற்றியும் என்றுள்ள இருவகையினரைப் பற்றிய இயல்புகளையும் நீர் நன்கு அறிவீர்! இவ்வுலகில் உள்ள வேறு வேறு நடைமுறைகளைப் பற்றியும் நீரே அறிவீர்! ஆனால் அடியேனுடைய, தங்களைப் பிரிவதால் உண்டாகும் எளிய தன்மையை மட்டும் அறியாதிருக் கின்றீர்போலும் என்று எண்ணத் தோன்றுகிறது. ஆயினும் இஃது உண்மையன்று. நீரே அனைத்தும் அறிவீர்!

மாட்டீ ரானீர் பணிநீர் கொள்ள எம்மைப் பணியறியா
வீட்டீர், இதனை வேறே சொன்னோம் இந்த ளூரீரே,
காட்டீ ரானீர் நுந்த மடிக்கள் காட்டில் உமக்கிந்த,
நாட்டே வந்து தொண்ட ரான நாங்க ளுய்யோமே. 1334

''திருஇந்தளூர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமானே! அடியேன் தங்கட்குச் செய்யும் தொண்டினைப்பற்றி அறியமாட்டாதவராக இருக்கின்றீர். தொண்டு புரிவதை அடியோங்கட்கு இன்ன தன்மைத்து என்று எங்களை அறியுமாறு செய்துவிட்டுப் பின்பு அடியோங்களைத் தொண்டு செய்யவிடாமல் கைவிடல் ஆகுமோ! இதனைத் தனியாகக் கூறியும் தேவரீருடைய திருவடிகளைக் காட்டாமல் இருந்துவிட்டீர்! உம்முடைய திருவடிகளைக் காட்டி அருளினால் அடியோங்கள் உமக்கு அடிமை செய்ய இசைந்து வந்து உமக்கு என்றென்றும் தொண்டு புரிபவர்களாகிப் பிழைத்துவிடமாட்டோமா? அவ்வாறு அடியோங்கள் உய்வு பெறுவோம்.

முன்னை வண்ணம் பாலின் வண்ணம்
முழுதும் நிலைநின்ற,
பின்னை வண்ணம் கொண்டல் வண்ணம்
வண்ண மெண்ணுங்கால்,
பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம்
புரையுந் திருமேனி,
இன்ன வண்ண மென்று காட்டீர்
இந்த ளூரீரே! 1335

''திருஇந்தளூர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றி ருக்கும் எம்பெருமானே! தேவரீரின் திருமேனி நிறத்தை ஆராய்ந்து

Koviloor Digital Library

பார்க்கின்ற அளவில், முன்பு கிரேதாயுகத்தில் பால்போலும் வெண்மை நிறத்தினையுடைய திருமேனியாகும். திரேதாயுகத்தில் பொன்நிறத்தினையுடைய திருமேனியாகும். துவாபரயுகத்தில் மணியின் நீலநிறமுடைய திருமேனியாகும். பின்பு இக்கலியுகத்தில் மேகநிறத்தினையுடைய திருமேனியாகும். இவ்வாறாக நான்கு யுகங்களிலும் நான்கு வகை நிறம் கொண்ட திருமேனியினைக் கொண்டு இருக்கின்ற எம்பெருமானே! தேவரீருடைய திரு மேனியின் எக்காலத்திலும் நிலையான இன்ன நிறமுடையது என்று அடியோங்களுக்குக் காட்டி அருள்புரிதல் வேண்டும்.

எந்தை தந்தை தம்மா னென்றென் றெமரே ழேழளவும்,
வந்து நின்ற தொண்ட ரோர்க்கே வாசி வல்லீரால்,
சிந்தை தன்னுள் முந்தி நிற்றிர் சிறிதும் திருமேனி,
இந்த வண்ண மென்று காட்டீர் இந்த ளீரே! 1336

''திருஇந்தளூர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமானே! அடியேனுக்கும், அடியேனின் தந்தையாருக்கும் அடியேனின் பாட்டனாருக்கும் என்று என்று சொல்லப்பட்ட ஏழு ஏழு தலைமுறைகளாகவே அடியோங்கள் தொண்டுபுரிந்து வரும் தொண்டர்களாகவே இருந்து வருகிறோம். இப்படிப்பட்ட அடியோங்கட்கே கணக்கு பார்ப்பதில் வல்லவ ராயிருக்கின்றீர்! இவ்வாறு எங்களிடத்தே நீர் வேறுபாடு கொள்ளலாகுமோ? இத்தகைய அடியோங்கட்கு நீர் நேரே காட்சி தரவில்லையென்றாலும் அடியேனின் உள்ளத்தினுள்ளே முந்தி வந்து நிற்கின்றீர். இந்நிலையிலேனும் உம்முடைய திருமேனியின் நிலையான நிறம் இது என்று ஒரு சிறிது அளவேனும் காட்டமாட்டேன் என்று இருக்கின்றீர். இத்திருமேனியழகைக் காட்டியருளுமாறு வேண்டுகின்றோம்.

*ஏரார் பொழில்சூழ் இந்த ளூரி லெந்தை பெருமானை,
காரார் புறவில் மங்கை வேந்தன் கலிய னொலிசெய்த,
சீரா ரின்சொல் மாலை கற்றுத் திரிவா ருலகத்து,
ஆரா ரவரே யமரர்க் கென்று மமர ராவாரே. 1337

அழகுமிக்க சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருஇந்தளூர்'' என்னும் திருத்தலத்தின்கண் எழுந்தருளி வீற்றிருக்கும் என் தந்தை யாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றி மேகங்கள்

Koviloor Digital Library

உலாவி வந்து மழை பொழிகின்ற வளம் மிகுந்த திருமங்கை நகருக்கு மன்னனாகிய கலியன் என்னும் திருமங்கை ஆழ்வார் சிறப்புமிக்க இனிய சொற்களைக் கொண்டு அருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் கற்றுவல்லவர்களாக விளங்கிய வண்ணம் நடமாடக் கூடியவர்கள் இவ்வுலகில் எவரெவர் உள்ளனரோ அவர்கள் யாவரும் எக்காலத்திலும் விண்ணுலகில் உள்ள தேவர்களுக்கெல்லாம் தேவர்களாக இருந்து சிறப்புப் பெறுவர்.

10. ஆய்ச்சியர்

திருவெள்ளியங்குடி

எழுசீர் ஆசிரிய விருத்தம்

ஆய்ச்சிய ரழைப்ப வெண்ணெயுண் டொருகால்
ஆலிலை வளர்ந்தவெம் பெருமான்,
பேய்ச்சியை முலையுண் டிணைமரு திறுத்துப்
பெருநில மளந்தவன் கோயில்,
காய்த்தநீள் கமுகும் கதலியும் தெங்கும்
எங்குமாம் பொழில்களி னடுவே,
வாய்த்தநீர் பாயும் மண்ணியின் தென்பால்
திருவெள்ளி யங்குடி யதுவே. 1338

ஆயர்குலப் பெண்கள் முறையிட்டு அழைக்கும்படியாக முன்பு ஒரு சமயம் வெண்ணெயையுண்டும், உலகப் பிரளயம் உண்டான காலத்தில் திருப்பாற்கடலில் ஆலிலையின்மீது திருக்கண் வளர்ந்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பேய்வடிவில் வந்த 'பூதனை' என்பவளின் முலைகளினின்றும் நஞ்சு கலந்த பாலை உண்டு அவளுயிரைப் போக்கி, இரண்டு மருதமரங்களையும் முறிந்து விழுமாறு செய்து, இப்பூமியை ''வாமன'' அவதாரம் மேற்கொண்டு மகாபலிச் சக்கரவர்த்தியின் யாகசாலை முன்பு சென்று, அவனிடம் இரந்து பெற்று, ''திரிவிக்ரம'' அவதாரம் மேற் கொண்டு இவ்வுலகினை அளந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் எதுவென்றால், பாக்கு மரங்கள் காய்த்துக் கொண்டிருக்க, வாழை, தென்னை மரங்கள் எங்கும் வளமுடன் வளர்ந்து கொண்டிருக்கின்ற சோலைகளின் நடுவே நிறைந்த நீர் வேகமாக ஓடிச் செல்லும்

Koviloor Digital Library

பெண்ணையாற்றின் தென்கரைமீது அமைந்துள்ள ''திருவெள்ளி யங்குடி'' என்னும் திருத்தலமாகும்.

ஆநிரை மேய்த்தன் றலைகட லடைத்திட்
டரக்கர்தம் சிரங்களை யுருட்டி,
கார்நிறை மேகம் கலந்ததோ ருருவக்
கண்ணனார் கருதிய கோயில்,
பூநிரைச் செருந்தி புன்னைமுத் தரும்பிப்
பொதும்பிடை வரிவண்டு மிண்டி,
தேனிரைத் துண்டங் கின்னிசை முரலும்
திருவெள்ளி யங்குடி யதுவே. 1339

பசுக்களை மேய்த்துப் பாதுகாத்து, முன்பு இராமாவதார காலத்தில் அலைவீசுகின்ற கடலின்மீது அணைகட்டி, இலங்கை மாநகரம் சென்று, இராவணனை அழித்து, அங்குள்ள அரக்கர்களின் தலைகளை அறுத்து உருட்டிவிட்டு, மேகம் போன்ற நிறத்தினைக் கொண்டு விளங்கும் ஒப்பற்ற வடிவு கொண்ட திருமேனியை யுடைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது என்றால், பூக்கள் மல்ர்ந்து நிறைந்துள்ள செருந்தி மலர்கள், முத்துகளைப் போன்று அரும்புகள் அரும்பியிருக்கின்ற சுரபுன்னை மரங்கள் ஆகியவை நிறைந் திருக்கின்ற சோலைகளில் உள்ள மரப்பொந்துகளில் உள்ள வரிகளையுடைய வண்டுகள் தேனைப்பருகி, இனிய இசைகளால் ரீங்காரமிடுகின்ற ''திருவெள்ளியங்குடி'' என்னும் திருத்தலமாகும்.

கடுவிட முடைய காளியன் தடத்தைக்
கலக்கிமுன் னலக்கழித் து,அவன்றன்
படமிறப் பாய்ந்து பன்மணி சிந்தப்
பல்நடம் பயின்றவன் கோயில்,
படவர வல்குல் பாவைநல் லார்கள்
பயிற்றிய நாடகத் தொலிபோய்,
அடைபுடை தழுவி யண்டநின் றதிரும்
திருவெள்ளி யங்குடி யதுவே. 1340

முன்பு ஒரு சமயம் கொடிய நஞ்சுடைய 'காளியன்' என்னும் பாம்பு இருக்கின்ற மடுவில் குதித்துக் கலங்கச்செய்து, அப்பாம்பின் படங்கள் முறிந்து போம்படியாகப் பாய்ந்து, அப்படங்களின் மீதுள்ள பல மணிகளெல்லாம் சிந்தும்படியாக அதன்மீது

Koviloor Digital Library

நின்றபடியே பலவகை நடனங்களை ஆடிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் எது என்றால், பாம்பின் படங்களையொத்த அல்குலையுடைய, நற்குணம் கொண்ட பெண்கள் இரவெல்லாம் பயின்று கொண்டிருந்த நாடக ஒலியானது எங்கும் நான்கு திசைகளிலும் பரவியிருப்பதோடன்றி, விண்ணிலும் சென்று அதிர்கின்ற வகையில் வளப்பம் மிக்கவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற ''திருவெள்ளியங்குடி'' என்னும் திருத்தலமாகும்.

கறவைமுன் காத்துக் கஞ்சனைக் காய்ந்த
காளமே கத்திரு வுருவன்,
பறவைமுன் னுயர்த்துப் பாற்கடல் துயின்ற
பரமனார் பள்ளிகொள் கோயில்,
துறைதுறை தோறும் பொன்மணி சிதறும்
தொகுதிரை மண்ணியின் தென்பால்,
செறிமணி மாடக் கொடிகதி ரணவும்
திருவெள்ளி யங்குடி யதுவே. 1341

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் முன்பொருசமயம் பசுக் கூட்டங்களைப் பாதுகாத்துக் கம்சனை அழித்துக் கொன்றான். காளமேகம் போன்ற நிறமுடைய திருமேனியை உடையவனாகி, கருடக்கொடியை முன்னே எடுத்துக் கொண்டு, திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பள்ளி கொண்டிருக்கும் திருத்தலம் எது என்றால் மண்ணி ஆற்றின் தென் கரையில் உள்ள ஒவ்வொரு துறையிலும் பொன்னும் மணியும் சிதறி ஓடிக்கொண்டிருக்க, திரண்ட அலைகள் வீசிக் கொண்டிருக்க அந்நதிக் கரையில் அமைந்துள்ள மாடமாளிகைகள் சூரிய மண்டலத்தைத் தொட்டுக் கொண்டு இருக்கின்ற உயர்ந்து ஓங்கி வளர்ந்து இருக்கும் வளம் மிகுந்த ''திருவெள்ளியங்குடி'' என்னும் திருத்தலமாகும்.

பாரினை யுண்டு பாரினை யுமிழ்ந்து
பாரதம் கையெறிந்து, ஒருகால்
தேரினை யூர்ந்து தேரினைத் துரந்த
செங்கண்மால் சென்றுறை கோயில்,
ஏர்நிரை வயலுள் வாளைகள் மறுகி
'எமக்கிட மன்றிலெ'தன் றெண்ணி,
சீர்மலி பொய்கை சென்றணை கின்ற
திருவெள்ளி யங்குடி யதுவே. 1342

Koviloor Digital Library

முன்பு ஒரு சமயம் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் உலகங்களை எல்லாம் உண்டு, தன் வயிற்றினுள்ளே அடக்கிக் கொண்டு, அவ்வுலகங்கள் யாவற்றையும் வெளிக்கொண்டு வந்து, அருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், முன்பு பாரதப் போரில் அணிவகுத்துக் கைநீட்டி அருச்சுனனுக்காகத் தேரைச் செலுத்தி; எதிரிகளின் தேர்களை அழித்து ஒழித்த எம்பெருமான் செந்தாமரைக் கண்ணன் சென்று தங்கியிருக்கின்ற திருத்தலம் எது என்றால், நிலத்தை உழுகின்ற ஏர்களின் வரிசைகளையுடைய வயல்களில் உள்ள வாளை மீன்களானது அஞ்சி, ''இஃது நமக்குரிய இடமன்று'' என்று எண்ணிக் கொண்டு அவ்வயல்களைவிட்டு அகன்று அங்கேயுள்ள அழகுமிக்க குளங்களிலே சென்று சேர்கின்ற வளம் மிகுந்த ''திருவெள்ளியங்குடி'' என்னும் திருத்தலமாகும்.

காற்றிடைப் பூளை கரந்தன அரந்தை
உறக்கட லரக்கர்தம் சேனை,
கூற்றிடைச் செல்லக் கொடுங்கணை துரந்த
கோலவில் இராமன்றன் கோயில்,
ஊற்றிடை நின்ற வாழையின் கனிகள்
ஊழ்த்துவீழ்ந் தனவுண்டு மண்டி,
சேற்றிடைக் கயல்க ளுகள்திகழ் வயல்சூழ்
திருவெள்ளி யங்குடி யதுவே. 1343

இலவம் பஞ்சானது பெருங்காற்றிலே பறந்து சென்று தன் உருவழிந்து இருக்குமிடம் தெரியாமல் மறைந்து ஒழிவதுபோல, கடல் போன்ற அரக்கர்களின் படைகள் யாவும் துன்புற்று, அழிந்து போகும்படியாகவும், இயமனிடம் சென்று சேரும்படியாகவும், கொடுமையான அம்புக்கணைகளைச் செலுத்துகின்ற அழகிய வில்லையேந்தியுள்ள ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் எது என்றால், வாழை மரங்களில் இருந்து பழுத்த பழங்கள் நீரூற்றுகள் நிறைந்து இருக்கும் நிலங்கள் உதிர்ந்துவிழ, அஃது அங்குள்ள மீன்கள் மேல்விழ, அப்பழங்களைத் தின்று அந்த நீர் நிறைந்த சேற்றிலே துள்ளி விளையாடுகின்ற வகையில் அமைந்திருக்கும் வயல்கள் சூழ்ந்திருக்கின்ற ''திருவெள்ளியங்குடி'' என்னும் திருத்தல மாகும்.

Koviloor Digital Library

ஒள்ளிய கருமம் செய்வனென் றுணர்ந்த
மாவலி வேள்வியில் புக்கு,
தெள்ளிய குறளாய் மூவடி கொண்டு
திக்குற வளர்ந்தவன் கோயில்,
அள்ளியம் பொழில்வா யிருந்துவாழ் குயில்கள்
அரியரி யென்றவை யழைப்ப,
வெள்ளியார் வணங்க விரைந்தருள் செய்வான்
திருவெள்ளி யங்குடி யதுவே. 1344

''வேண்டுவார்க்கு வேண்டியதைத் தருவதே தன் கருமம்'' என்று எண்ணி உறுதி கொண்ட மகாபலிச் சக்கரவர்த்தியின் வேள்வியின் முன்னே ''வாமன'' அவதாரம் மேற்கொண்டு சென்று மூன்றடி நிலத்தை வேண்டி இரந்து பெற்று, அனைத்துத் திசை களிலும் பரவியிருக்கும்படியாக ஓங்கி உயர்ந்து வளர்ந்த எம்பெருமான் எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் எதுவென்றால், பூந்தாதுகள் நிறைந்திருக்கும் மலர்களைக் கொண்டிலங்கும் சோலைகளில் தங்கி வாழ்ந்து வருகின்ற குயில்கள் எல்லாம் ''அரி! அரி!'' என்று அழைத்துக் கொண்டிருக்கின்ற நிலையில் தூய்மை யான வெண்மை உள்ளம் கொண்ட ''அரிபக்தர்கள்'' வந்து வணங்கிக் கொண்டிருக்க அவர்கட்கு எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அருள்புரியும் பொருட்டு விரைந்து வந்து அருள் செய்வதற்காகத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் ''திரு வெள்ளியங்குடி'' என்னும் திருத்தலமாகும்.

முடியுடை யமரர்க் கிடர்செயு மசுரர்
தம்பெரு மானை,அன் றரியாய்
மடியிடை வைத்து மார்வைமுன் கீண்ட
மாயனார் மன்னிய கோயில்,
படியிடை மாடத் தடியிடைத் தூணில்
பதித்தபன் மணிகளி னொளியால்,
விடிபக லிரவென் றறிவரி தாய
திருவெள்ளி யங்குடி யதுவே. 1345

முடிசூடிக் கொண்டிருக்கும் தேவர்களுக்குப் பெருந் துன்பங்களை எப்போதும் அளித்துக் கொண்டிருக்கும் அசுரர்கட்கு மன்னனாகத் திகழும் ''இரணியன்'' என்னும் அசுரனை, முன்பு ஒரு சமயம் சிங்க உருக்கொண்டு ''நரசிம்ம மூர்த்தி''யாக அவதாரம்

Koviloor Digital Library

மேற்கொண்டு தம் மடியின்மீது அவ்விரணியனை வைத்திருந்து, அவனுடைய அகன்ற மார்பினை இருகூறாகப் பிளந்து அவன் உயிரைப் போக்கிய எம்பெருமான் திருக்கோயில் கொண்டு நிலையாக எழுந்தருளியிருக்கும்'' திருத்தலம் எது என்றால், இப்பூவுலகில் உண்டாகியிருக்கின்ற - மாடமாளிகைகளின் தூண்களில் பதித்து வைத்திருக்கின்ற பலவகை மணிகளும் ஒளிவீசிக் கொண்டு இருப்பதால், அவை வீசும் பேரொளியின் காரணமாக விடியற்காலம் என்றோ, பகற்காலம் என்றோ, இரவுக்காலம் என்றோ அறிய இயலாமலிருக்குமளவுக்கு, வேறுபாடு இல்லாத வகையில் ஒளிமயமாகத் திகழும் ''திருவெள்ளியங்குடி'' என்னும் திருத்தலமாகும்.

குடிகுடி யாகக் கூடிநின் றமரர்
குணங்களே பிதற்றிநின் றேத்த
அடியவர்க் கருளி யரவணைத் துயின்ற
ஆழியா னமர்ந்துறை கோயில்,
கடியுடைக் கமலம் அடியிடை மலரக்
கரும்பொடு பெருஞ்செந்நெ லசைய,
வடிவுடை யன்னம் பெடையொடும் சேரும்
வயல்வெள்ளி யங்குடி யதுவே. 1346

பிரமன் முதலிய தேவர்கள் எல்லோரும் தத்தம் குடும்பங்களுடன் கூடி நின்று தேவர்கட்குத் தலைவனாகிய திருமாலின் திருக்குணங்களையே அவ்வப்போது போற்றித் துதித்துக் கொண்டிருக்கின்ற அளவில் அந்த அடியவர்களுக்கு அருள்புரிந்து திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளும் திருவாழியைக் கையில் ஏந்திக் கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் எது என்றால், மணம் மிகுந்த தாமரை மலர்கள் வயல் களில் ஆங்காங்கே மலர்ந்திருக்கக் கரும்புடன் செந்நெற்பயிர்கள் அசைந்து கொண்டு இருக்க, அழகிய அன்னப்பறவைகள் தம் பெண் அன்னப்பறவைகளுடன் சென்று சேர்ந்து கொண்டிருக்கின்ற வயல்கள் நிறைந்த வளம்மிக்க ''திருவெள்ளியங்குடி'' என்னும் திருத்தலமாகும்.

Koviloor Digital Library

*பண்டுமுன் ஏன மாகியன் றொருகால்,
பாரிடந் தெயிற்றினில் கொண்டு,
தெண்டிரை வருடப் பாற்கடல் துயின்ற
திருவெள்ளி யங்குடி யானை,
வண்டறை சோலை மங்கையர் தலைவன்
மானவேல் கலியன்வா யொலிகள்,
கொண்டிவை பாடும் தவமுடை யார்கள்
ஆள்வரிக் குரைகட லுலகே. 1347

முன்பு ஒரு சமயம் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் ''வராக'' அவதாரம் மேற்கொண்டு பூமியைத் தூக்கிக் கொண்டு தம் கொம்பினில் வைத்துக் காத்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன், தெளிந்த அலைகள் வீசுகின்ற நிலையில் தம் திரு வடிகளை வருடிக் கொண்டிருக்கின்ற திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்தருளும் ''திருவெள்ளியங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெரு மானைப் பற்றி வண்டுகள் இசைபாடுகின்ற சோலைகள் சூழ்ந் திருக்கும் திருமங்கைநகரின் தலைவனாகிய, வேற்படையை யுடையவருமான 'கலியன்' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் பாடிப் பயின்று கொண்டு இருக்கும் தவமுடைய பெருமக்கள் அலைவீசுவதனால் ஒலியுண் டாகின்ற கடல் சூழ்ந்திருக்கின்ற இவ்வுலகை ஆளப் பெறுவர்.



Koviloor Digital Library

ஐந்தாம் பத்து

1. அறிவது

திருப்புள்ளம்பூதங்குடி

அறுசீர் ஆசிரிய விருத்தம்

அறிவ தரியா னனைத்துலகும்
உடையா னென்னை யாளுடையான்
குறிய மாணி யுருவாய
கூத்தன் மன்னி யமருமிடம்,
நறிய மலர்மேல் சுரும்பார்க்க
எழிலார் மஞ்ஞை நடமாட,
பொறிகொள் சிறைவண் டிசைபாடும்
புள்ளம் பூதங் குடிதானே. 1348

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் இன்னருள் பற்றி அறிந்து கொள்ள வேண்டும் என்று எவர் ஒருவர் முயற்சி செய்யினும் அறிந்து கொள்வதற்கு மிக அருமையானவனாகி இருப்பவனும், அனைத் துலகத்தினையும் தன்னகத்தே உடையவனாகவும், அடியேனை அடிமை கொண்டு இருப்பவனாகவும், குறுகிய வடிவைக் கொண்டுள்ள ''வாமன'' அவதாரம் மேற்கொண்டவனாகவும் இருந்து மாவலிச் சக்கரவர்த்தியின் வேள்வியின் முன்னே சென்று நடையிட்டு எழுந்தருளிய எம்பெருமான் திருக்கோயில் கொண்டு நிலைத்து நிற்கும் திருத்தலம் எது என்றால், நறுமணம்மிக்க மலர்களின்மீது ''சுரும்பு'' என்னும் ஒருவகை வண்டுகள் இனிய ஓசையை ஒலிக்கவும், அழகுமிக்க மயில்கள் நடனமாடிக் கொண்டிருக்கவும், வரிகளையும், சிறகு களையும் உடைய வண்டுகள் இன்னிசை பாடிக் கொண்டு இருக்கும் ''திருப்புள்ளம் பூதங்குடி'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

கள்ளக் குறளாய் மாவலியை
வஞ்சித் துலகம் கைப்படுத்து,
பொள்ளைக் கரத்த போதகத்தின்
துன்பம் தவிர்த்த புனிதனிடம்,
பள்ளச் செறுவில் கயலுகளப்
பழனக் கழனி யதனுள்போய்,
புள்ளுப் பிள்ளைக் கிரைதேடும்
புள்ளம் பூதங் குடிதானே. 1349

Koviloor Digital Library

கள்ளத்தனமாக ''வாமன'' அவதாரம் மேற்கொண்டு, மகாபலிச் சக்கரவர்த்தியிடம் சென்று வஞ்சகமாக அனைத்து உலகங்களையும் தன் வயப்படுத்திக் கொண்டவனும், ஓட்டை உடைய துதிக்கைகளைக் கொண்டுள்ள கஜேந்திர ஆழ்வானின் துன்பத்தைப் போக்கியருளிய தூயவனான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது என்றால், பள்ளமான வயல்களில் மீன்கள் துள்ளித் திரியுமளவுக்கு நீர்வளம் மிக்கிருக்க, அவ்வயல்களினிடையே பறவைகள் தங்கள் இளம்பிள்ளைகளான அதன் குஞ்சுகளுக்கு உணவாகக் கூடிய சிறுசிறு மீன்களைத் தேடிக் கொண்டிருக்கும் அளவுக்கு நீர்வளம் நிறைந்திருக்கின்ற ''திருப்புள்ளம் பூதங்குடி'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

மேவா வரக்கர் தென்னிலங்கை
 வேந்தன் வீயச் சரம்துரந்து,
மாவாய் பிளந்து மல்லடர்த்து
 மருதம் சாய்த்த மாலதிடம்,
காவார் தெங்கின் பழம்வீழக்
 கயல்கள் பாயக் குருகிரியும்,
பூவார் கழனி யெழிலாரும்
 புள்ளம் பூதங குடிதானே. 1350

தனக்குப் பகைவர்களாக இயல்பாகவே அமைந்திருக்கின்ற அரக்கர்களின் வாழுமிடமாக அமைந்துள்ள தெற்கேயுள்ள இலங்கை மாநகரின் அரசனான இராவணனை அழியுமாறு செய்து, அதன் பொருட்டு அம்பு எய்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான், குதிரை வடிவில் வந்த ''கேசி'' என்னும் அசுரனின் வாயைப் பிளந்து அழித்துவிட்டு, மல்லர்களைப் போரில் வென்ற வீரமிக்கவனும், மருத மரங்களைச் சாய்த்து அசுரர்களை அழித்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என்னும் திருமால் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது என்றால், தோட்டங்களில் உள்ள தென்னை மரங்களில் தெங்கின்பழம் கீழே விழுவதைக் கண்ட மீன்கள் துள்ளித் துள்ளித் தொலைவில் சென்று, விழுமாறு ஓடிக் கொண்டிருக்கின்ற நிலையில், 'குருகு' என்னும் நாரைகள் அதுகண்டு சிதறி ஓடிடவும் மலர்கள் நிறையவே மலர்ந்திருக்கின்ற வயல்கள் காரணமாக அழகுமிக்கதாகத் திகழும் வளம்மிக்கதாக

Koviloor Digital Library

விளங்கும் ''திருப்புள்ளம் பூதங்குடி'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

வெற்பால் மாரி பழுதாக்கி
விறல்வா ளரக்கர் தலைவன்றன்,
வற்பார் திரள்தோ ளைந்நான்கும்
துணித்த வல்வில் இராமனிடம்,
கற்பார் புரிசை செய்குன்றம்
கவினார் கூடம் மாளிகைகள்,
பொற்பார் மாட மெழிலாரும்
புள்ளம் பூதங் குடிதானே. 1351

''கோவர்த்தனம்'' என்னும் மலையினைக் குடையாகத் தன் கையில் பிடித்து, அங்குத் தேவேந்திரனால் பெய்த பெரு மழையினைத் தடுத்து நிறுத்தி வீணாக்கிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், வலிமைமிக்க திரண்ட இருபது தோள்களையும் கொண்டுள்ள அரக்கர்களின் தலைவனாகிய இராவணனை அழித்து ஒழித்த வலிமைமிக்க வில்லையுடைய ஸ்ரீஇராமபிரான் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது என்றால், நல்ல வேலைப்பாடுகளையுடைய மதிள்கள் சூழ்ந்திருக்கவும், குன்றினை ஒத்த மிக உயர்ந்த, அழகுமிக்க கூடங்களையுடைய திருமாளிகைகளும், பொன்னாலான அழகிய மண்டபங்களும் நிறைந்து சிறந்து விளங்குகின்ற வளம் மிகுந்த ''திருப்புள்ளம் பூதங்குடி'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

மையார் தடங்கண் கருங்கூந்தல்
ஆய்ச்சி மறைய வைத்ததயிர்,
நெய்யார் பாலோ டமுதுசெய்த
நேமி யங்கை மாயனிடம்,
செய்யார் ஆரல் இரைகருதிச்
செங்கால் நாரை சென்றணையும்,
பொய்யா நாவில் மறையாளர்
புள்ளம் பூதங் குடிதானே. 1352

மைதீட்டிய அழகிய பெரிய கண்களையும், கருமையான நீண்ட கூந்தலையுமுடைய ஆய்க்குலப் பெண்கள் ஒளித்து வைத்திருந்த தயிர், நெய், பால் ஆகியவைகளைத் திருவமுது செய்த,

Koviloor Digital Library

சக்கராயுதத்தைத் தன் திருக்கரங்களில் ஏந்திக் கொண்டு இருக்கும் மாயோனாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது என்றால், சிவந்த கால்களையுடைய 'நாரை' என்னும் பறவைகள் அங்குள்ள நீர் வளம்மிக்க வயல்களில் ''ஆரல்'' என்னும் மீன்கள் தனக்கு உண வாகக்கிடைக்குமா என்று எண்ணி அங்குச் சென்று, சேர்ந்திருக்கின்ற அளவில், 'பொய்' கூறியறியாத நாவினால் மறைகளை ஓதிக் கொண்டிருக்கும் அந்தணர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற வளம்மிக்க ''திருப்புள்ளம் பூதங்குடி'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

மின்னி னன்ன நுண்மருங்குல்
வேயேய் தடந்தோள் மெல்லியற்கா,
மன்னு சினத்த மழவிடைகள்
ஏழன் றடர்த்த மாலதிடம்,
மன்னு முதுநீ ரரவிந்த
மலர்மேல் வரிவண் டிசைபாட,
புன்னை பொன்னேய் தாதுதிர்க்கும்
புள்ளம் பூதங் குடிதானே. 1353

மின்னலையொத்த நுண்ணிய இடையினையுடைய, மூங்கில் போன்ற பருத்த தோள்களைக் கொண்டு திகழும் நப்பின்னைப் பிராட்டிக்காக வேண்டி முன்பொருசமயம் மிகுந்த சினத்தை உடைய ஏழு எருதுகளையும் போரில் வென்ற எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், நிலையாக நீரினைக் கொண்டுள்ள நீர் நிலை களிலுள்ள தாமரை மலர்களின்மீது வரிகளைக் கொண்ட வண்டுகள் இன்னிசை பாடிக்கொண்டிருக்கப் புன்னை மரங்கள் தனது பொன்னிறமான மலர்களிலிருந்து மகரந்தத் துகள்களை உதிர்த்துக் கொண்டிருக்கும் வளம்மிக்க ''திருப்புள்ளம் பூதங்குடி'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

குடையா விலங்கல் கொண்டேந்தி
மாரி பழுதா நிரைகாத்து,
சடையா னோட அடல்வாணன்
தடந்தோள் துணித்த தலைவனிடம்,

Koviloor Digital Library

குடியா வண்டு கள்ளுண்ணக்
 கோல நீலம் மட்டுகுக்கும்,
புடையார் கழனி யெழிலாரும்
 புள்ளம் பூதங் குடிதானே. 1354

''கோவர்த்தனம்'' என்னும் மலையைக் குடையாகத் தம் திருக்கரங்களில் பிடித்துக் கொண்டு, தேவேந்திரனால் பெய்த பெருமழையைத் தடுத்து, பசுக்கூட்டங்களைப் பாதுகாத்தருளி, சிவ பெருமான் ''வாணாசுரன்'' என்னும் அசுரனிடம் போரில் தோற்றோட, அவ்வசுரனுடைய வலிமைமிக்க தோள்களை அறுத் தெறிந்து, அச்சிவபெருமானுக்கு உதவியருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் ஆகிய எம்தலைவன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது என்றால், வண்டுகளின் கூட்டங்கள் அங்குள்ள அழகிய கருநெய்தற் பூக்களில் உள்ள தேனைப் பருகிக் கொண்டிருக்கின்ற அளவில் வளம்மிக்க ''திருப்புள்ளம்பூதங்குடி'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

கறையார் நெடுவேல் மறமன்னர்
 வீய விசயன் தேர்கடவி,
இறையான் கையில் நிறையாத
 முண்டம் நிறைத்த எந்தையிடம்,
மறையால் முத்தீ யவைவளர்க்கும்
 மன்னு புகழால் வண்மையால்,
பொறையால் மிக்க அந்தணர்வாழ்
 புள்ளம் பூதங் குடிதானே. 1355

இரத்தக்கறை படிந்த நீண்ட வேற்படையையுடைய ''துரியோ தனாதியர்கள்'' என்னும் பகை மன்னர்கள் அழியும் பொருட்டு அன்று பாரதப் போரின்போது, அருச்சுனனுடைய தேரோட்டியாக இருந்து கொண்டு தேரைச் செலுத்தியவனும், சிவபெருமானின் கையில் ஒட்டிக் கொண்டிருந்ததாக, எவ்வகையிலும் நிரப்ப இயலாததாகவும் இருக்கின்ற ''பிரம்ம கபாலம்'' நிறையச் செய்தருளிய எந்தை எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், மறை களைக் கொண்டு முத்தீயை வளர்த்து வேள்விகளை வளர்க்கின்ற, நிலையான புகழைப் பெற்றிருப்பதாலும், கொடைத்தன்மைக் குணங்களைக் கொண்டிருப்பதாலும், பொறுமையில் மிகுந்த

Koviloor Digital Library

வர்களாகவும் உள்ள மேன்மை தங்கிய வளம்மிக்க அந்தணர்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் ''திருப்புள்ளம் பூதங்குடி'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

துன்னி மண்ணும் விண்ணும்
தோன்றா திருளாய் மூடியநாள்,
அன்ன மாகி யருமறைகள்
அருளிச் செய்த அமலனிடம்,
மின்னு சோதி நவமணியும்
வேயின் முத்தும் சாமரையும்,
பொன்னும் பொன்னி கொணர்ந்தலைக்கும்
புள்ளம் பூதங் குடிதானே. 1356

இம்மண்ணுலகமும் விண்ணுலகமும் முன்பு ஒரு சமயம் இருள்மூடி மறைத்துக் கொண்டிருந்தபோது, ''அன்னப்பறவை'' வடிவு கொண்டு அருமையான நான்கு வகையான மறைகளையும் பாதுகாத்து அருளிச் செய்த எம்பெருமான் ''ஸ்ரீமந்நாராயணன்'' என்னும் தூய்மை உடைய எம்இறைவன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எது என்றால், மின்னுகின்ற ஒளி வடிவினையுடைய நவரத்தினங்களையும் மூங்கில்களிலிருந்து விளைகின்ற முத்துகளையும், சாமரங்களையும், பொன்னையும் கொண்டு வந்து சேர்க்கின்ற வகையில் அலைகள்வீசும் காவிரி நதிக்கரையின்கண் அமைந்துள்ள ''திருப்புள்ளம் பூதங்குடி'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

*கற்றா மறித்துக் காளியன்றன்
சென்னி நடுங்க நடம்பயின்ற,
பொற்றா மரையாள் தன்கேள்வன்
புள்ளம் பூதங் குடிதன்மேல்
கற்றார் பரவும் மங்கையர்கோன்
காரார் புயற்கைக் கலிகன்றி,
சொற்றா னீரைந் திவைபாடச்
சோர நில்லா துயர்தாமே. 1357

கன்றுகளுடன் கூடிய பசுக்களை மேய்த்து, அவைகளைப் பாதுகாத்தவனும் ''காளியன்'' என்னும் பாம்பின் தலை நடுங்குமாறு, அத்தலையின்மீது ஏறி நடனமாடியவனும், பொற்றாமரையில் வீற்றிருக்கும் பிராட்டியின் நாயகனாகவும்

Koviloor Digital Library

விளங்குகின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ''திருப்புள்ளம் பூதங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் மேன்மையைப் பற்றி, கற்றறிந்த பெருமக்கள் நிறைந்து வாழும் திருமங்கை நகர்க்கரசனாகிய காளமேகம் போன்ற வள்ளல் தன்மையை உடைய ''கலியன்'' என்று புகழப் பெறுகின்ற திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் நன்கு கற்றுப் பாடக்கூடிய ஆற்றல் பெற்றவர்களை துயரங்கள் ஏதும் வந்து சேராது.

உ. தாந்தம்

திருக்கூடலூர்

கலி விருத்தம்

தாம்தம் பெருமை யறியார், தூது
வேந்தர்க் காய வேந்த ளூர்போல்,[1]
காந்தள் விரல்மென் கலைநன் மடவார்,
கூந்தல் கமழும் கூட லூரே. 1358

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் எல்லாம் அறிந்தவனாவான். ஆயினும் அவன் தன் பெருமையின் மேன்மையைத்தான் அறிந்து கொள்ளமாட்டான். மேலும் அவன் முன்பொரு சமயம் பாண்டவர்களுக்காக ஸ்ரீகண்ணபிரான் திருஅவதார காலத்தில் தூது சென்று வந்த எம்பெருமான் எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் என்பது காந்தள் மலர் போன்ற மென்மையான விரல்களைக் கொண்டு, அழகிய ஆடைகளை அணிந்து கொண்டிருக்க, அம்மாதர்களின் கூந்தலில் எப்பொழுதும் மணம் வீசிக்கொண்டு இருக்கும் நல்ல அழகிய பெண்கள் நிறைந்திருக்கின்ற ''திருக்கூடலூர்'' என்பதாகும்.

செறும்திண் திமிலே றுடைய, பின்னை
பெறும்தண் கோலம் பெற்றா ளூர்போல்,
நறுந்தண் டீந்தே னுண்ட வண்டு,
குறிஞ்சி பாடும் கூட லூரே. 1359

உறுதியான முகப்புகளையுடைய எருதுகளைக் கொண்டிருக்கின்ற ஸ்ரீநப்பின்னைப் பிராட்டியினுடைய திருமேனியினை ''ஏறு தழுவுதல்'' என்னும் நடைமுறைக்கேற்பத் திருமணம் செய்து

Koviloor Digital Library

கொண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் இனிய திருத்தலம் எது என்றால், மணம் மிக்க குளிர்ச்சியை உடைய பூக்களிலிருந்து இனிய தேனைப் பருகிய வண்டுகள் ''குறிஞ்சிப்பண்'' என்னும் இசைப் பண்ணைப் பாடிக் கொண்டிருக்கின்ற வளம்மிக்க ''திருக்கூடலூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

பிள்ளை யுருவாய்த் தயிருண்டு, அடியேன்
உள்ளம் புகுந்த வொருவ ரூர்போல்,
கள்ள நாரை வயலுள், கயல்மீன்
கொள்ளை கொள்ளும் கூட லூரே. 1360

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் தன் இளமைக் காலத்தில் தயிரைத் திருவமுது செய்து, அடியேனின் உள்ளத்திலே புகுந்து கொண்டு திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் என்பது யாதெனின், வஞ்சக எண்ணங் கொண்டிருக்கும் ''நாரை'' என்னும் பறவை, வயல்களிலேயுள்ள கயல்மீன்களைக் கொத்திக் கொண்டு கொள்ளை கொள்கின்ற ''திருக்கூடலூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

கூற்றே ருருவின் குறளாய், நிலநீர்
ஏற்றா னெந்தை பெருமா னூர்போல்,
சேற்றே ருழவர் கோதைப் போதூண்,
கோல்தேன் முரலும் கூட லூரே. 1361

அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடிப் போற்றுகின்ற வகையில் ''குள்ள'' வடிவு மேற்கொண்டு ''வாமன'' அவதாரம் மேற்கொண்டு, மகாபலிச்சக்கரவர்த்தியின் வேள்வி முன்னே சென்று நின்று, இப்பூமியை இரந்து பெற்ற எம்பெருமான் ''ஸ்ரீகண்ணபிரான்'' என்னும் எந்தை திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் என்பது யாது எனின், வயல்களில் சேற்றில் ஏர்பூட்டி உழுகின்ற உழவர்களின் தலை முடியில் சூடியிருக்கின்ற மலர்களில் உள்ள தேனையுண்ட வண்டுகள் இசைபாடுகின்ற ''திருக்கூடலூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

தொண்டர் பரவச் சுடர்சென் றணவ,
அண்டத் தமரு மடிக ளூர்போல்,
வண்ட லலையுள் கெண்டை மிளிர,
கொண்ட லதிரும் கூட லூரே. 1362

Koviloor Digital Library

அடியவர்கள் துதித்து ஏத்தும்படி அமைந்துள்ள திருமேனியானது சூரியனின் ஒளி மண்டலங்களின் அளவு வரை சென்று, அவ்வண்டங்கள் முழுவதும் பரவி இருக்கும் வரை வளர்ந்திருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் யாதெனின், வண்டல் பரவியிருக்கின்ற அலைவீசுகின்ற அளவில் நீர்வளம் நிறைந்திருப் பதனால், அவ்வயல்களில் கெண்டை மீன்கள் தனது ஒளியின் காரணமாக மின்னிக் கொண்டிருக்க, அதனைக் கண்ட மேகங்கள் முழங்கி அதிர்ந்து கொண்டிருக்கும் வளம்மிக்க ''திருக்கூடலூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

தக்கன் வேள்வி தகர்த்த தலைவன்,
துக்கம் துடைத்த துணைவ ரூர்போல்,
எக்க லிடுநுண் மணல்மேல், எங்கும்
கொக்கின் பழம்வீழ் கூட லூரே. 1363

தக்கன் செய்த யாகத்தினை அழித்ததன் காரணமாக உண்டான சிவபெருமானின் துயரத்தைப் போக்கி அருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் நமக்குத் துணையாக நிற்கின்ற திருத்தலம் யாதெனின், வண்டல் சேர்ந்திருக்கின்ற மணலின்மீது எங்கும் மாம்பழங்கள் விழுந்து நிறைந்து கிடக்கின்ற வளம்மிக்க ''திருக்கூடலூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

கருந்தண் கடலும் மலையு முலகும்,
அருந்தும் அடிக ளமரு மூர்போல்,
பெருந்தண் முல்லைப் பிள்ளை யோடி,
குருந்தம் தழுவும் கூட லூரே. 1364

முன்பு ஒரு சமயம் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் கருநிறம் கொண்ட கடல்களும் மலைகள், உலகங்கள் ஆகிய யாவற்றையும் ஒருசேரத் திருவமுது செய்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் என்பது யாதெனின், பெருத்த அளவில் வளர்ந்தும், குளிர்ச்சியடைந்துமிருக்கின்ற இளம் முல்லைக் கொடியானது, அங்குள்ள குருந்த மரத்தினைத் தழுவி, அதன்மீது ஓடிப் பரவியிருக்கின்ற வளம்மிக்க ''திருக்கூடலூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

Koviloor Digital Library

கலைவாழ் பிணையோ டணையும், திருநீர்
மலைவா ழெந்தை மருவு மூர்போல்,
இலைதாழ் தெங்கின் மேல்நின்று, இளநீர்க்
குலைதாழ் கிடங்கின் கூட லூரே. 1365

ஆண் மான்கள் தத்தம் பெண் மான்களுடன் சேர்ந்து வாழ்கின்ற ''திருநீர்மலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எந்தை எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பொருந்தி வாழ்கின்ற திருத்தலம் யாதெனின், தென்னை மரத்தின் இலைகள் தழைத்துக் கொண்டிருக்க, அதன்மீது இருக்கின்ற இளநீரின் குலைகள் தாழ்ந்திருக்குமளவுக்கு நீர்வளமும், நிலவளமும் நிறைந்துள்ள வளம்மிக்க ''திருக்கூடலூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

பெருகு காத லடியேன் உள்ளம்,
உருகப் புகுந்த வொருவ ரூர்போல்,
அருகு கைதை மலர, கெண்டை
குருகென் றஞ்சும் கூட லூரே. 1366

என்றென்றும் பெருகி வருகின்ற ஆவல்கள் அதிகமாக வுடையவனான அடியேனின் உள்ளத்தினுள்ளே வந்து, அடியேன் உள்ளம் உருகுமாறு புகுந்து இருக்கும் ஒப்பற்றவனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் யாதெனின், தாழம்பூக்கள் அருகருகே மலர்ந்திருக்க, அது கண்ட கெண்டை மீன்கள் தம்மைப் பிடித்துண்கின்ற ''நாரை'' என்னும் பறவைகளோ என்று அஞ்சி ஓடுகின்ற வளம்மிக்க ''திருக்கூடலூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

*காவிப் பெருநீர் வண்ணன், கண்ணன்
மேவித் திகழும் கூட லூர்மேல்,
கோவைத் தமிழால் கலியன் சொன்ன,
பாவைப் பாடப் பாவம் போமே. 1367

கருநெய்தற் பூக்களைப் போலவும், கடலைப் போலவும் கருநீல நிறமுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் மேவிவந்து திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் ''திருக்கூடலூர்'' என்னும் திருத்தலம் என்பது பற்றி இயல்பாகவே நிரல்பட

Koviloor Digital Library

ஒழுங்காகத் திகழும் தமிழில் 'கலியன்' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்களைப் பாடிடப் பாவங்கள் யாவும் தொலைந்து போகும்.

3. வென்றி
திருவெள்ளறை

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*வென்றி மாமழு வேந்திமுன் மண்மிசை
மன்னரை மூவெழுகால்
கொன்ற தேவ,நின் குரைகழல் தொழுவதோர்
வகையெனக் கருள்புரியே,
மன்றில் மாம்பொழில் நுழைதந்து மல்லிகை
மௌவலின் போதலர்த்தி,
தென்றல் மாமணம் கமழ்தர வருதிரு
வெள்ளறை நின்றானே. 1368

தென்றல் காற்று, ஊர்மன்றின் இடை இடையேயுள்ள மாந் தோப்புகளினூடே நுழைந்து, மல்லிகை, முல்லை போன்றவை களின் ''அரும்பு'' என்னும் பருவத்தைத் தாண்டி ''போது'' என்னும் மலருவதற்கு முந்தைய நிலையை அடைந்து, நன்கு மலரச் செய்து, மணம் பரப்புகின்ற மேன்மை பொருந்திய ''திருவள்ளறை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! முன்பொருசமயம் நீ ''பரசுராம'' அவதாரம் மேற்கொண்டு வந்தபோது ''மழு'' என்னும் பெரிய ஆயுதத்தைக் கையிலேந்திக் கொண்டு மன்னர்களை இருபத்தோரு தலைமுறைகளாகக் கொன்ற தேவாதி தேவனே! நின்னுடைய புகழ்மிக்க திருவடிகளைக் கண்டு சேவிக்கும் பெரும்பேற்றினை அடியேனுக்கு அளித்து அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

வசையில் நான்மறை கெடுத்தவம் மலரயற்
கருளி,முன் பரிமுகமாய்,
இசைகொள் வேதநூ லென்றிவை பயந்தவ-
னே!எனக் கருள்புரியே,

Koviloor Digital Library

உயர்கொள் மாதவிப் போதொடு லாவிய
மாருதம் வீதியின்வாய்,
திசையெல் லாம்கம ழும்பொழில் சூழ்திரு
வெள்ளறை நின்றானே! 1369

ஓங்கி உயர்ந்து வளர்ந்திருக்கின்ற குருக்கத்தி மரத்தில் மலர்ந்திருக்கும் மலர்களைத் தழுவிக் கொண்டு வருகின்ற தென்றல் காற்றானது, அங்குள்ள வீதிகள்தோறும் சென்று மணம் பரப்பிக் கொண்டு செல்ல, அம்மணமானது எல்லாத் திசைகளிலும் சென்று கமழ்கின்றவாறு அமைந்துள்ள சோலைகள் சூழ்ந்திருக்கும் ''திருவெள்ளறை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! முன்பொருசமயம் நான்கு வேதங்களையும் பறிகொடுத்து நின்ற உன் கொப்பூழ்த் தாமரை மலரினின்றும் தோன்றிய பிரமதேவனுக்கு அருள்புரிந்து ''அயக்ரீவர்'' என்னும் அவதாரம் மேற்கொண்டு, ''இசைகளுடன் கூடிய வேதங்கள் இவை'' என்று எடுத்தியம்பி அவனுக்கு அளித்து உதவிய எம்பெருமானே! அடியேனுக்கும் அவ்வண்ணமே அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

வெய்ய னாயுல கேழுடன் நலிந்தவன்
உடலக மிருபிளவா,
கையில் நீளுகிர்ப் படையது வாய்த்தவ-
னே!எனக் கருள்புரியே,
மையி னார்தரு வராலினம் பாயவண்
தடத்திடைக் கமலங்கள்,
தெய்வ நாறுமொண் பொய்கைகள் சூழ்திரு
வெள்ளறை நின்றானே! 1370

மை போன்று கருநிறமுடைய 'வரால்' என்னும் மீன்கள் துள்ளிப் பாய்கின்ற திருக்குளத்தில்தாமரைப் பூக்கள் மலர்ந்து இனிய தெய்வமணம் கமழ்கின்ற ''திருவெள்ளறை'' என்னும் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! ஏழு உலகங்களையும் துன்புறுத்தியவாறு, ஆட்சிபுரிந்து வந்த ''இரணியன்'' என்னும் அரசனின் உடலை இருகூறாகப் பிளந்து போகும்படி உன் கையில் நீண்டு வளர்ந்துள்ள நகங்களைக் கொண்டு கிழித்து அழித்த எம்பெருமானே! நீ அடியேனுக்கு அருள்புரிதல் வேண்டும்.

Koviloor Digital Library

வாம்ப ரியுக மன்னர்த முயிர்செக
ஐவர்கட் கரசளித்த,
காம்பி னார்திரு வேங்கடப் பொருப்ப!நின்
காதலை யருளெனக்கு,
மாம்பொ ழில்தளிர் கோதிய மடக்குயில்
வாயது துவர்ப்பெய்த,
தீம்ப லங்கனித் தேனது நுகர்திரு
வெள்ளறை நின்றானே! 1371

மாந்தோப்புகளிலுள்ள மடக்குயில்கள் மாமரங்களிலுள்ள இளந்தளிர்களைத் தம் வாயினால் கொத்தித் தின்று அதன் துவர்ப்புச் சுவையைச் சுவைக்கின்ற நிலையில் அம்மா மரங்களிலுள்ள இன்சுவையை உடைய ''மாம்பழங்கள்'' என்னும் இனிய தேனினைப் பருகி அனு பவிக்கும் வளம்மிக்க ''திருவெள்ளறை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! முன்பு பாரதப்போர் நடைபெற்றபோது, குதிரைகளும் மன்னர்களும் மாளும்ப்டியாகச் செய்து, பின்பு பாண்டவர்களுக்கு அரசினை அளித்த எம்பெருமானே! மூங்கில்கள் நிறைந்து வளர்கின்ற ''திருவேங்கடம்'' என்னும் மலையின்மீது திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் எம்பெருமானே! திருமலைத் தெய்வமாம் திருவேங்கடத்தானே! தங்களிடத்தே அமைந்துள்ள பேரன்பினை அடியேனுக்கு அளித்து அருள் புரியுமாறு வேண்டுகின்றேன்.

மான வேலொண்கண் மடவரல் மண்மகள்
அழுங்கமுந் நீர்ப்பரப்பில்,
ஏன மாகியன் றிருநில மிடந்தவ-
னே!எனக் கருள்புரியே,
கான மாமுல்லை கழைக்கரும் பேறிவெண்
முறுவல்செய் தலர்கின்ற,
தேனின் வாய்மலர் முருகுகுக் கும்திரு
வெள்ளறை நின்றானே! 1372

காட்டினில் பூக்கின்ற காட்டு முல்லை மலர்கள் அங்கு விளைகின்ற கரும்பின் நுனிவரை சென்று படர்ந்திருப்பது என்பது வெண்பற்களால் புன்முறுவல் கொள்வது காணப்படுகின்ற நிலையில், மலர்கின்ற மலர்களின் வழியாக உண்ணும் வண்டுகளுக்கேற்ற

Koviloor Digital Library

வகையில் தேனைப் பெருக்குகின்ற அளவிற்கு வளம்மிக்க ''திருவெள்ளறை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! வேல் போன்ற கூர்மையான திருக்கண்களையும், பெண்களுக்குரிய குணங்களைக் கொண்டு திகழும் பூமிப் பிராட்டி முன்பொருசமயம் உலகப் பிரளயம் உண்டான காலத்தில், நீ அக்கடல் பரப்பில் ''வராக'' அவதாரம் மேற்கொண்டு வந்து, அந்நீர்ப் பரப்பில் அமுங்கியிருந்த நிலையினின்றும் தம் கொம்புகளினாலே குத்தி யெடுத்துப் பாதுகாத்தருளிய எம்பெருமானே! அடியேனுக்கு அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

பொங்கு நீள்முடி யமரர்கள் தொழுதெழ
அமுதினைக் கொடுத்தளிப்பான்,
அங்கொ ராமைய தாகிய வாதி!நின்
அடிமையை யருளெனக்கு,
தங்கு பேடையொ டூடிய மதுகரம்
தையலார் குழலணைவான்,
திங்கள் தோய்சென்னி மாடம்சென் றணைதிரு
வெள்ளறை நின்றானே! 1373

பூவில் வாழ்ந்து வருகின்ற ஆண் வண்டு, தன் பெண் வண்டுடன் ஊடல் கொண்டிருந்த காரணத்தினால், அப்பெண் வண்டுக்குத் தெரியாமல் வேறோர் இடத்தில் சென்று மறைய வேண்டுமென்று எண்ணி, சந்திரனைத் தொடுமளவிற்கு விண்ணைமுட்டும் அளவுக்கு ஓங்கி உயர்ந்துள்ள மாடமாளிகைகளில் உள்ள பெண்களின் கூந்தலில் சென்று சேர எண்ணி, அம்மாட மாளிகைகளைச் சென்று சேரும். அப்படிப்பட்ட திருமாளிகைகள் நிறைந்துள்ள ''திருவெள்ளறை'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீமந்நாராயணனே! மகிழ்வுறும்படியான நீண்ட முடிசூடிய தேவேந்திரன் முதலிய தேவர்கள் வந்து தொழுது கொண்டிருந்தபோது, அவர்கட்குத் திருவமுது கொடுத்தருளும் பொருட்டு, ''ஆமை'' அவதாரம் மேற்கொண்டருளிய எம்பெருமான் ஆதிமூலமே! தங்கட்கு அடிமை பூண்டு ஒழுகும் பேற்றினை அடியேனுக்கு அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

Koviloor Digital Library

ஆறி னோடொரு நான்குடை நெடுமுடி
அரக்கன்றன் சிரமெல்லாம்,
வேறு வேறுக வில்லது வளைத்தவ
னே!எனக் கருள்புரியே,
மாறில் சோதிய மரகதப் பாசடைத்
தாமரை மலர்வார்ந்த,
தேறல் மாந்திவண் டின்னிசை முரல்திரு
வெள்ளறை நின்றானே! 1374

மாறுபாடற்ற ஒளியையுடைய மரகதப் பசுமையையுடைய தாமரை மலர்களில் இருந்து வழிந்து கொண்டிருக்கும் தேனைப் பருகிய வண்டுகள் இன்னிசை முழங்கிக் கொண்டு இருக்கும் வளம்மிக்க ''திருவெள்ளறை'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் ஸ்ரீமந்நாராயணனே! இராவணனின் பத்துத் தலைகளையும் வேறு வேறாக அறுபட்டுக் கீழே விழச் செய்யுமாறு தம் வில்லை வளைத்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானே! எனக்கு அருள்புரிய வேண்டுகிறேன்.

முன்னிவ் வேழுல குணர்வின்றி யிருள்மிக
உம்பர்கள் தொழுதேத்த,
அன்ன மாகியன் றருமறை பயந்தவ
னே!எனக் கருள்புரியே,
மன்னு கேதகை சூதக மென்றிவை
வனத்திடைச் சுரும்பினங்கள்,
தென்ன வென்னவண் டின்னிசை முரல்திரு
வெள்ளறை நின்றானே! 1375

இடைவிடாமல் பூத்திருக்கும் தாழைகளும், மாமரங்களும் என்னும் இவைகளெல்லாம் ஒரு காடு என்றும் கருதுகின்ற அளவில் அடர்ந்து நிறைந்த பெருஞ்சோலைகளின் இடையிடையே ''சுரும்பு'' என்னும் வண்டுகளின் கூட்டங்கள் ''தென்னதென'' என்னும் இசையை இசைத்துக் கொண்டிருக்க, சாதாரண வண்டு களோ இனிய இசைப் பாடல்களைப் பாடிக் கொண்டிருக்கும் வளம்மிக்க ''திருவெள்ளறை'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! முன்பு ஒரு சமயத்தில் ஏழு உலகங்களும் எவ்வித உணர்வுகளும் இன்றி, அறிவு கெட்டு அஞ்ஞான இருளில்

Koviloor Digital Library

ஆழ்ந்திருந்த காலத்தில் பிரமன் முதலிய தேவர்கள் யாவரும் உன்னைத் தொழுது ஏத்தவும், அவ்வயம் தாங்கள் அன்னப்பறவை வடிவினை ஏற்று அருமையான மறைகள் நான்கினையும் பாது காத்துக் காப்பாற்றி அருளிய எம்பெருமானே! அடியேனிடத்தும் அத்தகைய அருளைச் செய்யுமாறு வேண்டுகிறேன்.

ஆங்கு மாவலி வேள்வியி லிரந்துசென்
றகலிட முழுதினையும்,
பாங்கி னாற்கொண்ட பரம!நிற் பணிந்தெழு
வேனெனக் கருள்புரியே,
ஓங்கு பிண்டியின் செம்மல ரேறிவண்
டுழிதர, மாவேறித்
தீங்கு யில்மிழற் றும்படப் பைத்திரு
வெள்ளறை நின்றானே! 1376

தோட்டங்களில் ஓங்கி உயர்ந்து வளர்ந்து கொண்டிருக்கின்ற அசோக மரத்தின் சிவந்த மலர்களின்மீது வண்டுகள் ஏறிட, அம் மலர்களை நெருப்பென்று கருதி மயங்கிட அம்மலர்களைவிட்டுச் சற்றே அகன்றிடப் பின் அம்மயக்கம் நீங்கப் பெற்று, அவை மலர்களே என்று தெளிந்து, துணிந்து அம்மலர்களில் இருந்து வழியும் 'தேன்' என்னும் மதுவினைப் பருகுவதற்குச் சென்றிட, அங்குள்ள மாமரங்களின் மேலே உள்ள குயில்கள் அவ்வண்டு களைக் கண்டு, ''ஐயகோ! இவ்வண்டுகள் நெருப்பில் அகப்பட்டு விட்டனவே என்று அலறியவாறு கூவிக் கொண்டிருக்கின்ற வளமிக்க ''திருவெள்ளறை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே! முன்பொருசமயம் மகாபலிச் சக்கரவர்த்தியின் வேள்விச்சாலை முன்பு சென்று, அவனிடம் இப்பூமியை இரந்து பெற்று, அப்பொழுதே இப்பூமியை முழுமையாகவே அளந்து கொண்டு தன் வயப்படுத்திய பரமபுருடோத்தமனே! நின்னைப் பணிந்து வணங்கி நிற்கின்ற அடியேனுக்கு அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

*மஞ்சு லாமணி மாடங்கள் சூழ்திரு
வெள்ளறை யதன்மேய,
அஞ்ச னம்புரை யும்திரு வுருவனை
ஆதியை யமுதத்தை,

Koviloor Digital Library

நஞ்சு லாவிய வேல்வல வன்கலி
கன்றிசொல் ஐயிரண்டும்,
எஞ்ச லின்றிநின் றேத்தவல் லாரிமை
யோர்க்கர சாவர்களே. 1377

மேகக்கூட்டங்கள் உலவிக் கொண்டு இருக்கின்ற, நவ ரத்தினங்கள் பதித்த மாடமாளிகைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருவெள்ளறை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றி, அஞ்சனத்தினையொத்தவண்ணம் கொண்ட திருமேனியையுடைய அழகனைப் பற்றியும், ''ஆதிமூலம்'' என்னும் ஆதி காரணனாகிய எம்பெருமானைப் பற்றியும் ஆராவமுதம் போன்று இனிமையுடையவனாகிய எம்பெருமானைப் பற்றியும், நஞ்சு பூசிய வேல் ஆயுதத்தினால் வல்லமை பெற்றுள்ள ''கலியன்'' என்னும் ''திருமங்கை ஆழ்வார்'' அருளிச் செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் குறைபாடுகள் ஏதுமின்றிக் கற்று, நின்று ஏத்துவதில் வல்லமை பெற்றவர்கள் விண்ணுலகிலுள்ள தேவர்கட்கெல்லாம் அரசர்களாக இருந்து மகிழ்வர்.

4. உந்திமேல்

திருவரங்கம்

கலி நிலைத்துறை

*உந்தி மேல்நான் முகனைப் படைத்தானுல குண்டவன்
எந்தை பெம்மான், இமையோர்கள் தாதைக்கிட மென்பரால்,
சந்தி னோடு மணியும் கொழிக்கும்புனற் காவிரி,
அந்தி போலும் நிறத்தார் வயல்சூழ்தென் னரங்கமே. 1378

எந்தை எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தன் கொப்பூழின் மேல் நான்முகனைப் படைத்தான். முன் ஒரு காலத்தில் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் உலகங்களை எல்லாம் உண்டு பாது காத்தருளினான். இப்படிப்பட்ட எம்பெருமான் தேவர்களுக்குத் தந்தையாகத் திகழும் திருத்தலம் என்பது யாதெனின், சந்தனத்துடன் மணிகளையும் இழுத்துக் கொண்டு ஓடிச் சென்று சேர்க்கும் நீர் நிறைந்த காவிரி நதியும், மங்கியுள்ள மாலைப் பொழுதும் ஒன்று சேர்ந்த நிறத்தினை ஒத்திருக்கின்ற வயல்கள் சூழ்ந்திருக்கின்ற

Koviloor Digital Library

தமிழகத்தின் தெற்குப் பகுதியில் அமைந்துள்ள ''திருவரங்கம்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

வையமுண் டாலிலை மேவு மாயன்மணி நீண்முடிப்,
பைகொள் நாகத் தணையான் பயிலுமிட மென்பரால்,
தையல் நல்லார் குழல்மா லையும்மற்றவர் தடமுலை,
செய்ய சாந்தும் கலந்திழி புனல்சூழ்தென் னரங்கமே. 1379

உலகப்பிரளயம் உண்டான காலத்தில் இப்பூமியை உண்டு ஆலந்தளிரின் கண் திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமான் மாயன் மணிகள் இழைக்கப் பெற்ற நீண்ட திருமுடியினைச் சூடிக் கொண்டு, ஆயிரம் படங்களைக் கொண்டுள்ள திருவனந் தாழ்வான்மீது பள்ளி கொண்டிருக்கும் எம்பெருமான் திருவரங்கப் பெருமாள் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் யாதெனின், நற்பண்புகள் மிக்க பெண்களின் கூந்தலில் சூடிய மலர் மாலையும், அப்பெண்களின் இருமுலைகளிலும் பூசிய சந்தனக்குழம்பும் கலந்து ஓடி வருகின்ற நீர் நிறைந்துள்ள காவிரி நதியானது சுற்றிலும் சூழ்ந்திருக்க விளங்கும் ''திருவரங்கம்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

பண்டிவ் வைய மளப்பான் சென்றுமாவலி கையில்நீர்
கொண்ட, ஆழித் தடக்கைக் குறளனிட மென்பரால்,
வண்டு பாடும் மதுவார் புனல்வந்திழி காவிரி
அண்ட நாறும் பொழில்சூழ்ந் தழகார்தென் னரங்கமே. 1380

முன்பு ஒரு காலத்தில் இப்பூமியை அளக்கும் பொருட்டு மகாபலிச் சக்கரவர்த்தி செய்த வேள்வியின் முன்னே சென்று, அவன் கையினால் தாரை வார்த்துத் தந்த வகையில் அளித்த நீரை ஏற்றுக் கொண்ட திருவாழியாழ்வானைத் தம் திருக்கரத்திலேந்திய, குள்ள வடிவினனாகிய ''வாமன'' அவதாரம் மேற்கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், தேன் கலந்திருக்கின்ற தண்ணீர்ப் பரப்பின்மீது வண்டுகள் வந்து இன்னிசை பாடிக் கொண்டிருக்கப் பெருவெள்ளம் வந்து வழிந்தோடுகின்ற காவிரி நதியானதும், வானளாவ மணம்வீசுகின்ற சோலைகளானதும் சுற்றிலும் சூழ்ந்து கொண்டிருக்கின்ற வளம்மிக்க ''திருவரங்கம்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

Koviloor Digital Library

விளைத்த வெம்போர் விறல்வா ளரக்கன்நகர் பாழ்பட,
வளைத்த வல்வில் தடக்கை யவனுக்கிட மென்பரால்,
துளைக்கை யானை மருப்பு மகிலும்கொணர்ந் துந்தி,முன்
திளைக்கும் செல்வப் புனல்கா விரிசூழ்தென் னரங்கமே. 1381

வாள் கொண்டு கடும்போரினைப் பெரிதும் விளைவித்த வலிமைமிக்க அரக்கர்களும், அவர்களின் மன்னனாகிய இராவணனும், இலங்கை மாநகரமும் பாழ்பட்டு அழிந்து போகுமாறு செய்ததன் பொருட்டுத் தம் வலிமை மிக்க வில்லை வளைத்த திருக்கரங்களையுடைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் என்பது யாதெனின், துளையினையுடைய துதிக்கையைப் பெற்றுள்ள யானைகளின் தந்தங்களையும், அகிற்கட்டைகளையும் முந்தித்தள்ளிக் கொண்டு வர, அதற்கும் முன்பாகத்திளைத்து மகிழ்ச்சியுடன் ஓடிவரும் செல்வம்மிக்க நீருடன் கூடி ஓடி வருகின்ற காவிரிநதி சுற்றிலும் சூழ்ந்து வந்து கொண்டிருக்கும் தென்தமிழ்நாட்டில் அமைந்துள்ள ''திருவரங்கம்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

வம்புலாம் கூந்தல் மண்டோதரி காதலன் வான்புக,
அம்பு தன்னால் முனிந்த அழகனிட மென்பரால்,
உம்பர் கோனு முலகேழும் வந்தீண்டி வணங்கும்,நல்
செம்பொ னாரும் மதிள்சூழ்ந் தழகார்தென் னரங்கமே. 1382

மணம் வீசுகின்ற கூந்தலையுடைய ''மண்டோதரி'' என்பவளின் கணவன் ''இராவணன்'' என்னும் அரக்கர்குலத்து மன்னன் விண்ணுலகு செல்லுமாறு, தன் அம்பினால் அழித்தொழித்த அழியா அழகு பெற்ற எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருத்தலம் என்பது யாதெனின், தேவர்கட்கெல்லாம் தலைவனாகிய பிரமதேவனும், ஏழுலகத்திலிருக்கின்ற அனைத்து மக்களும் திரண்டு வந்து வணங்கிக் கொண்டிருக்கும் நிலையில் பசும்பொன்னைப் போன்று ஒளிரும் மதிள்சுவர்கள் சூழ்ந்திருக்கின்ற அழகான ''திருவரங்கம்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

கலையு டுத்த அகலல்குல் வன்பேய்மகள் தாயென,
முலைகொ டுத்தா ளுயிருண் டவன்வாழுமிட மென்பரால்,
குலையெ டுத்த கதலிப் பொழிலூடும் வந்துந்தி,முன்
அலையெ டுக்கும் புனற்கா விரிசூழ்தென் னரங்கமே. 1383

Koviloor Digital Library

அழகிய பட்டாடையை உடுத்திக் கொண்டு, அகன்ற அல்குலையுடைய வன்மையுடைய ''பூதனை'' என்னும் பேய்மகள், தாயாகிய அசோதையைப் போன்று, தன் முலைப்பாலைக் கொடுக்க, அவளுயிர் போகுமாறு, அந்த நஞ்சு கலந்துள்ள பாலை உண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், குலைகள் நிறைந்து இருக்கும் வாழைத் தோட்டங்களினிடையே, அலைகள் முந்தி வந்து ஓடிவருகின்ற நீர் நிறைந்திருக்கின்ற காவிரி நதி சுற்றிச் சூழ்ந்து வருகின்ற வளம்மிக்க ''திருவரங்கம்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

கஞ்சன் நெஞ்சும் கடுமல் லரும்சகடமும் காலினால்,
துஞ்ச வென்ற சுடராழி யான்வாழுமிட மென்பரால்,
மஞ்சு சேர்மா ளிகைநீ டகில்புகையும், மறையோர்
செஞ்சொல் வேள்விப் புகையும் கமழும்தென் னரங்கமே. 1384

'கம்சன்' என்பவனின் மனமும், கடுமையான மல்லர்களும், சகடாசுரன் என்னும் அசுரனும் அழிந்து படும்படியாகத் தன் காலால் உதைத்து அழித்துவிட்டு, வெற்றிபெற்ற திருவாழியையுடைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் யாதெனின், மேகக்கூட்டங்களைத் தொட்டுக் கொண்டிருக்கும் மாளிகைகளில் உண்டாகின்ற அகில் புகையும், மறைகளைக் கற்றுணர்ந்த அந்தணர்களின் வீடுகளிலிருந்து வரும் வேள்வியின் ஓமகுண்டப் புகையும் எங்கும் கமழ்கின்ற ''திருவரங்கம்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

ஏன மீனா மையோ டரியும்சிறு குறளுமாய்,
தானு மாய தரணித் தலைவனிட மென்பரால்,
வானும் மண்ணும் நிறையப் புகுந்தீண்டி வணங்கும்,நல்
தேனும் பாலும் கலந்தன் னவர்சேர்தென் னரங்கமே. 1385

வராகம், மீன், ஆமை, நரசிம்மம், வாமனம் ஆகிய அனைத்து அவதாரங்களிலும் வந்து கொண்டிருந்தவனே முழு அவதாரமாகத் தானாகவே அமைந்து இருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் யாதெனின், விண்ணுலகத்தில் வாழ்கின்ற தேவர்களும், மண்ணுலகத்தில் வாழ்கின்ற மனிதர்களும் பெரும்பான்மையோர் வந்து

Koviloor Digital Library

வணங்குகின்ற, தேன், பால் ஆகியவை கலந்து ஒன்று சேர்ந்தாற் போன்று வேற்றுமையில்லாத அளவில் ஒரே சுவையாய்க் கலந்திருக்கின்ற அடியவர்கள் சேர்ந்திருக்கின்ற தென்னரங்கம் என்கின்ற ''திருவரங்கம்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

சேய னென்றும் மிகப்பெரியன் நுண்ணேர்மையி னாய,இம்
மாயையை ஆரு மறியா வகையானிட மென்பரால்,
வேயின் முத்தும் மணியும் கொணர்ந்தார்புனற் காவிரி,
ஆய பொன்மா மதிள்சூழ்ந் தழகார்தென் னரங்கமே. 1386

எக்காலத்தும் யாவராலும் அறிந்துணர முடியாத அளவுக்கு மிகவும் தொலைவிலிருப்பவனென்றும், அவனே மிகவும் பெரியவனென்றும், நுணுக்கமான பொருட்களைக் காட்டினும் நுண்ணிதானவன் என்றும், நேர்மையினையுடையவனென்றும், இப்படிப்பட்ட பற்பல வகைகளிலும் ஆச்சரியத்தை அளிக்கக்கூடிய இம்மாயச்செயல்களை எவரொருவரும் அறிந்துகொள்ள இயலாத வாறு இயங்கிக் கொண்டிருப்பவனான எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத் தலம் என்பது யாதெனின், மூங்கில்களிலிருந்து உதிர்ந்து விழுகின்ற முத்துகளையும், நவரத்தினங்கள் என்று கருதுகின்ற மணிகளையும் கொண்டு வந்து சேர்க்கின்ற, நீர்வளம் மிக்க ''திருக்காவேரி'' என்னும் நதியினாலும், பொன்னாலான அழகிய பெரிய பெரிய மதில்களாலும் சுற்றிலும் சூழ்ந்திருக்கின்ற ''தென்னரங்கம்'' என்று அழைக்கப்படுகின்ற ''திருவரங்கம்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

*அல்லி மாத ரமரும் திருமார்வ னரங்கத்தை,
கல்லின் மன்னு மதிள்மங் கையர்கோன்கலி கன்றிசொல்,
நல்லிசை மாலைகள் நாலி ரண்டுமிரண் டுமுடன்,
வல்லவர் தாமுல காண்டு பின்வானுல காள்வரே. 1387

தாமரை மலரில் தோன்றி வீற்றிருக்கும் பெரிய பிராட்டியார் பொருத்தமாகவே வாழப்பெற்ற திருவாழ் மார்பினனாகிய பெரிய பெருமாள் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தென்னரங்கம் என்று அழைக்கப்படுகின்ற திருவரங்கம் பற்றிக் கருங்கற்களினாலான நிலைபெற்ற மதில் கொண்டு விளங்கும் திருமங்கை நகருக்கு மன்னனாகத் திகழும் 'கலியன்' என்னும்

Koviloor Digital Library

திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த இச்சொல் மாலைகள் பத்தினையும் நன்கு கற்று வல்ல பெரியவர்கள் இம்மண்ணுலகினை ஆட்சிபுரிந்து, பின்பு அவ்விண்ணுலகினையும் ஆட்சிபுரிந்து மகிழ்வுடன் இருப்பர்.

5. வெருவாதாள்

திருவரங்கம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*வெருவதான் வாய்வருவி 'வேங்கடமே!
வேங்கடமே!' என்கின் றாளால்,
மருவாளா லென்குடங்கால் வாணெடுங்கண்
துயில்மறந்தாள், வண்டார் கொண்டல்
உருவாளன் வானவர்த முயிராளன்
ஒலிதிரைநீர்ப் பௌவங் கொண்ட
திருவாளன் என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் சிந்திக் கேனே! 1388

''அச்சம் என்பதனை அறியாதவளாகிய என் மகள் தன்னை அறியாமல் பிதற்றிக் கொண்டிருக்கும் நிலையின்போதுகூட திருவேங்கடமே! திருவேங்கடமே!! என்று பன்முறை கூறிப் பிதற்றிக் கொண்டிருக்கிறாள். என் மடியின்மீது பொருந்துமாறு தலையை வைத்துப் படுக்கவும் மறுக்கிறாள். வாளினும் கூர்மை யான நெடிய அவள் கண்களும் உறக்கத்தை விட்டுவிட்டு மறந்திருக் கின்றன. வண்டினையும், மேகத்தினையும் ஒத்த கறுத்த திருமேனி யினையுடையவனாகி, தேவர்கட்கெல்லாம் உயிருக்குயிராகி நிற்பவனும், அலைவீசுகின்ற நீரினைக் கொண்ட கடலினின்று திருமகள் தலைவனான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் என் மகளிடத்தே செய்த செயல்பாடுகளைப் பற்றி அடியேன் நினைத்துப் பார்க்கவும் இயலாதவளாக இருக்கிறேன்'' என்று தாய் கூறுகிறாள்.

கலையாளா அகலல்குல் கனவளையும்
கையாளா என்செய் கேன்நான்,
'விலையாளா வடியேனை வேண்டுதியோ
வேண்டாயோ?' என்னும், மெய்ய

Koviloor Digital Library

மலையாளன் வானவர்தம் தலையாளன்
மராமரமே ழெய்த வென்றிச்
சிலையாளன், என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் சிந்திக் கேனே! 1389

ஆடையினை உடுத்திக் கொள்ளாத அகன்ற அல்குலையுடைய என் மகள், தன் கைகளில் அழகிய பொன்வளையல்களையும் அணியாதவளாகி, அடியவளாகிய அடியேனை வேலையாளாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கிறாயோ? அன்றி வேண்டிக் கொள்ளாதிருப்பாயோ? என்றெல்லாம் பலபடப் பேசிக் கொண்டிருக்கத் ''திருமெய்யம்'' எனப்படுகின்ற ''திருமலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் தேவர்களுக்கெல்லாம் தலைவனாகத் திகழும் எம் பெருமான் ஸ்ரீதிருவேங்கடத்தான், மராமரங்கள் ஏழினையும் ஓரம்பால் துளைத்த அப்பெருமான் வெற்றிபெற்ற அம்பினையும் வில்லையும் கொண்ட ஸ்ரீஇராமபிரான் என் மகளைப் படுத்திய பாட்டை அடியேனால் சிந்தித்துக்கூடப் பார்க்க இயலவில்லை.

மானாய மென்னோக்கி வாணெடுங்கண்
நீர்மல்கும் வளையும் சோரும்,
தேனாய நறுந்துழா யலங்கலின்
திறம்பேசி யுறங்காள் காண்மின்,
கானாயன் கடிமனையில் தயிருண்டு
நெய்பருக நந்தன் பெற்ற
ஆனாயன், என்மகளைச் செய்தனகள்
அம்மனைமீர்! அறிகி லேனே! 1390

மான் போன்று மென்மையான பார்வையை, உடைய என் மகள் தன் வாளைப் போன்ற நீண்ட கண்களிலிருந்து கண்ணீர் நிறையப் பெருகிடவும், அவள் கைகளில் அணிந்திருக்கும் வளையல்கள் கைகளினின்றும் நழுவி விழுகின்ற நிலையில், தேன் நிறைந்து இருக்கும் மணம் வீசுகின்ற திருத்துழாய் மாலையை அணிந்து கொண்டிருக்கும் திறம் பற்றிப் பேசிப் பேசியே உறங்கவுமில்லை. தாய்மார்களே! என் மகளின் இந்நிலையை நீங்களே வந்து காணுங்கள். காட்டில் திரிந்து கொண்டிருக்கின்றவனும், காவல் காத்துக் கொண்டிருக்கும் வீடுகளிலுள்ள தயிர், நெய் ஆகியவற்றைப் பருகி அனுபவிக்கின்றவனாகிய நந்தகோபன் பெற்ற எம்பெருமான்

Koviloor Digital Library

ஸ்ரீகண்ணபிரான் என் மகளுக்கு உண்டாக்கிய செயல்பாடுகள் பற்றி அடியேன் ஏதும் அறிய இயலாத நிலையில் இருக்கின்றேனே என்று தாய் கூறிப் புலம்புகிறாள்.

தாய்வாயில் சொற்கேளாள் தன்னாயத்
தோடணையாள் தடமென் கொங்கை-
யே,ஆரச் சாந்தணியாள் 'எம்பெருமான்
திருவரங்க மெங்கே?' என்னும்,
பேய்மாய முலையுண்டிவ் வுலகுண்ட
பெருவயிற்றின் பேசில் நங்காய்,
மாமாய னென்மகளைச் செய்தனகள்
மங்கைமீர்! மதிக்கி லேனே! 1391

மங்கையர்களே! என் மகள் தாயாகிய என் பேச்சைக் கேட்ப தில்லை. தன் தோழியர்களுடன் சேர்ந்து பழகுவதுமில்லை. அவள் தன்னுடைய பருத்த முலைகளின்மீது சந்தனத்தைப் பூசிக் கொள்வதில்லை. ''எம்பெருமான் திருவரங்கம் எங்கே? எங்கே?'' என்று கேட்டுப் புலம்பிக் கொண்டிருக்கிறாள். 'பூதனை' என்னும் பேயினை மாண்டு போகுமாறு நஞ்சு கலந்த முலைப்பாலை உண்டுவிட்டு, இந்தப் பூமியை உண்ட பெருவயிற்றினை யுடையவன். இப்படிப்பட்ட மாயச்செயல்கள் பலவும் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என் மகளுக்குச் செய்திருக்கின்ற செயல்பாடுகளைப் பற்றிப் பேச ஆரம்பித்தால், ''நங்கையே!'' அஃது வாய்விட்டு வெளியில் சொல்லத்தக்கதாக அமைந்திருக்கவில்லை'' என்று தாய் புலம்புகிறாள்.

பூண்முலைமேல் சாந்தணியாள் பொருகயல்கண்
மையெழுதாள் பூவை பேணாள்,
ஏணறியா ளெத்தனையும் 'எம்பெருமான்
திருவரங்க மெங்கே?' என்னும்,
நாண்மலராள் நாயகனாய் நாமறிய
ஆய்ப்பாடி வளர்ந்த நம்பி,
ஆண்மகனா யென்மகளைச் செய்தனகள்
அம்மனைமீர்! அறிகி லேனே. 1392

அழகு பொருந்திய தாய்மார்களே! என் மகள் ஆபரணங்களை அணிந்திருக்கும் தன் முலைகளின்மீது சந்தனம் பூசிக் கொள்வ தில்லை. கயல்மீன்களை ஒத்த தன் கண்களில் மைதீட்டிக்

Koviloor Digital Library

கொள்வதுமில்லை. தான் வளர்த்துக் கொண்டு இருக்கின்ற கிளியைக் கூடப் பாதுகாப்பதில்லை. எதனைப் பற்றியும சிறிதும் எண்ணிப் பார்ப்பது கிடையாது. ஆனால், ''எம்பெருமான் ''திருவரங்கம்'' எங்கே? எங்கே'' என்று கேட்டுக் கொண்டே புலம்புகிறாள். தாமரை மலரில் வாழ்கின்ற திருமகளின் நாதனான நம்பி, நாமனைவரும் அறியும்படிக்கு ஆயர்பாடியில் வளர்ந்து வந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என்கின்ற ஆண்பிள்ளையானவன் என் மகளுக்குச் செய்த செயல்பாடுகள் பற்றி இன்ன தன்மையை உடையதென்று எடுத்துரைப்பதற்கு அறியமாட்டாதவளாக இருக்கின்றேனே என்று தாய் கூறுகிறாள்.

'தாதாடு வனமாலை தாரானோ?'
என்றென்றே தளர்ந்தாள் காண்மின்,
யாதானு மொன்றுரைக்கில் 'எம்பெருமான்
திருவரங்கம்' என்னும், பூமேல்
மாதாளன் குடமாடி மதுசூதன்
மன்னர்க்காய் முன்னம் சென்ற
தூதாளன், என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் சொல்லு கேனே! 1393

''மகரந்தப் பொடிகள் நிரம்பிய இதழ்களையுடைய வன மாலையை எம்பெருமான் எனக்குத் தந்தருள்வானோ?'' என்று பன்முறையும் கூறிக் கூறியே தளர்ந்துள்ள நிலையைப் பாருங்கள். அப்படிப்பட்ட என் மகள் தன் வாயைத் திறந்து எப்பொழுதேனும் ஏதாவது பேசினால், அப்பொழுதெல்லாம், ''எம்பெருமான் ''திருவரங்கம்'' எங்கே? எங்கே?'' என்று மட்டுமே பேசிக் கொண்டு இருக்கிறாள். தாமரை மலரின்மீது வீற்றிருக்கின்ற திருமகளின் நாதன், குடக்கூத்தாடிய மதுசூதனன், முன்பு பாண்டவர்களுக்காகத் தூது சென்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என் மகளைப் படாதபாடுபடுத்தி இருக்கின்ற செயல்பாடுகளைப் பற்றி அடியேன் எவ்வாறு எடுத்துரைப்பேன்'' என்று தாய் கூறிப் புலம்புகிறாள்.

வாராளு மிளங்கொங்கை வண்ணம்வே
றாயினவா றெண்ணாள், எண்ணில்
பேராளன் பேரல்லால் பேசாள்இப்
பெண்பெற்றே னென்செய் கேன்நான்,

Koviloor Digital Library

தாராளன் தண்குடந்தை நகராளன்
ஐவர்க்கா யமரி லுய்த்த
தேராளன், என்மகளைச் செய்தனகள்
எங்ஙனம்நான் செப்பு கேனே! 1394

என் மகள் 'கச்சு' அணிந்த தன் இளமுலைகளின் நிறம் மாறுபட்டிருப்பதைக் கூட எண்ணிப் பார்க்கவில்லை. அவள் தன் உள்ளத்தில் எதையேனும் ஒன்று பற்றி எண்ணுகிறாள் என்றால், அஃது, எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருநாமங்கள் தவிர வேறெதனைப் பற்றியும் எண்ணுவதோ, பேசுவதோ கிடையாது. இப்படிப்பட்ட பெண்ணைப் பெற்ற அடியேன் என்ன செய்வேன்? திருமாலையினை அணிந்து கொண்டிருக்கின்ற குளிர்ச்சியுடன் கூடிய ''திருக்குடந்தை'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருப்பவனும், முன்பு பாண்டவர்கள் ஐந்து பேரின் வெற்றிக் காகவே பாரதப் போரில் முன்னே நின்று தேரினைச் செலுத்திய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என் மகளைப்படுத்தும் செயல் பாடுகளைப் பற்றி அடியேன் எங்ஙனம் எடுத்துரைப்பேன் என்று தாய் கூறிப் புலம்புகிறாள்.

உறவாது மிலளென்றென் றொழியாது
பலரேசும் அலரா யிற்றால்,
மறவாதே யெப்பொழுதும் 'மாயவனே!
மாதவனே!' என்கின் றாளால்,
பிறவாத பேராளன் பெண்ணாளன்
மண்ணாளன் விண்ணோர் தங்கள்
அறவாளன், என்மகளைச் செய்தனகள்
அம்மனைமீர்! அறிகி லேனே! 1395

''என் மகளின் நிலையைக் காண்போர், இவளுக்கு ஆறுதல் கூறுவதற்குக் கூடத் தாய், தந்தை, உற்ற சுற்றத்தினர் என்று எவரும் இல்லையோ'' என்று பலரும் பலவாறாகப் பேசிப் பேசி எப்பொழுதும் குறையினைக் கூறிக் கொண்டிருக்கும்படியானதோர் பெரும் பழியை ஏற்படுத்திவிட்டாள். ஆயினும் என் மகள் எப்பொழுதும் மறவாமல் மாயவனே! என்றும் மாதவனே! என்றும் எப்பொழுதும் அவனைச் சிறிதும் மறவாமல் கூறிக் கொண்டேயிருக்கிறாள். தாய்மார்களே! 'பிறப்பு' என்ற ஒன்று இல்லாமலேயே திருநாமங்கள்

Koviloor Digital Library

பல பெற்றவனும் பெண்களாகப் பிறந்தாரைத் தனக்காக ஆக்கிக் கொள்பவனும், இம்மண்ணுலகத்தவர்களை ஆள்பவனும் அவ்விண்ணுலகத்தவர்களான தேவர்களின் அறச்செயல்களை நடத்துபவனான எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என் மகளைப் படுத்தும் படாத பாட்டினைப் பற்றி எடுத்துரைக்கும் ஆற்றல் அற்றவளாக அடியேன் இருக்கின்றேனே என்று தாய் கூறிப் புலம்புகிறாள்.

பந்தோடு கழல்மருவாள் பைங்கிளியும்
பாலூட்டாள் பாவை பேணாள்,
'வந்தானோ திருவரங்கன் வாரானோ?'
என்றென்றே வளையும் சோரும்,
சந்தோகன் பௌழியன்ஐந் தழலோம்பு
தைத்திரியன் சாம வேதி,
அந்தோ!வந் தென்மகளைச் செய்தனகள்
அம்மனைமீர்! அறிகி லேனே! 1396

அழகிய தாய்மார்களே! என் மகள் பந்தாடுவதையும், கழற்காய் ஆடுவதையும் அறவே மறந்துவிட்டாள். அவள் வளர்த்துக் கொண்டிருக்கும் பச்சைக் கிளிக்குப் பால் ஊட்டுவதையும் மறந்துவிட்டாள். விளையாடும் பொருள்களான மரப்பொம்மைகளையும் மறந்துவிட்டாள். எம்பெருமான் திருவரங்கன் இங்கே வந்துவிட்டானோ? என்றும், அவன் இங்கே வரமாட்டானோ என்றும் பலவாறாகப் பிதற்றிக் கொண்டே, அவன் வாராமை கண்டு, அவன் பிரிவு காரணமாகத்தான் அணிந்திருந்த வளையல்களும் கழன்று கீழே விழுகின்றன. உபநிடதங்களான சாந்தோக்கியம், தைத் திரியம் ஆகியவற்றினையும், இருக்கு வேதம், சாமவேதம், யஜுர் வேதம், அதர்வண வேதம் ஆகிய நான்கு வகை வேதங்களையும் தானாகவே கொண்டு விளங்குகின்ற பெருமைகட்குரிய எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணன் என் மகளைப் படுத்தும் பாடுகளைப் பற்றி அடியேன் எடுத்துரைப்பதற்குக்கூட ஏதும் அறியாதவளாக இருக்கின்றேன்.

சேலுகளும் வயல்புடைசூழ் திருவரங்கத்
தம்மானைச் சிந்தை செய்த,
நீலமலர்க் கண்மடவாள் நிறையழிவைத்
தாய்மொழிந்த அதனை, நேரார்

Koviloor Digital Library

காலவேல் பரகாலன் கலிகன்றி
ஒலிமாலை கற்று வல்லார்,
மாலைசேர் வெண்குடைக்கீழ் மன்னவராய்ப்
பொன்னுலகில் வாழ்வர் தாமே. 1397

(வெருவா கலை மான் தாய் பூண்டு தாதர்டு வாராளும் உறவு பந்தோடு சேல்-கைம்மானம்.)

சேல்கெண்டை மீன்கள் துள்ளி விளையாடுகின்ற நீர்வளம் மிக்க வயல்களால் சூழ்ந்திருக்கின்ற திருவரங்கத் திருத்தலத்தில் திருக்கண் வளர்ந்தருளும் திருவரங்களைப் பற்றித் தம் மனத்தே சிந்தித்த கருநெய்தல் பூப்போன்ற கண்களையுடைய என் மகள் தன் நிறை அழிந்தமை பற்றித் தாய்ப் பாசுரமாக அமைந்ததனைப் பகைவர் களுக்கு இயமன் போன்ற நிலையிலிருப்பவரும், வேற்படையை உடையவருமான ''பரகாலன்'' என்ற திருநாமம் உடையவரான 'கலியன்' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இச்சொல் மாலை பத்தினையும் கற்றுவல்ல பெருமக்கள் மாலைகள் சேர்ந்திருக்கின்ற வெண்கொற்றக் குடையின் நிழலில் மன்னராய் இருந்து கொண்டு திருப்பரமபதம் சென்று என்றும் நிலைத்து வாழும் பேற்றினைப் பெறுவர்.

6. கைம்மானம்

திருவரங்கம்

கலி விருத்தம்

*கைம்மான மழகளிற்றைக் கடற்கிடந்த கருமணியை,
மைம்மான மரகதத்தை மறையுரைத்த திருமாலை,
எம்மானை எனக்கென்று மினியானைப் பனிகாத்த
அம்மானை, யான்கண்ட தணிநீர்த்தென் னரங்கத்தே. 1398

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் நீண்ட பெருந்துதிக் கைகளையுடைய இளைய யானையைப் போன்றும், கடலிலே வளர்ந்து வருகின்ற நீலமணி போன்ற நிறத்தை ஒத்த திருமேனி கொண்டும், ஒப்பற்ற மரகதத்தை ஒந்த பச்சை நிறத்திருமேனி யினையும், மறைகள் யாவும் எடுத்துரைத்து ஏத்தும் திருமாலை, எமக்கு இறைவனாகவும் இருந்து கொண்டு, அடியேனுக்கு எக்காலத்திலும் இனிமையாக இருப்பவனும், முன்பு ஒரு சமயம்

Koviloor Digital Library

ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்தபோது, பசுக் கூட்டங்களைக் ''கோவர்த்தனம்'' என்னும் மலையைக் குடையாகப் பிடித்துப் பாதுகாத்து அருளியவனுமாகி விளங்குகின்றான் இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைக் குளிர்ந்த நீரையுடைய காவிரி நதியினிடைத் ''தென்னரங்கம்'' என்னும் திருவரங்கத்திலே அடியேன் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

*பேரானைக் குறுங்குடியெம் பெருமானை, திருத்தண்கால்
ஊரானைக் கரம்பனூர் உத்தமனை, முத்திலங்கு
காரார்திண் கடலேழு மலையேழிவ் வுலகேழுண்டும்,
ஆராதென் றிருந்தானைக் கண்டதுதென் னரங்கத்தே. 1399

திருப்பேர், திருக்குறுங்குடி, திருத்தண்கால், திருக்கரம்பனூர் ஆகிய திருத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை ஒளிமிக்க முத்துகள் நிறைந்துள்ள, கருநிறம் கொண்ட ஏழுகடல்களையும், ஏழுமலைகளையும், ஏழு உலகினையும் முன்பு உலகப் பிரளயம் உண்டான காலத்தில் உண்டு தன் வயிற்றினுள்ளே அடக்கிக் கொண்டு பாதுகாத்தருளிய எம்பெருமான் திருப்தி பெற்றிராத நிலையிலிருக்கும், எல்லாம் வல்ல உத்தமனாய்த் திகழ்ந்திடும் எம்பெருமானைத் ''தென்னரங்கம்'' என்று அழைக்கப்படும் திருவரங்கத்தில் அடியேன் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

ஏனாகி யுலகிடந்தன் றிருநிலனும் பெருவிசும்பும்,
தானாய பெருமானைத் தன்னடியார் மனத்தென்றும்
தேனாகி யமுதாகித் திகழ்ந்தானை, மகிழ்ந்தொருகால்
ஆனாயன் ஆனானைக் கண்டதுதென் னரங்கத்தே. 1400

'வராக' அவதாரம் மேற்கொண்டு இப்பூமியை எடுத்துப் பாதுகாத்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அகன்ற, பரந்துபட்ட இப்பெரு நிலத்தினையும், ஆகாயத்தினையும் தன்னதாக்கிக் கொண்டு, தன்னுடைய அடியவர்களின் மனத்தில் என்றென்றும் இனிய தேனாகியும், அமுதமாகவும் இருந்து கொண்டு இனிமையானவனாக இருக்கும் எம்பெருமான் முன்பு ஒரு கால் ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் மகிழ்ச்சியுடன் பசுக்கூட்டங்களை மேய்த்து, இடையனாக விளங்கும் எம்பெருமானை அடியேன் ''தென்னரங்கம்'' என்னும் திருவரங்கத் திருத்தலத்தில் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

Koviloor Digital Library

வளர்ந்தவனைத் தடங்கடலுள் வலியுருவில் திரிசகடம்,
தளர்ந்துதிர வுதைத்தவனைத் தரியாதன் றிரணியனைப்
பிளந்தவனை, பெருநிலமீ ரடிநீட்டிப் பண்டொருநாள்
அளந்தவனை, யான்கண்ட தணிநீர்த்தென் னரங்கத்தே. 1401

பரந்து கிடக்கும் திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் தன்னை அழிக்கும் பொருட்டு, கம்சன் என்னும் அசுரனால் ஏவப்பட்ட வலிய உருவுடன் வந்த, வண்டிச் சக்கர வடிவில் வந்த ''சகடாசுரன்'' என்னும் அசுரனான சகடமானது உருக்குலைந்து சின்னாபின்னம் அடையுமாறு தன் திருவடிகளால் உதைத்து அழித்தான். முன்பு ஒரு சமயம் தன்னுடைய அடியவனான பிரகலாதனுக்குண்டான துன்பங்களினின்றும் பாதுகாக்கும் பொருட்டு அவன் தந்தையாகிய ''இரணியன்'' என்னும் அசுரனைப் பிளந்து அவனுயிரைப் போக்கி அருளியவனும், முன்பு ஒரு காலத்தில் மகாபலிச் சக்கரவர்த்தியின் வேள்வியின் முன்பு சென்று இரந்து பெற்ற இப்பூமியைத் தன் திருவடிகளைக் கொண்டு ''திரிவிக்ரம'' அவதாரம் பூண்டு, இரண்டு அடிகளாக நீட்டி அளந்த எம்பெருமான் ஸ்ரீ ''நரசிம்மமூர்த்தி'' ''தென்னரங்கம்'' என்னும் திருவரங்கத் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவரங்கனை அடியேன் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

நீரழலாய் நெடுநிலனாய் நின்றானை, அன்றரக்கன்
ஊரழலா லுண்டானைக் கண்டார்பின் காணாமே,
பேரழலாய்ப் பெருவிசும்பாய்ப் பின்மறையோர் மந்திரத்தின்,
ஆரழலா லுண்டானைக் கண்டதுதென் னரங்கத்தே. 1402

நீர், நெருப்பு, பரந்து நீண்டு கிடக்கின்ற பூமி ஆகிய இவற்றுள்ளே உயிராய் இருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் முன்பு ஸ்ரீஇராமாவதாரம் மேற்கொண்டிருந்தபோது, ''இராவணன்'' என்னும் அரக்கர்குலத்தரசனின் இலங்கை மாநகரைத் தீர்க்கிரையாக்கி அழிந்தான். இஃது இலங்கை மாநகரை முன்பு கண்டவர்கள் பின்பு காண இயலாதவாறு அழிந்து போயிற்று. வடவைக் கனலாகவும், அகண்ட பெரிய ஆகாயமாகவும், திருப்பரமபதத்திற்குத் தலைவனாகவும், அந்தணர்கள் இயற்றும் மந்திரத்தின் பலனாக அமைந்த வேள்வித் தீயின்போது அளிக்கின்ற

Koviloor Digital Library

அவியுணவினைப் பெற்றுக் கொள்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனைத் ''தென்னரங்கம்'' என்னும் திருவரங்கத் திருக் கோயிலில் எழுந்தருளியுள்ள திருவரங்கனை அடியேன் கண்டு சேவித்தேன்.

தஞ்சினத்தைத் தவிர்த்தடைந்தார் தவநெறியை, தரியாது
கஞ்சனைக்கொன் றன்றுலக முண்டுமிழ்ந்த கற்பகத்தை,
வெஞ்சினத்த கொடுந்தொழிலோன் விசையுருவை யசைவித்த,
அஞ்சிறைப்புட் பாகனையான் கண்டதுதென் னரங்கத்தே. 1403

தனக்குண்டான கோபத்தைத் தவிர்த்து, தன்னை வந்து சரணடைந்தவர்களுக்குத் தானே அதற்குரிய தவம் மிக்க வழி காட்டியாக இருந்து கொண்டு, 'கம்சன்' என்னும் அசுரனால் உண்டான கொடுமைகளைக் கண்டு பொறுக்க இயலாமல் அவனைக் கொன்றழித்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் முன்பு உலகப்பிரளயம் உண்டான காலத்தில் எல்லா உலகங்களையும் உண்டு, பின்பு வெளியில் உமிழ்ந்து பாதுகாத்தருளிய கற்பகமரம் போன்று உதவி செய்த வள்ளலை, கடுமையான கோபத்துடன் 'அழித்தல்' தொழிலைச் செய்து கொண்டிருக்கும் சிவபெருமானை வாணாசுரப் போரின்போது அசைவித்து அருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அழகிய பறவையாகிய கருடாழ்வார்மீது ஏறி வந்தருள்பாலித்துக் கொண்டு ''தென்னரங்கம்'' என்னும் திரு வரங்கத் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் திருவரங்கப் பெருமானை அடியேன் கண்டு சேவித்தேன்.

சிந்தனையைத் தவநெறியைத் திருமாலை, பிரியாது
வந்தெனது மனத்திருந்த வடமலையை, வரிவண்டார்
கொந்தணைந்த பொழில்கோவ லுலகளப்பா னடிநிமிர்த்த
அந்தணனை, யான்கண்ட தணிநீர்த்தென் னரங்கத்தே. 1404

உள்ளத்தினுள்ளே உண்டாகும் சிந்தனையாகத் திகழ்பவனும், அதற்குரிய சிறந்த வழிகாட்டியாகத் திகழ்பவனும் ஆகிய எம்பெருமான் திருமாலை, என் மனதினில் வந்திருந்து சற்றும் பிரிதலில்லாத வகையில் அடியேனின் மனத்தில் நிலை பெற்றிருக்கின்ற வடக்கே இருக்கின்ற ''திருவேங்கடமலை'' என்னும் மலையில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவேங்கடத்தானை வரிகளையுடைய வண்டுகள் அமர்ந்திருக்கும்

Koviloor Digital Library

மலர்கள் நிறைந்த சோலைகள் நிறைந்துள்ள ''திருக்கோவலூர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் உலகளந்த திருவடி களுடன் காட்சியளித்துக் கொண்டு இருக்கும் எம்பெருமானைத் ''தென்னரங்கம்'' என்னும் திருவரங்கத் திருத்தலத்தில் திருப்பள்ளி கொண்டருளும் திருவரங்கத்தானை அடியேன் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

துவரித்த வுடையார்க்கும் தூய்மையில்லாச் சமணர்க்கும்,
அவர்கட்கங் கருளில்லா அருளானை, தன்னடைந்த
எமர்கட்கு மடியேற்கு மெம்மாற்கு மெம்மனைக்கும்,
அமரர்க்கும் பிரானாரைக் கண்டதுதென் னரங்கத்தே. 1405

துவராடையை உடுத்திக் கொண்டிருக்கும் பௌத்த மதத்த வர்களுக்கும், ''தூய்மை'' என்பது இல்லாத சமண மதத்தவர் களுக்கும் என்கின்ற இப்படிப்பட்ட வேதங்களுக்கும் புறம்பாகச் செயல்படுபவர்களுக்கும் அருள்புரிதல் செய்யாதவனாகத் திகழும் அருளாளப் பெருமான் தன்னை நாடி வந்து சரணடைந்தவர்கட்கும், அடியேனுக்கும், அடியேனுடன் தொடர்பு கொண்டவர்களுக்கும், எம் தந்தை தாயர்க்கும், விண்ணுலகத்தில் வசிக்கும் தேவர்களுக்கும் என்கின்ற இத்துணையோர்க்கெல்லாம் அருள்புரிந்து வரும் அருளாளப் பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் ''தென்னரங்கம்'' என்னும் திருவரங்கத் திருத்தலத்தில் திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளும் திருவரங்கநாதப் பெருமானை அடியேன் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

பொய்வண்ணம் மனத்தகற்றிப் புலனைந்தும் செலவைத்து,
மெய்வண்ணம் நினைந்தவர்க்கு மெய்ந்நின்ற வித்தகனை,
மைவண்ணம் கருமுகில்போல் திகழ்வண்ண மரதகத்தின்,
அவ்வண்ண வண்ணனையான் கண்டதுதென் னரங்கத்தே. 1406

பொய்யாகத் திகழும் நிலையற்ற உலகப் பொருள்களின்மீது கொண்டிருக்கும் பற்றுதல்களையெல்லாம் மனதினின்றும் அகற்றிவிட்டு, ஐம்புலன்களினாலுண்டாகும் வேண்டாத செயல்களையெல்லாம் அறவே இல்லாதவாறு செய்துவிட்டு, உண்மைக் கருத்துகளையே மனதில் எண்ணிக் கொண்டிருக்கின்ற தம் அடியவர்கட்குத் தன்னை உள்ளது உள்ளபடியே காட்சி தந்தருள் கின்ற அனைத்துமறிந்துள்ள வித்தகனை, மைந்நிறத்தினையும்,

Koviloor Digital Library

கருமையாகத் திரண்டு எழுந்து வருகின்ற அம்மேக நிறத்தினையும், மரகதம் போன்ற பச்சை நிறத்தினையும் கொண்டு விளங்குகின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் ''தென்னரங்கம்'' என்னும் திருவரங்கத் திருப்பதியில் திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளும் திருவரங்கநாதப் பெருமானை அடியேன் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

*ஆமருவி நிரைமேய்த்த அணியரங்கத் தம்மானை,
காமருசீர்க் கலிகன்றி யொலிசெய்த மலிபுகழ்சேர்,
நாமருவு தமிழ்மாலை நாலிரண்டோ டிரண்டினையும்,
தாமருவி வல்லார்மேல் சாராதீ வினைதாமே. 1407

(கைம்மானம் பேரானை ஏனாகி வளர்ந்த நீர் தம் சிந்தனை துவர் பொய் ஆமருவி-பண்டை.)

பசுக்கூட்டங்களை நாடிச் சென்று அவைகளை மேய்த்த ''தென்னரங்கம்'' என்னும் திருவரங்கத் திருப்பதியில் திருவனந் தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளும் திருவரங்கநாதனைப் பற்றி வைணவத் திருவையுடைய ''கலிகன்றி'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த பெரும்புகழ் சேர்ந்திருக்கின்ற, நாவினால் நவில்வதற்குரியதான தமிழ்ப்பாமாலைகள் பத்தினையும், தாமாகவே விரும்பிக் கற்றுவல்ல பெருமக்களிடத்தே தீவினைகள் நாடி வராதொழியும்.

7. பண்டை
திருவரங்கம்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*பண்டைநான் மறையும் வேள்வியும் கேள்விப்
பதங்களும் பதங்களின் பொருளும்,
பிண்டமாய் விரித்த பிறங்கொளி யனலும்
பெருகிய புனலொடு நிலனும்,
கொண்டல்மா ருதமும் குரைகட லேழும்
ஏழுமா மலைகளும் விசும்பும்,
அண்டமும் தானாய் நின்றவெம் பெருமான்
அரங்கமா நகரமர்ந் தானே. 1408

Koviloor Digital Library

மிகப் பழைமை வாய்ந்த நான்கு வகை வேதங்களும், அவ்வேதங்களைக் கொண்டு இயற்றுகின்ற வேள்விகளும், கேள்விகட்கான சொற்களும், அச்சொற்களின் பொருள்களும், ஒலிகளின் பொருளான உயிரினங்களும், ''பிண்டம்'' என்னும் வடிவமாகி இருந்து பின்பு விரிவுபெற்றவைகளான மிக்க ஒளியை யுடைய நெருப்பும், நீரும், நிலமும், கிளர்ந்தெழுகின்ற மேகமும், காற்றும், ஒலித்துக் கொண்டிருக்கின்ற ஏழுகடல்களும் ஏழு பெரிய மலைகளும், ஆகாயமும் ஆகிய இவற்றுடன் கூடிய அண்டங்களும் ஆகிய அனைத்திலும் தானேயாய் இருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருவரங்கநாதப் பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கின்றான்.

இந்திரன் பிரம னீசனென் றிவர்கள்
எண்ணில்பல் குணங்களே யியற்ற,
தந்தையும் தாயும் மக்களும் மிக்க
சுற்றமும் சுற்றிநின் றகலாப்
பந்தமும், பந்த மறுப்பதோர் மருந்தும்
பான்மையும் பல்லுயிர்க் கெல்லாம்,
அந்தமும் வாழ்வு மாயவெம் பெருமான்
அரங்கமா நகரமர்ந் தானே. 1409

இந்திரன், பிரமன், சிவபெருமான் என்று கூறப்படுகின்ற இவர்கள் அனைவரும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் எண்ணற்ற திருக்குணங்கள் பலவற்றினையும் எடுத்தியம்பித் துதித்துக் கொண்டிருப்பார்கள். எல்லா உயிர்களுக்கும் தந்தை யாகவும், தாயாகவும், தம் மக்களாகவும், மிகுந்துள்ள சுற்றத்தினர் களாகவும், நம்மைச் சுற்றி நின்று பிரிந்து செல்வதற்கான மனமில்லா தவர்களாகி நிற்கும் உறவினர்களும், அவர்களாலுண்டான பாசமும், அப்பாசம் என்கின்ற உறவுகளை மறுத்து விடுகின்றதோர் மருந்துமாகி இருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே அனைத்துயிர்கட்கும் இறுதியாகவும், அவ்விறுதியை அடையக் கூடிய தகுதி பெற்றவனாகவும், அவ்வுயிர்களின் வாழ்வாகவும் கொண்டு இயங்குகின்ற எம்பெருமான், திருவரங்கநாதப் பெருமான் ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான்.

Koviloor Digital Library

மன்னுமா நிலனும் மலைகளும் கடலும்
வானமும் தானவ ருலகும்,
துன்னுமா யிருளாய்த் துலங்கொளி சுருங்கித்
தொல்லைநான் மறைகளும் மறைய,
பின்னும்வா னவர்க்கும் முனிவர்க்கும் நல்கிப்
பிறங்கிருள் நிறங்கெட, ஒருநாள்
அன்னமாய் அன்றங் கருமறை பயந்தான்
அரங்கமா நகரமர்ந் தானே. 1410

நிலைபெற்றிருக்கின்ற நிலம், மலைகள், கடல்கள், ஆகாயம், விண்ணுலகம் ஆகிய இவை யாவும் இருள் சூழ்ந்து ஒளி அடங்கிப் போயிருக்கின்ற நிலையில் மிகப் பழையான வேதங்களெல்லாம் மறைந்துபோக, அவ்வேதங்களை மீண்டும் தேவர்களுக்கும், முனிவர்களுக்கும் அருள்கூர்ந்து நல்கிட, அவ்விருளைப் போக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருவரங்கநாதப் பெருமான் என்னும் திருநாமத்துடன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான்.

மாயிருங் குன்ற மொன்றுமத் தாக
மாசுண மதனொடும் அளவி,
பாயிரும் பௌவம் பகடுவிண் டலறப்
படுதிரை விசும்பிடைப் படர,
சேயிரு விசும்பும் திங்களும் சுடரும்
தேவரும் தாமுடன் திசைப்ப,
ஆயிரந் தோளா லலைகடல் கடைந்தான்
அரங்கமா நகரமர்ந் தானே. 1411

''மந்தர மலை'' என்னும் பெரிய மலையை மத்தாக நட்டு, ''வாசுகி'' என்னும் பாம்பைக் கயிறாகச் சுற்றி எம்பெருமான் திருமால் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில், உண்டான அலைகள் யானை பிளிறுவதுபோல ஒலியினை எழுப்ப அஃது விண்ணைத் தொட்டன. அப்போது விண்ணுலகும், சந்திரன், சூரியன், தேவர்கள் ஆகிய அனைவரும் ஒரே நேரத்தில் வியந்து கொண்டு இருக்க எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் நான்கு திருத்தோள்களும் ஆயிரமாயிரம் திருத்தோள்களாகத் தோன்றிட அலைவீசுகின்ற கடலினைக் கடைந்தெடுத்தான். இப்படிப்பட்ட எம்பெருமான் ''திருவரங்கம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருவரங்கனாகக் காட்சியளிக்கின்றான்.

Koviloor Digital Library

எங்ஙனே யுய்வர் தானவர் நினைந்தால்?
இரணியன் இலங்குபூ ணகலம்,
பொங்குவெங் குருதி பொன்மலை பிளந்து
பொழிதரு மருவியொத் திழிய,
வெங்கண்வா ளெயிற்றோர் வெள்ளிமா விலங்கல்
விண்ணுறக் கனல்விழித் தெழுந்தது,
அங்ஙனே யொக்க அரியுரு வானான்
அரங்கமா நகரமர்ந் தானே. 1412

''இரணியன்'' என்னும் அசுரனை வதைத்த அந்நிலையை அசுரர்கள் எண்ணிப் பார்ப்பார்களேயானால் அவர்கள் உயிர் வாழ்வது என்பது எங்ஙனம்? அணிகலன்கள் பல அணிந்து கொண்டிருக்கின்ற அவ்விரணியனின் மார்பிலிருந்து பொங்கி வழிந்தோடுகின்ற இரத்த வெள்ளமானது, பொன்மயமான மலையினின்றும் அருவி கொட்டுவதுபோலப் பெருக்கெடுத்து ஓடிற்று. வெள்ளிமலை ஒன்று விண்ணில் உயர்ந்து ஓங்கியதுபோல எம்பெருமான் ''நரசிம்ம''மூர்த்தியானவர், சிவந்த கண்களுடன், வாள்போன்ற கூரிய பற்களுடன் தீயைக் கக்கியபடியே தோன்றினார். இப்படிப்பட்ட எம்பெருமான் ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில், திருவரங்கநாதப் பெருமானாகத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

ஆயிரம் குன்றம் சென்றுதொக் கனைய
அடல்புரை யெழில்திகழ் திரள்தோள்,
ஆயிரந் துணிய அடல்மழுப் பற்றி
மற்றவன் அகல்விசும் பணைய,
ஆயிரம் பெயரா லமரர்சென் றிறைஞ்ச
அறிதுயி லலைகடல் நடுவே,
ஆயிரம் சுடர்வா யரவணைத் துயின்றான்
அரங்கமா நகரமர்ந் தானே. 1413

ஆயிரக்கணக்கான மலைகள் ஒன்றுகூடி வந்தன போன்று கார்த்த வீரியார்ச்சுனன் போர் மேற்கொண்டு வந்தான். அழகுடன் ஒளிவீசிக் கொண்டிருக்கின்ற அவனுடைய ஆயிரம் தோள்களையும் ''மழு'' என்னும் ஆயுதத்தைக் கொண்டு அறுத்து அவனை வீரசுவர்க்கம் அடையச் செய்தார் பரசுராமர். இந்நிலையைக் கண்ட தேவர்கள் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை ஆயிரம் திருநாமங்களால் போற்றித் துதித்தனர். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீமந்

Koviloor Digital Library

நாராயணனே ஆயிரம் வாய்களைக் கொண்ட படங்களுடன் கூடிய திருவனந்தாழ்வான்மீது பள்ளி கொண்ட எம்பெருமானே பரசுராமராக ஆவேசம் கொண்டு எழுந்தனன். இப்பெருமான் ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருவரங்கநாதப் பெருமானாகத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளான்.

சுரிகுழல் கனிவாய்த் திருவினைப் பிரித்த
கொடுமையிற் கடுவிசை யரக்கன்,
எரிவிழித் திலங்கு மணிமுடி பொடிசெய்
திலங்கைபாழ் படுப்பதற் கெண்ணி,
வரிசிலை வளைய அடுசரம் துரந்து
மறிகடல் நெறிபட, மலையால்
அரிகுலம் பணிகொண் டலைகட லடைத்தான்
அரங்கமா நகரமர்ந் தானே. 1414

சுருண்ட கரிய கூந்தலையும், கோவைப்பழம் போன்ற சிவந்த உதடுகளையும் உடைய சீதாபிராட்டியைத் தன்னிடமிருந்து பிரித்த, பெருங்கொடுமை புரிந்த ''இராவணன்'' என்னும் இலங்கை மாநகர்க்கு மன்னனின் தீயினும் ஒளியையுடைய மணிமுடியினையும், அம்மன்னனையும், அவ்விலங்கை மாநகரத்தினையும் ஸ்ரீஇராமபிரான் தன் வில்லால் வளைத்து அம்புகளைத் தொடுத்து அழித்தான். இதன் பொருட்டு ஸ்ரீஇராமபிரான் அலைவீசுகின்ற கடலில் வழியை உண்டாக்குவதற்காகக் குரங்குகளின் உதவி கொண்டு, மலைகளைக் கொண்டு வந்து சேர்த்து, அலைகளையுடைய அக்கடலின்மீது அணையைக் கட்டினான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் 'திருவரங்கம்' என்னும் திருப்பதியில் ''திருவரங்கநாதப் பெருமானா''கத் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ளார்.

ஊழியாய் ஓமத் துச்சியாய் ஒருகால்
உடையதே ரொருவனாய் உலகில்,
சூழிமால் யானைத் துயர்கெடுத் திலங்கை
மலங்கவன் றடுசரந் துரந்து,
பாழியால் மிக்க பார்த்தனுக் கருளிப்
பகலவ னொளிகெட, பகலே
ஆழியா லன்றங் காழியை மறைத்தான்
அரங்கமா நகரமர்ந் தானே. 1415

Koviloor Digital Library

ஊழிக்காலம் போன்ற யாவற்றுக்கும் தலைவனாய் இருந்து கொண்டு, ஓமப் புகையின் வேள்வியின்போது வழிபடத்தக்கவன். ஒரு சமயம் ஒற்றைச் சக்கரத்தேர்மீது ஏறிவரும் சூரியனுக்கு உள்ளே உறைந்து கொண்டிருப்பவனாகவும், மதநீரினை உடைய கஜேந்திர ஆழ்வானுக்கு உண்டானதுன்பங்களைப் போக்கியருளி, இலங்கை மாநகரம் அழிந்து போகுமாறு அம்பினைத் தொடுத்த வள்ளல் ஸ்ரீ இராமபிரான், ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்தபோது பாரதப்போர் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, சூரியனின் ஒளியைத் தன் சக்கராயுதத்தினால் மறையச் செய்துவிட்டு, பலம்மிக்க அர்ச்சுனனுக்கு உதவியாக அருள்புரிந்தான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருவரங்கநாதப் பெருமானாகத் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருள்கின்றான்.

பேயினார் முலையூண் பிள்ளையாய் ஒருகால்
பெருநிலம் விழுங்கி,அ துமிழ்ந்த
வாயனாய் மாலாய் ஆலிலை வளர்ந்து
மணிமுடி வானவர் தமக்குச்
சேயனாய், அடியேற் கணியனாய் வந்தென்
சிந்தையுள் வெந்துய ரறுக்கும்,
ஆயனாய் அன்று குன்றமொன் றெடுத்தான்
அரங்கமா நகரமர்ந் தானே. 1416

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் குழந்தையாக இருந்த காலத்தில், கண்ணனை அழிக்கும் பொருட்டுக் 'கம்சன்' என்னும் அசுரன் பேய்வடிவில் வந்த ''பூதனை'' என்பவளின் நஞ்சு கலந்த முலைப்பாலை உண்ட சிறுபிள்ளையாய் இருந்து, முன்பு ஒரு சமயம் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் இப்பூமியை உண்டு, பின்பு இவ்வுலகத்துயிர்களைப் படைக்குங் காலத்தில் இப்பூமியை உமிழ்ந்த திருப்பவள வாயினையுடையவனாகி, திருமாலாகி, ஆலிலையின்கண் திருக்கண் வளர்ந்தருளியவனாகி, மணிமுடி சூடிய தேவர்களுக்கும் எட்டாதவனாகி, அடியேனுக்கு அண்மையில் வந்து என் சிந்தையின் உள்ளே புகுந்திருந்து, அடியேனுக்குண்டான கடுந்துயரங்களைப் போக்கியருள்பவனாகி முன்பு ஒரு சமயம் ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்த காலை ''கோவர்த்தனம்'' என்னும் மலையைக் குடையாகப் பிடித்துப்

Koviloor Digital Library

பசுக்களைப் பாதுகாத்தருளிய எம்பெருமான் ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருவரங்கநாதப் பெரு மானாகத் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருள்கிறான்.

*பொன்னுமா மணியும் முத்தமும் சுமந்த
பொருதிரை மாநதி புடைசூழ்ந்து,
அன்னமா டுலவும் அலைபுனல் சூழ்ந்த
அரங்கமா நகரமர்ந் தானை
மன்னுமா மாட மங்கையர் தலைவன்
மானவேல் கலியன்வா யொலிகள்,
பன்னிய பனுவல் பாடுவார் நாளும்
பழவினை பற்றறுப் பாரே. 1417

(பண்டை இந்திரன் மன்னு மாயிருங் எங்ஙனே ஆயிரம் சுரி ஊழிபேய் பொன் - ஏழை.)

பொன், மணி, முத்து ஆகியவைகளுடன் அலை அடிக்க ஓடி வருகின்ற ''காவிரி'' என்னும் பெரிய நதி சுற்றிலும் சூழ்ந்திருக் கின்ற, அன்னப்பறவைகள் உலாவரும் அலைவீசுகின்ற நீரினால் சூழப்பட்டிருக்கின்ற பொய்கைகள் நிறைந்துள்ள ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி திருக் கண் வளர்ந்தருளும் எம்பெருமான் திருவரங்கநாதப் பெருமானைப் பற்றி, நிலைபெற்ற பெரிய பெரிய மாடமாளிகைகளை உடைய திருமங்கை நகர்க்குத் தலைவராகிய ''கலியன்'' என்னும் திருமங்கையாழ்வாரின் வாயொலிகளினால் இயற்றியருளிய இப்பாசுரங்கள் பத்தினையும் பாடிக்கொண்டு இருப்பவர்கள் எந்நாளிலும் முன்னைய தீவினைகள் யாவும் நீங்கி, அத் தீவினைகளின்மீது உள்ள பற்றுக்களை வேரறுத்து இருக்குமாறு அருள் கிடைக்கும்.

8. ஏழை ஏதலன்
திருவரங்கம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*ஏழை ஏதலன் கீழ்மகன் என்னா
திரங்கி மற்றவற் கின்னருள் சுரந்து,
'மாழை மான்மட நோக்கியுன் தோழி;
உம்பி எம்பி'என் றொழிந்திலை, உகந்து,

Koviloor Digital Library

‘தோழ னீயெனக் கிங்கொழி,’ என்ற
சொற்கள் வந்தடி யேன்மனத் திருந்திட,
ஆழி வண்ண!நின் அடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 1418

கடல்நிறக் கண்ணபிரானே! அழகு பொருந்திய சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளி திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளும் திருவரங்கநாதப் பெருமானே! இவன் அறிவற்றவன், அயலான், கீழ்மகன் என்று எதனையும் மனதில் வேறுபாடு காணாமல் இரக்கம் கொண்டு இன்னருளை ஈந்து, வேடர்குலத்துத் தோன்றிய குகனை நோக்கி, ''குகனே! மான் போன்ற கூர்மையான பார்வையை உடைய இந்தச் சீதை உன் தோழியாவாள். என் தம்பி இலக்குமணன் உன் தம்பியாவான்; என்றருளிச் செய்ததோடு நில்லாமல், உன் மனத்தினுள்ளே மகிழ்ச்சியடைந்து, ''நீ எனக்குற்ற தோழன்!'' என்று அருளிச் செய்த அந்தச் சொற்கள் வந்து அடியேனின் உள்ளத்தில் நிலைத்து நின்றிட்ட பேற்றினால் அடியேன் தங்களின் இணைத்திருவடிகளை அடையப் பெற்றேன்.

வாத மாமகன் மர்க்கடம் விலங்கு
மற்றோர் சாதியென் றொழிந்திலை, உகந்து
காதல் ஆதரம் கடலினும் பெருகச்
செய்த தகவினுக் கில்லைகைம் மாறென்று,
‘கோதில் வாய்மையி னாயொடு முடனே
உண்பன் நான்’என்ற ஒண்பொருள் எனக்கும்
ஆதல் வேண்டுமென் றடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 1419

அழகு பொருந்திய சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திரு வரங்கம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி திருக்கண் வளர்ந்தருளும் திருவரங்கநாதப் பெருமானே! ஸ்ரீ இராமாவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில், அனுமனை நோக்கி, இவன் வாயுதேவனின் பெரியகுமாரன் என்றோ, விலங்கினத்தில் பிறந்தவன் என்றோ, பல பொல்லாத குணங்களைக் கொண்ட குரங்கு என்றோ அவனுடைய இழிவான குணங்களைக் கண்டு புறக்கணித்துவிடாமல், அவன்மீது பெரு மகிழ்வு கொண்டு, கடல் போன்று அளவற்ற பெருங்காதலைக் கொண்டுள்ளதோர்

Koviloor Digital Library

உயரிய தகுதிக்குக் கைம்மாறு என்பது ஒன்றுமில்லை என்று எண்ணி, குற்றமற்ற உண்மைக் கருத்துகளை எடுத்துரைக்கும் உன்னுடன் உடனிருந்து யான் உண்பேன்'' என்று அனுமனைக் குறித்துக் கூறியருளிய மேன்மைப் பொருள் எளியவனான அடியேனுக்கும் அமைதல் வேண்டுமென்று வேண்டிக் கொண்டு தங்களின் இணைத்திருவடிகளை அடையப் பெற்றேன்.

கடிகொள் பூம்பொழில் காமரு பொய்கை
வைகு தாமரை வாங்கிய வேழம்,
முடியும் வண்ணமோர் முழுவலி முதலை
பற்ற மற்றது நின்சரண் நினைப்ப,
கொடிய வாய்விலங் கின்னுயிர் மலங்கக்
கொண்ட சீற்றமொன் றுண்டுள தறிந்து,உன்
அடிய னேனும்வந் தடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 1420

அழகு பொருந்திய சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திரு வரங்கம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி திருக்கண் வளர்ந்தருளும் திருவரங்கநாதப் பெருமானே! மணம் வீசுகின்ற மலர்கள் நிறைந்த சோலைகள் நிறைந்திருக்கின்ற குளத்தில் மலர்ந்து இருக்கும் தாமரை மலரைப் பறித்துக் கொண்டிருந்த யானையினை, பெருவலிமை உடைய முதலை ஒன்று அதன் காலைப் பற்றி முழுவலிமையுடன் இழுத்துக் கொண்டு துன்புறுத்துகின்ற அந்நேரத்தில், ''ஆதிமூலமே!'' என்று தேவரீரை அழைத்துச்சரணடைந்தது கண்டு, அந்தக் கொடிய வாயினையுடைய முதலை என்னும் விலங்கு அழியுமாறு, நீர் கொண்ட சீற்றம் என்ற ஒன்றினை உள்ளதென்று உணர்ந்து கொண்ட உன் அடியேனும் உன்னிடம் வந்து, தங்களின் இணைத்திருவடிகளை அடையப் பெற்றேன்.

நஞ்சு சோர்வதோர் வெஞ்சின அரவம்
வெருவி வந்துநின் சரணெனச் சரணாய்,
நெஞ்சிற் கொண்டுநின் னஞ்சிறைப் பறவைக்
கடைக்க லம்கொடுத் தருள்செய்த தறிந்து,
வெஞ்சொ லாளர்கள் நமன்றமர் கடியர்
கொடிய செய்வன வுள,அதற் கடியேன்
அஞ்சி வந்துநின் னடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 1421

Koviloor Digital Library

அழகுமிக்க சோலைகள் நிறைந்துள்ள ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி திருக்கண் வளர்ந்தருளும் திருவரங்கநாதப் பெருமானே! விடத்தினைக் கக்குகின்ற கடுங்கோபத்துடன் கூடிய ''சுமுகன்'' என்னும் பாம்பு, கருடனைக் கண்டு அஃது தன்னைக் கொன்று விடுமோ என்று அஞ்சி உன்னிடம் வந்து சரணடைந்தது. அதனைத் தம் திருவுளத்திற் கொண்டு, நீர் நும் அடியவனான கருடனிடத்திலேயே அப்பாம் பினை அடைக்கலம் பெறுமாறு செய்தருளினீர். இவ்வாறு ஒரு கொடிய பாம்புக்கே அருள் செய்திருப்பது அறிந்து அடியேனும் என் இறுதிக் காலத்தில் கடுஞ்சொற்களுடன் கூடிய இயமதூதர்கள் பற்பல கொடுமையான செயல்களைச் செய்ய உள்ளனர் என்பதை அறிந்து கொண்டு தங்களின் இணைத்திருவடிகளைச் சரணமடை கின்றேன். அப்பாம்புக்கு அடைக்கலம் அளித்தது போன்று, அடைக்கலம் அளித்தருளுமாறு நின்னை வந்தடைந்தேன்.

மாக மாநிலம் முழுதும்வந் திறைஞ்சும்
மலர டிகண்ட மாமறை யாளன்,
தோகை மாமயி லன்னவ ரின்பம்
துற்றி லாமையில் 'அத்த!இங் கொழிந்து,
போகம் நீயெய்திப் பின்னும்நம் மிடைக்கே
போது வாய்,'என்ற பொன்னருள், எனக்கும்
ஆக வேண்டுமென் றடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 1422

அழகுமிக்க சோலைகள் நிறைந்த ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி திருக்கண் வளர்ந்தருளும் திருவரங்கநாதப் பெருமானே! பரந்து கிடக்கின்ற விண்ணுலகம் முழுவதும் உள்ள தேவர்கள் யாவரும் வந்து தங்களைத் தொழுது போற்றுகின்ற மலர் போன்ற திருவடிகளைக் கண்ட 'கோவிந்தசாமி' என்னும் நான்கு மறைகளையும் கற்றுணர்ந்த அந்தணர் தங்களிடம் வந்து சரணடைந்தான். ஆயினும் அவ் வந்தணன் தோகைகளைக் கொண்டுள்ள மயிலை ஒத்த பெண்களின் இன்ப வாழ்வை அனுபவிக்காமலிருப்பதனைத் தன் மனதினில் அறிந்து கொண்டு, அம்மாதிரியான பெண்களினால் கிடைக்கும் இன்ப வாழ்வினை அனுபவித்த பின்பு நம்மருகில் வருக! என்று கூறியருளினாய். என்றறிந்த தங்களின் பொன்னருள் அடியேனுக்கும்

Koviloor Digital Library

கிடைக்க வேண்டுமென்று எண்ணித் தங்களின் இணைத் திருவடிகளை வந்தடைந்தேன்.

மன்னு நான்மறை மாமுனி பெற்ற
மைந்த னைமதி யாதவெங் கூற்றந்-
தன்னை யஞ்சிநின் சரணெனச் சரணாய்த்
தகவில் காலனை யுகமுனிந் தொழியா,
பின்னை யென்றும்நின் திருவடிப் பிரியா
வண்ண மெண்ணிய பேரருள், எனக்கும்
அன்ன தாகுமென் றடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 1423

அழகுமிக்க சோலைகள் நிறைந்த ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி திருக்கண் வளர்ந்தருளும் திருவரங்கநாதப் பெருமானே! நிலைபெற்றுத் திகழ்கின்ற மறைகளையும் நன்கறிந்து ஓதிக் கொண்டிருக்கின்ற மாமுனிவரின் மைந்தனாகிய மார்கண்டேயனைச் சிறிதும் மதியா திருக்கின்ற கொடுஞ்செயல்களைச் செய்து கொண்டிருக்கும் இயமனுக்கு அஞ்சி, ''நின்சரணன்றி மற்றோர் சரண் இல்லை யென்று கருதிச் சரணடைய, அந்த மார்கண்டேயனுக்காக இரக்கமற்ற இயமனை சினந்து நோக்கிய நீர் அவனிடத்து, ''என்றும் இன்றுபோல் வாழ்க!'' என்று அருளி உம்மைப் பிரியாது இருக்குமாறு ஆக்கிக் கொண்ட பேரருளின் பெருமையை எண்ணி, அடியேனுக்கு அவ்வாறு அருள்புரிய வேண்டுமென்று வேண்டிக் கொண்டு தங்களின் இணைத்திருவடிகளை வந்தடைந்தேன்.

ஓது வாய்மையும் உவனியப் பிறப்பும்
உனக்கு முன்தந்த அந்தண னொருவன்,
'காத லென்மகன் புகலிடங் காணேன்;
கண்டு நீதரு வாயெனக் கென்று,
கோதில் வாய்மையி னானுனை வேண்டிய
குறைமு டித்தவன் சிறுவனைக் கொடுத்தாய்,
ஆத லால்வந்துன் அடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 1424

அழகுமிக்க சோலைகள் நிறைந்த ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி திருக்கண் வளர்ந்தருளும் திருவரங்கநாதப் பெருமானே! முன்பொருசமயம்

Koviloor Digital Library

அந்தண ஆசிரியனாகிய ''சாந்தீபினி'' என்பவர் ஓதி உணர்தற்குரிய உண்மையான மறைகளையெல்லாம் உனக்குக் கற்பித்து, ''உபநயனம்'' என்பதன்மூலம் உம்மை இருபிறப்பினனாக ஆக்கினான். அப்படிப்பட்ட முனிவன் உம்மிடத்தே வந்து, ''என் அன்புக்குரிய மைந்தன் சென்ற இடத்தை அடியேன் அறிந்து கொள்ள இயலாத காரணத்தினால் அவனிருக்குமிடமறிந்து மீட்டுத் தரவேண்டும் என்று வேண்டிக் கொண்டதற்கேற்ப, நீரும் அவனுக் குண்டான குறையைத் தீர்க்கும் பொருட்டு அப்பிள்ளையைத் தேடிக் கொடுத்தீர். அவ்வாறே அடியேனுக்குண்டாகியிருக்கின்ற துன்பங் க்ளைப் போக்கியருளுமாறு தங்களின் இணைத்திருவடிகளை வந்தடைந்தேன்.

வேத வாய்மொழி யந்தண னொருவன்
'எந்தை நின்சர ணென்னுடை மனைவி,
காதல் மக்களைப் பயத்தலும் காணாள்
கடிய தெய்வங்கொண் டொளிக்கும்,'என் றழைப்ப,
ஏத லார்முன்னே யின்னரு ளவர்க்குச்
செய்துன் மக்கள்மற் றிவரென்று கொடுத்தாய்,
ஆத லால்வந்துன் அடியிணை யடைந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 1425

அழகு மிக்க சோலைகள் நிறைந்த ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவரங்கநாதப் பெருமானே! வேதங்களைத் தம் வாய்மொழி வாயிலாக ஓதிக் கொண்டிருந்த அந்தணன் ஒருவன் உம்மிடம் வந்து, என் தந்தையே! அடியேன் உன்னைச் சரண் அடைகிறேன். என் மனைவி பெற்ற பிள்ளைகளை அவள் பெற்றெடுத்த அப்பொழு திலிருந்தே காணவில்லை. என் அன்புக்குரிய மக்களைக் கடுங்குணம் கொண்டதோர் தெய்வமானது கொண்டு சென்று ஒளித்து வைத்திருக்கிறது என்று கூறி, அவர்களைக் கண்டு கொண்டு என்னிடம் அழைத்து வந்து சேர்க்க வேண்டும் என்று வேண்டி உன்னை அழைத்திட, நீரும் அயலார் முன்னிலையில் அப்பிள்ளை களைக் கொண்டு வந்து, ''இதோ இவர்கள் உன் மக்கள்!'' என்று கொடுத்தருளினீர்! ஆகையினால் அவ்வாறே அடியேனையும் பாதுகாத்தருள வேண்டும் என்று வேண்டித் தங்களின் இணைத் திருவடிகளை வந்தடைந்தேன்.

Koviloor Digital Library

*துளங்கு நீண்முடி அரசர்தம் குரிசில்
தொண்டை மன்னவன் திண்டிற லொருவற்கு,
உளங்கொ ளன்பினோ டின்னருள் சுரந்தங்
கோடு நாழிகை யேழுட னிருப்ப,
வளங்கொள் மந்திரம் மற்றவற் கருளிச்
செய்த வாறடி யேனறிந்து, உலகம்
அளந்த பொன்னடி யேயடைந் துய்ந்தேன்
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானே! 1426

அழகு மிக்க சோலைகள் நிறைந்துள்ள ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவரங்கநாதப் பெருமானே! விளங்குகின்ற நீண்ட முடியினை அணிந்து கொண்டிருக்கும் அரசர்கட்கு அரசனான ''தொண்டைமான்'' என்னும் உன் அடியவனிடம் நீ அன்புடன் அருள் செய்தாய்! அவனுடைய ஒய்வு நேரத்தில் ஏழு நாழிகைக் காலம் அவனுடனிருந்து ஏழு தத்துவப் பொருள்களுடன் கூடி இருக்குமாறு சிறப்புமிக்க திருமந்திரத்தையும் அவைகளின் பொருளையும் அத்தொண்டைமான் சக்கரவர்த்திக்கு அருளிச் செய்த நிலைமையை அடியேன் அறிந்தேன். முன்பு ஒரு சமயம் மகாபலிச்சக்கரவர்த்தியின் வேள்வியின் முன்பு பெற்ற இவ்வுலகத்தினை அளந்து கொண்ட தங்களின் பொன்னடிகளைச் சரணடைந்து உய்வு பெற்றேன்.

குறிப்பு : ஏழு தத்துவப் பொருள்கள்:

1. தேகமே ஆத்மா என்கிற மயக்கம் நீங்குதல்.
2. தான் சுதந்தரன் என்னும் கொள்கை நீங்குதல்.
3. சிறுதெய்வங்களுக்குத்தான் அடிமை ஆகாமை.
4. பேற்றின் பொருட்டுத் தன் முயற்சி தவிர்தல்.
5. உறவினர் அல்லாதாரை உறவினராகக் கொள்ளாமை.
6. ஐம்புல ஆசையை ஒழித்தல்.
7. பாகவத சேஷத்துவம் (அடியார்க்கு அடிமை கொள்ளுதல்) இவை ஏழு தத்துவப் பொருள்களும் திருமந்திரத்தில் அடங்கியுள்ளன.

*மாட மாளிகை சூழ்திரு மங்கை
மன்னன் ஒன்னலர் தங்களை வெல்லும்,
ஆடல் மாவல வன்கலி கன்றி
அணிபொ ழில்திரு வரங்கத்தம் மானை,

Koviloor Digital Library

நீடு தொல்புக ழாழிவல் லானை
எந்தை யைநெடு மாலைநி னைந்த,
பாடல் பத்திவை பாடுமின் தொண்டீர்!
பாட நும்மிடைப் பாவம்நில் லாவே. 1427

மாடமாளிகைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருமங்கை'' என்னும் நகர்க்கு மன்னனாகத் திகழ்ந்த, பகைவர்களை வெற்றி பெறக்கூடிய ''ஆடல்மா'' என்னும் குதிரைகள்மீது ஏறிச் செலுத்துவதில் வல்ல வரான ''கலிகன்றி'' என்றழைக்கப்படுகின்ற திருமங்கை ஆழ்வார் அழகுமிக்க ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவரங்கநாதனைப் பற்றியும், நீண்ட பழம்பெரும் புகழைக் கொண்டுள்ள எம்பெருமான் திருவாழியாழ்வானைச் செலுத்தும் ஆற்றல் மிக்கவனை என் தந்தையை, நெடிய திருமாலைத் தன் உள்ளத்தே உள்ளி அருளிச் செய்த பாசுரங்கள் பத்தினையும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் அடியவர்களே! பாடிக் கொண்டிருப்பீர்களாக! அவ்வாறு பாடிக் கொண்டிருக்கும் அடியவர்களாகிய உங்களிடத்தே யுள்ள பாவங்கள் பலவும் நில்லாது அழிந்து போய்விடும்.

9. கையிலங்கு திருப்பேர் நகர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*கையிலங் காழி சங்கன்
கருமுகில் திருநி றத்தன்,
பொய்யிலன் மெய்யன் தன்தாள்
அடைவரே லடிமை யாக்கும்,
செய்யலர் கமல மோங்கு
செறிபொழில் தென்தி ருப்பேர்,
பையர வணையான் நாமம்
பரவிநா னுய்ந்த வாறே! 1428

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தன் திருக்கரங்களில் திருச்சங்கினையும், திருவாழியாழ்வானையும் கொண்டு கறுத்த மேகத்தின் நிறத்தினை ஒத்த திருமேனியை உடையவன். சாத்திரங்களில் விவரித்துக் கூறப்படுகின்ற வகையில் திகழ்ந்து

Koviloor Digital Library

விளங்கி பொய்யற்றவனாகவும், உண்மையானவனாகவும் தன் திருவடிகளை அடைந்த அடியவர்க்கு அடிமை கொண்டருள் கின்றவன். இன்ன தன்மையனான எம்பெருமான் தாமரை ஓங்கி உயர்ந்து வளர்ந்திருக்கின்ற நீர்வளம்மிக்க வயல்களைக் கொண்டு திகழும், அடர்ந்த சோலைகளையுடைய ''திருப்பேர்'' என்னும் திருநகரில் எழுந்தருளி உள்ள, திருவனந்தாழ்வானைப் படுக்கையாக உடைய எம்பெருமானின் திருநாமங்களைச் சொல்லிச் சொல்லியே அடியேன் உய்வு பெற்ற பேற்றினை என்னவென்று எடுத் துரைப்பேன்.

வங்கமார் கடல்க ளேழும்
மலையும்வா னகமும் மற்றும்,
அங்கண்மா ஞால மெல்லாம்
அமுதுசெய் துமிழ்ந்த எந்தை,
திங்கள்மா முகில்அ ணாவு[1]
செறிபொழில் தென்தி ருப்பேர்,
எங்கள்மா லிறைவன் நாமம்
ஏத்திநா னுய்ந்த வாறே! 1429

உலகப் பிரளயம் உண்டான காலத்தில், கப்பல்கள் நிறையச் செல்கின்ற கடல்கள் ஏழும், மலைகளும், ஆகாயமும் மற்றும் உள்ள பரந்து விரிந்து கிடக்கும் அனைத்து உலகங்களையும் திருவமுது செய்து, பின்பு அவ்வுலகங்கள் அனைத்தினையும் உமிழ்ந்து பாதுகாத்து அருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அடர்த்தியாக உள்ள சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''தென்திருப்பேர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக் கின்றான். அப்படிப்பட்ட திருக்குணங்களையுடைய எம் பெருமான் எங்கள் இறைவனாகிய ஸ்ரீமந்நாராயணனின் திரு நாமங்களை அடியேன் துதித்து, அதனால் பெற்ற பேறுகள் பற்றி என்னவென்று எடுத்துரைப்பேன்.

ஒருவனை யுந்திப் பூமேல்
ஓங்குவித் தாகந் தன்னால்,
ஒருவனைச் சாபம் நீக்கி
'உம்பராள்', என்று விட்டான் ,

Koviloor Digital Library

பெருவரை மதிள்கள் சூழ்ந்த
பெருநகர் அரவ ணைமேல்,
கருவரை வண்ணன் தென்பேர்
கருதிநா னுய்ந்த வாறே! 1430

திருமாலாகிய எம்பெருமான் ஒப்பற்ற நான்முகன் என்னும் பிரமனைத் தன் கொப்பூழ்த் தாமரை மலரினின்றும் தோற்று வித்தான். தன் திருமார்பில் உண்டான வியர்வை நீரைக் கொண்டு சிவபெருமானுக்குண்டான சாபத்தினைப் போக்கியருளினான். மேலுலகை ஆளச் செய்தான். பெரிய பெரிய மலைகளை ஒத்து அமைந்துள்ள மதிள்கள் சூழ்ந்திருக்கும் ''தென்திருப்பேர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருவனந்தாழ்வான்மீது கரிய பெரிய மலை ஒன்று சாய்ந்துள்ளவாறு உள்ளவனான எம் பெருமானின் திருநாமங்களை அடியேனின் மனதினுள்ளே கருதிக் கொண்டு இருப்பதனால் அடியேன் பெற்ற பெரும்பேற்றினை என்னவென்று எடுத்தியம்புவேன்.

ஊனமர் தலையொன் றேந்தி
உலகெலாம் திரியு மீசன்,
'ஈனமர் சாபம் நீக்காய்,'
என்னவொண் புனலை யீந்தான்,
தேனமர் பொழில்கள் சூழ்ந்த
செறிவயல் தென்தி ருப்பேர்,
வானவர் தலைவன் நாமம்
வாழ்த்திநா னுய்ந்த வாறே! 1431

புலால் நிறைந்துள்ள மண்டை ஓட்டினைத் தன் கைகளில் ஏந்தியவாறு, உலகு முழுவதும் திரிந்து கொண்டிருந்த சிவ பெருமான் எனக்குண்டான சாபத்தை நீக்குக! என்று எம்பெரு மானிடம் சென்று வேண்டிக் கொண்டதற்கேற்பத் திருமால் தன் திருமார்பினிலுண்டான நீரை எடுத்துக் கொடுத்ததன்மூலம் அச்சாபத்தைப் போக்கியருளினான். தேன் நிறைந்த மலர்களைக் கொண்டு திகழும் சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''தென்திருப்பேர்'' என்னும் திருத்தலத்தில் வீற்றிருக்கும் விண்ணுலகத் தலைவனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருநாமங்களை எடுத்தோதித் துதித்து வாழ்த்தி அடியேன் உய்ந்த பெரும்பேறுதான் என்னே என்னே!!

Koviloor Digital Library

'வக்கரன் வாய்முன் கீண்ட
மாயனே!' என்று வானோர்
புக்கு,'அரண் தந்த ருள்வாய்,'
என்னப்பொன் னாகத் தானை,
நக்கரி யுருவ மாகி
நகங்கிளர்ந் திடந்து கந்த,
சக்கரச் செல்வன் தென்பேர்த்
தலைவன்தா ளடைந்துய்ந் தேனே! 1432

தேவர்கள் ஒன்று சேர்ந்து திருமாலினிடத்தே வந்து, ''தந்த வக்கிரன்'' என்பவனின் வாயைக் கிழித்தவனே!'' மாயவனே! எங்களைப் பாதுகாத்தருள வேண்டும்,'' என்று வேண்டிக் கொண் டார்கள். எனவே, எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ''நரசிம்ம மூர்த்தி''யாக அவதாரம் பெற்று, தன் நகங்களின் கூர்மையைக் கொண்டு ''இரணியன்'' என்னும் அசுரனின் மார்பினை இருகூறாகப் பிளந்து அழித்து மகிழ்ச்சியுற்றான். திருவாழியானைத் தன் திருக்கரங்களில் ஏந்தியுள்ள செல்வனான எம்பெருமான் ''தென் திருப்பேர் நகர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக் கிறான். இப்படிப்பட்ட எம்பெருமான் திருமாலின் திருவடிகளைப் பற்றிக் கொண்டு உய்ந்து அடியேன் பெரும்பேறு பெற்றேன்.

விலங்கலால் கடல டைத்து
விளங்கிழை பொருட்டு, வில்லால்
இலங்கைமா நகர்க்கி றைவன்
இருபது புயம்து ணித்தான்,
நலங்கொள்நான் மறைவல் லார்கள்
ஓத்தொலி யேத்தக் கேட்டு,
மலங்குபாய் வயல்தி ருப்பேர்
மருவிநான் வாழ்ந்த வாறே! 1433

ஆபரணங்கள் பலவற்றையும் அணிந்து கொண்டிருக்கும் சீதாபிரட்டியை மீட்டு அழைத்து வரும் பொருட்டு, மலைகளைக் கொண்டு கடலின்மீது அணைகட்டி, இலங்கை மாநகரத்து மன்னனான ''இராவணன்'' என்னும் அரக்கர்தலைவனின் இருபது தோள்களையும் தன் வில்லை வளைத்து வீழ்த்தினான். நன்மை களைக் கொண்டுள்ள நான்கு மறைகளையும் கற்றுவல்ல அந்தணர்கள் ஓதிக் கொண்டி ருக்கின்ற வேதஒலிகளைக் கேட்டு, ''மலங்கு'' என்னும் மீன்கள்

Koviloor Digital Library

துள்ளிப் பாய்கின்ற நீர்வளம்மிக்க வயல்கள் நிறைந்துள்ள ''தென்திருப்பேர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அணுகி வணங்கி, அடியேன் உய்யும் பெரும்பேறு பெற்றேன்.

வெண்ணெய்தா னமுது செய்ய
வெகுண்டுமத் தாய்ச்சி யோச்சி,
கண்ணியார் குறுங்க யிற்றால்
கட்டவெட் டென்றி ருந்தான்,
திண்ணமா மதிள்கள் சூழ்ந்த
தென்திருப் பேருள், வேலை
வண்ணனார் நாமம் நாளும்
வாய்மொழிந் துய்ந்த வாறே! 1434

முன்பு ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்தபோது, வெண்ணெயைத் திருவமுது செய்த பொழுது, அதனைக் கண்டு கோபம் கொண்ட ஆய்ச்சியாகிய யசோதை மத்தினை வீசி, ''கண்ணி'' என்னும் தாம்புக் கயிற்றினால் அவனைக் கட்டி வைக்க அதற்கும் இசைந்தவனாய் வெறுமையாகவும் அமைதியாகவும் இருந்தான். திண்ணிய மதிள்கள் சூழ்ந்திருக்கின்ற ''தென்திருப்பேர் நகர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் கடல்நிறம் கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் திருநாமங்களைத் தினந்தோறும் என் வாயினால் சொல்லிச் சொல்லி அடியேன் உய்வு பெற்றேன்.

அம்பொனா ருலக மேழும்
அறியஆய்ப் பாடி தன்னுள்,
கொம்பனார் பின்னை கோலம்
கூடுதற் கேறு கொன்றான்,
செம்பொனார் மதிள்கள் சூழ்ந்த
தென்திருப் பேருள் மேவும்,
எம்பிரான் நாமம் நாளும்
ஏத்திநா னுய்ந்த வாறே! 1435

அழகிய பொன் போன்ற ஏழு உலகங்களிலுமுள்ளவர்கள் யாவரும் அறியும்படியாகத் ''திருவாய்பாடி'' என்னும் திருநகரினுள்ளேயுள்ள கொடி போன்ற அழகிய நப்பின்னைப் பிராட்டியை அடையும் பொருட்டு எருதுகளைக் கொன்ற எம்பெருமான் ஸ்ரீ

Koviloor Digital Library

கண்ணபிரான் சிவந்த பொன்னினாலான மதிள்கள் சூழ்ந்திருக்கின்ற ''தென்திருப்பேர்நகர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி யுள்ளான். இப்படிப்பட்ட எம்பெருமானின் திருநாமங்களை நாள்தோறும் ஏத்திப் போற்றி அடியேன் உய்ந்து பெரும்பேறு பெற்றேன்.

நால்வகை வேத மைந்து
வேள்வியா றங்கம் வல்லார்,
மேலைவா னவரின் மிக்க
வேதியா ராதி காலம்,
சேலுகள் வயல்தி ருப்பேர்ச்
செங்கண்மா லோடும் வாழ்வார்,
சீலமா தவத்தர் சிந்தை
யாளியென் சிந்தை யானே. 1436

நான்கு வகையான வேதங்கள், ஐந்துவிதமான வேள்விகள், ஆறுவகையான அங்கங்கள் ஆகியவற்றில் வல்லவர்களாகி, விண்ணுலகத்தவரினும் மேம்பட்டவராகத் திகழும் வேதம்வல்ல அந்தணர்கள், ஆதிகாலமாகிய, இவ்வுலகைப் படைக்கும் காலம் தொட்டு, கயல்மீன்கள்துள்ளித் திரியும் நீர்வளம்மிக்க வயல்கள் சூழ்ந்திருக்கின்ற ''தென்திருப்பேர் நகர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் சிவந்த திருக்கண்களை உடைய எம் பெருமான் திருமாலுடன் சேர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட எம்பெருமான்தவம் புரிகின்ற இவர்களின் சிந்தையில் நின்று வாழ்வது போன்று அடியேனின் சிந்தையிலும் நிறைந்து நிற்கிறான்.

*வண்டறை பொழில்தி ருப்பேர்
வரியா வணையில், பள்ளி
கொண்டுறை கின்ற மாலைக்
கொடிமதிள் மாட மங்கை,
திண்டிறல் தோள்க லியன்
செஞ்சொலால் மொழிந்த மாலை,
கொண்டிவை பாடி யாடக்
கூடுவார் நீள்வி சும்பே. 1437

வண்டுகள் இன்னிசை பாடிக் கொண்டிருக்கும் மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''தென்திருப்பேர் நகர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி

Koviloor Digital Library

திருவனந்தாழ்வான்மீது பள்ளி கொண்டு இருக்கின்ற எம்பெருமான் திருமாலைப்பற்றி கொடிகள் உயர்ந்து பறக்கின்ற மாடமாளிகைகள் நிறைந்துள்ள ''திருமங்கை'' என்னும் நகர்க்குத் தலைவனும், வலிய திருத்தோள்களையுடையவரான திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த அழகிய தமிழ்ச் சொற்களாலான ''சொல்மாலை'' என்னும் பாசுரங்கள் பத்தினையும் நன்கு பாடவும், அதற்கேற்றவாறு ஆடவும் வல்ல பெருமக்கள் விண்ணிலுள்ள திருப்பரமபதம் சென்று சேர்வர்.

10. தீதறு

திருநந்திபுர விண்ணகரம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*தீதறுநி லத்தொடெரி காலினொடு நீர்கெழுவி
சும்பு மவையாய்,
மாசறும னத்தினொடு றக்கமொடி றக்கையவை
யாய பெருமான்,
தாய்செறவு ளைந்துதயி ருண்டுகுட மாடுதட
மார்வர் தகைசேர்,
நாதனுறை கின்றநகர் நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே! 1438

என் மனமே! தீமைகளில்லாத சிறந்த பூமியும், நெருப்பும், காற்றும், நீரும், சிறந்த ஆகாயமும் ஆகிய ஐம்பெரும் பூதங் களுக்கும் அவையவையாய் இருப்பவனும், குற்றமற்ற மனத்துடன் கூடிய உறக்கமும், சிறப்பும் ஆகிய இவற்றுடன் உண்டாகும் செயல்களுக்குத் தலைவனுமாக் விளங்குகின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் செய்கின்ற தவறுகளைக் கண்ட தாய் யசோதைப் பிராட்டி கோபித்துக் கொண்டு, கட்டி வைக்கும் பொருட்டுத் தாம்புக் கயிற்றினை எடுப்பதைக் கண்டு நடுங்கிய பின்பும், பின்பு ஒரு சமயம், வாய்ப்பு நேர்ந்தபோது தயிரை உட்கொண்டு குடக் கூத்தாடிய எம்பெருமான் அகன்ற திருமார்பினைக் கொண்டும், தகுதிகள் மிக்கிருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் எனத் திகழ்கின்ற ''திருநந்திபுர விண்ணகரம்'' என்னும் திருப்பதி சென்று அடைதல் வேண்டும்.

Koviloor Digital Library

உய்யும்வகை யுண்டுசொன செய்யிலுல கேழுமொழி
யாமை முனநாள்,
மெய்யினள வேயமுது செய்யவல ஐயனவன்
மேவு நகர்தான்,
மையவரி வண்டுமது வுண்டுகிளை யோடுமலர்
கிண்டி யதன்மேல்,
நைவளம்ந விற்றுபொழில் நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே! 1439

என் மனமே! நான் சொல்வதைச் செய்வாயானால், பிழைப்பதற்குரிய வழிகள் உண்டாகும். முன்பொரு சமயம் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் ஏழுலகங்களில் ஒன்றும் விடாதவாறு அவைகளைத் தன் திருமேனி அளவுக்குச் சுருக்கித் திருவமுது செய்துள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் யாதெனின், அழகிய வரிகளையுடைய வண்டுகள் தன் சுற்றத்தோடு சேர்ந்து கொண்டு மலர்களைக் கோதியவாறே அதிலுள்ள தேனைப் பருகும். அதன் பிறகு ''நைவளம்'' என்னும் இன்னிசைப் பண்ணைப் பாடுகின்ற சோலைகள் நிறைந்துள்ள வளம்மிக்க ''திருநந்திபுர விண்ணகரம்'' என்னும் திருப்பதி என்பதாகும். அத்தகைய திருப்பதியைச் சென்றடைய விரும்புவாயாக!

உம்பருல கேழுகட லேழுமலை யேழுமொழி
யாமை முனநாள்,
தம்பொன்வயி றாரளவு முண்டவையு மிழ்ந்ததட
மார்வர் தகைசேர்,
வம்புமலர் கின்றபொழில் பைம்பொன்வரு தும்பிமணி
கங்குல் வயல்சூழ்,
நம்பனுறை கின்றநகர் நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே! 1440

என் மனமே! முன்பொரு சமயம் விண்ணுலகு ஏழினையும், ஏழு கடல்களையும், ஏழு மலைகளையும் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தன் பொன் போன்ற திருவயிறு நிறையுமளவும் திருவமுது செய்துவிட்டுப் பின்பு இவ்வுலகினை மீண்டும் படைக்கின்ற வகையில் தன் திருவயிற்றினின்றும் வெளிப்படுத்தியதோடு அகன்ற திருமார்பினையுடையவனாகிய நம் பெருமான் என்றென்றும் நிலையாக

Koviloor Digital Library

எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் யாதெனின், அவ்வப்போது மலர்கின்ற மலர்களுடன் கூடிய சோலைகளில் திரிந்து கொண்டிருக்கின்ற தும்பிகளினால் அழகு பெற்றும், இருண்ட கழனிகளால் சூழ்ந்திருப்பதுமான வளம்மிக்க ''திருநந்திபுர விண்ணகரம்'' என்னும் திருப்பதி என்பதாகும். அத்தகைய திருப்பதியைச் சென்றடைய விரும்புவாயாக!

பிறையினொளி எயிறிலக முறுகியெதிர் பொருதுமென
வந்த அசுரர்,
இறைகளவை நெறுநெறென வெறியவவர் வயிறழல
நின்ற பெருமான்,
சிறைகொள்மயில் குயில்பயில மலர்களுக அளிமுரல
அடிகொள் நெடுமா,
நறைசெய்பொழில் மழைதவழும் நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே! 1441

என் மனமே! இளம்பிறைச் சந்திரனைப் போன்ற கோரப் பற்களையுடைய அரக்கர்கள் எதிர்த்து வந்து போரிட வந்தபோது, எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் அவ்வரக்கர்களின் வயிறு எரியும் படியாக அவர்களின் உடல்களையெல்லாம் நெறுநெறு என்று முறித்து வெற்றிபெற்று நின்றான். அப்படிப்பட்ட எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் யாதெனின், மயில்களும் குயில்களும் ஒன்று சேர்ந்து நெருங்கி வாழ்ந்து கொண்டிருக்கவும், அங்கே மலர்கள் எப்பொழுதும் உதிர்ந்து கிடக்கவும், அம்மலர்களிலே உள்ள தேனைப் பருகுவதற்கு வந்திருக்கும் வண்டுகள் ரீங்காரமிட்டுக் கொண்டு இன்னிசையினை இசைக்கவும் செய்து கொண்டிருக்கின்ற அழகிய சோலைகளில் நீண்டு பருத்துள்ள அடிகளையுடைய மாமரங்கள் மணம் வீசிக் கொண்டிருக்கவும், அச்சோலைகளில் மழையைப் பொழிகின்ற மேகங்கள் தழுவிக் கொண்டிருக்கக் கூடிய வளம்மிக்க ''திருநந்திபுர விண்ணகரம்'' என்னும் திருத்தலம் என்பதாகும். அத்தகைய திருப்பதி சென்றடைய விரும்புவாயாக!

மூளவெரி சிந்திமுனி வெய்தியமர் செய்துமென
வந்த அசுரர்,
தோளுமவர் தாளுமுடி யோடுபொடி யாகநெ௱டி
யாம ளவெய்தான்,

Koviloor Digital Library

வாளும்வரி வில்லும்வளை யாழிகதை சங்கமிவை
யங்கை யுடையான்,
நாளுமுறை கின்றநகர் நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே! 1442

என் மனமே! எங்கு நோக்கினும் புகை மண்டியிருக்குமளவுக்கு நெருப்பைச் சிந்தியபடியே பெருஞ்சினம் கொண்டு உம்முடன் நாங்கள் போரிடுவோம் என்று வந்த அரக்கர்களின் தோள்களும், கால்களும், தலைகளும் ஆகிய இவையாவும் நொடிப் பொழுதில் பொடிப் பொடியாகுமாறு எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் செய்தான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் தன் திருக்கரங்களில் நாந்தகவாள், சார்ங்கவில், சக்கரம், சங்கு, கதை ஆகிய ஐந்து ஆயுதங்களையும் கொண்டிருக்கிறான். இத்தகைய ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் ''திருநந்திபுர விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தினைச் சென்றடைதல் வேண்டும்.

தம்பியொடு தாமொருவர் தந்துணைவி காதல்துணை
யாக முனநாள்,
வெம்பியெரி கானகமு லாவுமவர் தாமினிது
மேவு நகர்தான்,
கொம்புகுதி கொண்டுகுயில் கூவமயி லாலுமெழி
லார்பு றவுசேர்,
நம்பியுறை கின்றநகர் நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே! 1443

என் மனமே! முன்பு ஒரு சமயம் ''இராம'' அவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் தன் தம்பி இலக்குமணனுடன் தாமும், தன்னுடைய காதல் துணைவி சீதாபிராட்டியுடனும் வெம்மை மிக்க தீயினை உமிழ்கின்ற கடுங்காட்டில் மகிழ்ச்சியுடன் உலவி வந்தனர். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் யாதெனின், கிளைகளையுடைய மரங்களிலிருந்து குயில்கள் குதித்துக் கூவ, அதனைக் கண்ட மயில்கள் ஆடிக் கொண்டிருக்கக் கூடிய சோலைகள் நிறைந்துள்ள இடங்களில் வளம்மிக்க ''திரு நந்திபுர விண்ணகரம்'' என்னும் திருத்தலமாகும் இந்தத் திருத் தலத்தினை நீ சென்றடைதல் வேண்டும்.

Koviloor Digital Library

தந்தைமன முந்துதுயர் நந்தஇருள் வந்தவிறல்
நந்தன் மதலை,
எந்தையிவ னென்றமரர் கந்தமலர் கொண்டுதொழ
நின்ற நகர்தான்,
மந்தமுழ வோசைமழை யாகவெழு கார்மயில்கள்
ஆடு பொழில்சூழ்,
நந்திபணி செய்தநகர் நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே! 1444

என் மனமே! தந்தையாகிய நந்தகோபனுக்கு உண்டான துயரங்கள் நீங்கும் பொருட்டு, எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் பிறந்த அன்றைய இரவிலேயே தன் தந்தை வசுதேவர் மதுரையிலிருந்து கோகுலத்திற்குக் கொண்டு வந்து சேர்த்தான். விண்ணுலகத் தேவர்கள், இவன் என் தந்தை என்று கருதி, மணம் வீசுகின்ற மலர்களைக் கொண்டு ஏத்தித் தொழுது நிற்கின்ற திருத்தலம் யாதெனின், 'மத்தளம்' என்னும் 'முழவு' ஒலிக்கும் ஓசையினைக் கேட்ட சோலைக் குயில்கள் இசைபாட, இவ்வோசையைக் கார் காலத்தில் மேகத்துடன் கூடி இடிக்கும் இடி என்று கருதி மயில்கள் ஆடுகின்ற சோலைகள் சூழ்ந்திருக்கின்ற வளம்மிக்க ''நந்திவர்மன்'' என்னும் மன்னன் திருப்பணி செய்த திருத்தலமான ''திருநந்திபுர விண்ணகரம்'' என்பதாகும். இத்தகைய திருத்தலத்தினை நீ சென்று அடைதல் வேண்டும்.

எண்ணில்நினை வெய்தியினி யில்லையிறை யென்றுமுனி
யாளர் திருவார்,
பண்ணில்மலி கீதமொடு பாடியவ ராடலொடு
கூட எழிலார்,
மண்ணிலிது போலநக ரில்லையென வானவர்கள்
தாம லர்கள்தூய்,
நண்ணியுறை கின்றநகர் நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே! 1445

என் மனமே! மனதில் எண்ணிப் பார்க்கின்ற பொழுது ''தியானம்'' செய்வதற்குரிய இறைவன் இவனன்றி வேறெவருமில்லை'' என்று முடிவு செய்துள்ள சனகாதி முனிவர்கள், இசையுடன் கூடிய கேட்பதற்கு இனிய பாடல்களைப் பாடித் துதித்து ஆடுவார்கள். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான்

Koviloor Digital Library

திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் யாதெனின், இம்மண்ணுலகில் இது போன்றதொரு நகரம் இல்லையென்று விண்ணுலகிலுள்ள தேவர்கள் திரண்டு வந்து மலர்கள் இட்டுப் போற்றித் துதிக்கின்ற அளவில் விரும்பித் தங்கியிருக்கும் ''திருநந்திபுர விண்ணகரம்'' என்னும் திருத்தலமாகும். அத்தகைய திருத்தலத்தினை நீ சென்று அடைதல் வேண்டும்.


வங்கமலி பௌவமது மாமுகடி னுச்சிபுக
மிக்க பெருநீர்,
அங்கமழி யாரவன தாணைதலை சூடுமடி
யார றிதியேல்,
பொங்குபுன லுந்துமணி கங்குலிருள் சீறுமொளி
யெங்கு முளதால்,
நங்கள்பெரு மானுறையும் நந்திபுர விண்ணகரம்
நண்ணு மனமே! 1446

என் மனமே! கப்பல்கள் நிறைந்துள்ள கடலானது பூமியை வளைத்துக் கொண்டு, ஆகாயத்தின் உச்சிவரை பொங்கியெழுகின்ற அளவில் உலகப் பிரளயம் உண்டான காலத்தில்கூட ஊழிப் பெருவெள்ளம் ஏற்பட்டிருப்பினும் உடல் அழியாதிருப்பர். அடியவர்கள் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் ஆணையினைத் தன் சிரமேல் ஏற்றுத் துதித்து முக்தியினைப் பெறுவர். இப்படிப் பட்ட உயர்ந்த நிலையைப்பற்றி அறிவாயானால் பொங்கி ஓடுகின்ற நீரினால் தள்ளிக் கொண்டு வருகின்ற மணிகள் இரவுக்காலத்து இருட்டினைக் கிழித்துக் கொண்டு எங்கும் ஒளி வீசிக் கொண்டிருக்கின்ற வளமிக்கதாய், எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் என்பது ''திருநந்திபுர விண்ணகரம்'' என்பதாகும். இத்தகைய திருத்தலத்தினை நீ சென்று அடைதல் வேண்டும்.

நறைசெய்பொழில் மழைதவழும் நந்திபுர விண்ணகரம்
நண்ணி யுறையும்,
உறைகொள்புக ராழிசுரி சங்கமவை யங்கையுடை
யானை, ஒளிசேர்
கறைவளரும் வேல்வல்ல கலியனொலி மாலையிவை
யைந்து மைந்தும்,
முறையிலிவை பயிலவல அடியவர்கள் கொடுவினைகள்
முழுத கலுமே. 1447

Koviloor Digital Library

தேன் நிறைந்திருக்கின்ற பூஞ்சோலைகள் நிறைந்திருக்கின்ற மழையைப் பொழிகின்ற மேகங்கள் பரவியிருக்கின்ற ''திருநந்திபுர விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் விருப்புற்று எழுந்தருளியிருக்கின்றான். திருவாழி யாழ்வானையும், திருச்சங்கினையும் தன் திருக்கரங்களிலே ஏந்தியுள்ள எம்பெருமானைப் பற்றி, ஒளிமிக்கும் கறை வளர்ந்திருக்கின்ற வேலாயுதத்தைப் பயன்படுத்துவதில் வலிமை மிக்கவரான ''கலியன்'' என்றழைக்கப்படுகின்ற திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் முறையாகப் பயின்று வல்லமை கொண்ட அடியவர்களின் கொடிய வினைகள் முழுவதுமாக நீங்கி இன்புறுவர்.



Koviloor Digital Library

ஆறாம் பத்து

1. வண்டுனும் திருவிண்ணகர்

வஞ்சி விருத்தம்

*வண்டுணு நறுமல ரிண்டைகொடு
பண்டைநம் வினைகெட வென்று,அடிமேல்
தொண்டரு மமரரும் பணியநின்றங்
கண்டமொ டகலிட மளந்தவனே!
ஆண்டாயுனைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்,
வேண்டேன்மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே![1] 1448

அடியவர்களும், தேவர்களும் சேர்ந்து வந்து வண்டுகள் தேனைப் பருகுகின்ற மணம்மிக்க மலர்களைக் கொண்டுள்ள மாலைகள் ஏந்திக் கொண்டு, ''எங்களுடைய பழைய தீவினைகளெல்லாம் தொலைய வேண்டுமென்று தங்கள் திருவடிகளில் விழுந்து சேவிக்குமாறு நின்று கொண்டிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! முன்பு ஒரு சமயம் அத்தேவர்களுக்காக மகாபலிச் சக்கரவர்த்தியிடம் இரந்து பெற்ற உலகங்களையும் இப்பூமியையும் தம் திருவடிகளால் அளந்து கொண்ட எம் பெருமானே! அடியேனை ஆண்டு கொண்ட எம்பெருமானே! ''திருவிண்ணகர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமானே! அடியேன் தங்களைக் காண வேண்டும் என்பதற்காக வேண்டி, அடியேனுக்கு அருள்புரிந்தருளிச் செய்வீர்களாயின் அடியேன் இல்வாழ்க்கை வாழ வேண்டும் என்று விரும்பமாட்டேன்.

அண்ணல்செய் தலைகட.ல் கடைந்ததனுள்
கண்ணுதல் நஞ்சுணக் கண்டவனே,
விண்ணவ ரமுதுண அமுதில்வரும்
பெண்ணமு துண்டவம் பெருமானே!
ஆண்டாயுனைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்,
வேண்டேன்மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே! 1449

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் என்னும் இறைவன்தானே என்பதைக் காட்டியருளிய எம்பெருமானே! நீ தேவர்களின்

Koviloor Digital Library

பொருட்டு அலைவீசுகின்ற கடலைக் கடைந்து, அதிலிருந்து புறப்பட்டு வந்த நஞ்சினை நெற்றிக்கண்ணை உடைய சிவ பெருமான் உட்கொள்ளுமாறு செய்தருளிய எம்பெருமானே! அக் கடலிலிருந்து கிடைத்த அமுதத்தினைத் தேவர்கள் பருகும் படியாகவும் செய்து, அக்கடலிலிருந்து கிடைத்த அமுதத்திலிருந்து எழுந்தருளிய திருமகளைத் தன் திருமார்பில் கொண்டுள்ள எம் பெருமானே! அடியேனை முன்பே ஆண்டு கொண்ட ''திரு விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அடியேன் தங்களைக் கண்டு சேவிக்க வேண்டும் என்பதற்காக வேண்டி, அடியேனுக்கு அருள்புரிந்தருளிச் செய்வீர்களாயின் அடியேன் இல்வாழ்க்கை வாழவேண்டும் என்று விரும்பமாட்டேன்.

குழல்நிற வண்ண!நின் கூறுகொண்ட
தழல்நிற வண்ணன்நண் ணார்நகரம்
விழ,நனி மலைசிலை வளைவுசெய்துஅங்
கழல்நிற அம்பது வானவனே!
ஆண்டாயுனைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்,
வேண்டேன்மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே! 1450

கூந்தலைப் போன்ற கருமை நிறமுடைய எம்பெருமானே! நெருப்பு போன்ற சிவந்த நிறமுடைய சிவபெருமானுக்குத் தன் திருமேனியில் ஒரு பகுதியினை அளித்துள்ள எம்பெருமானே! அந்தச் சிவபெருமானைக் கொண்டு பகைவரான அசுரர்களின் திரிபுரம் என்னும் நகரம் அழிந்து போகும்படியாகப் பெரிய மேருமலையைப் போன்ற வில்லினை வளையச் செய்து, நீயே நெருப்பு போன்ற அம்பில் ஆவேசித்து நின்ற எம்பெருமானே! ''திரு விண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அடியேனை முன்பே ஆண்டு கொண்ட எம்பெருமானே! அடியேன் தங்களைக் கண்டு சேவிக்க வேண்டும் என்பதற்காக வேண்டி, அடியேனுக்கு அருள்புரிந்தருளிச் செய்வீர்களாயின் அடியேன் இல்வாழ்க்கை வாழவேண்டும் என்று விரும்பமாட்டேன்.

Koviloor Digital Library

நிலவொடு வெயில்நில விருசுடரும்
உலகமு முயிர்களு முண்டொருகால்,
கலைதரு குழவியி னுருவினையாய்
அலைகட லாலிலை வளர்ந்தவனே!
ஆண்டாயுனைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்,
வேண்டேன்மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே! 1451

முன்பு உலகப் பிரளயம் உண்டானபோது, நிலவொளி வீசும் சந்திரன், வெயிலைப் பரப்புகின்ற சுடருடன் கூடிய சூரியன் உலகங்கள், உயிர்கள் ஆகிய யாவற்றினையும் உண்டு தன் திருவயிற்றிலே அடக்கி வைத்துக் கொண்டு பின்பு மிகச்சிறிய வடிவு கொண்ட குழந்தையாக அலைகடலின்மீது ஆலிலையின்கண் திருக்கண் வளர்ந்தருளிய எம்பெருமானே! ''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அடியேனை முன்பே ஆண்டு கொண்ட எம்பெருமானே! அடியேன் தங்களைக் கண்டு சேவிக்க வேண்டும் என்பதற்காக வேண்டி அடியேனுக்கு அருள்புரிந்து அருளிச் செய்வீர்களாயின் அடியேன் இல்வாழ்க்கை வாழ வேண்டும் என்று விரும்பமாட்டேன்.

பாரெழு கடலெழு மலையெழுமாய்ச்
சீர்கெழு மிவ்வுல கேழுமெல்லாம்,
ஆர்கெழு வயிற்றினி லடக்கிநின்றங்
கோரெழுத் தோருரு வானவனே!
ஆண்டாயுனைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்,
வேண்டேன்மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே! 1452

ஏழு உலகங்கள், ஏழு கடல்கள், ஏழு மலைகள் ஆகியவற்றுடன் அழகுமிக்க ஏழுவகை உலகங்கள் ஆகிய யாவற்றையும் முன்பு ஒரு சமயம் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் தன் திருவயிற்றில் அடக்கிக் கொண்டு ''அ''கரம் என்ற ஒரெழுத்திற்கு முக்கிய மானதோர் உருவாகி நிற்கும் எம்பெருமானே! ''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அடியேனை முன்பே ஆண்டு கொண்டருளிய எம்பெருமானே! அடியேன் தங்களைக் கண்டு சேவிக்க வேண்டும் என்பதற்காக வேண்டி, அடியேனுக்கருள் புரிந்தருளிச்

Koviloor Digital Library

செய்வீர்களாயின் அடியேன் இல்வாழ்க்கை வாழ வேண்டுமென்று விரும்ப மாட்டேன்.

கார்கெழு கடல்களும் மலைகளுமாய்
ஏர்கெழு முலகமு மாகி,முத
லார்களு மறிவரு நிலையினையாய்ச்
சீர்கெழு நான்மறை யானவனே!
ஆண்டாயுனைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்,
வேண்டேன்மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே! 1453

மேகங்களைக் கொண்டிருக்கின்ற கடல்களுக்கும், மலைகளுக்கும், ஒழுங்குமுறையுடன் செயல்பட்டுவரும் பரந்துள்ள உலகங்கட்கும் ஆதாரமாக நின்று அவற்றினுள்ளே எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! பிரமதேவனும் மற்றும் தேவர்களைப் போன்றவர்களும் ஆகிய யாவராலும் அறிந்து கொள்ள இயலாத நிலைத்த இயல்பினையுடையவனே! அடியேனை முன்பே ஆண்டு கொண்ட எம்பெருமானே! ''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் ஸ்ரீமந் நாராயணனே! அடியேன் தங்களைக் கண்டு சேவிக்கும் பொருட்டு அடியேனுக்கு அருள்புரிந்தருளிச் செய்வீர்களானால் அடியேன் இல்வாழ்க்கை வாழ்வதை எக்காலத்திலும் விரும்பமாட்டேன்.

உருக்குறு நறுநெய்கொண் டாரழலில்
இருக்குறு மந்தணர் சந்தியின்வாய்,
பெருக்கமொ டமரர்க ளமரநல்கும்
இருக்கினி லின்னிசை யானவனே!
ஆண்டாயுனைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்,
வேண்டேன்மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே! 1454

அந்தணர்கள் செல்வச் செழிப்புடன் வேள்வி நடத்துவதற்குரிய பொருள்களுடன் மாலைக் காலத்தில் உருக்கிய மணம்மிக்க நெய்யினை ஓமத்தீயிலிட்டு விண்ணுலகத்தவர்கள் அவியுணவை பெற்றுக் கொள்ளுமாறு அளிப்பார்கள். வேதங்களிலே கூறியுள்ள வேதங்களின் மூலமான ''ஓம்'' என்னும் பிரணவப் பொருளாகி நிற்கும் எம்பெருமானே! அடியேனை முன்பே ஆட்கொண்டருளிய எம்பெருமானே! ''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அடியேன் தங்களைக் கண்டு சேவிக்க

Koviloor Digital Library

வேண்டும் என்பதற்கு அருள்புரிந்தருள்வீர்களாயின் அடியேன் இல்வாழ்க்கை வாழ்வதை என்றும் விரும்பமாட்டேன்.

காதல்செய் திளையவர் கலவிதரும்
வேதனை வினையது வெருவுதலாம்,
ஆதலி னுனதடி யணுகுவன்நான்
போதலர் நெடுமுடிப் புண்ணியனே!
ஆண்டாயுனைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்,
வேண்டேன்மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே! 1455

''போது'' என்னும் பருவத்தினின்று மலர்கின்ற மலர்களினால் தொகுக்கப் பெற்ற மாலையினைச் சூடிய திருமுடியையுடைய புண்ணியமூர்த்தியே! இளம்பெண்களின் காதல் தொடர்பு காரணமாக உண்டாகும் 'கலவி'யானது முதலில் இன்பப் பெருக்கை அளிப்பது போன்றிருப்பினும், இறுதியில் அச்செயல்களினால் துன்பமே உண்டாகின்றன. இச்செயல்களை எண்ணிப் பார்க்கும் போது ஒரு வகையான அச்சத்தையே அளிக்கின்றன. ஆகையினால் அவ்வச்சத்தினைப்போக்கிக் கொள்ளும் பொருட்டு, அடியேன் தங்கள் திருவடிகளை அணுகிப் பற்றிக் கொள்வேன். அடியேனை முன்பே ஆட்கொண்டு அருளிச் செய்தீர்கள். ''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அடியேன் தங்களைக் கண்டு சேவிக்கும் பொருட்டு அருள்புரிந்தருளிச் செய்வீர்களாயின், அடியேன் இல்வாழ்க்கை வாழ்வதை என்றும் விரும்பமாட்டேன்.

சாதலும் பிறத்தலு மென்றிவற்றைக்
காதல்செய் யாதுன கழலடைந்தேன்,
ஓதல்செய் நான்மறை யாகியும்பர்
ஆதல்செய் மூவுரு வானவனே!
ஆண்டாயுனைக் காண்பதோ ரருளெனக் கருளுதியேல்,
வேண்டேன்மனை வாழ்க்கையை விண்ணகர் மேயவனே! 1456

ஓதுதல் செய்கின்ற நான்கு மறைகளினூடே இயைந்திருக்கும் எம்பெருமானே! விண்ணுலகத்தவர்களில் முதல்வர்கள் எனத் திகழும் பிரமதேவன், இந்திரன், சிவபெருமான் ஆகிய மூவரையும் உள்ளடக்கிய திருமேனி கொண்டு திகழும் எம்பெருமானே! இறத்தல், பிறத்தல் என்றுள்ள இச்செயல்பாடுகள் மிக்க துன்பத்தை அளிப்பன என்று உணர்ந்துள்ளதால் அடியேன் அச்செயல்களை

Koviloor Digital Library

விரும்பவில்லை. உன் திருவடிகளையே அடியேன் பற்றினேன். அடியேனை முன்பே ஆட்கொண்டருளிய எம்பெருமானே! தங்களைக் கண்டு சேவிக்க வேண்டும்படிக்கான அருளை அளிக்கப் பெறுவேனாயின் அடியேன் இல்வாழ்க்கையை என்றும் விரும்ப மாட்டேன். ''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே!

*பூமரு பொழிலணி விண்ணகர்மேல்,
காமரு சீர்க்கலி கன்றிசொன்ன,
பாமரு தமிழிவை பாடவல்லார்,
வாமனன் அடியிணை மருவுவரே. 1457

மலர்கள் நிறைந்திருக்கும் சோலைகள் சூழ்ந்திருப்பதனை அணியாகக் கொண்டிலங்கும் ''திருவிண்ணகரம்'' என்னும் திருத் தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனைப் பற்றிப் பலரும் விரும்பத்தக்க சிறப்புடைய ''கலியன்'' என்றழைக்கப்படும் ''திருமங்கை'' ஆழ்வார் அருளிச் செய்த பாசுரங்கள் எனத் திகழும் தமிழ்ப் பாசுரங்களைப் படித்துப் பாடக்கூடிய வல்லமை பெற்ற அடியவர்கள் ''வாமன'' அவதாரம் மேற்கொண்டருளிய இணைத் திருவடிகளை அடைவார்கள்.

2. பொறுத்தேன்
திருவிண்ணகர்

கொச்சகக் கலிப்பா

பொறுத்தேன் புன்சொல்நெஞ்சில் பொருளின்ப மெனவிரண்டும்
இறுத்தேன், ஐம்புலன்கட் கிடனாயின வாயிலொட்டி
அறுத்தேன், ஆர்வச்செற்ற மவைதம்மை[1] மனத்தகற்றி
வெறுத்தேன், நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே! 1458

உறவினர்களும் மற்றவர்களும் இழிவாகக் கூறிய சொற்களைக் கேட்டு நெஞ்சில் நிறுத்தி வைத்துப் பொறுத்துக் கொண்டேன். உறவினர்களுக்காகவும், ஐம்புலன்களினால் உண்டாகக் கூடிய அனுபவங்களுக்காகவும் இன்பம், பொருள் என்ற இரண்டினையும் கொடுத்துக் கழித்தேன். வேண்டியவர்களிடம் விருப்பத்தினையும், வேண்டாதவர்களிடம் வெறுப்பினையும் அடியேன் வாய்ச்

Koviloor Digital Library

சொற்களால் எடுத்துக் கூறி, அதனையே உறுதிபூண்டு நடைமுறைப்படுத்தினேன் ''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை இறுதியாகப் பற்றிக் கொண்டு சரணடைந்தேன்.

மறந்தே னுன்னைமுனம் மறந்தமதி யின்மனத்தால்,
இறந்தே னெத்தனையு மதனாலிடும் பைக்குழியில்,
பிறந்தே யெய்த்தொழிந்தேன் பெருமானே![2] திருமார்பா,
சிறந்தேன் நின்னடிக்கே திருவிண்ணகர் மேயவனே! 1459

எக்காலத்திலும் எண்ணிக் கொண்டு இருக்க வேண்டிய உன்னை அடியேன் பல காலமாய் மறந்தொழிந்தேன். இவ்வாறு மறந்துவிட்ட நிலைக்காக வருத்தம் கொள்ளாத மனதினைப் பெற்றிருப்பதனால் அறிவற்ற பொருள்களைக் காட்டிலும் மிகவும் பயன் படாதவனாகக் கெட்டுப் போனேன். அதனால் துன்பங்களுக்குக் காரணமான கருக்குழியில் புகுந்து பிறப்பு, இறப்பு ஆகியவைகளை மேற்கொண்டு இடைவிடாத பெருந்துன்பங்களுக்காளானேன். பிராட்டியைத் தம் திருமார்பிலே கொண்டிருக்கின்ற எம் பெருமானே! ''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் ஸ்ரீமந் நாராயணனே! அடியேன் இப்போது வந்து தங்களின் திருவடிகளையே சரணடைந்தேன்.

மானேய் நோக்கியர்தம் வயிற்றுக்குழி யிலுழைக்கும்,
ஊனேய் ஆக்கைதனை யுதவாமை யுணர்ந்துணர்ந்து,
வானே! மாநிலமே! வந்துவந்தென் மனத்திருந்த
தேனே, நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே! 1460

திருப்பரமபதத்துக்கும் இந்தப் பரந்த நிலவுலகத்துக்கும் மற்றும் யாவற்றுக்கும் இறைவனாக இருந்து கொண்டு இருக்கும் எம்தேனே! நீ அடியேனின் மனத்தினில் வந்து வந்து நிலைத்து நிற்கின்ற எம்பெருமானே! இனியவனே! அடியேன் மான் போன்ற அழகிய கண்களையும், பார்வையினையுமுடைய பெண்களின் கருக்குழியிலிருந்து கொண்டு துன்பப்பட்டு வருந்தினேன். இறுதியில் உறுதியான பொருளைப் பெற வேண்டி அடியேன் பெற்ற இம்மாமிசம் கொண்ட உடல் துணையற்றது என்று உணர்ந்தேன். ''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு

Koviloor Digital Library

எழுந்தருளி வீற்றிருக்கும் ஸ்ரீமந்நாராயணனே! அடியேன் இப்போது வந்து தங்களின் திருவடிகளைப் பற்றிச் சரணடைந்தேன்.

பிறிந்தேன் பெற்றமக்கள் பெண்டிரென்றிவர் பின்னுதவா
தறிந்தேன், நீபணித்த அருளென்னுமொள் வாளுருவி
எறிந்தேன், ஐம்புலன்கள் இடர்தீர வெறிந்துவந்து
செறிந்தேன், நின்னடிக்கே திருவிண்ணகர் மேயவனே! 1461

''திருவிண்ணகரம்'' என்னும் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! பெற்றெடுத்த மக்கள், மனைவியர் ஆகிய உறவினர்கள் யாரும் இறுதிக் காலத்தில் எமக்குத் துணையாக இருக்கமாட்டார்கள் என்பதனை அறிந்து கொண்டு அந்த உறவுகளையெல்லாம் விட்டு விட்டு அகன்றுவிட்டேன். முன்பு பாரதப் போர் நடைபெற்றபோது தேரில் இருந்து கொண்டு அர்ச்சுனனுக்கு அருளிய ''பகவத் கீதை''யில், ''என்னையே சரணடைய எப்போதும் எண்ணியிரு'' என்றருளிய கருத்தினை உணர்ந்தேன். அதனால் உன் அருள் என்னும் சரம சுலோகமாகிற ஒளி பொருந்திய வாளினை உறையிலிருந்தும் உருவிக் கொண்டு சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்னும் ஐம்பொறிகளின் வாயிலாக உண்டாகும் துன்பங்கள் நீங்கும்படியாக வீசினேன். அடியேன் இப்போது எவ்விதமான பற்றுகள், ஆசைகள் ஏதுமின்றி வெறுமையாக வந்து தங்கள் திருவடிகளைப் பற்றிச் சரணடைந்தேன்.

பாண்டேன் வண்டறையும் குழலார்கள்பல் லாண்டிசைப்ப,
ஆண்டார் வையமெல்லாம் அரசாகி,முன் னாண்டவரே
மாண்டா ரென்றுவந்தார் அந்தோ!மனை வாழ்க்கைதன்னை
வேண்டேன், நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே! 1462

''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே! தேனைப் பருகிய வண்டுகள் இன்னிசையைப் பாடிக் கொண்டவாறு அமர்ந்திருக்கும் மலர்களைச் சூடியிருக்கின்ற கூந்தலை உடைய பெண்கள் திருப்பல்லாண்டு பாடிக் கொண்டிருக்க, ''இவ்வுலகை ஆண்ட அரசர்களெல்லாரும் மாண்டு போனார்கள்'' அப்படிப்பட்ட மன்னர்களுக்கும் மரணம் என்ற ஒன்று உண்டு என்பது உறுதி என்னும் கருத்துக்கு ஏற்பச் செல்வம் என்பது நிலையற்றது. ஐயகோ! அடியேன் இல்வாழ்க்கை வாழ்வது

Koviloor Digital Library

என்பதனை விரும்பமாட்டேன். அடியேன் இப்போது வந்து தங்கள் இணைத்திருவடிகளைப் பற்றிச் சரணடைந்தேன்.

கல்லா வைம்புலன்கள் அவைகண்டவா செய்யகில்லேன்,
மல்லா! மல்லமருள் மல்லர்மாள மல்லடர்த்த
மல்லா, மல்லலம்சீர் மதிள்நீரிலங் கையழித்த
வில்லா, நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே! 1463

''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் ஸ்ரீமந்நாராயணனே! நீர் ஸ்ரீகண்ணபிரான் திருஅவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில், மற்போரில் வல்ல சானூரன், முஷ்டிகன் என்ற இரு அசுரர்களையும் அழித்த ஆற்றல்மிக்கவனே! நூற்களின் நெறிமுறைக் கற்றறி யாமலிருக்கின்ற கொடிய ஐம்புலன்களும் அவையவை விரும்பும் படிக்கெல்லாம் கண்டபடி செய்வதற்கு அடியேன் விரும்பேன். கடலும், மதிள்களும் சூழ்ந்துள்ள செல்வம்மிக்க இலங்கை மாநகரினை அழித்த வில்லாற்றலையுடைய ஸ்ரீஇராமபிரானே! அடியேன் இப்போது வந்து தங்களின் இணைத்திருவடிகளைப் பற்றிச் சரணடைந்தேன்.

வேறா யானிரந்தேன் வெகுளாது மனக்கொளெந்தாய்,
ஆறா வெந்நரகத் தடியேனை யிடக்கருதி,
கூறா ஐவர்வந்து குமைக்கக்குடி விட்டவரை,
தேறா துன்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே! 1464

''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே! அடியேன் வேறுவிதமாகி வந்து உன்னை வணங்கி வேண்டுகின்றேன். அடியேன் இன்று வரை செய்து கொண்டிருந்த பிழைகளைக் கண்டு அடியேன்மீது சினம் கொள்ளாமல் திருவுள்ளம் பற்றி அருளல் வேண்டும். ஐம்பொறிகளும் ஒன்று சேர்ந்து அடியேனை ஒய்வில்லாத கொடிய நரகத்தில் தள்ளிவிடும் தீய எண்ணம் கொண்டு கூறுபோடுகின்றன. நீ அடியேனைப் படைத்த காலத்தில் அடியேனை நல்வழிப்படுத்தி உதவுவதற்கே ஐம் பொறிகளையும் படைத்திருக்கிறாய். ஆயினும் அவ்வைம் பொறிகளும் அடியேனை நல்வழிப்படுத்தும் என்னும் நம்பிக்கை யின்மை காரணமாக அவைகளை நம்பாமல் இப்போது வந்து தங்கள் திருவடிகளைப் பற்றிச் சரணடைந்தேன்.

Koviloor Digital Library

தீவாய் வல்வினையா ருடனின்று சிறந்தவர்போல்,
மேவா வெந்நரகத் திடருற்று விரைந்துவந்தார்,
மூவா வானவர்தம் முதல்வா!மதி கோள்விடுத்த
தேவா, நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே! 1465

''திருவிண்ணகரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே! தீயை உமிழ்வது போன்ற கொடிய பாவங்கள் அண்டிக் கொண்டுள்ள அத்தீயவர்கள் அடியேனிடத்து நல்லவர்கள் போன்று உடனிருந்து பிரியாமல் கலந்து நின்று கொடுமையான நரகத்தில் என்னைத் தள்ளித் துன்பங்கள் பலவும் அடைவதற்காக விரைந்து வந்தனர். முதுமை என்ற ஒன்றில்லாத தேவர்கட்குத் தலைவனே! சந்திரனுக்குண்டான நோயைப் போக்கியருளிய இறைவனே! அடியேன் இப்போது வந்து தங்கள் இணைத் திருவடிகளைப் பற்றிச் சரணடைந்தேன்.

போதார் தாமரையாள் புலவிக்குல வானவர்தம்
கோதா, கோதில்செங்கோல் குடைமன்ன ரிடைநடந்த
தூதா, தூமொழியாய்! சுடர்போலென் மனத்திருந்த
வேதா, நின்னடைந்தேன் திருவிண்ணகர் மேயவனே! 1466

''திருவிண்ணகரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே! ''போது'' என்னும் மலர்வதற்கு முந்தைய நிலையிலிருக்கும் தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகள், பூமிப் பிராட்டி, விண்ணுலகத் தேவர்கள் ஆகியோர்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும் எம்பெருமானே! குறைபாடுகள் இல்லாத செங்கோலாட்சிபுரியும் மன்னர்களான தர்மர் முதலிய பாண்டவர்களுக்கும், துரியோதனாதியர்களுக்கும் இடையே தூது சென்று தூய்மையான மொழியைப் பேசிய ''பேசும் பெருமாள்'' என்று எண்ணுகின்ற ஸ்ரீகண்ண பிரானே! அடியேனின் மனதில் சுடர்விட்டுப் பிரகாசிக்கின்ற வேதப் பொருளானவனே! அடியேன் இப்போது வந்து தங்களின் இணைத்திருவடிகளைப் பற்றிச்சரணடைந்தேன்.

*தேனார் பூம்புறவில் திருவிண்ணகர் மேயவனை,
வானா ரும்மதில்சூழ் வயல்மங்கையர் கோன்,மருவார்
ஊனார் வேல்கலிய னொலிசெய்தமிழ் மாலைவல்லார்,
கோனாய் வானவர்தம் கொடிமாநகர் கூடுவரே. 1467

Koviloor Digital Library

தேன் நிறைந்த மலர்களைக் கொண்ட சோலைகளையுடைய ''திருவிண்ணகரம்'' என்னும் திருப்பதியில் கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமானைப் பற்றி, விண்ணை முட்டுகின்ற அளவு ஓங்கி உயர்ந்துள்ள மதிள்கள், வயல்கள் ஆகியவை சூழ்ந்திருக்கின்ற ''திருமங்கை'' என்னும் நகருக்குத் தலைவராகிய, பகைவரின் உடலிலே புகுந்து செல்லும் ஆற்றல் மிக்க வேலாயுதத்தைக் கையில் கொண்டிருக்கின்ற ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இத்தமிழ்ப் பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்ல பெருமக்கள் மன்னர்களாகிப் பின்பு விண்ணுலகத் தேவர்களின் கொடிகளால் அலங்கரித் திருக்கின்ற ''திருப்பரமபதம்'' சென்றடைவார்கள்.

3. துறப்பேன்
திருவிண்ணகர்

கலி விருத்தம்

*துறப்பேன் அல்லேனின்பம் துறவாது, நின்னுருவம்
மறப்பே னல்லேனென்றும் மறவாது, யானுலகில்
பிறப்பே னாகவெண்ணேன் பிறவாமை பெற்றது,நின்
திறத்தே னாதன்மையால் திருவிண் ணகரானே! 1468

''திருவிண்ணகரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே! உன்னிடமிருந்து பெற்ற அனுபவங்களின் இன்பங் களை அடியேன் இழக்கமாட்டேன். அதை இழக்காதவனாகிய அடியேன் தங்கள் திருவடிவழகை என்றும் மறக்கமாட்டேன். இவ்வடிவழகை மறவாதவனாகிய அடியேன் இவ்வுலகில் பிறக்க வேண்டுமென்று எண்ணியும் பார்க்கமாட்டேன். இவ்வாறு பிறவாத நிலைமையைப் பெற்ற பேறு தங்களின் திருவருளின் பயனே என்றும் தங்கட்கே ஆட்பட்டதன் பயனே என்றும் அடியேன் உணர்ந்தேன்.

துறந்தே னார்வச்செற்றச் சுற்றம்து றந்தமையால்,
சிறந்தேன் நின்னடிக்கே யடிமை திருமாலே,
அறந்தா னாய்த்திரிவாய் உன்னையென் மனத்தகத்தே,
திறம்பா மல்கொண்டேன் திருவிண் ணகரானே! 1469

Koviloor Digital Library

''திருவிண்ணகரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே! ''அறமே'' உருவமாகி நடமாடிக் கொண்டிருக்கின்ற உன்னை என் மனத்தினின்றும் மாறுபடாமல் நிலைநிறுத்திக் கொண்டிருக்கிறேன். உடனிருக்கின்ற சுற்றத்தினரின் உறவையும், அன்பையும் இவைகளால் உண்டாகும் விருப்பு, வெறுப்பு ஆகியவைகளையும் துறந்துவிட்டேன். அவ்வாறு இவைகளைத் துறந்துவிட்டமையால் தங்களின் திருவடிகட்கே தொண்டு புரியும் உயர்ந்த தகுதியினைப் பெற்றுள்ளேன்.

மானேய் நோக்குநல்லார் மதிபோல் முகத்துலவும்,
ஊனேய் கண்வாளிக் குடைந்தோட்டந் துன்னடைந்தேன்,
கோனே! குறுங்குடியுள் குழகா! திருநறையூர்த்
தேனே, வருபுனல்சூழ் திருவிண் ணகரானே! 1470

நீர்வளம்மிக்க ''திருவிண்ணகரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அரசே! ''திருக்குறுங்குடி'' என்னும் திருத் தலத்தில் வந்து அடியேனுடன் கலந்து கொண்ட எம்பெருமானே! ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் அடியேனுக்குத் தேன் போன்று இனிப்பவனே! என் அரசே! மான் போன்ற பார்வையுடைய பெண்களின் சந்திரனை ஒத்த முகத்தில் அமைந்து உலவிக் கொண்டிருக்கும் சதைப்பற்று மிக்க கண்கள் என்னும் அம்புக்கு அஞ்சி, நடுங்கி அடியேன் தளர்ந்து போகத் தங்கள் திருவடிகளைப் பற்றிச் சரணடைந்தேன். அடியேனைப் பாதுகாத்தருள வேண்டுகிறேன்.

சாந்தேந்து மென்முலையார் தடந்தோள்புண ரின்பவெள்ளத்
தாழ்ந்தேன், அருநரகத் தழுந்தும் பயன்படைத்தேன்,
போந்தேன் புண்ணியனே! உனையெய்தியென் தீவினைகள்
தீர்ந்தேன், நின்னடைந்தேன் திருவிண் ணகரானே! 1471

''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானே! புண்ணியனே! குங்குமச் சாந்து பூசிய முலைகளையுடைய பெண்களின் பருத்த தோள்களோடு அணைவதால் உண்டாகும் இன்ப வெள்ளத்தில் அடியேன் மூழ்கி ஆழ்ந்திருந்தேன். அதனால் இவ்வுலக வாழ்வு

Koviloor Digital Library

என்னும் கொடிய நரகம் சென்று சேர்கின்ற பயனைப் பெற்றேன். ஆதலால், இதனை உணர்ந்த அடியேன் தங்கள் இணைத் திருவடிகளைப் பற்றி அடியேனின் தீவினைகள் தீர வேண்டி வந்தேன். அத்தீவினைகளும் நீங்கப் பெற்றேன். ஆகையினால் தங்களை வந்தடைந்து சரணடைந்தேன்.

மற்றோர் தெய்வமெண்ணே னுன்னையென் மனத்துவைத்துப்
பெற்றேன், பெற்றதுவும் பிறவாமை யெம்பெருமான்,
வற்றா நீள்கடல்சூ ழிலங்கையி ராவணனைச்
செற்றாய், கொற்றவனே! திருவிண் ணகரானே! 1472

''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! எம் மன்னவனே! எப்போதும் வற்றாத நீண்டு பரந்துபட்ட கடல் சூழ்ந்திருக்கின்ற ''இலங்கை'' மன்னனாகிய இராவணனைப் போரில் அழித்து ஒழித்த ஸ்ரீஇராம பிரானே! அடியேன் தங்களையன்றி மற்றொரு தெய்வத்தை மனதாலும் எண்ணிப் பார்க்கவும்மாட்டேன். அடியேன் உன்னை என் மனதில் நிலைத்து நிற்கச் செய்து பெரும்பேறு பெற்றேன். அதனால் அடியேன் இனி ''பிறவாமை'' என்னும் பெரும் பேற்றினைப் பெற்றேன்.

மையொண் கருங்கடலும் நிலனு மணிவரையும்,
செய்ய சுடரிரண்டும் இவையாய நின்னை, நெஞ்சில்
உய்யும் வகையுணர்ந்தே னுண்மையாலினி யாது,மற்றோர்
தெய்வம் பிறிதறியேன் திருவிண் ணகரானே! 1473

''திருவிண்ணகரம்'' என்னும் திருப்பதியில் எழுந்தருளி யிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! மை போன்று அழகாகக் கறுத்திருக்கும் கடலும், பூமியும், மணிகள் போன்று ஒளி விடுகின்ற மலைகளும், அழகுமிக்க சூரியன், சந்திரன் ஆகிய இரண்டும் தானேயாகி நிற்கின்ற தங்களை அடியேன் மனத்தில் நிறுத்தி வைத்துப் பிழைக்கும் வழிவகைகளை உணர்ந்து கொண்டேன். இவ்வாறு உணர்ந்து கொண்ட அடியேன் இனிமேல் உண்மையாகவே மற்றோர் தெய்வத்தினைச் சென்று வணங்குவது என்பதனைச் சிறிதும் அறியமாட்டேன்.

Koviloor Digital Library

வேறே கூறுவதுண் டடியேன் விரித்துரைக்கு
மாறே, நீபணியா தடைநின் திருமனத்து,
கூறேன் நெஞ்சுதன்னால் குணங்கொண்டு,மற் றோர்தெய்வம்
தேறே னுன்னையல்லால் திருவிண் ணகரானே! 1474

''திருவிண்ணகரம்'' என்னும் திருப்பதியில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அடியேன் தங்களிடத்தே தனிப்பட்ட முறையில் விண்ணப்பம் செய்து, விரிவாக எடுத்துரைக்க வேண்டியது ஒன்றுண்டு. அதனை அடியேன் எடுத்துரைப்பதற்குத் தாங்கள் தான் ஏற்று அருள்புரிதல் வேண்டும். உம்மைத் தவிர வேறோர் தெய்வத்தினை அடியேன் வாயினால் எடுத்துக் கூறமாட்டேன். மனதினாலும் எண்ணிப் பார்க்க மாட்டேன். ஒரு வேளை பிற தெய்வத்தினை வணங்குவதால் அவர்களின் நற்குணச் செய்கைகள் ஏதேனும் இருக்கப் பெறுமாயினும்கூட அவைகட்காக உன்னையன்றி மற்றும் ஓர் தெய்வத்தைத் தேர்ந்து சென்று வணங்கி வழிபடமாட்டேன்.

முளிந்தீந்த வேங்கடத்து மூரிப்பெ ருங்களிற்றால்,
விளிந்தீந்த மாமரம்போல் வீழ்ந்தாரைநி னையாதே,
அளிந்தோர்ந்த சிந்தைநின்பா லடியேற்கு, வானுலகம்
தெளிந்தேயென் றெய்துவது? திருவிண் ணகரானே! 1475

''திருவிண்ணகரம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! உலர்ந்து எரிந்து போன மரங்கள் நிறைந்திருக்கின்ற பெருங்காட்டில் பலமுடைய ஒரு யானையினால் கீழே தள்ளிவிட்ட பெரிய மரம் போன்று கீழே விழுந்து கிடக்கின்றவரைப் பற்றி எண்ணிப் பார்க்காமல், அடியேன் உன்னிடத்தில் தெளிவான நம்பிக்கையுடன் உன்னிடம் பக்தி கொண்டு, உன்னையே எப்போதும் எண்ணிக் கொண்டிருக்கிறேன். ஆதலால் அடியேனுக்குத் திருப்பரமபதம் அடையும் பேற்றினை எப்போது அருளிச் செய்வீர்கள் என்பதை அறிந்து கொள்ள விழைகின்றேன்.

சொல்லாய் திருமார்வா! உனக்காகித் தொண்டுபட்ட
நல்லே னை,வினைகள் நலியாமை நம்புநம்பீ,
மல்லா! குடமாடி! மதுசூத னே,உலகில்
செல்லா நல்லிசையாய்! திருவிண் ணகரானே! 1476

Koviloor Digital Library

''திருவிண்ணகரம்'' என்னும் திருப்பதியில் எழுந்தருளி யிருக்கும் எம்பெருமானே! மிக்க வலிமையுடன் குடக்கூத்தாடிய எம்பெருமானே! 'மது' என்னும் அசுரனைக் கொன்றவனே! உலகில் எவர்க்கும் இல்லாத அளவுக்கு எல்லாப் புகழையும் உடைய நம்பீ! திருமகள் நாதனே! சொல்வாயாக! உனக்காகவே அடிமைத் தொண்டு புரிந்து கொண்டிருக்கின்ற நல்லவனாகிய அடியேனின் பாவங்கள் வந்து துன்புறுத்தாமலிருக்குமாறு அடியேனை ஏற்று அருள்புரிதல் வேண்டும். இவை பற்றி அடியேனுக்குத் தக்கவைகள் கூறி அருள்புரிதல் வேண்டும்.

*தாரார் மலர்க்கமலத் தடஞ்சூழ்ந்த தண்புறவில்,
சீரார் நெடுமறுகில் திருவிண் ணகரானை,
காரார் புயல்தடக்கைக் கலிய னொலிமாலை,
ஆரா ரிவைவல்லார் அவர்க்கல்லல் நில்லாவே. 1477

இதழ்கள் நிறைந்த தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்ற திருக்குளங்கள் சூழ்ந்திருக்கின்ற, குளிர்ந்த அழகிய தோட்டங் களையுடையதாகி, செல்வம்மிக்க நீண்ட தெருக்களுடன் கூடிய ''திருவிண்ணகரம்'' என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றி, மேகம் போன்று, வேண்டுமளவுக்கு வாரி வழங்கும் நீண்ட கைகளைக் கொண்ட வள்ளல் எனும் ''கலியன்'' என்று சிறப்பிக்கப் பெறும் ''திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலிக்கின்ற சொல்மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் ஓதுகின்ற வல்லமை பெற்றவர்கள் எவரெவரோ? அவரவர்கட்கெல்லாம் ஏற்கனவே அமைந்திருக் கின்ற துன்பங்கள் யாவும் நிற்காமல் விலகிப் போய்விடும்.

4. கண்ணும் சுழன்று
திருநறையூர்
கலிநிலைத்துறை

*கண்ணும் சுழன்று பீளையோ டீளைவந் தேங்கினால்,
பண்ணின் மொழியார் 'பைய நடமின்'என் னாதமுன்,
விண்ணும் மலையும் வேதமும் வேள்வியு மாயினான்,
நண்ணு நறையூர் நாம்தொழு தும்மெழு நெஞ்சமே! 1478

Koviloor Digital Library

என் நெஞ்சே! கண்கள் சுழன்று பீளை உண்டாகிக் கோழையும் அதிகரித்து இருக்கும் அளவுக்கு உடல் தளர்ந்து சோர்வு அடைந்திருக்கும்போது, இசையினும் இனியன பேசுகின்ற இளம் பெண்கள் அருகில் வந்து, ''மெதுவாக நடந்து செல்லுங்கள்'' என்று ஏளனமாகப் பேசுவார்கள். ஆகையினால் இவ்வாறு இவர்கள் இகழ்ந்து பேசுகின்ற நிலையை அடைவதற்கு முன்பாகவே, ஆகாயம், மலைகள், வேதங்கள், வேள்விகள் ஆகிய யாவையும் தானேயாகி நிற்கும் ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை அணுகி நாம் தொழுது வணங்குவோமாக!

கொங்குண் குழலார் கூடி யிருநது சிரித்து,'நீர்
இங்கென் னிருமி யெம்பால் வந்தெ'தன் றிகழாதமுன்,
திங்க ளெரிகால் செஞ்சுட ராயவன் தேசுடை,
நங்கள் நறையூர் நாம்தொழு தும்மெழு நெஞ்சமே! 1479

என் நெஞ்சமே! மணம் வீசுகின்ற கூந்தலையுடைய இளம் பெண்கள் ஒன்று கூடி நம்மைக்கண்டு ஏளனமாகச் சிரித்துவிட்டு, ''நீங்கள் இருமிக் கொண்டு எங்கள் பக்கம் எதற்காக வருகிறீர்கள்?'' என்று இழிவாகப் பேசுவதற்கு முன்பே, ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திங்கள், நெருப்பு, காற்று, சூரியன் ஆகிய யாவற்றினும் தானேயாய்த் தங்கி ஒளிவீசுகின்ற நம்முடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை நாம் தொழுது வணங்குவோமாக!

கொங்கார் குழலார் கூடி யிருந்து சிரித்து,'எம்மை
எங்கோலம் ஐயா! என்னினிக் காண்பெ'தன் னாதமுன்,
செங்கோல் வலவன் தான்பணிந் தேத்தித் திகழுமூர்,
நங்கோன் நறையூர் நாம்தொழு தும்மெழு நெஞ்சமே! 1480

என் நெஞ்சமே! மகரந்தப் பொடிகள் நிறைந்த மலர்களைச் சூடியுள்ள கூந்தலை யுடைய இளம்பெண்கள் கூடிக் கொண்டு சிரித்தவாறு, ''ஐயா! வயது முதிர்ந்த கிழவரே! நீர் இவ்வளவு வயதான பின்பும் எங்களையும், எங்கள் அழகினையும் எதற்காகப் பார்த்துக் கொண்டிருக்கிறீர்கள்?'' என்று எள்ளி இகழ்ந்து பேசுவதற்கு முன்பே செங்கோல் ஆட்சிபுரியும் மன்னன் சென்று வணங்குகின்ற போற்றித் துதிக்கின்ற ''திருநறையூர்'' என்னும்

Koviloor Digital Library

திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணனை நாம் தொழுது வணங்குவோமாக!

கொம்பும் அரவமும் வல்லியும் வென்றநுண் ணேரிடை,
வம்புண் குழலார் வாச லடைத்திக ழாதமுன்,
செம்பொன் கமுகினந் தான்கனி யும்செழுஞ் சோலைசூழ்
நம்பன் நறையூர் நாம்தொழு தும்மெழு நெஞ்சமே! 1481

என் நெஞ்சமே! வஞ்சிக்கொடி, பாம்பு, வல்லிக்கொடி ஆகியவற்றை வென்றுவிடும்படியான நுண்ணிதாகிய இடையையும் மணம்வீசுகின்ற கூந்தலையும் பெற்ற இளம்பெண்கள் நாம் செல்வதைக் கண்டு தங்கள் வாயிற் கதவுகள் மூடிவிட்டு அவமரியாதை செய்யுமுன்பே சிவந்த நிறமுடைய பழங்கள் நிறைந்திருக்கின்ற பாக்கு மரங்கள் நிறைந்த வளமிக்க சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நம் நம்பிக்கைக்குரிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை நாம் சென்று, தொழுது வணங்குவோமாக!

விலங்கும் கயலும் வேலுமொண் காவியும் வென்றகண்,
சலம்கொண்ட சொல்லார் தாங்கள் சிரித்திக ழாதமுன்,
மலங்கும் வராலும் வாளையும் பாய்வயல் சூழ்தரு,
நலங்கொள் நறையூர் நாம்தொழு தும்மெழு நெஞ்சமே! 1482

என் நெஞ்சமே! மான், மீன், வேல், செங்கழுநீர்ப் பூக்கள் ஆகியவைகளைத் தோற்கடிக்கும் கண்களையுடைய வஞ்சக எண்ணங்களைக் கொண்டிருக்கின்ற சொற்களைப் பேசுகின்ற சொற்களைக் கொண்ட இளம்பெண்கள் சிரித்து ஏளனமாக இகழ்ந்து பேசும் முன்பே, பல்வகையான வரால் என்னும் மீன்களும், வாளை மீன்களும் துள்ளித் திரிகின்ற நீர்வளம் மிக்க வயல்கள் சூழ்ந்திருக்கின்ற, நன்மையினை நல்கிடும் ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவிப்போமாக!

மின்னே ரிடையார் வேட்கையை மாற்றி யிருந்து,
'என்நீ ரிருமியெம் பால்வந்த தெ'ன்றிக ழாதமுன்,
தொன்னீ ரிலங்கை மலங்க இலங்கெரி யூட்டினான்,
நன்னீர் நறையூர் நாம்தொழு துமெழு நெஞ்சமே! 1483

Koviloor Digital Library

என் நெஞ்சமே! மின்னலை ஒத்த நுண்ணிய இடையையுடைய இளம்பெண்கள் இதுவரை நம்மீது வைத்திருந்த அன்பினை மாற்றிக் கொண்டு, ''கிழவராகிவிட்ட நீங்கள் இப்படி இருமிக் கொண்ட வாறே எதற்காக எங்கள் பக்கம் வந்திருக்கிறீர்கள்'' என்று இகழ்ந்து பேசுவதற்கு முன்பே, மிகவும் பழைமை வாய்ந்த நீர்வளம் மிக்க இலங்கை மாநகரமும், அங்குள்ள மக்களும் அதிர்ந்து போகும் படியாக விலங்கினத்தைச் சேர்ந்தவராகக் கருதுகின்ற ஸ்ரீ ஆஞ்ச நேயப் பெருமானைக் கொண்டு தீமூட்டிய எம்பெருமான் ஸ்ரீஇராம பிரானைத் ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் கண்டு தொழுது வணங்குவோமாக!

வில்லேர் நுதலார் வேட்கையை மாற்றிச் சிரித்து,'இவன்
பொல்லான் திரைந்தான்' என்னும் புறனுரை கேட்பதன்முன்,
சொல்லார் மறைநான் கோதி யுலகில் நிலாயவர்,
நல்லார் நறையூர் நாம்தொழு துமெழு நெஞ்சமே! 1484

என் நெஞ்சமே! வில்லைப் போன்ற அழகிய நெற்றியை யுடைய பெண்கள் இதுவரை காட்டிய ஆசையினை நீக்கிவிட்டு ஏளனமாகச் சிரித்து, ''இக்கிழவன் மிகவும் பொல்லாதவன். இக் கிழவன் உடல்தளர்ந்து இருக்கின்றான்'' என்று இழிந்த சொற்களைக் கூறுவதற்கு முன்பே, நான்கு மறைகளையும் கற்று தினமும் ஓதிக் கொண்டிருக்கின்ற, நற்கருத்துக்களை எடுத்தியம்புகின்ற அந்தணர்கள் நிலைபெற்று வாழ்கின்ற நல்லவர்கள் நிறைந் திருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு தொழுது வணங்குவோமாக!

வாளொண்கண் ணல்லார் தாங்கள் மதனனென் றார்தம்மை,
'கேளுமின் ஈளையோ டேங்கு கிழவன்'என் னாதமுன்,
வேள்வும் விழவும் வீதியி லென்று மறாதவூர்,
நாளு நறையூர் நாம்தொழு துமெழு நெஞ்சமே! 1485

என் நெஞ்சமே! வாள்போன்று அழகிய கூர்மையான கண்களையுடைய பெண்கள் முன்பெல்லாம் ''மன்மதன்'' என்று உயர்வாக ஆண்களை அழைத்துவிட்டு, இப்பொழுது, இக்கிழவன் கோழையானது மேன்மேலும் வந்து கொண்டு ஏங்கிக் கொண்டி ருக்கின்ற கிழவன்'' என்பதை நீங்கள் யாவரும் கேளுங்கள் என்று

Koviloor Digital Library

கூறி இகழ்ந்து பேசுவதற்கு முன்பே திருவீதிகளில் யாகங்களும், விழாக்களும் ஒரு நாளும் தவறாமல் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு தொழுது வணங்குவோமாக!

கனிசேர்ந் திலங்குநல் வாயவர் காதன்மை விட்டிட,
குனிசேர்ந் துடலம் கோலில் தளர்ந்திளை யாதமுன்,
பனிசேர் விசும்பில் பான்மதி கோள்விடுத் தானிடம்,
நனிசேர் நறையூர் நாம்தொழு துமெழு நெஞ்சமே! 1486

என் நெஞ்சமே! கோவைப் பழம் போன்ற சிவந்த வாயினையுடைய பெண்கள் இதுவரை வைத்திருந்த அன்பினை விலக்கி வைத்துவிட்டு, கூன் விழுந்து, உடல் தளர்ந்து, கோலையே துணையாகக் கொண்டு நடக்கும் ''முதுமைக் காலம்'' என்பது உண்டாவதற்கு முன்பே, பனி நிறைந்திருக்கின்ற ஆகாயத்தில் பால் போன்று ஒளி வீசும் வெண்மைநிறம் கொண்ட சந்திரனுக்குண்டான துன்பத்தைப் போக்கியருளிய, ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு நாம் தொழுது வணங்குவோமாக!

*'பிறைசேர் நுதலார் பேணுதல் நம்மை யிலாதமுன்,
நறைசேர் பொழில்சூழ் நறையூர் தொழுநெஞ்ச மே!'என்ற,
கறையார் நெடுவேல் மங்கையர் கோன்கலி கன்றிசொல்,
மறவா துரைப்பவர் வானவர்க் கின்னர சாவரே. 1487

பிறைச் சந்திரனைப் போன்ற நெற்றியையுடைய பெண்கள், நம்முடைய முதுமைக் காலத்தில், இதுவரை அளித்துவந்த ஆதரவினை நீக்கிக் கொள்ளும்படியான முதுமைப்பருவம் அடைவதற்கு முன்பே, தேன் நிறைந்திருக்கும், சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் தொழுது வணங்க வேண்டும்! நெஞ்சமே! என்று கறைபடிந்த நீண்ட நெடிய கூர்மையான ''வேல்'' ஆயுதத்தினைக் கொண்டு ஆட்சிபுரிந்தவருமான ''கலிகன்றி'' என்றழைக்கின்ற திருமங்கை ஆழ்வார் ஒரு துளியும் மறவாமல் எடுத்துரைத்த இப்பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்ல அடியவர்கள் விண்ணுலகத்தவர்கட்கு இனிய அரசர்களாகத் திகழ்வர்.

Koviloor Digital Library

5. கலங்க
திருநறையூர்

கலிநிலைத்துறை

*கலங்க முந்நீர் கடைந்தமு தங்கொண் டே,இமையோர்
துலங்கல் தீர நல்கு சோதிச் சுடராய,
வலங்கை யாழி யிடங்கைச் சங்க முடையானூர்,
நலங்கொள் வாய்மை யந்தணர் வாழும் நறையூரே. 1488

விண்ணுலகத் தேவர்களின் கலக்கம் தீரும்படியாகக் கடல் கலங்கிப் போகுமாறு கடைந்தெடுத்து அமுதினைக் கண்டெடுத்து அளித்தருளிய எம்பெருமான், சோதி வடிவினனாக நின்று, வலத் திருக்கரத்தில் திருவாழியானையும், இடது திருக்கரத்தில் திருச் சங்கினையும் கொண்டிருக்கின்ற எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் யாதெனின், நன்மை களையே பிறருக்குச் செய்து கொண்டு, உண்மையினையே உரைத்து, உண்மையாகவே நடந்து கொள்ளுகின்ற அந்தணர்கள் வாழ்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

முனையார் சீய மாகி யவுணன் முரண்மார்வம்,
புனைவா ளுகிரால் போழ்பட வீர்ந்த புனிதனூர்,
சினையார் தேமாஞ் செந்தளிர் கோதிக் குயில்கூவும்,
நனையார் சோலை சூழ்ந்தழ காய நறையூரே. 1489

போர் முனையில் நின்று போரிடும் பொருத்தமான ''நரசிம்ம மூர்த்தி''யாகத் திருஅவதாரம் மேற்கொண்டு இரணியன் என்னும் அசுரனின் முரட்டு மார்பினைத் தன் ஒளிமிக்க வாள் போன்ற கூர்மையான நகங்களைக் கொண்டு இருகூறாகப் பிளந்து அவனுயிரைப் போக்கியருளிய தூய்மை உடையவனாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் என்பது யாதெனின், மாமரக் கிளைகளிலுள்ள செந்தளிர்களைக் கோதியவாறு, அம்மரங்களில் தங்கியுள்ள குயில்கள் கூவிக் கொண்டிருக்கின்ற அளவில் அரும்புகள் நிறைந்த சோலைகள் சூழ்ந்து, அழகாகக் காட்சி யளிக்கும் ''திருநறையூர்'' என்னும் திருத்தலமாகும்.

Koviloor Digital Library

ஆனைப் புரவி தேரொடு காலா ளணிகொண்ட,
சேனைத் தொகையைச் சாடி யிலங்கை செற்றானூர்,
மீனைத் தழுவி வீழ்ந்தெழும் மள்ளர்க் கலமந்து,
நானப் புதலில் ஆமை யொளிக்கும் நறையூரே. 1490

யானை, குதிரை, தேர், காலாள் என்கின்ற நால்வகைப் படைகளுடன் கூடிய சேனைகளைக் கொண்டு சென்று இலங்கையை அழித்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் யாதெனின், உழவர்கள் தம் இருகரங்களாலும் மீன்களைப் பிடிப்பதற்காக முயற்சி மேற்கொண்டபோது கீழே தள்ளப்பட்டு விழுந்து எழுந்திருப்பதைக் கண்ட ஆமைகள் மஞ்சள் செடிகளின் புதரில் மறைத்துக் கொள்ளும் வகையில் வளம்மிக்க ''திருநறையூர்'' என்னும் திருத்தலமாகும்.

உறியார் வெண்ணெ யுண்டுர லோடும் கட்டுண்டு,
வெறியார் கூந்தல் பின்னை பொருட்டுஆன் வென்றானூர்,
பொறியார் மஞ்ஞை பூம்பொழில் தோறும் நடமாட,
நறுநாண் மலர்மேல் வண்டிசை பாடும் நறையூரே. 1491

உறிகளில் வைத்திருந்து வெண்ணெயை உண்டதனால் சினம் கொண்ட தாய் யசோதைப் பிராட்டி உரலுடன் சேர்த்துக் கட்டிப் போட்டாள். மணம் வீசுகின்ற கூந்தலை உடைய நப்பின்னைப் பிராட்டியை அடையும் பொருட்டு எருதுகளை வென்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், சோலைகளிலேயுள்ள புள்ளிகளையுடைய மயில்கள் நடனமாடிக் கொண்டிருக்க, மணம் வீசுகின்ற மலர்களின்மீது அமர்ந்து தேனையுண்ணும் வண்டுகள் இன்னிசை பாடிக் கொண்டிருக்கும் வளம்மிக்க ''திருநறையூர்'' என்னும் திருத்தலமாகும்.

விடையேழ் வென்று மென்தோ ளாய்ச்சிக் கன்பனாய்,
நடையால் நின்ற மருதம் சாய்த்த நாதனூர்,
பெடையோ டன்னம் பெய்வளை யார்தம் பின்சென்று,
நடையோ டியலி நாணி யொளிக்கும் நறையூரே. 1492

ஏழு காளைகளை வென்று மென்தோளை உடைய நப்பின்னைப் பிராட்டியை அன்புடன் கைப்பிடித்துத் திருமணம் செய்து கொண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், தான் குழந்தை

Koviloor Digital Library

யாக வளர்ந்து வருகின்றபோது தவழ்ந்து சென்ற அளவிலேயே இரண்டு மருதமரங்களையும் சாய்த்தான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருத்தலம் யாதெனின், வளையல்களை அணிந்து கொண்டிருக்கும் பெண்களின் பின்னே அன்னப்பறவை தன் பெண் அன்னப்பறவையுடன் சென்று, அப்பெண்களின் நடையைப் போன்று அவைகளும் நடைபயின்று, அஃது இயலாத நிலை உண்டானதால் வெட்கப்பட்டு ஒளிந்து கொள்கின்ற வளமிக்க ''திருநறையூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

பகுவாய் வன்பேய் கொங்கை சுவைத்தா ருயிருண்டு,
புகுவாய் நின்ற போதகம் வீழப் பொருதானூர்,
நெகுவாய் நெய்தல் பூமது மாந்திக் கமலத்தின்,
நகுவாய் மலர்மே லன்ன முறங்கும் நறையூரே. 1493

பருத்த வாயினையுடைய ''பூதனை'' என்னும் பேயின் முலைப் பாலைச் சுவைத்து உண்டு, அதனால் அவள் உயிரையும் உண்டு, ''குவலயாபீடம்'' என்னும் பெரிய மதயானையைப் போரிட்டு வென்று, அழித்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருத்தலம் எதுவென்றால், அன்னப்பறவைகள் பூத்துக் கிடக்கின்ற நெய்தல் பூக்களில் உள்ள தேனினைப் பருகிவிட்டு அதன் அருகில் மலர்ந்துள்ள தாமரை மலர்களில் உறங்கிக் கொண்டிருக்கும் வளம்மிக்க ''திருநறையூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

முந்து நூலும் முப்புரி நூலும் முன்னீந்த,
அந்த ணாளன் பிள்ளையை யஞ்ஞான் றளித்தானூர்,
பொந்தில் வாழும் பிள்ளைக் காகிப் புள்ளோடி,
நந்து வாரும் பைம்புனல் வாவி நறையூரே. 1494

மிகப் பழங்காலந்தொட்டு சிறப்புடன் வழங்கி வருகின்ற நூலாகிய வேதங்களைத் தனக்குப் பயிற்றுவித்துப் பூணூலையும் அணிவித்த ''சாந்தீபினி'' என்னும் ஆச்சாரியனின் மகனைக் கடலில் மூழ்கியிருந்த ஆபத்தான நிலையினின்றும் காப்பாற்றி ஆச்சாரி யனின் காணிக்கையாகச் சமர்ப்பித்தருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய திருத்தலம் யாதெனின், மரப்பொந்தில் வாழ்கின்ற குஞ்சுகளின் உணவின்

Koviloor Digital Library

பொருட்டு நத்தைகளைத் திரட்டிக் கொண்டு வந்து அளிக்கின்ற அளவில் நீர்வளம் மிக்குள்ள திருக்குளங்கள் நிறைந்துள்ள ''திருநறையூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

வெள்ளைப் புரவித் தேர்விச யற்காய் விறல்வியூகம்
விள்ள, சிந்துக் கோன்விழ வூர்ந்த விமலனூர்,
கொள்ளைக் கொழுமீ னுண்குரு கோடிப் பெடையோடும்,
நள்ளக் கமலத் தேற லுகுக்கும் நறையூரே. 1495

வெள்ளை நிறமுடைய குதிரைகளைப் பூட்டிய தேரின் மீதிருக்கும் அர்ச்சுனனுக்காக வேண்டி, அணிவகுத்துப் போரிடு கின்ற எதிரிகளின் போர்ப்படையினரைச் சிதறி ஓடும்படிச் செய்து சிந்து தேசத்து அரசன் ''ஜெயத்திரதன்'' என்பவனின் ஆயுள் முடியும்படியாக அத்தேரினைச் செலுத்திய தூய்மையானவனான எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருத்தலம் என்பது யாதெனின், நாரைகள் தன் பெண் நாரைகளுடன் சேர்ந்து கொண்டு கொழுத்து வளர்ந்த மீன்களை உண்டபின்பு, அருகிலுள்ள தாமரைப் பூவிலுள்ள தேனை அருந்து கின்ற அளவில் நீர்வளம் மிக்க வயல்களும் திருக்குளங்களும் நிறைந்துள்ள ''திருநறையூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

*பாரை யூரும் பாரந் தீரப் பார்த்தன்தன்
தேரை யூரும் தேவ தேவன் சேருமூர்,
தாரை யூரும் தண்தளிர் வேலி புடைசூழ,
நாரை யூரும் நல்வயல் சூழ்ந்த நறையூரே. 1496

இப்பூமியின்மீது நிறைந்துள்ள சுமைகளை நீக்கும்படியாகப் ''பார்த்தன்'' என்னும் அர்ச்சுனின் தேரைச் செலுத்திய தேவர் களுக்கெல்லாம் தலைவனான தேவாதி தேவன், எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் திருத்தலம் எதுவென்றால், தேன் நிறைந்துள்ள மலர்களை உடைய குளிர்ச்சியுடன் கூடிய இளந்தளிர்கள் நிறைந்த வேலிகள் நாற்புறமும் அமைந்திருக்கின்ற நிலையில் நாரைகள் உலவிக் கொண்டிருக்கின்ற நீர்வளம்மிக்க வயல்கள் சூழ்ந்த ''திருநறையூர்'' என்னும் திருத்தலம் என்பதாகும்.

Koviloor Digital Library

*தாமத் துளப நீண்முடி மாயன் தான்நின்ற,
நாமத் திரள்மா மாளிகை சூழ்ந்த நறையூர்மேல்,
காமக் கதிர்வேல் வல்லான் கலிய னொலிமாலை,
சேமத் துணையாம் செப்பு மவர்க்குத் திருமாலே. 1497

திருத்துழாயினால் தொடுக்கப்பெற்ற நீண்ட மாலையைத் தம் நீண்ட திருமுடியில் சூடிக் கொண்டிருக்கின்ற மாயச் செயல்களைச் செய்து கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், பெரும் புகழ்பெற்ற மாடமாளிகைகள் நிறைந்துள்ள ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிவதனை ஒளி பொருந்திய வேற்படைகளைக் கொண்டு வலிமைமிக்க ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ''சொல் மாலை'' என்னும் இப்பத்துப் பாசுரங்கள் கற்றுவல்ல அடியவர் பெருமக்கள் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் எப்பொழுதும் உன் துணையாக நின்று வேண்டிய நன்மைகளையெல்லாம் அளித்து அருளும் பெரும்பேற்றினைப் பெறுவர்.

6. அம்பரமும் திருநறையூர்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*அம்பரமும் பெருநிலனும் திசைக ளெட்டும்
அலைகடலும் குலவரையும் உண்டகண்டன்,
கொம்பமரும் வடமரத்தி னிலைமேல்பள்ளி
கூடினான் திருவடியே கூடுகிற்பீர்,
வம்பவிழும் செண்பகத்தின் வாச முண்டு
மணிவண்டு வகுளத்தின் மலர்மேல்வைகு,
செம்பியன்கோச் செங்கணான் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. 1498

ஆகாயமும், பரந்து கிடக்கின்ற இப்பெரிய பூமியும், எட்டுத் திசைகளும், அலைகள் வீசிக் கொண்டிருக்கின்ற கடல்களும், உயர்ந்தோங்கிய மலைகளும் ஆகிய இவற்றை எல்லாம் முன்பொரு சமயம் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் உண்டு தன் வயிற்றில் அடக்கிக் கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் கிளைகள் பலவற்றை உடைய ஆலமரத்தின் இளந்தளிரின்மீது பள்ளி

Koviloor Digital Library

கொண்டிருக்கின்ற எம்பெருமானுடைய திருவடிகளையே சென்று சேரவேண்டுமென்று விரும்புகின்ற அடியவர்களே! மணம் வீசுகின்ற செண்பக மலர்களின் வாசனையினை வண்டுகள் அனுபவித்துவிட்டுப் பின்பு மகிழம்பூவின் மீது தங்கியிருக்கக் கூடியதாகிய, சோழமன்னன் கோச்செங்கணான் என்பவன் திருப் பணி செய்த திருக்கோயிலாகிய ''திருநறையூர்'' என்னும் திருத் தலத்திற்குச் சென்று ''திருமணிமாடம்'' என்னும் திருக் கோயிலுக்குச் சென்று எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவியுங்கள்.

கொழுங்கயலாய் நெடுவெள்ளங் கொண்ட காலம்
குலவரையின் மீதோடி யண்டத்தப்பால்,
எழுந்தினிது விளையாடு மீச னெந்தை
இணையடிக்கீ ழினிதிருப்பீர்! இனவண்டாலும்,
உழும்செறுவில் மணிகொணர்ந்து கரைமேல் சிந்தி
உலகெல்லாம் சந்தனமு மகிலுங்கொள்ள,
செழும்பொன்னி வளங்கொடுக்கும் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. 1499

உலகப் பிரளயம் உண்டான காலத்தில் பெருவெள்ளம் ஏற்பட்டு உலகங்களை எல்லாம் ஆக்ரமித்துக் கொண்டிருந்தபோது, பெரியதாக நன்கு வளர்ச்சியையுடையதான ''கயல்மீன்'' வடிவு கொண்டு (மச்சாவதாரம்) பெரிய மலைகளின்மீது சென்று உலாவி வந்து, அதற்கும் அப்பாலுள்ள அண்டப்பித்தி அளவும் சென்று திருவிளையாடல் புரிந்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் இனிய திருவடிகளின் கீழ் இருந்து கொண்டு சுகமாக வாழ்கின்ற நிலையை அடைவதற்கு விரும்புகின்ற அடியவர்களே! வண்டு களின் கூட்டங்கள் ஒன்று கூடி நடமாடுகின்ற, இசையை ஒலிக்கின்ற திருக்காவேரி நதியானது வயல் வரப்புகளில் பாய்ந்து செல்கின்ற போது இரத்தினமணிகளைக் கொண்டு வந்து சிதறச் செய்தும், அந்நதியில் அடித்துப் புரண்டு ஓடிவரும் அகில்கட்டைகளையும், சந்தனக் கட்டைகளையும் அங்குள்ள மக்களெல்லாம் எடுத்துச் செல்லும்படியாக வளம் கொழிக்கும் நாடாகிய சோழநாட்டு மன்னனாகிய ''கோச்செங்கணான்'' என்பவன் ''திருப்பணி'' செய்த திருக்கோயிலாகிய ''திருநறையூர் திருமணிமாடம்'' என்னும் திருக்கோயில் சென்று எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவியுங்கள்.

Koviloor Digital Library

பவ்வநீ ருடையாடை யாகச் சுற்றிப்
பாரகலம் திருவடியாப் பவனம்மெய்யா,
செவ்விமா திரமெட்டும் தோளா அண்டம்
திருமுடியா நின்றான்பால் செல்லகிற்பீர்,
கவ்வைமா களிறுந்தி விண்ணி யேற்ற
கழல்மன்னர் மணிமுடிமேல் காகமேற,
தெய்வவாள் வலங்கொண்ட சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. 1500

உலகினைச் சூழ்ந்திருக்கின்ற கடல்நீரை அரையில் உடுத்திக் கொள்ளும் பொன்னாடையாகப் பயன்படுத்திக் கொண்டு, பரந்து கிடக்கின்ற இவ்வுலகம் முழுவதும் திருவடியாகக் கொண்டு, காற்றினையே தன் திருமேனியாகவும் கொண்டு, திசைகள் எட்டினையும் எட்டுத் திருத்தோள்களாகக் கொண்டு, ஆகாயத்தின் உச்சியினையே தன் திருமுடியாகவும் கொண்டு விளங்குகின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனிடத்தே சென்று சேர்வதற்கு விரும்பும் அடியவர்களே! ஆரவாரம் மிக்க ஆண்யானைகளை அணிவகுத்துக் கொண்டு ''வெண்ணி'' என்ற இடத்தில் தன்னை எதிர்த்து வந்த, வீரக்கழலை அணிந்து வந்த மன்னர்களின் மணிமுடி மீது காகம் ஏறிக் கொத்தும்படியாகத் தெய்வத்தன்மை பொருந்திய வாளின் வலிமையைப் பெற்றிருக்கின்ற சோழமன்னன் ''கோச் செங்கணான்'' என்பவன் போரில் வெற்றி பெற்று, ''திருப்பணி'' செய்த திருக்கோயிலாகிய ''திருநறையூர்'' திருமணிமாடம் என்னும் திருக்கோயில் சென்று எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவியுங்கள்.

பைங்கணா ளரியுருவாய் வெருவ நோக்கிப்
பருவரைத்தோ ளிரணியனைப் பற்றிவாங்கி,
அங்கைவா ளுகிர்நுதியா லவன தாகம்
அங்குருதி பொங்குவித்தா னடிக்கீழ்நிற்பீர்,
வெங்கண்மா களிறுந்தி விண்ணி யேற்ற
விறல்மன்னர் திறலழிய வெம்மாவுய்த்த,
செங்கணான் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. 1501

பசுமையான திருக்கண்களையுடைய நரசிம்மமூர்த்தியாகத் திருஅவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் பகைவர்கள்

Koviloor Digital Library

அஞ்சும்படியாக மிரட்சியுடன்கூடிய பார்வையினால் பார்த்து, பருத்த மலையைப் போன்று உறுதியான தோள்களைக் கொண்டுள்ள ''இரணியன்'' என்னும் அசுரனை வாள் போன்ற தம் கூரிய நகங்களைக் கொண்டு, அவனுடைய அகன்ற மார்பினைப் பிளந்து, அவ்வுடலிலிருந்து இரத்தத்தைப் பெருகச் செய்து அழித்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் இணைத் திருவடிகளின்கீழ் இருப்பதற்கு விரும்புகின்ற அடியவர்களே! வெம்மை மிக்க கொடிய கண்களையுடைய பெரிய ஆண் யானைகளைத் தள்ளி முந்திக் கொண்டு ''வெண்ணி'' என்னும் இடத்தில் தன்னை எதிர்த்து வந்த சூரர்களான அசுரர்களின் வலிமை அழியும் பொருட்டுக் கடுமையான குதிரைகளை வழிநடத்திச் சென்று வெற்றி பெற்றவனாகிய ''கோச்செங்கணான்'' என்னும் சோழமன்னன் சென்று சேர்ந்து வணங்கித் துதிக்கின்ற ''திருநறையூர் '' ''திருமணிமாடம்'' என்னும் திருக்கோயிலுக்குச் சென்று எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனைக் கண்டு சேவியுங்கள்!

அன்றுலக மூன்றினையு மளந்து வேறோர்
அரியுருவா யிரணியன தாகங்கீண்டு,
வென்றவனை விண்ணுலகில் செலவுய்த் தாற்கு
விருந்தாவீர்! மேலெழுந்து விலங்கல்பாய்ந்து,
பொன்சிதறி மணிகொணர்ந்து கரைமேல் சிந்திப்
புலம்பரந்து நிலம்பரக்கும் பொன்னிநாடன்,
தென்தமிழன் வடபுலக்கோன் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. 1502

முன்பு ஒரு சமயம் ''திரிவிக்கிரமன்'' என்னும் அவதாரம் மேற்கொண்டு மூன்று உலகங்களையும் அளந்துவிட்டுப் பின்பு ''நரசிம்மமூர்த்தி''யாகத் திருஅவதாரம் மேற்கொண்டு ''இரணியன்'' என்னும் அசுரனின் அகன்ற மார்பினை இரண்டாகப் பிளந்து அவனை வென்று விண்ணுலகு அடையச் செய்துள்ள எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்கு விருந்தினராவதற்கு விரும்பும் அடியவர்களே! காவிரியாறு செல்லும் இடங்களில் தடையாக இருந்த மலைகளை அதன் வேகத்தின் பயனால் உடைத்துக் கொண்டு பாய்ந்துவர, அதன் வேகத்தில் பொன்னைச் சிதறிக் கொண்டு, மணிகளைக் கொண்டு வந்து சேர்க்க அதன் கரையின்மீது விழுமாறு செய்து, வெளிநிலங்கள் எங்கும் பரந்து கிடக்கின்ற சோழமன்னன்

Koviloor Digital Library

''கோச்செங்கணான்'' என்பவன் வடநாட்டை அடிமைப்படுத்தித் தென்தமிழ்நாட்டினை ஆண்டு கொண்டிருக்கும் நிலையில் சென்று சேர்ந்து வணங்கித் துதிக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத் தலத்தில் அமைந்துள்ள ''திருமணிமாடம்'' என்னும் திருக்கோயில் சென்று எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைதக் கண்டு சேவியுங்கள்.

தன்னாலே தன்னுருவம் பயந்த தானாய்த்
தயங்கொளிசேர் மூவுலகும் தானாய்வானாய்,
தன்னாலே தன்னுருவில் மூர்த்தி மூன்றாய்த்
தானாய னாயினான் சரணென்றுய்வீர்,
மின்னாடு வேலேந்து விளைந்த வேளை
விண்ணேறத் தனிவேலுய்த் துலகமாண்ட,
தென்னாடன் குடகொங்கன் சோழன் சேர்ந்த
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. 1503

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தன் திருமேனியின் இயல்புகளைத் தானாகவே அமைத்துக் கொண்டவனாகி, ஒளியுடைய மூவகை உலகங்களுக்கும், தானே தலைவனாகி நின்று, திருப் பரமபதத்திற்குத் தலைவனாகி நின்று, பிரம்மா, விஷ்ணு, சிவ பெருமான் ஆகிய மும்மூர்த்திகளும் தான் ஒருவனாகவே நிலைத்து நின்று, தானே ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருக்கின்ற எம்பெருமானே சரணம் என்று கருதி உய்யும் அடியவர்களே! ஒளி பொருந்திய வேலை ஏந்துகின்ற ''கொங்கு வேள்'' என்பவனை வேலை வீசியதன் மூலம் விண்ணுலகடையச் செய்து, தென்னாட் டினையும், கொங்கு நாட்டினையும் ஒரு சேர ஆட்சிபுரிந்து வந்த சோழமன்னன் சென்று வணங்கிக் கொண்டிருக்கின்ற ''திரு நறையூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருமணி மாடம்'' என்னும் திருக்கோயில் சென்று எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனைக் கண்டு சேவியுங்கள்.

முலைத்தடத்த நஞ்சுண்டு துஞ்சப் பேய்ச்சி
முதுதுவரைக் குலபதியாக் காலிப்பின்னே,
இலைத்தடத்த குழலூதி யாயர் மாதர்
இனவளைகொண் டானடிக்கீ ழெய்தகிற்பீர்,
மலைத்தடத்த மணிகொணர்ந்து வைய முய்ய
வளங்கொடுக்கும் வருபுனலம் பொன்னிநாடன்,
சிலைத்தடக்கைக் குலச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. 1504

Koviloor Digital Library

முன்பு ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் பெற்றுச் சிறுகுழந்தையாக இருந்தபோது, ''பூதனை'' என்னும் பேயின் நஞ்சு கலந்த முலைப்பாலை உண்டு, அப்பேயினை அஃதித்து, பழைமை வாய்ந்த ''துவாரகை'' என்னும் திருநாட்டிற்கு மன்னனாய், பசுக் கூட்டங்களின் பின்னே இலையினைக் கொண்டு செய்த குழலை ஊதிக் கொண்டு போக, இடைக்குலப் பெண்களின் வளையல் களைக் கவர்ந்து கொண்டு, விளையாடினவன் என்ற சிறப்புகளைப் பெற்றிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளை அடைய விரும்பும் அடியவர்களே! இவ்வுலகம் உய்யும் பொருட்டுக் காவிரி நதியானது மலைகளில் உண்டான மலை யினின்று கிடைக்கும் இரத்தினங்களை உருட்டிக் கொண்டு ஓடி வருகின்றது. இப்படிப்பட்ட வளம்மிக்க பொன்னி நாட்டிற்கு மன்னனாகிய சோழர்குலத்து மன்னன் சென்று சேர்ந்து வணங்கித் துதிக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருமணிமாடத் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவியுங்கள்.

முருக்கிலங்கு கனித்துவர்வாய்ப் பின்னை கேள்வன்
மன்னெல்லாம் முன்னவியச் சென்று,வென்றிச்
செருக்களத்துத் திறலழியச் செற்ற வேந்தன்
சிரந்துணித்தான் திருவடிநும் சென்னிவைப்பீர்,
இருக்கிலங்கு திருமொழிவா யெண்டோ ளீசற்கு
எழில்மாட மெழுபதுசெய் துலகமாண்ட,
திருக்குலத்து வளச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. 1505

முருக்கம்பூ, கோவைப்பழம் ஆகியவற்றின் நிறத்தினை ஒத்த உதடுகளையுடைய நப்பின்னைப்பிராட்டியின் கணவன், முன்பொரு காலத்தில் மன்னர்களெல்லாரும் அழியும்படியாகப் போர்க்களத்தில் சென்று, பகையரசனான கார்த்த வீரியார்ச்சுனன் என்பவனுடைய மிடுக்கு அழியுமாறு அவனுடைய தலையைத் துணித்து, அவன் உயிரைப் போக்கிய எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரானாகவும், ஸ்ரீபரசுராமராகவும் அவதாரங்கள் மேற் கொண் டருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளைத் தம் தம் தலையின்மீது சூடிக் கொள்ளும் விருப்பம்மிக்க அடியவர்களே! இருக்கு வேதத்தைத் தம் வாயினால் ஓதித் திருமாலை வணங்கும்

Koviloor Digital Library

எட்டுத் தோள்களைக் கொண்டுள்ள சிவபெருமானுக்கு, எழில்மிக்க எழுபது மாடக் கோயிலைக் கட்டிய இவ்வுலகினை ஆட்சிபுரிந்த உயர்குலத்துச் சோழமன்னன் சென்று சேர்ந்து வணங்கித் துதிக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருமணி மாடம்'' என்னும் திருக்கோயிலுக்குச் சென்று எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவியுங்கள்.

KOVILOOR ... LIBRARY, KOVILO... 44623

தாராளன் தண்ணரங்க வாளன் பூமேல்
தனியாளன் முனியாள ரேத்தநின்ற
பேராளன், ஆயிரம்பே ருடைய வாளன்
பின்னைக்கு மணவாளன் பெருமைகேட்பீர்
பாராள ரவரிவரென் றழுந்தை யேற்ற
படைமன்ன ருடல்துணியப் பரிமாவுய்த்த,
தேராளன் கோச்சோழன் சேர்ந்த கோயில்
திருநறையூர் மணிமாடம் சேர்மின்களே. 1506

திருப்பரமபதம், இவ்வுலகம் ஆகிய இரண்டினையும் பாதுகாக்கும் பொருட்டுத் தனித்ததோர் மாலையைச் சூடிய எம்பெருமான் குளிர்ந்த திருவரங்க மாநகரை ஆண்டு கொண்டு தாமரை மலரில் திருமகள் நாதனாகவும், முனிவர்கள் ஏத்தித் துதிக்கின்ற பெருமை கொண்டவனாகவும், ஆயிரம் திருநாமங்களை உடையவனாகவும், நப்பின்னைப் பிராட்டிக்குக் கணவனாகவும் இருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் பெருமைகளைக் கேட்டு அறிய விரும்பும் அடியவர்களே! இப்பூமியை ஆள்பவர்கள் இன்னார் இன்னாரென்று பெரும்புகழுடன் ஆண்டு கொண்டிருக்கத் திருவழுந்தூரில் வந்து எதிர்த்துப் போரிட்ட படைகளையுடைய அரசர்களின் உடல்கள் அற்றுப் போகும்படியாகக் குதிரைப் படைகளைச் செலுத்திவிட்டு, தேரின்மீது ஏறிப் போரிடும் வீரனான மன்னன் ''கோச்செங்கண் சோழன்'' சென்று சேர்ந்து வணங்குகின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் அமைந்துள்ள ''திருமணி மாடம்'' என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவியுங்கள்.

செம்மொழிவாய் நால்வேத வாணர் வாழும்
திருநறையூர் மணிமாடச் செங்கண்மாலை,
பொய்ம்மொழியொன் றில்லாத மெய்ம்மை யாளன்
புலமங்கைக் குலவேந்தன் புலமையார்ந்த,

Koviloor Digital Library

அம்மொழிவாய்க் கலிகன்றி யின்பப் பாடல்
பாடுவார் வியனுலகில் நமனார்பாடி,
வெம்மொழிகேட் டஞ்சாதே மெய்ம்மை சொல்லில்
விண்ணவர்க்கு விருந்தாகும் பெருந்தக்கோரே. 1507

உண்மைகளை எடுத்தியம்பும் நல்ல கருத்துகள் அடங்கி யிருக்கின்ற நான்கு வகை மறைகளைக் கற்றுவல்ல அந்தணர்கள் வாழ்ந்து வருகின்ற திருநறையூர் திருமணிமாடம் என்னும் திருக் கோயிலில் எழுந்தருளி வீற்றிருக்கும் செந்தாமரைக் கண்ணனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றி, பொய்யான கருத்துகள் ஏதுமில்லாத மெய்ம்மொழிகளையே எடுத்துரைக்கும் திருமங்கை நகர்க்குத் தலைவனாகிய புலமை நிறையப் பெற்றுள்ள நிலையில், திருமொழிகளைத் தம் வாயினால், 'கலியன்' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இன்பம் நிறைந்த இப்பாசுரங்கள் பத்தினையும் பயின்று பாடவல்ல ஆற்றல் பெற்றவர்கள் விண் ணுலகில் இயமன் பாடுகின்ற கடுமையான சொற்களைக் கேட்டு அஞ்சாமல் உண்மைக் கருத்துகளை எடுத்துரைக்கும் விண்ணுலகத் தேவர்கட்கு நல்விருந்தினர்களாகும் ஒரு பெருந்தகுதியினைப் பெறுவதற்கான தகுதிகளைப் பெற்றவர்களாவர்.

7. ஆளும் பணியும்
திருநறையூர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*ஆளும் பணியு மடியேனைக்
கொண்டான் விண்ட நிசாசரரை,
தோளும் தலையும் துணிவெய்தச்
சுடுவெஞ் சிலைவாய்ச் சரந்துரந்தான்,
வேளும் சேயு மனையாரும்
வேற்க ணாரும் பயில்வீதி
நாளும் விழவி னொலியோவா
நறையூர் நின்ற நம்பியே. 1508

அடியேனை ஆட்கொண்டு, அடிமைப்படுத்தித் தொண்டு களைச் செய்யக் கூடியவனாகத் திருவுள்ளம் கொண்டுள்ள எம்பெருமான், பகைவர்களான அரக்கர்களின் தோள்களும்,

Koviloor Digital Library

தலைகளும் அற்று விழும்படிச் செய்தற் பொருட்டுக் கொடிய வில்லிலிருந்து பகைவர்களை அழிக்கும் ஆற்றல் பெற்ற அம்புகளைச் செலுத்திய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் எத் தன்மையைப் பெற்றவன் என்றால், மன்மதனையும் முருகனையும் ஒத்த அழகும், வீரமும், அறிவும் கொண்டிருக்கின்ற ஆண்களும், வேல் போன்ற கூர்மையான கண்களையுடைய பெண்களும் வாழ்ந்து கொண்டிருக்கின்ற திருவீதிகளையுடையதாகவும், நாள்தோறும் திருவிழாக்களின் ஆரவார ஒலிகள் ஓயாமல் ஒலித்துக் கொண்டிருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் என்னும் நம்பியேயாகும்.

முனியாய் வந்து மூவெழுகால்
 முடிசேர் மன்ன ருடல்துணிய,
தனிவாய் மழுவின் படையாண்ட
 தாரார் தோளான், வார்புறவில்
பனிசேர் முல்லை பல்லரும்பப்
 பான லொருபால் கண்காட்ட,
நனிசேர் கமலம் முகங்காட்டும்
 நறையூர் நின்ற நம்பியே. 1509

ஸ்ரீபரசுராம அவதாரம் மேற்கொண்டு எழுந்தருளி, முனிவராய்த் திருஅவதாரம் பெற்று, இருபத்தோரு தலைமுறையளவுக் காலங்களில் ஆட்சிபுரிந்து வந்த அரசர்களின் உடல்கள் அழிந் தொழியும்படியாகக் கூரிய வாயையுடைய கோடரியை ஆயுதமாகக் கொண்டு, மாலையை அணிந்திருக்கும் திருத்தோள்களையுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந் தருளியிருக்கும் திருத்தலம் என்பது யாதெனின், சோலைகளில் மலர்ந்திருக்கின்ற முல்லை மலர்கள் அங்குள்ள பெண்களின் அழகிய பற்களைப் போன்று வெண்மையாக அமைந்திருக்கவும், மற்றோரிடத்தில் கருங்குவளை மலர்கள் அப்பெண்களின் கண்களைப் போன்று மலர்ந்திருக்கவும், மற்றும் ஓரிடத்தில் தாமரை மலர்கள் அப்பெண்களின் அழகிய முகம் போன்று மலர்ந்திருக்கக் கூடியது போன்று அமைந்திருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலமாகும்.

Koviloor Digital Library

தெள்ளார் கடல்வாய் விடவாய
சினவா ளரவில் துயிலமர்ந்து,
துள்ளா வருமான் விழவாளி
துரந்தா னிரந்தான் மாவலிமண்,
புள்ளார் புறவில் பூங்காவி
புலன்கொள் மாதர் கண்காட்ட,
நள்ளார் கமலம் முகங்காட்டும்
நறையூர் நின்ற நம்பியே. 1510

தெளிந்த நீரைக் கொண்டுள்ள திருப்பாற்கடலில், விடத்தினைக் கக்குகின்ற வாயினைக் கொண்டும், பகைவர்கள்மீது சீற்றம் கொண்டும், ஒளி பொருந்தியவனாகிய திருஅனந்தாழ்வான்மீது திருப்பள்ளி கொண்டருள்பவனும், துள்ளி ஓடி விளையாடும் பொய்ம்மானாகிய மாரீசன் என்னும் அரக்கன் மாண்டு போகும் படியாக அம்பினை எய்திய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானும், மகாபலிச்சக்கரவர்த்தி இயற்றிக் கொண்டிருந்த வேள்விச்சாலையின் முன்னே நின்று அவனிடமிருந்து இப்பூமியை இரந்து பெற்ற வனுமாகிய எம்பெருமான், பறவைகள் நிறைந்த சோலைகளில் மலர்ந்திருக்கின்ற செங்கழுநீர்ப் பூக்கள், அங்குள்ள அழகிய பெண்களின் கண்களைக் காட்டுவது போன்றும், மலர்ந்திருக்கின்ற தாமரை மலர்கள் அங்குள்ள பெண்களின் அழகு முகங்களைக் காட்டக் கூடியதுமான ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ''ஸ்ரீமந்நாராயணன்'' என்னும் நம்பியே ஆகும்.

ஒளியா வெண்ணெ யுண்டானென்
றுரலோ டாய்ச்சி யொண்கயிற்றால்,
விளியா ஆர்க்க ஆப்புண்டு
விம்மி யழுதான் மென்மலர்மேல்
களியா வண்டு கள்ளுண்ணக்
காமர் தென்றல் அலர்தூற்ற,
நளிர்வாய் முல்லை முறுவலிக்கும்
நறையூர் நின்ற நம்பியே. 1511

மறைவாக ஒளிந்து கொண்டு வெண்ணெயை உண்டான் என்பதறிந்து சினம் கொண்ட யசோதைப்பிராட்டி, கயிற்றினால் உரலுடன் அழகிய தாம்புக் கயிற்றினால் கட்டினாள். அவ்வாறு

Koviloor Digital Library

கட்டுண்டு விம்மிவிம்மி அழுத எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், மென்மையான மலர்களின்மீது அமர்ந்து கொண்டு தேனை உண்ட வண்டுகள் மகிழ்ச்சியுடன் இருக்க, அழகிய தென்றல் வீசுவதால் அங்குள்ள மலர்கள் சிதறிக் கீழே சிந்தும். குளிர்ந்த முகத்தையுடைய முல்லை மலர்கள் புன்சிரிப்பு சிரிப்பது போன்று வளம்மிக்க ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் நம்பியே ஆவார்.

வில்லார் விழவில் வடமதுரை
விரும்பி விரும்பா மல்லடர்த்து,
கல்லார் திரடோள் கஞ்சனைக்
காய்ந்தான் பாய்ந்தான் காளியன்மேல்,
சொல்லார் சுருதி முறையோதிச்
சோமுச் செய்யும் தொழிலினோர்,
நல்லார் மறையோர் பலர்வாழும்
நறையூர் நின்ற நம்பியே. 1512

''வடமதுரை'' என்னும் திருப்பதியில் வில்விழாவிற்குச் சென்றிருந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் தன்னை விரும்பாத மல்லர்களை அழித்துவிட்டுக் கல்போன்று பலம் வாய்ந்த தோள்களையுடைய கம்சனைக் கொன்று அழித்தான். ''காளியன்'' என்னும் நஞ்சு நிறைந்த பாம்பின்மீது குதித்து நடனமாடி அதனை அடக்கினான். நல்ல சொற்கள் நிரம்பிய மறைகளை முறையாக ஓதிக் கொண்டு இருப்பதையே தொழிலாகக் கொண்டுள்ள நற்செயல்கள் புரிகின்ற அந்தணர்கள் பலர் சேர்ந்து வாழ்ந்து வருகின்ற சிறப்புடைய ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! அந்த எம்பெருமானே நம் நம்பி ஆவார்.

வள்ளி கொழுநன் முதலாய
மக்க ளோடு முக்கண்ணான்
வெள்கி யோட, விறல்வாணன்
வியன்தோள் வனத்தைத் துணித்துகந்தான்,
பள்ளி கமலத் திடைப்பட்ட
பகுவா யலவன் முகம்நோக்கி,
நள்ளி யூடும் வயல்சூழ்ந்த
நறையூர் நின்ற நம்பியே. 1513

Koviloor Digital Library

சிவபெருமான் வள்ளியின் கணவனான முருகன் முதலிய தம் பிள்ளைகளுடன் சேர்ந்து வந்து ''வாணாசுரன்'' என்னும் அசுரன் போரிட்டபோது சிவபெருமான் வெட்கமடைந்து புறமுதுகு காட்டி ஓடின நிலையில் வலிமைமிக்க வாணாசுரனின் அகன்ற தோள்களாகிய காட்டை வெட்டி மகிழ்ச்சியுற்ற எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான், வயல்களில் அகன்ற பெரிய வாயையுடைய ஆண் நண்டு படுத்துக் கொண்டு உறங்குவதற்காகத் தாமரைப் பூக்களைச் சென்றடைந்ததும் அம்மலரில் அகப்பட்டுக் கொண்டு மகரந்தத்தூள் அதன் முகத்தில் படிந்திருப்பதால் அதன் பெண் நண்டு, அதன் முகத்தை நோக்கி ஆண் நண்டின்மீது சந்தேகம் கொண்டு ஊடல் கொள்கின்ற அளவுக்கு நீர்வளம் மிக்க வயல்கள் சூழ்ந்திருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என்னும் நம்பியே ஆவான்.

மிடையா வந்த வேல்மன்னர்
வீய விசயன் தேர்கடவி,
குடையா வரையொன் றெடுத்தாயர்
கோவாய் நின்றான் கூராழிப்
படையான், வேதம் நான்கைந்து
வேள்வி யங்க மாறிசையேழ்,
நடையா வல்ல அந்தணர்வாழ்
நறையூர் நின்ற நம்பியே. 1514

கூட்டம் கூட்டமாக நெருங்கி வந்து போரிட்ட வேற்படையை உடைய அரசர்கள் இறந்துபடும் படியாக, அர்ச்சுனனுக்குத் தேரைச் செலுத்திய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், ''கோவர்த்தனம்'' என்னும் மலையைக் குடையாகப் பிடித்து அதன்மூலம் இடையர்களைப் பாதுகாத்தருளி நின்றுள்ள எம்பெருமான் தன் கூர்மையான திருவாழி ஆழ்வானை ஆயுதமாகக் கொண்டிருப்பதுடன் நான்கு வேதங்கள், ஐந்து வேள்விகள் ஆறுவகையான வேதாங்கங்கள், ஏழுவகையான இசைகள் ஆகிய இவைகளில் வல்லவரான ஒழுக்கத்தில் சிறந்து வல்லவர்களாகத் திகழ்கின்ற அந்தணர்கள் சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கின்ற, வளம்மிக்க ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என்னும் நம்பியே ஆவான்.

Koviloor Digital Library

பந்தார் விரலாள் பாஞ்சாலி
கூந்தல் முடிக்கப் பாரதத்து,
கந்தார் களிற்றுக் கழல்மன்னர்
கலங்கச் சங்கம் வாய்வைத்தான்
செந்தா மரைமே லயனோடு
சிவனு மனைய பெருமையோர்,
நந்தா வண்கை மறையோர்வாழ்
நறையூர் நின்ற நம்பியே. 1515

பந்துகளைப் பிடித்து விளையாடுகின்ற விரல்களையுடைய பாஞ்சாலியின் கூந்தலை முடித்து, அவள் சபதத்தினை முடிக்கும் பொருட்டு பாரதப்போரில் மதம் கொண்ட யானைகளின்மீது ஏறிச் சண்டையிட வந்த வீரக்கழலையணிந்த துரியோதனன் முதலிய மன்னர்களின் அறிவு கலங்கிப் போகுமாறு, பாஞ்சசன்யம் என்னும் திருச்சங்கினைத் தம் திருவாயில் வைத்தூதிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் சிவந்த தாமரை மலரிலுள்ள பிரமனுடன் சிவபெருமான் ஆகியவர்கள்கட்குச் சமமான பெருமையை யுடையவர்களும், பிறர்க்கு வழங்குவதில் சிறிதளவு குறைபாடுகள் இல்லாத வள்ளன்மையுடையவர்களுமாகிய மறைகளைக் கற்றுணர்ந்த அந்தணர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற திருநறையூர் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் நம்பியே ஆவார்.

ஆறும் பிறையும் அரவமும்
அடம்பும் சடைமே லணிந்து,உடலம்
நீறும் பூசு யேறூரும்
இறையோன் சென்று குறையிரப்ப,
மாறொன் றில்லா வாசநீர்
வரைமார் வகலத் தளித்துகந்தான்,
நாறும் பொழில்சூழ்ந் தழகாய
நறையூர் நின்ற நம்பியே. 1516

கங்கைநதி, பிறைச்சந்திரன், பாம்பு, அடம்பம்பூ ஆகியவற்றைத் தன் சடையின்மீது அணிந்து கொண்டு, தன் உடல் முழுவதும் திருநீறு அணிந்து கொண்டு, காளை வாகனத்தின்மீது ஏறிச் செல்லும் சிவபெருமான் தனக்கு உண்டான குறையாகிய பிரம்மஹத்தி சாபத்தைப் போக்கியருளுமாறு வேண்டிட,

Koviloor Digital Library

அப்போது தன் அகன்ற திருமார்பிலிருந்து உண்டான மணம் வீசுகின்ற நீரை எடுத்து அளித்து அச்சாபத்தினைப் போக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் மணம்மிக்க சோலைகள் சூழ்ந் திருக்கின்ற அழகுமிக்க ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் திருமால் இந்நம்பியே ஆவார்.

*நன்மை யுடைய மறையோர்வாழ்
நறையூர் நின்ற நம்பியை,
கன்னி மதில்சூழ் வயல்மங்கைக்
கலிய னொலிசெய் தமிழ்மாலை,
பன்னி யுலகில் பாடுவார்
பாடு சாரா பழவினைகள்,
மன்னி யுலகம் ஆண்டுபோய்
வானோர் வணங்க வாழ்வாரே. 1517

ஆளும் முனி தெள்ளார் ஒளி வில் வள்ளி மிடை பந்து ஆறு நன்மை-மான்.

நன்மைகளையே எப்பொழுதும் மேற்கொண்டிருக்கின்ற மறைகளைக் கற்று உணர்ந்த அந்தணர்கள் வாழ்ந்து கொண் டிருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனைப் பற்றி மதில்களும் வயல்களும் சூழ்ந்திருக்கின்ற ''திருமங்கை'' என்னும் நகருக்குத் தலைவராகிய ''கலியன்'' என்று சிறப்பிக்கப் பெறும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலிமிக்க தமிழ்ப் பாசுரங்கள் பத்தினையும் நன்கு கற்றுணர்ந்து பாடு பவர்களின் பழைய தீவினைகள் ஒன்றும் அணுகாது. மேலும் அப்படிப்பட்ட பெருமக்கள் இம்மண்ணுலகில் நீண்டகாலம் வாழ்ந்திருந்து, ஆட்சிபுரிந்து வந்து, பின்பு விண்ணுலகத் தேவர்கள் வந்து வணங்கும்படியாக உயர்வு பெற்று வாழ்வர்.



Koviloor Digital Library

8. மான் கொண்ட திருநறையூர்

கொச்சகக் கலிப்பா

*மான்கொண்ட தோல்மார்வில் மாணியாய், மாவலிமண்
தான்கொண்டு தாளால் அளந்த பெருமானை,
தேன்கொண்ட சாரல் திருவேங் கடத்தானை,
நான்சென்று நாடி நறையூரில் கண்டேனே. 1518

மான் தோலைத் தன் திருமார்பில் உடுத்திக் கொண்ட பிரம்மச் சாரியாகத் திருவேடம் பூண்டு கொண்டு மகாபலிச் சக்கர வர்த்தியிடம் சென்று, அவன் வேள்வி முன்னே நின்று இந் நிலவுலகை யாசித்துப் பெற்றுத் ''திரிவிக்ரமனாக'' அவதாரம் பூண்டு தன் திருவடிகளால் இவ்வுலகினை அளந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் தேன் நிறைந்திருக்கின்ற மலைகளையுடைய திருமலையில் எழுந்தருளி யிருக்கும் திருவேங்கடத்தானை அடியேன் நாடிச் சென்று ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம் பெருமானைக் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

முந்நீரை முன்னாள் கடைந்தானை, மூழ்த்தநாள்
அந்நீரை மீனா யமைத்த பெருமானை,
தென்னாலி மேய திருமாலை யெம்மானை,
நன்னீர் வயல்சூழ் நறையூரில் கண்டேனே. 1519

முன்பொருசமயம் கடலைக் கடைந்த எம்பெருமானை, உலகப் பிரளயம் உண்டான காலத்தில் அந்நீரினுள் மீன் உருவாகி அக்கடல்நீரினை அடக்கிய பெருமை மிக்கவனை, ''திருவாலி'' என்னும் திருப்பதியில் எழுந்தருளி வீற்றிருக்கும் ''திருமால்'' எனத் திகழும் எம்பெருமானை நன்மையையே அளிக்கக் கூடிய நீர் நிறைந்திருக்கின்ற வயல்கள் சூழ்ந்திருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் அடியேன் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

தூவாய புள்ளூர்ந்து வந்து, துறைவேழம்
மூவாமை நல்கி முதலை துணித்தானை,
தேவாதி தேவனைச் செங்கமலக் கண்ணானை,
நாவாயு ளானை நறையூரில் கண்டேனே. 1520

Koviloor Digital Library

தூய்மையான வேத வடிவினனான கருடாழ்வாரை வாகனமாகக் கொண்டு அதன்மீது ஏறி வந்து, மடுவின்கரையில் சென்று சேர்ந்து, ''கஜேந்திரன்'' என்னும் யானைக்கு அங்குள்ள முதலையினாலுண்டான பெருந்துன்பத்தில் இருந்து நீங்கும் பொருட்டு தன் திருவாழியாழ்வானைக் கொண்டு அம்முதலையைத் துணிந்து கொன்ற எம்பெருமான் தேவாதி தேவனைச் செந்தாமரைக் கண்ணனை ''திருநாவாய்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அடியேன் ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

ஓடா அரியா யிரணியனை யூனிடந்த,
சேடார் பொழில்சூழ் திருநீர் மலையானை,
வாடா மலர்த்துழாய் மாலை முடியானை,
நாடோறும் நாடி நறையூரில் கண்டேனே. 1521

புறமுதுகிட்டு ஓடுதலில்லாத ''நரசிம்ம மூர்த்தி''யாகத் திருஅவதாரம் மேற்கொண்டு ''இரணியன்'' என்னும் அசுரனின் உடலினை இருகூறாகப் பிளந்து அழித்த, வளம்மிக்க சோலைகள் சூழ்ந்து இருக்கின்ற ''திருநீர்மலை'' என்னும் மலையின்மீது திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள எம்பெருமானை வாடாத திருத்துழாய் மாலையினைத் தம் திருமுடியில் சூடிக் கொண் டிருக்கும் எம்பெருமானை, அடியேன் ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பதைக் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

கல்லார் மதில்சூழ் கடியிலங்கைக் காரரக்கன்
வல்லாகங் கீள வரிவெஞ் சரம்துரந்த
வில்லானை, செல்வ விபீடணற்கு வேறாக
நல்லானை, நாடி நறையூரில் கண்டேனே. 1522

கருங்கற்களால் அமைக்கப்பட்ட மதில்கள் சூழ்ந்திருக்கின்ற அரண்களை உடைய இலங்கை மாநகர்க்கரசனான இராவணனின் வலிய உடல் பிளந்து போகும்படி வலிமைமிக்க கொடிய அம்பு களைச் செலுத்திய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீஇராம பிரானாகத் திருஅவதாரம் மேற்கொண்டபோது, பக்திச் செல்வம் நிறையப் பெற்ற நல்லவனான வீடணனுக்கு அந்த இலங்கை

Koviloor Digital Library

மாநகரினை அளித்து அருள்புரிந்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானை நாள்தோறும் நாடிச் சென்று, அடியேன் ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

உம்ப ருலகோ டுயிரெல்லாம், உந்தியில்
வம்பு மலர்மேல் படைத்தானை மாயோனை,
அம்பன்ன கண்ணா ளசோதைதன் சிங்கத்தை,
நம்பனை நாடி நறையூரில் கண்டேனே. 1523

விண்ணுலகத்தவர்களுடன் இவ்வுலகிலுள்ள அனைத்து உயிரினங்களையும் தன் கொப்பூழ்த் தாமரை மலரில் படைத்த எம்பெருமானை, மாயவனான திருமாலை, அம்பு போன்ற கூர்மையான பார்வையை உடைய கண்களைக் கொண்டுள்ள யசோதைப் பிராட்டியின் சிங்கக்குட்டி போன்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை, நம் பெருமானை அடியேன் நாடிச் சென்று ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருப்பதைக் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

கட்டேறு நீள்சோலைக் காண்டவத்தைத் தீமூட்டி
விட்டானை, மெய்யம் அமர்ந்த பெருமானை,
மட்டேறு கற்பகத்தை மாதர்க்காய், வண்துவரை
நட்டானை நாடி நறையூரில் கண்டேனே. 1524

காவல் நிறையப்பெற்ற நீண்ட அகன்ற பெருஞ்சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''காண்டவ வனம்'' என்னும் காட்டினைத் தீ மூட்டிவிட்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை, ''திருமெய்யம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருக்கும் எம்பெருமானை, தேன் துளிர்க்கும் மலர்கள் நிறைந்த கற்பக மரத்தினை ''சத்தியபாமை'' என்னும் பிராட்டியின் பொருட்டு ''துவாரகை'' என்னும் திருப்பதிக்குக் கொண்டு சென்று நட்டு வைத்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை அடியேன் ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பது கண்டு சேவிக்கப் பெற்றேன்.

மண்ணின்மீ பாரங் கெடுப்பான், மறமன்னர்
பண்ணின்மேல் வந்த படையெல்லாம், பாரதத்து
விண்ணின்மீ தேற விசயன்தே ரூர்ந்தானை,
நண்ணிநான் நாடி நறையூரில் கண்டேனே. 1525

Koviloor Digital Library

இம்மண்ணுலகிலுள்ள அதிக அளவிலான பாரத்தைக் குறைக்கும் பொருட்டு எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் பாரதப் போரின்போது அர்ச்சுனனுக்குத் தேரைச் செலுத்தி, துரியோதனன் போன்ற மன்னர்களின் படைகள் வீரசுவர்க்கம் அடையுமாறு செய்துவிட்ட எம்பெருமானை அடியேன் மிகுதியான விருப்பம் கொண்டுள்ள அளவில் ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி வீற்றிருப்பது கண்டு சேவிக்கப் பெற்றேன்.

*பொங்கேறு நீள்சோதிப் பொன்னாழி தன்னோடும்,
சங்கேறு கோலத் தடக்கைப் பெருமானை,
கொங்கேறு சோலைக் குடந்தைக் கிடந்தானை,
நங்கோனை நாடி நறையூரில் கண்டேனே. 1526

அளவற்ற ஒளியினை வெளியிட்டுக் கொண்டிருக்கின்ற திருவாழி ஆழ்வானும், பாஞ்ச சன்னிய ஆழ்வானும் தங்கி இருக்கின்ற திருக்கரங்களையுடைய பெருமை மிக்க எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தேன்சொரியும் மலர்களைக் கொண்டிருக்கின்ற சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருக்குடந்தை'' என்னும் திருப்பதியில் திருப்பள்ளி கொண்ட எம்பெருமானை அடியேன் நாடி நாடிச் சென்று இறுதியில் ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிவதைக் கண்டு சேவிக்கப் பெற்றேன்.

*மன்னு மதுரை வசுதேவர் வாழ்முதலை,
நன்னறையூர் நின்ற நம்பியை, வம்பவிழ்தார்
கன்னவிலும் தோளான் கலிய னொலிவல்லார்,
பொன்னுலகில் வானவர்க்குப் புத்தேளி ராகுவரே. 1527

நிலைபெற்றதாய் விளங்குகின்ற பெருமைமிக்க மதுரை மாநகரின் கண் வசுதேவர் சிறப்பாக வாழ்வதற்கு மூலகாரணமாகத் தோன்றிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை நன்மையைக் கொண்ட ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் நம்பிரானை மணம்வீசும் மாலையினை உடையவராய், மலை போன்ற தோள்களை உடையவராகிய ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இத்திருப்பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்ல பெருமக்கள்

Koviloor Digital Library

''திருப்பரமபதம்'' சென்று அங்குள்ள தேவர்களுக்குத் தெய்வமாகத் திகழ்வர்.

9. பெடையடர்த்த திருநறையூர்

கொச்சகக் கலிப்பா

பெடையடர்த்த மடவன்னம் பிரியாது, மலர்க்கமலம்
மடலெடுத்து மதுநுகரும் வயலுடுத்த திருநறையூர்
முடையடர்த்த சிரமேந்தி மூவுலகும் பலிதிரிவோன்,
இடர்கெடுத்த திருவாள னிணையடியே யடைநெஞ்சே! 1528

ஏ மனமே! தன் பெடையொடுங் கூடி மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்ற அழகிய அன்னப்பறவைகளானவை தம்முடைய பெண் அன்னப்பறவையைச் சிறிதும்விட்டுப் பிரியாமல், அங்கேயுள்ள தாமரை மலரின் இதழ்களை நீக்கிவிட்டுத் தேனை அனுபவிக்கின்ற அளவில் வளமிக்க வயல்கள் நிறைந்திருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், துர்நாற்றம் வீசுகின்ற 'பிரமகபாலம்' என்னும் மண்டைஓட்டினைக் கையில் ஏந்திக் கொண்டுள்ள சிவபெருமான் மூவுலகங்களிலும் பிச்சை ஏற்றுத் திரிகின்ற வகையில் அமைந்துள்ள சாபத்தைப் போக்கியருளினார். இத்தன்மையனான திருவாழ் மார்பனாகிய திருமாலின் இணைத்திருவடிகளைச் சென்று அடைந்து வணங்குவாயாக!

கழியாரும் கனசங்கம் கலந்தெங்கும் நிறைந்தேறி,
வழியார முத்தீன்று வளங்கொடுக்கும் திருநறையூர்,
பழியாரும் விறலரக்கன் பருமுடிக ளவைசிதற,
அழலாறும் சரந்துரந்தா னடியிணையே யடைநெஞ்சே! 1529

ஏ மனமே! உப்பங்கழிகளில் ஆங்காங்கே நிறைந்து காணப் படுகின்ற சங்குகள் வரிசை வரிசைகளாகக் காட்சி தந்து கொண்டிருக்கின்ற வீதிகளிலெல்லாம் முத்துக்களைச் சுமந்தவண்ணம் விளங்குகின்ற செல்வம் மிக்க ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில், பெரும்பழிச் செயல்களை ஏற்றுக் கொண்டிருக்கும் வலிமைமிக்க அரக்கர் குலத்துக்கரசனான ''இராவணன்'' தலைகள்

Koviloor Digital Library

பத்தும் கீழே சிதறி ஓடும்படியாகச் செய்த நெருப்பினைக் கக்குகின்ற தன்மையினை உடைய அம்புகளைச் செலுத்திய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானின் இணைத்திருவடிகளை அடைந்து வணங்கு வாயாக!

சுளைகொண்ட பலங்கனிகள் தேன்பாய, கதலிகளின்
திளைகொண்ட பழம்கெழுமு திகழ்சோலைத் திருநறையூர்,
வளைகொண்ட வண்ணத்தன் பின்தோன்றல், மூவுலகோடு
அளைவெண்ணெ யுண்டான்ற ணடியிணையே யடைநெஞ்சே! 1530

ஏ நெஞ்சே! சுளைகள் நிறைந்த பலாப்பழங்களிலிருந்து தேன் பெருகி வழிய, வாழை மரங்களின் நெருக்கமான பருத்த பழங்கள் நிறைந்திருக்கின்ற சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் சங்கினைப் போன்று வெண்மை நிறமுடைய பலராமருடைய இளவலாகவும், மூவுலகினையுண்டு தன் வயிற்றினுள் அடக்கிக் கொண்டதோடன்றி, தயிர், வெண்ணெய் போன்றவைகளையும் திருவமுது செய்தருளிய எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரானின் இணைத்திருவடிகளை அடைந்து சேவிப்பாயாக!

துன்றோளித் துகில்படலம் துன்னியெங்கும் மாளிகைமேல்,
நின்றார வான்மூடும் நீள்செல்வத் திருநறையூர்,
மன்றாரக் குடமாடி வரையெடுத்து மழைதடுத்த,
குன்றாரும் திரடோளன் குரைகழலே யடைநெஞ்சே! 1531

ஏ நெஞ்சமே! நெருக்கமாகவும், ஒழுங்குடையதாகவும் நிறைந்து விளங்குகின்ற மாட மாளிகைகளின்மீது விண்ணை மறைக்கும் அளவிற்கு எல்லா இடங்களிலும் கொடிகள் நெருங்கி நிறைந்திருக்கக் கூடியவளவில் பெருஞ்செல்வத்தைப் பெற்றிருக் கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அத்திருநறையூர்த் திருத்தலத்தில் அமைந்துள்ள மன்றங்கள்தோறும் குடக்கூத்தாடினான். ''கோவர்த்தனம்'' என்னும் மலையைக் குடையாகப் பிடித்து தேவேந்திரனால் பெய்து கொண்டிருக்கின்ற பெருமழையைத் தடுத்துப் பசுக்கூட்டங்களைக் காப்பாற்றி யருளினான். இந்த எம்பெருமான் மலைகளைப் போன்று வலிமை மிக்க திரண்ட தோள்களை உடையவன். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் ஒசையை உண்டாக்கும்

Koviloor Digital Library

வீரக்கழல்களை அணிந்து கொண்டிருக்கும் திருவடிகளைச் சென்று சேர்ந்து வணங்க வேண்டும்.

அகிற்குறடும் சந்தனமு மம்பொன்னும் மணிமுத்தும்,
மிகக்கொணர்ந்து திரையுந்தும் வியன்பொன்னித் திருநறையூர்,
பகல்கரந்த சுடராழிப் படையான்,இவ் வுலகேழும்
புகக்கரந்த திருவயிற்றன் பொன்னடியே யடைநெஞ்சே! 1532

ஏ நெஞ்சே! அகிற்கட்டைகள், சந்தனக்கட்டைகள், பொன், முத்து ஆகியவைகளை அலைகள் அதிக அளவில் திரட்டிக் கொண்டு வந்து சேர்க்கின்ற வியந்து போற்றுமளவுக்குச் சிறந்து விளங்குகின்ற ''பொன்னி'' என்னும் காவிரிக் கரையின்கண் அமைந்துள்ள ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், முன்பு ஸ்ரீ கண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் பாரதப் போர் நடைபெற்றுக் கொண்டு இருக்கும்போது, சூரியனை மறைத்த ஒளிமிக்க திருவாழி ஆழ்வானை ஆயுதமாகக் கொண்டும், முன்பு உலகப் பிரளயம் உண்டான காலத்தில் உலகங்கள் ஏழினையும் தன் திருவயிற்றின் உள்ளே அடக்கி வைத்துக் கொண்டு காப்பாற்றியருளிய எம்பெருமான் அழகிய பொற்றாமரைத் திருவடிகளை அடைந்து வணங்க வேண்டும்.

பொன்முத்தும் அரியுகிரும் புழைக்கைம்மா கரிக்கோடும்,
மின்னத்தண் திரையுந்தும் வியன்பொன்னித் திருநறையூர்,
மின்னொத்த நுண்மருங்குல் மெல்லியலை, திருமார்வில்
மன்னத்தான் வைத்துகந்தான் மலரடியே யடைநெஞ்சே! 1533

ஏ நெஞ்சமே! பொன், முத்து, சிங்கத்தின் நகங்கள், துளையை யுடைய துதிக்கைகளைக் கொண்ட யானைகளின் கொம்புகள் ஆகியவற்றைக் குளிர்ந்த அலைகளின் மூலமாக மேற்கே மின்னல் மின்னியபோது இழுத்துக் கொண்டுவந்து சேர்க்கும் வியந்து போற்றுகின்ற ''பொன்னி'' என்னும் காவிரி நதியின்மீது அமைந் துள்ள ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் மின்னலையொத்த நுண்ணிய இடையையுடைய மென்மையான திருமகளைத் தன் திருமார்பில் என்றும் நிலைபெற்றுத் தங்கியிருக் குமாறு ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சியடைந்து கொண்டிருக்கின்றான்.

Koviloor Digital Library

இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் பொற்றாமரை மலர்த் திருவடிகளை அடைந்து வணங்க வேண்டும்.

சீர்தழைத்த கதிர்ச்செந்நெல் செங்கமலத் திடையிடையின்,
பார்தழைத்துக் கரும்போங்கிப் பயன்விளைக்கும் திருநறையூர்,
கார்தழைத்த திருவுருவன் கண்ணபிரான் விண்ணவர்கோன்,
தார்தழைத்த துழாய்முடியன் தளிரடியே யடைநெஞ்சே! 1534

ஏ நெஞ்சே! சீர்மைமிக்க வகையில் தழைத்தோங்கி வளரும் செந்நெற்பயிரின் கதிர்களினூடே தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்றன. இவைகளினிடையே உயரமாக ஓங்கி வளர்ந்திருக்கின்ற கரும்புகள் நன்கு முற்றி அதன் பயன்களை அளித்துக் கொண்டு இருக்கின்றன. இவ்வளவு வளம் மிகுந்துள்ள ''திருநறையூர்'' என்னும் திருத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், கார்மேக நிறத்தினைக் கொண்டுள்ள, விண்ணுலகில் உள்ள தேவர்கட்கெல்லாம் தலைவனாகவும் திருத்துழாய் மாலையைச் சூடியவனாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானாகக் காட்சி தந்தருள்கின்றான். இத்தன்மையினனான எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் தளிர் போன்ற திருவடிகளை அடைந்து சேவிப்பாயாக!

*குலையார்ந்த பழுக்காயும் பசுங்காயும் பாளைமுத்தும்,
தலையார்ந்த விளங்கமுகின் தடஞ்சோலைத் திருநறையூர்,
மலையார்ந்த கோலஞ்சேர் மணிமாடம் மிகமன்னி,
நிலையார நின்றான்றன் நீள்கழலே யடைநெஞ்சே! 1535

ஏ நெஞ்சே! காய்கள் நிறைந்த பசுங்காய்க் குலைகள், பழக்குலைகள், முத்துகளைச் சிந்திக் கொண்டிருக்கின்ற பாளைகள், முற்றியிராத இளமையான பாக்குக்குலைகள் ஆகியவை நிறைந்து கிடக்கின்ற சோலைகள் சூழ்ந்திருக்கின்ற வளம்மிக்க ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளியிருக்கின்றான். இந்தத் திருநறையூர் என்னும் திருப்பதியில் மலையினை ஒத்த அழகு மிளிர்கின்ற மணிகளைப் பதிக்கப் பெற்ற மாடமாளிகைகள் நெருக்கமாக அங்கங்கே அமைந்திருக்கின்ற அளவில் நிலைபெற்று நின்று எழுந்தருளியிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் நீண்ட திருவடிகளையே அடையப் பெற்று வணங்குவாயாக!


Koviloor Digital Library

மறையாரும் பெருவேள்விக் கொழும்புகைபோய் வளர்ந்து,எங்கும்
நிறையார வான்மூடும் நீள்செல்வத் திருநறையூர்,
பிறையாரும் சடையானும் பிரமனுமுன் தொழுதேத்த,
இறையாகி நின்றான்றன் இணையடியே யடைநெஞ்சே! 1536

ஏ நெஞ்சமே! மறைகளிலிருந்து எடுத்தோதியவாறு நடத்திக் கொண்டு இருக்கும் பெரிய பெரிய யாகங்களினால் உண்டாகி எங்கும் பரவிக் கொண்டிருக்கும் புகையானது ஓங்கி உயர்ந்து வளர்ந்து ஆகாயம் முழுவதும் பரந்து கிடக்கும். அளவற்ற செல்வத் தினைக் கொண்டுள்ள வளமிக்க ''திருநறையூர்'' என்னும் திருத் தலத்தில், பிறைச்சந்திரனைச் சூட்டிக் கொண்டு, சடைமுடியை யுடைய சிவபெருமானும், பிரமதேவனும் சென்று தொழுது வணங்குகின்ற இறைவனாகத் திகழ்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் இணைத் திருவடிகளை அடைந்து சேவிப்பாயாக!

*திண்கனக மதிள்புடைசூழ் திருநறையூர் நின்றானை,
வண்களக நிலவெறிக்கும் வயல்மங்கை நகராளன்,
பண்களகம் பயின்றசீர்ப் பாடலிவை பத்தும்வல்லார்,
விண்களகத் திமையவராய் வீற்றிருந்து வாழ்வாரே. 1537

உறுதியான நிலையிலிருக்குமாறு சுண்ணாம்பினைச் சேர்த்து அமைத்துள்ள பொன்னாலான மதிள்கள் சூழ்ந்திருக்கின்ற வளம்மிக்க திருநறையூர் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றி, அன்னப்பறவைகள் நிலவினைப் போன்று திகழும் வயல்களையுடைய வளம் மிகுந்த ''திருமங்கை'' என்னும் நகர்க்குத் தலைவனாகிய திருமங்கை ஆழ்வார் பண்களிலே இனிமைச் சுவையுள்ள பண்களினாலே அருளிச் செய்துள்ள சிறப்புமிக்க பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்லவர்கள் விண்ணுலகத்தில் வாழ்கின்ற தேவர்களோடு சேர்ந்து ஒருங்கிணைந்து வாழ்வார்கள்.



Koviloor Digital Library

10. கிடந்த நம்பி
திருநறையூர்
அறுசீர் ஆசிரிய விருத்தம்

*கிடந்த நம்பி குடந்தை மேவிக்
கேழ லாயுலகை
இடந்த நம்பி, எங்கள் நம்பி
எறிஞர் அரணழிய,
கடந்த நம்பி கடியா ரிலங்கை
உலகை யீரடியால்,
நடந்த நம்பி நாமம் சொல்லில்
நமோநா ராயணமே. 1538

திருக்குடந்தை மாநகரின் கண் திருப்பள்ளி கொண்டருளி நம்பி; ஸ்ரீவராக அவதாரம் மேற்கொண்டு இப்பூவுலகைக் குத்தி எடுத்துக் கொண்டு வந்த நம்பி; நம் குறைகளைக் களைந்து போக்கும் நம் நம்பி; பகைவர்களின் பாதுகாப்பாக அமைந்துள்ள கோட்டைகள் அழிந்து படுமாறு செய்து இலங்கை மாநகரினை அழித்த நம்பி; இரண்டடிகளினால் இவ்வுலகம் முழுவதையும் அளந்து கொண்ட நம்பி என்று இவ்வாறு பல்லாற்றானும் புகழ்ந்து பலபடப் பேசிக் கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திரு நாமங்களை எடுத்துக் கூறுவதானால் அத்திருநாமம் மூலமந்திரம் என்னும் எட்டெழுத்துத் திருமந்திரமாகிய ''ஓம் நமோ நாராயணாய'' என்பதாகும்.

விடந்தா னுடைய அரவம் வெருவச்
செருவில் முனநாள்,முன்
தடந்தா மரைநீர்ப் பொய்கை புக்கு
மிக்க தாடாளன்,
இடந்தான் வையம் கேழ லாகி
உலகை யீரடியால்,
நடந்தா னுடைய நாமம் சொல்லில்
நமோநா ராயணமே. 1539

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் நஞ்சு நிறைந்த ''காளியன்'' என்னும் பாம்பு அஞ்சி நடுங்கிப் போகும்படியாக ஆயர்குலச் சிறுவர்களின் முன்னே

Koviloor Digital Library

தாமரை மலர்கள் நிறைந்திருக்கும் ஒரு மடுவினுள்ளே புகுந்து, அந்தப் பாம்புடன் போரிட்டு வெற்றி கொண்ட மேன்மைமிக்க திருவடிகளையுடையவன்; ஸ்ரீவராக அவதாரம் மேற்கொண்டு இப்பூமியைக் குத்திக் கொண்டு வந்து சேர்த்த எம்பெருமான். இந்த உலகம் முழுவதையும் இரண்டு அடிகளால் அளந்த திருவடிகளை உடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருநாமங்களை எடுத்துக் கூறுவதானால் அத்திருநாமம் மூலமந்திரம் எட்டெழுத்துத் திருமந்திரமாகிய ''ஓம் நமோ நாராயணாய'' என்பதாகும்.

பூணா தனலும் தறுகண் வேழம்
மறுக வளைமருப்பைப்,
பேணான் வாங்கி யமுதம் கொண்ட
பெருமான் திருமார்வன்,
பாணா வண்டு முரலும் கூந்தல்
ஆய்ச்சி தயிர்வெண்ணெய்,
நாணா துண்டான் நாமம் சொல்லில்
நமோநா ராயணமே. 1540

கட்டி வைத்திருக்கின்ற கட்டுத்தறிக்கும் கட்டுப்படாமல் தீயை உமிழும் கண்களுடன் சீறிப் பாய்கின்ற ''குவலயாபீடம்'' என்னும் யானையை அடக்கி வென்று அதன் தந்தங்களை ஒடித்தெடுத்த எம்பெருமான் திருப்பாற்கடலைக் கடைந்தெடுத்து திரு வமுதினைப் பெற்றபோதே, அத்திருப்பாற்கடலினின்றும் எழுந் தருளப் பெற்ற திருமகளைத் தன் திருமார்பில் கொண்டிருக்கின்ற எம்பெருமான் இசை பாடியவாறே வண்டுகள் சேர்ந்திருக்கின்ற மலர்களைச் சூடிய கூந்தலையுடைய அன்னை யசோதை கடைந்தெடுத்த தயிர், வெண்ணெய் போன்ற பொருட்களைச் சிறிதும் வெட்கமின்றி உண்டு அனுபவித்த எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரானின் திருநாமங்களை எடுத்துக் கூறுவதானால் அத் திருநாமம் மூலமந்திரம் என்னும் எட்டெழுத்துத் திருமந்திரமாகிய ''ஓம் நமோ நாராயணாய'' என்பதாகும்.

கல்லார் மதிள்சூழ் கச்சி நகருள்
நச்சிப் பாடகத்துள்,
எல்லா வுலகும் வணங்க விருந்த
அம்மான், இலங்கைக்கோன்

Koviloor Digital Library

வல்லா ளாகம் வில்லால் முனிந்த
எந்தை, விபீடணற்கு
நல்லா னுடைய நாமம் சொல்லில்
நமோநா ராயணமே. 1541

கருங்கற்களால் கட்டிய மதிள்கள் சூழ்ந்திருக்கின்ற காஞ்சி மாநகரில் வசிக்க வேண்டுமென்று விரும்பி, எல்லா உலகத்திலுள்ள அனைவரும் வந்து வணங்குமாறு ''திருப்பாடகம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான், இலங்கை மாநகரத்து மன்னனான இராவணனின் வலிமையான உடலைத் தம் வில்லின் ஆற்றலினால் அழித்துவிட்டு, அவ்வரசினை அவன் தம்பி வீடணனுக்கு அளித்து நன்மை புரிந்த எம்பிரானின் திருநாமங்களை எடுத்துக் கூறுவ தானால் அத்திருநாமம் ''மூலமந்திரம்'' என்னும் எட்டெழுத்துத் திருமந்திரமாகிய ''ஓம் நமோ நாராயணாய'' என்பதாகும்.

குடையா வரையால் நிரைமுன் காத்த
பெருமான், மருவாத
விடைதா னேழும் வென்றான் கோவல்
நின்றான், தென்னிலங்கை
அடையா அரக்கர் வீயப் பொருது
மேவி வெங்கூற்றம்,
நடையா வுண்ணக் கண்டான் நாமம்
நமோநா ராயணமே. 1542

''கோவர்த்தனம்'' என்னும் மலையைக் குடையாகக் கொண்டு பிடித்து, பசுக்கூட்டங்களைப் பெருமழையினின்றும் பாது காத்தருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், நப்பின்னைப் பிராட்டியை அடையும் பொருட்டு, ஏழு காளைமாடுகளை அடக்கி வெற்றி கொண்டு, ''திருக்கோவலூர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருள்புரியும் எம்பெருமான் நின்ற திருக்கோலத்தில் நின்று அருள்புரியும் எம்பெருமான் திரிவிக்ரமன், தென்திசையில் வாழ்ந்து வந்த, தனக்குப் பணியாமலும், அடக்கமில்லாமலும் இருக்கின்ற அரக்கர்கள் யாவரும் அழியும்படியாகப் போர்புரிந்து, அந்த அரக்கர்களுக்குக் கொடிய இயமன் சிறிதும் அச்சமின்றி இலங் கையையும், அங்குள்ள அரக்கர்களையும் உண்ணும்படி செய்த எம்பெருமானின் ஸ்ரீ இராமபிரானின் திருநாமங்களை எடுத்துக்

Koviloor Digital Library

கூறுவதானால் அத்திருநாமம் மூலமந்திரம் என்னும் எட்டெழுத்துத் திருமந்திரமாகிய ''ஓம் நமோ நாராயணாய'' என்பதாகும்.

கான எண்கும் குரங்கும் முசுவும்
　　படையா, அடலரக்கர்
மான மழித்து நின்ற வெண்றி
　　அம்மான், எனக்கென்றும்
தேனும் பாலும் அமுது மாய
　　திருமால் திருநாமம்,
நானும் சொன்னேன் நமரு முரைமின்
　　நமோநா ராயணமே. 1543

காட்டுக்கரடிகள், குரங்குகள், கருங்குரங்குகள் ஆகிய அனைத்தையும் படையாகக் கொண்டு, இலங்கை சென்று, அங்குள்ள கொடிய அரக்கர்களின் மானத்தை அழித்து, வெற்றியுடன் திகழும் எம்பெருமான் ஸ்ரீ இராமபிரானின் தேனும், பாலும், திருவமுதும் ஆகி நின்ற திருநாமங்களை அடியேனும் உச்சரித்து எடுத்துரைத்தேன். அத்திருநாமங்களை நம்மைச் சேர்ந்தவர்களும் எடுத்துக் கூறுவதானால் அத்திருநாமம் மூலமந்திரம் என்னும் எட்டெழுத்துத் திருமந்திரமாகிய ''ஓம் நமோ நாராயணாய'' என்பதாகும்.

நின்ற வரையும் கிடந்த கடலும்
　　திசையு மிருநிலனும்,
ஒன்று மொழியா வண்ண மெண்ணி
　　நின்ற அம்மானார்,
குன்று குடையாய வெடுத்த அடிக
　　ளுடைய திருநாமம்,
நன்று காண்மின் தொண்டீர்! சொன்னேன்
　　நமோநா ராயணமே. 1544

நின்று கொண்டிருக்கின்ற மலைகளும், எக்காலத்திலும் வற்றாமல் கிடக்கின்ற கடல்களும், அனைத்துத் திசைகளும், பரந்து கிடக்கின்ற இப்பூமியும் ஆகிய இவை யாவும் ஒரு சிறிதும் படைத்தளித்துத் திகழ்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் முன்பு ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்தபோது ''கோவர்த் தனம்'' என்னும் மலையைக் குடையாக ஏந்திப் பெருமழை யினின்றும் பசுக்கூட்டங்களைக் காப்பாற்றியருளினான். எம்

Koviloor Digital Library

பெருமானுக்குத் தொண்டே செய்தொழுகும் திருத் தொண்டர்களே! இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் திருநாமங்களை எடுத்துக் கூறுவதானால் அத்திருநாமம் மூலமந்திரம் என்னும் எட்டெழுத்துத் திருமந்திரமாகிய ''ஓம் நமோ நாராயணாய'' என்பதாகும்.

கடுங்கால் மாரி கல்லே பொழிய
 அல்லே யெமக்கென்று
படுங்கால், நீயே சரணென் றாயர்
 அஞ்ச அஞ்சாமுன்,
நெடுங்கால் குன்றம் குடையொன் றேந்தி
 நிரையைச் சிரமத்தால்
நடுங்கா வண்ணம் காத்தான் நாமம்
 நமோநா ராயணமே. 1545

கடுமையான காற்றுடன் கூடிய மேகக்கூட்டங்கள் கல்மழை இந்திரன் இட்ட கட்டளை காரணமாகப் பெய்து கொண்டு இருக்க, அப்பெருமழையின்றும் இந்த இரவு நேரத்தில் எங்களைக் காப்பாற்ற வேண்டுமென்று, ஆயர்கள் வேண்டிக் கேட்டுக் கொண்டு சரணடைந்த நிலையில் அச்சமுற்றுக் கொண்டிருப்பதன் முன்பே அவ்வச்சத்தின் பயன் உண்டாவதற்கு முன்பே, அவர்கட்கு உண்டான ஆபத்தினைப் போக்குமாறு ''கோவர்த்தனம்'' என்னும் அகன்று பரந்து கிடக்கின்றதோர் பெரிய மலையைக் குடையாகத் தம் திருக் கரத்தினில் ஏந்திய அளவில் பசுக்கூட்டங்களையும், ஆய்க்குல மக்களையும் பாதுகாத்தருள்புரிந்த எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரானின் திருநாமங்களை எடுத்துக் கூறுவதானால் மூலமந்திரம் என்னும் எட்டெழுத்துத் திருமந்திரமாகிய ''ஓம் நமோ நாராயணாய'' என்பதாகும்.

பொங்கு புணரிக் கடல்சூ ழாடை
 நிலமா மகள்மலர்மா
மங்கை, பிரமன் சிவனிந் திரன்வா
 னவர்நா யகராய,
எங்க ளடிக ளிமையோர் தலைவ
 ருடைய திருநாமம்,
நங்கள் வினைகள் தவிர வுரைமின்
 நமோநா ராயணமே. 1546

Koviloor Digital Library

பொங்கி வழிகின்ற அலைகள் வீசிக் கொண்டிருக்கின்ற கடல் நீரையே ஆடையாக உடுத்திக் கொண்டிருக்கும் பூமிப்பிராட்டி யாருக்கும், தாமரை மலரில் வசித்துக் கொண்டிருக்கும் ''திருமகள்'' என்னும் பிராட்டிக்கும், பிரமதேவன், சிவபெருமான், தேவேந்திரன், தேவர்கள் ஆகிய அனைவருக்கும் தலைவராகத் திகழ்ந்து, எங்கட்கு இறைவனாக விளங்குகின்ற எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரானின் திருநாமங்களை எடுத்துக் கூறுவதானால் அத் திருநாமம் மூலமந்திரம் என்னும் எட்டெழுத்துத் திருமந்திரமாகிய ''ஓம் நமோ நாராயணாய'' என்பதாகும்.

*வாவித் தடஞ்சூழ் மணிமுத் தாற்று
நறையூர் நெடுமாலை,
நாவில் பரவி நெஞ்சில் கொண்டு
நம்பி நாமத்தை,
காவித் தடங்கண் மடவார் கேள்வன்
கலிய னொலிமாலை
மேவிச் சொல்ல வல்லார் பாவம்
நில்லா வீயுமே. 1547

பொய்கைகள் நிறைந்திருக்கின்ற மணி, முத்து இவைகளைச் சுமந்து கொண்டு ஓடுகின்ற காவிரி நதியின் கரையிலுள்ள ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றியும், எப்பொழுதும் நாவினில் உச்சரித்துக் கொண்டிருக்க, அதனால் எப்போதும் நெஞ்சிலேயே நிலைத்துக் கொண்டிருக்கும் எம் பெருமானின் திருநாமங்களை எடுத்தோதுவது பற்றியும், நெய்தல் பூக்களின் நிறம் போன்று சிவந்த திருக்கண்களையுடைய பெண் களின் ஆசைக்கு இணங்கிப் பின்பு தெளிந்து திருந்திய ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலிக்கின்ற சொல் மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் பயின்று, பிறருக்கும் எடுத்துச் சொல்லும் ஆற்றல் பெற்ற பெருமக்களுக்குப் பாவங்கள் என்பவை நில்லாமல் நீங்கி அழிந்துபோகும்.

Koviloor Digital Library

ஏழாம் பத்து

1. கறவா மடநாகு
திருநறையூர்
கலி விருத்தம்

கறவா மடநாகுதன் கன்றுள்ளி னாற்போல்,
மறவா தடியே னுன்னையே யழைக்கின்றேன்,
நறவார் பொழில்சூழ் நறையூர் நின்றநம்பி,
பிறவாமை யெனைப்பணி யெந்தை பிரானே! 1548

எந்தை எம்பெருமானே! பால் கறக்காமலிருக்கின்ற பசுவினைத் தன் கன்றுக்குட்டி நினைத்துக் கொண்டு இருப்பது போன்று, அடியேன் எப்போதும் மறந்துவிடாமல் உன்னையே எண்ணி எண்ணி அழைத்துக் கொண்டிருக்கிறேன். தேன் நிறைந்து வழிந்தோடும் மலர்களை உடைய சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அடியேன் இனி எக்காலத்தும் பிறத்தல் என்ற ஒன்று இல்லாதவாறு பணித்து அருளுமாறு வேண்டுகின்றேன்.

வற்றா முதுநீரொடு மால்வரை யேழும்,
துற்றா முன்துற்றிய தொல்புக ழோனே,
அற்றே னடியே னுன்னையே யழைக்கின்றேன்,
பெற்றே னருள்தந்திடு மெந்தை பிரானே! 1549

எந்தை எம்பெருமானே! எக்காலத்திலும் வற்றிவிடுதல் என்ற ஒன்று இல்லாத கடல் நீருடன், ஏழு பெரிய மலைகளையும் உலகப் பிரளயம் என்பது உண்டான காலத்தில் ஒரே கவளமாக எடுத்து உண்டு விழுங்கிய பழங்காலம் முதற்கொண்டு பெரும்புகழ் பெற்று விளங்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அடியேனைப் பாதுகாத்துக் கொள்வதற்கு உன்னையன்றி வேறு புகலிடம் அறியாத அடியேன் உன்னையே எண்ணி எண்ணி அழைக்கின்றேன். இத்தகைய பேறுபெற்ற அடியேனுக்குத் தங்களின் அருளினைத் தந்து ஆட்கொள்ளுமாறு வேண்டுகின்றேன்.

Koviloor Digital Library

தாரேன் பிறர்க்குன் னருளென் னிடைவைத்தாய்,
ஆரே னதுவே பருகிக் களிக்கின்றேன்,
காரேய் கடலே மலையே திருக்கோட்டி
யூரே, உகந்தா யையுகந் தடியேனே. 1550

மழையைப் பொழிகின்ற மேகமே! கடலே! மலையே! ''திருக்கோட்டியூர்'' என்னும் திருத்தலத்தினை விரும்பி ஏற்று மகிழ்ச்சியுற்று விளங்குகின்ற அடியேன், உன்னிடமிருந்து அடியேனுக்குக் கிடைத்த பேரருளினை அடியேன் அனுபவித்தும் மனநிறைவற்றவனாகி, மேன்மேலும் அவ்வருளின் சிறப்பினையே எண்ணி எண்ணி மகிழ்ச்சியடைகின்றேன். இத்தன்மைத்தான உன் கண்ணழிவு அற்ற நின் திருவருளை அடியேனிடத்தில் வைத் தருளினாய்! இவ்வருட்பேற்றினை அடியேன் மற்றவர்கட்குத் தரமாட்டேன். அடியேனை விரும்பி அடியேனிடத்து வந்த உன்னை அடியேன் உகந்த வண்ணம் இருந்து கொண்டிருக்கிறேன்.

'புள்வாய் பிறந்த புனிதா!'என் றழைக்க,
உள்ளேநின் றென்னுள்ளங் குளிரு மொருவ,
கள்வா! கடன்மல்லைக் கிடந்த கரும்பே,
வள்ளால்! உன்னை யெங்ஙனம்நான் மறக்கேனே. 1551

''கொக்கு வடிவில் வந்த 'பகாசுரன்' என்னும் அசுரனின் வாயினைக் கிழித்தெறிந்த தூய்மையான எம்பெருமானே!'' என்று அடியேன் அழைத்திட, அவ்வாறழைத்ததன் காரணமாக அடியேனின் இதயத்தினுள்ளே எங்கும் குளிர்ச்சி பெறுகிறது. ஒப்பற்ற எம்பெருமானே! எவரொருவராலும் அறிந்து கொள்ள இயலாத தன்மையை உடையவனே! ''திருக்கடல் மல்லை'' என்னும் திருத்தலத்தில் திருக்கண் வளர்ந்தருளும் கரும்பினும் இனியவனான எம்பெருமானே! வள்ளல் பெருமானே! அடியேன் உன்னை இனி எங்ஙனம் மறந்திருப்பேன்? அதாவது, உன்னை மறந்து இருப்பது என்பது இயலாத ஒன்றாகும்.

வில்லேர் நுதல்வேல் நெடுங்கண் ணியும்நீயும்,
கல்லார் கடுங்கானம் திரிந்த களிறே,
நல்லாய் நரநா ரணனே! எங்கள்நம்பி,
சொல்லா யுன்னையான் வணங்கித் தொழுமாறே. 1552

அடியவர்கட்கு நன்மைகளையே நல்கிக் கொண்டு இருக்கும் நரனாகவும், நாராயணனாகவும் இருந்தருள் புரியும் எங்கள்

Koviloor Digital Library

நம்பியே! வில்லினை ஒத்த நெற்றியும், வேல்போன்ற கூர்மையான நீண்ட கண்களையுமுடைய பிராட்டியாருடன் கற்கள் நிறைந்துள்ள கொடிய காட்டினில் திரிந்த யானை போன்று பலம் மிகுந்த எம்பெருமானே! அடியேன் நின்திருவடிகளில் வணங்கி உனக்கு ஆட்படும் வழியை அடியேனுக்கு எடுத்துக் கூறி அருள்புரிதல் வேண்டும்.

பணியேய் பரங்குன்றின் பவளத் திரளே,
முனியே திருமூழிக் களத்து விளக்கே,
இனியாய்! தொண்டரோம் பருகின் னமுதாய
கனியே, உனைக்கண்டு கொண்டுய்ந் தொழிந்தேனே. 1553

பனி மிகுதியாக நிறைந்துள்ள இமயமலையில் அமைந்துள்ள ''திருப்பிரிதி'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருள்புரியும் பவளக் கொடி போன்றுள்ள அழகில் மிக்குள்ள எம்பெருமானே! ''திருமூழிக்களம்'' என்னும் திருப்பதியில் எழுந்தருள்புரியும் திருவிளக்கு போன்று ஒளி வீசிக் கொண்டிருக்கும் எம்பெருமானே! அடியார்களின் நன்மைகளையே சிந்தித்துக் கொண்டிருக்கும் எம் இனியவனே! உம் தொண்டர்களாகிய அடியோங்கள் பருகுவதற்கு உரிய இனிய அமுதமும் ஆகிய எம்பெருமானே! கனியே! அடியேன் உன்னைக் கண்டு கொண்டு சேவித்த அதன் பயனாகப் பிழைத்துக் கொண்டேன்.

கதியே லில்லைநின் னருளல் லதெனக்கு,
நிதியே! திருநீர் மலைநித் திலத்தொத்தே,
பதியே பரவித் தொழும்தொண் டர்தமக்குக்
கதியே, உனைக்கண்டு கொண்டுய்ந் தொழிந்தேனே. 1554

அடியேனுக்கு ''வைப்புநிதி'' என்று திகழும் எம்பெருமானே! அடியேனுக்கு உன்னுடைய திருவருளன்றி வேறு வழி ஏதும் புகலிடம் இல்லை. ''திருநீர்மலை'' என்னும் திருப்பதியில் எழுந்தருள் புரியும் முத்து மாலை போன்று ஆரத்தழுவிக் கொள்வதற் குரிய எம் பெருமானே! அடியார்களின் இருப்பிடமானவனே! எம்பெருமான் எழுந்தருள்புரியும் திருத்தலங்களையே ஏத்தித் தொழுகின்ற உம் அடியவர்களின் கதி ஆனவனே! அடியேன் உன்னைக் கண்டு கொண்டு சேவித்த அதன் பயனாகப் பிழைத்துக் கொண்டேன்.

Koviloor Digital Library

'அத்தா! அரியே!' என்றுன் னையழைக்க,
பித்தா வென்று பேசுகின்றார் பிறரென்னை,
முத்தே! மணிமா மாணிக்கமே! முளைக்கின்ற
வித்தே, உன்னையெங் ஙனம்நான் விடுகேனே? 1555

அடியேனின் பகைமையைப் போக்கி அருள்புரியும் எம் பெருமானே! என்றும் அரியே! அத்தா! என்றும் அடியேன் உன்னை அழைப்பதனைக் கண்ட அயலவர்கள் பலரும் அடியேனைப் பித்து பிடித்தவனே! என்று கூறி அழைத்து இகழ்ச்சியாகப் பேசுகின்றனர். அழகிய முத்து போன்றவனே! மாணிக்க மணியே! அருமையான நன்கு முற்றிய விதையாகவும், அதன் பயனாகிய முளையாகவும் திகழ்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! இப்படிப்பட்ட உம்முடைய உயர்ந்த திருவருளை அறிந்து உணர்ந்து கொண்டிருக்கின்ற அடியேன் உன்னைவிட்டுவிட்டு எங்ஙனம் இருப்பேன்? இருக்க இயலாது என்பதாகும்.

தூயாய்! சுடர்மா மதிபோ லுயிர்க்கெல்லாம்,
தாயாய் அளிக்கின்ற தண்டா மரைக்கண்ணா,
ஆயா! அலைநீ ருலகேழும் முன்னுண்ட
வாயா, உனையெங் ஙனம்நான் மறக்கேனே? 1556

தூய்மையானவனே! ஒளி வீசுகின்ற முழுநிலவைப் போன்று, உலகிலுள்ள அனைத்து உயிர்கட்கெல்லாம் வேண்டிய அன்பினைத் தாய் போன்று பெருக்கிக் காட்டி தாயுமாகித் திகழ்கின்ற எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! கருணை உள்ளம் கொண்டிருக்கின்ற குளிர்ச்சியுடைய தாமரை போன்ற திருக்கண்களையுடையவனே! ஆயர்குலத் தோன்றலாகிய ஸ்ரீகண்ணபிரானே! உலகப் பிரளயம் உண்டான காலத்தில் ஏழு உலகங்களையும் உண்ட ''உலகுண்ட பெருவாயா!'' இப்படிப்பட்ட தங்களின் திருவடிகளை அடியேன் எங்ஙனம் மறந்து இருப்பேன்? மறக்க இயலாது என்பதாம்.

*வண்டார் பொழில்சூழ் நறையூர்நம் பிக்கு,என்றும்
தொண்டாய்க் கலிய னொலிசெய் தமிழ்மாலை,
தொண்டீர்! இவைபாடு மின்பாடி நின்றாட,
உண்டே விசும்பு உந்தமக்கில் லைதுயரே. 1557

(கறவா வற்றா தாரேன் புள் வில் பனி கதி அத்தா தூயாய் வண்டார்-புள்ளாய்.)

Koviloor Digital Library

திருத்தொண்டர்களே வண்டுகள் நிறைந்திருக்கின்ற மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்கே எக்காலத்திலும் தொண்டே புரிந்தொழுகும் ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலியுடன் கூடிய இத்தமிழ்ப் பாசுரங்கள் பத்தினையும் பாடுங்கள். இப்பாடல்களுக்கேற்ப ஆடுங்கள். இங்ஙனமாகப் பாடுவதனையும், ஆடுவதனையும் மேற்கொண்டு செய்பவர்கட்கு உண்டாகியிருக்கின்ற துயரங்கள் என்பது இல்லாமற் போகும் படியாக அருள்புரிவதுடன் திருப்பரமபதமும் கிடைக்கும்.

2. புள்ளாயேனமுமாய்
திருநறையூர்

கலிவிருத்தம்

*'புள்ளாய் ஏனமுமாய்ப் புகுந்து, என்னை யுள்ளங்கொண்ட
கள்வா!' என்றலும்என் கண்கள்நீர் சோர்தருமால்,
உள்ளே நின்றுருகி நெஞ்சமுன்னை யுள்ளியக்கால்,
நள்ளே னுன்னையல்லால் நறையூர்நின்ற நம்பீயோ! 1558

''அன்னம்'' என்னும் பறவையாகவும், வராகமாகவும் திருவவதாரம் மேற்கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ''அடியேனின் உள்ளே புகுந்து, அடியேனைத் தன் உள்ளத்தினுள்ளே ஏற்றுக் கொண்டுள்ள வகையில் கவர்ந்து கொண்ட கள்வனே!'' என்று அடியேன் சொன்ன அளவில் அடியேனின் கண்களிலிருந்து கண்ணீர்ப் பெருகி வருகின்றது. அடியேனின் மனமானது எம்பெருமானாகிய தங்களை உருகியுருகி எண்ணக் கருதினால், அப்போது ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமானாகிய நின்னையன்றி வேறு எவரையும் சிறிதுகூட அடியேன் மனதில் எண்ணிப் பார்க்கமாட்டேன்.

ஓடா ஆளரியி னுருவாய் மருவி,என்றன்
மாடே வந்தடியேன் மனங்கொள்ள வல்லமைந்தா,
பாடேன் தொண்டர் தம்மைக் கவிதைப் பனுவல்கொண்டு,
நாடே னுன்னையல்லால் நறையூர் நின்ற நம்பீயோ! 1559

Koviloor Digital Library

''ஓ திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருள்புரியும் நம்பியே! இவ்வுலகில் எங்கும் காண இயலாத அளவுக்கு மனிதனும், சிங்கமும் சேர்ந்த நரசிம்மமூர்த்தியாகத் திருஅவதாரம் மேற்கொண்ட வடிவத்துடன் அடியேனிடத்து வந்து பொருந்தியிருந்து அடியேனுடைய மனதினைத் தமதாக்கிக் கொண்ட வலிமை மிக்க மிடுக்கினையுடைய எம்பெருமானே! இனி எப்போதும் அடியேன் இனிய இலக்கணக் குறைபாடுகள் ஏதும் இல்லாத கவிதைகளைக் கொண்டு உலகியல்புகளை ஏற்று வாழும் சாதாரண மனிதர்கட்குப் பாடமாட்டேன். உன்னையன்றி வேறு எவர்மீதும் கவிபுனைந்து பாடுவதற்கு அடியேனின் மனதில் எண்ணியும் பார்க்க மாட்டேன்.

எம்மானு மெம்மனையும் எனைப்பெற் றொழிந்ததற்பின்,
அம்மானு மம்மனையும் அடியேனுக் காகிநின்ற,
நன்மான வொண்சுடரே! நறையூர்நின்ற நம்பீ,உன்
மைம்மான வண்ணமல்லால் மகிழ்ந்தேத்த மாட்டேனே. 1560

''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அடியேனின் தந்தையும் தாயும் அடியேனைப் பெற்றெடுத்துவிட்டுப் புறக்கணித்து விட்டுச் சென்ற பிறகு, அடியேனுக்குத் தந்தையாகவும், தாயாகவும் நின்று அருள்புரிந்துள்ள நற்குணமும், பெருமையும் கொண்டுள்ள ஒளி மிகுந்த பரஞ்சுடரே! அடியேன் தங்களின் மை போன்ற நிறமுடைய திருமேனியையன்றி மற்று எந்த திருப்பதிகளையும் கண்டு மகிழ்ச்சியுற்று ஏத்திப் போற்றி வணங்கமாட்டேன்.

சிறியாயோர் பிள்ளையுமா யுலகுண்டோ ராலிலைமேல்
உறைவாய்,என் நெஞ்சினுள்ளே உறைவாய், உறைந்ததுதான்
அறியா திருந்தறியே னடியேன், அணி வண்டுகிண்டும்
நறைவா ரும்பொழில்சூழ் நறையூர்நின்ற நம்பீயோ! 1561

அழகுமிக்க வண்டுகள் தேனை உண்பதற்காகத் துளைத்துக் கொண்டிருக்கும் மலர்கள் நிறைந்துள்ள சோலைகள் சூழ்ந்து இருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமானாகிய ஓம் ஸ்ரீ மந்நாராயணனே! முன்பொருகால் மிகச்சிறிய குழந்தையாகி, உலகப் பிரளயம் உண்டான காலத்திலே உலகங்களையெல்லாம் உண்டு தன்

Koviloor Digital Library

வயிற்றினுள்ளே அடக்கிக் கொண்டு ஓர் ஆலிலையின்மீது திருக்கண் வளர்ந்தருளிய எம்பெருமானே! அடியேனின் நெஞ்சினுள்ளே தங்கியிருந்து வாழ்பவனே! அவ்வாறு தாங்கள் அடியேனின் நெஞ்சினுள்ளே வாழ்ந்து கொண்டிருப்பதை அடியேன் அறிந்து கொள்ளாமல் இல்லை. அறிந்து கொண்டு இருக்கிறேன்.

நீண்டாயை வானவர்கள் நினைந்தேத்திக் காண்பரிதால்,
ஆண்டாயென் றாதரிக்கப் படுவாய்க்கு நானடிமை,
பூண்டேன், என் நெஞ்சினுள்ளே புகுந்தாயைப் போகலொட்டேன்,
நாண்தா னுனக்கொழிந்தேன் நறையூர் நின்ற நம்பீயோ! 1562

''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமானாகிய ஓம் ஸ்ரீமந்நாராயணனே! பிரமன், இந்திரன் போன்ற தேவர்களாலும் உன்னைத் துதித்துப் போற்றுகின்றபோதும், இன்னின்ன தன்மையன் என்று உணர்தற்கு இயலாத நிலையில் நின்றுள்ள மிக நீண்ட நிலையிலுள்ள எம் பெருமானே! ''எம்முடைய ஆண்டவனே!'' என்று பலரும் ஏத்து கின்ற உன்னிடம் அடியேன் அடிமை பூண்டேன். இந்நிலையில் அடியேனின் நெஞ்சினுள்ளே புகுந்திருக்கின்ற உன்னை இனி என் நெஞ்சினின்றும் வெளியே செல்வதற்கு ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன். இதன் பொருட்டு அடியேன் வெட்கம் என்ற ஒன்றைத் துறந்துவிட்டேன்.

எந்தாதை தாதையப்பால் எழுவர் பழவடிமை
வந்தார்,என் நெஞ்சினுள்ளே வந்தாயைப் போகலொட்டேன்,
அந்தோ!என் னாருயிரே! அரசே! அருளெனக்கு,
நந்தாமல் தந்தவெந்தாய்! நறையூர்நின்ற நம்பீயோ! 1563

''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! என்னுடைய அருமையான உயிரே! என்னை ஆட்கொண்டருளிய அரசே! என்னிடத்தே குறைபாடுகள் ஏதும் இல்லாதவாறு அருள்புரிந்து கொண்டு இருக்கும் என்னை ஈன்றெடுத்த தாயே! அடியேன், அடியேனின் தந்தை, பாட்டன் அப்பாட்டனுக்கும் முன்பு ஏழு தலைமுறையாகப் பழங்காலந்தொட்டே நின் அடியவர்களாக ஆகி இருந்து வருகிறோம். அந்தோ! அடியேன் நெஞ்சினுள்ளே புகுந்திருக் கின்ற உன்னை என்னை விட்டுப் போகச் சம்மதிக்கமாட்டேன்.

Koviloor Digital Library

மன்னஞ்ச ஆயிரந்தோள் மழுவில்து ணித்தமைந்தா,
என்நெஞ்சத் துள்ளிருந்திங் கினிப்போய்ப் பிறரொருவர்,
வன்னெஞ்சம் புக்கிருக்க லொட்டேன் வளைத்துவைத்தேன்,
நன்னெஞ்ச அன்னம்மன்னும் நறையூர் நின்ற நம்பீயோ! 1564

அன்பு மனம் கொண்ட நல்ல நெஞ்சினையுடைய அன்னத்தை யொத்த திருமகளுடன் கூடி ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமானாகிய ஓம் ஸ்ரீமந் நாராயணனே! இவ்வுலகினை ஆண்டுகொண்டிருக்கும் மன்னர்கள் அஞ்சுமாறு ஆயிரம் தோள்களையுடைய கார்த்தவீரியனைத் தன் 'மழு' என்னும் ஆயுதத்தினைக் கொண்டு அறுத்தொழித்த ஸ்ரீ பரசுராமர் அவதாரம் மேற்கொண்ட எம்பெருமானே! அடியேன் உள்ளத்தே தங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்ற நீ இனி வேறு அயலவரின் உள்ளத் தினுள்ளே சென்று தங்கியிருப்பதற்கு அடியேன் சிறிதும் சம்மதிக்க மாட்டேன். அங்ஙனம் அடியேன் நெஞ்சினைவிட்டுச் செல்லா திருக்கும் பொருட்டு உன்னை வளைத்துத் தடுத்துக் கொண்டிருக்கிறேன்.

எப்போதும் பொன்மலரிட் டிமையோர்தொ ழுது,தங்கள்
கைப்போதுகொண்டிறைஞ்சிக் கழல்மேல் வணங்க நின்றாய்,
இப்போதென் னெஞ்சினுள்ளே புகுந்தாயைப் போகலொட்டேன்
நற்போது வண்டுகிண்டும் நறையூர்நின்ற நம்பீயோ! 1565

நல்ல மலர்களில் உள்ள தேனினை உண்பதற்காக வந்த வண்டுகள் துளையிட்டுக் கொண்டிருக்கும் மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானாகிய ஓம் ஸ்ரீமந்நாராயணனே! விண்ணுலகத் தேவர்கள் எப்பொழுதும் பொன் மலர்களைத் தங்கள் திருவடிகளில் வைத்துத் தத்தம் திருக்கரங்களைக் கொண்டு இறைஞ்சி வணங்குமாறு நின்று எழுந்தருளும் எம் பெருமானே! இப்படிப்பட்ட தன்மைகளை உடைய தாங்கள் இப்போது என் நெஞ்சினுள்ளே புகுந்து, தங்கியிருக்கின்ற உன்னை வேறு ஓரிடம் செல்வதற்கு அடியேன் சம்மதிக்கமாட்டேன்.

ஊனே ராக்கை தன்னை உழந்தோம்பி வைத்தமையால்,
யானா யென்றனக்கா யடியேன் மனம்புகுந்த
தேனே, தீங்கரும்பின் தெளிவே!என் சிந்தைதன்னால்,
நானே யெய்தப்பெற்றேன் நறையூர்நின்ற நம்பீயோ! 1566

Koviloor Digital Library

''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமானாகிய ஓம் ஸ்ரீமந்நாராயணனே! அடியேனின் மனதினுள்ளே இவ்வடியேனுக்காகப் புகுந்திருக்கின்ற தேனே! இனிமையான கருப்பஞ்சாற்றின் தெளிவு போன்ற எம்பெருமானே! சதைகளினாலாகிய இந்த உடம்பினை மிகவும் அரும்பாடுபட்டுப் பாதுகாப்புடன் வளர்த்து வந்ததால், அடியேன் அவ்வுடலைக் கொண்டே நின் அருளைக் கொண்டே என்னுடைய சிந்தனையின் காரணமாக நீ அடியேனின் மனத்தினில் தங்கியிருக்கும் பெரும்பேற்றினை அடைந்தேன்.

*நன்னீா வயல்புடைசூழ் நறையூர்நின்ற நம்பியை,
கன்னீர மால்வரைத்தோள் கலிகன்றி மங்கையர்கோன்,
சொன்னீர சொல்மாலை சொல்வார்கள், சூழ்விசும்பில்
நன்னீர்மை யால்மகிழ்ந்து நெடுங்காலம் வாழ்வாரே. 1567

(புள் ஓடா எம்மான் சிறியாய் நீண்டாய் எந்தாதை மன் எப்போதும் ஊனேர் நன்னீர் - சினவில்.)

நன்கு தெளிந்த நீருடன் கூடிய வயல்கள் சுற்றிலும் சூழ்ந் திருக்கின்ற ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றிப் பெரியதோர் கல்மலையைப் போன்று உறுதியான தோள்களைக் கொண்டுள்ள ''திருமங்கை'' என்னும் நாட்டின் மன்னனும், ''கலியன்'' என்னும் திருநாமம் கொண்டவருமாகிய திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த நீர்மைமிக்க சொற்களைக் கொண்டுள்ள இச்சொல் மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் கற்றுணர்ந்து, அதனைப் பிறர்க்கு எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர்கள் விண்ணுலகிலுள்ள திருப்பரமபதம் சென்று, நன்னெறி நின்று, எம்பெருமானுக்குத் தினந்தோறும் திருத்தொண்டுகள்புரிந்து மகிழ்ச்சியுடன் நீண்ட நெடுங்காலம் வாழ்ந்து கொண்டிருப்பர்.



Koviloor Digital Library

3. சினவில்
திருநறையூர்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*சினவில் செங்கண் அரக்க ருயிர்மாளச்
செற்ற வில்லியென்று கற்றவர் தந்தம்
மனமுட் கொண்டு,என்று மெப்போதும் நின்றேத்தும்
மாமுனி யைமர மேழெய்த மைந்தனை,
நனவில் சென்றார்க்கும் நண்ணற் கரியானை
நானடி யேன்நறை யூர்நின்ற நம்பியை,
கனவில் கண்டே னின்றுகண் டமையாலென்
கண்ணி ணைகள் களிப்பக் களித்தேனே! 1568

'பெருங்கோபம் காரணமாகச் சிவந்த கண்களையுடைய அரக்கர்களின் உயிர் மாண்டு போகும்படியாகச் சீறிப்பாயும் ஆற்றல்மிக்க வில்லைக் கையில் ஏந்தியுள்ள எம்பெருமான் ஸ்ரீ இராமபிரானே!'' என்று கற்றறிந்த பெருமக்கள் பலரும் தத்தம் மனத்தினுள்ளே எண்ணித் துதித்துக் கொண்டிருக்கின்ற உயர்ந்த நிலையை உடையவன் என்று எக்காலத்திலும், என்றென்றைக்கும் வணங்கிக் கொண்டிருக்கின்ற நிலையில் நிற்கும் அனைத்துயிர்கட்கும் தலைவனாகத் திகழும் மாமுனியாக நிற்பவன், இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் அடியவர்களுக்கு இன்னின்ன வகைகளில் அருள்புரியலாம் என்று தம் மனதில் எண்ணிக் கொண்டே இருக்கின்றான். மராமரங்கள் ஏழினையும் தம் வில்லினால் துளைத்த மிடுக்குடையவன். சிறந்த ஞானிகளாலும் நனவில் கண்டுணர்வதற்கு அரிய எம்பெருமான் ஸ்ரீ இராமபிரானை ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமானை அடியேன் முன்பு கனவில் கண்டுகளித்தேன். ஆயின் அடியேன் இன்று என் இரு கண்களாலும் நேரில் கண்டு சேவித்து களித்திருப்பதனால் பெருமகிழ்ச்சியடைந்தேனே.

தாய்நி னைந்தகன் றேயொக்க வென்னையும்
தன்னை யேநினைக் கச்செய்து, தானெனக்
காய்நி னைந்தருள் செய்யு மப்பனை
அன்றிவ் வையக முண்டுமிழ்ந் திட்ட

Koviloor Digital Library

வாய னை,மக ரக்குழைக் காதனை
மைந்த னைமதிள் கோவ லிடைகழி
ஆய னை,அம ரர்க்கரி யேற்றையென்
அன்ப னையன்றி யாதரி யேனே. 1569

தாய்ப் பசுவை எண்ணிக் கொண்டிருக்கும் கன்றினைப் போன்று, அடியேனையும் எப்போதும் தன்னையே எண்ணிக் கொண்டிருக்கு மாறு திருவருள்புரிந்துள்ள எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அடியேனுக்காகவே தம் மனத்தினுள் எண்ணியெண்ணி அருள்புரியும் என் தந்தையைப் போன்ற எம்பெருமான் முன்பு உலகப் பிரளயம் உண்டான காலத்தில் இவ்வுலகங்கள் யாவற்றினையும் உண்டு தன் வயிற்றினுள்ளே அடக்கிக் கொண்டு பாதுகாத்தருளி, பின்பு அவைகளை வெளியே உமிழ்ந்துவிட்ட திருப்பவள வாயினையுடையவன். திருச்செவியில் ''மகரக்குழை'' என்னும் திருவாபரணத்தினை அணிந்துள்ள இளஞ்சிறுபிள்ளையாக இருக்கின்றான். இப்படிப் பட்ட எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் திருமதிள்கள் சூழ்ந்திருக்கின்ற ''திருக்கோவிலூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு திருவருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அத்திருக் கோவலூரின்கண் ஒரு வீட்டின் இடைகழியில் மழைக்காக வேண்டி நின்று கொண்டிருந்த முதலாழ்வார்கள் மூவரின் இடையிலே நெருக்கிக் கொண்டு நின்றருள்புரிந்த எம்பெருமானை விண்ணுலகத்து வாழ் தேவர்கட்கெல்லாம் சிங்கமாகி நிற்கும் எம்பெருமானை அடியேனிடத்தில் அன்பு கொண்டிருப்பவனை அல்லாமல் வேறு ஓர் தெய்வத்தினை அடியேன் ஆதரிக்கமாட்டேன்.

வந்த நாள்வந்தென் நெஞ்சிடங் கொண்டான்
மற்றோர் நெஞ்சறி யான்,அடி யேனுடைச்
சிந்தை யாய்வந்து தென்புலர்க் கென்னைச்
சேர்கொ டானிது சிக்கெனப் பெற்றேன்,
கொந்து லாம்பொழில் சூழ்குடந் தைத்தலைக்
கோவி னைக்குட மாடிய கூத்தனை,
எந்தை யையெந்தை தந்தைதம் மானை
எம்பி ரானையெத் தால்மறக் கேனே? 1570

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தானாகவே வந்து அடியேனை ஆட்கொண்டதுடன் அடியேன் நெஞ்சில் இடம் கொண்டு நிலைத்து நின்றுவிட்டான். அதனால், அவன் இனியும் இவ்வாறு வேறோர்

Koviloor Digital Library

நெஞ்சில் சென்று நிற்பதை அறியமாட்டாதவன். அடியேனுடைய சிந்தனையாக வந்து நின்றவன். தென்திசையில் உள்ள இயமனிடம் அடியேன் அகப்பட்டுக் கொள்ளாதவாறு எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை உறுதியாகவும், சிக்கெனவும் பற்றிக் கொண்டேன். வண்டுகள் துளைக்கும் மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்திருக்கும் ''திருக்குடந்தை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு அருள்புரியும் தலைமை சான்ற தெய்வத்தினை, குடக்கூத்தாடிய எம்பெருமானை, அடியேனின் தந்தையை, தந்தைக்கும் தந்தையான எம்பெருமானை மறப்பது என்பது எதன் காரணமாகவோ? என்று எண்ணின் அவ்வாறு மறப்பது என்பது என்றென்றும் இயலாததாகும்.

உரங்க ளாலியன் றமன்னர் மாளப்
பார தத்தொரு தேரைவர்க் காய்ச்சென்று,
இரங்கி யூர்ந்தவர்க் கின்னருள் செய்யும்
எம்பி ரானைவம் பார்புனல் காவிரி,
அரங்க மாளியென் னாளிவிண் ணாளி
ஆழி சூழிலங் கைமலங் கச்சென்று,
சரங்க ளாண்டதண் டாமரைக் கண்ணனுக்
கன்றி யென்மனம் தாழ்ந்துநில் லாதே. 1571

உறுதிமிக்க வலிமையுடன் கூடிய துரியோதனன் மற்றும் அவனைப் போன்ற மன்னர்கள் மாண்டு போகும்படியாகப் பாரதப் போரின் போது, பாண்டவர்கள் ஐவர்க்காகத் துணையாக எழுந்தருள் புரிந்து, அப்பாண்டவர்களுக்காக இரக்கம் கொண்டு மனமிரங்கி வந்து, அவர்கட்காகத் தேரைச் செலுத்திய எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் புதுப்புனல் ஓடுகின்ற காவிரி நதிபாயும் திருவரங்கத்தினை ஆண்டு கொண்டிருக்கும் எம்பெருமானாவான். அப்படிப்பட்ட எம் பெருமானே அடியேனையும் ஆண்டு கொண்டு விண்ணுலகிலுள்ள திருப்பரமபதத்தினையும் ஆண்டு கொண்டிருக்கின்றான். கடல் சூழ்ந்த இலங்கை நகரினைத் துன்படையுமாறு அங்கு எழுந்தருளி அம்புகளைச் செலுத்திய குளிர்ச்சியுடன் கூடிய அழகிய தாமரை மலர் போன்ற திருக்கண்களையுடைய எம்பெருமான் ஸ்ரீ இராம பிரானுக்கன்றி அடியேனின் மனம் வேறொருவருக்கு அடிபணிந் திருந்து உய்வு பெறாது.

Koviloor Digital Library

ஆங்கு வெந்நர கத்தழுந் தும்போ
தஞ்சே லென்றடி யேனையங் கேவந்து
தாங்கு, தாமரை யன்னபொன் னாரடி
எம்பி ராணைஉம் பர்க்கணி யாய்நின்ற,
வேங்க டத்தரி யைப்பரி கீறியை
வெண்ணெ யுண்டுர லினிடை யாப்புண்ட
தீங்க ரும்பினை, தேனைநன் பாலினை
அன்றி யென்மனம் சிந்தைசெய் யாதே. 1572

இயமன் உலகத்தில் கொடிய நரகில் சென்று சேர்கின்ற அந்நேரத்தில் ''அஞ்ச வேண்டாம்'' என்று அடியேனை அங்கு வந்து காப்பாற்றியருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பொற்றாமரைத் திருவடிகளையுடையவன். இப்படிப்பட்ட எம்பெருமான் விண்ணுலகத் தேவர்கட்கெல்லாம் அணிகலனாகத் திகழ்கின்றான். அவனே திருவேங்கடமலையில் சிங்கம் போன்றவனாகி நின்று, குதிரை வடிவில் வந்த 'கேசி' என்னும் அசுரனின் வாயைக் கிழித்த வனாகிய எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் வெண்ணெயினைத் திருடி உண்ட காரணத்தினால் உரலில் கட்டுண்டவனாகி இனிய சுவையினை உடைய கரும்பையும், தேனையும், நல்ல ஆவின்பாலினையும் போன்று இனிமையானவனான எம்பெருமான் கண்ணபிரானை யன்றி வேறு எவரையும் அடியேனின் மனம் நினைத்துக் கூடப் பார்க்காது.

எட்ட னைப்பொழு தாகிலு மென்றும்
என்ம னத்தக லாதிருக் கும்புகழ்,
தட்ட லர்த்தபொன் னைஅலர் கோங்கின்
தாழ்பொ ழில்திரு மாலிருஞ் சோலையங்
கட்டி யை,கரும் பீன்றவின் சாற்றைக்
காத லால்மறை நான்குமுன் னோதிய
பட்ட னை,பர வைத்துயி லேற்றையென்
பண்ப னையன்றிப் பாடல்செய் யேனே. 1573

''எள்ளளவு'' என்னும் மிகச் சிறிய நொடிப்பொழுதும் பிரிதல் இல்லாமல் எக்காலத்திலும் அடியேனின் மனத்தில் தங்கி இருக்கும் புகழையுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தட்டுப் போன்று மலர்ந்துள்ள பொன் போன்ற அலரையுடைய கோங்கு மரங்கள் நிறைந்திருக்கின்ற சோலைகள் நிறைந்துள்ள ''திருமாலிருஞ்

Koviloor Digital Library

சோலை'' என்னும் திருப்பதியில் எழுந்தருளியிருக்கின்ற இனிய கற்கண்டின் சுவையைப் போலவும், கரும்பிலிருந்து பிழிந்து எடுத்த இனிய சாறு போன்றும், முன்பு ஒரு சமயம் நான்கு மறைகளையும் அன்புடன் ஓதுகின்ற பெரும் புலவன் போன்றும், திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமானாகத் திகழ்கின்ற, அடியேனின் எளியவனுமாகத் திகழ்கின்றனன். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் என்னும் பண்புகளைக் கொண்ட எம்பெருமானை யன்றி வேறு எவரைப் பற்றியும் பாடிப் புகழ்ந்து கொண்டு இருக்க மாட்டேன்.

பண்ணி னின்மொழி யாழ்நரம் பில்பெற்ற
பாலை யாகி யிங்கே புகுந்து,என்
கண்ணும் நெஞ்சும் வாயுமி டங்கொண்டான்
கொண்ட பின்மறை யோர்மனம் தன்னுள்,
விண்ணு ளார்பெரு மானையெம் மானை
வீங்கு நீர்மக ரம்திளைக் கும்கடல்
வண்ணன், மாமணி வண்ணனெம் மண்ணல்
வண்ண மேயன்றி வாயுரை யாதே. 1574

இனிய பண்ணினை இசைக்கின்ற இசைமொழியை வெளிப் படுத்துகின்ற ''யாழ்'' என்னும் இசைக் கருவியினின்றும் வெளிப் படுகின்ற ''செம்பாலைப்பண்'' போன்று இனிய இசையைப் போன்று இனியவனாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் இங்கே வந்து அடியேனின் உள்ளத்தினுள்ளே புகுந்து கொண்டு அடியேனின் கண்கள், நெஞ்சு, வாய் ஆகிய மூவிடங்களையும் தான் தங்கி இருக்கும் இடமாகக் கொண்டான். அவ்வாறு அடியேனை ஏற்றுக் கொண்ட பின்பு மறைகளை ஓதும் அந்தணர்கள் நெஞ்சி னுள்ளும் இடம் பெற்றிருக்கின்ற எம்பெருமான் விண்ணுலகத் தேவர்களுக்கும் தலைவனாகத் திகழ்கிறான். இப்படிப்பட்ட தன்மையனான எம்பெருமான் மீன்கள் துள்ளி விளையாடுகின்ற கடல்நீரினை ஒத்த வண்ணத்தினையும், நீலநிற மாமணியினை ஒத்த வண்ணத்தினையும் கொண்டுள்ள எம் அண்ணலின் வண்ணத்தினை அன்றி வேறு எதனைப் பற்றியும் அடியேனின் வாயானது எடுத்துப் பேசாது.

Koviloor Digital Library

இனியெப் பாவம்வந் தெய்தும்சொல் லீர்எமக்
கிம்மை யேயருள் பெற்றமை யால்,அடும்
துனியைத் தீர்த்தின்ப மேதரு கின்றதோர்
தோற்றத் தொன்னெறி யை,வையம் தொழப்படும்
முனியை வானவ ரால்வணங் கப்படும்
முத்தி னைப்பத்தர் தாம்நுகர் கின்றதோர்
கனியை, காதல்செய் தென்னுள்ளங் கொண்ட
கள்வ னையின்று கண்டுகொண் டேனே. 1575

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருவருள் கிடைக்கப் பெற்றதன் காரணமாக அடியேனுக்கு இனி எத்தகைய பாவங்கள் வந்து சேரும் என்பதை எமக்குச் சொல்லுங்கள்? என்று அடியேன் கேட்பதன்மூலம், இனி அடியேனுக்கு எத்துணைப் பாவங்களும் வந்து சேராது. அடியேனுக்கு இப்பிறவியிலேயே எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருவருள் கிடைக்கப் பெற்றமையால், இந்த ஆத்மாவின் தூய இயல்பை அழிக்கும் தீவினைகளைப் போக்கிப் பேரின்பத்தை அளிக்கக் கூடியதோர் தோற்றமாகத் திகழும் தொன்னெறியாகத் திகழ்ந்திடும் தெய்வமாம் எம்பெருமானை, இவ்வுலகத்து வாழ்கின்ற உயிரினங்கள் யாவும் வணங்கித் தொழுகின்ற மாமுனி என்னும் எம்பெருமானை, விண்ணுலகில் வாழ்கின்ற தேவர்களால் வணங்கப்படுகின்ற முத்தினை ஒத்த இறைவனை, பக்தர்கள் என்னும் அடியவர்களால் அனுபவிக்கின்ற ஓர் ஒப்பற்ற கனியினை, அடியேனிடத்துப் பேரன்பு கொண்டருளி அடியேனின் உள்ளத்தில் தங்கியிருக்கின்ற அக்கள்வனும் எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அடியேன் இன்று கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

என்செய் கேனடி யேனுரை யீர்இதற்
கென்று மென்மனத் தேயிருக் கும்புகழ்,
தஞ்சை யாளியைப் பொன்பெய ரோன்றன்
நெஞ்ச மன்றிடந் தவனைத் தழலேபுரை
மின்செய் வாளரக் கன்நகர் பாழ்படச்
சூழ்க டல்சிறை வைத்துஇமை யோர்தொழும்,
பொன்செய் மால்வரை யைமணிக் குன்றினை
அன்றி யென்மனம் போற்றியென் னாதே. 1576

அடியேனின் மனத்தினுள்ளே என்றென்றும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் நிலைபெற்று இருக்கும்போது அடியேன் செய்யக்

Koviloor Digital Library

கூடியது யாதென்று எடுத்துச் சொல்லுங்கள். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பெரும்புகழுடன் தஞ்சை மாமணிக் கோயிலில் எழுந்தருள் புரிந்து கொண்டிருப்பதுடன், ''நரசிம்ம'' அவதாரம் மேற்கொண்டிருந்த அக்காலத்தில் ''இரணியன்'' என்னும் அசுரனின் மார்பினைப் பிளந்துவிட்ட எம்பெருமான் ''ஸ்ரீ இராம பிரான்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு, நெருப்பு போன்று சுடர்விடும் வாளாயுதத்தைக் கொண்டுள்ள இராவணனுடைய நகரமாகிய இலங்கை நகரினைப் பாழாக்கும் பொருட்டு அந் நகரினைச் சுற்றிலும் அகழியாயிருந்து பாதுகாப்பாக இருந்து கொண்டிருக்கும் கடலின்மீது அணைகட்டி, அதன்மீது சென்று அந்நகரினை அழித்துவிட்ட ஸ்ரீ இராமபிரான் விண்ணுலகிலுள்ள தேவர்களால் வணங்கக் கூடியவன். ஒளி வீசுகின்ற பொன் செய்தாற் போன்று இருக்கும் எம்பெருமான் திருமால் வந்து தங்கி இருக்கின்ற மலையை, நீலமணி மயமான குன்றினையொத்த எம்பெருமானை யன்றி, அடியேனின் மனமானது வேறு எவரைப் பற்றியும் போற்றிப் பாடவேண்டுமென்று எண்ணியும் பார்க்காது.

*தோடு விண்டலர் பூம்பொழில் மங்கையர்
தோன்றல் வாள்கலி யன்திரு வாலி
நாடன், நன்னறை யூர்நின்ற நம்பிதன்
நல்ல மாமலர்ச் சேவடி, சென்னியில்
சூடி யும்தொழு துமெழுந் தாடியும்
தொண்டர் கட்கவன் சொன்னசொல் மாலை,
பாடல் பத்திவை பாடுமின் தொண்டீர்!
பாட நும்மிடைப் பாவம்நில் லாவே. 1577

(சினவில் தாய் வந்த உரங்கள் ஆங்கு எட்டனை பண்ணின் இனி என்செய்கேன் தோடு-கண்.)

இதழ்கள் விரிந்த மலர்கள் மலர்ந்து நிறைந்திருக்கின்ற பூக்கள் நிறைந்திருக்கின்ற சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருமங்கை'' என்னும் நாட்டில் வாழ்வோர்க்கெல்லாம் தலைவனாகத் திகழ்கின்ற, ''திருவாலி'' என்னும் நாட்டிற்கு அரசனாகவும் விளங்குகின்ற ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும்

Koviloor Digital Library

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப்பற்றி அவனுடைய தாமரைத் திருவடிகளைத் தம் தலையின்மீது சூடிக் கொண்டு தொழுதும், எழுந்திருந்து மகிழ்ச்சியுடன் கூடி ஆடியும், திருத்தொண்டேபுரியும் திருத்தொண்டர்கள் உய்யும் பொருட்டு அருளிச் செய்த சொல் மாலையாகிய பாசுரங்கள் பத்தினையும் திருத்தொண்டர்களே! பாடுங்கள். அவ்வாறு இப்பத்துப் பாசுரங்களையும் பாடுகின்ற உங்களுடைய பாவங்கள் யாவும் நில்லாது ஒழிந்துவிடும்.

4. கண்சோர
திருச்சேறை

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*'கண்சோர வெங்குருதி வந்திழிய
வெந்தழல்போல் கூந்த லாளை,
மண்சேர முலையுண்ட மாமதலாய்!
வானவர்தம் கோவே!' என்று,
விண்சேரும் இளந்திங்கள் அகடுரிஞ்சு
மணிமாட மல்கு, செல்வத்
தண்சேறை யெம்பெருமான் தாள்தொழுவார்
காண்மினென் தலைமே லாரே. 1578

''விண்ணுலகில் வாழ்கின்ற தேவர்கட்கு எல்லாம் தலைவனாகத் திகழும் தேவாதி தேவனே! கொடிய கண்கள் தளர்ந்திருக்கவும், இரத்தம் பீறிட்டுக் கொண்டு வெளியேறவும், வெம்மை மிக்க நெருப்பு போன்று சிவந்த கூந்தலை உடைய 'பூதனை' என்னும் வஞ்சகப் பேய் இப்பூமியின்மீது விழுமாறு அவளுடைய நஞ்சு கலந்த முலைப்பாலை உண்ட சின்னஞ் சிறுகுழந்தையே!'' என்றெல்லாம் விண்ணிலுள்ள இளஞ்சந்திரனின் அடிவயிற்றைத் தொட்டுத் தடவுமளவுக்கு மிகவும் உயர்ந்து ஓங்கி நிற்கும் மணிகள் பதிக்கப் பெற்ற திருமாளிகைகள் நிறைந்திருக்கின்ற செல்வவளம் மிக்க ''திருச்சேறை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் சாரநாதப் பெருமாளின் திருவடிகளை வணங்கிக் கொண்டிருக்கும் அடியவர்கள் அடியேனின் தலைமீது தன் திருவடிகளை வைத்துக் கொண்டு உலவி வந்து கொண்டிருப்பதைக் காணுங்கள்.

Koviloor Digital Library

அம்புருவ வரிநெடுங்கண் அலர்மகளை
வரையகலத் தமர்ந்து, மல்லல்
கொம்புருவ விளங்கனிமே லிளங்கன்று
கொண்டெறிந்த கூத்தர் போலாம்,
வம்பலரும் தண்சோலை வண்சேறை
வானுந்து கோயில் மேய,
எம்பெருமான் தாள்தொழுவா ரெப்பொழுதும்
என்மனத்தே யிருக்கின் றாரே. 1579

அழகிய புருவங்களையும், நீண்ட வரிபடர்ந்த திருக்கண்களையுமுடைய தாமரை மலரின்மீது வீற்றிருக்கும் திருமகளைத் தம் திருமார்பில் கொண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், கொம்புகளை உடைய விளாமரத்தின்மீது, அசுரன் ஒருவன் கன்று வடிவில் வந்தவனைத் தூக்கி எறிய, அவ்விரு அசுரர்களையும் அழித்த எம்கூத்தபிரானாவான். இப்படிப்பட்ட எம்பெருமான் மணம் வீசுகின்ற மலர்களைக் கொண்ட சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருச்சேறை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகிறான். இங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான் ஸ்ரீசாரநாதப் பெருமானின் திருவடிகளைச் சேவித்துக் கொண்டிருக்கும் அடியவர்கள், அடியேனின் மனத்தினில் எக்காலத்தும் இருந்து கொண்டே இருப்பார்கள்.

'மீதோடி வாளெயிறு மின்னிலக
முன்விலகு முருவி னாளை,
காதோடு கொடிமூக்கன் றுடனறுத்த
கைத்தலத்தா!' என்று நின்று,
தாதோடு வண்டலம்பும் தண்சேறை
எம்பெருமான் தாளை யேத்தி,
போதோடு புனல்தூவும் புண்ணியரே
விண்ணவரில் பொலிகின் றாரே. 1580

பற்களின் வரிசையினின்றும் மேல்நோக்கி நிற்கும் கோரைப் பற்கள் மின்னலைப் போன்று ஒளிவீசிக் கொண்டு இருக்கின்ற அளவில், எதிரே வருபவர்கள் அஞ்சி ஓடிச் செல்கின்ற அளவிற்கு ஆச்சரியப்படும்படியான, மிகவும் பயங்கர வடிவினைக் கொண்ட ''சூர்ப்பணகை'' என்னும் கொடிய அரக்கியின் காதினையும், கொடி போன்ற மூக்கினையும் அறுத்திட்ட திருக்கரங்களையுடைய எம்

Koviloor Digital Library

பெருமான் ஸ்ரீஇராமபிரானே! என்று, பூந்தாதுக்களில் வண்டுகள் இன்னிசை யினை ஒலிக்கின்ற குளிர்ச்சி பொருந்திய ''திருச்சேறை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம் பெருமான் ஸ்ரீசாரநாதப் பெருமாளின் திருவடிகளைத் தொழுது ஏத்தி, 'போது' என்னும் நிலையில் உள்ள மலர்களைத் தூவித் தூய்மையான நீரினையும் கொண்டு சேர்த்து வழிபடுகின்ற புண்ணியங்கள் நிறையப் பெற்ற அடியவர்களே விண்ணுலகில் வாழ்கின்ற தேவர்களைக் காட்டிலும் பொலிவுடன் சிறந்து விளங்குவார்கள்.

'தேராளும் வாளரக்கன் தென்னிலங்கை
வெஞ்சமத்துப் பொன்றி வீழ,
போராளும் சிலையதனால் பொருகணைகள்
போக்குவித்தாய்' என்று, நாளும்
தாராளும் வரைமார்பன் தண்சேறை
எம்பெருமா னும்ப ராளும்,
பேராளன் பேரோதும் பெரியோரை
ஒருகாலும் பிரிகி லேனே. 1581

தேர்ப்படைகளைச் செலுத்தும் ஆற்றல் உடையவனாய், வாள் படையையும் கொண்டு வீசுகின்ற ஆற்றல் மிக்கவனாகிய ''இராவணன்'' என்னும் அரக்கர்குலத்து அரசனின் இலங்கை நகரத்தினை அழியும்படியாகத் தம் வில்லினை வளைத்து, கொடிய போர்க்களத்தில் அம்புகளைச் செலுத்திய எம்பெருமான் ஸ்ரீ இராமபிரானே! என்று சொல்லிச் சொல்லி அடியார்கள் துதித்துக் கொண்டிருப்பார்கள். மலையைப் போன்ற தன் திருமார் பினில் திருத்துழாய் மாலையினை அணிந்து கொண்டிருக்கின்ற, குளிர்ச்சிமிக்க ''திருச்சேறை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீசாரநாதப் பெருமாள் விண்ணுலகத்தவர்களையும் ஆண்டு கொண்டு இருப்பவன். இப்படிப்பட்ட எம்பெருமானின் திருநாமங்களை எப்போதும் ஓதிக் கொண்டு இருக்கும் பெரியவர்களாகிய அடியவர்களை விட்டு, அடியேன் ஒரு நொடிப் பொழுதளவு கூடப் பிரிந்திருக்க மாட்டேன்.

Koviloor Digital Library

வந்திக்கும் மற்றவர்க்கும் மாசுடம்பின்
வல்லமணர் தமக்கு மல்லேன்,
முந்திச்சென் றரியுருவா யிரணியனை
முரணழித்த முதல்வர்க் கல்லால்,
சந்தப்பூ மலர்ச்சோலைத் தண்சேறை
எம்பெருமான் தாளை, நாளும்
சிந்திப்பார்க் கென்னுள்ளம் தேனூறி
எப்பொழுதும் தித்திக் கும்மே. 1582

அழுக்குடைய உடலினைக் கொண்ட சமண் சமயத்தவருடனும், வந்தேன் என்று சொல்லிக் கொண்டு தாழ்ந்த தேவதைகளை வணங்கிக் கொண்டிருக்கும் பௌத்தர்களுடனும், மற்றவர்களுடனும் அடியேன் இணங்கி இருக்கமாட்டேன். ''இதோ இந்தத் தூணிலும் உளன்'' என்று சொல்வதற்கு முன்பே, முந்திக் கொண்டு அந்தத் தூணினின்றும் நரசிம்ம மூர்த்தியாகத் திருஅவதாரம் மேற்கொண்டு வெளிப்பட்டு ''இரணியன்'' என்னும் அசுரனின் வலிமையை அழித்து, அவனுயிரைப் போக்கியருளிய, இவ்வுலகம் இயங்கு வதற்கு மூலகாரணனாகத் திகழும் ஆதிமுதல்வனான எம் பெருமானுக்கு அடியவனாக விளங்கும் அடியேன். மணம் வீசுகின்ற மலர்கள் மலர்ந் திருக்கின்ற சோலைகளையுடைய குளிர்ச்சியான ''திருச்சேறை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசாரநாதப் பெருமானின் திருவடிகளைத் தாம் சிந்தித்துக் கொண்டு இருக்கும் அடியவர்களைப் பற்றியே அடியேனின் உள்ளம் 'தேனமுது' என்றென்றும் ஊறித் தித்தித்துக் கொண்டிருக்கும்.

'பண்டேன மாயுலகை யன்றிடந்த
பண்பாளா!' என்று நின்று,
தொண்டானேன் திருவடியே துணையல்லால்
துணையில்லேன் சொல்லு கின்றேன்,
வண்டேந்தும் மலர்ப்புறவில் வண்சேறை
எம்பெருமா னடியார் தம்மை,
கண்டேனுக் கிதுகாணீ ரென்நெஞ்சும்
கண்ணிணையும் களிக்கு மாறே. 1583

முன்பொரு சமயம் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் வராக அவதாரம் மேற்கொண்டு இப்பூமியைத் தன் கோட்டால் குத்தி எடுத்துக் கொண்டு வந்தருளிய நற்குண நற்செயல்களையுடைய

Koviloor Digital Library

பண்புமிக்க எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! என்று என்றென்றும் உன்னையே துதித்து உமக்கு அடியேன் அடிமைப்பட்டுள்ளேன். இத்தகைய அடியேன் தங்கள் இணைத் திருவடிகளையே துணையாகக் கொண்டிருப்பதன்றி வேறோர் துணை என்பது அடியேனுக்கு இல்லை என்பதை அடியேன் எடுத்துரைக்கின்றேன். வண்டுகள் தங்கியிருக்கின்ற மலர்கள் நிறைந்துள்ள சோலைகள் சூழ்ந்திருக்கின்ற வளம்மிக்க ''திருச்சேறை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனான ஸ்ரீசாரநாதப் பெருமாளின் அடியவர்களைக் கண்டு சேவிக்கப் பெற்ற அடியேனின் மனமும் இரண்டு கண்களும் மகிழ்ச்சி அடைந்திருக்கும் தன்மையினை இதோ இப்பொழுதே காண்பீர்களாக!

'பைவிரியும் வரியரவில் படுகடலுள்
துயிலமர்ந்த பண்பா!' என்றும்,
'மைவிரியும் மணிவரைபோல் மாயவனே!'
என்றென்றும், வண்டார் நீலம்
செய்விரியும் தண்சேறை யெம்பெருமான்
திருவடியை சிந்தித்தேற்கென்
ஐயறிவும் கொண்டானுக் காளானுர்க்
காளாம் என்அன்பு தானே. 1584

அகன்ற படங்களைக் கொண்டுள்ள திருவனந்தாழ்வான்மீது திருப்பாற்கடலில் திருக்கண் வளர்ந்தருளும் பண்பாளா! என்றும், கருமைநிறம் கொண்ட நீலமணி மலை போன்ற திருமேனியை யுடைய மாயவனே! என்றும் என்றென்றும் பன்முறை எடுத்தோதிக் கொண்டு, வண்டுகள் நிறைந்திருக்கின்ற கருநெய்தற் பூக்கள் மலர்ந்துள்ள வயல்கள் நிறைந்துள்ள குளிர்ச்சி பொருந்திய ''திருச்சேறை'' என்னும் திருப்பதியில் எழுந்தருள்புரியும் எம் பெருமான் ஸ்ரீசாரநாதப் பெருமாளின் திருவடிகளையே தன் மனதில் எண்ணிக் கொண்டிருக்கின்ற அடியவர்களுக்கு அடியேனின் ஐம்புலன்களால் உண்டாகின்ற அறிவினையும் தன்னுடையதாக்கிக் கொண்ட அவ்வெம்பெருமானுக்கு அடிமைப்பட்டுள்ள அடிய வர்களிடத்தே அடியேன் அன்புற்று அடிமைப்பட்டிருக்கிறேன்.

உண்ணாது வெங்கூற்றம் ஓவாது
பாவங்கள் சேரா, மேலை
விண்ணோரும் மண்ணோரும் வந்திறைஞ்சும்
மென்தளிர்போ லடியி னானை,

Koviloor Digital Library

பண்ணார வண்டியம்பும் பைம்பொழில்சூழ்
தண்சேறை யம்மான் றன்னை,
கண்ணாரக் கண்டுருகிக் கையாரத்
தொழுவாரைக் கருதுங் காலே. 1585

விண்ணுலகில் வாழ்கின்ற தேவர்களும் இம்மண்ணுலகிலுள்ள மக்களும் வந்து வணங்கித் துதிக்கின்ற இளந்தளிர் போன்ற திருவடிகளைக் கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாரா யணனைப் பண்ணிசை பாடுகின்ற வண்டுகள் சேர்ந்து ரீங்காரமிட்டுப் பாடுகின்ற அளவில் மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்திருக்கின்ற குளிர்ச்சி பொருந்திய ''திருச்சேறை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ சாரநாதப் பெருமாளைக் கண்குளிரக் கண்டு சேவித்து, உள்ளத்தே உருகித் தன்னிரு கரங்களாலும் தொழுது வணங்குகின்ற அடியவர் பெருமக்களைக் கண்டு, அவர்களைப் பற்றி எண்ணிப் பார்க்கும் போது, கொடுமைகளையே அளிக்கின்ற கொடிய இயமன் துன்புறுத்தமாட்டான். இதுவரை ஓய்வின்றிச் சேர்ந்திருக்கின்ற பாவங்களும் நம்மை அணுகாது.

கள்ளத்தேன் பொய்யகத்தே னாதலால்
போதொருகால் கவலை யென்னும்,
வெள்ளத்தேற் கென்கொலோ விளைவயலுள்
கருநீலம், களைஞர் தாளால்
தள்ளத்தேன் மணநாறும் தண்சேறை
எம்பெருமான் தாளை, நாளும்
உள்ளத்தே வைப்பாருக் கிதுகாணீர்
என்னுள்ள முருகு மாறே. 1586

பயிர்கள் செழித்து வளர்கின்ற வயல்களில் முளைத்து வளர்ந்து வரும் கருநெய்தற் செடிகளைப் பயிர்களினின்றும் அப்புறப்படுத்தும் பொருட்டு, உழவர்கள் தங்கள் கால்களினாலே அவைகளை ஒதுக்கித் தள்ளிவிட, அந்நெய்தல் பூக்களிலிருந்து வெளியேறுகின்ற தேனின் மணம் வீசப்பெற்ற குளிர்ச்சி தேனின் மணம் வீசப்பெற்ற குளிர்ச்சி பொருந்திய ''திருச்சேறை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசாரநாதப் பெருமாளின் திருவடிகளை நாள்தோறும் தம் உள்ளத்தினில் அவ்வெம் பெருமானின் இருப்பிடமாகக் கொண்டுள்ள அடியவர்களைப் பற்றி

Koviloor Digital Library

அடியேனின் உள்ளம் உருகிக் கொண்டுள்ள இந்நிலைமையினைக் காணுங்கள். அடியேனின் உரிமையாகக் கருதும் கள்ளத்தனமும், உள்ளத்தே பொய்கள் பல கொண்டிருக்கின்ற வஞ்சக எண்ணங் களையும் கொண்டிருக்கின்ற எக்காலத்தும் இடைவிடாமல் பற்றியிருக்கின்ற ''துயரம்'' என்னும் பெருங்கடலில் அழுந்திக் கிடக்கின்ற அடியேனுக்கு இப்படிப்பட்ட பெரும்பேறு கிடைத்தது என்பது எங்ஙனம் ஏற்பட்டதோ? அறியேன்.

*பூமாண்சேர் கருங்குழலார் போல்நடந்து
வயல்நின்ற பெடையோடு, அன்னம்
தேமாவின் இன்னிழலில் கண்டுயிலும்
தண்சேறை யம்மான் றன்னை,
வாமான்தேர்ப் பரகாலன் கலிகன்றி
ஒலிமாலை கொண்டு தொண்டீர்,
தூமாண்சேர் பொன்னடிமேல் சூட்டுமின்நும்
துணைக்கையால் தொழுது நின்றே. 1587

(கண் அம்பு மீதோடி தேராளும் வந்தி பண்டு பைவிரி உண்ணாது கள்ளம் பூமாண் - தந்தை.)

மலர்களைச் சூடிய கருமையான கூந்தலையுடைய பெண் களைப் போன்று நடந்து செல்கின்ற அன்னப்பறவை, தன் பெண் அன்னப்பறவைகளுடன் சேர்ந்து, உலவி வந்த பின்பு, தேன் போன்று இனிக்கின்ற பழங்களைத் தருகின்ற மாமரத்தின் நிழலிலே தங்கி உறங்கிக் கொண்டிருக்கின்ற அளவில் குளிர்ச்சி பொருந்திய ''திருச்சேறை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ள எம்பெருமான் ஸ்ரீசாரநாதப் பெருமானைப் பற்றிக் குதிரைகள் பூட்டிய தேரின்மீது ஏறிச் சென்று பகைவரை வெல்லும் ஆற்றல் பெற்ற பரகாலன், கலியன் என்னும் திருப்பெயர்களைக் கொண்ட திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலிமாலைகளாகிய இப்பாசுரங்கள் பத்தினையும் கொண்டு ஓ தொண்டர்களே! தூய்மை சேர்ந்துள்ள எம்பெருமானின் பொற்றாமரைத் திருவடிகளின்மீது சூட்டுங்கள். மேலும் உங்களுடைய கைகளால் தொழுதவாறு என்றும் நின்று வணங்குங்கள்.

Koviloor Digital Library

5. தந்தை காலில் திருவழுத்தூர்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*தந்தை காலில் பெருவி
லங்கு தாளவிழ, நள்ளிருட்கண்
வந்த எந்தை பெருமானார்
மருவி நின்ற வூர்போலும்,
முந்தி வானம் மழைபொழியும்
மூவா வுருவில் மறையாளர்,
அந்தி மூன்று மனலோம்பும்
அணியார் வீதி அழுந்தூரே. 1588

தம் தந்தையாராகிய வசுதேவரின் காலின்மீது கம்சனால் பூட்டி வைத்திருந்த பெரியதோர் விலங்கு இற்று விழுமாறு செய்யும் பொருட்டு ஸ்ரீ கண்ணபிரானாகத் திருஅவதாரம் மேற்கொண்டு, நள்ளிரவில் வந்து நின்ற என் தந்தை போன்று திகழும் எம்பெருமான் ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி உள்ளார். அவ்வாறு எழுந்தருளியுள்ள திருத்தலம் திரு வழுந்தூர் என்பதாகும். அப்படிப்பட்ட ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் மூப்பே அடையப் பெறாத அந்தணர்கள் முக் காலங்களிலும் வேள்விகளை இயற்றிக் கொண்டுள்ளனர். அழகுமிக்க திருவீதிகள் அத்திருத்தலத்தில் அமைந்துள்ளன. இத்தகைய ''திரு வழுந்தூர்'' என்னும் திருத்தலம் எம் தந்தையாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருப்பரமபதத்திற்கு ஒத்ததாக அமைந்துள்ளது.

பாரித் தெழுந்த படைமன்னர்
தம்மை யாள, பாரதத்துத்
தேரில் பாக னாயூர்ந்த
தேவ தேவ னூர்போலும்,
நீரில் பணைத்த நெடுவாளைக்
கஞ்சிப் போன குருகினங்கள்,
ஆரல் கவுளோ டருகணையும்
அணியார் வயல்சூழ் அழுந்தூரே. 1589

தாம் வெற்றி பெற வேண்டுமென்று கருதிப் பெருமுயற்சியுடன் புறப்பட்டுப் படைவீரர்களுடன் கூடி வந்த மன்னர்கள் அழியும்

Koviloor Digital Library

படியாகப் பாரத யுத்தத்தின்போது, அருச்சுனனுக்குத் தேர் செலுத்தி வெற்றிபெற்ற எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் விண்ணுலகத் தேவர்கள் வாழ்கின்ற திருப்பரமபதம் என்பது போன்றுள்ள ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்றான். இந்தத் திருவழுந்தூரானது நீர் நிலைகளில் நன்கு கொழுத்து வளர்ந்து துள்ளிக் கொண்டிருக்கும் பெரிய மீன்களுக்கு அஞ்சி ஓடிப்போகின்ற ''குருகு'' என்னும் பறவைக் கூட்டங்கள், அங்குள்ள ஆரல் என்னும் சிறுமீன்களைக் கௌவிக் கொண்டு மேன்மேலும் அருகில் வந்து சேர்கின்ற அளவுக்கு அழகு மிக்க வயல்கள் சூழ்ந்திருக்கின்ற வளம்மிக்கதோர் திருப்பதியாக அமைந்துள்ளது.

செம்பொன் மதிள்சூழ் தென்னிலங்கைக்
கிறைவன் சிரங்கள் ஐயிரண்டும்,
உம்பர் வாளிக் கிலக்காக
உதிர்த்த வுரவோ னூர்போலும்,
கொம்பி லார்ந்த மாதவிமேல்
கோதி மேய்ந்த வண்டினங்கள்,
அம்ப ராவும் கண்மடவார்
ஐம்பா லணையும் அழுந்தூரே. 1590

சிவந்த பொன்னாலான மதிள்கள் சூழ்ந்திருக்கின்ற, தென்திசையிலுள்ள இலங்கை நகர்க்குத் தலைவனான ''இராவணன் என்னும் அரக்கனின் தலைகள் பத்தினையும் ''பிரம்மாத்திரம்'' என்னும் ஆயுதம் கொண்டு அறுத்தொழித்த மிடுக்கினையுடைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருப்பதியைப் போன்று அமைந்துள்ளது ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியாகும். இத்தகைய ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் கிளைகள் நிறைந்துள்ள ''குருக்கத்தி'' என்னும் மரத்தின் மீதுள்ள இளந்தளிர்களைத் தன் மூக்கினால் கொத்தி இரை தேடுகின்ற வண்டுகள் அம்பு போன்று கூர்மையான கண்களைக் கொண்டுள்ள பெண்களின் கூந்தலில் வந்து அமர்கின்றன.

வெள்ளத் துள்ளோ ராலிலைமேல்
மேவி யடியேன் மனம்புகுந்து,என்
உள்ளத் துள்ளும் கண்ணுள்ளும்
நின்றார் நின்ற வூர்போலும்,

Koviloor Digital Library

புள்ளுப் பிள்ளைக் கிரைதேடிப்
போன காதல் பெடையோடும்,
அள்ளல் செறுவில் கயல்நாடும்
அணியார் வயல்சூழ் அழுந்தூரே. 1591

உலகப் பிரளயம் உண்டான காலத்தில் ஆலந்தளிரின்மீது திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அடியேனின் மனத்தினுள் புகுந்து, என் உள்ளத்தினின்றும், கண்ணிலும் நிற்கின்றார். அப்படிப்பட்ட எம்பெருமான் நிலைத்து நின்று அருள்புரியும் திருத்தலம் திருவழுந்தூராகும். இந்தத் திருவழுந்தூர் என்னும் திருத்தலமானது அங்குள்ள வயல்களில் ஆண்பறவை தன் பெண்பறவையுடன் சேர்ந்து கொண்டு தன் குஞ்சுகளுக்கு வேண்டிய இரையைத் தேடிச் செல்ல, சேறு மிக்குள்ள விளைநிலங்களில் மீன்களைத் தேடிச் செல்கின்ற அளவிற்கு அழகுமிக்கு வயல்கள் சூழ்ந்திருக்கின்ற வளமிக்கதாக அமைந்துள்ளது.

பகலு மிரவும் தானேயாய்ப்
பாரும் விண்ணும் தானேயாய்,
நிகரில் சுடரா யிருளாகி
நின்றார் நின்ற வூர்போலும்,
துகிலின் கொடியும் தேர்த்துகளும்
துன்னி மாதர் கூந்தல்வாய்,
அகிலின் புகையால் முகிலேய்க்கும்
அணியார் வீதி அழுந்தூரே. 1592

பகல், இரவு ஆகிய இரண்டும் தானேயாகி, பூமி, வானம் ஆகிய இரண்டும் தானேயாகி நின்று அனைத்தையும் நியமிக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், ஒளியாகவும் இருளாகவும் இருந்து கொண்டு இருக்கின்றான். இப்படிப்பட்ட எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருப்பதி போன்று அமைந்துள்ளது ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியாகும். இத்திருப்பதியில் தெருக்களில் துகிலினால் ஆன கொடிகள் அசைந்து கொண்டு இருப்பதால் காற்று வீசுகின்றன. இத்தெருக்களில் தேர்கள் செல்வதால் உண்டாகும் மண்துகள்களும் சேர்ந்து அங்குள்ள பெண்களின் கூந்தலில் கலந்து இருக்க, அகிற்புகையும் உடன்சேர்ந்து இருப்பதனால் மழைக்காலத்தை ஒத்த மேகக்கூட்டங்கள் போன்று அமைந்துள்ளது.

Koviloor Digital Library

ஏடி லங்கு தாமரைபோல்
செவ்வாய் முறுவல் செய்தருளி,
மாடு வந்தென் மனம்புகுந்து
நின்றார் நின்ற வூர்போலும்,
நீடு மாடத் தனிச்சூலம்
போழக் கொண்டல் துளிதூவ,
ஆட லரவத் தார்ப்போவா
அணியார் வீதி அழுந்தூரே. 1593

இதழ்களையுடைய தாமரை மலரினைப் போன்ற சிவந்த தன் திருவாயினால் புன்முறுவல் செய்தருளி, அடியேனின் அருகே வந்திருந்து, அடியேனின் மனத்தினுள்ளே புகுந்து கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருப்பரமதம் போன்று திகழ்கின்ற திருவழுந்தூர் என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்றான். இத்தகைய திருவழுந்தூரில் உயர்ந்து ஓங்கியிருக்கின்ற மாடமாளிகைகளின் உச்சியில் அமைந் திருக்கின்ற 'சூலம்' என்னும் ஆயுதமானது மேகத்தின் வயிற்றைக் கிழித்ததன் காரணமாக அம்மேகத்தினின்றும் மழைத் துளிகளைத் தூவிக் கொண்டிருக்கின்றன. அங்கு 'கூத்து' ஆடுவதனால் உண்டா கின்ற ஒலியானது எப்போதும் ஓயாமல் ஒலித்துக் கொண்டே இருக்கும். இப்படிப்பட்ட சிறப்புகளைக் கொண்டு அழகுடன் அமைந்துள்ள வீதிகளைக் கொண்டுள்ளது ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதி ஆகும்.

மாலைப் புகுந்து மலரணைமேல்
வைகி யடியேன் மனம்புகுந்து,என்
நீலக் கண்கள் பனிமல்க
நின்றார் நின்ற வூர்போலும்
வேலைக் கடல்போல் நெடுவீதி
விண்தோய் சுதைவெண் மணிமாடத்து,
ஆலைப் புகையால் அழல்கதிரை
மறைக்கும் வீதி அழுந்தூரே. 1594

மாலை நேரத்தில், மலர்ப் படுக்கையில் தங்கியிருந்து, அடியேனுடைய மனதில் புகுந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அடியேனின் கருநெய்தற் பூ போன்ற கண்களினின்றும் (அடியேனை விட்டுப் பிரிந்து செல்வாரோ! என்று எண்ணிய அளவில்) நீர் பெருக்கெடுப்பதைக் கண்டு அந்த அளவிலேயே வேறு எங்கும்

Koviloor Digital Library

செல்லாமல் அடியேனின் மனத்தினில் நிலைபெற்று இருக்கின்றான். அப்படிப்பட்ட எம்பெருமானின் இருப்பிடமான திருப்பரம பதத்தினைப் போன்றுள்ளது திருவழுந்தூர் என்னும் திருப்பதி. அந்தத் திருவழுந்தூரில் உள்ள வீதிகள் கடல் போன்று நீண்டதாகவும், அவ்வீதிகளில் விண்ணைத் தொடுமளவுக்கு வெண்சாந்து பூசிய, மணிகள் பதியப்பெற்ற மாடமாளிகைகளில் படிந்திருக்கின்ற சூரியனின் வெப்பக்கதிர்களை, கரும்புச்சாற்றினைக் காய்ச்சுகின்ற ஆலைகளிலிருந்து உண்டாகும் புகையானது மறைத்துவிடும்.

வஞ்சி மருங்கு லிடைநோவ
மணந்து நின்ற கனவகத்து,என்
நெஞ்சு நிறையக் கைகூப்பி
நின்றார் நின்ற வூர்போலும்,
பஞ்சி யன்ன மெல்லடிநற்
பாவை மார்கள், ஆடகத்தின்
அஞ்சி லம்பி னார்ப்போவா
அணியார் வீதி அழுந்தூரே. 1595

வஞ்சிக்கொடி போன்ற என்னுடைய நுண்ணிய இடை வலியெடுக்குமாறு என்னுடன் கனவில் கூடியிருந்துள்ள கலவியின்போது அடியேன் குறையொன்றும் காணவியலாதவாறு அடியேனின் நெஞ்சு நிறையுமாறு இருகரங்களையும் கூப்பி அடியேன் வணங்கப் பெற்றுள்ள நிலையில் நின்றுள்ள எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருளி உள்ள திருப்பதி என்பது திருவழுந்தூராகும். அந்தத் திருவழுந்தூரில் பஞ்சு போன்ற மென்மையான பாதங்களையுடைய நற்பண்புகள் மிக்க பெண்களின் பொன்னாலான சிலம்பின் ஒலியானது ஓய்வின்றி எப்போதும் ஒலித்துக் கொண்டே இருக்கும் அழகுமிக்க வீதிகளைக் கொண்டு அமைந்துள்ளது.

என்னைம் புலனு மெழிலுங்கொண்
டிங்கே நெருந லெழுந்தருளி,
பொன்னங் கலைகள் மெலிவெய்தப்
போன புனித ரூர்போலும்,
மன்னு முதுநீ ரரவிந்த
மலர்மேல் வரிவண் டிசைபாட,
அன்னம் பெடையோ டுடனாடும்
அணியார் வயல்சூழ் அழுந்தூரே. 1596

Koviloor Digital Library

நான் நேற்று இருந்த இடத்திற்கே வந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அடியேனின் ஐம்புலன்களினால் அமைந்துள்ள அழகினைக் கவர்ந்து சென்றுவிட்டான். அவன் அவ்வாறு என்னைப் பிரிந்து சென்ற காரணத்தால் என்னுடைய அழகிய பட்டாடைகள் தளர்ந்து போகும்படி மெலிந்துவிட்டேன். இப்படிப்பட்ட தூயவ னாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருப்பதி 'திருவழுந்தூர்' என்பதாகும். 'திருவழுந்தூர்' என்னும் திருப்பதியில் உள்ள குளங்களில் உள்ள தாமரைமலரின் மீது வரிகளையுடைய வண்டுகள் இசையினை இசைத்துக் கொண்டிருக்க, அன்னப்பறவை தன் பெண் அன்னப்பறவைகளுடன் சேர்ந்து ஆடுகின்ற அளவில் நீர்வளம்மிக்க வயல்கள் சூழ்ந்திருக்கின்றன.

*நெல்லில் குவளை கண்காட்ட
நீரில் குமுதம் வாய்காட்ட,
அல்லிக் கமலம் முகங்காட்டும்
கழனி யழுந்தூர் நின்றானை,
வல்லிப் பொதும்பில் குயில்கூவும்
மங்கை வேந்தன் பரகாலன்,
சொல்லில் பொலிந்த தமிழ்மாலை
சொல்லப் பாவம் நில்லாவே. 1597

(தந்தை பாரித்துச் செம்பொன் வெள்ளத்து பகல் ஏடு மாலை வஞ்சி என் நெல்லில்-சிங்கம்.)

நெற்பயிர்களினிடையே முளைத்து வளர்ந்துள்ள கருநெய்தற் பூக்கள், அங்குள்ள பெண்களின் கண்களைப் போன்று விளங்கிடவும், நீர்நிலைகளில் மலர்ந்துள்ள ஆம்பல் பூக்கள் மலர்ந்திருப்பது என்பது அப்பெண்களின் வாயினைப் போன்று விளங்கிடவும், அங்குள்ள நீர் நிலைகளில் மலர்ந்திருக்கின்ற தாமரை மலர்கள் அப்பெண்களின் முகத்தினைப் போன்றும் விளங்குகின்ற நீர்வளம் மிக்க வயல்களைக் கொண்டுள்ள 'திருவழுந்தூர்' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிந்து கொண்டிருக்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றி பூங்கொடிகள் நிறைந்துள்ள புதர்களில் குயில்கள் கூவிக் கொண்டிருக்கின்ற 'திருமங்கை' என்னும் நாட்டின் மன்னனாகிய ''பரகாலன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் சொற்களில் நல்ல சொற்களே நிறைந்துள்ள தமிழ்ப்பாசுரங்களாக அருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் ஓதிடப் பாவங்கள் யாவும் நில்லாமல் அழியும்.

Koviloor Digital Library

6. சிங்கமதாய் திருவழுத்தூர்

கலி விருத்தம்

*சிங்கம தாயவுணன் திறலாகம்முன் கீண்டுகந்த,
சங்கமி டத்தானைத் தழலாழி வலத்தானை,
செங்கமலத் தயனனையார் தென்னழுந்தையில் மன்னிநின்ற,
அங்கம லக்கண்ணனை அடியேன்கண்டு கொண்டேனே. 1598

நரசிம்ம அவதாரம் ஏற்று 'இரணியன்' என்னும் அசுரனின் வலிமைமிக்க மார்பினை இருகூறாகப் பிளந்து மகிழ்ச்சியுற்ற எம்பெருமான் தன் வலது திருக்கரத்தில் திருவாழியானையும், இடது திருக்கரத்தில் திருச்சங்கினையும் கொண்டுள்ள எம்பெருமானை செந்தாமரை மலரில் தோன்றிய பிரமனைப் போன்ற அந்தணர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தென்திசைக்கண் உள்ள திருவழுந்தூர் என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி என்றென்றும் நிலைபெற்று இருக்கும் எம்பெருமான் தாமரைக் கண்ணனைக் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

கோவா னார்மடியக் கொலையார்மழுக் கொண்டருளும்,
மூவா வானவனை முழுநீர்வண் ணனை,அடியார்க்கு,
ஆவா என்றிரங்கித் தென்னழுந்தையில் மன்னிநின்ற,
தேவாதி தேவனையான் கண்டுகொண்டு திளைத்தேனே. 1599

அரசர்கள் யாவரும் மடியும்படி கொலைபுரியும் சக்தி வாய்ந்த 'மழு' என்னும் படையைத் தம் திருக்கையில் ஏந்திக் கொண்டு அருள் புரிகின்ற எம்பெருமானை, ''மூப்பு'' என்ற ஒன்றினை எக்காலத்தும் அடையாமலிருக்கும் விண்ணுலகத் தலைவனை, கடல்நீர் போன்ற வண்ணமுடையவனை, அடியவர்களின் பொருட்டு 'ஐயோ!' என்று இரக்கம் கொண்டு தென்திசையிலுள்ள ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி நிலைபெற் றிருக்கின்ற விண்ணுலகத்து வாழ் தேவர்களின் தலைவனான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்று மகிழ்ச்சியுற்றேன்.

Koviloor Digital Library

உடையா னையொலிநீ ருலகங்கள் படைத்தானை,
விடையா னோடவன்று விறலாழி விசைத்தானை,
அடையார் தென்னிலங்கை யழித்தானை அணியழுந்தூர்
உடையா னை,அடியே னடைந்துய்ந்து போனேனே. 1600

உலகத்திலுள்ள யாவற்றையும் தம் உடைமையாகக் கொண்டிருப்பவனை ஒலிக்கின்ற நீர் நிறைந்துள்ள கடல்கள் சூழ்ந்திருக்கின்ற உலகங்களைப் படைத்த எம்பெருமானை, 'வாணாசுரன்' என்னும் அசுரனுடன் உண்டான போரில் காளையை வாகனமாகக் கொண்ட சிவன் அஞ்சித் தோற்று ஓடும்போது வலிமை மிக்க திருவாழியைச் செலுத்தி அச்சிவபெருமானைக் காப்பாற்றியருளியவனும் பகைவர்கள் நிறைந்திருக்கின்ற, தெற்கில் உள்ள 'இலங்கை' நகரினை அழித்தவனுமாகிய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானை, ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியினைத் தனது இருப்பிடமாகக் கொண்டுள்ள எம் பெருமானை அடியேன் சென்றடைந்து பிழைத்துக் கொண்டேன்.

குன்றால் மாரிதடுத் தவனைக்குல வேழமன்று
பொன்றா மை,அதனுக் கருள்செய்த போரேற்றை,
அன்றா வின்நறுநெய் யமர்ந்துண்ண அணியழுந்தூர்
நின்றா னை,அடியேன் கண்டுகொண்டு நிறைந்தேனே. 1601

''கோவர்த்தனகிரி'' என்னும் மலையைக் கொண்டு பெய்த பெருமழையினைத் தடுத்துப் பசுக்கூட்டங்களைப் பாதுகாத்து அருளிய எம்பெருமானை, சிறந்த குலத்தில் தோன்றிய கஜேந்திர ஆழ்வானைப் பாதுகாத்தருளிய எம் இறைவனை, போர்புரிவதில் வலிமை மிகக் கொண்டுள்ள எம்பெருமானை முன்பு ஒரு சமயம் அசோதைப் பிராட்டியார் வைத்திருந்த பசுவின் நெய்யை அமர்ந்து உண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை ''திருவழுந்தூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிந்து கொண்டிருப்பதைக் கண்டு கொண்டு அடியேன் மனநிறைவு பெற்றேன்.

கஞ்சனைக் காய்ந்தானைக் கண்ணமங்கையுள் நின்றானை,
வஞ்சனப் பேய்முலையூ டுயிர்வாய்மடுத் துண்டானை,
செஞ்சொல் நான்மறையோர் தென்னழுந்தையில் மன்னிநின்ற,
அஞ்சனக் குன்றந்தன்னை யடியேன்கண்டு கொண்டேனே. 1602

'கம்சன்' என்னும் கொடிய அசுரன்மீது சினம் கொண்டு, அவனை அழித்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை, ''திருக்கண்ண

Koviloor Digital Library

மங்கை'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளிய எம்பெருமானை, வஞ்சக எண்ணத்துடன் பேய்வடிவில் வந்த 'பூதனை' என்னும் அரக்கியின் முலையினின்றும் நஞ்சு கலந்திருந்த பாலை வாய்வைத்து உறிஞ்சி உண்டதனாலேயே அவள் உயிரைப் போக்கிய எம்பெருமானை அழகிய சிறந்த நற்சொற்களோடு கூடிய உண்மைக் கருத்துகளைக் கொண்டுள்ள நான்கு மறைகளையும் ஓதிக் கொண்டு இருக்கின்ற அந்தணர்கள் நிறைந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற தெற்கேயுள்ள ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் அஞ்சன வண்ணத்துடன் கூடிய பெரியதோர் மலை போன்ற அழகுமிக்க எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அடியேன் கண்டு கொண்டு சேவித்து மகிழ்ச்சியுற்றேன்.

பெரியானை யமரர் தலைவற்கும் பிரமனுக்கும்,
உரியானை யுகந்தா னவனுக்கு முணர்வதனுக்
கரியானை, அழுந்தூர் மறையோர்க ளடிபணியும்
கரியானை, அடியேன் கண்டுகொண்டு களித்தேனே. 1603

அனைவர்க்கும் பெரியவனாகிய பெரிய பெருமாளை, விண்ணுலகத்தில் வாழ்கின்ற தேவர்களின் தலைவனான தேவேந்திரனுக்கும், பிரமதேவனுக்கும், யானைத் தோலை விரும்பி ஆடையாக உடுத்திக் கொண்டிருக்கின்ற சிவபெருமானுக்கும் ஆகிய இம்மூவருக்கும் இத்தன்மையன் என்று உணர்ந்து அறிய முடியாத அளவிற்கு அரியவனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை ''திருவழுந்தூர்'' என்னும் திருத்தலத்தில் உள்ள மறையவர்கள் கூடித் திருவடிகளைத் தொழுகின்ற கருநீலக் கமலக் கண்ணனை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்று மகிழ்ச்சியுற்றேன்.

திருவாழ் மார்வன் றன்னைத் திசைமண்ணீ ரெரிமுதலா,
உருவாய் நின்றவனை யொலிசேரும் மாருதத்தை,
அருவாய் நின்றவனைத் தென்னழுந்தையில் மன்னி நின்ற,
கருவார் கற்பகத்தைக் கண்டுகொண்டு களித்தேனே. 1604

'திருமகள்' தங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்ற திருமார்பினையுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் திசைகள், பூமி, நீர், நெருப்பு ஆகிய அனைத்தும் ஒருங்கே சேர்ந்த திருவுருவாய் நிற்கின்ற எம்பெருமானை, ஒலி பரவுகின்ற காற்றினையே தம் உடலாகப் பெற்ற திருவடிவினையுடைய எம்பெருமானை, உருவமாய் நிற்கின்றதோடு

Koviloor Digital Library

அமையாமல், உருவமற்ற நிலையிலும் இருப்பவனை, தென் திசையிலுள்ள ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் என்றும் நிலைத்து நிற்கின்ற, ''ஆதிமூலம்'' என்னும் வேர்ப்பற்றினை உடைய ''கற்பக மரம்'' ஆகி நின்ற எம்பெருமானை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்று மகிழ்ச்சியுற்றேன்.

நிலையா ளாகவென்னை யுகந்தானை, நிலமகள்தன்
முலையாள் வித்தகனை முதுநான்மறை வீதிதொறும்,
அலையா ரும்கடல்போல் முழங்கழுந்தையில் மன்னிநின்ற,
கலையார் சொற்பொருளைக் கண்டுகொண்டு களித்தேனே. 1605

அடியேனை என்றும் நிலைபெற்றுள்ள அடியவனாக ஆட் கொண்டு அதனால் மகிழ்ச்சி அடைந்து திருவுள்ளத்தே பற்றிக் கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை, பூமிப் பிராட்டியாரின் திருமுலைத் தடங்களை ஆளவல்ல ஆளுமையுடைய எம்பெரு மானை அங்குள்ள தெருக்களில், பழைமை வாய்ந்த நான்கு மறைகளையும், அலைவீசுகின்ற கடலின் பெருமுழக்கம் போன்று முழங்குகின்ற ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு நிலைபெற்று நின்ற, கலைகளிலெல்லாம் நிறைந் திருக்கின்ற சொற்களுக்குப் பொருளாகி நிற்கின்ற எம்பெருமானைக் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்று மகிழ்ச்சியுற்றேன்.

*பேரா னைக்குடந்தைப் பெருமானை, இலங்கொளிசேர்
வாரார் வனமுலையாள் மலர்மங்கை நாயகனை,
ஆரா வின்னமுதைத் தென்னழுந்தையில் மன்னிநின்ற,
காரார் கருமுகிலைக் கண்டுகொண்டு களித்தேனே. 1606

திருப்பேர்நகர், திருக்குடந்தை ஆகிய திருத்தலங்களில் பள்ளி கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை, ஒளி வீசுகின்ற கச்சினையணிந்துள்ள அழகிய திருமுலைகளையுடைய தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பெரிய பிராட்டியாரின் நாயகனாகத் திகழ்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் தென்திசையிலுள்ள ''திரு வழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந் தருள்புரியும் எம்பெருமான் கார்காலத்தில் தோன்றும் கருமுகிலை யொத்த வண்ணத்தினை உடைய எம்பெருமானை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்று மகிழ்ச்சியுற்றேன்.

Koviloor Digital Library

*திறல்முரு கனனையார் தென்னழுந்தையில் மன்னிநின்ற,
அறமுதல் வனவனை அணியாலியர் கோன்,மருவார்
கறைநெடு வேல்வலவன் கலிகன்றிசொல் ஐயிரண்டும்,
முறைவழு வாமைவல்லார் முழுதாள்வர் வானுலகே. 1607

(சிங்கம் கோ உடையான் குன்றால் கஞ்சன் பெரியான் திரு நிலை பேரான் திறல் - திரு.)

திறமை மிக்க முருகனை ஒத்த மனிதர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற தென்திசையிலுள்ள ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி நிலைத்து நிற்கின்ற அறத்திற்கெல்லாம் முதல் காரணமாக இருக்கின்ற ஆதி முதல்வனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப்பற்றி அழகுமிக்க திருவாலி நாட்டரசராகிய பகைவர்களுடன் வெற்றி பெற்றதனால் இரத்தக் கறைகளுடன் கூடிய நீண்ட வேலாற்றலில் வல்லமை மிக்க 'கலியன்' என்னும் ''திருமங்கை ஆழ்வார்'' அருளிச் செய்துள்ள இப்பாசுரங்கள் பத்தினையு முறைபிறழாமல் ஓதுகின்ற ஆற்றல் பெற்றவர்கள் விண்ணுலகிலுள்ள திருப்பரமபதத்தினை முழுமையாகவே ஆளப் பெறுவர்.

7. திருவுக்கும் திருவழுத்தூர்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

திருவுக் கும்திரு வாகிய செல்வா!
தெய்வத் துக்கர சே!செய்ய கண்ணா,
உருவச் செஞ்சுட ராழிவல் லானே!
உலகுண் டவொரு வா!திரு மார்பா,
ஒருவற் காற்றியுய் யும்வகை யென்றால்
உடனின் றைவரென் னுள்புகுந்து, ஒழியா
தருவித் தின்றிட அஞ்சிநின் னடைந்தேன்
அழுந்தூர் மேல்திசை நின்றவம் மானே! 1608

''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! திருமகளாகிய இலட்சுமிதேவிக்கும் செல்வனான திருமாலே! தெய்வங்கட்கெல்லாம் மேன்மையான தெய்வமே! சிவந்த திருக்கண்களையுடைய

Koviloor Digital Library

எம்பெருமானே! ஒளிவீசுகின்ற திருவாழியாழ்வானைத் தம் திருக் கரத்தில் ஏந்தியுள்ள வலிமைமிக்க எம்பெருமானே! முன்பு உலகப் பிரளயம் உண்டான காலத்தில் உலகங்களையெல்லாம் உண்டு தன் வயிற்றில் வைத்துப் பாதுகாத்தருளிய பெருமானே! ஐம்புலன்களில் ஏதேனும் ஒன்றினுக்கு ஆட்பட்டு, அதனாலுண்டான துன்பத் தினின்றும் அடியேன் உய்வு பெறுவதற்கு வழி இல்லாமல் இருக் கின்ற நிலையில், ஐம்புலன்களும் அடியேனுடன் கூடவே இருந்து கொண்டு அடியேன் மனத்தினுள்ளே புகுந்து கொண்டு அடியேனைத் தொடர்ந்து வந்து அலைக்கழிக்கின்ற இந்நிலைக்கு அஞ்சி அடியேன் நின்னை வந்து அடைந்தேன். திருமகள் வாழ்கின்ற திருமார்பினை யுடைய எம்பெருமானே!

பந்தார் மெல்விரல் நல்வளைத் தோளி
 பாவை பூமகள் தன்னொடு முடனே
வந்தாய், என்மனத் தேமன்னி நின்றாய்
 மால்வண் ணா!மழை போலொளி வண்ணா,
சந்தோ கா!பௌழி யா!தைத் திரியா!
 சாம வேதிய னே!நெடு மாலே,
அந்தோ! நின்னடி யன்றிமற் றறியேன்
 அழுந்தூர் மேல்திசை நின்றவம் மானே! 1609

மென்மையான விரல்களுடன் பந்துகளையுடைய, நல்ல வளையல்களை அணிந்த திருத்தோள்களையுடைய பதுமை போன்ற திருமகளுடன் கூடி எழுந்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அடியேனின் மனத்தில் என்றும் நிலைத்து நின்ற கருநிறமுடை யவனே! மழைபோலும் ஒளிர்கின்ற திருநிறத்தினை உடையவனே! சாந்தோக்கியம், இருக்கு வேதம், யஜுர் வேதம், சாமவேதம் ஆகிய நான்கு வேதங்களுமாகி இருக்கின்ற நெடிய திருமாலே! திருக்கல்யாண குணங்களைக் கொண்ட எம்பெருமானே! ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெரு மானே! அடியேன் நின்திருவடியன்றி வேறு எதனையும் அறிந்ததில்லை.

நெய்யா ராழியும் சங்கமு மேந்தும்
 நீண்ட தோளுடை யாய்,அடி யேனைச்
செய்யா தவுல கத்திடைச் செய்தாய்
 சிறுமைக் கும்பெரு மைக்குமுள் புகுந்து,

Koviloor Digital Library

பொய்யா லைவரென் மெய்குடி யேறிப்
போற்றி வாழ்வதற் கஞ்சிநின் னடைந்தேன்,
ஐயா! நின்னடி யன்றிமற் றறியேன்
அழுந்தூர் மேல்திசை நின்றவம் மானே! 1610

''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமானே! நெய் பூசியிருக்கின்ற கூர்மை மிக்க திருவாழியையும், திருச்சங்கினையும் தம் திருக்கரங்களில் ஏந்திக் கொண்டிருக்கின்ற திருத்தோள்களைப் பெற்றிருக்கின்ற பெருமானே! உலகத்தில் வேறு யாவர்க்கும் கிடைக்காத வகையில் அடியேனி டத்தில் மட்டும் தனியாகவோர் பேரருளைக் காட்டி, அதன்மூலம் அடியேன் தங்கட்குக் கைங்கரியம் (தொண்டு) செய்வதற்குச் சுவை யுடன் ஈடுபடச் செய்தாய்! ஐம்புலன்களின் வஞ்சகச் செயல்களாக அடியேனின் உடலினுள்ளே குடியேறி அவை அடியேனின் சிற்றின்ப வாழ்விற்கும், பேரின்பப் பெருவாழ்விற்கும் அச்சப்பட்டு நின்னையே சரணடைந்தேன். ஐயா! அடியேன் நின் திருவடிகளைப் பற்றிச் சரணடைவதையன்றி வேறெதனையும் அறியேன்.

பரனே! பஞ்சவன் பௌழியன் சோழன்
பார்மன் னர்மன்னர் தாம்பணிந் தேத்தும்
வரனே, மாதவ னே!மது சூதா!
மற்றோர் நல்துணை நின்னலா லிலேன்காண்,
நரனே! நாரண னே!திரு நறையூர்
நம்பீ! எம்பெரு மான்!உம்ப ராளும்
அரனே, ஆதிவ ராகமுன் னானாய்!
அழுந்தூர் மேல்திசை நின்றவம் மானே! 1611

''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! பரம புருடோத்தமனே! 'பஞ்சவன்' என்றும், 'பௌழியன்' என்றும், 'சோழன்' என்றும் பெயர்களைக் கொண்டுள்ள, இப்பூமியின் மன்னர்களாக இருப்பவர்களெல்லாரும் தாம் தாம் ஒருங்கே சேர்ந்து வந்து பணிந்து வணங்கித் துதித்தேத்துகின்ற பேரருளாளப் பெருமானே! திருமகள் கேள்வனே! 'மது' அசுரனைக் கொன்றழித்த எம்பெருமானே! நரனாகவும் நாராயணனாகவும் திருஅவதாரம் மேற்கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமானே! எமக்குத் தலைவனே! தேவர்களை ஆள்கின்ற

Koviloor Digital Library

சிவபெருமானுக்குள்ளேயும் அந்தர்யாமியாய் இருந்துகொண்டு வாழ்பவனே! முன்பொரு சமயத்தில் ஆதிவராகமூர்த்தியாகத் திருஅவதாரம் மேற்கொண்டருளிய எம்பெருமானே! அடியேன் உன்னையன்றி மற்றோர் நல்லதோர் துணையை அறிந்திருக்கவில்லை.

விண்டான் விண்புக வெஞ்சமத் தரியாய்ப்
பரியோன் மார்வகம் பற்றிப் பிளந்து,
பண்டான் உய்யவோர் மால்வரை யேந்தும்
பண்பா ளா!பர னே!பவித் திரனே,
கண்டேன் நான்கலி யுகத்ததன் தன்மை
கரும மாவது மென்றனக் கறிந்தேன்,
அண்டா! நின்னடி யன்றிமற் றறியேன்
அழுந்தூர் மேல்திசை நின்றவம் மானே! 1612

''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! உனக்கு எதிராகச் செயல்பட்ட ''இரணியன்'' என்னும் அசுரன்மீது கடும் போரிட்டு நரசிம்ம மூர்த்தியாகத் திருஅவதாரம் மேற்கொண்டு அந்தப் பருத்து வளர்ந்த இரணியனின் மார்பினைத் தம் கூரிய நகங்களால் இருகூறாகப் பிளந்து வீரசுவர்க்கம் அடையுமாறு செய்த எம்பெருமானே! முன்பு ஸ்ரீ கண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் ''கோவர்த்தனம்'' என்னும் ஒரு பெரிய மலையைத் தன் திருக்கரத்தில் ஏந்திக் குடையாகப் பிடித்துப் பசுக்கூட்டங்களைப் பாது காத்தருளிய பண்பிற் சிறந்த எம்பெருமானே! தூய்மை மிக்கவனே! அனைத்து அண்டங்கட்கும் இறைவனே! இந்தக் கலியுகத்தின் தன்மையை அடியேன் அறிந்து கொண்டேன். அடியேன் செய்யக் கூடியவை இன்னின்னதென்பதனையும் அறிந்து கொண்டேன். அஃதாவது தங்கள் திருவடிகளைப் பற்றிச் சரணடைவதன்றி மற்றெதனையும் அறிந்திருக்கவில்லை.

தோயா வின்தயிர் நெய்யமு துண்ணச்
சொன்னார் சொல்லி நகும்பரி சே,பெற்ற
தாயா லாப்புண்டி ருந்தழு தேங்கும்
தாடா ளா!தரை யோர்க்கும்விண் ணோர்க்கும்
சேயாய், கிரேத திரேத துவாபர
கலியு கமிவை நான்குமு னானாய்,
ஆயா! நின்னடி யன்றிமற் றறியேன்
அழுந்தூர் மேல்திசை நின்றவம் மானே! 1613

Koviloor Digital Library

''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! எதையும் வாய்க்கு வந்தபடி ஏளனமாகப் பேசி இழிசொற்களையும் பலவாறு எடுத்துக் கூறிச் சிரித்துக் கொள்ளும்படியாக, முற்றும் தோயாத இனிய தயிரையும், நெய்யையும் திருவமுது செய்தது கண்டு தாயாகிய அசோதைப் பிராட்டியினால் கட்டிப்போட அதனால் விம்மி விம்மியழுத எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! இம்மண்ணுலகத் தவர்ககும் விண்ணுலகத்தவர்கட்கும் காண்பதற்கும் அரியவனாகத் திகழும் எம்பெருமானே! கிரேதாயுகம், திரேதாயுகம், துவாபரயுகம், கலியுகம் என்னும் நான்கு யுகங்களிலும் தானே முன்னதாக நின்று இயக்கிக் கொண்டிருக்கும் எம்பெருமானே! ஆயர்குலத்துத் தோன்றலாய் விளங்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! அடியேன் தங்கள் திருவடிகளைக் கண்டு சேவித்துச் சரணடைவதன்றி மற்றெதனையும் அறிந்திருக்கவில்லை.

கறுத்துக் கஞ்சனை யஞ்ச முனிந்தாய்!
காா்வண் ணா!கடல் போல்ஒளி வண்ணா,
இறுத்திட் டான்விடை யேழும்முன் வென்றாய்
எந்தாய்! அந்தர மேழுமு னானாய்,
பொறுத்துக் கொண்டிருந் தால்பொறுக் கொண்ணாப்
போக மேநுகா் வான்புகுந்து, ஐவா்
அறுத்துத் தின்றிட வஞ்சிநின் னடைந்தேன்
அழுந்தூா் மேல்திசை நின்றவம் மானே! 1614

''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! உள்ளத்தில் தீய செயல்களையே எண்ணிக் கொண்டிருப்பதனால், கறுத்த உள்ளத் தினையுடைய 'கம்சன்' என்னும் அசுரன் அஞ்சும்படியாக அவன்மீது அளவற்ற கோபம் கொண்டு அவனை அழித்தருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபெருமானே! கார்மேகம் போன்ற கருநிறமுடையவனே! கடல் போன்ற கருநீல நிறமுடைய ஒளிமிக்க எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! முன்பொரு சமயம் நப்பின்னைப் பிராட்டியை அடையும் பொருட்டுப் போர்க்களத்தில் ஏழு எருதுகளையும் முறித்து வென்ற எம்பெருமானே! என் தந்தையே! ஏழு உலகங்களையும் (விண்ணிலுள்ள) முன்பு ஒரு கால் நீயேயாகி நின்றாய்? ஐம்புலன் களினால் உண்டாகும் தீமைகளைப் பொறுத்துக் கொள்வோம் என்றெண்ணினால் அவ்வாறு பொறுத்துக் கொள்ள இயலாமல்

Koviloor Digital Library

சிற்றின்பத்தினையே அனுபவித்து, அதனால் அளவற்ற துன்பத்தினை உண்டாக்கிவிட, அத்துன்பங்கட்கஞ்சியே, அடியேன் தங்கள் திருவடிகளைப் பற்றிச் சரணடைந்தேன்.

நெடியா னே!கடி ஆர்கலி நம்பீ!
நின்னை யேநினைந் திங்கிருப் பேனை,
கடியார் காளைய ரைவர் புகுந்து
காவல் செய்தவக் காவலைப் பிழைத்து,
குடிபோந் துன்னடிக் கீழ்வந்து புகுந்தேன்
கூறை சோறிவை தந்தெனக் கருளி,
அடியே னைப்பணி யாண்டுகொ ளெந்தாய்!
அழுந்தூர் மேல்திசை நின்றவம் மானே! 1615

"திருவழுந்தூர்" என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! அனைவர்க்கும் மேம்பட்டவனாகி நிற்கும் ஓங்கியுயர்ந்து நிற்கும் நெடியோனே! இப்பூமிக்கு அரணாக நிற்கும் கடலின்மீது திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமானே! உன்னையே எண்ணித் துதித்துக் கொண்டிருக்கின்ற அடியேனைப் பலம் மிகக் கொண்ட காளைகளைப் போன்ற ஐம்புலன் களும் ஒன்று சேர்ந்து கொண்டு, அடியேன் தங்களை வந்து அடைய முடியாதவாறு காவல் காத்திருந்து தடைசெய்கின்றன. அப்படிப்பட்ட கொடிய காவல் என்னும் சிறையிலிருந்து தங்கள் திருவடிகளின் கீழ்ச் சரணடைந்து தங்கியிருக்கும் பொருட்டு அடியேன் தங்களிடத்தே வந்திருக்கிறேன். அடியேனுக்கு ஆடையும், சோறும் என்கின்ற இப்பொருட்களை அளித்து, அடியேனைத் தங்கட்கே தொண்டு புரியுமாறு ஆட்கொண்டருள வேண்டும் என் தந்தையே!

கோவாய் ஐவரென் மெய்குடி யேறிக்
'கூறை சோறிவை தா'என்று குமைத்துப்
போகார், நானவ ரைப்பொறுக் ககிலேன்
புனிதா! புட்கொடி யாய்!நெடு மாலே,
தீவாய் நாகணை யில்துயில் வானே!
திருமா லே!இனிச் செய்வதொன் றறியேன்,
ஆவா வென்றடி யேற்கிறை யிரங்காய்
அழுந்தூர் மேல்திசை நின்றவம் மானே! 1616

"திருவழுந்தூர்" என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! தூய்மையான

Koviloor Digital Library

வனே! கருடாழ்வானைக் கொடியாகக் கொண்டுள்ள எம்பெருமானே! நெடிதோங்கி வளர்ந்துள்ள திருமாலே! ஐம்புலன்களும் அடியேனின் மனத்தினுள்ளே புகுந்து கொண்டு, தங்கியிருந்து தனக்கு ஆடையும், சோறும் அளிக்க வேண்டுமென்று அடியேனைத் துன்புறுத்திக் கொண்டு கூடவே இருக்கின்றனர். அவ்வைம்புலன்களாகிய ஐவரும் அடியேனுக்கு அளிக்கும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ள இயல வில்லை. தீயுமிழும் வாயினையுடைய நாகத்தினைப் படுக்கையாகக் கொண்டு திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமானே! திருமாலே! அடியேனால் இனிச் செய்வது யாதென்று அறியாமல் இருக்கிறேன். ''ஆகா!'' என்று அடியேனுக்கு இரங்கி இன்னருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

*அன்ன மன்னுபைம் பூம்பொழில் சூழ்ந்த
அழுந்தூர் மேல்திசை நின்றவம் மானை,
கன்னி மன்னுதிண் டோள்கலி கன்றி
ஆலி நாடன்மங் கைக்குல வேந்தன்,
சொன்ன இந்தமிழ் நன்மணிக் கோவை
தூய மாலை யிவைபத்தும் வல்லார்,
மன்னி மன்னவ ராயுல காண்டு
மான வெண்குடைக் கீழ்மகிழ் வாரே. 1617

(திரு பந்தார் நெய் பரனே விண்டான தோயா கறுத்து நெடியானே கோவாய் அன்னம்-செங்கமலம்.)

அன்னங்கள் நிலைபெற்று வாழ்ந்து கொண்டிருக்கின்ற மலர்கள் மிக்க சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருவழுந்தூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெரு மான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றி, உறுதிமிக்க தோள்களையுடைய 'கலியன்' என்னும் திருவாலி நாட்டுக்கு மன்னனாகிய திருமங்கை என்னும் நகரின் மன்னனுமாகிய திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இனிய தமிழ்ப் பாசுரங்கள் என்னும் நல்ல மணிகளால் கோர்க்கப் பட்ட கோவையையொத்த தூய்மையான நன்மணிகளாகத் திகழ்கின்ற பாசுரங்கள் பத்தினையும் ஓதுவதில் வல்லமை பெற்றவர்கள் நிலைபெற்ற மன்னவராகி இவ்வுலகினை ஆட்சிபுரிந்து கொண்டு வெண்கொற்றக் குடையின் கீழ் அமர்ந்திருந்து மகிழ்ச்சியுடன் இருக்கப் பெறுவார்கள்.

Koviloor Digital Library

8. செங்கமலம்

திருவழுந்தூர்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*செங்கமலத் திருமகளும் புவியும் செம்பொன்
திருவடியி னிணைவருட முனிவ ரேத்த,
வங்கமலி தடங்கடலுள் அனந்த னென்னும்
வரியரவி னணைத்துயின்ற மாயோன் காண்மின்,
எங்குமலி நிறைபுகழ்நால் வேதம் ஐந்து
வேள்விகளும் கேள்விகளும் இயன்ற தன்மை,
அங்கமலத் தயனனையார் பயிலும் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே. 1618

அழகிய தாமரை மலரில் தோன்றி அமர்ந்திருக்கும் பிரம்ம தேவனையொத்த அந்தணர்கள் பெருஞ்செல்வத்துடன் வாழ்ந்து வருகின்ற அழகிய ''திருவழுந்தூர்'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு மகிழ்ச்சியுடன் எழுந்தருள்கின்ற தேவர்கட் கெல்லாம் தலைவராகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! செந்தாமரை மலரில் வீற்றிருக்கும் திருமகளும், பூமிப் பிராட்டியும் உம்முடைய இணையான இரண்டு திருவடிகளையும் வருடிக் கொண்டிருக்கும் நிலையில், முனிவர்கள் ஏத்தித் துதித்திடக் கப்பல்கள் நிறையவே செல்கின்ற திருப்பாற்கடலில் ''திருவனந் தாழ்வான்'' என்னும் அரியதோர் படுக்கையின்மீது திருக்கண் வளர்ந்தருளும் மாயவனைக் கண்டு சேவியுங்கள். எங்கும் நிறைந்து விளங்குகின்ற புகழ்மிக்க நான்கு மறைகள், ஐந்து வகையான வேள்விகள், பற்பல நூல்களைக் கற்றறிந்ததனால் உண்டான 'கேள்வியறிவு' என்கின்ற யாவற்றினும் வல்லமை பெற்றவர்கள் இயங்கிக் கொண்டிருக்கின்ற தன்மையினை நாம் கண்டு கொண்டிருக்கின்றோம்.

முன்னிவ்வுல கேழுமிருள் மண்டி யுண்ண
முனிவரொடு தானவர்கள் திகைப்ப, வந்து
பன்னுகலை நால்வேதப் பொருளை யெல்லாம்
பரிமுகமா யருளியவெம் பரமன் காண்மின்,
செந்நெல்மலி கதிர்க்கவரி வீசச் சங்கம்
அவைமுரலச் செங்கமல மலரை யேறி,
அன்னமலி பெடையோடும் அமரும் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே. 1619

Koviloor Digital Library

வயல்களில் நெற்பயிர்கள் சிறந்து ஓங்கி வளர்ந்து, அதன் கதிர்கள் காற்று வீசும்போது அசைந்தாடுகின்ற நிலையில் அவை வெண் சாமரம் வீசுவது போன்று அமைந்திருக்கின்றன. அப்பயிர்களினூடே வெண்சங்குகள் முழக்கமிட, ஆண் அன்னப்பறவைகள் தம்மிடத்தே அன்பு கொண்டிருக்கின்ற பெண் அன்னப்பறவைகளுடன் சேர்ந்து கொண்டு அழகிய செந்தாமரை மலரின்மீது ஏறி அமர்ந்து கொண்டுள்ள அளவில் இயற்கை வளத்துடன் செல்வ வளமும் சேர்ந்துள்ள அழகுமிக்க ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக் கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே முன்பொரு சமயம் ஏழு உலகங்களையும் ''அறியாமை'' என்னும் இருள் சூழ்ந்திருந்ததனால் 'சனகாதி' என்னும் முனிவர் முதலியவர்களும், அசுரர்களும் திகைத்துக் கொண்டிருப்ப, ''அயக்ரீவர்'' என்னும் நிலையில் வெளிப்பட்டு அனைத்துக் கலை களையும் கொண்டுள்ள நான்கு வேதங்களிலுமுள்ள பொருள்களை எல்லாம் அருளிச் செய்தருளிய எம்பெருமான் அந்த ஸ்ரீமந் நாராயணனே என்பதை அறிந்துணர்வோமாக!

குலத்தலைய மதவேழம் பொய்கை புக்குக்
கோள்முதலை பிடிக்கஅதற் கனுங்கி நின்று,
'நிலத்திகழும் மலர்ச்சுடரேய் சோதீ!' என்ன
நெஞ்சிடர்தீர்த் தருளியவென் நிமலன் காண்மின்,
மலைத்திகழ்சந் தகில்கனக மணியும் கொண்டு
வந்துந்தி வயல்கள்தொறும் மடைகள் பாய,
அலைத்துவரும் பொன்னிவளம் பெருகும் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே. 1620

மலைகளினின்றும் சந்தனம், அகில், பொன், இரத்தினங்கள் ஆகியவற்றைக் கொண்டு வந்து, அங்குள்ள வயல்கள்தோறும் வேகமாக வந்து சேர்கின்ற அளவில் மடைகள்தோறும் அலைகள் வீசுகின்ற நிலையில் நீர்பாய்ந்து செல்வதனால் நீர்வளம் பெருகும் பொன்னி நதி பாய்ந்து நீர்வளத்துடன் செல்வவளமும் சேர்ந்து விளங்குகின்ற அழகுமிக்க ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் விண்ணுலகத் தேவர்களுக் கெல்லாம் தலைவனாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் முன்பொரு சமயம் நற்குலத்தில் தோன்றிய யானைகட்கெல்லாம் அரசனாகிய கஜேந்திர ஆழ்வான் ஆழம்மிக்க பொய்கையில் இறங்கிய

Koviloor Digital Library

போது, வலிமை மிக்க முதலை ஒன்று அந்த யானையின் காலைப் பிடித்துக் கவ்விக் கொண்டு துன்புறுத்திய நிலையில் அத்துன்பத் திற்கஞ்சி ''சந்திரனை ஒத்த ஒளி வடிவினனாய் விளங்கும் ஆதி மூலமே!'' என்று கதறி ஓலமிட, அதன் மனத்தினுள்ளே உண்டான துன்பத்தினைப் போக்கியருளிய எம் குற்றமற்ற இறைவன் அவனே என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

சிலம்புமுதல் கலனணிந்தோர் செங்கண் குன்றம்
 திகழ்ந்ததெனத் திருவுருவம் பன்றி யாகி
இலங்குபுவி மடந்தைதனை யிடந்து புல்கி
 எயிற்றிடைவைத் தருளியவெம் மீசன் காண்மின்,
புலம்புசிறை வண்டொலிப்பப் பூகம் தொக்க
 பொழில்கடொறும் குயில்கூவ மயில்க ளால,
அலம்புதிரைப் புனல்புடைசூழ்ந் தழகார் செல்வத்
 தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே. 1621

பாக்கு மரங்கள் நிறைந்திருக்கின்ற சோலைகளில் எங்கு நோக்கினும் சிறகுகளை உடைய வண்டுகள் இன்னிசையுடன் ஒலித்துக் கொண்டிருப்ப, அச்சோலைகளில் குயில்கள் இசையுடன் பாடிட, மயில்கள் ஆடிக் கொண்டிருக்க, இவைகளுடன் அலைகின்ற அலைகளுடன் கூடிய காவிரி நதியின் நன்னீரானது சுற்றிலும் சூழ்ந் திருக்கின்ற அழகு நிறைந்த செல்வ வளம் மிக்கதாக அமைந்துள்ள ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் மகிழ்ச்சி நிரம்பப் பெற்ற நிலையிலுள்ள விண்ணுலகத் தேவர்கட்கெல்லாம் தலைவனாகத் திகழும் எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! சிலம்பு முதலாகிய அணிகலன்களை அணிந்து கொண்டிருக்கும் மேருமலையினைப் போன்று பெரியதோர் 'வராக' வடிவு மேற்கொண்டு மிகச் சிறப்புடன் திகழ்கின்ற பூமிப் பிராட்டியாரை அடைந்து குத்தி எடுத்து, அத்தேவியைத் தன் பற்களினிடையே வைத்துப் பாதுகாத்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் திருவழுந்தூர் என்னும் திருத்தலத்தில் கண்டு கொண்டு சேவியுங்கள்.

சினமேவும் அடலரியி னுருவ மாகித்
 திறல்மேவு மிரணியன தாகம் கீண்டு,
மனமேவு வஞ்சனையால் வந்த பேய்ச்சி
 மாளவுயிர் வவ்வியவெம் மாயோன் காண்மின்,

Koviloor Digital Library

இனமேவு வரிவளைக்கை யேந்தும் கோவை
ஏய்வாய மரகதம்போல் கிளியி னின்சொல்,
அனமேவு நடைமடவார் பயிலும் செல்வத்
தணியழுந்தூரு நின்றுகந்த அமரர் கோவே. 1622

தன்னுடைய கரங்களில் வளையல்களின் இனமானவற்றை, வரிகளுடன் கூடிய அவ்வளையல்களை அணிந்து கொண்டிருக்கும் கோவைப்பழம் போன்று சிவந்த நிறமுடைய வாயினையும், மரகத இரத்தினம் போன்ற பச்சை நிறம் கொண்ட கிளியைப் போன்று இனிய சொற்களையும், அன்னப்பறவை போன்ற நடையழகினையும் கொண்டுள்ள இளமகளிர் வாழ்ந்து வருகின்ற செல்வ வளமிக்க அழகுடைய ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு மனமகிழ்ச்சியுடன் நின்று எழுந்தருள்புரியும் விண்ணுலகத் தேவர்கட்கெல்லாம் தலைவராகத் திகழும் எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! இப்படிப்பட்ட எம்பெருமான் கோபம் மிக்கிருக்கின்ற சிங்க உருவமாகிய ''நரசிம்மமூர்த்தி''யாகத் திருஅவதாரம் மேற்கொண்டு, வலிமை மிக்க 'இரணியன்' என்னும் அசுரனின் உடலை தம் கூரிய நகங்களால் இரு கூறுகளாகப் பிளந்து அவனை மாய்த்துவிட்டு, மனத்தினில் வஞ்சக எண்ணங்களுடன் கூடிவந்த பூதனை என்னும் பேய்ச்சி மாண்டு போகும்படியாக அவளின் நஞ்சு கலந்த முலைப்பாலையுண்ட எம்மாயவனாகிய ஸ்ரீ கண்ணபிரான் இந்தத் 'திருவழுந்தூர்' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருப்பது கண்டு கொண்டு சேவிக்க வேண்டும்.

வானவர்தம் துயர்தீர வந்து தோன்றி
மாணுருவாய் மூவடிமா வலியை வேண்டி,
தானமர வேழுலகு மளந்த வென்றித்
தனிமுதல்சக் கரப்படையென் தலைவன் காண்மின்,
தேனமரும் பொழில்தழுவு மெழில்கொள் வீதிச்
செழுமாட மாளிகைகள் கூடந் தோறும்,
ஆன்தொல்சீர் மறையாளர் பயிலும் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே. 1623

தேன் நிறைந்திருக்கின்ற மலர்களையுடைய சோலைகள் நிறைந்து தழுவிக் கொண்டிருக்கின்ற அழகுமிக்க வீதிகள்தோறும் வளங்கள் நிறைந்திருக்கின்ற மாட மாளிகைகளும், கூடங்களும் ஆகி விளங்குகின்ற ஒவ்வொரு வீட்டிலும் உள்ள, பழைமை மிக்க

Koviloor Digital Library

மறைகளை அறிந்த அந்தணர்கள் வசித்துக் கொண்டிருக்கின்ற, செல்வ வளம்மிக்க அழகிய ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு மகிழ்வுடன் எழுந்தருள்புரியும் விண்ணுலகத் தேவர்கட்கெல்லாம் தலைவராகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே! தேவர்கட்குண்டான துன்பங்களையெல்லாம் தீர்க்கும் பொருட்டு 'வாமன' அவதாரம் மேற்கொண்டு மகாபலிச் சக்கர வர்த்தியின் வேள்வியின் முன்பு வந்து, ''மூன்றடி மண் தரவேண்டும்'' என்று வேண்டிப் பெற்றுக் கொண்டு, ஏழுலகங்களையும் அளந்து வெற்றி பெற்று அவனைத் தன் திருவடிக்கீழ் அமருமாறு செய்த தனித்ததோர் முதல்வனாகி நின்று, ''திருவாழியான்'' என்னும் படையினைத் திருக்கரங்களில் ஏந்தியிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் ''திருவழுந்தூர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியிருப்பதனைக் கண்டு கொண்டு சேவிக்க வேண்டும்.

பந்தணைந்த மெல்விரலாள் சீதைக் காகிப்
பகலவன்மீ தியங்காத இலங்கை வேந்தன்,
அந்தமில்திண் கரம்சிரங்கள் புரண்டு வீழ
அடுகணையா லெய்துகந்த அம்மான் காண்மின்,
செந்தமிழும் வடகலையும் திகழ்ந்த நாவர்
திசைமுகனே யனையவர்கள் செம்மை மிக்க,
அந்தணர்த மாகுதியின் புகையார் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே. 1624

சிறந்த செந்தமிழும், வடமொழியும் ஆகிய இவ்விரு மொழி களிலும் கற்றுப் புலமைமிக்க நாவன்மையுடைய அந்தணர்கள் நான்கு முகங்களைக் கொண்ட பிரமதேவனை ஒத்தவர்கள். இப்படிப்பட்ட அந்தணர்கள் வளம்மிக்கவர்களாக உள்ளனர். இவர்கள் இயற்றுகின்ற வேள்வித் தீயினால் உண்டாகும் புகைப்பெருக்குடன் செல்வச் செழிப்பு மிக்க அழகிய ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு மகிழ்ச்சியுற்ற அளவில் எழுந்தருள்புரியும் விண்ணுலகத் தேவர்கட்குத் தலைவராகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! முன்பு ''இராம'' அவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் பந்தைப் பிடித்துக் கொண்டிருக்கும் மென்மையான விரல்களைக் கொண்டிருக்கின்ற சீதாபிராட்டியின் பொருட்டு, சூரியன் இயங்காமலிருக்கின்ற இலங்கை நாட்டு மன்னன் இரா வணனின் அழிதல் என்னும் முடிவு என்பது இல்லாமல் இருக்கின்ற

Koviloor Digital Library

வலிமையான கரங்களும், சிரங்களும் தரையிலே புரண்டு விழுமாறு அம்புக்கணைகளைச் செலுத்தி அவனுயிரையும் போக்கி மகிழ்ச்சி யுற்றான் அப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் திருவழுந்தூர் என்னும் திருத்தலத்தில் எழுந்தருள் புரிவதைக் கண்டு சேவிக்க வேண்டும்.

கும்பமிகு மதவேழம் குலையக் கொம்பு
 பறித்துமழ விடையடர்த்துக் குரவை கோத்து,
வம்பவிழும் மலர்க்குழலா ளாய்ச்சி வைத்த
 தயிர்வெண்ணெ யுண்டுகந்த மாயோன் காண்மின்,
செம்பவள மரகதநன் முத்தம் காட்டத்
திகழ்பூகம் கதலிபல வளம்மிக் கெங்கும்,
அம்பொன்மதிள் பொழில்புடைசூழ்ந் தழகார் செல்வத்
 தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே. 1625

சிவந்த பவழம் போன்று முதிர்ந்த பழங்களையும், மரகத இரத்தினம் போன்றுள்ள பசுங்காய்களையும், வெண்முத்துகளைப் போன்று பாறைகளையும் உடையதாகிப் பாக்குமரங்களும், வாழை மரங்கள் பலவும் எங்கு நோக்கினும் வளமுடையதாகத் திகழ்கின்ற, அழகிய பொன்னாலான மதிள்களையும், பொழில்களையும் சுற்றிச் சூழ்ந்து கொண்டிருக்கின்ற அழகுமிக்க செல்வவளம் நிறைந்திருக் கின்ற ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி மகிழ்ச்சியினை அடைந்த விண்ணுலகத் தேவர் கட்குத் தலைவராகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! மத்தகத்தினைப் பருத்திருக்கப் பெற்ற மதத்தினையுடைய ''குவலயா பீடம்'' என்னும் யானை அஞ்சி நடுங்குமாறு, அதன் தந்தங்களை முறித்து அழித்துவிட்டும், ஏழு எருதுகளையும் அதன் வலிமைகளை அடக்கி வெற்றி பெற்றும், ஆய்ச்சியர்களோடு குரவைக் கூத்து ஆடியும், மணம் வீசுகின்ற மலர்களைச் சூடியுள்ள கூந்தலை யுடையவரான 'அசோதைப்பிராட்டி' என்னும் ஆய்க்குலப் பெண் மணி சேமித்து வைத்திருந்த தயிர், வெண்ணெய் ஆகியவைகளை உண்டு மனம் மகிழ்ச்சியுற்ற மாயவனான எம்பெருமான் ஸ்ரீ கண்ண பிரானைத் ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் எழுந்தருளி யிருப்பதனைக் கண்டு கொண்டு சேவிக்க வேண்டும்.

Koviloor Digital Library

ஊடேறு கஞ்சனொடு மல்லும் வில்லும்
ஒண்கரியு முருள்சகடு முடையச் செற்ற,
நீடேறு பெருவலித்தோ ளுடைய வென்றி
நிலவுபுகழ் நேமியங்கை நெடியோன் காண்மின்,
சேடேறு பொழில்தழுவு மெழில்கொள் வீதித்
திருவிழவில் மணியணிந்த திண்ணை தோறும்,
ஆடேறு மலர்க்குழலார் பயிலும் செல்வத்
தணியழுந்தூர் நின்றுகந்த அமரர் கோவே. 1626

வளமை மிக்க இளந்தளிர்களுடன் கூடிய சோலைகள் தழுவிக் கொண்டிருக்கும் அழகுமிக்கிருக்கும் திருவீதியில் நடைபெறும் திரு விழாக்காலங்களில் மணிகள் பதியப் பெற்றுள்ள திண்ணைகள் தோறும், மணம் வீசுகின்ற மலர்களைச் சூடியுள்ள பெண்கள் நெருக்கமாக நடமாடுகின்ற செல்வ வளமிக்க அழகான ''திரு வழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிந்து மகிழ்ச்சியுறும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் விண்ணுலகத் தேவர்கட்குத் தலைவராகத் திகழ்கிறான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரான் மஞ்சத்தில் இருந்த கம்சனுடன் மல்லர்கள், வில்லாற்றலில் வல்ல வீரர்களும் அழகிய குவலயாபீடம் என்னும் யானை, சகடாசுரன் ஆகிய யாவரையும் அழித்தான். அத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் வளர்கின்ற பெரும் தோள்வலிமை கொண்டவனாகி, வெற்றியையே என்றென்றும் பெறுகின்ற, எங்கும் ''புகழ்'' பரவியிருக்கின்ற ''திருச்சக்கரம்'' என்னும் திருவாழியாழ்வானைத் தம் திருக்கரங்களில் ஏந்தியிருக்கின்ற எம்பெருமான் நெடிய வடிவு கொண்ட அளவில் அமைந்துள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைத் ''திருவழுந்தூர்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருள்புரியும் எம்பெருமானைக் கண்டு கொண்டு சேவிக்க வேண்டும்.

*பன்றியாய் மீனாகி யரியாய்ப் பாரைப்
படைத்துக்காத் துண்டுமிழ்ந்த பரமன் றன்னை,
அன்றமரர்க் கதிபதியும் அயனும் சேயும்
அடிபணிய அணியழுந்தூர் நின்ற கோவை,
கன்றிநெடு வேல்வலவ னாலி நாடன்
கலிகன்றி யொலிசெய்த வின்பப் பாடல்,
ஒன்றினொடு நான்குமோ ரைந்தும் வல்லார்
ஒலிகடல்சூ ழுலகாளு மும்பர் தாமே. 1627

Koviloor Digital Library

(செங்கமல முன் குலச் சிலம்பு சின வான் பந்து கும்பம் ஊடேறுஇன்றி - கள்ளம்.)

வராகம், மீன், நரசிம்மம் ஆகிய திருஅவதாரங்களை மேற்கொண்டு இந்த உலகத்தினைப் படைத்து, அதனைப் பாதுகாத்து உண்டு தன் வயிற்றில் அடக்கி வைத்திருந்து, பின்பு இவ்வுலகை வெளியேற்றிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றி, அன்று விண்ணுலகத் தேவர்கட்கெல்லாம் தலைவராக இருந்து கொண்டுள்ள தேவேந்திரனும், பிரமதேவனும், சிவனும் ஆகிய யாவரும் திருவடிகளையடைந்து அடிபணிந்து கொண்டிருக்க அழகிய ''திருவழுந்தூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் தலைவராகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றிக் ''கலிகன்றி'' என்று அழைக்கப்படுகின்ற நெடிய வேலாற்றலில் மிக்க 'திருவாலி' என்னும் நாட்டிற்கு மன்னனாகிய ''திருமங்கை ஆழ்வார்'' ஒலியுடன் கூடிய இன்பப் பாசுரங்களை அருளிச் செய்த பத்தினையும் கற்று ஓதவல்லவர்கள் ஒலிக்கின்ற கடல் சூழ்ந்திருக்கின்ற இவ்வுலகினை ஆள்கின்ற தேவர்களாகத் திகழ்வர்.

9. கள்ளம்மனம் திருச்சிறுபுலியூர்

சந்தக் கலிவிருத்தம்

*கள்ளம்மனம் விள்ளும்வகை கருதிக்கழல் தொழுவீர்
வெள்ளம்முது பரவைத்திரை விரிய,கரை யெங்கும்
தெள்ளும்மணி திகழும்சிறு புலியூர்ச்சல சயனத்
துள்ளும்,என துள்ளத்துளு முறைவாரையுள் ளீரே. 1628

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்கு உரிய இந்த ஆத்மாவினைத் தன்னுடையது என்று எண்ணுகின்ற கள்ளத்தனம் கொண்ட நிலையினின்றும் மனம் மாறி திருந்த விரும்பி அவன் திருவடிகளைத் தொழுது கொண்டிருக்கும் அடியவர் பெருமக்களே! கடலில் வீசும் அலைகளால் உண்டான பெருவெள்ளமானது அதன் கரைகளில் எல்லாம் பரவிக் கொண்டிருக்க அதனால் கொழிக்கப்பட்ட இரத்தினங்கள் நிறைந்திருக்கின்ற ''திருச்சிறுபுலியூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் ''சலசயனம்'' என்னும்

Koviloor Digital Library

திருத்தலத்தில் திருக்கோவில் கொண்ட எம்பெருமானைத் தன் உள்ளத்துள்ளே தங்கியுறைகின்ற எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனையே எப்பொழுதும் எண்ணியெண்ணி வணங்கிக் கொண்டிருங்கள்.

தெருவில்திரி சிறுநோன்பியர் செஞ்சோற்றொடு கஞ்சி
மருவி,பிரிந் தவர்வாய்மொழி மதியாதுவந் தடைவீர்,
திருவில்பொலி மறையோர்சிறு புலியூர்ச்சல சயனத்து,
உருவக்குற ளடிகளடி யுணர்மின்னுணர் வீரே. 1629

சிறுசிறு அற்பத்தனமான விரதங்களை மேற்கொண்டவர்களாய்த் தெருக்களில் திரிந்து கொண்டு சமணர்கள் செஞ்சோற்றுடன் கஞ்சியையும் சேர்த்து உண்ண விரும்புகின்ற அதே நேரத்தில், வேதங்களை உணர்ந்து அறிந்திருக்கும் ஒழுக்கம் மிக்கவர்களாகிய அந்தணர்களிடமிருந்தும் விலகிய நிலையில் அவர்கள் இருப்பது மட்டுமன்றி, அத்தகைய அந்தணர்களின் வாய்மொழிக் கருத்துகளை அறிந்துணர்ந்து மதிக்கவில்லையென்றாலும், செல்வம் மிக்க மறை களை உணர்ந்த அந்தணர்கள் சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருக்கும் 'திருச்சிறுபுலியூர்' என்னும் திருப்பதியில் சலசயனத்து அழகிய குறள் வடிவம் பெற்ற ''வாமன'' அவதாரம் மேற்கொண்டருளிய எம்பெரு மானின் திருவடிகளையே உணர்ந்துள்ள நீங்கள் அவனைப்பற்றியே எண்ணியெண்ணி வணங்கிக் கொண்டிருப்பீர்களாக!

பறையும்வினை தொழுதுய்மின்நீர் பணியும்சிறு தொண்டீர்!
அறையும்புன லொருபால்வய லொருபால்பொழி லொருபால்,
சிறைவண்டின மறையும்சிறு புலியூர்ச்சல சயனத்
துறையும்,இறை யடியல்லதொன் றிறையும்மறி யேனே. 1630

விரும்பத்தகாத செயல்களைச் செய்வதில் பணிவுடன் ஈடுபடு கின்ற சிறுமையாகிய அற்பமான பணிகளில் விருப்பமுள்ள தொண் டர்களே! நீர்வெள்ளம் ஒருபாலும், வளம்மிக்க வயல்கள் மற்றொரு பாலும், வண்டினங்கள் 'ரீங்காரம்' செய்து இன்னிசை பயிலும் சோலைகள் இன்னொருபாலும் சூழ்ந்திருக்கின்ற ''திருச்சிறுபுலியூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு சலசயனத்தில் எழுந் தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளையன்றி வேறு எவ்விதமான இறைவனைப் பற்றியும் அடியேன் சிறிதும் அறிந்திருக்கவில்லை.

Koviloor Digital Library

வானார்மதி பொதியும்சடை மழுவாளியொ டொருபால்,
தானாகிய தலைவன்னவன் அமரர்க்கதி பதியாம்,
தேனார்பொழில் தழுவும்சிறு புலியூர்ச்சல சயனத்
தானாயனது, அடியல்லதொன் றறியேனடி யேனே. 1631

விண்ணில் உலவி வரும் சந்திரனைத் தம் சடையில் கொண்டிருக்க, ''மழு'' என்னும் ஆயுதத்தினை அச்சடையின் மற்றொருபால் கொண்டிருக்கின்ற சிவபெருமானையும், விண்ணுலகத் தேவர்களின் தலைவனாகிய இந்திரனையும் தனக்குள்ளேயே அடக்கிக் கொண்டிருக்கின்ற, தேன் நிறைந்துள்ள மலர்களைக் கொண்டு திகழும் சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருச்சிறுபுலியூர்'' என்னும் சலசயனத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம் பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் இணைத்திருவடிகளை அடியேன் கண்டு வணங்குவதன்றி வேறு எதனையும் அறிந்திருக்கவில்லை.

நந்தாநெடு நரகத்திடை நணுகாவகை, நாளும்
எந்தாயென இமையோர்தொழு தேத்துமிடம், எறிநீர்ச்
செந்தாமரை மலரும்சிறு புலியூர்ச்சல சயனத்து,
அந்தாமரை யடியாய்!உன தடியேற்கருள் புரியே. 1632

நாள்தோறும் ''எந்தையே'' என்று தேவர்கள் வந்து தொழுது, ஏத்துகின்ற திருத்தலம் யாதெனின், அலைவீசுகின்ற நீர் நிறைந்துள்ள நீர்நிலைகளில் செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்ற வளமிக்க ''திருச்சிறுபுலியூர்'' என்னும் திருப்பதியில் சலசயனத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் அழகிய தாமரை ஆகிய திருவடிகளைக் கொண்டோய்! உனதடியவனாகிய அடியேனுக்குத் தொலைதலில்லாத நீண்ட நெடுநரகத்தினில் அடியேன் சென்று அழுந்தாதவாறு அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

முழுநீலமும் அலராம்பலும் அரவிந்தமும் விரவி,
கழுநீரொடு மடவாரவர் கண்வாய்முகம் மலரும்,
செழுநீர்வயல் தழுவும்சிறு புலியூர்ச்சல சயனம்,
தொழுநீர்மைய துடையாரடி தொழுவார்துய ரிலரே. 1633

முழுமையாகக் கறுத்த நிறம் கொண்ட நீலோற்பல மலர்களும், அரக்கு நிறம் கொண்ட ஆம்பல் மலர்களும், தாமரை மலர்களும் பரந்து கிடக்க, இவைகளுடன் செங்கழுநீர்ப் பூக்களோடு கூடிப்

Koviloor Digital Library

பார்க்கின்ற நிலையில் அங்கு கூடியுள்ள பெண்களின் கண், வாய், முகம் ஆகியவைகளை ஒத்த நிலையில் மலர்ந்து விளங்குகின்றன. இவ்வாறாகச் செழுமை மிக்க வயல்களைச் சூழ்ந்துள்ள ''திருச்சிறு புலியூர்'' என்னும் திருப்பதியில் சலசயனத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருவடி களைத் தொழுது வணங்குகின்ற ஒழுக்கத்தினை இயல்பாகவே உடைய அடியவர்கள் எவ்விதத் துன்பத்தினையும் அடைய மாட்டார்கள்.

*சேயோங்குதண் திருமாலிருஞ் சோலைமலை யுறையும்
மாயா,எனக் குரையாயிது மறைநான்கினு ளாயோ,
தீயோம்புகை மறையோர்சிறு புலியூர்ச்சல சயனத்
தாயோ,உன தடியார்மனத் தாயோவறி யேனே. 1634

ஓங்கி உயர்ந்த குளிர்ச்சிமிக்க ''திருமாலிருஞ்சோலை மலை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரியும் மாயவனே! தாங்கள் நான்கு மறைகளினுள்ளே தங்கி இருக்கின்றீரோ! ஓமத்தீயை வளர்க்கின்ற கரங்களையுடைய, மறைகளைக் கற்று வல்ல அந்தணர்கள் வாழ்ந்து வருகின்ற ''திருச்சிறுபுலியூர்'' என்னும் திருப்பதியில் சலசயனத்துள் திருக்கோயில் கொண்டு எழுந்து அருள்புரிந்து கொண்டிருக்கின்றீரோ! உம்முடைய அடியவர்களின் உள்ளத்தில் தங்கி உறைகின்றீரோ! என்று எதனையும் அடியேன் அறியாமல் இருக்கின்றேனே! தாங்கள் எங்கே தங்கியிருக்கின்றீர்கள் என்பதை அடியேனுக்கு எடுத்துரைத்து அருள்புரியுமாறு வேண்டு கின்றேன்.

மையார்வரி நீலம்மலர்க் கண்ணார்மனம் விட்டிட்டு,
உய்வானுன கழலேதொழு தெழுவேன்,கிளி மடவார்
செவ்வாய்மொழி பயிலும்சிறு புலியூர்ச்சல சயனத்து,
ஐவாய்அர வணைமேலுறை அமலா!அரு ளாயே. 1635

கிளியைப் போன்ற பெண்களின் சிவந்த வாயினின்றும் உண்டாகும் சொற்களைப் பேசுகின்ற ''திருச்சிறுபுலியூர்'' என்னும் திருப்பதியில் சலசயனத்துள் ஐந்து தலைகளைக் கொண்ட ஆதிசேடன் என்னும் படுக்கையின்மீது திருக்கண் வளர்ந்தருளும் தூயவனாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! மைதீட்டிய வரிகளை யுடைய கருநெய்தல் மலர் போன்ற கண்களையுடைய பெண்களிடம்

Koviloor Digital Library

அடியேனின் மனம் ஆசைப்படாதவாறு, உய்யும் பொருட்டுத் தங்களின் திருவடிகளைத் தொழுது வணங்குகின்றேன். இதன் பொருட்டு அடியேன்மீது அருள்புரியுமாறு வேண்டுகின்றேன்.

*கருமாமுகி லுருவா!கன லுருவா!புன லுருவா,
பெருமால்வரை யுருவா!பிற வுருவா! நின துருவா,
திருமாமகள் மருவும்சிறு புலியூர்ச்சல சயனத்து,
அருமாகட லமுதே!உன தடியேசர ணாமே. 1636

அடியார்களின் மனம் குளிரும்படியான, கருமை நிறம் கொண்ட பெரியதோர் மழை மேகத்தின் திருவடிவு கொண்ட எம்பெருமானே! அடியவர்களல்லாத அன்பில்லாதவர்கள் அருகே அணுக இயலாத வகையில் நெருப்பு போன்ற திருவடிவினையுடையவனே! தங்களின் அடியவர்களின் உள்ளம் குளிர்ச்சி பெற்று மகிழ்வது போன்று இருக்கும் நீர்போன்ற திருவடிவினையுடையவனே! பெரிதாக ஓங்கி வளர்ந்திருக்கின்ற மலையினைப் போன்றதோர் திருமேனியை உடையவனே! மற்றுமுள்ள அனைத்துப் பிற உருவினைக் கொண்டவனே! உனக்கேயுரிய திருவடிவுடன் பெரிய பிராட்டியாரும் உடன் சேர்ந்துள்ள ''திருச்சிறுபுலியூர்'' என்னும் திருப்பதியில் சலசயனத்துள் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் அருமையான கடலினின்றும் தோன்றிய திருவமுதம் போன்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! உன் திருவடிகளையே அடியேன் சரணம் அடைகின்றேன்.

*சீரார்நெடு மறுகில்சிறு புலியூர்ச்சல சயனத்து,
ஏரார்முகில் வண்ணன்றனை யிமையோர்பெரு மானை,
காரார்வயல் மங்கைக்கிறை கலியன்னொலி மாலை,
பாராரிவை பரவித்தொழப் பாவம்பயி லாவே. 1637

(கள்ளம் தெருவில் பறை வான் நந்தா முழு சேயோங்கு மையார் கரு சீரார் - பெரும்புறம்.)

சிறப்புமிக்க நீண்ட பெருந்தெருக்களைக் கொண்டுள்ள ''திருச் சிறுபுலியூர்'' என்னும் திருப்பதியில் சலசயனத்துள் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் எழில்மிக்க கார்முகில் வண்ணனாகிய கமலக்கண்ணனை, விண்ணுலகத்தில் வாழ்கின்ற, கண் இமைத்தலில்லாத தேவர்கட்கெல்லாம் தலைவனாகத் திகழ் கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றிக் கரிய வயல்கள்

Koviloor Digital Library

சூழ்ந்திருக்கின்ற திருமங்கை நாட்டு மன்னன் ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலிக்கின்ற இச்சொல் மாலையாகிய இப்பாசுரங்கள் பத்தினையும் இப்பூமியிலுள்ளவர்கள் பாடித் தொழுது வணங்கிட, அவர்களைப் பாவங்கள் ஏதும் அணுகமாட்டா.

10. பெரும்புறக்கடலை திருக்கண்ணமங்கை

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*பெரும்பு றக்கட லையட லேற்றினைப்
பெண்ணை யானை,எண் ணில்முனி வர்க்கருள்
தருந்த வத்தைமுத் தின்திரள் கோவையைப்
பத்த ராவியை நித்திலத் தொத்தினை,
அரும்பி னையல ரையடி யேன்மனத்
தாசை யைஅமு தம்பொதி யின்சுவைக்
கரும்பி னைக்,கனி யைச்சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே. 1638

எல்லை காணவியலாத அளவில் அகன்றும், விரிந்தும் பரந்து கிடக்கின்றதோர் பெருங்கடலாகவும், செருக்குமிக்க காளை போன்று எவராலும் அடக்குவதற்கு இயலாத நிலையில் நிற்பவனும், அடியவர்களின் அடிமைத் திறத்தினில் பெண்களைப் போன்று 'அன்பு' நிறைந்தவனாகவும், ஆளுமைத் தன்மையில் சிறந்த ஆண்மகனாகவும், கணக்கற்ற அளவில் உள்ள முனிவர்கட்கெல்லாம் அருள்புரிந்து கொண்டிருக்கும் தவ வடிவினை உடையவனாகவும், முத்துகளை ஒன்றாகச் சேர்த்து கோர்த்தெடுத்த கோவை போன்று திகழ்பவனாகவும், பக்தர்கட்கெல்லாம் உயிர் போன்றிருப்ப வனாகவும், முத்துக் குவியல்கள் போன்று திகழ்பவனாகவும், அரும்பு போன்று சிறுபிள்ளை நிலையினனாகவும், மலர்ந்த மலர்களைப் போன்று இளம்பிராயத்தனன் ஆகவும் அடியேன் மனத்தில் உண்டாகின்ற ஆசையினையுடையவனாகவும், திருவமுதம், கரும்பு, கனி இவைகளைப் போன்று இனிய சுவையினை உடையவனாகவும் அமைந்திருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை நாடிச் சென்று ''திருக்கண்ணமங்கை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில்

Koviloor Digital Library

கொண்டு எழுந்தருள்புரிவதை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

மெய்ந்ந லத்தவத் தைத்திவத் தைத்தரும்
மெய்யைப் பொய்யினை கையிலோர் சங்குடை,
மைந்நி றக்கட லைக்கடல் வண்ணனை
மாலை ஆலிலைப் பள்ளிகொள் மாயனை,
நென்ன லைப்பக லையிற்றை நாளினை
நாளை யாய்வரும் திங்களை யாண்டினை,
கன்ன லைக்கரும் பினிடைத் தேறலைக்
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே. 1639

உண்மையாகவே நன்மையை அளிக்கின்ற 'பக்தியோகம்' என்னும் அரிய தவத்தைச் செய்து கொண்டிருப்பதற்கு உரியவனாகவும், திருப்பரமபதத்தினைத் தரும் பிரபத்தியினைக் காட்டியருள்கின்றவனாகவும், உண்மையினனாகவும், அன்பில்லாதார்க்குப் பொய்யனாகவும், தம் திருக்கரத்தினில் ஓர் ஒப்பற்ற சங்கினை ஏந்தியிருப்பவனாகவும், கருநிறம் கொண்ட கடலைப் போன்றவனாகவும், கடலினைப் போன்றதோர் நிறம் கொண்ட திருமேனியையுடையவனாகவும், யாவரினும் மேம்பட்டவனாகவும், ஆலிலையின் மீது திருக்கண் வளர்ந்தருள்கின்ற எம்பெருமான் மாயவனாகவும், இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்கின்ற முக்காலங்களிலும் அனுபவிக்கக் கூடிய ஆற்றல் மிக்கவனாகவும், நாள், மாதம், ஆண்டு ஆகிய அனைத்துக் காலங்களிலெல்லாம் தானே ஆகிய தலைவனாகவும், கரும்பினின்றும் தயாரிக்கின்ற வெல்லக்கட்டியினைப் போன்று அடியவர்கட்கு இனிமையுடையவனாகவும், அக்கரும்பினின்றும் உண்டாகின்ற கரும்புச் சாற்றினைப் போன்று இனிமை மிக்கவனாகவும் அமைந்திருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ''திருக்கண்ணமங்கை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிவதனை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

எங்க ளுக்கருள் செய்கின்ற ஈசனை
வாச வார்குழ லாள்மலை மங்கைதன்
பங்க னை,பங்கில் வைத்துகந் தான்றன்னைப்
பான்மை யைப்பனி மாமதி யம்தவழ்

Koviloor Digital Library

மங்கு லைச்,சுட ரைவட மாமலை
உச்சி யை,நச்சி நாம்வணங் கப்படும்
கங்கு லை,பக லைச்சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே. 1640

எங்களுக்கு அருள்புரியும் எம்இறைவனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை மணம் வீசுகின்ற கூந்தலையுடைய உமா தேவியைத் தன் உடலின் ஒரு பாகத்தில் கொண்டிருக்கின்ற சிவ பெருமானைத் தன் உடம்பில் வைத்துப் பாதுகாத்து அருளிய எம்பெருமானை, இப்படிப்பட்ட தன்மையினனாகிய எம்பெருமான் பனி போன்று குளிர்ந்த தன்மையையுடைய மிகப் பெரியதாகிய சந்திரன் உலவி வருகின்ற விண்ணுலகிற்கு அதிபதியாக இருப் பவனை, உலகிற்கெல்லாம் ஒளி தருகின்ற 'சூரியன்' வடிவில் உலவி வருகின்ற ஒளிச்சுடரை, வடக்கேயுள்ள திருவேங்கடமலையின் உச்சியில் திருக்கோயில் கொண்டு எழுந்து அருள்புரியும் நம்மால் வணங்கித் துதித்துக் கொண்டிருக்கும் நம் எம்பெருமான், இரவு, பகல் உண்டாவதற்குக் காரணமாக இருக்கின்றவனை, எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் ''திருக்கண்ணமங்கை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிந்து கொண்டிருக்கின்ற எம்பெருமானை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

பேய்மு லைத்தலை நஞ்சுண்ட பிள்ளையைத்
தெள்ளி யார்வணங் கப்படுந் தேவனை,
மாய னைமதிள் கோவலி டைகழி
மைந்த னையன்றி யந்தணர் சிந்தையுள்
ஈச னை,இலங் கும்சுடர்ச் சோதியை
எந்தை யையெனக் கெய்ப்பினில் வைப்பினை
காசி னைமணி யைச்சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே. 1641

''பூதனை'' என்னும் பேய்ச்சியின் நச்சு கலந்த முலைப்பாலினைச் சுவைத்து உண்டு அவளுயிரைப் போக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என்னும் சிறுபிள்ளையை இந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே நம் இறைவன் என்று தம் அறிவின் வாயிலாகத் தெளிவுபெற்ற அடியவர்கள் வணங்குகின்ற தேவப்பெருமானை ஆச்சரியமான செயல்களைப் புரிந்து கொண்டிருக்கின்ற மாயப் பிரானை, மதிள்கள் சூழ்ந்த ''திருக்கோவலூர்'' என்னும் திருப்பதியில்

Koviloor Digital Library

ஒரு வீட்டின் இடைகழியில் இருந்த முதலாழ்வார்கள் மூவரின் நடுவே தோன்றி அருளிய இளைஞனாகிய எம்பெருமானை அன்றியும் அந்தணர்களின் உள்ளத்தில் உறைகின்ற எம்ஈசனை, எங்கும் ஒளி வீசுகின்ற சோதி வடிவினனாகியிருப்பவனை, எம் தந்தையை, அடியேனின் உடல் தளர்ச்சியுற்றிருக்கின்ற காலத்தில் அடியேனுக்கு உதவி புரியக்கூடிய மிகச் சிறந்ததோர் வைப்பாகவும் இருக்கின்ற எம் பெருமானை, பொன், மணி ஆகியவற்றை ஒத்த இந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் ''திருக்கண்ணமங்கை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்ற எம்பெருமானைக் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

*ஏற்றி னையிம யத்துளெம் மீசனை
இம்மை யைமறு மைக்கு மருந்தினை,
ஆற்ற லைஅண்டத் தப்புறத் துய்த்திடும்
ஐய னைக்கையி லாழியொன் றேந்திய
கூற்றி னை,குரு மாமணிக் குன்றினை
நின்ற வூர்நின்ற நித்திலத் தொத்தினை,
காற்றி னைப்புன லைச்சென்று நாடிக்
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே. 1642

காளை போன்ற மிடுக்குடைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை இமயமலையின் கண் அமைந்துள்ள ''திருப்பிரிதி'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமானை, இம்மை, மறுமை ஆகிய எப்போதும் மருந்து போன்று உதவியினை அளிக்கக் கூடியவனை, பெரும் சக்தி கொண்ட எம் இறைவனை, அனைத்து அண்டங்கட்கும் அப்பால் அமைந்துள்ள ''திருப்பரமபதத்தில்'' அடியவர்களை ஆட்கொள்ளவல்ல எம் பெருமானை, தன் திருக்கரத்தினில் திருவாழியாழ்வானை ஏந்திக் கொண்டு, பகைவர்கட்கு இயமனாகக் காட்சி தருகின்ற எம் பெருமானை, மிகவும் சிறந்த நீலமணிமயமானதாக அமைந்துள்ள குன்றை ஒத்தவனை, ''திருநின்றவூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் முத்துத்திறல்களைப் போன்றவனைத் ''திருக் கண்ணமங்கை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

Koviloor Digital Library

துப்ப னைத்துரங் கம்படச் சீறிய
தோன்ற லைச்சுடர் வான்கலன் பெய்ததோர்
செப்பி னை,திரு மங்கைம ணாளனைத்
தேவ னைத்திக ழும்பவ ளத்தொளி
ஒப்ப னை,உல கேழினை யூழியை
ஆழி யேந்திய கையனை அந்தணர்
கற்பி னை,கழு நீர்மல ரும்வயல்
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே. 1643

குதிரை வடிவில் வந்த ''கேசி'' என்னும் பலமிக்க அசுரனை அழித்த எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரானை, சிறந்த ஆபரணங்களை யெல்லாம் ஒருங்கு சேர்த்து வைக்கின்ற பாதுகாப்புப் பெட்டக மாகவும், திருமகள்நாதனை விண்ணுலகத்தேவர்கட்கெல்லாம் தலைவனை, சிறந்து விளங்குகின்ற பவளங்களின் ஒளியை ஒத்திருப்பவனை, ஏழுலகங்கள், ஊழிக்காலங்களாய் நிற்கின்ற எம்பெருமானை, திருவாழியாழ்வானைத் தம் திருக்கரத்தில் ஏந்திய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை, அந்தணர்கள் கற்கும் கல்வியாகிய நான்குவகை மறைகட்கும் பொருளாகத் திகழும் எம்பெருமானை, செங்கழுநீர்ப் பூக்கள் பூத்துக் குலுங்குகின்ற வளம்மிக்க வயல்களைக் கொண்டுள்ள ''திருக்கண்ணமங்கை'' என்னும் திருப்பதியினில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந் நாராணனை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

திருத்த னைத்திசை நான்முகன் தந்தையைத்
தேவ தேவனை மூவரில் முன்னிய
விருத்த னை,விளங் கும்சுடர்ச் சோதியை
விண்ணை மண்ணினைக் கண்ணுதல் கூடிய
அருத்த னை,அரி யைப்பரி கீறிய
அப்ப னைஅப்பி லாரழ லாய்நின்ற
கருத்த னை,களி வண்டறை யும்பொழில்
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே. 1644

எக்காலத்தும் மனநிறைவுடன் கூடிய எம்பெருமானை, நான்கு முகங்களையுடைய பிரமதேவனின் தந்தையை, விண்ணுலகத் தேவர்கட்கெல்லாம் தலைவனாகத் திகழும் எம்பெருமானை, மும்மூர்த்திகளில் முதல் மூர்த்தியாகத் திகழும் எம்தலைவனை, விளங்குகின்ற ஒளிமயமான ''சோதி'' வடிவினனான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை, விண்ணுலகுக்கும், மண்ணுலகுக்கும் தலை

Koviloor Digital Library

வனை, நெற்றிக்கண்ணை உடைய சிவபெருமானைத் தன் திரு மேனியின் ஒரு பாகத்தே கொண்டிருக்கின்ற எம்இறைவனை, ''அரி'' என்னும் திருநாமம் கொண்டவனை, குதிரை வடிவில் வந்த ''கேசி'' என்னும் அசுரனை அழித்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை, நீர், நெருப்பு ஆகியவற்றினுள்ளே ஒன்றி நின்றிருக்கின்ற எம் பெருமானை, மகிழ்ச்சி மிக்க வண்டுகள் இன்னிசை ஒலித்துக் கொண்டிருக்கின்ற 'சோலைகள்' சூழ்ந்துள்ள ''திருக்கண்ணமங்கை'' என்னும் திருப்பதியுள் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

வெஞ்சி னக்களிற் றைவிளங் காய்விழக்
கன்று வீசிய ஈசனை, பேய்மகள்
துஞ்ச நஞ்சுசு வைத்துண்ட தோன்றலைத்
தோன்றல் வாளரக் கன்கெடத் தோன்றிய
நஞ்சி னை,அமு தத்தினை நாதனை
நச்சு வாருச்சி மேல்நிற்கும் நம்பியை,
கஞ்ச னைத்துஞ்ச வஞ்சித்த வஞ்சனைக்,
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே. 1645

கடுங்கோபம் கொண்ட பலமிக்க ஆண்யானையை, விளா மரத்தின் காய்கள் கீழே விழுமாறு கன்று வடிவில் வந்த அசுரனைத் தூக்கி எறிந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை, 'பூதனை' என்னும் பேய்ச்சியின் நச்சு கலந்த முலைப்பாலை உண்டு சுவைத்திட்ட ''ஸ்ரீகண்ணபிரான்'' என்னும் சிறுகுழந்தையை, இலங்கை மாநகர்க்கு அரசனான இராவணன் என்னும் அரக்கன் மாண்டு போகும் படிக்காகவே தோன்றிய ஸ்ரீஇராமபிரான் அவனுக்கு நஞ்சாக அமைந் தவனை, அடியவர்கட்கு ஆராவமுதத்தினை ஒத்த எம்பெருமானை, அனைத்து உயிரினங்கட்கும் தலைவனாகியிருப்பவனை, தன்னை விரும்புகின்ற அடியவர்களின் தலைகளின்மீது எழுந்தருளும் எம்பெருமானைக் ''கம்சன்'' என்னும் அசுரனை அழியும்படியாகச் செய்த வஞ்சனாகிய எம்பெருமானைத் ''திருக்கண்ணமங்கை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

Koviloor Digital Library

பண்ணி னைப்பண்ணில் நின்றதோர் பான்மையைப்
பாலுள் நெய்யினை மாலுரு வாய்நின்ற
விண்ணி னை,விளங் கும்சுடர்ச் சோதியை
வேள்வி யைவிளக் கினொளி தன்னை,
மண்ணி னைமலை யையலை நீரனை
மாலை மாமதி யைமறை யோர்தங்கள்
கண்ணி னை,கண்க ளாரள வும்நின்று
கண்ண மங்கையுள் கண்டுகொண் டேனே. 1646

இசையாகவும், அவ்விசையின் உள்ளே அமைந்திருக்கின்ற தன்மையைப் போன்றும் அமைந்துள்ள எம்பெருமானை, பாலினுள்ளே அடங்கியிருக்கின்ற நெய்யினைப் போன்று இவ்வுலகத்தினுள்ளே அடங்கியுள்ள எம்பெருமானை, திருமால் திருமேனியனாக இருக்கின்ற விண்ணிலுள்ள ''திருப்பரமபத'' நாதனை, எங்கும் ஒளியுடன் விளங்குகின்ற 'சோதி' வடிவானவானை அனைத்து வேள்விகளும் விளக்கொளி போன்று தன்னைத் தானே ஒளிரச் செய்துவிட்டு, பிறவற்றையும் ஒளிரும்படியாகச் செய்து வருகின்ற எம்பெருமானை, பூமியினைப் போன்று யாவரிடத்தும் பொறுமையைக் கடைப்பிடித்துக் கொண்டிருப்பவனை, மலையைப் போன்று யாவராலும் ''அசைத்துப் பார்க்கவும்'' இயலாத எம்பெருமானை, அலைவீசுகின்ற நீரினையொத்த மாலையில் தோன்றுகின்ற முழுமதியை ஒத்தவனை, மறைகளை ஓதுகின்ற அந்தணர்களின் கண்ணினைத் ''திருக்கண்ணமங்கை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அடியேனின் இருகண்களும் மகிழ்வு பெறுமாறு நின்ற நிலையில் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

*'கண்ண மங்கையுள் கண்டுகொண் டேன்'என்று
காத லால்கலி கன்றியு ரைசெய்த,
வண்ண வொண்டமி ழொன்பதோ டொன்றிவை
வல்ல ராயுரைப் பார்மதி யம்தவழ்
விண்ணில் விண்ணவ ராய்மகிழ் வெய்துவர்
மெய்ம்மை சொல்லில்வெண் சங்கமொன் றேந்திய
கண்ண, நின்றனக் கும்குறிப் பாகில்
கற்க லாம்கவி யின்பொருள் தானே. 1647

(பெரு மெய் எங்கள் பேய் ஏற்றினை துப்பனை திருத்தனை வெஞ்சினம் பண்ணினை கண்ணமங்கை-சிலை.)

Koviloor Digital Library

''திருக்கண்ணமங்கை'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்'' என்று எம்பெருமான்மீது கொண்ட பெருங்காதலால் கலிகன்றி என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இசையுடன் கூடிய அழகிய இத்தமிழ்ப் பாசுரங்கள் பத்தினையும் நன்கு கற்றுவல்லவர்களாயிருப்பவர்கள், இப் பாசுரங்களைப் பிறர்க்கு எடுத்துரைப்பவர்கள் சந்திரன் தவழ்ந்து செல்கின்ற விண்ணுலகிலுள்ள தேவர்களாகி மகிழ்ச்சியுறுவர். இதுபற்றி உண்மையாகவே எடுத்துச் சொல்ல வேண்டும் எனின் வெண்மை நிறமுடைய சங்கினைத் தம் திருக்கரத்தில் ஏந்தியிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் தனக்கும் இப்பாசுரங்களைக் கற்க வேண்டுமென்று கருதுவாராகில், கற்று, இப்பாசுரங்களில் பொதிந்துள்ள பொருள்களையும் அறிந்து கொள்ளலாம்.



Koviloor Digital Library

எட்டாம் பத்து

1. சிலையிலங்கு திருக்கண்ணபுரம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*'சிலையிலங்கு பொன்னாழி திண்படைதண்
டொண்சங்கம்' என்கின் றாளால்,
'மலையிலங்கு தோள்நான்கே மற்றவனுக்
கெற்றேகாண்!' என்கின் றாளால்,
முலையிலங்கு பூம்பயலை முன்போட
அன்போடி யிருக்கின் றாளால்,
கலையிலங்கு மொழியாளர் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள் கொல்லோ![1] 1648

என் மகள் வில், பொன் போன்று ஒளிர்கின்ற திருவாழி, வலிமை மிக்க வாள், கதை அழகுமிக்க சங்கு என்று குறிப்பிடுகின்ற எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் ஐந்துவகை ஆயுதங்களாகத் திகழ்கின்ற ஒவ்வொன்றினைப் பற்றியும் பெயர்களைக் கூறிப் புலம்புகிறாள். மேலும் எம்பெருமானுக்கு மலையைப் போன்ற திருத்தோள்கள் நான்கு இருக்கின்றன என்று கூறிப் பேசுகின்றாள். ''காதல் தோன்றிய பின்பு அக்காதலனின் பிரிவு காரணமாகத் தோன்றும் பசலை நோய்'' என்னும் உலக வழக்கிற்கு மாறுபாடான நிலையில் என் மகளின் முலைகளின்மீது 'பசலை' என்னும் நோய் தோன்றி முன்னே செல்ல, அதற்குப் பின்பு அவளின் காதல் செல்கின்றதே! இப்படிப்பட்ட நிலையிலுள்ள என் மகள் கலைகள் பலவற்றைக் கற்றுணர்ந்து, தேர்ந்த நற்சொற்களையே பேசும் ஆற்றல் பெற்றவர்கள் வாழ்கின்ற திருக்கண்ணபுரம் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராஜப் பெருமாளைக் கண்டு சேவிக்கப் பெற்றிருப்பாளோ? என்று எண்ணத் தோன்றுகிறது. என் மகளின் இச்செயலுக்கு இதுதான் காரணம் என்று எண்ணுகிறேன் என்று தாய்கருதுகிறாள்.

*'செருவரைமுன் னாசறுத்த சிலையன்றோ
கைத்தலத்த தெ'ன்கின் றாளால்,
'பொருவரைமுன் போர்தொலைத்த பொன்னாழி
மற்றொருகை' என்கின் றாளால்,

Koviloor Digital Library

'ஒருவரையும் நின்னொப்பா ரொப்பிலா
என்னப்பா!' என்கின் றாளால்,
கருவரைபோல் நின்றானைக் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள் கொல்லோ! 1649

என் மகள், ''முன்பு போர்க்களத்தில் போர்வீரர்களாகிய எதிரிகளை விரைவில் அழித்த வில்லன்றோ அவன் திருக்கரத்தில் அழகாக அமைந்துள்ளது என்று எப்போதும் பேசுகிறாள் அவ்வாறே, ''போரின் போது பெரிய மலைகளை அழித்த ஆற்றல் மிக்க பொன்போன்று ஒளிர்கின்ற ''திருவாழி'' என்னும் சக்கரம் மற்றொரு திருக்கரத்தில் இருக்கிறது'' என்று கூறிப் பேசுகின்றாள். அவனுக்கு ஒப்பானவர் ஒருவருமில்லாத என் ஐயனே!'' என்று கூறிப் பேசுகின்றாள். ''கறுத்த பெரிய மலையினைப் போன்று ''திருக்கண்ணமங்கை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிந்து நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கின்ற எம்பெருமான் ஸ்ரீசௌரிராஜப் பெருமானைக் கண்டு சேவிக்கப் பெற்றதன் பயன் காரணமாகவே இவள் மேற்கண்டவாறெல்லாம் பேசிக் கொண்டிருக்கிறாள்'' என்று தாய் புலம்புகிறாள்.

துன்னுமா மணிமுடிமேல் துழாயலங்கல்
தோன்றுமால் என்கின் றாளால்,
மின்னுமா மணிமகர குண்டலங்கள்
வில்வீசும் என்கின் றாளால்,
பொன்னின்மா மணியாரம் அணிஆகத்து
இலங்குமால் என்கின் றாளால்,
கன்னிமா மதிள்புடைசூழ் கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொல்லோ! 1650

''நெருக்கமாக இடைவிடாமல் பதித்துள்ள மணிகளைக் கொண்ட திருமுடியில் திருத்துழாய் மாலை தோன்றுகின்றதே!'' என்று என் மகள் பேசிக் கொண்டிருக்கின்றாள். மேலும் மணிகள் பொருந்தியிருக்கின்ற திருமகர குண்டலங்கள் மின்னலைப் போன்று ஒளிவீசிக் கொண்டிருக்கின்றன! என்றும் என் மகள் பேசிக் கொண்டிருக்கின்றாள். இவற்றுக்கும் மேலாகப் பொன்னால் செய்த மணிகள் பதிக்கப் பெற்ற திருவாபரணங்கள் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் அழகிய திருமார்பில் விளங்கிக் கொண்டு இருக்கின்றதே! என்றும் பேசிக்கொண்டு இருக்கின்றாள். இவ்வாறு

Koviloor Digital Library

பலபடியாகப் பேசிக் கொண்டிருக்கின்ற என் மகள் அழிக்க இயாத பெரிய மதிள் சுற்றிலும் சூழ்ந்திருக்கின்ற திருக்கண்ணபுரம் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ சௌரிராஜப் பெருமானைக் கண்டிருக்கிறாள்போல் தோன்றுகின்றதே!

தாராய தண்துளப வண்டுழுத
வரைமார்பன் என்கின் றாளால்,
போரானைக் கொம்பொசித்த புட்பாகன்,
என்அம்மான் என்கின் றாளால்,
ஆசானும் காண்மின்கள் அம்பவளவாய்
அவனுக்கு என்கின் றாளால்,
கார்வானம் நின்றதிரும் கண்ணபுரத்து
அம்மானைக் கண்டாள் கொல்லோ! 1651

குளிர்ச்சி பொருந்திய திருத்துழாய் மாலைகளில் வண்டுகள் உலவிக் கொண்டிருக்க எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் அழகிய திருமார்பில் அம்மாலைகளை அணிந்து கொண்டிருக்கின்றான்! என்று கூறிக் கொண்டிருக்கின்றாள். நான் விரும்புகின்ற அம்மார்பானது அவ்வாறு வண்டுகள் உலவிக் கொண்டிருப்பதற்காகவோ! என்றும் பேசிக் கொண்டிருக்கின்றாள். போர்புரிவதில் சிறந்த 'குவலயாபீடம்' என்னும் ஆண் யானையினை வென்று அதன் கொம்பினை முறித்த, பறவைகட்கு அரசனாகிய கருடாழ்வான்மீது பறந்து செல்லும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் என் சுவாமியாயிற்றே! என்று பேசிக்கொண்டு இருக்கின்றாள். அந்த எம்பெருமானின் திருப் பவளவாய் அமைந்திருக்கின்ற அழகினை யார் வேண்டுமானாலும் கண்டு களிக்கலாம்! என்றும் பேசிக் கொண்டிருக்கின்றாள். இத்தகைய எம்பெருமானைக் கண்டதினின்றும் விலகத் தோன்றுமோ! என்றும் கூறுகின்றாள். கறுத்த மேகங்கள் நின்றதிர்ந்து, மழையைப் பொழிகின்ற "திருக்கண்ணபுரம்" என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டெழுந்தருள் புரியும் எம்பெருமான் ஸ்ரீ சௌரிராஜப் பெருமானை என் மகள் கண்டிருக்கிறாள்போல் தோன்றுகின்றதே!

'அடித்தலமும் தாமரையே அங்கையும்
பங்கயமே' என்கின் றாளால்,
'முடித்தலமும் பொற்பூ மென்நெஞ்சத்
துள்ளகலா' என்கின் றாளால்,

Koviloor Digital Library

'வடித்தடங்கண் மலரவளோ வரையாகத்
துள்ளிருப்பாள்?' என்கின் றாளால்,
கடிக்கமலம் கள்ளுகுக்கும் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள் கொல்லோ! 1652

''எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருவடிகளிரண்டும் தாமரை மலர்களே! அந்த எம்பெருமானின் திருக்கரங்களும் தாமரை மலர்களாகவே இருக்கின்றன'' என்று என் மகள் கூறிக் கொண்டிருக் கின்றாள். அங்கே நான் அவனிடம் தோற்று விழுகின்ற நிலை யிலிருக்க அவனுடைய திருக்கரங்கள் அடியேனை அணைத்தன. அவ்வாறு தழுவிக் கொண்டிருக்கும்பொழுது அந்த எம்பெருமானை மேல்நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தபோது, அவனுடைய திருமுடியும் திருவாபரணமும் என் உள்ளத்தினின்றும் அகலாதிருக் கின்றனவே! என்று கூறிக் கொண்டிருக்கிறாள். மேலும் என் மகள், அழகிய மலர்க்கண்களைக் கொண்டுள்ள திருமகள் மலையைப் போன்ற அந்த எம்பெருமானின் திருமார்பில் வாழ்ந்து கொண்டி ருக்கிறாள். அத்தகைய திருமகள் என்னையும் அந்த எம் பெருமானிடம் சேர்த்து வைக்கமாட்டாளோ! என்று எண்ணி ஏங்கிக் கொண்டிருக்கிறாள். இங்ஙனமாக என் மகள் பலவாறாகக் கூறிப் புலம்பிக் கொண்டு இருக்கிறாள். தேன் நிறைந்திருக்கும் தாமரை மலர்கள் நிறைந்திருக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ சௌரிராஜப் பெருமானை இவள் கண்டிருக்கிறாள் போல் தோன்றுகின்றதே!

'பேரா யிரமுடைய பேராளன்
பேராளன்' என்கின் றாளால்,
'ஏரார் கனமகர குண்டலத்தன்
எண்தோளன்' என்கின் றாளால்,
'நீரார் மழைமுகிலே நீள்வரையே
ஒக்குமால்' என்கின் றாளால்,
காரார் வயலமரும் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள் கொல்லோ! 1653

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஆயிரம் திருநாமங்களைப் பெற்றிருக்கின்ற பேர்பெற்ற பெருமை கொண்டவர் என்று என் மகள் உரைத்துக் கொண்டிருக்கின்றாள். அவன் சிறப்புகள் மிக்க மிகப்

Koviloor Digital Library

பெரியவன். அவன் மணிகள் பதிக்கப் பெற்ற கனமான மகர குண்டலங்களைக் கொண்ட திருக்காதுகளுடன் எட்டுத் தோள் களையுடையவன் என்றும் என் மகள் கூறிக் கொண்டிருக்கின்றாள். நீர் நிறைந்திருக்கின்ற, மழையைப் பொழிய உள்ள திரண்ட கருமேகத்தினையும், நெடிதுயர்ந்த அஞ்சன மலையையும் ஒத்த திருமேனி வடிவு பெற்றவனாகத் திகழ்கின்றான் என்றும் கூறிக் கொண்டிருக்கிறாள். இவ்வாறாகப் பலபடியாகப் பேசிக் கொண்டிருக்கின்ற என் மகள் கார்காலத்தில் வளமாக வளரும் செந்நெற்பயிர்கள் நிறைந்திருக்கும் வயல்கள் நிறைந்திருக்கின்ற திருக்கண்ணபுரம் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ சௌரிராஜப் பெருமானை என் மகள் கண்டிருக்கிறாள்போல் தோன்றுகின்றதே!

'செவ்வரத்த வுடையாடை யதன்மேலோர்
சிவளிகைக்கச் செ'ல்கின் றாளால்,
'அவ்வரத்த வடியிணையு மங்கைகளும்
பங்கயமே' என்கின் றாளால்,
'மைவளர்க்கும் மணியுருவம் மரகதமோ
மழைமுகிலோ!' என்கின் றாளால்,
கைவளர்க்கு மழலாளர் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள் கொல்லோ! 1654

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் செவ்வரத்தம்பூ பூத்திருப்பது போன்று சிவந்த நிறம் கொண்ட திருப்பரிவட்டமும், பீதாம்பரமும், அதற்கும் மேலே பொன்னால் இழைத்த கச்சும் உடுத்தியிருப்பது என்னே அழகாக மிளிர்கிறது! என்று என் மகள் கூறிக் கொண்டிருக் கிறாள். அவ்வண்ணமேயுள்ள அவனுடைய இணைத் திருவடிகளும், திருக்கரங்களும் ஆகிய இவைகள் யாவும் அப்பொழுதலர்ந்த செந்தாமரை மலர்களையே ஒத்திருக்கின்றன என்றும் கூறிக் கொண்டிருக்கின்றாள். மேலும் அந்த எம்பெருமான் மைந்நிறம் கொண்ட திருமேனியானது மரகதமணியோ! மழை பொழிய இருக்கின்ற முகிற் கூட்டங்களின் நிறத்தினை ஒத்ததோ! என்றும் கூறிக் கொண்டிருக்கிறாள். இத்தகைய என் மகள் தம் கரங்களால் வேள்விகளை இயற்றும் அந்தணர்கள் வாழ்ந்திருக்கும் திருக்கண்ணபுரம் என்னும் திருத்தலததில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராஜப் பெருமானை என் மகள் கண்டிருக்கிறாள்போல் தோன்றுகின்றதே!

Koviloor Digital Library

'கொற்றப்புள் ளொன்றேறி மன்றூடே
வருகின்றான்' என்கின் றாளால்,
'வெற்றிப்போ ரிந்திரற்கு மிந்திரனே
ஒக்குமால்' என்கின் றாளால்,
'பெற்றக்கா லவனாகம் பெண்பிறந்தோம்
உய்யோமோ!' என்கின் றாளால்,
கற்றநூல் மறையாளர் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள் கொல்லோ! 1655

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பறவைகட்குத் தலைவனாகிய கருடாழ்வான்மீது ஏறிக் கொண்டே இம்மன்றினூடே வருகின்ற அழகுதான் என்னே! என்று என் மகள் வியந்து கூறிக் கொண்டிருக் கின்றாள். வெற்றிப் போரினைச் செய்யக் கூடிய இந்திரனுக்கும் தலைவனாகிய மகேந்திரனையே ஒத்தவனாக இந்த எம்பெருமான் விளங்குகின்றான் என்றும் கூறிக் கொண்டிருக்கின்றாள். மேலும் இந்த எம்பெருமானின் திருமார்பில் அணைக்கப் பெறுவேனானால், அடியேன் ஒரு பெண்ணாகப் பெற்ற தன் பயனை அடையப் பெற்று உய்வு பெற்றவளாவானே! என்றும் கூறிக் கொண்டிருக்கிறாள். இவற்றுக்கும் மேலாக நூல்கள் பலவற்றைக் கற்று வல்லவர் களாகவும், மறைகளை நன்கு அறிந்துணர்ந்துள்ள அந்தணர்கள் வாழ்கின்ற திருக்கண்ணபுரம் என்னும் திருத்தலததில் எழுந்தருள் புரிகின்ற எம்பெருமான் ஸ்ரீசௌரிராஜப் பெருமானை என் மகள் கண்டிருக்கிறாள்போல் தோன்றுகின்றதே!

'வண்டமரும் வனமாலை மணிமுடிமேல்
மணநாறும்' என்கின் றாளால்,
'உண்டிவர்பா லன்பெனக்கென் றொருகாலும்
பிரிகிலேன்' என்கின் றாளால்,
'பண்டிவரைக் கண்டறிவ தெவ்வூரில்
யாம்?'என்றே பயில்கின் றாளால்,
கண்டவர்தம் மனம்வழங்கும் கண்ணபுரத்
தம்மானைக் கண்டாள் கொல்லோ! 1656

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் மணிகள் பதிந்திருக்கின்ற திருமுடியின்மீது வண்டுகள் அமர்கின்ற நறுமணம் மிக்க மலர்களைக் கொண்டுள்ள திருத்துழாய் மாலையை அணிந்திருப்பது மணம் வீசுகின்றதே என்று என் மகள் கூறிக் கொண்டிருக்கிறாள். இந்த

Koviloor Digital Library

எம்பெருமான்மீது நான் காதல் கொண்டிருப்பதால் நான் இந்தப் பெருமானைவிட்டு நான் எப்பொழுதும் பிரிந்திருக்கமாட்டேன் என்றும் என் மகள் கூறிக் கொண்டிருக்கிறாள். இந்த எம்பெருமானை அடியேன் இதற்கு முன்பே எந்தத் திருத்தலத்தில் என் கண்ணாரக் கண்டிருக்கிறேன் என்பதை அறிந்திருப்பதாகவும் என் மகள் கூறிக் கொண்டிருக்கிறாள். திருக்கண்ணபுரம் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரி ராசப் பெருமானைக் கண்டு சேவிக்கப் பெற்றவர்கள் தம் மனதினை இழந்து விடுவார்கள். அத்தகைய அழகுமிக்க எம்பெருமானை என் மகள் கண்டிருக்கிறாள்போல் தோன்றுகின்றதே!

*'மாவளரு மென்னோக்கி மாதராள்
மாயவனைக் கண்டாள்' என்று,
காவளரும் கடிபொழில்சூழ் கண்ணபுரத்
தம்மானைக் கலியன் சொன்ன,
பாவளரும் தமிழ்மாலை பன்னியநூல்
இவையைந்து மைந்தும் வல்லார்,
பூவளரும் கற்பகம்சேர் பொன்னுலகில்
மன்னவராய்ப் புகழ்தக் கோரோ. 1657

(சிலை செறு துன்னு தார் அடி பேர் செவ்வரத்த கொற்றண்டு மாவளரும் - தெள்ளியீர்.)

மான் போன்ற மென்மையான பார்வை கொண்ட பெண் மகள் ஒருத்தி, நறுமணம் வீசும் மலர்கள் நிறைந்திருக்கின்ற சோலைகள் சூழ்ந்துள்ள திருக்கண்ணபுரம் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராஜப் பெருமானைக் கண்டு மயங்கலுற்றுப் பலவாறாகப் பேசிக் கொண்டிருந்தாள் என்று கலியன் என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த பாசுரங்கள் பெருகிக் கொண்டிருக்கும் தமிழ்ப் பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்ல பெருமக்கள், பூக்கள் நிறைய வளர்ந்து கொண்டிருக்கின்ற கற்பக மரங்கள் நிறைந்திருக்கின்ற பொன்னுலகம் எனப்படும் திருப்பரமபதம் சென்று மன்னராகிப் பெரும்புகழைப் பெற்று இனிதே வாழ்வர்.

Koviloor Digital Library

2. தெள்ளியீர்
திருக்கண்ணபுரம்

கொச்சகக் கலிப்பா

*தெள்ளியீர்! தேவர்க்கும் தேவர் திருத்தக்கீர்!
வெள்ளியீர் வெய்ய விழுநிதி வண்ணர்,ஓ
துள்ளிநீர்க் கண்ண புரம்தொழு தாளிவள்
கள்வியோ, கைவளை கொள்வது தக்கதே? 1658

தெளிந்த அறிவு ஞானத்துடன் கூடிய எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே! தேவர்களுக்கெல்லாம் தலைவராகிய நீர் திருமகளுக்கு ஏற்ற தகுதி படைத்தவரே! வெண்மை நிறம் போன்ற தூய்மையான திருவுள்ளம் கொண்டவரே! கட்டுரைத்த பொன் போன்ற திருமேனி யையுடையவரே! ஓ! துள்ளிப் பாய்கின்ற நீர் வளமிக்க ''திருக் கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ சௌரிராஜப் பெருமானை என் மகள் தொழுதாள் என்பதற்காக இவள் கள்ளத்தனமுடையளாவாளோ? இவள் கள்ளத்தனமுடையள் என்று கருதி இவளுடைய கை வளையல்களை நீர் கவர்ந்து கொள்வது என்பது உமக்குத் தக்கதாகுமோ? என்று கூறித் தாய் புலம்புகிறாள்.

நீணிலா முற்றத்து நின்றிவள் நோக்கினாள்,
காணுமோ கண்ண புரமென்று காட்டினாள்,
பாணனார் திண்ண மிருக்க இனியிவள்
நாணுமோ, நன்றுநன் றுநறை யூரர்க்கே. 1659

என் மகளாகிய இப்பெண் உயர்ந்திருக்கும் நிலா முற்றத் தினின்றும் ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ சௌரிராஜப் பெருமானைக் கண்டு சேவிக்கப் பெற்றாள். இந்த அரும்பெருங் காட்சியாகிய திருக்கண்ணபுரத்தினைக் கண்டு, நீங்களும் சேவியுங்கள் என்று பிறர்க்கும் காட்டிக் கொண்டிருந்தாள். இந்நிலையினைக் கண்ட பாணர்கள் இவளின் இந்தச் செயல் குறித்து உறுதியாகத் தம் மனத்தே கொண்டிருக்க இவள் இனியும் அந்நிலையினின்றும் மீளக் கூடுமோ! அஃது இவளால் இனி இயலாது என்பதால் இவளை மடலூரச் செய்த ''திருநறையூர்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு

Koviloor Digital Library

எழுந்தருள்புரியும் எம்பெருமானுக்கே இவளின் எண்ணங்கள் ஒருசேர நன்றாய்த் தலைக்கட்டிற்றே!

*'அருவிசோர் வேங்கடம் நீர்மலை' என்றுவாய்
வெருவினாள், மெய்யம் வினவி யிருக்கின்றாள்,
'பெருகுசீர்க் கண்ண புரம்'என்று பேசினாள்
உருகினாள், உள்மெலிந் தாள்இது வென்கொலோ! 1660

என் மகளாகிய இந்தப் பெண் அருவிகள் நீரைச் சொரிகின்ற அழகிய ''திருவேங்கடம்'' என்றும், ''திருநீர்மலை'' என்றும் அவ்வப்பொழுது தம் வாயினால் பிதற்றிக் கொண்டிருக்கிறாள். ''திருமெய்யம்'' என்னும் திருத்தலம் எங்கே உள்ளது? என்று வினவிக் கொண்டே இருக்கிறாள். ஆறு போன்று செல்வம் பெருகு கின்ற சிறப்புமிக்கதாகிய ''திருக்கண்ணபுரம்'' என்று பேசுகின்றாள். இவ்வாறெல்லாம் இவள் பேசிப் பேசியே நீராய் உருகிக் கொண்டிருக் கிறாள். உள்ளத்தின் உள்ளேயே இவள் மெலிந்து வாடிக் கொண்டி ருக்கிறாள். இப்படிப்பட்டதோர் நிலைமையினை இவள் அடைந் திருப்பதானது எதன் பொருட்டோ! என்று தாய் புலம்புகிறாள்.

உண்ணும்நா ளில்லை உறக்கமுந் தானில்லை,
பெண்மையும் சால நிறைந்திலள் பேதைதான்,
கண்ணனூர் கண்ண புரம்தொழும் கார்க்கடல்
வண்ணர்மேல், எண்ண மிவட்கிது வென்கொலோ! 1661

என் மகளாகிய இப்பெண் பிரிவுத்துயர் காரணமாக ஒரு நாளும் உண்பதுமில்லை; உறங்குவதுமில்லை. நன்கு முதிர்ச்சியுற்ற பெண்மைப் பருவம் அடையவுமில்லை. இவள் ஒரு இளம் பெண்ணே ஆவள். இப்படிப்பட்ட இந்நிலையிலும் இவள் ஸ்ரீகண்ண பிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் ''திருக்கண்ண புரம்'' என்னும் திருப்பதியை நோக்கித் தொழுது கொண்டிருக் கின்றாள். கருநிறம் கொண்ட கடல் நிறத்தினைக் கொண்ட திருமேனியினையுடைய எம்பெருமான்மீது எப்போதும் இவள் எண்ணம் இருந்து கொண்டே இருக்கின்றதே! இவள் இந்நிலை மையை அடைந்திருப்பது என்பது எதன்பொருட்டு? என்று கூறித் தாய் புலம்புகிறாள்.

Koviloor Digital Library

கண்ணனூர் கண்ண புரம்தொழும் காரிகை,
பெண்மையும் தன்னுடை யுண்மை யுரைக்கின்றாள்,
வெண்ணெயுண் டாப்புண்ட வண்ணம் விளம்பினாள்,
வண்ணமும் பொன்னிற மாவ தொழியுமே. 1662

ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருத்தலம் கண்டு தொழுகின்ற அழகியாகிய இப்பெண் தன்னுடைய பெண்மையையும், உண்மையையும் எடுத்துரைக்கின்றாள். இக்கண்ணபிரான் வெண்ணெயைத் திருடித் திருவமுது செய்ததனால், தன் தாய் அசோதைப் பிராட்டியினால் கட்டுண்ட அச்செய்தியினைப் பிறர் எவரேனும் கேலியாகக் கூறுவதனைக் கேட்கின்ற இவளுடைய மேனியானது ஏற்கனவே பரவியிருந்த 'பசலை' நிறத்தினின்றும் நீங்கப் பெற்று, இயல்பான நல்ல நிறத்தினைப் பெற இவள் மகிழ்ச்சியினை அடைகின்றாள். என்று தாய் கூறிப் புலம்புகிறாள்.

'வடவரை நின்றும்வந்து இன்று கணபுரம்,
இடவகை கொள்வது யாம்'என்று பேசினாள்,
மடவரல் மாதரென் பேதை யவர்க்கிவள்
கடவதென், கண்டுயி லின்றிவர் கொள்ளவே. 1663

''வடக்கிலுள்ள திருமலையினின்றும் புறப்பட்டு வந்து நாம் இன்றைக்கு ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியினைத் தம் இருப்பிடமாகக் கொண்டிருப்பது நானே'' என்று எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுடன் தானும் ஐக்கியமாகியிருப்பதாக என் மகள் பேசிக் கொண்டிருக்கிறாள். மடப்ப குணம் கொண்ட பேதைப் பருவம் கொண்ட இப்பெண் இந்தச் சௌரிராசப் பெருமானுக்குச் செய்யக் கூடிய செய்கைகள்தான் யாதோ? இந்த எம்பெருமான் ஸ்ரீ சௌரிராசப் பெருமானும் இன்று இவளுடைய உறக்கத்தினைக் கொண்டு சென்றானே! இதென்ன அதிசயமோ! என்று தாய் புலம்பிக் கூறுகிறாள்.

தரங்கநீர் பேசினும் தண்மதி காயினும்,
இரங்குமோ? எத்தனை நாளிருந் தெள்கினாள்?
'துரங்கம்வாய் கீண்டுகந் தானது தொன்மைஊர்,
அரங்கமே' என்ப திவள்தனக் காசையே. 1664

அலைவீசுகின்ற கடல்நீரானது ஒலித்துக் கொண்டிருப்பினும், குளிர்ந்த நிலையிலிருக்கும் சந்திரன் காய்ந்தாலும், என் மகளாகிய

Koviloor Digital Library

இப்பெண் புதியதாக இளைத்துப் போகவில்லையே! ஏனென்றால், இவள் இதற்கு முன்பே பன்முறை பிரிவு காரணமாகப் பல நாள்களில் இளைத்திருக்கிறாள். முன்பொரு சமயம் குதிரை வடிவில் வந்த 'கேசி' என்னும் அசுரனின் வாயைக் கிழித்து அழித்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் மிகப் பழைமையான ஊர் யாது என்றால், ''திருவரங்கம்'' என்னும் திருப்பதியே என்று இவள் சொல்லிக் கொண்டிருக்கின்ற இச்செயலே இப்பெண்ணின் ஆசையாக இருப்பதாகத் தாய் கூறிப் புலம்புகிறாள்.

தொண்டெல்லாம் நின்னடி யேதொழு துய்யுமா
கண்டு,தான் கணபுரம் கைதொழப் போயினாள்,
வண்டுலாம் கோதையென் பேதை மணிநிறம்
கொண்டுதான், கோயின்மை செய்வது தக்கதே? 1665

அடியவர்கள் அனைவரும் நின் திருவடிகளையே தொழுது வணங்கி வருவதால் நன்றாகப் பிழைத்துக் கொள்வதைக் கண்ட என் மகளாகிய இப்பெண்ணும் ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப் பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ சௌரிராசப் பெருமானையே கண்டு தொழுவதற்குச் சென்றாள். வண்டுகள் உலா வருகின்ற மலர்களைச் சூடியுள்ள கூந்தலை உடையவளாகிய இப்பேதைப் பெண்ணின் மணி போன்ற நிறத்தினைக் கொள்ளை கொண்டு சென்று அநீதி செய்திருப்பது உமக்குத் தகுதியுடையதாமோ என்று தாய் கூறிப் புலம்புகிறாள்.

முள்ளெயி றேய்ந்தில, கூழை முடிகொடா,
தெள்ளிய ளென்பதோர் தேசிலள் என்செய்கேன்,
கள்ளவிழ் சோலைக் கணபுரம் கைதொழும்
பிள்ளையை, பிள்ளையென் றெண்ணப் பெறுவரே? 1666

என் மகளாகிய இச்சிறு பெண்ணிற்கு இன்னமும் எல்லாப் பற்களும் முளைத்திருக்கவில்லை. இவளுடைய கூந்தலோ முடிவதற்கேற்ற வகையில் இன்னமும் வளரவில்லை. இவள் இன்னமும் ஓர் தெளிவு பெறாதவளாகவே இருக்கின்றாள். ஐயோ! நான் என்ன செய்வேன். மது நிரம்பப் பெற்ற மலர்கள் நிறையப் பெற்ற சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப் பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானையே தன்னிரு கரங்களாலும் தொழுது

Koviloor Digital Library

வணங்கிக் கொண்டிருக்கின்ற இப்பெண் பிள்ளையை ஓர் பிள்ளையென்று எண்ணுதல் என்பது இயையக் கூடிய ஒன்றாகுமோ!

*கார்மலி கண்ண புரத்தெம் அடிகளை,
பார்மலி மங்கையர் கோன்பர காலன்சொல்,
சீர்மலி பாட லிவைபத்தும் வல்லவர்,
நீர்மலி வையத்து நீடுநிற் பார்களே. 1667

(தெள்ளியீர் நீணிலா அருவி உண்ணும் கண்ணன் வடதரங்கம் தொண்டு முள் கார்-கரை.)

மேகக் கூட்டங்கள் நிறைந்துள்ள ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்ற எம்பெருமான் ஸ்ரீ சௌரிராசப் பெருமானைப் பற்றி, இப்பூமியில் பெரும்புகழ் கொண்ட திருமங்கை நகர்க்கரசனான பரகாலன் என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த சிறப்புமிக்க இப்பாசுரங்கள் பத்தினையும் நன்கு கற்று வல்லவர்களாக இருப்பவர்கள் நீர் நிறைந்துள்ள இப்பூமியில் நீண்ட நெடுங்காலம் வரை நிலைத்து நிற்பார்கள்.

3. கரையெடுத்த திருக்கண்ணபுரம்

கொச்சகக் கலிப்பா

*கரையெடுத்த சுரிசங்கும் கனபவளத் தெழுகொடியும்,
திரையெடுத்து வருபுனல்சூழ் திருக்கண்ண புரத்துறையும்,
விரையெடுத்த துழாயலங்கல் விறல்வரைத்தோள் புடைபெயர,
வரையெடுத்த பெருமானுக் கிழந்தேனென் வரிவளையே. 1668

ஆழ்நிலையிலிருந்து கரைக்குக் கொண்டு வந்திருக்கின்ற ஒளி வீசுகின்ற சங்குகளையும், பவழங்களின் கொடிகளையும் ஆகிய இவைகளைத் தள்ளிக் கொண்டு ஓடி வருகின்ற அலைவீசும் நீர் நிறைந்திருக்கின்ற காவிரி ஆற்றின் கரையில் நீரினால் சூழ்ந்திருக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் மணம்மிக்க திருத்துழாய் மாலையையணிந்த, மலையை ஒத்த திருத்தோள்கள் அமைந்துள்ள நிலையில் ''கோவர்த் தனகிரி'' என்னும் மலையினைத் தம் திருக்கரத்தினால் தூக்கிப் பசுக்களைப் பாதுகாத்தருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே ஸ்ரீ

Koviloor Digital Library

சௌரிராஜப் பெருமானாகக் காட்சி தந்தருள்கின்றான். இப்படிப் பட்ட ஸ்ரீ சௌரிராஜப் பெருமானுக்கே நான் என் கைவளையல்களை இழந்துவிட்டேன்.

அரிவிரவு முகில்கணத்தா னகில்புகையால் வரையோடும்,
தெரிவரிய மணிமாடத் திருக்கண்ண புரத்துறையும்,
வரியரவி னணைத்துயின்று மழைமதத்த சிறுதறுகண்,
கரிவெருவ மருப்பொசித்தாற் கிழந்தேனென் கனவளையே. 1669

கறுத்த நிறம் கொண்ட மேகக்கூட்டங்களும், அகில்புகை மிகுந்திருக்கின்ற காரணமாக மலைகளோ, மாடமாளிகைகளோ என்று அறிந்து கொள்ளாத அளவுக்கு உயர்ந்தோங்கியிருக்கின்ற அழகிய மணிமாடங்கள் நிறைந்திருக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் ''திருவனந்தாழ்வான்'' என்னும் பாம்புப் படுக்கையின்மீது திருக்கண் வளர்ந்தருள்கின்ற, சிறு கண்களைக் கொண்ட ''குவலயாபீடம்'' என்னும் மதயானையானது அஞ்சி அலறி ஓடும்படியாக, அதன் கொம்புகளை ஒடித்த எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானை எண்ணி எண்ணியே நான் என் கைகளிலுள்ள கனமான கை வளையல்களை இழந்துவிட்டேன்.

துங்கமா மணிமாட நெடுமுகட்டின் சூலிகை,போம்
திங்கள்மா முகில்துணிக்கும் திருக்கண்ண புரத்துறையும்,
பைங்கண்மால் விடையடர்த்துப் பனிமதிகோள் விடுத்துகந்த,
செங்கண்மா லம்மானுக் கிழந்தேனென் செறிவளையே. 1670

மிகச் சிறந்த 'இரத்தினம்' என்னும் மணிகள் நிறையப் பதிக்கப் பெற்ற உயர்ந்து ஓங்கிய மாடமாளிகைகளின் உச்சி மீதுள்ள 'சூலம்' என்னும் ஆயுதமானது அதற்கும் மேலே இயங்குகின்ற சந்திரனையும், மேகக்கூட்டங்களையும் ஊடுருவுகின்ற அளவிற்கு உயர்ந்துள்ள மாடமாளிகைகளைக் கொண்டுள்ள ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் பசுங்கண்களையுடைய எம்பெருமான் திருமால், எருதுகளை அடக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், குளிர்ச்சியினை நல்கிடும் சந்திரனுக்கு உண்டான நோயினைப் போக்கியருளிய செந்தாமரைக் கண்ணனான எம்பெருமான் ஸ்ரீசௌரிராஜப் பெருமானிடத்தே என் கைகளில் நிறைந்துள்ள வளையல்களை இழந்துவிட்டேன்.

Koviloor Digital Library

கணமருவு மயிலகவு கடிபொழில்சூழ் நெடுமறுகில்,
திணமருவு கனமதிள்சூழ் திருக்கண்ண புரத்துறையும்,
மணமருவு தோளாய்ச்சி யார்க்கப்போய், உரலோடும்
புணர்மருத மிறநடந்தாற் கிழந்தேனென் பொன்வளையே. 1671

கூட்டங் கூட்டமாகக் கூடியிருக்கும் மயில்கள் கூத்தாடுகின்ற சோலைகள் சூழ்ந்திருக்கின்ற நீண்ட பெரிய திருவீதிகளும், வலிமை மிக்க உறுதியான பொன்மயமான திருமதிள்களால் சூழ்ந்திருக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமான் என்னும் ஸ்ரீகண்ணபிரான் மணம் வீசுகின்ற தோள்களையுடைய யசோதைப் பிராட்டி கயிற்றினால் உரலுடன் சேர்த்துக் கட்டி வைக்க, அவ்வுரலுடன் இழுத்தபடியாக, இரண்டு மருதமரங்கள் அற்றுக் கீழே விழச் செய்து, அதன்மூலம் அம்மரவடிவில் வந்திருந்த அசுரர்களை அழித்தான். அப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானுக்கு என் கைகளிலுள்ள பொன்வளையல்களை இழந்து விட்டேன்.

வாயெடுத்த மந்திரத்தா லந்தணர்தம் செய்தொழில்கள்,
தீயெடுத்து மறைவளர்க்கும் திருக்கண்ண புரத்துறையும்,
தாயெடுத்த சிறுகோலுக் குளைந்தோடித் தயிருண்ட,
வாய்துடைத்த மைந்தனுக் கிழந்தேனென் வரிவளையே. 1672

அந்தணர்கள் தம் வாயினால் மந்திரங்களை ஓதி, வேள்வித் தீயினை வளர்த்துக் கொண்டிருக்கின்ற செயல்களின் காரணமாக மறைகளை ஓதிக் கொண்டு இருக்கும் ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம் பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமான் என்னும் ஸ்ரீகண்ணபிரான் தம் தாயார் அசோதைப்பிராட்டியார் தம் கையில் எடுத்துக் கொண்டுள்ள சிறிய கோலுக்கு அஞ்சி ஓடி ஒளித்துக் கொண்டு, தயிரை உண்டுவிட்ட, வாயைத் துடைத்துக் கொண்டான். இப்படிப்பட்ட மைந்தன் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானிடத்தில் என் கைகளிலுள்ள வளையல்களை இழந்துவிட்டேன்.

மடலெடுத்த நெடுந்தாழை மருங்கெல்லாம் வளர்பவளம்,
திடலெடுத்துச் சுடரிமைக்கும் திருக்கண்ண புரத்துறையும்,
அடலடர்த்தன் றிரணியனை முரணழிய அணியுகிரால்,
உடலெடுத்த பெருமானுக் கிழந்தேனென் ஒளிவளையே. 1673

Koviloor Digital Library

மடல்களைக் கொண்டிருக்கும் நெடிய தாழம்பூக்கள் நிறைந்து வளர்ந்திருக்கின்ற இடங்களில் பவழங்கள் மேடுகளில் படர்ந்து நிறைந்து ஒளி விடுகின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ சௌரிராசப் பெருமான் ''ஸ்ரீநரசிம்மர்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு, 'இரணியன்' என்னும் அசுரனைத் தன் கைகளின் நகங்களைக் கொண்டு மார்பினைப் பிளந்து இரு கூறுகளாக்கினான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானிடத்திலே என் கைகளிலுள்ள ஒளிமிக்க வளையல்களை இழந்துவிட்டேன்.

வண்டமரும் மலர்ப்புன்னை வரிநீழ லணிமுத்தம்,
தெண்டிரைகள் வரத்திரட்டும் திருக்கண்ண புரத்துறையும்,
எண்டிசையு மெழுசுடரு மிருநிலனும் பெருவிசும்பும்,
உண்டுமிழ்ந்த பெருமானுக் கிழந்தேனென் ஒளிவளையே. 1674

வண்டுகள் அமர்கின்ற மலர்கள் நிறைந்த புன்னை மரங்களின் நிழலில் தண்ணீரானது அலைகள் வீசுவதனால் வந்து சேர்கின்றன. அத்தண்ணீருடன் முத்துகளும் வந்து சேர்கின்றன. இப்படிப்பட்ட வளம்மிக்க ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமான், எட்டு திசைகளும், சூரியன், சந்திரன், பூமி, ஆகாயம் ஆகியவைகளும் கொண்ட அனைத்தினையும் முன்பு ஒரு சமயம் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் உண்டு பாதுகாத்துப் பின்பு அவைகளை உமிழ்ந்து காத்தருளினான். இத்தகைய எம்பெரு மானிடத்தில் என் கைகளிலுள்ள ஒளி வீசுகின்ற வளையல்களை இழந்துவிட்டேன்.

கொங்குமலி கருங்குவளை கண்ணாக, தெண்கயங்கள்
செங்கமல முகமலர்த்தும் திருக்கண்ண புரத்துறையும்,
வங்கமலி தடங்கடலுள் வரியரவி னணைத்துயின்ற,
செங்கமல நாபனுக் கிழந்தேனென் செறிவளையே. 1675

தெளிந்த நீர் நிரம்பிய குளங்களில் மணம் வீசுகின்ற கருநெய்தற் பூக்கள் கண்களாகவும், அக்குளங்களில் பூத்திருக்கின்ற செந்தாமரை மலர்கள் முகங்களாகவும் திகழ்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்ற, கப்பல்கள் நிறைந்து, உலவிக் கொண்டிருக்கும் திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருள்புரியும் செந்தாமரை மலரைத் தன் திருநாபியில் கொண்டிருக்கின்ற எம்பெருமான்

Koviloor Digital Library

ஸ்ரீசௌரிராசப் பெருமானிடத்தே என் கைகளில் அடர்த்தியாக இருக்கின்ற வளையல்களை இழந்துவிட்டேன்.

வாராளு மிளங்கொங்கை நெடும்பணைத்தோள் மடப்பாவை,
சீராளும் வரைமார்வன் திருக்கண்ண புரத்துறையும்,
பேராள னாயிரம்பே ராயிரவா யரவணைமேல்,
பேராளர் பெருமானுக் கிழந்தேனென் பெய்வளையே. 1676

'கச்சு' அணிந்த இளமுலைகளையும், பெரிய மூங்கிலை ஒத்த திருத்தோள்களையும், கொண்டுள்ள 'பாவை' போன்று விளங்குகின்ற பெரிய பிராட்டியார் தங்கியிருக்கின்ற பெருமையையுடைய பெரிய மலையைப் போன்ற திருமார்பினையுடைய, ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமான் எழுந்தருள்புரிகின்றான். அவன் ஆயிரம் திருநாமங்களைக் கொண்டு விளங்குகின்றான். மேலும் இந்த எம்பெருமான் ஆயிரம் முகங்களைக் கொண்டிருக்கின்ற திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருள்கின்றான். இத்தகைய பெருமைகள் பலவும் பெற்றுள்ள எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானிடத்திலே என் கைகளில் அணிந்துள்ள வளையல்களை இழந்துவிட்டேன்.

*தேமருவு பொழில்புடைசூழ் திருக்கண்ண புரத்துறையும்,
வாமனனை, மறிகடல்சூழ் வயலாலி வளநாடன்,
காமருசீர்க் கலிகன்றி கண்டுரைத்த தமிழ்மாலை,
நாமருவி யிவைபாட வினையாய நண்ணாவே. 1677

(கரை அரி துங்கம் கணம் வாய் மடல் வண்டு கொங்கு வாராளும் தேமருவு - விண்.)

தேன் நிறைந்திருக்கின்ற மலர்கள் மிக்கிருக்கின்ற சோலைகள் சூழ்ந்துள்ள ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானைப் பற்றி, ''வாமன அவதாரம்'' மேற்கொண்டருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப்பற்றி கடலால் சூழப்பட்ட வயல்களையுடைய வளமிக்க ''திருவாலி'' என்னும் நாட்டிற்குத் தலைவனாகிய, பலரும் விரும்பத்தக்கதான நற்குணங்களை உடைய 'கலிகன்றி' என்னும் திருமங்கை ஆழ்வார் ஆராய்ந்து அருளிச் செய்த இத்தமிழ்ப் பாசுரங்கள் பத்தினையும் தம் நாவினைக் கொண்டு பாடுபவர்களின் வினைகள் யாவும் அணுகாமல் நீங்கிவிடும்.

Koviloor Digital Library

4. விண்ணவர்தங்கள் திருக்கண்ணபுரம்

கொச்சகக் கலிப்பா

*விண்ணவர் தங்கள் பெருமான் திருமார்வன்,
மண்ணவ ரெல்லாம் வணங்கும் மலிபுகழ்சேர்,
கண்ண புரத்தெம் பெருமான் கதிர்முடிமேல்,
வண்ண நறுந்துழாய் வந்தூதாய் கோல்தும்பீ! 1678

கொம்புகளினிடையே திரிந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற தும்பியே! விண்ணுலகத் தேவர்கட்கெல்லாம் தலைவனாகத் திகழ்கின்ற எம்முடைய எம்பெருமான், திருமகள் தங்கி வாழ்ந்து கொண்டிருக்கின்ற திருமார்பினையுடைய எம்பெருமான், மண்ணுல கிலுள்ளவர்களெல்லோரும் வணங்கிப் போற்றுகின்ற பெரும்புகழ் பெற்றுள்ள எம்பெருமான் ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீ சௌரிராசப் பெருமானின் ஒளி பொருந்தியுள்ள திருமுடியின்மீது இருக்கின்ற வண்ணத்துடனும், மணத்துடன் விளங்குகின்ற திருத் துழாயின்மீது நன்கு அமர்ந்து, அதனால் ஏற்பட்ட நறுமணத்துடன் இங்கே வந்து நீ ஊதுதல் வேண்டும்.

வேத முதல்வன் விளங்கு புரிநூலன்,
பாதம் பரவிப் பலரும் பணிந்தேத்தி,
காதன்மை செய்யும் கண்ணபுரத் தெம்பெருமான்,
தாது நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ! 1679

கோல்களினிடையே திரிந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற தும்பியே! அனைத்து மறைகளுக்கும் தலைவனாகத் திகழ்ந்து கொண்டும், தன் திருமேனியில் பூணூல் அணிந்து கொண்டும், விளங்கும் எம்பெருமானின் திருவடிகளைப் போற்றிப் பக்தியுடன் தொழுது வணங்கும்படிக்கான பெருமைக்குரியவராகிய, ''திருக் கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமான் திருமுடிமீதுள்ள மகரந்தத் துகள்களும் நறுமணமும் மிக்க திருத்துழாயின்மீது அமர்ந்து, அதனால் கிடைக்கப் பெறுகின்ற நறுமணத்துடன் இங்கே வந்து நீ ஊதுதல் வேண்டும்.

Koviloor Digital Library

விண்டமல ரெல்லா மூதிநீ யென்பெறுதி,
அண்ட முதல்வ னமரர்க ளெல்லாரும்,
கண்டு வணங்கும் கண்ணபுரத் தெம்பெருமான்,
வண்டு நறுந்துழாய் வந்தூதாய் கோல்தும்பீ! 1680

கொம்புகளினிடையே திரிந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற தும்பியே! நீ நன்கு மலர்ந்த மலர்களிலெல்லாம் சென்று ஒலியை உண்டாக்குவதனால் பெற்றபேறுதான் என்னே! விண்ணுலகத் தேவர்களெல்லாரும் தலைவனாகவும், திருப்பரமபதத்திற்கும் தலைவனாகவும் விளங்கிக் கொண்டிருக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானின்மீது வண்டுகள் படிந்து மணம் வீசுகின்ற திருத்துழாயின்மீது அமர்ந்து அதனால் உண்டாகும் நறுமணத்துடன் இங்கே வந்து நீ ஊதுதல் வேண்டும்.

நீர்மலி கின்றதோர் மீனாயோ ராமையுமாய்,
சீர்மலி கின்றதோர் சிங்க வுருவாகி,
கார்மலி வண்ணன் கண்ணபுரத் தெம்பெருமான்,
தார்மலி தண்டுழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ! 1681

கொம்புகளினிடையே திரிந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற தும்பியே! நீர் நிறைந்திருக்கின்ற கடலில் ''மச்ச'' அவதாரம் மேற்கொண்டும், பின்பு ஒப்பற்ற ''கூர்ம'' அவதாரம் மேற்கொண்டும், சிறப்புமிக்க ''நரசிம்ம'' அவதாரம் மேற்கொண்டும், கறுத்த மேகங்கள் நிறைந்தாற் போன்ற நிறத்தைப் பெற்ற திருமேனியைக் கொண்டிருக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானின் திருமார்பில் சூடியுள்ள திருத்துழாய் மாலையிலுள்ள வாசனையில் படிந்து, அவ்வாசனையுடன் இங்கே வந்து நீ ஊதுதல் வேண்டும்.

ஏரார் மலரெல்லா மூதிநீ யென்பெறுதி,
பாரா ருலகம் பரவப் பெருங்கடலுள்,
காராமை யான கண்ணபுரத் தெம்பெருமான்,
தாரார் நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ! 1682

கொம்புகளினிடையே திரிந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற தும்பியே! அழகுமிக்க மலர்களிலெல்லாம் சென்று அமர்ந்து ஊதிப் பெற்ற பயன்தான் என்னே! உலகம் முழுவதும் பரவியுள்ள

Koviloor Digital Library

பெருங்கடலினுள்ளே பெரியதோர் ''ஆமை''யாகத் திருஅவதாரம் மேற்கொண்டு, ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானின் திருமார்பிலுள்ள நறுமணம் வீசுகின்ற திருத்துழாய் மாலையின்மீது படிந்து, அதனால் பெற்ற மணத்துடன் இங்கே வந்து நீ ஊதுதல் வேண்டும்.

மார்வில் திருவன் வலனேந்து சக்கரத்தன்,
பாரைப் பிளந்த பரமன் பரஞ்சோதி,
காரில் திகழ்காயா வண்ணன் கதிர்முடிமேல்,
தாரில் நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ! 1683

கொம்புகளினிடையே திரிந்து வாழ்ந்து கொண்டிருக்கும் தும்பியே! திருமகளைத் தம் திருமார்பில் தங்கி இருக்குமாறும், தன் வலது திருக்கரத்தில் ''திருவாழி'' என்னும் ஆயுதத்தினை ஏந்திக் கொண்டு, இப்பூமியை அண்டப்பித்தியிலிருந்து ''வராகம்'' என்னும் அவதாரம் மேற்கொண்டு குத்திக்கொணர்ந்து வந்து பாதுகாத்து அருளிய மேன்மையானவனாகி நின்றுள்ள எம்பெருமான் சோதி வடிவினனாகி, கறுப்பு நிறம் கொண்ட காயாம் பூ நிறம் பெற்றுள்ள திருமேனியையுடையவனாகித் ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம் பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானின் ஒளி வீசுகின்ற திருமுடியின் மீது சாற்றியுள்ள நறுமணம் வீசும் திருத்துழாய் மாலையின்மீது படிந்து, அதனால் பெற்ற மணத்துடன் இங்கே வந்து நீ ஊதுதல் வேண்டும்.

வாமனன் கற்கி மதுசூதன் மாதவன்,
தாமன்னு தாச ரதியாய தடமார்வன்,
காமன்றன் தாதை கண்ணபுரத் தெம்பெருமான்,
தாம நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ! 1684

கொம்புகளினிடையே திரிந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற தும்பியே! ''வாமன'' அவதாரம் மேற்கொண்டு, ''கல்கி'' அவதாரம் மேற்கொள்ளப் போகின்ற, மதுசூதனன், திருமகள் கேள்வன், தசரதச் சக்கரவர்த்தியின் திருமகன் ஆகிய எம்பெருமான் திருமால், அகன்ற திருமார்பினையுடைய மன்மதனின் தந்தையாகத் திகழ்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ சௌரிராசப் பெருமான்

Koviloor Digital Library

திருமார்பின்மீது சாற்றியுள்ள நறுமணம் மிக்க திருத்துழாய் மாலையின்மீது படிந்து, அதனால் உண்டாகும் நறுமணத்துடன் இங்கே வந்து நீ ஊதுதல் வேண்டும்.

நீல மலர்கள் நெடுநீர் வயல்மருங்கில்,
சால மலரெல்லா மூதாதே, வாளரக்கர்
காலன் கண்ணபுரத் தெம்பெருமான் கதிர்முடிமேல்,
கோல நறுந்துழாய் கொண்டூதாய் கோல்தும்பீ! 1685

கொம்புகளினிடையே திரிந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற தும்பியே! நீ நீர் நிரம்பிய நீண்ட வயல்களின் இடையிலும், நீலமலர் களிலும், இன்னமும் இருக்கின்ற அனைத்து வகை மலர்களிலும் சென்று படிந்திருந்து ஊதிக் கொண்டிருக்க வேண்டாம். வாளேந்திய அரக்கர்கட்கெல்லாம் இயமனாகத் திகழ்ந்திருக்கும் ''திருக்கண்ண புரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானின் ஒளி வீசுகின்ற திரு முடியின்மீது அணிந்துள்ள அழகிய நறுமணம் கொண்ட திருத்துழாய் மாலையின்மீது படிந்து, அதனால் உண்டான நறுமணத்துடன் இங்கே வந்து நீ ஊதுதல் வேண்டும்.

நந்தன் மதலை நிலமங்கை நல்துணைவன்,
அந்த முதல்வன் அமரர்கள் தம்பெருமான்,
கந்தம் கமழ்காயா வண்ணன் கதிர்முடிமேல்,
கொந்து நறுந்துழாய் கொண்டூதாய் கோல்தும்பீ! 1686

கொம்புகளினிடையே திரிந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற தும்பியே! நந்தகோபரின் திருமகனாய் இருந்து, பூமிப்பிராட்டியாரின் நல்ல துணைவராகவும் இருந்து கொண்டு, இந்த உலகங்கட்கெல்லாம் முதல்வனாகவும் இருந்து கொண்டு, விண்ணுலகத் தேவர்கட் கெல்லாம் தலைவனாகவும் இருந்து விளங்குகின்ற, நறுமணம் வீசிக் கொண்டிருக்கும் காயாம்பூ நிறம் கொண்ட திருமேனியை உடைய ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானின் ஒளி வீசுகின்ற திருமுடியின்மீது சாற்றியுள்ள நறுமணமிக்க திருத்துழாய் மாலையின்மீது படிந்து, அதனால், உண்டான நறுமணத்துடன் இங்கே வந்து நீ ஊதுதல் வேண்டும்.

Koviloor Digital Library

✱வண்டமருஞ் சோலை வயலாலி நன்னாடன்,
கண்டசீர் வென்றிக் கலிய னொலிமாலை,
கொண்டல் நிறவண்ணன் கண்ண புரத்தானை,
தொண்டரோம் பாட நினைந்தூதாய் கோல்தும்பீ! 1687

(விண் வேத விண்ட நீர் ஏரார் மார்வில் வாமனன் நீல நந்தன் வண்டமர் - தந்தை. தார்மன்னு என்பது பாடம். தா - வலிமை)

வண்டுகள் நிறைந்து படிந்திருக்கின்ற மலர்கள் நிறைந்துள்ள சோலைகளையுடைய ''திருவாலி'' என்னும் நன்னாட்டின் மன்னன், நற்குணங்களுடன் கூடிய வெற்றிகள் மிக்க ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் மேகம் போன்ற நிறம் கொண்ட திருமேனியை யுடைய ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானைப் பற்றி அருளிச் செய்த ஒலிமிக்க இச்சொல் மாலை யாகிய பாசுரங்கள் பத்தினையும் தொண்டர்களாகிய அடியோங்கள் பாடும்படியாக நீ உன் மனத்தில் கொண்டு ஊதுதல் வேண்டும்.

5. தந்தை காலில்
திருக்கண்ணபுரம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*தந்தை காலில் விலங்கறவந்து
தோன்றிய தோன்றல்பின், தமியேன்றன்
சிந்தை போயிற்றுத் திருவருள்
அவனிடைப் பெறுமள விருந்தேனை,
அந்தி காவல னமுதுறு
பசுங்கதி ரவைசுட அதனோடும்,
மந்த மாருதம் வனமுலை
தடவந்து வலிசெய்வ தொழியாதே! 1688

தன் தந்தையாரான வசுதேவரின் கால்களில் பூட்டியிருந்த விலங்கானது அற்றுப் போகும்படி செய்வதன் பொருட்டுத் திரு அவதாரம் மேற்கொண்டருளிய ஸ்ரீகண்ணபிரான், அவ்விலங்கினை அறுத்தெறிந்த அக்கண்ணபிரானின் பின்னே தனியளாக இருந்து தவித்துக் கொண்டிருக்கின்ற என்னுடைய எண்ணமெல்லாம் சென்றுவிட்டது. அவனுடைய திருவருளைப் பெறும் காலமளவும்

Koviloor Digital Library

காத்துக் கொண்டிருக்கின்ற என்னை மாலைப் போதின் இறுதி நேரத்தில் ஒளி விசுகின்ற தலைவனாகிய சந்திரனின் 'அமுது' என்னத்தகும் பசுமை மிக்க ஒளியானது சுட்டுக் கொண்டிருக்கின்றன. அவ்வெப்பத்துடன் சேர்ந்து கொண்ட தென்றல் காற்றும் என் அழகிய முலைகளின்மீது அனல் காற்றாக வீசி இடைவிடாமல் என்னைத் துன்புறுத்துவதினின்றும் ஓய்ந்திருப்பதில்லை.

மாரி மாக்கடல் வளைவணற்
கிளையவன் வரைபுரை திருமார்பில்,
தாரி னாசையில் போயின
நெஞ்சமும் தாழ்ந்ததோர் துணைகாணேன்,
ஊரும் துஞ்சிற்று உலகமும்
துயின்றது ஒளியவன் விசும்பியங்கும்,
தேரும் போயிற்றுத் திசைகளும்
மறைந்தன செய்வதொன் றறியேனே! 1689

மேகநிறத்தினையும், கடல் நிறத்தினையும் ஒத்த நிறத்தினனாகிய பலராமன் சங்கு போன்ற வெண்மை நிறத்தினையும் ஒத்தவனாகத் திகழ்கிறான். இத்தன்மையனான பலராமனுக்குப் பின்பு தோன்றிய ஸ்ரீகண்ணபிரானின் திருமார்பில் அணிந்துள்ள மாலையினிடத்துச் செல்ல என் மனம் ஆசைப்பட்டதனால் சென்றது. அவ்வாறு சென்ற என் மனம் மீண்டும் திரும்பி வருவதற்குத் தாமதம் செய்து அங்கேயே தங்கிவிட்டது. அங்ஙனம் தங்கிவிட்ட என் மனத்திற்குத் துணையாக ஒருவரும் இல்லை. இந்நிலையில் இந்த ஊரும் உறங்கிற்று, இந்த உலகமும் உறங்கிற்று. ஆகாயத்தில் இயங்கிக் கொண்டிருக்கின்ற சூரியனும், அவன் செல்லுகின்ற தேரும் மறைந்துவிட்டன. திசைகளும் இன்னது என்று தெரியாத அளவுக்கு மறைந்துவிட்டன. இந்நிலையில் நான் செய்யத்தக்கது இன்னது என்று ஒன்றும் அறியாதவளாகி இருக்கின்றேனே.

ஆயன் மாயமே யன்றிமற்
றென்கையில் வளைகளும் இறைநில்லா,
பேயின் ஆருயி ருண்டிடும்
பிள்ளைநம் பெண்ணுயிர்க் கிரங்குமோ,
தூய மாமதிக் கதிர்சுடத்
துணையில்லை இணைமுலை வேகின்றதால்,
ஆயன் வேயினுக் கழிகின்ற
துள்ளமும் அஞ்சேலென் பாரிலையே! 1690

Koviloor Digital Library

ஸ்ரீகண்ணபிரானிடத்தினிலே வஞ்சனை மிக்க செயல்களேயன்றி வேறு என்ன இருக்கின்றது? என் கைகளிலுள்ள வளையல்களும் ஒரு நொடிப் பொழுதுகூட நிற்பதில்லை. ''பூதனை'' என்னும் வஞ்சகப் பேயின் நஞ்சு கலந்த பாலை அருந்தியதன்மூலம் அவள் உயிரை உண்ட சிறுபிள்ளையாகிய கண்ணபிரான் பெண்ணாகப் பிறந்த என் உயிரின்மீது இரக்கம் கொண்டிருப்பானோ? தூய்மையான வெண்மை நிறமும் குளிர்ச்சியும் கொண்ட சந்திரனின் ஒளிக் கிரணங்கள்கூட என் மனதினைச் சுடுகின்றன. அதன் பொருட்டுத் துணையாக ஒருவரும் இல்லை. அந்தச் சந்திரனின் ஒளிக்கிரணங்கள் சுடுவதனால் என்னுடைய இணையான இரண்டு முலைகளும் வெந்து கொண்டு இருக்கின்றன. ஆயனாகிய ஸ்ரீகண்ணபிரானுடைய வேய்ங்குழல் ஓசைக்கு ஈடுபட்டு என் உள்ளமும் அழிகின்றது. இந்நிலையில் இருக்கின்ற என்னைக் கண்டு ''பயப்படாதே'' என்று ஆறுதல் கூறித் தேற்றுபவர்கள் யாவருமில்லை.

கயங்கொள் புண்தலைக் களிறுந்து
வெந்திறல் கழல்மன்னர் பெரும்போரில்,
மயங்க வெண்சங்கம் வாய்வைத்த
மைந்தனும் வந்திலன், மறிகடல்நீர்
தயங்கு வெண்திரைத் திவலைநுண்
பனியென்னும் தழல்முகந் திளமுலைமேல்,
இயங்கு மாருதம் விலங்கிலென்
ஆவியை எனக்கெனப் பெறலாமே! 1691

இரத்தமும் சீழும் சேர்ந்து குளம் போன்று என்றும் குறையாமலிருக்கும் புண்கள் நிறைந்திருக்கின்ற தலைகளையுடைய யானைகள் மீதேறிப் போரிடுகின்ற அரசர்களெல்லாரும் கலங்கும் படியாகப் பாரதப் போரின்போது, வெண்சங்கினைத் தம் திருவாயில் வைத்து ஊதிய ஸ்ரீகண்ணபிரான் இன்னமும் என்னிடத்தே வந்து சேரவில்லை. கடல் அலைகள் வீசிக் கொண்டிருக்கும்போது கரையில் மோதுவதனால் உண்டாகின்ற பனித்திவலைகளும் எனக்கு நெருப்பு போன்று சுடுகின்றன. அவைகளுடன் தெற்கேயிருந்து வந்து இயங்கிக் கொண்டிருக்கின்ற தென்றல் காற்றும் என் இளமையான முலைகளின்மீது பட்டு கொதிக்கின்றதே. இந்தத் தென்றல் காற்று வீசாமல் திரும்பினால்தான் என் உயிரினை எனக்குரியது என்று எண்ணி அடையலாம் போன்று தோன்றுகின்றது.

Koviloor Digital Library

ஏழு மாமரம் துளைபடச்
சிலைவளைத் திலங்கையை மலங்குவித்த
ஆழி யான்,நமக் கருளிய
அருளொடும் பகலெல்லை கழிகின்றதால்,
தோழி! நாமிதற் கென்செய்தும்?
துணையில்லை சுடர்படு முதுநீரில்,
ஆழ ஆழ்கின்ற ஆவியை
அடுவதோர் அந்திவந் தடைகின்றதே! 1692

ஸ்ரீஇராமபிரான் சுக்ரீவனுக்குத் தன் பலத்தை வெளிப்படுத்திக் காட்டும் பொருட்டு ஏழு மராமரங்களை ஒரே அம்பினால் துளைத்தெடுத்த வில்லின் ஆற்றலினால் பின்பு இலங்கை மாநகரைக் கலங்கச் செய்தான். இராமபிரானின் ''திருவாழி'' என்னும் மோதிரம் காரணமாக நான் துவண்டு போனேன். அத்தகைய இராமபிரான் நமக்கு அருளிச் செய்த பேரருளோடு கூடி, பகல் பொழுதும் கடந்துவிட்டது. தோழீ! இன்றைய இப்படிப்பட்ட நிலைமைக்கு இனி நாம் என்ன செய்வோம். நமக்கு என்று ஒரு துணையும் கிடையாது. ஒளி வீசுகின்ற சூரியனானவன் தான் தோன்றிய கடலினுள்ளே மறைந்துவிட்டான். இத்தகைய அந்திப்போது என்பது என் உயிரைப் பறித்துக் கொள்வதற்கென்றே தோன்றியிருக்கிறது.

முரியும் வெண்திரை முதுகயம்
தீப்பட முழங்கழ லெரியம்பின்,
வரிகொள் வெஞ்சிலை வளைவித்த
மைந்தனும் வந்திலன் என்செய்கேன்,
எரியும் வெங்கதிர் துயின்றது
பாவியேன் இணைநெடுங் கண்துயிலா,
கரிய நாழிகை ஊழியில்
பெரியன கழியுமா றறியேனே! 1693

கிளர்ந்தெழுகின்ற வெண்மை நிறம் கொண்ட அலைகள் வீசுகின்ற கடல்நீரும் தீப்படும்படியாக, நெருப்பைக் கக்குகின்ற அம்புகளைக் கொண்டுள்ள கொடிய வில்லை வளைத்துத் தொடுத்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானும் இன்னமும் வரவில்லை. ஆகையால், இனி நான் என்ன செய்வேன்? இங்கு வெம்மைமிக்க ஒளி வீசுகின்ற சூரியனும் மறைந்துவிட்டான். பாவியேனுடைய இணையான நீண்ட கண்கள் உறக்கம் கொள்ளவில்லை. ஊழிக் காலத்தைக் காட்டினும் நீண்ட கரிய இரவுக் காலத்து நாழிகைகள்

Koviloor Digital Library

கழிவது எங்ஙனம் என்பதை அறிந்து கொள்ள இயலாதவளாக இருக்கின்றேன்.

கலங்க மாக்கடல் கடைந்தடைத்
திலங்கையர் கோனது வரையாகம்,
மலங்க வெஞ்சமத் தடுசரம்
துரந்தவெம் மடிகளும் வாரானால்,
இலங்கு வெங்கதி ரிளமதி
யதனொடும் விடைமணி யடும்,ஆயன்
விலங்கல் வேயின தோசையு
மாயினி விளைவதொன் றறியேனே! 1694

''திருமகள்'' என்னும் பிராட்டியாரை அடையும் பொருட்டுப் பரந்து கிடக்கின்ற இப்பெரிய கடல் கலங்கிப் போகும்படியாகக் கடைந்தான். அந்தக் கடலின்மீது அணைகட்டியதன்மூலம் அக்கடல் நீரை அடைத்துவிட்டுச் சீதையை மீட்டுப் பெறும் பொருட்டு இலங்கை நகர்க்கரசனான இராவணனின் மலை போன்ற மார்பு பிளந்து அதிர்ந்து வருந்தும்படியாகக் கொடிய போர்க்களத்தினில், கொடுமையான அம்பினைச் செலுத்திய எம்பெருமான் ஸ்ரீஇராம பிரானும் இன்னமும் வரவில்லை. ஐயகோ! வெம்மையான ஒளிக் கிரணங்களை வீசுகின்ற இளமையான நிலவொளியும், அதனோடு கூடிய காளைமாட்டின் மணி ஓசையும் ஆகிய இவைகள் யாவும் ஒன்று சேர்ந்து என் உயிரைக் குலைக்கின்றன. ஆயனாகிய ஸ்ரீகண்ண பிரானின் வேய்ங்குழல் ஓசையும் என்னைத் துன்புறுத்துகின்றது. இனி இதற்கும் மேல் என்னென்ன செயல்கள் உண்டாகும் என்பதை என்னால் அறிந்து கொள்ள இயலாதவளாக இருக்கின்றேனே.

முழுதிவ் வையகம் முறைகெட
மறைதலும் முனிவனும் முனிவெய்தி,
மழுவி னால்மன்னர் ஆருயிர்
வவ்விய மைந்தனும் வாரானால்,
ஒழுகு நுண்பனிக் கொடுங்கிய
பேடையை யடங்கவஞ் சிறைகோலி,
தழுவு நள்ளிருள் தனிமையிற்
கடியதோர் கொடுவினை யறியேனே! 1695

இவ்வுலகம் முழுவதும் இருக்கின்ற உலக நடைமுறையானது குலைந்து மாறுபட்டதனால் பெருஞ்சினம் கொண்ட ''ஜமதக்கினி''

Koviloor Digital Library

என்னும் முனிவருக்காக ''மழு'' என்னும் ஆயுதத்தினை ஏந்தி அரசர்களையெல்லாம் அழித்தொழித்த பரசுராமர் கூட இன்னும் வரவில்லையே! பெருகிக் கொண்டிருக்கின்ற நிலையில் ஓடி வருகின்ற, நுண்மையான - மென்மையான பனியின் காரணமாகத் தான் அடங்கி ஒடுங்கிக் கொண்டிருக்கின்ற பெண் பறவையை ஆண்பறவையானது தன் சிறகுகளின் கீழே அணைத்துத் தழுவிக் கொள்கின்ற இத்தகைய நள்ளிரவு நள்ளிருளில் நான் தனியாக இருப்பது என்பது மிகவும் கொடுமையாக இருக்கின்றது. இப்படிப் பட்ட கொடிய வினைகளைப் பற்றி அடியேன் அறிந்து கொள்ள இயலாமல் இருக்கின்றேன்.

கனஞ்செய் மாமதிள் கணபுரத்
　　தவனொடும் கனவினி லவன்தந்த,
மனஞ்செ யின்பம்வந் துள்புக
　　வெள்கியென் வளைநெக இருந்தேனை,
சினஞ்செய் மால்விடைச் சிறுமணி
　　ஓசையென் சிந்தையைச் சிந்துவிக்கும்,
அனந்த லன்றிலின் அரிகுரல்
　　பாவியே னாவியை யடுகின்றதே! 1696

உறுதிப்பாட்டுடன் கூடிய கனமான பெரிய பெரிய மதிள்களைக் கொண்டு விளங்கும் ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானுடன் கனவுக் காலத்தில் அடியேன் பெற்ற மனத்தின் இன்பமானது மீண்டும் என் உள்ளத்தினுள்ளே புகுந்து கொள்ள அதன் காரணமாக அடியேன் வெட்கமடைந்து என் கைகளிலுள்ள வளையல்கள் கழன்று போகும்படிச் செய்துவிட்ட அடியேனைக் கோபம் கொண்ட பெரிய காளையினுடைய சிறிய மணியின் ஓசையானது என் உள்ளத்தினைச் சிதறச் செய்கின்றது. இதற்கும் மேலாகத் தூக்கத்தின்போது தழுதழுத்த குரலில் பேசுகின்ற ''அன்றில்'' என்னும் பறவையின் குரலும் பாவியேனாகிய என் உயிரை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கிறது.

*வார்கொள் மென்முலை மடந்தையர்
　　தடங்கடல் வண்ணனைத் தாள்நயந்து,
ஆர்வத் தாலவர் புலம்பிய
　　புலம்பலை அறிந்துமுன் உரைசெய்த,

Koviloor Digital Library

கார்கொள் பைம்பொழில் மங்கையர்
காவலன் கலிகன்றி யொலிவல்லார்,
ஏர்கொள் வைகுந்த மாநகர்
புக்கிமை யவரொடும் கூடுவரே! 1697

(தந்தை மாரி ஆயன் கயம் ஏழு முரி கலங்க முழுது கனஞ் செய்வார்கொள் - தொண்டீர்.)

'கச்சு' அணிந்த மென்மையான முலைகளைக் கொண்டுள்ள பெண்கள் கடல் நிறத்தினை உடைய எம்பெருமான் ஸ்ரீ சௌரிராசப் பெருமானின் திருவடிகளை அடைய ஆசைப்பட்ட, அதனால் உண்டான காதல் காரணமாகப் புலம்பிய புலம்பலின் செயல் பாடுகளை அறிந்து வைத்து, தலைவி கூற்றாக மேகங்கள் சூழ்ந்த பரந்த பசுஞ்சோலைகளைக் கொண்டிருக்கின்ற 'திருமங்கை' என்னும் நகர்க்கு மன்னனாகிய 'கலிகன்றி' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்களை ஒலியுடன் கூடிப் பாடுவதில் வல்லவர்கள் சிறப்புமிக்க ''திருப்பரமபதம்'' என்னும் விண்ணுலகு சென்று அங்குள்ள தேவர்களுடன் வாழ்வார்கள்.

6. தொண்டீர்
திருக்கண்ணபுரம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*தொண்டீர்! உய்யும் வகைகண்டேன்
துளங்கா அரக்கர் துளங்க,முன்
திண்டோள் நிமிரச் சிலைவளையச்
சிறிதே முனிந்த திருமார்பன்,
வண்டார் கூந்தல் மலர்மங்கை
வடிக்கண் மடந்தை மாநோக்கம்
கண்டாள், கண்டு கொண்டுகந்த
கண்ண புரம்நாம் தொழுதுமே. 1698

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்குத் தொண்டுகள் பலவும் செய்து கொண்டிருக்கின்ற திருத்தொண்டர்களே! அடியேன் உய்வ தற்கு உரிய வழிவகைகளைக் கண்டு கொண்டேன். முற்காலத்தில் ஒரு நாளும் நடுக்கம் என்பதை அறியாத அரக்கர்களும் அஞ்சி நடுங்கும் படியாக, அவர்களின் உறுதிமிக்க தோள்கள் நிமிரும்படியாக வில்லை

Koviloor Digital Library

வளைக்கும் படிக்குச் சிறிதே சினந்து கொண்ட எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் அவ்வரக்கர்களை அழித்தான். திருமகள் தங்கி வாழ்கின்ற திருமார்பினைக் கொண்டுள்ள எம்பெருமான் வண்டுகள் வந்து தங்கியிருக்கும் மலர்களைச் சூடியுள்ள கூந்தலையுடைய ''திருமகள்'' என்னும் பெரிய பிராட்டியினுடனும், கூர்மையான கண் களைப் பெற்ற பூமிப் பிராட்டியாருடனும் ஆகிய இவ்விருபிராட்டி மார்களின் கடைக்கண் பார்வையை அனுபவித்துக் கொண்டு, அவர்களுடன் சேர்ந்திருக்க முடிவு செய்துள்ள எம்பெருமான் ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளப் பெற்றுள்ள ஸ்ரீசௌரிராசப் பெருமானிடம் நாம் சென்று வணங்கித் தொழுது வழிபடுவோமாக!

பொருந்தா அரக்கர் வெஞ்சமத்துப்
பொன்ற அன்று புள்ளூர்ந்து,
பெருந்தோள் மாலி தலைபுரளப்
பேர்ந்த அரக்கர் தென்னிலங்கை,
இருந்தார் தம்மை யுடன்கொண்டங்
கெழிலார் பிலத்துப் புக்கொளிப்ப,
கருந்தாள் சிலைகைக் கொண்டானூர்
கண்ண புரம்நாம் தொழுதுமே. 1699

முன்பொரு காலத்தில் இவ்வுலகின் இயல்பான வாழ்க்கை முறைகட்குப் பொருந்தாத அளவில் வாழ்ந்து வருகின்ற அரக்கர்கள் அழிந்து போகும்படிக்குக் கருடாழ்வார்மீது ஊர்ந்து சென்று மாலியின் தலையானது புரளும்படியாகச் செய்தற் பொருட்டுத் தன் திருக்கரத்தில் வில்லை ஏந்தினான் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான். அவனைத் தவிர ஏனைய அரக்கர்களும், இலங்கையில் இருந்த பிற அரக்கர்களும் ஒருங்கு சேர்ந்து கொண்டு பாதாளம் சென்று மறைந்துவிட்டனர். அந்த அளவுக்கு மறையச் செய்யுமாறும் வில்லைத் தன் திருக்கரத்தில் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் தங்கி இருப்பதற்கு ஏற்ற இருப்பிடமாகக் கொண்டுள்ள திருத்தலமாகிய திருக்கண்ணபுரம் சென்று வணங்கித் தொழுது வழிபடுவோமாக!

வல்லி யிடையாள் பொருட்டாக
மதிள்நீ ரிலங்கை யார்கோவை,
அல்லல் செய்து வெஞ்சமத்துள்
ஆற்றல் மிகுத்த ஆற்றலான்,

Koviloor Digital Library

வல்லாள் அரக்கர் குலப்பாவை
வாட முனிதன் வேள்வியை,
கல்விச் சிலையால் காத்தானூர்
கண்ண புரம்நாம் தொழுதுமே. 1700

கொடி போன்ற மென்மையான இடையையுடைய சீதாபிராட்டியின் பொருட்டு ஸ்ரீஇராமபிரான் கடல்நீரை அகழியாகக் கொண்ட அரணாகவும், மதிள்கள் நிறைந்துள்ள மற்றோர் அரணாகவும் கொண்டு விளங்குகின்ற இலங்கை மாநகர்க்கு அரசனாகிய இராவணனைக் கொடிய போர்க்களத்தில் தாக்கித் துன்புறுத்தித் தன் ஆற்றலை வெளிப்படுத்தி அழித்தான். இத்தகைய இராமபிரான் அவ்வரக்கர்கள் குலத்தில் தோன்றி யாவரையும் துன்புறுத்திக் கொண்டிருந்த 'தாடகை' என்னும் அரக்கியை விசுவாமித்திரரின் கட்டளைக்கிணங்கத்தான் கற்ற கல்வியின் பயனாகிய வில்வித்தையைக் கொண்டு கொன்று அம்முனிவரின் யாகத்தைச் சிறப்பாக நடத்துவதற்குத் தடையேதுமில்லாதவாறு பாதுகாத்தருளினான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் விரும்பி ஏற்றுத் தங்கியிருக்கும் திருத்தலம் என்னும் ''திருக்கண்ணபுரம்'' சென்று ஸ்ரீஇராமபிரானை வணங்கித் தொழுது வழிபடுவோமாக!

மல்லை முந்நீ ரதர்பட
வரிவெஞ் சிலைகால் வளைவித்து,
கொல்லை விலங்கு பணிசெய்யக்
கொடியோன் இலங்கை புகலுற்று,
தொல்லை மரங்கள் புகப்பெய்து
துவலை நிமிர்ந்து வானணவ,
கல்லால் கடலை யடைத்தானூர்
கண்ண புரம்நாம் தொழுதுமே. 1701

கொடுமைகளையே உண்டாக்கிக் கொண்டிருக்கின்ற இராவணனின் இலங்கை நகருக்குள் செல்லும் பொருட்டு இராமபிரான் கடலில் உள்ள நீரை வற்றச் செய்வதற்காகத் தன் வில்லை வளைத்தான். இராமபிரானுக்குத் துணையாகக் காட்டிலே இருக்கின்ற வானர வீரர்கள் கடலின்மீது அணைகட்டுவதற்கு வேண்டி பணிகள் பலவற்றைச் செய்யும் வகையில் அங்குள்ள பழைய மரங்களைக் கொண்டு வந்து கடலில் போட்டனர். மேலும் அக்கடலின் நீர்த்திவலைகள் கிளர்ந்தெழுந்து விண்ணை அளாவும்படியாக மலைகளைக் கொண்டு வந்து

Koviloor Digital Library

சேர்த்துச் சேது அணைகட்டினான். இத்தகைய இராமபிரான் விரும்பி ஏற்று எழுந்தருளிய திருத்தலம் ''திருக்கண்ணபுரம்'' என்பதாகும். அந்தத் திருத்தலம் சென்று இராமபிரானை வணங்கித் தொழுது வழிபடுவோமாக!

ஆமை யாகி அரியாகி
அன்ன மாகி, அந்தணர்தம்
ஓம மாகி ஊழியாய்
உலகு சூழ்ந்த நெடும்புணரி,
சேம மதிள்சூ ழிலங்கைக்கோன்
சிரமும் கரமும் துணித்து,முன்
காமற் பயந்தான் கருதுமூர்
கண்ண புரம்நாம் தொழுதுமே. 1702

''ஆமை'' என்னும் அவதாரம் மேற்கொண்டும், ''நரசிம்மம்'' என்னும் அவதாரம் மேற்கொண்டும், ''அன்னம்'' என்னும் அவதாரம் மேற்கொண்டும், அந்தணர்கள் வளர்க்கின்ற வேள்வித் தீயாகவும் இருந்து கொண்டும், உலகப் பிரளய காலத்தில் இருந்து கொண்டும் இருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அலைகள் மிக்க கடலினால் சூழ்ந்து, பாதுகாப்பான மதிள்கள் சூழ்ந்திருக்கின்ற இலங்கை நகர்க்கு அரசனான 'இராவணன்' என்னும் அரக்கனின் தலை களையும், கரங்களையும் ''இராமபிரான்'' அவதாரம் மேற்கொண்டு இருந்த காலத்தில் அறுத்தொழித்தான். இதற்கும் முன்பாக மன்மதனை மகனாகப் பெற்றான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் தான் தங்கியிருப்பதற்கு ஏற்ற இடமாகத் தன் மனத்தே கருதிய திருத்தலம் ''திருக்கண்ணபுரம்'' என்பதாகும். நாம் அங்குச் சென்று ஸ்ரீசௌரி ராசப் பெருமானை வணங்கித் தொழுது வழிபடுவோமாக!

வருந்தா திருநீ மடநெஞ்சே!
நம்மேல் வினைகள் வாரா,முன்
திருந்தா அரக்கர் தென்னிலங்கை
செந்தீ யுண்ணச் சிவந்தொருநாள்,
பெருந்தோள் வாணற் கருள்புரிந்து
பின்னை மணாள னாகி,முன்
கருந்தாள் களிறொன் றொசித்தானூர்
கண்ண புரம்நாம் தொழுதுமே. 1703

Koviloor Digital Library

தெளிவற்ற மனமே! நீ வருத்தம் கொள்ளாதிருப்பாயாக! நம்மீது பாவங்கள் வந்து சேராது என்ற நம்பிக்கையின் பொருட்டு அவ்வாறு கூறுகிறேன். அஃது எவ்வாறெனின் முன்பு ஒரு சமயம் ''இராம பிரான்'' அவதாரம் மேற்கொண்டு இருந்த காலத்தில் தெற்கேயுள்ள இலங்கை மாநகரில் இருந்த திருந்தியிராத அரக்கர்களை அழிக்கும் பொருட்டு அந்த இலங்கை நகரத்தினையே தீக்கிரையாக்கினான். பின்பு ஒரு காலத்தில் பெரிய தோள்களையுடைய வாணாசுரன் என்பவனின் இரண்டு கைகளை மட்டும் விட்டு வைத்தருளிய ஸ்ரீகண்ணபிரான் 'குவலயாபீடம்' என்னும் யானையைக் கொன்றான். நப்பின்னைப் பிராட்டியின் நாயகனாகத் திகழும் ஸ்ரீகண்ணபிரான் தங்கியிருப்பதற்கு ஏற்ற இருப்பிடமாக விரும்பி ஏற்று, எழுந்தருளிய திருத்தலம் ''திருக்கண்ணபுரம்'' என்பதாகும். இத்தகைய திருத்தலம் சென்று ஸ்ரீசௌரிராசப் பெருமானை வணங்கித் தொழுது வழிபடுவோமாக!

இலையார் மலர்ப்பூம் பொய்கைவாய்
முதலை தன்னால் அடர்ப்புண்டு,
கொலையார் வேழம் நடுக்குற்றுக்
குலைய அதனுக் கருள்புரிந்தான்,
அலைநீ ரிலங்கைத் தசக்கிரீவற்
கிளையோற் கரசை யருளி,முன்
கலைமாச் சிலையால் எய்தானூர்
கண்ண புரம்நாம் தொழுதுமே. 1704

இலைகளும், மலர்களும் படர்ந்து அடர்ந்திருக்கின்ற பொய்கை ஒன்றில் முதலை ஒன்றினால் அகப்பட்டுத் துன்புற்ற கொலைத் தொழிலை இயல்பாக உள்ள யானையானது ''ஆதிமூலமே!'' என்றழைக்க, அந்த யானைக்கு உண்டான துன்பத்தைப் போக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், இராம அவதாரத்தின்போது அலைவீசிக் கொண்டிருக்கின்ற கடலையுடைய இலங்கை நகரின் மன்னனாகிய இராவணனின் இளவலாகிய வீடணனுக்கு அந்நாட்டு அரசினை அளித்தருளினான். அதற்கும் முன்பே அழகிய மான் வடிவில் வந்த மாரீசன் என்னும் அரக்கனைத் தன் ஒரு வில்லாலே அம்பினை விடுத்துக் கொன்றான். இத்தகைய பெருமைகளைக் கொண்டுள்ள ஸ்ரீஇராமபிரான் விரும்பி ஏற்று எழுந்தருள்புரியும் திருத்தலம் ''திருக்கண்ணபுரம்'' என்பதாகும். இத்தகைய திருத்

Koviloor Digital Library

தலத்திற்குச் சென்று ஸ்ரீசௌரிராசப் பெருமானை வணங்கித் தொழுது வழிபடுவோமாக!

மாலாய் மனமே! அருந்துயரில்
வருந்தா திருநீ, வலிமிக்க
காலார் மருதும் காய்சினத்த
கழுதும் கதமாக் கழுதையும்,
மாலார் விடையும் மதகரியும்
மல்லர் உயிரும் மடிவித்து,
காலால் சகடம் பாய்ந்தானூர்
கண்ண புரம்நாம் தொழுதுமே. 1705

என் மனமே! நீ மயக்கம் கொண்டு இருக்க வேண்டாம். மேலும் நீ பெருந்துயரங்கள் உண்டான போதும் வருத்தம் கொள்ளாதிருக்க வேண்டும். ஏனென்றால், வலிமையாக வேரூன்றியிருந்த இரண்டு மருத மரங்களையும், பேய் வடிவில் கோபம் கொண்ட பூதனையையும், குதிரை வடிவில் மிகுந்த கோபத்துடன் வந்த 'கேசி' என்னும் அசுரனையும் கழுதை வடிவில் வந்த தேனுகாசுரன் என்னும் அசுரனையும், பெரிய வடிவில் வந்த காளைகளையும், மதம் பிடித்த ''குவலயாபீடம்'' என்னும் யானையையும், மல்லர்களின் உயிரையும் போக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் தன் திருவடிகளால் சகடாசுரன் என்னும் அசுரனைப் பாய்ந்து உதைத்து அவன் உயிரைப் போக்கியருளினான். இத்தகைய பெருமைகளைப் பெற்றிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் விரும்பி ஏற்று எழுந்தருள்புரியும் திருத்தலம் ''திருக்கண்ணபுரம்'' என்பதாகும். இத்தகைய திருத்தலம் சென்று ஸ்ரீசௌரிராசப் பெருமானை வணங்கித் தொழுது வழிபடு வோமாக!

குன்றால் மாரி பழுதாக்கிக்
கொடியே ரிடையாள் பொருட்டாக,
வன்தாள் விடையே ழன்றடர்த்த
வானோர் பெருமான் மாமாயன்,
சென்றான் தூது பஞ்சவர்க்காய்த்
திரிகால் சகடம் சினமழித்து,
கன்றால் விளங்கா யெறிந்தானூர்
கண்ண புரம்நாம் தொழுதுமே. 1706

''கோவர்த்தனகிரி'' என்னும் மலையைக் குடையாகப் பிடித்ததன் பயனாகப் பெய்த பெருமழையைத் தடுத்துப் பசுக்கூட்டங்

Koviloor Digital Library

களைப் பாதுகாத்து அதனால் பெய்த மழையினால் தீமைகள் உண்டாகா வண்ணம் பழுதுபடச் செய்து, கொடி போன்று நுண்ணிய இடை யினை உடைய நப்பின்னைப் பிராட்டிக்காக வலிமைமிக்க கால்களையுடைய ஏழு எருதுகளை அடக்கிக் கொன்றான். விண்ணுலகத் தேவர்கட்குத் தலைவனாகிய மாயச் செயல்களையுடைய எம் பெருமான் ஸ்ரீகண்ணபிரான் பாண்டவர்களுக்காகத் தூது சென்றான். அதற்கும் முன்பே சிறுகுழந்தையாக இருந்தபோது தன் திருவடிகளால் சக்கர வடிவில் வந்த சகடாசுரனை உதைத்து அழித்தான். கன்று வடிவில் தன்னைக் கொல்ல வந்த அசுரனை விளாங்காய் மரத்தின்மீது வீசி அழித்துக் கொன்றான். இத்தகைய பெருமைகளும் வீரமும் மிக்க எம்பெருமானை ஸ்ரீகண்ணபிரான் விரும்பி ஏற்று எழுந்தருள்புரியும் திருத்தலம் திருக்கண்ணபுரம் என்பதாகும். இத்தகைய திருத்தலம் சென்று ஸ்ரீசௌரிராசப் பெருமானை வணங்கித் தொழுது வழிபடுவோமாக!

*கருமா முகில்தோய் நெடுமாடக்
கண்ண புரத்தெம் அடிகளை,
திருமா மகளா லருள்மாரி
செழுநீ ராலி வளநாடன்,
மருவார் புயல்கைக் கலிகன்றி
மங்கை வேந்த, னொலிவல்லார்,
இருமா நிலத்துக் கரசாகி
இமையோர் இறைஞ்ச வாழ்வாரே. 1707

கரிய பெரிய மேகங்கள் தங்கும் அளவுக்கு உயர்ந்துள்ள மாட மாளிகைகள் நிறைந்திருக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானைப் பற்றித் ''திருமகள்'' என்னும் பெரிய பிராட்டியாரின் திருவருளால் ''அருள்மாரி'' என்னும் திருநாமம் கொண்ட வளம்மிக்க திருவாலி நாட்டுக்குத் தலைவனாகிய மாரிபோல் வாரி வழங்கும் கொடைத் தன்மையையுடைய ''கலிகன்றி'' என்னும் திருமங்கை நகர்க்கரசனாகிய திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்களைக் கற்று வல்லவர்கள் இப்பூவுலகத்துக்கரசராகி இருப்பதுடன் விண்ணுலகிலுள்ள திருப் பரமபதத்திற்கும் சென்று, அவ்விண்ணுலகத் தேவர்களும் இறைஞ்சும் படியாக வாழப் பெறுவர்.

Koviloor Digital Library

7. வியமுடை திருக்கண்ணபுரம்

கலிவிருத்தம்

*வியமுடை விடையினம் உடைதர மடமகள்,
குயமிடை தடவரை யகலம துடையவர்,
நயமுடை நடையனம் இளையவர் நடைபயில்,
கயமிடை கணபுரம் அடிகள்தம் இடமே. 1708

வலிமை மிக்க ஏழு எருதுகளின் உயிரைப் போக்கிவிட்டு, மடப்ப குணமுடைய நப்பின்னைப் பிராட்டியினை அடைந்த ஸ்ரீகண்ண பிரான் அவளுடைய முலைகளுடன் தழுவியிருக்கின்ற மலை போன்ற திருமார்பினை உடையவன். பொய்கையில் இருக்கின்ற அன்னப்பறவைகள் அங்கு நடமாடுகின்ற இளம்பெண்களின் நடையழகினைப் பார்த்துத் தாமும் அவ்வாறே நடப்பதற்குக் கற்றுக் கொள்ளும். அதனால் அவை மகிழ்ச்சி அடைகின்றன. இப்படிப் பட்ட பெருமை படைத்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருத்தலம் ''திருக் கண்ணபுரம்'' என்பதாகும்.

இணைமலி மருதினொ டெருதிற இகல்செய்து,
துணைமலி முலையவள் மணமிகு கலவியுள்,
மணமலி விழவினொ டடியவர் அளவிய,
கணமலி கணபுரம் அடிகள்தம் இடமே. 1709

இணையாக இருக்கின்ற இரண்டு மருதமரங்களும் ஒடிந்து கீழே விழுமாறு செய்யும் பொருட்டு, அம்மரங்களினிடையே நடந்து சென்ற ஸ்ரீகண்ணபிரான் அழகிய ஒன்றுக்கொன்று துணையாக இருக் கின்ற இரண்டு முலைகளையுடைய நப்பின்னைப் பிராட்டியைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு, ஏழு எருதுகளுடன் போரிட்டு வெற்றி பெற்று அவளுடன் மிகுந்த சேர்க்கையினை அனுபவித்தான். இத்தகைய மணவிழாவினைக் கண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் கொண்ட மகிழ்ச்சி மிக்க திருவிழாக் காலங்களின் போது, வைணவ அடியவர்களின் திருக்கூட்டமானது திரண்டு ஒன்றுகூடி அளவளாவுகின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருத் தலமாகும்.

Koviloor Digital Library

புயலுறு வரைமழை பொழிதர மணிநிரை,
மயலுற வரைகுடை யெடுவிய நெடியவர்,
முயல்துள் மிளைமுயல் துளவள விளைவயல்,
கயல்துளு கணபுரம் அடிகள்தம் இடமே. 1710

மேகக்கூட்டங்களெல்லாம் ஒருங்கு கூடிப் புயல் உண்டாகு மளவுக்குக் 'கல்மழை' என்கின்ற பெருமழை பெய்தபோது, செய்வதறியாது கலங்கிக் கொண்டிருந்த பசுக்கூட்டங்களைப் பாதுகாத்தற் பொருட்டுக் கண்ணபிரான் ''கோவர்த்தனகிரி'' என்னும் மலையைக் குடையாகப் பிடித்தருளினான். வயல்களிலுள்ள களை களைக் களையும்பொருட்டுக் களைபறிப்பவர்கள் களைக்கொட்டு களைக் கொண்டு களை எடுக்கும்போது அங்குள்ள சிறு தூறுகளி னின்றும் முயல்களானவை எழுந்து துள்ளிக் கொண்டிருக்கின்றன. மேலும் அங்குள்ள செழிப்பான வயல்களில் கயல்மீன்கள் துள்ளிக் கொண்டிருக்கின்ற வகையில் நீர்வளம் மிக்கதாக அமைந்துள்ளது. இப்படிப்பட்ட ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக் கோயில்கொண்டு எழுந்தருள்புரிகிறான் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான்.

ஏதலர் நகைசெய இளையவர் அளைவெணெய்,
போதுசெய் தமரிய புனிதர்நல் விரைமலர்,
கோதிய மதுகரம் குலவிய மலர்மகள்,
காதல்செய் கணபுரம் அடிகள்தம் இடமே. 1711

தனக்கு வேண்டாதவர்கள் தம்மைப் பார்த்து ஏளனம் பண்ணவும், இளம்பெண்கள் கடைந்து வைத்திருந்த வெண்ணெயைத் திருப்தி யாகத் திருவமுது செய்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் நறுமண மிக்க மலர்களை வண்டுகள் மொய்த்துக் கொண்டிருக்கின்ற, அத்தகைய தாமரை மலரில் அவதரித்த திருமகள் என்னும் பெரிய பிராட்டியாருடன் கூடி விரும்புகின்ற திருத்தலம் ''திருக்கண்ணபுரம்'' என்பதாகும்.

தொண்டரும் அமரரும் முனிவரும் தொழுதெழ,
அண்டமொ டகலிடம் அளந்தவர் அமர்செய்து,
விண்டவர் படமதி ளிலங்கைமுன் னெரியெழ,
கண்டவர் கணபுரம் அடிகள்தம் இடமே. 1712

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்குத் தொண்டு புரிந்து வருகின்ற வைணவத் திருத்தொண்டர்களும், தேவர்களும், முனிவர்

Koviloor Digital Library

களும் தொழுது வணங்குகின்ற வகையில் விண்ணுலகத்துடன், பரந்து கிடக்கின்ற இம்மண்ணுலகினையும் சேர்த்து அளந்து கொண்ட எம்பெருமான், பகைவர்கள் அழியுமாறு மதில்களால் சூழ்ந்திருக்கின்ற இலங்கை நகரமானது முன்பு தீப்பிடித்து எரியும்படிச் செய்து பாழ்படுத்திய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய திருத்தலம் ''திருக்கண்ணபுரம்'' என்பதாகும்.

மழுவியல் படையுடை யவனிடம் மழைமுகில்,
தழுவிய உருவினர் திருமகள் மருவிய,
கொழுவிய செழுமலர் முழுசிய பறவைபண்,
எழுவிய கணபுரம் அடிகள்தம் இடமே. 1713

''மழு'' என்னும் ஆயுதத்தை ஏந்திய எம்பெருமான், மழை பொழிகின்ற நிலையில் கூடியிருக்கின்ற மேகத்தை ஒத்த நிறத்தினையுடைய திருமேனியினைக் கொண்ட எம்பெருமான் ''திருமகள்'' என்னும் பெரிய பிராட்டியார் சேர்ந்து திகழ்கின்ற தாமரை மலரிலுள்ள தேனைப் பருகிக் கொண்டிருக்கின்ற வண்டுகள் இசையுடன் கூடிய பாடல்களைப் பாடிக் கொண்டிருக்குமாறு எங்கும் நிறைந்திருக்கின்ற அளவில் அடியவர்கள் கூட்டம் நிறைந்துள்ள திருத்தலம் ''திருக்கண்ணபுரம்'' என்பதாகும்.

பரிதியொ டணிமதி பனிவரை திசைநிலம்,
எரிதியொ டெனவின இயல்வினர் செலவினர்,
சுருதியொ டருமறை முறைசொலு மடியவர்,
கருதிய கணபுரம் அடிகள்தம் இடமே. 1714

சூரியன், சந்திரன், பனிமலைகள், திசைகள், பூமி, தீ ஆகிய யாவற்றையும் தன்னுடன் சேர்ந்த பகுதிகளாகக் கொண்டு, இருக்க, நல்ல ஒலிக் குறிப்புகளுடன் கூடிய மறைகளை முறையாக ஓதுகின்ற அடியவர்கள் தாம் வசிப்பதற்குத் தக்க இடம் இது என்று கருதிக் கொண்டு ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் வாழ்ந்து கொண்டு இருக்கின்றனர். இத்தகைய திருத்தலத்தில் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் எழுந்தருள்புரிகின்றான்.

படிபுல்கு மடியிணை பலர்தொழ மலர்வைகு,
கொடிபுல்கு தடவரை அகலம துடையவர்,
முடிபுல்கு நெடுவயல் படைசெல அடிமலர்,
கடிபுல்கு கணபுரம் அடிகள்தம் இடமே. 1715

Koviloor Digital Library

தாமரை மலரில் தோன்றி வீற்றிருக்கும் கொடி போன்ற திருமகள் என்னும் பெரிய பிராட்டியார் அணைக்கப் பெற்ற திருமார் பினையுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் இந்த உலகம் முழுவதையும் அளந்த திருவடிகளை உடையவன். இத்தகைய எம்பெருமான் நெல்நாற்று முடிகள் நடுவதற்கு ஏற்ற வகையில் வயல்களில் வந்து சேர்ந்து இருக்கின்ற அளவில் அவ்வயல்கள் உழவர்களால் கலப்பை கொண்டு உழுவதினாலும், அப்போதே தம் கால்களினால் சமப்படுத்துவதனாலும் அங்குள்ள தாமரை மலர்கள் எங்கும் மணம் வீசிக் கொண்டிருக்கின்றன. இத்தகைய ''திருக் கண்ணபுரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்றான் எம்பெருமான் ஸ்ரீ சௌரிராசப் பெருமான்.

புலமனு மலர்மிசை மலர்மகள் புணரிய,
நிலமக ளெனவின மகளிர்க ளிவரொடும்,
வலமனு படையுடை மணிவணர் நிதிகுவை,
கலமனு கணபுரம் அடிகள்தம் இடமே. 1716

ஐம்புலன்களையும் கவர்கின்ற தாமரை மலரில் தங்கி வாழ்ந்து கொண்டு இருக்கின்ற ''திருமகள்'' என்னும் பெரிய பிராட்டி யாருடனும், பூமிப்பிராட்டியாருடனும் என்றும் பிரிதல் என்பது இல்லாதவாறு எம்பெருமானுடன் சேர்ந்து கூடியுள்ளனர். கடற்கரையெங்கும் நிதிக்குவியல்களைக் கொண்டு வருகின்ற மரக்கலங்கள் நிறைந்திருக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' திருத்தலத்தில், வலக்கையில் ''திருவாழி'' என்னும் சக்கரப்படையை ஏந்தியுள்ள எம்பெருமான், நீலமணி நிறத்துடன் கூடிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீசௌரிராசப் பெருமானாக எழுந்தருள் புரிந்து கொண்டிருக்கின்றான்.

*மலிபுகழ் கணபுர முடையவெம் அடிகளை,
வலிகெழு மதிளயல் வயலணி மங்கையர்,
கலியன தமிழிவை விழுமிய இசையினொடு,
ஒலிசொலும் அடியவர் உறுதுய ரிலரே. 1717

புகழ்மிக்கு விளங்குகின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானைப் பற்றி, வலிமை மிக்க மதிள்களையும், வயல்களும் சூழ்ந்து கொண்டிருக்கின்ற ''திருமங்கை'' என்னும் நகருக்கரசனாகிய ''கலியன்'' என்னும்

Koviloor Digital Library

திருமங்கையாழ்வார் மேன்மையான இசையுடன் கூடிய தமிழ்ப் பாசுரங்களை அருளிச் செய்துள்ளார். இப்பத்துப் பாசுரங்களையும் ஒலியுடன் பயின்று கொண்டிருக்கின்ற அடியவர்களுக்கு உண்டாகின்ற துயரங்கள் யாவும் இல்லாமல் நீங்கிவிடும்.

8. வானோர் அளவும்
திருக்கண்ணபுரம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*வானோ ரளவும் முதுமுந்நீர்
வளர்ந்த காலம், வலியுருவில்
மீனாய் வந்து வியந்துய்யக்
கொண்ட தண்டா மரைக்கண்ணன்,
ஆனா வுருவி லானாயன்
அவனை யம்மா விளைவயலுள்,
கானார் புறவில் கண்ணபுரத்
தடியேன் கண்டு கொண்டேனே. 1718

விண்ணுலகத் தேவர்கள் இருக்கின்ற எல்லை வரைக்கும் கடல்நீர் உயர்ந்து ஓங்கிச் சென்ற காலத்தில் வலிய உருக்கொண்டு ''மீன்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு ஆச்சரியப்படும்படியாக இந்த உலகினைக் காத்தருளிய எம்பெருமான் குளிர்ந்த தாமரைக் கண்ணன் அழிதல் என்பது இல்லாத திருமேனியுடன் இடைக்குலத்தில் தோன்றியருளினான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை நிறைய விளைகின்ற வயல்கள் சூழ்ந்திருக்கக் காடுகளும் பரந்து கிடக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருக்காட்சியினை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

மலங்கு விலங்கு நெடுவெள்ளம்
மறுக அங்கோர் வரைநட்டு,
இலங்கு சோதி யாரமுதம்
எய்து மளவோர் ஆமையாய்,
விலங்கல் திரியத் தடங்கடலுள்
சுமந்து கிடந்த வித்தகனை,
கலங்கல் முந்நீர்க் கண்ணபுரத்
தடியேன் கண்டு கொண்டேனே. 1719

Koviloor Digital Library

நீரினுள்ளே உள்ள மீனினங்கள் தடுமாறும்படியாகப் பெருக் கெடுத்து ஓடி வருகின்ற பெரிய வெள்ளம் குழம்பிப் போகுமாறு ஆழமாக இருக்கின்ற அந்நீர் நிலையில் மந்தரமலையை நட்டு வைத்து அங்குத் திருவமுது தோன்றும் வரைக்கும் எங்கும் ஒளிர்கின்ற சோதிவடிவுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ''ஆமை'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு, அம்மலை சுழன்று சுழன்று திரிந்து கொண்டிருக்க அக்கடலினுள்ளே அம்மலையைத் தாங்கிக் கொண்டிருந்தான். இப்படிப்பட்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாரா யணனைக் கடல்நீர் சூழ்ந்திருக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிந்து கொண்டு இருப்பதை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

பாரார் அளவும் முதுமுந்நீர்
பரந்த காலம், வளைமருப்பில்
ஏரார் உருவத் தேனமாய்
எடுத்த ஆற்ற லம்மானை,
கூரார் ஆரல் இரைகருதிக்
குருகு பாயக் கயலிரியும்,
காரார் புறவில் கண்ணபுரத்
தடியேன் கண்டு கொண்டேனே. 1720

இவ்வுலகம் முழுவதும் கடல்நீர் சூழ்ந்து உலகப் பிரளயம் உண்டான காலத்தில் ''வராகம்'' என்னும் அவதாரம் மேற்கொண்டு தன் கொம்பினால் இப்பூமியைக் குத்தி எடுத்துக் கொண்டு வந்து பாதுகாத்து அருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கூர்மையான அலகுகளையுடைய ''குருகு'' என்னும் பறவையானது தமக்கு உணவுப் பொருளாகிய ஆரல் என்னும் மீன்களை அடையும் பொருட்டு அவைகளின்மீது பாய்ந்து செல்கின்றபோது கயல் என்னும் மீன்கள் அஞ்சி ஓடுகின்ற அளவில், மேகங்கள் சூழ்ந்திருக்கின்ற சோலைகள் நிறைந்திருக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிவதை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

உளைந்த அரியும் மானிடமும்
உடனாய்த் தோன்ற ஒன்றுவித்து,
விளைந்த சீற்றம் விண்வெதும்ப
வேற்றோன் அகலம் வெஞ்சமத்து,

Koviloor Digital Library

பிளந்து வளைந்த வுகிராளைப்
பெருந்தண் செந்நெற் குலைதடிந்து,
களஞ்செய் புறவில் கண்ணபுரத்
தடியேன் கண்டு கொண்டேனே. 1721

உளைந்த மயிருடன் கூடிய, காணும்போதே அச்சத்தை உண்டாக்குகின்ற சிங்கமுகமும், மனித உருவமும் ஒன்று சேர்ந்த நரசிம்மமூர்த்தியாக அவதாரம் மேற்கொண்டு, உண்டான பெருஞ் சீற்றத்துடன் ஆகாயமே அதிர்ந்து போகும்படியாகப் பகைவனாகிய 'இரணியன்' என்னும் அசுரனின் அகன்ற மார்பினை இருகூறுகளாகப் பிளந்து அவனுயிரைப் போக்கிய கூர்மையான நகங்களைக் கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பெருமளவில் விளைந்த செந்நெற்கதிர்களையும் அதன் பொருட்டுக் களங்களில் நெல் நிறைந்திருக்கச் சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருக்கண்ண புரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிந்து கொண்டிருப்பதை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

தொழுநீர் வடிவில் குறளுருவாய்
வந்து தோன்றி மாவலிபால்,
முழுநீர் வையம் முன்கொண்ட
மூவா வுருவி னம்மானை,
உழுநீர் வயலுள் பொன்கிளைப்ப
ஒருபால் முல்லை முகையோடும்,
கழுநீர் மலரும் கண்ணபுரத்
தடியேன் கண்டு கொண்டேனே. 1722

அனைவரும் வணங்கக்கூடிய ''வாமனன்'' என்னும் குறள் (குள்ள) வடிவு கொண்டு வந்து மகாபலிச் சக்கரவர்த்தி இயற்றும் வேள்வித்தீ முன்னே சென்று இப்பூமியை இரந்து பெற்று, விகாரமற்ற உருவம் கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் எப்பொழுதும் உழுதொழில் செய்கின்ற நீர்வளம் மிக்க வயல்களில் பொன்விளைய, வேறு சில இடங்களில் முல்லை மலர்களும், கருமுகை மலர்களும், செங்கழுநீர்ப் பூக்களும் மலர்ந்திருக்கக் கூடிய ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்ற திருக்காட்சியினை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

Koviloor Digital Library

வடிவாய் மழுவே படையாக
வந்து தோன்றி மூவெழுகால்,
படியார் அரசு களைகட்ட
பாழி யானை யம்மானை,
குடியா வண்டு கொண்டுண்ணக்
கோல நீலம் மட்டுகுக்கும்,
கடியார் புறவில் கண்ணபுரத்
தடியேன் கண்டு கொண்டேனே. 1723

கூர்மையாக இருக்கின்ற 'மழு' என்னும் ஆயுதத்தைக் கையில் கொண்டு ''பரசுராமர்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு இருபத்தொருமுறை அரசர்களைக் கொன்ற பலம் பொருந்திய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் தோட்டங்களிலுள்ள மலர்களில் வண்டுகள் வந்து அமர்ந்து மதுஅருந்துகின்ற பொழுது, அங்குள்ள நீலமலர்களானது தன்னிடத்து உள்ள தேனைச் சொரிவதால் எங்கும் மணம் வீசுகின்ற வளம்மிக்க ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப் பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருக்காட்சி யினை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

வைய மெல்லா முடன்வணங்க
வணங்கா மன்ன னாய்த்தோன்றி,
வெய்ய சீற்றக் கடியிலங்கை
குடிகொண் டோட வெஞ்சமத்து,
செய்த வெம்போர் நம்பரனைச்
செழுந்தண் கானல் மணநாறும்,
கைதை வேலிக் கண்ணபுரத்
தடியேன் கண்டு கொண்டேனே. 1724

உலகிலுள்ளார் யாவரும் தங்கள் திருவடிகளை வணங்கும் படியாகிய பெருமையுடன் கூடிய நிலையில், தான் எவரையும் வணங்காத வகையில் தனிப் பெருந்தலைமையுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், சக்கரவர்த்தித் திருமகன் என்னும் ஸ்ரீஇராம அவதாரம் மேற்கொண்டு, இலங்கை மாநகரில் வாழ்ந்து கொண்டி ருப்பவர்கள் யாவரும் அஞ்சி ஓடுமாறு, பெருஞ்சீற்றத்துடன் கொடிய போரினைச் செய்தான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் வளம்மிக்க குளிர்ச்சியான நெய்தல் நிலத்தில் மணம்வீசுகின்ற தாழைச் செடிகளை வேலியாகக் கொண்டுள்ள ''திருக்கண்ணபுரம்'' என்னும்

Koviloor Digital Library

திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்ற திருக்காட்சியினை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

ஒற்றைக் குழையும் நாஞ்சிலும்
ஒருபால் தோன்றத் தான்தோன்றி,
வெற்றித் தொழிலார் வேல்வேந்தர்
விண்பால் செல்ல வெஞ்சமத்து,
செற்ற கொற்றத் தொழிலானைச்
செந்தீ மூன்றும் இல்லிருப்ப,
கற்ற மறையோர் கண்ணபுரத்
தடியேன் கண்டு கொண்டேனே. 1725

ஒரு காதில் மட்டும் குண்டலம் என்னும் அணியானது தொங்கிக் கொண்டிருக்க, அதன் மற்றொரு பக்கத்தில் கலப்பை என்னும் ஆயுதம் தாங்கிக் கொண்டிருக்குமாறு தோன்றி, வெற்றி பெறுவதனையே தம் தொழிலாகக் கொண்டிருக்கின்ற வேற்படையை உடைய மன்னர் களைப் போர்க்களத்தில் போரிட்டு வென்று அவர்களனைவரையும் ''விண்ணுலகு'' என்னும் வீரசுவர்க்கம் சென்று சேரும்படி செய்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ''ஸ்ரீபலராமர்'' என்னும் திரு அவதாரம் மேற்கொண்டு அருளினார். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீபலராமப் பெருமான் மூவகைப்பட்ட ஓமத்தீயினை வீடுகள் தோறும் வளர்க்கின்ற மறைகளைக் கற்றுவல்ல அந்தணர்கள் நிறைந்து வாழ்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருக்காட்சியினை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

துவரிக் கனிவாய் நிலமங்கை
துயர்தீர்ந் துய்யப் பாரதத்துள்,
இவரித் தரசர் தடுமாற
இருள்நாள் பிறந்த அம்மானை,
உவரி யோதம் முத்துந்த
ஒருபா லொருபா லொண்செந்நெல்,
கவரி வீசும் கண்ணபுரத்
தடியேன் கண்டு கொண்டேனே. 1726

இலந்தைப்பழம், கோவைப்பழம் ஆகிய இக்கனிகளைப் போன்ற சிவப்பு நிறமுடைய உதடுகளைப் பெற்றிருக்கின்ற பூமிப்பிராட்டியாருக்குண்டான துன்பங்கள் நீங்கும் பொருட்டாகவும்,

Koviloor Digital Library

அதன்மூலம் உய்யும் பொருட்டாகவும் பாரதப்போர் நடைபெற்ற போது, அப்போரில் எதிர்த்துப் போரிட்ட அரசர்கள் தம் நிலையி னின்றும் தடுமாறுவதற்கென்றே எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் இருண்ட இரவு நேரத்தில் அட்டமி தினத்தன்று திருஅவதாரம் மேற்கொண்டருளினான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் ஒருபுறத்தில் வீசுகின்ற கடலலைகள் முத்துகளைக் கொண்டு வந்து சேர்க்கவும் மற்றொரு புறத்தில் அழகிய செந்நெற் பயிர்கள் கவரி வீசிக் கொண்டிருக்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்ற திருக்காட்சியினை அடியேன் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

*மீனோ டாமை கேழலரி
குறளாய் முன்னு மிராமனாய்த்
தானாய், பின்னு மிராமனாய்த்
தாமோ தரனாய்க் கற்கியும்
ஆனான் றன்னை, கண்ணபுரத்
தடியன் கலிய னொலிசெய்த,
தேனா ரின்சொல் தமிழ்மாலை
செப்பப் பாவம் நில்லாவே. 1727

மீன், ஆமை, வராகம், நரசிம்மம், வாமனம், பரசுராமர், ஸ்ரீஇராம பிரான், பலராமர், ஸ்ரீகண்ணபிரான், கல்கி ஆகிய பத்துத் திரு அவதாரங்களை மேற்கொண்டருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாரா யணனைத் ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருத்தலத்தில் கண்டு கொண்டு சேவிக்கப் பெற்று அடியவராகிய ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த தேன் போன்று இனிக்கின்ற சொற்களைக் கொண்டுள்ள தமிழ்ப் பாசுரங்கள் பத்தினையும் பயின்று எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர்களிடத்தே இருக்கின்ற பாவங்கள் தொலைந்து போகும்.



Koviloor Digital Library

9. கைம்மானம் திருக்கண்ணபுரம்

கொச்சகக் கலிப்பா

*கைம்மான மதயானை யிடர்தீர்த்த கருமுகிலை,
மைம்மான மணியை யணிகொள் மரகதத்தை,
எம்மானை யெம்பிரானை யீசனை யென்மனத்துள்
அம்மானை, அடியே னடைந்துய்ந்து போனேனே. 1728

நீண்ட பெருந்துதிக்கையினையுடைய மதங்கொள்ளும் இயல்பு கொண்ட ''கஜேந்திரன்'' என்னும் யானைக்குண்டான துயரத்தினைப் போக்கியருளிய இருண்ட மேக நிறம் கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை, மை போன்ற கருப்பு நிறம் கொண்ட மணியைப் போன்ற எம்பெருமானை, அணிந்து கொள்ளக் கூடிய மரகதம் போன்ற பச்சை நிறமுடைய எம்இறைவனை எந்தையை, எம்பிரானை, எம்ஈசனை அடியேனின் மனத்தினுள்ளே தங்கி இருக்கின்ற எம்பெருமானைத் ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் ஸ்ரீசௌரிராசப் பெருமானை அடியேன் அடைந்து பிழைத்துக் கொண்டேன்.

தருமான மழைமுகிலைப் பிரியாது தன்னடைந்தார்,
வருமானம் தவிர்க்கும் மணியை அணியுருவில்,
திருமாலை யம்மானை யமுதத்தைக் கடற்கிடந்த
பெருமானை, அடியே னடைந்துய்ந்து பிழைத்தேனே. 1729

'கற்பக மரம்', காளமேகம் ஆகிய இவைகளைப் போன்று கொடைக்குணம் பெற்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாரயணன் தன்னிடம் வந்தடைந்த அடியவர்களின் அவமானத்தைப் போக்கியருள்கின்றான். மேலும் நீலமணியை அணிந்திருக்கின்ற திருமேனியினையுடைய எம்பெருமானைத் திருமகள் நாதனை, திருவமுதினை, திருப்பாற் கடலில் திருக்கண் வளர்ந்தருள் புரிகின்ற திருக்கண்ணபுரத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரி ராசப் பெருமானை அடியேன் அடைந்து பிழைத்துக் கொண்டேன்.

*விடையேழன் றடர்த்து வெகுண்டு விலங்கலுற,
படையாலாழி தட்ட பரமன் பரஞ்சோதி,
மடையார் நீலம்மல்கும் வயல்சூழ் கண்ணபுரமொன்
றுடையானுக்கு, அடியே னொருவர்க் குரியேனோ? 1730

Koviloor Digital Library

முன்பொருகாலத்தில் நப்பின்னைப் பிராட்டியை அடையும் பொருட்டு ஏழு எருதுகளைப் பெருஞ்சினத்துடன் போரிட்டு வெற்றி பெற்றான் ஸ்ரீகண்ணபிரான். வானர வீரர்களைக் கொண்டு கடலை அடைத்து அணைகட்டித் திரிகூட மலை என்னும் மலையை அடைந்தான் ஸ்ரீஇராமபிரான். இத்தகைய எம்பெருமான் யாவரினும் சிறந்தவனாகிப் பரமனான ஒளி வடிவு கொண்டுள்ள எம்பெருமான் ''திருக்கண்ணபுரம்'' என்னும் நீர்வளம் நிறைந்த வயல்களைக் கொண்டு திகழும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிந்து கொண்டு இருக்கும் ஸ்ரீசௌரிராசப் பெருமானுக்கு மட்டுமே அடியனாவதன்றி மற்று எவர்க்கும் அடியேன் உரியவனாவேனோ! அவ்வாறு ஆகமாட்டேன்.

*மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை,என்னுள்
புக்கானைப் புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை,
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த,
அக்காரக் கனியை அடைந்துய்ந்து போனேனே. 1731

அனைவரினும் மிகுதியான மேன்மையானவனை, நான்கு வகையான மறைகளாகப் பரந்து விரிந்து ஒளிரும் திருவிளக்கை, அடியேனின் உள்ளத்தின் உள்ளே புகுந்திருக்கின்ற எம்பெருமானைப் புகழ் நிறையப் பெற்றுப் பொலிகின்ற ஒளி வீசுகின்ற பொன் மலையைப் போன்று விளங்குகின்ற பொருத்தமான தகுதியை அடைந்திருக்கின்ற ''திருக்கடிகை'' எனினும் பெரிய திருமலை யாகிய ''சோளிங்கபுரம்'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருள்புரியும் ''அக்காரக்கனி'' எனத் திகழும் ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம் பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானை அடைந்து உய்வுபெற்றுப் பிழைத்துக் கொண்டேன்.

வந்தாயென் மனத்தே வந்துநீ புகுந்தபின்னை,
எந்தாய்! போயறியாய் இதுவே யமையாதோ,
கொந்தார் பைம்பொழில்சூழ் குடந்தைக் கிடந்துகந்த
மைந்தா, உன்னையென்றும் மறவாமைப் பெற்றேனே. 1732

என் தந்தையே! அடியேனின் மனத்தினுள்ளே நீயாகவே வந்து புகுந்தாய். அவ்வாறு புகுந்த பின்பு அடியேனின் மனத்தினைவிட்டு திரும்பிச் செல்வதை நீ அறியமாட்டாய். இப்படிப்பட்டதோர்

Koviloor Digital Library

பெரும்பேறு என்பது அடியேனுக்குப் போதாதோ! கொத்துக் கொத்துக்களாகப் பூக்கள் பூத்துக் கொண்டு இருக்கின்ற சோலைகள் சூழ்ந்துள்ள ''திருக்குடந்தை'' என்னும் திருத்தலத்தின்கண் திருக் கோயில் கொண்டு எழுந்தருளி திருக்கண் வளர்ந்தருள தம் உள்ளம் மகிழ்ச்சி பெற்ற மைந்தனே! உன்னை எக்காலத்திலும் மறவாதிருக்கக் கூடிய அருளினை அடியேன் பெற்று மகிழ்ந்தேன்.

எஞ்சா வெந்நரகத் தழுந்தி நடுங்குகின்றேற்கு,
அஞ்சேலென் றடியேனை யாட்கொள்ள வல்லானை,
நெஞ்சே! நீநினையா திறைப்பொழுதும் இருத்திகண்டாய்,
மஞ்சார் மாளிகைசூழ் வயலாலி மைந்தனையே. 1733

ஏமனமே! கொடுமைகள் நிறைந்திருப்பதில் குறைகள் என்பது இல்லாத அளவுக்குக் கொடிய நரகத்தில் சென்று அக்கொடுமை களைக் கண்டு நடுங்கிக் கொண்டிருக்கின்ற அடியேனைக் கண்டு ''அஞ்சற்க!'' என்று கூறி அருளிச் செய்து ஆட்கொண்டருளிய வலிமைமிக்க எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை நீ மேகக் கூட்டங்களால் சூழ்ந்து கொண்டு இருக்கின்ற அளவுக்கு உயர்ந்த திருமாளிகைகள் நிறைந்திருக்கின்ற ''திருவயலாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிந்து கொண்டிருக்கும் எம்பெருமானை ஒரு நொடிப் போதளவும் நினைக்காமல் இருத்தல் என்பது ஆகுமோ? அவ்வாறு நினைக்காமல் இருத்தல் என்பது இயலாததொன்றாகும்.

பெற்றார் பெற்றொழிந்தார் பின்னும்நின் றடியேனுக்கு,
உற்றானாய் வளர்த்தென் னுயிராகி நின்றானை,
முற்றா மாமதிகோள் விடுத்தானை யெம்மானை,
எத்தால் யான்மறக்கே னிதுசொல்லென் ஏழைநெஞ்சே! 1734

என் ஏழை மனமே! அடியேனை என் பெற்றோர்கள் பெற்றுப் பின்னர் இங்கே விட்டுவிட்டுச் சென்றுவிட்டனர். அதன் பின்பு அடியேனுக்கு அனைத்துவித உறவுகளுமாகி இருந்து கொண்டு அடியேனை வளர்த்து ஆளாக்கி அடியேனின் உயிராகவே நிற்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை, இளஞ்சந்திரனுக்குண்டான குறைகளைப் போக்கியருளிய எம்பிரானை அடியேன் எதனைக் கொண்டும் மறத்தல் என்பது யாங்ஙனம் இயலும் என்பதை இனிதே எடுத்துரைப்பாயாக! எவ்வகையிலும் மறத்தல் என்பது இயலாத தாகும்.

Koviloor Digital Library

கற்றார் பற்றறுக்கும் பிறவிப் பெருங்கடலே,
பற்றா வந்தடியேன் பிறந்தேன் பிறந்தபின்னை,
வற்றா நீர்வயல்சூழ் வயலாலி யம்மானைப்
பெற்றேன், பெற்றதும் பிறவாமை பெற்றேனே. 1735

அடியேன் கல்வியறிவு பெற்ற அறிவாளிகள் இப்பிறவி என்பது வேண்டத்தகாதது என்று கருதி அதன் மீதுள்ள பற்றினை அறுத்துக் கொண்டிருக்கின்ற 'பிறவி' என்னும் வாழ்க்கைக் கடலையே ஏதோ ஓர் காரணம் கொண்டு பெற்றுப் பிறந்துவிட்டேன். அடியேன் அவ்வாறு பிறந்துவிட்ட பின்பு வற்றாத நீர்வளம்மிக்க வயல்கள் சூழ்ந் திருக்கின்ற ''திருவயலாலி'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அடியேன் அடையப் பெற்றேன். அவ்வாறு அடையப் பெற்றவு டனேயே அந்தப் ''பிறவாமை'' என்னும் பெரும்பேற்றினை அடையப் பெற்றேன்.

*கண்ணார் கண்ணபுரம் கடிகை கடிகமழும்,
தண்ணார் தாமரைசூழ் தலைச்சங்க மேல்திசையுள்,
விண்ணோர் நாண்மதியை விரிகின்ற வெஞ்சுடரை,
கண்ணாரக் கண்டுகொண்டு களிக்கின்றதிங் கென்றுகொலோ!
1736

கண்களால் கவர்ந்திழுக்கக்கூடிய திருக்கண்ணபுரம், திருக்கடிகை ஆகிய திருத்தலங்களிலும், மணம் வீசுகின்ற தாமரை மலர்கள் நிறைந்திருக்கின்ற ''திருத்தலைச்சங்க நாண்மதியம்'' என்னும் திருத்தலத்தின் மேல்திசைப் பகுதியில் விண்ணுலகத் தேவர்களுக்கு நாள்தோறும் சந்திரன் போன்றும், பரந்து விரிந்து ஒளிவிட்டுப் பிரகாசித்துக் கொண்டு இருக்கின்ற இளஞ்சூரியனைப் போன்றும் அமைந்திருந்து பெரும்புகழ் பெற்றவனான எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை அடியேன் என் இருகண்களும் மகிழ்ச்சி பெறும் படியாகக் கண்டு கொண்டு களிப்பினை அடைவது இங்கு எந்தக் காலத்தில் அமைந்திடுமோ?

*செருநீர வேல்வலவன் கலிகன்றி மங்கையர்கோன்,
கருநீர் முகில்வண்ணன் கண்ண புரத்தானை,
இருநீரின்தமி ழின்னிசை மாலைகள் கொண்டுதொண்டீர்,
வருநீர் வையமுய்ய இவைபாடி யாடுமினே. 1737

Koviloor Digital Library

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்கே திருத்தொண்டுகளைச் செய்து கொண்டிருக்கும் திருத்தொண்டர்களே! ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் கருக்கொண்டு நீர் நிறைந்திருக்கின்ற மேகங்களின் நிறத்தினைப் பெற்ற திருமேனியை உடைய எம்பெருமான் ஸ்ரீசௌரிஇராசப் பெருமானைப் பற்றி போர்க்களத்தில் போரிடுதலையே இயல்பாகக் கொண்டிருக்கின்ற வேற்படையைச் செலுத்துவதில் வல்லவராகிய ''கலிகன்றி'' என்னும் திருமங்கை நகர்க்கரசனாகிய திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த நீர்மைமிக்க இனிய தமிழினால் ஆகிய இசையையுடைய சொல் மாலைகளாகிய இப்பத்துப் பாசுரங் களையும் கடல் சூழ்ந்த இவ்வுலகம் உய்வடையும் பொருட்டுப் பாடிப்பாடி ஆடி ஆடி மகிழ்ச்சி அடையுங்கள்.

10. வண்டார்
திருக்கண்ணபுரம்

கொச்சகக் கலிப்பா

*வண்டார்பூ மாமலர் மங்கை மணநோக்கம்
உண்டானே, உன்னை யுகந்துகந் துன்றனக்கே
தொண்டானேற்கு, என்செய்கின் றாய்சொல்லு நால்வேதம்
கண்டானே, கண்ண புரத்துறை யம்மானே! 1738

வண்டுகள் கூடி அமர்ந்திருக்கின்ற அழகிய சிறந்த தாமரை மலரில் தங்கியிருந்து வாழ்கின்ற ''திருமகள்'' என்னும் பெரிய பிராட்டியாருடன் மகிழ்ச்சியுடன் கூடிய மங்கலப் பார்வையினைக் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! நான்கு வேதங் களையும் கண்டறிந்து வெளியிட்ட எம்பெருமானே! ''திருக்கண்ண புரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிந்தருளும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானே! உன்னையே பெரிதும் விரும்பி விரும்பி உன் தனக்கே திருத்தொண்டு செய்து கொண்டிருக்கின்ற அடியேனுக்காக என்ன செய்வதாக எண்ணிக் கொண்டு இருக்கிறாய் என்பதை அடியேன் அறியுமாறு கூறியருள வேண்டுகின்றேன்.

Koviloor Digital Library

பெருநீரும் விண்ணும் மலையு முலகேழும்,
ஒருதாரா நின்னு ளொடுக்கிய நின்னையல்லால்
வருதேவர் மற்றுளரென் றென்மனத் திறையும்
கருதேன்நான், கண்ண புரத்துறை யம்மானே! 1739

''திருக்கண்ணபுரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானே! உலகப் பிரளயம் உண்டான காலத்தில் நிறைந்த நீரினைக் கொண்டிருக்கின்ற கடல்கள், ஆகாயம், மலைகள், ஏழு உலகங்கள் ஆகிய இவை யாவற்றையும் ஒருசேரத் தங்களின் திருவயிற்றில் அடக்கிக் கொண் டிருந்து காப்பாற்றியருளிப் பின்பு வெளியிட்ட பெருமைக்குரிய தெய்வமாகிய நின்னை அன்றி வேறு வேறு தெய்வங்கள் அன்றி மற்றும் சிலர் இருக்கின்றனர் என்று அடியேனின் மனத்தினில் ஒரு நொடிப் போதளவும் கூட அடியேன் நினைத்துப் பார்க்கவும் மாட்டேன்.

மற்றுமோர் தெய்வ முளதென் றிருப்பாரோ
டுற்றிலேன், உற்றது முன்னடி யார்க்கடிமை,
மற்றெல்லாம் பேசிலும் நின்திரு வெட்டெழுத்தும்
கற்று,நான் கண்ண புரத்துறை யம்மானே! 1740

''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிந்து கொண்டிருக்கும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானே! உம்மைக் காட்டிலும் மற்றோர் தெய்வம் ஒன்றுண்டு என்று கருதுபவர்களுடன் அடியேன் தொடர்பு கொண்டிருக்கமாட்டேன். அடியேன் உற்ற உறவாகத் தொடர்பு கொண்டிருப்பது உன்னுடைய அடியவர்களுக்கு அடிமைத் தொண்டு புரிவது மட்டுமேயாகும். அதுமட்டுமன்றி எப்பொழுது எங்கு எது பேசிடினும் அஃது தங்களின் திருவெட்டெழுத்து மந்திரமாகிய ''ஓம் நமோ நாராயணாய'' என்பதனைக் கற்றறிந்த பொருளாகும்.

பெண்ணானாள் பேரிளங் கொங்கையி னாரழல்போல்,
உண்ணாநஞ் சுண்டுகந் தாயை யுகந்தேன்நான்,
மண்ணாளா! வாள்நெடுங் கண்ணி மதுமலராள்
கண்ணாளா, கண்ண புரத்துறை யம்மானே! 1741

''திருக்கண்ணபுரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப்

Koviloor Digital Library

பெருமானே! பூமிப் பிராட்டியாருக்கும், வாள் போன்று கூர்மையான நீண்ட நெடுங்கண்களைத் தேன் நிறைந்த தாமரை மலரில் வீற்றிருக்கும் ''திருமகள்'' என்னும் பெரிய பிராட்டியாருக்கும் நாயகனாகத் திகழும் எம்பெருமானே! பெண்வடிவில் வந்த பூதனை என்னும் பேயின் முலையிலிருந்த நெருப்பினை ஒத்த நஞ்சினைக் கொண்ட பாலை உண்டு மகிழ்ச்சியுற்ற எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரானை அடியேன் கண்டு உவகை கொண்டு சேவிக்கப் பெற்றேன்.

பெற்றாரும் சுற்றமு மென்றிவை பேணேன்நான்,
மற்றாரும் பற்றிலே னாதலால் நின்னடைந்தேன்,
உற்றானென் றுள்ளத்து வைத்தருள் செய்கண்டாய்,
கற்றார்சேர் கண்ண புரத்துறை யம்மானே! 1742

மறைகளைக் கற்று ஓதுவதில் வல்ல அறிஞர் பெருமக்கள் வாழ்கின்ற ''திருக்கண்ணபுரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! அடியேன் என்னைப் பெற்றெடுத்த பெற்றோர்கள், உறவினர்கள் என்றுள்ள தொடர்பு கொண்டவர்களைப் பேணிப் பாதுகாக்க வேண்டுமென்று விரும்பியதில்லை. மற்று வேறு யாவரிடத்திலும் பற்றுதலைக் கொண்டிருக்கவில்லை. ஆதலால், அடியேன் உம்மையே அடைக்கலமாக அடைந்தேன். எனவே, அடியேனை ''இவன் நம் உறவினன்'' என்று உம் உள்ளத்தே வைத்திருக்குமாறு நீர் அடியேனிடத்தே திருவருள் செய்தல் வேண்டும் என்பதை அறிவீர்கள்.

ஏத்தியுன் சேவடி யெண்ணி யிருப்பாரை,
பார்த்திருந் தங்கு நமன்றமர் பற்றாது,
சோத்தம்நாம் அஞ்சுது மென்று தொடாமைநீ,
காத்திபோல் கண்ண புரத்துறை யம்மானே! 1743

''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானே! உம்முடைய திருவடிகளையே தம் மனத்தில் எண்ணி எண்ணி வணங்கிக் கொண்டிருக்கின்ற அடியவர் பெருமக்கள் அவர்களின் இறுதிக் காலத்தில் இயம தூதர்கள் வந்து அணுகாதவாறு, ''நாங்கள் தாழ்ந்தவர்கள் உம்மிடத்தே வந்து நெருங்குவதற்கு அஞ்சுகிறோம்'' என்று கூறி எம்மைத் தொடாதவாறு இருப்பதன் பொருட்டுத் தாங்களே அடியேனைப் பாதுகாத்து அருள்புரிந்து இருக்கின்றீர்கள்.

Koviloor Digital Library

வெள்ளைநீர் வெள்ளத் தணைந்த அரவணைமேல்,
துள்ளுநீர் மெள்ளத் துயின்ற பெருமானே,
வள்ளலே! உன்றமர்க் கென்றும் நமன்றமர்
கள்ளர்போல், கண்ண புரத்துறை யம்மானே! 1744

''திருக்கண்ணபுரம்'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானே! வெண்மைநிறம் கொண்ட நீரானது வெள்ளமாக நிறைந்திருக்கின்ற திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருள்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! வள்ளல் பெருமானே! உம்முடைய அடியவர்களிடத்தே இயம தூதர்கள் வருவதற்கு அஞ்சி திருடர்களைப் போன்று ஓடி ஒதுங்கி விடுவார்கள்.

மாணாகி வைய மளந்ததுவும், வாளவுணன்
பூணாகம் கீண்டதுவும் ஈண்டு நினைந்திருந்தேன்,
பேணாத வல்வினை யேனிட ரெத்தனையும்
காணேன்நான், கண்ண புரத்துறை யம்மானே! 1745

''திருக்கண்ணபுரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானே! முன்பு ஒருகால் ''வாமனன்'' என்னும் குள்ள வடிவு கொண்டு மகாபலிச் சக்கரவர்த்தியின் வேள்வித்தீயின் முன்பு சென்று, மூவடி மண்ணை இரந்து பெற்றுப் பின்பு திரிவிக்ரம அவதாரம் மேற்கொண்டு இவ்வுலகம் முழுவதையும் அளந்ததுவும், ''இரணியன்'' என்னும் அசுரனின் மார்பினை இருகூறாகப் பிளந்ததுவும் இப்போது இங்கே அடியேன் எண்ணிக் கொண்டு இருக்கின்றேன். ஆகையினால் அடியேன் இந்த ஆத்மாவைப் பாதுகாக்காமல் இருந்துவிட்டு தீவினைகளையே செய்து கொண்டிருக்கின்ற அடியேனுடைய பாவங்களெல்லாம் தீர்ந்து போனதை அடியேன் இப்போது காண்கின்றேன்.

நாட்டினா யென்னை யுனக்குமுன் தொண்டாக,
மாட்டினே னத்தனையே கொண்டென் வல்வினையை,
பாட்டினா லுன்னையென் நெஞ்சத் திருந்தமை
காட்டினாய், கண்ண புரத்துறை யம்மானே! 1746

''திருக்கண்ணபுரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானே!

Koviloor Digital Library

அடியேனை முன்னமேயே முதன் முதலாக உனக்குத் திருத்தொண்டு புரியும் தொண்டனாக அடிமைப்படுத்தி நிலைப்படுத்திக் கொண் டீர்கள்! அந்தத் திருவருள் காரணமாக அடியேனின் அக்கொடிய வினைகள் யாவும் நீங்கப் பெற்றேன். அடியேனைப் பாசுரங்கள் பலவற்றைப் பாடச்செய்து, அதன் வாயிலாகத் தேவரீர் எக்காலத் திலும் அடியேனின் உள்ளத்தில் இருந்து கொண்டு இருப்பதை எமக்கு அறிவித்திருக்கிறீர்கள்.

*கண்டசீர்க் கண்ண புரத்துறை யம்மானை,
கொண்டசீர்த் தொண்டன் கலிய னொலிமாலை,
பண்டமாய்ப் பாடு மடியவர்க் கெஞ்ஞான்றும்,
அண்டம்போ யாட்சி யவர்க்க தறிந்தோமே. 1747

''திருக்கண்ணபுரம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌரிராசப் பெருமானைக் கண்டு கொண்டிருக்கின்ற சிறப்புமிக்க சீர்த்தொண் டனாகிய ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலிநயத்துடன் கூடிய இப்பத்துப் பாசுரங்களையும் ஒரு ''பெருஞ் செல்வம்'' என்று கருதிக் கொண்டு பாடிக் கொண்டிருக்கின்ற அடியவர்களுக்கு எக்காலத்திலும் திருப்பரமபதத்திலிருந்து கொண்டு விண்ணுலகினை ஆட்சிபுரிந்து கொண்டிருப்பார்கள் என்பதே அவர்கள் பெற்ற பேறு என்பதனை அடியோங்கள் அறிந்து கொண்டோம்.



Koviloor Digital Library

ஒன்பதாம் பத்து

1. வங்கமா முந்நீர்
திருக்கண்ணங்குடி

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*வங்கமா முந்நீர் வரிநிறப் பெரிய
வாளர வினணை மேவி,
சங்கமா ரங்கைத் தடமல ருந்திச்
சாமமா மேனியென் தலைவன்,
அங்கமா றைந்து வேள்விநால் வேதம்
அருங்கலை பயின்று,எரி மூன்றும்
செங்கையால் வளர்க்கும் துளக்கமில் மனத்தோர்
திருக்கண்ணங் குடியுள்நின் றானே. 1748

மரக்கலங்கள் நிறைந்து செல்கின்ற பெரிய கடல்நீரின்மீது வரிகள் நிறைந்து காணப்படுகின்ற ஒளிமிக்கதாய்த் திகழ்கின்ற ''திருஅனந்தாழ்வான்'' என்னும் இனிய நல்ல படுக்கையின்மீது திருக்கண் வளர்ந்தருள்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தன் இடது திருக்கரத்தில் சங்கை ஏந்திக் கொண்டு இருப்பவனாகித் தன் திருநாபியில் தாமரை மலரைக் கொண்டிருக்கின்றான். நீலநிறத் திருமேனியினையுடைய எம்பெருமான் ஆறு அங்கங்கள், ஐந்து வேள்விகள் நான்கு வகை வேதங்கள் ஆகிய அரிய கலைகள் பலவற்றைக் கற்றுக் கொண்டு, மூவகைத் தீயினால் வேள்விகளை இயற்றுகின்ற கலக்கம் என்பது சிறிதுமில்லாத தூய்மையான மனத்தினையுடைய அந்தணர்கள் வாழ்கின்ற ''திருக்கண்ணங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்றான்.

கவளமா கதத்த கரியுய்யப் பொய்கைக்
கராம்கொளக் கலங்கி,உள் நினைந்து
துவளமேல் வந்து தோன்றிவன் முதலை
துணிபடச் சுடுபடை துரந்தோன்,
குவளைநீள் முளரி குமுதமொண் கழுநீர்
கொய்ம்மலர் நெய்தலொண் கழனி,
திவளும்மா ளிகைசூழ் செழுமணிப் புரிசைத்
திருக்கண்ணங் குடியுள்நின் றானே. 1749

Koviloor Digital Library

கவளம் கவளமாக உணவைப் பெற்றுக் கொள்கின்ற மதநீரையுடைய யானை ஒன்று ஒரு குளத்தில் முதலையின் வாய்ப்பட்டுச் செய்வதறியாது கலங்கித் துன்புற்றுக் கொண்டிருக்கும்போது, தம் மனத்தினுள்ளே எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைச் சிந்தித்து, ''ஆதிமூலமே!'' என்று கூறி அழைத்தபோது அந்த யானையானது பிழைக்கும் பொருட்டு அங்கு விரைந்து எழுந்தருளி, தன்னுடைய திருவாழியாழ்வானை அந்த முதலையானது துண்டு துண்டாகிப் போகுமாறு செலுத்தி அழித்தருளினான். இத்தகைய எம்பெருமான் குவளைமலர், தாமரைமலர், ஆம்பல்மலர், செங்கழுநீர்ப் பூக்கள், நெய்தல் பூக்கள் ஆகிய மலர்களால் அழகு பெற்றிருக்கின்ற நீர்வளம் மிக்க குளிர்ந்த வயல்களைக் கொண்டும், மணிகளாலான மாளிகைகள் சூழ்ந்திருக்கின்ற சிறந்த இரத்தினங்களாலான மதில்களைக் கொண்டும் விளங்குகின்ற ''திருக்கண்ணங்குடி'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிந்து கொண்டிருக்கின்றான்.

வாதைவந் தடர வானமும் நிலனும்
 மலைகளும் அலைகடல் குளிப்ப,
மீதுகொண் டுகளும் மீனுரு வாகி
 விரிபுனல் வரியகட்[1] டொளித்தோன்,
போதலர் புன்னை மல்லிகை மௌவல்
 புதுவிரை மதுமல ரணைந்து,
சீதவொண் தென்றல் திசைதொறும் கமழும்
 திருக்கண்ணங் குடியுள்நின் றானே. 1750

உலகப் பிரளயம் உண்டான காலத்தில் துன்பம் உண்டாகி அதிகரிக்க, ஆகாயம், பூமி, மலைகள் ஆகிய இவையாவும் அலை வீசுகின்ற கடலினுள்ளே அழுந்திவிட, அவைகளைக் காப்பாற்றும் பொருட்டு அக்கடலில் மகிழ்ச்சியுடன் உலவி வருகின்ற ''மீன்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு அக்கடல்நீருடன் அவைகளைத் தன் அடிவயிற்றில் அடக்கிக் காத்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ''போது'' என்னும் பருவநிலையினின்றும் மலர்கின்ற புன்னைமலர்கள், மல்லிகை, முல்லை ஆகிய மலர்களினின்றும் வீசுகின்ற மணமும், தேனும் நிறைந்துள்ளன. அத்தகைய மலர்களினூடே சென்று வீசுகின்ற தென்றற் காற்றானது அனைத்துத் திசைகளிலும் நறுமணத்தினைப் பரப்பிக் கொண்டிருக்

Koviloor Digital Library

கின்ற ''திருக்கண்ணங்குடி'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளப் பெற்றுச் சேவை சாதித்தருள்கின்றான்.

வென்றிசேர் திண்மை விலங்கல்மா மேனி
வெள்ளெயிற் றொள்ளெரித் தறுகண்
பன்றியாய் அன்று பார்மகள் பயலை
தீர்த்தவன் பஞ்சவர் பாகன்,
ஒன்றலா வுருவத் துலப்பில்பல் காலத்
துயர்கொடி யொளிவளர் மதியம்,
சென்றுசேர் சென்னிச் சிகரநன் மாடத்
திருக்கண்ணங் குடியுள்நின் றானே. 1751

முன்பொரு காலத்தில் வலிமை மிக்க வெற்றியைக் கொண்டுள்ள பெரிய மலைபோன்ற வடிவு கொண்டுள்ள திருமேனியினையுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் வெண்மையான தந்தங்களையும், தீ உமிழும் கண்களையும் கொண்டிருக்கின்ற வலிமை மிக்க ''வராகம்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு, உலகப் பிரளயத் தினின்றும் பூமிப்பிராட்டியாருக்குண்டான துன்பத்தினைப் போக்கிப் பாதுகாத்து, அப்பிராட்டிக்குண்டாகியிருந்த ''பசலை'' என்னும் நோயைப் போக்கினான். பாண்டவர்களுக்குத் தேரோட்டியாகச் செயல்புரிந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், பல்வகை உருவங்களைக் கொண்டு நீண்ட நெடுங்காலம் நிலைத்திருக்கின்ற கொடிகளைக் கொண்டு, சந்திர மண்டலத்தினைத் தொடுகின்ற அளவிற்கு உயர்ந்து ஓங்கிய உச்சியினையுடைய நல்ல மாடமாளிகை களை உடைய ''திருக்கண்ணங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்றான்.

மன்னவன் பெரிய வேள்வியில் குறளாய்
மூவடி நீரொடும் கொண்டு,
பின்னுமே ழுலகும் ஈரடி யாகப்
பெருந்திசை யடங்கிட நிமிர்ந்தோன்,
அன்னமென் கமலத் தணிமலர்ப் பீடத்
தலைபுன லிலைக்குடை நீழல்,
செந்நெலொண் கவரி யசையவீற் றிருக்கும்
திருக்கண்ணங் குடியுள்நின் றானே. 1752

மகாபலிச்சக்கரவர்த்தியின் பெரிய வேள்வியின் முன்பு ''வாமனம்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு சென்று தன்

Koviloor Digital Library

திருவடியினால் மூன்றடி நிலத்தினை நீர்கொண்டு இரந்து பெற்று விட்டுப் பின்பு ஏழு உலகத்தினையும் இரண்டு அடிகளால் ''திரிவிக்ரமன்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு அளந்து, பெருமை பெற்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், அன்னப்பறவை மென்மையான தாமரை மலராகிய ஆசனத்தில், அலைகள் வீசுகின்ற நீரினில் உண்டான இலையாகிய குடையின் நிழலில் அழகிய செந்நெற்பயிர்கள் கவரி வீசிக் கொண்டிருக்கின்ற வளம்மிக்க ''திருக்கண்ணங்குடி'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்றான்.

மழுவினால் அவனி அரசைமூ வெழுகால்
மணிமுடி பொடிபடுத்து, உதிரக்
குழுவுவார் புனலுள் குளித்துவெங் கோபம்
தவிர்ந்தவன் குலைமலி கதலிக்,
குழுவும்வார் கமுகும் குரவும்நற் பலவும்
குளிர்தரு சூதம்மா தவியும்,
செழுமையார் பொழில்கள் தழுவுநன் மாடத்
திருக்கண்ணங் குடியுள்நின் றானே. 1753

'மழு' என்னும் ஆயுதத்தினைக் கொண்டு இருபத்தொரு தலை முறைகள் அரசர்களின் மணிமுடிகளைப் பொடிப் பொடியாக்கி, இரத்த வெள்ளத்தில் குளித்துத் தன் பெருஞ்சினத்தைப் போக்கிக் கொண்ட ''பரசுராமர்'' திருஅவதாரம் மேற்கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் குலைகள் நிறைந்திருக்கின்ற வாழைமரங்கள் செறிந்த தோட்டங்களும், பாக்குமரம், பலாமரம், மாமரம், குருக்கத்தி மரம் ஆகிய நல்ல பலன்களைத் தரக்கூடிய மரங்கள் நிறைந்து வளர்ந்திருக்கின்ற வளம் மிக்க சோலைகள் தழுவிக் கொண்டிருக்கும் நல்ல மாடமாளிகைகளையுடைய ''திருக்கண்ணங்குடி'' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்றான்.

வானுளா ரவரை வலிமையால் நலியும்
மறிகடல் இலங்கையார் கோனை,
பானுசேர் சரத்தால் பனங்கனி போலப்
பருமுடி யுதிரவில் வளைத்தோன்,
கானுலா மயிலின் கணங்கள்நின் றாடக்
கணமுகில் முரசநின் றதிர,
தேனுலா வரிவண் டின்னிசை முரலும்
திருக்கண்ணங் குடியுள்நின் றானே. 1754

Koviloor Digital Library

விண்ணுலகிலுள்ள இந்திரன் முதலிய தேவர்கள் யாவர்க்கும் தன் தவவலிமையைக் கொண்டு துன்பப்படுத்திக் கொண்டிருந்த இலங்கை மாநகர்க்கு அரசனாகிய இராவணன் என்னும் அரக்கனின் பத்துத் தலைகளும் பனம்பழம் கீழே விழுவதுபோல அவனது உடலி னின்றும் அற்றுக் கீழே விழும்படியாகச் செய்தற் பொருட்டுச் சூரியனை ஒத்த அம்புகளைத் தொடுத்து வில்லை வளைத்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான், காட்டிலே உலவிக் கொண்டிருக்கின்ற மயில்கள் நின்று நடனமாட, மேகக்கூட்டங்கள் அந்நடனத்திற் கேற்றாற் போன்று இடி இடிப்பதன் வாயிலாக முரசு கொட்டிட, தேனையுண்ட வரிகளை உடைய வண்டுகள் மேற்கூறிய இரண் டிற்கும் ஏற்ற வகையில் இன்னிசையை இசைத்துக் கொண்டிருக்கின்ற ''திருக்கண்ணங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளப் பெற்று சேவை சாதித்துக் கொண்டிருக் கின்றான்.

அரவுநீள் கொடியோன் அவையுளா சனத்தை
அஞ்சிடா தேயிட, அதற்குப்
பெரியமா மேனி யண்டமூ டுருவப்
பெருந்திசை யடங்கிட நிமிர்ந்தோன்,
வரையின்மா மணியும் மரகதத் திரளும்
வயிரமும் வெதிருதிர் முத்தும்,
திரைகொணர்ந் துந்தி வயல்தொறும் குவிக்கும்
திருக்கண்ணங் குடியுள்நின் றானே. 1755

பாம்புக் கொடியையுடைய துரியோதனன் தன் சபையில் பொய்யானதோர் இடம் அமைத்திருக்க அஃதறிந்து வைத்திருந்த எம் பெருமான் ஸ்ரீகண்ணபிரான் சிறிதும் அஞ்சாமல் அனைத்துத் திசைகளும் அடங்கும்படியாக அண்டங்களெல்லாம் ஊடுருவி நிற்குமாறு பெரியதோர் திருமேனியை (விசுவரூபம்)க் கொண்டான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் மலையையொத்த பெரிய மணிகளும், மரகதங்களும், வயிரங்களும், மூங்கில்களிலிருந்து உதிர்ந்து வரும் முத்துக்களும் ஆகிய இவை யாவற்றையும் ஆறுகளில் ஓடிவரும் வெள்ளப்பெருக்குடன் ஓடிவந்து சேர்கின்ற வளமிக்க வயல்கள் நிறைந்த ''திருக்கண்ணங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளப் பெற்றுச் சேவை சாதித்து அருள்கின்றான்.

Koviloor Digital Library

பன்னிய பாரம் பார்மகட் கொழியப்
பாரத மாபெரும் போரில்,
மன்னர்கள் மடிய மணிநெடுந் திண்டேர்
மைத்துனர்க் குய்த்தமா மாயன்,
துன்னுமா தவியும் சுரபுனைப் பொழிலும்
சூழ்ந்தெழு செண்பக மலர்வாய்,
தென்னவென் றளிகள் முரன்றிசை பாடும்
திருக்கண்ணங் குடியுள்நின் றானே. 1756

பூமிப்பிராட்டியாரின் பாரம் நீங்கும்படியாக மிகப் பெரியதாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற மாபாரதப் போரின்போது, துரியோதனன் முதலிய மன்னர்களெல்லாரும் மடியும் பொருட்டு, மைத்துனராகிய அருச்சுனனின் மணிகள் பூட்டிய உறுதிமிக்க தேரைச் செலுத்தியருளிய மாமாயனாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் மாதவி, சுரபுன்னை மரங்கள் நிறைந்த சோலைகளுடன் சூழ்ந்திருக்கின்ற செண்பகமலர்களில் அமர்ந்திருக்கின்ற வண்டுகள் 'தென்ன தென' என்று இசையினை இசைத்துக் கொண்டிருக்கின்ற ''திருக் கண்ணங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளப் பெற்றுச் சேவை சாதித்தருள்கின்றான்.

*கலையுலா அல்குல் காரிகை திறத்துக்
கடல்பெரும் படையொடும் சென்று,
சிலையினால் இலங்கை தீயெழச் செற்ற
திருக்கண்ணங் குடியுள்நின் றானை,
மலைகுலா மாட மங்கையர் தலைவன்
மானவேல் கலியன்வா யொலிகள்,
உலவுசொல் மாலை யொன்பதோ டொன்றும்
வல்லவர்க் கில்லைநல் குரவே. 1757

அழகிய ஆடையை உடுத்திய அல்குலையுடைய சீதாபிராட்டிக்காகப் பெரும் படையுடன் சென்று கடலைக் கடந்து தன் வில்லாற்றலைக் கொண்டு இலங்கை மாநகரம் தீக்கிரையாகுமாறு செய்து, அங்குள்ள அரக்கர்கள் அழியும்படிச் செய்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் ''திருக்கண்ணங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்றான். இத்தகைய இராமபிரானைப் பற்றி மலையையொத்த மாடமாளிகைகள் நிறைந்த 'திருமங்கை' என்னும் நகரின் மன்னனாகிய வேலாயுதத்தை உடைய

Koviloor Digital Library

'கலியன்' என்னும் திருமங்கை ஆழ்வாரின் திருவாயினின்றும் ஒலித்து, அடியவர்களின் மனத்தில் உலவிக் கொண்டிருக்குமாறு அருளிச் செய்த பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்ல அறிஞர் பெருமக்கட்கு வறுமை என்பதே இல்லாததாகிவிடும்.

உ. பொன்னிவர் மேனி

திருநாகை

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*பொன்னிவர் மேனி மரகத த்தின்
பொங்கிளஞ் சோதி யகலத்தாரம்
மின்,இவர் வாயில்நல் வேத மோதும்
வேதியர் வானவ ராவர்தோழீ,
என்னையும் நோக்கியென் னல்குலும் நோக்கி
ஏந்திளங் கொங்கையும் நோக்குகின்றார்,
அன்னையென் னோக்குமென் றஞ்சு கின்றேன்
அச்சோ ஒருவர் அழகியவா! 1758

தோழீ! இந்த எம்பெருமானின் திருமேனி பொன் நிறத்தினைக் கொண்டுள்ளது. மரகதத்தின் பச்சை ஒளி போன்றுள்ள ஒளியினை யுடைய அகன்ற திருமார்பில் சார்த்தியிருக்கின்ற இளஞ்சோதியானது மின்னலைப் போன்று பிரகாசமாக இருக்கின்றது. இவரின் திருவாயினின்றும் நல்ல சாம வேதத்தையே ஓதிக் கொண்டிருக்கின்ற அந்தணராகத் திகழ்கின்றார். இவரே விண்ணுலகத் தேவராகவும் விளங்குகிறார். இத்தகைய எம்பெருமான் சௌந்தர்யராஜன் அடியேனை உற்று நோக்கி, என் அல்குலையும் உற்று நோக்கி, ஏந்திய வாறிருக்கின்ற என் இரு முலைகளையும் உற்று நோக்கிக் கொண்டி ருக்கிறார். இந்நிலையினைக் கண்டு என்னவென்று எண்ணுவாளோ என்று எண்ணுகின்ற என் உள்ளத்தின் செயல் பற்றியும் அஞ்சுகிறேன். இத்தகைய எம்பெருமானின் திருமேனியின் ஒப்பற்ற அழகானது இருக்குமாறுதான் என்னே! இஃதென்ன ஆச்சரியம்.

தோடவிழ் நிலம் மணங்கொ டுக்கும்
சூழ்புனல் சூழ்குடந் தைக்கிடந்த,
சேடர்கொ லென்று தெரிக்க மாட்டேன்
செஞ்சுட ராழியும் சங்குமேந்தி,

Koviloor Digital Library

பாடக மெல்லடி யார்வ ணங்கப்
பன்மணி முத்தொடி லங்குசோதி,
ஆடகம் பூண்டொரு நான்கு தோளும்
அச்சோ ஒருவர் அழகியவா! 1759

மலர்ந்திருக்கின்ற இதழ்களைக் கொண்டுள்ள நீலோற்பல மலர்கள் மணம் வீசுகின்ற தீர்த்தங்களால் சூழ்ந்திருக்கின்ற ''திருக்குடந்தை'' என்னும் திருத்தலத்தில் திருக்கண் வளர்ந்தருளிய இந்த எம்பெருமான் இளைஞர்தானோ! என்று அடியேனால் தெரிந்து கொள்ள இயலவில்லை. சிவந்த ஒளியையுடைய திருச்சக்கரத் தினையும், திருச்சங்கினையும் தம் திருக்கரங்களில் ஏந்திக் கொண்டிருக்கின்ற எம்பெருமானைத் தம் பாதங்களில் ''பாடகம்'' என்னும் ஆபரணத்தை அணிந்து கொண்டுள்ள இளம்பெண்கள் வணங்கிக் கொண்டிருக்கப் பல்வகை இரத்தினங்களோடு, முத்துகளையும் சேர்த்து, ஒளி வீசுகின்ற பொன்னாபரணங்களையும் அணிந்து கொண்டிருக்குமளவில் நான்கு திருத்தோள்களையுமுடைய இந்த எம்பெருமான் ஸ்ரீசௌந்தரியராசப் பெருமான் ''திருநாகை'' என்னும் திருநாகப்பட்டினம் என்னும் திருத்தலத்தில் எழுந்தருளி யுள்ளவனாகி, ஒப்பற்ற அழகானது இருக்குமாறுதான் என்னே! இஃதென்ன ஆச்சரியம்!

வேயிருஞ் சோலை விலங்கல் சூழ்ந்த
மெய்ய மணாளர்இவ் வையமெல்லாம்,
தாயின நாயக ராவர் தோழி!
தாமரைக் கண்கள் இருந்தவாறு,
சேயிருங் குன்றம் திகழ்ந்த தொப்பச்
செவ்விய வாகி மலர்ந்தசோதி,
ஆயிரம் தோளொ டிலங்கு பூணும்
அச்சோ ஒருவர் அழகியவா! 1760

தோழீ! மூங்கில்கள் நிறைந்துள்ள சோலைகளையுடைய மலைகளால் சூழ்ந்திருக்கின்ற ''திருமெய்யம்'' என்னும் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் மணவாளப் பெருமான் இவ்வுலகம் முழுவதையும் தாவி அளந்து கொண்ட தலைவரல்லவோ! இந்த எம்பெருமான் இவருடைய தாமரைக் கண்கள் அமைந்து இருக்கின்ற அழகுதான் என்னே! உயர்ந்து, பரந்து, விரிந்திருக்கின்ற அளவில் திகழ்ந்து கொண்டிருக்கும் மலைகளுக்

Koviloor Digital Library

கேற்றவாறு அமைந்துள்ள அழகிய ஒளியையுடையவனாகி ஆயிரம் திருத்தோள்களுடன் கூடித் திருவாபரணங்களைச் சூடியிருக்கின்ற இந்த எம்பெருமானின் ஒப்பற்ற அழகானது இருக்குமாறுதான் என்னே! இஃதென்ன ஆச்சரியம்!

வம்பவி ழும்துழாய் மாலை தோள்மேல்
கையன ஆழியும் சங்கும்ஏந்தி,
நம்பர்நம் மில்லம் புகுந்து நின்றார்
நாகரி கர்பெரி துமிளையர்,
செம்பவ ளமிவர் வாயின் வண்ணம்
தேவ ரிவர துருவம்சொல்லில்,
அம்பவ ளத்திர ளேயு மொப்பர்
அச்சோ ஒருவர் அழகியவா! 1761

நறுமணம் வீசுகின்ற திருத்துழாய் மாலையைத் தம் திருத் தோள்களில் சூடிக் கொண்டிருக்கிறார். திருக்கரங்களில் திருவாழி யினையும் திருச்சங்கினையும் கொண்டிருக்கின்றார். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீசௌந்தர்ய இராசப் பெருமான் நம்மிடம் மிகுந்த காதல் கொண்டு தாமாகவே நமது இல்லம் தேடி வந்தார். இவர் நாகரிகம் மிக்கவராகிப் பெரிதும் இளைஞராக இருக்கிறார். இவருடைய திருவாயின் நிறம் பவளத்தின் நிறம் தெய்வத் தன்மையுடைய இவரின் திருமேனி பற்றி எடுத்துச் சொல்வதானால் அழகிய பவளங்கள் கூட்டங் கூட்டமாக நிறைந்திருப்பதை ஒத்திருக்கின்றார். இத்தகைய எம்பெருமானின் ஒப்பற்ற அழகானது இருக்குமாறுதான் என்னே! இஃதென்ன ஆச்சரியம்!

கோழியும் கூடலும் கோயில் கொண்ட
கோவல ரேயொப்பர் குன்றமன்ன,
பாழியும் தோளுமோர் நான்கு டையர்
பண்டிவர் தம்மையும் கண்டறியோம்,
வாழிய ரோவிவர் வண்ண மெண்ணில்
மாகடல் போன்றுளர் கையில்வெய்ய,
ஆழியொன் றேந்தியோர் சங்கு பற்றி
அச்சோ ஒருவர் அழகியவா! 1762

உறையூர், மதுரை ஆகிய திருத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் போன்று இவர் இருக்கிறார். குன்றையொத்த வலிமை மிக்க நான்கு

Koviloor Digital Library

திருத்தோள்களைக் கொண்டிருக்கிறார். இவரை இதற்கு முன்பு யாம் கண்டதில்லை. இவர் பல்லாண்டுக் காலம் வாழ்வாராக! இவர் திருமேனி வடிவமானது பெருமை மிக்க பெரிய கடலின் நிறத்தினை ஒத்து இருக்கிறார். அவருடைய திருக்கரங்களில் ஒன்றான வலது திருக்கரத்தில் திருவாழியையும் மற்றும் ஓர் திருக்கரமான இடது திருக்கரத்தில் திருச்சங்கினையும் கொண்டு விளங்குகின்றார். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் திருமேனியின் ஒப்பற்ற அழகானது இருக்குமாறுதான் என்னே! இஃதென்ன ஆச்சரியம்!

வெஞ்சின வேழம் மருப்பொ சித்த
　　வேந்தர்கொல் ஏந்திழை யார்மனத்தை,
தஞ்சுடை யாளர் கொல்யா னறியேன்
　　தாமரைக் கண்க ளிருந்தவாறு,
கஞ்சனை யஞ்சமுன் கால்வி சைத்த
　　காளையா ரவர்கண் டார்வணங்கும்,
அஞ்சன மாமலை யேயு மொப்பர்
　　அச்சோ ஒருவர் அழகியவா! 1763

கடுங்கோபத்துடன் கூடிய ‘‘குவலயாபீடம்’’ என்னும் கொடிய யானையின் வெண்மையான தந்தத்தினை ஒடித்த பெருமைக்குரிய மன்னர் இவர்தானோ! ஆபரணங்களை அணிந்து கொண்டிருக்கும் பெண்களின் மனத்தினைத் தஞ்சமாகக் கொண்டிருப்பவரோ இவர்! இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் தாமரைக் கண்களின் அழகுதான் என்னே! ‘கம்சன்’ என்னும் அசுரனைத் தம் திருவடிகளால் உதைத்து அழித்த பெருமைக்குரிய காளையையொத்த வீரத்தினைப் பெற்ற இப்பெருமானைக் கண்டவர்கள் யாவரும் வணங்கக்கூடிய மைந்நிறத்தினையொத்த பெரிய மலையைப் போன்றிருக்கின்ற ஸ்ரீசௌந்தர்யப் பெருமானின் திருமேனியின் ஒப்பற்ற அழகானது இருக்குமாறுதான் என்னே! இஃதென்னே ஆச்சரியம்.

பிணியவிழ் தாமரை மொட்ட லர்த்தும்
　　பேரரு ளாளர்கொல்? யானறியேன்,
பணியுமென் நெஞ்சமி தென்கொல் தோழி!
　　பண்டிவர் தம்மையும் கண்டறியோம்,
அணிகெழு தாமரை யன்ன கண்ணும்
　　அங்கையும் பங்கய மேனிவானத்து,
அணிகெழு மாமுகி லேயு மொப்பர்
　　அச்சோ ஒருவர் அழகியவா! 1764

Koviloor Digital Library

தோழி! 'பாவம்' என்கின்ற கொடியநோய் நீங்கப் பெற்றவர்களின் இதயத் தாமரையை மலரச் செய்கின்ற சூரியனைப் போன்ற பேரருளாளப் பெருமான் தானோ இவர்! அடியேன் இதற்கு முன்பு இவரைக் கண்டதில்லை. அடியேனின் மனம் இவரையே வணங்கிக் கொண்டிருப்பது எதன் பொருட்டோ! இதற்கும் முன்பு இவரைக் கண்டு அறிந்திருக்கவில்லை. அழகுமிக்க தாமரையை ஒத்திருக் கின்றன இவருடைய இரண்டு திருக்கண்களும், இவருடைய இரண்டு திருக்கரங்களும் தாமரையினையே ஒத்திருக்கின்றன. இவருடைய திருமேனியின் அழகோ ஆகாயத்திலுள்ள மேகக்கூட்டங்களின் நிறத்தினை ஒத்திருக்கும். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீசௌந்தரியப் பெருமானின் திருமேனியின் ஒப்பற்ற அழகு என்பது இருக்குமாறு தான் என்னே! இஃதென்னே ஆச்சரியம்!

மஞ்சுயர் மாமதி தீண்ட நீண்ட
மாலிருஞ் சோலைம ணாளர்வந்து,என்
நெஞ்சுள்ளும் கண்ணுள்ளும் நின்று நீங்கார்
நீர்மலை யார்கொல்? நினைக்கமாட்டேன்,
மஞ்சுயர் பொன்மலை மேலெ ழுந்த
மாமுகில் போன்றுளர் வந்துகாணீர்,
அஞ்சிறைப் புள்ளுமொன் றேறி வந்தார்
அச்சோ ஒருவர் அழகியவா! 1765

மேகக்கூட்டங்கள் இருக்கின்ற அளவும் நெடிதுயர்ந்துள்ள சந்திரன் படும்படியாக மிகவும் உயர்ந்துள்ள "திருமாலிருஞ்சோலை மலை" என்னும் திருத்தலத்தில் எழுந்தருளிய எம்பெருமான் அழகிய மணவாளப் பெருமாள் இங்கே வந்து என் மனத்தினுள்ளேயும் என் கண்களின் உள்ளேயும் இருந்து கொண்டு என்னிடமிருந்து நீங்காம லேயே இருக்கின்றார். "திருநீர்மலை" என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிந்து கொண்டிருக்கும் எம்பெருமான் தானோ இவர்! இவரைப் பற்றி அடியேனால் முழுமையாக உள்ளபடிக்கு எண்ணி அறிந்து கொள்ள முடிய வில்லை. அழகிய சிறகுகளை உடைய பறவையாகிய பெரிய திருவடியின்மீது இவர் ஏறி வருகின்ற திருக்காட்சியானது பொன்மலைமீது தவழ்ந்து கொண்டிருக்கின்ற மேகக்கூட்டங்களைப் போன்றிருப்பதை இங்கே வந்து காண்பீர்களாக! இத்தகைய எம்பெருமான் ஸ்ரீசௌந்தரியப் பெருமானின் திருமேனியின் அழகானது இருக்குமாறுதான் என்னே! இஃதென்னே ஆச்சரியம்!

Koviloor Digital Library

எண்டிசை யுமெறி நீர்க்கடலும்
ஏழுல குமுட னேவிழுங்கி,
மண்டியோ ராலிலைப் பள்ளி கொள்ளும்
மாயர்கொல் மாயம் அறியமாட்டேன்,
கொண்டல்நன் மால்வரை யேயு மொப்பர்
கொங்கமலர் தாமரைக் கண்ணும்வாயும்,
அண்டத் தமரர் பணிய நின்றார்
அச்சோ ஒருவர் அழகியவா! 1766

முன்பு உலகப் பிரளயம் உண்டான காலத்தில் எட்டுத்திசைகள், அலைவீசுகின்ற நீரைப் பெற்றிருக்கின்ற கடல்கள், ஏழு உலகங்கள் ஆகிய யாவற்றையும் ஒருங்கு சேர விழுங்கிப் பின்பு ஓர் ஆலிலை யின்மீது திருக்கண் வளர்ந்தருள்கின்ற மாயச் செயல்களைச் செய்து கொண்டிருக்கின்ற மாயவனின் மாயச்செயல்களை அடியேனால் அறிந்து கொள்ள இயலவில்லை. இவர் நீரைக் கொண்டிருக்கின்ற மேகக்கூட்டங்களையும், பெரிய மலையினையும் ஒத்திருக்கின்றார். இவருடைய திருக்கண்களும், திருப்பவளவாயும் மணம்மிக்க தாமரை மலராகவே இருக்கின்றன. விண்ணுலகிலுள்ள தேவர்கள் யாவரும் வந்து பணிந்து வணங்கி நிற்கின்றனர். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீசௌந்தரியப் பெருமானின் திருமேனியின் திருவழகு இருக் கின்றவாறு தான் என்னே! இஃதென்னே ஆச்சரியம்!

*அன்னமும் கேழலும் மீனு மாய
ஆதியை நாகை யழகியாரை,
கன்னிநன் மாமதிள் மங்கை வேந்தன்
காமரு சீர்க்கலி கன்றி,குன்றா
இன்னிசை யால்சொன்ன செஞ்சொல் மாலை
ஏழு மிரண்டுமொ ரொன்றும்வல்லார்,
மன்னவ ராயுல காண்டு மீண்டும்
வானவ ராய்மகிழ் வெய்துவரே. 1767

அன்னப்பறவை, வராகம், மீன் ஆகிய திருஅவதாரங்கள் மேற்கொண்டு ஆதிப்பிரானாகிய ''திருநாகை'' என்னும் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசௌந்தர்யப் பெருமானைப்பற்றி, அழகிய திருமதிள்களை யுடைய ''திருமங்கை'' என்னும் நகர்க்கு மன்னனாகிய சிறந்த திருக்குணங்களைக் கொண்டிருக்கின்ற ''கலியன்'' திருமங்கை

Koviloor Digital Library

ஆழ்வார் இன்னிசையுடன் அருளிச் செய்த வளம்மிக்க சொற்களைக் கொண்டுள்ள இப்பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்ல பெருமக்கள் மன்னர்களாகி இவ்வுலகினை ஆண்டு, விண்ணுலகு சென்று அங்குள்ள தேவர்களாகிச் சிறப்புடன் வாழ்ந்து கொண்டிருப்பர்.

3. தன்னை நைவிக்கிலேன்
திருப்புல்லாணி

கலி நிலைத்துறை

*தன்னை நைவிக் கிலேன்வல் வினையேன் தொழுதுமெழு,
பொன்னை நைவிக்கு மப்பூஞ் செருந்தி மணிநீழல்வாய்,
என்னைநை வித்தெழில் கொண்டகன் றபெரு மானிடம்,
புன்னைமுத் தம்பொழில் சூழ்ந்தழ காய புல்லாணியே. 1768

என் நெஞ்சமே! 'பிரிவு' என்னும் துயரத்தின் காரணமாக முடிந்துவிடக் கூடிய அடியேனின் வாழ்நாள் முடிந்து போகாது இருக்குமாறு மேன்மேலும் வாழ்வதற்குரிய பாவச்செயல்களைச் செய்துள்ளேன். என்னைப்பற்றி அடியேன் அறிந்து கொள்ளவில்லை. பொன்னைத் தோற்கடிக்கும்படியான அளவில் பூத்திருக்கின்ற சுரபுன்னை மலர்களின் மணம் வீசுகின்ற மரங்களின் நிழலிலே என்னை இருக்குமாறு ஈடுபடுத்திவிட்டு என் மேனியின் அழகினைக் கவர்ந்து கொண்டு சென்றுவிட்ட, அதனால் பிரிந்து சென்ற எம் பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரியும் திருத்தலம் என்பது முத்துகளைச் சொரிகின்ற சுரபுன்னை மரங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்திருக்கின்ற அழகுமிக்கு விளங்குகின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலமாகும். இத்தகைய திருத்தலம் சென்று எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானை வணங்குவோமாக!

உருகி நெஞ்சே! நினைந்திங் கிருந்தென்? தொழுதுமெழு,
முருகுவண் டுண்மலர்க் கைதையின் நீழலில் முன்னொருநாள்,
பெருகுகா தன்மை யென்னுள்ள மெய்தப் பிரிந்தானிடம்,
பொருதுமந் நீர்க்கரைக் கேமணி யுந்து புல்லாணியே. 1769

உருகுகின்ற என் மனமே! இங்கேயே இருந்து கொண்டு அவனையே எண்ணிக் கொண்டு வருந்துமாறு இருப்பதனால் என்ன

Koviloor Digital Library

கிடைக்கப் போகிறது? (ஒன்றும் கிடைக்காது) தேனை உண்ணும் வண்டுகள் அமர்கின்ற மலர்களையுடைய தாழையின் நிழலில் முன்பு ஒருநாள் அதிக அளவில் பெருகிக் கொண்டிருக்கின்ற காதலை மனதில் வளர்த்துவிட்ட பின்பு என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்ட எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரியும் திருத்தலம், கடலின் அலைகள் வந்து வீசுவதனால் இரத்தினங்களைக் கொண்டு வந்து சேர்க்கின்ற கரையிலிருக்கின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலமாகும். இத்தகைய திருத்தலம் சென்று எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானை வணங்குவோமாக!

ஏதுசெய்தால் மறக்கேன் மனமே! தொழுதுமெழு,
தாதுமல்கு தடஞ்சூழ் பொழில்தாழ்வர் தொடர்ந்து,பின்
பேதை நின்னைப் பிரியே னினியென் றகன்றானிடம்,
போது நாளுங் கமழும் பொழில்சூழ்ந்த புல்லாணியே. 1770

என் மனமே! அடியேன் யாது செய்தால் எம்பெருமானை மறக்க இயலும்? எவ்வகையிலும் அவ்வெம்பெருமானை மறக்க இயலவில்லையே! பூந்தாதுகள் நிறைந்திருக்கின்ற மலர்கள் நிறைந்துள்ள குளங்களால் சூழ்ந்திருக்கின்ற சோலைகளின் ஒரு பக்கம் வந்திருந்து அடியேனிடத்தில் காதல் கொண்டு, ''பேதையை இனி ஒரு நாளும் உன்னைப் பிரிந்திருக்கமாட்டேன்'' என்று கூறிவிட்டுப் பின்பு என்னிடமிருந்து அகன்று சென்றுவிட்ட எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருத்தலம் நாள்தோறும் மணம்வீசுகின்ற மலர்கள் நிறைந்துள்ள சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலமாகும். இத்தகைய திருத்தலம் சென்று எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானை வணங்குவோமாக!

கொங்குண் வண்டே கரியாக வந்தான் கொடியேற்கு,முன்
நங்க ளீசன் நமக்கே பணித்த மொழிசெய்திலன்,
மங்கை நல்லாய்! தொழுது மெழுபோ யவன்மன்னுமூர்,
பொங்கு முந்நீர்க் கரைக்கே மணியுந்து புல்லாணியே. 1771

என் நல்ல தோழியே! தேனை உண்கின்ற 'வண்டு' என்ற ஒன்றினையே சாட்சியாகக் கொண்டு, கொடி போன்றுள்ள என் முன்னே வந்திருந்து யாரும் அறியாமல் இருக்குமாறு எம்பெருமான் என்னிடம் கலந்து பழகியிருந்தபோது கூறியருளிய சொற்களின்படி

Koviloor Digital Library

அவன் நடந்து கொள்ளவில்லை. அதாவது ''பிரியேன்; பிரிந்தால் உயிர்தரியேன்'' என்று உரைத்தவாறு நடந்து கொள்ளவில்லை. இத்தகைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருத்தலம், அலைகள் பொங்கி எழுகின்ற நீருடன் இரத்தினங்களைக் கொண்டு வந்து சேர்க்கின்ற கரையிலுள்ள ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலமாகும். இத்தகைய திருத்தலம் சென்று எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானை வணங்குவோமாக!

உணரி லுள்ளம் சுடுமால் வினையேன் தொழுதுமெழு,
துணரி நாழல் நறும்போது நம்சூழ் குழல்பெய்து,பின்
தணரி லாவி தளருமென அன்பு தந்தானிடம்,
புணரி யோதம் பணிலம் மணியுந்து புல்லாணியே. 1772

அடியேன் எம்பெருமானைப் பற்றி எண்ணிப் பார்க்கும்போதே என் உள்ளமானது என் தீவினை காரணமாகச் சுடுகின்றது. இதற்கு முன்பு ஒரு சமயம் அவர் என் கூந்தலில் கோங்கு மலர்களைச் சூட்டிவிட்டு, ''உன்னைவிட்டுப் பிரிந்தால் என் உயிர்போகும்'' என்று கூறி என்னிடம் காதல்மிக்கு உண்டாக்கினார். என்மீது அன்பைப் பொழிந்தார். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருத்தலம் என்பது, கடல் அலைகள் வீசும் வேகத்தில் சங்குகளையும், முத்துக்களையும் கொண்டு வந்து கரையில் சேர்க்கின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலமாகும். இத்தகைய திருத்தலத்திற்குச் சென்று எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைத் தொழுது வணங்குவோமாக!

எள்கி நெஞ்சே! நினைந்திங் கிருந்தென்? தொழுதுமெழு,
வள்ளல் மாயன் மணிவண்ண னெம்மான் மருவுமிடம்,
கள்ளவி ழும்மலர்க் காவியும் தூமடல் கைதையும்,
புள்ளு மள்ளல் பழனங் களும்சூழ்ந்த புல்லாணியே. 1773

என் மனமே! நீ எம்பெருமானையே இங்கு எண்ணியபடியே அவரிடம் ஈடுபட்டு உருகிக் கொண்டிருப்பதனால் என்ன பயன்? பயன் ஏதும் இல்லை என்பதாம். அனைவருக்கும் அருள்புரிகின்ற வள்ளலாகிய இம்மாயவனாகிய நீலமணி நிறமுடைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் விரும்பி ஏற்று எழுந்தருள்புரியும் திருத்தலம் யாது என்றால் தேன் நிறைந்து சொரியும் செங்கழுநீர்ப் பூக்களும், தூய்மையான மடல்களைக் கொண்டிருக்கின்ற தாழை

Koviloor Digital Library

மலர்களும், பறவையினங்களும் நிறைந்து காணப்படுகின்ற மருத நிலத்து வயல்கள் சூழ்ந்திருக்கின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலமாகும். இத்தகைய திருத்தலம் சென்று எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைத் தொழுது வணங்குவோமாக!

பரவி நெஞ்சே! தொழுதும் எழுபோ யவன்பாலமாய்,
இரவும் நாளும் இனிக்கண் துயிலா திருந்தென்பயன்?
விரவி முத்தம் நெடுவெண் மணல்மேல் கொண்டு,வெண்திரை
புரவி யென்னப் புதஞ்செய்து வந்துந்து புல்லாணியே. 1774

எங்கும் பரந்து அலைபாய்ந்து கொண்டிருக்கும் என் மனமே! உன்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்ட அவரையே எண்ணித் துதித்து இரவும் பகலுமாக உறக்கம் ஏதுமின்றி உழன்று கொண்டிருப்ப தனால் ஏதும் பயனில்லை. வெண்மையான அலைகள் வீசுகின்ற வேகத்தில் குதிரைகளைப் போன்று தாவிப் பாய்ந்து முத்துக்களை அக்கடற்கரை யில் உள்ள மணலின்மீது கொண்டு வந்து சேர்க்கின்ற நீர்வளம் மிக்க ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைத் தொழுது வணங்குவோமாக!

அலமு மாழிப் படையு முடையார் நமக்கன்பராய்,
சலம தாகித் தகவொன் றிலர்நாம் தொழுதுமெழு,
உலவு கால்நல் கழியோங்கு தண்பைம் பொழிலூடு,இசை
புலவு கானல் களிவண் டினம்பாடு புல்லாணியே. 1775

'கலப்பை' என்னும் படையினையும், 'திருச்சக்கரம்' என்னும் படையினையும் கொண்டுள்ள எம்பெருமானாகிய என் அன்புக்குரிய காதலர் கபடமாக என்னுடன் இருந்துவிட்டுப் பிரிந்து சென்றார். இவ்வாறு இரக்கம் ஏதுமின்றிப் பிரிந்து சென்ற எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் தென்றற்காற்று வீசுகின்ற உப்பங்கழிகள் நிறைந்திருக்கின்ற வளம்மிக்க கடற்கரை நகரில் குளிர்ச்சி பெற்றுள்ள பசுஞ்சோலைகளில் காட்டில் உலவுகின்ற தேனையுண்ட வண்டுகள் இன்னிசை பாடுகின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிந்து கொண்டிருக்கிறார். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைத் தொழுது வணங்கு வோமாக!

Koviloor Digital Library

ஓதி நாமம் குளித்துச்சி தன்னால், ஒளிமாமலர்ப்
பாதம் நாளும் பணிவோம் நமக்கே நலமாதலின்,
ஆது தாரா னெனிலும் தரும்,அன் றியுமன்பராய்ப்
போதும் மாதே! தொழுதும் அவன்மன்னு புல்லாணியே. 1776

என் தோழியாகிய பெண்ணே! நாம் நாள்தோறும் நீராடிய பின்பு அவனுடைய திருநாமங்களை எடுத்தோதி, அந்த எம்பெருமானுடைய ஒளி வீசுகின்ற பெரிய தாமரைத் திருவடிகளை நாள்தோறும் பணிந்து தொழுது வணங்குவதே நமக்கு நன்மையினைத் தரவல்ல உறுதிப் பொருளாகும். அவ்வாறு அந்த எம்பெருமான் நமக்கு நன்மையைத் தரவில்லையென்றாலுங்கூட நம் முயற்சி நன்மையை அளிக்கும். எனவே, நாம் அவருக்கு உகந்த அன்பராகி விடுவோமானால் அந்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிவது கண்டு தொழுது வணங்குவோமாக!

*இலங்கு முத்தும் பவளக் கொழுந்து மெழில்தாமரை,
புலங்கள் முற்றும் பொழில்சூழ்ந் தழகாய புல்லாணிமேல்,
கலங்க லில்லாப் புகழான் கலிய னொலிமாலை,
வலங்கொள் தொண்டர்க் கிடமா வதுபாடில் வைகுந்தமே. 1777

முத்துக்கள், பவளக் கொழுந்துகள், தாமரைப் பொய்கைகள், சோலைகள் ஆகிய இவை யாவும் நிறைந்திருக்கின்ற ''திருப்புல்லாணி'' என்னும் அழகுமிக்க திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளப் பண்ணும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைப் பற்றிச் சிறிதும் கலக்கம் என்பது இல்லாத புகழ்மிக்க ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த சொல் மாலையாகிய இத்திருமொழியின் பத்துப் பாசுரங்களையும் பயின்றுவல்ல அடியவர்கள் சென்று அடையும் இடம் என்பது யாதெனில் ''திரு வைகுந்தம்'' சென்றடைவதேயாகும்.



Koviloor Digital Library

4. காவார்

திருப்புல்லாணி

கொச்சகக் கலிப்பா

*காவார் மடல்பெண்ணை அன்றில் அரிகுரலும்,
ஏவாயி னூடியங்கும் எஃகில் கொடிதாலோ,
பூவார் மணம்கமழும் புல்லாணி கைதொழுதேன்,
பாவாய்! இதுநமக்கோர் பான்மையே யாகாதே. 1778

பாவையைப் போன்ற தோழியே! சோலைகளிலுள்ள மடல் களைக் கொண்டுள்ள பனைமரத்தின் கண் வாழ்ந்து கொண்டிருக்கும் அன்றில் பறவையினுடைய தழுதழுத்த குரலும் மன்மதனால் ஏவிவிடப்பட்ட அம்பு துளைத்ததனால் உண்டான புண்ணின் இடையில் செலுத்திய வேற்படையினால் உண்டான துன்பமும் ஆகிய இத்துன்பங்களைக் காட்டிலும் மிகக் கொடியதாக உள்ளது இந்தப் பிரிவு என்னும் பெருந்துன்பம். பூக்களின் மணம் வீசுகின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானை என் இரு கை தொழுது வணங்கினேன். இவ்வாறு செய்வது நமக்கேற்றதோர் நெறிமுறையாக அமைந்திருக்கலாகாது.

முன்னம் குறளுருவாய் மூவடிமண் கொண்டளந்த,
மன்னன் சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன்,
பொன்னம் கழிக்கானல் புள்ளினங்காள்! புல்லாணி,
அன்னமாய் நூல்பயந்தாற் காங்கிதனைச் செப்புமினே. 1779

முன்பொருகாலம் ''வாமனம்'' என்னும் குள்ளமான வடிவு மேற்கொண்டு மகாபலிச்சக்கரவர்த்தியின் வேள்வியின் முன்பு சென்று, அவனிடம் தன் திருவடிகளால் மூன்றடி மண் வேண்டுமென்று யாசித்துப் பெற்றுப் பின்பு ''திரிவிக்ரமன்'' என்னும் திருவவதாரம் மேற்கொண்டு ஓங்கி உயர்ந் தவாறு மிகப் பெரிய திருவடிவினை மேற்கொண்டு இப்பூமியை அளந்து கொண்ட மன்னனாகிய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானின் செயல்களைக் கண்டு மயங்கி யிருக்கின்ற நிலையில், அவனுடைய ''பிரிவு'' என்னும் துன்பம் காரணமாக என் உடம்பினைப் பொன் நிறம் போன்றுள்ள ''பசலை'' என்னும் நோய் பற்றிக் கொண்டது. பொன்னிறங் கொண்ட பறவை

Koviloor Digital Library

இனங்களே! திருப்புல்லாணி என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானிடம் சென்று, முன்பு அன்னப் பறவையாகத் திருவடிவு மேற்கொண்டு வேதங்களைக் கொண்ட நூல்களைக் கொண்டு வந்து தந்தருளியது போன்று அடியேனுக் குண்டான துன்பங்களைப் போக்கியருளுமாறு எடுத்துக் கூறுவீர்களாக!

வவ்வித் துழாயதன்மேல் சென்ற தனிநெஞ்சம்,
செவ்வி யறியாது நிற்குங்கொல், நித்திலங்கள்
பவ்வத் திரையுலவு புல்லாணி கைதொழுவேன்,
தெய்வச் சிலையாற்கென் சிந்தைநோய் செப்புமினே. 1780

எம்பெருமானின் திருத்தோளில் சார்த்தியுள்ள திருத்துழாய் மாலையைப் பற்றிக் கொண்டு சென்றுவிட்ட என் தனி மனமானது, செய்வது இன்னது என்னும் வழிமுறையினை அறிந்து கொள்ளாமல், இதன் காரணமாக என் அழகு அழியுமோ என்பதை அறிந்து கொள்ளாமல் அங்கேயே தங்கி நிற்குமோ? கடல் அலைகள் வீசிக் கொண்டிருக்கும் காரணமாக அக்கடற்கரையில் முத்துக்களைக் கொண்டு வந்து சேர்க்கின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைக் கைகூப்பித் தொழுகிறேன். தெய்வத்தன்மை கொண்ட வில்லையேந்தியுள்ள ஸ்ரீஇராமபிரானிடம் சென்று எனக்கு உண்டாகியிருக்கின்ற 'பசலை' என்னும் மனநோய் பற்றிப் பறவைகளே எடுத்துக் கூறுவீர்களாக!

பரிய இரணியன தாகம் அணியுகிரால்,
அரியுருவாய்க் கீண்டான் அருள்தந்த வாநமக்கு,
பொருதிரைகள் போந்துலவு புல்லாணி கைதொழுதேன்,
அரிமலர்க்கண் ணீரததும்ப அந்துகிலும் நில்லாவே. 1781

பருத்த 'இரணியன்' என்னும் அசுரனின் அகன்ற மார்பினைத் தன் கூர்மையான நகங்களைக் கொண்டு ''நரசிம்மம்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு இருகூறாகப் பிளந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் நமக்கு அருள்புரிந்தவாறு தான் என்னே! ஒன்றின்மீது ஒன்றாக மோதிக் கொண்டு ஓடி வருகின்ற அலைகள் வீசுகின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைக்

Koviloor Digital Library

கைகூப்பித் தொழுது வணங்கினேன். வண்டுகள் தங்குகின்ற பூப்போன்ற என் கண்களில் நீர் ததும்பிக் கொண்டிருக்கிறது. யான் என் அரையில் உடுத்தியிருந்த ஆடையும் நிற்கவில்லையே!

வில்லால் இலங்கை மலங்கச் சரம்துரந்த,
வல்லாளன் பின்போன நெஞ்சம் வருமளவும்,
எல்லாரு மென்றன்னை யேசிலும் பேசிடினும்,
புல்லாணி யெம்பெருமான் பொய்கேட் டிருந்தேனே. 1782

வில்லினைக் கொண்டு அம்புகளை ஏவச் செய்ததன்மூலம் இலங்கையைக் கலங்கும்படிச் செய்த வலிமைமிக்க எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானின் பின்னால் சென்றுவிட்ட என் மனம் திரும்பி வரும்வரை, என்னைப் பார்க்கின்ற யாவரும் ஏசினாலும், பேசினாலும் ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீஇராம பிரானின் பொய்யுரைகளைக் கேட்டுக் கொண்டிருந்தேனே!

சுழன்றிலங்கு வெங்கதிரோன் தேரோடும் போய்மறைந்தான்,
அழன்று கொடிதாகி அஞ்சுடரில் தானடுமால்,
செழுந்தடம்பூஞ் சோலைசூழ் புல்லாணி கைதொழுதேன்,
இழந்திருந்தே னென்றன் எழில்நிறமும் சங்குமே. 1783

மேருமலையைச் சுற்றி வருகின்ற வெம்மையான ஒளிக் கிரணங்களையுடைய சூரியன் தான் ஏறி வந்த தனது தேருடன் சென்று மறைந்துவிட்டான். அழகிய குளிர்ச்சி பொருந்திய சந்திரன் தன் ஒளிக்கிரணங்களுடன் புறப்பட்டு வந்து என்மீது கடும் வெப்பத்தை வீசிச் சுட்டெரிக்கிறான். ஐயோ! நான் என்ன செய்வேன். செழுமையான வளம்மிக்க பூக்கள் நிறைந்திருக்கின்ற குளங்கள் சூழ்ந்திருக்கின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீஇராம பிரானைக் கண்டு கைகூப்பித் தொழுது வணங்கினேன். அவன் என்னை விட்டு விட்டுப் பிரிந்து சென்றதன் விளைவாக என்னுடைய அழகினை இழந்தேன். என் கைகளிலுள்ள சங்கு வளையல்களையும் இழந்துவிட்டேன்.

கனையார் இடிகுரலின் கார்மணியின் நாவாடல்,
தினையேனும் நில்லாது தீயிற் கொடிதாலோ,
புனையார் மணிமாடப் புல்லாணி கைதொழுதேன்,
வினையேன்மேல் வேலையும் வெந்தழலே வீசுமே. 1784

Koviloor Digital Library

இடி இடித்தாற் போன்று மிக அதிகமான ஒலியுடன் கூடிய கருத்த காளைமாட்டின் கழுத்திலுள்ள மணியின் நாக்கு அசைந்து ஒலிக்கின்ற ஓசையானது, சிறிது நேரம் கூட நிற்கமாட்டாமல் தீயினைக் காட்டிலும் கொடியதாகி என்னைக் கடுமையாகச் சுடுகின்றது. அழகுமிக்க மணிமாடங்கள் நிறைந்திருக்கின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரியும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைக் கண்டு கைகூப்பித் தொழுது வணங்கினேன். தீவினைகள் நிறைந்திருக்கின்ற பாவியேன்மீது கடலிலிருந்து வீசுகின்ற அலைகள் கூட வெம்மை மிக்கக் கொடிய நெருப்பை அள்ளி வீசுகின்றன.

தூம்புடைக்கை வேழம் வெருவ மருப்பொசித்த,
பாம்பி னணையான் அருள்தந்த வாநமக்கு,
பூஞ்செருந்தி பொன்சொரியும் புல்லாணி கைதொழுதேன்,
தேம்பல் இளம்பிறையும் என்றனக்கோர் வெந்தழலே. 1785

துளைகள் நிறைந்த தும்பிக்கையினையுடைய ''குவலயாபீடம்'' என்னும் யானையின் தந்தங்களை ஒடித்து அதன் உயிரைப் போக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருப்பாற்கடலில் திருஅனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளினான். அத்தகைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் நமக்கு அருளிச் செய்த திருவருளின் தன்மைதான் என்னே! செருந்தி மரங்கள் அழகிய பொன்நிறமுடைய பூக்களைச் சொரிகின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீஇராம பிரானைக் கைகூப்பித் தொழுது வணங்கினேன். தேமலை உடைய இளம்பிறைச் சந்திரனும் என்மீது வெப்பம் மிக்க ஒளிக்கதிர்களை வீசிக் கொண்டிருக்கிறான்.

வேதமும் வேள்வியும் விண்ணும் இருசுடரும்,
ஆதியு மானான் அருள்தந்த வாநமக்கு,
போதலரும் புன்னைசூழ் புல்லாணி கைதொழுதேன்,
ஓதமும் நானும் உறங்கா திருந்தேனே. 1786

வேதங்கள், வேள்விகள், ஆகாயம், சூரியன், சந்திரன் ஆகிய இவை யாவற்றையும் படைத்தருளிய ஆதிப்பிரானாகிய எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அடியேனிடத்தே அருளிச் செய்த வாறுதான் என்னே! 'போது' என்னும் பருவ நிலையினின்றும் மலர்கின்ற புன்னை மரங்களை கொண்டுள்ள ''திருப்புல்லாணி''

Koviloor Digital Library

என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைக் கைகூப்பித் தொழுது வணங்கினேன். அங்ஙனமாக அடியேன் வணங்கிக் கொண்டிருக்கின்ற நிலையிலும் அலைகடலும் நானும் கண் உறங்காமல் துன்புற்றுக் கொண்டிருக்கிறோம்.

*பொன்னலரும் புன்னைசூழ் புல்லாணி யம்மானை,
மின்னிடையார் வேட்கைநோய் கூர விருந்ததனை,
கன்னவிலும் திண்டோள் கலிய னொலிவல்லார்,
மன்னவராய் மண்ணாண்டு வானாடு முன்னுவரே. 1787

பொன்நிறம் கொண்ட மலர்கள் மலர்ந்து சொரிந்து கொண்டிருக்கின்ற புன்னை மரங்கள் சூழ்ந்திருக்கின்ற ''திருப்புல்லாணி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைப் பற்றி, மின்னலை ஒத்த நுண்ணிடையாராகிய பெண்கள் கொண்ட 'வேட்கை' என்னும் 'காதல்' நோயினைப் பற்றி, இந்நோய் மிகுதியின் காரணமாகக் கொண்ட அனுபவங்களைப் பற்றி மலையைப் போன்று உறுதியான தோள்களைக் கொண்டுள்ள ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்ல அடியவர்கள் இப்பூமியினை ஆட்சிபுரியும் மன்னராக இருந்து கொண்டு, பின்பு விண்ணிலுள்ள திருப்பரமபதத்தினையும் ஆள்வார்கள்.

5. தவள இளம்பிறை
திருக்குறுங்குடி

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*தவள இளம்பிறை துள்ளுமுந்நீர்த்
தண்மலர்த் தென்றலோ டன்றிலொன்றித்
துவள,என் னெஞ்சகம் சோரவீரும்
சூழ்பனி நாள்துயி லாதிருப்பேன்,
இவளுமோர் பெண்கொடி யென்றிரங்கார்
என்னல மைந்துமுன் கொண்டுபோன
குவளை மலர்நிற வண்ணர்மன்னு
குறுங்குடிக் கேயென்னை யுய்த்திடுமின். 1788

Koviloor Digital Library

வெண்ணிறமுடைய இளம்பிறைச் சந்திரன், அலைவீசிக் கொண்டிருக்கின்ற கடல், மலர்களின்மீது பட்டு அவைகளினூடே சென்று வீசுகின்ற தென்றற்காற்று, அன்றில் பறவை ஆகிய இவை யாவும் ஒன்று சேர்ந்து என் மனமானது சோர்ந்து துவண்டு வாடி விடும் படியாக என்னை வருத்தித் துன்புறுத்துகின்றன. பனி மிகுதியாகப் பொழிகின்ற காலங்களில் அடியேன் உறக்கம் என்பது இல்லாமல் இருக்கின்றேன். ஆனால், அந்த எம்பெருமானோ, ''இவளும் ஒரு பெண்தானே'' என்று என்மீது இரக்கம் கொள்ளாமல் இருக்கின்றார். என்னிடமுள்ள ஐம்புலன்களினாலுண்டாகும் அனைத்து நன்மை யுகளையும் அவர் ஏற்கனவே கொண்டு சென்றுவிட்டார். குவளை மலரின் நிறத்தினைப் பெற்றுள்ள ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருளியுள்ள ''திருக்குறுங்குடி நம்பி''யினிடத்தே அடியேனைக் கொண்டு போய்ச் சேர்த்திடுங்கள்.

தாதவிழ் மல்லிகை புல்லிவந்த
 தண்மதி யினிள வாடையின்னே,
ஊதை திரிதந் துழறியுண்ண
 ஓரிர வுமுறங் கேன்,உறங்கும்
பேதையர் பேதைமை யாலிருந்து
 பேசிலும் பேசுக பெய்வளையார்,
கோதை நறுமலர் மங்கைமார்வன்
 குறுங்குடிக் கேயென்னை யுய்த்திடுமின். 1789

மகரந்தத் தாதுடன் கூடிய மல்லிகை மலர் மலர்ந்தவுடனே அதனுடன் அணைத்து வந்திருக்கின்ற குளிர்ச்சி மிக்க சந்திரனுடன் கூடிய மென்மையான வாடைக் காற்றானது இங்குமங்குமாக உலவியவாறு குளிர் நடுக்கத்தினைப் பெரிதும் உண்டாக்கி என் உயிரைப் போக்குமளவுக்கு என்னைத் துன்புறுத்துகிறது. அதன் காரணமாக ஓரிரவு நேரம் கூட என்னால் உறங்குவதற்கு இயலாமல் இருக்கின்றேன். ஆனால், உறங்கிக் கொண்டிருப்பதையே இயல்பாகக் கொண்டிருக்கின்ற கையிலுள்ள வளையல்கள் கழலாமல் அவர்கள் கையிலேயே இருக்குமாறு நிம்மதியாக இருக்கின்ற அறிவற்ற பெண்கள் தம் அறியாமை காரணமாக எவ்வித வேலையற்றிருக்கின்ற அளவில் என்னைப் பற்றிப் பலவிதமாகப் பழிச்சொற்களைக் கொண்டு பேசினாலும் பேசிவிட்டுப் போகட்டும். நறுமணம் வீசுகின்ற மலர்களைத் தம் கூந்தலில் சூடிக் கொண்டிருக்கின்ற

Koviloor Digital Library

திருமகளைத் தன் திருமார்பிலே கொண்டிருக்கின்ற எம்பெருமான் ''திருக்குறுங்குடி நம்பி'' என்னும் பெருமாள் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருத்தலமாகிய ''திருக்குறுங்குடி''க்கே அடியேனைக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள்.

காலையும் மாலையொத் துண்டுகங்குல்
நாழிகை யூழியில் நீண்டுலாவும்,
போல்வதோர் தன்மை புகுந்துநிற்கும்
பொங்கழ லேயொக்கும் வாடைசொல்லி,
மாலவன் மாமணி வண்ணன்மாயம்
மற்று முளவவை வந்திடாமுன்,
கோல மயில்பயி லும்புறவில்
குறுங்குடிக் கேயென்னை யுய்த்திடுமின். 1790

காலைப் பொழுது கூட மாலைப் பொழுது போன்று என்னை வாட்டி வதைக்கின்றது. அம்மாலை நேரத்துக்குப் பின்பு வந்திருக்கின்ற இரவு நேரத்தின் ஒவ்வொரு நாழிகை நேரமும் ஊழிக்காலம் போன்று நீண்ட நேரம்வரை நீண்ட நிலையில் இருந்து கொண்டு இருக்கின்றது. அதே நேரத்தில் வீசுகின்ற வாடைக் காற்றின் தன்மையைப் பற்றி எடுத்துரைக்கப் புகுந்தால் அஃது எரிந்து கொண்டிருக்கும் நெருப்பைப் போன்று வீசிய நிலையில் என்னைத் தாக்கிக் கொண்டிருக்கின்றது. இத்தகைய செயல்கள் எல்லாம் நீலமணி வண்ணனாயிருக்கின்ற திருமாலின் மாயச் செயல்கள் தானோ என்று எண்ணத் தோன்றுகிறது. இத்தகைய மாயச்செயல்கள் இன்னும் பற்பல இருக்கின்றன. அவைகளும் வந்து என்னை மேன்மேலும் துன்புறுத்துவதற்கு முன்பாகவே அழகான மயில்கள் நெருக்கமாக இருக்கின்ற சோலைகள் நிறைந்த ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் திருக்குறுங்குடி நம்பி யினிடமே என்னை அழைத்துக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள்.

கருமணி பூண்டுவெண் ணாகணைந்து
காரிமி லேற்றணர் தாழ்ந்துலாவும்,
ஒருமணி யோசையென் னுள்ளந்தள்ள
ஒரிர வுமுறங் காதிருப்பேன்,
பெருமணி வானவ ருச்சிவைத்த
பேரரு ளாளன் பெருமைபேசி,
குருமணி நீர்கொழிக் கும்புறவில்
குறுங்குடிக் கேயென்னை உய்த்திடுமின். 1791

Koviloor Digital Library

கறுப்பு நிற மணியினை அணிந்து கொண்டு, வெண்மை நிறப் பசுக்களுடன் தழுவிக் கொண்டு இருக்கும் காளை மாடுகளின் கழுத்தில் கட்டி இருக்கும் ஒரு மணியின் ஒசையைக் கேட்டவுடன் என் உள்ளம் நிலை தடுமாறிச் சோர்ந்து விடுகிறது. அதனால் ஓர் இரவுப் பொழுது கூட உறக்கம் என்பதே இல்லாமலிருக்கின்றேன். விண்ணுலகத் தேவர்கள் தங்கள் தலைகளின்மீது சிறந்த இரத்தினங் களைப் போன்று வைத்துப் போற்றுகின்ற பேரருளாளப் பெருமானின் பெருமைகளைப் பேசிக் கொண்டிருந்தவாறே இரவு முழுவதும் உறக்கமின்றி நொந்து போனேன். பெருக்கெடுத்தோடி வரும் பெருவெள்ளத்தின்மூலம் விலையுயர்ந்த இரத்தினங்களைக் கொண்டு வந்து சேர்க்கின்ற சோலைகள் நிறைந்துள்ள ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் திருக்குறுங்குடி நம்பிகளிடம் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள்.

திண்டிமி லேற்றின் மணியும்ஆயன்
　　தீங்குழ லோசையும் தென்றலோடு,
கொண்டதோர் மாலையும் அந்தியீன்ற
　　கோல இளம்பிறை யோடுகூடி,
பண்டைய அல்ல இவைநமக்குப்
　　பாவியே னாவியை வாட்டஞ்செய்யும்,
கொண்டல் மணிநிற வண்ணர்மன்னு
　　குறுங்குடிக் கேயென்னை உய்த்திடுமின். 1792

திண்மையான கழுத்தினைக் கொண்டுள்ள காளை மாடுகளின் கழுத்தில் கட்டியுள்ள மணியின் ஓசையும், ஆய்க்குலத்துதித்த ஸ்ரீகண்ணபிரானின் புல்லாங்குழலின் இனிய ஓசையும், தென்றற் காற்றுடன் கூடிய ஓர் மாலைப் பொழுதும், ஆகிய இவை யாவும் என்னை வாட்டுகின்றன. இவைகளுடன் அழகுமிக்க இளம்பிறைச் சந்திரனும் சேர்ந்து கொண்டு, அஃது முன்பு போன்று இல்லாமல் பாவியேனாகிய அடியேனுடைய உயிரை வாட்டுகின்றன. ஆகையினால், மேகத்தின் நிறத்தினைப் போன்றும், நீலமணியின் நிறத்தினைப் போன்றும் நிறத்தினைக் கொண்ட திருமேனியை உடைய எம்பெருமான் திருக்குறுங்குடி நம்பி என்னும் பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள்.

Koviloor Digital Library

எல்லியும் நன்பக லுமிருந்தே
ஏசிலும் ஏசுக ஏந்திழையார்,
நல்லர் அவர்திறம் நாமறியோம்,
நாண்மடம் அச்சம் நமக்கிங்கில்லை,
வல்லன சொல்லி மகிழ்வரேனும்
மாமணி வண்ணரை நாம்மறவோம்,
கொல்லை வளரிள முல்லைபுல்கு
குறுங்குடிக் கேயென்னை உய்த்திடுமின். 1793

ஆபரணங்களை அணிந்து கொண்டிருக்கின்ற பெண்கள் ஒன்று கூடி இரவு நேரத்திலும், பகற் பொழுதிலும் போக்கிடமில்லாமலிருந்து கொண்டு பழிச்சொற்கள் பலவற்றைக் கூறிப் பேசினாலும் பேசிக் கொள்ளட்டும். அவர்கள் யாவரும் நல்லவர்களாகவே இருக்கட்டும். அப்படிப்பட்டவர்களைப் பற்றி நாம் சிறிதும் சிந்திக்க வேண்டாம். நமக்குரிய பெண்மைக் குணங்களான நாணம், மடம், அச்சம் போன்றவைகள் இல்லாமற் போய்விட்டன. இத்தகைய என் நிலைமையைப் பற்றி இயன்றவரை ஏளனமாக வாய் கூசாமல் இழித்தும் பழித்தும் பேசிப் பேசிச் சிரித்துக் கொண்டிருப்பார்களோயானாலும் நாம் பெரிய நீலமணி வண்ணனாகிய எம்பெருமான் திருக்குறுங்குடி நம்பிப் பெருமானைச் சிறிதளவும் நம்பிப் பெருமானைச் சிறிதளவும் மறந்துவிட மாட்டோம். எனவே, இத்தகைய எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும், இளமையான முல்லை மலர்கள் இருக்கின்ற பூந்தோட்டங்கள் நிறைந்திருக்கின்ற வளம்மிக்க ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்திற்கு என்னைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள்.

செங்க ணெடிய கரியமேனித்
தேவ ரொருவரிங் கேபுகுந்து,என்
அங்கம் மெலிய வளைகழல
'ஆதுகொ லோ?'என்று சொன்னபின்னை,
ஐங்கணை வில்லிதன் ஆண்மையென்னோ
டாடு மதனை யறியமாட்டேன்,
கொங்கலர் தண்பணை சூழ்புறவில்
குறுங்குடிக் கேயென்னை உய்த்திடுமின். 1794

Koviloor Digital Library

அகலமான சிவந்துள்ள திருக்கண்களும் கறுத்த திருமேனியும் கொண்டுள்ள தேவப்பிரான் என்னும் ஒருவர் இங்கே வந்து, என் உடல் மெலிந்து போகும்படியாகவும், என் கைகளிலுள்ள வளையல்கள் கழலும்படியாகவும் செய்துவிட்டு, ''நான் உன்னைவிட்டுப் பிரியேன்'' என்று கூறியவாறே அவர் என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டார். அதற்குப் பின்பு மன்மதன் ஐந்து வகை அம்புகளின் மூலமாகத் தன் ஆண்மையினை வெளிப்படுத்திக் காட்டுவதை அறியேன். தேன் சொரிகின்ற மலர்களைக் கொண்டுள்ள குளிர்ந்த மரக்கொம்புகள் சூழ்ந்திருக்கின்ற ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீதிருக்குறுங்குடிநம்பியிடம் அடியேனைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

கேவல மன்று கடலினோசை
கேண்மின்கள் ஆயன்கை ஆம்பல்வந்து,என்
ஆவி யளவும் அணைந்து நிற்கும்
அன்றியும் ஐந்து கணைதெரிந்திட்டு,
ஏவலங் காட்டி இவனொருவன்
இப்படி யேபுகுந் தெய்திடாமுன்,
கோவலர் கூத்தன் குறிப்பறிந்து
குறுங்குடிக் கேயென்னை உய்த்திடுமின். 1795

பெரிய கடலில் வீசுகின்ற அலைகளின் பேரொலியானது சாமானியமானதன்று. ஆயர்குலத் தோன்றலாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கரங்களிலுள்ள புல்லாங்குழலின் இனிய ஓசையானது என் உயிரைக் கவர்ந்து அணைந்து நிற்கின்றது. அஃதல்லாமல் மன்மதனோ தன்னுடைய ஐந்துவகை அம்புகளையும் என்மீது தொடுத்து விடுவதன்மூலம் என் உயிரைப் பறித்துக் கொள்ளுமாறு முயற்சி செய்கிறான். இவ்வாறு அவன் என்னிடம் ஏதும் செய்து விடுவதற்கு முன்பாகவே ஆயர்கட்கேற்ற வகையில் கூத்தாடுவதில் வல்லவனான எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் திருவுள்ளக் கருத்தினை அறிந்துகொண்டு ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீதிருக்குறுங்குடி நம்பியிடம் அடியேனைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

Koviloor Digital Library

சோத்தென நின்று தொழவிரங்கான்
தொன்னலங் கொண்டெனக்கு இன்றுகாறும்,
போர்ப்பதோர் பொற்படம் தந்துபோனான்
போயின வூரறி யேன்,என்கொங்கை
மூத்திடு கின்றன மற்றவன்றன்
மொய்யக லம்அணை யாதுவாளா,
கூத்த னிமையவர் கோன்விரும்பும்
குறுங்குடிக் கேயென்னை உய்த்திடுமின். 1796

'சோத்தம்' என்று கூறியவாறு நின்று தன் தோற்றத்தினை அடியேன் ஒப்புக் கொண்டு தொழுது வணங்கினாலும் அவன் என்மீது இரக்கம் கொள்வதில்லை. இதற்கு முன்பெல்லாம் என் பெண்மையின் இயல்பான குணங்களையெல்லாம் கொள்ளை கொண்ட அந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் போர்த்திக் கொள்வதற்காகப் பொன்னாடை ஒன்றைத் தருவதுபோலத் தந்துவிட்டு, என் மேனிமீது 'பசலை' என்னும் நோய் உண்டாகுமாறு என்னைவிட்டுப் பிரிந்து சென்றுவிட்டான். அவன் சென்றிருக்கின்ற ஊர் இன்னது என்பதையும் அறிந்து கொள்ள என்னால் இயலவில்லை. இதற்கும் மேலாக என்னுடைய இரண்டு முலைகளும் அவனை அணைத்துத் தழுவிக் கொள்ளாமலேயே வீணாகப் பருத்துவிடுகின்றன. ஆகவே, மகிழ்ச்சியுடன் கூத்தாடுகின்ற, விண்ணுலகத் தேவர்களின் தலைவனாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் விரும்பி எழுந்தருள்புரியும் திருக்குறுங்குடி என்னும் திருத்தலத்திற்கே என்னை அழைத்துக் கொண்டு போய்ச் சேர்ந்துவிடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

*செற்றவன் தென்னிலங் கைமலங்கத்
தேவர்பி ரான்திரு மாமகளைப்
பெற்றும்,என் நெஞ்சகம் கோயில்கொண்ட
பேரரு ளாளன் பெருமைபேசக்
கற்றவன், காமரு சீர்க்கலியன்
கண்ணகத் தும்மனத் துமகலாக்
கொற்றவன், முற்றுல காளிநின்ற
குறுங்குடிக் கேயென்னை உய்த்திடுமின். 1797

பகைமை கொண்டவனாகிய இராவணன் ஆட்சிபுரிகின்ற, தெற்குத் திசையிலுள்ள இலங்கை மாநகரமானது கலங்கி அழியுமாறு செய்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் விண்ணுலகத் தேவர்கட்குத்

Koviloor Digital Library

தலைவனாகிய எம்பிரான் திருமாமகளைப் பெற்றிருந்தும் கூட அடியேனின் நெஞ்சினைக் கோயிலாகக் கொண்டுள்ள எம்பெருமான் பேரருளாளப் பெருமான் பெருமைகளை எடுத்துப் பேசுகின்ற வகையில் ஆற்றல் பெற்றுக் கற்றறிந்த வைணவச் செல்வராகிய 'கலியன்' என்னும் திருமங்கை ஆழ்வாருடைய கண்களினின்றும், நெஞ்சினின்றும் பிரியாமலிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன், அனைத்துலகுக்கும் தலைவனாகிய எம்பெருமான் ஸ்ரீ திருக்குறுங்குடிநம்பி திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்திற்கே அடியேனை அழைத்துக் கொண்டு போய்விட்டு விடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

6. அக்கம் புலியின் திருக்குறுங்குடி

கலிநிலைத்துறை

*அக்கும் புலியின் அதளும் உடையார் அவரொருவர்,
பக்கம் நிற்க நின்ற பண்பர் ஊர்போலும்,
தக்க மரத்தின் தாழ்சினை யேறி, தாய்வாயில்
கொக்கின் பிள்ளை வெள்ளிற வுண்ணும் குறுங்குடியே. 1798

எலும்புகளை அணிந்து கொண்டும், புலித்தோலை உடுத்திக் கொண்டுமிருக்கின்ற சிவபெருமானைத் தன் அருகிலேயே இருப்ப தற்குரிய இடத்தினை அளித்து எழுந்தருள் புரிகின்ற நற்பண்புகளைக் கொண்டுள்ள எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரியும் திருத்தலம் போலும் அமைந்துள்ளது அவ்வூர். இந்தத் ''திருங்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி திருக்காட்சியினை அளித்துக் கொண்டிருக்கும் ''திருக் குறுங்குடிநம்பி'' என்னும் எம்பெருமான் இருக்கிறான். அத்திருத் தலத்தில் கொக்கின் குஞ்சு, தன்னால் ஏறுவதற்கு இயன்ற மரக் கிளையின் மீதேறி அங்குள்ள தாயின் வாயிலுள்ள ''வெள்ளிறால்'' என்னும் மீனை உண்ணும்.

துங்கார் அரவத் திரைவந் துலவத் தொடுகடலுள்,
பொங்கார் அரவில் துயிலும் புனிதர் ஊர்போலும்,
செங்கா லன்னம் திகழ்தண் பணையில் பெடையோடும்,
கொங்கார் கமலத் தலரில் சேரும் குறுங்குடியே. 1799

Koviloor Digital Library

ஓங்கி உயர்ந்து எழுகின்ற ஆரவாரத்துடன் கூடிய அலைகள் துள்ளிக் குதிக்கின்ற ஆழம் மிகுந்திருக்கின்ற திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தூய்மைமிக்கவன். இத்தகைய எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள திருத்தலம் ''திருக் குறுங்குடி'' என்பதாகும். இத்திருத்தலத்தில் சிவந்த கால்களை உடைய அன்னப்பறவைகள் குளிர்ந்த நீர் நிலைகளிலுள்ள மணம் மிக்குள்ள தாமரை மலரில் தன்னுடைய பெண் அன்னத்துடன் சேர்ந்து வாழ்ந்து கொண்டு மனம் ஒன்றி இருக்கின்றன.

வாழக் கண்டோம் வந்து காண்மின் தொண்டீர்காள்,
கேழல் செங்கண் மாமுகில் வண்ணர் மருவுமூர்,
ஏழைச் செங்கால் இன்துணை நாரைக் கிரைதேடி,
கூழைப் பார்வைக் கார்வயல் மேயும் குறுங்குடியே. 1800

வைணவத் திருத்தொண்டர்களே! வாழ்வதற்குரிய வழி வகைகளை அறிந்து கொண்டோம். அதனை வந்து பாருங்கள். ''வராகம்'' என்னும் திருஅவதாரம் கொண்டு எழுந்தருள்புரியும் மேகத்தினை ஒத்த நிறத்தினையுடைய திருமேனியையுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் எழுந்தருள்புரியும் ''திருக்குறுங்குடிநம்பி'' என்னும் பெருமாள் தங்கியிருக்கின்றான். இந்தத் திருத்தலத்தில் மென்மை யாகச் சிவந்திருக்கின்ற கால்களையுடைய இனிய துணையாக இருக்கின்ற அளவில் ஆண்நாரைக்கு உணவு தேடிக் கொண்டு வந்து, பின்பு கள்ளத்தனமான பார்வையை உடைய பெண் நாரையானது செழிப்பான வளம்மிக்க வயல்களில் மேய்ந்து அங்குள்ள மீன் என்னும் உணவுப் பொருளைத் தேடிக் கொண்டு வந்து கொடுக்கும்.

சிரமுன் ஐந்தும் ஐந்தும் சிந்தச் சென்று,அரக்கன்
உரமும் கரமும் துணித்த வுரவோன் ஊர்போலும்,
இரவும் பகலும் ஈன்தேன் முரல, மன்றெல்லாம்
குரவின் பூவே தான்மணம் நாறுங் குறுங்குடியே. 1801

முன்பு ஒரு சமயம் இலங்கை சென்று இராவணனின் தலைகள் பத்தினையும் கீழே விழுமாறு செய்ததுடன் அவனுடைய மார் பினையும் கைகளையும் அறுத்தெறிந்த ஆற்றல்மிக்க எம்பெருமான் ஸ்ரீ இராமபிரான் ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில்

Koviloor Digital Library

திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்றான் போலும். இத்தகைய திருத்தலத்தில் இரவிலும், பகலிலும் மணம் வீசுகின்ற குரவ மரப்பூக்களிலுள்ள தேனை வண்டுகள் உண்டு இனிமையான இசையினை ஒலித்துக் கொண்டு இருக்கும்.

கவ்வைக் களிற்று மன்னர் மாளக் கலிமான்தேர்
ஐவர்க் காய்,அன் றமரில் உய்த்தான் ஊர்போலும்,
மைவைத் திலங்கு கண்ணார் தங்கள் மொழியொப்பான்,
கொவ்வைக் கனிவாய்க் கிள்ளை பேசும் குறுங்குடியே. 1802

பேரொலியினை எழுப்புகின்ற யானைப் படைகளைக் கொண்ட மன்னர்கள் யாவரும் மாண்டு போகும்படியாகப் பாண்டவர்களுக் காகப் பாரதப் போரின்போது தேரோட்டிச் சென்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்றான். இத்தகைய திருத்தலத்தில் மையுண்ட கண்களையுடைய பெண்கள் பேசும் மொழியினை ஒத்த நிலையில் அங்குள்ள கோவைப் பழம் போன்ற சிவந்த உதடுகளைக் கொண்ட கிளிகள் ஒன்றையொன்று கொஞ்சிப் பேசிக் கொண்டு இருக்கின்றன.

தீநீர் வண்ண மாமலர் கொண்டு விரையேந்தி,
தூநீர் பரவித் தொழுமி னெழுமின் தொண்டீர்காள்,
மாநீர் வண்ணன் மருவி யுறையும் இடம்,வானில்
கூனீர் மதியை மாடம் தீண்டும் குறுங்குடியே. 1803

வைணவத் திருத்தொண்டர்களே! தூய்மையானவர்களாக விளங்கும் நீங்கள் தூப தீபங்களுக்குத் தேவையான தீயினையும், இறைவனை வழிபடுவதற்கான நீரினையும், பற்பல வண்ணங்களைக் கொண்டிருக்கின்ற மலர்களையும், நறுமணப் பொருள்களையும் கொண்டு எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் தொழுது வழிபட்டுப் பிழைத்துக் கொள்ளுங்கள். கடலின் நிறத்தினையொத்த எம் பெருமான் ''திருக்குறுங்குடி நம்பி'' என்னும் பெருமான் ''திருக் குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகிறான். இத்தகைய திருத்தலத்தில், விண்ணில் உலவிக் கொண்டிருக்கின்ற சந்திரனைத் தொடும் அளவிற்கு மாடமாளிகைகள் ஓங்கி உயர்ந்திருக்கின்றன.

Koviloor Digital Library

வல்லிச் சிறுநுண் ணிடையா ரிடைநீர் வைக்கின்ற,
அல்லல் சிந்தை தவிர அடைமின் அடியீர்காள்,
சொல்லில் திருவே யனையார் கனிவாய் எயிறொப்பான்,
கொல்லை முல்லை மெல்லரும் பீனும் குறுங்குடியே. 1804

வைணவத் திருத்தொண்டர்களே! நீங்கள் கொடி போன்று நுண்ணிய இடையைப் பெண்களினிடத்தே கொண்டிருக்கின்ற துன்பங்களுக்கெல்லாம் காரணமாக அமைகின்றவைகளையே எண்ணிக் கொண்டிருக்கின்ற சிந்தனைகளைத் தவிர்த்துவிட்டுத் ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ''திருக்குறுங்குடி நம்பி''யினிடம் சென்று உய்வு பெறுங்கள். இத்தகைய திருத்தலத்தில் அமைந்துள்ள கொல்லைகளில் பூத்துக் கிடக்கின்ற முல்லை மலர்களானது, பேசுகின்ற சொற்களில் திருமகளை ஒத்த பெண்களின் கோவைப்பழம் போன்ற வாயிலுள்ள பற்களைப் போன்று அழகிய மென்மையான அரும்புகள் மலர்ந்து கொண்டிருக்கும்.

நாரார் இண்டை நாண்மலர் கொண்டு நம்தமர்காள்,
ஆரா அன்போ டெம்பெரு மானூர் அடைமின்கள்,
தாரா ஆரும் வார்புனல் மேய்ந்து வயல்வாழும்,
கூர்வாய் நாரை பேடையொ டாடும் குறுங்குடியே. 1805

அடியோங்களோடு ஒத்திருக்கின்ற வைணவத் திருத்தொண் டர்களே! நாரினைக் கொண்டு நெருக்கமாகக் கோர்த்துத் தொடுத்து வைத்திருக்கின்ற மலர்மாலைகளையும், அப்போதலர்ந்த மலர்களை யும் கொண்டு மேன்மையான, மாறுதல் இல்லாத அன்புடன் கூடிய பக்தியினைக் கொண்டு எம்பெருமான் ''திருக்குறுங்குடி நம்பி'' திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருத்தலம் ''திருக்குறுங்குடி'' என்பதாகும். இத்தகைய திருத்தலமானது ''தாரா'' என்னும் நீரில் வாழ்கின்ற பறவைகள் நெருக்கமாக இருக்கின்ற நீர்வளம்மிக்க வயல்களில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற கூர்மையான வாயலகுகளைக் கொண்டுள்ள நாரைகள் தத்தம் பெண் நாரைகளுடன் சேர்ந்து மகிழ்ச்சியுடன் கலந்து நடனமாடுகின்றன.

நின்ற வினையும் துயரும் கெடமா மலரேந்தி,
சென்று பணிமி னெழுமின் தொழுமின் தொண்டீர்காள்,
என்றும் மிரவும் பகலும் வரிவண் டிசைபாட,
குன்றின் முல்லை மன்றிடை நாறும் குறுங்குடியே. 1806

Koviloor Digital Library

வைணவத் திருத்தொண்டர்களே! இதுவரை செய்து வந்த பாவங்களும் துன்பங்களும் கெட்டழியும் பொருட்டுத் 'திருக் குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் ''திருக்குறுங்குடிநம்பி''யினிடம் சென்று மலர்களைக் கொண்டு அர்ச்சித்துப் பணிந்து வணங்கித் தொழுது எழுங்கள். இத்தகைய திருத்தலத்தில் என்றென்றும் இரவும் பகலும் வரிகளையுடைய வண்டுகள் இன்னிசையை இசைத்துக் கொண்டிருக்கக் குன்றிலிருந்து மலர்கின்ற முல்லை மலர்கள் அங்குள்ள எல்லாவிடங்களிலும் நறுமணம் வீசிக் கொண்டிருக்கும்.

*சிலையால் இலங்கை செற்றான் மற்றோர் சினவேழம்,
கொலையார் கொம்பு கொண்டான் மேய குறுங்குடிமேல்,
கலையார் பனுவல் வல்லான் கலிய னொலிமாலை,
நிலையார் பாடல் பாடப் பாவம் நில்லாவே. 1807

வில் அம்புகளைக் கொண்டு இலங்கை மாநகரினை அழித்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான், சின்மிகுந்த ''குவலயாபீடம்'' என்னும் யானையின் தந்தங்களை முறித்து அழித்து வெற்றி பெற்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் ஆகிய ஆதிமூர்த்தி ''திருக்குறுங்குடி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி ''திருக்குறுங்குடிநம்பி'' என்னும் திருநாமத்துடன் சேவை சாதித்து அருள்புரிந்து வருகிறான். இத்தகைய எம்பெருமானைப் பற்றிக் கலைகள் மிகுந்த பாசுரங்களை இயற்றியருளவல்ல ஆற்றல் மிக்கக் ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலியுடன் கூடிய மாலையாகிய இப்பாசுரங்கள் பத்தினையும் பாடிக் கொண்டிருப்பவர்களின் பாவங்கள் யாவும் நில்லாது அழிந்துவிடும்.



Koviloor Digital Library

7. தந்தைதாய்

திருவல்லவாழ்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*தந்தைதாய் மக்களே சுற்றமென்
றுற்றவர் பற்றி நின்ற,
பந்தமார் வாழ்க்கையை நொந்துநீ
பழியெனக் கருதி னாயேல்,
அந்தமா யாதியாய் ஆதிக்கும்
ஆதியாய் ஆய னாய,
மைந்தனார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 1808

என் மனமே! தந்தை, தாய், மக்கள், சுற்றியுள்ள சுற்றத்தினர், என்றெல்லாம் எனக்கு உற்றவர்களாகி அடியேனைப் பற்றி நிற்கின்ற பந்த பாசம் மிகுந்த இவ்வாழ்க்கையை அனுபவித்துள்ளதால் உண்டான துன்பங்களின் மிகுதியினால் நீ மிகவும் நொந்து போய், வெறுத்து, இவ்வாழ்க்கை வாழ்வது என்பது மிகவும் தவறு என்று எண்ணினால், முடிவாகவும், ஆரம்பமாகவும், ஆதிக்கும் ஆதியாகத் திகழும் ஆதிப்பிரானாக விளங்கும் ''திருவல்லவாழ்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய எம்பெருமான் ''ஸ்ரீவல்லபன்'' என்னும் திருநாமம் கொண்டுள்ள எம்பெருமானே ஸ்ரீகண்ணபிரானாக அவதாரம் பண்ணி அருளினான். இத்தகைய திருத்தலம் சென்று ஸ்ரீவல்லபப் பெருமானைச் சேவிப்பாயாக!

மின்னுமா வல்லியும் வஞ்சியும்
வென்றநுண் ணிடைநு டங்கும்,
அன்னமென் னடையினார் கலவியை
அருவருத் தஞ்சி னாயேல்,
துன்னுமா மணிமுடிப் பஞ்சவர்க்
காகிமுன் தூது சென்ற,
மன்னனார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 1809

என் மனமே! மின்னல், அழகிய கொடி, வஞ்சிக்கொம்பு ஆகியவைகள் தோற்கும்படியாக அமைந்துள்ள நுண்ணிடையானது துவண்டு போகுமாறு அன்னத்தையொத்த நடை நடக்கும் பெண்களின்

Koviloor Digital Library

கலவியின்பத்தினை வெறுத்து அருவருப்புடன் கூடி நீ அஞ்சினால், முன்பு ஒரு சமயம் அழகிய மாமணி முடி அணிந்து கொண்டிருக்கும் பஞ்ச பாண்டவர்களுக்காகத் தூது சென்ற எம் பெருமான் தேவாதி தேவ:ன் ஸ்ரீகண்ணபிரான் என்னும் மன்னன் ''திருவல்லவாழ்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருவல்லபப் பெருமானிடம் சென்று அவனைச் சேவிப்பாயாக!

பூணுலா மென்முலைப் பாவைமார்
பொய்யினை 'மெய்யி லெ'தன்று,
பேணுவார் பேசுமப் பேச்சைநீ
பிழையெனக் கருதி னாயேல்,
நீணிலா வெண்குடை வாணனார்
வேள்வியில் மண்ணி ரந்த,
மாணியார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 1810

என் மனமே! மார்பில் முத்து மாலை போன்ற ஆபரணங்கள் பலவற்றை அணிந்து கொண்டிருக்கின்ற மென்மையான இளமுலை களைக் கொண்டுள்ள பெண்களின் பொய்யான பேச்சுகளை எல்லாம் மெய்யானவை என்று கூறுபவர்களின் சொற்களை எல்லாம் நீ தவறு என்று கருதுவாயானால், நீண்டதோர் நிலவு போன்ற வெண்ணிற முடைய குடையைப் பிடித்தபடி மகாபலிச்சக்கரவர்த்தியின் வேள்வித் தீயின் முன்னே ''வாமனன்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு மூவடி மண்ணினை யாசித்துப் பெற்ற எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் ''திருவல்லவாழ்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருவல்லபன் என்னும் திருநாமம் கொண்டு திகழும் எம்பெருமானின் திருநாமங்களை எடுத்துரைத்து, வணங்கி அதன்மூலம் உய்வு பெறும் வல்லமையை நீ அடைவாயாக!

'பண்ணுலாம் மென்மொழிப் பாவைமார்
பணைமுலை அணைதும் நாம்,'என்று,
எண்ணுவார் எண்ணம தொழித்துநீ
பிழைத்துய்யக் கருதி னாயேல்,
விண்ணுளார் விண்ணின்மீ தியன்றவேங்
கடத்துளார், வளங்கொள் முந்நீர்
வண்ணனார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 1811

Koviloor Digital Library

என் மனமே! இசையுடன் கூடிய இனிய வார்த்தைகளைக் கொண்டு மென்மையான சொற்களைக் கொண்டு பேசுகின்ற இளம் பெண்களின் திரண்டு பருத்திருக்கின்ற முலைகளை அணைத்துத் தழுவியவாறு வாழ ஆசைப்படுவதற்கு எண்ணுகின்ற எண்ணத்தினை நீ ஒழித்துவிட்டு, இத்தகைய தவற்றினை இனிச் செய்யாமலிருந்து கொண்டு நன்கு பிழைத்துக்கொள்ள வேண்டுமென்று கருதினால் விண்ணுலகிலுள்ள திருப்பரமதத்தில் இயங்கிக் கொண்டும், திருவேங்கட மாமலைமேல் இருந்து அருள்புரிந்து கொண்டும் விளங்குகின்ற கடல்நீரினைப் போன்ற நிறத்தினைக் கொண்டு இயங்கிக் கொண்டு இருக்கின்ற ''திருவல்லவாழ்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ''ஸ்ரீவல்லபன்'' என்னும் திருநாமம் பெற்றுள்ள ஸ்ரீமந் நாராயணனைப் பற்றி எடுத்துச் சொல்லிக் கொண்டிருக்குமாறு நீ சென்று வணங்குதல் வேண்டும்.

மஞ்சுதோய் வெண்குடை மன்னராய்
வாரணம் சூழ வாழ்ந்தார்,
துஞ்சினா ரென்பதோர் சொல்லைநீ
துயரெனக் கருதி னாயேல்,
நஞ்சுதோய் கொங்கைமேல் அங்கைவாய்
வைத்தவள் நாளை யுண்ட,
மஞ்சனார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 1812

என் மனமே! மேகத்தைத் தொடுமளவுக்கு உயர்ந்திருக்கின்ற வெண்கொற்றக்குடை நிழலின்கீழ் இருந்து கொண்டு அரசாட்சி செலுத்தும் அரசர்களாக இருந்து யானைப் படைகள் சூழ்ந்திருக் குமாறு வாழ்ந்திருந்துவிட்டுப் பின்பு இறந்துவிட்டார்கள் என்று பலராலும் பேசப்படுகின்றதோர் கருத்தினைத் துன்பமானது என்று நீ கருதுவாயானால், நஞ்சு நிறைந்த பாலைக் கொண்டுள்ள முலை களையுடைய ''பூதனை'' என்னும் பேய்வடிவில் வந்தவளின் இறுதிநாளை உண்டாக்கி அவள் உயிரைப் போக்கியருளிய எம் பெருமான் ஸ்ரீகண்ணபிரான் ''திருவல்லவாழ்'' என்னும் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் ''ஸ்ரீவல்லபன்'' என்னும் திருநாமம் கொண்ட பிரானைப் பற்றி எப்போதும் எடுத்துக் கூறிக் கொண்டு சென்று நீ அவனை வணங்க வேண்டும்.

Koviloor Digital Library

உருவினார் பிறவிசேர் ஊன்பொதி
நரம்புதோல் குரம்பை யுள்புக்கு,
அருவிநோய் செய்துநின் றைவர்தாம்
வாழ்வதற் கஞ்சி னாயேல்,
திரு வினார் வேதநான் கைந்துதீ
வேள்வியோ டங்க மாறும்,
மருவினார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 1813

என் மனமே! இம்மனித வடிவு என்னும் பருத்த உடலைக் கொண்டுள்ள இப்பிறவி என்பதனுடன் சேர்ந்து கொண்டு உடல் பருத்து, நரம்பும் தோலுமாக இருக்கின்ற குடிசை என்னும் உடலினுள் புகுந்து கொண்டு, அருவி போன்று இழிந்து வந்து கொண்டிருக்கின்ற நோய்களோடும் கூடி, ஐம்புலன்களால் உண்டாகக் கூடிய ஆசைகள் காரணமாக உண்டாகும் துன்பங்களைக் கொண்டு வாழ்வதற்கு அஞ்சிக் கொண்டிருப்பாயானால் அறிவுச் செல்வம் மிக்கவராகி நான்கு வேதங்கள், ஐந்து வகையான வேள்விகளுடன், ஆறங்கங்களையும் கொண்டியங்குகின்ற ''திருவல்லவாழ்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீவல்லபன் என்னும் திருநாமம் கொண்ட ஸ்ரீமந்நாராயணனைப் பற்றி நீ எடுத்துரைத்தபடிக்குச் சென்று சேர்ந்து சேவிப்பாயாக!

நோயெலாம் பெய்ததோர் ஆக்கையை
மெய்யெனக் கொண்டு, வாளா
பேயர்தாம் பேசுமப் பேச்சைநீ
பிழையெனக் கருதி னாயேல்,
தீயலா வெங்கதிர்த் திங்களாய்
மங்குல்வா னாகி நின்ற,
மாயனார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 1814

என் மனமே! நோய்களினால் அமைந்திருக்கின்ற இந்த உடலை உண்மையானது என்று எண்ணிக் கொண்டு அறிவற்றவர்கள் இவ் வுடலின் பெருமைகளாகக் கூறி வீணாகப் பேசிக் கொண்டிருக்கின்ற பேச்சினைப் பற்றி நீ தவறு என்று கருதிக் கொண்டிருப்பீராகில் வெப்பக்கதிர்களையுடைய சூரியனும், சந்திரனும், மேகக்கூட்டங்கள் உலவி வருகின்ற வானமும் ஆகிய அனைத்துமாகி நிற்கின்ற, அவைகளை அமைத்துத் தருகின்ற ''மாயன்'' திருவல்லவாழ் என்னும்

Koviloor Digital Library

திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்ற ஸ்ரீவல்லபப் பெருமானைப் பற்றி எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவராக இருப்பார்கள் என்பதை அறிந்து கொள்வாயாக!

மஞ்சுசேர் வானெரி நீர்நிலம்
காலிவை மயங்கி நின்ற,
அஞ்சுசேர் ஆக்கையை அரணமன்
றென்றுய்யக் கருதி னாயேல்,
சந்துசேர் மென்முலைப் பொன்மலர்ப்
பாவையும் தாமும், நாளும்
வந்துசேர் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 1815

என் மனமே! மேகங்கள் நிறைந்துள்ள ஆகாயம், நெருப்பு, நீர், நிலம், காற்று ஆகிய இவ்வைம் பெரும்பூதங்களையும் கொண்ட இவ்வுடலினைக் கொண்டு நமக்குப் பாதுகாப்பானது அல்ல என்று எண்ணிப் பிழைத்துப் போக வேண்டும் என்று கருதிக் கொண்டிருப் பீர்களாயின் சந்தனத்தினைப் பூசிக் கொண்டிருக்கின்ற மென்மையான முலைகளையுடைய திருமகள் என்னும் பொற்றாமரை மலரில் வசித்துக் கொண்டிருக்கின்ற பெரிய பிராட்டியாருடன் எப்போதும் கூடி வாழ்கின்ற திருத்தலமாகிய திருவல்லவாழினிலே திருக்கோயில் கொண்டு நிலையாக நின்று எழுந்தருளும் எம்பெருமான் ''ஸ்ரீவல்லபவாழ்'' என்னும் பெருமானைப்பற்றி எடுத்துரைக்கவல்ல ஆற்றலைப் பெற்றவர்களாக அமைந்திருப்பார்கள் என்பதை அறிந்து கொள்வாயாக!

வெள்ளியார் பிண்டியார் போதியார்
என்றிவர் ஓது கின்ற,
கள்ளநூல் தன்னையும் கருமமன்
றென்றுய்யக் கருதி னாயேல்,
தெள்ளியார் கைதொழும் தேவனார்
மாமுநீர் அமுது தந்த,
வள்ளலார் வல்லவாழ் சொல்லுமா
வல்லையாய் மருவு நெஞ்சே! 1816

என் மனமே! பாசுபதர்கள், சமணர்கள், பௌத்தர்கள் ஆகிய புறமதத்தினைச் சேர்ந்தவர்கள் ஓதுகின்ற பொய்மைமிக்க, வஞ்சனைகள் மிக்க நூல்களில் கூறப்படுகின்ற சாத்திரங்கள் உய்வு

Koviloor Digital Library

பெறக்கூடிய உறுதிப் பொருள் அன்று என்பதால் இவை நமக்கு ஓதக் கூடியதன்று என்று எண்ணியவாறு நீ பிழைத்துக் கொள்ளக் கருதிக் கொண்டிருப்பாயானால், எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றித் தெளிந்த அறிவுடையவர்களாக இருந்து கொண்டு அவனைக் கைகூப்பித் தொழுது வணங்குகின்ற என் பெருந்தெய்வமுமாகிய எம்பெருமான் திருப்பாற்கடலினின்றும் திருவமுதினை எடுத்தந் தருளிய வள்ளலாகி விளங்குகின்ற ''திருவல்லவாழ்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீவல்லபப் பெருமானைப் பற்றிய சிறப்புகளையும், உயர்வினையும் பற்றி எடுத்துரைக்கும் ஆற்றல் பெற்றவர்களாகத் திகழ்வார்கள்.

*மறைவலார் குறைவிலார் உறையுமூர்
வல்லவாழ் அடிகள் தம்மை,
சிறைகுலா வண்டறை சோலைசூழ்
கோலநீள் ஆலி நாடன்,
கறையுலா வேல்வல்ல கலியன்வாய்
ஒலியிவை கற்று வல்லார்,
இறைவராய் இருநிலம் காவல்பூண்
டின்பநன் கெய்து வாரே. 1817

வேதங்களை ஓதுவதில் வல்லவர்கள் குறைவொன்றுமில்லாத வர்களாக வாழ்ந்து கொண்டிருக்கும் ''திருவல்லவாழ்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீவல்லபப் பெருமானைப் பற்றி, சிறகினையும் கொண்டாட்டத்தினையுமுடைய வண்டுகள் இன்னிசையை இசைத்துக் கொண்டிருக்கின்ற அளவில் சோலைகள் சூழ்ந்திருக்கின்ற அழகு மிக்கதோர் நீண்ட ''திருவாலி'' என்னும் நகர்க்கு அரசராகிய இரத்தக் கறைகள் படிந்திருக்கின்ற வேலாயுதத்தினையுடைய வல்லமை மிக்க ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலிமிக்க இப்பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்ல அடியவர்கள் இவ்வுலகினைப் பாதுகாத்து வரும் அரசர்களாக இருந்து அரசாட்சி புரிந்து பேரானந்தத்தினை நன்முறையில் அடைந்து வாழ்வார்கள்.

Koviloor Digital Library

8. முந்துற
திருமாலிருஞ்சோலை

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*முந்துற வுரைக்கேன் விரைக்குழல் மடவார்
கலவியை விடுதடு மாறல்,
அந்தர மேழும் அலைகட லேழும்
ஆயவெம் மடிகள்தம் கோயில்,
சந்தொடு மணியும் அணிமயில் தழையும்
தழுவிவந் தருவிகள் நிரந்து,
வந்திழி சாரல் மாலிருஞ் சோலை
வணங்குதும் வாமட நெஞ்சே! 1818

அறியாமை மிகுந்துள்ள என் மனமே! முதன் முதலாக ஒன்றைக் கூறுகிறேன் கேட்பாயாக! நறுமணம் வீசுகின்ற கூந்தலையுடைய பெண்களின் கலவியின் காரணமாக உண்டாகும் தடுமாற்றம் என்ற ஒன்றினைவிட்டு விடுவாயாக! ஏழுவகையான உலகங்களையும் அலைவீசுகின்ற ஏழுகடல்களையும் தம் திருமேனியாகப் பெற்ற எம்பெருமான் ஸ்ரீசௌரிஇராசப் பெருமான் எழுந்தருள்புரியும் திருத்தலம் என்பது சந்தன மரங்களையும், மணிகளையும் மயில் தோகைகளையும் தழுவியவாறு வந்து ஒருங்கே சேர்கின்ற அருவிகளினின்றும் கொட்டுகின்ற நீரலைகளின் சாரல்கள் வீசுகின்ற ''திருமாலிருஞ்சோலை மலை'' என்பதாகும். இத்தகைய திருத்தலம் சென்று எம்பெருமான் ஸ்ரீ கள்ளழகப் பெருமானிடம் சென்று வணங்கி வழிபடுவதற்கு வருவாயாக!

'இண்டையும் புனலும் கொண்டிடை யின்றி
எழுமினோ தொழுதும்'என்று, இமையோர்
அண்டரும் பரவ அரவணைத் துயின்ற
சுடர்முடிக் கடவுள்தம் கோயில்,
விண்டலர் தூளி வேய்வளர் புறவில்
விரைமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன்,
வண்டமர் சாரல் மாலிருஞ் சோலை
வணங்குதும் வாமட நெஞ்சே! 1819

அறியாமை மிகுந்துள்ள என் மனமே! பூமாலையையும், தீர்த்தத்தினையும் கொண்டு இடைவெளி என்பது ஒன்றில்லாமல்

Koviloor Digital Library

படிக்குத் தொழுவதன் பொருட்டு எழுந்திருப்பாயாக! என்று கூறிக் கொண்டே விண்ணுலகத் தேவர்கள் யாவரும் வந்து வணங்கும் படியாகத் திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருள்கின்ற ஒளி வீசுகின்ற திருமுடியினையுடைய எம்பெரு மான் எழுந்தருள்புரியும் திருத்தலம் என்பது விண்ணில் பரவுமாறு துகள்களைப் பரப்பி விடுகின்ற மூங்கில்கள் நிறைந்து வளர்ந் திருக்கின்ற சோலைகள் சூழ்ந்துள்ள இடங்களில் குறிஞ்சி மலர்களில் நறுமணமிக்க தேனையுண்ட வண்டுகள் அம்மலர்களிலேயே அமர்ந் திருக்கின்ற சாரல்களையுடைய ''திருமாலிருஞ்சோலைமலை'' என்பதாகும். இத்தகைய திருத்தலம் சென்று அங்கே எழுந்தருள் புரிந்து கொண்டிருக்கும் எம்பெருமான் ஸ்ரீகள்ளழகப் பெருமானிடம் சென்று வணங்கி வழிபடுவதற்கு வருவாயாக!

பிணிவளர் ஆக்கை நீங்கநின் றேத்தப்
பெருநிலம் அருளின்முன் அருளி,
அணிவளர் குறளாய் அகலிடம் முழுதும்
அளந்தவெம் மடிகள்தம் கோயில்,
கணிவளர் வேங்கை நெடுநில மதனில்
குறவர்தம் கவணிடைத் துரந்த,
மணிவளர் சாரல் மாலிருஞ் சோலை
வணங்குதும் வாமட நெஞ்சே! 1820

அறியாமை மிகுந்துள்ள என் மனமே! நோய்கள் நிறைந்து வளர்ந்து கொண்டிருக்கும் இப்பெருவுடலை விட்டு நீங்கும் பொருட்டு நாம் எம்பெருமானை வணங்குதல் வேண்டியே மிகப் பெரியதாகத் திகழ்கின்ற இப்பூமியை நமக்கு அவ்வெம்பெருமானே அளித்தருளினன். அதன் காரணமாக ''வாமனன்'' என்னும் அவதாரம் மேற்கொண்டு ''மகாபலிச்சக்கரவர்த்தியின் வேள்வித்தீயின் முன்பு இரந்து பெற்ற மூவடி மண்ணை அளக்கும் பொருட்டுத் ''திரிவிக்கிரமன்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு இந்த உலகம் முழுவதையும் அளந்துவிட்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருக்கோயில் கொண்டுள்ள திருத்தலம் யாதெனின், பூக்கள் நிறையப் பூத்திருப்பது கண்டு காலக்கணக்கு காட்டிடும் வேங்கை மரங்கள் வளர்ந்திருக்கின்ற நிலங்களில் இங்கேயுள்ள குரவர்கள் தம் கவண் கயிற்றில் மணிகளை வைத்து எறிவதனாலுண்டான ஒளி வீசிச் சிதறுகின்ற சிறப்புமிக்க சாரல்களைக் கொண்டிருக்கின்ற

Koviloor Digital Library

''திருமாலிருஞ்சோலை மலை'' என்பதாகும். இத்தகைய திருத்தலம் சென்று எம்பெருமான் ஸ்ரீகள்ளழகப் பெருமானிடம் சென்று வணங்கி வழிபட்டு வருவதற்காக வருவாயாக!

சூர்மையி லாய பேய்முலை சுவைத்துச்
சுடுசரம் அடுசிலைத் துரந்து,
நீர்மையி லாத தாடகை மாள
நினைந்தவர் மனம்கொண்ட கோயில்,
கார்மலி வேங்கை கோங்கலர் புறவில்
கடிமலர்க் குறிஞ்சியின் நறுந்தேன்,
வார்புனல் சூழ்தண் மாலிருஞ் சோலை
வணங்குதும் வாமட நெஞ்சே! 1821

அறியாமை மிகுந்துள்ள என் மனமே! கொடிய நஞ்சினைக் கொண்டு, பேய்வடிவில் வந்த ''பூதனை'' என்பவளின் முலைகளைத் தாம் வாயினால் சுவைத்துப் பாலினை அருந்திய நிலையிலேயே அவளை அழித்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானும், கொடிய காட்டிலிருந்த 'தாடகை' என்னும் பெண்மை என்னும் பண்பில்லாத அரக்கியின்மீது, நெருப்பு போன்று சுடுகின்ற அம்புகளைத் தொடர்ந்து வீசிச் செலுத்தி அவளுயிரைப் போக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானும் ஆகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தம் மனத்தளவில் விரும்பித் தங்கி இருக்கின்ற திருத்தலம் யாதெனின், மேகக்கூட்டங்களைத் தொடுமளவிற்கு ஓங்கியுயர்ந்து வளர்ந்துள்ள வேங்கை மரங்கள், கோங்கு மரங்கள் ஆகியவை தம் மலர்கள் மலர்ந்து உதிர்க்கும் நிலங்களிலுள்ள சோலைகளில் குறிஞ்சி மலர்களினின்றும் தேன் வெள்ளமிடுகின்ற, நீர் சூழ்ந்திருக்கின்ற குளிர்ச்சி பொருந்திய ''திருமாலிருஞ்சோலைமலை'' என்பதாகும். இத்தகைய திருத்தலம் சென்று எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர்பிரானிடம் சென்று வணங்கி வழிபடுவதற்கு வருவாயாக!

வணங்கலில் அரக்கன் செருக்களத் தவிய
மணிமுடி ஒருபதும் புரள,
அணங்கெழுந் தவன்றன் கவந்தம்நின் றாட
அமர்செய்த அடிகள்தம் கோயில்,
பிணங்கலில் நெடுவேய் நுதுமுகம் கிழிப்பப்
பிரசம்வந் திழிதர, பெருந்தேன்
மணங்கமழ் சாரல் மாலிருஞ் சோலை
வணங்குதும் வாமட நெஞ்சே! 1822

Koviloor Digital Library

அறியாமை மிகுந்துள்ள என் மனமே! யாரையும் வணங்குவது என்பது இல்லாத இராவணன் என்னும் அரக்கனாகிய இலங்கை மாநகர் மன்னன் போர்க்களத்தில் அழியும்படியாகவும், அவனுடைய மணிமுடிகள் பத்தும் தரையில் விழுந்து புரளும்படியாகவும் செய்து, அவனுடைய தலைகளில்லாத உடல் மட்டும் தெய்வ ஆவேசம் கொண்டது போன்று எழுந்து நின்று ஆடிக் கொண்டிருக்குமாறும் போரிட்டு வெற்றி பெற்ற எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருக் கோயில் கொண்டுள்ள திருத்தலம் யாதெனின், பின்னிப் பிணைந்து வளர்ந்துள்ள மூங்கில்களின் நுனியானது மலை உச்சியிலுள்ள தேன் கூட்டினைக் கிழித்து விடுவதனால், அவற்றினின்றும் தேனீக்கள் சிதறி ஓடிட, அதனால் தேன் நிறைந்து வழிந்து கொண்டிருப்பதனால் உண்டான நறுமணம் வீசுகின்ற சாரலை உடைய ''திருமாலிருஞ் சோலை மலை'' என்பதாகும். இத்தகைய திருத்தலம் சென்று எம்பெருமான் ஸ்ரீகள்ளழகப் பெருமானிடம் சென்று வணங்கி வழிபடுவதற்கு வருவாயாக!

விடங்கலந் தமர்ந்த அரவணைத் துயின்று
விளங்கனிக் கிளங்கன்று விசிறி,
குடங்கலந் தாடிக் குரவைமுன் கோத்த
கூத்தவெம் மடிகள்தம் கோயில்,
தடங்கடல் முகந்து விசும்பிடைப் பிளிறத்
தடவரைக் களிறென்று முனிந்து,
மடங்கல்நின் றதிரும் மாலிருஞ் சோலை
வணங்குதும் வாமட நெஞ்சே! 1823

அறியாமை மிகுந்துள்ள என் மனமே! விடத்துடன் கூடி அமைந்திருக்கின்ற திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருளி, விளங்கனியின்மீது இளங்கன்றினை வீசியெறிந்து குடக்கூத்தாடி இடைக்குலப் பெண்களுடன் சேர்ந்து கொண்டு குரவை கோத்தவன் என்னும் பெருமையுடைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் விரும்பி இருக்கின்ற திருக்கோயில் கொண்டுள்ள திருத்தலம் யாதெனின், கடல்நீரினை முகந்து கொண்டு விண்ணிலே ஏறிக்கொண்டு முழக்க மிட்டுக் கொண்டிருக்க, அதனைக் கேட்ட சிங்கம் மலையிலுள்ள யானையின் இடியோசை என்று எண்ணிச் சீற்றம் கொண்டு, அவ்வாறே தானும் முழங்குகின்ற வளம்மிக்க ''திருமாலிருஞ்சோலை மலை'' என்பதாகும். இத்தகைய திருத்தலம் சென்று எம்பெருமான்

Koviloor Digital Library

ஸ்ரீகள்ளழகர் பெருமானைக் கண்டு வணங்கிச் சேவிப்பதற்கு வருவாயாக!

தேனுகன் ஆவி போயுக அங்கோர்
செழுந்திரள் பனங்கனி யுதிர,
தானுகந் தெறிந்த தடங்கடல் வண்ணர்
எண்ணிமுன் இடங்கொண்ட கோயில்,
வானகச் சோலை மரகதச் சாயல்
மாமணிக் கல்லதர் நிறைந்து,
மானுகர் சாரல் மாலிருஞ் சோலை
வணங்குதும் வாமட நெஞ்சே! 1824

அறியாமை மிகுந்துள்ள என் மனமே! திரண்டு வளர்ந்திருக்கின்ற பனம்பழங்களை உதிரச் செய்யும் பொருட்டுத் ''தேனுகாசுரன்'' என்னும் அசுரனை அம்மரத்தின்மீது தான் உகந்து எறிந்து அவனை அழித்து ஒழித்த எம்பெருமான் கடல்நிறத்தினைக் கொண்டுள்ள கண்ணபிரான் தன் மனத்தளவில் எண்ணி முன்பு திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய திருத்தலம் யாதெனின், மரகதம் போன்ற சாயலைக் கொண்டுள்ள ஒளிவீசும் விண்அளவும் ஓங்கி உயர்ந் திருக்கின்ற சோலைகளிலுள்ள நீலநிறப் பாறைகளின் வழிகளில் மான்கள் நுழைந்து மேய்ந்து கொண்டிருக்கின்ற சாரல்களையுடைய ''திருமாலிருஞ்சோலைமலை'' என்னும் திருத்தலமாகும். இத்தகைய திருத்தலத்திற்குச் சென்று எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர்பிரானிடம் சென்று வணங்கி வழிபடுவதன் பொருட்டு நீ இங்கே வருவாயாக!

புதமிகு விசும்பில் புணரிசென் றணவப்
பொருகடல் அரவணைத் துயின்று,
பதமிகு பரியின் மிகுசினம் தவிர்த்த
பனிமுகில் வண்ணர்தம் கோயில்,
கதமிகு சினத்த கடதடக் களிற்றின்
கவுள்வழிக் களிவண்டு பருக,
மதமிகு சாரல் மாலிருஞ் சோலை
வணங்குதும் வாமட நெஞ்சே! 1825

அறியாமை மிகுந்துள்ள என் மனமே! கடலின் அலைகள் மேகக்கூட்டங்கள் நிறைந்திருக்கின்ற விண்ணில் சென்று உரசிக் கொள்ளும்படியாகக் கொந்தளிக்கின்ற திருப்பாற்கடலில் திருவனந் தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீமந்

Koviloor Digital Library

நாராயணன் ஸ்ரீகண்ணபிரானாகத் திருஅவதாரம் மேற்கொண்டிருந்த போது குதிரை வடிவில் பாய்ந்து வந்த 'கேசி' என்னும் அசுரனை அழித்தான். பனி போன்ற மென்மையான மேகத்தின் நிறம் கொண்ட திருமேனியைக் கொண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் திருத்தலம் யாதெனின், மிகுந்த கோபத்துடன் கூடிய மதம் மிகுந்த யானையானது, அக்கோபத்திற்கு மூலமாக உள்ள வேஷத்தினையுடையதாய்த் திகழ்கின்ற அளவில் அதன் கபாலத்தின் வழியாகப் பெருகி வழியும் மதநீரை வண்டுகள் பருகிடவும், அம்மதநீர் வெள்ளமாகப் பாய்ந்தோடும் சாரல்களை உடைய வளம்மிக்க ''திருமாலிருஞ்சோலைமலை'' என்னும் திருத் தலமாகும். இத்தகைய திருத்தலம் சென்று அங்கு எழுந்தருளியுள்ள எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர்பிரானிடம் சென்று வணங்கி வழிபடுவதன் பொருட்டு நீ வருவாயாக!

புந்தியில் சமணர் புத்தரென் றிவர்கள்
ஒத்தன பேசவும் உகந்திட்டு,
எந்தைபெம் மானார் இமையவர் தலைவர்
எண்ணிமுன் இடங்கொண்ட கோயில்,
சந்தனப் பொழிலின் தாழ்சினை நீழல்
தாழ்வரை மகளிர்கள் நாளும்,
மந்திரத் திறைஞ்சும் மாலிருஞ் சோலை
வணங்குதும் வாமட நெஞ்சே! 1826

அறியாமை மிகுந்துள்ள என் மனமே! அறிவற்ற சமணர்கள், பௌத்தர்கள் என்று சொல்லப்படுகின்ற மறைகட்கு எதிராகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற இவர்கள் தங்கள் கொள்கைக் கேற்றவாறு தத்தம் கருத்துகளைக் கூறிக் கொண்டிருக்க அவைகளை மேன்மையானது என்று எண்ணிக் கருதிக் கொண்டிருக்கும் நிலையில், எந்தையாகிய, விண்ணுலகத் தேவர்கட்குத் தலைவராகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தன் மனத்தினுள்ளே முன்பே தாம் இருக்க வேண்டிய இடம் இதுவென்று எண்ணித் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருத்தலம் யாதெனின், சந்தனமரச் சோலைகளின் தாழ்வான பகுதியான நிழல்களில் மலைகளின் தாழ்வான பகுதிகளிலுள்ள மலைவாழ் பெண்கள் நாள்தோறும் மந்திரங்களைக் கூறித் துதித்துக் கொண்டிருக்கின்ற ''திருமாலிருஞ்சோலை மலை'' என்பதாகும். இத்தகைய திருத்தலம்

Koviloor Digital Library

சென்று எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர்பிரானிடம் சென்று வணங்கி வழிபடுவதன் பொருட்டு நீ இங்கே வருவாயாக!

*வண்டமர் சாரல் மாலிருஞ் சோலை
மாமணி வண்ணரை வணங்கும்,
தொண்டரைப் பரவும் சுடரொளி நெடுவேல்
சூழ்வயல் ஆலிநன் னாடன்,
கண்டல்நல் வேலி மங்கையர் தலைவன்
கலியன்வா யொலிசெய்த பனுவல்,
கொண்டிவை பாடும் தவமுடை யார்கள்
ஆள்வரிக் குரைகட லுலகே. 1827

வண்டுகள் நிறைய வந்து அமர்ந்து கொண்டிருக்கின்ற மலர்களை உடைய வளம்மிக்க ''திருமாலிருஞ்சோலை மலை'' என்னும் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் நீலமணியின் நிறம் கொண்டுள்ள ஸ்ரீகள்ளழகர்பிரானைப் பற்றி, அப்பெருமானை வணங்குகின்ற திருத்தொண்டர்களைத் துதித்துக் கொண்டிருக்கின்ற, ஒளி வீசுகின்ற பெரிய வேற்படையைக் கொண்டுள்ளவராகியும், வயல்கள் சூழ்ந்திருக்கின்ற 'திருவாலி' என்னும் நாட்டினையுடைய தாழைகளை வேலியாகக் கொண்டுள்ள ''திருமங்கை'' என்னும் நாட்டிற்கு மன்னனாகிய 'கலியன்' என்னும் திருமங்கை ஆழ்வார் தம் திருவாயினால் அருளிச் செய்த ஒலியுடன் கூடிய இப்பத்துப் பாசுரங்களையும் கொண்டு பாடக்கூடிய தவத்தினைப் பெற்றவர்கள் அலைகள் வீசுகின்ற கடலால் சூழப்பட்டிருக்கின்ற இந்நிலவுலகினை ஆளப்பெறுவார்கள்.

9. மூவரில் திருமாலிருஞ்சோலை

கொச்சகக் கலிப்பா

*மூவரில் முன்முதல்வன் முழங்கார்கட லுள்கிடந்து,
பூவல ருந்திதன்னுள் புவனம்படைத் துண்டுமிழ்ந்த,
தேவர்கள் நாயகனைத் திருமாலிருஞ் சோலைநின்ற,
கோவலர் கோவிந்தனைக் கொடியேரிடை கூடுங்கொலோ! 1828

Koviloor Digital Library

மும்மூர்த்திகள் என்றழைக்கப்படுகின்ற மூவரில் முன்பாகவே நிற்கின்ற முதல்வனாகிய அலைவீசுகின்ற கடலில் ஒலிக்கின்ற நிலையிலுள்ள திருப்பாற்கடலினுள் திருக்கண் வளர்ந்தருள்கின்ற அளவில் திருநாபியில் மலர்கின்ற தாமரையில் இவ்வுலகினைப் படைத்தளித்து உலகப் பிரளயம் உண்டான காலத்தில் அவ்வுலகினை யுண்டு தன் திருவயிற்றில் வைத்துப் பாதுகாத்து வைத்திருந்து பின்பு அவ்வுலகினை உமிழ்ந்து வெளிப்படுத்திய விண்ணுலகத் தேவர்கட் கெல்லாம் தலைவனாக இருந்து கொண்டு ''திருமாலிருஞ்சோலை மலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந் தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர்பிரானைக் கோபால கிருஷ்ணனான கோவிந்தன் என்னும் எம்பெருமானை வஞ்சிக்கொடி போன்ற நுண்ணிய இடையை உடைய என் மகள் கூடி மகிழ்ச்சி யினை அடையப் பெறுவாளோ?

*புனைவளர் பூம்பொழிலார் பொன்னிசூ ழரங்கநகருள்
முனைவனை, மூவுலகும் படைத்தமுதல் மூர்த்திதன்னை,
சினைவளர் பூம்பொழில்சூழ் திருமாலிருஞ் சோலைநின்றான்,
கனைகழல் காணுங்கொலோ கயல்கண்ணியெம் காரிகையே! 1829

புன்னை மரங்கள் வளர்ந்திருக்கின்ற புன்னை மலர்கள் நிறைந் திருக்கின்ற சோலைகளை உடையதாகத் திகழ்கின்ற ''பொன்னி'' என்னும் காவிரிநதி சூழ்ந்திருக்கின்ற அளவில் காவிரி நதியினி டையில் அமைந்துள்ள ''திருவரங்கம்'' என்னும் பெரிய கோயிலில் திருக்கண் வளர்ந்தருள்கின்ற முதல் அர்ச்சாவதார மூர்த்தியாகவும், மூன்று உலகங்களையும் படைத்தளித்த முதல் மூர்த்தியுமாகி, மலர்கள் நிறைந்து சூழ்ந்திருக்கின்ற ''திருமாலிருஞ்சோலைமலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்ற எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர்பிரானை, அவ்வெம்பெருமானின் திருவடிகளை மீன் போன்ற அழகிய கண்களை உடையவளாகிய என்னுடைய அழகிய மகள் கண்டு சேவிக்கப் பெறுவாளோ?

உண்டுல கேழினையும் ஒருபாலகன் ஆலிலைமேல்,
கண்டுயில் கொண்டுகந்த கருமாணிக்க மாமலையை,
திண்டிறல் மாகரிசேர் திருமாலிருஞ் சோலைநின்ற,
அண்டர்தம் கோவினையின் றணுகுங்கொலென் ஆயிழையே! 1830

முன்பு ஒரு காலத்தில் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் ஏழு உலகங்களையும் உண்டு, தன் வயிற்றினுள்ளே அடக்கி வைத்துக்

Koviloor Digital Library

கொண்டு பாதுகாத்தருளி ஓர் ஆலந்தளிரின்மீது சிறுபாலகனாக இருந்து திருக்கண் வளர்ந்தருளி தன் திருஉள்ளம் உகந்த பெரியதோர் கருமாணிக்க மலையைப் போன்ற திருமேனி வடிவு கொண்டுள்ள எம்பெருமானை, வலிமைமிக்க மதயானைகள் நிறைந்துள்ள ''திருமாலிருஞ்சோலை மலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்ற எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர்பிரானை, விண்ணுலகத் தேவர்கட்கெல்லாம் தலைவனாகத் திகழ்கின்ற எம்பெருமானை நல்ல ஆபரணங்களை அணிந்துள்ள என் மகள் இன்று சென்று அணுகி, இருக்கப் பெறுவாளோ?

சிங்கம தாயவுணன் திறலாகம்முன் கீண்டுகந்த,
பங்கய மாமலர்க்கண் பரனையெம் பரஞ்சுடரை,
திங்கள்நன் மாமுகில்சேர் திருமாலிருஞ் சோலைநின்ற,
நங்கள்பி ரானையின்று நணுகுங்கொலென் நன்னுதலே! 1831

முன்பொரு காலத்தில் ''நரசிம்மம்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் ''இரணியன்'' என்னும் அசுரனின் வலிமை மிக்க மார்பினைப் பிளந்து, அவனுடைய உயிரைப் போக்கி, மகிழ்ச்சியுற்ற, தாமரை மலரைப் போன்ற திருக்கண்களைக் கொண்டியங்குகின்ற யாவரினும் மேம்பட்ட பரம்பரனை, எம்முடைய பரஞ்சுடரை சந்திரமண்டலத்தையும், மேகமண்டலத்தினையும் தொடும்படியான ஓங்கி உயர்ந்த மலையினைக் கொண்டுள்ள ''திருமாலிருஞ்சோலைமலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர் பெருமானை அழகிய நெற்றியினையுடைய என் மகள் இன்று சென்று அருகில் இருப்பாளோ?

தானவன் வேள்விதன்னில் தனியேகுற ளாய்நிமிர்ந்து,
வானமும் மண்ணகமும் அளந்ததிரி விக்கிரமன்,
தேனமர் பூம்பொழில்சூழ் திருமாலிருஞ் சோலைநின்ற,
வானவர் கோனையின்று வணங்கித்தொழ வல்லள்கொலோ! 1832

மகாபலிச் சக்கரவர்த்தியின் வேள்வித் தீயின் முன்னே தன்னந் தனியாக ''வாமனன்'' என்னும் குள்ளமான வடிவு மேற்கொண்டு, இப்பூமியை இரந்து பெற்றுப் பின்பு ''திரி.விக்ரமன்'' என்னும் நெடிய திருமேனி வடிவு கொண்டு விண்ணுலகினையும், இம்மண்ணுலகினையும் அளந்து கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தேன்

Koviloor Digital Library

துளிர்க்கும் மலர்கள் நிறைந்த பூஞ்சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருமாலிருஞ்சோலை மலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ கள்ளழகர்பிரானை, விண்ணுலகத் தேவர்கட்கெல்லாம் தலைவனாகத் திகழ்கின்ற எம்பெருமானைக் கண்டு என் மகள் இன்று வணங்கித் தொழுது சேவிக்கப் பெறுவாளோ!

*நேசமி லாதவர்க்கும் நினையாதவர்க் கும்மரியான்,
வாசம லர்ப்பொழில்சூழ் வடமாமது ரைப்பிறந்தான்,
தேசமெல் லாம்வணங்கும் திருமாலிருஞ் சோலைநின்ற,
கேசவ நம்பிதன்னைக் கெண்டையொண்கண்ணி காணுங்கொலோ! 1833

''பரபக்தி'' என்னும் பக்தி இல்லாதவர்களுக்கும், இறைவன் என்று ஒருவன் இல்லை என்று எண்ணிக் கொண்டு தன் மனத் தளவில்கூட எண்ணிப் பார்க்காதவர்களுக்கும் ஆகிய இவர்கட்கு, அருகில் அணுகியிருப்பதற்கும் அரியவனாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் நறுமணம் வீசுகின்ற மலர்கள் நிறைந்துள்ள சோலைகள் சூழ்ந்திருக்கின்ற திருவடமதுரையில் திருஅவதாரம் பண்ணியருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் அனைத்துத் தேசங்களிலுமுள்ள யாவரும் வந்து வணங்கியிருக்கக் கூடியதான ''திருமாலிருஞ்சோலைமலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர்பிரான், சிறந்த குழல் கற்றையினையுடைய ''கேசவநம்பி'' என்னும் எம்பெருமானைக் கெண்டைமீனை ஒத்த கண்ணழகினையுடைய என் மகள் கண்டு சேவிக்கப் பெறுவாளோ?

புள்ளினை வாய்பிளந்து பொருமாகரி கொம்பொசித்து,
கள்ளச் சகடுதைத்த கருமாணிக்க மாமலையை,
தெள்ளரு விகொழிக்கும் திருமாலிருஞ் சோலைநின்ற,
வள்ளலை வாணுதலாள் வணங்கித்தொழ வல்லள்கொலோ! 1834

பறவை வடிவில் வந்த பகாசுரன் என்னும் அசுரனின் வாயைப் பிளந்துவிட்டு, போரிடும் ஆற்றல் பெற்ற ''குவலயாபீடம்'' என்னும் யானையின் கொம்பை முறித்துவிட்டு, கள்ளத்தனமாக வந்த சகடாசுரன் என்னும் அசுரனைத் தம் திருவடிகளால் உதைத்து அழித்து விட்டு அருள்புரிந்த கருமாணிக்க மலையை ஒத்த திருமேனியை யுடைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை, தெளிந்த அருவிநீர்

Koviloor Digital Library

கொண்டு ஓடி வருகின்ற ''திருமாலிருஞ்சோலைமலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம் பெருமான் ஸ்ரீகள்ளழகர் பெருமான் என்னும் வள்ளல் பெருமானை ஒளிமுகமுடைய என் மகள் வணங்கித் தொழும் வல்லமை பெற்றிருப்பாளோ?

*பார்த்தனுக் கன்றருளிப் பாரதத்தொரு தேர்முன்னின்று,
காத்தவன் றன்னைவிண்ணோர் கருமாணிக்க மாமலையை,
தீர்த்தனைப் பூம்பொழில்சூழ் திருமாலிருஞ் சோலைநின்ற,
மூர்த்தியைக் கைதொழவும் முடியுங்கொலென் மொய்குழற்கே! 1835

முன்பொரு காலத்தில் அருச்சுனனுக்கு அருள்புரிந்து பாரதப் போரின்போது முன்னே நின்று தேரைச் செலுத்திப் பாண்டவர்களைப் பாதுகாத்து அருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை, விண்ணுலகத் தேவர்கட்குத் தலைவனாகத் திகழும் கருமாணிக்கப் பெரிய மலையை யொத்த திருமேனியை உடைய தூய்மையான மூர்த்தியாகிய ''திருமாலிருஞ்சோலை மலை'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர் பெருமானைக் கைகூப்பித் தொழுது வணங்கக் கூடிய வாய்ப்பானது அடர்த்தியான கூந்தலையுடைய என் மகளுக்கு அமையுமோ?

*வலம்புரி யாழியனை வரையார்திரள் தோளன்றன்னை,
புலம்புரி நூலவனைப் பொழில்வேங்கட வேதியனை,
சிலம்பிய லாறுடைய திருமாலிருஞ் சோலைநின்ற,
நலந்திகழ் நாரணனை நணுகுங்கொலென் நன்னுதலே! 1836

வலம்புரி சங்கு, சக்கரம் ஆகிய ஆயுதங்களைக் கொண்டு, மலையினை ஒத்த திருத்தோள்களையுடையவனாகி, புலன்களைக் கவருகின்ற பூணூல் அணிந்து கொண்டிருக்கின்ற எம்பெருமானை, சோலைகள் சூழ்ந்திருக்கின்ற திருவேங்கடம் என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருவேங்கடம் என்னும் வேதங்களால் துதித்துப் போற்றப்படுகின்ற எம்பெருமானை, 'சிலம்பு' என்று போற்றப்படுகின்ற ''நூபுரம்'' என்னும் ஆற்றினைக் கொண்டுள்ள ''திருமாலிருஞ்சோலை மலை'' என்னும் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர்பிரான் என்னும் நன்மைகளைக் கொண்டு விளங்குகின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அழகிய நெற்றியினைக் கொண் டுள்ள என் மகள் அணுகியிருந்து வணங்கி சேவிக்கப் பெறுவாளோ?

Koviloor Digital Library

*தேடற் கரியவனைத் திருமாலிருஞ் சோலைநின்ற,
ஆடல் பறவையனை அணியாயிழை காணுமென்று,
மாடக் கொடிமதிள்சூழ் மங்கையார்கலி கன்றிசொன்ன,
பாடல் பனுவல்பத்தும் பயில்வார்க்கில்லை பாவங்களே! 1837

நம்முடைய பெருமுயற்சியினைக் கொண்டு தேடினாலும் கிடைத்தற்கரிய எம்பெருமானைத் ''திருமாலிருஞ்சோலைமலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர் பெருமானைப் ''பெரிய திருவடி'' என்று போற்றப்படுகின்ற கருடாழ்வாரை வாகனமாகக் கொண்டு ஆபரணங்கள் பலவற்றை அணிந்திருக்கின்ற என் மகள் கண்டு சேவிக்கப் பெறுவாளோ! என்று மாடமாளிகைகளிலுள்ள கொடிகளுடன் கூடிய மதில்களால் சூழ்ந்து கொண்டிருக்கின்ற 'திருமங்கை' என்னும் நகருக்கு மன்னனாகிய ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் பயில்பவர்களுக்குப் பாவங்கள் ஏதும் இல்லாமற் போய்விடும்.

10. எங்கள்
திருக்கோட்டியூர்

ஆசிரியத்துறை

*எங்க ளெம்மிறை யெம்பிரா னிமையோர்க்கு
நாயகன்,ஏத் தடியவர்
தங்கள் தம்மனத்துப் பிரியா தருள்புரிவான்,
பொங்குதண் ணருவி புதம்செய்யப்
பொன்களே சிதறு மிலங்கொளி,
செங்கமல மலரும் திருக்கோட்டி யூரானே. 1838

அடியவர்களாகிய எங்கட்கு இறைவனாகவும், எமக்கு உதவிகளைச் செய்து கொண்டு இருப்பவனாகவும், விண்ணுலகத் தேவர்கட்குத் தலைவனாகவும், ஏத்தித் துதிக்கின்ற அடியவர்கள் தம் மனத்தினின்றும் பிரியாமல் இருந்து கொண்டு அருள்புரிந்து கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பொங்கி ஓடி வருகின்ற குளிர்ச்சியான அருவியானது விரைந்து வேகமாகத் தாவிப் பாய்ந்துவர, அதனால் பொன்மணிகள் சிந்துகின்றன. அப் பொன்மணிகள் சிந்தியதனால் உண்டான ஒளியைப் பெற்றிருக்கின்ற

Koviloor Digital Library

சிவந்த செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கின்ற ''திருக்கோட்டியூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ''ஸ்ரீஉரகமெல்லணையான்'' என்னும் திருநாமத்துடன் சேவை சாதிக்கின்றான்.

எவ்வநோய் தவிர்ப்பான் எமக்கிறை
இன்னகைத் துவர்வாய், நிலமகள்
செவ்வி தோய வல்லான் திருமா மகட்கினியான்,
மௌவல் மாலை வண்டாடும் மல்லிகை
மாலையோடு மணந்து, மாருதம்
தெய்வம் நாற வரும்திருக் கோட்டி யூரானே. 1839

எமக்கு இறைவனாக விளங்குகின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் எம்முடைய துன்பத்துக்குக் காரணமாக இருக்கின்ற நோய்களைப் போக்கி அருள்கின்றான். இனிய புன்சிரிப்புடன் கூடிய சிவந்த திருவாயினை உடைய பூமிப்பிராட்டியாரின் அழகினை அனுபவிக்கக் கூடிய ஆற்றல் பெற்றவன். ''திருமாமகள்'' என்னும் பெரிய பிராட்டியாருக்கு இனியனாக இருப்பவன். வண்டுகள் ஓடிவந்து ஆடிக் கொண்டிருக்கும் மல்லிகை, முல்லை ஆகிய மலர் மாலைகளுடன் கூடிய காற்றானது நறுமணம் வீசிக் கொண்டிருக்கின்ற ''திருக்கோட்டியூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிந்து வரும் எம்பெருமான் ''ஸ்ரீஉரகமெல்லணையான்'' என்னும் திருநாமத்துடன் சேவை சாதித்து அருள்புரிந்து கொண்டிருக்கின்றான்.

வெள்ளியான் கரியான் மணிநிற வண்ணன்
விண்ணவர் தமக்கிறை, எமக்கு
ஒள்ளியா னுயர்ந்தா னுலகேழு முண்டுமிழ்ந்தான்,
துள்ளுநீர் மொண்டு கொண்டு சாமரைக்
கற்றைச் சந்தன முந்தி வந்தசை,
தெள்ளுநீர்ப் புறவில் திருக்கோட்டி யூரானே. 1840

விண்ணுலகத் தேவர்கள் யாவர்க்கும் தலைவனாகத் திகழ்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் கிரேதாயுகத்தில் வெண்மை நிறமுடையவனாகவும், துவாபரயுகத்தில் நீலமணி போன்ற நிறத்தினை உடையவனாகவும், கலியுகத்தில் கறுப்பு நிறத்தினை யுடையவனாகவும் திகழ்கின்றான். இவ்வாறாகத் தன் திருமேனி யழகினை அடியேனுக்குக் காட்டியருளியவன். முன்பு உலகப்

Koviloor Digital Library

பிரளயம் உண்டான காலத்தில் ஏழு உலகங்களையும் உண்டு தன் திருவயிற்றின் உள்ளே அடக்கி வைத்துப் பாதுகாத்துப் பின்பு உமிழ்ந்து வெளிப்படுத்தருளிய எம்பெருமான் துள்ளி ஓடி வருகின்ற அலைகளுடன் கூடிய நீரானது சாமரைக் கற்றைகளையும், சந்தன மரங்களையும் இழுத்துக்கொண்டு வருகின்ற தெளிந்த நீர் நிறைந்துள்ள மணிமுத்தாறு என்னும் ஆறு சூழ்ந்து அமைந்துள்ள ''திருக்கோட்டியூர்'' என்னும் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரியும் எம்பெருமான் ''ஸ்ரீஉரகமெல்லணையான்'' என்னும் திருநாமத்துடன் சேவை சாதித்து அருள்புரிந்து கொண்டிருக்கின்றான்.

ஏறு மேறி இலங்குமொண் மழுப்பற்றும்
ஈசற் கிசைந்து, உடம்பிலோர்
கூறுதான் கொடுத்தான் குலமாமகட் கினியான்,
நாறு சண்பக மல்லிகை மலர்புல்கி
இன்னிள வண்டு, நன்னறுந்
தேறல்வாய் மடுக்கும் திருக்கோட்டி யூரானே. 1841

காளையை வாகனமாகக் கொண்டு அதன்மீது ஏறி இருக்கின்றவனும், ''மழு'' என்னும் ஆயுதத்தைக் கையில் ஏந்திக் கொண்டிருப்பவனுமாகிய சிவபெருமானுக்குத் தன் திருமேனியின் ஒரு பாகத்தைக் கொடுத்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் 'திருமகள்' என்னும் பெரிய பிராட்டிக்கு இனிமையானவன். நறுமணம் வீசுகின்ற செண்பகமலர், மல்லிகை மலர் ஆகிய மலர்களிலே உள்ள தேனை வாய் வைத்துப் பருகும் வளம்மிக்க ''திருக்கோட்டியூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ''ஸ்ரீ உரகமெல்லணையான்'' என்னும் திருநாமத்துடன் சேவை சாதித்து அருள்புரிந்து கொண்டிருக்கிறான்.

வங்க மாகடல் வண்ணன் மாமணி வண்ணன்
விண்ணவர் கோன் மதுமலர்த்
தொங்கல் நீண்முடி யான்நெடி யான்படி கடந்தான்,
மங்குல் தோய்மணி மாட வெண்கொடி
மாக மீதுயர்ந் தேறி, வானுயர்
திங்கள் தானணவும் திருக்கோட்டி யூரானே. 1842

கப்பல்கள் ஓடுகின்ற கடலின் நிறத்தினையும், நீலமணி நிறத்தினையும் உடைய, விண்ணுலகத் தேவர்கட்கெல்லாம் தலைவனாகத் திகழ்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தேன்

Koviloor Digital Library

நிறைந்த மலர் மாலைகளைத் தன் நீண்ட திருமுடியில் அணிந்து கொண்டு விளங்குகின்ற எம்பெருமான் ''திரிவிக்ரமன்'' என்னும் நெடிய திருவுருவு மேற்கொண்டு இப்பூமியை அளந்து கொண்ட எம்பெருமான் மேகத்தை அளாவி நிற்கும் மணிகள் பதித்த மாட மாளிகைகளில் கட்டிய வெண்ணிறக் கொடிகள் ஆகாயத்தின்மீது ஏறி உயர்ந்த அளவில் உலவி வருகின்ற சந்திரனைத் தொட்டுக் கொண்டிருக்கின்ற ''திருக்கோட்டியூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் ''ஸ்ரீ உரக மெல்லணையான்'' என்னும் திருநாமத்துடன் சேவை சாதித்து அருள்புரிகின்றான்.

காவல னிலங்கைக் கிறைகலங் கச்சரம்
செலவுய்த்து, மற்றவன்
ஏவலம் தவிர்த்தான் என்னை யாளுடை யெம்பிரான்,
நாவ லம்புவி மன்னர் வந்து வணங்க
மாலுறை கின்றதிங்கென,
தேவர் வந்திறைஞ்சும் திருக்கோட்டி யூரானே. 1843

இலங்கை மன்னன் இராவணனின் நிலை கலங்கிப் போகும் படியாக அவன்மீது அம்புகளைத் தொடுத்ததன்மூலம் அவனுடைய பத்துத் தலைகளையும் கீழே விழுமாறு செய்துவிட்டதனால் அவனுக்கென்றிருந்த மிடுக்கினை அழித்துவிட்ட ஸ்ரீஇராமபிரான் அடியேனை அடிமைப்படுத்தி ஆட்கொண்டருளிய எம்பெருமான் ''நாவலந்தீவு'' என்னும் தீவிலிருக்கின்ற மன்னர்கள் வந்து வணங்குகின்ற இடம் இதுவே என்று எண்ணி இங்கேதான் திருமால் தங்கியிருக்கின்ற இடம் என்று கருதிக் கொண்டிருப்பதுடன் விண்ணுலகத் தேவர்களும் வந்து வணங்கித் தொழுகின்ற எம்பெருமான் திருக்கோட்டியூர் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி ''ஸ்ரீ உரகமெல்லணையான்'' என்னும் திருநாமத்துடன் சேவை சாதித்து அருள்புரிந்து கொண்டிருக்கிறான்.

கன்று கொண்டு விளங்கனி யெறிந்து ஆநிரைக்
கழிவென்று, மாமழை
நின்று காத்துகந் தான்நில மாமகட் கினியான்,
குன்றின் முல்லையின் வாசமும் குளிர்மல்லிகை
மணமும் அளைந்து,இளந்
தென்றல் வந்துலவும் திருக்கோட்டி யூரானே. 1844

Koviloor Digital Library

கன்றின் வடிவு கொண்டு வந்த அசுரனைக் கொண்டு விளங்கனி வடிவில் வந்திருந்த அசுரன்மீது வீசியெறிந்து அவ்விரு அசுரர் களையும் வீழ்த்தியருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், பசுக்கூட்டங்களுக்கு உண்டான துன்பத்தைப் போக்கும் பொருட்டுக் கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாகப் பிடித்துப் பாதுகாத் தருளினான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீபூமிப்பிராட்டியாருக்கு இனியவனாகத் திகழ்கின்றான். இத்தகைய எம்பெருமான் குன்றின்மீது மலர்கின்ற முல்லை மலர்கள், கொடியில் மலர்கின்ற மல்லிகை மலர்கள் ஆகியவற்றுடன் கூடிய ''தென்றல் காற்று'' வந்து தழுவி நறுமணம் வீசுகின்ற ''திருக்கோட்டியூர்'' என்னும் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ''ஸ்ரீ உரகமெல்லணையான்'' என்னும் திருநாமத்துடன் சேவை சாதித்து அருள்புரிந்து கொண்டிருக்கிறான்.

பூங்கு ருந்தொசித் தானைகாய்ந் தரிமாச் செகுத்து,
அடியேனை யாளுகந்து
ஈங்கென் னுள்புகுந் தானிமை யோர்கள்தம் பெருமான்,
தூங்கு தண்பல வின்கனி தொகுவாழையின்
கனியொடு மாங்கனி
தேங்கு தண்புனல்சூழ் திருக்கோட்டி யூரானே. 1845

பூக்கள் பூத்திருக்கின்ற குருந்த மரத்தினை முறித்துத் தள்ளிவிட்டு, ''குவலயாபீடம்'' என்னும் யானையின்மீது சீற்றம் கொண்டு போரிட்டு அதன் கொம்புகளை முறித்துவிட்டு குதிரை வடிவில் வந்த ''கேசி'' என்னும் அசுரனை அழித்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் இங்கே வந்து அடியேனை ஆட்கொண்டு அருளி மகிழ்ச்சியுற்று அடியேனின் மனத்தினுள்ளே புகுந்திருக்கிறான். விண்ணுலகத் தேவர்கள் வணங்குகின்ற எம்பெருமான் மாம்பழங்கள், பலாப் பழங்கள், வாழைப்பழங்கள், தேங்காய்கள் ஆகியவை நிறைந்திருக்கக் குளிர்ந்த நீர் சூழ்ந்திருக்கின்ற நீர்வளம் மிக்க ''திருக்கோட்டியூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ஸ்ரீ உரகமெல்லணையான் என்ற திருநாமத்துடன் சேவை சாதித்து அருள்புரிந்து கொண்டிருக்கின்றான்.

Koviloor Digital Library

கோவை யின்தமிழ் பாடு வார்குடம்
ஆடு வார்தட மாமலர்மிசை,
மேவு நான்முகனில் விளங்கு புரிநூலர்,
மேவு நான்மறை வாணர் ஐவகை வேள்வி
ஆறங்கம் வல்லவர் தொழும்,
தேவ தேவபிரான் திருக்கோட்டி யூரானே. 1846

ஒழுங்காக அமைந்திருக்கின்ற இனிய தமிழ்ப் பாசுரங்களாகிய இத்திருமொழியை விரும்பி ஏற்றுப் பாடுகின்ற ஆற்றல் பெற்றவர்களுடன், குடம் கொண்டு நடனமாடுபவர்களும், திருநாபிக்கமலத்தில் தோன்றிய பிரமதேவனைக் காட்டிலும் சிறந்து விளங்குகின்ற பூணூல் தரித்தவர்கள், நான்கு மறைகளையும் விரும்பிக் கற்றுவல்ல பெருமக்கள், ஐந்து வகையான வேள்விகள், ஆறு வகையான வேதாங்கங்கள் ஆகியவற்றில் வல்லவர்களாகத் திகழ்கின்ற ஸ்ரீவைணவப் பெருமக்கள் தொழுது வணங்குகின்ற விண்ணுலகத் தேவர்களின் தலைவனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ''திருக்கோட்டியூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி சேவை சாதித்து அருள்புரிகின்றான்.

*ஆலுமா வலவன் கலிகன்றி மங்கையர்
தலைவன் அணிபொழில்
சேல்கள் பாய்கழனித் திருக்கோட்டி யூரானை,
நீல மாமுகில் வண்ணனை நெடுமாலை
இன்தமி ழால்நி னைந்த,இந்
நாலு மாறும்வல் லார்க்கிட மாகும் வானுலகே. 1847

ஆடல்புரிகின்ற குதிரைமீது ஏறிச் செல்லுகின்ற வலிமை கொண்டிருக்கின்ற ''கலிகன்றி'' என்னும் திருமங்கை நகரின் மன்னனாகிய திருமங்கை ஆழ்வார் அழகு நிறைந்த சோலைகளில் மீன்கள் துள்ளி விளையாடுகின்ற வளம்மிக்க நிலங்களைக் கொண்டுள்ள ''திருக்கோட்டியூர்'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் ''ஸ்ரீ உரகமெல்லணையான்'' என்னும் திருநாமம் பூண்ட ஸ்ரீமந்நாராயணனைப் பற்றி, நீலமேக நிறத்தினைக் கொண்ட திருமேனியையுடைய எம்பெருமான் நெடிய திருமாலைப் பற்றி இனிய தமிழால் எண்ணி எண்ணிப் பாடியருளிய இப்பாசுரங்கள் பத்தினையும் கற்றுவல்ல வைணவ பெருமக்களுக்கு விண்ணிலுள்ள திருப்பரமபதமே இருப்பிடமாகும்.

Koviloor Digital Library

பத்தாம் பத்து

1. ஒருநற் சுற்றம் பல திருப்பதிகள்

கலிவிருத்தம்

*ஒருநற் சுற்றம் எனக்குயிர் ஒண்பொருள்,
வருநல் தொல்கதி யாகிய மைந்தனை,
நெருநல் கண்டது நீர்மலை யின்றுபோய்,
கருநெல் சூழ்கண்ண மங்கையுள் காண்டுமே. 1848

அடியேனுக்கு ஏற்ற வகையில் நல்லதோர் சுற்றமாய், அடியேனுக்கு உயிர், மிகச் சிறந்த பொருள், இனிவரும் எதிர் காலத்தில் ஒரு நல்ல கதியாக அமையக் கூடிய திருப்பரமபதமாய் இருக்கின்ற, என்றும் இளைஞனாகத் திகழும் எம்பெருமானை நேற்று கண்டு வணங்கியது ''திருநீர்மலை'' என்னும் திருத்தலத்திலே இன்று நன்கு முற்றிய நெற்பயிர்கள் நிறைந்திருக்கின்ற ''திருக் கண்ணமங்கை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீபக்தவச்சலப் பெருமானைக் கண்டு சேவிப்போமாக!

பொன்னை மாமணி யையணி யார்ந்ததோர்
மின்னை, வேங்கடத் துச்சியிற் கண்டுபோய்,
என்னை யாளுடை யீசனை யெம்பிரான்-
றன்னை, யாம்சென்று காண்டும்தண் காவிலே. 1849

பலராலும் மிகவும் உயர்வுடையதாக மதிக்கக் கூடிய பொன்னைப் போன்று பலராலும் விரும்பக் கூடியவனை, நீல நிற மணியைப் போன்றவனை, மின்னல் கொடி போன்ற ஒளியை உடையவனை, அடியேனை அடிமை கொண்டு அருளிய எம்பெரு மானை அடியோங்கள் நேற்று திருவேங்கடமலையின் உச்சியின்மீது திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீதிரு வேங்கடப் பெருமானைக் கண்டு சேவிக்கப் பெற்றோம். இன்றைக் குக் காஞ்சிபுரத்திலுள்ள ''திருத்தண்கா'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ விளக்கொளி பெருமானைக் கண்டு சேவிப்போமாக!

Koviloor Digital Library

வேலை யாலிலைப் பள்ளி விரும்பிய,
பாலை ஆரமு தத்தினைப் பைந்துழாய்,
மாலை ஆலியில் கண்டு மகிழ்ந்துபோய்,
ஞால முன்னியைக் காண்டும்நாங் கூரிலே. 1850

உலகப் பிரளயம் உண்டான காலத்தில் அக்கடலின்மீது ஆலந்தளிரின்மீது திருக்கண் வளர்ந்தருள் புரிவதை விரும்புகின்ற எம்பெருமானை, பால் போன்று விளங்குபவனை இனிய திருவமுதினை, பசுமையுடன் கூடிய திருத்துழாய் மாலையினை அணிந்து கொண்டு இருக்கின்ற எம்பெருமானைத் ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் திருவயலாளி மணவாளப் பெருமானை நேற்று கண்டு சேவித்து மகிழ்ச்சியுற்றோம். இன்றைக்குத் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்திற்குச் சென்று உலகத்தார் அனைவராலும் தியானிக்கக் கூடியவனாகிய அனைத்துலகத்து உயிர்கள் யாவற்றைப் பற்றியும் சிந்திக்கக் கூடியவனாகிய எம்பெருமானைத் ''திருநாங்கூர்'' என்னும் திருத்தலத்திற்குச் சென்று கண்டு சேவிப்போமாக!

துளக்க மில்சுட ரை,அவு ணனுடல்
பிளக்கும் மைந்தனைப் பேரில் வணங்கிப்போய்,
அளப்பி லாரமு தையம ரர்க்கருள்
விளக்கி னை,சென்று வெள்ளறைக் காண்டுமே. 1851

எவ்வகையிலும் அழிதல் இல்லாத ஒளியையுடைய எம் பெருமானை, ''இரணியன்'' என்னும் அசுரனின் அகன்ற மார்பினை இருகூறாகப் பிளந்தருளிய எம்பெருமான் ஸ்ரீநரசிம்மப் பெருமானை நேற்று ''திருப்பேர் நகர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் ''ஸ்ரீமகரநெடுங் குழைக்காதன்'' என்னும் திருநாமம் கொண்டுள்ள எம்பெருமானைக் கண்டு சேவிக்கப் பெற்றோம். ஆயின் இன்றைக்கு அளவற்ற இன்பத்தினை அளித்திடும் திருவமுது போன்றவனாகியவனை, விண்ணுலகத் தேவர்களுக் கெல்லாம் அருளை அளித்துக் கொண்டிருக்கின்ற ஒளி விளக்கினைத் ''திருவெள்ளறை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ''ஸ்ரீசெந்தாமரைக் கண்ணனை''க் கண்டு சேவிப்போமாக!

Koviloor Digital Library

சுடலை யில்சுடு நீறன் அமர்ந்ததுஓர்
நடலை தீர்த்தவ னைநறை யூர்க்கண்டு,என்
உடலை யுள்புகுந் துள்ள முருக்கியுண்,
விடலை யைச்சென்று காண்டும்மெய் யத்துளே. 1852

சுடுகாட்டில் சுட்ட சாம்பலைப் பூசிக் கொண்டிருக்கின்ற சிவ பெருமானுக்கு உண்டானதோர் பெருந்துன்பத்தினைப் போக்கி யருளிய எம்பெருமானைத் ''திருநறையூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் ''திருநறையூர் நம்பி''ப் பெருமானை நேற்று சென்று வணங்கி வழிபட்டோம். இன்றைக்கு அடியேன் உடலினுள்ளே புகுந்து, அடியேனின் உள்ளத்தினை உருக்கி உண்கின்ற இளைஞனான எம்பெருமானைத் ''திருமெய்யம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ''ஸ்ரீமெய்யப்பன்'' என்பவனைக் கண்டு சேவிக்கப் பெற்றோம்.

வானை ஆரமு தம்தந்த வள்ளலை,
தேனை நீள்வயல் சேறையில் கண்டுபோய்,
ஆனை வாட்டி யருளும் அமரர்தம்
கோனை, யாம்குடந் தைச்சென்று காண்டுமே. 1853

விண்ணுலகத் தேவர்களுக்குத் திருவமுதினை அளித்தருளிய வள்ளலாகிய தேன்போன்று இனியவனாகத் திகழும் எம்பெருமானை நீண்ட வயல்களைக் கொண்டுள்ள ''திருச்சேறை'' என்னும் திருத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசாரநாதப் பெருமானை நேற்று கண்டு சேவிக்கப் பெற்றோம். இன்றைக்குக் ''குவலயாபீடம்'' என்னும் வலிமை மிக்க யானையைக் கொன்று அருள்புரிந்து வரும் எம்பெருமானை விண்ணுலகத் தேவர்களுக்கெல்லாம் தலைவனாகத் திகழ்கின்ற எம்பெருமானை அடியோங்கள் ''திருக்குடந்தை'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசாரங்க பாணிப் பெருமாளைக் கண்டு சேவிக்கப் பெற்றோம்.

கூந்த லார்மகிழ் கோவல னாய்,வெண்ணெய்
மாந்த முந்தையில் கண்டு மகிழ்ந்துபோய்,
பாந்தள் பாழியில் பள்ளி விரும்பிய,
வேந்தனைச்சென்று காண்டும்வெஃ காவுளே. 1854

Koviloor Digital Library

நறுமணம் வீசுகின்ற சிறந்த கூந்தலையுடைய இடைக்குலப் பெண்கள் மகிழ்ச்சியடைகின்ற ஸ்ரீ கோபாலகிருஷ்ணன் என்னும் திருஅவதாரம் மேற்கொண்ட எம்பெருமானை வெண்ணெயைத் திருவமுது செய்யும் பொருட்டுத் ''தேரழுந்தூர்'' எனப்படும் ''திருவழுந்தூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீதேவாதிராஜப் பெருமானை நேற்று அடியோங்கள் கண்டு சேவிக்கப் பெற்று மகிழ்ச்சி அடைந்தோம். இன்றைக்குத் ''திருவெஃகா'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளும் எம்பெருமான் சொன்ன வண்ணம் செய்த பெருமாளைக் கண்டு சேவித்து மகிழ்ச்சியுற்றோம்.

*பத்த ராவியைப் பான்மதி யை,அணித்
தொத்தை மாலிருஞ் சோலைத் தொழுதுபோய்,
முத்தி னைமணி யைமணி மாணிக்க
வித்தி னை,சென்று விண்ணகர்க் காண்டுமே. 1855

பக்தர்களாக இருக்கும் அடியவர்களுக்கு உயிராக உள்ள எம்பெருமானை, பால் போன்று வெண்ணிற ஒளியினை வீசுகின்ற சந்திரனைப் போன்ற அழகினையுடையவனை நீலமணி போன்ற நிறம் கொண்ட திருமேனியினையுடைய எம்பெருமான் திருமாலைத் ''திருமாலிருஞ்சோலை மலை'' என்னும் திருத்தலத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீகள்ளழகர் பெருமானை அடியோங்கள் நேற்று கண்டு சேவிக்கப் பெற்றோம். இன்றைக்கு முத்து, நீலநிறமணி, மாணிக்கமணி போன்றவைகளாகத் திகழ்கின்ற ஆதிகாரணனாகிய ஆதிப்பிரானைத் ''திருவிண்ணகர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ ஒப்பிலியப்பனைக் கண்டு அடியோங்கள் சேவிக்கப் பெற்றோம்.

கம்ப மாகளி றஞ்சிக் கலங்க,ஓர்
கொம்பு கொண்ட குரைகழல் கூத்தனை,
கொம்பு லாம்பொழில் கோட்டியூர்க் கண்டுபோய்,
நம்ப னைச்சென்று காண்டும்நா வாயுளே. 1856

நடுக்கத்தினை உண்டாக்கிய மதம்பிடித்த பெரிய யானையாகிய ''குவலயாபீடம்'' என்னும் யானையானது அஞ்சிக் கலங்கும்படியாக அந்த யானையின் கொம்பினை முறித்த வீரக்கழலை அணிந் திருக்கின்ற கூத்தனாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை

Koviloor Digital Library

நேற்று சோலைகள் சூழ்ந்திருக்கின்ற ''திருக்கோட்டியூர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம் பெருமான் ''ஸ்ரீஉரகமெல்லணையான்'' என்னும் பெருமாளைக் கண்டு சேவிக்கப் பெற்றோம். இன்றைக்குத் ''திருநாவாய்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம் பெருமான் ''ஸ்ரீ நாவாய் முகுந்தன்'' என்னும் நாராயணனைக் கண்டு சேவிக்கப் பெற்றோம்.

பெற்றம் ஆளியைப் பேரில் மணாளனை,
கற்ற நூல்கலி கன்றி யுரைசெய்த,
சொற்றி றமிவை சொல்லிய தொண்டர்கட்கு,
அற்ற மில்லையண் டம்அவர்க் காட்சியே. 1857

பசுக்கூட்டங்களை ஆள்வதற்கு என்றே பிறந்தவனாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை ''திருப்பேர்நகர்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ அப்பக்குடத்தான் என்னும் பெருமானைப் பற்றி நூல்கள் பலவற்றை நன்கு கற்றுவல்லவரான ''கலிகன்றி'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த சொல்திறம் மிக்கிருக்கின்ற இப்பாசுரங்கள் பத்தினையும் எடுத்துச் சொல்லவல்ல தொண்டர் களுக்கு இறை அனுபவத்தில் குறை ஏதும் உண்டாகாது. அப்படிப் பட்ட அடியவர்கட்கு விண்ணுலகிலுள்ள ''திருப்பரமபதம்'' என்பதே அவர்கள் ஆட்சிபுரியும் திருத்தலமாகும்.

2. இரக்கமின்றி
சக்கரவர்த்தி திருமகன் விஷயம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*இரக்க மின்றியெங் கோன்செய்த தீமை
இம்மை யேயெமக் கெய்திற்றுக் காணீர்,
பரக்க யாமின் றுரைத்தென் இராவணன்
பட்ட னனினி யாவர்க்கு ரைக்கோம்?
குரக்கு நாயகர் காள்!இளங் கோவே!
கோல வல்வி லிராம பிரானே,
அரக்க ராடழைப் பாரில்லை நாங்கள்
அஞ்சி னோந்தடம் பொங்கத்தம் பொங்கோ! 1858

Koviloor Digital Library

எங்களுக்கு அரசனான இராவணன் இரக்கம் என்பது ஒன்று இல்லாமலேயே செய்த தீய செயல்களுக்குண்டான பலன்கள் பலவும் இப்பிறப்பிலேயே எங்களுக்குக் கிடைத்துவிட்டது என்பதனை இப்போது நீங்கள் காணுங்கள். இதனைப்பற்றி நாங்கள் இப்போது விரிவாகப் பேசிப் பயன் ஏதுமில்லை. எங்கள் குலத்து அரசனான இராவணன் இப்போதே இறந்துபட்டான். நாங்கள் இனிமேல் யாவரிடம் சென்று எடுத்துரைப்போம்? வானர வீரர்களின் தலைவர்களே! இளவரசரே! அழகுடன் கூடிய வலிமை மிக்க ஸ்ரீஇராமபிரானே! அரக்கர் குலத்தவர்களின் வெற்றிகளைப் பற்றி இனி எடுத்துரைக்கக் கூடியவர் எவருமில்லை. தோற்றுப்போன நாங்கள் எல்லோரும் பயந்து கொண்டிருக்கின்றோம். நாங்கள் தோற்றுப்போன இந்நிலைக்குப் பின்பு உங்கள் வெற்றி குறித்து எடுத்துக் கூறி முழங்குகின்ற வகையில் ''பொங்கத்தம் பொங்கோ'' என்னும் பறை ஒலியினைக் கேட்டதற்குச் சமமாக அமைந்திருக்கிறது.

பத்து நீள்முடி யும்வற் றிரட்டிப்
பாழித் தோளும் படைத்தவன் செல்வம்,
சித்தம் மங்கையர் பால்வைத்துக் கெட்டான்
செய்வ தொன்றறி யாவடி யோங்கள்,
ஒத்த தோளிரண் டுமொரு முடியும்
ஒருவர் தம்திறத் தோமன்றி வாழ்ந்தோம்,
அத்த! எம்பெரு மான்!எம்மைக் கொல்லேல்
அஞ்சி னோம்தடம் பொங்கத்தம் பொங்கோ! 1859

நீண்ட பெரிய பத்துத் தலைகளையும் இருபது தோள்களையும் பெற்றிருக்கின்ற இராவணனின் அனைத்து வகைச் செல்வங்களும் பெண்களிடத்தே தன் மனதினை ஈடுபடுத்திய காரணத்தினால் இழந்து விட்டான். அதனால் நாங்கள் யாவரும் இனி செய்வதறியாமல் திகைத்துக் கொண்டிருக்கிறோம். இனி தங்களின் ''அடியோங்கள் நாங்கள்'' என்ற உயர்ந்த நிலையை அடைந்தோம். ஒன்றுக்கொன்று ஒப்பான இரண்டு திருத்தோள்களும், ஒரு திருமுடியும் கொண்டிருக்கின்ற ஒப்பற்றவரான தேவரீர் பக்கத்தில் இதற்கு முன்பு ஈடுபட்டிருக்க வில்லை என்பதாலே நாங்கள் கெட்டுப் போய்விட்டோம். எந்தையே! எங்கள் பெருமானே! எங்களைக் கொல்ல வேண்டாம். நாங்கள் யாவரும் அஞ்சிய நிலையில் நின்று தவித்துக் கொண்டிருக்கிறோம். ''பொங்கத்தம் பொங்கோ'' என்னும் வெற்றி முழக்கமானது மிகவும் பொருத்தமுடையதேயாகும்.

Koviloor Digital Library

தண்ட காரணி யம்புகுந் தன்று
தைய லைத்தக வில்லியெங் கோமான்,
கொண்டு போந்துகெட் டான்எமக் கிங்கோர்
குற்ற மில்லைகொல் லேல்குல வேந்தே,
பெண்டி ரால்கெடு மிக்குடி தன்னைப்
பேசு கின்றதென்? தாசர தீ,உன்
அண்ட வாணர் உகப்பதே செய்தாய்
அஞ்சி னோம்தடம் பொங்கத்தம் பொங்கோ! 1860

தசரதச் சக்கரவர்த்தித் திருமகனே! பண்பு என்பது ஏதும் இல்லாத எங்கள் குலத்து மன்னன் இராவணன், நீங்கள் தவக்கோலம்பூண்டு காட்டிலிருந்த அந்தக் காலத்தில் ''தண்டகாரண்யம்'' என்னும் பெரிய காட்டிற்குள்ளே புகுந்து தங்களின் இனிய தேவியான சீதாபிராட்டியை அபகரித்து வந்ததனால் உண்டான பெருங்குற்றம் காரணமாகத் தன்னை அழித்துக் கொண்டான். இதனால் எங்களுக்கு எவ்விதக் குற்றமும் இல்லை. ஆகையினால் எங்களைக் கொல்லாமல் விட்டுவிடுமாறு வேண்டுகின்றோம். நீதி நிலைபெற்றிருக்கின்ற உயர்குலத்து மன்னரே! பெண்களால் விடுக்கப்பட்ட சாபம் காரணமாக இந்த அரக்கர்குலம் அழிந்து போனது பற்றி இனிமேலும் பேசுவதால் பயன் ஏதுமில்லை. தாங்கள் தங்கள் விருப்பப்படியும், விண்ணுலகத் தேவர்கள் மகிழ்ச்சி அடையும்படியும் இச்செயலைச் செய்து அருள்புரிந்து இருக்கிறீர்கள். நாங்கள் யாவரும் இப்போது அஞ்சிக் கொண்டிருக்கிறோம். ''பொங்கத்தம் பொங்கோ'' என்னும் பெரு முழக்கத்தினைக் கேட்ட, அதனை ஏற்று நாங்கள் சரணடைகிறோம்.

எஞ்ச லில்இலங் கைக்கிறை யெங்கோன்-
றன்னை முன்பணிந்து, எங்கள்கண் முகப்பே
நஞ்சு தானரக் கர்குடிக் கென்று
நங்கை யையவன் தம்பியே சொன்னான்,
விஞ்சை வானவர் வேண்டிற்றே பட்டோம்
வேரி வார்பொழில் மாமயி லன்ன,
அஞ்சி லோதியைக்[1] கொண்டு நடமின்
அஞ்சி னோம்தடம் பொங்கத்தம் பொங்கோ! 1861

குற்றமற்றவனாக இருப்பவனும், இலங்கை மாநகர்க்கரசனும், எங்களுக்கெல்லாம் தலைவனாகவும் இருக்கின்ற இராவணனை அவன் தம்பி வீடணன் நாங்கள் காணுமாறு எங்கள் கண்முன்னே பணிந்து நின்று, ''இந்தச் சீதாபிராட்டியானவர் அரக்கர்குடிக்கு

Koviloor Digital Library

நஞ்சினை ஒத்தவர்'' என்று எடுத்துரைத்ததனையும் கேட்கமாட்டாமல் பணிந்து வாழாத காரணத்தாலும், விஞ்சையர் முதலான தேவர்க ளெல்லாரும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனிடம் வேண்டிக் கொண்டவாறே நாங்கள் இப்போது கெட்டு துன்பப்படுகிறோம். நறுமணம் வீசுகின்ற சோலைகளில் வளர்ந்து வருகின்ற மயிலைப் போன்று, சுருட்சி, நீட்சி, குளிர்ச்சி, அழகு, மணம் என்ற ஐவகைப் பட்ட குணங்களைக் கொண்டுள்ள, இருள் போன்று கறுத்திருக்கின்ற கூந்தலையுடைய சீதாபிராட்டியை அழைத்துக் கொண்டு செல்லுங்கள். நாங்கள் இப்போது அஞ்சிய நிலையில் இருக்கிறோம். எனவே, நாங்கள் ''பொங்கத்தம் பொங்கோ'' என்று உறுதியாகவே முழக்கமிடுகிறோம்.

செம்பொன் நீள்முடி எங்கள் இராவணன்
சீதை யென்பதோர் தெய்வம் கொணர்ந்து,
வம்பு லாம்கடி காவில் சிறையா
வைத்த தேகுற்ற மாயிற்றுக் காணீர்,
கும்ப னோடு நிகும்பனும் பட்டான்
கூற்றம் மானிட மாய்வந்து தோன்றி,
அம்பி னாலெம்மைக் கொன்றிடு கின்றது
அஞ்சி னோம்தடம் பொங்கத்தம் பொங்கோ! 1862

சிவந்த பொன்னைக் கொண்டு செய்துள்ள நீண்ட மணிமுடியைச் சூடிய எங்கள் குலத்துக்குத் தலைவனாகிய ''இராவணன்'' என்பான், ''சீதாபிராட்டியார்'' என்னும் தெய்வத்தைக் கொண்டு வந்து மணம் வீசுகின்ற ''அசோகவனம்'' என்னும் இடத்தில் சிறையாக வைத்திருந்ததே எங்கட்குப் பெருங்குற்றமாகிவிட்டது. அதனால் கும்பன், நிகும்பன் ஆகிய அரக்கர்கள் மாண்டு போனார்கள். இயமனே மனித வடிவில் இங்கே வந்து தோன்றி அம்பினால் எங்களைக் கொன்று கொண்டிருக்கின்றான். ஆகையினால் நாங்கள் அஞ்சிய நிலையில் இருக்கின்றோம். இப்போது அடைக்கலம் வேண்டி நிற்கின்றோம். அதனால் நாங்கள் ''பொங்கத்தம் பொங்கோ'' என்று முழக்கமிட்டுக் கொண்டிருக்கிறோம்.

ஓத மாகட லைக்கடந் தேறி
உயர்கொள் மாக்கடி காவை யிறுத்து,
காதல் மக்களும் சுற்றமுங் கொன்று
கடியி லங்கை மலங்க எரித்துத்

Koviloor Digital Library

தூது வந்த குரங்குக்கே உங்கள்
தோன்றல் தேவியை விட்டுக் கொடாதே,
ஆதர் நின்று படுகின்ற தந்தோ!
அஞ்சி னோம்தடம் பொங்கத்தம் பொங்கோ! 1863

அலைகள் வீசுகின்ற கடலைக் கடந்து கரைமீது ஏறி வந்து இங்குள்ள "அசோகவனம்" என்னும் பெரிய சோலையினுள்ளே புகுந்து வந்த அனுமன் அக்குமாரன் முதலிய இராவணனின் அன்புடைய மக்களைக் கொன்றான். அதன் பின்பு அங்குள்ள பிற மக்களையும் சுற்றத்தினரையும் கொன்றான். அதற்கும் மேலாக இலங்கை மாநகர்க்குத் தீயினை வைத்தான். இத்தகைய அனுமனையே தூதுவனாக ஏற்றுக் கொண்டு எம்பெருமான் ஸ்ரீஇராம பிரானின் தேவியாகிய சீதாபிராட்டியாரைவிட்டுக் கொடுக்காமல் விட்டு விட்ட நாங்கள் இப்போது கெட்டுப் போய்விட்டோம். அதனால் இன்றைக்குத் துன்பப்படுகின்றோம். அந்தோ! நாங்கள் அஞ்சிக் கொண்டிருக்கிறோம். "பொங்கத்தம் பொங்கோ" என்று நாங்கள் ஒலியினை எழுப்பிக் கொண்டபடியே தங்களிடம் அடைக்கலம் அடைகின்றோம்.

தாழ மின்றிமுந் நீரையஞ் ஞான்று
தகைந்த தேகண்டு வஞ்சிநுண் மருங்குல்,
மாழை மான்மட நோக்கியை விட்டு
வாழ்கி லாமதி யில்மனத் தானை,
ஏழை யையிலங் கைக்கிறை தன்னை
எங்க ளையொழி யக்கொலை யவனை,
சூழு மாநினை மாமணி வண்ணா!
சொல்லி னோம்தடம் பொங்கத்தாம் பொங்கோ! 1864

மாமணி வண்ணனான எங்கள் எம்பெருமானே! நீங்கள் சிறிதும் காலம் தாழ்த்தாமல் விரைந்து வந்து, கடலில் மிகுவிரைவில் அணை கட்டியதைக் கண்ட அளவிலேயே, உன்னுடைய வலிமையினை உணர்ந்து கொள்ளாமல் இருந்துவிட்டு மதிகெட்டுப் போனவனாகிய இலங்கை நகர்க்கு மன்னனாகிய இராவணன் வஞ்சிக்கொடி போன்ற நுண்ணிய இடையினையும், மான் பார்வை போன்ற வஞ்சகமற்ற பார்வையையுமுடையவளான சீதாபிராட்டியாரை உம்மிடத்திலேயே சேர்த்துவிட்டு, அதன் மூலமாகத்தான் சிறப்பாக வாழத் தெரிந்து கொள்ளவில்லையே! குற்றம் ஏதும் புரியாமல் இருக்கின்ற எங்களை

Koviloor Digital Library

விட்டுவிட்டு, கொல்வதற்குத் தகுதியானவனாக இருக்கின்ற ''இராவணன்'' என்பவனை மட்டும் சூழ்ந்து கொண்டு கொன்று விடுங்கள் என்றே நாங்கள் கூறுகின்றோம். நாங்கள் யாவரும் இப்போது தங்களிடம் சரணடைகின்றோம். அதனால் நாங்கள் ''பொங்கத்தம் பொங்கோ'' என்று முழக்கிக் கொண்டு கூத்தாடு கின்றோம்.

மனங்கொண் டேறும்மண் டோதரி முதலா
அங்க யற்கண்ணி னார்கள் இருப்ப,
தனங்கொள் மென்முலை நோக்க மொழிந்து
தஞ்ச மேசில தாபத ரென்று,
புனங்கொள் மென்மயி லைச்சிறை வைத்த
புன்மை யாளன்நெஞ் சில்புக எய்த,
அனங்க னன்னதிண் டோளெம்மி ராமற்
கஞ்சி னோம்தடம் பொங்கத்தம் பொங்கோ! 1865

மனத்துடன் கூடிப் பொருந்தி இருக்கின்ற ''மண்டோதரி'' முதலான அழகிய கயல்மீன்களையொத்த கண்களை உடைய மனைவிமார்கள் பலர் இருந்தும் தன்னுடைய செல்வம் கூடியவர் களான அவர்களின் மென்மையான முலைகளுடன் பொருந்திச் சேர்ந்திருக்கமாட்டாத இராவணன் காட்டிலே மயில் போன்று இருந்த சீதாபிராட்டியைக் கவர்ந்து வந்தானே! அத்தகைய புன்மையாளன் இராவணன் சீதாபிராட்டியைச் சிறையில் வைத்தான். இத்தகைய இழிசெயலைச் செய்த நீசன் இராவணனுடைய நெஞ்சில் புகுமாறு அம்பினைச் செலுத்தியவராகிய, மன்மதனை ஒத்த அழகும், வலிமைமிக்க உறுதியான திருத்தோள்களையும் கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானைக் கண்டு நாங்கள் அஞ்சினோம் அதன் காரணமாக எங்களுக்கு அபயம் அளிக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டு ''பொங்கத்தம் பொங்கோ'' என்று முழக்கமிட்டுக் கொண்டிருக்கிறோம்.

புரங்கள் மூன்றுமோர் மாத்திரைப் போதில்
பொங்கெ ரிக்கிரை கண்டவன் அம்பின்,
சரங்க ளேகொடி தாயடு கின்ற
சாம்ப வானுடன் நிற்கத் தொழுதோம்,

Koviloor Digital Library

இரங்கு நீயெமக் கெந்தைபி ரானே!
இலங்கு வெங்கதி ரோன்றன் சிறுவா,
குரங்கு கட்கர சே!எம்மைக் கொல்லேல்!
கூறி னோம்தடம் பொங்கத்தம் பொங்கோ! 1866

கண்ணிமைக்கும் நேரத்தில் திரிபுரங்களையும் தீக்கிரையாக்கிய வனாகிய சிவபெருமானின் அம்புகளைக் காட்டிலும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானின் அம்புகள் கொடியதாகி இருக்கின்றன. சாம்பவானுடன் கூடியிருக்கின்ற உம்மைத் தொழுதோம் இங்கு இந்த இடத்தில் எங்கட்குத் தந்தையாக விளங்கும் எந்தைபிரானே! எங்கள்மீது தாங்கள் இரக்கம் காட்டியருள வேண்டும். ஒளியுடன் கூடிய வெங்கதிர்களைக் கொண்டுள்ள சூரியனின் புதல்வனாகிய சுக்ரீவனே! வானரவீரர்களுக்கெல்லாம் தலைவனே! இப்போது எங்களைக் கொல்ல வேண்டாம் என்று கூறித் தங்களிடம் சரணடைந் தோம். ''பொங்கத்தம் பொங்கோ'' என்று கூறி மகிழ்ச்சியுடன் கூத்தாடுகின்றோம்.

*அங்கவ் வானவர்க் காகுலம் தீர
அணியி லங்கை அழித்தவன் றன்னை,
பொங்கு மாவல வன்கலி கன்றி
புகன்ற பொங்கத்தங் கொண்டு,இவ் வுலகில்
எங்கும் பாடிநின் றாடுமின் தொண்டீர்!
இம்மை யேயிட ரில்லை, இறந்தால்
தங்கு மூர்அண்ட மேகண்டு கொண்மின்
சாற்றி னோம்தடம் பொங்கத்தம் பொங்கோ! 1867

விண்ணுலகத் தேவர்களுக்கு உண்டான குறைபாடுகள் தீர்ந்து போகுமாறு அழகிய இலங்கை மாநகரத்தினையும், அந்நகர்க் கரசனாகிய இராவணனையும் அழித்த எம்பெருமான் ஸ்ரீஇராம பிரானைப் பற்றி ''ஆடல்மா'' என்னும் குதிரையை நடத்திச் செல்ல வல்லவரான ''கலிகன்றி'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ''பொங்கத்தம் பொங்கோ'' என்ற இவ்வெற்றிப் பாசுரங்கள் பத்தினையும் இவ்வுலகெங்கிலும் பாடிக்கொண்டு நின்று ஆடிக் கொண்டிருங்கள் தொண்டர்களே! இவ்வாறு இப்பாசுரங்களைப் பாடிக் கொண்டும் ஆடிக் கொண்டும் இருப்பதால் உங்களுக்கு இப்பிறவியில் எவ்விதத் துன்பமும் கிடையாது. இறந்துவிட்டால் நீங்கள் போய் நிலையாக நிற்குமிடம் விண்ணுலகிலுள்ள திருப்

Koviloor Digital Library

பரமபதமேயாகும். இஃது உறுதியானது என்பதனை நீங்கள் உங்கள் அனுபவத்தின்மூலம் அறிந்து கொள்ளுங்கள். இதனைப் பலரும் அறியுமாறு எடுத்துக் கூறினோம். ''பொங்கத்தம் பொங்கோ'' என்பது உங்களுக்கு ஏற்றதே என்று மகிழ்ச்சியுடன் வெற்றியோ வெற்றி! உண்டாகுக! என்றுரைக்கின்றோம்.

3. ஏத்துகின்றோம்
இதுவும் அது.

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*ஏத்து கின்றோம் நாத்த ழும்ப இராமன் திருநாமம்,
சோத்தம் நம்பீ! சுக்கி ரீவா! உம்மைத் தொழுகின்றோம்,
வார்த்தை பேசீர் எம்மை யுங்கள் வானரம் கொல்லாமே,
கூத்தர் போல ஆடு கின்றோம் குழமணி தூரமே. 1868

எம்பெருமான் ஸ்ரீ இராமபிரானின் திருநாமங்கள் பலவற்றையும் அடியேனின் நாக்கு தழும்பு ஏறும்படியாக, வாயினால் எடுத்துக் கூறித் துதித்துக் கொண்டிருக்கிறோம். நம்பியாகிய சுக்ரீவ மகாராசனே! அடியோங்கள் உங்களைத் தொழுது வணங்குகின்றோம். நாங்கள் தோற்றுப் போனது வெளிப்படும்படியாக உம்மை வந்து வணங்குகின்றோம். உங்கள் வானரவீரர்கள் எங்களைக் கொல்லாமல் இருக்கும்படியாக நல்ல கருத்துகளை எடுத்துக்கூறி, எங்கள்மீது கருணை கொண்டு அருள்புரிவீர்கள் என்று எண்ணி நாங்கள் மகிழ்ச்சியுடன் கூத்தாடுதலைக் கற்றறிந்தவர்களைப் போலக் குழமணி தூரம் என்னும் தோற்றவர்களாகிய எங்களின் தோல்வியும், உங்களின் வெற்றியும் மகிழ்ச்சியுடன் கூத்தாடுகின்றோம்.

'எம்பி ரானே! என்னை யாள்வாய்!' என்றென் றலற்றாதே,
அம்பின் வாய்ப்பட் டாற்ற கில்லா திந்திர சித்தழிந்தான்,
நம்பி அனுமா! சுக்கி ரீவா! அங்கத னே!நளனே,
கும்ப கர்ணன் பட்டுப் போனான் குழமணி தூரமே. 1869

''எம்பிரானே! என்னை ஆட்கொள்ளும் எம்பெருமானே!'' என்றென்று பலவாறாகப் பிதற்றிக் கொண்டிருக்காமல் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானின் அம்பு தைத்ததனால் உண்டான வலிமையினைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் ''இந்திரசித்தன்'' என்பவன் மாண்டு

Koviloor Digital Library

போனான். நம்பி அனுமனே! சுக்ரீவனே! அங்கதனே! நளனே! கும்பகர்ணன் என்னும் அரக்கனும் உயிர் நீங்கப் பெற்றுப் பட்டுப் போனான். நாங்கள், ''குழமணி தூரம்'' என்னும் தோற்றவர்களின் கூத்தினை ஆடிக் கொண்டிருக்கின்றோம்.

ஞால மாளு முங்கள் கோமான் எங்கள் இராவணற்குக்
கால னாகி வந்த வாகண் டஞ்சிக் கருமுகில்போல்,
நீலன் வாழ்கசு டேணன் வாழ்க அங்கதன் வாழ்கவென்று,
கோல மாக ஆடு கின்றோம் குழமணி தூரமே. 1870

இவ்வுலகம் முழுவதையும் பாதுகாத்து அருள்புரிகின்ற உங்கள் சுவாமியாகிய ஸ்ரீஇராமபிரான் எங்கள் தலைவன் இராவணனுக்கு இயமனாக வந்தது கண்டு அஞ்சிக் கருமுகிலை ஒத்த நிறத்தினை உடைய நீலன் வாழ்க! சுடேணன் வாழ்க! அங்கதன் வாழ்க! என்று நாங்கள் ஒவ்வொருவருக்கும் பல்லாண்டு பாடிக் கொண்டு மிக்க மகிழ்ச்சியுடன் குழமணி தூரம் ஆடுகின்றோம்.

மணங்கள் நாறும் வார்குழ லார்கள் மாதர்க ளாதரத்தை,
புணர்ந்த சிந்தைப் புன்மை யாளன் பொன்ற வரிசிலையால்,
கணங்க ளுண்ண வாளி யாண்ட காவல னுக்கிளையோன்,
குணங்கள் பாடி யாடு கின்றோம் குழமணி தூரமே. 1871

நறுமணம் வீசும் நீண்ட கூந்தலையுடைய பெண்களின்மீது கொண்டுள்ள ஆவலின் காரணமாக அப்பெண்களுடன் கூடியிருந்து மகிழ்ந்திருந்த மகிழ்ச்சியினை எண்ணியவாறுள்ள மனத்தினை யுடைய மிகவும் நீசனாகிய இராவணன் அழிந்து போகுமாறு செய்த வில்லை உடைய ஸ்ரீஇராமபிரானின் செயலால் இராவணனுடைய உடலைப் பேய்க் கூட்டங்கள் தின்னும்படியாக அமைந்தது. உலகத்திலுள்ள யாவரையும் பாதுகாத்து அருளும் எம்பெருமான் ஸ்ரீ இராமபிரானுக்கு இளையவராகிய இளைய பெருமாள் என்னும் இலக்குமணப் பெருமானே! உம்முடைய நற்குணங்களைப் பாடிக் கொண்டே ''குழமணி தூரம்'' என்னும் கூத்தினை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஆடிக் கொண்டிருக்கின்றோம்.

வென்றி தந்தோம் மானம் வேண்டோம் தானம் எமக்காக,
இன்று தம்மி னெங்கள் வாணாள் எம்பெரு மாந்தமர்காள்,
நின்று காணீர் கண்க ளார நீரெமைக் கொல்லாதே,
குன்று போல ஆடு கின்றோம் குழமணி தூரமே. 1872

Koviloor Digital Library

எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானின் பக்தர்களாகிய வானர வீரர்களே! வெற்றியை உங்களுக்கே கொடுத்துவிட்டோம். எங்களுக் கென்றிருக்கின்ற மானத்தைக் கைவிட்டுவிட்டோம். எங்களைக் கொன்றுவிடாமல் எங்களின் வாழ்நாளைத் தந்து விடுங்கள் நீங்கள் எங்களைக் கொல்லாமல் எங்கள் கண் பெற்ற பயனைப் பெறுமாறு நின்று கொண்டு காண்பீர்களாக! நாங்கள் குன்றுகளைப் போன்று நின்று ஆடுகின்ற ''குழமணி தூரம்'' என்னும் கூத்தினைக் கண்டுகளியுங்கள்.

கல்லின் முந்நீர் மாற்றி வந்து காவல் கடந்து,இலங்கை
அல்லல் செய்தா னுங்கள் கோமான் எம்மை அமர்க்களத்து,
வெல்ல கில்லா தஞ்சி னோங்காண் வெங்கதி ரோன்சிறுவா,
கொல்ல வேண்டா ஆடு கின்றோம் குழமணி தூரமே. 1873

வெம்மை மிக்க கதிர்களையுடைய சூரியனின் மகனான சுக்ரீவரே! உங்கள் தலைவனாகிய ஸ்ரீஇராமபிரான் கற்களைக் கொண்டு கடலின்மீது அணைகட்டித் திகைத்தவாறே காவல்மிக்க அரண்களைக் கடந்து, இலங்கை மாநகரினுள்ளே புகுந்து எங்களைப் போர்க்களத்திலே மிகுந்த துன்பங்களுக்கு ஆளாக்கினார். உங்களை வெல்ல முடியாமல் நாங்கள் மிகவும் பயப்பட்டுக் கொண்டிருக் கின்றோம். ஆகவே, எங்களைக் கொல்ல வேண்டாம். ''குழமணி தூரம்'' என்னும் கூத்தினை நாங்கள் மகிழ்ச்சியுடன் ஆடுகின்றோம்.

மாற்ற மாவ தித்த னையே வம்மின் அரக்கருளீர்,
சீற்றம் நும்மேல் தீர வேண்டில் சேவகம் பேசாதே,
ஆற்றல் சான்ற தொல்பி றப்பில் அனுமனை வாழ்கவென்று,
கூற்ற மன்னார் காண ஆடீர் குழமணி தூரமே. 1874

அரக்கர்கள் கூட்டத்தில் இருப்பவர்களே! நீங்களும் எங்களுடன் சேர்ந்து கொண்டு உங்கள் மனத்தினை மனத்தினில் இருக்கும் எண்ணங்களை மாற்றிக் கொண்டு நாங்கள் கூறும் கருத்துகளைக் கேட்டு, உங்கள்மீது ஸ்ரீ இராமபிரானுக்கும் அவருடைய படையினர் களுக்கும் உண்டாகி இருக்கும் கோபம் தணிந்து அமைதியும் நன்மையும் உண்டாக வேண்டுமாறு செய்து கொள்ளுங்கள். இதுதவிர உய்வு பெறுவதற்குரிய வழிகள் வேறு எதுவும் கிடையாது எனவே, நீங்கள் இனிமேலும் மிடுக்கான சொற்களைக் கூறிக் கொண்டிராமல் நீண்ட நெடுங்காலமாகவே ஆற்றல் மிக்கவனாகி, மிகப்

Koviloor Digital Library

பழங்காலத்திலிருந்தே தோன்றியிருக்கின்ற ''அனுமன் வாழ்க!'' என்று பல்லாண்டு பாடிக் கொண்டிருங்கள். நமக்கெல்லாம் இயமனைப் போன்று விளங்குகின்ற வானர வீரர்கள் கண்டு களிக்கும்படியாகக் ''குழமணி தூரம்'' என்னும் கூத்தினை மகிழ்ச்சியுடன் ஆடிக் கொண்டு இருப்பீர்களாக!

கவள யானை பாய்புர வித்தே ரோட ரக்கரெல்லாம்
துவள, வென்ற வென்றி யாளன் றன்தமர் கொல்லாமே,
தவள மாடம் நீட யோத்தி காவலன் றன்சிறுவன்,
குவளை வண்ணன் காண ஆடீர் குழமணி தூரமே. 1875

கவளம் கவளமாக உணவினை உண்ணும் யானைகள், பாய்ந்து வருகின்ற குதிரைகள், தேர்கள் ஆகியவைகளுடன் அரக்கர்கள் பலரும் அழியும்படியாகச் செய்து, வென்று வெற்றி பெற்ற எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானின் பக்தர்களாகத் திகழும் வானரவீரர்கள் நம்மைக் கொன்றுவிடாமல் பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு மாட மாளிகைகள் நீண்டு நிறைந்திருக்கின்ற அயோத்தி நகரின் மன்னராகிய தசரதச் சக்கரவர்த்தியின் திருக்குமாரனும், குவளைமலரினைப் போன்ற நிறத்தை உடையவருமான எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் கண்டுகளிப்புறுமாறு ''குழமணி தூரம்'' என்னும் கூத்தினை மகிழ்ச்சியுடன் ஆடிக் கொண்டிருப்பீர்களாக!

ஏடொத் தேந்தும் நீளி லைவேல் எங்கள் இராவணனார்
ஓடிப் போனார், நாங்கள் எய்த்தோம் உய்வதோர் காரணத்தால்,
சூடிப் போந்தோம் உங்கள் கோமா னாணை தொடரேன்மின்,
கூடிக் கூடி யாடு கின்றோம் குழமணி தூரமே. 1876

பனைஓலை ஏட்டினை ஒத்த அளவில் நீண்டதோர் இலை போன்ற வேலை ஏந்திய எங்கள் அரக்கர் குலத்துக்குத் தலைவனாகிய இராவணன் நடைபெற்ற போரில் ஸ்ரீஇராமபிரானிடம் புறமுதுகு காட்டித் தோற்று மாண்டு போனார். அதனால் நாங்கள் இளைத்துப் போய்விட்டோம். இனிமேல் நாங்கள் பிழைத்துக் கொள்ளும் பொருட்டு உங்களுக்குச் சுவாமியான எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் இடுகின்ற கட்டளையை எம்தலைமீது கொண்டு முடிக்கக் கூடிய ஆற்றல் பெற்றவர்களாக இருக்கின்றோம். உங்கள் தலைவனாகிய ஸ்ரீ இராமபிரானின் ஆணையாகிய ''அரக்கர்களைக் கொல்வது'' என்றபடி தொடர்ந்து எங்களைக் கொல்ல வேண்டாம். நாங்கள் ''குழமணி

Koviloor Digital Library

தூரம்'' என்னும் கூத்தினைக் கூடிக் கூடி ஆடிக் கொண்டே அடைக் கலம் அடைகின்றோம்.

*வென்ற தொல்சீர்த் தென்னி
லங்கை வெஞ்சமத்து, அன்றரக்கர்
குன்ற மன்னா ராடி
உய்ந்த குழமணி தூரத்தை,
கன்றி நெய்ந்நீர் நின்ற
வேற்கைக் கலிய னொலிமாலை,
ஒன்றும் ஒன்றும் ஐந்தும்
மூன்றும் பாடிநின் றாடுமினே. 1877

மிகப் பழங்காலந்தொட்டே வெற்றி பெறுதலையே இயல்பாகக் கொண்டுள்ள தெற்குத் திசையிலுள்ள இலங்கை மாநகரின் மன்னனான இராவணனுடன் நடத்திய கொடிய போர்க்களத்தில் அரக்கர்களை அழித்து வெற்றிவாகை சூடிய அக்காலத்தில் மீதமிருக் கின்ற அரக்கர் குலமக்கள் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானிடத்துச் சரணடைந்து, இனியும் எங்களைக் கொல்ல வேண்டாம் என்று தாங்கள் உய்யும் பொருட்டு வேண்டிக் கொண்டு குன்றினை ஒத்த அரக்கர்குல மக்கள் ''குழமணி தூரம்'' என்னும் கூத்தினை மகிழ்ச்சியுடன் கூடிய பாங்கினைப் பற்றி, நெய்பூசி இருக்கும் வேற்படையினைக் கொண்டுள்ள ''கலிகன்றி'' எனப்படும் ''திருமங்கை ஆழ்வார்'' ஆகிய கலியன் அருளிச் செய்த ஒலிமிக்க பாசுரங்கள் பத்தினையும் உய்யும் பொருட்டுப் பாடி ஆடிக் கொண்டிருப்பீர்களாக!

4. சந்த மலர்க்குழல்
கண்ணன் விஷயம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*சந்த மலர்க்குழல் தாழத்
தானுகந் தோடித் தனியே
வந்து,என் முலைத்தடந் தன்னை
வாங்கிநின் வாயில் மடுத்து,

Koviloor Digital Library

நந்தன் பெறப்பெற்ற நம்பீ!
நானுகந் துண்ணும் அமுதே,
எந்தை பெருமானே! உண்ணாய்
என்னம்மம் சேமமுண் ணாயே. 1878

நந்த கோபர்க்குத் திருமகனாகத் திருஅவதாரம் மேற்கொண்டருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! எந்தையாகிய எம்பிரானே! அடியேன் உகந்து உண்ணும் திருவமுதே! சிறந்த மலர்களைச் சூடியிருக்கின்ற உன்னுடைய தலைமுடியானது தாழ்ந்திருக்குமாறு, நீ, தன்னந்தனியே ஓடிவந்து என் முலைகளில் வழிகின்ற பாலை உண்ணும் வகையில் தம் திருக்கரங்களினால் பிடித்துத் தம் திருவாயினைக் கொண்டு உண்ண வேண்டும். தாய்ப்பால் உனக்கு நன்மை அளிக்கக் கூடியதாகும். ஆகவே, என்னுடைய பாலாகிய சேமத்தளிகையைப் பருகுவதற்காக வருவாயாக!

வங்க மறிகடல் வண்ணா!
மாமுகி லேயொக்கும் நம்பீ,
செங்க ணெடிய திருவே!
செங்கம லம்புரை வாயா,
கொங்கை சுரந்திட வுன்னைக்
கூவியும் காணாதி ருந்தேன்,
எங்கிருந் தாயர்க ளோடும்
என்விளை யாடுகின் றாயே? 1879

கப்பல்கள் பெருமளவில் செல்கின்ற கடலின் நிறத்தினையொத்த திருமேனியை உடைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! மேகக்கூட்டங்களை ஒத்திருக்கின்ற ஸ்ரீகண்ணபிரானே! நீண்ட நெடிய செந்தாமரைக் கண்களைக் கொண்டுள்ள செல்வ நம்பீ! செந்தாமரை மலரைப் போன்ற சிவந்த திருவாயினைக் கொண்டுள்ள திருமுகம் உடையபிரானே! என் முலைகளிலிருந்து பால்சுரந்து கொண்டிருக்கின்ற நிலையில் உன்னை அழைத்தபோதும் உன்னைக் காண இயலாமல் இருந்து கொண்டிருக்கிறேன். நீ ஆயர்குலத்துச் சிறுவர்களோடு கூடிக் கொண்டு எங்கிருந்தவாறு என்ன விளையாட்டு விளையாடிக் கொண்டிருக்கிறாயோ? இதற்கு இப்போது என்ன வேண்டியிருக்கிறது? நீ உடனே ஓடி வந்து பால் பருகிடவாராய்!

Koviloor Digital Library

திருவில் பொலிந்த எழிலார்
ஆயர்தம் பிள்ளைக ளோடு,
தெருவில் திளைக்கின்ற நம்பீ!
செய்கின்ற தீமைகள் கண்டிட்டு,
உருகியென் கொங்கையின் தீம்பால்
ஒட்டந்து பாய்ந்திடு கின்ற,
மருவிக் குடங்கா லிருந்து
வாய்முலை யுண்ணநீ வாராய். 1880

செல்வச் செழிப்பில் மிக்கவர்களாகவும், அழகிற் சிறந்தவர் களாகவும் இருக்கின்ற ஆயர்குலத்துப் பிள்ளைகளுடன் சேர்ந்து கொண்டு தெருவில் விளையாடுகின்ற ஸ்ரீகண்ணபிரான் என்னும் நம்பியே! நீ செய்யும் விளையாட்டுத்தனமான தீம்புகளைக் கண்டு மனம் மகிழ்ச்சியுற்றதால் என் முலைகளினின்றும் பால்தானே சுரந்து, வெள்ளமிட்டுப் பெருகிப் பாழாகிவிடுகின்றது. ஆகவே, நீ என் மடிமீது அமர்ந்து கொண்டு என் முலைப்பாலை அருந்தும் பொருட்டு இங்கே விரைந்து வருவாயாக!

மக்கள் பெறுதவம் போலும்
வையத்து வாழும் மடவார்,
மக்கள் பிறர்கண்ணுக் கொக்கும்
முதல்வா! மதக்களி றன்னாய்,
செக்கர் இளம்பிறை தன்னை
வாங்கிநின் கையில் தருவன்,
ஒக்கலை மேலிருந் தம்மம்
உகந்தினி துண்ணநீ வாராய். 1881

உலகத்தில் வாழும் பெண்கள் யாவரும் தம் மக்களைப் பெறுவதற்கு எத்தகைய தவம் செய்துள்ளனரோ அஃதே போன்று பிறர் கண்களுக்குப் பிள்ளை பெறுவதன் ஒத்திருக்கின்ற இவ்வுலகத்து முதன்மையான பரம்பொருளே! மதம்பிடித்த ஆண் யானைக்குச் சமமான வலிமையையுடையவனே! சிவந்திருக்கும் ஆகாயத்தில் உலவி வருகின்ற பிறைச்சந்திரனைப் பிடித்து உன் கையிலே தருவேன். ஆகையினால் நீ எங்கும் ஓடிவிடாமல் என் இடுப்பில் அமர்ந்து கொண்டு, என் முலைப்பாலை உகப்புடன் இனிமையுடன் அருந்துவதன் பொருட்டு இங்கே வருவாயாக!

Koviloor Digital Library

மைத்த கருங்குஞ்சி மைந்தா!
மாமரு தூடு நடந்தாய்,
வித்தக னே!விரை யாதே
வெண்ணெய் விழுங்கும் விகிர்தா,
இத்தனை போதன்றி யென்றன்
கொங்கை சுரந்திருக்க கில்லா,
உத்தம னே!அம்மம் உண்ணாய்
உலகளந் தாய்!அம்மம் உண்ணாய். 1882

மை போன்று இருண்டு கறுத்துள்ள தலைமுடியினைக் கொண்டுள்ள மைந்தனே! பெரிய மருத மரங்களினிடையே நடந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! வித்தைகள் யாவற்றையும் அறிந்தவனே! மெள்ள மெள்ள நடந்தவாறே வெண்ணெயை வாரி உண்டு விழுங்கவல்ல சாதுர்யம்மிக்க சக்தியையுடையவனே! என் முலைகளிலிருந்து இத்தனை காலம் பால் சுரந்தது என்ற அளவில் இனியும் பொறுத்துக் கொண்டு இருக்கமாட்டாது. சிறந்த உத்தமனே! உலகளந்த எம்பெருமானே! திருமுலைப்பாலினை உண்பதற்காக நீ இங்கே ஓடி வருவாயாக! ஓடிவந்து என் திருமுலைப்பாலினை உண்பாயாக!

பிள்ளைகள் செய்வன செய்யாய்
பேசின் பெரிதும் வலியை,
கள்ளம் மனத்தி லுடையை
காணவே தீமைகள் செய்தி,
உள்ள முருகியென் கொங்கை
ஓட்டந்து பாய்ந்திடு கின்ற,
பள்ளிக் குறிப்புச்செய் யாதே
பாலமு துண்ணநீ வாராய். 1883

ஸ்ரீகண்ணபிரானே! நீ உன்னோடு ஒத்திருக்கின்ற மற்ற குழந்தைகள் செய்யும் தீம்புகளைச் செய்வதில்லை. உன்னைப் பற்றிப் பேச வேண்டுமானால் நீ மிகவும் மிடுக்கினை உடையவனாக இருக்கின்றாய். உன் மனதிலே கள்ளத்தனத்தினைக் கொண்டிருக் கின்றாய். பிறர் காணுமாறு தீம்புகள் பலவற்றையும் நீ செய்து கொண்டி ருக்கிறாய். உன்மீது என் உள்ளம் உருகி என் முலைகளினின்றும் பால் பெருகிப் பாய்ந்து கொண்டிருக்கிறது. படுத்து உறங்குவது போன்று இருந்து கொண்டு பாசாங்குகள் ஏதும் செய்து கொண்டிராமல் பாலமுதினை உண்ணும் பொருட்டு நீ விரைந்து வருவாயாக!

Koviloor Digital Library

தன்மக னாகவன் பேய்ச்சி
 தான்முலை யுண்ணக் கொடுக்க,
வன்மக னாயவள் ஆவி
 வாங்கி முலையுண்ட நம்பி,
நன்மகள் ஆய்மக ளோடு
 நானில மங்கை மணாளா,
என்மக னே!அம்ம முண்ணாய்
 என்னம்மம் சேமமுண் ணாயே. 1884

பெற்ற தாயைப் போல நடித்துக் கொடியவிடத்தினைக் கொண்டுள்ள பேய்வடிவில் வந்த பூதனை என்பவள் உன்னைத் தன் மகன் போலப் பாவித்து அன்பு காட்டித் தன் முலையினை உன் வாயிலே வைத்த அளவில் வலிமைமிக்க ஆண்பிள்ளையாகி நின்று நஞ்சு நிறைந்த அவளின் முலைப்பாலைப் பருகுவதுபோல அவள் உயிரைப் போக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! சிறந்த மகளான நப்பின்னைப்பிராட்டிக்கும், பூமிப்பிராட்டிக்கும் மணாளனே! எனக்குப் பிள்ளையாக அமைந்த ஸ்ரீகண்ணபிரானே! என் முலைப்பாலை உண்ண வேண்டும். என் முலையாகிய சேமத்தளிகையை நீ வந்து உண்பதற்கு வருவாயாக!

உந்தம் அடிகள் முனிவர்
 உன்னைநான் என்கையிற் கோலால்,
நொந்திட மோதவுங் கில்லேன்
 நுங்கள்தம் ஆநிரை யெல்லாம்,
வந்து புகுதரும் போது
 வானிடைத் தெய்வங்கள் காண,
அந்தியம் போதங்கு நில்லேல்
 ஆழியங் கையனே! வாராய். 1885

திருவாழியானைத் தம் திருக்கரத்தில் ஏந்தியிருப்பதனால் அழகுடன் கூடிய திருக்கையையுடைய எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரானே! நீ செய்கின்ற தீம்புகளை உன் தந்தையார் நந்தகோபர் காண்பாராயின் வெகுண்டு சினம் கொண்டு சீறுவார். நானோ என் கையிலுள்ள கோலினால் உன் உடல் நோகும்படியாக அடிக்கவும் மாட்டேன். நீங்கள் மேய்த்துக் கொண்டிருக்கின்ற பசுக்கூட்டங்கள் எல்லாம் மேய்ந்துவிட்டு மாலை வேளையில் ஊருக்குள்ளே வந்து சேர்கின்றபோது, விண்ணிலுள்ள தெய்வங்கள் காணுமாறு நாற் சந்தியிலே நிற்க வேண்டாம். நீ என் அருகே வருவாயாக!

Koviloor Digital Library

பெற்றத் தலைவனெங் கோமான்
பேரரு ளாளன் மதலாய்,
சுற்றக் குழாத்திளங் கோவே!
தோன்றிய தொல்புக ழாளா,
கற்றினந் தோறும் மறித்துக்
கானம் திரிந்த களிறே,
எற்றுக்கென் அம்மமுண் ணாதே
எம்பெரு மானிருந் தாயே? 1886

பசுக்கூட்டங்களுக்குத் தலைவனே! எங்களுக்குத் தலைவனாகத் திகழும் எம்பிரானே! பேரருளாளனாகிய நந்தகோபரின் திருக் குமரனே! சுற்றத்தினருக்கெல்லாம் இளவரசராகத் திகழும் எம்பெரு மானே! எங்கும் பரவியிருக்கின்ற பெரும்புகழினைத் தொன்று தொட்டுப் பெற்று விளங்குகின்ற எம்பெருமானே! காடுகள்தோறும் பசுக்கூட்டங்களை மடக்கி மேய்த்துத் திரிந்து கொண்டிருக்கின்ற ஆண் யானைக்குச்சமமானவனே! என் முலைப்பாலை நீ அருந்தா மலிருப்பது எதற்காக என்று அறிய இயலவில்லையே. எம்பெரு மானாகிய தாங்கள் என் முலைப்பாலை உண்பதற்கு விரைந்து வருவாயாக!

*இம்மை யிடர்கெட வேண்டி
ஏந்தெழில் தோள்கலி கன்றி,
செம்மைப் பனுவல்நூல் கொண்ட
செங்க ணெடியவன் றன்னை,
'அம்மமுண்' என்றுரைக் கின்ற
பாட லிவையைந்து மைந்தும்,
மெய்ம்மை மனத்துவைத் தேத்த
விண்ணவ ராகலு மாமே. 1887

இம்மைப் பிறவியின் துன்பங்களை எல்லாம் கெட்டழியுமாறு எம்பெருமான் செந்தாமரைக் கண்ணனைப் பற்றி அழகுமிக்க தோள் களையுடைய ''கலிகன்றி'' என்னும் திருமங்கை ஆழ்வார் சிறந்த நூலாகிய இப்பாசுரங்களைக் கொண்டு ''முலைப்பாலை உண்பதற்கு நீ வரவேண்டும்'' என்று அழைக்கும் பொருட்டுத் தாய் அழைத்ததாக இருக்குமாறு அருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் உண்மையினை மனத்தில் கொண்ட அன்புமிக்கவராகி ஏத்தித் துதிப்பவர்கள் விண்ணுலகத் தேவர்களாகத் திகழ்வார்கள்.

Koviloor Digital Library

5. பூங்கோதை
சப்பாணிப் பருவம்

கலித்தாழிசை

*பூங்கோதை யாய்ச்சி கடைவெண்ணெய் புக்குண்ண,
ஆங்கவ ளார்த்துப் புடைக்கப் புடையுண்டு,
ஏங்கி யிருந்து சிணுங்கி விளையாடும்,
ஓங்கோத வண்ணனே! சப்பாணி
ஒளிமணி வண்ணனே! சப்பாணி. 1888

பூக்களைச் சூடிய கூந்தலையுடையவளான ஆயர்குலத்துந் தாயாகிய அசோதைப்பிராட்டியார் கடைந்து வைத்திருந்த வெண்ணெயைக் கள்ளத்தனமாகப் புகுந்து திருவமுது செய்து கொண்டிருப்பதைப் பார்த்துவிட்ட அசோதைப்பிராட்டியார் கண்ணபிரானைத் தாம்பினால் கட்டிப்போட்டு, அடிக்கப் பெற்றதனால் உண்டான வலியைப் பொறுத்துக் கொள்ள இயலாமல் அழுது கொண்டிருந்த ஸ்ரீகண்ணபிரானே! பின்பு அந்தத்தாய் அசோதைப் பிராட்டியார் சீராட்டிய அளவில் சிணுங்கிக் கொண்டு விளையாடிக் கொண்டிருக்கும் கடல் நிறத்தினை ஒத்த திருமேனி யையுடைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! ஒளி வீசுகின்ற மாமணி நிறத்தினை ஒத்திருக்கும் எம்பெருமானே! நீ சப்பாணி கொட்ட வேண்டும்.

தாயர் மனங்கள் தடிப்பத் தயிர்நெய்யுண்-
டேயெம் பிராக்கள், இருநிலத் தெங்கள்தம்,
ஆயர் அழக அடிகள், அரவிந்த
வாயவ னே!கொட்டாய் சப்பாணி
மால்வண்ண னே!கொட்டாய் சப்பாணி. 1889

தாய்மார்களின் மனம் பதைபதைத்துத் துடித்துக் கொண்டிருக்கின்ற அளவில் அவர்கள் தயார் செய்து வைத்திருக்கின்ற தயிர், நெய் ஆகிய பொருட்களை வாரித் திருவமுது செய்தது தகுந்ததே என்று எண்ணிக் கொண்டிருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! இப் பூவுலகில் ஆயர்கள் குலத்தில் ஸ்ரீகண்ணபிரான் திருஅவதாரம் மேற்கொண்டருளிய அழகனே! தாமரைத் திருவடிகளையும், சிவந்த திருவாயினையும் உடைய எம்பெருமானே! சப்பாணி கொட்டுவாயாக! கரியநிறம் கொண்ட திருமேனியையுடைய ஸ்ரீகண்ணபிரானே! நீ சப்பாணி கொட்டி அருள்புரிதல் வேண்டும்.

Koviloor Digital Library

தாம்மோர் உருட்டித் தயிர்நெய் விழுங்கிட்டு,
தாமோ தவழ்வரென் றாய்ச்சியர் தாம்பினால்,
தாமோ திரக்கையா லார்க்கத் தழும்பிருந்த,
தாமோ தரா!கொட்டாய் சப்பாணி
தாமரைக் கண்ணனே! சப்பாணி. 1890

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் தானாகவே 'மோர்' இருக்கும் பாத்திரத்தினை உருட்டிவிட்டுத் தயிர், நெய் ஆகியவைகளையும் உண்டு விழுங்கிவிட்டு, இவ்வாறாகச் செய்த செயலைச் செய்யாதவர் போல ஒன்றுமறியாத இளங்குழந்தை போன்றிருக்க, அஃதறிந்த ஆய்ச்சியர்கள் இவன் செய்த இக்குறும்புச் செயல்களைக் குறை கூறியவாறே தாம்பினால் கட்டிப் போட்டுக் கைகளினால் அடிக்கவும், அதன் காரணமாக வயிற்றில் தழும்பு ஏறிக் கிடக்கின்ற தாமோதரனே! நீ சப்பாணி கொட்டுவாயாக! செந்தாமரைக் கண்ணனே நீ சப்பாணி கொட்டுவாயாக!

பெற்றார் தளைகழலப் பேர்ந்தங் கயலிடத்து,
உற்றா ரொருவரு மின்றி யுலகினில்,
மற்றாரு மஞ்சப்போய் வஞ்சப்பெண் நஞ்சுண்ட,
கற்றாய னே!கொட்டாய் சப்பாணி
கார்வண்ண னே!கொட்டாய் சப்பாணி. 1891

தன்னைப் பெற்றெடுத்த தாய் தந்தையராகிய வசுதேவர்-தேவகி ஆகிய இருவருக்கும் கம்சனால் கட்டப்பட்ட கால்விலங்கு அவிழ்ந்து கீழே விழும்படியாகத் திருஅவதாரம் பண்ணியருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! அந்த இடத்தில் நெருங்கிய உறவினர் ஒருவரும் இல்லாமலிருக்கின்ற நிலையில், உலகிலுள்ள அனைவரும் அஞ்சும்படியாகத் திருவாய்பாடிக்கும் சென்று சேர்ந்திருக்கின்றாயே! வஞ்சனையே வடிவாகக் கொண்டு பேய்வடிவில் வந்த பூதனை என்பவளின் நஞ்சு கலந்த முலைப்பாலை உறிஞ்சி உண்டதன்மூலம் அவளுடைய உயிரைப் போக்கியருளினாய். கன்றுகளை மேய்த்துக் கொண்டிருந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! நீ கைகளைத் தட்டிச் சப்பாணி கொட்டுவாயாக! மேகம் போன்ற நிறத்தினைக் கொண்ட திருமேனியினையுடைய எம்பெருமானே! நீ சப்பாணி கொட்டுவாயாக!

Koviloor Digital Library

சோத்தென நின்னைத் தொழுவன் வரந்தா,
பேய்ச்சி முலையுண்ட பிள்ளாய், பெரியன
ஆய்ச்சியர் அப்பம் தருவர், அவர்க்காகச்
சாற்றியோ ராயிரம் சப்பாணி
தடங்கைக ளால்கொட்டாய் சப்பாணி. 1892

'பூதனை' என்னும் பேயின் நஞ்சு கலந்த முலைப்பாலை உண்டு அவள் உயிரைப் போக்கியருளிய கண்ணபிரானே! தாங்கள் அடியேனுக்கு வேண்டிய வரங்கள் தரவேண்டும் என்று கருதிச் சோத்தம் என்று கூறி உன்னை வணங்கித் தொழுகின்றோம். ஆய்ச்சிமார்கள் மிகப் பெரியதான அப்பங்களை உனக்குத் தருவார்கள். அவர்களுக்காக என்று ஒரு காரணத்தை முன்னிட்டு ஓராயிரம் சப்பாணி கொட்டுவாயாக! உம்முடைய அழகிய திருக்கரங்களைக் கொண்டு சப்பாணி கொட்டுவாயாக!

கேவல மன்றுன் வயிறு, வயிற்றுக்கு
நாவலன் அப்பம் தருவன், கருவிளைப்
பூவலர் நீள்முடி நந்தன்றன் போரேறே,
கோவல னே!கொட்டாய் சப்பாணி
குடமா டீ!கொட்டாய் சப்பாணி. 1893

கருவிளைப் பூவின் நிறம் கொண்ட திருமேனியை உடையவனே! நீண்ட திருமுடியை உடையவனே! நந்தகோபர் வளர்க்க வளர்ந்த போர்க்காளையே! பசுக்கூட்டங்களை மேய்க்கவல்ல ஆயர்குலத் தோன்றலே! உன் திருவயிறு சாமான்யமானதன்று போலும்! அந்தத் திருவயிற்றினுக்கு, ஏற்றதாக அவலையும் அப்பத்தினையும் அடியேன் அவ்வயிறு நிரம்பும்படியாக அளிப்பேன். நீ சப்பாணி கொட்டுவாயாக! குடக்கூத்தாடிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! நீ சப்பாணி கொட்டுவாயாக!

புள்ளினை வாய்பிளந்து பூங்குருந்தம் சாய்த்து,
துள்ளி விளையாடித் தூங்குறி வெண்ணெயை,
அள்ளிய கையா லடியேன் முலைநெருடும்,
பிள்ளைப்பி ரான்!கொட்டாய் சப்பாணி
பேய்முலை யுண்டானே! சப்பாணி. 1894

கொக்கு வடிவில் வந்த பகாசுரன் என்னும் அசுரனின் வாயைப் பிளந்து அவனை அழித்துவிட்டுப் பூக்கள் பூத்த குருந்த மரத்தினைச் சாய்த்துவிட்டு விளையாடிக் கொண்டிருந்த எம்பெருமான் ஸ்ரீகண்ண

Koviloor Digital Library

பிரானே! தொங்கிக் கொண்டு இருக்கின்ற உறியிலுள்ள வெண்ணெயை அள்ளித் திருவமுது செய்த திருக்கரங்களால் அடியேனின் முலைகளைப் பால்சுரக்கும் பொருட்டு நெருடிக் கொண்டிருக்கின்ற குறும்புத்தனமான குழந்தையே! சப்பாணி கொட்டுவாயாக! பூதனை என்னும் பேயின் நச்சு கலந்த முலைப்பாலை உண்டு அவளுயிரைப் போக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! சப்பாணி கொட்டுவாயாக!

யாயும் பிறரும் அறியாத யாமத்து,
மாய வலவைப்பெண் வந்து முலைதர,
பேயென் றவளைப் பிடித்துயி ரையுண்ட,
வாயவ னே!கொட்டாய் சப்பாணி
மால்வண்ண னே!கொட்டாய் சப்பாணி. 1895

உன்னைப் பெற்றெடுத்த தாயாகிய அடியேனும், மற்றவர்களும் அறிந்து கொள்ள இயலாத 'யாமம்' என்னும் நள்ளிரவு நேரத்தில், மாயமாகவும் வஞ்சனையாகவும் ஒரு பெண் வடிவில் வந்த பூதனை என்னும் பேயின் நஞ்சு கலந்த முலைப்பாலைக் கொடுத்த அளவிலேயே உறிஞ்சி உண்டதன்மூலம் அவள் உயிரைப் போக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! சப்பாணி கொட்டுவாயாக! மால் நிறத்ததிருமேனியையுடைய எம்பெருமானே! சப்பாணி கொட்டுவாயாக!

கள்ளக் குழவியாய்க் காலால் சகடத்தை,
தள்ளி யுதைத்திட்டுத் தாயாய் வருவாளை,
மெள்ளத் தொடர்ந்து பிடித்தா ருயிருண்ட,
வள்ளலே! கொட்டாய் சப்பாணி
மால்வண்ண னே!கொட்டாய் சப்பாணி. 1896

மாயக்குழந்தையாகத் தோன்றி அக்குழந்தைப் பிராயத்திலேயே சக்கர வடிவில் தன்னைக் கொல்ல வந்திருந்த 'சகடாசுரன்' என்னும் அசுரனைத் தன் திருவடிகளால் தள்ளி உதைத்துவிட்டு, அவனுயிரைப் போக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! தாயைப் போன்று வந்த பூதனையின் நச்சு கலந்த முலைப்பாலை உண்ணும் பொருட்டு மெள்ள மெள்ள அவள் மேல்விழுந்து அவளைக் கட்டிப்பிடித்து உண்டதன் காரணமாக அவள் உயிரைப் போக்கியருளிய வள்ளலே! சப்பாணி கொட்டுவாயாக! மால்நிறத்தையொத்த திருமேனி கொண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! சப்பாணி கொட்டுவாயாக!

Koviloor Digital Library

*காரார் புயல்கைக் கலிகன்றி மங்கையர்கோன்,
பேராளன் நெஞ்சில் பிரியா திடங்கொண்ட
சீராளா, செந்தா மரைக்கண்ணா! தண்டுழாய்த்
தாராளா, கொட்டாய் சப்பாணி
தடமார்வா! கொட்டாய் சப்பாணி. 1897

மழைக்காலத்தில் நீரைக் கொண்டு வருகின்ற மேகத்தினைப் போன்று வள்ளல் தன்மையையுடைய 'கலிகன்றி' என்னும் திருமங்கை என்னும் நாட்டின் மன்னனாகிய திருமங்கை ஆழ்வாரின் மனத்தினின்றும் பிரியாமல் தங்கி இருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! சீர்மை பொருந்திய எம்பெருமானே! செந்தாமரைக் கண்ணனே! குளிர்ச்சி பொருந்திய திருத்துழாய் மாலையை அணிந்துள்ள எம்பெருமானே! சப்பாணி கொட்டுவாயாக! அகன்ற திருமார்பை உடையவனே! சப்பாணி கொட்டுவாயாக!

6. எங்கானும்
மாயன் வெண்ணெயுண்ட மாட்சிமை

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*எங்கானும் ஈதொப்ப தோர்மாய முண்டே?
நரநா ரணனா யுலகத் தறநூல்,
சிங்கா மைவிரித் தவனெம் பெருமான்
அதுவன் றியும்செஞ் சுடரும் நிலனும்,
பொங்கார் கடலும் பொருப்பும் நெருப்பும்
நெருக்கிப் புகப்பொன் மிடறத் தனைபோது,
அங்காந் தவன்காண்மின் இன்றாய்ச் சியரால்
அளைவெண் ணெயுண்டாப் புண்டிருந் தவனே. 1898

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பரந்துபட்டிருக்கின்ற இப்பூவுலகில் நரநாராயண வடிவம் கொண்ட, இவ்வுலகின் அறக்கருத்துகளைத் தெரிவிக்கக் கூடிய வேதங்கள் எனப்படுகின்ற மறைகள் சுருங்கிப் போகாமலிருக்கும்படிக்கு அதனை விரிவுபடுத்திக் கொண்டிருப்பவனாகி இருக்கின்ற எம்பெருமான் இஃதன்றியும் சூரியன், சந்திரன், பூமி, அலைகடல், மலைகள், நெருப்பு ஆகிய யாவும் நெருக்கும்படியாக, ஒன்றின்மேல் ஒன்றாய் உள்ளே செல்லும் வகையில் தன் பொன்னான கழுத்துக்குக் கீழே இவை யாவற்றையும்

Koviloor Digital Library

விழுங்குகின்ற வகையில் தன் திருவயிற்றின் வாயினைத் திறந்து வைத்திருந்து, பின்பு அவைகளை வெளியே காண்பிக்கும் பொருட்டுத் தன் திருவாயினைத் திறந்து காட்டினான். இத்தகைய எம்பெருமான் அன்றோ இப்போது ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில், தயிரையும் வெண்ணெயையும் திருடி உண்டதன் காரணமாக ஆய்க்குலப் பெண்களால் தாம்புக் கயிற்றினால் கட்டுண்டு கிடக்கிறான் இத்தகைய ஆச்சரியம் மிக்க செயல்களை எங்கேனும், எவ்விடத்திலேனும் கண்டது உண்டு கொல்?

குன்றொன்று மத்தா அரவம் அளவிக்
குரைமா கடலைக் கடைந்திட்டு, ஒருகால்
நின்றுண்டை கொண்டோட்டி வன்கூன் நிமிர
நினைத்த பெருமான் அதுவன் றியும்முன்,
நன்றுண்ட தொல்சீர் மகரக் கடலேழ்
மலையே ழுலகே ழொழியா மைநம்பி,
அன்றுண் டவன்காண்மின் இன்றாய்ச் சியரால்
அளைவெண் ணெயுண்டாப் புண்டிருந் தவனே 1899

மந்தர மலையினை மத்தாகக் கொண்டு, வாசுகி என்னும் பாம்பினைக் கயிறாகக் கொண்டு, அலைவீசுகின்ற பெரியதோர் திருப்பாற்கடலைக் கடைந்திட்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே பின்பு ஸ்ரீஇராமபிரான் திருஅவதாரம் மேற்கொண்டிருந்த அக் காலத்தில், ''மந்தரை'' என்னும் கூனியின் முதுகில் இருந்த கூனினைப் போக்கித் திருவுள்ளம் கொண்டருளினான். இஃதன்றியும் முன்பு ஒரு சமயம் உலகப்பிரளயம் உண்டான காலத்தில் நன்றாகத் தன் திருவயிற்றினுள்ளே அடக்கி வைத்திருந்த சிறப்பு மிக்க மகரமீன்கள் வளமாகத் திகழ்கின்ற ஏழு கடல்கள், ஏழு மலைகள், ஏழு உலகங்கள் ஆகிய யாவற்றினையும், உண்டு பாதுகாத்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்டு சேவியுங்கள். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் இன்றைக்கு வெண்ணெய் உண்டதன் பொருட்டு அகப்பட்டுக் கொண்டதன் விளைவாக ஆய்ச்சியரால் தாம்பினால் கட்டப்பட்டு இருக்கின்றவனே ஆவான். இஃதென்னே அதிசயம்!

உளைந்திட் டெழுந்த மதுகை டவர்கள்
உலப்பில் வலியால் அவர்பால், வயிரம்
விளைந்திட்ட தென்றெண்ணி விண்ணோர் பரவ
அவர்நா ளொழித்த பெருமான் முனநாள்,

Koviloor Digital Library

வளைந்திட்ட வில்லாளி வல்வா ளெயிற்று
மலைபோ லவுண னுடல்வள் ளுகிராஸ்,
அளைந்திட் டவன்காண்மின் இன்றாய்ச் சியரால்
அளைவெண்ணெ யுண்டாப் புண்டிருந் தவனே. 1900

அளவு கடந்த வலிமை மிகப் பெற்று பெருங்கிளர்ச்சியுடன் வெளிப்பட்ட மதுகைடபர்கள் என்கிற அசுரர்களுடன் உண்டான பகைமை காரணமாக அஞ்சி நடுங்கிய விண்ணுலகத் தேவர்கள் எம்பெருமான் திருமாலை வணங்கிட, அவ்வெம்பெருமான் அத் தேவர்களின் அவ்விரு அசுரர்களின் உயிரைப் போக்கி அருள்புரிந்தான். இத்தகைய எம்பெருமான் வில்லேந்திய வலிமைமிக்க ஸ்ரீ இராமபிரான் அன்றோ! வலிமை மிக்க ஒளி வீசுகின்ற பற்களைக் கொண்டு மலையைப் போன்று வந்த இரணியன் என்னும் அசுரனின் உடலைத் தன் நகங்களைக் கொண்டு இருகூறுகளாகப் பிளந்து கிழித்து அழித்த எம்பெருமான் ஸ்ரீநரசிம்மமூர்த்தியும் இவனே அன்றோ! இத்தகைய வலிமை மிக்க எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் இன்று வெண்ணெய் உண்டான் என்பதற்காக ஆய்ச்சியால் கட்டுண்டு கிடக்கின்றானே! இஃதென்ன ஆச்சரியம்!

தளர்ந்திட் டிமையோர் சரண்தா வெனத்தான்
சரணாய் முரணா யவனை, உகிரால்
பிளந்திட் டமரர்க் கருள்செய் துகந்த
பெருமான் திருமால் விரிநீ ருலகை,
வளர்ந்திட்ட தொல்சீர் விறல்மா வலியை
மண்கொள்ள வஞ்சித் தொருமாண் குறளாய்,
அளந்திட் டவன்காண்மின் இன்றாய்ச் சியரால்
அளைவெண்ணெ யுண்டாப் புண்டிருந் தவனே. 1901

விண்ணுலகத் தேவர்கள் யாவரும் தளர்ச்சி அடைந்து ''சரணம்'' என்று இயம்பி சரணடைந்த காலத்தில் எம்பெருமான் திருமால் ஸ்ரீ நரசிம்மமூர்த்தியாகத் திருஅவதாரம் மேற்கொண்டு, வலிமை மிக்க இரணியன் என்னும் அசுரனைத் தன் நகங்களால் கிழித்து, வதைத்து அவனை அழித்து அத்தேவர்களுக்கு அருள்புரிந்தான். இத்தகைய எம்பெருமான் திருமாலே, பரந்து விரிந்து கிடக்கின்ற கடல்நீரினால் சூழ்ந்திருக்கின்ற இவ்வுலகை மாவலிச் சக்கரவர்த்தி இயற்றிய யாகத்தின் முன்னே குள்ள வடிவினனாகிய வரமனனாக அவதாரம் மேற்கொண்டு இரந்து பெற்றுப் பின்பு திரிவிக்ரமனனாகத் திருஅவதாரம் மேற்கொண்டு இவ்வுலகம் முழுவதனையும் அளந்து

Koviloor Digital Library

கொண்டான், இத்தகைய வல்லமை உடைய எம்பெருமான், ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்த காலை, வெண்ணெய் உண்டதன் பொருட்டு ஆய்ச்சியரின் தாம்புக் கயிற்றினால் கட்டுண்டு கிடப்பதுதான் என்னே ஆச்சரியம்!

நீண்டான் குறளாய் நெடுவா னளவும்
அடியார் படுமாழ் துயரா யவெல்லாம்,
தீண்டா மைநினைந் திமையோ ரளவும்
செலவைத் தபிரான் அதுவன் றியும்முன்,
'வேண்டா மைநமன் றமரென் தமரை
வினவப் பெறுவார் அலர்'என்று, உலகேழ்
ஆண்டா னவன்காண்மின் இன்றாய்ச் சியரால்
அளைவெண் ணெயுண்டாப் புண்டிருந் தவனே. 1902

''குள்ள வடிவு'' என்னும் ''வாமன''னாகத் திருஅவதாரம் மேற்கொண்டு அருளிய எம்பெருமான் திருமால் தன் அடியவர்கட்குப் 'பிறவித்துயர்' என்னும் பாவங்களும் அதனால் உண்டாகும் துன்பங் களும் தீண்டலாகாது என்னும் அருள்நோக்குடன், நெடிதுயர்ந்து வளர்ந்து ''திரிவிக்கிரமன்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு, வானளவும் ஓங்கி வளர்ந்து தன் திருவடிகளை வைத்து அளந்து அருளினான். அஃதன்றியும் தன் அடியவர்களை இயம தூதர்கள் அணுகி அவர்களைப் பற்றி ஆராய்தல் என்பது வேண்டாமே என்று எண்ணியவாறு அருளி ஏழுலகங்களையும் தரமே ஆள்கின்ற நிலையில் அடியவர்கள் அனைவரையும் பாதுகாத்து அருள்கின்றான். இத்தகைய எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணனே ஸ்ரீகண்ணபிரானாகத் திருஅவதாரம் மேற்கொண்டிருந்த காலை வெண்ணெய் உண்டதன் பொருட்டு ஆய்ச்சியரால் இன்று தாம்புக் கயிற்றினால் கட்டுண்டு கிடக்கின்றானே! இஃதென்னே ஆச்சரியம்! என்று எண்ணிப் பாருங்கள்.

பழித்திட்ட இன்பப் பயன்பற் றறுத்துப்
பணிந்தேத்த வல்லார் துயராய வெல்லாம்,
ஒழித்திட் டவரைத் தனக்காக்க வல்ல
பெருமான் திருமா லதுவன் றியும்முன்,
தெழித்திட் டெழுந்தே எதிர்நின்று மன்னன்
சினத்தோள் அவையா யிரமும் மழுவால்
அழித்திட் டவன்காண்மின் இன்றாய்ச் சியரால்
அளைவெண்ணெ யுண்டாப் புண்டிருந் தவனே. 1903

Koviloor Digital Library

நீதிநெறி நூல்கள் என்னும் அறநூல்களினால் ஒதுக்கி வைத்துள்ள சிற்றின்பம் என்னும் அற்பப் பலன்களை அறவே வேண்டாம் என்று ஒதுக்கி வைத்துவிட்டு, எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பணிந்து அவன் திருவடிகளை வணங்குகின்ற அடியவர்களின் துன்பங்கள் அனைத்தையும் ஒழித்துவிட்டு, அருள்புரிந்து அவர்களைத் தன் அடியார்களாக ஆக்கிக் கொண்டான். அதற்கும் மேலாகப் பரசுராமராக அவதாரம் மேற்கொண்டு வந்த அந்த எம்பெருமானே, முன்பு பெரிய ஆரவாரத்துடன் தன் மார்பினைத் தட்டிய அளவிலே போர்புரிதல் வேண்டிக் கிளர்ச்சியுடன் எதிரே வந்து தோன்றிய கார்த்த வீரியார்ச் சுனன் என்னும் அரசனுடைய கோபத்துடிப்புடன் கூடிய ஆயிரம் தோள்களையும் 'மழு' என்னும் ஆயுதத்தினைக் கொண்டு அழித்தான். அத்தகைய எம்பெருமானே ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்தபோது ஆய்ச்சியரால் இன்று தயிர், வெண்ணெய் ஆகியவற்றை உண்டான் என்பதற்காக அக்கண்ணபிரான் தாம்புக் கயிற்றினால் அங்கே கட்டுண்டு கிடக்கின்றானே! இஃது என்னே ஆச்சரியம் என்று எண்ணிப் பாருங்கள்!

படைத்திட்ட திவ்வைய முய்ய முனநாள்
பணிந்தேத்த வல்லார் துயராய வெல்லாம்,
துடைத்திட் டவரைத் தனக்காக்க வென்னத்
தெளியா அரக்கர் திறல்போய் அவிய,
மிடைத்திட் டெழுந்த குரங்கைப் படையா
விலங்கல் புகப்பாய்ச்சி விம்ம, கடலை
அடைத்திட் டவன்காண்மின் இன்றாய்ச் சியரால்
அளைவெண்ணெ யுண்டாப் புண்டிருந் தவனே. 1904

முன்பு ஒரு காலத்தில் இவ்வுலகங்களைப் படைத்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் இவ்வுலகம் நிலைபெற்றிருக்கும் பொருட்டு தன் திருவடிகளை அடைந்து பணிந்து துதிக்கின்ற ஆற்றல் பெற்ற அடியவர்களின் துன்பங்கள் யாவற்றையும் போக்கிவிட்டு அப்படிப்பட்டவர்கள் யாவரையும் தனக்கே அடிமை பூண்டொழுகும் தன்னுடைய அடியவர்களாக ஆக்கிக் கொண்டான். இதனை அறிந்து கொள்ள இயலாத நிலையிலுள்ள அரக்கர்கள் அழிந்து போகும் படியாக எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் நெருக்கிக் கொண்டு, வீறுகொண்டு எழுந்து ஓடி வருகின்ற 'வானர வீரர்கள்' என்னும் படைகளைக் கொண்டு கடல்நீரினுள்ளே சென்று சேரும்படியாக

Koviloor Digital Library

விரைவாக மலைகளைச் செலுத்திப் பரப்பியதன் வாயிலாக அணையினைக் கட்டி, அக்கடலை அடைத்தானன்றோ! அத்தகைய ஆற்றல் பெற்றுள்ள எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானே ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டு இருந்துள்ளபோது, தயிர், வெண்ணெய் ஆகியவற்றைத் திருடி உண்டதற்காக ஆய்ச்சியரின் தாம்புக் கயிற்றினால் கட்டுண்டு கிடக்கின்றான். இஃது என்னே ஆச்சரியம்!

நெறித்திட்ட மென்கூழை நன்னே ரிழையோ
டுடனாய வில்லென்ன வல்லே யதனை,
இறுத்திட் டவளின்ப மன்போ டணைந்திட்
டிளங்கொற் றவனாய்த் துளங்காத மூநீர்,
செறித்திட் டிலங்கை மலங்க அரக்கன்
செழுநீண் முடிதோ ளொடுதாள் துணிய,
அறுத்திட் டவன்காண்மின் இன்றாய்ச் சியரால்
அளைவெண்ணெ யுண்டாப் புண்டிருந் தவனே. 1905

எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் அடர்த்தியாக நெருங்கிக் கிடக்கும் மென்மையான கூந்தலைக் கொண்டும், அழகிய ஆபரணங் களை அணிந்து கொண்டும் விளங்குகின்ற தன் மனைவி சீதா பிராட்டியைத் திருமணம் செய்து கொள்ளும் பொருட்டு, அவளுடன் தோன்றிய ''சிவதனுசு'' என்னும் அரிய வில்லினை முறித்துவிட்டுத் திருமணம் செய்து கொண்டு, அவளுடன் உண்டான கலவியின் காரணமாக ஏற்பட்ட அன்புடன் கூடிய இன்பத்தினை அனுபவித்து இளவரசாக இருந்துவிட்டுப் பின்பு காட்டிற்குச் சென்றிருந்த காலத்தில், இராவணனால் அபகரித்துச் சென்று சிறைப்படுத்தி வைத்திருக்கின்ற சீதாபிராட்டியை மீட்டு வருதற் பொருட்டு அந்த இராமபிரானே கடலின்மீது அணையைக் கட்டி, இலங்கை கலங்கும் படியாக அந்த இராவணனுடைய வளமிக்க பத்துத் தலைகளும், தோள்களும், தாள்களும் துண்டு துண்டுகளாகப் போகுமாறு துணிந்து ஒழித்தவன் அன்றோ இன்று ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் தயிர், வெண்ணெய் ஆகியவற்றைத் திருடி உண்டதன் காரணமாக ஆய்ச்சியரால் தாம்புக் கயிற்றினால் கட்டுண்டு கிடக்கின்றான். இஃது என்னே ஆச்சரியம்.

சுரிந்திட்ட செங்கேழ் உளைப்பொங் கரிமாத்
தொலையப் பிரியாது சென்றெய்தி, எய்தா
திரிந்திட் டிடங்கொண் டடங்காத தன்வாய்
இருகூறு செய்த பெருமான் முனநாள்,

Koviloor Digital Library

வரிந்திட்ட வில்லால் மரமேழு மெய்து
மலைபோ லுருவத் தொரிராக் கதிமூக்கு,
அரிந்திட் டவன்காண்மின் இன்றாய்ச் சியரால்
அளைவெண்ணெ யுண்டாப் புண்டிருந் தவனே. 1906

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் சுருண்டு சிவந்த நிறத்துடன் கூடிய பிடரிமயிர்களைக் கொண்டுள்ள குதிரை வடிவில் வந்திருந்த 'கேசி' என்னும் அசுரனிடம் சென்று, எவ்வகையிலும் அவன் தப்பித்துச் செல்ல முடியாதபடி அவனை மடக்கி, எளிதில் தன் அருகில் வராமல் திரிந்து கொண்டிருந்த அந்தக் குதிரையின் வாயினை இருபிளவாகப் பிளந்து அவனை அழித்து ஒழித்தான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீ இராமபிரானாகத் திருஅவதாரம் மேற்கொண்டிருந்த போது, மராமரங்கள் ஏழினையும் தன் வில்லை வளைத்துத் துளைத்தான். மலையைப் போன்று பருத்த வடிவு கொண்டுள்ள ''சூர்ப்பணகை'' என்னும் அரக்கியின் மூக்கினை அறுத்தான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் அவதாரம் மேற் கொண்டிருந்தபோது, தயிர், வெண்ணெய் ஆகியவற்றைத் திருடி உண்டதன்பொருட்டு இன்று ஆய்ச்சியரால் தாம்புக் கயிற்றினால் கட்டுண்டு கிடக்கின்றான். இஃது என்னே ஆச்சரியம்!

*நின்றார் முகப்புச் சிறிதும் நினையான்
வயிற்றை நிறைப்பா னுறிப்பால் தயிர்நெய்,
அன்றாய்ச் சியர்வெண்ணெய் விழுங்கி யுரலோ
டாப்புண் டிருந்த பெருமான் அடிமேல்,
நன்றாய தொல்சீர் வயல்மங் கையர்கோன்
கலிய னொலிசெய் தமிழ்மாலை வல்லார்,
என்றானும் எய்தா ரிடரின்ப மெய்தி
இமையோர்க்கு மப்பால் செலவெய் துவாரே. 1907

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் தன்னைக் காண்பதன் பொருட்டுத் தன் எதிரே 'வெட்கப்படுதல்' என்ற ஒன்று இல்லாத வராகி நின்று கொண்டு தன் வயிற்றினை நிறைத்துக் கொள்ளும் பொருட்டு, ஆய்ச்சியர்கள் உறிகளில் வைத்திருந்த தயிர், பால், வெண்ணெய், நெய் போன்றவைகளைத் திருடித் திருவமுது செய்ததன் காரணமாக அந்த ஆய்ச்சியர்களால் உரலோடு கட்டுண்டு கிடந்தான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் திருவடிகளின்மீது எக்காலத்திலும் நன்றானதாகிய ஸ்ரீவைணவ ஸ்ரீயை உடையவராகக் கொண்டு, திருமங்கை நாட்டிற்குத் தலைவராகத்

Koviloor Digital Library

திகழும் 'கலியன்' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலியுடன் கூடிய தமிழ் மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் கற்றுவல்லவர்களாகத் திகழ்பவர்கள் எக்காலத்திலும் எவ்விதத் துன்பங்களும் அடையப் பெறாதவர்களாக இருப்பவர்களாவர். இதற்கும் மேலாகத் தேவர்கட்கும் கிடைத்தற்கரியதாகிய ''திருப்பரம பதம்'' அடையும் பேறு பெறுவர்.

7. மானமுடைத்து

ஆய்ச்சியர் கண்ணனைக் குறித்து முறையிடல்

எழுசீர் ஆசிரிய விருத்தம்

*மான முடைத்துங்க ளாயர் குலமத
　　னால்பிறர் மக்கள் தம்மை
ஊன முடையன செய்யப் பெறாயென்
　　றிரப்ப னுரப்ப கில்லேன்
நானு முரைத்திலேன் நந்தன் பணித்திலன்
　　நங்கைகாள்! நானென் செய்கேன்?,
தானுமோர் கன்னியும் கீழை யகத்துத்
　　தயிர்கடை கின்றான் போலும்! 1908

நங்கையர்களே! உங்கள் இடைக்குலமானது மிகவும் மானத்துடன் வாழக்கூடிய பெருமையினையுடையது. ஆகையினால், பிறர் வீட்டுப் பெண்களிடம், ''இழிவான செயல்களைச் செய்யலாகாது'' என்று கண்ணன் கால்களைப் பிடித்தவாறு வேண்டிக் கொள்வேனேயன்றி, அவனை அதட்டி மிரட்டக் கூடிய வகையில் நான் ஏதும் சொல்லி அறியேன். வேறு வகையிலும் ஏதும் எடுத்துரைத்ததில்லை. தந்தை நந்தகோபரும் ஒன்றும் எடுத்துக் கூறமாட்டார். இந்நிலையில் என் மகன் ஸ்ரீகண்ணபிரானோ ஓர் இளம்பெண்ணுடன் கீழை வீட்டில் தயிர் கடைந்து கொண்டு இருப்பதுபோலத் தெரிகிறது. இத்தகைய செயலைச் செய்து கொண்டு இருப்பதற்கு நான் என்ன செய்வேன்! என்று அசோதை கூறினாள்.

காலை யெழுந்து கடைந்தவிம் மோர்விற்கப்
　　போகின்றேன் கண்டே போனேன்,
மாலை நறுங்குஞ்சி நந்தன் மகனல்லால்
　　மற்றுவந் தாரு மில்லை,

Koviloor Digital Library

மேலை யகத்துநங் காய்!வந்து காண்மின்கள்
வெண்ணெயே யன்று, இருந்த
பாலும் பதின்குடம் கண்டிலேன் பாவியேன்
என்செய்கேன் என்செய் கேனோ! 1909

மேலையகத்துப் பெண்டிராகிய அசோதைப்பிராட்டியே! நான் விடியற்காலை எழுந்து கடைந்தெடுத்த மோரினை விற்பதற்காகத் தெருவில் சென்றபோது, எதிரே வந்து கொண்டிருந்த கண்ணபிரானைக் கண்ட அளவிலேயே அஞ்சித் திடுக்கிட்டேன். நந்தகோபனின் மகனாகிய மாலையைச் சூடிக் கொண்டிருக்கின்ற முடியினையுடைய கண்ணபிரானைத் தவிர வேறு எவரும் என் வீட்டினுள்ளே புகுந்ததில்லை. இக்கண்ணபிரான் எங்கள் வீட்டினுள்ளே புகுந்து நான் கடைந்து வைத்திருந்த வெண்ணெயை உண்டது மட்டுமன்றி, இனிமேலும் கடைவதற்கு என்று சேமித்து வைத்திருந்த பத்துக் குடங்களிலிருந்த பாலையும் காணவில்லை. பாவியேன் என்ன செய்வேன் என்ன செய்வேனோ! என்று புலம்புகிறாள்.

தெள்ளிய வாய்ச்சிறி யான்நங்கை காள்!உறி
மேலைத் தடாநி றைந்த,
வெள்ளி மலையிருந் தாலொத்த வெண்ணெயை
வாரி விழுங்கி யிட்டு,
கள்வ னுறங்குகின் றான்வந்து காண்மின்கள்
கையெல் லாம்நெய், வயிறு
பிள்ளை பரமன்றுஇவ் வேழுல கும்கொள்ளும்
பேதையேன் என்செய் கேனோ! 1910

நங்கைமார்களே! தெளிந்த திருப்பவளத்தினை ஒத்த திருவாயினை உடைய இச்சிறுபிள்ளையாகிய இக்கண்ணபிரான் உறியின்மீதுள்ள பானையில் நிறையுமாறு வைத்திருந்த வெள்ளி மலை போன்ற வெண்ணெய் முழுவதையும் வாரி விழுங்கிவிட்டுக் கள்ளத்தனமாக உறங்கிக் கொண்டு இருப்பதை இங்கே வந்து பாருங்கள்! இவன் கை முழுவதும் நெய் மயமாக இருப்பதைப் பாருங்கள்! இவனுடைய வயிறோ பிள்ளைப் பருவத்திற்கேற்றதாக இல்லாமல் இருப்பதையும் வந்து பாருங்கள்! இப்பிள்ளையின் இச்சிறு வயிறானது இந்த ஏழு உலகங்களையும் எஏற்றுக் கொள்ளும் அளவிற்கு ஏற்றமுடையது. இதன் பொருட்டுப் பேதையேனாகிய நான் என்ன செய்வேனோ! அறியேன்.

Koviloor Digital Library

மைந்நம்பு வேல்கண்நல் லாள்முன்னம் பெற்ற
வளைவண்ண நன்மா மேனி,
தன்நம்பி நம்பியு மிங்கு வளர்ந்தது
அவனி வைசெய் தறியான்,
பொய்ந்நம்பி புள்ளுவன் கள்வம் பொதியறை
போகின்ற வாதவழ்ந் திட்டு,
இந்நம்பி நம்பியா ஆய்ச்சியர்க் குய்வில்லை
என்செய்கேன் என்செய் கேனோ! 1911

மை தீட்டப்பெற்ற வேல் போன்று நீண்ட கூர்மையான கண்களைக் கொண்டுள்ள நற்குணங்களையுடைய, உரோகிணி என்பவளுக்கு (வசுதேவ பத்தினிகளுள் தேவகியின் கர்ப்பத்தில் ஆறுமாதமும், உரோகிணியின் கர்ப்பத்தில் மற்றோர் ஆறுமாதமுமாக இருந்து பிறந்தவன் பலராமன் என்பர்) சங்கு போன்று வெண்ணிறம் கொண்ட சிறந்த திருமேனியுடன் கண்ணபிரானுக்கு முன்பு பலராமன் தோன்றி இந்தத் திருவாய்ப் பாடியில்தான் வளர்ந்தான். இந்தப் பலராமன் இத்தகைய தீம்புகளை இன்றளவும் செய்ததில்லை. ஆனால், இந்தக் கண்ணபிரானோ பொய்மையையே வடிவெடுத்த வனாகி, கள்ளத்தனமே உள்ளத்தில் நிறைந்துள்ளவனாகியிருந்து கொண்டு ஏதும் அறியாதவன் போன்று நல்லவனாகத் தவழ்நடை கற்றுப் போகிறபடிதான் என்னே! இந்த நம்பியாகிய கண்ணபிரான் தீம்புகள் செய்வதில் குறைவற்ற நிலையில் இருக்கின்ற காரணத் தினால் இங்குள்ள ஆய்ச்சியர்கட்கு இனியும் உய்வதற்கு வழி யில்லை. அதனால் இனி நான் என் செய்வேன்! என்ன செய்வேனோ!

தந்தை புகுந்திலன் நானிங்கி ருந்திலேன்
தோழிமா ராரு மில்லை,
சந்த மலர்க்குழ லாள்தனி யேவிளை
யாடு மிடம்கு றுகி,
பந்து பறித்துத் துகில்பற்றிக் கீறிப்
படிறன் படிறு செய்யும்,
நந்தன் மதலைக்கிங் கென்கட வோம்?நங்காய்!
என்செய்கேன் என்செய் கேனோ! 1912

அசோதைப் பிராட்டியே! இப்பெண்ணின் தந்தையாரோ வீட்டிற்கு வந்து சேரவில்லை. தாயாகிய நானும் வீட்டில் இல்லை. தோழியர் ஒருவர் கூட இவளுடன் இல்லை. மணம்மிக்க மலர்களை அணிந்து கொண்டிருக்கின்ற என் மகளோ ஒருவர் துணையுமின்றி

Koviloor Digital Library

தன்னந் தனியளாக விளையாடிக் கொண்டிருந்த சமயமறிந்து இக்கண்ணபிரான் அவள் இருக்குமிடம் சென்றிருக்கிறான். அங்கு அவள் கையிலிருந்த பந்தைப் பறித்துக் கொண்டும், அவள் உடுத்தியிருக்கின்ற உடையைப் பற்றி, இழுத்துக் கிழித்தும் பற்பல தீம்புகளைச் செய்து கொண்டு இருக்கின்றான். இத்தகைய தகாத செயல்களைச் செய்து கொண்டிருக்கின்ற நந்தகோபரின் மகன் கண்ணபிரான் ஆயிற்றே. இவன் பொருட்டு நான் என்ன செய்வேன். நாங்கள் யாது செய்யக் கடவோம்! என் செய்கேனோ!

மண்மகள் கேள்வன் மலர்மங்கை நாயகன்
நந்தன் பெற்ற மதலை,
அண்ணல் இலைக்குழ லூதிநம் சேரிக்கே
அல்லிற் றான்வந்த பின்னை,
கண்மலர் சோர்ந்து முலைவந்து விம்மிக்
கமலச் செவ்வாய்வெ ளுப்ப,
என்மகள் வண்ண மிருக்கின்ற வாநங்காய்!
என்செய்கேன் என்செய் கேனோ! 1913

அசோதைப்பிராட்டியே! பூமிப்பிராட்டிக்குக்கணவனாகவும், தாமரை மலரில்வீற்றிருக்கும்திருமகளுக்கு நாயகனாகவும் திகழும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் நந்தகோபரின் மகனாகத் திருஅவதாரம் மேற்கொண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் இரவு நேரத்தில் இலையினாலான ஊதுகுழலினை ஊதிக் கொண்டே நம்சேரிக்கு வந்தான். இதன்காரணமாக அன்று என் மகள் பட்டபாடு, தெரியுமா? அவளுடைய குவளை மலர் போன்ற கண்கள் வாட்டமுற்றும், அவளுடைய முலைகள் கிளர்ந்து எழுந்தும், தாமரை போன்று சிவந்த வாய் வெளுத்துப் போகும்படி யாகவும், அவளின் வடிவு வேறுபட்டிருக்குமாறு 'பசலை' நிறம் உண்டாகுமாறு மாறிவிட்டாள். இப்படி இருக்கின்ற இந்நிலை பற்றி என்ன சொல்வேன். இதற்கு நான் என் செய்கேன் என் செய்கேனோ!

ஆயிரம் கண்ணுடை இந்திர னாருக்கென்
றாயர் விழவெ டுப்ப,
பாசன நல்லன பண்டிக ளால்புகப்
பெய்த அதனை யெல்லாம்,
போயிருந் தங்கொரு பூத வடிவுகொண்
டுன்மக னின்று நங்காய்,
மாயன் அதனையெல்லாம்முற்ற வாரி
வளைத்துண் டிருந்தான் போலும்! 1914

Koviloor Digital Library

அசோதைப்பிராட்டியே! முன்பு ஒரு காலத்தில் ஆயிரம் கண்களைப் பெற்றுள்ள தேவேந்திரனுக்காக ஆயர்கள் விழா எடுத்தபோது உணவுப் பொருள்கள் அடங்கிய பாத்திரங்களைப் பற்பல வண்டிகளில் கொண்டு சேர்த்துவிட, அவ்வளவு உணவுப் பொருள்களையும் அங்கு வந்து, மாயச் செயல்களில் வல்லவரான எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் பூதவடிவு மேற்கொண்டு தம் திருக்கரங்களால் முழுவதுமாக வாரி உண்டு, கொண்ட இச்செயல் என்னே ஆச்சரியம்! ஆயினும் இவன் ஒன்றுமறியாத மற்றவர்களைப் போலவே நின்றானே!

தோய்த்த தயிரும் நறுநெய்யும் பாலுமோர்
 ஓர்குடம் துற்றிடு மென்று,
ஆய்ச்சியர் கூடி யழைக்கவும் நானிதற்
 கெள்கி யிவனை நங்காய்,
'சோத்தம் பிரான்!இவை செய்யப் பெறாய்!'என்
 றிரப்பன் உரப்ப கில்லேன்,
பேய்ச்சி முலையுண்ட பின்னையிப் பிள்ளையைப்
 பேசுவ தஞ்சு வேனே! 1915

அசோதைப்பிராட்டியே! ஆய்ச்சியர்கள் எல்லாரும் ஒன்று கூடி, என்னை அழைத்து, அவர்கள் தோய்த்து வைத்திருந்த தயிர், உருக்கி வைத்திருந்த நெய், பால் ஆகியவற்றை உன் மகன் கண்ணன் ஒவ்வொரு தடாவிலிருந்தும் எடுத்து உண்டுவிடுவான் என்று முறையிட்டனர். இதனை அறிந்த நான் உன் பிள்ளையை நோக்கி, ''கண்ணா! உன்னை வணங்கிக் கேட்டுக் கொள்கிறேன். இனி இப்படிப்பட்ட தீம்புகளைச் செய்ய வேண்டாம்'' என்று வேண்டிக் கொண்டேன். அஃதன்றி அவன்மீது கோபமாகப் பேசமாட்டேன். 'பூதனை' என்னும் பேயின் முலைப்பாலை உறிஞ்சி உண்டது முதற் கொண்டு இந்தக் கண்ணபிரானைக் கடிந்து ஏதேனும் ஒரு வார்த்தையைக் கூறுதவற்குக் கூட நான் அஞ்சியவாறு அமைதியாக இருக்கின்றேன்.

ஈடும் வலியும் உடையவிந் நம்பி
 பிறந்த ஏழு திங்களில்,
ஏடலர் கண்ணியி னானை வளர்த்தி
 யமுனை நீராடப் போனேன்,

Koviloor Digital Library

சேடன் திருமறு மார்வன் கிடந்து
திருவடி யால்,மலை போல
ஓடும் சகடத்தைச் சாடிய பின்னை
உரப்புவ தஞ்சு வேனே! 1916

உடல்பலத்துடன் கூடிய வல்லமை மிக்க நம்பியான என் மகன் கண்ணன் பிறந்த ஏழாம் மாதத்தில் நீராட்டிவிட்டு பூச்சூட்டித் திருக்கண் வளரச் செய்து வைத்துவிட்டு, நான் நீராடி விட்டு வருதற் பொருட்டு யமுனை நதிக்குச் சென்றேன். அப்போது அங்கு நடந்தது என்ன தெரியுமா? இளம்பிள்ளையாகிய இக்கண்ணபிரான் பிராட்டி யாரையும், ஸ்ரீவத்ஸத்தினையும் தன் திருமார்பினில் கொண்டுள்ள வனாகி, மலையினைப் போன்று உருண்டு ஓடிவந்து கொண்டிருந்த, சக்கரவடிவில் ஊர்ந்து கொண்டு வந்த சகடாசுரன் என்னும் அசுரனைத் திருவடிகளால் உதைத்து, முறித்து அழித்தான். இத்தகைய வீரதீரச் செயலை என் மகன் கண்ணபிரான்மீது கோபம் கொண்டு பேசுவதற்கு அஞ்சிக் கொண்டிருக்கின்றேனே! இந்நிலையில் யான் என் செய்வேன்!

அஞ்சுவன் சொல்லி யழைத்திட நங்கைகாள்!
ஆயிர நாழி நெய்யைப்,
பஞ்சியல் மெல்லடிப் பிள்ளைக ளுண்கின்ற
பாகந் தான்வை யார்களே,
கஞ்சன் கடியன் கறவெட்டு நாளில்
என்கை வலத்தாது மில்லை,
நெஞ்சத் திருப்பன செய்துவைத் தாய்நம்பீ!
என்செய்கே னென்செய் கேனோ! 1917

நங்கைகளே! என் மகன் கண்ணன் செய்த தீம்புகளை எல்லாம் எடுத்துச் சொல்லி, அழைப்பதற்கு அஞ்சுகின்றேன். கண்ணபிரானே! பஞ்சினையொத்த மென்மையான பாதங்களைக் கொண்ட பல குழந்தைகள் உண்பதன் பொருட்டு ஆயிரம் நாழியளவு நிறைத்து வைத்திருந்த நெய்யை உண்டபோது பாதிகூட மீதி வைக்காமல் உண்டுவிட்டாயே! இந்நிலையில் கம்சனோ மிகக் கொடியவனாக இருக்கின்றான். அவனுக்குச் செலுத்த வேண்டிய கப்பத்தினை இன்னமும் எட்டு நாளில் கட்டிவிட வேண்டும். அவ்வாறு கப்பம் கட்டுவதற்கு என் கையில் ஒன்றுமில்லை. கண்ணபிரானே! நீ என் நெஞ்சு புண்படும்படியாக இப்படிச் செய்துவிட்டாயே! இந்நிலை யில் நான் என்ன செய்வேன்? என்ன செய்வேனோ!

Koviloor Digital Library

அங்ஙனம் தீமைகள் செய்வர்க ளோநம்பீ!
ஆயர் மடமக் களைப்,
பங்கய நீர்குடைந் தாடுகின் றார்கள்
பின்னே சென்றொளித் திருந்து,
அங்கவர் பூந்துகில் வாரிக்கொண் டிட்-
டரவேரி டையா ரிரப்ப,
'மங்கைநல் லீர்!வந்து கொண்மின்' என் றுமரம்
ஏறி யிருந்தாய் போலும்! 1918

ஸ்ரீகண்ணபிரானே! ஆயர்கட்கு அன்பாகவும், அடக்கமாகவும் நடந்து கொண்டிருக்கும் ஆய்க்குலத்து இளம்பெண்களினிடத்தே நீ சென்று தீம்புகளைச் செய்யலாமா? அந்த இளம்பெண்கள் அழகிய தாமரை மலர்கள் நிறைந்த குளத்தில் நீராடச் சென்றிருந்தபோது, அவர்கள் அறியாதவாறு அவர்களின் பின்னே சென்று மறைவாக ஒளித்துக் கொண்டிருந்து, அவர்கள் நீராடுகையில் அவர்களின் பூப்போன்று மென்மையான ஆடைகளை வாரிக்கொண்டு, கவர்ந்து சென்று, குருந்த மரத்தின்மீது ஏறி அமர்ந்து மறைத்துக் கொண்டிருந்த இச்செயலைச் செய்யலாமோ? இத்தகைய நிலையில் பாம்பு போன்ற நுண்ணிய இடையையுடைய அப்பெண்கள் அந்த ஆடைகளை அளித்துதவுமாறு உன்னிடம் வேண்டிக் கொண்டபோது, நீயோ அவர்களை நோக்கி, ''அழகிய நல்ல பெண்களே! உங்கள் ஆடைகளை நான் இருக்கும் இவ்விடத்திற்கு வந்து பெற்றுக் கொள்ளுங்கள்'' என்று கூறி அம்மரத்தின் உச்சியின்மீது ஏறி இருந்தாயாமே!'' இஃது உனக்குச் சரியானதோ?

அச்சம் தினைத்தனை யில்லையிப் பிள்ளைக்
காண்மை யும்சே வகமும்,
உச்சியில் முத்தி வளர்த்தெடுத் தேனுக்
குரைத்திலன் தானின் றுபோய்,
பச்சிலைப் பூங்கடம் பேறி விசைகொண்டு
பாய்ந்து புக்கு,ஆ யிரவாய்
நச்சழல் பொய்கையில் நாகத்தி னோடு
பிணங்கிநீ வந்தாய் போலும்! 1919

என் மகன் கண்ணபிரானுக்கு அச்சம் என்பது சிறிதளவு கூட இல்லை. அவனுக்கு ஆண்மையும் வீரியமும் அதிக அளவில் நிறைந்திருக்கின்றன. இத்தகைய குணங்களைக் கொண்டுள்ள இக்கண்ண பிரானை உச்சிமோந்து இனிதே வளர்த்தெடுத்த தாயாகிய எனக்கும் ஏதும்

Koviloor Digital Library

கூறாமல் வெளியில் சென்று விடுகிறான். இவ்வாறே இன்று எனக்குத் தெரியாமலேயே சென்று பசுமையான இலைகள் நிறைந்துள்ள பூக்கள் பூத்திருக்கின்ற கடம்ப மரத்தின்மீது ஏறி, மிகுந்த வேகத்துடன் காளியன் என்னும் ஆயிரம் தலைகளைக் கொண்ட நாகம் வசித்து வருகின்ற குளத்தில் குதித்து, அதன் ஆயிரம் வாய்களாலும் நஞ்சினைக் கக்கிக் கொண்டிருக்கின்ற அந்த நாகத்துடன் மாறுபட்டவாறு போரிட்டு, அதன்மீது ஏறி, நடனமாடி அதனை அழித்துவிட்டு வந்தனையோ!

தம்பர மல்லன ஆண்மைக ளைத்தனி
யேநின்று தாம்செய் வாரோ?,
எம்பெரு மான்!உன்னைப் பெற்ற வயிறுடை
யேனினி யானென் செய்கேன்?,
அம்பர மேழும் அதிரும் இடிகுரல்
அங்கணற் செங்க ணுடைய,
வம்பவிழ் கானத்து மால்விடை யோடு
பிணங்கிநீ வந்தாய் போலும்! 1920

எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரானே! தம்மால் செய்து முடித்தற்கு இயலாத ஆண்மை மிக்க வீரதீரச் செயல்களை தன்னந்தனியனாகத் தான் ஒருவரே இருந்து செய்வதென்பது உனக்கு ஆபத்தை உண்டாக்கிவிடுமே! ஆகையால் உன்னைப் பெற்றெடுத்த என் வயிறு கலங்கிப் போகுமாறு எதனையும் செய்துவிட வேண்டாம். எப்படியும் நான் இவ்வாறு செய்வேன் என்று எண்ணிச் செய்தால் என்னால் என்ன செய்துவிட முடியும்! இந்த ஏழு உலகங்களும் அதிரும்படியாகக் கனத்த குரலையும், நெருப்புப் போன்ற சிவந்த கண்களையும் கொண்டுள்ள கரிய எருதுகளுடன் மணம்வீசும் சோலையில் நின்று நீ போரிட்டு வந்திருக்கிறாய் என்று தெரிகிறதே. நீ இப்படிச் செய்யலாகுமோ!

*அன்ன நடைமட ஆய்ச்சி வயிறடித்
தஞ்ச அருவரை போல,
மன்னு கருங்களிற் றாருயிர் வவ்விய
மைந்தனை, மாக டல்சூழ்,
கன்னிநன் மாமதிள் மங்கையர் காவலன்
காமரு சீர்க்கலி கன்றி,
இன்னிசை மாலைக ளீரேழும் வல்லவர்க்
கேது மிடரில் லையே. 1921

Koviloor Digital Library

அன்னத்தை ஒத்த நடையும், மடப்ப குணத்தினையும் கொண்டுள்ள அசோதைப் பிராட்டியார் தம் வயிற்றில் அடித்துக் கொண்டு அஞ்சும்படியான, அரிய பெரிய மலையினைப் போன்று அந்த இடத்தைவிட்டு நகராமல் அங்கேயே நின்று கொண்டிருக்கும் கருமை நிறமுடைய 'குவலயாபீடம்' என்னும் ஆண்யானை யினுடைய உயிரைப் போக்கியருளிய மிடுக்கை உடைய எம் பெருமான் ஸ்ரீகண்ணபிரானைப் பற்றிப் பெரிய கடலினால் சூழ்ந்திருக்கும், உயரமான பெரிய மதிள்களுடன் கூடிய 'திருமங்கை' என்னும் நாட்டிற்கு அரசனாக இருந்து, அனைவராலும் விரும்பக் கூடிய திருக்குணங்களைப் பெற்றிருக்கின்ற, சிறப்புகள் மிக்க 'கலியன்' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இனிய இசையுடன் கூடி அமைந்துள்ள சொல்மாலைகளாகிய இப் பதினான்கு பாசுரங்களையும் ஓதக்கூடிய வல்லமையினை உடையவர்களுக்குத் துன்பம் என்பது எதுவும் இல்லாமல் ஆகிவிடும்.

8. காதில் கடிப்பு

ஆய்ச்சியின் ஊடல் திறம்

கலிவிருத்தம்

*காதில் கடிப்பிட்டுக் கலிங்க முடுத்து,

தாதுநல் லதண்ணந் துழாய்கொ டணிந்து,

போது மறுத்துப் புறமேவந் துநின்றீர்,

ஏதுக்கிது என்னிது என்னிது என்னோ! 1922

காதில் 'குண்டலம்' என்னும் ஆபரணத்தினை அணிந்து கொண்டும், திருப்பரிவட்டத்தினை உடுத்திக் கொண்டும், மகரந்தத் தாதுக்களை உடைய மலர்கள் நிரம்பிய குளிர்ந்த அழகிய திருத்துழாய் மாலையைத் தலையில் சூடிக்கொண்டும், வந்திருக்கின்ற எம் பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! நீர் வருவதாகச் சொன்ன காலத்தினைக் கடந்து இங்கே வந்திருப்பது ஏன்? அந்த அளவில் காலதாமதமாக வந்த பின்பு எதற்காக எனக்குப் பின்புறமாக வந்து நிற்கிறீர்? எதற்கு, இத்தகைய ஒளிவுமறைவு? எதற்காக இவ்வாறு செய்வது? இஃதென்ன? இஃதென்னவாறோ!

Koviloor Digital Library

துவரா டையுடுத் தொருசெண்டு சிலுப்பி,
கவராக முடித்துக் கலிக்கச்சுக் கட்டி,
சுவரார் கதவின் புறமேவந்து நின்றீர்,
இவரா ரிதுவென் னிதுவென் னிதுவென்னோ! 1923

சிவப்பு நிறம் கொண்ட திருப்பரிவட்டத்தினை உடுத்திக் கொண்டு, ஒரு பூச்செண்டினைக் கையில் எடுத்துக்கொண்டு, தலைமுடியினைச் சீராக வாரி முடித்துக் கொண்டு திருவரையில் கச்சுப் பட்டையைக் கட்டிக் கொண்டு, சுவற்றினை ஒட்டிய கதவுடன் ஒட்டிக் கொண்டவாறு ஒருபுறமாக வந்து நிற்கின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! இப்படி ஒருபுறமாக வந்து நிற்கின்ற நீர் யார் என்று அறிய இயலாமல் இருப்பதால் இவர் யாரோ? என்று எண்ணலாம் போலிருக்கின்றதே! இஃது என்னே! இஃது என்னே! இஃது என்ன முறைமையோ!

கருளக் கொடியொன் றுடையீர்! தனிப்பாகீர்,
உருளச் சகடம துறக்கில் நிமிர்த்தீர்,
மருளைக் கொடுபாடி வந்தில்லம் புகுந்தீர்,
இருளத் திதுவென் னிதுவென் னிதுவென்னோ! 1924

கருடக் கொடியினைக் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரானே! அக்கருடாழ்வான்மீது ஏறி நன்கு சவாரி செய்யக் கூடிய வல்லமை பெற்றவரே! நீர் சிறுகுழவியாகத் தொட்டிலில் உறங்கிக் கொண்டிருந்தபோது, கம்சனால் சக்கர வடிவில் ஏவப்பட்டுள்ள சகடாசுரன் என்னும் அசுரன்மீது தன் திருவடிகளைத் தூக்கித் தாக்கி அவனைத் தூளாக்கி அழித்தீர்! இத்தகைய வீரதீரச் செயல்களைப் புரிந்து கொண்டிருக்கின்ற நீர் இந்த இரவுப் போதினிலே இளம் பெண்ணாக இருக்கின்ற என்னை மயங்கச் செய்யும்படியாக இசையுடன் கூடிய பாடலைப் பாடிக் கொண்டே என் வீட்டினுள்ளே வந்து புகுந்திருக்கிறீரே! இஃதென்னே! இஃதென்ன தன்மைத்தோ! இஃதென்ன முறைமையோ!

நாமம் பலவு முடைநா ரணநம்பீ,
தாமத் துளவம் மிகநா றிடுகின்றீர்,
காம னெனப்பாடி வந்தில்லம் புகுந்தீர்,
ஏமத் திதுவென் னிதுவென் னிதுவென்னோ! 1925

ஒவ்வொரு இடத்திற்கேற்றவாறு ஒவ்வொரு திருநாமம் என்று பற்பல திருநாமங்களைக் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீமந்

Koviloor Digital Library

நாராயணன் என்னும் நம்பியே! நறுமணம் வீசுகின்ற திருத்துழாய் மாலையை அணிந்து கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனே! நீர் மன்மதனோ என்று எண்ணும்படியாக இந்த இரவுப் போதிலே இசையுடன் கூடிய பாடல்களைப் பாடிக் கொண்டே வந்து என் வீட்டினுள்ளே எப்போதும் இருக்கின்ற காவலையும் கடந்து வந்து புகுந்திருக்கிறீரே! இஃதென்ன காரியம்! இஃது தகுதியோ? இஃதென்னோ!

சுற்றும் குழல்தாழச் சுரிகை யணைத்து,
மற்றும் பலமாமணி பொன்கொ டணிந்து,
முற்றம் புகுந்து முறுவல்செய்து நின்றீர்,
எற்றுக் கிதுவென் னிதுவென் னிதுவென்னோ! 1926

திருக்குழல்களானவை பிடரியைச் சுற்றிலும் தாழ்ந்திருக்கும் நிலையில் அலை அலையாக அலைந்து கொண்டிருக்கும் அழகுதான் என்னே! என்று எண்ணும்படியாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! உடைவாளைத் தரித்துக் கொண்டும், பலவகை மணிகளாலான அணிகலன்களையும் பொன்னாலான அணிகலன் களையும் அணிந்து கொண்டிருக்கின்றீர்! எங்கள் வீட்டின் முற்றத் தினுள்ளே வந்து புகுந்தது மட்டுமன்றி புன்முறுவல் செய்து கொண்டும் நின்று கொண்டிருப்பதன் காரணம் தான் என்னவோ? எதற்காக இங்கே வந்திருக்கிறீர்? என்ன இது? என்ன இது? இஃது என்னவோ!

ஆனா யரும்ஆ னிரையுமங் கொழியக்,
கூனாய தோர்கொற்ற வில்லொன்று கையேந்திப்,
போனா ரிருந்தா ரையும்பார்த்துப் புகுதீர்,
ஏனோர்கள் முன்னென் னிதுவென் னிதுவென்னோ! 1927

பசுக்கூட்டங்களை மேய்த்துப் பாதுகாத்து வரும் ஆயர்குலப் பிள்ளைகளையும், பசுக்கூட்டங்களையும் இங்கே இல்லாமல் வேறு இடங்களில் இருக்க, அவர்களை அங்கேயே விட்டுவிட்டு, இங்கே வளைந்த வில்லைக் கையில் ஏந்திக் கொண்டு இங்கே வந்திருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! நீர் இங்கு வந்து நின்று கொண்டு, இங்கே வருவோர் போவோரை எல்லாம் பார்த்துக் கொண்டிருப்பது போலப் பாசாங்கு காட்டிக் கொண்டிருக்கிறீர். மேலும் இவ்வாறு பாசாங்கு காட்டியபடியே திருட்டுத்தனமாக என் வீட்டிற்குள்

Koviloor Digital Library

புகுந்துவிட்டீர்! பகைவர்களின் முன்னே அன்றோ இவ்வாறு ஆயுதத்துடன் வந்திருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு காதலியைப் பார்க்க வருவதற்கு இப்படி ஓர் ஆயுதம் எதற்கு? வருகின்ற இடத்திற்கு ஏற்றாற்போல வரவேண்டாமோ! இஃது என்னே! இஃது என்னே! இஃது என்னோ!

மல்லே பொருத திரள்தோள் மணவாளீர,
அல்லே யறிந்தோம்நும் மனத்தின் கருத்தை,
சொல்லா தொழியீர் சொன்னபோ தினால்வாரீர,
எல்லே யிதுவென் னிதுவென் னிதுவென்னோ! 1928

மல்லர்களுடன் போரிட்டு அவர்களை அழித்த ஆற்றல் மிக்க திரண்ட உறுதியான தோள்களை உடைய அழகிய மணவாளப் பெருமானாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! உம்முடைய திருவுளக் கருத்தினை நேற்றிரவே யாம் அறிந்துள்ளோம். நேற்றிரவு வந்து சென்றபோது நீர் மீண்டும் வருகின்ற நேரத்தைக் குறிப்பிட்டுக் கூறாமலேயே சென்று விட்டீர்கள். இங்கே வருவதாகக் குறிப்பிட்ட நேரத்தில் வருவதுமில்லை. நீர் சுதந்திரராக இருக்கையில் எப்போது வேண்டுமானாலும் வரலாமே! அவ்வாறு செய்வதுமில்லை. நீர் உம்மைப்பற்றி அறிகிறீரா! அன்றி எங்களைப்பற்றி அறிந்தீரா! இஃது என்னே! இஃது என்னே! இஃது எத்தகையதோ!

புக்கா டரவம் பிடித்தாட்டும் புனிதீர்,
இக்காலங்கள் யாமுமக் கேதொன்று மல்லோம்,
தக்கார் பலர்தேவி மார்சால வுடையீர்,
எக்கே! இதுவென் னிதுவென் னிதுவென்னோ! 1929

பொய்கையினுள்ளே புகுந்து, படமெடுத்தாடுகின்ற "காளியன்" என்னும் பாம்பின்மீது நடனமாடி, அதனை அடிக்கிவிட்டீர்! புனிதனாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! இப்போதெல்லாம் உமக்கு நாங்கள் ஒரு பொருட்டாகக் கூட எண்ணுகின்ற அளவில் இருக்கவில்லை. இப்போதைய அளவில் தகுதிமிக்கவர்களாகத் திகழ்கின்ற பலரைத் தேவிமார்களாகப் பட்டங்கட்டிக் கொண்டிருக் கின்றீர்! இவ்வாறு பற்பல சாகசங்களைச் செய்து கொண்டிருக்கும் நீர் இங்கு எதற்காக வந்தீர்! நீர் இருக்கின்ற நிலைதான் என்னே! நான் இருக்கின்ற நிலைதான் என்னே! எக்குறையுமில்லாமல் இருக்கின்ற நீர் இங்கு வரலாமோ? இஃது எத்தன்மையினதாக உள்ளது?

Koviloor Digital Library

ஆடி யசைந்தாய் மடவா ரொடுநீபோய்க்
கூடிக் குரவை பிணைகோ மளப்பிள்ளாய்,
தேடித் திருமா மகள்மண் மகள் நிற்ப,
ஏடி! இதுவென் னிதுவென் னிதுவென்னோ! 1930

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! அழகிய இளம்பிள்ளாய்! நீர், பெரிய பிராட்டியாரும், பூமிப்பிராட்டியாரும் உன்னைத் தேடிக் கொண்டிருக்கின்ற அளவில், அவர்களை விட்டுவிட்டு இங்கே இருக்கின்ற இடைக்குலப் பெண்களுடன் சேர்ந்து கொண்டு, ஆடி அசைந்தவாறு குரவைக்கூத்து ஆடினாயே! ஏடி! தோழீ! இப்படிப் பட்டவரை உள்ளே புகவிட்டது யார்? எதற்காக இவர் இங்கே வந்தார்? இஃது என்னே! இஃது என்னே! இஃது என்னோ!

*அல்லிக் கமலக் கண்ணனை அங்கொராய்ச்சி
எல்லிப் பொழுதூ டியவூடல் திறத்தை,
கல்லின் மலிதோள் கலியன்சொன்ன மாலை,
சொல்லித் துதிப்பா ரவர்துக்க மிலரே. 1931

தாமரைக் கண்ணனான எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை இரவுக் காலத்தே தாம் இருக்கின்ற இடத்திற்கு வந்திருக்கிறான் என்பது அறிந்த ஆயர்குலப் பெண்ணொருத்தி பற்பலவாறு பாடியும், பேசியும் ஊடல் கொண்டிருந்த நிலைபற்றிப் பாறைகளைக் காட்டினும் வலிமைமிக்க தோள்களைக் கொண்ட ''கலியன்'' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த சொல் மாலையாகிய இப்பாசுரங்கள் பத்தினையும் பாடிப் பாடித் துதிப்பவர்கள் எவ்விதத் துன்பமுமின்றி வாழ்வார்கள்.



Koviloor Digital Library

9. புள்ளுருவாகி நற்றாய் கண்ணனை வேண்டல்

எழுசீா் ஆசிரிய விருத்தம்

*புள்ளுரு வாகி நள்ளிருள் வந்த
பூதனை மாள, இலங்கை
ஒள்ளெரி மண்டி யுண்ணப் பணித்த
ஊக்க மதனை நினைந்தோ,
கள்ளவிழ் கோதை காதலு மெங்கள்
காரிகை மாதர் கருத்தும்,
பிள்ளைதன் கையில் கிண்ணமே யொக்கப்
பேசுவ தெந்தை பிரானே! 1932

எந்தைபிரானே! எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! தேன் நிறைந்துள்ள மலர்களைச் சூடியுள்ள கூந்தலைக் கொண்டுள்ள என் மகள் உன்மீது கொண்டுள்ள காதலைப் பற்றி நீர் அறிந்திருந்தும் ஆறியிருக்கலாமோ? அழகுமிக்க அவளுடைய தோழிப் பெண்கள் எல்லாரும் சேர்ந்து என் மகள் கொண்டிருக்கும் காதல் பற்றி அறிந்து, அதனைப் பழித்துக் கொண்டிருப்பது குறித்து நீர் அறியவில்லை போலும்! இளம்பிள்ளைகள் ஒரு கிண்ணத்தினை நினைத்த அளவில் வாங்கிக் கீழே போடுவது போன்று இக்காதலையும் கருதுதல் ஆகுமோ? பறவையாகிய காக்கையின் வடிவு கொண்ட பூதனை இடிந்துபடச் செய்த எம்பிரானே! இலங்கை மாநகரினை நெருப்பில் அழியச் செய்த வல்லமை மிக்க எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானே! இத்தகைய ஆற்றல்களைப் பெற்றிருக்கின்ற நீர் என் பெண்ணைப் பற்றி எண்ணிக் கொண்டிருக்கும் எண்ணங்கள் தான் யாவையோ?

மன்றில் மலிந்து கூத்துவந் தாடி
மால்விடை யேழுமடர்ந்து, ஆயர்
அன்று நடுங்க ஆனிரை காத்த
ஆண்மைகொ லோவறி யேன்நான்,
நின்ற பிரானே! நீள்கடல் வண்ணா!
நீயிவள் தன்னைநின் கோயில்,
முன்றி லெழுந்த முருங்கையில் தேனா
முன்கை வளைகவர்ந் தாயே. 1933

Koviloor Digital Library

திருமலையில் நெடிதுயர்ந்து நின்ற திருவேங்கடப் பெருமானே! நீண்டதோர் பெருங்கடல் நிறவண்ணப் பெருமானே! நீ உன் திருக் கோயிலின் முன்புள்ள முருங்கை மரத்தின் தேனை எளிதாக அனுபவிப்பதுபோல இப்பெண்ணின் கைகளிலுள்ள வளையல் களைக் கவர்ந்து கொண்டாயே! இச்செயலின் தன்மை எத்தன்மைத்தோ எனின், மன்றத்தில் நின்று குடக்கூத்தாடிய நிலையிலும், ஏழு எருதுகளையும் அவற்றின் வலிமை அடங்கிப் போகுமாறு அடக்கிய நிலையிலும், இந்திரன் கல்மழையைப் பெருமழையாகப் பெய்வித்த போது, அங்கிருந்த ஆயர்கள் அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்த ஆயர்குல மக்களையும், ஆநிரைகளையும் கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாகப் பிடித்துப் பாதுகாத்து அருளிய நிலையிலும் நீர் கொண்ட ஆண்மையின் காரணம் தானோ என்று நான் அறியாமலிருக்கின்றேன். அன்றி வேறு என்ன காரணம் என்பதையும் நான் அறியேன்!

ஆர்மலி யாழி சங்கொடு பற்றி
ஆற்றலை யாற்றல் மிகுத்துக்,
கார்முகில் வண்ணா! கஞ்சனை முன்னம்
கடந்தநின் கடுந்திறல் தானோ,
நேரிழை மாதை நித்திலத் தொத்தை
நெடுங்கடல் அமுதனை யாளை,
ஆரெழில் வண்ணா! அங்கையில் வட்டாம்
இவளெனக் கருதுகின் றாயே. 1934

கார்மேகம் போன்ற நிறம் கொண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரானே! மிகுந்த அழகின் நிறமுடைய பெருமானே! கூர்மையான, ஆரக்கால்கள் நிரம்பிய சக்கரத்தினையும், சங்கினையும் பற்றிக் கொண்டு, ஆற்றல் மிக்கவனாகித் தோன்றிக் கம்சனை அழித்தாய். அஃதாவது கம்சனை முன்பு கால நேமியாய் இருந்தபோது வீரத்துடன் எதிர்த்துப் போரிட்டு அழித்தாய். பின்பு தனது வீரத்தைக் காட்டாமல், சங்கு சக்கரங்கள் எதையும் கொண்டிராமல் தன் ஆற்றலைத் தணித்துக் கொண்டு அக்கம்சனை அழித்தாய். அதுபோல என் மகளைப் பற்றி எளிமையாய் எண்ணிக் கொண்டிருக்கின்றாய் போலும். அழகிய ஆபரணங்களை அணிந்து கொண்டும், முத்து மாலையைப் போன்றும், பாற்கடலிலிருந்து பெற்ற தேவாமிர்தம் போன்றும் திகழ்கின்ற என் மகளைக் கையிலுள்ள கருப்புக் கட்டியைப்போல எண்ணுகின்றாயோ?அதாவது கருப்புக் கட்டியினைத் தின்னவும்

Koviloor Digital Library

செய்யலாம். அதனை வேண்டாமென்று வீசிடவும் செய்யலாம் என்பதுபோல என் மகளைப் பற்றியும் கருதிக் கொண்டிருக்கிறாயே! அவ்வாறு கருத வேண்டாம்.

மல்கிய தோளும் மானுரி யதளும்
உடையவர் தமக்குமோர் பாகம்,
நல்கிய நலமோ? நரகனைத் தொலைத்த
கரதலத் தமைதியின் கருத்தோ?
அல்லியங் கோதை யணிநிறம் கொண்டு
வந்துமுன் னேநின்று போகாய்,
சொல்லியென் நம்பி! இவளைநீ யுங்கள்
தொண்டர்கைத் தண்டென்ற வாறே. 1935

என் நம்பியே! பெரிய, பல தோள்களையும் கொண்டு, மான் தோலை ஆடையாக உடுத்திக் கொண்டிருக்கின்ற சிவபெருமானுக்குத் தன் திருமேனியில் ஒரு பகுதியைக் கொடுத்தளித்ததன் மேன்மை பொருந்திய நன்மையினைக் கருதி எண்ணிக் கொண்டிருக்கின் றாயோ? அன்றி நரகாசுரன் என்னும் அசுரனின் உயிர் போகும்படிச் செய்த உன் திருக்கரத்தின் வலிமைபற்றி எண்ணுகின்றனையோ? மாலையைச் சூட்டியதால் அழகுமிக்கிருக்கின்ற கூந்தலையுடைய இப்பெண்ணின் அழகிய மேனிநிறத்தைக் கவர்ந்திருப்பது எதற்காக? அஃதன்றியும் என் மகளாகிய இப்பெண்ணின் முன்னே அவ்வப்போது வந்து தோன்றி இவளைவிட்டு அகலாதிருக்கின்றாய்! இத்தகைய செயல் நீ இப்பெண்ணை உன் அடியவர்களின் கையிலுள்ள தடியைச் சுலபமாகப் பெறுவதுபோல எளிமையாகவோ அன்றி அலட்சியமாகவோ எண்ணிக் கொண்டு இருக்கின்றாய் போலும்! இந்த நிலையில் அடியேன் எவற்றைச் சொல்லி என்ன பயன்?

செருவழி யாத மன்னர்கள் மாளத்
தேர்வலங் கொண்டவர் செல்லும்,
அருவழி வானம் அதர்படக் கண்ட
ஆண்மைகொ லோவறி யேன்நான்,
திருமொழி யெங்கள் தேமலர்க் கோதை
சீர்மையை நினைந்திலை யந்தோ,
பெருவழி நாவற் கனியினு மெளியள்
இவளெனப் பேசுகின் றாயே. 1936

Koviloor Digital Library

முன்பு துவாபர யுகத்தில் உண்டான பாரதப் போரின்போது, போர்க்களத்தில் ஒரு நாளும் தோல்வி என்பதைக் கண்டறியாத அரசர்களும் தோற்று மாண்டு போகுமாறு செய்துவிட்டு உன் தேரின் வலிமை காரணமாக அவர்கள் சென்ற வீரசுவர்க்கத்திற்குப் பெரும்பழி உண்டாகுமாறு செய்துவிட்டாய்! இத்தகைய உம்முடைய ஆண்மைத் தன்மையை எண்ணியவாறே என் மகளையும் எளியவளாக எண்ணு கின்றாயோ? என்பது பற்றியும் அடியேன் அறியவில்லை. இனிய பேச்சுகளைப் பேசுகின்ற தன்மையைக் கொண்டிருக்கின்றீர்! தேன் நிறைந்த மலர் மாலையைச் சூடி இருக்கின்ற என் மகளின் மேன் மையைப் பற்றி நீர் அறிந்திருக்கவில்லை. அந்தோ பெருவழியில் கிடைக்கின்ற நன்கு பழுத்த நாவற்கனியின் இனிப்பைக் காட்டிலும் இவள் இனியளாகவும், எளியளாகவும் இருப்பதாக எண்ணிவிட வேண்டாம்.

அரக்கிய ராகம் புல்லென வில்லால்
அணிமதி ளிலங்கையர் கோனை,
செருக்கழித் தமரர் பணியமுன் னின்ற
சேவக மோசெய்த தின்று,
முருக்கிதழ் வாய்ச்சி முன்நகை வெண்சங்கம்
கொண்டுமுன் னேநின்று போகாய்,
எருக்கிலைக் காக எறிமழு வோச்சல்
என்செய்வ தெந்தை பிரானே! 1937

எந்தையாகிய எம்பெருமானே! முன்பு திரேதாயுகத்தில் ஸ்ரீஇராமபிரான் திருஅவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் இலங்கை மாநகரிலுள்ள அரக்கியர்களின் மார்பில் மங்கல அணிகள் இல்லாமற் போகுமாறு செய்து மதிள்கள் சூழ்ந்திருக்கின்ற இலங்கை மன்னன் இராவணனைத் தன் வில்லின் ஆற்றலினால் அவனுடைய ஆணவத்தினை அழித்து அவன் உயிரைப் போக்கியருளியது கண்ட தேவர்கள் பணிந்து முன்நிற்கின்றனரே! இதன் பொருட்டு உன் மனத்தில் தோன்றிய வீரமோ? அன்றி இத்தகைய செயல்களைப் புரிந்திருப்பதன் ஆண்மையினைப் பற்றிய எண்ணங்களோ? இப்போது என் மகளை மிகவும் எளியவனாகக் கருதுவது என்பது அலட்சியமாகக் கருதுவது போலிருக்கிறது. முருக்கம்பூப் போன்ற சிவந்த உதடுகளை உடைய இவள் கைகளிலுள்ள அழகிய வெண்மை நிறமுடைய சங்கு போன்ற வளையல்களைப் பறித்துக் கொண்டாய்.

Koviloor Digital Library

மேலும் இவள் முன்னே நின்றபடியே இருந்துகொண்டு போகாம லிருக்கிறாய். எருக்கிலைக்காகக் கோடாலியை வீசி, எடுப் பார்களோ! இதன் பொருட்டு என்ன செய்வது?

ஆழியந் திண்டேர் அரசர்வந் திறைஞ்ச
அலைகடல் உலகம்முன் ஆண்ட,
பாழியந் தோளோ ராயிரம் வீழப்
படைமழுப் பற்றிய வலியோ?,
மாழைமென் னோக்கி மணிநிறங் கொண்டு
வந்துமுன் னேநின்று போகாய்,
கோழிவெண் முட்டைக் கென்செய்வ தெந்தாய்!
குறுந்தடி நெடுங்கடல் வண்ணா! 1938

நெடிய கடலின் நிறம் கொண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரானே! எந்தையே! முன்பு ஒரு சமயம் வலிமை மிக்க சக்கரங்களைக் கொண்டிருக்கின்ற தேரைப் பெற்றிருக்கின்ற அரசர்கள் பலரும் பணிந்திருக்குமாறு கடல் சூழ்ந்த உலகினை ஆட்சிபுரிந்த கார்த்த வீரியார்ச்சுனனின் ஆயிரம் தோள்களும் இற்று விழும்படியாக உன் கோடரி என்னும் ஆயுதத்தினை ஏந்திய மிடுக்கின் தன்மையை எண்ணிப் பார்க்கின்றனையோ? மான் போன்ற மென்மையான நோக்கினையுடைய கண்களைக் கொண்ட என் மகளான இப் பெண்ணின் மேனி நிறத்தினைக் கொள்ளை கொண்டது மட்டுமன்றி உம்முடைய உருவின் வெளிப்பாட்டினாலே இவளின் கண் எதிரே தோன்றி நின்று அகலாமல் அங்கேயே இருக்கின்றாய். இயல்பாகவே உடைந்துவிடக் கூடிய கோழிமுட்டையை உடைப்பதற்கு என்று சிறிய தடியா தேடிக் கொண்டு வருவது. இத்தகைய செயலுக்கு நான் என்ன செய்வேன்?

பொருந்தலன் ஆகம் புள்ளுவந் தேற
வள்ளுகி ரால்பிளந்து, அன்று
பெருந்தகைக் கிரங்கி வாலியை முனிந்த
பெருமைகொ லோசெய்த தின்று,
பெருந்தடங் கண்ணி சுரும்புறு கோதை
பெருமையை நினைந்திலை பேசில்,
கருங்கடல் வண்ணா! கவுள்கொண்ட நீராம்
இவளெனக் கருதுகின் றாயே. 1939

Koviloor Digital Library

கருங்கடல் வண்ணனாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! முன்பொரு சமயம் பணிவு என்பது இல்லாத இரணியன் என்னும் அசுரனைத் தன் நகங்களைக் கொண்டு, ஸ்ரீநரசிம்ம மூர்த்தியாகத் திருஅவதாரம் மேற்கொண்டு அவனுடைய மார்பினைப் பிளந்து அழித்து அவனுயிரைப் போக்கியதன் காரணமாக அவன் உடலைப் பறவைகள் தின்னும்படியாகச் செய்த செயலின் வீரமோ? அஃதல்லாமல் ஸ்ரீ இராமபிரான் திருஅவதாரம் மேற்கொண்டிருந்தபோது, காட்டில் கிடைத்த நண்பனாகிய சுக்ரீவனுக்கு உதவி செய்யும் பொருட்டு இரக்கம் கொண்டதன் காரணமாக வாலி என்னும் குரக்கினத்தினத்தரசனைக் கொன்றதன் மிக்கோ! இந்நிலையில் இன்று அகன்று பரந்து விரிந்த கண்களைக் கொண்ட என் மகளின் பெருமையை எண்ணிப் பார்க்காமல் புறக்கணித்துவிட வேண்டாம். தேனை உண்ண வந்த வண்டுகள் நிறைந்திருக்ககின்ற கூந்தலையுடைய இப்பெண்ணை, வாயில் விடும் தண்ணீரைக் கொப்பளித்துக் கீழே துப்புவதும், அன்றி அதனைப் பெருகுவது போன்றும் அலட்சியம் செய்துவிட வேண்டாம்.

நீரழல் வானாய் நெடுநிலங் காலாய்
 நின்றநின் நீர்மையை நினைந்தோ?,
சீரெழு கோதை யென்னல திலளென்
 றன்னதோர் தேற்றன்மை தானோ?,
பார்கெழு பவ்வத் தாரமு தனைய
 பாவையைப் பாவம்செய் தேனுக்கு,
ஆரழ லோம்பும் அந்தணன் தோட்ட
 மாகநின் மனத்துவைத் தாயே. 1940

நீர், நெருப்பு, ஆகாயம், நிலம், காற்று ஆகிய ஐம்பூதங்களாய் நின்று நிறைந்துள்ள உன் நீர்மை காரணமாக என் மகளை ஏளனமாக எண்ணிவிட வேண்டாம். இந்த இப்பெண் மகளுக்கு நம்மை அன்றி வேறு கதி இல்லையே என்று எண்ணுகின்றனையோ! உலகத்தில் அமைந்துள்ள பாற்கடலில் தோன்றிய அமுதத்தினை ஒத்த இப் பெண்ணைப் பாவியாகிய அடியேன் பெற்றெடுத்தேன். இவளைப் பற்றி நெருப்பு கொண்டு காலமெல்லாம் வேள்விகளையே இயற்றிக் கொண்டிருக்கின்ற அந்தணனுடைய வீட்டுத் தோட்டமாக எண்ணிப் புறக்கணித்துவிடவோ அலட்சியம் செய்யவோ வேண்டாம் என்று வேண்டிக் கொள்கிறேன்.

Koviloor Digital Library

✵வேட்டத்தைக் கருதா தடியிணை வணங்கி
மெய்ம்மைநின் றெம்பெரு மானை,
வாட்டிறல் தானை மங்கையர் தலைவன்
மானவேல் கலியன்வா யொலிகள்,
தோட்டலர் பைந்தார்ச் சுடர்முடி யானைப்
பழமொழி யால்பணிந் துரைத்த,
பாட்டிவை பாடப் பத்திமை பெருகுச்
சித்தமும் திருவொடு மிகுமே. 1941

புள் மன்றில் ஆர் மல்கிய செரு அரக்கியர் ஆழி பொருந்தலன் நீர் வேட்டத்தை - திருத்தாய்.

எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரானிடம் ஆவல் மிகக் கொண்டிருந் தாலும், அதனைப் பற்றி மனதில் ஏதும் கருதாமல் அவனுடைய இணைத்திருவடிகளையே ஆவலுடன் வணங்கி அவனருளையே எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கட்கு எம்பெருமான் அருள் புரிகின்றான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைப் பற்றி, முடிவில் மாலை சூடிய இப்பெருமானைப் பணிந்து வாள்வலி உடைய திருமங்கை நகருக்கு அரசனாகிய கலியன் என்னும் திருமங்கை ஆழ்வார் தம் வாயொலிகளாகிய பழமொழிகளைக் கொண்டு அருளிச் செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் பயில்பவர்கள் பரமபக்தியினைப் பெரிதும் பெற்று, எம்பெருமானுக்குச் செய்யக் கூடிய கைங்கர்யத்துக்கு உரிய திருவினையும் மிகுதியாகவே அடையப் பெறுவார்கள்.

10. திருத்தாய்

பறவைகளை நோக்கி மாயனை அழை எனல்

வெண்டுறை

✵திருத்தாய் செம்போத்தே,
திருமாமகள் தன்கணவன்,
மருத்தார் தொல்புகழ் மாதவ னைவரத்
திருத்தாய் செம்போத்தே! 1942

ஒ செம்போத்து என்னும் பறவையே! திருமாமகள் என்னும் பெரியபிராட்டியாரின் நாயகனாய், நறுமணம் வீசுகின்ற மலர் மாலையை அணிந்து கொண்டிருக்கின்ற, நீண்ட நெடுங்காலமாகப்

Koviloor Digital Library

பெரும்புகழ் கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை, மாதவப் பெருமானை அடியேனிடம் வருமாறு அழைப்பாயாக! செம்போத்தே! நீ எனக்கு உதவி செய்திடல் வேண்டும்.

கரையாய் காக்கைப்பிள்ளாய்,
கருமாமுகில் போல்நிறத்தன்,
உரையார் தொல்புக ழுத்தம னைவரக்,
கரையாய் காக்கைப்பிள்ளாய்! 1943

காக்கைப் பிள்ளையே! காளமேகம் போன்ற நிறத்தினை யுடையவனும், சொல்வதில் வல்லவராகவும், நித்திய புகழை உடையவருமான, உத்தமனாகிய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானை அடியவனிடத்திலே வருமாறு அழைப்பாயாக! காக்கைப்பிள்ளையே! அடியேனுக்காக இங்கே வருமாறு அழைப்பாயாக!

கூவாய் பூங்குயிலே,
குளிர்மாரி தடுத்துகந்த,
மாவாய் கீண்ட மணிவண்ண னைவரக்,
கூவாய் பூங்குயிலே! 1944

பூப்போன்று மென்மையான அழகிய குயிலே! இந்திரனால் பெய்த குளிர்மிக்க பெருமழையினைத் தடுத்துப் பசுக்களைப் பாது காத்து அருளியவனும், அதன் பொருட்டு மனம் மிக மகிழ்ந்தவனும், குதிரை வடிவில் வந்த கேசி என்னும் அசுரனின் வாயைப் பிளந்தவனும், நீலமணியின் நிறத்தினை உடையவனும் எம் பெருமான் ஸ்ரீகண்ணபிரானை அடியேனிடம் வருமாறு கூவிக் கூவி அழைப்பாயாக! பூங்குயிலே அந்த எம்பெருமானை இங்கே வருமாறு கூவி அழைப்பாயாக!

கொட்டாய் பல்லிக்குட்டி,
குடமாடி யுலகளந்த,
மட்டார் பூங்குழல் மாதவ னைவரக்,
கொட்டாய் பல்லிக்குட்டி! 1945

ஒ பல்லிக்குட்டியே! குடக்கூத்து ஆடிய எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரான் முன்பு ஒரு சமயம் திரிவிக்ரமன் என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு உலகம் முழுவதையும் அளந்தான். இத்தகைய எம்பெருமான் தேன் நிறைந்த மலர்களைச் சூடிய திருக்குழல் கற்றையினையுடையவனாய், திருமகள் கொழுநனாகவும் விளங்கு

Koviloor Digital Library

கின்றான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை இங்கே வருமாறு ஒலி செய்வாயாக! ஓ பல்லிக்குட்டியே! ஒலி செய்திடு வாயாக!

சொல்லாய் பைங்கிளியே,
சுடராழி வலனுயர்த்த,
மல்லார் தோள்வட வேங்கட வன்வர,
சொல்லாய் பைங்கிளியே! 1946

பசுங்கிளியே! சொல்வாயாக! ஒளிமிக்கிருக்கின்ற திருவாழி யானைத் தம் வலது திருக்கரத்தில் உயரமாகத் தாங்கியிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், மிடுக்கான திருத்தோள்களைக் கொண்டு வடவேங்கட மலையில் திருக்கோயில் கொண்டருள்புரியும் எம்பெருமான் திருவேங்கடப் பெருமானை அடியேனிடத்து வருமாறு எடுத்து உரைப்பாயாக! பசுங்கிளியே! நீ எடுத்து உரைப் பாயாக!

கோழி கூவென் னுமால்,
தோழி! நானென் செய்கேன்,
ஆழி வண்ணர் வரும்பொழு தாயிற்று,
கோழி கூவென் னுமால். 1947

தோழியே! வருக! கோழி கூவுகிறது. கடல் நிறத்தினை ஒத்தவனான எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் இங்கே வருகின்ற நேரம் வந்துவிட்டது. அதன் காரணமாக மகிழ்ச்சி ஏற்படுகிறது. இந்தக் கோழியானது மீண்டும் கூவப்போகிறதே! அதுகேட்கும் எம்பெருமான் என்னைவிட்டுப் பிரிந்து சென்று விடுவானே. இனி நான் என்ன செய்வேன்!

காமற் கென்கடவேன்,
கருமாமுகில் வண்ணற்கல்லால்,
பூமே லைங்கணை கோத்துப் புகுந்தெய்யக்,
காமற் கென்கடவேன்! 1948

கறுத்துப் பெருத்த நிலையிலுள்ள மேகநிற வண்ணனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் என்னும் ஸ்ரீகண்ணபிரானுக்குக் கடமைப்பட்டிருக்கின்ற காமதேவனுக்கு என்ன செய்வேன்! இதற்கும் மேலே மலர்கள் என்னும் ஐவகைப்பட்ட கணைகளைக் கரும்பு என்னும் வில்லில் தொடுத்துவிட்டதனால் என் உள்ளே புகுந்து துன்புறுத்திக் கொண்டிருக்க என் வயிற்றில் பிறந்த மகனான

Koviloor Digital Library

மன்மதனுக்குக் கடமைப்பட்டவளோ நான்? நான் இத்தகைய காமதேவனுக்கு என்ன செய்வேன்!

இங்கே போதுங்கொலோ,
இனவேல்நெடுங் கண்களிப்ப,
கொங்கார் சோலைக் குடந்தைக் கிடந்தமால்,
இங்கே போதுங்கொலோ! 1949

தேன் நிறைந்துள்ள மகரந்தத்துகள்கள் மிக்கிருக்கின்ற மலர்கள் நிறைந்திருக்கும் சோலைகளை உடைய திருக்குடந்தை என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருளும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் என்னுடைய வேல் போன்ற கண்கள் இரண்டும் களிப்படையும்படியாக இங்கே எழுந்தருளப் பெறுவாரோ! இஃது இயலக்கூடியதாகுமோ? இங்கேயே எழுந்தருளப் பெறுவாரோ!

இன்னா ரென்றறியேன்,
அன்னே! ஆழியொடும்,
பொன்னார் சார்ங்க முடைய அடிகளை,
இன்னா ரென்றறியேன். 1950

அம்மா! திருவாழியான் என்னும் சக்கரப் படையுடனே பொன்மயமான சார்ங்கம் என்னும் வில்லையும் தம் திருக்கரங்களில் ஏற்றுக் கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானின் இணைத்திருவடிகளை அடியேன் இப்படிப்பட்டவர் என்றும் இன்னமும் அறிந்ததில்லை. இத்தகைய எம்பெருமான் இன்னார் என்று இன்னமும் அறியேனே!

✸தொண்டீர்! பாடுமினோ,
சுரும்பார்பொழில் மங்கையர்கோன்,
ஒண்டார் வேல்கலி யனொலி மாலைகள்,
தொண்டீர்! பாடுமினோ. 1951

ஸ்ரீ வைணவத் திருத்தொண்டர்களே! வண்டுகள் நிறைந்திருந்து இன்னிசை பாடும் அளவுக்கு வளம் நிறைந்த சோலைகள் சூழ்ந்திருக்கின்ற திருமங்கை என்னும் நகருக்கு அரசராகிய குளிர்ந்த மலர் மாலையைச் சூடியிருக்கின்ற வேற்கலியன் என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பத்துப் பாசுரங்களையும் ஸ்ரீவைணவத் தொண்டர்களே பாடிக்கொண்டு இருங்கள். இவற்றின் பயனாவது பாடிக் கொண்டிருப்பதேயாகும்.

Koviloor Digital Library

பதினோராம் பத்து

1. குன்றமொன்றெடுத்து தலைவியிரங்கல்

கலி விருத்தம்

*குன்ற மொன்றெடுத் தேந்தி, மாமழை
அன்று காத்தவம் மான்,அ ரக்கரை
வென்ற வில்லியார் வீர மேகொலோ,
தென்றல் வந்துதீ வீசு மென்செய்கேன்! 1952

முன்பு ஒரு சமயம் ஸ்ரீகண்ணபிரான் திருஅவதாரம் மேற் கொண்டிருந்த காலத்தில் கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாகப் பிடித்துப் பெய்த பெருமழையினின்றும் பசுக்களையும், அங்குள்ள ஆயர்களையும் பாதுகாத்தருளினான். அதற்கும் முன்பாக ஸ்ரீஇராமபிரான் திருஅவதாரம் மேற்கொண்டிருந்தபோது இலங்கையிலிருந்த அரக்கர்களைக் கொன்று அழித்த வில்லாற்றல் மிக்கவனாகத் திகழ்ந்தான். இத்தகைய எம்பெருமானின் வீரத்தின் பின்னே தென்றற்காற்று வந்து என்மீது நெருப்பை வீசுகின்றது. இந்நிலைக்கு யான் என் செய்வேனோ?

காரும் வார்பனிக் கடலும் அன்னவன்,
தாரு மார்வமும் கண்ட தண்டமோ,
சோரு மாமுகில் துளியி னூடுவந்து,
ஈர வாடைதான் ஈரு மென்னையே! 1953

பெரிய காளமேகத்தினையும், பனிமிக்க கடலையும் ஒத்த நிறமுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருமார்பில் அணிந்துள்ள மணம்மிக்க திருத்துழாயின் மாலையைக் கண்டு ஆசைப்பட்டு அவர் பின்னே சென்ற எனக்கு இஃதும் ஓர் தண்ட னையோ! மழைபொழியும் பெரிய பெரிய மேகங்களின் மழைத் துளிகளின் இடையே புகுந்து வருகின்ற வாடைக் காற்றானது விரகத்தில் தவித்துக் கொண்டிருக்கும் என் உடலை நலியச் செய்கின்றதே.

Koviloor Digital Library

சங்கு மாமையும் தளரு மேனிமேல்,
திங்கள் வெங்கதிர் சீறு மென்செய்கேன்,
பொங்கு வெண்டிரைப் புணரி வண்ணனார்,
கொங்க லர்ந்ததார் கூவு மென்னையே! 1954

கைகளிலுள்ள வளையல்களும், மாமை நிறமும், தளர்ந்து சோர்ந்துள்ள என் உடலின்மீது சந்திரனின் ஒளிக்கதிர்களானது வெம்மை மிக்கதாகிச் சீறுகின்றன. இந்நிலைக்கு நான் என்ன செய்வேன்? அலைகள் பொங்கி எழும் வெண்மையான கடல் நிறத்தினைக் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தன் திருமார்பில் அணிந்து கொண்டிருக்கின்ற நறுமணம் வீசுகின்ற திருத்துழாய் மாலையானது என்னுடைய பெண்மைத் தன்மைக்குச் சவால் விடுமாறுபோல என்னைக் கூவி அழைக்கின்றதே! இதற்கு நான் என்ன செய்வேன்!

அங்கொ ராய்க்குலத் துள்வ ளர்ந்துசென்று,
அங்கொர் தாயுரு வாகி வந்தவள்,
கொங்கை நஞ்சுண்ட கோயின் மைகொலோ,
திங்கள் வெங்கதிர் சீறு கின்றதே! 1955

முன்பு ஸ்ரீகண்ணபிரான் திருஅவதாரம் ஏற்றிருந்த காலத்தில் திருவாய்ப்பாடியில் வளர்ந்து வந்தபோது, தாய் உருவில் வஞ்சக எண்ணத்துடன் வந்த பூதனையின் நஞ்சு கலந்த முலைப்பாலை உண்டு மாயச் செயல்கள்புரிந்த வீரத்தின் பெற்றிமையோ? சந்திரனின் குளிர்ந்த ஒளிக்கிரணங்கள்கூட வெம்மையான கிரணங்களாக என்மீது சீறுகின்றனவே!

அங்கொ ராளரி யாய்,அ வுணனைப்
பங்க மாவிரு கூறு செய்தவன்,
மங்குல் மாமதி வாங்க வேகொலோ,
பொங்கு மாகடல் புலம்பு கின்றதே! 1956

தன்னுடைய அடியவனாகிய பிரகலாத ஆழ்வான், எங்கும் உளன் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் என்று சொன்ன அளவிலேயே அவனைக் காப்பாற்றும் பொருட்டு எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீநரசிம்மப் பெருமானாகத் திருஅவதாரம் ஏற்றுப் பிரகலாதனின் தந்தையான இரணியனை மானபங்கம் செய்து, தன் நகங்களாலேயே அவன் மார்பினை இருகூறுகளாகப் பிளந்து

Koviloor Digital Library

அழித்தான். இப்படியாக அரியதாகிய செயல்களைச் செய்ய வல்லவனாகிய எம்பெருமான் திருப்பாற்கடலினைக் கடைந்த காலத்தில் அக்கடலிலிருந்துண்டான மாமதியை வாங்கியதா தானோ, இக்கடலும் புலம்பிக் கொண்டிருக்கின்றது. என்னை போன்றே அக்கடலும் மதியை இழந்துவிட்டதோ?

சென்று வார்சிலை வளைத்துஇ லங்கையை,
வென்ற வில்லியார் வீரு மேகொலோ,
முன்றில் பெண்ணைமேல் முளரிக் கூட்டகத்து,
அன்றி லின்குரல் அடர மென்னையே!

பகைவர்கள் இருக்குமிடம் தேடிச் சென்று, வில்லை வளை இலங்கை மன்னன் இராவணனை வென்று, இலங்கையை அ வல்லமை மிக்கவரான ஸ்ரீஇராமபிரானின் வீரத்தின் காரணமாக வாசலிலுள்ள பனைமரத்தின்மீதுள்ள தாமரைப் பூக்களி கொண்டு அமைத்திருக்கின்ற, கூட்டில் கிடக்கின்ற அன்றில் பற குரலினைக் கொடுத்து என்னை வாட்டி வருத்துகின்றதே!

பூவை வண்ணனார் புள்ளின் மேல்வர,
மேவி நின்றுநான் கண்ட தண்டமோ,
வீவி லைங்கணை வில்லி யம்புகோத்து,
ஆவி யேயிலக் காக எய்வதே!

காயாம்பூ நிறத்தினைக் கொண்டுள்ள எம்பெருமான் நாராயணன் பெரிய திருவடி என்னும் கருடாழ்வான்மீது எழு புரிகின்றபோது நான் என் மனதினை இழந்த நிலையில் நின் ஆசைப்பட்டு கண்டதற்காகவோ இத்தகைய தண்டனை? என்ன என்றால் ஐந்து வகையான விற்களைக் குறைபாடு ஏது வைத்திருக்கின்ற மன்மதன் அவ்விற்களின் அம்புகளைக் கோர் உயிரைப் பறிப்பதனையே இலக்காகக் கொண்டு என்மீது கொண்டிருக்கிறான்.

மால்இ னந்துழாய் வருமென் னெஞ்சகம்,
மாலின் அந்துழாய் வந்தென் னுள்புக,
கோல வாடையும் கொண்டு வந்தது,ஓர்
ஆலி வந்ததால் அரிது காவலே!

என் இதயமானது எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனிடம் ம கொண்டு அலைந்து கொண்டிருக்கிறது. அத்தகைய எம்பெரு

Koviloor Digital Library

திருவுளத்தினையே எங்கும் எப்போதும் நாடிக் கொண்டு இருக்கிறது. இத்தகைய திருமாலின் திருமார்பில் அணிந்துள்ள திருத்துழாயின் நறுமணம் வாடைக்காற்றுடன் கலந்து வந்தது. வாடைக் காற்றுடன் கூடிய ஒரு சிறு மழைத்துளியும் சேர்ந்துகொண்டு வந்து என் விரகதாபத்தை மேன்மேலும் அதிகரிக்கச் செய்கிறது. இத்தகைய செயல்கள் நடைபெறாமலிருக்குமாறு காவல் காத்துக் கொண்டிருப்பது என்பது இயலாததொன்றாகும். அதனால் இனி என் உயிரைக் காப்பாற்றிக் கொள்ளுதலும் இயலாத ஒன்றாக ஆகிவிடுகிறது.

கெண்டை யொண்கணும் துயிலும், என்நிறம்
பண்டு பண்டுபோ லொக்கும், மிக்கசீர்த்
தொண்ட ரிட்டபூந் துளவின் வாசமே,
வண்டு கொண்டுவந் தூது மாகிலே. 1960

மிகுந்த சிறப்புடைய வைணவ அடியார்கள் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனுக்குச் சார்த்திய திருத்துழாய் மலரினின்றும் வீசுகின்ற நறுமணத்தினை அங்குள்ள வண்டுகள் முகர்ந்து கொண்டு வந்து என்னிடம் ஊதுமானால், கெண்டைமீனையொத்த என் அழகிய கண்களும் உறங்கிவிடும். என் உடலின்மீது சேர்ந்திருக்கின்ற மாமை என்னும் பசலை நிறமும் நீங்கப்பெற்று, ஏற்கனவே உள்ளவாறு ஒளிபெற்று விளங்கும்.

*அன்று பாரதத் தைவர் தூதனாய்,
சென்ற மாயனைச் செங்கண் மாலினை,
மன்றி லார்புகழ் மங்கை வாள்கலி
கன்றி, சொல்வல்லார்க் கல்ல லில்லையே. 1961

முன்பு துவாபரயுகத்தில் நடைபெற்ற பாரதப்போர் நடைபெறுவதற்குரிய காரணமாக அமையுமாறு, பாண்டவர்கள் ஐந்துபேர்களின் பொருட்டு, தூதராகச் சென்றருளிய, மாயச் செயல்களையுடைய, செந்தாமரைக் கண்களைக் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரானைப் பற்றி, மன்றங்கள்தோறும் பெரும் புகழ்பெற்றிருக்கும் திருமங்கை நாட்டிற்கு மன்னனும், வாள்படையைக் கொண்டுள்ள கலியன் என்றழைக்கப்படுபவருமாகிய திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் ஓதுகின்ற வல்லமை பெற்றவர்களுக்கு எம்பெருமானைப் பிரிந்து வாழ்தல் துன்பம் என்ற ஒன்று உண்டாகாது.

Koviloor Digital Library

2. குன்றமெடுத்து தலைவி வருந்தல்

கலி நிலைத்துறை

*குன்ற மெடுத்து மழைத டுத்துஇளை யாரொடும்,
மன்றில் குரவை பிணைந்த மாலென்னை மால்செய்தான்,
முன்றில் தனிநின்ற பெண்ணை மேல்கிடந் தீர்கின்ற,
அன்றிலின் கூட்டைப் பிரிக்க கிற்பவ ரார்கொலோ! 1962

கோவர்த்தனம் என்னும் மலையைத் தன் கையில் ஏந்திக் குடையாகப் பிடித்து, இந்திரனால் பெய்த பெருமழையைத் தடுத்து, அங்கிருந்த பசுக்கூட்டங்களைப் பாதுகாத்தருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் பலர் கூடுகின்ற நாற்சந்தியிலே பல இளம் பெண்களுடன் சேர்ந்து கொண்டு குரவைக் கூத்து ஆடிக் கொண்டிருக்கின்றான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என்னை மதிமயக்கி, அவன்மீது மோகம் கொண்டிருக்குமாறு செய்து விட்டான். என் வீட்டுவாசலில் இருக்கின்ற பனைமரத்திலுள்ளவாறு என்னை நலியச் செய்து கொண்டுள்ள அன்றிற் பறவைகளைக் கூட்டிலிருந்து யாரேனும் பிரித்து விடுபவர்களும் இருக்கின்றனரோ!

பூங்கு ருந்தொசித்து ஆனை காய்ந்தரி மாச்செகுத்து,
ஆங்கு வேழத்தின் கொம்பு கொண்டுவன் பேய்முலை
வாங்கி யுண்ட,அவ் வாயன் நிற்கஇவ் வாயன்வாய்,
ஏங்கு வேய்ங்குழல் என்னோ டாடும் இளமையே! 1963

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் பூக்கள் பூத்திருக்கின்ற குருந்த மரத்தினை முறித்தான். எருதுகளை அடக்கி வென்றான். குதிரை வடிவில் வந்த பகைவனாகிய கேசி என்னும் அசுரனின் வாயைப் பிளந்து அழித்தான். ''குவலயாபீடம் '' என்னும் யானையின் கொம்புகளை ஒடித்து அழித்தான். பேய் வடிவில் வந்த பூதனை என்பவளின் நஞ்சு கலந்த முலைப்பாலை உண்டு அவளை அழித்தான். இத்தகைய ஆற்றல்கள் பலவற்றையும் கொண்டுள்ள இக்கண்ணபிரான் மட்டுமன்றி பலராமனாகத் திருஅவதாரம் மேற்கொண்டுள்ள இந்த இடைப்பிள்ளையும் சேர்ந்து கொண்டு ஊதுகின்ற புல்லாங்குழலின் இனிய ஓசையானது என்னுடைய இளமையைக் கிளர்ந்தெழச் செய்து துன்புறுத்துகிறது.

Koviloor Digital Library

மல்லொடு கஞ்சனும் துஞ்ச வென்ற மணிவண்ணன்,
அல்லி மலர்த்தண் டுழாய்நி னைந்திருந் தேனையே,
எல்லி யின்மா ருதம்வந் தடுமது வன்றியும்,
கொல்லைவல் லேற்றின் மணியும் கோயின்மை செய்யுமே! 1964

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் மல்லர்களையும், கம்சனையும் கொன்று வெற்றி பெற்ற வீரம் செறிந்த மணிவண்ணனாவான். இத்தகைய எம்பெருமான் இதழ்கள் நிறைந்த குளிர்ந்த திருத்துழாய் மாலையைச் சூடியிருப்பதையே விரும்பியவாறு, அதனையே எண்ணிக் கொண்டு இருக்கின்றேன். இந்நிலையிலிருக்கின்ற என்னை மாலைப் பொழுதில் வீசுகின்ற தென்றற் காற்றோ என்னைச் சுடுகின்றது. மேலும் கொல்லையில் மேய்ந்து கொண்டிருக்கின்ற எருதுகளின் கழுத்தில் கட்டி இருக்கின்ற மணிகளின் ஓசையானது என் காதில் ஒலித்து, என்னை அலைக்கழிக்கின்றது.

பொருந்து மாமர மேழு மெய்த புனிதனார்,
திருந்து சேவடி யென்ம னத்து நினைதொறும்,
கருந்தண் மாகடல் கங்கு லார்க்கும் அதுவன்றியும்,
வருந்த வாடை வருமி தற்கினி யென்செய்கேன்! 1965

ஒரே நிலையில் பொருந்தி இருக்குமாறு மராமரங்கள் ஏழினை யும் தம் அம்புகளை எய்தியதன்மூலம் செய்தருளிய புனிதராகிய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானின் சிறப்பு வாய்ந்த இணைத் திருவடிகளை என் மனதில் நினைக்கும்போதெல்லாம் கறுத்த, குளிர்ந்திருக்கின்ற மிகப் பெரிய கடலானது இரவு முழுவதும் வீசுகின்ற அலைகளின் ஓசையானது என் காதுகளில் பட்டு என்னைத் துன்புறுத்திக் கொண்டு இருக்கின்றது. அஃதன்றியும் வாடைக்காற்றும் என்னிடம் வந்து நான் வருந்தும்படியாக வீசுகின்றது. இப்படிப் பல நிலைகளிலும் துன்புறுகின்ற அடியேன் இனியும் செய்யக் கூடியது யாதென்றறியேன். இனி என்ன செய்வேன்?

அன்னை முனிவதும் அன்றி லின்குர லீர்வதும்,
மன்னு மறிகட லார்ப்ப தும்வளை சோர்வதும்,
பொன்னங் கலையல்கு லன்ன மென்னடைப் பூங்குழல்,
பின்னை மணாளர் திறத்த வாயின பின்னையே. 1966

என்னை ஈன்றெடுத்த தாய் என் நடைமுறை கண்டு என்மீது கோபம் கொண்டிருப்பதும், அன்றில் என்னும் பறவையின் குரலானது

Koviloor Digital Library

என்னைத் துன்புறுத்துவதும், நிலைபெற்றிருக்கின்ற அலைவீசுகின்ற கடலின் ஓசையானது என்னைத் துன்புறுத்துவதும், என் கையிலுள்ள வளையல்களெல்லாம் சோர்ந்து, கழன்று விடுமாறு தோன்றுகின்ற நிலையும், ஆகிய இச்செயல்பாடுகளுக்கெல்லாம் உரிய காரணம் யாதோவென்னின் கண்ணபிரான்மீது எனக்குண்டான காதலேயாகும். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் பொன்னாடையை உடுத்தியிருக்கின்ற அல்குலையும் கொண்டு, அன்னத்தினை ஒத்த நடையினையும், மலர்களைச் சூடிய கூந்தலையுமுடைய நப் பின்னைப் பிராட்டியின் இனிய மணவாளப் பெருமான் திறத்ததன்றோ!

ஆழியும் சங்கு முடைய நங்கள் அடிகள்தாம்,
பாழிமை யான கனவில் நம்மைப் பகர்வித்தார்,
தோழியும் நானு மொழிய வையம் துயின்றது,
கோழியும் கூகின்ற தில்லைக் கூரிரு ளாயிற்றே! 1967

திருவாழியானையும், திருச்சங்கினையும் தம் திருக்கரங்களிலே ஏந்தியுள்ள எம்பெருமான், நம்மை மிகப் பெரியதாகிய கனவின்போது உண்டான கலவியின் காரணமாகவே நம்மை இப்படி அழைத்திருக்கிறார். இதன் காரணமாக நானும் தோழியும் தவிர, இவ்வுலகிலுள்ள எல்லோரும் நன்கு உறங்கிவிட்டனர். கோழியும் இன்னும் கூவவில்லை. இந்த இரவின் கூரிய கருமையான இருளோ நீண்டு கொண்டே போகின்றதே! இதற்கு நான் என்ன செய்வேனோ!

காமன் றனக்கு முறையல் லேன்கடல் வண்ணனார்,
மாமண வாள ரெனக்குத் தானும் மகன்சொல்லில்,
யாமங்கள் தோறெரி வீசு மென்னிளங் கொங்கைகள்,
மாமணி வண்ணர் திறத்த வாய்வளர் கின்றவே! 1968

மன்மதன் என்னைத் துன்புறுத்துவதற்கு நான் எவ்வகையிலும் முறைமையுடையவள் அல்லாதவளாக இருக்கின்றேன். ஏனென் றால், கடல்நிறம் கொண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என் மணவாளராவார். மன்மதன் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் மகன் என்பதனால் அவன் எனக்கும் மகன் என்னும் நிலையிலன்றோ உள்ளான்! அப்படி இருந்தும்கூட ஒவ்வொரு யாம நேரங்களிலும் என்மீதும் இந்த மன்மதன் நெருப்பை வீசுகின்றானே! இந்நிலையில் நீலமணி நிறத்தினனாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானிடத்தே

Koviloor Digital Library

பயனடையும் பொருட்டு, என் முலைகள் இரண்டும் மேன்மேலும் விம்முகின்றனவே!

மஞ்சுறு மாலிருஞ் சோலை நின்ற மணாளனார்,
நெஞ்சம் நிறைகொண்டு போயி னார்நினை கின்றிலர்,
வெஞ்சுடர் போய்விடி யாமல் எவ்விடம் புக்கதோ,
நஞ்சு உடலம் துயின்றால் நமக்கினி நல்லதே! 1969

மேகக்கூட்டங்களைத் தொடும் அளவிற்கு மிகவும் உயர்ந்துள்ள சோலைகள் நிறைந்துள்ள ''திருமாலிருஞ்சோலைமலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம் பெருமான் கள்ளழகப்பிரான் என் நெஞ்சிலுள்ள நிறைவைக் கொண்டு சென்றுவிட்டாரே! இந்நிலைமை பற்றி அவர் எதுவும் எண்ணிப் பார்ப்பதில்லை. சூரியனும் மறைந்த பின்பு மீண்டும் காலையில் தோன்றாமல் எங்கே சென்று இருக்கின்றானோ! இந்நிலையில் என் உடலானது நொந்து அழிந்து போனால் அன்றி, எனக்கு இனியும் நல்லதோர் வாழ்வு என்பது இல்லையாகிவிடும்.

காமன் கணைக்கோ ரிலக்க மாய்நலத் தில்மிகு,
பூமரு கோலநம் பெண்மை சிந்தித்தி ராதுபோய்,
தூமலர் நீர்கொடு தோழி! நாம்தொழு தேத்தினால்,
கார்முகில் வண்ணரைக் கண்க ளால்காண லாங்கொலோ! 1970

தோழீ! மன்மதன் விடுகின்ற அம்புக்கு இலக்காகி இருக்கின்றதன் காரணமாக, நன்மைகள் நிறைந்ததாக, விருப்பம் கொள்ளக்கூடிய அளவில், பூப்போன்று மென்மையான, நமது அழகுமிக்க பெண்மைக் குணத்தினைத் தம் மனதிலேயே எண்ணிக் கொண்டு இங்கேயே இருக்காமல் புறப்பட்டுப் போய்விட்டிருக்கின்ற, மழையைப் பொழிகின்ற கருத்திருக்கின்ற மேகத்தை ஒத்த நிறத் தினையுடைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைத் தூய்மையான மலர்களைக் கொண்டும், தூய்மையான நீரைக் கொண்டும் நாம் தொழுது வணங்குவோமானால், அந்த எம்பெருமானை நம் இருகண்களாலும் கண்டுகளிக்குமாறு அவனைச் சேவிப்பதற்காகத் திருவருள் கிடைக்கும்.

*வென்றி விடையுட னேழ டர்த்த அடிகளை,
மன்றில் மலிபுகழ் மங்கை மன்கலி கன்றிசொல்,
ஒன்று நின்றவொன் பதுமு ரைப்பவர் தங்கள்மேல்,
என்றும் நில்லாவினை யொன்றும் சொல்லி லுலகிலே. 1971

Koviloor Digital Library

எப்பொழுதும் வெற்றியையே அடைகின்ற வீரம்மிக்க காளைகள் ஏழினையும் அடக்கியாண்டு வெற்றிபெற்ற எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரானைப் பற்றி, மன்றங்களிலே பலவாறாகப் புகழ்ந்து பேசுகின்ற அளவிற்குப் பெரும்புகழ் பெற்றிருக்கும் திருமங்கை என்னும் நகர்க்கு மன்னனாகிய கலியன் என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த இப்பாசுரங்கள் பத்தினையும் எடுத்துரைக்கக்கூடிய ஆற்றல் பெற்றவர்களிடத்திலே எவ்விதமான தீவினைகளும் என்றும் இல்லாமற் போய்விடும். மேலும் மேலும் சொல்லிக் கொண்டி ருந்தால் அவர்கள் இருந்த உலகிலும் கூட எவ்வித வினைகளும் நில்லாது நீங்கும்!

3. மன்னிலங்கு

இதுவும் அது

கொச்சகக் கலிப்பா

*மன்னிலங்கு பாரதத்துத் தேரூர்ந்து, மாவலியைப்
பொன்னிலங்கு திண்விலங்கில் வைத்துப் பொருகடல்சூழ்,
தென்னிலங்கை யீடழித்த தேவர்க் கிதுகாணீர்,
என்னிலங்கு சங்கோ டெழில்தோற் றிருந்தேனே! 1972

அரசர்கள் பலரும் கூடியிருக்கும் பாரதப் போரின்போது பாண்டவர்களின் பொருட்டு எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் தேரைச் செலுத்தினான். மகாபலிச் சக்கரவர்த்தியைப் பொன் விலங்கிட்டுச் சிறைபிடித்தான். கடலால் சூழ்ந்திருக்கின்ற இலங்கையை அழித்த எம்பெருமான் ஸ்ரீஇராமருக்கு என்னுடைய ஒளிமிக்க வளையல் களையும் என்னுடைய அழகினையும் இழந்துவிட்டு நிற்கின்றேனே! இதனை நீங்கள் யாவரும் காண்பீர்களாக! இதுவே அந்த எம்பெரு மானின் திருவருள் போலும்!

இருந்தானெ னுள்ளத் திறைவன், கறைசேர்
பருந்தாள் களிற்றுக் கருள்செய்த, செங்கண்
பெருந்தோள் நெடுமாலைப் பேர்பாடி யாட,
வருந்தாதென் கொங்கை யொளிமன்னும் அன்னே! 1973

என் அன்னையே ஒத்த தோழியே! எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் என் உள்ளத்தினுள்ளே என்றென்றும் எண்ணிக் கொண்டிருக்குமாறு நிறைந்து இருக்கின்றான். பருத்த கால்களைக்

Koviloor Digital Library

கொண்ட கஜேந்திர ஆழ்வானுக்கு அருள்புரிந்திருக்கின்றான். இத்தகைய இரக்க உணர்வுகளைக் கொண்டுள்ள பெருந்தோள் களையுடைய செந்தாமரைக் கண்ணன் என்னும் நெடிய, பெரிய திருமாலின் திருநாமங்களைக் கூறிப் பாடியும் ஆடியும் இருப்போ மானால் என் முலைகள் இரண்டும் என்றும் ஒளி மிக்கதாக விளங்கும். இதற்கும் மேலே வருத்தங்கள் ஏதும் இல்லாமற் போய்விடும்.

அன்னே! இவரை யறிவன், மறைநான்கும்
முன்னே யுரைத்த முனிவ ரிவர்வந்து,
பொன்னேய் வளைகவர்ந்து போகார் மனம்புகுந்து,
என்னே யிவரெண்ணும் எண்ணம் அறியோமே! 1974

அன்னையை ஒத்த தோழியே! இந்த எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை ஏற்கனவே நான் அறிந்திருக்கிறேன். உலகப் பிரளயம் உண்டான காலத்தில் நான்கு வேதங்களையும் பாதுகாத்து வைத்திருந்து பிரமனுக்கு அருளிச்செய்த வேதசீலர் இந்த எம்பெருமானே ஆவர். இத்தகைய எம்பெருமான் இங்கே வந்து, என் பக்கலிலேயே இருந்து கொண்டு என் கைகளிலுள்ள பொன்மயமாகத் திகழ்கின்ற வளையல்களை விரும்பினார். இந்த எம்பெருமான் என் உள்ளத்தின் உள்ளே புகுந்து, என்னிடமே இருந்து, வேறு எங்கும் செல்லாமல் நிலையாக இருந்து கொண்டிருக்கிறார். இத்தகைய எம்பெருமானின் திருவுள்ளம் யாதென்று எம்மால் அறிந்து கொள்ள இயல வில்லையே!

அறியோமே யென்றுரைக்க லாமே எமக்கு,
வெறியார் பொழில்சூழ் வியன்குடந்தை மேவி,
சிறியானோர் பிள்ளையாய் மெள்ள நடந்திட்டு,
உறியார் நறுவெண்ணெ யுண்டுகந்தார் தம்மையே! 1975

நறுமணம் வீசுகின்ற சோலைகள் சூழ்ந்திருக்கின்ற வியத்தகு திருக்குடந்தை என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசாரங்கபாணிப் பெருமானே சிறுகுழந்தை வடிவில் ஸ்ரீகண்ணபிரான் திருஅவதாரம் மேற்கொண்டு மெள்ள மெள்ள நடந்து சென்று, உறியில் சேமித்து வைத்திருந்த வெண்ணெய் முழுவதையும் உண்டு மகிழ்ச்சி அடையப் பெற்றார். இத்தகைய எம்பெருமானைப்பற்றி இதுவரை அறிந்திருக்கவில்லை என்று நம்மால் எடுத்துரைக்கலாகுமோ! அவ்வாறு கூறலாகாது.

Koviloor Digital Library

தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்கு,
தம்மையே யொக்க அருள்செய்வ ராதலால்,
தம்மையே நாளும் வணங்கித் தொழுதிறைஞ்சி,
தம்மையே பற்றா மனத்தென்றும் வைத்தோமே. 1976

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தம்மையே நாள்தோறும் வணங்கித் தொழுது கொண்டிருக்கின்ற தம்முடைய அடியவர்கட்குத் தம்மைப் போன்றே ஆகுமாறு அருள்புரிந்திருக்கிறார். ஆதலால், அத்தகைய எம்பெருமானையே நாள்தோறும் தொழுது வணங்கி இறைஞ்சி இறைஞ்சி அவர் தம்மையே உறுதியாகப் பற்றிக் கொண்டு, நம் மனத்திலே இறுத்திக் கொண்டு, அடைக்கலம் அடைந்து விட்டோம்.

வைத்தா ரடியார் மனத்தினில் வைத்து,இன்பம்
உற்றா ரொளிவிசும்பி லோரடிவைத்து, ஓரடிக்கும்
எய்த்தாது மண்ணென் றிமையோர் தொழுதிறைஞ்சி,
கைத்தா மரைகுவிக்கும் கண்ணனென் கண்ணனையே. 1977

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ''திரிவிக்ரமன்'' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு, ஒளி பொருந்தியுள்ள ஆகாயம் முழுவதையும் ஓரடியாக அளந்துவிட்டு, பின்பு இப்பூமி முழுவதையும் இரண்டாவது அடியாக அளந்துவிட்டு இருக்கின்ற நிலையில் அதனைக் கண்ட பிரமன் முதலிய தேவர்கள் யாவரும் ஒன்றுகூடித் தம் தாமரைக் கரங்களைக் குவித்து வணங்கிக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை அடியவர்கள் தம் மனத்தினுள்ளே வைத்துப் பேரின்பம் அடையப் பெற்று, உய்வடைந்தார்கள்.

கண்ணன் மனத்துள்ளே நிற்கவும், கைவளைகள்
என்னோ கழன்ற? இவையென்ன மாயங்கள்?,
பெண்ணானோம் பெண்மையோம் நிற்க, அவன்மேய
அண்ணல் மலையும் அரங்கமும் பாடோமே. 1978

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என் உள்ளத்தினுள்ளே எழுந்தருளப் பெற்று, இருந்தும் என் கைகளிலுள்ள வளையல்கள் கழன்று விடுவதன் காரணம்தான் யாதோ? இத்தகைய செயல்கள் நடைபெறுவதற்குரிய மாயச்செயல்கள்தான் என்னையோ? பெண்ணாகப் பிறந்த நாம் நம் பெண்மையை இழக்காமலிருக்

Koviloor Digital Library

கின்றோமே! நம் நிலை இவ்வாறு இருக்க, இத்தகைய எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கும் திருவேங்கட மலையையும், திருவரங்கத்தினையும் பற்றிப் பாடுவோமன்றோ? ஆம் பாடிக் கொண்டு இருப்போமாக!

பாடோமே யெந்தை பெருமானை?, பாடிநின்று
ஆடோமே யாயிரம் பேரானை?, பேர்நினைந்து
சூடோமே சூடும் துழாயலங்கல்? சூடி,நாம்
கூடோமே கூடக் குறிப்பாகில்? நன்னெஞ்சே! 1979

என்னுடைய நன்னெஞ்சமே! என் தந்தையாகிய எம்பெருமானைப் பற்றிப் பாடிக் கொண்டிருப்போமோ? ஆயிரம் திருநாமங்களைக் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப் பற்றிப் பாடிக் கொண்டிருந்தவாறே, நாம் ஆடிக் கொண்டிருப்போமே! அந்த எம்பெருமானின் திருநாமங்களை எண்ணியவாறே, அவன் சூடியிருக்கின்ற திருத்துழாய் மாலையினை நாமும் சூடிக்கொள்ள மாட்டோமோ! இத்தகைய செய்கைகளெல்லாம் நம்மால் செய்து முடிக்கக் கூடிடுமாயின் அவன் திருவுள்ளத்தே உண்டாகப்பெற்று, அவனையே சரணடையும் பொருட்டுச் சென்று சேர்வோமே!

நன்னெஞ்சே! நம்பெருமான் நாளும் இனிதமரும்,
அன்னம்சேர் கானல் அணியாலி கைதொழுது,
முன்னம்சேர் வல்வினைகள் போக முகில்வண்ணன்,
பொன்னம்சேர் சேவடிமேல் போதணியப் பெற்றோமே! 1980

என்னுடைய நன்னெஞ்சமே! அன்னப்பறவைகள் நிறைந்திருக்கின்ற திருவாலி என்னும் திருத்தலத்தில் எந்நாளும் மகிழ்ச்சியுடன் எழுந்தருள்புரிகின்ற எம்பெருமான் திருவயலாளி மணவாளப் பெருமானை நாம் கைதொழுது வணங்கி முன்னமேயே நீண்ட காலமாகச் சேர்ந்து இருக்கின்ற வன்மைமிக்க கொடிய வினைகளெல்லாம் நீங்கிப் போய்விடும் வகையில், காளமேகம் போன்ற நிறத்தினைக் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் பொன்னான இணைத்திருவடிகளில் மலர்களை இட்டு வணங்கும்பேற்றினை நாம் பெற்றிருக்கிறோமே!

*பெற்றாரார் ஆயிரம் பேரானைப், பேர்பாடப்
பெற்றான் கலிய னொலிசெய் தமிழ்மாலை,
கற்றாரோ முற்றுல காள்வ ரிவைகேட்க-
லுற்றார்க்கு, உறுதுய ரில்லை யுலகத்தே. 1981

Koviloor Digital Library

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் ஆயிரம் திருநாமங்களையும் எடுத்துப் பாடக்கூடிய பேற்றினை யார் பெற்றார்? அவ்வாறு அவனுடைய ஆயிரம் திருநாமங்களையும் பாடப்பெற்ற ஆற்றலைப் பெற்றிருக்கின்ற கலியன் என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த, ஒலியை உண்டாக்குகின்ற தமிழில் படைத்தருளிய பாசுரங்கள் பத்தினையும் முற்றும் கற்றுவல்ல அடியவர் பெருமக்கள் இவ்வுலகம் முழுவதையும் ஆட்சிபுரிகின்ற பெரும்பேற்றினைப் பெறுவர். இப்பாசுரங்களைக் கேட்கப் பெறுபவர்கள், இவ்வுலகத்தில் எவ்விதத் துன்பத்தினையும் அடையமாட்டார்கள்.

4. நிலையிடம்

தசாவதாரங்களின் சிறப்பு

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*நிலையிட மெங்கு மின்றி நெடுவெள்ளம்
உம்பர் வளநாடு மூட இமையோர்,
தலையிட மற்றெ மக்கொர் சரணில்லை
என்ன அரணாவ னென்னு மருளால்,
அலைகடல் நீர்கு ழம்ப அகடாட
ஓடி யகல்வா னுரிஞ்ச, முதுகில்
மலைகளை மீது கொண்டு வருமீனை
மாலை மறவா திறைஞ்சென் மனனே! 1982

என் மனமே! நிலைத்து நிற்பதற்கு என்று ஓரிடமும் இல்லை யென்கின்ற அளவிலே, உலகப் பிரளயம் என்னும் பெருவெள்ளம் உண்டான காலத்தில், அப்பெருவெள்ளமானது உம்பர்கள் வசிக்கின்ற அனைத்து வளங்களும் உடைய தேவருலகம் முழுவதும் புகுந்துவிட, அங்கேயுள்ள தேவர்கள் தாம் இருப்பதற்கு உரிய இடம் இல்லா மற்போன நிலையில், எங்களைக் காப்பாற்றுவதற்கு உம்மைத் தவிர வேறு எவரும் இலர் என்பதனால், நாங்கள் தலைவணங்கி உன் திருவடிகளையே அணுகி இருக்கிறோம் என்று கூறிச் சரணடைந்தனர். அதன் காரணமாக அவர்களுக்கு, நான் அரண் ஆவேன் என்று அருள்புரிந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அலைவீசுகின்ற கடல்நீர் குழம்பிப் போகுமாறு மீன் என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு தன் கீழ் வயிற்றில் அலை எறியும்படியாக, அகன்று

Koviloor Digital Library

பரந்திருக்கும் ஆகாயம் வரை ஓடிச்சென்று, அங்குள்ள மலைகளைத் தன் முதுகில் தாங்கியவாறு உலகம் முழுவதையும் பாதுகாத்து அருள்புரிந்தார். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை எக்காலத்தும் மறவாமல் வணங்குவோமாக!

செருமிகு வாளெ யிற்ற அரவொன்று
சுற்றித் திசைமண்ணும் விண்ணு முடனே,
வெருவர வெள்ளை வெள்ளம் முழுதும்
குழம்ப இமையோர்கள் நின்று கடைய,
பருவரை யொன்று நின்று முதுகிற்
பரந்து சுழலக் கிடந்து துயிலும்,
அருவரை யன்ன தன்மை அடலாமை
யான திருமால் நமக்கொ ரரணே. 1983

வலிமை மிகுந்ததாகி, ஒளிவீசுகின்ற பற்களைக் கொண்டுள்ள வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகக் கொண்டு சுற்றிக்கட்டி, தேவர்கள் அனைவரும் ஒன்றுகூடி, வெண்மை நிறமுள்ள பாற் கடலைக் கடைந்தார்கள். அப்பொழுது, அனைத்துத் திசைகளும், அனைத்து உலகங்களும், விண்ணுலகமும் நடுங்கிப் போயின. அப்பொழுது கடலின் நடுவிலே பாற்கடலைக் கடையும் மத்தாக மந்தரமலை என்னும் பெரியமலை சுழலும் பொருட்டும், அம்மலையைத் தாங்கிக் கொள்ளும் பொருட்டும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஆமை வடிவமாகத் திருஅவதாரம் பெற்றார். ஆமை வடிவினைப் பெற்ற எம்பெருமான் அம்மலைகளின் கீழே இருந்துகொண்டு திருப்பாற்கடலைக் கடைவதற்குப் பேருதவியாக இருந்தார். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே நம்மைப் பாதுகாப்பதற்குரிய ஒப்பற்ற அரணாக அமைந்தருள்கின்றான்.

தீதறு திங்கள் பொங்கு சுடரும்பர்
உம்ப ருலகேழி னோடு முடனே,
மாதிர மண்சு மந்து வடகுன்று
நின்ற மலையாறும் ஏழு கடலும்
பாதமர் சூழ்கு எம்பி னகமண்ட
லத்தி னொருபா லொடுங்க வளர்சேர்,
ஆதிமுன் ஏன மாகி அரணாய
மூர்த்தி அதுநம்மை யாளு மரசே. 1984

Koviloor Digital Library

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஆதிகாலத்தில் வராகம் என்னும் பன்றி அவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் உலகங்கள் முழுவதையும் பாதுகாத்து அருள்புரிந்தார். இத்தகைய திருமால் குற்றமற்ற சந்திரன், ஒளிமிக்க வெப்பம் உடைய சூரியன், தேவர்கள், அத்தேவர்கள் வாழ்கின்ற உலகங்கள் ஏழினுடன், திசைகள், பூமி, பூமியைத் தாங்கிக் கொண்டிருக்கின்ற வடக்கே அமைந்துள்ள இமயமலை, ஆறுகள், மலைகள் ஆறும், ஏழு கடல்களும் ஆகிய அனைத்தும் ஸ்ரீபூவராகப் பெருமானின் திருவடிக் குளம்புகளில் அடங்கி இருந்தன. இத்தகைய பெருமைக் குணங்களையுடைய எம்பெருமான் மிகப் பேருருவம் கொண்ட ஸ்ரீபூவராகப் பெருமானே நம்மை அடிமையாக ஆட்கொண்டு அருளிப் பாதுகாக்கும் ஆதிமூர்த்தியாவான்.

தளையவிழ் கோதை மாலை யிருபால்
　　தயங்க எரிகான் றிரண்டு தறுகண்,
அளவெழ வெம்மை மிக்க அரியாகி
　　அன்று பரியோன் சினங்க ளவிழ,
வளையுகி ராளி மொய்ம்பில் மறவோன
　　தாகம் மதியாது சென்றொ ருகிரால்
பிளவெழ விட்ட குட்ட மதுவைய
　　மூடு பெருநீரில் மும்மை பெரிதே. 1985

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தோள்களில் திகழ்கின்ற மாலையினையும், கழுத்திலுள்ள மாலையினையும் கொண்டு இருபக்கங்களிலும் அம்மாலைகள் அசைந்து கொண்டிருக்குமாறு, நரசிம்மமூர்த்தி யாகத் திருஅவதாரம் பெற்று, நெருப்பினைக் கக்குகின்ற இரண்டு வட்ட வடிவமான கண்களுடன் கூடிய இரணியன் என்னும் அசுரன் முன்னே தோன்றினான். மிகுந்த கோபத்துடன் தன் கைகளின் கூரிய நகங்களைக் கொண்டு அந்த இரணியனின் உடலை இரண்டு கூறுகளாகப் பிளந்து அழித்துவிட்டுச் சென்றான். அதனால் பெருக்கெடுத்தோடிய இரத்த வெள்ளமானது பூவுலகம் முழுவதும் மூடிக்கொண்டுவிட்டது. அதனால் உலகப் பிரளயம் உண்டான காலத்தினும் மும்மடங்கு பெரியதாகிப் பெருகிற்றே!

Koviloor Digital Library

வெந்திறல் வாணன் வேள்வி யிடமெய்தி
அங்கோர் குறளாகி மெய்ம்மை யுணர,
செந்தொழில் வேத நாவின் முனியாகி
வைய மடிமூன் றிரந்து பெறினும்,
மந்தர மீது போகி மதிநின்றி
றைஞ்ச மலரோன் வணங்க வளர்சேர்,
அந்தர மேழி னூடு செலவுய்த்த
பாதம் அதுநம்மை யாளு மரசே. 1986

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், வலிமை மிக்க மகாபலிச் சக்கரவர்த்தியின் வேள்விச்சாலையின் முன்னே, ''குறள்'' என்னும் வாமனனாகத் திருஅவதாரம் மேற்கொண்டு, உண்மையுணர்வுடன் வேதங்கள் நிறைந்த வாக்கியங்களை ஓதுகின்ற குறுமுனிவனாகச் சென்று, தம் திருவடிகளால் மூன்றடி மண் வேண்டுமென்று யாசித்துப் பெற்றான். அதனைப் பெற்ற அளவிலேயே, ஓங்கி உயர்ந்த நிலையில் திரிவிக்கிரமன் என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு தன் திருவடிகளானவை மந்தரமலைக்கும் மேலே சென்று, சந்திரன் இருக்குமிடம் வரை வளர்ந்து, பிரமதேவன் வந்து வணங்கும்படியாக ஓங்கி உயர்ந்து ஏழுலகங்களையும் கடந்த நிலையில் அளந்தான். இவ்வாறு உலகெங்கும் பரந்து நிறைந்து கிடக்கின்ற இத்தகைய எம்பெருமான் திருமாலின் திருவடிகள் நம்மையெல்லாம் பாதுகாத்தருளி, நம்மை ஆண்டு கொண்டிருக்கின்றன.

இருநில மன்னர் தம்மை யிருநாலும்
எட்டு மொருநாலு மொன்று முடனே,
செருநுத லூடு போகி யவராவி
மங்க மழுவாளில் வென்ற திறலோன்,
பெருநில மங்கை மன்னர் மலர்மங்கை
நாதர் புலமங்கை கேள்வர் புகழ்சேர்,
பெருநில முண்டு மிழ்ந்த பெருவாய
ராகி யவர்நம்மை யாள்வர் பெரிதே. 1987

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் எங்கும் பரந்து கிடக்கின்ற இந்நிலவுலகில் இருந்து ஆண்டு கொண்டிருக்கும் மன்னர்களை இருபத்தொரு தலைமுறைகளாகப் போர்க்களத்தில் எதிர்த்து நின்று போரிட்டு மழு என்னும் கோடரிப் படையினைக் கொண்டு 'பரசுராமர் ' என்னும் திருஅவதாரம் மேற்கொண்ட காலத்தில் அழித்தார். இந்தத் திருஅவதாரம் ஏற்ற எம்பெருமான் திருமால்

Koviloor Digital Library

பூமிப்பிராட்டிக்கும் திருமகள் என்னும் பெரிய பிராட்டிக்கும், நீளாதேவி என்னும் நப்பின்னைப் பிராட்டிக்கும் நாயகனாகத் திகழ்கின்றார். இத்தகைய எம்பெருமான் உலகப்பிரளயம் உண்டான காலத்தில் உலகங்கள் யாவற்றையும் உண்டு தன் வயிற்றினுள்ளே அடக்கியிருந்து, பின்பு அவ்வுலகங்கள் யாவற்றையும் உமிழ்ந்த மிகப்பெரிய வாயினையுடைய எம்பெருமான் திருமால் நம்மை மிகப் பெரிய அளவில் ஆண்டு கொண்டு பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்.

இலைமலி பள்ளி யெய்தி யிதுமாயம்
என்ன இனமாய மான்பின் எழில்சேர்
அலைமலி வேல்க ணாளை யகல்விப்ப
தற்கொ ருருவாய மானை யமையா,
கொலைமலி யெய்து வித்த கொடியோன்
இலங்கை பொடியாக வென்றி யமருள்,
சிலைமலி செஞ்ச ரங்கள் செலவுய்த்த
நங்கள் திருமால் நமக்கொ ரரணே. 1988

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் 'இராமாவதாரம்' மேற்கொண்டிருந்த காலத்தில், அழகைக் கவர்கின்ற வேல் போன்ற திருக்கண்களைக் கொண்ட சீதையைப் பிரிப்பதன்பொருட்டு, 'மாரீசன்' என்னும் அரக்கன் மாயமானாக ஒப்பற்ற வடிவு கொண்டு, பொன்மானாக இராமபிரானின் பர்ணசாலையின் முன்பு மற்ற மான்களுடன் அருகே சென்று, இந்த மான் மட்டும் மிகவும் அழகாக ஆச்சரியத்துடன் இருக்கிறது என்று எண்ணும்படியாக நின்றது. அம்மான் வேண்டுமென்று சீதை வினவ, இராமபிரான் அம்மாய மானின் பின்னே சென்று அதனைக் கொன்றான். அதற்குப் பின்பு பிறரை அழிப்பதையே இயல்பாகக் கொண்டிருந்த இராவணன் என்னும் கொடிய அரக்கர் குடிமக்களின் இலங்கை மாநகரும் அழியும்படியாகப் போர்க்களத்தில் தன் திருக்கரங்களால் வில்லை வளைத்து அம்புகளைத் தொடுத்து விடுத்தான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் திருமகளிடத்தே பேரன்பு கொண்டு, நம்மையும் ஒப்பற்ற நிலையில் பாதுகாத்துக் கொண்டிருக்கின்ற பாதுகாவலராகவும் திகழ்கின்றார்.

Koviloor Digital Library

முன்னுல கங்க ளேழும் இருள்மண்டி
யுண்ண முதலோடு வீடு மறியாது,
என்னிது வந்த தென்ன இமையோர்
திகைப்ப எழில்வேத மின்றி மறைய,
பின்னையும் வான வர்க்கும் முனிவர்க்கும்
நல்கி யிருள்தீர்ந்திவ் வைய மகிழ,
அன்னம தாயி ருந்தங் கறநூல்
உரைத்த அதுநம்மை யாளு மரசே. 1989

முன்பு ஒரு காலத்தில் ஏழு உலகங்கள் முழுவதும் அஞ்ஞான இருள் நிறைந்து எங்கும் மூடிக்கொண்டு இருக்க, தேவர்கள் யாவரும் இத்தகைய இருளின் ஆரம்பமும் முடிவும் தெரிந்துகொள்ள இயலாமல், நமக்கு இந்நிலை உண்டானதன் காரணம் தான் யாதோ? என்று திகைத்துக் கொண்டிருக்கின்ற அளவில் வேதங்கள் யாவும் மறைந்து கிடக்க எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அன்னப்பறவை வடிவு மேற்கொண்டு, தேவர்கள், முனிவர்கள் ஆகிய யாவர்க்கும் வேதங்களைத் தேடிக் கண்டுபிடித்துத் தந்தருளி, அங்கு உண்டான இருள் நீங்குமாறு செய்து, நல்வாழ்வு வாழ்வதற்குண்டான அறநூல்கள் பலவற்றையும் இவ்வுலகத்தவர் அனைவரும் மகிழ்ச்சி அடையுமாறு அளித்து அருள்புரிந்தார். இவ்வாறு அன்னப்பறவை வடிவு மேற்கொண்டு அருள்புரிந்த அந்தப் பரஞ்சோதியாகிய எம்பெருமான் திருமாலே நம்மையெல்லாம் ஆள்கின்ற, நல்லதோர் சிறந்த அரசாகும்.

துணைநிலை மற்றெ மக்கொ ருளதென்
றிராது தொழுமின்கள் தொண்டர் தொலைய,
உணமுலை முன்கொ டுத்த வுரவோள
தாவி யுகவுண்டு வெண்ணெய் மருவி,
பணைமுலை யாயர் மாத ருரலோடு
கட்ட அதனோடு மோடி அடல்சேர்,
இணைமரு திற்று வீழ நடைகற்ற
தெற்றல் வினைபற்ற றுக்கும் விதியே. 1990

வைணவத் திருத்தொண்டர்களே! நமக்குத் ''துணைவேறு ஒன்று உண்டு'' என்று எண்ணிக் கொண்டிருக்காமல், எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனையே என்றென்றும் வணங்கிக் கொண்டிருங்கள். எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் திருஅவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில், தன்னை அழிப்பதன் பொருட்டு வந்திருந்த பூதனைப்

Koviloor Digital Library

பேயின் நஞ்சு கலந்த முலைப்பாலை உறிஞ்சு உண்டதன் வாயிலாக அவளின் உயிரைப் போக்கியருளினான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் வெண்ணெயை உண்ணும் ஆவலுடன் அதனைத் திருடி உண்டதற்காகத் தாய் அசோதைப் பிராட்டியார் உரலுடன் சேர்த்துக் கட்டி வைத்தாள். அவ்வுரலுடன் சேர்ந்து இழுத்துக் கொண்டு செல்ல, அவ்வுரலினை அங்குள்ள மருத மரங்களினிடையில் நடந்து சென்று அம்மரங்களை முறித்தான். இத்தகைய தெளிவாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் நம் பாவங்கள் யாவற்றையும் வேருடன் அறவே போக்கி அருள்புரிகின்றான் என்பது உறுதியே யாகும்.

*கொலைகெழு செம்மு கத்த களிறொன்று
கொன்று கொடியோன் இலங்கை பொடியா,
சிலைகெழு செஞ்ச ரங்கள் செலவுய்த்த
நங்கள் திருமாலை, வேலை புடைசூழ்
கலிகெழு மாட வீதி வயல்மங்கை
மன்னு கலிகன்றி சொன்ன பனுவல்,
ஒலிகெழு பாடல் பாடி யுழல்கின்ற
தொண்ட ரவராள்வ ரும்ப ருலகே. 1991

கொலை செய்யும் இயல்புடைய வலிமை மிக்க சிவந்த முகத்தினைக் கொண்ட 'குவலயாபீடம்' என்னும் யானையைக் கொன்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், முன்பு ஸ்ரீஇராமாவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில், இலங்கை நகரானது பொடிப் பொடியாகுமாறு செய்துவிட்டு, தன் வில்லாற்றலின் துணைகொண்டு அம்பினை விடுத்து, இராவணனை அழித்தான். இத்தகைய எம்பெருமான் திருமால்பற்றி காவிரி நதியானது சுற்றிலும் சூழ்ந்து இருக்கும், மாடமாளிகைகளைக் கொண்ட வீதிகள் நிறைந்திருக்கின்ற திருமங்கை என்னும் நகர்க்கு அரசனாகிய, நிலைபெற்ற 'கலிகன்றி' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலி மிகுந்துள்ள இப்பாசுரங்கள் பத்தினையும் பாடிக் கொண்டவாறு நடமாடுகின்ற வைணவத் தொண்டர்கள் விண்ணுலகிலுள்ள திருப்பரமபத்தினை ஆளப் பெறக்கூடிய பேரின்பப் பேற்றினை அடைவார்கள்.

Koviloor Digital Library

5. மானமரும் திருச்சாழல்

கொச்சகக் கலிப்பா

(இரண்டு பெண்கள் எம்பெருமானின் எளிமையையும், மேன்மையையும் எதிர் எதிராகக் கூறுவது)

*மானமரு மென்னோக்கி வைதேவி யின்துணையா,
கானமரும் கல்லதர்போய்க் காடுமறைந்தான் காணேடீ,-
கானமரும் கல்லதர்போய்க் காடுறைந்த பொன்னடிகள்,
வானவர்தம் சென்னி மலர்கண்டாய் சாழலே. 1992

முதற்பெண்: தோழீ! நீ புகழ்ந்து பேசிக்கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான், மான் போன்ற மென்மையான பார்வையினையுடைய 'வைதேவி' என்னும் சீதாபிராட்டியாரைத் துணையாகக் கொண்டு, காட்டில் கற்கள் நிறைந்திருக்கின்ற வழியில், நீரும் நிழலும் என்கின்ற எதுவும் இல்லாத இடங்களில் வாழ்ந்திருந்த அத்தகைய வாழ்க்கையும் வாழ்க்கையாகுமோ? இதனை நீ அறிந்து கொள்வாயாக!

இரண்டாம் பெண்: தோழீ! காட்டில் கற்கள் நிறைந்திருக்கின்ற வழியில் சென்று, அக்காட்டிலேயே தவவழியில் உலவி வந்த எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானின் பொன்னையொத்த திருவடிகள், விண்ணுலகத் தேவர்கள் தம் திருமுடியில் சூடிக் கொள்கின்ற மலர்களாகத் திகழ்கின்ற மேன்மைத் தன்மையை நீ அறிந்து கொள்வாயாக!

தந்தை தளைகழலத் தோன்றிப்போய், ஆய்ப்பாடி
நந்தன் குலமதலை யாய்வளர்ந்தான் காணேடீ,-
நந்தன் குலமதலை யாய்வளர்ந்தான் நான்முகற்குத்
தந்தைகாண், எந்தை பெருமான்காண் சாழலே. 1993

முதற்பெண்: தன் தந்தை வசுதேவரின் கால்விலங்கு கழன்று போகுமாறு தோன்றிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் தோன்றிய அதே நாளின் இரவிலேயே ஆய்ப்பாடியில் உள்ள நந்த கோபரின் திருமகனாக வளர்ந்து வந்தான் என்பதை நீ அறிந்து கொள்வாயாக!

Koviloor Digital Library

இரண்டாம் பெண்: திருவாய்ப்பாடியிலே நந்தகோபரின் திரு மகனாக வளர்ந்து வந்த எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் நான் முகனுக்குத் தந்தையாக விளங்குகிறான் என்பதை நீ அறிந்து கொள்வாயாக!

ஆழ்கடல்சூழ் வையகத்தா ரேசப்போய், ஆய்ப்பாடித்
தாழ்குழலார் வைத்த தயிருண்டான் காணேடீ,-
தாழ்குழலார் வைத்த தயிருண்ட பொன்வயிறு,இவ்
வேழுலகு முண்டும் இடமுடைத்தால் சாழலே. 1994

முதற்பெண்: தோழீ! ஆழம் அதிகமாக இருக்கின்ற கடலால் சூழ்ந்திருக்கின்ற உலகத்தில் வாழ்கின்ற மக்கள் இகழ்ந்து பேசும்படி, திருவாய்ப்பாடியிலுள்ள தாழ்ந்த கூந்தலையுடைய ஆய்க்குலப் பெண்கள் வைத்திருந்த தயிரை எடுத்து உண்டான் என்பதை நீ அறிவாயாக!

இரண்டாம் பெண்: தோழீ! திருவாய்ப்பாடியிலுள்ள தாழ்ந்த கூந்தலையுடைய ஆய்க்குலப் பெண்கள் வைத்திருந்த தயிரை உண்டு உகந்த பொன்னை ஒத்த திருவயிறுதான் இந்த ஏழுலகங்களையும் திருவமுது செய்தும், இன்னமும் அவ்வேழு உலகங்களையும் அடக்கி வைத்து இருப்பதற்கான இடத்தினைக் கொண்டுள்ளதும் அந்தத் திருவயிறே என்பதை நீ அறிவாயாக!

அறியாதார்க் கானாய னாகிப்போய், ஆய்ப்பாடி
உறியார் நறுவெண்ணெ யுண்டுகந்தான் காணேடீ,-
உறியார் நறுவெண்ணெ யுண்டுகந்த பொன்வயிற்றுக்கு,
எறிநீ ருலகனைத்து மெய்தாதால் சாழலே. 1995

முதற்பெண்: தோழீ! ஏதும் அறியாதவர்களுக்குப் பசுக்களை மேய்க்கக் கூடிய ஆயர்குலத்தவனாகத் தோன்றித் திருவாய்ப் பாடியிலே உறியில் வைத்திருந்த மணம்மிக்க வெண்ணெயை உண்டு மகிழ்ச்சி அடைந்தவன் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் என்பதை நீ அறிவாயாக!

இரண்டாம் பெண்: தோழீ! திருவாய்ப்பாடியில் உறியில் வைத்திருந்த மணம்மிக்க வெண்ணெயை உண்டு மகிழ்ச்சியுற்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானின் பொன்னை ஒத்த திருவயிற் றினுள்ளே அலைகள் வீசுகின்ற நீர் நிறைந்துள்ள உலகங்கள் அனைத்தும் அடங்கி இருப்பதை நீ அறிவாயாக!

Koviloor Digital Library

வண்ணக் கருங்குழ லாய்ச்சியால் மொத்துண்டு,
கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டான் காணேடீ,
கண்ணிக் குறுங்கயிற்றால் கட்டுண்டா னாகிலும்,
எண்ணற் கரியன் இமையோர்க்கும் சாழலே. 1996

முதற்பெண்: தோழீ! அழகிய கறுத்த கூந்தலைக் கொண்டுள்ள அசோதைப் பிராட்டியாரால் அடிபட்டு, முடிகளை உடைய சிறிய கயிற்றினால் கட்டுண்டு கிடக்கின்றான் எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரான் என்பதை நீ அறிவாயாக!

இரண்டாம் பெண்: தோழீ! அசோதைப்பிராட்டி, முடிகளை யுடைய சிறிய கயிற்றினால் கட்டுண்டு கிடக்கின்ற எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் அவ்வாறு கட்டுண்டு கிடந்தாலும், அவன் இத்தகைய குணம் உடையவன் என்று யாவராலும் எண்ணிப் பார்க்க முடியாத அளவில் மேன்மையானவன் என்பதை நீ அறிந்து கொள்வாயாக!

கன்றப் பறைகறங்கக் கண்டவர்தம் கண்களிப்ப,
மன்றில் மரக்கால்கூத் தாடினான் காணேடீ,-
மன்றில் மரக்கால்கூத் தாடினா னாகிலும்,
என்றும் அரியன் இமையோர்க்கும் சாழலே. 1997

முதற்பெண்: ஏடீ! தோழியே! எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் பகைவரின் நெஞ்சு கன்றும்படியாகப் பறைகள் ஒலிக்கக் கண்டோர் கண்கள் களிக்குமாறு நாற்சந்திகளிலே மரத்தைக் காலில்கட்டி ஆடும் ஒருவகைக் கூத்தினை ஆடிக்கொண்டிருப்பதை நீ அறிவாயாக!

இரண்டாம் பெண்: ஏடீ! தோழியே! எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரான் நாற்சந்திகளிலே மரத்தைக் காலில் கட்டிக்கொண்டு ஆடும் ஒருவகைக் கூத்தினை ஆடிக் கொண்டிருந்தாலும் விண்ணுலகத் தேவர்கள் கண்டு வணங்குவதற்கும் எக்காலத்தும் அரியவனாக இருப்பதனை நீ அறிவாயாக!

கோதைவேல் ஐவர்க்காய் மண்ணகலம் கூறிடுவான்,
தூதனாய் மன்னவனால் சொல்லுண்டான் காணேடீ,-
தூதனாய் மன்னவனால் சொல்லுண்டா னாகிலும்,
ஓதநீர் வையகம்முன் உண்டுமிழ்ந்தான் சாழலே. 1998

முதற்பெண்: ஏடீ! தோழியே! அரசரகட்கு உரிய பூமாலை, வேற்படை ஆகியவற்றை உடையவர்களான பஞ்சபாண்டவர்களுக்கு

Koviloor Digital Library

உரிய நாட்டினைப் பகிர்ந்தளிக்கும் பொருட்டுத் தூதுவனாகச் சென்றபோது, மன்னனாகிய துரியோதனனால் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் இகழ்ந்து பேசிப் பழிக்கப்பட்டானே! என்பதை நீ அறிவாயாக!

இரண்டாம்பெண்: ஏடீ! தோழியே! எம்பெருமான் ஸ்ரீகண்ண பிரான் பாண்டவர்களுக்காகத் தூதுவனாகச் சென்றபோது துரியோதனன் என்னும் மன்னனால் இகழ்ந்து பேசப்பட்டவனாக இருப்பினும், இந்த எம்பெருமான் முன்பு ஒரு சமயம் உலகப் பிரளயம் உண்டான காலத்தில் கடல்நீர் சூழ்ந்திருக்கின்ற இந்த உலகங்களை எல்லாம் உண்டு தன் திருவயிற்றிலே அடக்கிப் பாதுகாப்பாக வைத்திருந்து, பின்பு வெளிப்படுத்திய பெருமை யையுடையவன் என்பதை நீ அறிவாயாக!

பார்மன்னர் மங்கப் படைதொட்டு வெஞ்சமத்து,
தேர்மன்னர்க் காயன்று தேரூர்ந்தான் காணேடீ,-
தேர்மன்னர்க் காயன்று தேரூர்ந்தா னாகிலும்,
தார்மன்னர் தங்கள் தலைமேலான் சாழலே. 1999

முதற்பெண்: ஏடீ! தோழீ! பாரதப்போர் நடைபெற்ற காலத்தில், அந்நாட்டை ஆண்டு கொண்டிருந்த மன்னர்கள் யாவரும் மாண்டு போகும்படியாகக் கொடிய போர்க்களத்திலே, ஏற்கனவே அளித்த உறுதிமொழிக்கு மாறாக சங்கு, சக்கரம் ஆகிய ஆயுதங்களைப் பயன்படுத்தி, வீரனாகிய அர்ச்சுனனுக்குத் துணையாக அவனுடைய தேரையும் செலுத்தினான் என்பதை நீ அறிவாயாக!

இரண்டாம் பெண்: ஏடீ! தோழீ! எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் அன்று பாரதப் போரின்போது அர்ச்சுனனுக்குத் துணையாகத் தேரைச் செலுத்தினான் என்றபோதிலும் வெற்றிமாலையைச் சூடிக் கொண்டிருக்கின்ற மன்னர்களெல்லாம் தங்கள் தலையின்மீது வீற்றிருக்கச் செய்கின்ற அளவுக்கு மேன்மையினையுடையவன் அந்த எம்பெருமான் என்பதை நீ அறிவாயாக!

கண்டார் இரங்கக் கழியக் குறளுருவாய்,
வண்தாரான் வேள்வியில் மண்ணிரந்தான் காணேடீ,-
வண்தாரான் வேள்வியில் மண்ணிரந்தா னாகிலும்,
விண்டே முலகுக்கும் மிக்கான்காண் சாழலே. 2000

Koviloor Digital Library

முதற்பெண்: ஏடீ! தோழீ! பார்ப்பவர்கள் இகழ்ந்து பேசும் படியாகக் குள்ளவடிவு என்னும் வாமன அவதாரம் மேற்கொண்டு வள்ளன்மையையுடைய, மாலைகளைச் சூடியுள்ள மகாபலிச் சக்கரவர்த்தியின் வேள்வியின் முன்னே சென்று நின்று இப்பூமியை எம்பெருமான் இரந்து பெற்றான் என்பதை நீ அறிவாயாக!

இரண்டாம் பெண்: ஏடீ! தோழீ! எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் மலர்மாலையைச் சூடியுள்ள மகாபலிச் சக்கரவர்த்தியின் வேள்வியின் முன்னே சென்று நின்று இப்பூமியை இரந்து பெற்றாலும், அந்த எம்பெருமானே பல்வகையான ஏழு உலகங்களுக்கும் பரம் பொருளாகத் திகழ்கிறான் என்பதை நீ அறிவாயாக!

*கள்ளத்தால் மாவலியை மூவடிமண் கொண்டளந்தான்,
வெள்ளத்தான் வேங்கடத்தான் என்பரால் காணேடீ,-
வெள்ளத்தான் வேங்கடத்தா னேலும், கலிகன்றி
உள்ளத்தி னுள்ளே உளன்கண்டாய் சாழலே. 2001

முதற்பெண்: ஏடீ! தோழீ! எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் கள்ளத்தனமாக மகாபலிச்சக்கரவர்த்தியிடமிருந்து மூவடி மண்ணை இரந்து பெற்று, 'திரிவிக்ரம' அவதாரம் மேற்கொண்டு ஓங்கி உலகளந்தவன் திருப்பாற்கடலிலும், திருவேங்கடமலையிலும் இருப்பவன் என்று கூறுவதை நீ அறிவாயாக!

இரண்டாம் பெண்: ஏடீ! தோழீ! எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருப்பாற்கடலிலும், திருவேங்கடமலையிலும் இருப்பவன் என்று கருதினாலும் அந்த எம்பெருமானே 'கலிகன்றி' என்னும் திருமங்கை ஆழ்வாரின் உள்ளத்தினுள்ளே என்றும் நீங்காமல் இருக்கின்ற திருப்பரமபதநாதன் ஆவான் என்பதை நீ அறிவாயாக!



Koviloor Digital Library

6. மைந்நின்ற உலகினரை நோக்கி மாயனை வணங்கீர், எனல்

கலி நிலைத்துறை

மைந்நின்ற கருங்கடல்வா யுலகின்றி
வானவரும் யாமுமெல்லாம்,
நெய்ந்நின்ற சக்கரத்தன் திருவயிற்றில்
நெடுங்காலம் கிடந்ததோரீ,
எந்நன்றி செய்தாரா ஏதிலோர்
தெய்வத்தை யேத்துகின்றீர்?,
செய்ந்நன்றி குன்றேன்மின் தொண்டர்காள்!
அண்டனையே ஏத்தீர்களே. 2002

வைணவத் திருத்தொண்டர்களே! மை போன்ற கறுத்த நிறத்துடன் கூடிய கடலினிடத்திலே உலகங்கள் ஏதும் உண்டாகாமல் இருந்த காலத்தில், விண்ணுலகத் தேவர்களும், மண்ணுலக மாந்தர்களாகிய நாமும், மற்றுமுள்ள யாவும், நெய் பூசியிருக்கின்ற திருச்சக்கரத்தினைத் திருக்கரத்திலேந்திய திருமாலின் திருவயிற்றினில் பாதுகாப்பாக நீண்ட நெடுங்காலம் அடங்கியிருந்ததை நீங்கள் அறிந்திருக்கமாட்டீர்கள். அப்படியிருக்க நீங்கள் மற்றவர்களின் குற்றம் நிறைந்த தாழ்ந்த தேவதைகளை எதற்காக, எவ்வகைப் பயன் கிடைக்கும் என்று எண்ணித் துதித்துக் கொண்டிருக்கிறீர்கள்! செய்ந்நன்றியைக் குறைந்து போகாமல் பார்த்துக் கொள்ளுங்கள். நீங்கள் எல்லாத் தேவதைகளுக்கும் மேன்மையானவராய்த் தலைவராய் இருக்கின்ற உலகநாதனான எம்பெருமான் திருமாலையே என்றென்றும் ஏத்தித் துதித்து வணங்கிக் கொண்டிருப்பீர்களாக!

நில்லாத பெருவெள்ளம் நெடுவிசும்பின்
மீதோடி நிமிர்ந்தகாலம்,
மல்லாண்ட தடக்கையால் பகிரண்ட
மகப்படுத்த காலத்து,அன்று
எல்லாரும் அறியாரோ எம்பெருமான்
உண்டுமிழ்ந்த எச்சில்தேவர்,
அல்லாதார் தாமுளரே? அவனருளே
உலகாவ தறியீர்களே? 2003

Koviloor Digital Library

வைணவத் திருத்தொண்டர்களே! உலகப்பிரளயம் உண்டான காலத்தில் உண்டான மிகப் பெரிய வெள்ளமானது எங்கும் பெருக்கெடுத்து, நெடிதுயர்ந்த ஆகாயம் வரை சென்று ஓடியும் மேலும் ஓடிச் செல்லுமிடமின்மை காரணமாக மீண்டும் திரும்பும் வகையில் வழிந்தோடிய அந்தக் காலத்தில் மல்லர்களை வென்ற வலிமைமிக்க தன் திருக்கரங்களால் அண்டங்களை இந்தப் பிரளய மானது விழுங்கிவிடாதவாறு எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பாதுகாத்தருளினான். அப்படிப்பட்டதோர் உன்னத காலத்தினை எல்லோரும் அறிந்திருக்கவில்லையோ! எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணன் உண்டு உமிழ்ந்த எச்சிலாகத் தேவர்கள் அமைந்து விட்டார்கள். இந்த உலகம் இன்றளவும் நிலைபெற்று நிற்கிறது என்பது அவனருளின் பயனால்தான் என்பதை அறிந்துகொள்ள மாட்டீர்களே!

நெற்றிமேல் கண்ணானும் நிறைமொழிவாய்
நான்முகனும் நீண்டநால்வாய்,
ஒற்றைக்கை வெண்பகட்டில் ஒருவனையும்
உள்ளிட்ட அமரரோடும்,
வெற்றிப்போர்க் கடலரையன் விழுங்காமல்
தான்விழுங்கி யுய்யக்கொண்ட,
கொற்றப்போ ராழியான் குணம்பரவாச்
சிறுதொண்டர் கொடியவாறே! 2004

நெற்றிக்குமேல் ஒரு கண்ணாக விளங்கும் நெற்றிக்கண் என்னும் முக்கண்ணையுடைய சிவபெருமான், சொற்கள் பல நிறைந்து விளங்கும் வேதங்களைத் தன் வாயால் எடுத்துரைக்கும் பிரமதேவன், தொங்கும் வாயாகத் திகழும் நீண்டதோர் துதிக்கையினையுடைய ஐராவதம் என்னும் வெள்ளை யானையின்மீது செல்லும் இந்திரன், மற்றும் தேவர்கள் ஆகிய யாவரையும் வெற்றிபெறும் ஆற்றல்மிக்க கடல் அரசன் விழுங்கிவிடாதவாறு எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் தன் திருவயிற்றில் வைத்துப் பாதுகாத்தருளினான். போர்க்களத்தில் வெற்றியையே அளித்திடும் சக்கரப்படையைத் தன் திருக்கரங்களில் ஏந்தியுள்ள எம்பெருமானின் திருக்கல்யாண குணங்களைத் துதிக்காத மிகச் சிறிய (கீழ்த்தரமான) தொண்டர்களாகிய மக்களின் கொடுமை தான் என்னே!

Koviloor Digital Library

பனிப்பரவைத் திரைததும்பப் பாரெல்லாம்
நெடுங்கடலே யானகாலம்,
இனிக்களைகண் இவர்க்கில்லை என்றுலகம்
ஏழினையும் ஊழில்வாங்கி,
முனித்தலைவன் முழங்கொளிசேர் திருவயிற்றில்
வைத்தும்மை உய்யக்கொண்ட,
கனிக்களவத் திருவுருவத் தொருவனையே
கழல்தொழுமா கல்லீர்களே. 2005

உலகமெங்கும் குளிர்ச்சியுடன் கூடிய அலைகள் ததும்பி எங்கும் நிறைந்திருக்குமாறு உலகப் பிரளயம் உண்டான காலத்தில், இவ்வுல கத்தவர்க்கு, இத்தகைய ஆபத்தினின்றும் இனிமேல் பாதுகாப்பவரும் எவருமில்லை என்று எண்ணித் திருவுளம் கொண்ட எம்பெருமான் திருமால் முறையாகவே பெற்று, அனைத்து உலகங்களையும் தன் திருவயிற்றில் அடக்கி வைத்துப் பாதுகாத்தருளினான். இவ்வாறு உங்கள் யாவரையும் உய்யுமாறு செய்தருளிய எம்பெருமான் திருமால் முனிவர்களின் தலைவனாகத் திகழ்கிறான். இந்நிலையில் நிற்கும் நீங்கள் கனிந்த களாப்பழம் போன்ற நிறத்தின் திருவடிவினையுடைய ஒப்பற்ற எம்பெருமான் திருமாலின் இணைத் திருவடிகளைத் தொழுது வணங்கும் வழிமுறைகளைக் கற்கமாட்டீர்களோ!

பாராரும் காணாமே பரவைமா
நெடுங்கடலே யானகாலம்,
ஆரானும் அவனுடைய திருவயிற்றில்
நெடுங்காலம் கிடந்தது,உள்ளத்
தோராத வுணர்விலீர்! உணருதிரேல்
உலகளந்த வும்பர்கோமான்,
பேராளன் பேரான பேர்களா
யிரங்களுமே பேசீர்களே. 2006

எவர் ஒருவராலும் காண இயலாத அளவுக்கு, உலகங் களெல்லாம் மறையும்படி உலகப் பிரளயம் உண்டான காலத்தில் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அனைத்து உலகங்களையும், அனைத்து மக்கள், தேவர்கள் ஆகியோரையும் தன் திருவயிற்றில் அடக்கியிருந்து பாதுகாத்தருளியதனால், எல்லோரும் நீண்ட நெடுங்காலம் திருமாலின் திருவயிற்றில் அடங்கி இருந்தார்கள். இவ்வாறு ஆபத்து வந்த காலத்தில் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பாதுகாத்தருளிய இப்பேரருளைப் பற்றிச் சிறிதளவும் உள்ளத்தே

Koviloor Digital Library

உணர்ந்து பார்க்காத அளவுக்கு உணர்வு என்ற ஒன்று இல்லாத அறிவுக்கேடர்களே! நீங்கள் இதுவரை இருந்த நிலையைப்பற்றி எண்ணிப் பார்க்கும் பகுத்தறியும் உணர்வுடையவர்களாக இருப்பீர்களேயானால், உலகத்தினை அளந்த தேவர்கட்கெல்லாம் தலைவனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் என்னும் திருநாமம் கொண்டிருக்க, ஆயிரம் திருநாமங்களையுடைய திருமாலைப்பற்றி எப்போதும் பேசிக் கொண்டிருப்பீர்களாக!

பேயிருக்கு நெடுவெள்ளம் பெருவிசும்பின்
 மீதோடிப் பெருகுகாலம்,
தாயிருக்கும் வண்ணமே யும்மைத்தன்
 வயிற்றிருத்தி யுய்யக்கொண்டான்,
போயிருக்க மற்றிங்கோர் புதுத்தெய்வம்
 கொண்டாடும் தொண்டீர்,பெற்ற
தாயிருக்க மணைவெந்நீர் ஆட்டுதிரோ
 மாட்டாத தகவற்றீரே! 2007

மனிதர்கள் முதல் யாவருமே இல்லாத நிலையில் பேய்கள் மட்டுமே இருக்குமாறு உலகப் பிரளயம் உண்டான காலத்தில் உண்டான பெருவெள்ளம் ஆகாயம்வரை ஓடி விழுங்கிய அப்பொழுது பெற்ற தாயின் வயிற்றில் இருப்பது போன்று உம்மை எல்லாம் எம்பெருமான் திருமால் தன் வயிற்றினுள்ளே வைத்திருந்து நீங்கள் எல்லோரும் பிழைத்துக் கொள்ளுமாறு பாதுகாத்தருளினான். அப்படி எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் உங்களைப் பத்திரமாகப் பாதுகாத்துக் கொண்டிருந்த இந்த அரிய நிலையை எண்ணிப் பார்க்காமல் வேறு ஓர் புதிய தாழ்ந்த தெய்வங்களைக் கொண்டாடு கின்ற தொண்டர்களே! நீங்கள் செய்கின்ற இச்செய்கையானது எவ்வாறுள்ளது என்றால், பெற்ற தாய் இருக்கும்போது அவளை நீக்கிவிட்டு, வெறும்மணைக்கட்டைக்கு நீராட்டுவித்துக் கொண்டாடிக் கொண்டு இருக்கின்றீர்களே! இவ்வாறு இழிசெயலைச் செய்திருக்கின்ற நீங்கள் ஒருவர்க்கும் எளிதில் கிடைத்தற்கரிய எம்பெருமான் திருவருளுக்கு இலக்கு ஆக இயலா ஒழிந்து போமளவிற்கு இரக்கமற்றவர்களாகி இருக்கின்றீர்களே!

மண்ணாடும் விண்ணாடும் வானவரும்
 தானவரும் மற்றுமெல்லாம்,
உண்ணாத பெருவெள்ளம் உண்ணாமல்
 தான்விழுங்கி யுய்யக்கொண்ட,

Koviloor Digital Library

கண்ணாளன் கண்ணமங்கை நகராளன்
கழல்சூடி, அவனையுள்ளத்
தெண்ணாத மானிடத்தை யெண்ணாத
போதெல்லா மினியவாறே. 2008

இந்த மண்ணுலகம், விண்ணுலகம், விண்ணுலகத் தேவர்கள், அசுரர்கள் மற்றும் இருக்கின்ற உயிருள்ளன உயிரில்லாதன ஆகிய அனைத்தும் தகையவொண்ணாத அளவில் உண்டான 'உலகப் பிரளயம்' என்னும் பெருவெள்ளத்தில் அகப்பட்டுத் தவித்திருந்த காலத்தில் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் அவ்வெள்ளம் விழுங்கிவிடாதபடி தானே விழுங்கித் தன் வயிற்றினில் வைத்துப் பாதுகாத்தருளினன். இத்தகைய அருளாளப் பெருமானாகிய எம் பெருமான் ஸ்ரீமந்நாராயணனே திருக்கண்ணமங்கை என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்றான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீபக்தவச்சலப் பெருமானின் திருவடிகளைத் தன் தலையிலே் இருத்திக் கொண்டும், அவனைத் தம் உள்ளத்தினுள்ளே எண்ணிக் கொண்டும் இல்லாத மனிதர்களை அடியேன் மனதில் எண்ணாமலிருக்கும் காலமெல்லாம் அடியேனுக்கு இனிய காலமாகும்.

மறம்கிளர்ந்து கருங்கடல்நீ ருரம்துரந்து
பரந்தேறி யண்டத்தப்பால்,
புறம்கிளர்ந்த காலத்துப் பொன்னுலகம்
ஏழினையும் ஊழில்வாங்கி,
அறம்கிளர்ந்த திருவயிற்றின் அகம்படியில்
வைத்தும்மை யுய்யக்கொண்ட,
நிறம்கிளர்ந்த கருஞ்சோதி நெடுந்தகையை
நினையாதார் நீசர்தாமே. 2009

மறத்தன்மை மிக்க கொடிய கருங்கடலின் நீரின் வெள்ளத்தின் வேகத்துடன் கூடி ஓடிப் பரந்து விரிந்து ஏறிப் பெருவெள்ளமாகச் சென்ற பெருவெள்ளமானது, அனைத்து அண்டங்கட்கும் அப்பால் செல்லும் அளவில் உலகப்பிரளயம் உண்டான அக்காலத்தில் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் பொன்னையொத்த அழகிய உலகங்கள் ஏழினையும் தன் திருவயிற்றில் முறைப்படியாகவே அடக்கி வைத்திருந்து பாதுகாத்தருளினான். எம்பெருமான் திருமால் செய்த இத்தகைய அறச்செயல்களே நம்மைப் பிழைக்க வைத்தது.

Koviloor Digital Library

கருநிறப் பெருமானாகிய எம்பெருமான், கருமை நிறம்மிக்க ஒளி வடிவினனாக விளங்குகிறான். இத்தகைய பெருந்தகுதியுடைய வனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் தன் மனதினால் எண்ணிப் பார்க்காதவர்கள் மிகவும் தாழ்ந்தவர்களே ஆவர்.

அண்டத்தின் முகடழுந்த அலைமுந்நீர்த்
திரைததும்ப ஆவாவென்று,
தொண்டர்க்கும் அமரர்க்கும் முனிவர்க்கும்
தானருளி, உலகமேழும்
உண்டொத்த திருவயிற்றின் அகம்படியில்
வைத்தும்மை யுய்யக்கொண்ட,
கொண்டற்கை மணிவண்ணன் தண்குடந்தை
நகர்பாடி யாடீர்களே. 2010

அண்டப்பிந்தியின் உச்சியானது, அழுந்திப் போகுமாறு அலைகடல் கிளர்ந்து எழுகின்ற அளவில் 'உலகப்பிரளயம்' உண்டான காலத்தில், ஐயோ! ஐயோ! என்று அலறி, அரற்றிய வண்ணம் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைச் சரணடைந்தவர் கட்கும், விண்ணுலகத் தேவர்களுக்கும், முனிவர்கட்கும் அருள்புரிந்த எம்பெருமான் உலகங்கள் ஏழினையும் உண்டு தன் திருவயிற் றினுள்ளே அடக்கி வைத்துப் பாதுகாத்தருளினன். மேகநிறத் தினையும், மணியின் நிறத்தினையும் ஒத்த நிறமுடைய எம்பெரு மான் திருமால் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருள் புரிகின்ற 'திருக்குடந்தை' என்னும் திருப்பதியைப்பற்றி வாயாரப் பாடி, ஆடி மகிழ்ச்சியை அடைவீர்களாக!

*தேவரையும் அசுரரையும் திசைகளையும்
கடல்களையும் மற்றும்முற்றும்,
யாவரையு மொழியாமே யெம்பெருமான்
உண்டுமிழ்ந்த தறிந்துசொன்ன,
காவளரும் பொழில்மங்கைக் கலிகன்றி
ஒலிமாலை கற்று வல்லார்,
பூவளரும் திருமகளால் அருள்பெற்றுப்
பொன்னுலகில் பொலிவர் தாமே. 2011

விண்ணுலகத் தேவர்கள், அசுரர்கள், திசைகள், ஏழு கடல்கள் மற்றுமுள்ள அனைத்துப் பொருள்கள் ஆகிய அனைத்தினையும் ஒன்றுவிடாமல் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே உண்டு, தன்

Koviloor Digital Library

திருவயிற்றில் அடக்கிப் பாதுகாத்தருளிப் பின்பு அவை அனைத்தையும் வேண்டிய காலத்தில் வெளியில் உமிழ்ந்தருளினான். இத்தகைய எம்பெருமான் திருமாலைப் பற்றி, பூக்கள் நிறைந்திருக்கின்ற சோலைகள் சூழ்ந்துள்ள 'திருமங்கை' என்னும் நகர்க்குத் தலைவனாகிய 'கலிகன்றி' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்த ஒலிமிக்க மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் கற்று அதன் பொருளை உணர்பவர்கள் செந்தாமரை மலரின் வளர்ந்து கொண்டிருக்கின்ற திருமகளின் திருவருளைப் பெற்று, 'பொன்னுலகம்' என்னும் திருப்பரமபதத்தினை அடைந்து, மிகச் சிறப்புடனும் பொலிவுடன் விளங்குவார்கள்.

7. நீணாகம்
கண்ணனைக் காணாக் கண் முதலியன பயனில், எனல்

கொச்சகக் கலிப்பா

*நீணாகம் சுற்றி நெடுவரைநட்டு, ஆழ்கடலைப்
பேணான் கடைந்தமுதம் கொண்டுகந்த பெம்மானை,
பூணார மார்வனைப் புள்ளூரும் பொன்மலையை,
காணாதார் கண்ணென்றும் கண்ணல்ல கண்டாமே. 2012

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஆழம்மிக்க திருப்பாற்கடலில் தான் பள்ளி கொண்டு திருக்கண் வளர்கின்ற நிலையையும் பேணிப் பாதுகாக்காமல், நீண்ட வாசுகி என்னும் பாம்பைக் கயிறாகச் சுற்றி, மந்தரமலை என்னும் மலையை நட்டுக் கடைந்து, அதனால் கிடைக்கப்பெற்ற திருவமுதினைத் தேவர்களுக்குக் கொடுத்தருளினன். அத்தகைய எம்பெருமான் திருமால் மாலைசூடிய திருமார்பினையுடையவனாகிக் கருடாழ்வான்மீது ஏறிச் செல்லும் பொன் போன்ற மலையை ஒத்தவனாக இருக்கின்றான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் காணாத கண்கள் எக்காலத்திலும் கண்கள் அல்ல என்பதை நாம் அறிந்து கொண்டோமே.

நீள்வான் குறளுருவாய் நின்றிரந்து மாவலிமண்,
தாளால் அளவிட்ட தக்கணைக்கு மிக்கானை,
தோளாத மாமணியைத் தொண்டர்க் கினியானை,
கேளாச் செவிகள் செவியல்ல கேட்டாமே. 2013

Koviloor Digital Library

'குறள் வடிவு' என்னும் 'வாமன' அவதாரம் மேற்கொண்டு மகாபலிச் சக்கரவர்த்தியின் வேள்வியின் முன்னே சென்று நின்று தன்னுடைய திருவடிகளால் மூன்றடி மண் வேண்டும் என்று வேண்டிப் பெற்ற பின்பு, திரிவிக்ரமம் என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு, தன் திருவடிகளால் அளந்த பின்பும் அஃது போதாது என்ற அளவில் நெடிது வளர்ந்துள்ள எம்பெருமான் திருமால், முதல் தாம்பூலம் பெறுவதற்கு ஏற்றவனாகி, ஒளி வீசுவதில் குறைபாடற்ற நீலமணி போன்றும் விளங்குகின்றான். திருத்தொண்டர்களுக்கு இனியவனாகத் திகழ்கின்ற எம்பெருமானின் புகழ்பற்றிக் கேட்டறி யாத செவிகள் செவிகளே அல்ல என்பதை நாம் பெரியவர்களிட மிருந்து கேட்டு அறிந்திருக்கிறோம்.

தூயானைத் தூய மறையானை, தென்னாலி
மேயானை மேவா ளுயிருண் டமுதுண்ட
வாயானை, மாலை வணங்கி யவன்பெருமை,
பேசாதார் பேச்சென்றும் பேச்சல்ல கேட்டாமே. 2014

தூய்மை மிக்கவனை, தூய்மையான மறைகளைக் கொண்டி ருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைத் தெற்கேயுள்ள ''திருவாலி'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் எம்பெருமான் திருவயலாளி மணவாளப் பெருமான், தன்னிடம் பொருத்தமற்ற வகையில் பூதனைப் பேயின் நச்சு கலந்த முலைப்பாலை உண்டு, அதன் காரணமாக அவள் உயிரைப் போக்கியருளினன். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் தன் தாய் அசோதைப் பிராட்டியினிடம் திருவமுது உண்ட திருவாயினை யுடையவன். இத்தகைய எம்பெருமான் திருமாலாகிய ஸ்ரீகண்ண பிரானை வணங்கி, அவன் பெருமைகளைப்பற்றிப் பேசாதவர்களின் பேச்சுகள் எக்காலத்திலும் பேச்சுகள் ஆகாது என்பதனை நாம் பெரியவர்கள் கூறக் கேட்டறிந்திருக்கிறோம்.

கூடா இரணியனைக் கூருகிரால் மார்விடந்த,
ஓடா அடலரியை உம்பரார் கோமானை,
தோடார் நறுந்துழாய் மார்வனை, ஆர்வத்தால்
பாடாதார் பாட்டென்றும் பாட்டல்ல கேட்டாமே. 2015

கூடாமல் பகைவனாகவே இருக்கும் இரணியன் என்னும் அசுரனைத் தன் திருக்கரங்களிலுள்ள கூர்மையான நகங்களைக்

Koviloor Digital Library

கொண்டு மார்பைப் பிளந்து இருகூறாக்கிய, பின்வாங்கி ஓடாத வீரம் செறிந்த நரசிம்மமூர்த்தியை, விண்ணுலகத் தேவர்களின் தலைவனை, நறுமணமிக்க இதழ்களை உடைய திருத்துழாய் மாலையைச் சூடியிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப்பற்றி ஆர்வத்துடன் பாடாதவர்கள் பாடுகின்ற பாடல்கள் யாவும் பாடல்களல்ல என்பதைப் பெரியவர்கள் கூறக் கேட்டறிந்து இருக்கிறோம்.

மையார் கடலும் மணிவரையும் மாமுகிலும்,
கொய்யார் குவளையும் காயாவும் போன்றிருண்ட
மெய்யானை, மெய்ய மலையானைச் சங்கேந்தும்
கையானை, கைதொழா கையல்ல கண்டாமே. 2016

மையினை ஒத்த நிறத்தினையுடைய கடலும், நீலமணி போன்ற மலையையும், கறுத்த பெரிய மேகங்களையும், பறிக்கத்தக்க குவளை மலர்களையும், காயாம்பூவையும் போன்று இருண்ட திருமேனியினை எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை 'திருமெய்யம்' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் திருமெய்யப்பன் திருச்சங்கினை ஏந்திய திருக்கரங்களைக் கொண்டுள்ளான். இத்தகைய எம்பெருமான் திருவடிகளைக் கண்டு தொழாமலிருக்கின்ற கைகள் உண்மையில் கைகளல்ல என்பதனை நாம் அறிந்து கொண்டோம்.

கள்ளார் துழாயும் கணவலரும் கூவிளையும்,
முள்ளார் முளரியும் ஆம்பலுமுன் கண்டக்கால்,
புள்ளாயோர் ஏனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கென்று,
உள்ளாதா ருள்ளத்தை யுள்ளமாக் கொள்ளோமே. 2017

தேன் நிறைந்திருக்கின்ற மணம்மிக்க திருத்துழாய், அல்லிப் பூக்கள், வில்வஇலை, முட்கள் நிறைந்த தாமரை மலர்கள், ஆம்பல் பூக்கள் ஆகிய மலர்களைத் தன் கண் எதிரே காண்கின்றபொழுது, இவைகளெல்லாம், அன்னம் என்னும் பறவையாகவும், வராகம் என்னும் திருஅவதாரம் பெற்றவராகவும் தோன்றி இப்பூமியை எடுத்துப் பாதுகாத்தருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் பொன்னை ஒத்த திருவடிகளுக்கே சூட்டிட வேண்டுமென்று எண்ணிப் பார்க்காதவர்களின் உள்ளத்தினை உள்ளமாகக் கருத மாட்டோம்.

Koviloor Digital Library

கனையார் கடலும் கருவிளையும் காயாவும்
அனையானை, அன்பினால் ஆர்வத்தால், என்றும்
சுனையார் மலரிட்டுத் தொண்டராய் நின்று,
நினையாதார் நெஞ்சென்றும் நெஞ்சல்ல கண்டாமே. 2018

ஒளி மிக்கிருக்கின்ற கடலையும், கருவிளைப்பூவையும், காயாம்பூவையும் ஒத்த திருமேனியைக் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனிடம் மிகுந்த பக்தியுடனும், பேரார்வத்துடனும், நீர் நிறைந்த சுனைகளில் மலர்ந்திருக்கின்ற மலர்களைக் கொண்டு, வழிபட்டு, அடியார்களாக இருப்பதற்கு என்று எக்காலத்தும் நினைக்காமல் இருக்கின்ற நெஞ்சமானது உண்மையில் நெஞ்சாகக் கருத இயலாது என்பதனை நாம் நன்கு கண்டறிந்தோம்.

வெறியார் கருங்கூந்தல் ஆய்ச்சியர் வைத்த,
உறியார் நறுவெண்ணெய் தானுகந் துண்ட
சிறியானை, செங்க ணெடியானைச் சிந்தித்
தறியாதார், என்றும் அறியாதார் கண்டாமே. 2019

நறுமணமிக்க கருங்கூந்தலை உடைய ஆய்க்குலப் பெண்கள் வைத்திருந்த உறிகளில் நிறைந்துள்ள நறுமணமுடைய வெண்ணெயினைத்தான் மகிழ்ச்சியுற்று உண்ட சிறிய வயதினனாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானை, சிவந்த திருக்கண்களையுடைய நெடியவனாகித் திரிவிக்ரமன் என்னும் திருஅவதாரம் மேற்கொண்ட எம்பெருமான் திருமாலைப்பற்றித் தம் மனதில் சிந்தித்தறியாதவர்கள் என்றும் எதையும் அறியாதவர்கள் என்பதை நாம் நன்கு கண்டோம்.

*தேனோடு வண்டாலும் திருமா லிருஞ்சோலை,
தானிடமாக் கொண்டான் தடமலர்க் கண்ணிக்காய்,
ஆன்விடையே ழன்றடர்த்தாற் காளானா ரல்லாதார்,
மானிடவர் அல்லரென் றென்மனத்தே வைத்தேனே. 2020

தேனையுண்ட வண்டுகள் ஆரவாரம் செய்து கொண்டிருக்கின்ற ''திருமாலிருஞ்சோலை மலை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீ கள்ளழகப் பெருமானே ஸ்ரீகண்ணபிரானாக அவதாரம் பண்ணின காலத்தில் நெய்தல் மலர்களையுடைய நப்பின்னைப்பிராட்டியை அடையும் பொருட்டு ஏழு எருதுகளை அடக்கி வெற்றி பெற்றான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரானுக்கு ஆட்பட்டவராக இல்லாத

Koviloor Digital Library

வர்களை மனிதர்கள் அல்லர் என்று அடியேனின் மனத்தினுள்ளே வைத்து எண்ணிக் கொண்டிருக்கிறேன்.

*மெய்ந்நின்ற பாவம் அகல, திருமாலைக்
கைந்நின்ற ஆழியான் சூழும் கழல்சூடி,
கைந்நின்ற வேற்கைக் கலிய னொலிமாலை,
ஐயொன்று மைந்தும் இவைபாடி யாடுமினே. 2021

உலகத்திலுள்ள உண்மையான பாவங்களெல்லாம் அகன்று போகும்படியாகத் திருவாழியானைத் தன் திருக்கரத்தினில் ஏந்தி யிருக்கின்ற திருக்கரங்களையுடைய எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் திருவடிகளைத் தம் தலையில் சூடியவாறு என்றும் இருந்து கொண்டிருக்கின்ற, கையில் வேல் ஏந்திய கலியன் என்னும் திருமங்கை ஆழ்வார் எம்பெருமான் திருமாலைப் பற்றிப் பாடி அருளிச் செய்த ஒலிக்கின்ற மாலை போன்று விளங்கும் பாசுரங்கள் பத்தினையும் பாடி ஆடிக் கொண்டிருங்கள்.

சாற்றுப் பாட்டுகள்

8. மாற்றமுள
நம்பியை நோக்கி, உய்யும் வகையருள் எனல்

கொச்சகக் கலிப்பா

*மாற்றமுள வாகிலும் சொல்லுவன், மக்கள்
தோற்றக் குழிதோற்று விப்பாய்கொ லென்றின்னம்,
ஆற்றங் கரைவாழ் மரம்போல அஞ்சுகின்றேன்,
நாற்றஞ் சுவையூ றொலியா கியநம்பீ! 2022

வாசனை, சுவை, தொடுகின்ற உணர்வு, ஓசை ஆகிய தன்மை களைக் கொண்டிருக்கின்ற நம்பீ! உன்னிடம் அடியேன் கூறுவது ஒன்று உள்ளது. நீ கூறும் பதிலுக்கும் தக்க பதில் கூறுவதற்கு என்று இருக்கின்றது. அஃதாவது மக்கள் பிறக்கின்ற கருப்பை என்னும் குழியாகிய கருவறையில் அடியேனைத் தள்ளிவிட்டுப் பிறவி என்னும் துன்பத்தைத் தந்துவிடுவீர்கள் என்று கருதிய அளவில் ஆற்றங்கரையில் வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கின்ற நிலையற்ற வாழ்வினைப் பெற்றிருக்கின்ற மரம்போல அஞ்சிக் கொண்டிருக் கின்றேன்.

Koviloor Digital Library

சீற்றமுள வாகிலும் செப்புவன், மக்கள்
தோற்றக் குழிதோற்று விப்பாய்கொ லென்றஞ்சி,
காற்றத் திடைப்பட்ட கலவர் மனம்போல,
ஆற்றத் துளங்கா நிற்பனா ழிவலவா! 2023

திருவாழியானைத் தன் திருக்கரத்தில் ஏந்திக் கொண்டிருக்கும் எம்பெருமான் திருமாலே! நீ சீற்றம் கொண்டிருப்பினும் அடியேன் கூறுவனவற்றைக் கேட்குமாறு வேண்டுகின்றேன். மக்கள் பிறக்கின்ற 'கருப்பை' என்னும் குழியினின்றும் மீண்டும் மீண்டும் தோற்றுவித்துப் பிறவித் துன்பத்தை அளித்து விடுவீர்களோ என்று அஞ்சி இருக்கின்றோம். அதனால் அடியேனின் மனமானது சூறைக் காற்றில் அகப்பட்ட மரக்கலத்தில் பயணம் செய்பவர்களின் மனம் போன்று அடியேனின் மனம் ஆறுதல் பெற இயலாமல் நடுங்கிக் கொண்டிருக்கிறது.

தூங்கார் பிறவிக்க ளின்னம் புகப்பெய்து,
வாங்காயென்று சிந்தித்து நானதற் கஞ்சி,
பாம்போ டொருகூ ரையிலே பயின்றாற்போல்,
தாங்காதுள் ளம்தள்ளும் என்தா மரைக்கண்ணா! 2024

அடியேன் வணங்கக் கூடிய எம்பெருமான் செந்தாமரைக் கண்ணனே! சங்கடங்கள் நிறைந்திருக்கின்ற பிறவிகள்தோறும் இதுவரை அனுபவித்தது போதாமல் இனிமேலும் அடியேனுக்குத் தூக்கமயமான பிறவிகளிலே மீண்டும் மீண்டும் ஈடுபடாதவாறு ஈடுபடாதிருக்குமாறு வேண்டுகின்றேன். ஒருவேளை அவ்வாறு ஈடுபடுத்தி விடுவீர்களோ என்று அஞ்சுகிறேன். இந்தப் பிறவி என்பது அடியேனுக்கு ஒரே கூரை வீட்டில் பாம்புடன் சேர்ந்து வாழ்வதனைப் போன்ற அச்சத்தினை அளிக்கின்றது. இதனால் அடியேனின் மனம் தாங்கிக்கொள்ள இயலாமல் தடுமாறிக் கொண்டிருக்கின்றது.

உருவார் பிறவிக்க ளின்னம் புகப்பெய்து,
திரிவாயென்று சிந்தித்தி யென்றதற் கஞ்சி,
இருபா டெரிகொள் ளியினுள் எறும்பேபோல்,
உருகாநிற்கு மென்னுள்ளம் ஊழி முதல்வா! 2025

பல்லூழிக் காலத்திற்கும் முதல்வனாகத் திகழும் எம்பெருமான் திருமாலே! எத்துணைதான் பல்பிறவிகள் எடுத்துத் துன்பங்கள் பலவற்றை அனுபவித்திருக்கின்றபோதிலும் குறைவிலாது வளர்ந்து

Koviloor Digital Library

கொண்டிருக்கும் இந்த நிலையில் இனிமேலும் பல பிறவிகளும் உண்டாகுமாறு செய்து, அதன் வாயிலாக நீ சுற்றிச் சுழல வேண்டும் என்று அடியேனைப்பற்றி எண்ணிக் கொண்டு இருக்கமாட்டீர் களன்றோ! இரண்டு பக்கங்களிலும் நெருப்பு எரியும் கொள்ளிக் கட்டைகளினிடையே அகப்பட்ட எறும்பினைப்போல அடியேனின் மனம் உருகி நிற்கின்றது.

கொள்ளக் குறையாத இடும்பைக் குழியில்,
தள்ளிப் புகப்பெய்தி கொல்லென் றதற்கஞ்சி,
வெள்ளத் திடைப்பட்ட நரியினம் போலே,
உள்ளம் துளங்காநிற்பன் ஊழி முதல்வா! 2026

பல்லூழிக் காலங்களுக்கும் முதல்வனாகத் திகழும் எம் பெருமான் திருமாலே! அனுபவிக்க அனுபவிக்கக் குறையாத அளவில் வளர்ந்து கொண்டே இருக்கும் பிறப்பு என்னும் குழியாகிய கர்ப்பம் என்ற நிலையில் அடியேனைத் தள்ளிவிட்டு, அதன் வழியே மேன்மேலும் ஓடுமாறு செய்து விடுவீர்களோ என்று அஞ்சிக்கொண்டிருக்கின்றேன் அதனால் வெள்ளத்தில் அகப்பட்ட நரிக்கூட்டங்கள் துன்புறுவதுபோல அடியேனின் மனம் தடுமாறு கிறது.

படைநின்ற பைந்தா மரையோடு, அணிநீலம்
மடைநின் றலரும் வயலாலி மணாளா,
இடையன் எறிந்த மரமேயொத் திராமே,
அடைய அருளா யெனக்குன்ற னருளே. 2027

உழுதொழில் நடைபெறுகின்றபோது உழுகின்ற கலப்பை என்னும் படைக்கும் தப்பிய நிலையில் வளர்ந்துவரும் பசுமைமிக்க தாமரை மலர்களும், அழகாக இருக்கின்ற நீலநிற மலர்களும் நீர் பாய்கின்ற மடைகளில் மலர்ந்து இருக்கின்ற ''திருவாலி '' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திரு வயலாளி மணவாளப் பெருமானே! இடையன் அவ்வப்போது வெட்டிப்போடும் மரமானது ஓரிடம் பசுமையாகவும் மற்றோரிடம் உலர்ந்தும் காணப்படுவதுபோல், அடியேன் பிறவி என்னும் துயரில் மீண்டும் மீண்டும் அகப்பட்டுவிடாமல், உன் திருவடிகளையே அடையும்படி அடியேனுக்கு அருள்புரிந்தருளுதல் வேண்டுமாறு வேண்டுகின்றேன்.

Koviloor Digital Library

*வேம்பின்புழு வேம்பன்றி யுண்ணாது, அடியேன்
நான்பின்னு முன்சே வடியன்றி நயவேன்,
தேம்பலிளந் திங்கள் சிறைவிடுத்து, ஐவாய்ப்
பாம்பின் அணைப்பள்ளி கொண்டாய் பரஞ்சோதீ! 2028

தேய்ந்து வருகின்ற இளம்பிறைச் சந்திரனுக்கு உண்டான நோயைப் போக்கிப் பாதுகாத்தருளிய பெருமானே! ஐந்து தலைகளைக் கொண்ட பாம்பினைப் படுக்கையாகக் கொண்டு பள்ளி கொண்ட பெருமானாகிய பரஞ்சோதியே! வேப்பமரத்தில் இருக்கின்ற புழு அஃது இருக்கின்ற வேப்பமரத்தையன்றி வேறெதனையும் தின்னாததுபோல, அடியேன் உனக்கு வேம்பு போன்றிருப்பினும் உன் திருவடிகளைப்பற்றி நிற்பதன்றி வேறெதனையும் விரும்ப மாட்டேன். ஆகையால், அடியேனைப் பாதுகாத்து அருள்புரியுமாறு வேண்டுகிறேன்.

*அணியார் பொழில்சூழ் அரங்க நகரப்பா,
துணியேன் இனிநின் அருளல்ல தெனக்கு,
மணியே! மணிமா ணிக்கமே! மதுசூதா,
பணியா யெனக்குய் யும்வகை, பரஞ்சோதீ! 2029

அழகுமிக்க சோலைகள் சூழ்ந்து இருக்கும் திருவரங்கம் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருவரங்கப் பெருமானே! இனிமேல் அடியேனுக்கு உன் அருளைப் பெறுவதன்றி வேறு எந்தப் புகலிடமும் கிடையாது. ஆகையால், அடியேன் மற்று எந்த அளவிலும் வேறு வகையில் முயற்சி செய்வதற்காகத் துணியமாட்டேன். நீலமணி போன்றவனே! மாணிக்கமணியே! மதுசூதனனே! பரஞ்சோதீ! அடியேன் உய்யும் வகையினை நீயே அடியேனுக்கு அருள்புரிதல் வேண்டும்.

*நந்தா நரகத் தழுந்தா வகை,நாளும்
எந்தாய்! தொண்டரா னவர்க்கின் னருள்செய்வாய்,
சந்தோகா் தலைவனே! தாமரைக் கண்ணா,
அந்தோ! அடியேற் கருளாயுன் னருளே. 2030

என் தந்தையே! அடியவர்கட்கு இன்னருள்புரியும் எம் பெருமான் திருமாலே! சாந்தோக்கிய வேதங்களின் பொருளாக நிற்கும் தலைவனே! தாமரைக் கண்ணனே! அடியேன் இனியும் பிறவி என்னும் நரகத்தில் சென்று சேர்ந்து துன்புறாதிருக்கும் வழிவகை

Koviloor Digital Library

களையும், நாள்தோறும் உன்னையே அனுபவிக்கும் தொண்டராகவே என்றும் இருப்பதற்கு அருள்புரியுமாறு வேண்டுகின்றேன்.

*குன்றமெடுத் தாநிரை காத்தவன் றன்னை,
மன்றில் புகழ்மங்கை மன்கலி கன்றிசொல்,
ஒன்றுநின்ற வொன்பதும் வல்லவர் தம்மேல்,
என்றும் வினையாயின சாரகில் லாவே. 2031

'கோவர்த்தனம்' என்னும் மலையைக் குடையாகப் பிடித்துப் பசுக்கூட்டங்களையும், ஆய்க்குல மக்களையும் பாதுகாத்தருளிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைப்பற்றி, மன்றங்களில் பெரும் புகழ்பெற்றுள்ள திருமங்கை என்னும் நகருக்கு அரசனாகத் திகழும் 'கலிகன்றி' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த சொல் மாலையாகிய இப்பத்துப் பாசுரங்களையும் கற்றுவல்லவர்களாகத் திகழும் அடியவர்களிடத்தே வினைகள் என்றென்றும் சார்ந்திராமல் விலகிச் சென்றுவிடும்.

பெரிய திருமொழி முற்றிற்று.



Koviloor Digital Library

திருக்குறுந்தாண்டகம்

அறுசீர் ஆசிரிய விருத்தம்

*நிதியினைப் பவளத் தூணை
நெறிமையால் நினைய வல்லார்,
கதியினைக் கஞ்சன் மாளக்
கண்டுமுன் அண்ட மாளும்,
மதியினை மாலை வாழ்த்தி
வணங்கியென் மனத்து வந்த,
விதியினைக் கண்டு கொண்ட
தொண்டனேன் விடுகி லேனே. 2032

எம்பெருமான் திருமால், நமக்கு வேண்டும் பொழுதெல்லாம் உதவியாக இருக்கும் நிதியாக இருக்கின்றான் பவளத்தூணைப் போன்று இனியதோர் ஆதாரமாக விளங்குகின்றான். இந்த எம்பெருமானை முறையான வழிமுறைகளில் நினைக்கக்கூடிய ஆற்றல்மிக்கவர்கள் எண்ணுகின்ற அளவுக்குக் கதியாகத் திகழ்கிறான். 'கம்சன்' என்னும் அசுரனை அழித்து அவனுடைய ஆயுள் முடியு மாறு செய்தான். இவ்வாறு உலகினைக் காத்தருளிய எம்பெருமான் தன் அடியார்களை அன்புடன் என்றென்றும் நினைத்துக் கொண்டி ருக்கின்றான். இத்தகைய எம்பெருமானை, அறிவுமிக்கிருக்கும் திருமாலை வாயார வாழ்த்தித் துதித்து, வணங்கி அடியேனின் மனத்தில் வந்து தோன்றிய அளவில் கண்டு கொண்டேன். கருணை யுடன் கூடிய எம்பெருமானை தொண்டனாகிய அடியேன் ஒருபோதும் விட்டுவிடமாட்டேன்.

காற்றினைப் புனலைத் தீயைக்
கடிமதி ளிலங்கை செற்ற
ஏற்றினை, இமயம் மேய
எழில்மணித் திரளை, இன்ப
ஆற்றினை அமுதந் தன்னை
அவுணனா ருயிரை யுண்ட
கூற்றினை, குணங்கொண் டுள்ளம்
கூறுநீ கூறு மாறே. 2033

Koviloor Digital Library

காற்று, நீர், நெருப்பு ஆகிய இவைகளின் உள்ளே நின்று உறைகின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணஃன் ஸ்ரீஇராமபிரானாகத் திருஅவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் மதிள்கள் சூழ்ந் திருக்கின்ற இலங்கை மாநகரத்தினை அழித்த வீரம்மிக்க காளை யாவான். இமயமலையிலுள்ள 'திரிப்பிரிதி' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்றான். அழகிய மணிகளின் திரளைப் போன்றுள்ள இனியவனாகத் திகழ்கின்றான். அடியேனுக்கு மகிழ்ச்சியை உண்டாக்கக் கூடிய திருவமுதாகத் திகழ்கிறான். இத்தகைய எம்பெருமான் இரணியன் என்னும் அசுரனின் உயிரைப் போக்கியருளிய இயமன் போன்று விளங்குகின்றான். என் மனமே! இந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருக்குணங்களை அடியேனின் உள்ளம் எண்ணி எண்ணிப் பேசுவாயாக! இவ்வாறு உன்னையே எண்ணிக் கொண்டு இருப்பது போன்ற பேறு வேறுண்டோ!

பாயிரம் பரவை தன்னுள்
பருவரை திரித்து, வானோர்க்
காயிருந் தமுதங் கொண்ட
அப்பனை எம்பி ரானை,
வேயிருஞ் சோலை சூழ்ந்து
விரிகதி ரிரிய நின்ற,
மாயிருஞ் சோலை மேய
மைந்தனை வணங்கி னேனே. 2034

அகலமாகவும், ஆழமாகவும் இருக்கின்ற திருப்பாற்கடலில் பெரியதான மந்தரமலையைச் சுழன்று சுழன்று வருமாறு செய்து, அக்கடலினின்றும் உண்டான திருவமுதினை தேவர்கட்கு அளித் தருளிய அப்பனை, எம்பிரானை அடியேனுக்கு அமுதாக ஆனவன் இத்தகைய எம்பெருமான் சூரியனின் ஒளிக்கிரணங்கள் உள்ளே நுழையாதவாறு மூங்கில்கள் நிறைந்திருக்கின்ற சோலைகள் சூழ்ந் திருக்கின்ற 'திருமாலிருஞ்சோலைமலை' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்றான். இளமையான வடிவுடன் திகழும் எம்பெருமான் ஸ்ரீகள்ளழகப் பெருமானை அடியேன் வணங்கிக் கொண்டிருக்கின்றேனே!

Koviloor Digital Library

கேட்கயா னுற்ற துண்டு
கேழலா யுலகங் கொண்ட,
பூக்கெழு வண்ண னாரைப்
போதரக் கனவில் கண்டு,
வாக்கினால் கருமந் தன்னால்
மனத்தினால் சிரத்தை தன்னால்,
வேட்கைமீ தூர வாங்கி
விழுங்கினேற் கினிய வாறே. 2035

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனிடத்தே அடியேன் ஒன்று பற்றிக் கேட்க முற்பட்டதுண்டு. வராக (பன்றி) அவதாரம் மேற்கொண்டு இப்பூமியை எடுத்துக் காப்பாற்றி அருளினான். பூப்போன்று மென்மையாகியும், அதன் நிறத்தினையும் பெற்றுள்ள எம்பெருமான் திருமாலை அடியேன் கண்ட கனவின் வாயிலாக என் மனத்தினில் மானஸீகமாகக் கண்டு, சொல், செயல், மனம் என்னும் முத்திறத்தானும் ஈடுபட்டுப் பெருமுயற்சி கொண்டு, ஆசை அதிகரித்த அளவில் விழுங்குவதுபோல அனுபவித்துக் கொண்டு இருக்கின்றேன். இத்தகைய அனுபவமானது அடியேனுக்கு இனிமை அளிப்பதாக அமைந்துள்ளது.

இரும்பனன் றுண்ட நீர்போல்
எம்பெரு மானுக்கு, என்றன்
அரும்பெற லன்பு புக்கிட்
டடிமைபூண் டுய்ந்து போனேன்,
வரும்புயல் வண்ண னாரை
மருவியென் மனத்து வைத்து,
கரும்பினின் சாறு போலப்
பருகினேற் கினிய வாறே. 2036

நன்றாகப் பழுக்கக் காய்ச்சிய இரும்பு குடித்துவிட்ட நீரைப் போன்று எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனிடத்தே அடியேன் கிடைத்தற்கரிய அன்பினை வைத்து, அடிமையாகப் பெற்று, அதன் காரணமாக உய்வுபெற்று இருக்கின்றேனே! அடியேனைத் தானே தேடிவந்த, மேகநிற வண்ணனாகிய எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனை அடியேனின் மனதிலே தங்கியிருக்கச் செய்து, அதன் மூலம் கரும்புச்சாற்றைப் பருகியதனாலுண்டான இனிப்பைப் போன்றதோர் பேரின்பத்தை அடையப் பெற்றேன். இத்தகைய இனிமைதான் என்னே ஆச்சரியம்.

Koviloor Digital Library

மூவரில் முதல்வ னாய
ஒருவனை யுலகங் கொண்ட,
கோவினைக் குடந்தை மேய
குருமணித் திரளை, இன்பப்
பாவினைப் பச்சைத் தேனைப்
பைம்பொன்னை யமரர் சென்னிப்
பூவினை, புகழும் தொண்டர்
என்சொல்லிப் புகழ்வர் தாமே? 2037

பிரம்மதேவன், சிவபெருமான், தேவேந்திரன் ஆகிய மூவர்க்கும் முழுமுதற் கடவுளாக இருக்கின்ற ஒருவனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை, மகாபலிச் சக்கரவர்த்தியினிடம் இவ்வுலகத்தை தானமாகப் பெற்றுக்கொண்ட எம்பெருமானை, 'திருக்குடந்தை' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் சிறந்த நீல இரத்தினக்குவியல் போன்று விளங்கும் எம்பெருமானை இன்பப் பாசுரங்களைப் போன்றும், இனிய பசுமைத்தேனைப் போன்றும் இனியவனாக இருக்கின்ற எம்பெருமானை பசும் பொன்னைப்போல் ஒளிமிக்கவனை விண்ணுலகத் தேவர்கள் தம் தலையில் சூடிக் கொண்டிருக்கின்ற பூப்போன்ற மென்மையான எம்பெருமானைப் புகழ்ந்து பாடுகின்ற அடியவர்கள் எவ்வாறெல்லாம் எடுத்துரைத்துப் புகழ்வார்களோ!

இம்மையை மறுமை தன்னை
எமக்குவீ டாகி நின்ற,
மெய்ம்மையை விரிந்த சோலை
வியன்திரு வரங்கம் மேய,
செம்மையைக் கருமை தன்னைத்
திருமலை ஒருமை யானை,
தன்மையை நினைவா ரென்றன்
தலைமிசை மன்னு வாரே. 2038

இப்பிறவியின்போது அறிவையும், மறுபிறப்பு என்னும் வீடுபேற்றின்போது தொண்டுபுரியும் உள்ளத்தை அடியேனுக்கு அளித்து அருளிய உண்மையானவனாகிய எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனைப் பரந்து விரிந்த அளவில் சோலைகள் மிகுந்த அழகிய ''திருவரங்கம்'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருவரங்கநாதப் பெருமானை ஒவ்வொரு

Koviloor Digital Library

யுகங்களுக்கும் ஏற்றவகையில் சிவப்பு நிறமாகவும், கறுப்பு நிறமாகவும் விளங்குகின்ற எம்பெருமான் திருமலை என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டெழுந்தருளும் ஒப்பற்ற எம்பெருமான் திருவேங்கடப் பெருமானைப் பற்றியும் அந்த எம்பெருமானைப்பற்றி எப்போதும் எண்ணிக் கொண்டிருக்கின்ற, அடியவர்கள், அடியேனின் தலையின்மீது நிலையாக நின்று அருள்புரிவார்கள்.

வானிடைப் புயலை மாலை
வரையிடைப் பிரசம் ஈன்ற,
தேனிடைக் கரும்பின் சாற்றைத்
திருவினை மருவி வாழார்,
மானிடப் பிறவி யந்தோ!
மதிக்கிலர் கொள்க, தந்தம்
ஊனிடைக் குரம்பை வாழ்க்கைக்
குறுதியே வேண்டி னாரே. 2039

ஆகாயத்தினிடையில் கூடியிருக்கின்ற மேகத்தை ஒத்த நிறமுடைய எம்பெருமான் திருமால், மலையினின்றும் கிடைத்த மலைத்தேனுடன் கருப்பஞ்சாறுபோல இனிமை உடையவனாக விளங்குகின்றான். திருவினும் திருவாக விளங்கும் எம்பெருமான் திருமாலை வணங்கி வாழ்வதற்கு அறியாதவர்கள் அனைவரும் மனிதர்கள் ஆகமாட்டார்கள். இப்படிப்பட்டவர்கள் மனிதப் பிறவியை மதிக்காதவர்களாகக் கருதக் கூடியவர்களேயாவர். ஐயகோ! இந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை வணங்கிக் கொண்டிருப் பதைவிட்டு விட்டு இந்த மாமிச உடம்பினையே உறுதியானது என்று கருதிடத் தேடி அலைந்து கொண்டிருக்கிறார்களே!

உள்ளமோ ஒன்றில் நில்லாது
ஓசையி னெரிநின் றுண்ணும்
கொள்ளிமே லெறும்பு போலக்
குழையுமா லென்ற னுள்ளம்,
தெள்ளியீர்! தேவர்க் கெல்லாம்
தேவரா யுலகம் கொண்ட
ஒள்ளியீர், உம்மை யல்லால்
எழுமையும் துணையி லோமே. 2040

Koviloor Digital Library

அடியேனின் மனமானது குறிப்பிட்ட ஒரு நிலையில் நிற்பது கிடையாது. ஒலியுடன் கூடிய எரிகின்ற நெருப்புக் கட்டையின்மீது இருக்கின்ற எறும்பினைப்போல அடியேனின் மனம் பிறப்பு இறப்பு ஆகியவைகளை எண்ணி எண்ணி உடைந்து விடுகின்றது. ஐயகோ! தெளிவுமிக்க என் தெய்வமே! விண்ணுலகத் தேவர்களுக்கெல்லாம் தெய்வமாகத் திகழும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனாகிய நீர் மகாபலிச்சக்கரவர்த்தியிடமிருந்து இப்பூமியினை யாசித்துப் பெற்ற ஒளியையுடையவராகி நிற்கின்றீர்! அடியேனுக்குண்டாகின்ற ஏழுவகைப் பிறவிகளிலும், எக்காலத்தும் உம்மைப்பற்றிக் கொள்வ தன்றி வேறெதனையும் துணையாக இருக்குமாறு பற்றிக் கொள்ள மாட்டோம்.

சித்தமும் செவ்வை நில்லா
 தென்செய்கேன் தீவி னையேன்,
பத்திமைக் கன்பு டையேன்
 ஆவதே பணியா யெந்தாய்,
முத்தொளி மரத கம்மே!
 முழங்கொளி முகில்வண் ணா,என்
அத்த!நின் னடிமை யல்லால்
 யாதுமொன் றறிகி லேனே. 2041

அடியேனின் மனமோ உன் திருவடிகளைத் தரித்து நிற்பதில்லை. உன் திருவடிகளைப்பற்றி எண்ணிப் பார்க்காத காரணத்தினால் ஏற்பட்ட தீவினைகளுக்கு என்ன செய்வேன்? அடியேன் உன்மீது பக்தியுண்டாகி உன் திருவடிகளின்மீது அளவற்ற அன்பு உண்டாகு மாறு அடியேனுக்கு அருள்புரிதல் வேண்டும். எந்தையே! முத்தி னையும், மரகதத்தினையும் போன்று ஒளி வீசுகின்ற எம்பெருமானே! முழங்கிக் கொண்டிருக்கும் ஒளிவீசும் மேகம் போன்ற நிறமுடைய திருமேனியை உடைய எம்பெருமானே! அடியேன் உம்மிடம் அடிமைபூண்டு கைங்கர்யம் செய்வதன்றி வேறெதனையும் அடியேன் அறிந்திருக்கவில்லை.

தொண்டெல்லாம் பரவி நின்னைத்
 தொழுதடி பணியு மாறு
கண்டு,தான் கவலை தீர்ப்பான்
 ஆவதே பணியா யெந்தாய்,

Koviloor Digital Library

அண்டமா யெண்டி சைக்கும்
　　ஆதியாய் நீதி யான,
பண்டமாம் பரம சோதி!
　　நின்னையே பரவு வேனே. 2042

அடியேன் செய்ய வேண்டிய அடிமைத்திறம் பற்றிப் பலவாறு பேசி, உன்னையே தொழுது உன் திருவடிகளைப்பற்றிப் பணிந்து வணங்கியிருக்குமாறு உள்ளத்தளவிலே எண்ணி எண்ணி அதனால் தனக்குண்டான கவலையைப் போக்கிக் கொள்ளும் பொருட்டு எண்ணிய எண்ணத்தின்படி அடைவதற்கு, நீரே அருள்புரிந்து வேண்டியதைச் செய்தருள வேண்டும். எந்தையே! எம்பிரானே! இந்த அண்டத்தினுள்ளேயிருக்கும் அனைத்திற்கும் ஆதிமூலமாக நின்று, யாவர்க்கும் தலைவனாகி எட்டுத் திசைகளிலுமுள்ள அனைத்துத் தெய்வங்களுக்கும் மூலகாரணமானவனாகி நின்று முறைபிறழாத செல்வமாகத் திகழும் பொருளாகிய பரஞ்சோதியே! அடியேன் எக்காலத்திலும் உன்னையே எண்ணித் தொழுது கொண்டிருப்பேனே!

ஆவியை யரங்க மாலை
　　அழுக்குடம் பெச்சில் வாயால்,
தூய்மையில் தொண்ட னேன்நான்
　　சொல்லினேன் தொல்லை நாமம்,
பாவியேன் பிழைத்த வாறென்
　　றஞ்சினேற் கஞ்ச லென்று,
காவிபோல் வண்ணர் வந்தென்
　　கண்ணுளே தோன்றி னாரே. 2043

திருவரங்கத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் திருமால் உலகத்திலுள்ள யாவர்க்கும் உயிர் ஆகி நிற்பவனாவான் அழுக்கு சேர்ந்திருக்கின்ற எச்சில் நிறைந்த வாயினைக் கொண்டு தூய்மையற்ற இதர பணிகளில் ஈடுபட்டுத் திரிந்து கொண்டு இருக்கின்ற அடியேன் எம்பெருமான் ஸ்ரீமந் நாராயணனின் திருநாமங்களைச் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். பெரும் பிழைகளைச் செய்து கொண்டிருக்கின்ற பாவியேன் பிழைக்கும் வழியாதென்றறியாமல் அஞ்சினேன் அவ்வாறு அஞ்சிய அடியேனுக்கு அஞ்சற்க! என்று கூறியருளிய கருங்குவளை மலர் போன்ற நிறத்தினைக் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன்

Koviloor Digital Library

தாமாகவே வந்து அடியேனின் கண்ணிலுள்ளே தோன்றினாரே! என்னே! எம்பெருமானின் திருவருள்!

இரும்பனன் றுண்ட நீரும்
போதரும் கொள்க, என்றன்
அரும்பிணி பாவ மெல்லாம்
அகன்றன என்னை விட்டு,
சுரும்பமர் சோலை சூழ்ந்த
அரங்கமா கோயில் கொண்ட,
கரும்பினைக் கண்டு கொண்டென்
கண்ணிணை களிக்கு மாறே. 2044

அடியேன் அனுபவித்தே ஆக வேண்டிய பல்வகைப் பிணிகளும், பாவச்செயல்களும் ஆகிய இவை எல்லாம் பழுக்கக் காய்ந்த இரும்பு குடித்த நீரும் வெளிவரும் என்பதுபோல் எம்பெருமான் திருமாலின் திருவருளினாலே அடியேனைவிட்டு நீங்கிவிட்டன. திருவரங்கனின் திருக்கருணையினால் நீங்கியது. வண்டுகள் பாடுகின்ற சோலைகள் சூழ்ந்திருக்கின்ற திருவரங்கம் என்னும் பெரிய கோயிலில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்ற கரும்பு போன்று இனிக்கின்ற இனியவன் எம்பெருமான் திருவரங்கப் பெருமானை அடியேன் கண்டு கொண்டு என் இணையான இருகண்களிக்குமாறு அருள்புரிவாயாக!

காவியை வென்ற கண்ணார்
கலவியே கருதி, நாளும்
பாவியே னாக வெண்ணி
அதனுள்ளே ப்ழுத்தொ ழிந்தேன்,
தூவிசேர் அன்னம் மன்னும்
சூழ்புனல் குடந்தை யானை,
பாவியேன் பாவி யாது
பாவியே னாயி னேனே! 2045

கருநெய்தற் பூவை வெல்லும் அளவிற்கு மேன்மையான கண்களுடன் கூடிய பெண்களுடன் சேர்ந்து கொண்டு அவர்கள் தரும் இன்பத்தினை அடையக் கருதி, நாள்தோறும் பாவம் செய்தவனாகி எண்ணி, அப்பாவச் செயல்களைச் செய்வது என்பதிலேயே

Koviloor Digital Library

ஆழ்ந்திருந்ததனால் அடியேன் அழிந்தொழிந்தேன். சிறகுகளையுடைய அன்னப்பறவைகள் வாழ்ந்து கொண்டிருக்கின்ற நீர்வளம் மிக்க சோலைகள் சூழ்ந்திருக்கின்ற திருக்குடந்தை என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய ஆராவமுதப் பெருமானை அடியேன் எண்ணிக் கொண்டிராமல் பாவிகள் முதல் பாவியாக இருந்து கொண்டு பாவியாக ஆகி வாழ்ந்து கொண்டு இருக்கின்றேனே!

முன்பொலா இராவ ணன்றன்
 முதுமதி ளிலங்கை வேவித்து,
அன்பினா லனுமன் வந்தாங்
 கடியிணை பணிய நின்றார்க்கு,
என்பெலா முருகி யுக்கிட்
 டென்னுடை நெஞ்ச மென்னும்,
அன்பினால் ஞான நீர்கொண்
 டாட்டுவ னடிய னேனே.[1] 2046

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் முன்பு ஸ்ரீஇராமபிரான் திருஅவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் மனித வாழ்வளவில் பொல்லாதவனாக இருந்த இராவணன் என்னும் அரக்கர்களின் அரசனுடைய மதிள் சூழ்ந்த இலங்கை மாநகரினை இலங்கையை எரியச் செய்த அனுமன், சீதை இருக்குமிடம் கண்டு அறிந்த பின்பு, அன்பின் பெருக்குக் காரணமாக ஸ்ரீஇராமபிரானின் இணைத் திருவடிகளில் சேவித்து வணங்கினான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானிடம் கொண்டிருந்த பெரும் பக்தியின் காரணமாக என்பும் முழுவதுமாக உருகிப்போனது மட்டுமன்றி, அவ்வெலும்பு இற்றுவிட்டது என்னும்படியாக மனம் என்னும் அன்பினாலே 'ஞானம்' என்னும் நீரினைக் கொண்டு 'திருமஞ்சனம்' என்னும் நன்னீராட்ட வேண்டும் என்னும் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரானின் அடியவனாக ஆகிவிட்டேனே!

மாயமான் மாயச் செற்று
 மருதிற நடந்து, வையம்
தாயமா பரவை பொங்கத்
 தடவரை திரித்து, வானோர்க்

Koviloor Digital Library

கீயுமால் எம்பி ரானார்க்
கென்னுடைச் சொற்க ளென்னும்,
தூயமா மாலை கொண்டு
சூட்டுவன் தொண்ட னேனே? 2047

அடியேனாகிய நான் எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் மாயமான் மாண்டு போகும்படியாகச் செய்தான். அந்த எம்பெருமானே ஸ்ரீகண்ணபிரான் திருஅவதாரம் மேற்கொண்டிருந்த காலத்தில் மருத மரங்கள் முறிந்து போகும்படியாப் பீடுநடை நடந்து சென்றான். எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திருப்பாற்கடலைப் பொங்குமாறு 'மந்தரமலை' என்னும் மலையை நட்டுச்சுழலச் செய்து, அதன்மூலம் கிடைத்த தேவாமிர்தத்தினைத் தேவர்களுக்கு அளித்தருளினன். இத்தகைய அரும்பெருஞ் செயல்களைச் செய்த எம்பிரானார்க்கு அடியேன் என்னுடைய சொற்கள் என்னும் தூய்மையான மாலையினைச் சூட்டுவேனே!

பேசினார் பிறவி நீத்தார்
பேருளான் பெருமை பேசி,
ஏசினார் உய்ந்து போனார்
என்பதிவ் வுலகின் வண்ணம்,
பேசினேன் ஏச மாட்டேன்
பேதையேன் பிறவி நீத்தற்கு,
ஆசையோ பெரிது கொள்க
அலைகடல் வண்ணர் பாலே. 2048

(1,2. இவ்விரு பாசுரங்களும் திருமஞ்சன காலத்தில் சேவிப்பவை.)

திருப்பேர்நகர் என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் 'ஸ்ரீ அப்பக்குடத்தான்' என்னும் திருநாமம் கொண்ட எம்பெருமானுடன் பேசிய அடியவர்கள் தம் பிறவி என்னுப் பிணியைப் போக்கிக் கொண்டனர். அந்த எம்பெருமான் ஸ்ரீ கண்ணபிரானைக் கடிந்து பேசிக் கொண்டிருந்த கொடியவனான சிசுபாலன் போன்றவர்களும் உய்வடைந்தனர் என்று உலகோர் உயர்வாக எடுத்துரைக்கின்றனர். அடியவனாகிய இப்பேதையேன் ஏதோ பேசி இருக்கின்றேனே ஒழிய, அடியேன் இத்தகைய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைப்பற்றிச் சிறிதும் ஏசுமாறு ஏதும் கூறமாட்டேன். என் பிறவிப் பிணியைப் போக்கிக் கொள்ளும்

Koviloor Digital Library

பொருட்டு அலைகடல் நிறம் கொண்ட எம்பெருமான் திருமாலி னிடத்து அடியேன் கொண்ட ஆசையோ மிகப் பெரியது. இவ்வாறு ஆசை கொள்வது என்பது உறுதியான ஒன்றாகும்.

இளைப்பினை யியக்கம் நீக்கி
யிருந்துமுன் னிமையைக் கூட்டி,
அளப்பிலைம் புலன டக்கி
அன்பவர் கண்ணே வைத்து,
துளக்கமில் சிந்தை செய்து
தோன்றலும் சுடர்விட்டு, ஆங்கே
விளக்கினை விதியில் காண்பார்
மெய்ம்மையே காண்கிற் பாரே. 2049

அறியாமை, அகங்காரம், ஆசை, வெறுப்பு, மதம் ஆகிய ஐவகைத் துன்பங்களையும் இயங்காமலிருக்குமாறு செய்து, ஓர் இருக்கையில் அமர்ந்து மூக்கின் நுனியில் தன் இமையைக் கொண்டு பார்வையை வைத்து அளப்பதற்கரிய செயல்களைச் செய்து வரும் ஐந்து புலன்களையும் அடக்கி வைத்து, அந்த எம்பெருமான்மீது இடைவிடாத அன்பினை அடியேன் வைத்து, அவனிடம் தடங்க லில்லாத பக்தி கொண்டு, அவனையே தியானம் செய்து, எம் பெருமானைக் காண்பதற்கு முனைபவரும், அவ்வாறு முனைகின்ற நிலையில் சுடர்விட்டுத் தோன்றுகின்ற ஞானத்தினால் வேதங்களில் கூறியுள்ள பரஞ்சோதியான எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைச் சாத்திரங்களில் கூறப்பட்டுள்ள முறையின்படி காண்பதற்கு எண்ணுபவர்கள் நிலைநின்ற தர்மமாகவே அவனைக் காண்பார்களோ! காணமாட்டார்கள். காண்பரென்றும் பொருள் கொள்ளலாம்.

*பிண்டியார் மண்டை ஏந்திப்
பிறர்மனை திரிதந் துண்ணும்,
உண்டியான் சாபம் தீர்த்த
ஒருவனூர், உலக மேத்தும்
கண்டியூர் அரங்கம் மெய்யம்
கச்சிபேர் மல்லை என்று
மண்டினார், உய்யல் அல்லால்
மற்றையார்க் குய்ய லாமே? 2050

Koviloor Digital Library

தவமுனிவர்கள் போன்று தவமிருந்து உளுத்த பொடிகள் உதிரும் மண்டை ஓடு என்னும் கபாலத்தினைப் பிச்சை ஏற்கும் பாத்திரமாக ஏந்தியவாறு திரிந்து பிறர் வீடுகளுக்குச் சென்று பிச்சை எடுத்த சிவ பெருமானுக்குண்டான சாபத்தினைப் போக்கியருளிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் உலகம் ஏத்திப் புகழ்ந்து கொண்டு இருக்கும் திருத்தலமாகத் திருக்கண்டியூர், திருவரங்கம், திருமெய்யம், திருக்கச்சி, திருப்பேர்நகர், திருக்கடல்மல்லை ஆகிய திருத்தலங் களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிந்து கொண்டிருக் கின்றான். இத்தகைய எம்பெருமானிடத்தில் ஈடுபாடு கொண்டிருக் கின்ற அடியவர்கள் உய்வுபெறுவர். அவ்வாறு இல்லாத மற்றவர்கட்கு அவ்வாறு உய்வு பெறுவதற்கு இயலுமோ? அஃது இயலாத ஒன்றாகும். அஃது இயலும் என்றும் ஒருவாறு கருதலாம்.

*வானவர் தங்கள் கோனும்
மலர்மிசை அயனும், நாளும்
தேமலர்தூவி ஏத்தும்
சேவடிச் செங்கண் மாலை,
மானவேல் கலியன் சொன்ன
வண்டமிழ் மாலை நாலைந்தும்,
ஊனம தின்றி வல்லார்
ஒளிவிசும் பாள்வர் தாமே. 2051

விண்ணுலகத் தேவர்களின் அரசனாகிய தேவேந்திரனும், கொப்பூழ்த் தாமரை மலரில் தோன்றிய பிரமதேவனும் ஆகிய இவ்வருவரும் எக்காலத்திலும் அழகிய தேன் நிறைந்த மலர்களைத் தூவி, ஏத்தித் தொழுது, வணங்கிக் கொண்டிருக்கக் கூடிய, எம் பெருமான் அழகிய திருவடிகளையும், சிவந்த திருக்கண்களை உடையவனாகத் திகழ்கின்றான். அத்தகைய எம்பெருமான் திருமாலைப்பற்றி பெரிய வேலாயுதத்தினைத் தம் திருக்கரங்களில் கொண்டுள்ள 'கலியன்' என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த ஆழ்ந்த பொருள்களைக்கொண்டு விளங்கும் தமிழ் மாலை யான இந்த இருபது பாசுரங்களையும் எவ்விதக் குறைபாடுகளுமில்லாதவாறு கற்றறிந்த திறமைமிக்க வல்லுநர்களாகிய அடியவர்கள் விண்ணுல கிலுள்ள ஒளி வீசுகின்ற திருப்பரமபதத்தினை ஆளப்பெறுவர்.

திருக்குறுந்தாண்டகம் முற்றிற்று

Koviloor Digital Library

திருநெடுந்தாண்டகம்

எண்சீர் ஆசிரிய விருத்தம்

*மின்னுருவாய் முன்னுருவில் வேதம் நான்காய்
விளக்கொளியாய் முளைத்தெழுந்த திங்கள் தானாய்,
பின்னுருவாய் முன்னுருவில் பிணிமூப் பில்லாப்
பிறப்பிலியாய் இறப்பதற்கே எண்ணாது, எண்ணும்
பொன்னுருவாய் மணியுருவில் பூதம் ஐந்தாய்ப்
புனலுருவாய் அனலுருவில் திகழுஞ் சோதி,
தன்னுருவாய் என்னுருவில் நின்ற எந்தை
தளிர்புரையும் திருவடியென் தலைமே லவ்வே.[1] 2052

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், முன்னே கண்ணால் காணக் கூடியதாகிய இயங்காப் பொருள்களில், உலகமும், உலகிலுள்ள அனைத்துப் பொருள்களும் மின்னலைப் போன்று, நிலை யின்மையைக் காட்டுகின்றான். இவ்வுலகத்து உயிர்கள் உய்யும் பொருட்டு, நான்கு வேதங்களாகவும், அவ்வேதங்களினுள்ளே உள்ள பொருள்களினாலுண்டாகக்கூடிய விளக்கொளியானது இருளைப் போக்குவதுபோல அறிவின்மை என்னும் இருளைப் போக்கக் கூடிய ஞானஒளியாகத் திகழ்கின்றான். இத்தகைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், மலைஉச்சியில் முளைத்து வெளிப்படுகின்ற சந்திரனையொத்த ஆத்மஞானத்தை அடியேனுக்கு அளித்தருளினான். காதால் கேட்பது, மனனம் செய்வது, மனதில் ஊன்றச் செய்வது, நேரில் காண்பது ஆகியவற்றையும் அளித்தருளினன். முன்னே தோன்றக்கூடிய உலக வாழ்க்கையில் துன்பம், நோய், முதுமைத் தன்மை ஆகியவைகள் இல்லாததாய், 'பிறப்பு' என்ற ஒன்று இல்லாத ஆத்மாவுக்குத் தலைவனாக இருந்து, கைவல்யத்தைக் கழிக்கச் செய்தருளினான். பொன்னின் இயல்புடையவனாகி, மணியின் உருவாகி, ஐந்து உபடநிதமயமாகி, இயற்கையைக் கடந்த நிலையில் ஐம்பெரும் பூதங்களான நிலம், நீர், தீ, ஆகாயம், காற்று ஆகியவை களில் உறைபனாகின்றான். அனைத்து சோதிகளுக்கும் மேலான சோதியாக விளங்குகிறான். அடியேனின் உடலில் இருந்து கொண்டி ருக்கும் எந்தையாகிய ஸ்ரீமந்நாராயணனின் செவ்விய திருவடித் தாமரைகளை அடியேனின் தலையில் சூடிக்கொள்கின்றேன். அவ்வாறு சூடிக் கொண்டிருப்பது அடியேனின் தலைக்கு அழகைத் தருகிறது.

Koviloor Digital Library

பாருருவில் நீரெரிகால் விசும்பு மாகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற,
ஏருருவில் மூவருமே யென்ன நின்ற
இமையவர்தந் திருவுருவே றெண்ணும் போது,
ஓருருவம் பொன்னுருவம் ஒன்று செந்தீ
ஒன்றுமா கடலுருவம் ஒத்து நின்ற,
மூவுருவும் கண்டபோ தொன்றாம் சோதி
முகிலுருவம் எம்மடிகள் உருவந் தானே. 2053

எம்பெருமான் திருமாலாகிய பரம்பொருளைப் பிரமதேவன், மகாவிஷ்ணு, சிவபெருமான் என்னும் மூன்று உருவ நிலைகளினின்றும் எண்ணிப் பார்க்குங்கால், பிரமதேவன் பொன்நிறமுடையவன். சிவபெருமான் தீயினைப் போன்று சிவப்பு நிறம் உடையவன். திருமாலின திருவடிவமோ கடல் நிறத்தினை ஒத்தது. இம்மூவரையும் ஒருருவில் நின்றுள்ள நிலையில் தத்துவங்களை ஆராய்ந்து பார்க்கும்போது பூமி, நீர், தீ, காற்று, ஆகாயம் ஆகிய அனைத்தினையும் படைத்தும், பல்வேறு நிலைகளில் இருக்கின்ற உலகங்களையெல்லாம் உண்டாக்கியும், அவ்வுலகங்கள் அனைத்தினுள்ளும் ஒன்றி நின்று விளங்கும் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் என்னும் பரஞ்சோதியாகத் திகழ்பவனும் அந்த ஒருவனே ஆவான். அந்த எம்பெருமானின் திருவுருவமானது மேகநிறத்தினை ஒத்துள்ளது. அவனே எம்பெருமான் திருமால் ஆவான்.

திருவடியில் கருநெடுமால் சேயன் என்றும்
திரேதைக்கண் வளையுருவாய்த் திகழ்ந்தா னென்றும்,
பெருவடிவில் கடலமுதம் கொண்ட காலம்
பெருமானைக் கருநீல வண்ணன் றன்னை,
ஒருவடிவத் தோருருவென் றுணர லாகா
ஊழிதோ றூழிநின் றேத்தல் அல்லால்,
கருவடிவில் செங்கண்ண வண்ணன் றன்னைக்
கட்டுரையே யாரொருவர் காண்கிற் பாரே? 2054

அடியவர்களிடத்தே பேரன்பு கொண்டுள்ள எம்பெருமான் திருமாலின் திருமேனி, இயல்பாகவே கரிய நிறத்தையுடையது என்றாலும், திரேதாயுகத்தில் சிவப்பு நிறமுடையவனாகத் திகழ்ந்தான். மேலும் பல வடிவுகளைக் கொண்டும் விளங்கினான். இத்தகைய எம்பெருமான் திருமால் கிரேதாயுகத்தில் சங்கினை

Koviloor Digital Library

யொத்தவெண்மை நிறமுடையவனாகத் திகழ்ந்தான். பல வடிவுகளை மேற்கொண்டுள்ள எம்பெருமான் திருப்பாற்கடலைக் கடைந்து, அக்கடலினின்றும் திருவமுது என்னும் தேவாமிர்தத்தினைப்பெற்று தேவர்கட்கு அளித்தான். இவ்வாறாக ஒவ்வொரு ஊழிக்காலத்திலும் இருந்து கொண்டு, எம்பெருமானைத் துதித்து, வணங்கி, வழிபடுவதன்றி, இந்த எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் இத்தகைய திருமேனி வடிவு கொண்டவன் என்பதை அறிந்துகொள்வது என்பது இயலாத ஒன்றாகும். எம்பெருமான் கருநீல நிறமுடையவனாகவும், சிவந்த திருக்கண்களையுடையவனாகவும் விளங்கும் நிலையில் அனைத்து மக்களும் அவனைப் பற்றியே எண்ணி எண்ணிப் பேசினாலும், அவன் காட்டி அருளிச்செய்த அவனுடைய திருமேனியின் வடிவழகினை அடியேன் கண்டு உகந்து பேசிப்போவது போல அடியேனையன்றி வேறு எவரால் காணக்கூடிய பேற்றினைப் பெறமுடியும்? அஃது இயலாது என்பது கருத்து.

இந்திரற்கும் பிரமற்கும் முதல்வன் றன்னை
　　இருநிலம்கால் தீநீர்விண் பூதம் ஐந்தாய்,
செந்திறத்த தமிழோசை வடசொல் லாகித்
　　திசை நான்கு மாய்த்திங்கள் ஞாயி றாகி,
அந்தரத்தில் தேவர்க்கும் அறிய லாகா
　　அந்தணனை அந்தணர்மாட் டந்தி வைத்த
மந்திரத்தை, மந்திரத்தால் மறவா தென்றும்
　　வாழுதியேல் வாழலாம் மடநெஞ் சம்மே.[1] 2055

அடியேன் வயப்பட்ட நெஞ்சமே! விண்ணுலகத் தேவர்களின் தலைவனாகிய தேவேந்திரனுக்கும், பிரமதேவனுக்கும் முழுமுதற் காரணமாகத் திகழ்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன், பூமி, காற்று, தீ, நீர், ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்கட்கு உள்ளே இருந்து செயல்படுகின்றான். செம்மை மொழியாக விளங்கும் தமிழின் ஓசையாகவும், வடமொழிச் சொற்களாகவும் எம்பெருமான் விளங்குகின்றான். இத்தகைய எம்பெருமான் திருமால் நான்கு திசைகளாகவும், சந்திரன், சூரியன் ஆகியவர்களாகவும் உறைந்து கொண்டிருக்கின்றான். இவ்வாறாக இருக்கும் எம்பெருமானின் நிலையினை விண்ணுலகத்தில் வாழ்கின்ற தேவர்களும் அறிந்து கொள்ள இயலாத அளவில் இருக்கின்றனர். அந்தணர்களிடத்தே அமைந்திருக்கின்ற செல்வமாகிய வேதங்களின் உச்சியாக இருக்கின்ற

Koviloor Digital Library

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனை அந்த வேதத்தின் மந்திரங்களைக் கொண்டு, ஓதித் துதித்து எக்காலத்தும் வாழ்ந்து கொண்டிருப்போமே யானால், திருப்பரமபதம் அடைந்து வாழலாம் என்பது உறுதியானதாகும்.

ஒண்மிதியில் புனலுருவி ஒருகால் நிற்ப
ஒருகாலுங் காமருசீர் அவுணன் உள்ளத்து,
எண்மதியுங் கடந்தண்ட மீது போகி
இருவிசும்பி னூடுபோ யெழுந்து, மேலைத்
தண்மதியும் கதிரவனும் தவிர ஓடித்
தாரகையின் புறந்தடவி அப்பால் மிக்கு,
மண்மமுழுதும் அகப்படுத்து நின்ற எந்தை
மலர்புரையும் திருவடியே வணங்கி னேனே. 2056

எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் திரிவிக்ரமன் என்னும் திருஅவதாரம் ஏற்ற காலத்தில் தன் மென்மையான ஒரு திருவடியை அண்டத்துக்கும் அப்பாலுள்ள நீர் நிலையினைத் தொட்ட அளவிற்குப் பரந்து சென்றது. அதற்கும் மேலே செல்வதற்கு வேண்டிய இடமில்லாமை காரணமாக அங்கேயே நின்றது. எம் பெருமானின் மற்றொரு திருவடியானது, வள்ளலாக விளங்கும் மகாபலிச்சக்கரவர்த்தியின் மனதிலே நினைக்கக்கூடிய நினைவையும் கடந்து, அண்டத்துக்கும் அப்பாலுள்ள விசாலமான வானத்தை ஊடுருவிச் சென்றது. அதற்குப்பின்பு விண்வெளியிலுள்ள சந்திர மண்டலம், சூரியமண்டலம் ஆகிய இடங்களையும் கடந்து, அதற்கும் மேலேயுள்ள நட்சத்திர மண்டலத்தினையும் கடந்து அதற்கும் மேலுள்ள பிரமதேவனுடைய உலகம் வரை சென்று படர்ந்தது. இவ்வாறு இப்பூமி முதற்கொண்டு அனைத்து உலகங் களையும் அளந்து தன்னகப்படுத்திய பெரும் முயற்சி நிறைவு பெற்ற மனநிறைவிலிருக்கின்ற எம் பெருமான் அமைதியாக நின்றான். இவ்வாறாக உலகத்தை அளந்த எம்பெருமான் திருமாலின் தாமரைத் திருவடிகளை அடியேன் வணங்கும் பேறு பெற்றேன்.

அலம்புரிந்த நெடுந்தடக்கை அமரர் வேந்தன்
அஞ்சிறைப்புள் தனிப்பாகன் அவுணர்க் கென்றும்,
சலம்புரிந்தங் கருளில்லாத் தன்மை யாளன்
தானுகந்த வூரெல்லாம் தன்தாள் பாடி,

Koviloor Digital Library

நிலம்பரந்து வரும்கலுழிப் பெண்ணை யீர்த்த
நெடுவேய்கள் படுமுத்த முந்த வுந்தி,
புலம்பரந்து பொன்விளைக்கும் பொய்கை வேலிப்
பூங்கோ வலூர்தொழுதும் போது நெஞ்சே! 2057

என் மனமே! எமக்கு இன்னின்ன வேண்டுமென்று வேண்டி நிற்பவர்கள் யாவரும் இதுபோதும்! இதுபோதும்!! என்று மனநிறைவு பெறுமளவுக்கு அளித்தருளும் நீண்ட திருக்கரங்களை உடையவன் எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன். அவன் விண்ணுலகத் தேவர்களுக் கெல்லாம் தலைவன். அழகிய சிறகுகளைப் பெற்றுள்ள கருடாழ் வானை வாகனமாகக் கொண்டவன். தீயசெயல்களையே செய்து கொண்டிருக்கும் அருளற்ற அரக்கர்களைத் தண்டிக்கும்போது, கருணை காட்டாமல் அவ்வரக்கர்களை அழித்த பெருமைமிக்கவன். இத்தகைய எம்பெருமான்தான் உகந்து ஏற்றுக்கொண்ட திருப்பதி களிலெல்லாம் அவன் திருவடிகள்பற்றிப் பணிந்து பாடித் துதிப்போம். அதற்குப் பின்பு திருக்கோவலூர் சென்று உலகளந்த பெருமானை வழிபடுவோம். இத் 'திருக்கோவலூர்' என்னும் திருப்பதியில் செல்லும் தென்பெண்ணை என்னும் ஆறானது எங்கும் பரந்து பெருகி வருகின்ற அளவில் பெரிய மூங்கில்களில் விளைந் துள்ள முத்துகளைத் தள்ளிக்கொண்டபடியே வயல்களில் புகுந்து பரவிச்சென்று பொன்னை விளைவிக்கும். குளங்கள் சூழ்ந்திருக்கின்ற 'திருக்கோவலூர்' என்னும் திருத்தலம் சென்று எம்பெருமான் உலகளந்தப் பெருமானை வழிபடுவாயாக!

வற்புடைய வரைநெடுந்தோள் மன்னர் மாள
வடிவாய மழுவேந்தி யுலக மாண்டு,
வெற்புடைய நெடுங்கடலுள் தனியே லுய்த்த
வேள்முதலா வென்றானூர் விந்தம் மேய,
கற்புடைய மடக்கன்னி காவல் பூண்ட
கடிபொழில்சூழ் நெடுமறுகில் கமல வேலி,
பொற்புடைய மலையரையன் பணிய நின்ற
பூங்கோவ லூர்தொழுதும் போது நெஞ்சே! 2058

1. மடநெஞ்சமே என்பதும் பாடம்.

என் மனமே! அழகுமிக்க மலையையொத்த நெடிதுயர்ந்த பலம் மிகுந்த தோள்களைக் கொண்டுள்ள மன்னர்களைப் பரசுராமர்

Koviloor Digital Library

தன்னுடைய மழு என்னும் ஆயுதம் கொண்டு அழித்து, மாண்டு போகச் செய்தார். எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் இந்த உலகினை நெடுங்காலம் ஆண்டுவந்தார். மலையைத் தன்னிடத்தே அடக்கிக் கொண்டு இருக்கும் பரந்து விரிந்து கிடக்கும் நெடிய கடலினுள்ளே வேலாயுதத்தை எய்துவித்த முருகன் முதலிய யாவரையும் வெற்றி பெற்ற எம்பெருமான் 'திருக்கோவலூர்' என்னும் திருத்தலத்தில் எழுந்தருள்புரிகின்றான். கற்பில் மேம்பட்டவளாகிய துர்க்கை, விந்தியமலையில் தவம் மேற்கொண்டு, திருமாலுக்கு அடிமை பூண்டு, காவல் தொண்டுபுரியும் திருத்தலம் இந்தத் திருக்கோவ லூராகும். இத்திருத்தலம் அகன்ற வீதிகள், தாமரைக்குளங்கள் ஆகியவைநிறைந்திருக்கின்றன. இத்தலத்தில் 'மலையமான்' என்னும் மன்னன் வந்து எம்பெருமான் உலகளந்தப் பெருமானை வழிபட்டான். இத்தகைய திருக்கோவலூர் திருத்தலம் சென்று வழிபடுவாயாக!

*நீரகத்தாய்! நெடுவரையி னுச்சி மேலாய்!
நிலாத்திங்கள் துண்டத்தாய்! நிறைந்த கச்சி
ஊரகத்தாய், ஒண்துறைநீர் வெஃகா வுள்ளாய்!
உள்ளுவா ருள்ளத்தாய், உலக மேத்தும்
காரகத்தாய்! கார்வானத் துள்ளாய்! கள்வா!
காமருபூங் காவிரியின் தென்பால் மன்னு
பேரகத்தாய், பேராதென் நெஞ்சி னுள்ளாய்!
பெருமான்உன் திருவடியே பேணி னேனே. 2059

காஞ்சிபுரத்தில் உள்ள 'திருநீரகம்' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஜெகதீசப் பெருமானே! உயர்ந்து ஓங்கியுள்ள திருவேங்கடம் என்னும் திருமலையின் உச்சியில் நின்ற கோலத்தில் எழுந்தருளும் எம்பெருமான் திருவேங்கடவனே! காஞ்சிபுரம் ஏகாம்பரேசுவரர் திருக்கோயிலில், 'நிலாத் திங்கள் துண்டம்' என்னும் திருப்பதியில் 'நிலாத்திங்கள் துண்டத்தான்' என்னும் திருநாமம் கொண்டு எழுந் தருள்புரியும் எம்பெருமானே! காஞ்சிபுரம் என்னும் திருப்பதியில் அமைந்துள்ள 'திருஊரகம்' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் 'திரிவிக்ரமன்' என்னும் உலகளந்தப் பெருமானே! நீர்த்துறைகளுடன் கூடிய குளக்கரையில் (காஞ்சி

Koviloor Digital Library

புரத்தில்) 'திருவெஃகா' என்னும் திருத்தலத்தில் திருக்கண் வளர்ந் தருளும் 'சொல்லியவண்ணம் செய்த பெருமானே!' உன்னையே எண்ணிக் கொண்டிருக்கும் அடியவர்களின் உள்ளத்தில் உறைந்து நிற்கும் எம்பெருமானே! உலகோர் யாவரும் துதித்துப் போற்றக் கூடிய 'திருக்காரகம்' என்னும் திருப்பதியில் (காஞ்சிபுரம்) எழுந்தருள் புரியும் கருணாகரப் பெருமானே! 'திருக்கார்வானம்' (காஞ்சிபுரம்) என்னும் திருத்தலத்தில் எழுந்தருள்புரியும் எம்பெருமான் திருக்கார்வானப் பெருமானே! அடியவர்க்குத் தன் திருமேனியைக் காட்டாமல் ஒளித்துக் கொண்டிருக்கும் கள்ளப்பிரானே! அழகுமிகுந்த காவிரி நதியின் தென்கரையில் உள்ள 'திருப்பேர்நகர்' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் அப்பக்குடத்தானே! அடியேனின் உள்ளத்தில் நீங்காது என்றென்றும் நிலைத்து நிற்பவனே! எம்பெருமான் உன் திருவடிகளையே என்றென்றும் வணங்கிக் கொண்டிருக்கும் பேறுபெற்றுப் பேணிக்கொண்டு இருக்கின்றேனே!

வங்கத்தால் மாமணிவந் துந்து முந்நீர்
மல்லையாய்! மதிள்கச்சி யூராய்! பேராய்,
கொங்கத்தார் வளங்கொன்றை யலங்கல் மார்வன்
குலவரையன் மடப்பாவை யிடப்பால் கொண்டான்,
பங்கத்தாய்! பாற்கடலாய்! பாரின் மேலாய்!
பனிவரையி னுச்சியாய்! பவள வண்ணா,
எங்குற்றாய் எம்பெருமான்! உன்னை நாடி
ஏழையேன் இங்ஙனமே உழிதரு கேனே! 2060

கப்பல்களின்மூலமாக மணிகளைக் கொண்டு வந்து சேர்க்கின்ற கடற்கரையிலுள்ள ''திருக்கடல்மல்லை'' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் 'தலசயனப் பெருமானே!' 'திருக்கச்சி' என்னும் திருத்தில் எழுந்தருள்புரியும் எம்பெருமான் பேரருளாளப் பெருமான் என்னும் வரதராஜப் பெருமானே! 'திருப்பேர்நகர்' என்னும் திருத்தலத்தில் எழுந்தருள்புரியும் அப்பக்குடத்தானே! தேன்துளிர்க்கின்ற வளம்மிக்க கொன்றைப் பூமாலையைத் தன் மார்பில் சூடிக்கொண்டு, மலையரசனின் மகள் பார்வதியையும் தன் திருமார்பில் இடப்பக்கம் கொண்டுள்ள சிவபெருமானுக்குத் தன் திருமேனியின் ஒரு பக்கம் இடம்

Koviloor Digital Library

அளித்தருளிய எம்பெருமானே! திருப்பாற்கடலில் பள்ளி கொண்டு திருக்கண் வளர்ந்திருக்கும் எம்பெருமானே! உலகோர் அனைவருக்கும் திருவருள்புரியும் பொருட்டு அவதாரம் பண்ணியருளிய பெருமானே! குளிர்ந்த திருமலையின் உச்சியில் எழுந்தருளப் பெற்ற திருவேங்கடப் பெருமானே! பவளம் போன்ற நிறம் கொண்ட திருமேனியை உடையவனே! எம்பெருமானே! எங்கே தங்கியிருக்கின்றாய்? எளியவனாகிய அடியேன் உன்னையே நாடி நாடி இவ்வாறாக அலைந்து கொண்டிருக்கின்றேனே!

பொன்னானாய்! பொழிலேழும் காவல் பூண்ட
புகழானாய்! இகழ்வாய தொண்ட னேன்நான்,
என்னானாய்? என்னானாய்? என்னல் அல்லால்
என்னறிவ னேழையேன், உலக மேத்தும்
தென்னானாய் வடவானாய் குடபா லானாய்
குணபால தாயினாய் இமையோர்க் கென்றும்
முன்னானாய், பின்னானார் வணங்கும் சோதி!
திருமூழிக் களத்தானாய் முதலா னாயே! 2061

உலகோர் அனைவரும் போற்றித் துதித்து வணங்கும் 'தென்திரு மாலிருஞ்சோலை' என்னும் திருப்பதியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் கள்ளழகப் பெருமானே! யானையையொத்த எம்பெருமானே! வடக்கேயுள்ள திருவேங்கடமலையில் நின்றருள் புரியும் யானையை ஒத்த திருவேங்கடப் பெருமானே! மேற்குத் திக்கில் உள்ள திருவரங்கத் திருப்பதியில் திருக்கண் வளர்ந்தருள்புரியும் யானையையொத்த திருவரங்கப் பெருமானே! கிழக்குத் திக்கிலுள்ள 'திருக்கண்ணபுரம்' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் யானையையொத்த சௌரிஇராசப் பெருமானே! விண்ணுலகத் தேவர்கள் எப்பொழுதும் கண்டு வணங்குமாறு அவர்கள் முன்பாக நின்று திருக்காட்சி நல்கிடும் எம்பெருமானே! எம்பெருமானின் அடியவர்கள் வந்து வணங்கும்படியாகத் 'திருமூழிக்களம்' என்னும் திருத்தலத்தில் எழுந்தருள்புரியும் எம்பெருமான் 'திருமூழிக்களத்தான்' என்னும் அப்பன் ஸ்ரீஸூக்திநாதப் பெருமானே! சோதிவடிவான எம்பெருமானே! உலகம் உண்டாவதற்கான முழுமுதற் காரணனே! பொன் போன்று ஒளிவீசும் எம்பெருமானே! ஏழுலகங்களையும் பாதுகாத்தருளியதனால் ஏற்பட்ட பெரும்

Koviloor Digital Library

புகழ்பெற்ற பெருமானே! இகழ்ச்சியினையே கொண்டுள்ள அடியனேன் தொண்டே புரிந்துவரும் என்னுடைய யானையே! என்னுடைய யானையே! என்றெல்லாம் எடுத்துரைப்பதன்றி, என்னவென்று கூறி அழைப்பது என்பதனையும் அறிந்துகொள்ள இயலாத ஏழையேனாக இருக்கின்றேனே!

பட்டுடுக்கும் அயர்ந்திரங்கும் பாவை பேணாள்
பனிநெடுங்கண் ணீர்ததும்பப் பள்ளி கொள்ளாள்,
எட்டனைப்போ தென்குடங்கால் இருக்க கில்லாள்
எம்பெருமான் திருவரங்க மெங்கே? என்னும்
மட்டுவிக்கி மணிவண்டு முரலும் கூந்தல்
மடமானை இதுசெய்தார் தம்மை, மெய்யே
கட்டுவிச்சி சொல் ,என்னச் சொன்னாள் நங்காய்!
கடல்வண்ண ரிதுசெய்தார் காப்பா ராரே? 2062

(இப்பாசுரம் முதல் பத்துப் பாசுரங்கள்வரை தலைவியின் பிரிவாற்றாமை கண்ட தாய் இரக்கம் கொண்டு கூறுவன. இத்தலைவி தலைவனைக் காணாமல் பெரிதும் வருந்திட, எம்பெருமானிடம் பக்தி கொண்ட கட்டுவிச்சி ஒருத்தி வந்து, இத்தலைவிக்குண்டான இந்நோய் எம்பெருமானாலேயே ஆகும். அவனாலேயே இந்நோய் நீங்குவதற்கான பரிகாரம் கிடைக்கும். என்றுரைப்பதாக இப்பத்துப் பாசுரங்களும் அமைந்துள்ளன.)

என் மகள் எம்பெருமான் திருமாலின்மீது கொண்ட கலவியின் காரணமாக உண்டான பிரிவின் காரணமாக ஏற்பட்ட ஆற்றாமை பற்றிப் பட்டாடையை அழகாக உடுத்திக் கொள்கிறாள். உடனே மயங்கி சோர்ந்து விடுகிறாள். முன்பு போன்று மரப்பொம்மையை வைத்து விளையாடுவது இல்லை. நீண்ட நெடுங்கண்களில் பனிநீர் ததும்ப சோகத்தால் மனக்கலக்கமுறுகிறாள். உறங்குவதும் இல்லை. ஒரு நொடிப் பொழுது கூட என் மடியில் பொருந்தி இருப்பதில்லை. எம்பெருமானின் திருவரங்கம் எங்கே இருக்கிறது? என்று வினவிக் கொண்டே இயம்புகின்ற நிலையிலுள்ள மலர்களைச் சூடிய கூந்தலையுடையவளாகி, அழகிய மான் போன்ற என் பெண்ணை இப்படியுண்டாகுமாறு செய்தது யார்? என்று குறி சொல்பவரிடம், ''இதன் உண்மையைக் கூறு'' என்று கேட்க, அவள், ''கடல்நிறம் கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே இப்படிச் செய்து

Koviloor Digital Library

இருக்கிறார்'' என்றாள். ''பெண்களே! உலகத்தைப் பாதுகாத்துக் கொண்டிருக்கின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே இந்தப் பெண்ணுக்குண்டான இத்தகைய ஆபத்தினின்றும் பாதுகாக்கக்கூடிய வல்லமையுடையவரேயன்றி, வேறு எவராலும் இஃது ஆகாது'' என்றும் கூறினாள்.

நெஞ்சுருகிக் கண்பனிப்ப நிற்கும் சோரும்
நெடிதுயிர்க்கும் உண்டறியாள் உறக்கம் பேணாள்,
நஞ்சரவில் துயிலமர்ந்த நம்பீ! என்னும்
வம்பார்பூம் வயலாலி மைந்தா! என்னும்,
அஞ்சிறைய புட்கொடியே யாடும் பாடும்
அணியரங்க மாடுதுமோ தோழீ! என்னும்,
என்சிறகின் கீழடங்காப் பெண்ணைப் பெற்றேன்
இருநிலத்துஓர் பழிபடைத்தேன் ஏபா வம்மே! 2063

என் மகளின் மனமானது அந்த எம்பெருமானையே எண்ணி எண்ணி உருகியதன் பயனாகக் கண்களில் நீர்சொரிகின்ற அளவில் சோர்வடைந்து, மயங்கிய நிலையில் பெருமூச்சு விட்டுக் கொண்டிருக்கிறாள். உணவுகூட உண்பதில்லை. உறங்குவதும் இல்லை. 'நஞ்சினை உமிழ்கின்ற திருவனந்தாழ்வான்' என்னும் பாம்பினைப் படுக்கையாகக் கொண்டு திருக்கண் வளர்ந்தருளும் நம்பீ! என்கின்றாள். நறுமணமிக்க மலர்கள் நிறைந்திருக்கின்ற வயல்கள் சூழ்ந்திருக்கின்ற 'திருவாலி' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் 'திருவயலாளிமணாளனே!' என்றுரைக்கின்றாள். அழகிய சிறகுகளை உடைய கொடியாக விளங்கும் கருடாழ்வானைப் போன்று ஆடுகின்றாள்; பாடுகின்றாள். தோழீ! என்று அழைத்து, 'நாம் திருவரங்கத்து நீர்த்துறையில் இறங்கி நீராடுவோமோ?' என்று கேட்கின்றாள். என்னுடைய கட்டுப் பாட்டுக்கு அடங்காத பெண்ணாக நான் இவளைப் பெற்றேனே! இப்படிப்பட்டவளைப் பெற்ற நான் இவ்வுலகில் ஓர் பெரும் பழியைப் பெற்றேனே! இஃது எத்தகைய பாவச் செயலோ! அறியேன்.

கல்லெடுத்துக் கல்மாரி காத்தாய்! என்றும்
காமருபூங் கச்சியூ ரகத்தாய்! என்றும்,
வில்லிறுத்து மெல்லியல்தோள் தோய்ந்தாய்! என்றும்
வெஃகாவில் துயிலமர்ந்த வேந்தே! என்றும்,

Koviloor Digital Library

மல்லடர்த்த மல்லரையன் றட்டாய்! என்றும்,
மாகீண்ட கைத்தலத்தென் மைந்தா! என்றும்,
சொல்லெடுத்துத் தன்கிளியைச் சொல்லே என்று
துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின் றாளே! 2064

எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானே! முன்பு கோவர்த்தனம் என்னும் மலையைக் குடையாகப் பிடித்து, இந்திரன் பெய்வித்த கல்மழையைத் தடுத்துப் பசுக்களைப் பாதுகாத்தருளினாய்! என்றும், அழகான காஞ்சிமாநகரில் 'திருவூரகம்' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் 'திரிவிக்ரமன்' என்னும் உலகளந்தப் பெருமானே! என்றும், வில்லை ஒடித்துச் சீதா பிராட்டியாரைத் திருமணம் செய்து கொண்டவனே! என்றும், காஞ்சீபுரம் 'திருவெஃகா' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருக்கண் வளர்ந்தருளும் சொல்லிய வண்ணம் செய்யும் பெருமானே! என்றும், அரசே! என்றும், முன்பு கண்ணபிரானாக அவதரித்த காலத்தில் மல்லர்களுடன் போரிட்டு அவர்களை அழித்தாய்! என்றும், குதிரை வடிவில் வந்த 'கேசி' என்னும் அசுரனைக் கொன்று அழித்த திருக்கரங்களையுடையவனே! என்றும், என்னுடைய நாயகனே! என்றும், என் மகள் தன்னுடைய கிளியை நோக்கி எம்பெருமானின் திருநாமங்களைக் கூறும் பொருட்டு, அத்திருநாமங்களைச் சொல்வதற்கு ஆரம்பித்து வைத்துக் கூறுமாறு செய்கிறாள். அவ்வாறே அக்கிளி, பேசுவதைக் கேட்டு அவள் மனமுருகித் தன் முலைகளின்மீது கண்ணீர்த் துளிகள் விழுமாறு போலச் சோர்வுற்றுப் பேசிக் கொண்டிருக்கிறாளே!

முளைக்கதிரைக் குறுங்குடியுள் முகிலை மூவா
மூவுலகும் கடந்தப்பால் முதலாய் நின்ற,
அளப்பரிய ஆரமுதை அரங்கம் மேய
அந்தணனை அந்தணர்தம் சிந்தை யானை,
விளக்கொளியை மரகதத்தைத் திருத்தண் காவில்
வெஃகாவில் திருமாலைப் பாடக் கேட்டு
வளர்த்ததனால் பயன்பெற்றேன் வருக! என்று
மடக்கிளியைக் கைகூப்பி வணங்கி னாளே. 2065

காலைக் கதிரவனைப் போன்ற மேகநிறத்தினைக் கொண்டவரான எம்பெருமான் 'திருக்குறுங்குடி' என்னும் திருத்தலத்தில்

Koviloor Digital Library

திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருக்குறுங்குடி நம்பீ! மூவுலகினையும் கடந்து, அதற்கும் அப்பால் முழு முதற் கடவுளாக நின்று, அளப்பதற்கரிய திருக்கல்யாண குணங்களை உடையவன். அமுதம் போன்றவனாகத் திகழ்கிறான். இத்தகைய எம்பெருமான் 'திருவரங்கம்' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு திருவரங்க நாதப் பெருமானாகித் திருவருள் புரியும் தூய்மையானவன். வேதியர்களின் உள்ளத்தில் எண்ணிக் கொண்டிருக்கக் கூடிய சிந்தனைக்குரியவனாக விளங்குகின்றான். காஞ்சிபுரம் 'திருத்தண்கா' என்னும் திருத்தலத்தில் விளக்கொளி பெருமாளாக எழுந்தருள் புரிகின்றான். மரகதம் போன்ற திருவடிவினையுடைய எம்பெருமான் திருமாலே, 'திருவெஃகா' என்னும் திருத்தலத்தில் சொல்லிய வண்ணம் செய்த பெருமாளாகத் திருக்கண் வளர்ந்தருள் புரிகின்றான். இவ்வாறாக எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருநாமங்களைக் கிளியானது பாடிக் கொண்டு இருப்பதை அறிந்த என் மகள், அக்கிளியை நோக்கி, ''மடக்கிளியே! வருக!'' என்று வரவேற்று, ''உன்னை நான் வளர்த்ததனால் உண்டான பயனைப் பெற்றேன்'' என்று கூறித் தன் இருகரங்களையும் கூப்பி அக்கிளியை என் மகள் வணங்கினாளே!

கல்லுயர்ந்த நெடுமதிள்சூழ் கச்சி மேய
களிறென்றும் கடல்கிடந்த கனியே! என்றும்,
அல்லியம்பூ மலர்ப்பொய்கைப் பழன வேலி
அணியழுந்தூர் நின்றுகந்த அம்மான்! என்றும்,
சொல்லுயர்ந்த நெடுவீணை முலைமேல் தாங்கித்
தூமுறுவல் நகையிறையே தோன்ற நக்கு,
மெல்விரல்கள் சிவப்பெய்தத் தடவி யாங்கே
மென்கிளிபோல் மிகமிழற்றும் என்பே தையே. 2066

என் பேதை மகள் கற்களாலான உயர்ந்த மதிள்கள் சூழ்ந்திருக் கின்ற, காஞ்சிபுரத்தில் 'திருப்பாடகம்' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளிய யானையைப் போன்ற எம்பெருமான் ஸ்ரீபாண்டவதூதப் பெருமானே! என்றும், திருப்பாற் கடலில் திருக்கண் வளர்ந்தருளும் கனி போன்றவனே! என்றும், இதழ் விரியுமாறு மலர்கின்ற மலர்களும் நிறைந்திருக்கின்ற பொய்கை களும், நீர் நிலைகளும் வேலியாக அமைந்துள்ள 'திருவழுந்தூர்'

Koviloor Digital Library

என்னுட திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் தேவாதிராஜன் என்றும், என் அம்மானே! என்றும் அழைக்கின்றாள். உயர்ந்த சொற்களை ஒலிக்குமாறு போன்று நாதம் மிகுந்த வீணையினைத் தன் முலைகளின்மீது தாங்கிக் கொண்டிருந்த வாறே சிறிதே புன்முறுவல் பூத்தபடி, தன் மென்மையான விரல்கள் சிவக்கும்படியாகத் தடவியவாறு என் பேதப் பெண்ணாகிய இவள் இங்கே வாசித்துக் கொண்டு, கிளியைப் போன்று மிகவும் மிழற்றிக் கொண்டிருக்கிறாளே!

* கன்றுமேய்த் தினிதுகந்த காளாய்! என்றும்,
கடிபொழில்சூழ் கணபுரத்தென் கனியே! என்றும்,
மன்றமரக் கூத்தாடி மகிழ்ந்தாய்! என்றும்
வடதிருவேங் கடம்மேய மைந்தா! என்றும்,
வென்றசுரர் குலங்களைந்த வேந்தே! என்றும்
விரிபொழில்சூழ் திருநறையூர் நின்றாய்! என்றும்,
துன்றுகுழல் கருநிறத்தென் துணையே! என்றும்ட
துணைமுலைமேல் துளிசோரச் சோர்கின் றாளே! 2067

முன்பு ஸ்ரீ கண்ணபிரான் திருஅவதாரம் மேற்கொண்ட காலத்தில் ஆய்ப்பாடியில் கன்றுகளை மேய்த்து இனியதாகவே மகிழ்ச்சியுற்ற காளையைப் போன்ற எம்பெருமானே! என்றும், சோலைகள் சூழ்ந் திருக்கின்ற 'திருக்கண்ணபுரம்' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் கனியையொத்த எம்பெருமான் ஸ்ரீசௌரிராஜப் பெருமானே! என்றும், மன்றில் குடக்கூத்தாடி மகிழ்ச்சியுற்றவனே! என்றும், வடக்கே திருமலையில் எழுந்தருள் புரியும் எம்பெருமான் திருவேங்கடப் பெருமானே! என்றும் அசுரர்குலங்களையே அழித்துப் போக்கி வென்ற அரசனே! என்றும், சோலைகள் சூழ்ந்துள்ள 'திருநறையூர்' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் எம்பெருமான் ஸ்ரீசீனிவாசப் பெருமானே! என்றும் செறிந்த தலைமுடியினையுடைய கரியநிறம் கொண்ட திருமேனியையுடையவனே! என்றும், என் இனிய துணைவனே! என்றும் என் பேதை மகள் தன் முலைகளின்மீது கண்ணீர் வழியுமாறு, சோர்ந்து, தளர்ந்து, வருந்தி புலம்பிக் கொண்டிருக்கிறாளே!

Koviloor Digital Library

பொங்கார்மெல் லிளங்கொங்கை பொன்னை பூப்பப்
பொருகயல்கண் ணீரரும்பப் போந்து நின்று
செங்கால மடப்புறவம் பெடைக்குப் பேசும்
சிறுகுரலுக் குடலுருகிச் சிந்தித்து, ஆங்கே
தண்காலும் தண்குடந்தை நகரும் பாடித்
தண்கோவ லூர்பாடி யாடக் கேட்டு,
நங்காய்!நங் குடிக்கிதுவோ நன்மை? என்ன
நறையூரும் பாடுவாள் நவில்கின் றாளே! 2068

என் மகளின் ஓங்கி வளமுடன் வளர்ந்திருக்கின்ற இளமுலைகளின்மீது பசலை நிறம் படர்ந்துவிட்டது. மீன் போன்ற கண்களில் நீர்த்துளியைப் பெருக்குகின்றன. அவளைப் பெற்ற தாயாகிய நான் இருக்கும்போது என்னைவிட்டுப் பிரிந்தும் தனித்து நிற்கிறாள். சிவந்த கால்களை உடைய ஆண்புறாக்கள் தன் அறிவை இழந்த அளவில் தன் பெண்புறாக்களுடன் பேசும் சிறுகுரலைக் கேட்டுத் தம் உடல் உருகிடச் சிந்திக்கின்றாள். இந்த நிலையில் எம்பெருமான் திருத்தண்கால், திருக்குடந்தை, திருக்கோவலூர் ஆகிய திருத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் தன்மைகளைப் பற்றிப் பாடிக் கொண்டே ஆடுகிறாள். இந்நிலையைப் பற்றி அறிந்த நான், பெண்ணே! நீ இவ்வாறு வாய்விட்டுப் பாடுவதும் ஆடுவதும் நம் குடும்ப மரபுக்கு ஏற்றதாகவும், நன்மையைத் தரக்கூடியதாகவும் இல்லை என்று எடுத்துச் சொல்லியும் கேட்கமாட்டாதவளாகிய என் மகள் மேலும் 'திருநறையூர்' என்னும் திருத்தலத்தில் எழுந்தருள் புரியும் எம்பெருமான் ஸ்ரீநிவாசப் பெருமானைப் பற்றிப் பாடியும் ஆடியும் இருக்கின்றாளே! இதற்கு நான் என்ன செய்வேன்!

கார்வண்ணம் திருமேனி கண்ணும் வாயும்
கைத்தலமும் அடியிணையும் கமல வண்ணம்,
பார்வண்ண மடமங்கை பத்தர் பித்தர்
பனிமலர்மேல் பாவைக்குப் பாவம் செய்தேன்,
ஏர்வண்ண என்பேதை என்சொல் கேளாள்
எம்பெருமான் திருவரங்க மெங்கே? என்னும்,
நீர்வண்ணன் நீர்மலைக்கே போவேன் என்னும்
இதுவன்றோ நிறையழிந்தார்[1] நிற்கு மாறே? 2069

பாவியேனாகிய என்னுடைய மகள் நான் கூறும் சொற்களைக் கேளாதவளாக இருக்கின்றாள். அவள் எம்பெருமானின் திருமேனி

Koviloor Digital Library

மேகநிறத்தைக் கொண்டது. திருக்கண்கள், திருவாய், திருக்கரங்கள் திருவடிகள் ஆகியவைகளெல்லாம் தாமரைமலரை ஒத்திருக்கின்றன. அந்த எம்பெருமான் பூமிப்பிராட்டியாரிடம் வயப்பட்டிருப்பவர். தாமரைமலரில் வீற்றிருக்கும் திருமகள் என்னும் பெரியபிராட்டி யாரினிடத்தே பெருங்காதல் கொண்டவர். அடியேனை அடிமைப் படுத்திக் கொண்ட எம்பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருத்தலமாகிய 'திருவரங்கம்' எங்கே இருக்கிறது என்று வினவிக் கொண்டிருக்கிறாள். நீர்வண்ணனாகிய எம்பெருமான் திருமால் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் 'திருநீர்மலை' என்னும் திருத்தலத்திற்கே சென்று சேர்வேன் என்று கூறுகிறாள். தன் நிலையினின்றும் நீங்கப்பெற்ற அடக்கமில்லாதவர்கள் செய்யும் செயல் இப்படித்தான் இருக்கும் போலும்! என்று கூறித் தாய் புலம்புகிறாள்.

முற்றாரா வனமுலையாள் பாவை மாயன்
மொய்யகலத் துள்ளிருப்பாள் அஃதும் கண்டும்
அற்றாள்,தன் நிறையழிந்தாள் ஆவிக் கின்றாள்
அணியரங்க மாடுதுமோ தோழீ! என்னும்,
பெற்றேன்வாய்ச் சொல்லிறையும் பேசக் கேளாள்
பேர்பாடித் தண்குடந்தை நகரும் பாடி,
பொற்றாம ரைக்கயம்நீ ராடப் போனாள்
பொருவற்றா ளென்மகள்உம் பொன்னும் அஃதே. 2070

ஒப்பற்றவளான என் பெண்ணானவள் முழுமையாக வளராத முலைகளைக் கொண்டு இருக்கிறாள். திருமகள் என்னும் பெரிய பிராட்டியார் அந்த எம்பெருமான் திருமாலின் திருமார்பில் தங்கி இருப்பதைக் கண்டும் தன்னை அந்த எம்பெருமானுக்கே அற்றுத் தீர்ந்தாள். அதன் காரணமாகத் தன் நிறையழிந்தாள். நெடுமூச்சு விடுகின்றாள். இத்தகைய நிலைக்காளான பின்பு, தோழீ! நாம் திருவரங்கம் சென்று, அவனைப்பற்றிப் புகழ்ந்து பாடிக் கொண்டிருப்போமா? என்று கூறுகின்றாள். அவளைப் பெற்றெடுத்த தாயாகிய நான் கூறும் நன்மை பயக்கக்கூடிய கருத்துகளைக் கூறிடில், அதனைச் சிறிதும் காது கொடுத்துக் கேட்பதில்லை. 'திருப்பேர்நகர்' திருக்குடந்தை ஆகிய திருத்தலங்களில் எழுந்தருள்புரிகின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைப்பற்றிப் பாடிக் கொண்டே பொற்றாமரைக் குளத்தில் நீராடச் சென்றுவிட்டாள். அவளுடன்

Koviloor Digital Library

இருந்த தோழிமார்கள் உங்கள் பெண்ணின் தன்மை இவ்வண்ணம் இருக்கின்றதே என்று தாயிடம் கூறுகின்றனர்.

தேராளும் வாளரக்கன் செல்வம் மாளத்
தென்னிலங்கை முன்மலங்கச் செந்தீ ஒல்கி,
போராள னாயிரம்தோள் வாணன் மாளப்
பொருகடலை யரண்கடந்து புக்கு மிக்க
பாராளன், பாரிடந்து பாரை யுண்டு
பாருமிழந்து பாராளந்து பாரை யாண்ட
பேராளன், பேரோதும் பெண்ணே மண்மேல்
பெருந்தவத்தள் என்றல்லால் பேச லாமே? 2071

1. நிறைவழிந்தார் என்பதும் பாடம்.

முன்பு ஸ்ரீஇராம அவதாரம் மேற்கொண்டு இருந்த காலை, தேர்ப்படையினைக் கொண்டும் வாள்படையில் வல்லவனுமாகிய அரக்கர்குலத்து அரசனாகவும், தெற்கேயுள்ள இல்ங்கைநகர்க்கு அரசனாகவும் உள்ள இராவணனின் செல்வம் அழியுமாறும் இலங்கை மாநகரம் கலங்கிப் போகுமாறு அனுமனைக் கொண்டு தீக்கிரை ஆக்கினான். ஸ்ரீகண்ணபிரான் திருஅவதாரம் மேற்கொண் டிருந்த காலை ஆயிரம் தோள்களை உடைய வாணாசுரன் என்னும் அசுரனுடன் போரிட்டு, அவன் தோல்வியடையும் பொருட்டுக் கடல் என்னும் கோட்டையைக் கடந்து வென்றான். பூமிக்குத் தலைவனாகிய எம்பெருமான் திருமால் ஸ்ரீவராக அவதாரம் பெற்றுப் பூமியை உலகப்பிரளயம் உண்டான காலத்தில் பாதுகாத்தருளினார். அவனே இப்பூமிக்குத் தலைவன் ஆவான். பின்பு ஒரு சமயம் இப்பூமியை வெளிப்படுத்தினான். வாமன அவதாரம் மேற்கொண்டபோது மகாபலிச்சக்கரவர்த்தியின் வேள்வியின் முன்பு நின்று இப்பூமியை இரந்து பெற்றான். திரிவிக்ரமனாகத் திருவவதாரம் மேற்கொண்ட போது இப்பூமியை அளந்தான். இத்தகைய பெருமைகள் பலவற்றைப் பெற்றுள்ள எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனின் திருநாமங்களை எப்போதும் இடைவிடாமல் கூறிக் கொண்டிருக்கின்ற என் மகள் பெற்ற பெரும்பேறுதான் என்னே! இஃதன்றி வேறு பேசுவதற்கு யாதுளது!

* மைவண்ண நறுங்குஞ்சி குழல்பின் தாழ
மகரம்சேர் குழையிருபா டிலங்கி யாட,
எய்வண்ண வெஞ்சிலையே துணையா இங்கே
இருவராய் வந்தாரென் முன்னே நின்றார்,

Koviloor Digital Library

கைவண்ணம் தாமரைவாய் கமலம் போலும்
கண்ணிணையும் அரவிந்தம் அடியும் அஃதே,
அவ்வண்ணத் தவர்நிலைமை கண்டும் தோழீ!
அவரைநாம் தேவரென் றஞ்சி னோமே! 2072

மை போன்ற கருநிறமுடைய தலையின் மயிர்த்தொகுதிகள் கழுத்தின் பின்புறத்தில் அலைந்து கொண்டிருக்க, இரு காதுகளிலும் மகரகுண்டலங்கள் ஒளி வீசிக் கொண்டிருக்க, எய்யும் இயல்புடைய வில்லின் ஆற்றலின் துணைகொண்டு இக்கொல்லையில் என் தலைவனாகிய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஸ்ரீஇராமபிரான் அவதாரம் பெற்றுள்ளபோது தானும், தன் இளவலாகிய இலக்கு மணனுடன் வந்து நின்றார். அஃதும் என் முன்னே வந்து நின்றார். அவருடைய திருக்கரங்களும், திருவாயும், திருவடிகளும், திருக்கண்களும் தாமரை மலரை ஒத்திருக்கின்றன. இத்தகைய எம்பெருமானின் திருவழகினையும் சீலத்தினையும் நாம் அறிந்து வைத்திருந்தும் அவரை விண்ணுலகத் தேவர்கள் என்று எண்ணி, அச்சம் கொண்டு எம்மிடத்தே வந்திருந்த அந்த எம்பெருமானை இழந்துவிட்டிருக்கிறோமே! தோழி! என்கிறாள்.

நைவளமொன் றாராயா நம்மை நோக்கா
நாணினார் போலிறையே நயங்கள் பின்னும்,
செய்வளவி லென்மனமும் கண்ணு மோடி
எம்பெருமான் திருவடிக்கீழ் அணைய, இப்பால்
கைவளையும் மேகலையும் காணேன் கண்டேன்
கனமகரக் குழையிரண்டும் நான்கு தோளும்,
எவ்வளவுண் டெம்பெருமான் கோயில்? என்றேற்கு
இதுவன்றோ எழிலாலி? என்றார் தாமே. 2073

'நட்டபாடை' என்னும் பண்ணை ஆராய்ந்து பாடி, நம்மைப் பார்த்துச்சிறிது வெட்கப்பட்டவர்போல நிற்கின்றார். அதற்குப் பின்பு நயமாகிய பாடல்களிலே அமைந்துள்ள சொற்களைக் கேட்ட அளவில் என் மனமும், என் கண்ணும் அவரிடம் ஓடிச் சென்று எம்பெருமானின் அழகிய திருவடிகளில் அணைந்தது. அதற்கும் அப்பால் என் கைகளில் அணிந்திருந்த வளையல்கள், மற்றும் அறையில் உடுத்தியிருந்த ஆடையும் அடியேனிடத்தினின்றும் காணமாட்டாமல் இழந்துவிட்டேன். நான்கு திருத்தோள்களுடன்

Koviloor Digital Library

கூடிய மகரக்குண்டலங்கள் இரண்டினையும் கொண்டு விளங்குகின்ற எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனைக் கண்ணுற்றேன். அதன்பின்பு, தேவரீர் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் திருத்தலம் யாதென்று வினவினேன். அவ்வாறு வினவியதற்கு, 'அழகிய திருவாலித் திருநகரம் இதோ இருக்கின்றது!' என்றும், அதனை நீயும் பார்ப்பாயாக என்றும் சுட்டிக் காட்டினார்.

உள்ளூரும் சிந்தைநோய் எனக்கே தந்தென்
ஒளிவளையும் மாநிறமும் கொண்டா ரிங்கே,
தெள்ளூரு மிளந்தெங்கின் தேறல் மாந்திச்
சேலுகளும் திருவரங்கம் நம்மூ ரென்னக்
கள்ளூரும் பைந்துழாய் மாலை யானைக்
கனவிடத்தில் யான்காண்பன் கண்ட போது,
புள்ளூரும் கள்வாநீ போகேல், என்பன்
என்றாலு மிதுநமக்கோர் புலவி தானே? 2074

உள்ளத்தினுள்ளே உறைந்திருக்கும் மனநோயினை எனக்கே தந்துவிட்டு, என் கைகளிலுள்ள வளையல்களையும், என் மேனியின் இயல்பான நிறத்தினையும் என் காதலனாகிய அந்த எம்பெருமான் என்னிடமிருந்து கள்ளத்தனமாகக் கவர்ந்து சென்றார். அவ்வாறு அந்த எம்பெருமான் செல்கின்றபோது, சேல்மீன்கள் எல்லாம் இளந் தென்னை மரத்தின் கள்ளைப் பருகியவாறு உலவி வருகின்ற நீர்நிலைகள் நிறைந்திருக்கின்ற 'திருவரங்கம்' என்னும் திருப்பதியே யாம் திருக்கோயில் கொண்டு திகழும் திருத்தலமாகும் என்று கூறிவிட்டுச் சென்றார். தேன்சொரியும் பசுமையான திருத்துழாய் மாலையைத் தரித்துக் கொண்டு திகழும் அந்த எம்பெருமான் திருமாலை அடியேன் கனவில் காண்பேனாகுக! அவ்வாறு கனவு காணுங்கால், கருடாழ்வான்மீது ஏறிப் பறந்து கள்ளத்தனமுடைய எம்பெருமானே! இனி நீர் என்னை இங்கேயேவிட்டுவிட்டுப் பிரிந்து செல்ல வேண்டாம் என்று கூறுவேன். அவ்வாறு எடுத்துக் கூறினாலும் அவர் நமக்கு அளிக்கும் சேர்க்கையானது ஆற்றாமையே அளிப்பதாகும்.

இருகையில்சங் கிவைநில்லா எல்லே பாவம்!
இலங்கொலிநீர் பெரும்பௌவம் மண்டி யுண்ட,
பெருவயிற்ற கருமுகிலே யொப்பர் வண்ணம்
பெருந்தவத்தர் அருந்தவத்து முனிவர் சூழ,

Koviloor Digital Library

ஒருகையில்சங் கொருகைமற் றாழி யேந்தி
உலகுண்ட பெருவாய ரிங்கே வந்து,என்
பொருகயல்கண் ணீரரும்பப் புலவி தந்து
புனலரங்க மூரென்று போயி னாரே! 2075

உலகப் பிரளயம் உண்டான காலத்தில் உலகங்களையெல்லாம் உண்ட பெரியவாயினையுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் இங்கே வந்து, ஒன்றோடொன்று பொருந்தியிருக்கும் கயல்மீன் களைப் போன்ற என் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் பெருகி வரும்படியாகப் பிரிவுத்துயரை உண்டாக்கி விட்டுச் சென்றார். பெருங் கடலில் ஆழ்ந்து கிடக்கின்ற நீரைப் பருகிய பெருத்த வயிற்றினை யுடைய கரியமேகத்தை ஒத்த நிறம் கொண்ட திருமேனி வடிவை யுடைய எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணன் ஒரு திருக்கரத்திலே திருச்சக்கரமும், மற்றொரு திருக்கரத்திலே திருச்சங்கினையும் தரித்திருக்கின்றார். முனிவர்களும், பாகவதர்களும், விண்ணுலகத் தேவர்களும் சூழ்ந்து நிற்கப் பேரெழிலோடும், மேன்மையுடனும் விளங்குகின்ற எம்பெருமான் நீர்வளம் நிறைந்துள்ள திருவரங்கம் என்னும் திருத்தலமே, யாம் தங்கியிருக்கும் திருத்தலம் என்று கூறிப் பிரிந்து சென்றார். அதனால் என் இரு கைகளிலும் இருக்கின்ற வளையல்களெல்லாம் என் கைகளில் நில்லாமல் கழன்றுவிட்டன.

மின்னிலங்கு திருவுருவும் பெரிய தோளும்
கரிமுனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்,
தன்னலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்திலங்கும் மகரம்சேர் குழையும் காட்டி,
என்னலனும் என்னிறையும் என்சிந் தையும்
என்வளையும் கொண்டென்னை யாளுங் கொண்டு,
பொன்னலர்ந்த நறுஞ்செ ருந்திப் பொழிலி னூடே
புனலங்க மூரென்று போயி னாரே! 2076

மின்னலைப் போன்று ஒளிவீசும் திருவடிவமும், பெரிய திருத்தோள்களையும் கொண்டுள்ள எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் 'குவலயாபீடம்' என்னும் யானையைக் கொன்ற திருக்கரங்களும், திருக்கண்களும் திருவாயும், நன்கு மலர்ந்திருக்கின்ற நறுமணமிக்க திருத்துழாய் மாலையின்மீது விளங்கும் மகர குண்டலங்களும் ஆகிய இவைகளைக் காட்டியருளினார். என்னுடைய நலனும், அழகு

Koviloor Digital Library

நிறைவும், என் மனம், என் கைகளிலுள்ள வளையல்கள் ஆகிய அனைத்தையும் என்னிடமிருந்து கவர்ந்து சென்றார். என்னை அடிமையாக்கிக் கொண்ட எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான், சுரமன்னை மலர்கள் நிறைந்திருக்கின்ற மரங்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்திருக்கின்ற அளவில் அதன் நடுவில் அமைந்திருக்கின்ற நீர்வளம் மிக்கிருக்கும் 'திருவரங்கம்' என்னும் திருத்தலமே நமது ஊர் என்று என்னிடத்திலே கூறிவிட்டுச் சென்றாரே!

தேமருவு பொழிலிடத்து மலர்ந்த போதைத்
　　தேனதனை வாய்மடுத்துன் பெடையும் நீயும்,
பூமருவி யினிதமர்ந்து பொறியி லார்ந்த
　　அறுகால சிறுவண்டே! தொழுதேன் உன்னை,
ஆமருவி நிரைமேய்த்த அமரர் கோமான்
　　அணியழுந்தூர் நின்றானுக் கின்றே சென்று,
நீமருவி யஞ்சாதே நின்றோர் மாது
　　நின்நயந்தாள், என்றிறையே இயம்பிக் காணே. 2077

சோலையினிடத்தேயுள்ள மலர்களில் நிறைந்து வழிகின்ற தேனைப் பருகிய ஆறுகால்களைக் கொண்டிருக்கின்ற வண்டானது, தன் பெண் வண்டுடன் இனிதே கலந்து மகிழ்ச்சியுறுகிறது. ஆறு கால்களையுடைய சிறிய வண்டே! நான் உன்னை வணங்குகின்றேன். பசுக்களை மேய்த்துப் பாதுகாத்தருளிய, விண்ணுலகத் தேவர்களுக் கெல்லாம் தலைவனாகிய எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரான் அழகுமிக்க 'திருவழுந்தூர்' என்னும் திருத்தலத்திலே திருக்கோயில் கொண்டு எழுந்தருள் புரிகின்றார். நீ அந்த எம்பெருமானிடத்தே சென்று அங்கே எவ்விதத்திலும் பயப்படாமல் நின்று, ''ஒரு பெண் உம்மீது ஆசை கொண்டு இருக்கிறாள்'' என்று ஓரளவேனும் சொல்லிப்பாரேன்! என்று வேண்டுகிறாள்.

*செங்கால மடநாராய்! இன்றே சென்று
　　திருக்கண்ண புரம்புக்கென் செங்கண் மாலுக்கு,
என்காத லென்துணைவர்க் குரைத்தி யாகில்
　　இதுவொப்ப தெமக்கின்ப மில்லை, நாளும்
பைங்கானம் ஈதெல்லாம் உனதே யாகப்
　　பழனமீன் கவர்ந்துண்ணத் தருவன், தந்தால்
இங்கேவந் தினிதிருந்துன் பெடையும் நீயும்
　　இருநிலத்தி லினிதின்ப மெய்த லாமே. 2078

Koviloor Digital Library

சிவந்த கால்களையுடைய நாரையே! நீ இன்றைக்கே 'திருக் கண்ணபுரம்' என்னும் திருத்தலத்திற்குச் சென்று, அங்கே திருக் கோயில் கொண்டு எழுந்தருள்புரியும் செந்தாமரைக் கண்ணனாகிய திருமால் ஆகிய சௌரிராசப் பெருமானிடம் சென்று, என் காதல ராகவும், துணைவராகவும் இருக்கின்ற எம்பெருமானிடம் சென்று நான் அந்த எம்பெருமானிடம் கொண்டிருக்கின்ற காதலைப்பற்றி எடுத்துக் கூறிவிட்டு வந்தால், எனக்குக் கிடைக்கக்கூடிய பேரின்பம் என்பது இதுவன்றி வேறெதுவும் இல்லை. எனக்காக இத்தகைய பேருதவியை நீ செய்வாயானால், இந்தச் சோலைகள் எல்லாம் உன்னுடையதாக ஆகிவிடும். நீ அவ்வாறு செய்து விடுவாயானால் நீர் மீன்களைக் கவர்ந்து உண்ணும்படியாக அளித்து உதவுவேன். அதன் காரணமாக இங்கே நீ வந்து, நீயும் உன் மனைவியும் மிகவும் இன்பமாக இப்பூமியில் ஒன்று கூடி இருந்து மகிழ்ச்சியுடன் இனிதே வாழலாம் என்று எடுத்துக் கூறினாள்.

தென்னிலங்கை யரண்சிதறி அவுணன் மாளச்
சென்றுலக மூன்றினையும் திரிந்தோர் தேரால்,
மன்னிலங்கு பாரதத்தை மாள வூர்ந்த
வரையுருவின் மாகளிற்றைத் தோழீ, என்றன்
பொன்னிலங்கு முலைக்குவட்டில் பூட்டிக் கொண்டு
போகாமை வல்லேனாய்ப் புலவி யெய்தி,
என்னிலங்க மெல்லாம்வந் தின்ப மெய்த
எப்பொழுதும் நினைந்துருகி யிருப்பன் நானே. 2079

தோழீ! எம்பெருமான் ஸ்ரீஇராமபிரான் தெற்கே இருக்கின்ற இலங்கை நகருக்குச் சென்று, அங்குள்ள கோட்டை அரண் களெல்லாம் சிதறும்படியாகச் செய்து, அரக்கர்களின் அரசனாகிய இராவணனையும் அழித்து மாண்டு போகுமாறு செய்தார். 'திரி விக்ரமன்' என்னும் திருஅவதாரம் மேற்கொண்டு மூன்று உலகங் களையும் அளந்தார். அரசர்கள் நிறைந்திருக்கின்ற பாரதப் போரில் அவ்வரசர்கள் அனைவரும் மாண்டு போகும்படிச் செய்வதன் பொருட்டு அருச்சுனனுக்குத் தேரைச் செலுத்திய மலையைப் போன்ற திருமேனியும், பெரிய யானையையொத்த செருக்கும் நிறைந் திருக்கும் எம்பெருமான் ஸ்ரீகண்ணபிரானைப் பசலை நிறம் கொண்ட என் இரு முலைகளின் முனைகளாகிற தூண்களில் பிணைத்துக் கொண்டு அப்பால் வேறெங்கும் சென்றுகூடாதவாறு அந்த எம்பெரு

Koviloor Digital Library

மானை வளைத்துக் கொள்ளக் கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கின்றேன். அவர் பிரிவு காரணமாக எனக்கு உண்டான துன்பங்களை எல்லாம் அந்த எம்பெருமான் எதிரிலேயே அனுபவிக்குமாறு செய்வேன். பின்பு என்னுடைய உடலின் உறுப்புகள் யாவும் மீண்டும் என்னிடமே வந்து சேரும்படி செய்து, அதனால் மகிழ்ச்சி அடையும்படியாகச் செய்து, எக்காலத்திலும் அந்த எம்பெருமானையே எண்ணி எண்ணி இருந்து கொண்டு, அந்த அளவிலேயே அழிந்து போவேன்.

✸அன்றாயர் குலமகளுக் கரையன் றன்னை
அலைகடலைக் கடைந்தடைத்த அம்மான் றன்னை,
குன்றாத வலியரக்கர் கோனை மாளக்
கொடுஞ்சிலைவாய்ச் சரந்துரந்து குலங்க ளைந்து
வென்றானை, குன்றெடுத்த தோளி னானை
விரிதிரைநீர் விண்ணகரம் மருவி நாளும்
நின்றானை, தண்குடந்தைக் கிடந்த மாலை
நெடியானை அடிநாயேன் நினைந்திட் டேனே. 2080

முன்பு ஸ்ரீகண்ணபிரான் திருஅவதாரம் பெற்ற காலை, ஆய்க்குலத்தில் பிறந்த நப்பின்னைப் பிராட்டிக்குக் கணவராக விளங்குகிறார். இந்தக் கண்ணபிரானே அலைகள் வீசுகின்ற திருப்பாற்கடலைக் கடைந்து, அதிலிருந்து கிடைத்த திருவமுதினைத் தேவர்கட்கு அளித்தருளினார். குறைவற்ற வலிமை மிக்க இராவணன் அழியுமாறு கொடிய வில்லினை வளைத்து, அம்பு தொடுத்து அரக்கர்குலம் முழுவதையும் அழித்து வெற்றி பெற்றவர். 'கோவர்த்தனம் ' என்னும் மலையைக் குடையாகப் பிடித்து ஆக்களையும், ஆயர்களையும் பாதுகாத்தருளிய திருத்தோள்களையுடையவர். நீர் நிரம்பியிருக்கும் பொய்கைகள் மிக்க 'திருவிண்ணகர்' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகிறார். குளிர்ச்சிமிக்க 'திருக்குடந்தை' என்னும் திருத்தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருள்புரிகின்றார். இத்தகைய திருக்குணங்கள் பலவற்றைக் கொண்டு விளங்குகின்ற எம்பெருமான் திருமால் ஓங்கியுயர்ந்த நெடியவனாகக் காட்சி தருகின்றார். இப்படிப்பட்ட எம்பெருமானை அடியேன் எப்போதும் எண்ணிக் கொண்டு இருக்கின்றேனே!

Koviloor Digital Library

✱ மின்னுமா மழைதவழும் மேக வண்ணா!
விண்ணவர்தம் பெருமானே! அருளாய், என்று,
அன்னமாய் முனிவரோ டமர ரேத்த
அருமறையை வெளிப்படுத்த அம்மான் றன்னை,
மன்னுமா மணிமாட மங்கை வேந்தன்
மானவேல் பரகாலன் கலியன் சொன்ன,
பன்னியநூல் தமிழ்மாலை வல்லார் தொல்லைப்
பழவினையை முதலரிய வல்லார் தாமே. 2081

மின் பார் திருவடிவில் இந்திரன் ஒண்மிதி அலம் வற்பு நீரகம் வங்கம் பொன் பட்டு நெஞ்சு கல் முளை கல்லுயர்ந்த கன்று பொங்கு கார் முற்று தேராளும் மை நைவளம் உள்ளூரும் இருகை மின் தேமருவு செங்கால தென்னிலங்கை அன்றாயர் மின்னுமா-வையம்.

மின்னலுடன் கூடிய பெருமழையைத் தருகின்ற மேகத்தை ஒத்த நிறம் கொண்ட எம்பெருமான் ஸ்ரீமந்நாராயணனே! விண்ணுலகத் தேவர்கட்கெல்லாம் தலைவராகத் திகழும் பெருமானே! முனிவர்களுடன் தேவர்களும் சேர்ந்து வந்து துதித்து வணங்கிட அன்னமாகத் திருஅவதாரம் மேற்கொண்டு யாவர்க்கும் கிடைக்காத அருமையான வேதங்களை வெளிப்படுத்திய எம்பெருமான் திருமாலைப்பற்றி நிலைபெற்ற மாடமாளிகைகள் சூழ்ந்திருக்கின்ற 'திருமங்கை' என்னும் நகர்க்குத் தலைவனாகிய பெருமை பொருந்திய பரகாலனான கலிகன்றி என்னும் திருமங்கை ஆழ்வார் அருளிச் செய்து படைத்தளித்த் தமிழ் மாலையாகிய இப்பாசுரங்களை நன்கு கற்று ஓதக் கூடிய ஆற்றல் பெற்றவர்கள் முற்காலத்திலுண்டான பழைமையான வினைகளை அதன் வேருடன் நீக்கிக் கொள்ளுகின்ற ஆற்றல் பெற்றவர்களாகி, அவ்வினையை அறவே நீங்கப் பெற்றவர்களாகி இனிதே எம்பெருமான் திருவடிப்பேறு பெற்றுய்வர்.

திருநெடுந்தாண்டகம் முற்றிற்று
பெரிய திருமொழி முற்றிற்று
இரண்டாவது ஆயிரம் முற்றிற்று.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்!

Koviloor Digital Library

ஸ்ரீ

நாலாயிர திவ்யப் பிரபந்தம்

இரண்டாம் ஆயிரம்

பாசுர முதற் குறிப்பு அகராதி

அ

அக்கும்புலியின்	1798
அகில் குறடும்	1532
அங்கு அவ்	1867
அங்கு ஓர் ஆய்க்	1955
அங்கு ஓர் ஆள்	1956
அங்கையால்	1263
அங்ஙனம் தீமைகள்	1918
அச்சம்தினைத்	1919
அஞ்சுவன்	1210
அஞ்சுவன் சொல்	1917
அடித்தலமும்	1652
அடுத்து ஆர்த்து	992
அண்டத்தின்	2010
அண்டமும் இவ்	1252
அண்டமும் இவ்	1230
அண்டமும் எண்	1131
அண்டர் ஆனவர்	1260
அண்டர்கோன்	1320
அண்ணல் செய்து	1449
அணி ஆர்பொழில்	2029
அத்தா அரியே	1555
அந்தகன் சிறுவன்	1073
அம்கண் ஞாலம்	1008
அம்பரம் அனல்	1025
அம்பரமும் பெரு	1498
அம்புருவவரி	1579
அம்பொன் ஆர்	1435
அரக்கர் ஆவி	1322
அரக்கியர் ஆகம்	1937
அரவ நீள்	1755
அரி விரவு	1669
அருமா நிலம்	1161
அருவி சோர்	1660
அல்லிக்கமலக்	1931
அல்லி மாதர்	1387
அலம்கெழு	1115
அலம்புரிந்த	2057
அலம் மன்னும்	1080
அலமும் ஆழிப்	1775
அலைத்தபேழ்	1009
அறியாதார்க்கு	1995
அறியோமே	1975
அறிவது அறியான்	1348
அன்றிய வாணன்	1275
அன்று ஆயர்குலக்	1078
அன்று ஆயர்குலம்	2080
அன்று உலகம்	1502
அன்று பாரதத்து	1961
அன்ன நடை	1921
அன்னம் மன்னு	1617
அன்னமும் கேழலு	1767
அன்னமும் மீனும்	1117
அன்னே இவரை	1974
அன்னை முனிவது	1966
அன்னையும்	1214

ஆ

ஆங்குமாவலி	1152
ஆங்குமாவலி	1376
ஆங்குவெம்	1572
ஆசை வழுவாது	1331
ஆடி அசைந்து	1930
ஆ-நிரை மேய்த்து	1339

Koviloor Digital Library

ஆமருவி 1407
ஆமை ஆகி 1702
ஆய்ச்சியர் 1338
ஆயன் மாயமே 1690
ஆயிரம்கண் உடை 1914
ஆயிரம் குன்றம் 1413
ஆர்மலி ஆழி 1934
ஆலும் மாவலவன் 1847
ஆவர்இவை 1174
ஆவியே அமுதே 949
ஆவியை அரங்கு 2043
ஆழ்கடல் சூழ் 1994
ஆழி அம்திண் 1938
ஆழியும் சங்கும் 1967
ஆளும் பணியும் 1508
ஆறாத சினத்தின் 1235
ஆறினொடு ஒரு 1374
ஆறும் பிறையும் 1516
ஆன் ஆயரும் 1927
ஆனை புரவி 1490

இ

இங்கேபோதும் 1949
இடும்பையால் 1002
இண்டை ஆயின 1050
இண்டை கொண்டு 1067
இண்டையும் புன 1819
இணை மலி 1709
இந்திரன் பிரமன் 1409
இந்திரற்கும் 2055
இந்திரனுக்கு 1071
இந்திரனும் 1251
இந்துவார் 1266
இம்மை இடர்கெட 1887
இம்மையைமறு 2038
இரக்கம் இன்றி 1858
இரவு கூர்ந்து 965
இருகையில் 2075
இருங்கைமா 1144
இருந்தண்மா 1148
இருந்தான் என் 1973
இருநிலமன்னர் 1987
இரும்பு அனன்று 2036
இரும்பு அனன்று 2044
இல்-பிறப்பு அறியீர் 954
இலகிய நீள் 1134
இலங்கு முத்தும் 1777
இலங்கைப் பதிக்கு 1039
இலங்கையும் 980
இலை ஆர் மலர்ப் 1704
இலைமலி பள்ளி 1988
இழை ஆடு 1222
இளைப்பினை 2049
இன் துணைப் 1072
இன்னார் என்று 1950
இனி எப் பாவம் 1575

ஈ

ஈசி போமின் 975
ஈடும் வலியும் 1916

உ

உடம்பு உருவில் 1090
உடையானை ஒலி 1600
உண்டாய் 1041
உண்டு உலகு 1830
உண்ணாது வெங் 1585
உண்ணும் நாள் 1661
உணரில் உள்ளம் 1772
உந்தம் அடிகள் 1885
உந்திமேல் 1378
உம்பர் உலகு 1440
உம்பர் உலகோடு 1523

Koviloor Digital Library

உம்பரும் இவ் 1240
உய்யும் வகை 1439
உரங்களால் 1571
உரம்தரு 1130
உருஆர் பிறவிக் 2025
உருக்குஉறு 1454
உருகி நெஞ்சே 1769
உருத்து எழு 1300
உருவின் ஆர் 1813
உலகம் ஏத்தும் 1325
உலவு திரைக் 1194
உலவு திரையும் 990
உள் ஊரும் 2074
உள்ளமோ ஒன்றில் 2040
உளம் கலைந்து 1114
உளைந்த அரியும் 1721
உளைந்திட்டு 1900
உளைய ஒண் 1264
உறவு ஆதும் 1395
உறவு சுற்றம் 1049
உறி ஆர் 1491
உறி ஆர்ந்த 1143
உறிகள் போல் 970

ஊ

ஊடு ஏறு 1626
ஊரான் குடந்தை 991
ஊழி ஆய் 1415
ஊழியின் பெரி 1111
ஊன் அமர் 1431
ஊன் இடைச் 1006
ஊன் நேர் ஆக்கை 1566
ஊன் வாட 1158

எ

எங்கள் எம் 1838
எங்களுக்கு 1640
எங்கானும்ஈது 1898
எங்ஙனும் நாம் 1123
எங்ஙனே உய்வர் 1412
எஞ்சல் இல் 1861
எஞ்சாவெம் 1733
எண்ணில் நினைவு 1445
எண் திசைகளும் 1023
எண் திசையும் 1766
எந்தை தந்தை 1336
எப்பாவம் 1032
எப்போதும் 1565
எம்தாதை தாதை 1563
எம்பிரான் எந்தை 953
எம்பிரானே 1869
எம்மானும்எம் 1560
எய்த்த சொல்லோடு 973
எய்யச் சிதைந்தது 1173
எரிந்தபைங் 1013
எல்லியும் நன் 1793
எவ்வநோய் 1839
எவ்வம் வெவ் 1011
எள்கி நெஞ்சே 1773
எட்டதனைப் பொழு 1573
என் ஐம்புலனும் 1596
என் செய்கேன் 1576
என் துணை 1213

ஏ

ஏடு இலங்கு 1593
ஏடுஒத்து ஏந்தும் 1876
ஏத்தி உன் சேவடி 1743
ஏத்துகின்றோம் 1868
ஏதம் வந்து 1007
ஏதலர் நகைசெய 1711
ஏது அவன் 1211
ஏதுசெய்தால் 1770
ஏய்ந்த பேழ்வாய் 1010

Koviloor Digital Library

ஏர் ஆர்பொழில் 1337
ஏர் ஆர் மலர் 1682
ஏவினார் கலியார் 1005
ஏவு இளங் 1305
ஏழ் உலகும் 1286
ஏழு மாமரம் 1692
ஏழை ஏதலன் 1418
ஏற்றினை இமயத்து 1642
ஏறும் ஏறி 1841
ஏன் ஆகி உலகு 1400
ஏனத்தின் உருவு 1100
ஏனம் மீன் 1385
ஏனம் முன் ஆகி 978
ஏனோர் அஞ்ச 994

ஒ

ஒண் மிதியில் 2056
ஒரு குறள் 1178
ஒரு நல்சுற்றம் 1848
ஒருவனை உந்திப் 1430
ஒள்ளிய கருமம் 1344
ஒளியாவெண் 1511
ஒற்றைக் குழையும் 1725

ஓ

ஓடா அரி ஆய் 1521
ஓடா ஆள் அரியின் 1559
ஓடாத ஆள் 1241
ஓடாத ஆளரியின் 1254
ஓதமா கடலைக் 1863
ஓதி ஆயிரம் நாமங் 966
ஓதி ஆயிரம் நாமமு 1196
ஓதி நாமம் 1176
ஓதிலும் உன் 1112
ஓது வாய்மையும் 1424

க

கஞ்சன்நெஞ்சம் 1384
கஞ்சன் விட்ட 1319
கஞ்சனைக் காய்ந் 1602
கட்டு ஏறு 1524
கடம் சூழ் 989
கடிகமழும் 1107
கடிகொள் பூம் 1420
கடுங்கால் மாரி 1545
கடுவிடம் உடைய 1340
கண் ஆய் ஏழ் 1037
கண் ஆர் கடல்சூழ் 1038
கண் ஆர் கண்ண 1736
கண் சோர 1578
கண்ட சீர்க் 1747
கண்டவர்-தம் 1242
கண்டார் இரங்க 2000
கண்ண மங்கையுள் 1647
கண்ணன் ஊர் 1662
கண்ணன் என்றும் 1326
கண்ணன் மனத் 1978
கண்ணும் சுழன்று 1478
கணம் மருவும் 1671
கதியேல் இல்லை 1554
கந்தமா 1193
கம்பமா கடல் 1258
கம்ப மாகளிறு 1856
கயம் கொள் 1691
கரியமா 967
கருந தண் கடலும் 1364
கருமகள் 1292
கருமணி பூண்டு 1791
கருமா முகில் உரு 1636
கருமா முகில்தோ 1707
கருமுகில் போல் 1176
கருளக் கொடி 1924

Koviloor Digital Library

கரை எடுத்த 1668
கரை செய்மக் 962
கரையாய் 1943
கல் ஆர் மதிள் 1522
கல் ஆர் மதிள் 1541
கல் உயர்ந்த 2066
கல் எடுத்துக் 2061
கல்லாம் ஐம்புலன் 1463
கல்லால் கடலை 1313
கல்லின் முந்நீர் 1873
கலங்கமாக் 959
கலங்க மாக் 1694
கலங்க முந்நீர் 1488
கலை ஆளா 1389
கலை இலங்கும் 1231
கலை இலங்கும் 1282
கலை உடுத்த 1383
கலை உலா அல்குல் 1757
கலைகளும் 1122
கலையும் கரியும் 988
கலை வாழ் 1365
கவ்வைக் களிற்று 1802
கவ்வை வாள் 1289
கவள மாகதத் 1749
கவள யானைக் 1318
கவள யானை பாய் 1875
கழி ஆரும் 1529
கள் ஆர் துழாயும் 2017
கள்வன் கொல் 1208
கள்வனேன் ஆனே 952
கள்ளக் குழவி 1896
கள்ளக் குறள் 1349
கள்ளத்தால் 2001
கள்ளத்தேன் 1586
கள்ளம் மனம் 1628
களங்கனி வண்ணா 1276
கற்றா மறித்து 1357
கற்றார் பற்று 1735
கற்றிலேன் கலைகள் 955
கறவாமட 1548
கறவை முன் 1341
கறுத்து கஞ்சனை 1614
கறை ஆர்நெடு 1355
கறைவளர் 1142
கன்றப் பறை 1997
கன்று - அதனால் 1245
கன்று கொண்டு 1844
கன்று மேய்த்து 2067
கனம் செய்மா 1696
கனி சேர்ந்து இலங் 1486
கனை ஆர் இடி 1784
கனை ஆர் கடலும் 2018

கா

கா ஆர் மடல் 1778
காசை ஆடை 1058
காண்டாவனம் 1079
காதல் செய்து 1455
காதில் கடிப்பு 1922
காமற்கு என் 1948
காமன் கணைக்க 1970
காமன் தனக்கு 1968
காயோடு நீடு 1159
கார் ஆர்ந்த 1257
கார் ஆர் புயல் 1897
கார்கெழு 1453
கார்கொள் 964
கார்மலி 1667
கார் மன்னு 1129
கார் வண்ணம் 2069
காரும் வார் 1953
காலை எழுந்து 1909
காலையும் மாலை 1790
காவலன் இலங்கை 1843
காவி அம் 1216

Koviloor Digital Library

காவிப் பெருநீர் 1367
காவியை வென்ற 2045
காற்றிடைப் பூளை 1343
காற்றினை புனலை 2033
கான் ஆர் கரிக் 1311
கான எண்கும் 1543
கானிடை உருவை 979

கி

கிடந்த நம்பி 1538
கிடந்தானை 1093

கு

குடிகுடிஆகக் 1346
குடைத்திறல் 1135
குடையா விலங்கல் 1354
குடையாவரை 1542
கும்பம்மிகு 1256
கும்பம்மிகு 1625
குயில் ஆலும் 1205
குலத்தலைய 1620
குலம் தரும் 956
குலம் - தான் 1031
குலை ஆர்ந்த 1535
குழல் நிறவண்ண 1450
குன்றம் எடுத்து ஆ 2031
குன்றம் எடுத்தும் 1962
குன்றம் ஒன்று 1952
குன்றமும் வானும் 1294
குன்றால் குளிர் 1310
குன்றால் மாரி தடுத் 1601
குன்றால் மாரி பழு 1706
குன்று ஒன்று 1899

கூ

கூடா இரணி 2015
கூடி ஆடி 1056
கூந்தலார் மகிழ் 1854
கூவாய் பூங்குயிலே 1944
கூற்று ஏர் 1361
கூன் உலாவிய 1153

கெ

கெண்டை ஒண் 1960
கெண்டையும் 1293

கே

கேட்கயான் 2035
கேவலம் அன்று 1795
கேவலம் அன்று 1893

கை

கைஇலங்கு 1428
கைம்மான மத 1728
கைம்மான மழ 1398

கொ

கொங்கு அலர்ந்த 1018
கொங்கு ஆர் 1480
கொங்கு உண்குழு 1479
கொங்கு உண்வண் 1771
கொங்கு மலி 1675
கொட்டாய் 1945
கொண்டல் மாருதல் 986
கொண்டு அரவத் 1204
கொந்து அலர்ந்த 1139
கொந்து ஆர் 1309
கொம்பும் அரவ 1481
கொல்லை ஆனாள் 1321
கொலை கெழு 1991
கொலைப் புண் 1220
கொழுங் கயல் 1499

Koviloor Digital Library

கொழுந்து அலரும் 1140
கொள்ளக் கறை 2026
கொற்றப் புள் 1655
கொன்றேன் 1030

கோ

கோ ஆய் ஐவர் 1616
கோ ஆனார் 1599
கோடிய மனத்தால் 1003
கோதை வேல் 1998
கோமங்க 1162
கோலால் நிறை 1314
கோவை இன் 1846
கோழி கூஎன்னு 1947
கோழியும் கூடலும் 1762

ச

சங்கு தங்கு 1195
சங்கும் மாமையும் 1954
சங்குமலி 1237
சங்கையும் 1295
சந்தம் ஆய் 1306
சந்தமலர் குழல் 1878
சலம் கொண்ட 1228

சா

சாடுபோய் 1262
சாதலும் பிறந்த 1456
சாந்தமும் பூணும் 1110
சாந்து ஏந்து 1471

சி

சிங்கம் - அது 1598
சிங்கம் - அது 1831
சித்தமும் செவ்வை 2041
சிந்தனையை 1404
சிந்தை - தன்னுள் 1329
சிரம்முன் 1801
சிலம்பு அடி 999
சிலம்பின் இடைச் 1285
சிலம்பு முதல் 1621
சிலை இலங்கு 1648
சிலையால் இலங் 1807
சிறியாய் ஓர் 1561
சிறை ஆர் 1221
சின இல்செங் 1568
சினம் மேவும் 1622

சீ

சீர் அணிந்த 1287
சீர் ஆர்நெடு 1637
சீர் ஆர்பொழில் 1167
சீர் தழைத்த 1534
சீற்றம் உள 2023

சு

சுடலையில் சுடு 1852
சுரி குழல் கனி 1414
சுரிந்திட்ட 1906
சுழன்று இலங்கு 1783
சுளை கொண்ட 1530
சுற்றும் குழல் 1926

சூ

சூதினைப் பெருக்கி 1000
சூர்மையில் ஆய 1821

செ

செங்கண் ஆளி 1017
செங்கண் நெடிய 1794
செங் கமலத் 1618

Koviloor Digital Library

செங் கமலத்து 1187
செங் கயல் 1027
செங் கால 2078
செம்பொன் 1120
செம்பொன் நீள் 1862
செம்பொன் மதி 1590
செம்மொழி 1507
செரு அழியாத 1936
செரு நீரவேல் 1737
செரு நீல 1166
செருமிகு வாள் 1983
செருவரை முன் 1649
செவ் அரத்த 1654
செழு நீர் 1105
செற்றவன் தென் 1797
செறும் திண் 1359
சென்று சின 1247
சென்றுவார் 1957

சே

சேமமேவேண்டி 950
சேய் ஓங்கு 1634
சேயன் அணியன் 1045
சேயன் அணியன் 1055
சேயன் என்றும் 1386
சேல் உகளும் 1397

சொ

சொல்லாது ஒழிய 1333
சொல்லாய் 1946
சொல்லாய் திரு 1476
சொல்லுவன் 1128

சோ

சோத்த நம்பி 1063
சோத்து என 1796
சோத்து என 1892

ஞா

ஞாலம் ஆளும் 1870
ஞாலம் எல்லாம் 1253
ஞாலம் முற்றும் 1323

த

தக்கன் வேள்வி 1363
தஞ்சம் இவர்க்கு 1126
தண்டகாரணியம் 1860
தந்தை காலில் 1588
தந்தை காலில் 1688
தந்தை தளை 1993
தந்தை தாய் 1808
தந்தை புகுந்தில 1912
தந்தை மனம் 1444
தம் சினத்தை 1403
தம்பரம் அல்லன 1920
தம்பியொடு தாம் 1443
தம்மையே நாளும் 1976
தரங்க நீர் 1664
தருக்கினால் 1054
தருமான 1729
தவள இளம் 1788
தளர்ந்திட்டு 1901
தளைஅவிழ் 1985
தளைக் கட்டு 1224
தன் குடிக்கு 1113
தன் மகன் ஆக 1884
தன்னாலே தன் 1503
தன்னை நைவிக்கி 1768

தா

தா அளந்து 1298
தாங்காதது 1081
தாங்கு அரும் 1291
தாங்கு அரும் 1141

Koviloor Digital Library

தாது அவிழ் 1789
தாது ஆடு 1393
தாம்தம் பெருமை 1358
தாம்மோர் உருட் 1890
தாமத் துளப 1497
தாய் ஆய்வந்த 993
தாய் ஏனை 1212
தாய் நினைந்த 1569
தாய் மனம் 1217
தாய் வாயில் 1391
தாயர் மனங்கள் 1889
தாயே தந்தை 1028
தார் ஆய 1203
தார் ஆயதண் 1651
தார் ஆர்மலர்க் 1477
தார் ஆளன் 1506
தாரா ஆரும் 997
தாரேன் பிறர்க்கு 1550
தாழம் இன்றி 1864
தான் போலும் 1283
தானவன் வேள்வி 1832
தானாக நினை 1201

தி

திங்கள் அப்பு 1064
திங்கள் தோய் 1297
திட விசும்பு 1270
திண் களக 1537
திண்ணியது ஓர் 1229
திண் திமில் 1792
திண் படைக் 133
திரிபுரம் மூன்று 1118
திருத்தனை திசை 1644
திருத்தாய் 1942
திருமடந்தை 1238
திருவடிவில் 2054
திருவாழ் மார்வன் 1604
திருவில் பொலிந் 1880
திருவுக்கும் திரு 1608
திவளும் வெண் 1108
திறல் முருகன் 1607

தீ

தீஎம் பெருமான் 1332
தீது அறு 1438
தீது அறு திங்கள் 1984
தீ நீர் வண்ண 1803
தீ மனத்தான் 1244
தீ மனத்து 1272
தீ வாய்வல 1465

து

துங்க ஆர் 1799
துங்க மா 1670
துடி கொள் நுண் 960
துணிவு இனி 981
துணை நிலைமற்று 1990
துப்பனை துரங்கம் 1643
துவர் ஆடை 1923
துவரி ஆடையர் 1053
துவரிக் கனிவாய் 1726
துவரித்த உடைய 1405
துளக்கம் இல் 1851
துளங்கும் நீள்முடி 1426
துளம்படு 1109
துளை ஆர் 1225
துறந்தேன் ஆர்வர் 1469
துறப்பேன் அல் 1468
துன்று ஒளித் 1531
துன்னி மண்ணும் 1356
துன்னுமா 1650

Koviloor Digital Library

தூ

தூங்கு ஆர் 2024
தூண் ஆய் 1042
தூம்பு உடைக் 1785
தூம்பு உடைத் 1132
தூம்பு உடைப் 1288
தூயாய் சுடர் 1556
தூயானை தூய 2014
தூ வடிவின் 1146
தூ வாயபுள் 1520
தூ விரிய 1198

தெ

தெரியேன் பால 1034
தெருவில் திரி 1629
தெவ் ஆய 1182
தெள் ஆர் கடல் 1510
தெள்ளியவாய்ச் 1910
தெள்ளியீர் 1658
தென் இலங்கை 2079

தே

தேடற்கு அரிய 1837
தேமருவு 1677
தேமருவு 2077
தேர் அணங்கு 983
தேர் ஆளும் 1581
தேவரையும் 2011
தேன் அமர்சோ 1277
தேன் அமர்பூம் 1177
தேன் ஆர் 1467
தேனுகன் ஆவி 1824
தேனொடு வண்டு 2020

தை

தையலாள் மேல் 1059

தொ

தொண்டர் பரவ 1362
தொண்டரும் 1712
தொண்டீர் 1951
தொண்டீர் உய்யு 1698
தொண்டு ஆம் 996
தொண்டு ஆயார் 1096
தொண்டு எல்லாம் 1665
தொண்டு எல்லாம் 2042
தொழும் நீர் 1722

தோ

தோடு அவிழ் 1759
தோடு விண்டு 1577
தோய்ந்த தயிரும் 1915
தோயா இன்தயிர் 1613

ந

நஞ்சு சோர்வது 1421
நண்ணாத வாள் 1098
நந்தன் மதலை 1686
நந்தா நரகத்து 2030
நந்தா நெடு 1632
நந்தா விளக்கே 1218
நலம்அன்பு உடை 1317
நல்நீர் வயல் 1567
நல் நெஞ்சே 1980
நல்லை நெஞ்சே 1016
நறைசெய் பொழி 1447
நன்மை உடைய 1517

நா

நாட்டினாய் 1746
நாடிஎன்-தன் 1324
நாத்தழும்ப 1015

Koviloor Digital Library

நாமம் பலவும்	1925
நார்ஆர் இண்டை	1805
நால்வகை வேதம்	1436
நான்முகன் நாள்	1179

நி

நிதியினை பவளத்	2032
நில்லாத பெரு	2003
நிலவொடு வெயல்	1451
நிலை ஆள் ஆக	1605
நிலை ஆளா	1206
நிலை இடம்	1982
நின்றமா	1020
நின்றவரையம்	1544
நின்றவினையும்	1806
நின்றார் முகப்புச்	1907

நீ

நீடுபல் மலர்	1192
நீண்டாயை	1562
நீண்டான் குறள்	1902
நீர் அழல்ஆய்	1402
நீர் அழல்வான்	1940
நீர் ஆர்கடலும்	1040
நீ மலிகின்றது	1681
நீர் வானம்	1200
நீரகத்தாய்	2059
நீலத்தடவரை	1189
நீல மலர்கள்	1685
நீள் நீலாமுற்றத்து	1659
நீள் நாகம்	2012
நீள் வான்குறள்	2013

நு

நும்மைத்தொழு	1328

நெ

நெஞ்சினால்	1004
நெஞ்சு உருகிக்	2063
நெடியானே கடி	1615
நெடுமால் - அவன்	1087
நய் ஆர் ஆழியும்	1610
நெய் வாய்	1163
நெல்லில் குவளை	1597
நெற்றிமேல் கண்	2004
நெறித்திட்ட	1905
நென்னல்போய்	1190

நே

நேசம் இலாத	1833

நை

நைவளம் ஒன்று	2073

நோ

நோய் எலாம்	1814
நோற்றேன் பல்	1035

ப

பகலும் இரவும்	1592
பகுவாய்வன்	1493
பஞ்சிச் சிறு	1104
பஞ்சிய மேல்	1181
பட்டு அரவு	1185
பட்டு உடுக்கும்	2062
பட அரவு	1302
பட நாகத்து	1097
படல் அடைத்த	1280
படிபுல்கும்	1715
படைத்திட்டு	1904
படைநின்ற	2027

Koviloor Digital Library

பண் உலாம்	1811
பண்டு இவ்வைய	1380
பண்டு இவன் ஆய	1209
பண்டு இவன்வெ	1170
பண்டு எனப்	1583
பண்டுகாமர்	972
பண்டுமுன்	1347
பண்டை நான்	1408
பண்ணின் இன்	1574
பண்ணினை பண்	1646
பண் நேர்	1223
பணங்கள் ஆயிரம்	963
பத்தர் ஆவியை	1855
பத்து நீள்முடியும்	1859
பந்து அணைந்த	1624
பந்து அணைந்த	1061
பந்து ஆர்	1515
பந்து ஆர்மெல்	1609
பந்து இருக்கும்	1066
பந்தோடு கழல்	1396
பப்ப அப்பர்	974
பரதனும் தம்பி	1074
பரவி நெஞ்சே	1774
பரிதியொடு	1714
பரிய இரணியனது	1781
பருங்கை	1261
பருவக் கரு	1172
பல்லவம் திகழ்	1259
பவ்வநீர்	1500
பழித்திட்ட இன்	1903
பள்ளி ஆவது	1019
பள்ளியில் ஓதி	107'5
பற்றேல் ஒன்றும்	1036
பறையும் வினை	1630
பன்றி ஆய்	1627
பன்னிய பாரம்	1756
பனி ஏய்பரங்	1553
பனிப் பரவைத்	2005

பா

பாஇரும் பரவை	2034
பாடோமே எந்	1979
பாண்தேன்	1462
பாய்ந்தானை	1092
பார் ஆர் அளவும்	1720
பார் ஆர் உலகும்	1083
பார் ஆயது	1088
பார் ஆரும்	2006
பார் உருவி	2053
பார் எழு	1452
பார் ஏறு	1145
பார்த்தற்கு ஆய்	1021
பார்த்தனுக்கு	1835
பார் மன்னர்	1199
பார் மன்னு	1137
பார் வண்ண	1099
பாரித்து எழுந்த	1589
பாரினை உண்டு	1342
பாரும் நீர்	1024
பாருள் நல்ல	1327
பாரை ஊரும்	1496
பாலன் ஆகி	1062
பாவமும் அறமும்	1296
பாவியாது செய்	1051

பி

பிச்சச் சிறு	1085
பிச்சச் சிறுபீலிச்	1102
பிண்டிஆர்	2050
பிணங்கள் இடு	1106
பிணி அவிழ்	1764
பிணி அவிழும்	1199
பிணி வளர்	1820
பிள்ளை உருவாய்த்	1360
பிள்ளைகள் செய்	1883

Koviloor Digital Library

பிறப்பொடு மூப்பு 1269
பிறிந்தேன் பெற்ற 1461
பிறைஉடை 1136
பிறைசேர் நுதலா 1487
பிறை தங்கு 1186
பிறையின் ஒளி 1441

பீ

பீளை சோரக் 971

பு

புக்கு ஆடு 1929
புகர் ஆர்உரு 1084
புதம் மிகு 1825
புந்தி இல் 1826
புயல் உறு 1710
புரங்கள் மூன்றும் 1866
புல்லி வண்டு 1197
புலம்மனும் 1716
புலன்கள் நைய 976
புலன்கொள் 1103
புள் ஆய்ஏனமும் 1558
புள் உருஆகி 1932
புள் வாய் பிளந்த 1551
புள்ளினை வாய் 1834
புள்ளினை வாய் 1894
புனை வளர் 1829

பூ

பூஆர் திரு 1316
பூங்குருந்து 1845
பூங்குருந்து 1963
பூங்கோதை 1888
பூண் உலாம் 1810
பூண்டு அவத்தம் 1089
பூண் முலைமேல் 1392
பூணாது அனலும் 1540
பூமரு பொழில் 1457
பூமாண்சேர் 1587
பூவை வண்ணனார் 1958

பெ

பெடை அடர்த்த 1528
பெண் ஆகி 1095
பெண் ஆனான் 1741
பெண்மை மிகு 1233
பெரி யானை 1603
பெருகு காதல் 1366
பெரு நீரும் 1739
பெரும்புறக் கட 1638
பெற்றத் தலைவன் 1886
பெற்ற மாளிகைப் 1857
பெற்றார் தளை 1891
பெற்றார் பெற்று 1734
பெற்றாரும் சுற்ற 1742
பெற்று ஆரார் 1981

பே

பேசினார் பிறவி 2048
பேசுகின்றது 1330
பேசும் அளவு 1086
பேசும் இன் 1026
பேணாதவலி 1094
பேய் இடைக்கு 982
பேய் இருக்கும் 2007
பேய்த் தாயை 1091
பேய் மகள் 1169
பேய்முலைத் தலை 1641
பேயினார் முலை 1416
பேர் அணிந்து 1268
பேர் ஆயிரம் 1653
பேரானை குடைந் 1606
பேரானை குறுங் 1309

Koviloor Digital Library

பை

பைங் கண் 1183
பைங் கண்ஆள் 1501
பை விரியும் 1584

பொ

பொங்கி அமரில் 1175
பொங்கு ஆர் 2068
பொங்கு இலங்கு 1284
பொங்கு ஏறு 1526
பொங்கு நீள்முடி 1373
பொங்கு புணரிக் 1546
பொங்கு போதியும் 1052
பொய் வண்ணம் 1406
பொரு இல்வவலம் 1184
பொருந்தலன் 1939
பொருந்தா அரக் 1699
பொருந்துமா 1965
பொற்றொடித் 1279
பொறுத்தேன் 1458
பொன் அலரும் 1787
பென் ஆனாய் 2061
பொன் இவர்மேனி 1758
பொன் குலாம் 1116
பொன் முத்தும் 1533
பொன்னும்மா 1417
பொன்னைமா 1849

போ

போது அலர்ந்த 1248
போது ஆர் 1466

ம

மக்கள் பெறு 1881
மஞ்சு ஆடு 1138
மஞ்சு உயர் 1121
மஞ்சு உயர் 1765
மஞ்சு உலாம் 957
மஞ்சு உலாம் 1377
மஞ்சு உறு 1969
மஞ்சு சேர் 1815
மஞ்சு தோய் 1812
மடல் எடுத்த 1673
மண் ஆய் 1033
மண் இடந்து 1299
மண்ணின் மீ 1525
மண்ணுளார் 1267
மண் நாடும் 2008
மண்மகள் கேள்வ 1913
மணங்கள் நாறும் 1871
மல்கிய தோளும் 1935
மல்லரை அட்டு 1303
மல்லே பொருத 1928
மல்லை மா 1273
மல்லை முந்நீர் 1701
மல்லொடு கஞ்சனு 1964
மலங்கு விலங்கு 1719
மலி புகழ் 1717
மழுவினால் அவனி 1753
மழுவு இயல் 1713
மற்று ஓர் 1472
மற்றும் ஓர் 1740
மறந்தேன் உன் 1459
மறம் கிளர்ந்து 2009
மறம் கொள் 961
மறை ஆரும் 1536
மறைவலார் 1817
மன் அஞ்ச 1564
மன் இலங்கு 1972
மன்றில் மலிந்து 1933
மன்னவன் 1127
மன்னவன் பெரிய 1752
மன்னா இம் 1043

Koviloor Digital Library

மன்னு தண் 1077
மன்னுநான் மறை 1423
மன்னும் மதுரை 1527
மன்னுமா நிலனும் 1410
மனம் கொண்டு 1865

மா

மா இருங் 1411
மாகம்மா நிலம் 1422
மாட்டீர் ஆனீர் 1334
மாட மாளிகை 1427
மாண் ஆகி 1745
மாத்தொழில் 1290
மாய மன் 2047
மார்வில் திருவன் 1683
மாரி மாக்கடல் 1689
மால் ஆய் மனமே 1705
மால் இனம் 1959
மாலும் கடல் 1082
மாலைப் புகுந்து 1594
மாவளம் 1307
மாவளரும் 1657
மாவாயின் 1165
மாற்றம் ஆவது 1874
மாற்றம் உள 2022
மாற்றரசர் 1278
மாறு கொண்டு 1151
மான் அமரும் 1992
மான் ஆயமென் 1390
மான் ஏய் 1470
மான் ஏய்கண் 1029
மான் ஏய்நோக்கி 1460
மான் ஏய்மட 1044
மான் கொண்ட 1518
மான் முனிந்து 985
மானம் உடைத்து 1908
மானவேல் ஒண் 1372

மி

மிக்கானை மறை 1731
மிடையா வந்த 1514
மின் அனைய 1232
மின் இலங்கு 2076
மின் உருஆய் 2052
மின் நேர்இடையா 1483
மின்னின் அன் 1353
மின்னின் நுண் 1154
மின்னின் மன்னும் 1191
மின்னும் ஆழி 1149
மின்னும் மா 1809
மின்னுமா மழை 2081
மின்னுமா முகில் 1057

மீ

மீது ஓடி 1580
மீன் அமர் 1076
மீனோடு ஆமை 1727

மு

முடி உடை 1345
முதலைத் தனி 1219
முதுகு பற்றிக் 969
முந்து நூலும் 1494
முந்துற உரைக் 1818
முந்நீரை முன் 1519
முரியும் வெண் 1693
முருக்கு இலங்கு 1505
முலைத் தடத்த 1504
முழுசி வண்டு 1124
முழுது இவ் 1695
முழு நீலமும் 1633
முள் எயிறு 1666
முளிந்தீந்த 1475
முளைக்கதிரை 2065

Koviloor Digital Library

முற்றமூத்து 968
முற்றிலும் பைங் 1215
முற்று ஆரா 2070
முன் இவ்வுலகு 1619
முன் இவ்ஏழ் 1375
முன் உலகங்கள் 1989
முன் ஓர் தூது 1060
முன் பொலா 2046
முன்னம் குறள் 1779
முன்னை வண்ணம் 1335
முனி ஆய்வந்து 1509
முனிவன் மூர்த்தி 1065
முனை ஆர் சீயம் 1489
முனைத்த சீற்றம் 1014
முனை முகத்து 1301

மூ

மூத்தவற்கு 1304
மூவர் ஆகிய 1157
மூவரில் முதல்வன் 2037
மூவரில் முன் 1828
மூள எரி சிந்தி 1442

மெ

மெய் நலத் 1639
மெய்ந் நின்ற 2021
மென்ற பேழ்வாய் 1012

மே

மேவா அரக்கர் 1350
மேவி எப்பாலும் 1125

மை

மைஆர் தடங் 1352
மைஆர் கடலும் 2016
மைஆர் வரி 1635
மை இலங்கு 1207
மைஒண் கருங் 1473
மைத்த கருங் 1882
மைந் நம்பு வேல் 1911
மைந் நின்ற 2002
மைவண்ண நறுங் 2072

மௌ

மௌவர் குழல் 164

யா

யாயும் பிறரும் 1895
யாவரும் ஆய் 1249

வ

வக்கரன் வாய் 1432
வங்கத்தால் 2060
வங்க ஆர் 1429
வங்கம்மலி தடங் 1236
வங்கமலி பௌவம் 1446
வங்கமறி கடல் 1879
வங்கமா கடல் 1842
வங்கம முந்நீர் 1748
வசை அறு 1271
வசைஇல் நான் 1369
வஞ்சனை செய்யத் 1070
வஞ்சனையால் 1246
வஞ்சி மருங்குல் 1595
வடவரை நின்றும் 1663
வடிவ்ாய் மழுவே 1723
வண் கையான் 1022
வண்டு அமர் 1827
வண்டு அமரும் 1656
வண்டு அமரும் 1674
வண்டு அமரும் 1687

Koviloor Digital Library

வண்டு அறை 1437
வண்டு ஆர் 1227
வண்டு ஆர் 1557
வண்டு ஆர் 1738
வண்டு உணும் 1448
வண்டு தண் 977
வண்ணக் கருங் 1996
வணங்கலில் 1822
வந்த நாள்வந்து 1570
வந்தாய் என் 1046
வந்தாய் என் 1732
வந்திக்கும் 1582
வந்து உனது 1188
வம்பு அவிழும் 1761
வம்பு உலாம் 1001
வம்பு உலாம் 1382
வருந்தாது இரு 1703
வரும் திரை 987
வல்லிச் சிறு 1807
வல்லி இடையாள் 1700
வலம்புரி ஆழி 1836
வல்வி துழாய் 1780
வள்ளி கொழுநன் 1513
வளர்ந்தவனைத் 1401
வளைக்கை 1171
வற்புஉடைய 2058
வற்றாமுது 1549

வா

வாட மருது 1168
வாடினேன் வாடி 948
வாதம மகன் 1419
வாதை வந்து 1750
வாம்பரி உக 1371
வாமனன் கற்கி 1684
வாய் எடுத்த 1672
வார் ஆரும் 1255
வார்ஆரும் 1281
வார் ஆளும் 1394
வார் ஆளும் 1676
வார்கொள் மென் 1697
வாரணம் கொள் 1147
வாராகம் - அது 1315
வாலி மாவலத்து 958
வாவித் தடம் 1547
வாழக் கண்டோம் 1800
வாள் ஆய 1202
வாள் ஒண்கண் 1485
வாள் நிலா 998
வாள் நெடுங் 1243
வாளை ஆர் 1265
வான் ஆர்மதி 1631
வான் உளார் 1754
வான் நாடும் 1250
வானவர் - தங்கள் 1048
வானவர் - தங்கள் 2051
வானவர்-தம் 1623
வானிடைப் புய 2039
வானை ஆர் 1853
வானோர் அளவும் 1718

வி

விடம் கலந்து 1823
விடம் - தான் 1539
விடை ஏழ் 1492
விடை ஏழ் 1730
விடை ஓட 1226
விண்ட மலர் 1680
விண்டாரை வெண் 1101
விண்டான் விண் 1612
விண்ணவர் - தங்கள் 1678
வியம் உடை 1708
விரை கமழ்ந்த 1155
வில் ஆர்விழவில் 1512

Koviloor Digital Library

வில்ஏர்நுதல் 1552
வில்ஏர் நுதலார் 1484
வில் பெருவிழவும் 1068
வில்லார் மலி 1047
வில்லால் இலங்கை 1782
விலங்கலால் 1433
விலங்கும் கயலும் 1482
விளங்கனியை 1234
விளைத்தவெம் 1381

வெ

வெண்ணெய்-தான் 1434
வெந்தார் என்பும் 995
வெந்திறல் வாணன் 1986
வெம்சினக் களிறு 1274
வெம்சினக் களிற் 1645
வெம்சின வேழ 1763
வெம் திறல் 1119
வெம்திறல் களி 984
வெம்பும் சினத்துப் 1160
வெய்யன் ஆய் 1370
வெருவாதாள் 1388
வெள்ளத்துள் ஓர் 1591
வெள்ளியார் 1816
வெள்ளியான் கரி 1840
வெள்ளை நீர் 1744
வெள்ளைப் புரவித் 1495
வெற்பால் மாரி 1351
வெறி ஆர்கருங் 2019
வென்றதொல் சீர் 1877
வென்றி வேர் 1751
வென்றி தந்தோம் 1872
வென்றி மாமழு 1368
வென்றி மிகு 1239
வென்றியே வேண் 951
வென்றி விடை 1971

வே

வேட்டத்தைக் 1941
வேடு ஆர் 1312
வேதத்தை 1069
வேத முதல்வன் 1679
வேதமும் வேள்வி 1786
வேதவாய் மொழி 1425
வேம்பின் புழு 2028
வேஇருஞ் சோலை 1760
வேல் கொள் 1156
வேலை ஆல் 1850
வேறாயான் 1464
வேறே கூறுவது 1474

வை

வை அணைந்த 1180
வைத்தார் அடியார் 1977
வையம் உண்டு 1379
வையம் எல்லாம் 1724
வையம் ஏழும் 1150

KOVILOOR ANDAVAR ... 44623

Koviloor Digital Library

Koviloor Digital Library



ஆழ்வார்கள் அருளிச் செயல்
என்னும்

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

இரண்டாம் ஆயிரம்

புலவர் த. திருவேங்கட இராமானுஜ தாசன்

ஆழ்வார்கள் பன்னிருவர் அருளிச் செய்த தெய்விகப் பாசுரங்களின் தொகுப்பே நாலாயிரத் தீவ்வியப் பிரபந்தம் எனப்படும்.

பெருமை வாய்ந்த நாலாயிர திவ்வியப் பிரபந்தங்கள் தாம் உலகிலுள்ள சகல சாஸ்திரங்களுள் சாரமானவை.

ஆழ்வார்கள் ஆழ்ந்த அறிவினையுடையார் என்பது அவர்கள் அருளிய பிரபந்தங்களை உற்று நோக்குவார்க்கு நன்கு புலனாகும். அவர்கள் பிரபந்தங்களும் ஆழ்ந்தறியத்தக்க சொல்நயம், பொருள் நயம் உடையவையாய் விளங்குகின்றன.

வேதத்தின் உட்பொருளை நமது உள்ளத்தில் நிற்கும்படி தெளியப் பேசப்பட்ட பாசுரங்கள இவை. இந்த திவ்ய பிரபந்தங்களை அன்றாடம் துதித்தால் எம் பெருமான் உள்ளம் உடனே குளிரும்.

உமா
பதிப்பகம்